| 2. | வா ராஜா வா | 27—1—73 | டான் பாஸ்கோ மெட்ரிகுலேஷன் பள்ளி மாணவர்கள், சென்னை. |
| 3. | ஆராதனா | 4—2—73 | மயிலாப்பூர் அகாடமி, சென்னை-4. |
| 4. | நெஞ்சிருக்கும் வரை | 13—4—73 | சிறைச்சாலைத்துறை. |
| 5. | குதாப்டம் | 15—8—73 | மயிலாப்பூர் அகாடமி, சென்னை-4, |



2. நன்கொடை வழங்கும் நிறுவனங்கள், தனிப்பட்டவர்கள் ஆகியோரின் ஆதரவில் சென்னை மத்தியச் சிறைச்சாலையில் திரைப் படங்கள் திரையிட ஏற்பாடு செய்யப்படுகிறது. திரையிடப்படுவதற்குக் கிடைக்கக்கூடிய திரைப்படங்களின் பட்டியல் ஒன்றை அவர்கள் கொடுப்பதன் பேரில், சிறைக் கண்காணிப்பாளர் திரையிடப்படுவதற்குரிய படங்களில் ஒன்றை தமது விருப்புரிமைப் படித் தெரிந்தெடுக்கிறார்.

திரு. என். டென்னிஸ்: டெவலப்மெண்டு பீல்டு ஆக்டிவிடீஸ், நல்லொழுக்கம் போன்ற காட்சிகள் மாத்திரம் காட்டப்படுகின்றனவா? சென்னை மத்திய சிறையில் மாத்திரம் அல்லாது மற்ற சிறைகளுக்கும் இது விஸ்தரிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: திரைப்படங்களில் நல்லொழுக்கம் அதிகமாக இருக்கின்ற படம் இருக்கின்றதா என்பது எனக்கு சந்தேகமாக இருக்கிறது. எல்லாம் கலந்து தான் வருகிறது. திரைப்படக் காட்சிகளிலே அவர்கள் அதைப் பரிசீலித்து எது எது சிறைச்சாலைகளிலுள்ளவர்களுக்குப் பாதகம் இல்லாமல் இருக்கிறதோ அதைக் காட்ட ஏற்பாடு செய்வார்கள்.

திரு. ஆ. பரந்தாமன்: இப்பொழுது மத்திய சிறையில் திரைப் படக் காட்சிகள் மாத்திரம் காட்ட வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஆண்டுக்கு ஒன்றிரண்டு முறையாவது சமூக நாடகங்களை அங்கே காட்டுவதற்கு ஏற்பாடு செய்வது பற்றி அரசு யோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சிறைச்சாலைகளில் புலவர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், கதை வசனகர்த்தாக்கள், நாடகம் எழுதுகிறவர்கள் இவர்களெல்லாம் இருப்பதைப் பார்த்தேன். அவர்கள் அதற்கு நல்ல வாய்ப்பு இருப்பதற்கு இப்பொழுதே முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. சி. வி. எம். அண்ணாமலை: சிறைச்சாலைகளில் ஆடவர்கள் தனியாக இருக்கிற நிலையிலே அங்கு காட்டப்படுகிற திரைப் படங்கள் காதல் காட்சி பெரும்பாலும் இல்லாத வகையில் ஒழுக்க நெறியை உண்டாக்குகின்ற வகையில் காட்டப்படுமா? அதற்கு அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தமிழ் நாட்டில் தயாரிக்கப்படும் படங்களில் காதல் காட்சி இல்லாத படம் இருக்கிறதா என்பது எனக்குத் தெரியவில்லை. காதல் இல்லாவிட்டால் படமே ஓடாது என்ற நிலைதான் தமிழ் நாட்டில் இருக்கிறது. அந்த இடத்தில் காதல் காட்சியை மட்டும் படத்திலிருந்து எடுத்து விட்டு காண்பிக்க முடியாது என்று நினைக்கிறேன்.

### *Canteens in Central Jails*

* 493 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Indusries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up canteens in the Central Jails in this State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 494, 495, 496, 497, 498 எண்ணுள்ள கேள்விகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகின்றன.

### *Exchange of views between Madras and Volgograd Councils*

* 499 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether exchange of films, photographic exhibits, tape recorded folk and popular songs and materials relating to town planning are to be exchanged by an agreement between the Madras City Council and Volgograd Council in U.S.S.R.; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.



### தோக்கமூர் ஊராட்சி பர்மா குடியிருப்பில் தெரு விளக்குகள்

* 500 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், தோக்கமூர் ஊராட்சியில் உள்ள பர்மா காலனிக்குத் தெரு விளக்குகள் அமைப்பதில் காலதாமதம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** பர்மாகுடியிருப்பு, சென்னை, மின்வசதி ஏற்பாட்டின் சிறப்புத்திட்டம் நிறைவேற்றப்பட்ட 1971-ம் ஆண்டிற்குப் பிறகு ஏற்படுத்தப்பட்ட புதியதொரு குடியிருப்பாகும். பர்மா குடியிருப்புக்கும் சேர்த்து 16 தெரு விளக்குகள் அமைக்குமாறு கேட்டு செல்வநிலைச் சான்றிதழுடன் (Salvancy Certificate) தோக்கமூர் ஊராட்சித் தலைவர் 1972-ம் ஆண்டு மார்ச் திங்களில் விண்ணப்பம் செய்தார். இத்திட்டத்தின் மூலம் 9.3 சதவீத வருவாயே கிடைக்குமாதலால் இத்திட்டம் ஆதாயம் தரத்தக்கதாக இல்லையென்று தெரிய வந்தது. எனவே, வேளாண்மைப்பணிகள் உட்பட இணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தில் தற்போதுள்ள 5 சாதாரண விளக்குகளை ஒளி உமிழும் குழல் விளக்குகளாக மாற்றுவதும் சேர்க்கப்பட்டிருந்தது. திருத்தியமைக்கப்பட்ட செல்வநிலைச் சான்றிதழ் ஒன்று ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால், 1972-ம் ஆண்டு நவம்பர் திங்களில் கொடுக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்த மாத இறுதிக்குள் விளக்குகள் போடுவதாயும், தற்போது தமிழ் நாடு மின்வாரியம் தெரிவித்துள்ளது. பணிகள் நடந்து கொண்டிருப்பதாக மாவட்ட ஆட்சியாளரும் தெரிவித்துள்ளார்.

### மணல்மேடு-வக்காரமாரி சாலை

* 501 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் மணல்மேட்டிலிருந்து வக்காரமாரி வரை செல்லும் பாதையைச் செப்பனிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இல்லை.

[1973 நவம்பர் 29

**திரு. என். கிட்டப்பா :** மாயூரம் தொகுதி மணல்மேட்டிலிருந்து வக்காரமாரி வரை செல்லும் பாதை சீர்கேடாக இருக்கிறது. பொதுமக்கள் இதுபற்றி பல ஆண்டுகளாக கோரிக்கை எழுப்பிவருகிறார்கள். இனிமேலாவது அதைக் கவனித்து அரசு உத்தரவு வழங்கி, அதற்கு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மாயூரம் மணல்மேடு முதல் வக்காரமாரி வரை செல்லும் சாலையில் மொத்த நீளம் 2.00 கிலோ மீட்டர். இது மணல்மேடு முடிகொண்டான் ஊராட்சி சாலையாகும். இச்சாலையைச் செப்பனிட தோராயமாக ரூ. 65,000 செலவாகும். இவ்வேலையின் மொத்த செலவு ரூ. 40,000-க்கு மேல் உள்ளதால் இதை 'இதரச் சாலைகள்' என்ற தலைப்பில் எடுத்துச் செயல்படுத்த வேண்டியதாகும். ஆனால் இவ்வேலை எந்த ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டத்திலும் இடம் பெறவில்லை. 'இதர சாலைகள்' தலைப்பில் ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட வேலைகளில் பெரும்பாலானவையை நிதிப் பற்றாக்குறை நிமித்தம் செயல்படுத்த இயலவில்லை. எனவே, இவ்வேலையானது வளமான காலம்வரை பொறுத்துக்கொள்ளப்பட வேண்டியதாகும்.

## பொட்டல் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***502 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மாதேவி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த பொட்டல் ஊரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட 1963-ம் ஆண்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் இன்னமும் அந்த நீர்த்தேக்கம் கட்டி முடிக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?



1973 நவம்பர் 29]

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) பொட்டல் கிராமத்தில் மேல் நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்குப் பதிலாகத் தரை மட்ட நீர்த்தேக்கம் ஒன்று தற்சமயம் கட்டப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது.

(இ) மேற்படி வேலையை எடுத்து நடத்த ஒப்பந்தக்காரர்கள் எவரும் முன்வராத காரணத்தாலும், எதிர்பாராத சில நிர்வாக காரணங்களாலும் இக்கிராமத்தில் மேல் நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் வேலை மேற்கொள்ளப்படவில்லை.

## தெரு விளக்குகள் களவு போவதைத் தடுத்தல்

***503 வினா—திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நமது மாநிலத்தில் தெரு விளக்குகள் உள்ள இடங்களில் மின்சார பல்புகள் திருட்டுப் போவதைத் தடுப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இது போன்ற சில சமூக விரோதச் செயல்கள் நடைபெறுகின்றபொழுது வாரிய அதிகாரிகளின் மூலம், ஊராட்சி மன்றத் தலைவர்கள் மூலம், உறுப்பினர்கள் மூலம், பொதுமக்கள் மூலமாகத் தகவல் வருகின்ற பொழுது காவல் துறையினர் நடவடிக்கை எடுக்கின்றனர்.

**திரு. எம். சுரேந்திரன் :** தெரு விளக்குகள் ஏராளமாக திருட்டுப் போகின்றன என்று புகார்கள் பல வருடங்களாக இருந்து கொண்டு வருகின்றன. வருடத்திலே சராசரியாக எவ்வளவு பல்புகள் திருட்டுப் போகின்றன? அதைத் தடுப்பதற்கு ஏதாவது நடைமுறை இருக்கிறதா? அப்படியிருந்தால் அதை அரசு கையாண்டு வருகிறதா? அப்படியிருந்தால் அது என்ன என்பதை அறிவிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** பொதுவாக திருட்டுப் போனால் அதற்கு வேண்டிய பிராது, அதாவது திருட்டுப் போயிருக்கிறது என்று போலீஸாருக்குத் தெரிவிக்கின்றபொழுது அவர்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள். சில நேரங்களில் ஊராட்சி மன்றப் பகுதிகளில் சமூக விரோதச் செயல்கள் நடக்கின்றபொழுது

[1973 நவம்பர் 29

தெரு விளக்குகளை உடைக்கிறார்கள். சமூக விரோதச் செயல்கள் எங்கேயாவது நடக்கின்றபொழுது இப்பொழுதிருக்கிற சட்டப்படி போலீஸ் ஸ்டேஷனுக்குத் தெரிவித்தால் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா:** பல்புகள் திருட்டுப்போனால் உரிமினல் நடவடிக்கை எடுப்பதற்கு, அதற்கான அதிகாரத்தை போர்டுக்கு வழங்குவதற்கு, அதற்கான அதிகாரத்தைக் கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு விதிமுறைகளோ அல்லது சட்டமோ கொண்டுவருவதற்குச் சர்க்காரிடம் யோசனை இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** திருட்டுப் போவது இப்பொழுது இருக்கிற சட்டப்படி தடுக்கப்படும். ஏதாவது மேற்கொண்டு இதைத் தீவிரப்படுத்துவதற்கு நல்ல யோசனை இருக்குமானால், அதை அரசு பரிசீலனை செய்யலாம்.

**திரு. கு. காமாட்சி:** இப்பொழுது யாரைப் பார்த்தாலும் ஒரு கம்பியை கையிலே கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அது மின்சார வாரியத்திலிருந்து திருடப்பட்டது என்று சொல்கிறார்களே? அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

**திரு. ஏ. எம். இராஜா:** தெரு விளக்குகள் திருட்டுப்போவதைக் கட்டுப்படுத்தி நிறுத்துவதற்கு, அதற்கென்று ஸ்பெஷல் டைப் பல்புகள் உற்பத்தி செய்வதற்கு அரசுக்கு ஏதாவது உத்தேசம் இருக்கிறதா? அம்மாதிரி ஸ்பெஷல் டைப் பல்புகளை ஸ்ட்ரீட் லைட்களுக்கு உபயோகப்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தனியாக இதற்கென்று நம்பர்கள் அல்லது அதற்கு வேண்டிய தனிக் குறிப்புகள் போட்டு பல்புகள் தயார் செய்ய முடியுமானால் அதைப்பற்றி யோசிக்கலாம்.

**திரு. பி. பழனிவேலு:** இம்மாதிரி திருட்டுப்போவதைத் தடுப்பதற்குத் தெருவிளக்கு கம்பங்கள் போகின்ற லைன்களுக்கு மேலாகத் தெரு விளக்குகளை வைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** அது எங்கும் இல்லாத யோசனையாகத் தெரிகிறது.



1973 நவம்பர் 29]

**திரு. ஏ. வி. நரசிம்மன்:** தெருவிளக்குகள் 40 வோல்ட்ஸ், 60 வோல்ட்ஸ் பல்புகள் திருகு பல்புகளாகப் போட்டால், அவைகளைத் திருடிக்கொண்டு போய் வீடுகளுக்குப் பயன்படுத்த முடியாது. அம்மாதிரி திருகு பல்புகள் சாதாரண வோல்ட்ஸில் போடுவதுபோல் டியூப் லைட்கள் பயன்படுத்துவதற்கு ஏதாவது வழிவகை அரசின் ஆய்வில் இருக்கிறதா? அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா? இரண்டாவதாக, அநேக பல்புகள் திருட்டுப் போவது கிடையாது. இரவிலே காவலர்களைச் சமாளிப்பதற்கு அதை அதிகமாக உடைக்கிறார்கள். அவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்படிப் பல கிராமங்களில் உடைக்கிறார்களே தவிர, திருட்டுப் போவது அதிகம் இல்லை. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது உண்மைதான் என்று கருதுகிறேன். பல இடங்களில் திருட்டுப் போவதைக் காட்டிலும் சமூக விரோதிகள் சேர்ந்து தெரு விளக்குகளை உடைப்பதுதான் அதிகம் என்று கருதப்படுகிறது. எல்லோரும் சேர்ந்து சமூக விரோதிகளைப் பிடித்துக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கவேண்டும்.

**திரு. சி. ஆறுமுகம்:** மின்சார வாரியத்திற்குச் சொந்தமான கம்பிகள் கிராமப் பகுதிகளில் திருட்டுப் போகிறது. லைட்கள் எரிகின்ற நேரத்தில் ஷாக் அடிக்கும்படியான கருவிகளைப் பொருத்தினால், திருட்டுப் போகாமல் இருப்பதற்கு ஏதுவாக இருக்கும். அதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** எங்கேயாவது சில இடங்களில் கம்பி திருட்டு நடைபெற்றால், ஏற்கனவே போலீஸார் ஒன்றிரண்டு இடங்களில் சம்பந்தப்பட்டவர்களைப் பிடித்து வழக்குகள் தொடர்ந்திருக்கின்றனர். இரவு நேரங்களில் கம்பிகளில் மின்சாரம் இருக்கத்தான் செய்கிறது. திருடுபவர்கள் இதற்குப் பாதுகாவல் எப்படிச் செய்ய முடியுமோ அப்படிச் செய்கிறார்கள். அதையும் கவனித்து போலீஸ் துறையினர் சில இடங்களில் இப்படிப்பட்ட திருடர்களைக் கண்டுபிடிப்பதற்கு முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

[1973 நவம்பர் 29

**திரு. எம். சுரேந்திரன்:** சார், சாதாரணமாக எந்தப் பொருள்கள் திருட்டுப் போனாலும் போலீசில் புகார் செய்வது, அவர்கள் கண்டு பிடிப்பது என்ற நடைமுறை இருந்துகொண்டிருக்கிறது. ஆனால் மின்சார வாரியம் அரசாங்கத்திற்குச் சொந்தமான சொத்தாக இருப்பதால், கம்பு, பல்புகள் எவ்வளவு தூரம் திருட்டுப் போகின்றன என்பதை ஆராய்ந்து, மதிப்பிட்டு இந்த மாதிரியான திருட்டுப் போகாமல் இருப்பதற்கு விசேஷ கண்காணிப்பு முறை கொண்டுவரப்படுமா? இல்லை என்றால் சமூக விரோதிகள் இருக்கிறார்கள் என்று சொல்லிவிடுவதன் மூலம் திருட்டு தடுக்கப்படுவதற்கு வழி ஏற்படுமா என்பதை அமைச்சரவர்கள் தெளிவுபடுத்துவார்களா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** பல்புகள் அதிகமாகத் திருட்டுப் போவதாகப் புகார் இல்லை. ஒரு சில இடங்களில் தான் திருட்டுப் போவதாகத் தகவல் இருக்கிறது. ஆனால் சமூக விரோத செயலில் ஈடுபடுபவர்களால் பல்புகள் உடைக்கப்படுவது தான் அதிகம் என்று தகவல் வந்திருக்கிறது. திருட்டுப் போவதைத் தடுக்க சரியான நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. அ. தேவேந்திரன்:** தலைவரவர்களே, இரயில்வேத் துறையில் பொருட்கள் திருட்டுப் போகாமல் தடுப்பதற்கு ஆர்.பி.எப். வைத்திருக்கிறார்கள் அதைப்போல மின்சார வாரியத்திலும் அதற்குச் சொந்தமான பொருட்களைப் பாதுகாக்க ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, மின்சார வாரியத்தில் செக்யூரிட்டி போர்ஸ் என்று ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

**திரு. த. சோலையா:** தலைவரவர்களே, இந்த மின்சார வாரியத்தின் பல்புகள் திருட்டுப் போகிறது என்றும் சமூக விரோத சக்திகளால் உடைக்கப்படுகிறது என்றும் பலபேர் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி உடைக்கப்படாமலும், திருட்டுப் போகாமலும் இருப்பதற்கு மின்சார பல்புகளுக்கு ஏதாவது ஒருவித வலை போடப்படுமா? குறிப்பாக அடிக்கடி திருட்டுப்போகிற இடங்களிலும், உடைக்கப்படுகிற இடங்களிலாவது அப்படிப்பட்ட பின்னல் வலை போட்டு பல்புகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** அது ஒரு நல்ல யோசனை.



1973 நவம்பர் 29]

**திரு.ரா. ரா. முனுசாமி:** அடிக்கடி சமூக விரோத சக்திகளால் பல்புகள் உடைக்கப்படுகின்றன என்று சொன்னார்கள். அது உண்மை. ஆனால் நகரங்களில் பொதுவாக ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடைபெறும்போது கலவரங்கள் ஏற்பட்டு பல்புகள் உடைபடுகின்றன. ஆகவே, பல்புகளை உடைப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தவறு செய்யும்போது யாராக இருந்தாலும் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. சி. ஆறுமுகம்:** இதுவரையிலே மின்சார வாரியத்திற்குச் சொந்தமான கம்பிகள் எங்கெங்கே திருட்டுப்போயிருக்கின்றன? அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தனிக்கேள்வி போட்டால் விபரம் சேகரித்து, தகவல் சொல்ல முடியும்.

**திரு. எஸ். நல்லசாமி:** தலைவரவர்களே, மின்சார வாரியத்தில் உள்ள பல்புகள், கம்பிகள் திருட்டுப் போவதாகச் சொன்னார்கள். அதைப்போல காண்டு திருட்டுப் போகிறது என்பதை அரசு அறியுமா? திருட்டுப் போனால் எத்தனை சதவிகிதம் திருட்டுப் போகிறது என்பதை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** இதற்கு உடனடியாகப் பதில் சொல்வதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. தனிக்கேள்வி போட்டால் விபரம் தெரிவிக்கப்படும்.

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவரவர்களே, மின்சார வாரியத்திற்குச் சொந்தமான பல்புகள், கம்பிகள் போன்ற பொருட்கள் திருட்டுப்போவதைக் கண்டுபிடிப்பதற்காக, அந்தப் பொருட்களின் மீது மி.வா. அல்லது இ.பி. என்ற எழுத்துக்களைப் பொறிப்பதற்கு மின்சார வாரியம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** அது நல்ல யோசனைதான்.

திரு. எம். தேவராசன் : இந்த மின்சாரம் திருட்டுப் போவதை 'லைன் லாஸ்' என்ற பெயரிலே சொல்லப்படுகிறது என்பது உண்மையா ? லைன் லாஸைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஏற்கெனவே பதிலிலே விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, இந்தக் கம்பிகள் காப்பர் கண்டக்டர்களாக இருப்பதால்தான் திருட்டுப்போகின்றன. ஆகவே, எங்கெங்கே காப்பர் கண்டக்டர்கள் இருக்கின்றனவோ அவைகளை எடுத்துவிட்டு, அவைகளுக்குப் பதிலாக அலுமினிய கண்டக்டர்களைப் போட மின்சார வாரியத்திற்கு அரசு ஆலோசனை கூறுமா ?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : காப்பர் கண்டக்டர்கள் போடுவதுதான் நல்லது என்று சொல்கிறார்கள். காப்பர் கண்டக்டர்கள் போதுமான அளவுக்குக் கிடைக்காததால் இப்போது அலுமினிய கண்டக்டர்களைப் போடுகிறார்கள். ஆகையால் இருக்கக்கூடிய காப்பர் கண்டக்டர்களை எடுத்துவிடுவது என்பது உசிதமல்ல.

## *Equipments for Tuticorin Thermal Plant*

*504 Q.Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether it is a fact that the Electricity Board have placed orders with Bharat Heavy Electricals Ltd., for the supply of equipment for the Tuticorin Thermal Plant; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) ஆம். 2 கோடி ரூபாய் முன் பணமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, காலதாமதத்தைத் தவிர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? எப்போது எக்விப்மெண்ட் கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, 1975 அக்டோபரில் கிடைக்கும். இதற்கு 40 கோடி செலவாகும். விரைவிலே வழங்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, அனல் மின்சார நிலையங்களுக்கு ஏற்ற சாதனங்களைத் தயாரிக்கின்ற தொழிற்சாலை திருச்சியில் இருக்கிறது. பக்கத்திலே நெய்வேலி நிலக்கரி இருக்கிறது. ஆகையால் அங்கே ஒரு அனல் மின்சார நிலையத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று அமைச்சரவர்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இவைகளை மனதில் வைத்து, திருச்சியிலே ஒரு அனல் மின்சார நிலையத்தை ஏற்படுத்துவதற்கு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தற்போது இதைப்போன்ற திட்டம் ஒன்றை தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்ப இருக்கிறோம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : இந்த தூத்துக்குடி அனல் மின்சார நிலைய வேலை எப்போது முடிவடையும் ? அதிலிருந்து எப்போது மின்சாரம் கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : சாதாரணமாக இந்தத் திட்டம் 6 ஆண்டில் முடிவடையவேண்டும். ஆனால் இப்போது 5 ஆண்டிலே முடிவடைவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : சார், தூத்துக்குடி அனல் மின்சார திட்டத்தின் தொடர்பாக மேட்டூரிலும் ஒரு அனல் மின்சார நிலையம் ஏற்படுத்தலாம் என்று சர்வே நடத்தப்பட்டு, இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக அரசாங்கம் என்ன முடிவு எடுத்திருக்கிறது? எப்போது தொடங்கப்படும் ? தொடங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இத்திட்டம் திட்டக் குழுவின் விவாதத்தில் இருக்கிறது. இன்னும் முடிவு சொல்லப்படவில்லை.

[1973 நவம்பர் 29

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, இந்த பாண்டியாறு-புன்னம்புழா நீர்மின்சாரத் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இது இரண்டு மாநிலங்களுக்குள்ள பிரச்சனை. ஆகவே, இரு மாநிலங்களினிடையே ஒரு முடிவு ஏற்பட்ட பின்னுல்தான் இதுபற்றி தெளிவான கருத்து சொல்ல முடியும்.

**திரு. சி. ஆறுமுகம் :** கல்பாக்கத்திலே நிறுவப்படும் அணு மின்சார நிலையத்திலிருந்து நமக்கு எந்த ஆண்டில் மின்சாரம் கிடைக்கும் ? இப்போது மத்திய அரசு தலையிட்டு, அந்த நிலயத்திற்கு வெளிநாட்டிலிருந்து வரவேண்டிய சில முக்கியமான பொருட்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதில் ஏதாவது அரசியல் கண்ணேட்டம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, 1973–74-ம் ஆண்டு முதல் பிரிவு உற்பத்தியை தொடங்க வேண்டுமென்று அனுமதிக்கப்பட்டிருந்தது. இப்போது முதல் பிரிவு 1977-ம் ஆண்டுதான் உற்பத்தியைத் தொடங்கும் என்று கருதப்படுகிறது.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவரவர்களே, தமிழகத்திலே இருக்கிற மின்சார வாரியத்திற்குத் தேவைப்படுகிற பொருட்களை—சில இயந்திரங்களை முழுமையாகப் பிற நாடுகளிலிருந்துதான் வாங்க வேண்டியிருக்கிறது. அதற்கு வெளிநாட்டு கொள்கை அடிப்படையில் அந்நியச் செலாவணி ஒதுக்கித் தருவதில் கால தாமதம் ஏற்படுகிறது என்பது நமக்குத் தெரியும். இப்போது அந்நியச் செலாவணி ஒதுக்கீடு எந்த நிலையில் இருக்கிறது ? மத்திய அரசு நமக்கு 'பாரின் எக்ஸ்சேஞ்ச் ரிலீஸ்' செய்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** அது பொதுவான நாட்டுக் கொள்கைத் திட்டம். அந்நியச் செலாவணியை ஒதுக்குவது மத்திய அரசின் நிலையைப் பொறுத்தது.



1973 நவம்பர் 29]

## நீரேற்றுக் கருவிகள் நிறுவுவதற்கான கால அளவு

*505 வினா—**திரு. க. நாகராஜன் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மின் இணைப்பு வழங்கியதன் பிறகு குறிப்பிட்ட காலத்திற்குள் நீரேற்றுக் கருவியை குடியானவர்கள் நிறுவ வேண்டும் என்று விதி வகுக்கும் செயற்குறிப்பு ஏதுவுமுள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இல்லை.

**திரு. கோ. இளங்கோவன் :** தலைவரவர்களே, விவசாயிகள் நீரேற்றுக் கருவியைப் பொருத்திய உடன், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் மின்னிணைப்பு வழங்கப்பட வேண்டுமென்று அரசு வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, இது இயலாது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, பம்பு செட்டுகள் அமைக்கப்பட்டும் பல இடங்களில் மின் இணைப்புக் கொடுக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, வரிசை முறைப்படி பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** அப்படிச் செய்யலாம் என்ற ஒரு கருத்து இருக்கிறது. இப்போது விவரம் சேகரித்து, பரிசீலனை செய்து, தொழில் துறையோடு கலந்து, ஜாபிதா—வரிசைப் பட்டியல் தயாரிக்கச் சொல்லியிருக்கிறோம். குறிப்பு வந்தவுடன் அதுபற்றி பரிசீலனை செய்யப்படும்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** தலைவரவர்களே, இந்த நீரேற்றுக் கருவிகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு கிராம கர்ணங்களிடமிருந்து அத்தாட்சி பெற்று வரவேண்டுமென்று மின்சார வாரியம் விதிமுறை வைத்திருக்கிறது. சாதாரண விவசாயிகளுக்கு அதனால் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. ஆகவே, அந்த முறையை ரத்து செய்வார்களா ? சான்றிதழ்

வேண்டுமென்றால் சட்ட மன்ற உறுப்பினர்களிடமிருந்து இலவசமாக பெற்றுக்கொள்ளலாம் என்ற முறையை கையாள ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து சுலபமாக சான்றிதழ் பெற்றுவிடலாம் என்று அவர்கள் சொல்கிறார்கள். அப்படி இருந்தாலும், மின்சாரம் கிடைக்கின்ற அளவுக்குத்தான் இணைப்புகள் கொடுக்க முடியும். அதுதான் இப்போதைய பிரச்சனை. ஏற்கெனவே இணைப்பு கொடுக்கப்பட்டிருப்பவர்களுக்கு பாதுகாப்பு இருக்க வேண்டும். இனிமேல் உற்பத்தியைப் பொறுத்து புதிய இணைப்புகள் கொடுக்க வேண்டும். இணைப்பு வேண்டுமென்று லட்சக்கணக்கில் விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. உற்பத்தியைப் பொறுத்து, எவ்வளவு கொடுக்க முடியுமோ அது நிச்சயமாகக் கொடுக்கப்படும்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், மின்சார இலாகாவிலிருந்து அனுமதி பெற்று, விவசாயிகள் பம்புசெட்டுகளை அமைக்கிறார்கள். பம்புசெட்டு அமைக்கப்பட்டவுடன் மின் இணைப்பு கொடுக்கப்படுவதில்லை. ஆனால் பம்புசெட்டு அமைக்கப்பட்டவுடன், அவர்கள் கடனைப் பெற்ற பணத்திற்கு இன்ஸ்டால்மென்ட் கட்ட வேண்டியிருக்கிறது. உடனடியாக மின் இணைப்புக் கொடுத்தால்தான், அவர்கள் உற்பத்தி செய்து, அரசாங்கக் கடனை ஒழுங்காகக் கட்ட முடியும். ஆகவே, பம்புசெட்டு அமைக்கப்பட்ட உடனேயே மின்னிணைப்பு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, இப்போது 6½ லட்சம் பேர்களுக்கு கொடுத்திருக்கிறோம். மொத்தம் கேட்டது 11 லட்சம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது 1½ லட்சம் பேர்கள் கேட்டிருக்கிறார்கள். எல்லோருக்கும் கொடுக்க முடியாது. இருப்பதை வைத்துத்தான் கொடுக்க முடியும். முதலில் கடன் வாங்கியவர்களுக்குக் கொடுப்பதா அல்லது எதிர்க்கட்சித் தலைவரவர்கள் தெரிவித்ததுபோல் வரிசைப்படிக் கொடுப்பதா என்பதை பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** மின்சார மோட்டார்களுக்கு இணைப்பு கொடுப்பதில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இவ்வளவு என்று நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதாவும் நிலவள வங்கி மூலமாகப் பணம் கடன் கொடுக்கப்பட்டவர்களுக்கே மின் இணைப்புக் கொடுப்பதாகத் தெரிகிறது. செஞ்சி வட்டத்தைப்



பொறுத்தவரை யாருக்கும் நிலவள வங்கி மூலமாகக் கடன் கொடுக்கப்படவில்லை. அவரவர்கள் சொந்தமாக, தனிப்பட்ட முறையில் கடன் வாங்கி மின்சார மோட்டார் இணைத்திருக்கிறார்கள். கடந்த ஏழெட்டு மாதங்களாகவே அவர்களுக்கு மின் இணைப்புக் கிடைக்கவில்லை. இவர்களுக்குப் பர்ஸ்ட் ப்ரையாரிடி வைத்து மின் இணைப்பு கொடுக்க முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** சாதாரணமாக கையில் இரண்டாயிரம் ரூபாய் உள்ளவர் கடன் வாங்காமலேயே மின் மோட்டார் வைத்துக்கொள்ள முடியும். நிலவள வங்கி மூலம் கடன் பெற்றவர்களுக்குத்தான் என்று இல்லாமல் எந்த எந்தத் தேதியில் பதிவு செய்துகொண்டார்களோ, அந்தந்த தேதி அடிப்படையில் வரிசையாக மின் இணைப்பு கொடுப்பது நலமாக இருக்குமா என்பது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**திரு. சி. ஆறுமுகம் :** எங்கள் மதுராந்தகம் பகுதியில் சென்ற ஓராண்டு காலமாக மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை. முன்பெல்லாம் அக்ரிமெண்டானால் ஒரு வாரத்திற்குள் கொடுத்து விடுவார்கள். இப்போது அதிகாரிகளிடத்தில் கேட்டால் கம்பிகள் இல்லை என்று சொல்லி அக்ரிமெண்டு ஆனவர்களுக்குக் கூட கனெக்ஷன் கொடுக்காமல் இருக்கிறார்கள். உடனடியாக அங்கே மின் இணைப்புக் கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** மின்இணைப்பு கொடுப்பது என்றால் மின்சார இருப்பு இருக்க வேண்டும். விவசாயிகளுக்குக் கொடுப்பதன் மூலம் ஏற்கனவே 12 கோடி ரூபாய் நட்டம் வருகிறது. இது அதிகரித்தால் இன்னும் எந்த அளவு தாங்க முடியும் என்று பார்த்தும் செய்ய வேண்டியிருக்கிறது.

## *Guides in Meenakshi Amman Temple*

* 506 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(a) whether there are proposals under the consideration of the Government to post only trained guides at Madurai Thiru Meenakshi Temple; and

(b) the details thereof?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1973 நவம்பர் 29

**திரு. ரா. ரா. முனுசாமி :** மதுரை மீனாட்சி அம்மன் கோயில், தஞ்சை பிரகதீச்சுவரர் கோயில் போன்ற இடங்களில் வழிகாட்டிகளாக இருப்பவர்கள் சரியான முறையில் சரித்திர, கலை வரலாறுகளை எடுத்துச் சொல்வதில்லை. ஆகவே அறநிலையத் துறை மூலமாக எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்கு ஒரு பயிற்சியைக் கொடுத்து கெய்டுகளாகப் போட முன்வருவார்களா ? இதன் மூலம் படித்தவர்களிடையே உள்ள வேலையில்லாத் திண்டாட்டம் கூடக் குறையும்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** வழிகாட்டிகளாக இருப்பவர்கள் வரலாற்றை முறையாக எடுத்துச் சொல்ல வேண்டுமென்றுதான் மதுரை மீனாட்சி அம்மன் கோயில் மூலமாக ஒரு திட்டத்தை அனுப்பியிருக்கிறார்கள். வழிகாட்டிகளை மூன்று வகையாகப் பிரித்து, பட்டதாரிகள், எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள், ஏற்கனவே வழிகாட்டிகளாகப் பணியாற்றுகிறவர்கள் ஆகியவர்களைக் கொண்டு—அவர்களுக்கு நம்முடைய நாட்டு வரலாறு, கோயில்களின் வரலாறு, சிற்பக் கலையின் தன்மை ஆகியவற்றைச் சொல்லிக் கொடுத்து, அவர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட ஒரு திட்டத்தை அனுப்பியிருக்கிறார்கள். ஆணையர் அதைப் பரிசீலித்து அந்தத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்கள்.

**புலவர் சி. பழனிச்சாமி :** கோயில் வழிகாட்டியாக நியமிக்கப்படுகிறவர்களில் 18 சதவிகிதம் கட்டாயம் தாழ்த்தப்பட்டவர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்று அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** அந்தப் பயிற்சித் திட்டம் ஆரம்பிக்கப்படுகிறபோது உறுப்பினர் சொல்கிற கருத்து மேற்கொள்ளப்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் ஏற்கனவே கெய்டுகளாக இருக்கிறவர்கள் நிலைமை என்ன ? அவர்களுக்கு அந்தந்த தேவஸ்தானத்தில் இருந்தே ஊதியம் நிர்ணயிக்கப்படுகிறதா ? அப்படி என்றால் எவ்வளவு ?



1973 நவம்பர் 29]

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்ன பதிலில் பட்டதாரிகள், எஸ்.எஸ்.எல்.சி. கள் ஆகியவர்களோடு ஏற்கனவே கெய்டுகளாகப் பணியாற்றுகிறவர்களையும் சேர்த்துக்கொள்ள இருக்கிறோம். ஊதியம் பிறகுதான் நிர்ணயிக்கப்படும்.

**திரு. எஸ். வடிவேல் :** தமிழ்நாட்டிலுள்ள முக்கிய ஸ்தலங்களுக்கு எல்லாம் கெய்டுகளாகப் போடுகிறவர்கள் எல்லாப் பாஷைகளையும் பேசக்கூடியவர்களாக இருக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** நாம் ஆரம்பித்திருக்கிற பயிற்சித் திட்டத்தில் ஆங்கிலம் படித்தவர்கள், ஆங்கிலம் தமிழ் படித்தவர்கள்தான் தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறார்கள்.

**திரு. த. சோலையா :** மதுரை மீனாட்சி அம்மன் கோயில் மூலமாகப் பயிற்சி பெற இருக்கிறவர்களுக்கு ஊதியம் கோயில்களின் மூலம் வழங்கப்படுமா ? அல்லது யாத்திரிகர்களிடம் இருந்துதான் வசூலித்துக் கொள்வார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, மற்ற இடங்களில் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கெய்டுகள் எந்த முறையில் செயல்படுகிறார்களோ அந்த முறையில்தான் இவர்களும் செயல்படுவார்கள்.

**திரு. எஸ். வடிவேல் :** பெரும்பாலும் தென்னகத்திலுள்ள கோயில்களுக்கு வடநாட்டில் இருந்துதான் அதிகமான பேர்கள் வருகிறார்கள். ஆகவே இந்த கெய்டுகளுக்கு பிரதானமாக இந்தி தெரிந்திருக்க வேண்டுமென்பதால் இந்தியில் பயிற்சி அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இந்தி தேவையில்லை, ஆங்கிலம் போதும் என்று கருதுகிறோம்.

**திரு. எம். தேவராசன் :** பெரிய கோயில்களில் இன்றையதினம் நிறைய தரகர்கள் இருந்துகொண்டு யாத்திரிகர்களிடம் பணம் பறிக்கிற திட்டத்தைத்தான் நீட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே பக்தர்களைக் காக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** எந்தத் தரகரிடம் உறுப்பினர் சிக்கினார் என்ற விவரம் எனக்குத் தெரியாது.

[1973 நவம்பர் 29

திரு. எம். சுரேந்திரன்: அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கெய்டுகள் நியமிக்கப்படுகிறபோது அவர்கள் அதற்குள்ள முக்கியமான தகுதிகள் உள்ளவர்களாக இருப்பது மிக அவசியம். நாட்டின் எந்தப் பகுதியில் இருந்து வருகிறவர்களுக்கும் விளக்கிச் சொல்வதற்கு அவர்களுக்குத் தகுதியிருந்தால்தான் அந்த அந்தஸ்தைப் பெற முடியும். அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது இந்தி தேவையில்லை என்று சொன்னது—அவருடைய கணக்குத் தவறாக இருக்குமோ என்று சந்தேகப்படுகிறேன். வருங்காலத்திலாவது இதைக் கணக்கில் கொண்டு அவர்களுக்கு இந்தி மொழியிலும் பயிற்சி அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: நான் ஆங்கிலம் படித்தவர்கள், ஆங்கிலம், தமிழ் படித்தவர்கள் ஆகியவர்களுக்கு அளிக்கப்படுகிற பயிற்சித் திட்டம் பற்றித்தான் சொன்னேன்.

### திரு. நாரம்புநாதசுவாமி கோயில் திருப்பணி

*507 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருப்புடைமருதூர் கிராமத்தில் உள்ள திரு. நாரம்புநாதசுவாமி கோவில் திருப்பணிக்கான அடிக்கல் எப்போது நாட்டப்பட்டது?

(இ) திருப்பணி தற்போது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) 15—4—1970

(இ) இன்னும் திருப்பணி வேலை துவங்கப்படவில்லை.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாததற்குக் காரணம் என்ன என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, 1970 இல் திருப்பணி வேலை துவங்கப்பட்டாலும் கூட, அந்த மதிப்பீட்டுக்கான அனுமதி பெறப்படவில்லை. 20—5—72 இல் தான் மதிப்பீட்டுக்கு அனுமதி பெற்றிருக்கிறார்கள் கடந்த ஆகஸ்டு மாதம் முதல் திருப்பணிக் குழு வசூல் செய்வதில் இறங்கியிருக்கிறார்கள். ஆகஸ்டு திங்களில் இருந்துதான் வேலை துவங்கப்பட்டிருப்பதாகத் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது.



1973 நவம்பர் 29]

### மருத்துவ மனைகளுக்கு விற்கப்பட்ட கதர் துணிகள்

*508 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆஸ்பத்திரிகளுக்கு தேவையான கதர் துணி ரகங்களுக்கு காதி போர்டுக்கு ஆர்டர்கள் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், 1971–72-ல் எவ்வளவு கதர் துணி அவைகளுக்கு விற்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) 1971-72-ம் ஆண்டில், ரூ. 14,23,944 மதிப்பிற்குக் கதர் துணிகள் மருத்துவ மனைகளுக்கு விற்கப்பட்டன.

திரு. கே. எ. வகாப்: இந்தக் கதர் துணிகள் மருத்துவ விடுதிகளுக்கு மட்டும் இல்லாமல் உள்ளாட்சித் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கும் கொடுத்து, அதிகப்படியான விற்பனையை ஊக்குவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தற்போது மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட முறையில்தான் உள்ளாட்சித் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும் கதர் துணி வழங்கப்படுகிறது.

திரு. எஸ். வடிவேல்: சார், தொடர்ந்து கதர் துணியைக் கட்டிக்கொண்டு வருபவர்களுக்கு ரிபேட் கொடுக்கின்ற முறை தொடர்ந்து கடைபிடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, கைத்தறியை விடக் கதர் அதிகமான விலையாக இருக்கிறது. ஆகவே, காந்தீயக் கொள்கையை ஏற்று, தொடர்ந்து கதர் கட்டிக்கொண்டிருக்கிற தியாகிகளுக்காவது. அப்படிப்பட்டவர்களுக்காவது, ரிபேட் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஏற்கனவே, நான் குறிப்பிட்டதுபோல், காந்தியாருடைய கொள்கைக்காகக் கட்டுபவர்கள் அதிலே ஈடுபட்டிருக்கிற பல்லாயிரக்கணக்கான

[1973 நவம்பர் 29

*திரு. எம். சுரேந்திரன் :* அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கெய்டுகள் நியமிக்கப்படுகிறபோது அவர்கள் அதற்குள்ள முக்கியமான தகுதிகள் உள்ளவர்களாக இருப்பது மிக அவசியம். நாட்டின் எந்தப் பகுதியில் இருந்து வருகிறவர்களுக்கும் விளக்கிச் சொல்வதற்கு அவர்களுக்குத் தகுதியிருந்தால்தான் அந்த அந்தஸ்தைப் பெற முடியும். அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற போது இந்தி தேவையில்லை என்று சொன்னது—அவருடைய கணக்குக் தவறாக இருக்குமோ என்று சந்தேகப்படுகிறேன். வருங்காலத்திலாவது இதைக் கணக்கில் கொண்டு அவர்களுக்கு இந்தி மொழியிலும் பயிற்சி அளிக்கப்படுமா ?

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :* நான் ஆங்கிலம் படித்தவர்கள், ஆங்கிலம், தமிழ் படித்தவர்கள் ஆகியவர்களுக்கு அளிக்கப்படுகிற பயிற்சித் திட்டம் பற்றித்தான் சொன்னேன்.

### திரு. நாரம்புநாதசுவாமி கோயில் திருப்பணி

*507 வினா—*திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :* மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருப்புடைமருதூர் கிராமத்தில் உள்ள திரு. நாரம்புநாதசுவாமி கோவில் திருப் பணிக்கான அடிக்கல் எப்போது நாட்டப்பட்டது ?

(இ) திருப்பணி தற்போது எந்நிலையில் உள்ளது ?

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :* (அ) 15—4—1970

(இ) இன்னும் திருப்பணி வேலை துவங்கப்படவில்லை.

*திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :* இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாததற்குக் காரணம் என்ன என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :* தலைவர் அவர்களே, 1970 இல் திருப்பணி வேலை துவங்கப்பட்டாலும் கூட, அந்த மதிப்பீட்டுக்கான அனுமதி பெறப்படவில்லை. 20—5—72 இல் தான் மதிப்பீட்டுக்கு அனுமதி பெற்றிருக்கிறார்கள் கடந்த ஆகஸ்டு மாதம் முதல் திருப்பணிக் குழு வசூல் செய்வதில் இறங்கி யிருக்கிறார்கள். ஆகஸ்டு திங்களில் இருந்துதான் வேலை துவக்கப்பட்டிருப்பதாகத் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது.



1973 நவம்பர் 29]

### மருத்துவ மனைகளுக்கு விற்கப்பட்ட கதர் துணிகள்

*508 வினா—*திரு. கே. எ. வகாப் :* மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆஸ்பத்திரிகளுக்கு தேவையான கதர் துணி ரகங்களுக்கு காதி போர்டுக்கு ஆர்டர்கள் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், 1971–72-ல் எவ்வளவு கதர் துணி அவைகளுக்கு விற்கப்பட்டிருக்கிறது ?

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :* (அ) ஆம்.

(இ) 1971-72-ம் ஆண்டில், ரூ. 14,23,944 மதிப்பிற்குக் கதர் துணிகள் மருத்துவ மனைகளுக்கு விற்கப்பட்டன.

*திரு. கே. எ. வகாப் :* இந்தக் கதர் துணிகள் மருத்துவ விடுதிகளுக்கு மட்டும் இல்லாமல் உள்ளாட்சித் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கும் கொடுத்து, அதிகப்படியான விற்பனையை ஊக்குவிக்க அரசு முன்வருமா ?

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :* தற்போது மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட முறையில்தான் உள்ளாட்சித் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும் கதர் துணி வழங்கப்படுகிறது.

*திரு. எஸ். வடிவேல் :* சார், தொடர்ந்து கதர் துணியைக் கட்டிக்கொண்டு வருபவர்களுக்கு ரிபேட் கொடுக்கின்ற முறை தொடர்ந்து கடைபிடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :* அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

*திரு. ரா. ரா. முனுசாமி :* தலைவர் அவர்களே, கைத்தறியை விடக் கதர் அதிகமான விலையாக இருக்கிறது. ஆகவே, காந்தீயக் கொள்கையை ஏற்று, தொடர்ந்து கதர் கட்டிக்கொண்டிருக்கிற தியாகிகளுக்காவது, அப்படிப்பட்டவர்களுக்காவது, ரிபேட் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :* ஏற்கனவே, நான் குறிப்பிட்டதுபோல், காந்தியாருடைய கொள்கைக்காகக் கட்டுபவர்கள் அதிலே ஈடுபட்டிருக்கிற பல்லாயிரக்கணக்கான

தொழிலாளர்களுடைய வாழ்வுக்காகக் கட்டுகிறார்கள். அந்த நல்ல நோக்கம் நிறைவேறுவதற்குத் தொடர்ந்து அவர்கள் அந்தக் காரியத்தைச் செய்யவேண்டுமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, குடும்பக் கார்டு முறையை காதி வாங்குபவர்களுக்கு அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக அறிகிறேன். அந்தத் திட்டத்தை ஊர்ஜிதப்படுத்துவதற்கும் விஸ்தரிப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அது பற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அது உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அவையுரிமைப் பிரச்சினை

### அறநிலையத் துறை அமைச்சர் பேரவைக்குத் தவறான தகவலைத் தந்ததாகக் கூறப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னை கொண்டு வந்திருக்கிறார்கள். அதை எழுப்புமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : Hon. Mr. Speaker, Sir, I raise a matter of privilege against the Hon. Minister for Religious Endowments under Rule 185 of the Tamil Nadu Legislative Assembly Rules, for giving wrong information to this House on 21st November 1973 in reply to a supplementary raised by the hon. Member Thiru M. A. Latheef, M.L.A. In connection with the main Starred Question No. 295, the hon. Member Latheef in his supplementary asked whether the Minister was aware that 5,000 litres of milk are getting spoiled per day at Nilgiris. The Minister in his reply mentioned that the milk was spoiled only on one day. I have information to prove that more than 4,000 litres of milk was



spoiled and thrown as unfit for human consumption daily for more than ten days, and the Minister was aware of it. In spite of this the Hon. Minister chose to defend the Government by giving wrong information. This in my view constitutes a breach of privilege of this House, because the Minister deliberately gave wrong information with the object of misleading this House.

Sir, may I briefly point out that I have with me record in connection with the same matter, an unstarred question No. 416 (626) and reply furnished by the Legislative Assembly Department. My question, the original unstarred question was (*a*) whether it is a fact that nearly a quantity of 5,000 litres of milk was poured into drains daily by the Ootacamund Co-operative Milk Supply Society during the year 1971 and (b) the reasons therefor. The written answer given at that time—It was a long time ago—was (*a*) Only about 4,300 litres of skimmed milk—I had asked if 5,000 litres of milk was going down the drain daily—which became sour and which became totally unfit for human consumption was discarded by the Co-operative Milk Supply Society at Ooty per day from 13th to 21st November 1971.

The Hon. Minister himself had furnished this written reply to the unstarred question and he has said that from 13th to 21st November 1971 daily the milk was discarded and then he has also given a reply to question (*b*) .........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்தத் தேதியிலிருந்து எந்தத் தேதிவரை ?

Dr. H. V. HANDE : It is from 13th to 21st November 1971, actually it comes to nearly nine days. And then he says in reply to question (*b*).—The Ooty Co-operative Milk Supply Society had suddenly increased procurement of milk from 15,000 litres in Ocober 1971 to 17,500 litres in November 1971. But only 7 500 litres could be sold locally and the Madras Dairy Milk Project could receive only 3,859 litres from the Society. So, the society was faced with a huge surplus all of a sudden. It had therefore to resort to skimming a portion of the milk for butter. In view of the time involved the skimmed milk became sour; it had to be discarded as it became totally unfit for human consumption. The management of the Society feared that the return of the skimmed milk to the producers could give scope for adulteration and therefore decided to discard the surplus skimmed milk."

[Dr. H. V. Hande] [1973 நவம்பர் 29

Sir, my point is that Mr. Latheef's question and the Hon. Minister, Mr. Kannappan's answer are there. It is quite clear. The Minister's reply was : "மதிப்பிற்குரிய லத்தீப் அவர்கள், நீலகிரி மாவட்டத்தில், நாள் ஒன்றுக்கு 5,000 லிட்டர் பால் பாழாகிப் போய்விட்டதென்று சொன்னார்கள். அது சரியல்ல. ஒரு முறைதான் பால் கெட்டுவிட்டது. Tha is what he has answered. My submission is this. I would not have normally brought this as a privilege issue. My object in bringing this is to impress upon every one of us that the Hon. Ministers, especially whenever they give answers, they should take great responsibility. That is absolutely necessary. Even in the Lok Sabha when any Minister gives a wrong answer, he is immediately pulled up either by the Hon. Speaker or by a member. But in this House, during the last so many years,—no point of order could be raised during question hour—whenever a wrong answer or information is given, I cannot get up and ask the Speaker that it is wrong information and therefore it should be corrected. There is no chance here for us to get up and point out, for no point of order could be raised during question hour. Normally that is not allowed during question time. Therefore, whatever the Minister's say, we have to consume it and completely take it as golden facts. This puts a great responsibility on the Hon. Minister concerned whenever he gives an answer.

Normally, if members give wrong information that can be condoned, for members have no official help or authority to verify it. Members do not have the advantage that the Cabinet Ministers and Members of the Treasury Benches have. Even that can be condoned if Members belonging to the Ministry give wrong answers if they give it without knowledge about it. That is pardonable. For instance, a discussion takes place on a particular subject, say, electricity and then the Ministers gives some information and we have certain facts to prove that the information of the Minister is wong. But we cannot butt in and I cannot get up and butt in and the Minister may not yield. At the end, the Hon. Speaker may say discussion is over and he puts a closure on it. In such a situation where are we to go ? We have no other go. Otherwise, I would not have had recourse to a privilege



1973 நவம்பர் 29] [Dr. H. V. Hande]

issue There is no other way to pull up the Minister concerned. Ministers should not give wrong information and get away with it.

Finally, in this particular context, it is gross breach of privilege, because the Minister had already given a written answer earlier to an unstarred question. Knowing that such a thing has happened, when the hon. Member Latheef pointedly asked—there were paper reports also—a very pertinent question, the Hon. Minister has given this answer. If such things happen, where are we to go ? The Hon. Speaker should give us protection. We have no other forum. That is why I have given this privilege issue. I would like the Hon. Speaker, like the Speaker of the Lok Sabha, to pull up the Ministers and ask them to give correct answers. That itself will satisfy me, Sir.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு லத்தீப் கேட்ட ஒரு கேள்விக்கு தவறான தகவலை இந்த அவைக்குச் சொல்லவேண்டுமென்ற எண்ணத்தோடு அன்றைக்குப் பதில் கூறப்படவில்லை. அவர்கள், 'ஒரு நாளைக்கு ஐந்தாயிரம் லிட்டர் பால் அழிக்கப்பட்டு வந்தது என்று பத்திரிகையில் செய்தி வந்ததே' என்று கேட்டார்கள். அதற்கான பதிலை நான் சொல்லும்போது, "ஐந்தாயிரம் லிட்டர் பால் அழிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அது சரியல்ல. ஒரு முறை பால் கெட்டுவிட்டது என்ற காரணத்தினால்தான் அழிக்கப் பட்டது" என்று சொல்லியிருக்கிறேன். இதிலே உள்ள பிரச்சினை ஏற்கனவே ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டது போல், அவர்கள் கேட்ட ஒரு கேள்விக்கு கடந்த 1971 அல்லது 1972-வது ஆண்டு 10 நாட்கள் தொடர்ச்சியாக பால் கெட்டுப்போய்விட்டது, அல்லது அங்கே அழிக்கப்பட்டது என்பது உண்மையாகும் என்றேன். ஆனால் லத்தீப் அவர்கள் கேட்ட கேள்வி ஒரு நாளைக்கு ஐந்தாயிரம் லிட்டர் பால் அழிக்கப்பட்டதே என்பது. அதற்கு நான் சொன்ன பதில்—கடந்த 15—1—1973-ம் நாள் ஊட்டி-கூட்டுறவு மில்க் சப்ளை சொஸைட்டியிலே இருந்து 4,450 லிட்டர் பாலை ஈரோட்டிலே இருக்கிற ஒரு நிறுவனத்திற்கு டாங்கர் மூலமாகக் கொண்டு வரும்போது, ஈரோட்டிலே அந்தப் பாலை பார்க்கும்போது. 4,450 லிட்டர் பாலும் கெட்டுப் போய்விட்டது—அந்தத் தகவலை வைத்துத்தான் 4,450 லிட்டர் பாலும் கெட்டுட்

[திரு. மு. கண்ணப்பன்] [1973 நவம்பர் 29

போய்விட்டது என்று இந்த மன்றத்திற்கு சொன்னேனே தவிர, ஏற்கனவே குறிப்பிட்டுச் சொன்னதைப் பற்றி நான் குறிப்பிடவில்லை. சமீபத்திலே நடந்த சம்பவம், 15—1—1973-ல் ஈரோட்டிலே வைட்டிலிருந்து வந்த பால் கெட்டுப்போய்விட்டது என்றுதான் சொல்லி இருக்கிறேன். ஆகவே சபைக்கு எந்தவிதமான தவருன தகவலையும் கொடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-00]

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* இதைப்பற்றி என்னுடைய தீர்ப்பை நாளைக்கு அளிக்கிறேன். இப்பொழுது திரு. தங்கமணி அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னையை எழுப்புவார்கள்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, I rise on a point of order . .

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* உட்காருங்கள். இப்பொழுது திரு. தங்கமணி அவர்கள் உரிமைப் பிரச்னையை எழுப்புவார்கள்.

**(ஆ) பேரவையில் வைக்கப்பட்ட அறிக்கையில் இணைக்கப்பட்டுள் முதலமைச்சர் இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதம் உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களைக் களங்கப் படுத்தும் வகையில் அமைந்துள்ளது என்று கூறப்படுவது குறித்து**

THIRU K. T. K. TANGAMANI: Mr. Speaker, Sir, under Rule 184 of the Tamil Nadu Legislative Assembly Rules, I wish to raise the following matter of privilege:—

"Rejoinder and Reply i.e., Rejoinder by Thiru M. G. Ramachandran, M.L.A. and Rejoinder and Note by Thiru M. Kalyanasundaram, M.P. and reply thereto was placed on the Table of he House during the current Session. Thiru M. Karunanidhi's letter to Mrs. Indira Gandhi, dated 28th May 1973 is reproduced in pages 213 to 218. At page 215 referring to me (K. T. K. Thangamani) letter states: "He has no qualms of conscience in attacking the Government for the very act which he had requested the Government to do. Such is the character and calibre of the persons who have brought these charge against the Government".



1973 நவம்பர் 29] [Thiru K. T. K. Thangamani]

This statement is clearly defamatory and is calculated to undermine the views expressed by me in the House or otherwise. It will amount to character assasination and is a clear case of breach of privilege of a Member.

I request that these may be referred to the Committee of Privileges or in the alternative to the Committee of the whole House.

With your leave, I will explain the position. As you are aware that the reply to the rejoinder was submitted to this House and there is one letter addressed to the Prime Minister of India. Now I would also state how this letter arose. I am pained to note that the contents of the letter are generally sarcastic, flippant and defamatory. It affects the dignity of a Member of the House. In writing such a letter, one shou'd pursue the policy to maintain the dignity of hon. members.
யார் தயார் பண்ணிக்கொடுத்தார்களோ எனக்குத் தெரியாது. முதலமைச்சர் இப்படி எழுதி அனுப்பியிருப்பார்களானால், ஒரு பள்ளிக்கூடத்துப் பிள்ளை. . .

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* நீங்கள் எழுதிக் கொடுத்த லாங்குவேஜை அவர்கள் விமர்சனம் செய்வதும், அவர்கள் கொடுத்து இருக்கிற லாங்குவேஜைப் பற்றி நீங்கள் விமரிசனம் செய்வதும் வேண்டாம். பிரிவிலேஜ் என்ன என்பதைப்பற்றி மட்டிலும் சொல்லுங்கள்.

*திரு. கே. டி. கே. தங்கமணி:* அந்த லெட்டரை இப்படி ஆரம்பித்துவிட்டு சார்ஜ் 26-ஐபற்றிச் சொல்கிருர்கள். I am Quoting "In my reply, I had stated that the said amendment was brought forward only on the representations made by the legislators, namely, Thirumathi T. N. Anandanayaki (Congress) and Thiruvalargal R. Ponnappa Nadar, O. N. Sundaram, K. P. Gopal, J. James and N. Dennis (all of hem Congress (O) and Thiru K. H. Bomman (Swatantra). I also enclostd with any reply copies of their representations. In the rejoinder, it is again reiterated that the said amendment was made to benefit a lessee of a cinema theatre. It will be interesting to note that subsequently, the

[Thiru K. T. K. Thangamani] *[1973 நவம்பர் 29*

amendment to the said Act made in 1972 was questioned in the High Court, as a result of which, further amendment clarifying the previous amendment became necessary. Representations, in writing, pleading that this further amendment may be brought before the Legislature, were made by Thirumathi T. N. Anandanayaki (Congress) and Thiruvalargal S. Sangumuthu Thevar (Congress-0), K. T. K. Tangamani (C.P.I.) K. H. Bomman (Swatantra) and C. V. Velappan (A.D.M.K.) Accordingly the necessary amendment was brought before the Legislature and it was passed on the 5th April 1973. Thus, it will be seen that the same Thiru K. T. K. Tangamani who is a signatory to the original petition of charges imputing motives to this amending legislation, had represented in writing to the Government to bring forward a legislation to clarify the previous amendment and he has no qualms of conscience in attacking the Government for the very act which he had requested the Government to do. Such is the character and calibre of the persons who have brought these charges against this Government. *இந்தப் பகுதியை நான் வாசிப்பதன் நோக்கம் எப்படிப்பட்ட முடிவுக்கு வந்திருக்கிறார்கள் என்பதைக் காட்டுவதற்காகத்தான். இதிலே 26-வது சார்ஜிலே அது சம்பந்தமாக பக்கம் 102 கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் முழுமையும் வாசிக்க விரும்பவில்லை. தங்களுடைய கையிலே அது இருக்கிறது. சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். அதிலே பக்கம் 103-ல்,*

" Representations and supporting speeches made by M.L.As. belonging to Congress (O), Congress (R), Swatantra Party, C.P.I., etc., was to protect poor tenants, who could divine that the amendment would be so made as to cover, etc. ". *என்று சொல்லப்படுகிறது. இதனுடைய நோக்கம் ஒரு குறிப்பிட்ட சட்டம் வேண்டுமென்று—நான் அந்தச் சட்டத்தின் விரைத்திற்குள்ளே போகவில்லை—நான் சார்ந்திருக்கிற கட்சியைப் பொறுத்தவரையிலே 1955-ம் ஆண்டிலிருந்தே, சாதாரணக் குடிசைகள் போட்டிருக்கிறவர்கள், இலட்சக்கணக்கான குடிசைகள் இருக்குமானால் அந்த இடத்திற்கான விலையை அவர்கள் கொடுத்தால் அந்த இடம் அவர்களுக்குச் சொந்தமாகும் என்ற முறையிலே திருத்தம் கொண்டுவந்து, தனியார் மசோதா*



*1973 நவம்பர் 29] [திரு. கே. டி. கே. தங்கமணி]*

*கூட 55-லே கொண்டு வந்திருக்கிறோம், இந்தத் திருத்தம் வரவேண்டுமென்ற முறையிலே நான் கையெழுத்துப் போடவில்லை, எல்லாக் கட்சியினரும் போட்டிருக்கிறார்கள். எல்லாக் கட்சியினரும் போட்டுத்தான் அந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. இதனாலே சில சினிமாக்காரர்களுக்கு உதவியாக இருக்கலாம். காலியிடத்திலே கட்டிய ஒருவர் இதற்காக மூவ் பண்ணியிருக்கலாம், அவருக்கு அதனால் நன்மை கிடைத்திருக்கலாம். ஏனென்றால் நாங்கள் எவ்வளவு கேட்டும் வரவில்லை, ஆனால் திருத்தமாக வருவதற்கு ஒரு சினிமாக்காரர் முயற்சி செய்ததால் வந்திருக்கிறது, அதனாலேதான் இந்த ஊழல் குற்றச்சாட்டே வந்திருக்கிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *குற்றச்சாட்டு பற்றி இப்பொழுது இல்லை. உங்களைப்பற்றி டெபமேட்டரியாக ஏதாவது இருக்கிறதா என்பதைப்பற்றித்தான் சொல்ல வேண்டும்.*

**திரு. கே. டி. கே. தங்கமணி :** *அந்தத் திருத்தத்தை ஸ்ட்ராக் ஆப்* 'Struck off will not be the correct word' *திருத்தத்தை அமெண்ட் பண்ணவேண்டுமென்று சொன்னதினாலே நான் நான் பின்னாலே கையொப்பமிட்டிருக்கிறேன். எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. அப்பொழுது கையெழுத்து யார் எந்த முறையிலே பெற்றார்கள், எதற்காகப் பெற்றார்கள் என்பது விசாரிக்கப்பட வேண்டிய விஷயம். நான் கையெழுத்துப் போட்டிருக்கிறேன். திருமதி அனந்தநாயகி அவர்களும் போட்டிருக்கிறார்கள், கையெழுத்துப் போட வேண்டுமென்று தயார் பண்ணியவர் மந்திரியா செக்ரட்டரியா என்று விசாரிக்க வேண்டும். எங்கள் கட்சியின் கொள்கை அடிப்படையிலேதான் நாங்கள் போட்டிருக்கிறோம். இதனால் எந்தவிதமான பண்பும் பாங்கும் இல்லாத இப்பேர்ப்பட்ட ஆட்கள் தான் எங்களைப்பற்றிக் குற்றச்சாட்டுகளைக் கொண்டுவருவதாகச் சொல்லி இருப்பது, வெளியே அவர்கள் எங்களைப்பற்றிப் பேசிக்கொண்டு போகட்டும், டெபமேட்டரியாக இருந்தாலும் நாங்கள் கோர்ட்டிற்குப் போக மாட்டோம், அது அரசியலிலே ஒரு பிரிவிலேஜ் ஆக இருக்கட்டும். இந்த சட்ட மன்றத்திலே வைக்கக்கூடிய ஒரு கடிதம்—அதுவும் முதலமைச்சர் அவர்கள் பிரதம மந்திரிக்கு எழுதிய கடிதம் என்று*

சட்ட மன்றத்திலே வைக்கும் பொழுது—சட்ட மன்றத்திலே இருக்கக்கூடிய ஒரு உறுப்பினருடைய பேச்சுக்களை யாரும் பொருட்படுத்தாதீர்கள், அது பொய்யானதாகத்தான் இருக்கும் என்ற அளவிலே கருத்து தொனிக்கிறது. இந்த விஷயத்திலே இரண்டு தீர்ப்புகள் வந்திருக்கிறது. ஒன்று, இம்மாதிரி ஒரு பேச்சு பேசியோ ஒரு அறிக்கை விட்டோ அதை வாபஸ் பண்ணுமலோ அல்லது "Substantiate" பண்ணுமலோ இருந்தால் "They are guilty of privilege" என்று 144-வது பக்கத்திலே (May's Parliamentary Practice) தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதோடு இவர்களை மன்னிப்பதற்கு ஒரு விஷயம் இருக்கிறது. அதையும் சொல்லிவிடுகிறேன்.

"In Mr. Ferrand's case, however, the House, on Sir Robert Peel's advice, contented itself with resolving that the imputations conveyed in the expressions complained of, were wholly unfounded and calumnous.". அதாவது சொன்னவரைப்பற்றி தப்பில்லை, சொல்லப்பட்டது,

"It is unfounded and calumnous but, however, it will not affect the honour and character of the hon. Member to whom they referred.". சொன்னவருக்குத் தான் அது இம்படேஷனுக வருமே தவிர இப்படி unfounded and calumnous ஆக ஒரு வார்த்தையை சொன்னுல் சொன்னவருக்குத் தான் வருமே தவிர, யாரைப் பற்றி சொல்லுகிறார்களோ அதைப் பற்றி கவலையில்லை, இதை பிரிவிலேஜ் என்று எடுக்க வேண்டாம். மன்னித்து விடுங்கள் என்று பொரான்ஸ்ட் கேசிலே உணர்த்தியிருக்கிறார்கள். இது பிரிவிலேஜ் கமிட்டிக்கு போக வேண்டியது. ஒன்று இதை பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்புங்கள் அல்லது இந்த சபையிலேயே அதை விசாரிக்க அனுமதியுங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

So, there is provision for refering the matter to the Committee of Privileges. அப்படி விட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிகிறேன். ஆகவே இது தனிப்பட்ட ஒரு உறுப்பினர் சட்ட மன்றத்திலே செயல்படுவதற்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய





இருக்கிறது என்ற காரணத்தினுல்தான் நான் இந்த பிரிவிலேஜ் மோஷனை வற்புறுத்துகிறேன் என்று கூறி, முடித்துக் கொள்ளுகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, because my name has just been mentioned by the hon. Member, I would like to clarify how I affixed my signature to that representation.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கையெழுத்து போட்டவர்களைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. கையெழுத்து போட்டு குற்றம் சாட்டியவர்களைப் பற்றித்தான் சொல்லப்பட்டிருக்கிறது.

THIRU R. PONNAPPA NADAR: Otherwise, it would appear that on extraneous considerations I had occasion to affix my signature to that representation.

So far as that representation is concerned, how I came to affix that signature to that representation was that certain Members of the Legislature brought forward a petition stating that an amendment to the Madras City Tenants Protection Act was needed to protect the interests of the small tenants who have put up structures in the City. It was in that context that we had to affix our signature, not that we have got to do anything with the proprietor of the cinema theatre. So if any such reflection is made, I would say that this is unwanted and uncalled for. That is the only submission I want to make in this regard.

So far as the matter of privilege is concerned, if the Hon. Speaker holds that there is a *prima facie* case, it will have to go to the Privileges Committee. I think a certain amount of reflection has been made that such is the character and calibre of the person who had brought charges against the Government but in using such a language, some temperance or some amount of restraint could have been made.

I think there is some imputation against the hon. Member. So it is a fit case and it may be referred to the Privileges Committee.

*மாண்புமிகு திரு. செ. மாதவன்:* மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இந்த மன்றத்திலே வைக்கப்பட்ட ஒரு அறிக்கையின் பேரிலே ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நம்முடைய பொன்னப்ப நாடார் அவர்கள், கையெழுத்துப் போட்ட சட்ட மன்ற உறுப்பினர்கள் வேறு ஏதாவது செய்துவிட்டு கையெழுத்து போட்டார்களா என்று முடிவிற்கு வரக் கூடாது என்று சொன்னார் கள். இந்த அறிக்கையிலேயும் அப்படி இல்லை. எங்கள் சார்பிலே இந்த மன்றத்திலே விவாதிக்கப்பட்டபொழுது எந்த சட்டமன்ற உறுப்பினர்கள் கையெழுத்துப் போட்டார்களோ அவர்களைப் பற்றி நாங்கள் தவறாக வாதிடவில்லை.

கே. டி. கே. தங்கமணி அவர்கள் இது போன்ற Character assassination கூடாது, defamatory statement கூடாது என்று இங்கே ஆணித்தரமாகச் சொன்னார்கள். இதை நான் கேட்டதிலே ரொம்ப மகிழ்ச்சி. சட்ட மன்ற உறுப்பினர் களைப் பற்றி, அமைச்சர்களாக இருப்பவர்களைப் பற்றி மற்றும் யாரைப் பற்றியுமே ஆதாரமில்லாமல் Character assassination செய்வது கண்டிக்கத் தக்கது என்று எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள். அதற்காக நான் நன்றி கூறிக்கொள்கிறேன். இங்கே யுள்ள பிரச்சினை இங்கே எழுதப்பட்டதில் வேறு ஏதாவது தவறு இருக்கிறதா? அல்லது யாரையாவது குறிப்பிட்டு வேண்டுமென்றே கூறப்பட்டிருக்கிறதா என்று பார்ப்பதுதான் நியாயம்.

இந்த மன்றத்திலே ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டம் கொண்டு வருவதற்காக இந்த மன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கையெழுத்துப் போட்டுக் கொண்டு வரவேண்டுமென்று சபைக்கு மனு வந்தது. அதன் அடிப் படையிலே சட்டம் கொண்டு வரப்பட்டது. அப்பொழுதே இங்கே எழுப்பப்பட்டது; இது அவசர அவசரமாக கொண்டு வரக் காரணம் என்னவென்று. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கொண்டு வரவேண்டுமென்று எழுதிக்கொடுத்து, அரசாங்கத்தாலே உடனடி யாகக் கொண்டு வந்திருக்கிறோம் என்று விளக்கம் தரப்பட்டிருக் கிறது. இத்தனையும் நடந்ததற்குப் பிறகுதான் இங்கே இருக்கும் குடியரசு தலைவருக்கு கே. டி. கே. தங்கமணி அவர்கள் எழுதி...





குற்றச்சாட்டுக்களிலே—நான் அவதூறு என்று கூறவில்லை— அவர்கள் சொல்லி இருப்பது "இந்த சட்டம் கொண்டுவருவதிலே ஊழல்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தச் சட்ட மன்ற உறுப்பினர் கொண்டுவரவேண்டுமென்று இந்த அரசுக்கு தெரிவித்து, நாங்கள் கொண்டுவருகிறோம் என்று இந்த மன்றத்திலே விவாதம் செய்யும்பொழுது அதை எல்லோரும் ஏற்றுக்கொண்டு ஏகமனதாக சட்டம் நிறைவேற்றப்பட்டிருக் கிறது. அதே சட்டத்தை ஏதோ ஒரு காரணத்தால் அரசு கொண்டுவந்தது என்று சொன்ன குற்றச் சாட்டிற்குத் தான் இந்த பதில். அந்தச் சூழ்நிலையில் எடுத்துக்கொண்டால் இதிலே எந்தவிதத் தவறும் இருப்பதாகத் தெரியவில்லை.

இதிலே வேடிக்கை என்னவென்றால், குற்றச்சாட்டு கொடுத்து விட்டு, அந்தச் சட்டத்திற்குச் செய்யப்பட்ட திருத்தம் செல்லாது என்று உயர் நீதி மன்றத்திற்குச் சென்று அதிலே ஒரு தீர்ப்பு வழங்கிய காரணத்தினால் அதை மாற்றி அமைக்க வேண்டும் என்று உயர்நீதி மன்றத்திற்குச் சென்றவர் சினிமா சம்பந்தப் பட்டவரை எதிர்த்துத்தான். இந்தச் சட்டம் எல்லோருக்கும் பொதுவானது. சட்டத்தின் கொள்கையிலே கருத்து வேறுபாடு கிடையாது. அந்தச் சட்டத்தை எதிர்த்து ஒரு சினிமா தியேட்டர்க்காரரை எதிர்த்து இன்னொருவர் வழக்கு தொடரு கிறார். அந்த வழக்கு ஒருவருக்கு பாதகமாக முடிகிறது. குற்றம் சாட்டி சொல்லுபவர்களுக்குப் பாதகமாக முடிந்ததால் அந்தச் சட்டத்தை மீண்டும் திருத்துங்கள் என்று மனு கொடுத் திருக்கிறார்கள். தனித் தனியாக மனு வந்திருக்கிறது. டைப் செய்திருப்பதைப் பார்த்தால் அதெல்லாம் ஒரே டைப்பாக இருக் கிறது. அதிலே எல்லோரும் கையெழுத்துப் போட்டிருக் கிறார்கள்—எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உட்பட. அதை நாங்கள் ஏற்றுக் கொண்டு—கேரக்டர் அசாசினேஷன் நாங்கள் யார் மீதும் சொல்லவில்லை, யார் மீதும் "டெஃபமேட்டரி ஸ்டேட் மென்ட்" சொல்லவில்லை. அப்படிச் சொல்லாமலேயே எதிர் கட்சி உறுப்பினர்களின் நியாயமான வேண்டுகோளை ஆதரித்து நாங்களும் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றினோம். இதற்கான சந்தர்ப்பத்தை பிரதம அமைச்சருக்குச் சொல்ல வேண்டியது

**பேரவையில் வைக்கப்பட்ட அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ள முதலமைச்சர் இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதம் உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களைக் களங்கப் படுத்தும் வகையில் அமைந்துள்ளது என்று கூறப்படுவது குறித்து**

[திரு. செ. மாதவன்] [1973 நவம்பர் 29

எங்களுடைய கடமை அல்லவா? அதற்காகத்தான் இந்தக் கருத்து. அதற்காக கே. டி. கே. தங்கமணி அவர்கள் வருத்தப் பட்டார்கள். உண்மையை எழுத வேண்டும் என்ற எண்ணத் திலே எழுதியிருக்கிறோம்.

1972-லே திருத்தச் சட்டம் கொண்டு வந்ததற்கு உள் நோக்கம் கற்பிக்கும் வகையில் குற்றஞ்சாட்டி முதல் மனுவில் கையெழுத் திட்ட கே. டி. கே. தங்கமணி 1972 ஆம் திருத்தத்தை விளக்கும் வகையில் 1973-ல் வேறு திருத்தம் கொண்டுவருமாறு எழுத்து மூலமாக இந்த அரசுக்கு முறையிட்டார். எந்தச் செயலை செய்யுமாறு இந்த அரசை கேட்டுக்கொண்டாரோ—உயர் நீதி மன்றத்திலே ஒரு சினிமாக்காரனுக்கு ஆதரவாக இந்த திருத்தம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டாரோ—அதே செயலுக்கு களங்கம் கற்பித்து "மனசாட்சி" என்பதே இல்லாமல், கோரக்ட்டர் அசாசினேஷன் செய்து நாங்கள் தப்பு செய்தோம் என்று குடியரசு தலைவரிடம் சொன்ன செய்தி, இந்த அரசை அவர் எதிர்க் கிறார் என்பது இதிலிருந்து புலனாகும். இந்த அரசுக்கு எதிராகக் குற்றம் சாட்டியிருப்பவர்கள் தவறு பண்ணும்பொழுதும், தாங்கிக் கொண்டவர்கள் நாங்கள்தான். இது தமிழிலே சுவையாக இருக்கிறது. இதிலே என்ன தவறு என்று எனக்குத் தெரிய வில்லை. யாரையும் குற்றம் சொல்லவில்லை. ஆகவே, இந்தக் கருத்தை பொறுத்தவரைக்கும் இங்கே நடந்த நிகழ்ச்சியை மத்திய அரசுக்கு விளக்கவேண்டும் என்ற ஒரு நோக்கத்தைத் தவிர வேறு வகையில் களங்கம் கற்பிக்கவில்லை. இப்பொழுது கூட நாங்கள் ஒன்றும் சொல்லவில்லை. நாங்கள் கொடுத்தது இந்த காரணத்திற்காகத்தான் என்று சொல்லுகிறோம். நாங்கள் அப்படி "கேரக்ட்டர் அசாசினேஷன்" செய்யமாட்டோம். இங்கே குறிப்பிடப்பட்டிருப்பது யாரையும் களங்கப்படுத்தவேண்டும், குறை கூறவேண்டுமென்று சொல்லப்பட்டதில்லை. உண்மையை நாட்டு மக்கள் உணரட்டும் என்றுதான் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லி, இதிலே உரிமைப் பிரச்சினை எதுவுமிருப்பதாகத் தெரியவில்லை என்று கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதன் மீது என் முடிவை நாளை தெரிவிக்கிறேன்.



[1973 நவம்பர் 29

**3. ஒத்திவைப்புத் தீர்மானம்**

**மாணவர்களிடையே நிலவும் அமைதியின்மை குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. ஆர். பொன்னப்ப நாடார், டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. கே. கந்த சாமி, திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. ஏ. ஆர். மாரிமுத்து, திரு. ஜே. ஜேம்ஸ், திரு. எம். சுரேந்திரன் ஆகிய உறுப்பினர்கள் மாணவர்களிடையே அமைதியின்மை நிலவுவதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார் கள். இங்கே மாணவர்களிடையே அமைதியின்மையைப்பற்றி விவாதிக்கும்பொழுது இங்கே அமைதியின்மை ஏற்பட்டுவிடாமல் அமைதியோடு இது எப்படிப் பேரவையை ஒத்திவைத்து விவாதிக் கத்தக்க அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப்பற்றி விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, இந்தச் சட்டமன்றம் ஆரம்பித்ததற்குப் பிறகு மாணவர்களிடையே ஒரு பெரும் கிளர்ச்சி நடைபெற்றுக் கொண்டிருப்பதை நாமெல்லோரும் உற்றுக் கவனித்துக்கொண்டிருக்கிறோம். கிளைவ் ஹாஸ்டல் சம்பவம், பாளையங்கோட்டை சம்பவம் ஆகியவைகளின் மீது தரப்பட்ட இரண்டு ரிப்போர்ட்டுகளின் அடிப்படையிலே அவர்கள் சில காரியங்களை வைத்து ஊர்வலம் வந்தும், மற்றும் சமாதான முறைகளிலே கிளர்ச்சி செய்தும் வருகிறார்கள். அண்மையிலே நடந்த ஒரு சம்பவத்தைப்பற்றி விவாதிக்க இந்த அவையின் காலத்தை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன்.

பச்சையப்பன் கல்லூரியின் பக்கத்திலே நடந்த சம்பவத்தைப் பற்றிக் குறிப்பாக நான் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்றே கருதுகிறேன். நேற்று, சுமார் 10 மணியளவில் பச்சையப் பன் கல்லூரிக்குப் பக்கத்திலே மாணவர்களுக்கும் வேறு சிலருக்கும் மோதல் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் தெரி வித்துக் கொள்கிறேன். இந்த மோதலிலே "ஆண்டி சோஷியல் எலிமெண்ட்ஸ்"-ம் கலந்திருக்கிறார்கள். அவர்கள் கற்கள், சோடா புட்டிகள், தடி போன்ற பயங்கரமான ஆயுதங்களை வைத்துக் கொண்டு பச்சையப்பன் கல்லூரிக்குள்ளே நுழைய யத்தனித்த தாகவும், அதுசம்பந்தமாக மோதல் ஏற்பட்டதாகவும் கூறப்

படுகிறது. இன்னொரு விஷயமும் கூறப்படுகிறது. ஒரு பகுதியில் ஒரு கேட் அருகாமையில் பெட்ரோல் ஊற்றித் தீ வைத்து மாணவர்கள் வெளியே வராமல் தடுத்ததாகவும் கூறப்படுகிறது. இது எந்த அளவிற்கு உண்மை என்பதை விசாரித்து கடைசியாக முடிவு செய்ய வேண்டிய விஷயமென்று இருந்தாலும் இத்தகைய விரும்பத் தகாத சம்பவங்கள் நடந்தால் நிச்சயமாகத் தமிழகத்தில் மாணவர்கள் மட்டுமல்ல, பெற்றோர்களும் பொதுமக்களும் வெகுவாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்ற உணர்வோடு இம்மாதிரி சம்பவங்களின் மீது அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நேற்று கல்லூரி முதல்வரவர்கள் செனட் மீட்டிங்கிற்குச் சென்றதாகவும், துணை முதல்வர் அங்கிருந்ததாகவும், போலீசாருக்கு ஃபோன் மூலம் தகவல் கொடுத்ததாகவும், அவர்கள் குறித்த நேரத்தில் போலீசார் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறியதாகவும் எனக்குத் தகவல்கள் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. இந்த மோதலில் பல மாணவர்கள் காயமுற்றிருக்கிறார்கள். ஒருசில பொதுமக்களும் காயமுற்றிருக்கிறார்கள். ஒருசிலர் கல்லூரி விளாகத்திற்குள் நுழைய முயற்சித்தபொழுது மாணவர்கள் அவர்களை போலீசாரிடம் ஒப்படைத்ததாகவும் எனக்குத் தகவல் வந்திருக்கிறது.

அது மட்டுமல்ல. இந்தச் சம்பவம் நடந்தபிறகு இந்து பத்திரிகையின் விசேஷ நிருபர் அந்தப் பகுதிக்குச் சென்றதாகவும் ரோடு மருங்கிலே சோடா குப்பிகளும் துண்டுகளும், கற்களும் சிதறிக் கிடந்த விவரங்களையெல்லாம் இந்து பத்திரிகையில் அழகாக கூறியிருக்கிறார்கள். பொதுவாகப் பார்க்கும்பொழுது இம்மாதிரி சம்பவங்கள் பல பகுதிகளிலேயும் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கின்றன. வேறு கல்லூரியிலுள்ள மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதுமாதிரி தியாகராயர் கல்லூரி மாணவர்கள் ஊர்வலம் சென்று, ஒரு பத்திரிகை ஆபீசிலே சென்று தங்கள் கருத்தைத் தெரிவிக்க வேண்டுமென்பதற்காக ஊர்வலம் நடத்தியதாகவும், அவர்களில் ஒருசிலர் அந்தப் பத்திரிகை ஆபீசிற்குச் சென்றதாகவும், பத்திரிகைகளில் விவரங்கள் வந்திருக்கின்றன.



அதுமட்டுமல்ல, வேறு கல்லூரிகளிலும் இம்மாதிரியான ஒரு நிலைமை உருவாகியிருக்கிறது. இதனால் இன்றைக்குப் பல கல்லூரிகளையும், பள்ளிக்கூடங்களையும் மூடவேண்டிய நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட பயங்கரமான நிலைமை உருவாகியிருக்கிறது. மாணவர்கள் தங்களுக்குப் போதிய பாதுகாப்பு இல்லை என்று பயப்படுகிறார்கள். ஏனென்றால் இம்மாதிரி 'ஆண்டி சோஷியல் எலிமெண்ட்ஸ்' சட்டத்தையும் ஒழுங்கையும் தங்கள் கையிலே எடுத்துக்கொண்டு அவர்களே இம்மாதிரி வன்முறைக்கு ஆளாக்குகிறார்கள் ,என்பதைப் பார்க்கும்பொழுது அதை நாம் நிச்சயமாகக் கண்டிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த நிலைமைகளை நீடிக்க அனுமதித்தால் மாணவர்கள் மோதல் மட்டும் அல்ல, பொதுமக்களுடைய பெரும் கிளர்ச்சியும் ஏற்படும் நிலைமை உருவாகி இருக்கிறது.

குறிப்பாக அரசாங்க அதிகாரிகள், அதிலும் குறிப்பாக போலீஸ் அதிகாரிகள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்வதற்குத் தவறியிருக்கிறார்கள் என்று அவர்கள் நினைக்கிறார்கள். அவர்களிலே பலரும் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் உயர்திரு கே.டி.கே. தங்கமணி அவர்கள் காயமுற்ற மாணவர்களை நேற்றைய தினம் ஆஸ்பத்திரியில் பார்த்து வந்திருக்கிறார்கள். இம்மாதிரி தகவல்கள் திடுக்கிடும் தகவல்களாக இருப்பதால் இந்தப் பிரச்னையின்மீது நல்ல நிதானத்தோடு விவாதிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இது மற்ற மாவட்டங்களுக்கும் பரவியிருக்கிறது.

பொதுவாக இந்த நேரத்தில் மாணவர்களை நாங்களெல்லோரும் தூண்டிவிடுகிறோம் என்று சொல்லும் அளவில் ஆளுங்கட்சித் தரப்பிலே பல அறிக்கைகள் வந்த வண்ணமாக இருக்கின்றன. என்னுடைய கட்சியைப் பொறுத்தவரையில் நாங்களெல்லாம் காந்தியத்திலே நம்பிக்கையுடையவர்கள். அதிலும் எங்களுடைய கிளர்ச்சி எப்படி நடந்தது என்பதைத் தமிழகத்திலுள்ள பொதுமக்கள் அத்தனை பேரும் நன்றாக உணர்வார்கள். 32,000-க்கும் மேற்பட்ட எங்கள் தொண்டர்கள் சிறைச்சாலைக்குச் சென்றபொழுது கட்டுப்பாடாகவும், ஒழுங்காகவும் இருந்தார்கள். எனவே, மாணவர்களைத் தூண்டிவிட்டு நாங்கள் அரசியல் நடத்த வேண்டுமென்ற எண்ணம் எங்களுக்குக் கிடையாது என்பதைத் தங்கள்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1973 நவம்பர் 29

மூலமாக இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, ஒட்டுமொத்தமாக எல்லாத் தலைவர்களும், பத்திரிகைகளும் தூண்டிவிடுகிறார்கள் என்ற நிலைமையில் அரசாங்கம் தன்னுடைய அறிக்கையை விட்டால் அது விரும்பத் தக்கதல்ல, வெறுக்கத் தக்கது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, குற்றம் யார் புரிந்தாலும் குற்றம் குற்றமே என்ற பரம்பரையிலே வந்தவர்கள் நாமாக இருப்பதால் இந்தக் குற்றத்தை நாங்கள் நியாயம் என்று ஒத்துக்கொள்ள வரவில்லை. இம்மாதிரி பிரச்னைகளை எல்லாக் கட்சித் தலைவர்களும் விவாதிக்க இந்தச் சபையின் காலத்தை ஒத்திவைத்து விவாதிப்பது சாலச் சிறந்ததாக இருக்கும். மாணவர்களைத் துன்புறுத்தாமலும், பொதுமக்களுக்கு இடைஞ்சல்கள் வராத நிலைமையிலும் ஆளுங் கட்சியிலே இருப்பவர்களும், எதிர்க்கட்சியிலே இருப்பவர்களும் முனைந்திருக்க வேண்டும். மாணவர்கள் கிளர்ச்சி ஏற்பட்டு அதை அரசியல் கிளர்ச்சியாகத் திருப்பி விடுவதற்கு நாமெல்லோரும் விரும்பக்கூடாது என்ற கருத்தைக்கூறி நான் என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : Hon. Mr. Speaker, Sir, I move under rule 42 of the Tamil Nadu Legislative Assembly rules that this House stands adjourned to discuss a matter of urgent public importance.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூவ் பண்ணுவது இல்லை. இது எப்படி பேரவையை ஒத்திவைத்து விவாதிக்கத் தக்க அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப்பற்றி மட்டும் விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : I seek the permission of the Hon. Speaker to move the adjournment motion regarding the serious situation arising as a result of violence that took place at Poonamalle High Road opposite Pachaiyappa's College on the forenoon of 28th November 1973. I bear in mind the suggestion given by the Hon. Speaker that as far as possible this adjournment motion must not incite feelings further. I wish to offer a few remarks in this connection.



1973 நவம்பர் 29] [Dr. H. V. Hande]

After the report on the incidents in Clive's hostel and Palayamkottai the students have a feeling that they have been unnecessarily victimised by the Police Department. The Hon. Chief Minister himself said that if the Police Department committed mistakes, he would try to pull them up. The point is, inspite of the assurance given by the Hon. Chief Minister, it has not been translated into action. It is in this connection I am bringing this adjournment motion on the failure of the Police Department, to pay heed to the open request made by the Hon. Chief Minister in this House or orders passed by him. In the incident at Pachaiyappa's College, the boys had been ridiculed. Day before yesterday, on 26th November 1973 the students of Pachaiyappa's and other colleges took out a peaceful demonstration.

Just as Thiru Ponnappa Nadar said that the recent Congress (0) agitation was peaceful, similarly students' demonstration was very peaceful. It was non-partisan; it did not have anything to do with any political party. That was the procession on 26th November 1973. The repercussion was yesterday certain workers in Aminjikarai assembled together. I have greater right to speak because that is the place where I have my own clinic and I can even guide the Hon. Minister to take some action which will help him also. Of course I do not say that the Ministry is behind this. What happened was that certain unruly, unsocial elements took the law into their own hands and said இந்த மாணவர்களுக்கு என்ன, திடீர் திடீரென்று கிளர்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்று.

[முற்பகல் 10.30]

Some unsocial elements took advantage of the situation and they brought some kind of sticks. It was all covered by rope. And then they came and challenged the students; they beat them and chased them. I have firsthand information with me. One Taxi No. MSX 8387 Fiat—the Hon. Minister may kindly make a note of it—was coming and a Police Officer in uniform was sitting in that taxi; behind that, two other taxis—Taxi No. TNY 697 an Ambassador, green colour and TNZ 657. Unruly elements were in these taxis. In the first one the police official was and all these taxis were chasing the students. It was a tragic sight and there are a number of witnesses, very responsible persons, they

[Dr. H. V. Hande] [1973 நவம்பர் 29

are non-political and one of them is a high official—I would not tell his name, if, however, the Minister wants, I will give his name to the Minister. There is another witness and he belongs to the Tamil Arasu Kazhagam, one Janardhanam. He himself narrated the incident. I have collected a lot of material. Actually, the position is this. I was told that in some taxis people came and money was distributed. That is how certain persons have taken the law into their own hands and beaten the students. Actually they have run into the college, almost repeating what happened in Tiruchi Clive's Hostel. The Principal was not there, he was in some meeting; the Vice-Principal and others wanted to close the door. But the unruly elements entered the college campus. Then the students mobilised their defence and they came out crying for protection. At that time another huge pose of unruly person came in from the St. George's convent side. On the oher side is the Poonamallee High Road. As they were entering the Poonamallee High Road there was a wine shop. Next to that shop some bottles were stacked. I would like the Hon. Minister to investigate and see who stacked these bottles there. I know the Ministry wants to get a good name. But certain persons are spoiling it. If I say that some of them belong to the Ruling Party you may object here. But I can give the names and you can yourselves make your own investigation. . .

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றிப் பேசும்போது என் அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்பதற்கான காரணத்தைச் சொல்ல வேண்டுமே தவிர, நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் அவர் சொல்லிக் கொண்டே இருந்தால் அதைத் தாங்கள் அனுமதித்துக் கொண்டே இருந்தால் அது எப்படி முறையாகும்? மற்ற அலுவல்களை ஒத்தி வைத்துவிட்டு இதைப் பற்றி விவாதிக்க வேண்டிய அதிமுக்கியமான காரணம் என்ன என்பதைப் பற்றி மட்டுந்தான் சொல்ல வேண்டுமென்ற ஒரு தத்துவத்தான் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வருவதில் இருக்கிறது. அதை விட்டு விட்டு எங்கெங்கு போனார்கள், எப்படிப் போனார்கள் என்று சொல்லிக்கொண்டிருப்பதை எல்லாம் அனுமதித்துக் கொண்டிருந்தால் அது எப்படி முறையாகும்?



1973 நவம்பர் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஹாண்டே அவர்கள் 'டீடெய்ல்ஸ்' எல்லாவற்றையும், அது பற்றிய தகவல்களை அமைச்சர் அவர்களிடத்திலே கொடுக்கலாம். அவர்கள் விசாரித்து நடவடிக்கை எடுக்கட்டும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** எதற்காக இது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை விளக்குவதற்காகத்தான் சொல்லிக் கொண்டு வருகிறேன். இதிலே அன்சோஷியல் எலிமென்ட்ஸ் ஈடு பட்டிருக்கும் காரணத்தால் இது பொதுமுக்கியத்துவம் வாய்ந்தது; ஆகவே, சபையின் நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கூறுவதற்காகத்தான் இவற்றைக் கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தகவல்களை அமைச்சரிடத்தில் கொடுங்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் 10-20-க்கு ஆரம்பித்து 10-27-க்கு முடித்து விட்டார்கள். தாங்கள் 10-27-க்கு ஆரம்பித்திருக்கிறீர்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இன்னும் மூன்று நிமிடத்திற்குள் முடித்து விடுகிறேன்.

இந்த அவையில் விவரங்களைச் சொல்லுவதன் மூலம் எல்லோருக்கும் தெரிந்து அமைச்சர்களுக்குத் தெரிவது நல்லது. அன்சோஷல் எலிமென்ட்ஸ் மாணவர்களை ஓட ஓட விரட்டி செல்லம்மாள் தெருவுக்கு வந்தார்கள். நான்கு பேர் அடி வாங்கினார்கள். யார் யார் இல்லத்திற்கு எதிரிலே நடந்தது என்று அங்குள்ளவர்களுக்கு நன்றாகத் தெரியும். மாண்புமிகு கல்வியமைச்சருடைய இல்லத்திலே இருப்பவர்கள் கூடப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அன்சோஷல் எலிமென்ட்ஸ் மாணவர்களை அடித்தார்கள் என்பதுதான் முக்கியத்துவம் வாய்ந்தது.

அரசியல் கட்சிகள் மாணவர்களைத் தூண்டிவிடுவதாகப் பரவலாகச் சொல்லுகிறார்கள். இந்தக் குற்றச்சாட்டிலே எல்லோரும் சேர்ந்திருக்கலாம், எல்லோரும் சேராமலும் இருக்கலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைய தினம் நல்ல வகையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் தீர்மானத்தின்மீது பேச வாய்ப்புத் தரவேண்டுமென்று நாங்கள் கேட்டோம். நீங்கள்தான் மாணவர்களுக்கு நல்லவர்கள் என்று

காட்டுவதற்காகக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்ற குற்றச் சாட்டை இந்த அவையில் சொன்னோம். அன்று பேசும்போது மாணவர்கள் தவறு செய்திருந்தும்கூட அவர்களை விட்டுவிடுகிறேன் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் நல்ல வகையில் அதற்குத் தீர்ப்புக் கொடுத்தார்கள். இன்றைக்கு அதே மாணவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். எங்கே என்பது வேறு விஷயம். இந்த அவையிலே மாணவர்களைத் தண்டிக்கக் கூடாது என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; ஆனால் வெளியிலே அவர்கள் தாக்கப்படுகிறார்கள். இதையே கூட ஒரு உரிமைப் பிரச்சினையாகக் கொண்டு வரலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம். இதிலே பிரிவிலேஜ் எப்படி வரும்?

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** உங்களுடைய தீர்ப்பை மற்றவர்கள் மீறுகிறார்கள். அது உரிமை மீறிய பிரச்சினையாகத்தான் வரும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு தீர்மானத்தை இங்கே நிறைவேற்றிய பிறகு அதே மாணவர்களை அதிகாரிகள் அடிக்கிறார்கள். அந்த அதிகாரிகள் இந்தச் சபையின் உரிமையை மீறியிருக்கிறார்கள் என்று பொருளாகும். இப்படி அன்சோஷல் எலிமென்ட்ஸ் மாணவர்களை இப்படித் தாக்குவது எந்த அளவுக்கு விளைவுகளை ஏற்படுத்தும் என்று பார்க்க வேண்டும். கிளைவ் ஹாஸ்டல் சம்பவம் நடந்தபோது சில தகவல்களைச் சொன்னேன். அந்தத் தகவல்களை ஏற்றுக்கொண்டிருந்தால் நிச்சயமாக நீங்கள் உங்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்றிலிருந்து ஒன்றுக்குப் போகாதீர்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இப்போது தந்திருக்கிற தகவல்களை வைத்துக் கொண்டு மேலும் முழுமையாகப் பல தகவல்களைத் தரும் வகையில் இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இது பற்றி விவாதிப்பது சவுகரியமாக இருக்கும். அப்போது தான் மாணவர்களிடையே அமைதி ஏற்படும். என்னைப் பொறுத்த வரை, எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரை மாணவர்களைத்





தூண்டிவிடுவது எங்கள் நோக்கமல்ல; மாணவர்கள் காப்பாற்றப் பட வேண்டுமென்பதுதான் எங்கள் எண்ணம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. கந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டிலுள்ள எல்லாப் பகுதியினருக்கும், ஆட்சிப் பொறுப்பிலுள்ளவர்களுக்கு மாத்திரமல்லாமல் சமுதாயத்திற்கு வழி காட்ட வேண்டுமென்ற பொறுப்பிலுள்ள அவ்வளவு பேருக்கும் சோதனை மிகுந்த நேரத்தில் மிக வேதனையுடன் நாட்டிலுள்ள அத்தனை பேரும் உற்றுநோக்கக்கூடிய அளவில் மாணவர் பிரச்சினை இருக்கிறது. இதைப் பற்றி நல்ல முறையில் விவாதித்து இதைக் குறித்து தீர்க்கமான முடிவு எடுப்பதற்கு வழிகாண வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

எனக்கு முன் பேசிய தலைவர்கள் பலதரப்பட்ட கருத்துக்களைக் கூறினார்கள். அவர்களுடைய பேச்சிலிருந்து அவர்களுடைய நோக்கத்தை அறிய முடிந்தது. கடந்த கால சம்பவங்களை மையமாக வைத்து அதற்கு அரசிடம் கோரிக்கையாக ஊர்வலம் நடத்திய பிறகு இந்தத் துக்ககரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நடந்த சம்பவங்களைப் பற்றியெல்லாம் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்களும் தாங்கள் சார்ந்திருக்கும் கட்சி எந்த அளவுக்கு காந்தியத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து அமைதியாகப் போராட்டங்களை நடத்தியிருக்கிறோம் என்ற விவரங்களை எல்லாம் சொன்னார்கள்.

வேதனை மிகுந்த விளைவுகளை உண்டாக்கும் மாணவர்களின் அமைதியின்மையான நிலைமையை எப்படிச் சுமுகமாக அணுகி ஒரு முடிவு காணவேண்டும் என்ற கருத்தை அவர்கள் பூர்ணமாகச் சொல்லவில்லை என்று நான் கருதுகிறேன். அவர்களுக்கு கருத்து தெரியாமல் இல்லை. மனம் இல்லாமலில்லை. அவர்களும் குழந்தைகளைப்பெற்றவர்கள். இங்குள்ள நாம் அனைவரும் தந்தையர்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. நாம் சட்ட மன்றத்திற்கு வருவதும் அல்லது ஜனநாயகத்தில் மக்கள் பிரதிநிதிகளாக இருப்பதும் பொது மக்களின் நன்மையைக் கருதித் தான், எதிர்கால சந்ததியினருக்கு நன்மை செய்வதற்காகத்தான்

[திரு. கே. கந்தசாமி] [1973 நவம்பர் 29

என்பதை நாம் மறந்துவிட்டால் நாம் மக்களுக்கு நன்மை செய்தவர்களாகமாட்டோம். அரசியல் குறிக்கோள்களில் அல்லது கோட்பாடுகளில் நாம் வேறுபட்டிருந்தாலும் இவ்விஷயத்தில் நாம் தக்க கவனம் செலுத்தி மக்களுக்கு நன்மை அளிக்கும் வகையில் செயல்படவேண்டும்.

இது சட்டம் அமைதிப் பிரச்னையைப் பாதிக்கும் ஒன்றாக இருப்பதாலும், நாட்டு மக்களைப் பாதிக்கக் கூடிய பிரச்னையாகவும் இருப்பதால் இதை நான் பல கோணங்களிலிருந்து சொல்ல விரும்புகிறேன். இதில் எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் ஒரு பொறுப்பு இருக்கிறது. கலைஞர் அவர்கள் கூட இரண்டு மூன்று நாட்கள் இந்த சட்டமன்றத்தில் பேசுகிறபோது மாற்றுக் கட்சித் தலைவர்கள் ஏன் மாணவ மணிகளுக்கு ஒரு வேண்டுகோள் விடக் கூடாது அவர்கள் போராட்டத்தை நிறுத்த வேண்டும் என்பதற்காக என்று வேதனையோடு சொன்னார்கள். அதையே நானும் சொல்கிறேன். அவர்கள் சொன்னார்கள் என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. இது நம்முடைய பிரச்னை, இது ஒவ்வொருவருடைய தனிப்பட்ட பிரச்னையாகவும், பொதுப் பிரச்னையாகவும் இருப்பதால் அவ்வளவு பேர்களும் கட்சியை மறந்து மாணவர்களின் எதிர்கால வாழ்க்கை எப்படி அமையவேண்டும், அறிவைப் பெருக்கிக்கொள்வதற்கு என்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றிச் சிந்தித்து இச்பிரச்னையில் ஒன்றுபட்டு செயல் படவேண்டும். கல்லூரிகளில் அல்லது பள்ளிகளில் படிக்கக் கூடிய மாணவர்கள் தங்களது எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்ளும் ஆற்றல் பெற்றவர்கள் அல்ல.

அதை நாம் அறிவோம். ஆகவே அவர்களையும் சேர்த்து நாட்டின் தலைவிதியை நிர்ணயிப்பது மாமன்றத் தலைவர்களுடைய கடமையாகும்.

அறிஞர் அண்ணா அவர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது சுட்டிக்காட்டினார்கள். மாணவ மணிகளே உங்கள் பிரச்னையை எங்களிடம் விட்டுவிடுங்கள், நாங்கள் முதியவர்களாக இருக்கிறோம், பெரியவர்களாக இருக்கிறோம், எங்களை நம்புங்கள் என்று இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்தபோது அறிஞர் அண்ணா அவர்கள் பேருள்ளத்தோடு அறிக்கை விட்டு மாணவர்கள் சட்டத்தையும் அமைதியையும் பாதுகாக்கவேண்டுமென்று



1973 நவம்பர் 29] [திரு. கே. கந்தசாமி]

வேண்டுகோள் விடுத்தார்கள். அதேபோல் இப்போதும் கட்சித் தலைவர்கள் கட்சிப் பாகுபாடு இன்றி இந்தச் சந்தர்ப்பத்திலும் செயல்படவேண்டும். இரண்டு தலைவர்கள் சொன்னார்கள். ஒரு சுமுகமான நிலையை ஏற்படுத்த முதல் அமைச்சர் அவர்களும் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் அத்தனை கட்சித் தலைவர்களுடன் கலந்து பேசவேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் கருத்தை ஏற்று அவர்கள் நல்ல யோசனைகள் சொல்வதோடு மட்டுமல்லாமல் மாணவர்களிடையே அமைதியை ஏற்படுத்த எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும்.

ஆகவே இப்பிரச்னை சம்பந்தமாக சபாநாயகர் அவர்கள் சபையை சிறிது ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்கவேண்டும் என்று கோரி, அதற்கு தாங்கள் அனுமதிக்கவேண்டுமென்று கோரி அமைகிறேன்.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, கடந்த பல நாட்களாக மாணவர்களிடத்தில் ஒரு அமைதியின்மை ஏற்பட்டு ஒரு கிளர்ச்சியில் இறங்கியிருக்கிறார்கள் என்பதை நாம் கவனித்துக்கொண்டு வருகிறோம். இதற்கு முன்னால் பாளையங்கோட்டையிலும், திருச்சியிலும் நடந்த சம்பவங்கள் பற்றிய விசாரணைக் கமிஷன்களின் அறிக்கைகளைப் பார்த்து அரசுத் தரப்பில் மாணவர்களுக்கு எதிராகத் தவறு நடந்திருக்கிறது என்ற கருத்து ஏற்பட்டிருப்பதன் விளைவாக இந்த கிளர்ச்சியில் இறங்கியிருக்கிறார்கள். மாணவர்கள் மத்தியில் கிளர்ச்சி இருப்பது நாட்டினுடைய அமைதிக்கு நல்லதல்ல என்பதை நாம் நன்கு உணருவோம்.

இது சம்பந்தமாக இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு இந்த சபையில் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு அது விவாதிக்கப்பட்டது. அதன் பிறகும் மாணவர்களுக்கு அரசு எடுத்துக்கொண்டிருக்கிற நடவடிக்கைகளில் திருப்தி அளிக்கவில்லை என்ற காரணத்தால் அவர்கள் தொடர்ந்து கிளர்ச்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எப்படியோ அந்தக் கிளர்ச்சி செய்வதை நிறுத்திவிட்டு மாணவர்கள் அமைதியாக இருக்க வேண்டும் என்பதில் நமக்கெல்லாம் கருத்து வேறுபாடு கிடையாது.

[திரு. கே. டி. கே தங்கமணி] [1973 நவம்பர் 29

அதிலே கூட இந்த மாதம் 26 ஆம் தேதி பெருமைக்குரிய விஷயம் என்னவென்றால், 30,000 மாணவர்கள் வரையில் சென்னை நகரத்திலே ஒரு ஊர்வலத்தை நடத்தி எந்தவிதமான அசம்பாவிதமுமின்றி வந்திருக்கிறார்கள், என்று போலீசாரின் அறிக்கையே சொல்லுகிறது. சில ரவுடி எலிமென்ட்ஸ் ஓரிரண்டு கடைகளை அப்பொழுது சூரையாட முனைந்த பொழுது அந்த மாணவர்கள் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. 30,000 மாணவர்கள் அமைதியான முறையிலே தங்களுடைய உரிமைக்குட் பட்டு ஊர்வலம் சென்று கோஷங்களை எழுப்பியது தேசிய இயக்கத்தின் தந்தை மகாத்மா காந்தி வழிவகுத்து கொடுத்த முறை ஆகும். அப்படி இருக்கும் பொழுது இவர்களை எதிர்த்து தாக்குவதற்கு சில ரவுடி எலிமென்ட்சை செட்டப் பண்ணியவர்களை, அப்படி செட்டப் பண்ணியிருக்கிறார்களா என்று ஸ்பெஷல் போலீஸ் பார்த்தால் யார், யார் செட்டப் பண்ணி எந்த முறையில் கலாட்டா பண்ணினார்கள் என்பது தெரியும். அப்படிப் பார்த்தால் நமக்கு பாதுகாப்பு தேடிக்கொள்ள அது ஒரு வழியாக இருக்கும். இன்னொன்று சொல்லப்படுகிறது, இப்படி நடக்கிறது என்று போலீசுக்கு தகவல் கொடுத்தும் கூட காரியங்கள் எல்லாம் முடிந்ததற்குப் பிறகு தான் போலீசார் வந்திருக்கிறார்கள் என்றால் என்னவென்று நமக்குத் தெரியவில்லை. ஆகவே, அரசாங்கத்தினுடைய தவறு இதிலே இருக்கிறது. அரசாங்கம் தன்னுடைய கடமையை செய்யவில்லை அல்லது தவறாக செய்து கொண்டிருக்கிறார்கள் என்று குற்றச்சாட்டு இருக்கின்ற காரணத்தினால் இந்தக் குறிப்பிட்ட பிரச்சினையை பற்றி பேசி முடிவு எடுத்தால் மக்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும். அப்படியின்றி நியாயமான போராட்டம் நடக்கும் பொழுது அதை எதிர்த்து அதை முறியடிப்பவர்களுக்கு பாதுகாப்பாக போலீசை உபயோகப் படுத்தப்படும் என்பதை பொய்ப்பிக்க இந்த சட்ட சபையின் நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இதன் மீது பல விபரங்களை உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லுவார்களேயானால் இந்த எதிர் கட்சிக்கு மட்டுமில்லை, எல்லா கட்சியிலேயும் இருக்கக் கூடியவர்களுக்கும் ஒரு நம்பிக்கை பிறக்கும் என்ற முறையிலே இந்தச் சபையை ஒத்தி வைத்து இன்றைக்கு பிற்பகலில் 12 மணியிலிருந்து இரண்டு மணி வரையிலும் விவாதிப்பது உதவிகரமாக இருக்கும் என்று சொல்லி, இந்த ஒத்திவைப்புப் பிரேரணையை வற்புறுத்துகிறேன்.



1973 நவம்பர் 29]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவரவர்களே, மாணவர்களிடையே அமைதியின்மையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே ஒத்திவைப்புத் தீர்மானங்களை கொண்டுவந்து அதன்மீது தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் தங்களுக்கு உகந்த முறையில் தங்களுக்குத் தெரிந்தது இது தான் என்ற முறையிலே இங்கே கருத்துக்களை பரிமாறிக்கொண்டு, சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தங்களுக்குத் தெரிந்த பலவற்றை இப்பொழுது எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாணவர்களிடையே அமைதியின்மை ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலை எல்லோருக்கும் வருத்தத்தை தருகின்ற நிலைமை தான். ஏன் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதை நிறுத்த அரசாங்கம் எடுத்திருக்கின்ற நடவடிக்கை என்னென்ன என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்ற இரண்டு, மூன்று நாட்களிலேயும் சட்ட மன்றத்திலேயும், மேலவையிலேயும் விரிவாகவும் விளக்கமாகவும் சொல்லியிருக்கிறார்கள். நேற்றைக்கு பச்சையப்பன் கல்லூரியையொட்டி நடைபெற்ற சம்பவம் குறித்து இங்கே ஒத்திவைப்புத் தீர்மானங்களை உறுப்பினர்கள் தந்திருக்கிறார்கள். அதிலேயும் தங்களுடைய கருத்துக்களை ஒவ்வொருவரும் சொல்லுகிற நிலையிலேயும், தாங்கள் பார்த்ததையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பொறுப்புணர்ச்சியோடு அரசு நடவடிக்கைகளை எடுக்கின்ற வகையிலே தான் பணியாற்றி வருகிறது.

28—11—1973 அன்று சென்னையில் சில கல்லூரிகளிலே சில பகுதி மாணவர்கள் கல்லூரிகளுக்குச் செல்லவில்லை. இதிலே பச்சையப்பன் கல்லூரியும் ஒன்று. பச்சையப்பன் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் சிலர் கல்லூரியின் வாயிலிலே நின்று கொண்டு உள்ளே செல்லும் மாணவர்களைத் தடுத்துக்கொண்டும், அந்த வழியே செல்லும் பேருந்துகளின் மீது கல்லெறிவதிலேயும் ஈடுபட்டனர். கல்லெறிவது தொடர்ந்து நடந்து கொண்டிருந்ததால், பேருந்துகளில் பிரயாணம் செய்து கொண்டிருந்த சில பெண்கள் மீது கல்லெறியப்பட்டு காயமுற்றனர். கல்லூரியின் அருகாமையில் இருந்து "வீனஸ் ஒயின்ஸ்" என்ற பிராந்திக் கடையிலும் மாணவர்கள் புகுந்து மிகுந்த சேதம் விளைவித்தனர். 30,000 ரூபாய்க்கு மேலே அங்கே சேதம் ஏற்பட்டது. மேலும், அக்கல்லூரிக்கு அருகிலுள்ள பெட்ரோல் பங்கின் மீதும் கல்

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1973 நவம்பர் 29

ஆனால் அதற்குச் சிகரம் வைத்தாற்போல் அவர்களின் ஆத்திரத்தைத் தூண்டக்கூடிய வகையில் நேற்றைய சம்பவம் நடந்திருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது நாம் எல்லாம் வருத்தப்படாமல் இருக்கமுடியாது. பச்சையப்பன் கல்லூரியில் நடந்த சம்பவங்கள் ஏதோ எதிர்பாராதவிதமாக நடந்தது என்று எடுத்துக் கொள்ளமுடியவில்லை. பல நாட்களாக எல்லாக் கல்லூரிகளிலிருந்தும் மாணவர்கள் ஊர்வலமாக வந்து அவர்கள் கோரிக்கைகளை வற்புறுத்திக் கொண்டிருக்கும்போது எந்தவிதமான அசம்பாவிதமான சம்பவங்களும் நடந்ததாக நான் அறியவில்லை. மிக அமைதியான முறையில்தான் அவர்கள் ஆர்ப்பாட்டங்கள் இருந்திருக்கின்றனவே தவிர வன்முறையை நோக்கிச் சென்றதாக நாம் அறியக் கிடையாது. ஆனால் நேற்றையதினம் ஏன் இது வன்முறையாக மாறியிருக்கவேண்டும் என்று பார்க்கிறபோது இதில் ஏதோ ஒன்று பொதிந்திருக்கிறது, மறைமுகமாக நடந்திருக்கிறது என்பதைத்தான் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். இது என்னுடைய அனுமானம்.

பொதுமக்கள் சேர்ந்துகொண்டு மாணவர்களைத் தாக்கவேண்டும் என்ற நிலைமை எந்த நேரத்திலும் ஏற்பட்டிருக்க முடியாது. இதில் ஏதோ விஷமச் செயல் இருக்கிறது என்று நான் கருதுகிறேன். அரசாங்கத்திற்கு தெரிந்திருக்கலாம் அல்லது தெரியாமல் இருக்கலாம். அரசாங்கத்திற்கு தெரிந்திருக்கும் என்று என்னால் கூறமுடியாது. ஆனால் அரசுக்கு எதிராக நடக்கும் கிளர்ச்சியைப் பார்த்து அதைச் சகித்துக்கொண்டிருக்க முடியாத சில ஆதரவாளர்கள் இந்த மாணவர்களை வன்முறையில் தாக்க ஆரம்பித்ததன் விளைவுகளே பச்சையப்பன் கல்லூரியில் நடந்த சம்பவங்கள் என்று நான் கருதுகிறேன். ஆகவே இதைத் தீர விசாரிக்கவேண்டும், இதைப்பற்றி நாம் விவாதிக்கவேண்டும்.

எனக்குக் கிடைத்திருக்கிற செய்தி, ஒரு டீக் கடையில் காலையில் சென்று டீ சாப்பிட்டுக்கொண்டிருந்த மாணவர்களை சைக்கிள் செயினால் யாரோ ஒருவர் அடித்திருக்கிறார். அப்படி அடித்ததன் பயனாக அங்குள்ளவர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே கலகம் ஏற்பட்டு அதன் பிறகு லாரியில் அங்கு ஆள்கள் வந்து இறங்கினார்கள் என்று சொல்லப்படுகிறது. இது எவ்வளவு தூரம் உண்மை என்று எனக்குத் தெரியாது. நான் கேள்விப்பட்ட செய்தி. ஒரு பக்கத்தில் வெளியில் இருந்து வந்தவர்கள், ஒரு பக்கத்தில் மாணவர்கள் என்று கூட்டம் சேர்ந்து கற்கள், சோடா பாட்டில்கள் எல்லாம் எறியப்பட்டு, பெரிய வன்முறைச் செயல்கள் நடந்திருப்பது ஏதோ எதேச்சையாக பொதுமக்கள் சேர்ந்துகொண்டு மாணவர்களைத் தாக்கியிருப்பார்கள் என்று நான் எடுத்துக்கொள்ள முடியாது. இப்படி சம்பவங்கள் நடைபெற்றிருக்கும்போது பச்சையப்பன் கல்லூரி வைஸ்-ப்ரின்சிபால் அவர்கள் போலீசுக்கு தகவல் கொடுத்திருக்கிறார்கள். அவர் 10-30 மணிக்கு தகவல் கொடுத்திருந்தும் பிற்பகல் 1-25 மணி வரையிலும் போலீஸ் அங்கு வரவில்லை. இதற்கு காரணம் என்னவாக இருக்கமுடியும். மாணவர்களின் கிளர்ச்சி இருப்பதால் அரசாங்கம் எச்சரிக்கையாக இருக்கிறது. மாணவர்கள் கிளர்ச்சி இருப்பதால் நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்று போலீஸ் எங்கு பார்த்தாலும் பரவலாக வைக்கப்பட்டிருக்கிறது. போலீஸ் உஷார் படுத்தப்பட்டிருக்கிறது. அப்படி உஷார் படுத்தப்பட்ட போலீஸ் இருக்கும்போது பச்சையப்பன் கல்லூரி வைஸ்-ப்ரின்சிபால் அவர்கள் 10-30 மணிக்கு தகவல் கொடுத்தும் மூன்று மணி நேரம் போலீஸ் அங்கு வராததற்குக் காரணம் என்ன என்பதைப் பற்றி நாம் விவாதிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதே சந்தர்ப்பதில் மாணவர்கள் வெளியேவரமுடியாதவண்ணம் கேட்டில் பெட்ரோலை ஊற்றி நெருப்பு வைக்கப்பட்டிருப்பதாக பத்திரிகைச் செய்தி பார்த்தேன். இப்படி வன்முறைச் செயல்கள் நடைபெற்ற பிறகு மூன்று மணி நேரம் கழித்த பிறகு, எல்லாச் சேதங்களும் ஏற்பட்ட பிறகு போலீஸ் வந்து வெளியே நின்றவர்கள் மீது கண்ணீர் புகை உபயோகித்து அமைதியை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்றால் எவ்வளவுதூரம் லா ஆண்ட் ஆர்டர் பாது காக்கப்படுகிறது என்பதை தயவுசெய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் தலைவர் அவர்களே.



1973 நவம்பர் 29] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

பத்திரிகைகளில் வந்துள்ள செய்திகளைப் பார்த்தால் பூந்தமல்லி ஹைரோடில் எங்குபார்த்தாலும் கண்ணாடித்துண்டுகள் சிதறிக் கிடப்பதாக செய்தி வந்திருக்கிறது. அதல்லாமல் மாணவர்கள் அடிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் ஏழு பேர்கள் இன் பேஷியன்ட்ஸ்ஸாக வைக்கப்பட்டிருப்பதாகவும் செய்தி வந்துள்ளது. இப்படி மாணவர்களுக்கு ஆத்திரத்தையூட்டி அதனால் நாட்டில் பிறகு ஏற்படும் விளைவுகள் நாட்டுக்கும் நல்லதல்ல, இந்த அரசுக்கும் நல்லதல்ல. இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறாவண்ணம் அரசாங்கம் பார்த்துக்கொள்ளவேண்டும்,

[திரு. கே. டி. கே தங்கமணி] [1973 நவம்பர் 29

அதிலே கூட இந்த மாதம் 26 ஆம் தேதி பெருமைக்குரிய விஷயம் என்னவென்றால், 30,000 மாணவர்கள் வரையில் சென்னை நகரத்திலே ஒரு ஊர்வலத்தை நடத்தி எந்தவிதமான அசம்பாவிதமுமின்றி வந்திருக்கிறார்கள், என்று போலீசாரின் அறிக்கையே சொல்லுகிறது. சில ரவுடி எலிமென்ட்ஸ் ஓரிரண்டு கடைகளை அப்பொழுது சூரையாட முனைந்த பொழுது அந்த மாணவர்கள் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. 30,000 மாணவர்கள் அமைதியான முறையிலே தங்களுடைய உரிமைக்குட்பட்டு ஊர்வலம் சென்று கோஷங்களை எழுப்பியது தேசிய இயக்கத்தின் தந்தை மகாத்மா காந்தி வழிவகுத்து கொடுத்த முறை ஆகும். அப்படி இருக்கும் பொழுது இவர்களை எதிர்த்து தாக்குவதற்கு சில ரவுடி எலிமென்ட்சை செட்டப் பண்ணியவர்களை, அப்படி செட்டப் பண்ணியிருக்கிறார்களா என்று ஸ்பெஷல் போலீஸ் பார்த்தால் யார். யார் செட்டப் பண்ணி எந்த முறையில் கலாட்டா பண்ணினார்கள் என்பது தெரியும். அப்படிப் பார்த்தால் நமக்கு பாதுகாப்பு தேடிக்கொள்ள அது ஒரு வழியாக இருக்கும். இன்னொன்று சொல்லப்படுகிறது, இப்படி நடக்கிறது என்று போலீசுக்கு தகவல் கொடுத்தும் கூட காரியங்கள் எல்லாம் முடிந்ததற்குப் பிறகு தான் போலீசார் வந்திருக்கிறார்கள் என்றால் என்னவென்று நமக்குத் தெரியவில்லை. ஆகவே, அரசாங்கத்தினுடைய தவறு இதிலே இருக்கிறது. அரசாங்கம் தன்னுடைய கடமையை செய்யவில்லை அல்லது தவறாக செய்து கொண்டிருக்கிறார்கள் என்று குற்றச்சாட்டு இருக்கின்ற காரணத்தினால் இந்தக் குறிப்பிட்ட பிரச்சினையை பற்றி பேசி முடிவு எடுத்தால் மக்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும். அப்படியின்றி நியாயமான போராட்டம் நடக்கும் பொழுது அதை எதிர்த்து அதை முறியடிப்பவர்களுக்கு பாதுகாப்பாக போலீசை உபயோகப்படுத்தப்படும் என்பதை பொய்ப்பிக்க இந்த சட்ட சபையின் நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இதன் மீது பல விபரங்களை உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லுவார்களேயானால் இந்த எதிர்கட்சிக்கு மட்டுமில்லை, எல்லா கட்சியிலேயும் இருக்கக் கூடியவர்களுக்கும் ஒரு நம்பிக்கை பிறக்கும் என்ற முறையிலே இந்தச் சபையை ஒத்தி வைத்து இன்றைக்கு பிற்பகலில் 12 மணியிலிருந்து இரண்டு மணி வரையிலும் விவாதிப்பது உதவிகரமாக இருக்கும் என்று சொல்லி, இந்த ஒத்திவைப்புப் பிரேரணையை வற்புறுத்துகிறேன்.



1973 நவம்பர் 29]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவரவர்களே, மாணவர்களிடையே அமைதியின்மையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே ஒத்திவைப்புத் தீர்மானங்களை கொண்டுவந்து அதன்மீது தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் தங்களுக்கு உகந்த முறையில் தங்களுக்குத் தெரிந்தது இது தான் என்ற முறையிலே இங்கே கருத்துக்களை பரிமாறிக்கொண்டு, சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தங்களுக்குத் தெரிந்த பலவற்றை இப்பொழுது எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாணவர்களிடையே அமைதியின்மை ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலை எல்லோருக்கும் வருத்தத்தை தருகின்ற நிலைமை தான். ஏன் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதை நிறுத்த அரசாங்கம் எடுத்திருக்கின்ற நடவடிக்கை என்னென்ன என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்ற இரண்டு, மூன்று நாட்களிலேயும் சட்ட மன்றத்திலேயும், மேலவையிலேயும் விரிவாகவும் விளக்கமாகவும் சொல்லியிருக்கிறார்கள். நேற்றைக்கு பச்சையப்பன் கல்லூரியையொட்டி நடைபெற்ற சம்பவம் குறித்து இங்கே ஒத்திவைப்புத் தீர்மானங்களை உறுப்பினர்கள் தந்திருக்கிறார்கள். அதிலேயும் தங்களுடைய கருத்துக்களை ஒவ்வொருவரும் சொல்லுகிற நிலையிலேயும், தாங்கள் பார்த்ததையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பொறுப்புணர்ச்சியோடு அரசு நடவடிக்கைகளை எடுக்கின்ற வகையிலே தான் பணியாற்றி வருகிறது.

28—11—1973 அன்று சென்னையில் சில கல்லூரிகளிலே சில பகுதி மாணவர்கள் கல்லூரிகளுக்குச் செல்லவில்லை. இதிலே பச்சையப்பன் கல்லூரியும் ஒன்று. பச்சையப்பன் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் சிலர் கல்லூரியின் வாயிலிலே நின்று கொண்டு உள்ளே செல்லும் மாணவர்களைத் தடுத்துக்கொண்டும், அந்த வழியே செல்லும் பேருந்துகளின் மீது கல்லெறிவதிலேயும் ஈடுபட்டனர். கல்லெறிவது தொடர்ந்து நடந்து கொண்டிருந்ததால், பேருந்துகளில் பிரயாணம் செய்து கொண்டிருந்த சில பெண்கள் மீது கல்லெறியப்பட்டு காயமுற்றனர். கல்லூரியின் அருகாமையில் இருந்து "வீனஸ் ஒயின்ஸ்" என்ற பிராந்திக் கடையிலும் மாணவர்கள் புகுந்து மிகுந்த சேதம் விளைவித்தனர். 30,000 ரூபாய்க்கு மேலே அங்கே சேதம் ஏற்பட்டது. மேலும், அக்கல்லூரிக்கு அருகிலுள்ள பெட்ரோல் பங்கின் மீதும் கல்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 நவம்பர் 29

எறிந்ததன் காரணமாக அது சேதம் அடைந்திருக்கிறது. இச்சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட பொது மக்கள் கோபங்கொண்டு மாணவர்களை எதிர்த்தனர். அப்போது பொதுமக்களில் ஐவரை மாணவர்கள் கல்லூரிக்குள்ளே இழுத்துச் சென்று கல்லூரிக்குள்ளே வைத்திருக்கிறார்கள். இதனால் மேலும் ஆத்திரமடைந்த பொதுமக்கள் கல்லூரியின் வாயிலில் நின்றுகொண்டு, உள்ளே இழுத்துச் செல்லப்பட்ட ஐவரை மாணவர்களிடமிருந்து மீட்கும் வரை தாங்கள் நின்ற இடத்தைவிட்டு அகலப் போவதில்லை என்று அங்கேயே நின்றிருந்தார்கள்.

இதற்கிடையே கல்லூரியின் துணை முதல்வர் அவர்கள் போலீஸ் துறைக்கு செய்தி அனுப்பி, அவர்கள் உடனே விரைந்து சென்று இரு சாராரையும் கலைந்து போவதற்காக எவ்வளவோ சொல்லியிருக்கிறார்கள். ஆனால், உள்ளே இருக்கும ஐவரையும் வெளியே விட்டால் தான் நாங்கள் போவோம் என்று பொது மக்கள் அடம் பிடித்திருக்கிறார்கள. மாணவர்களும் நின்ற இடத்திலே இருந்து அகல மாட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்குள்ளே வைஷ்ணவக் கல்லூரி மாணவர்களும் வந்து பச்சையப்பன் கல்லூரி மாணவர்களோடு சேர்ந்திருக்கிறார்கள். சென்னை நகர போலீஸ் கமிஷனரே சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று கல்லூரி வாயிலுக்கு முன்னால் நின்றிருந்த பொதுமக்களை அப்புறப் போகச் சொல்லியும் அவர்கள் போகாததால், கண்ணீர் புகைக் குண்டுகளை வெடிப்பதன் மூலம் அசம்பாவிதங்களை தவிர்க்கலாம் என்று கருதி அக்குண்டுகளை வெடித்து பொதுமக்களை கலைத்திருக்கிறார்கள். அங்கிருந்த காவல் துறை கமிஷனரும், காவல் துறை அதிகாரிகளும் இதைச் செய்து கூட்டத்தை கலைத்திருக்கிறார்கள். கல்லூரி முதல்வர் அழைத்த தன் பேரில் சென்னை போலீஸ் கமிஷனர் அங்கே சென்று அவர்கள் அங்கே கொடுத்த கம்பிளயின்டை வாங்கிக் கொண்டு கன்னியத்திற்கு வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லி, பிரின்சிபால் அவர்களிடத்திலே பேசி, அங்கே வைக்கப்பட்டிருந்த ஐவரையும் மீட்டு வந்திருக்கிறார்கள்.' அந்த ஐந்து பேர்களின் மீதும் காயம் இருந்ததால் அந்த ஐந்து பேரும் கீழ்ப்பாக்கம் மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டிருக்கிறார்கள். இதன் காரணமாக அரசினர் பொது மருத்துவ மனையில் 7 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். கீழ்ப்பாக்கம் மருத்துவ மனையில் 8 மாணவர்கள் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதே



1973 நவம்பர் 29] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மாதிரி பொதுமக்களிலே காயமடைந்தவர்கள் 13 பேர் கீழ்ப்பாக்கம் மருத்துவ மனையிலே சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். காவல் துறையினர் 6 பேர் காயம் அடைந்து கீழ்ப்பாக்கம் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இந்த சம்பவம் குறித்து காவல் துறையினர் முறையோடு வழக்குகள் பதிவு செய்திருக்கிறார்கள். கல்லூரி முதல்வர் அவர்கள் மாணவர்கள் சார்பாக கொடுத்த கம்பளயின்ட் முதலியவற்றை கமிஷனருக்கு கொடுத்திருக்கிறார்கள். அவர் நடவடிக்கை அதன் மீது எடுத்துக் கொள்ளவிருக்கிறார். உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இங்கே ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்த கவுன்சிலர் ஒருவர் தூண்டுதலாக இருந்து இவற்றை எல்லாம் நடத்தினார் என்றார். மாணவர்கள் கொடுத்த கம்ப்ளயின்ட்டிலே அப்படிப் பட்ட ஒருவரின் பெயரை கொடுத்து எதுவும் குறிப்பிடப்பட

[முற்பகல் 11-00]

வில்லை என்று சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, இதிலே அரசியல் எதையும் கலந்து கொள்ள வேண்டியதில்லை என்று கேட்டுக் கொள்ளுகிறேன். எங்கே பார்த்தாலும் இப்படிப்பட்ட கிளர்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. எதிர்பாராத இடங்களிலே சில பல சம்பவங்கள் இப்படி ஏற்பட்டுவிடுகின்றன. நேற்று தியாகராயா கல்லூரி மாணவர்கள் ஊர்வலமாக வந்திருக்கிறார்கள். வேறு பல இடங்களிலும் ஊர்வலங்கள் நடந்திருக்கின்றன. கோவை, மதுரை வேறு பல இடங்களிலும் ஊர்வலங்கள் நடந்திருக்கின்றன. எதிர்பாராத சில சம்பவங்கள் நடந்திருக்கின்றன. பிராந்தி புட்டிகள் உடைக்கப்பட்டிருக்கின்றன, சேதம் ஏற்பட்டிருக்கிறது. இரு தரப்பினர்களுக்கும் மோதல் ஏற்பட்டிருக்கிறது. பஸ்ஸிலிருந்த பெண்களுக்கு காயம் ஏற்பட்டிருக்கிறது. பொதுமக்களுக்கு ஆத்திரம் ஏற்பட்டு கலவரம் ஏற்பட்டிருக்கிறது. இரு சாராருக்குமே காயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. வழக்குகள் முறைப்படி போலீசாரால் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

குறிப்பிட்ட அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் தூண்டி விட்டார்கள் என்று கூறுவதற்கு ஆதாரமே இல்லை. மாணவர்களும் அப்படி கம்ப்ளேண்டு செய்யவில்லை. போலீசார் தங்களுடைய கடமையைச் செய்ய மறந்துவிட்டார்கள், நின்றுவிட்டார்கள் என்பதும் இல்லை. இதெல்லாம் முடிந்ததற்குப் பிறகு கல்லூரி முதல்வர் போலீஸ் கமிஷனருக்கு ஒரு கடிதம் எழுதி

யிருக்கிறார்கள். காவல் துறையினர் வந்து நிலைமைகளை கட்டுக்கு அடங்கியதாக ஆக்கி, 5 பேர்களை கஸ்டடியில் அழைத்துச் சென்றதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் என்று சொல்லி, காவல் துறையினர் முயற்சிகளுக்கு நன்றி தெரிவித்து, பச்சையப்பன் கல்லூரி முதல்வர் அவர்கள் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதோடு மாணவர்கள் சார்பாக கொடுக்கப்பட்ட கம்ப்ளெண்டை யும் அனுப்பிவைத்திருக்கிறார்கள். கம்ப்ளெண்ட்டின் மீது முறைப்படி நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள் காவல் துறையினர். இதுபற்றி எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை காவல் துறையினர் முறைப்படி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். கண்ணீர் புகையை பயன்படுத்தி பொது மக்களை கலைத்திரா விட்டால் மேலும் பல விபரீத விளைவுகள், சேதங்கள் உண்டாகும் என்று கருதித் தான் காவல் துறையினர் அப்படிப்பட்ட முயற்சிகளை எடுத்துக் கொண்டனர். மாணவர்களுக்கு எவ்வித பாதகமும் ஏற்படாத அளவுக்கு பணிபுரிந்து வருகிறார்கள், நாமும் அதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறோம் என்பதை இந்த மன்றம் மிகவும் நன்றாக அறியும். ஆகவே, மாணவர்கள் இப்படிப் பட்ட செயல்களில் ஈடுபடுவது என்பது அவர்களுடைய எதிர் காலம் பாழ்படுகின்ற நிலைமையில் கொண்டுபோய்விடும். அதன் மூலம் ஏற்படும் விளைவுகள் ஒரு மரபாக ஆகிவிடுமேயானால் எதிர்காலத்தில் எந்த ஒரு ஜனநாயக ஆட்சியும் சீராக அமைவதற் கில்லை என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சியினர் அத்தனை பேர்களும் உணர்வார்கள், எல்லோரும் உணர்ந்திருக்கவேண்டும். அதைத் தான் பல உறுப்பினர்களும் இங்கே எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள்.

அரசின் மீது கோபமாக இருந்தால், அரசின் மீது ஆத்திரம் இருந்தால், அரசியல் கட்சிகள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்ளலாம். அரசியல் கட்சிகளின் சார்பாக அதன் விளைவு களைச் சந்திக்க எவ்வளவோ வழிகள் இருக்கின்றன. தேர்தல் முறையை வைத்து அல்லது வேறு பல முறைகளை வைத்து அதிகாரத்தை மாற்ற, ஒடுக்க, ஆளும் கட்சியை எதிர்க்கட்சி யாகவோ, எதிர்க்கட்சியை ஆளும் கட்சியாகவோ மாற்றி அமைப் பதற்கு எவ்வளவோ வழி முறைகள் இருக்கின்றன என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இங்கே அடிக்கடி எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். மாணவர்களை தூண்டிவிடுவதால் ஏற்படும் தன்மைகளைப்பற்றியும், நிலைமைகளைப் பற்றியும் எடுத்துச் சொல்லி





யிருக்கிறார்கள். மேலும் மாணவர்கள் தங்களுடைய பணிகளில் ஈடுபடவேண்டும் என்ற அறிவுரை வழங்கியிருக்கிறார்கள் மாண்பு மிகு முதல் அமைச்சர் அவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் பெரியவர்களிடம் இப்படிப்பட்ட பிரச்னைகளை விட்டுவிட்டு மாணவர்கள் தங்களுடைய படிப்பில் கவனம் செலுத்தவேண்டும் என்று அறிவுரை கூறியிருக்கிறார்கள் என்றெல்லாம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நினைவுபடுத்தியிருக்கிறார்கள். அந்த வகையில் இருக்கவேண்டும் என்பது தான் அரசினுடைய எண்ண மும். எல்லா எதிர்க் கட்சியினரும் அந்த அளவுக்கு உதவி செய்யவேண்டும் என்று வேண்டுகோளை நானும் விடுத்திருக் கிறேன், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் அடிக்கடி விடுத்துக்கொண்டு வருகிறார்கள். அந்தச் சூழ்நிலை ஏற்பட்டால் தான் தமிழகத்தினுடைய எதிர்காலம் பாதிக்கப்படாமல் இருக்கும், தமிழக மாணவர்களுடைய நிலை பாதிக்கப்படாமல் இருக்கும். முறையான கோரிக்கைகளை இந்த அரசு என்றும் பரிசீலிக்க ஆயத்தமாக இருக்கிறது. குறைபாடுகளை எடுத்துச் சொன்னால், அவைகளைக் கேட்டு, எடுக்கக்கூடிய தக்க நடவடிக் கைகளை அவ்வப்பொழுது அரசு எடுத்துவருகிறது.

ஜனநாயக முறை அடிப்படையில் எந்தக் கோரிக்கை வந்தாலும் தக்க முறையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள இந்த அரசு எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கிறது. வன்முறைச் செயல்களை கட்டுப்படுத்தவேண்டிய கடமைகளை போலீசார் ஆற்றவேண்டி யிருக்கிறது. பொதுமக்கள் துன்பத்திற்குள்ளாகாமல் காவல் துறையினர் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டியிருக் கிறது, மாணவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கவேண்டியிருக் கிறது. பொதுமக்களின் சொத்துக்களுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டிய பொறுப்புடையவர்களாக இருக்கிறார்கள் காவல் துறை யினர். இப்படிப்பட்ட இக்கட்டான நிலைமை ஏற்படுகின்ற பொழுது, அத்தோடு ஈடுபட்டிருக்கிற எல்லோரும் அவர்களை அமைதிப்படுத்தி, நல்வழிபடுத்தி, ஜனநாயக முறையில் செயலாற் றும் அளவுக்கு அவர்களுக்கு அறிவுரைகள் வழங்கவேண்டியவர் களாக இருக்கிறோம்.

எதிர்க்கட்சித் தலைவர்கள் நாங்கள் தூண்டிவிடவில்லை என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலை இருக்குமானால் உள்ள படியே அது வரவேற்கத் தக்க ஒன்று. எதிர்க்கட்சியினர்கள்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 நவம்பர் 29

தூண்டிவிடவில்லை என்று சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள் 'நாங்கள் மாணவர்களை தூண்டிவிடவில்லை' என்று கூறினார்கள். அந்த அளவிலே அது உண்மையாக இருக்கவேண்டும் என்பது தான் எங்களுடைய எண்ணமும். ஆனால் அதற்கு மாறாகத் தான் செய்திகள் வருகின்றன. மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்களின் கட்சித் தலைவர் நேற்று ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார். மாணவர்கள் ஓயக்கூடாது, பணி முடிகிறவரையில் ஓயக்கூடாது, அதோடு மட்டுமல்லாமல் பெற்றோர்களும், மற்றோர்களும் மாணவர்களுக்கு உறுதுணையாக இருக்கவேண்டும் என்றெல்லாம் அறிக்கை விடுத்திருக்கிறார்கள். இதைத் தான் வேண்டாம் என்று பணிவன்போடு கேட்டுக்கொண்டிருக்கிறோம். இது நல்லதற்கு இடம் ஆகாது, மாணவர்கள் நடத்திவருகிற போராட்டத்திற்கு பெற்றோர்கள் உறுதுணையாக இருக்கவேண்டும் என்று அவருடைய தலைவர் கோரியிருக்கிறார்கள். இது உள்ளபடியே வேதனை அளிப்பதாகும்.

இது எந்த நிலைமையில் கொண்டுபோய் விடும் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்த்து உணரவேண்டும். இதுபற்றி அடிக்கடி முதல்வர் அவர்கள் வேண்டுகோள் விட்டிருக்கிறார்கள். இந்த நாட்டின் முன்னேற்றத்திற்காக எல்லோரும் சேர்ந்து பாடுபட வேண்டும். தமிழகத்தின் வாழ்விலும், தமிழகத்தின் தாழ்விலும் எல்லோருக்கும் பங்கு உண்டு என்ற காரணத்தினால், எதிர்க்கட்சியினர் எல்லோரும் சுமுகமான சூழ்நிலை ஏற்படுவதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எந்த அளவுக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமோ அந்த அளவுக்கு காவல் துறையினர் முறைப்படி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அமைதியை நிலைநாட்டவும், மாணவர்களுடைய உரிமைகளை பாதுகாக்கவும், மாணவர்களுக்கு பல்வேறு வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் அரசு எடுக்கவேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்பட்டிருப்பதினால், அமைதிகாக்கும் முறையில் 2, 3 தினங்களுக்கு கல்லூரிகளை மூடிவைத்திருக்கிறோம் என்ற செய்தியை முதல்வர்கள் அனுப்பிவைத்திருக்கிறார்கள். ஆகவே; அமைதியை ஏற்படுத்துவதற்கு எந்தச் சூழ்நிலையை மேற்கொள்ளவேண்டுமோ, அதை மேற்கொண்டு அரசு தகக நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறது.



1973 நவம்பர் 29] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இந்தச் சம்பவங்கள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். மாணவர்களும் மகஜர் கொடுத்திருக்கிறார்கள். அதன் மீது காவல் துறையினர் முறைப்படி நடவடிக்கை எடுக்கிறார்கள். நடவடிக்கை எடுக்கின்ற அளவுக்கு புலன் விசாரணை செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் மேற்கொண்டு இதைப்பற்றி விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டியதில்லை, நான் கூறிய விளக்கங்களே போதும், அதற்கு மேல் இதுகுறித்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்ற காரணத்தினால், இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு

### மண்ணெண்ணெய் விலை ஏற்றமும் அது கிடைக்காததால் மக்களின் அல்லலும்

DR. H. V. HANDE: Sir, I wish to call the attention of the Hon. Minister for Food and Co-operation to a matter of urgent public importance, namely, the increase in the cost of kerosene and its non-availab'lity, causing hardship to the poor people all over Tamil Nadu in general and in Madras City in particular.

THIRU B. VENKATASWAMY: Sir, I wish to call the attention of the Hon. Min'ster for Food and Co-operation to a matter of urgent public importance, namely, the increase in the cost of kerosene and its non-availability, causing hardship to the poor people all over Tamil Nadu in general and in Madras City in particular.

THIRU N. K. PALANISAMY: Sir, I wish to call the attention of the Hon. Minister for Food and Co-operation to a matter of urgent public importance, namely, the increase in the cost of kerosene and its non-ava'lability, causing hardship to the poor people all over Tamil Nadu in general and in Madras City in particular.

யிருக்கிறார்கள். காவல் துறையினர் வந்து நிலைமைகளை கட்டுக்கு அடங்கியதாக ஆக்கி, 5 பேர்களை கஸ்டடியில் அழைத்துச் சென்றதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் என்று சொல்லி, காவல் துறையினர் முயற்சிகளுக்கு நன்றி தெரிவித்து, பச்சையப்பன் கல்லூரி முதல்வர் அவர்கள் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதோடு மாணவர்கள் சார்பாக கொடுக்கப்பட்ட கம்ப்ளைண்டையும் அனுப்பிவைத்திருக்கிறார்கள். கம்ப்ளைண்ட்டின் மீது முறைப்படி நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள் காவல் துறையினர். இதுபற்றி எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை காவல் துறையினர் முறைப்படி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். கண்ணீர் புகையை பயன்படுத்தி பொது மக்களை கலைந்திரா விட்டால் மேலும் பல விபரீத விளைவுகள், சேதங்கள் உண்டாகும் என்று கருதித் தான் காவல் துறையினர் அப்படிப்பட்ட முயற்சிகளை எடுத்துக் கொண்டனர். மாணவர்களுக்கு எவ்வித பாதகமும் ஏற்படாத அளவுக்கு பணிபுரிந்து வருகிறார்கள், நாமும் அதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறோம் என்பதை இந்த மன்றம் மிகவும் நன்றாக அறியும். ஆகவே, மாணவர்கள் இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுவது என்பது அவர்களுடைய எதிர்காலம் பாழ்படுகின்ற நிலைமையில் கொண்டுபோய்விடும். அதன் மூலம் ஏற்படும் விளைவுகள் ஒரு மரபாக ஆகிவிடுமேயானால் எதிர்காலத்தில் எந்த ஒரு ஜனநாயக ஆட்சியும் சீராக அமைவதற்கில்லை என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சியினர் அத்தனை பேர்களும் உணர்வார்கள், எல்லோரும் உணர்ந்திருக்கவேண்டும். அதைத்தான் பல உறுப்பினர்களும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அரசின் மீது கோபமாக இருந்தால், அரசின் மீது ஆத்திரம் இருந்தால், அரசியல் கட்சிகள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்ளலாம். அரசியல் கட்சிகளின் சார்பாக அதன் விளைவுகளைச் சந்திக்க எவ்வளவோ வழிகள் இருக்கின்றன. தேர்தல் முறையை வைத்து அல்லது வேறு பல முறைகளை வைத்து அதிகாரத்தை மாற்ற, ஒடுக்க, ஆளும் கட்சியை எதிர்க்கட்சியாகவோ, எதிர்க்கட்சியை ஆளும் கட்சியாகவோ மாற்றி அமைப்பதற்கு எவ்வளவோ வழி முறைகள் இருக்கின்றன என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இங்கே அடிக்கடி எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். மாணவர்களை தூண்டிவிடுவதால் ஏற்படும் தன்மைகளைப்பற்றியும், நிலைமைகளைப் பற்றியும் எடுத்துச் சொல்லி



யிருக்கிறார்கள். மேலும் மாணவர்கள் தங்களுடைய பணிகளில் ஈடுபடவேண்டும் என்ற அறிவுரை வழங்கியிருக்கிறார்கள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் பெரியவர்களிடம் இப்படிப்பட்ட பிரச்னைகளை விட்டுவிட்டு மாணவர்கள் தங்களுடைய படிப்பில் கவனம் செலுத்தவேண்டும் என்று அறிவுரை கூறியிருக்கிறார்கள் என்றெல்லாம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நினைவுபடுத்தியிருக்கிறார்கள். அந்த வகையில் இருக்கவேண்டும் என்பது தான் அரசினுடைய எண்ணமும். எல்லா எதிர்க் கட்சியினரும் அந்த அளவுக்கு உதவி செய்யவேண்டும் என்று வேண்டுகோளை நானும் விடுத்திருக்கிறேன், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் அடிக்கடி விடுத்துக்கொண்டு வருகிறார்கள். அந்தச் சூழ்நிலை ஏற்பட்டால் தான் தமிழகத்தினுடைய எதிர்காலம் பாதிக்கப்படாமல் இருக்கும், தமிழக மாணவர்களுடைய நிலை பாதிக்கப்படாமல் இருக்கும். முறையான கோரிக்கைகளை இந்த அரசு என்றும் பரிசீலிக்க ஆயத்தமாக இருக்கிறது. குறைபாடுகளை எடுத்துச் சொன்னால், அவைகளைக் கேட்டு, எடுக்கக்கூடிய தக்க நடவடிக்கைகளை அவ்வப்பொழுது அரசு எடுத்துவருகிறது.

ஜனநாயக முறை அடிப்படையில் எந்தக் கோரிக்கை வந்தாலும் தக்க முறையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள இந்த அரசு எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கிறது. வன்முறைச் செயல்களை கட்டுப்படுத்தவேண்டிய கடமைகளை போலீசார் ஆற்றவேண்டியிருக்கிறது. பொதுமக்கள் துன்பத்திற்குள்ளாகாமல் காவல் துறையினர் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டியிருக்கிறது, மாணவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கவேண்டியிருக்கிறது. பொதுமக்களின் சொத்துக்களுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டிய பொறுப்புடையவர்களாக இருக்கிறார்கள் காவல் துறையினர். இப்படிப்பட்ட இக்கட்டான நிலைமை ஏற்படுகின்ற பொழுது, அத்தோடு ஈடுபட்டிருக்கிற எல்லோரும் அவர்களை அமைதிப்படுத்தி, நல்வழிபடுத்தி, ஜனநாயக முறையில் செயலாற்றும் அளவுக்கு அவர்களுக்கு அறிவுரைகள் வழங்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

எதிர்க்கட்சித் தலைவர்கள் நாங்கள் தூண்டிவிடவில்லை என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலை இருக்குமானால் உள்ளபடியே அது வரவேற்கத் தக்க ஒன்று. எதிர்க்கட்சியினர்கள்

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1973 நவம்பர் 29

சுத்திகரிக்கப்படாத எண்ணெய் விலை திடீரென உயர்ந்ததையடுத்து, மண்ணெண்ணெய் அடிப்படை விற்பனை விலை இந்திய அரசால் உயர்த்தப்பட்டதனாலும், உயர்வேக டீசல் எண்ணெயில் மண்ணெண்ணெயைக் கலந்து கலப்படம் செய்வதைத் தடுக்கும் பொருட்டு, உயர்வேக டீசல் எண்ணெயின் விலைக்குச் சமமாக, மண்ணெண்ணெயின் விலையையும் உயர்த்துவது என்று மத்திய அரசு மேற்கொண்ட முடிவின் விளைவாகவுமே, மண்ணெண்ணெய் சில்லறை விற்பனை விலை தற்போது லிட்டர் ஒன்றுக்கு 20 காசு உயர்ந்துள்ளது. 1973 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்துக்கான ஒதுக்கீடு சிறிதளவு, அதாவது 10 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளதன் விளைவாக, மாநிலத்தின் எப்பகுதியிலும் மண்ணெண்ணெய் வழங்கலில் குறிப்பிடத்தக்க அளவிற்குப் பற்றுக்குறை ஏற்படும் எனத் தோன்றவில்லை. சென்னை மாநகரில், திங்களொன்றுக்கு ரூ. 300-க்கு மேற்படாத வருவாய் உடைய குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அரிசிப் பங்கீட்டு அட்டைகளைக் கொண்டு திங்களொன்றுக்கு 3 லிட்டர்கள் வீதம் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. திங்களொன்றுக்கு ரூ. 300-க்கு மேல் வருமானம் உடைய குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சர்க்கரைப் பங்கீட்டு அட்டைகளின் பேரில் திங்கள் ஒன்றுக்கு 6 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. மண்ணெண்ணெய் உரிமம் வழங்கப்பட்ட சில்லறை விற்பனையாளர்கள் மூலம் விற்கப்படுகிறது. சில்லறை விற்பனைக் கடைகளிலிருந்து மண்ணெண்ணெய் வாங்குகின்ற பொது மக்களின் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு, தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகத்தின் சில்லறை விற்பனைக் கடைகள் ஒவ்வொன்றிலும் மண்ணெண்ணெய் விற்கும் கைவண்டிகளை போதிய எண்ணிக்கையில் நிறுத்தி வைக்குமாறும், உரிமம் பெற்ற சில்லறை விற்பனையாளர்களுக்கு உத்திரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு குறைந்த அளவு மண்ணெண்ணெய் உறுதியாகக் கிடைக்க வகை செய்யப்பட்டிருப்பதைத் தவிர, பொது மக்கள் தெருக்களில் வரும் கைவண்டிக்காரர்களிடமிருந்தும் மண்ணெண்ணெயை வாங்கிக் கொள்ளலாம். இதுபோன்று சென்னை மாநகரில் வழங்கப்படுகின்ற அளவுக்கும் பொதுவாகச் சமமான அள்வில் மற்ற நகரப்பகுதிகளுக்கும், தேவைப்பட்டால், கிராமப்பகுதிகளுக்குச் சற்றுக் குறைவான அளவிலும், ஆனல் குடும்பம் ஒன்றுக்குக் குறைந்தது 2 லிட்டர் கிடைக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், முறைப்படுத்திய மண்ணெண்ணெய்ப் பங்கீட்டு முறையைச் செயற்படுத்துமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மாநிலத்தின் எந்தப் பகுதியிலிருந்தும் எண்ணெண்ணெய் பற்றுக் குறைப் பற்றி புகார் ஏதும் அரசுக்கு வரவில்லை. மண்ணெண்ணெய் கிடைப்பதற்குப் பற்றுக்குறை ஏற்படுவதற்கு மாருக உயர்வேக டீசல் எண்ணெயில் மண்ணெண்ணெயைக் கலந்து கலப்படம் செய்வதில் இனி ஆதாயமிராது என்னும் கருத்தையொட்டி மண்ணெண்ணெய் வழங்கல் நிலைமை இனிச் சீரடைய வேண்டும்.



1973 நவம்பர் 29] [திரு. மன்னை. ப. நாராயணசாமி]

திரு. என். கே. பழனிசாமி : அமைச்சரவர்கள் பதில் சொல்லும் போது கிராமப்புறங்களில் மண்ணெண்ணெய் சரியாகக் கொடுக்கப்படுவதற்கு பெட்ரோல் பங்குகள் மூலம் விசேஷ ஏற்பாடு செய்யலாம் என்ற முறையில் தெரிவித்தார்கள். கிராமப்புறங்களில் பெட்ரோல் பங்குகள் எல்லாம் பெரும்பாலும் இருக்காது. அவர்களால் விநியோகம் செய்வதும் இயலாது. ஆகவே, இந்த மாதிரித் திட்டம் இருந்தால் அதை மாற்றி வேறு ஏற்பாடு எதையாவது செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : பெட்ரோல் பங்கு மூலமாக விநியோகம் செய்வது என்று இப்போது புதிதாகச் சொல்கிருர்கள். பெட்ரோல் பங்குகள் மண்ணெண்ணெய் விநியோகம் செய்ய முடியாது. கூட்டுறவு சொசைட்டிகள், மற்றும் சர்க்காரால் அனுமதிக்கப்பட்ட கடைகள்மூலமாகக் கிராமப்புறங்களில் மண்ணெண்ணெய் விநியோகம் நடைபெறுகிறது. சிறிய சிறிய அளவில் உள்ள பல கிராமங்களுக்கு மத்தியில் ஒரு கூட்டுறவு சொசைட்டி இருந்தால், அங்கிருந்து மக்களுக்கு சுலபமாக கிடைக்கக்கூடிய வகையில் எடுத்துச் செல்வதற்கு, மாவட்ட ஆட்சித் தலைவர்களும், கோட்டாட்சித் தலைவர்களும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற ஒரு முறையை வகுத்திருக்கிரேம்.

THIRU B. VENKATASWAMY : Sir, according to the reply given by the Hon. Minister, arrangements have been made to give two litres of kerosene for each card. But it is not at all sufficient. Secondly, I understand that in the Dharmapuri district the autho-

rities have been instructed to issue it through co-operative societies but the co-operative societies are not interested in selling it to the poor people. So may I request him to make other arrangements to distribute it through some other agency so that the poor people in the district can be benefited.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள், சொல்வதுபோல எந்தக் கூட்டுறவு சொசைட்டியாவது இதற்கான முயற்சியிலே ஈடுபடவில்லை என்று சொன்னால், எந்தெந்த இடங்களில் மண்ணெண்ணெய் கிடைக்க வில்லை என்று தகவல் தெரிவித்தால் அங்கெல்லாம் உடனடியாகக் கிடைப்பதற்குத் துரிதமான நடவடிக்கை எடுக்கப்படும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அமைச்சரவர்கள் பதில் சொல்லும் போது இப்போது மண்ணெண்ணெய் விலை கொஞ்சம் ஏறியிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் எல்லா இடங்களிலும் மண்ணெண்ணெய் கிடைக்கக்கூடிய வகையில் வண்டியிழுப்பவர்கள் மூலமும் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னார்கள். வண்டி இழுப்பவர்கள் தங்களுக்கு தேவைக்கேற்ற அளவுக்கு மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, மண்ணெண்ணெய் விலையைக் குறைப்பதற்கும், வண்டி இழுப்பவர்களுக்குத் தாராளமாகக் கிடைப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, நான் அறிவிக்கும்போது, 300 ரூபாய் மாதச் சம்பளம் வாங்குபவர்களுக்கு இவ்வளவு, அதற்கு மேல் சம்பளம் வாங்குபவர்களுக்கு இவ்வளவு என்ற அடிப்படையில் கார்டுகள்மூலம் வழங்கப் படுவதாகச் சொன்னேன். வண்டிக்காரர்களுக்குக் கொடுக்கப் படுகின்ற மண்ணெண்ணெயும் அந்த முறையிலேதான் விநியோகம் செய்யச் சொல்லியிருக்கிறோம். ஆகவே, இருக்கின்ற நிலைமையை அனுசரித்து எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு விநியோகம் செய்கிறோம். வண்டிக்காரர்களுக்கு என்று தனிச் சலுகைக் காட்ட முடியாது.



## 5. அரசினர் தீர்மானம்

### தனியார் அலுவலுக்குப் பதில் அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்வதுபற்றி

**மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவை 23 (1)-வது விதியைத் தளர்த்தி, பேரவையில் இன்றைக்கு நடைபெறவேண்டிய தனியார் அலுவல் களுக்குப் பதிலாக அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

**திரு. எஸ். வடிவேல்:** சார், ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். இந்தச் சபையிலே விவாதிக்கப்படுவதற்காக விதி 41-ன்கீழ் ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள் கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். பெண்கள் கற்பழிக்கப் பட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி எல்லாம் மிகவும் அவசரமாக விவாதிக்க வேண்டுமென்று தீர்மானத்திலே கேட்டிருந்தேன். அதற்கு அனுமதி அளிக்காமல் இப்படிப் பாரபட்சமாக நடந்து கொள்வது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் அவையிலே சொல்லக்கூடாது; அவையிலே சொல்லக்கூடியதல்ல; என் அறையில் வந்து சொல்ல வேண்டும். உட்காருங்கள்.

**திரு. எஸ். வடிவேல்:** என்னுடைய தீர்மானத்திற்கு அனுமதி அளிக்கவில்லையாதலால், அதை ஆட்சேபித்து நான் வெளிநடப்புச் செய்கிறேன். (திரு. எஸ். வடிவேல் வெளியேறினார்.)

பேரவை முன்னவர் அவர்கள் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1973) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை * அளிக்கிறேன்.

---

* 29—11—1973 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதற்கும் ஒரு மாதத்துக்குத் தோராயமாகத் தேவைப்படும் மண்ணெண்ணெய் அளவு சுமார் 30.000 மெட்ரிக் டன்கள் அல்லது, 38,000 கிலோ லிட்டர்கள் ஆகும். கடந்த மாதம் வரையில், இம்மாநிலத்திற்கு, 29,000 முதல் 30,000 மெட்ரிக் டன்கள் வரை மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திங்கள் முதல் நாளன்று மத்திய அரசின் பெட்ரோலியம் இரசாயனப் பொருட்கள் அமைச்சகத்திடமிருந்து இவ்வரசுக்கு ஒரு கடிதம் வந்தது. "கடந்த இரண்டு மாதகாலத்தில், பரானி, கோயாலி எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைகளைச் சேர்ந்த ரயில் எஞ்சின் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தால், ஓரளவுக்கும், நாட்டின் பல்வேறு பகுதிகளில் ரயில் பாதைகளில் ஏற்பட்ட வெள்ளத்தாலும், உடைப்புகளாலும் ஓரளவுக்கும் பெட்ரோலியம் உற்பத்திப் பொருள்களை ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்திற்கு அனுப்புவது மிகக்கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அதன் விளைவாக, மண்ணெண்ணெயைப் பயன்படுத்துமிடங்களில் போதுமான அளவுக்கு மண்ணெண்ணெய் இருப்புகளைச் சேமித்து வைக்கமுடியவில்லை. எனவே, நவம்பர் திங்களிலிருந்து, எல்லா மாநிலங்களுக்கும் ஒதுக்கித் தரப்படும் மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டளவில் 10 சதவீதம் வெட்டுச் செய்வதை தவிர்க்க முடியாததாகிவிடும்." என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, 1973-ஆம் ஆண்டு நவம்பர் திங்களுக்கான ஒதுக்கீடு 27,716 மெட்ரிக் டன்னாகக் குறைக்கப்பட்டது. இவ்வாறு இம்மாதத்தில் மண்ணெண்ணெய் வழங்கல் அளவு சற்றுக் குறைந்துள்ளது.

அண்மைக்காலம் வரையில், சென்னை துறைமுகச் சேமிப்பு கிடங்கில் மண்ணெண்ணெய் அடிப்படை விற்பனை விலை கிலோ லிட்டருக்கு ரூ. 570.95 ஆக இருந்தது. விற்பனை வரியையும், மொத்த விற்பனையாளர்களுக்கும் சில்லறை விற்பனையாளர்களுக்கும் சட்டப்படி அனுமதிக்கப்பட்டுள்ள சிறிதளவு ஆதாயத்தையும் கணக்கிற் கொண்டு, சென்னை மாநகரில் மண்ணெண்ணெய் விற்பனை விலை லிட்டர் ஒன்றுக்கு 65 காசு என வரையறுக்கப்பட்டது. மாவட்டங்களில், போக்குவரத்துச் செலவு, மற்ற இடைநிகழ்ச் செலவுகளையொட்டி, சில்லறை விற்பனை விலைகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் வரையறுக்கப்பட்டன. சென்னைத் துறை





முகத்தில் மண்ணெண்ணெய் அடிப்படை விற்பனை விலையை கிலோ லிட்டருக்கு ரூ. 825.75 ஆக 2—11—1973 அன்று இந்திய அரசு உயர்த்தியது. மத்தியக் கிழக்கு நாடுகளில் போர் மூண்டதைத் தொடர்ந்து, சுத்திகரிக்கப்படாத எண்ணெய் விலை (Crude oil) உயர்ந்துள்ளதாலும், உயர்வேக டீசல் எண்ணெயில் மண்ணெண்ணெய் கலப்படம் செய்யப்படுவதைத் தடுக்கும் பொருட்டு உயர்வேக டீசல் எண்ணெய் விலைக்குச் சமமாக மண்ணெண்ணெயின் விலையை வரையறுப்பது என்று மத்திய அரசு முடிவு செய்துள்ளதாலும் இவ்வாறு இதன் விலை உயர்ந்தது என்று காரணம் கூறப்பட்டது. அடிப்படை விற்பனை விலையில் ஏற்பட்ட விலை உயர்வு அளவைக் கருத்தில் கொண்டு, உணவுப் பொருள் வழங்கு துறை ஆணையாளர், சென்னையில் மண்ணெண்ணெய் அடிப்படை விற்பனை விலையை லிட்டர் 1-க்கு 95 காசு என தற்காலிகமாக வரையறுத்தார். 9—11—1973-ல், சென்னைத் துறைமுகத்தில் மண்ணெண்ணெய் அடிப்படை விற்பனை விலையைக் குறைத்து அதாவது கிலோ லிட்டருக்கு ரூ. 727.11 எனக் குறைத்து இந்திய அரசு அறிவிப்புச் செய்தது. கிலோ லிட்டர் ஒன்றுக்கு ரூ10 விதம் மேல்வரி விதித்து வசூலிக்கவும் இந்திய ஆயில் கார்ப்பரேஷனுக்கு இந்திய அரசு அதிகாரமளித்தது. அவ்வாறு மேல்வரி விதிப்பதினால், மண்ணெண்ணெயின் ஆலைவாய் விலை கிலோ லிட்டருக்கு ரூ. 737 ஆகும். தற்போதுள்ள விற்பனை வரி 5.5 சதவீதம், மேல்வரி 5 சதவீதம் ஆகியவற்றையும் மொத்த விற்பனையாளர்களுக்கும், சில்லறை விற்பனையாளர்களுக்கும் மத்திய அரசாலும், மாநில அரசாலும் ஏற்கெனவே வழங்கப்பட்டு, வரையறுக்கப்பட்டுள்ளன. சிறிதளவு ஆதாயத்தையும் கூட்டினால், மண்ணெண்ணெய் சில்லறை விற்பனை விலை லிட்டர் ஒன்றுக்கு சுமார் 83 காசு ஆகிறது. மண்ணெண்ணெய் விலையை 10 காசு, 5 காசு ஆகியவற்றின் மடங்குகளில் வரையறுப்பதே வழக்கத்தில் உள்ள நடைமுறையாதலால், சென்னை நகரில் மண்ணெண்ணெய் சில்லறை விற்பனை விலை 85 காசு என 5 காசு மடங்குக்குச் சுத்தமாக வரையறுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு லிட்டர் ஒன்றுக்குக் கூடுதலாகப் பெறப்படும் சிறிதளவு ஆதாயத்தொகையான 2 காசும் கூட, மண்ணெண்ணெய் விற்பனை வரியை 5.5 சதவீதத்திலிருந்து 8.5 சதவீதமாக உயர்த்தி, 5 சதவீத மேல்வரியும் விதித்து, அது விற்பனை வரியில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (2-ம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (2-ம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: நான் இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(இ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு மதுவிலக்கு (செயல்திறனை நிறுத்தி வைத்தல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/73)—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே, நீங்கள் நேற்றே பேசியிருக்கிறீர்கள். ஆகவே இன்று ஐந்து நிமிடங்களுக்குள் முடித்துக்கொள்ளவும்.

Dr. H. V. HANDE: Sir, I will speak only relevant things, and I would not like to take much time of the House.

Yesterday I was saying that this Government which had suspended prohibition had been forced to bring again the partial revival of prohibition. If only they had listened to our suggestions and advice, this could have been avoided. In the Statement of Objects and Reasons appended to the Bill, it is stated—

'The Government have decided to review the Tamil Nadu Prohibition Act, 1937, in respect of toddy, so as to prohibit the tapping, sale, transport, possession, etc. of toddy with effect on



and from the 1st September 1973. To give effect to the above decision the Tamil Nadu Prohibition (Suspension of Operation) Act, 1971, has been amended suitably. . .'

Why they are reviving partially prohibition, they have not mentioned. What is the exact reason that has prompted them to revive prohibition partially and that is totally absent in the Statement of Objects and Reasons. That is very important. The Hon. Chief Minister just before the House adjourned yesterday put one question about our leader and his opinion on it. Before I answer his question, I want to put another question to him. What prompted him to revise his original stand? That is the question which they have to answer. The leader of our Party has been saying ever since he created the Party, that prohibition is absolutely necessary and that he stands for prohibiion. Even when he met revered late Rajaji, the foremost question he put was: 'Are you for prohibition'. Our leader said, 'I am very much for prohibition'. So, I submit that the leader of our Party has been vociferously, clearly, categorically and unambiguously supporting the cause of prohibition. Now the question of the Hon. Chief Minister is, why did not he come forward with such a statemtnt while he was in the D.M.K. I am bound to answer it. As long as he was in the Party he had tried his best to convince them that prohibition should be there and the drinking evil should, as far as possible, be completely curbed, as it was the greatest threat to humanity. My submission is that in any political party naturally there would be difference of opinion among its members and if a particular member felt that he could not convince them to his point of view, he went out of the party and said what he wanted to say. That is the case in regard to other parties like the All India Congress Party also.

Even when I was in the Swatantra Party, I had taken a very strong stand that prohibition should not be scrapped. I quoted Anna's speeches, Thiru Vinayakam's questions and the answer given by late Anna and also attacked the policy of the D.M.K. in that regard. I did so because I felt that was the right cause and it was appreciated by my leader. The Hon. Chief Minister is now trying to eat his own humble pie. It is the Chief Minister who

should explain why he has revised his original stand and how the situation has changed during the last $1\frac{1}{2}$ years. Whether the political situation has changed? Whether the economic situation has changed and whether the budgetary situation has completely changed? What is it that made them to come forward to revise their original stand?

In fact, the situation has not changed very much and that is my contention. In fact when our revered leader, late Rajaji was alive, he called on the Hon. Chief Minister on a rainy day and requested him not to suspend prohibition. Even inside the D.M.K. and also outside there was opposition for scrapping prohibition. Even Sarvodhaya leaders and other leaders pleaded that prohibition should not be scrapped. If only the Hon. Chief Minister had heeded their advice and our advice, the present situation would not have arisen.

Sir, what I have been saying for the past so many years, has come true. Even the Hon. Chief Minister has stated many times, 'what you stated that day has come true'. I may be an ordinary man but whatever I say now would come true afterwards. I say it impartially without any political ideology. If only the Hon. Chief Minister had heeded my advice, he would not have brought the Government to this tragic situation. The Hon. Minister for Law and the Hon. Chief Minister vociferously argued against me when I spoke against the suspension of prohibition. Now they have to argue that prohibition has to be partially revived.

Now before I wind up my speech, I would like the Hon. Chief Minister or the Hon. Minister concerned to lay on the table of the House—there was a lot of talk outside—information regarding (1) the permits granted by him to various persons for foreign and indigenous liquor and (2) licences for manufacuring liquor. These details are necessary because there has been a lot of omissions and commissions with regard to licences . . .

(Mr. Speaker sounded the gong)



With these words, I support this Bill but, as Mr. Winston Churchill said, 'I support it with a kick'.

Thank you.

[முற்பகல் 11.30]

**திரு. என். கே. பழனிசாமி:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா காம்ப்ரஹென்சிவாக இல்லை. ஒன்று, இன்றைய தினம் கள்ளுக்கடையை நிறுத்துவது, அடுத்த வருஷம் சாராயக் கடையை நிறுத்துவது. அதற்கு ஒரு சட்டம். மற்ற ஆல்கஹால் கடையை நிறுத்துவது, அதற்கு ஒரு சட்டம். ஆக, காம்ப்ரஹென்சிவாக இந்த மசோதா கொண்டுவரப்படவில்லை.

அது மட்டுமல்லாமல், இந்த ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ், அதில் இந்த மசோதா கொண்டுவருவதனுடைய நோக்கம் கள்ளுக் கடையை நிறுத்துவது என்று இருக்கிறது. இதற்கு என்ன காரணம்? ரீசன்சிலே அதைச் சொல்லவில்லை. இந்த மசோதாவிற்கும் ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ் இருக்கிறது. நோக்கமும் அதற்கான காரணமும் சொல்லப்பட வேண்டும். இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜக்ட்சில் அதற்கான காரணம் ஒன்றும் இல்லை. அரசியல் காரணமா? இந்த கள்ளுக் கடையை நிறுத்தவேண்டிய அவசியம் என்ன? என்ன காரணத்திற்காக மசோதா கொண்டு வந்திருக்கிறார்கள் என்று விளக்கமாக இருக்கவேண்டும்.

அது மட்டுமல்ல, இந்தக் கள்ளுக் கடை அல்லது சாராயக் கடை மற்றும் பிராந்தி கடை—இவற்றில் கள்ளை விட சாராயம் மற்ற ஆல்கஹால் இவைகள் மனிதர்களுடைய உடம்புக்குக் கெடுதலானது. கள் அவ்வளவு கெடுதல் அல்ல. அதிகக் கெடுதலுள்ள சாராயம் மற்ற லாகிரி வஸ்துக்களை விட்டுவிட்டு 'லெஸ் ஹார்ம்புல்' என்ற இந்த டாடிக்கு மட்டும் இந்த மசோதா கொண்டு வர வேண்டிய அவசியம் என்ன?

கிட்டத்தட்ட 32 வருஷ காலம் மது விலக்குச் சட்டம் ஏற்பட்டு, கடுமையான சட்டங்களை எல்லாம் இயற்றி, போலீசும் மற்றவர்களும் இதைச் சரியாக நிர்வாகம் செய்தபோதிலும், கணிசமான

பகுதியினர் குடித்துக்கொண்டுதான் இருந்தார்கள். ஒருசிலர் வேண்டுமானால் அப்படியில்லை. ஆனால், இந்த இரண்டு வருஷக் காலத்தில் பெரும்பகுதியினர், குழந்தைகள் உட்பட பெரும் பகுதியினர் குடித்துப் பழகிவிட்டார்கள். 30 வருஷம் மது விலக்குச் சட்டத்தை அமல் செய்யமுடியாமல்தான் மறுபடியும் குடித்துப் பழக்கி, இப்பொழுது மறுபடியும் மதுவிலக்கைக் கொண்டுவந்தால் உண்மையாக இந்தச் சட்டத்தை நிறைவேற்றக்கூடிய முறையிலே இருக்குமா? மதுவிலக்கை அமல் செய்ய முடியுமா?

இந்த மதுவிலக்கை நிறுத்தக்கூடிய சமயத்தில் நிறுத்துவதற்கான காரணங்கள் அந்த மசோதாவிலே சொல்லப்பட்டது. இந்தச் சபையிலே சொல்லப்பட்டது, ஏழை எளியவர்கள் பாதிக்கப்படுகிறார்கள், அவர்களுடைய உடல்நலம் குறைகிறது, பிரஞ்ச் பாலிஷ் போன்றவைகளைக் குடிக்கிறார்கள், ஏழைகள்தான் பாதிக்கப்படுகிறார்கள், பணக்காரர்கள் பாதிக்கப்படவில்லை என்று. ஆனால் இப்பொழுது என்ன காரணங்களுக்காக மறுபடியும் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது? மறுபடியும் கொண்டு வரப்பட்டால் இந்த ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படமாட்டார்களா? இல்லிசிட் அரக் சாப்பிடமாட்டார்களா? அவர்களுடைய உடல்நலம் கெடாதா? அதற்கு மாற்றுத் திட்டங்கள் ஏதாவது செய்யப்பட்டிருக்கிறதா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மதுவிலக்கு அமலில் இருக்கிற காலத்தில், வேலையில்லாத் திண்டாட்டம் காரணமாக, ஏராளமான ஜனங்கள் கள், சாராயம் காய்ச்சினார்கள். அவர்களுக்கு ஜெயிலில் இடம் இல்லை; கோர்ட்டிலும் இடம் இல்லை. இப்படி இருந்தும்கூட அன்றையதினம் மது விலக்கு அமலில் இருந்தது. அப்பொழுது அனுபவம் இல்லாததால் அதிகம் பேர் குடிக்கவில்லை. இப்பொழுது அதிகம் பேர் குடிக்கிறார்கள். இப்பொழுது கோர்ட், போலீஸ் எல்லாம் என்ன ஆவது?

இன்றைக்கு, சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை எடுத்துக்கொண்டால், டாக்டருடைய எவிடன்ஸ் தேவையில்லை என்று சொல்லியிருக்கிறது. கள்ளுக் கடையை, சாராயக் கடையை நிறுத்துகிறீர்கள் என்றால், டாக்டரிடம் கொண்டு போய் ரத்தத்தை எடுத்து



டெஸ்டுக்கு அனுப்புகிறோம். இப்பொழுது ஆல்கஹால் இல்லாத மருந்தே கிடையாது, இந்தியா மருந்தாகட்டும், இங்கிலிஷ் மருந்தாகட்டும். டாக்டருடைய பரிசோதனையில் அது ஆல்கஹாலா அல்லது சாராயமா அல்லது பிராந்தியா என்று எப்படிக் கண்டு பிடிப்பது? எல்லாவற்றிலும் ஆல்கஹால் மட்டும்தான் இருக்கும். எப்படி எவிடன்ஸ் கிடைக்கும்? எப்படி நிரூபிக்கப் போகிறீர்கள்? ஆகவே, சுப்ரீம் கோர்ட்டினுடைய தீர்ப்புப்படி, ரத்தப் பரிசோதனை செய்யக்கூடிய டாக்டர் ஆல்கஹால் இருக்கிறது என்று சொல்வது, எவிடன்சாக ஆகாது என்று சொல்லியிருப்பது, பணக்காரன் யாரும் தனக்குக் கெடுதல் வராமல் பார்த்துக்கொள்ள முடியும்? ஏழை எளியமக்கள் மறுபடியும் கஷ்டப்பட வேண்டிவரும்.

அது மட்டுமல்ல, தமிழ்நாட்டிலே மட்டும் குடிக்க வேண்டாமென்று சொல்கிறார்கள். குஜராத்திலே குடிக்கக் கூடாது. அரசியல் சட்டம் 14-வது பிரிவுப்படி சட்டத்தின் முன்னால் எல்லோரும் சமம். இங்கிருக்கக்கூடிய ஜனங்கள் குடிக்கக் கூடாது, பாண்டிச்சேரி போய் குடிக்கலாம் அல்லது பெங்களூருக்குப் போய் குடிக்கலாம், அப்பொழுது குற்றம் இல்லை. இங்கே இருக்கிறவன் குடித்தால் குற்றம். அது டெரிட்டோரியல் டிவிஷன்தான். எல்லாப் பகுதியும் இந்தியாவைச் சேர்ந்தவை. இது மாதிரி வைத்திருப்பது, 14-வது ஆர்ட்டிக்கிள் முன்னால் எல்லோரும் சமம் என்பதற்கு மாறாக இருக்கிறது.

அது மட்டுமல்ல, ஒரு குடும்பத்திலே 5, 6 பேர்களில் ஒருவன் குடிக்கிறான். அவன் குடித்தால், மாரல் அண்ட் ரிலிஜியஸாக அவனுக்கு எதிர்ப்பு. இன்னொரு குடும்பத்திலே, 2 பாட்டிலை வாங்கிக் கொண்டு குழந்தை குட்டிகள் எல்லாம் குடிக்கின்றார்கள். அவர்களுக்கு அது சரி. இந்த மாதிரி இரண்டு பகுதியில் இரண்டு ஒப்பினியன் இருக்கிறது. இவர்களுடைய அபிப்பிராயம் குடிக்கலாம் என்பது. குடிப்பது தப்பு, மாரலாக, ரிலிஜியஸாக என்பது மற்றொரு பிரிவினரது அபிப்பிராயம்.

இன்றைக்கு பீடி பிடிக்கக்கூடாது என்று சட்டம் போடுங்கள்: பீடி பிடிப்பது உடம்புக்குக் கெடுதி. ஆகவே, பீடி பிடிக்கக் கூடாது என்று சட்டம் போடலாம். புகையிலை போட்டால் கான்சர் வரும். அதுவும் உடம்புக்குக் கெடுதி. ஆகவே, அதற்கு

ஒரு சட்டம். இது எவ்வளவு வேடிக்கையாக இருக்கிறது? ஆகவே, கள்ளுக் கடையை, சாராயக் கடையை தூரத்தில் வையுங்கள். வெளியே வந்து குடிக்கிறார்கள், அதிகமாகக் குடிக்கிறார்கள் என்று தெரிந்தால் கடுமையான தண்டனை வையுங்கள். இந்த மாதிரிச் செய்யவேண்டுமேதவிர, இப்படிக் கொண்டு வரக் கூடாது. ரஷியாவில் குடிக்கிறார்கள். ஆனால், அதிகமாகக் குடித்தால், தண்டனை கொடுக்கிறார்கள். வெளியே வந்து ஒரு விதமாக நடந்துகொண்டால், சமுதாயத்திலே கேவலமாக நினைக்கிறார்கள். அந்த முறையிலே இதைக் கொண்டு வந்து சட்டம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் 5, 6 பில்கள் இருக்கின்றன. எவ்வளவு நேரம் ஒவ்வொரு பில்லுக்கும் என்று காலம் வகுத்துவிட்டால் சரியாக இருக்கும்.

THIRU N. K. PALANISAMY : This is a policy matter and so please allow me some more time. இன்றைக்குச் சட்டம்போட்டு, போலீஸ் எந்த அளவுக்கு நிறைவேற்றியது என்று நமக்குத் தெரியும். போலீஸ் மாமூல் வாங்கிக்கொண்டு, மரங்களில் கட்டச் சொல்வது நமக்குத் தெரியும். கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்களிடம் பணம் வாங்குவது நமக்குத் தெரியும். இன்றைக்கு கள்ளுக் கடை, நாளை சாராயக் கடை, நாளைய மறு நாள் பிராந்திக் கடை என்று மூடினால், எல்லோரும் வீட்டிலே காய்ச்சுவார்கள். அதற்கு சௌகரியம் கண்டுபிடித்து விடுவார்கள்.

சென்ட்ரல் கவர்ன்மென்டிலிருந்து வந்த புரஹிபிஷன் கமிஷன் இதைப் பரிசிலனை செய்து ஒவ்வொரு இடத்திற்கும் சென்று போலீஸ் எப்படி நடக்கிறது என்று அறிக்கை வெளியிட்டார்கள். அந்த அறிக்கையிலே சரியாக நடத்தமுடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். திரும்பவும் போலீசிடம்தான் கொடுக்கப் போகிறோம். இதைச் சரியான முறையிலே நிறைவேற்ற முடியவில்லை.

கிட்டத்தட்ட ரூ. 36 கோடி வருமானம் இதனால். அது போக, இன்னும் நிர்வாகச் செலவு, மதுவிலக்கை அமல் செய்வதற்கு 10, 15 கோடி ரூபாய். ஆக, 50 கோடி ரூபாய். 1967-லே ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட்டோம். கோயம்புத்தூரிலும்





சென்னையிலும். அன்றைக்கு ரூ. 3¼ கோடி, ரூ. 4 கோடி செலவாயிற்று. அதனாலே பல அபிவிருத்தி வேலைகள் நிறுத்தப்பட்டன. அது மட்டுமல்லாமல், புதிதாக வேலைகள் உண்டாக்கப் படவில்லை. ஏற்கனவே வேலை செய்தவர்கள் பலபேர் ரிவர்ஷன் செய்யப்பட்டார்கள். அப்படி என்று சொன்னால், இப்பொழுது கிட்டத்தட்ட ரூ. 55, ரூ. 66 கோடியை ஈடுகட்ட ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா அரசு? அப்படி இல்லை என்றால், போலீஸ் டிபார்ட்மென்டை கலைத்துவிட வேண்டும், எஜுகேஷன் டிபார்ட்மென்டில், பாதிப் பள்ளிகளை, கல்லூரிகளை மூடவேண்டுமென்று சொன்னால், இந்த நஷ்டத்தை எப்படி ஈடுகட்டப் போகிறீர்கள்? மத்திய சர்க்கார் இந்த நஷ்டத்தை ஈடு செய்ய மாட்டேன் என்று சொல்லிவிட்டது. ஆகவே சர்க்கார் இதை எப்படி ஈடுசெய்யப் போகிறார்கள்? வேண்டுமென்றால் பிரச்சாரத்திற்காகச் சொல்லலாம். இன்றைக்கு இந்தச் சர்க்கார் இருக்கலாம், நாளைக்கு வேறு சர்க்கார் இருக்கலாம், அவர்களும் நாளைக்கு இந்தத் திட்டத்தை நடத்தவேண்டுமா இல்லையா? ஆகவே எப்படி இதை ஈடுசெய்யப் போகிறார்கள் என்பதை அவர்கள் சொல்ல வேண்டும். ஆகவே . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றைக்கு 6 பில்கள் இருக்கின்றன.

**திரு. என். கே. பழனிசாமி :** முடித்துவிடுகிறேன். நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். செங்கற்பட்டு ஜில்லாவிலே சென்னை சிடியிலே ஒரு வருஷ காலம் பூராவையும் எடுத்துவிட்டு மற்றப் பகுதிகளிலே எப்பொழுதும்போல் நடக்கலாம் என்று கொண்டுவந்து அதிலே மதுவிலக்கு எவ்வாறு அமல்நடத்தப்படுகிறது என்பதைப் பார்த்துப் பிறகு இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒன்றே முக்கால் மணி நேரம் தான் இருக்கிறது. இன்னும் 6 பில்கள் இருக்கின்றன. எவ்வளவு எவ்வளவு நேரம் ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்கொள்ளலாம் என்பதை முதலிலே முடிவுசெய்துகொண்டு பேசலாம்.

*திருமதி த. ந. அனந்தநாயகி :* நான்கு பில்கள்தானே இருக்கின்றன. ஆகவே எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளலாம், பின்னாலே வருகிற பில்களிலே எல்லாம் ஒரு ஒரு வார்த்தைதான் பேசப்போகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் 6 பில்கள் இருக்கின்றன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அடுத்து வருகின்ற மசோதாக்களிலே அதிகமாக விவாதம் இருக்காது என்று கருதுகிறேன். ஆகவே 6 மசோதாக்களையும் எடுத்துக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார், இந்த பில்களையெல்லாம் இப்படி ரஷ் த்ரூ பண்ணக்கூடாது. வேண்டாத விஷயம் எல்லாம் நடைபெறுகிறது. ஆனால் இதற்குப் போதுமான நேரம் ஒதுக்கவில்லையென்றால் கருத்துக்களைச் சொல்லமுடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதையெல்லாம் அலுவல் ஆய்வுக் குழுவிலே எடுத்துக்காட்டி எவ்வளவு எவ்வளவு நேரம் என்பதை முடிவுசெய்யுங்கள்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற மதுவிலக்கு சம்பந்தமான மசோதாவை முழு மனதோடு என்னுடைய கட்சியின் சார்பாகவும் என் சார்பாகவும் ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய தமிழ் நாட்டிலே இருந்துவந்த மதுவிலக்கை இடைக்காலத்திலே வருவாயை அனுசரித்து நிதிநிலையைச் சரிக்கட்டுவதற்காக ரத்துசெய்த நேரத்திலே நாங்கள் ஆளுங்கட்சிக்குத் தோழமைக் கட்சியினராக இருந்தாலும்கூட எங்களுடைய மதக் கோட்பாட்டின் அடிப்படையிலே மட்டுமல்லாமல் மனிதாபிமானத்தின் அடிப்படையிலேயும் அதை எதிர்த்து வந்தோம், அடிக்கடி வன்மையாக எதிர்த்துவந்தோம். தமிழக மக்கள் அனைவரும் அதற்கு சாட்சியாக இருக்கிறார்கள். முஸ்லீம் லீக் அதற்கு எதிர்ப்பாக இருந்தது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட பல கூட்டங்களிலே சொல்லிக்காட்டியிருக்கிறார்கள். மதுவிலக்கை ஏற்றுக்கொண்டு இப்பொழுது இந்த அரசு இந்த மசோதாவைக் கொண்டுவந்திருப்பது எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தருகிறது. அதே நேரத்தில் மதுவிலக்கை ரத்துசெய்ததால் நாங்கள் மக்களுக்குத் தவறு இழைத்துவிட்டோம் என்று கருதி, இழைத்த தவற்றை உணர்ந்து மீண்டும் அந்த நிலையிலிருந்து மாறி மதுவிலக்கைக் கொண்டுவந்திருப்பது மக்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்காக என்பதை உணர்ந்து அதைப் பாராட்டுவதுதான் நல்லதாகும். அதைப் பாராட்டுவதுதான் ஜனநாயகப் பாரம்பரியத்திற்கு உரியதாகும்.



நம்முடைய சி.பி.ஐ. கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. என். கே. பழனிசாமி அவர்கள் மதுவிலக்கு ரத்தை ஆதரித்துப் பேசினார்கள். ஏழைகளுக்காகப் பாடுபடுகிற கட்சியைச் சேர்ந்த அவர்கள் மதுவிலக்கு ரத்து செய்யப்படுவதால் அதிகமாகப் பாதிக்கப்படுகிறவர்கள் ஏழைகள்தான் என்பதை எப்படி உணராமல் போனார்கள் என்பது புரியவில்லை. இதனால் நிதிநிலைமையில் 35 கோடி வருமே என்ற முறையிலே சொன்னார்கள். 35 கோடியல்ல, கிட்டத்தட்ட 85 கோடி ரூபாய் மிகமிகச் சாதாரணமானவர்கள், ஏழைகள், பாட்டாளிகள், உழைப்பாளிகள் ஆகியவர்கள்தான் கொடுத்துவந்தார்கள். இடையிலே வந்த ஏலம் எடுத்தவர்கள், இடையிலே உள்ளவர்கள் அதனால் பலனை அனுபவித்தார்கள், ஆக மொத்தம் 80 கோடியிலிருந்து 100 கோடி ரூபாய் வரையிலே இருக்கும். நான் இரண்டு ஆண்டுகளாகப் பார்த்தேன். முன்பு எல்லாம் வசதியாக இருந்த ஏழை மக்கள் இரண்டு ஆண்டுக் காலத்திலே எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டுவிட்டார்கள், அவர்கள் உண்மையிலேயே தலைதூக்கவேண்டுமென்றால் அவர்கள் ஓரளவுக்கு வயிறார கஞ்சிகுடிக்க வேண்டுமென்றால் கண்டிப்பாக இந்த மதுவிலக்கைப் பின்பற்றவேண்டும். இதிலே அரைகுறையான மதுவிலக்குதான் கொண்டுவரப்பட்டிருக்கிறது, சாராயமும், இன்னும் உயர்வகைப்பானங்களும் இருக்கின்றன, அவற்றையும் உடனடியாக நிறுத்துவதற்குத் தக்க நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும்.

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1973 நவம்பர் 29

(திரு. ஜே. ஜேம்ஸ் தலைமை)

அது மட்டுமல்ல, இந்தத் தொழிலிலே ஈடுபட்டவர்களைப் பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். கள் இறக்கக்கூடிய தொழிலிலே ஈடுபடக்கூடியவர்கள் கடந்த இருபது ஆண்டுக்காலமாக அந்தத் தொழிலை விட்டு வேறு தொழிலுக்குப் போய் மீண்டும் கள் இறக்கும் தொழிலைச் செய்யலாம் என்ற மகிழ்ச்சியுடன் இந்தத் தொழிலுக்கு வந்தால் இந்தத் தொழிலுக்கு ஆபத்து வராது என்ற நம்பிக்கையிலே வேறு தொழிலையும் விட்டுவிட்டு இந்தத் தொழிலை நம்பிக்கொண்டிருக்கின்றவர்களுக்கு அரசாங்கம் இரக்கம் காட்டி அவர்களுடைய வறுமையைப் போக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளச் சாராயம் காய்ச்சுதல், ரகசியமாகக் கள் இறக்குதல் போன்ற குற்றங்களைச் செய்கிறவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கவேண்டும். திரு. பழனிசாமி அவர்கள் காவலர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மதுவிலக்கை அமல் செய்வதற்கு யார் ஆதரவாக இல்லாமல் இருந்தாலும் அவர்களைக் கண்டுபிடித்து தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்வதன்மூலம் அந்தத் திட்டத்தை நல்லமுறையிலே அமல்செய்யவேண்டும். இந்த மசோதா அரைகுறையாக வருகிறது, ஆகவே முழுமையாக ஒரு மசோதாவாக இதை ஆக்கவேண்டுமென்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

* திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): தலைமை தாங்குகிற தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் மதுவிலக்குச் சட்டத்திலே திருத்தத்தைக்கொண்டுவந்து அதன் காரணமாக செப்டம்பர் முதல் கள்ளுக்கடைகளை மூடியதைச் சட்டப்பூர்வமாக, ஆக்குவதை ஏற்றுக்கொள்கின்ற இந்த விவாதத்தை நான் வரவேற்று இந்த மசோதாவின் சார்பிலே மீண்டும் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுப்பதன்மூலம் விரைவிலே மீதியிருக்கக்கூடிய சாராயக் கடைகள், மற்றைய மதுபானக் கடைகள் எல்லாவற்றையும் மூடுவதற்குச் சட்டத்தைக்கொண்டு வாருங்கள் உங்களைத் தமிழகம் என்றைக்குமே போற்றும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதற்காக நீண்ட நாள் காத்திருக்கவேண்டிய அவசியம்



1973 நவம்பர் 29] [திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)

இருக்கிறதா? ஏப்ரல் முதல் தேதியிலிருந்து அல்லது நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களுடைய பிறந்த நாளிலிருந்து மீதியிருக்கக்கூடிய கடைகள் அத்தனையையும் மூடிவிடவேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை.

கள்ளுக்கடைகளை மூடியதுகுறித்து கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அனுபவம் முதிர்ந்த திரு. பழனிசாமி அவர்கள் பேசினார்கள். ஏன் கள்ளுக்கடைகளை மூடினார்கள் என்று கேட்டார்கள். கள்ளை ஏழைகள், தொழிலாளர்கள், விவசாயிகள், ஆலைகளிலே வேலைசெய்கிறவர்கள் தினந்தினம் 2 ரூபாய் 3 ரூபாய் சம்பாதிக்கக்கூடிய ஏழைகள் அவரவர்களுடைய பகுதிகளிலே உள்ள கடைகளிலே 1 ரூபாய், 12 அணா, 8 அணா என்று செலவழித்து வாங்கிச் சாப்பிடுவதன்மூலமாகத் தங்களுடைய குடும்பங்களைக் கெடுத்துக் கொள்வார்களே என்ற காரணத்தினாலேதான் அந்தக் கடைகளை மூடினார்கள் நம்முடைய கலைஞர் அவர்கள். ஏழைகளால் 250 ரூபாய் கொடுத்து உயர்தரமான பானங்களை வாங்கிக்குடிக்க முடியாது, அவர்களால் கள்ளைத்தான் வாங்கிக்குடிக்கமுடியும் என்ற அளவிலேதான் அவர்களுக்குப் பாதுகாப்புக்கொடுக்கக்கூடிய முறையிலே அந்தக் கடைகளை மூடினார்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, கள்ளுக்கடைகளை மூடியது ஏழைகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்கத்தான் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இந்த மன்றத்தில் சொன்னார்கள். கள்ளுக்கடைகளை மூடிவிட்டு சாராயக்கடைகளை மூடாவிட்டால் குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டவர்கள் விலைமதிப்புள்ள வெளிநாட்டு மதுபானங்களை நாடிப் போகமாட்டார்கள் என்று அவர்கள் கருதுகிறார்களா?

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): அதற்கு 100 ரூபாய், 200 ரூபாய் வேண்டுமென்றால் ஏழைகள் எப்படி அந்தப் பெரிய மதுக்கடைகளுக்குப் போக முடியும்? சாப்பாட்டிற்கே அவர்களுக்குப் பிரச்னையாக இருப்பதால் எப்படிப் போக முடியும்? அதற்காகத்தான் இந்தத் திட்டங்களை கலைஞர் அவர்கள் கொண்டு வந்தார்கள். விரைவில் சாராயக்கடைகளையும் மூடிவிட வேண்டுமென்றுதான் சொல்கிறோம். அதையும் மூட வேண்டுமென்றுதான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)]

இன்றொன்று நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் பேசும்பொழுது எதற்காகக் கள்ளுக்கடைகளைமட்டும் மூட வேண்டுமென்று கேட்டார்கள். டாக்டர் ஹாண்டே சொன்னார்கள். கள்ளுக்கடைகளை மூடியது எங்கள் தலைவர் சொன்னதால்தானே என்று பெருமைப்பட்டுக் கொண்டார்கள். அவ்வாறு பெருமைப் பட்டுக்கொள்ள அவருக்கு உரிமை இருக்கிறது. அவர்களுடைய கட்சித் தலைவரை அவர்களே புகழாவிட்டால் வேறு யார் புகழ வார்கள்? அதனால் அவர் புகழ்ந்ததைப்பற்றிச் சந்தோஷம்தான்.

அதற்கு வேறொரு காரணம் இருக்கிறது. சென்னையிலே மூல நாகப்பா என்று ஒரு ஆந்திராக்காரன் இருந்தான். அவன் புற நகர்ப் பகுதியிலே கடைகளை எடுத்தான். ஆனால் அதில் அவன் கள்ளை எடுக்கவில்லை. கள் குடித்தால் விஞ்ஞான ரீதிப்படி மெலிந்தவர்களுக்கும், பலஹீனமானவர்களுக்கும் அது டானிக் போன்றது என்று சொல்கிறார்கள். அதில் உண்மையும் இருக் கிறது. ஆனால், அவன் கள்ளோடு குளோரைடை மிக்ஸ் பண்ணினான். குன்னூரிலே பேக்டரி வைத்து பம்பாயிலிருந்து குளோரைடைக் கொண்டு வந்து இரண்டு மூன்று பங்கு என்று மிக்ஸ் செய்து விற்றான். அதைக் கடையிலே விற்றிருக்கிறார்கள். இப்படிக் கலப்பதால் உடனே கிக் அதிகமாக இருக்கும். ஆனால் அடிக்கடி இந்தக் கள்ளைத் தொடர்ந்து அருந்துபவர்கள் கண்களை இழந்துவிடுவார்கள். உண்மையான கள்ளைச் சாப்பிட்டால் ஓரளவு நல்லதாக இருக்கும். ஆனால் கள்ளுக்கடைகளை எடுத்து அதோடு குளோரைட் என்ற விஷத்தைக் கலந்துவிடுவதால் மக்கள் கெட்டு விடுகிறார்கள். ஆகவேதான் கள்ளுக்கடைகளை மூட வேண்டுமென்று மூடினார்களேதவிர, இதற்காக எம்.ஜி.ஆருடைய சிபாரிசோ இன்னொருவருடைய சிபார்சோ வேண்டியதில்லை.

**திரு. எம். ஆர். கண்ணன்:** தலைவரவர்களே, நல்ல கள்ளாக இருந்தால் எடுத்திருக்க மாட்டார்களா? இப்படிப் பேசுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது? ஏதோ ஆந்திராக்காரர் பண்ணிய தால்தான் அது எடுக்கப்பட்டதா?



**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** மூல நாகப்பா என்பவர் டெல்லியிலே சென்று மறைந்துவிட்டார். செந்தாமரை டி.ஐ.ஜி. அவர்கள் அவரைக் கைது செய்ய முயன்றும் முடியவில்லை. அவர் எங்கேயோ சென்று ஒளிந்துகொண்டிருக்கிறார். ஹைகோர்ட் டிலே ஸ்டே வாங்கியிருக்கிறார்கள்.

எனவே, கள்ளிலே விஷத்தைக் கலக்கிறார்கள். ஊமத்தங் காயை அறைத்து அதில் போடுகிறார்கள். கிக் அதிகமாகும் என் பதற்காக ஊமத்தங்காயை அறைத்துப் போடுகிறார்கள். அதைச் சாப்பிடுபவர்கள் பைத்தியக்காரர்களாக ஆகிவிடுவார்கள். எனவே இப்படிப்பட்ட நிலையில் அந்தக் கள்ளைச் சாப்பிடக் கூடியவர்களின் ஆயுளும், கண்களும் கெட்டு விடுவதால்தான் அதை மூடியிருக்கிறார்கள். அதற்காக இந்த அரசாங்கத்தை எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள் பாராட்ட வேண்டும். ஆனால் பாராட்டத் தவறிவிட்டார்களே என்று நான் வேதனைப்படுகிறேன்.

எம்.ஜி.ஆர். அவர்களைப்பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் பெருமிதப்பட்டார்கள் என்று ஏற்கனவே சொன்னேன். எம்.ஜி.ஆர். அவர்களும் ஓட்டுப் போட்டார்கள். வெறுப்பு இருக்கிறதோ இல்லையோ அது வேறு விஷயம். ஆனால் அன்றைக்கே நான் இதை ஒத்துக்கொள்ள மாட்டேன் என்று 'அப்ஸ்டெயின்' பண்ணி யிருந்தால் சரிதான். ஆனால் எல்லோரையும்போல் நின்று ஓட்டுப் போட்டார்களே. அதுமட்டுமல்ல.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** தலைவரவர்களே, எங்கள் கட்சித் தலைவரைப்பற்றிச் சொல்வதால் சொல்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஜே. ஜேம்ஸ்):** அவர் பேசி முடியட்டும்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** டாக்டர் ஹாண்டே அவர்கள் அவர்களைப்பற்றிப் பேசியதால் கூறுகிறேன்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த மதுவிலக்குத் திட்டத்தை நீக்குவதற்கு ஆதரவு கொடுத்தார்கள் என்று சொன்னார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர

விரும்புகிறேன். இந்தச் சட்டமன்றத்தில் மதுவிலக்கைத் தளர்த்தி, கள்ளுக்கடைகளைத் திறப்பதற்கு உண்டான மசோதாவை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கொண்டுவந்த நேரத்தில் தற்காலிகமாகத்தான் கொண்டுவருகிறேன் என்று சொன்னார்கள். ஆனால் தற்காலிகமாகக் கொண்டுவந்த சட்டம் நிரந்தரமாக்கப் படும் என்று அந்த நேரத்திலே நினைக்காத காரணத்தால் எங்கள் கட்சித் தலைவர் அதற்கு ஆதரவு கொடுத்தார் என்பதை உறுப்பினர் அறிந்திருப்பார் என்றே கருதுகிறேன்.

MR. CHAIRMAN (THIRU J. JAMES) : There is no point of order. Thiru V. Krishnamoorthi can continue.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : தற்காலிகமாகக் கொண்டு வந்தார்கள், இப்பொழுது எடுத்திருக்கிறார்கள். எனவே கள்ளுக்கடைகளைத் திறந்துவிட்டதால்தான் மனம் நொந்து வெளியேறுகிறேன் என்ற வாதம் எடுபடாது என்பதற்காகத்தான் கூறுகிறேன். மேலும், எம்.ஜி.ஆர். அவர்களை வைத்து மது அருந்தக் கூடாது என்பதற்காக ஒரு கமிட்டி போட்டார்களே, அது எத்தனை முறை கூடியது, எந்தெந்த ஊர்களுக்குச் சென்றது, எந்தெந்த மக்களைப் பார்த்தது, எங்கெங்கு சென்று மது அருந்தாதீர்கள் என்று விளம்பரம் செய்தார்கள்? எங்கே கமிட்டி கூடி எத்தனை இடங்களில் பிரச்சாரம் செய்தார்கள்? ஆகவே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், இந்தக் கட்சியைவிட்டுப் போனதற்கு மதுக் கடைகளை . . .

MR. CHAIRMAN (THIRU J. JAMES) : These things are not relevant to the Bill. The hon. Member can talk on the Bill.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : ஹாண்டே அவர்கள் பேசியதற்குப் பதில் சொல்கிறேன். அவர்கள் கட்சியை விட்டு விலகியதற்கு மதுவிலக்குக் கொள்கையும் ஒரு காரணம் என்று சொன்னார்கள். மதுவிலக்குக் கொள்கையை ரத்து செய்து விட்டதால் நான் வெளியேறுகிறேன் என்று எம்.ஜி.ஆர் அவர்கள் அன்றைக்கே சொல்லியிருந்தால் உண்மையிலேயே நியாயம் என்று நான் ஒப்புக்கொண்டிருப்பேன். எனவே, அவர் அதற்காகச் சொல்ல வில்லை. அவர் எதற்காகச் சென்றார் என்றால், இன்கம்டாக்ஸ்





விஷயமாக, 13 வருஷகாலமாக அப்பீலைத் தள்ளுபடி செய்தார்கள், பெனல்ட்டி போட்டார்கள் (குறுக்கீடு) 'மக்கள் குரலில்'லே கூறியுள்ளார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பாயிண்ட் ஆப் ஆர்டர். அவைத் தலைவரவர்களே, மதுவிலக்கைப்பற்றிப் பேசும் நேரத்தில் சம்பந்தமில்லாத, அர்த்தமில்லாத ஒரு பேச்சைப் பேசுவது நியாயமா என்று கேட்கிறேன். நான் நேற்று சொல்லாததை அவர்கள் சொன்னதாகச் சொன்னார்கள். இன்றைக்குச் சொல்லாததையும் சொன்னதாகச் சொன்னார்கள். அந்தக் கட்சியிலே இருக்கும் நேரத்திலே ஆதரவு கொடுத்தார்கள். முதலமைச்சரவர்கள் அந்த நேரத்திலே நிதிநிலைமை சரியாகயில்லை, இந்த ஆட்சிக்கு ஆதரவு கொடுக்கவில்லையென்றால் கவிழ்க்கப்படும் என்று சொன்னதால் ஆதரவு கொடுத்துக்கொண்டிருக்கிறேன் என்று சொன்னார்கள். அது அவர்கள் சொன்னதுதான், புதிதல்ல. அடுத்து எத்தனை தடவை அந்தக் கமிட்டி கூடியிருக்கிறது என்று கேட்கிறார்கள். பலதடவை கூடியிருக்கிறது. ஆனால் அதைக் கூடவிடாமல் செய்தது யார்? அதை முதலமைச்சர் செய்தாரா அல்லது ஆட்சியில் உள்ள வேறு யாராவது செய்தார்களா? செயல் படாமல் செய்தது யார்? நேற்றுகூட அவர்களிடத்தில் விசாரித்தேன்.

MR. CHAIRMAN (THIRU J. JAMES) : There is no point of order. Thiru Krishnamoorthi can continue his speech, confine himself to the Bill and close his speech.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : ஆங்கிலத்திலே பேசினார்கள். கட்சியைவிட்டு எதற்காக வெளியேறினார்கள் என்றால் மதுவிலக்குக் கொள்கையிலே 'டிஃபரன்ஸ் ஆஃப் ஒபினியன்' வந்ததால் என்று சொன்னார்கள். அதைச்சொல்ல அவர்களுக்கு உரிமையிருக்கிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் சொல்லவேயில்லை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : இந்தக் கட்சியோடு வேறுபாடு பட்டதற்கு மதுவிலக்குக் கொள்கைதான் காரணம் என்று சொல்லியிருக்கிறீர்கள்.

*டாக்டர் எச். வி. ஹாண்டே :* அதைக்கூட சொல்லவில்லை.

*மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஜே. ஜேம்ஸ்) :* இரண்டு பேரும் நின்றுகொண்டு உரையாற்றுவது இந்த மாமன்றத்திற்கு ஒத்தது அல்ல. ஆகவே, இது அத்தனையும், 'இர்ரெலவண்ட்' மேட்டர்களை' நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசியதால்தான் வருகிறது. எனவே இதுவரையில் பேசியதுபோக இனிமேல் சுருக்கமாகப் பில்லைப்பற்றிப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*டாக்டர் எச். வி. ஹாண்டே :* சார், . . .

*திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :* நான் 'யீல்டு' பண்ணினால்தான் மற்றவர்கள் பேசலாம்.

THIRU K. M. SUBRAMANIAM : On a point of Order, Sir.

MR. CHAIRMAN (THIRU J. JAMES) : Please sit down.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, **what I want to ask is this. Income-tax is not a subject of the State but it is a Central subject. Any reference to a Central subject is absolutely out of order. I want your ruling on that.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எம்.ஜி.ஆர். அவர்கள் கட்சியை விட்டுப் போனதற்கு மதுவிலக்குக் கொள்கை காரணமாக இருந்ததாக ஹாண்டே அவர்கள் சொன்னதாகச் சொல்லிப் பதில் சொன்னார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் அப்படிச் சொல்ல வில்லை என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்லவில்லையென்றால் சொல்லவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் எடுத்துக்கொண்டு மேலும் தொடர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். எனவே, இந்தப்பிரச்னையில் எந்த விதமான முறைகேடு எழுகின்ற தன்மையும் இல்லை.

* மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.



*திரு. கோவை செழியன் :* தலைவரவர்களே, . . .

[நண்பகல் 12-00]

(Thiru Kovai Chezhiyan stood up)

MR. CHAIRMAN (THIRU J. James) : Are you rising on a point of order?

*திரு. சி. ஆறுமுகம் :* கனம் உறுப்பினர் செழியன் அவர்கள் அவருடைய இருக்கையில் இருந்து பேசுகிறாரா?

*திரு. கோவை செழியன் :* இதுதான் என்னுடைய இடம்.

THIRU S. KANDAPPAN : Sir, on a point of order. Mr. K. M. Subramaniam in his interruption was saying to the Chair

* * * *

I would request, through you, Sir, he may kindly withdraw those expressions.

THIRU K. M. SUBRAMANIAM : * *

*மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஜே. ஜேம்ஸ்) :* மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் தலைவரைப் பார்த்து * * என்று குறிப்பிட்டுச் சொன்ன வாசகத்தை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன். அதைப் பத்திரிகைகளில் பிரசுரிக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :* மதுவிலக்குக் கொள்கையில் கருத்து வேறுபாடு இல்லையென்று அவர்கள் மூலமாக அவர்கள் தலைவர் சொன்னதற்காக மகிழ்ச்சியடைகிறேன். ஒருவேளை இதுதான் காரணமோ இந்தக் கட்சியை விட்டுப் போனதற்கு என்று மக்கள் எண்ணிக் கொண்டிருந்த நிலையில் இன்றையதினம் விளக்கத்தைத் தந்ததற்காக நன்றி.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

(DR. H. V. Hande rose)

I have nott hurt you Dr. Hande.

மதுவிலக்கை ரத்து செய்து அமல் நடத்திய நேரத்தில் நமக்கு வருமானம் வந்தது. அதுபற்றி இப்போது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏறக்குறைய ஆறு கோடி ரூபாய் கள்ளுக் கடை, சாராயக் கடை ஏலம் விட்டதன் காரணமாக இதுவரை வசூலிக்கப்படாமல் இருக்கின்றது. அரசாங்கத்திற்கு வரவேண்டிய பணம் வராமல் இருக்கிறது. இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு சென்னை உயர்நீதி மன்றத்தில் ஜட்ஜ் இஸ்மாயில் அவர்கள் 300 ரிட் பெட்டிஷன்களுக்கு ஸ்டே கொடுத்திருக்கிறார்கள். ரெவின்யூ ரெகவரி ஆக்டின் கீழ் வசூல் செய்யக்கூடாது என்று கூறி யிருக்கிறார். அதற்குப் போதுமான நோட்டீஸ் கொடுக்கவில்லை என்பது போன்ற காரணங்களைச் சொல்லியிருக்கிறார். இந்தப் பணத்தை எல்லாம் எப்படியும் வசூலிக்க வேண்டும். இதை வசூலிக்க யார் இடையூறாக இருந்தாலும் எந்த அதிகாரியாக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். ஆர்.டி.ஓ. தவறு செய்தாரா. தாசில்தார் தவறு செய்தாரா, யார் பேரில் குற்றம் என்று பரிசீலிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உயர்நீதி மன்றத் தீர்ப்பு சம்பந்தமாகக் கூறியதால் ஒரு விளக்கத்தைக் கூற விரும்புகிறேன். உயர்நீதி மன்றத்தில் ரெவின்யூ ரெகவரி ஆக்ட் மூலம் வசூல் செய்யக்கூடாது என்று சொல்லவில்லை. அவர்கள் சொன்னதெல்லாம்—அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்து விசாரித்த பிறகுதான் வசூலிக்க வேண்டும் என்பதாகும். அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். அரசாங்கத்திற்கு வரவேண்டிய பணம் நிச்சயமாக வசூலிக்கப் படும். அப்படி வசூலிக்கும்போது யாரும் வந்து குறுக்கே நிற்காமல் இருந்தால் அதுவே போதுமானது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

யார் யாரிடத்திலிருந்து வசூல் செய்ய வேண்டுமோ அவர்களிடத்தில் சொத்து இருக்கிறதா? அதிலே எவ்வளவு பேரிடத்திலே சொத்து இருக்கிறது? பெரும் பணக்காரர்கள்





தங்களுடைய வேலைக்காரர்கள் பேரில் பினாமியாக எடுத்து நடத்து கிறார்கள். அவர்கள் பேரில் நடவடிக்கை எடுத்தால் அவர்களிடம் ஒன்றுமே இருக்காதே. அதனால்தான் பல கோடிக்கணக்கான ரூபாய் அரசாங்கத்திற்கு வரவேண்டிய பணம் வராமல் இருக்கிறது. ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் நான் சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரியில் ஒரு ஓட்டல்காரர் ஐந்து கள்ளுக்கடைகளை எடுத்தார். அதை ஒரு மாதம் நடத்திவிட்டு விட்டுவிட்டார். மீண்டும் ஒரு முறை இன்னொருவர் பேரில் எடுத்தார். மறுபடியும் ஒரு மாதம் நடத்திவிட்டு விட்டு விட்டார். பிறகு மூன்றாவது முறையும் பினாமியாக எடுத்தார். எப்படி? முதலில் 4,000 ரூபாய் என்றால் அதற்கு மேல் ஐந்து ரூபாய் வைத்து 4,005 ரூபாய்க்கு எடுத்தார். 6,000 ரூபாய் முதலில் என்றால் இப்போது 6,005 ரூபாய்க்கு எடுத்தார். இதனால் முதலில் எடுத்தவனிடமிருந்தும், இரண்டாவது எடுத்தவனிடமிருந்தும் பணத்தை வசூலிக்க முடியாத நிலையில் தேர்டு சேல்ஸ் கன்பர்மேஷன் ஆகிவிட்டது. அவர்களுடைய ரெஸ்பான்சிபிலிடி அப்சால்வ் ஆகிவிடுகிறது. நான் அரசாங்கத்தின் பேரில் குற்றம் சொல்லவில்லை. அங்குள்ள அதிகாரிகள், தாசில்தார்கள், ஆர்.டி.ஓ.-க்கள் இதற்கு உடந்தையாக இருந்திருக்கிறார்கள். அவர்கள்மேல் அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த மாதிரி அரசுக்குச் சேரவேண்டிய பணத்தை வசூலிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கூறி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மதிப்பிற்குரிய கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், அரசாங்கத்தின்மீது குறை இல்லை என்று சொன்னார்கள். அதிகாரிகள்மீது தவறு என்றால் இதற்குள் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அதுபற்றி இவ்வளவு நாட்களாக அமைச்சரவை மௌனமாக இருப்பதால் உறுப்பினர் அவர்கள் அமைச்சரவை மீதுதான் குற்றம் சாட்டுகிறார் என்று பொருள் அல்லவா?

[1973 நவம்பர் 29

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** அதிகாரிகள் தவறு செய்தால் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லுவது அரசின்மீது குற்றம் சொல்லுவதாகாது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** சில அதிகாரிகள் தவறு செய்தார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். அதுபற்றிய விவரங்களை எல்லாம் அவர்கள் நிச்சயமாகக் கொடுப்பார்கள் என்று நினைக்கிறேன். எந்த அதிகாரி தவறு செய்திருந்தாலும் சட்டப்படி நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அரசு எந்த நேரத்திலும் நடவடிக்கை எடுக்கத் தயங்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நாங்கள் இந்த மதுவிலக்கை ரத்து செய்யும்போதே ஆணித்தரமாகச் சொன்னோம். "1937-ல் இருந்து கட்டப்பட்ட மாபெரும் மாளிகை இது; இதை மூன்று நிமிடத்தில் இடித்துத் தள்ளப் போகிறீர்களா? ஒருசில கோடி ரூபாய்க்காக ஆசைப்பட்டு நன்றாக வளர்ந்துவிட்ட ஒன்றை மூன்று நிமிடத்தில் முறியடிக்கப் போகிறீர்களா" என்று கேட்டோம். ஆளும் கட்சிக்குப் பணத்திலேயே கண் இருந்த காரணத்தால் நாங்கள் பல முறை எடுத்துக் கூறியும் கேட்க முடியாமல் போய்விட்டது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த மசோதாவில் நீங்கள் பேசப் போவதில்லை, அடுத்த மசோதாவில்தான் பேசப் போவதாகச் சொன்னீர்கள். இப்போதே மணி 12. இன்னும் ஆறு மசோதாக்கள் இருக்கின்றன.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** எக்சைஸ் பில், ப்ரோஹிபிஷன் பில் எல்லாம் கிட்டத்தட்ட ஒன்றுதான். பின்னால் உள்ள மசோதாக் களுக்கு நேரத்தைக் குறைத்துவிடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு மசோதாவுக்கு இவ்வளவு நேரம் என்றால், மற்ற ஆறு மசோதாக்களுக்கும் எப்படி மீதி இருக்கும் நேரம் போதுமானது?



1973 நவம்பர் 29]

**திருமதி. த. ந. அனந்தநாயகி :** அந்த பில்கள் எல்லாம் இரண்டு நிமிடத்தில் முடித்துவிடக்கூடிய சாதாரண பில்கள்தான்.

மதுவிலக்கை ரத்து செய்த பிறகு தமிழகத்தில் எப்படிப்பட்ட சிக்கல்கள் எல்லாம் ஏற்பட்டன என்பதை அரசு தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மதுவிலக்கை ரத்து செய்யாதீர்கள் என்று நாங்கள் சொன்னதைக் கேட்காமல் கொண்டு வந்தார்கள். அப்போது அகில இந்தியாவைச் சாட்சியாகக் காட்டினார்கள். பிற மாநிலங்களில் எல்லாம் இருக்கும்போது சுற்றிலும் தீ எரியும்போது நாங்கள் மட்டும் எப்படிக் கற்பூரமாக இருக்க முடியும் என்ற உவமையை எல்லாம் சொன்னார்கள். இப்போது கற்பூரமாக இருக்கின்ற நிலை மாறிவிட்டதா? அப்போது அவர்கள் எப்படியும் மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டும், கள்ளுக்கடையைத் திறந்தாக வேண்டும், சாராயக் கடையைத் திறந்தாக வேண்டும் என்ற எண்ணத்தில் அவருக்கு இருக்கின்ற மெஜாரிடியை வைத்து ரத்து செய்தார்கள். இன்று அதற்காக ஏதேதோ காரணங்களைச் சொல்கிறார்கள். அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கள்ளிலே அதைக் கலக்குகிறார்கள், இதைக் கலக்குகிறார்கள் ஆகவே, இன்று மறுபடியும் கொண்டு வருகிறோம் என்று சொன்னார்கள். அது அல்ல காரணம். ஊரிலே பேசப்படுவது—திண்டுக்கல்லிலே பெண்கள் கொடுத்த தீர்ப்பின் காரணமாகக் கள்ளுக்கடைகளை மூடுகிறார்கள். இன்னொரு முறை தீர்ப்புக் கொடுத்தால்தான் சாராயக் கடைகளை மூடுவார்கள்போல் இருக்கிறது.

**திரு. நா. வீராசாமி :** திண்டுக்கல்லிலே அவர்கள் கட்சி ஏதோ பத்து லட்சம் ஓட்டுகள் வாங்கிய மாதிரிச் சொல்லுகிறார்களே.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** எங்கள் கட்சியைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். ஆளும் கட்சிக்குத்தான் இந்த முடிவினால் அவஸ்தை நாங்கள் எதை வேண்டுமானாலும் தாங்கலாம்.

That is the Barometer of the Ruling Party.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1973 நவம்பர் 29

ஆளுகிற கட்சிக்கு மக்கள் மத்தியில் எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது என்பதைக் காட்டக்கூடியதாகும். ஆகவேதான் சொல்கிறேன். 1937-ல் கட்டப்பட்டதை இடிக்கிறீர்கள். மதுவிலக்கை ரத்து செய்துவிட்டு மீண்டும் ஒரு ஆண்டுக்குள் அதைக் கொண்டுவருகிறார்கள். ரத்து செய்வது மீண்டும் கொண்டு வருவது என்று இதைப் பார்க்கும்போது துக்ளக் ஆட்சி என்று கேள்விப்பட்டிருக்கிறோம், அங்கு இப்படித்தான் நடந்திருக்கும் என்று நம்பக்கூடிய அளவிற்கு இந்த ஆட்சி நடக்கிறது. நான் கேட்கிறேன், கள்ளுக்கடைகளை மூடிவிட்டு ஏன் சாராயக் கடைகளைத் திறந்து வைத்திருக்கிறீர்கள்? இன்று திறப்பது, நாளை மூடுவது, பின்னர் திறப்பது, பின்னர் மூடுவது என்றால் . . .

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்த மசோதாவைக் கொண்டுவரும்போதே முதல் அமைச்சர் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள், இது ஒத்திவைக்கப் பட்டிருக்கிறதேதவிர ரத்து செய்யப்படவில்லை என்று. ஆகவே, எந்தக் காலத்திலும் மீண்டும் வரக்கூடும் என்ற முறையில்தான் தெரிவித்திருக்கிறார்கள். நிதிநிலை இடம் கொடுத்து அல்லது மத்திய அரசு பணம் கொடுத்தால் மீண்டும் மதுவிலக்கைக் கொண்டு வருவோம் என்ற உத்தரவாதத்தின்பேரில்தான் அது ஒத்தி வைக்கப்பட்டதேதவிர ரத்து செய்யப்படவில்லை. எந்தச் சமயத்திலும் மீண்டும் கொண்டுவரப்படலாம் என்ற முறையில் தான் கொண்டுவரப்பட்டது.

திருமதி த. ந. அனந்தநாயகி: இவர்கள் சொல்லி வந்த வாதங்கள் எல்லாம் உண்மையற்ற வாதங்களாகப் போய் விட்டன. ஆனால் ஒரு நல்ல காரியம். இப்படித்தடுமாறிச் செய்தாலும் அதை நாங்கள் வரவேற்கிறோம். காரணம் இது ஒரு நல்ல காரியம். மதுவிலக்கைப் பூரணமாக அமல்படுத்தவேண்டும் என்று ஆசைப் பட்ட கட்சி எங்கள் கட்சி. கள்ளும் சாராயமும் ஏழை மக்களின் வாழ்க்கையைப் பாழாக்கிவிடும், ஆகவே மதுவிலக்குப் பூரணமாக அமல்படுத்தப்படவேண்டும் என்பதை ஆதரிக்கிற கட்சி எங்கள் கட்சி. அன்று நாங்கள் இதைச் சொன்னபோது உங்களுக்குக் காதில் ஏறவில்லை. இப்போதுகூட பாதிதான் ஏறியிருக்கிறது. காரணம், கள்ளுக்கடைகளை மூடியிருக்கிறீர்கள், ஆனால் சாராயக் கடைகளை மூடவில்லை. ஏன் சாராயக் கடைகளைமட்டும் மூடவில்லை?



1973 நவம்பர் 29] [திருமதி த. ந. அனந்தநாயகி]

கள்ளுக் கடைகளை மூடிவிட்டதால் சாராயத்தைக் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். கள் என்றால் ஒரு லிட்டர் ஒரு ரூபாய், சாராயம் என்றால் பத்து ரூபாய் கொடுத்து ஒரு லிட்டர் வாங்கிக் குடிக்கவேண்டும். இங்குள்ள அமைச்சர் ஒருவரின் செய்தித் தாள் 700 மில்லி குடித்தால்தான் போதை வரும் என்று இப்படி ஒரு பிரசாரம் வேறு நடக்கிறது. இதையெல்லாம் பார்க்கிறபோது ஏழைமக்களைப் பாழாக்கக்கூடிய சாராயக் கடைகளை ஏன் திறந்து வைத்திருக்கிறீர்கள் என்ற கேள்வியை எழுப்ப எதிர்க்கட்சியினர் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆகவே உடனடியாக சாராயக் கடைகளையும் மூடவேண்டும். சாராயம் காய்ச்ச எந்தெந்த முதலாளிகளுக்கு லைசென்ஸ் கொடுத்திருக்கிறீர்கள், எந்தெந்த ஆள்களுக்கு அதற்கான லைசென்ஸ் கொடுத்திருக்கிறீர்கள், எப்படி எப்படி லைசென்ஸ் கொடுத்திருக்கிறீர்கள் என்பவைகளைப்பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

(திரு. சி. ஆறுமுகம் அவர்கள் எழுந்தார்கள்.)

(மணியடிக்கப்பட்டு திரு. வெங்கடசாமி அவர்கள் பேச அழைக்கப்பட்டார்.)

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I have to speak and I have not finished. It is not fair: you cannot just stop me like this .........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "Fair" இல்லை என்றால் அலுவல் ஆய்வுக் குழுவில் இவ்வளவு பில்கள் எடுக்கவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஒரு பில்லுக்கே எவ்வளவு நேரம் கொடுப்பது? நீங்கள் எவ்வளவு நேரம் பேசவேண்டுமோ பேசி யிருக்கிறீர்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஐந்து நிமிடங்களில் என்ன பேச முடியும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வெங்கடசாமி.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஐந்து நிமிடங்களில் எப்படிப் பேசிமுடிக்க முடியும்?

[1973 நவம்பர் 29

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முன்னால் இந்த பில்லில் பேசவில்லை என்று சொல்லிவிட்டீர்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மசோதாக்கள் சம்பந்தமாக நாம் பிஸினஸ் அட்வைஸரிக் கமிட்டியில் வியாழன், வெள்ளி, சனி மூன்று நாட்கள் மசோதாக்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றுதான் சொல்லப்பட்டது. அந்த மசோதாக்கள் எந்த முறையில் எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்பது லீடர் ஆப் தி ஹௌஸின் பொறுப்பாகும். மசோதாக்களின் முக்கியத்துவத்தைப் பொறுத்து சில மசோதாக்களின் மீதான விவாதம் நீடித்துக்கொண்டு போகலாம். இந்த மசோதாவிற்கு இவ்வளவு நேரம்தான் என்று நாம் நிச்சயிக்கவில்லை. இது ஒரு முக்கியமான மசோதாவாகும். அடுத்தாற்போல் வரக்கூடியதும் முக்கியமான மசோதாவாகும். வேறு சில மசோதாக்கள் ஐந்து நிமிடங்களில் முடிந்துவிடும் மசோதாக்களும் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நாளை தனியார் பள்ளிகள் பற்றிய ஒரு பில் வரப்போகிறது. அதன்பேரில் பெரிய விவாதம் இருக்கும். ஒரு நாள் அதற்கு ஒதுக்கவேண்டிவரும். இரண்டு நாட்கள்தான் இருக்கின்றன. இதில் எவ்வளவு மசோதாக்களை எடுப்பது? நீங்கள் சொல்லுங்கள். 11-10 மணிக்கு எடுக்கப்பட்டது இந்த பில். எனக்கொன்றும் ஆட்சேபணையில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சில முக்கியமான மசோதாக்கள் மீது விவாதம் நீடிக்கலாம். அப்படி நீடிக்கிறபோது அதை நீங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதையொட்டித்தான் நானும் சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இன்று ஆறு மசோதாக்கள் உள்ளன. நாளை ஐந்து வரக்கூடும். தனியார் பள்ளிகள் பற்றிய மசோதா வருகிறது, அதற்குக் கட்டாயம் ஒரு நாள் வேண்டிவரும். இன்று இவற்றை வைத்திருக்கிறோம். நாளை அதைச் சேர்க்கச் சொல்லியிருக்கிறேன். நாளை இல்லாவிட்டால் மறுநாள் கொண்டுவரவேண்டியிருக்கிறது. யாரும் பேசவேண்டாம்



1973 நவம்பர் 29] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

என்பதல்ல. இந்த மசோதாபற்றிச் சுருக்கமாக தேவையானவற்றைத் தேவையான அளவிற்குப் பேசினால் நல்லது என்ற என்ற முறையில் இந்த மசோதாவிற்கு அதிக நேரம் கொடுக்கப் பட்டு மற்றவைகளுக்கு நேரம் குறைக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பொதுவிவாதத்தில் பேசுவதைப்போல் பேசுவதால்தான் சொல்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** பாயின்ட் ஆப் ஆர்டர். திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறபோது ஒருவர் எழுந்தார். அவர் எழுந்தபோது இவர்கள் உட்கார்ந்தார்கள். பேசி முடிக்கிற நேரத்தில் வேறு ஒருவரைப் பேசும்படி அழைத்தீர்கள். பேசி முடிப்பதற்கான சந்தர்ப்பம் கூடக் கொடுக்காமல் இப்படி ஒரு நிலை உண்டாவது இந்தச் சபை மரபுக்கு உகந்ததல்ல.

61633

THIRU B. VENKATASWAMY: I thank the Hon. Speaker for giving me this opportunity to speak a few words, welcoming this Bill. I welcome this because it saves many poor people in the society; they are the down-trodden in society. I would have been happier if the Government had introduced total prohibition striaghtaway. Still, I am very glad that the Government accepting the benefits of the measure have brought forward this Bill. Because of the drink evil people are spoiled. If there is total prohibition, the economic status of the people would improve. I am glad that part of this policy is being enforced.

In this connection I want to say that I was the only man to file a writ petition when the Ordinance was promulgated. When the Ordinance was promulgated, our revered Leader, Rajaji, called me and asked me to file a writ; because he was so much interested in the welfare of the down-trodden people. Mr. Srikumar was the other person who filed a writ at that time. A stay would have been granted, by the Judge. Whatever it is I am very happy that the Government has realised at least now and introduced this Bill.

Sir, I want to stress one point. Our revered former Chief Minister Dr. Annadurai was very keen on enforcing prohibition in the State. After him, the present Chief Minister has scrapped prohibition due to financial trouble in the State. He has not

[Thiru B. Venkataswamy] [1973 நவம்பர் 29

scrapped the prohibition permanently. He has only suspended prohibition. He has said that he has to scrap prohibition to improve the financial position of the State. In the event of reintroducing total prohibition in the State, the Central Government must come to the rescue of the State Government. I strongly feel that the present Government the Central Government—must appreciate the first step-taken by the Government of Tamil Nadu to close the toddy shops in the State and should give some financial aid to the State to make good the loss, because the State Government is responsible for the welfare and well being of the people. They must also see that the State Government is in a position to pay the salaries to their employees and also to meet the expenditure connected with several welfare scheme.

The hon. Member, Thirumathi T. N. Anandanayaki was speaking about the policy of the Central Government. I appreciate the feelings expressed by her and request her to impress upon the Central Government to give more aid to the Government of Tamil Nadu so as to enable the State Government to enforce total prohibition in the State. I am sure the hon. Members belonging to the Ruling Congress will fight with the Centre and get more funds for Tamil Nadu. I hope the Central Government has realised. But there is time limit for realisation. The Central Government must come to the rescue of the Tamil Nadu Cabinet in the event of re-introducing complete prohibition in the State. If total prohibition was enforced, several people will be saved. Now, I feel really unhappy that small boys have become addicts. They consume liquor.

*திரு. துரைமுருகன்:* பாயின்ட் ஆப் ஆர்டர். திராவிட முன்னேற்றக் கழகத்திலேயிருந்து அ.தி.மு.க.-விற்குச் சென்ற கோவை செழியன் அங்கிருந்து கட்சி மாறி பழையபடி ஆளும் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடத்திலே வந்திருக்கிறாரே. அப்படி எப்பொழுது மாறினார் என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் அறிவிப்பாரா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் இந்த அவையிலே எந்த இடத்திலேயாவது உட்காரலாம்; பேசும் பொழுது தான் தன் இடத்திலே உட்கார வேண்டும். எனவே, இதிலே ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.



1973 நவம்பர் 29]

THIRU B. VENKATASWAMY: I would like to stress one more point here. At the time of scrapping prohibition in the State, our revered Leader Rajaji went to the Hon. Chief Minister's house only to say that he should not scrap prohibition in the State. This policy of the Government has completely upset our Leader Rajaji. He asked me: "Will you file a writ against the Government because it is a most important thing affecting the people?". At that time, Thiru C. Subramaniam was expected to contest from our Parliamentary Constituency. We asked him why not we set up a candidate. He said at that time that we don't want anything. He said that he was very much interested in not scrapping prohibition and he asked us 'why not we file a writ against the Government?' As a part, now the Government have come forward to abolish toddy shops in the State. I do hope and wish that the Government will re-introduce total prohibition in the State. I also hope that our members belonging to the Ruling Congress will support this cause and fight with the Centre to get more financial assistance for Tamil Nadu Government.

Thank you, Sir.

*திரு. இ. எஸ். தியாகராசன்:* மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்றைய தினம் தமிழ்நாடு 1973-ம் ஆண்டு மதுவிலக்கு (செயல்திறனை நிறுத்தி வைத்தல்) சட்ட முன்வடிவை தமிழ் அரசு கழகத்தின் சார்பிலே வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன்.

இந்த மதுவிலக்கு ஒத்திவைப்புச் சட்டத்தை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த பொழுது எங்களுடைய தலைவர் ம. பொ. சிவஞானம் அவர்கள் மிக உருக்கமாகச் சொன்னார்கள், இது நாட்டு மக்களுக்கு ஒவ்வாதது; இதை நீங்கள் மீண்டும் கொண்டு வரவேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்கள். எனினும் கலைஞர் அவர்கள் தமிழகத்தின் நிதி நிலையை அனுசரித்தும், மக்கள் மத்தியிலே இதை வைத்துப் பார்த்தால் அதை எந்த அளவிற்கு அவர்கள் விரும்புகிறார்கள் என்பதை அறிவதற்காகவும்தான் இந்த மதுவிலக்கை ஒத்தி வைப்பதாகச் சொல்லி, இந்தத் திட்டம் அமலுக்கு வந்தது. ஆனால் அது மக்களைப் பாதிக்கிறது என்று

[திரு. இ. எஸ். தியாகராசன்] [1973 நவம்பர் 29

பார்த்த பிறகு இதைத் தாமதப்படுத்தாமல் இந்த ஆண்டே மதுவிலக்கைக் கொண்டுவருவது குறித்து நம்முடைய கலைஞரை நான் பாராட்டுகிறேன்.

அதுமட்டுமில்லை, இந்தக் கள்ளுக்கடைகள் இந்த ஆண்டே போய்விட்டன. சாராயக் கடைகள் அடுத்த ஆண்டு நீக்கப்படப் போவதாக முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மேலும், இந்த மதுவிலக்கு இந்த நாட்டிலே பூரணமாக வருவதைத் தமிழ் அரசுக் கழகம் மனப்பூர்வமாக ஆதரிக்கும், வரவேற்கும் என்று கூறிக்கொண்டு, இந்தப் புதிய சீர்திருத்தத்தைக் கடைபிடிக்கின்ற இந்த அரசு மக்களால் விரும்பப்படுகிற அரசு என்று கூறிக் கொள்கிறேன்.

அத்தோடு மட்டுமில்லை, எங்கள் பக்கத்திலேயுள்ள ஆந்திரத்திலே 'நீரா' என்ற பெயரால் இருக்கும் தளர்த்தப்பட்ட மதுவிலக்கு எங்களுக்குச் சந்தேகத்திற்கு உரியதாக இருக்கிறது. அப்படி அக்கம் பக்கத்திலேயுள்ள மாநிலங்கள் எல்லாம் எங்களைத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறது. அதை தடுக்க எப்படி இந்த அரசு நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே, அதிலேயும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக கள் இறக்குகின்ற தொழிலாளர்கள் வேலையற்று இலட்சக்கணக்கான பேர்கள் அவதிப்படுகிறார்கள். எனவே, அவர்களுக்கு ஏதாவது தொழில் தந்து அவர்களுடைய வாழ்வை வளமாக்க அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டத்தை ஆதரித்து, அமைகிறேன்.

*திருமதி ஜோதி வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மசோதாவின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த தமிழ்நாடு 1973-ம் ஆண்டு மதுவிலக்கு (செயல்திறனை நிறுத்தி வைத்தல்) சட்டம் வரப் போகிறது என்று கூறிய பொழுதே கனம் முதலமைச்சர் அவர்களுக்கு இதிலே இருந்து வரக் கூடிய துன்பங்களை எல்லாம் எடுத்துக் கூறி, அன்றைக்கு இந்த ஆட்சியை ஆதரிக்கவேண்டுமென்று நினைத்த காலம் சென்ற



1973 நவம்பர் 29] [திருமதி ஜோதி வெங்கடாசலம்]

நமது மதிப்பிற்குரியவராய் இருந்த இராஜாஜி அவர்களின் கொள்கையைக் கூட இங்கே எடுத்துக் கூறினேன். தொடர்ந்து பல ஆண்டுகளாக காங்கிரஸ் ஆட்சியிலே இந்த மதுவிலக்குத் திட்டத்தினால் சுபிட்சமாகவும், சுமூகமாகவும் வாழ்ந்து கொண்டிருந்த குடும்பங்கள் இதனாலே பாதிக்கப்படும் என்று கூறிய பொழுது முதலமைச்சர் கூறினார் பணக்காரர்கள் மட்டும் லைசென்சை வைத்துக்கொண்டு குடிக்க வேண்டுமா, ஏழை சுத்தமான கள்ளையோ, சாராயத்தையோ குடிக்க இயலாத நிலையில் தகாத சாராயங்களைக் குடித்து மரணத்திற்கு உட்படுகிறார்கள்; ஆகையினாலே இதனை கொண்டுவருகிறோம் என்றார்கள்.

ஆனால், செப்டம்பர் 1-ஆம் தேதி முதல் இந்த கள்ளுக்கடைகளை ரத்து செய்வதற்காக கனம் முதலமைச்சர் அவர்கள் கூற முன் வந்தது எங்களுடைய கட்சியிலே எடுத்த தீர்மானத்திற்குப் பிறகு தான் என்பதைக் கூறிக்கொள்ளவிரும்புகிறேன். இந்த கள்ளுக் கடைகளையும் சாராயக் கடைகளையும் ஒழிக்காவிட்டால் நாங்கள் போராடுவோம் என்று கூறியபொழுதுதான், இந்த கள்ளுக் கடைகளை ஓரளவிற்கு ஒழிப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் முன்வந்திருக்கிறார்கள். அத்தோடு கூடவே, சாராயக் கடைகளை ஏன் ஒழிக்கக் கூடாது என்று கேட்டபொழுது, அவர்கள் லைசென்ஸ் எடுத்திருப்பவர்களுக்காகப் பரிதாபப்பட்டு அப்படி ஒழிக்க முடியாததைச் சுட்டிக்காட்டினார். நாம் பரிதாபப்பட வேண்டியது லைசென்ஸ் எடுத்தவர்களுக்காகவா அல்லது பொது மக்களுக்காகவா என்று யோசிக்க வேண்டும். இன்றைக்கு மாணவர்களிடையே எத்தனை குழப்பமும், சீர்கேடுகளும் ஏற்பட்டிருக்கின்றன என்று பார்க்கும் பொழுது, எனக்கு முன்னால் பேசிய திரு. பழனிச்சாமி அவர்கள் கூறியதுபோல் குழந்தைகள் முதல் இன்றைக்குக் குடிக்க ஆரம்பித்துவிட்டார்கள் என்பதை இந்த அரசு மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. பல மாணவர்கள் குடித்துவிட்டு காலேஜுக்கு வரக்கூடிய கோரத்தைத்தான் நாம் இன்றைக்குப் பார்க்கிறோம்.

இன்றைக்கு வீனஸ் வொயின்சிலே சென்று மாணவர்கள் கலாட்டா செய்திருக்கிறார்கள் என்றால், அங்கே இருக்கும் சாராயத்தைக் குடித்துவிட்டு அங்கே கலாட்டா செய்யும் நிலைமை

வந்திருக்கிறது. இப்படிப்பட்ட குழப்பத்திற்கு ஆளாகித் தெருக்களிலே நடக்கும் கூத்துக்களைப் பார்க்கும்பொழுது நாமே வெட்கித் தலைகுனிய வேண்டியிருக்கிறது. இதற்குக் காரணம் நாம் மதுவிலக்கை ரத்து செய்ததுதான்.

[பிற்பகல் 12-30]

இல்லிஸிட் டிஸ்டிலேஷன் பற்றிக் கூறும்பொழுதும், ப்ரொஹிபிஷன் பற்றிக் கூறும்பொழுதும், குடிப்பழக்கம் பக்கத்து மாகாணங்களில்கூட இருக்கிறது, இதை ரத்து செய்யவில்லை, பாண்டிச்சேரியில் இருக்கிறது, பங்களூரில் இருக்கிறது என்று சொல்லும்பொழுதுகூட நான் கனம் முதல் அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக் கூறினேன். பக்கத்து மாகாணங்களிலே இந்தி மொழியை ஒப்புக்கொண்டு இருக்கின்றபொழுது நம்முடைய மாகாணத்தில் இந்தி வரக்கூடாது என்று அதை எதிர்த்துப் போராடிய நீங்கள் கள்ளுக் கடை, சாராயக் கடைகளைக் கொண்டு வருவதற்கு மாத்திரம் பக்கத்து மாகாணங்களைச் சுட்டிக்காட்டுவது சரியல்ல என்று நான் சொன்னேன்.

அப்படியிருந்தும்கூட இல்லிசிட். டிஸ்டிலேஷனை எப்படிக் கண்டு பிடிப்பது என்று கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூறினார்கள். கள்ளிலே பல பாய்சன் கலக்கப்படுகிறது, அதனால் கள்ளுக் கடைகளை மாத்திரம் மூடுவதற்கு கனம் முதல் அமைச்சர் அவர்கள் முன்வந்திருக்கிறார்கள் என்று கூறினார். கள்ளிலே மாத்திரமா பாய்ஸன் கலக்கப்படுகிறது? அவர் அப்படி நினைக்கிறார் போலும். இன்றைக்கு வார்னிஷ், டிஞ்சர், ஜிஞ்சர் பெரி போன்றவைகளையெல்லாம் குடித்துவிட்டு சென்னையிலிருக்கிற கவர்ன்மெண்ட் மெடிகல் ஸ்டோர்ஸிலிருந்து வெளியே வருகிறார்கள். அந்த அளவில் குடித்துவிட்டு வெளியே வருகிறார்கள். இந்தச் சட்டத்தின் காரணமாக இப்படி அவர்களுக்கெல்லாம் ஒரு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு விட்டது. பலர் இறந்து இருக்கிறார்கள். அதையும் நாம் பத்திரிகையில் பார்த்திருக்கிறோம். இந்தச் சட்ட சபையிலும் அதைப்பற்றிக் கேள்விகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. கனம் முதல் அமைச்சர் அவர்கள் இதைக் கொண்டு வரும்பொழுது என்ன கூறினார்கள்? சிறைக்குச் செல்பவர்கள் இந்தக் குற்றவாளிகள்தான் அதிகப்படியாக இருக்கிறார்கள், இதை



அமலுக்குக் கொண்டுவந்தால் அந்தக் குற்றவாளிகளின் எண்ணிக்கை குறைக்கப்படும் என்றார். ஆனால் அந்த எண்ணிக்கை இன்றைக்குக் குறைக்கப்பட்டிருக்கிறதா, அதிகப்படுத்தப் பட்டிருக்கிறதா என்பதைப் பார்த்தால், குற்றவாளிகள் அதிகப்படியாக இருப்பது மாத்திரம் அல்ல, இறந்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

இல்லிஸிட் டிஸ்டிலேஷன் கண்டுபிடிப்பதிலே பெரிய கஷ்டம் ஒன்றுமில்லை. இந்தப் பொறுப்பை ஏற்று நடத்திய அனுபவத்தின் காரணமாகக் கூற விரும்புகிறேன். அதாவது 'ஃப்ளையிங் ஸ்குவாட்'. போலீஸில் இருப்பவர்களில் மதுவிலக்கில் நல்ல கொள்கையும், நம்பிக்கையும் உள்ளவர்களை எடுத்து, ஒரு போலீஸ் சூப்பெரின்டெண்ட் போட்டு, அவருக்குக் கீழே அதற்குத் தக்கவாறு சில சிப்பந்திகளை, போலீஸ்காரர்களைப் போட்டு, கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்களைக் கண்டு பிடிக்கும் வகையில் ஒழுங்காக ஃப்ளையிங் ஸ்குவாட் வேலை செய்வதற்கு ஏற்பாடு செய்தால், இல்லிஸிட் டிஸ்டிலேஷனைக் கண்டுபிடிப்பதிலே குறை ஏற்படாது. அதிலே நாங்கள் பெரிய அளவுக்கு வெற்றி கண்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினர் கண்ணன் அவர்கள் தலையில் அடித்துக் கொள்ளுகிறார். அதன் விவரம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எம். ஆர். கண்ணன் :** அம்மையார் அவர்களின் உயர்ந்த எண்ணத்தைப் பாராட்டுகிறேன். ஆனால், எந்த சூப்பெரின்டெண்டெண்ட் எப்படிக் கண்டு பிடிக்கமுடியும்? எப்படிக் கண்காணிக்க முடியும்? இதிலே பல பேர் ஈடுபட்டிருக்கிறார்கள். It is impossible.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** திரு. கண்ணன் எந்த விதத்தில் அனுபவம் உள்ளவர் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு போலீஸ் சூப்பெரின்டெண்டெண்டு என்று கூறும்பொழுது, போலீஸ் அதிகாரியை வைக்க வேண்டும். எல்லா போலீஸ் சூப்பெரின்டெண்டெண்டுகளும் மதுவிலக்கில் நல்ல கொள்கையையும், நம்பிக்கையையும் வைத்தவர்கள் என்று கூற இயலாது, எல்லோருக்கும் நம்பிக்கை இல்லை என்று கூறுவதற்கும் இல்லை. இதைப்போல நீங்கள் செய்வீர்களானால் இல்லிஸிட் டிஸ்டிலேஷன்கூட பெரிய அளவுக்குக் குறையும்.

[திருமதி ஜோதி வெங்கடாசலம்] [1973 நவம்பர் 29

அடுத்தபடியாக, லைசென்ஸிஸ் ப்ரொஸீஜர். லைசென்ஸ் எப்படி கொடுக்கிறீர்கள். லைசென்ஸ் ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிகப்படியாக வியாதியின் காரணமாகக் கொடுக்கப் பட்டிருப்பது ஒரு புறம். குடிப்பதற்கு லைசென்ஸ் கொடுக்கும் பொழுது, அதை ஆண்டுதோறும் ரென்யூ செய்யவேண்டியிருக் கிறது. இதிலே குறை கூறவில்லை. ஆனால் இதையெல்லாம் அமைச்சர் அவர்கள் பதில் கூறும்பொழுது தயவுசெய்து விளக்க வேண்டும். ப்ரொஸீஜர் எப்படி செய்யப்போகிறார்கள் என்று விளக்கவேண்டும்.

மேலும் டாடி டாப்பர்ஸ், கள் இறக்குபவர்கள் இப்பொழுது மறுபடியும் கள் வந்தபொழுது ஓரளவுக்கு அவர்கள் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள். ஆனால், மறுபடியும், தற்பொழுது வேலையில்லாத் திண்டாட்டத்தில் அவர்கள் கஷ்டப்படவேண்டி யிருக்கிறது. துணை மானியம் அதற்காக அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் ரொம்பக் குறைவாக இருக்கிறது. அவர்களுக்குக் கடன் கொடுக்கவேண்டுமென்றால், அவர்கள் கடன் கொடுத்து எந்த வேலையைச் செய்யப் போகிறார்கள், எந்த வியாபாரத்தைத் துவக்கப்போகிறார்கள். அவர்களின் மறுவாழ்வு எவ்வாறு அமையப்போகிறது, அவர்கள் வாழ்வதற்கு அரசு என்ன ஏற்பாடுகள் செய்யப்போகிறது என்பதை அழுத்தம் திருத்தமாக அமைச்சர் அவர்கள் உரையில் கூறவேண்டும். இந்த அரசு அவர்களுக்கு என்ன மாற்று வேலைகள் தரப்போகிறது என்பதையும் கூறவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய வாதத்தை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, இந்த அரசினுடைய மதுவிலக்குக் கொள்கையை நம்முடைய நாவலர் அவர்கள் இப்போது இந்த மன்றத்தில் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். மதுவிலக்கை அமல் படுத்த வேண்டும் என்பதில் எங்களுக்கு எந்தவிதமான கருத்து வேறு பாடும் கிடையாது. அரசு அறிவித்தது என்னவென்றால் மது விலக்கை நிறுத்தி வைத்திருக்கிறோம் என்பதுதான். சஸ்பெண்டு செய்திருக்கிறோமே தவிர, ஸ்க்ராப் செய்யவில்லை. மதுவிலக்கை ரத்து செய்ததாக அரசு தெரிவிக்கவில்லை. நிறுத்திதான் வைத்திருக்கிறோம். மதுவிலக்கை சஸ்பெண்ட் செய்துவிட்ட



1973 நவம்பர் 29] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

பிறகு, இந்த அரசு இருக்கிற நிலைமைகளை அனுசரித்து மீண்டும் அப்படி சஸ்பெண்ட் செய்ததை மறுபடியும் ரத்து செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் இந்த மசோதா கொண்டுவரப் பட்டிருக்கிறது. ஏற்கெனவே அவசரச் சட்டத்தின்மூலம் இது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. அந்த அவசரச் சட்டத்தைச் சட்டமாக்குவதற்காகத்தான் இந்த மன்றத்தின் முன்பு இந்த மசோதா கொடுக்கப்பட்டிருக்கிற எக்ஸ்ப்ளனேடரி ஸ்டேட்மெண்டில் மிகத் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'The Government have decided to re-introduce prohibition in Tamil Nadu State by stages and as a First step all toddy shops have been closed with effect from 1st September 1973.' இந்த அரசாங்கத்தின் கொள்கை பூரண மதுவிலக்கு அதன் அடிப்படையாக முதல் கட்டமாகக் கள்ளுக்கடைகளை மூடி யிருக்கிறோம். தொடர்ந்து மதுவிலக்கை அமல்படுத்துவதுதான் இந்த அரசின் திட்டவட்டமான கொள்கையாகும். முதல் கட்டமாக கள்ளுக் கடைகளை மூடுகிற நிலையிலே கொண்டுவரப்பட்ட அவசரச் சட்டத்திற்குப் பதிலாக இந்த மசோதா இந்த மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது.

நம்முடைய அம்மையார் திருமதி அனந்தநாயகி அவர்கள் வேகமாகப் பேசினார்கள். ஏன் பூரண மதுவிலக்குக் கொண்டு வரவில்லை, இப்படிக் கொண்டுவரலாமா, பீஸ்மீல் லெஜிஸ்லேஷன் கொண்டுவரலாமா என்று குற்றம் சாட்டினார். உபதேசம் எல்லாம் எங்களுக்குத்தானே தவிர, மத்தியில் ஆளும் கட்சியின் சார்பில் இருக்கிற அகில இந்தியக் கொள்கை அப்படி இல்லை என்பது அவருக்குத் தெரிந்திருந்தும் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அவர்கள் கட்சி ஆளுகின்ற மைசூர் மாநிலத்தில் இந்தக் கொள்கையைப்பற்றி எந்தவிதமான கருத்தும் தெரிவிக்கப் பட்டதாக எனக்குத் தெரியவில்லை.

ஜோதி அம்மையார் அவர்கள் தங்களுடைய போராட்டத்திற்குப் பிறகுதான் இந்தக் கொள்கையை அரசு ஏற்றுக்கொண்டு இப்பொழுது இந்த மசோதாவைக் கொண்டுவந்திருப்பதாகச் சொன்னார். அவர்கள் இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். அப்படிச் சொல்லும்பொழுது, கள்ளுக் கடைகள் மாத்திரம் ஏன்

கொண்டு வந்தார்கள், சாராயக் கடைகளை ஏன் கொண்டுவரவில்லை என்று கேட்டபொழுது, லைசென்ஸ் கொடுத்தாகிவிட்டது, ரத்து செய்ய முடியாது என்ற அடிப்படையில் கள்ளுக் கடைகள் மாத்திரம் மூடப்பட்டது என்று கூறப்பட்டதாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த அவசரச் சட்டம் பிறப்பிக்கப்படும்பொழுது கள்ளுக் கடைகள், சாராயக் கடைகள் ஏலத்திற்கு விடப்படவில்லை. அரசாங்கத்தின் கொள்கை கள்ளுக் கடைகளை முதலில் மூடிவிட வேண்டும், அடுத்த கட்டமாக சாராயக்கடைகளை மூடிவிட வேண்டும் என்று முடிவு செய்து, அந்த அடிப்படையில் கள்ளுக் கடைகளை மாத்திரம் மூடிவிட்டு, சாராயக் கடைகளை நடத்துவதற்கு மாத்திரம் ஏலம் விடப்பட்டு, சாராயக் கடைகள் இப்பொழுது நடைமுறையில் இருந்துகொண்டு வருகின்றன . . .

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** கள்ளுக் கடைகள் மூடிய பொழுது அந்தத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். சாராயக் கடைகள் ஏலத்திற்கு விடப்பட்டுவிட்டது என்று காரணம் கூறவில்லை. இந்தச் சபையில் முதல் அமைச்சர் அவர்கள் கூறும் பொழுது சாராயக் கடைகளை எடுக்காத காரணம் அவை எண்ணிக்கையில் கொஞ்சமாக இருக்கின்றன, படிப்படியாக மூடப் படும் என்று கூறிய தகவலை வைத்துக்கொண்டுதான் நான் கூறினேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கள்ளுக் கடைகளை மூடியதற்குக் காரணம் என்னவென்றால் கள்ளுக் கடைகள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தது, சாராயக் கடைகள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தது, ஆகவே கள்ளுக் கடைகளை அரசு முதலில் மூடியது என்பது இல்லை. அரசின் அடிப்படைக் கொள்கை படிப்படியாக மதுவிலக்கை நிறைவேற்றுவது என்பது தான். அந்த வகையில்தான் முதல் கட்டமாக கள்ளுக்கடைகள் மூடப்பட்டன. அதற்கான அவசரச் சட்டத்தைச் சட்டமாக்கு வதற்காகத்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் இண்டியன் மேட் ஃபாரின் லிக்கருக்கு லைசென்ஸ் கொடுப்பது பற்றிச் சில குறைபாடுகளைச் சொன்னார்கள். எந்தவிதமான குறைபாடும் ஏற்பட்டுவிடவில்லை என்பதை நான் சொல்ல



முடியும். இண்டியன் மேட் ஃபாரின் லிக்கருக்கு லைசென்ஸ் கொடுக்கிற அதிகாரம் 30—8—1971-லிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு விண்ணப்பம் செய்தால், அந்த விண்ணப்பம் முறையாக இருக்குமானால், அதற்கான சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு லைசென்ஸ் கொடுக்கப்படுகிறது. அன்னிய நாட்டுச் சாராயத்திற்கு லைசென்ஸ் கொடுப்பதுபற்றி அரசாங்கத்திற்கு குறிப்பிட்ட புகார்கள் எதுவும் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படி ஏதாவது ஒரு குறிப்பிட்ட புகாரைச் சொன்னால், அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் அரசாங் கத்திற்கு ஏராளமாக வரக்கூடிய பணம் வராமல் போய்விடுகிறதே என்று சொல்லி மிகவும் வருத்தப்பட்டார்கள். பணம் வராது என்பது உண்மைதான். இருந்தாலும்கூட மக்களுடைய எண்ணத்தைப் புரிந்துகொண்டு, அதன்படி நடப்பதுதான் ஜன நாயக ஆட்சியின் கொள்கை ஆகும். அரசியல் சட்டத்திலே கூறப்பட்ட 'டிரக்டிவ் பிரின்சிப்பிள்ஸ்' என்ற அடிப்படையிலே இந்தத் திட்டங்களை நம்முடைய அரசு நிறைவேற்றக் கடமைப் பட்டிருக்கிறது. அவர்கள் இன்னும் விபரங்களைக் கேட்டார்கள். அதையெல்லாம் இப்போது சொல்ல முடியாது. அடுத்த பட்ஜெட் வரும்போதுதான் தெரியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கடந்த ஆண்டு ஏற்பட்ட நஷ்டத்தைப்பற்றி திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்போது உயர்நீதி மன்றத்திலே அளிக்கப்பட்ட தீர்ப்பைப்பற்றிச் சொன் னார்கள். அதைப்பற்றி ஏற்கெனவே விளக்கம் சொல்லியிருக்கிறேன். நீதிமன்றத்திலே ரெவின்யூ ரெக்கவரி சட்டத்தின் கீழ் வசூல் செய்யக்கூடாது என்று சொல்லவில்லை. ஜட்ஜ்மெண்டில் கூறப் பட்டிருப்பது, ஒரு நபர்மீது நடவடிக்கை எடுக்கும்போது அவருக்கு அவர் விளக்கம் சொல்வதற்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்து, ஆட்சேபம் இருந்தால் பரிசீலிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். தீர்ப்பின் முழு விபரமும் இன்னும் அரசுக்கு வரவில்லை. வந்த பின்னால் மேற்கொண்டு நடவடிக்கை

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1973 நவம்பர் 29

எடுக்கப்படும். 1972-73-ம் ஆண்டில் அரசாங்கத்திற்கு வரவேண்டியவருவாய் 424 லட்சம் ரூபாய் இருக்கிறது. அதற்கு அரசாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, ஏற்கெனவே இருந்த மதுவிலக்கை ரத்து செய்த காரணத்ினால் மீண்டும் இத்தொழிலில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பில்லை; அவர்கள் கஷ்டத்தை எப்படிப் போக்குவது என்று கேட்டார்கள். தமிழ்நாட்டில் மரம் ஏறி, கள் இறக்குவோர் தொகை சுமார் 40,000 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு கதர் கிராம கைத்தொழில் வாரியத்தின்மூலம் அவர்களுக்கு உதவி செய்ய முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதன்படி ஒரு தொழிலாளிக்கு 125 ரூபாய் கடனாகவும், இதர தொழில் கருவிகள் வாங்குவதற்காக 50 ரூபாய் மானியமாகவும் வழங்கப்படுகிறது. ஆகவே, அவர்கள் அதிகமாகப் பாதிக்கப்பட மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மசோதா அரசாங்கத்தினுடைய கொள்கையை ஜனநாயக முறைப்படி நடத்துவதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற ஒரு கொள்கைத் திட்டமாகும். ஆகவே, இந்த மசோதாவை ஏற்றுக்கொண்டு, சட்டமாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, இந்த மதுவிலக்கு செப்டம்பர் 1-ம் தேதி அன்று ரத்து செய்யப்பட்டு, மீண்டும் அதை 'ரெஸ்டோர்' செய்யவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அதை அறிவித்த பின்னல், ஆகஸ்ட் மாதத்தில் சட்டமன்றம் நடைபெற்றது. அப்போது இந்த மசோதா கொண்டுவரப்படாமல், அவசரச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டிய அவசியம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மசோதாவைக் கொண்டுவராததற்குக் காரணம், ஜனாதிபதியினுடைய அனுமதி தேவை இருந்ததால் அப்போது கொண்டுவரப்படவில்லை. இப்போது ஜனாதிபதியின் அனுமதி கிடைத்திருக்கிறது.



1973 நவம்பர் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1973-ம் ஆண்டு மதுவிலக்கு (செயல்திறனை நிறுத்தி வைத்தல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

## பிரிவு 3.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி—

'பிரிவு 3 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்.'

**திரு. என். கே. பழனிசாமி :** Sir, I move the following amendment :

'In clause 3, for the proposed sub-section (ii) of new section 2-A, the following shall be substituted :—

" (ii) Section 4-A, shall in so far as they relate to toddy, liquor, arrack and alchohal stand revived and the provisions so revived shall apply throughout the State except Madras City and Chingleput ".' என்னுடைய இந்தத் திருத்தம் யோசனை செய்து முடிவு செய்யப்பட வேண்டிய விஷயம். இதில் இரண்டு விஷயங்கள் இருக்கின்றன. ஒன்று இந்த மதுவிலக்கை அமல் நடத்துவதற்குப் பணம் தேவை. இரண்டாவது, மதுவிலக்கைச் சரியாக அமல் செய்யவேண்டும். இந்த இரண்டு விஷயங்களையும் பரிசீலனை செய்து பார்த்துவிட்டு, எல்லா இடங்களுக்கும் மதுவிலக்கை விஸ்தரிக்க வேண்டும். எல்லா இடங்களிலும் ஒரே அடியாக கள் விற்பனையைமட்டும் நிறுத்திவிட்டு சாராய விற்பனையை அனுமதிப்பதற்குப் பதிலாக, படிப்படியாக கள், சாராயம் இரண்டையுமே ஒரு குறிப்பிட்ட பகுதியில் தடைசெய்துவிட்டு, அது எப்படி

நடைபெறுகிறது என்பதைப் பார்த்துவிட்டு மற்ற இடங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்ற முறையிலே இந்த திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். மெட்ராஸ் சிட்டியிலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் முதலில் சோதித்துப் பார்க்கலாம். இங்கே படித்தவர்கள் அதிகம்; பெரிய அதிகாரிகள் எல்லாம் போலீஸ் அதிகாரிகள் எல்லாம் இந்தப் பகுதியிலேதான் இருக்கிறார்கள்; அமைச்சர்களும் இங்கேதான் இருக்கிறார்கள். ஆகவே, இந்த இரு பகுதிகளிலும் முதலில் மதுவிலக்குத் திட்டத்தைச் செயல் படுத்திப் பார்த்துவிட்டு, மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். வடிவேல்** : தலைவரவர்களே, நான் இந்தத் திருத்தத்தை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : இந்தக் கருத்து முதலில் பரிசிலனை செய்யப்பட்டது. சில மாவட்டங்களில் பூரண மதுவிலக்கை அமல் செய்துவிட்டு, மற்ற மாவட்டங்களில் மதுவிலக்கு இல்லை என்று சொன்னால், அது அரசியல் சட்டத்திற்கு முரணாக இருக்கும் என்று கருதப்பட்டது. ஆகவே, அந்த முயற்சி கைவிடப்பட்டு, முதலில் எல்லாப் பகுதிகளிலும் கள்ளுக் கடைகளை எடுத்துவிடுவது; அதன் பின்னால் சாராயக் கடைகளை எடுத்துவிடுவது என்ற கொள்கையை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தத் திருத்தம் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.





**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : தலைவரவர்களே, "தமிழ்நாடு 1973-ம் ஆண்டு மதுவிலக்கு (செயல்திறனை நிறுத்தி வைத்தல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/73) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஈ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு ஆயத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/73)

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1973-ம் ஆண்டு ஆயத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1973) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

இம்மாமன்றத்தில் முன்னரே குறிப்பிடப்பட்டவாறு, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 47-வது பிரிவில் கண்டுள்ள நெறிமுறைக் கோட்பாடுகளை ஒட்டி, இம்மாநிலத்தில் மதுவிலக்கை மீண்டும் படிப்படியாகச் செயலுக்கு கொண்டுவருவதென இவ்வரசு முடிவு செய்து அதன் முதற்படியாக 1973-ம் ஆண்டு செப்டம்பர் 1-ம் நாளிலிருந்து தமிழ்நாட்டில் உள்ள கள்ளுக்கடைகள் அனைத்தும் மூடப்பட்டுவிட்டன. அதன் விளைவாக தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஆயத்தீர்வைச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் எண் 34/1971) கள் பற்றிய குறிப்பீடுகளை நீக்கும் வகையில் அச்சட்டத்தைத் திருத்துவது அவசியமாகிறது.

இதன் அவசர நிலையைக் கருதி 1973-ம் ஆண்டு ஆயத் தீர்வை (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 5/1973) என்கிற அவசரச் சட்டம் ஒன்றை இதற்கெனச் சாற்றுரைக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

---

* 22—11—1973 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா] [1973 நவம்பர் 29

மேற்படி அவசரச் சட்டத்திற்குப் பதிலாக இந்த சட்ட முன்வடிவு இப்போது கொண்டுவரப்படுகிறது.

இந்தருணத்தில், ஆயத் தீர்வை விதிக்கப்படத்தக்க பொருள்கள் மீது எந்தப் பேரளவு வரம்புக்கு உட்பட்டு ஆயத்தீர்வை அல்லது அதற்கீடான தீர்வை விதிக்கப்படலாம் என்று மேற்படி சட்டத்தின் 20-வது பிரிவில் குறிப்பிடப்படக்கூடிய வகையில் அப்பிரிவைத் திருத்தவும், தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 1/1959) அந்நிய மதுவகை மீது விற்பனை வரி விதிப்பதற்கு வகை செய்வதால், அத்தகைய விற்பனை வரி விதிப்புக்கு வகை செய்யக்கூடிய மேற்படி சட்டத்தின் 28-வது பிரிவை விட்டுவிடவும் இச்சந்தர்ப்பம் பயன்படுத்திக்கொள்ளப்படுகிறது.

இத்தீர்மானத்தை ஏற்குமாறு இம்மாமன்றத்தை நான் இப்போது கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், இந்தச் சட்டம் வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யக்கூடிய பிராண்டி, விஸ்கி போன்ற பொருட்களுக்கு 1959-ம் ஆண்டு சட்டத்திலும் வரி விதிப்பதற்கு அதிகாரம் இருக்கிறது ; 1971-ம் ஆண்டு இருக்கக் கூடிய சட்டத்திலும் அதிகாரம் இருக்கிறது. ஆகவே, ஏதாவது ஒரு சட்டத்தைப் பயன்படுத்தினால் போதும் என்ற அடிப்படையிலே. ஒரு சட்டத்தின்கீழ் வரி விதிக்க வேண்டுமென்று இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யக்கூடிய பிராண்டி, விஸ்கி போன்றவைகளுக்கு ஏன் அதிக வரி விதிக்கக்கூடாது ? இந்தச் சட்டத்திலே ஏன் அதற்கு வகை செய்யக்கூடாது ? வெளிநாட்டுப் பொருட்களுக்கு அதிக வரி விதிக்க வகை செய்யாதது பணக்காரர்களுக்கு 'சலுகை அளிப்பதாக ஆகும் அல்லவா ? அதற்கு அமைச்சரவர்கள் விளக்கம் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கனம் சபாநாயகர் அவர்களே, ஆயத்தீர்வை திருத்த மசோதாவின்மீது பேசும்போது ஒன்று கேட்க விரும்புகிறேன். இன்றைக்குக் கள்ளுக் கடையை



1973 நவம்பர் 29] [திருமதி த. ந. அனந்தநாயகி]

மூடிவிட்டார்கள், சாராயக் கடைகளை எப்போது மூடுவார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் இந்தப் பேரவைக்குத் தெரிவிக்க வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக மூடுவோம் என்பது சரியல்ல, சீக்கிரமாக அவற்றை மூடவும் இந்த அரசு முன்வந்தாக வேண்டும்.

கள்ளுக் கடைகளைப் பொறுத்தவரையில் இன்றைக்கு ஆயத் தீர்வையில் இருந்து அவைகளை விலக்கிவிட்டார்கள். இன்றைக்கு கள்ளுக் கடைகளை நடத்தியவர்கள் எல்லாம் சேர்ந்து ஹைக் கோர்ட்டில் ரிட் மனுக்கள் போட்டு அதன்மீது கள்ளுக் கடைக்காரர்களிடம் இருந்து ரெவின்யூ ஆக்ட் ஜப்தி முறையில் நடவடிக்கை எதுவும் எடுக்கக்கூடாது என்று தீர்ப்பு வழங்கப் பட்டிருக்கிறது. இனிமேல் ஒவ்வொரு மாவட்டத்திலும் தாசில்தார் ஒவ்வொரு கடையாகப் பார்த்து, ஏன் நஷ்டம் வந்தது, ஏன் மூடினார்கள் என்கிற விவரங்களை எல்லாம் சேகரித்து ஆராய்ந்து பார்த்து அதற்குப் பின்னால்தான் இதுபற்றிய ஒரு முடிவைத் தெரிவிக்க வேண்டுமென்ற அடிப்படையில் தீர்ப்பு வழங்கப் பட்டிருக்கிறது. கள்ளுக் கடை ஏலம் எடுத்தவர்கள் எல்லோரும் பணக்காரர்கள் அல்ல. இதில் ஏதோ பெரிய லாபம் வந்துவிடும் போல் எண்ணி, சிலர் சென்று ஏலம் எடுத்து மாட்டிக் கொண்டிருக்கிறார்கள் இவர்களுடைய பிதுரார்ஜித சொத்துக்களேகூட போகக்கூடிய நிலையில்தான் இருக்கிறது.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். ஆயத்தீர்வை மசோதாவில் கள்ளுக் கடைக்காரர்களைப்பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார். . .

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஏன் பேசக்கூடாது ? இன்றைக்கு அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற கஷ்டத்தைச் சொல்கிறேன். நான் சொல்வதை எல்லாம் அப்படியே நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதில்லை. நியாயமாக நடக்க வேண்டும் என்று சொல்லக்கூடாதா ? கள்ளுக் கடை ஏலம் எடுத்து இரண்டு மாதங்கள் நடத்தி, அந்த இரண்டு மாதங்களுக்கான தொகையையும் கட்டிவிட்டு, மேற்கொண்டு அந்தக் கடையை என்னால் நடத்த முடியவில்லை என்று ஓடிவிட்டால், அதனை மறு ஏலம் போட்டார்கள். மறு ஏலத்தில்

முன்பு ஏலம் எடுக்கப்பட்ட தொகையைவிட எவ்வளவு குறைந்திருக்கிறதோ, அதை முன்னே ஏலம் எடுத்தவர்கள் தான் கொடுக்க வேண்டும் என்கிறபோது இது எப்படி நியாயம்? . . .

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அவரே ஒரு வழக்கறிஞர். சட்டப்படியான ஒரு விளக்கத்தைச் சொன்னால் அவருக்குப் புரியும் என்று நினைக்கிறேன். ஏலம் எடுக்கிறபோது ஒரு அக்ரிமெண்டு செய்துகொள்ளப்படுகிறது. அந்த அக்ரிமெண்டுபடி அந்தக் கடையை விட்டுவிட்டுப் போகிறவர், அந்தக் கடை மறு ஏலத்திற்கு விடுகிறபோது இவர் கேட்டதைவிட எவ்வளவு குறைந்து போகிறதோ, அந்தக் குறைவான தொகையை இவரே கொடுக்கவேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறபோது, அதை வசூலிப்பதில் என்ன தவறு இருக்கிறது?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** These are all lop-sided contracts You must give guidelines. உங்களுக்கு சாதகமான கண்டிஷன்களை எல்லாம் போட்டுக்கொண்டு அக்ரிமெண்டு என்று அவர்களிடத்தில் கையெழுத்து வாங்கியிருப்பதனாலேயே அது நியாயம் என்று சொல்ல முடியுமா? இன்றைக்கு கள்ளுக் கடை ஏலம் எடுத்தவர்கள் பலர் கடையை விட்டு ஓடிவிட்டார்கள். அப்படி ஓடியவர்கள் எல்லோரும் தாங்கள் கடையைத் துறந்து ஓடியதற்கு ஒரேமாதிரியான காரணத்தைச் சொல்லவில்லை. ஒருவர் சொல்கிறார், ப்ராஞ்ச் ஆபீஸ் என்று ஓப்பன் பண்ணிவிட்டார்கள். அதனால் எனக்கு நஷ்டம் வந்துவிட்டது. ஓடினேன் என்கிறார். இன்னொருவர் சொல்கிறார், என் கடைக்குப் பக்கத்தில் கள்ளச்சாராயம் காய்ச்சி விற்க ஆரம்பித்தார்கள், நான் மாவட்ட போலீஸ் அதிகாரிக்குச் சொன்னேன், மாவட்ட ஆட்சித் தலைவருக்குச் சொன்னேன், அவர்கள் அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை, எனக்கு நஷ்டமாகி ஓடிவிட்டேன் என்கிறார். இன்றைக்கு ஹைக்கோர்ட் தீர்ப்புப்படி ஒவ்வொரு கடையைப் பற்றியும் தாசில்தார் விசாரிக்க வேண்டுமென்றால்—அந்தத் தாசில்தார்களுக்கு சர்க்கார் ஒரு கைடிலைன் கொடுத்தாக வேண்டும் . . .





**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** சார். . . மாண்புமிகு உறுப்பினர் கள்ளுக் கடைக்காரர்களுக்காக இவ்வளவு தூரம் இங்கே பரிந்து பேசுவார்கள் என்று நான் நினைக்கவில்லை. அதற்கு இந்த நேரத்தையும் பயன்படுத்துவார்கள் என்று எண்ணவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** This is highly objectionable. The hon. Member is casting aspersion on me.
சமுதாயத்தில் யார் பாதிக்கப்பட்டிருந்தாலும் அவர்களைப் பற்றி இந்த அவையில் எடுத்துச்சொல்லலாம். அப்படிச் சொல்வதில் என்ன தப்பு? கள்ளுக்கடைக்காரர்களுடைய கஷ்டங்களை எடுத்துச் சொல்வதில் என்ன தப்பு? அவர்களுடைய நிலை கொஞ்சம் பரிவோடு கவனிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது, திரும்பவும் தாசில்தார்களைக் கொண்டு ஒவ்வொரு கடைக்காரரைப் பற்றியும் விசாரிக்கிறபோது, இன்னமாதிரியாக விசாரிக்க வேண்டுமென்று அரசாங்கம் அவர்களுக்கு கைய்டிலைன்ஸ் கொடுக்க வேண்டுமென்று சொல்வதில் என்ன முறைகேடு இருக்கிறது என்று கேட்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** கள்ளுக் கடைக்காரர்களையும், கள்ளப் பதுக்கல்காரர்களையும் பற்றிப் பேசுவதற்கு இது இடம் இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நான் இப்படிப் பேச வேண்டாம், இப்படிப் பேசக்கூடாது என்பதற்கு நீங்கள் யார்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் தலைவரைப் பார்த்துப் பேசுங்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அவர் இப்படியெல்லாம் பேசுவது நியாயம்தானா?
The hon. Member has no business to say that. He cannot cast aspersion on another hon. Member.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினருக்கு ஒரு விளக்கம் சொல்லிவிட்டால் எல்லாம் சரியாகி விடும் என்று நினைக்கிறேன். உயர்நீதி மன்றத் தீர்ப்பு வந்திருக்கிறது. இன்னமும் அதன் காப்பி கிடைக்கவில்லை.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1973 நவம்பர் 29

அதைப் பார்த்த பின் அரசாங்கம் அதன்மீது அப்பில் செய்ய வேண்டும் என்றும் முடிவு எடுக்கலாம். அல்லது தீர்ப்பின்படி மீண்டும் தனித்தனியாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவும் முடிவு செய்யலாம். எப்படி இருந்தாலும் யாருக்கும் பாதகம் ஏற்படாத முறையில், நியாயமாக எடுக்க வேண்டிய முடிவுகளையே இந்த அரசாங்கம் எடுக்கும், பட்சபாதம் இல்லாத முறையில் என்கிற உறுதியை நான் அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இன்றைக்கு இருக்கிற நிலைமை அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் சிக்கல்கள் ஏற்படுவதற்கு வழியிருக்கிறது. வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று பாரபட்சம் காட்டப்படுவதற்கும் வழியிருக்கிறது, ஆகவேதான் இதுபற்றி கடுமையான அளவிற்குப் போகாமல், நியாயமான அளவில் சில கையிட் லைன்சுகளை அமைத்துக் கொடுத்து இதுபற்றி ஒரு முடிவு சுமுகமாக ஏற்பட வழிசெய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். Proper guidelines must be given by Government.

கள்ளுக்கடைகளை மூடியதோடு கூட, சாராயக் கடைகளையும் மூடியாகவேண்டும். குடிப்பழக்கம் தமிழகத்திற்கு இருக்கக் கூடாது. மைசூரில் இருக்கிறதே என்பது சரியான வாதம் ஆகாது. 1937- இல் இருந்து இதுவரை குடி இல்லாது காத்த பெருமை தமிழகத்திற்கு உண்டு. ஆகவே குடியை ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், சாராயம் காய்ச்ச கொடுக்கப்பட்ட உரிமங்களையும் ரத்து செய்யவேண்டும் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அம்மையார் அவர்களுடைய கருத்துக்கு நான் முன்பே பதில் அளித்து விட்டேன். திரு. பழனிசாமி அவர்கள் விற்பனை வரியை அதிகப்படுத்தினால் என்ன என்று சொன்னார். அதைப் பரிசீலிக்கலாம். வாய்ப்பு இருந்தால் அதிகம் போடலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1973 நவம்பர் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி: தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு ஆயத்தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 18 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு ஆயத்தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/73) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(உ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/73)**

[பிற்பகல் 1-00]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

“தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு (திருத்தச்) சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1973) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படவேண்டும்” என்று முன்மொழிகிறேன்.

---

* 22—11—1973 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1955) 3-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் கீழ், நில உரிமையாளர், குறிப்பிட்ட சில காரணங்களைக் காட்டி, பயிரிடும் குத்தகைக் காரரை வெளியேற்றுவதற்காக மனுச் செய்து கொள்ளலாம். அவருக்குச் சேர வேண்டிய குத்தகை கொடுக்கப்படாமை, நிலத்திற்கு அல்லது பயிருக்கு ஊறு விளையும் வகையில் பணியில் அசட்டையாக இருத்தல், நிலத்தைப் பயிரிடத் தவறுதல், வேளாண்மை அல்லது தோட்டத் தொழில் அல்லாத பிற காரியத்திற்காக நிலத்தைப் பயன்படுத்துதல், அல்லது அந்த நிலம் குறித்து நில உரிமையாளரது உடைமையுரிமையை வேண்டுமென்றே மறுத்தல் போன்ற காரணங்களுக்காகக் குத்தகைக்காரரை வெளியேற்ற நில உரிமையாளர் மனுச் செய்து கொள்ளலாம். மேலே சொல்லப்பட்டுள்ள காரணங்களில் எதை முன்னிட்டேனும் பயிரிடும் குத்தகைக்காரரை வெளியேற்ற விழையும் நில உரிமையாளர் ஒருவர், மேற்படி சட்டத்தின் 3-வது பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின் கீழ் வருவாய்க் கோட்ட அதிகாரிக்கு மனுச் செய்து கொள்ள வேண்டும். குத்தகைக்காரரை வெளியேற்றி, வருவாய்க் கோட்ட அதிகாரி பிறப்பிக்கும் ஆணைக்கு எதிராக, குத்தகைக்காரர், மேற்படி சட்டத்தின் 6-பி பிரிவின் கீழ் உயர் நீதிமன்றத்திற்கு மறு விசாரணை மனு ஒன்றைச் செய்து கொள்ளலாம். ஆனால், குத்தகைக்காரரை வெளியேற்றி வருவாய்க் கோட்ட அதிகாரி பிறப்பித்த ஆணை, உயர் நீதிமன்றத்தினால் தள்ளி விடப்படும் நேர்வில் குத்தகைக் காரரின் சுவாதீனத்தில் மீண்டும் நிலத்தை ஒப்படைக்க வருவாய்க் கோட்ட அதிகாரிக்கு அதிகாரமளிக்கும் விதித்துறை எதுவும் இச்சட்டத்தில் இல்லை. வெளியேற்ற ஆணையை உயர் நீதிமன்றம் மாற்றியமைத்தபோதிலும் நிலத்தினை மீண்டும் தமது சுவாதீனத்தில் பெற இயலாத நிலையில் குத்தகைக்காரர்கள் உள்ளதால், குத்தகைக்காரர்களுக்கு இதனால் இடர்ப்பாடு ஏற்படுகிறது.

வருவாய்க் கோட்ட அதிகாரி, குத்தகைக்காரரை வெளியேற்றிப் பிறப்பித்த ஆணையை, உயர் நீதிமன்றம் மறு விசாரணை செய்து தள்ளிவிடும் நேர்வில், பயிரிடும் குத்தகைக்



காரருக்கு இடர் ஏற்படாமல் இருப்பதற்காக, நிலத்தை அக்குத்தகைக்காரரின் சுவாதீனத்தில் ஒப்படைக்குமாறு உயர் நீதிமன்றம் ஆணையிட வகை செய்து சட்டத்தில் விதித்துறை செய்ய வேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ளது. அரசின் மேற்படி முடிவைச் செயல்படுத்துவதே இச்சட்ட வரைவின் நோக்கமாகும்.

பேரவைத் தலைவர் அவர்களே, இப் பிரேரணையை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இம்மன்றத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எஸ். வடிவேல்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பயிரிடும் சாகுபடியாளர்கள் திருத்த மசோதா உண்மையிலே நல்ல நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டாலும்கூட, இன்றைக்கும் இதுவரையிலே போடப்பட்டுள்ள சட்டங்கள் அனைத்தும் உழவர்களுக்கே பயன்படவில்லை என்பது நாடறிந்த உண்மை. குறிப்பாக, குத்தகைப் பதிவுச் சட்டத்தில் பதிந்திருந்தாலும், சிவில் கோர்ட்டுகளிலே வெளியேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் அமைச்சரவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்திலே மட்டும் ஏறத்தாழ 15,000 பேரை நிலத்தைவிட்டு வெளியேற்றிருக்கிறார்கள். அவர்கள் கையெழுத்திட்டு கொடுத்துள்ள மகஜர் பூராவையும் நான் முதலமைச்சரிடம் கொடுத்திருக்கிறேன். இன்று அரசு போடுகின்ற சட்டங்கள் எல்லாம் பயன் அளிக்கக்கூடாத அளவுக்கு நிலைமை இருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். இதற்கு நிவாரணம் அளிக்க வேண்டுமானால், எந்தக் காரணத்தைக் கொண்டும் நிலத்தைவிட்டு அப்புறப்படுத்தாமல் இருக்கக்கூடிய அளவுக்கு ஒரு சட்டத்தை உடனடியாகக் கொண்டு வரவேண்டும். அது ஒழுங்காக அமுல்படுத்தப்படுமா என்பதையும் அமைச்சரவையிலே கவனிக்க வேண்டும்.

இன்றிருக்கிற நிலைமையைப் பார்ப்போமானால், 1971 ஆம் ஆண்டு, அரசு புள்ளி விவரப்படி, 64 லட்சம் பேர் சாகுபடியாளர்கள். இப்பொழுது, அரசு கொடுத்திருக்கின்ற புள்ளி

விவரப்படி 48 லட்சம் பேர்தான் சாகுபடியாளர்கள் இருக்கிறார்கள். 16 லட்சம் பேர்கள் தற்பொழுது நிலத்தை இழந்திருக்கிறார்கள் என்பதையும் இந்தச் சமயத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் இன்றைக்கு விவசாயத் தொழிலாளர்களாக மாறி இருக்கிறார்கள்—நிலத்தை இழந்திருக்கிறார்கள்.

குத்தகை பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அச்சட்டம் நல்ல நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டாலும் கூட, நம்முடைய மாநிலம் பூராவும் 4 லட்சம் பேர்தான் பதிவு சட்டத்திலே இன்றைக்கு பதிவாகி இருக்கிறார்கள். பாக்கி 44 லட்சம் பேர்கள் குத்தகைப் பதிவு சட்டத்திலே பதிவாகாமல் இருக்கிறார்கள் என்று சொன்னால், ரெவினியூ நிர்வாகம் எப்படி செயல்படுகிறது என்பதற்கு இதை உதாரணமாக நாம் பார்க்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் 1955-ம் வருஷமே வந்திருந்தாலும் இன்றைக்கு எத்தனைச் சட்டங்களைக் கொண்டு வந்தாலும், பாடுபடுகின்ற விவசாயிகளுக்குப் பலன் அளிக்காத அளவுக்கு எந்த எந்த வகைகளிலே, மோசமான வகைகளிலே விவசாயிகளை வெளியேற்ற வேண்டுமோ அந்த வகையிலே இன்றைக்கு வெளியேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் கண்கூடாகப் பார்க்கவேண்டும். அந்த நிலையில் பார்ப்போமானால், ஒருங்கிணைந்த சட்டத்தை, உண்மையிலே அவர்கள் நிலத்தை விட்டு அப்புறப்படுத்தப்படாமல் இருக்க அரசு நல்ல அம்சங்களோடு கொண்டு வரவேண்டுமென்று சொல்லி, முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய திருத்த மசோதா மிக முக்கியமான மசோதாவாகும். விவசாயிகள் தங்களுடைய நியாயத்தை எடுத்துச் சொல்வதற்காக அப்பீல் செய்து கொள்வதற்கு முன்னாலே வரம்பு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. அந்த வரம்பை இன்றையதினம் தளர்த்தக் கூடிய அளவில் இம்மசோதா அமைந்திருக்கிறது. குத்தகைக்கோ, வாரத்திற்கோ உழக்கூடிய விவசாயிகளில் அனேகமாக 90 சதவிகிதத்தினர் படிக்கத் தெரியாதவர்களாக இருக்கிறார்கள். அவர்களை ஏமாற்று



வதற்காக நிலப் பிரபுக்கள், அல்லது நிலத்தைச் சொந்தமாக வைத்துக்கொண்டு குத்தகைக்கு வைத்திருக்கக்கூடிய நபர்கள் விவசாயிகளைப் பல வகைகளிலே வெளியேற்றிவிடுகிறார்கள். அவர்களை வெளியேற்ற விடாமலிருப்பதற்காக வந்திருக்கக்கூடிய சட்டங்களிலே நிறைய இடைவெளி இருக்கிறது. இதன் காரணமாகத்தான் ஒன்றும் அறியாத கிராம விவசாயிகள் வெளியேற்றப் பட்டு விடுகிறார்கள்.

அது மட்டுமல்லாமல் ரெவின்யூ அதிகாரிகள்தான்—இன்றைய தினம் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஆதரைஸ்டு ஆபீசர்ஸ் என்றெல்லாம் இருக்கிறார்கள். இன்றையதினம் அப்பீல் செய்து கொள்வதற்கு கமிஷனெல்லாம் நியமிப்பதாக மசோதாவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. முனிசீப் கோர்ட்டுக்கு செல்கிறார்கள். நடைமுறையிலே எப்படி விவசாயிகள் அந்த நிலத்தை சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அறியாதவர்கள் முன்சீப் கோர்ட்டிலே இருக்கக் கூடியவர்கள். அவர்கள் ரெக்கார்டுகளை மாத்திரம் வைத்துக்கொண்டு, விவசாயிகள் பல வருஷங்கள் அந்த நிலத்திலே சாகுபடி செய்தாலும், அதிலிருந்து வெளியேற்றி விடுவதற்கு உத்தரவிடுகிறார்கள். இஞ்சங்க்ஷன் செய்து விடுகிறார்கள், இஞ்சங்க்ஷன் ஆர்டர் வாங்கி விடுகிறார்கள். இஞ்சங்க்ஷன் வாங்கிய வழக்குகள் இந்த ஆண்டிலே மட்டும் நூற்றுக்கணக்கிலே இருக்கின்றன என்பதை நான் சொல்ல முடியும். ஆகவே, நிலத்திலே நிலத்திற்குச் சொந்தக்காரனும் போக முடியாமல், உழுது கொண்டிருக்கக்கூடிய வாரத்துக்காரர்களும் பிரவேசிக்க முடியாமல் தரிசாகக் கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதன் காரணமாக, சிவில் கோர்ட்டுகளுக்குப் போகக்கூடிய ஷரத்துக்கள் எந்தச் சட்டத்திலே இருந்தாலும் அதை நீக்குவதற்கு அரசாங்கம் ஆலோசிக்க வேண்டுமென்று, மற்றுமொன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தற்பொழுது பரிபூரணமாக நிலச் சீர்திருத்தச் சட்டம் தேவைப்படுகிறது. இன்றைக்கு வந்திருக்கக் கூடிய சட்டங்கள் எல்லாம் விவசாயிகளுக்கு நல்லது செய்யக் கூடியவையாக இருந்தாலும் சட்டத்திலே இருக்கக் கூடிய சில ஷரத்துக்கள் நிலப்பிரபுக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய, அந்த நிலத்தை அவர்கள் எடுத்துக்கொள்ளக் கூடிய நிலை இருப்பதன் காரணமாக, விவசாயிகள் பூரணமாக இதன் பலனை அனுபவிக்க முடியாத நிலை

[திரு. ஆ. கு. சுப்பையா] [1973 நவம்பர் 29

ஏற்பட்டிருக்கிறது. இன்றையதினம், அரசாங்கம் விவசாயிகள் மீது, குத்தகைதாரர்கள்மீது அக்கறைகொண்டு, நில உடைமையைச் சொந்தமாக வாங்கி, சட்டம் கொண்டு வந்து, அந்தச் சட்டம் இன்னும் அங்கீகாரம் பெறாமல் இருக்கிறது. இன்றைக்கு குத்தகைப் பதிவு சட்டம் வந்தும்கூட பல மாவட்டங்களிலே, விவசாயிகள் சாகுபடி செய்துகொண்டிருப்பது பதிவு செய்யப்படாமல் இருக்கிறது. அதைக் கேட்டு அறிந்து எல்லா மாவட்டங்களிலும் இன்றையதினம் நிலத்தையெல்லாம் யார் உழுது கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் கண்டிப்பாகப் பதிவு செய்தாக வேண்டுமென்ற நிலையை மேற்கொள்ளவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அது மாத்திரமல்லாமல், நிலப்பிரபுக்களிடமிருந்து உபரியாக எடுத்த நிலங்களையெல்லாம் பினாமி குத்தகைதாரர்கள் என்று பதிவு செய்து, அந்த குத்தகை தஸ்தாவேஜுகளை வைத்துக் கொண்டு, அந்த நிலத்தை சொந்தமாக விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

தஞ்சை மாவட்டத்திலே வலிவலம் கிராமம் பெரிய நிலப் பிரபுக்களுடைய கிராமம். அந்தக் கிராமத்திலே உபரியாக எடுத்த நிலங்கள்கூட, இந்த மாநிலத்திலேகூட அல்ல, வேறு மாநிலத்திலே இருப்பவர்கள் குத்தகைதாரர்களாக அவர்கள் பெயர் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதை அதிகாரிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். குறிப்பாக, சொந்தக் குத்தகைதாரர்கள் சட்டப்பிரகாரம் பதிவு செய்யப்பட்டிருந்தால் அவர்களுக்குத்தான் என்று உயர்நீதிமன்றம்கூட தீர்ப்பளித்திருக்கிறது என்பதைப் பார்க்க முடியும். மைசூரிலிருக்கிற ஒரு நபர் வலிவலத்திலே குத்தகைக்குச் சாகுபடி செய்வதாக தஸ்தாவேஜுகள் இருக்கின்றன. அந்த ஊரிலே வோட்டராகவும் இல்லை, குடியும் இல்லை, இந்த மாநிலத்திலே கூட இல்லை. மைசூரிலே இருக்கக்கூடிய நபர் தஸ்தாவேஜு வைத்திருக்கிறார் என்று சொன்னால், அந்த அளவுக்கு இப்பொழுது ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு, ஏழை விவசாயிகளுக்கு நிலத்தை அளிக்காது, வேறு வகையிலே அவர்கள் சொந்தமாகவே நிலத்தை வைத்திருக்கிறார்கள் என்பது இதிலிருந்து புலனாகிறது. இந்த மாதிரி பினாமி மாற்றங்களை



1973 நவம்பர் 29] [திரு. ஆ. கு. சுப்பையா]

ரத்து செய்து, நேரடியாக அந்த நிலங்களை விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய அளவுக்கு அரசாங்கம் விரைவிலே ஒரு சட்டம் கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று மடாதிபதிகள், கோயில்கள், ஆதினங்கள் போன்றவைகள் எல்லாம் தங்கள் சொந்தப் பண்ணைக்கு நிலத்தை வைத்திருக்கின்றன. அந்த நிலங்களுக்கும் ஒரு முடிவு கட்ட வேண்டுமென்று அரசாங்கத்திற்கு இந்த பலகீனங்களை எடுத்துக் கூறி நான் அமர்கிறேன். வணக்கம்.

* **திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவர் அவர்களே, இப்பொழுது கொண்டுவந்திருக்கக்கூடிய இந்த மசோதாவை நான் ஆதரித்து இரண்டொரு வார்த்தைகளைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முன்னாலே பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர் சுப்பையா அவர்கள் கூறியதைப்போன்று அநேகம் பேர்கள் விவசாயிகள் தங்களுடைய நிலத்திற்குத் தாங்கள் குத்தகைதாரர் என்று பதிவு செய்ய முடியாத நிலைமையிலே இருக்கின்றபொழுது அப்படிப்பட்ட இடங்களிலே நில உடைமையாளர்கள் கோர்ட்டுகளுக்குச் சென்று இன்ஜங்ஷன் ஆர்டர் வாங்கி விடுகிறார்கள். இதனாலே பல விவசாயிகள் தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள் என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். உதாரணமாக மதுராந்தகம் தாலுகாவிலே ஒரு கிராமத்தில்—நான் அந்தக் கிராமத்தின் பெயரை அமைச்சர் அவர்களிடத்திலே நேரிலே கொடுக்கிறேன்—இரண்டு தலைமுறையாக சாகுபடி செய்துகொண்டுவந்த விவசாயிகள்—அவர்கள் இது மாதிரி ரிஜிஸ்டர் செய்துகொள்ளவேண்டுமென்ற சட்டம் வந்திருக்கிறது என்பது தெரியாமல் இருந்தாலும் அந்த நிலச் சொந்தக்காரரும் அரசாங்கம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததை ரகசியமாக அவர்களிடம் சொல்லாமல் வைத்திருந்தால் பிறகு தெரிந்து செய்யலாம் என்று காலந்தாழ்த்திக் கொண்டே வந்த காரணத்தினாலும்—அவர்களுக்கு அந்தச் சட்டம் தெரியாத காரணத்திலே அந்த நிலச் சொந்தக்காரர் அந்த நிலத்தைத்தான் சாகுபடி செய்துகொண்டுவருவதாகச் சொல்லி, அவர்கள் செய்தது டிரஸ்பாஸ், அதாவது அத்துமீறி செய்தார்கள்

[திரு. மணலி சி. கந்தசாமி] [1973 நவம்பர் 29

[illegible] திருத்தங்களுக்கு உதவி செய்யக்கூடிய நிலைமை ஏற்படும். இந்தத் துறையிலேயுங்கூட புதிய அமைச்சர் கிடைக்கும். பொதுவாக ரெவின்யூ இலாகாவே பிரிட்டிஷார் காலத்திலிருந்தே நிலப்பிரபுக்களுக்கு மிகவும் தொடர்புடைய இலாகாதான் என்பதனை யாரும் சந்தேகிக்க மாட்டார்கள். அந்தத் தொடர்பினால் அவர்களுடைய மூளையே மழுங்கடிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இந்தச் சட்டத்தைப் புதிய கண்ணோட்டத்தோடு பார்க்க விரும்ப மாட்டார்கள்.

இதிலே பல ஒழுங்கீனங்கள் இருக்கின்றன, அந்த லாவண்யம் நடைபெற்றிருக்கிறது. நான் யாரையும் இழுத்துவைத்துப் பேச வில்லை. அதனால் பாதிக்கப்படுகிறவர்கள் விவசாயிகள். அவர்கள் நிலத்தைவிட்டு வெளியேற்றப்படுகிறார்கள் என்றால் அதைவிடப் பெரிய வேதனையான விஷயம் இருக்கமுடியாது. உபரி நிலத்தை விநியோகம் செய்வோம் என்று ஒரு பக்கத்திலே மூச்சு பிடித்து செய்துகொண்டிருக்கின்றபொழுது, இன்னொரு பக்கத்திலே குத்தகைதாரர்களை வெளியேற்றுகின்ற படலம் நடந்துகொண்டிருக்குமானால் அது பொருந்தாத விஷயம்.

அமைச்சர் அவர்கள் இந்தத் திருத்தத்தோடு நிற்காமல் இந்த புரொடெக்ஷன் ஆக்ட் எந்த அளவிற்கு வேலை செய்திருக்கிறது, எந்த அளவிற்கு விவசாயிகளுக்குப் பாதுகாத்து இருக்கிறது, வழக்குகளிலே தெரியக்கூடிய உண்மையான விவரங்கள் என்ன என்ன என்பதையெல்லாம் ஆராய்கின்ற அடிப்படையிலே என்ன என்ன திருத்தங்களைக் கொண்டுவரவேண்டுமோ அதைச் செய்தால்தான் உதவிகரமாக இருக்கும். அந்த அடிப்படையிலே நான் பார்க்க விரும்புகிறேன். ரெவின்யூ அமைச்சர் அவர்கள் விவசாயிகளைப் பாதிக்கின்ற அளவிலே எந்த ஓட்டைகள் இருக்கின்றன, ரிவிஷன் கோர்ட் வழக்குகள் எந்த அளவுக்கு இருக்கின்றன, பினாமி பேர்வழிகள் எந்த அளவிற்கு இருக்கிறார்கள் என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து சமுதாயத்திற்கு உதவி செய்யக்கூடிய முறையிலே நீங்கள் சட்டங்கள் கொண்டுவரவேண்டுமென்று சொல்லிக்கொண்டு இந்தத் திருத்தத்தை ஆதரித்து முடிக்கிறேன்.



1973 நவம்பர் 29]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, அவை முன்னால் இருக்கும் சட்டத் திருத்தம் மிக முக்கியமான திருத்தமாகும். இந்த விவசாய குத்தகைதாரர்கள் பாதுகாப்பு சம்பந்தமான மசோதா 1955 ஆம் ஆண்டில் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்திற்கு இப்பொழுதுதான் ஒரு திருத்தம் கொண்டுவரும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. திரு. மணலி அவர்கள் சொல்லியபடி, ஹைகோர்ட்டில் வழக்கு வந்தது. ஏனென்றால் நில உரிமையாளர்கள் குத்தகைதாரர்களை வெளி யேற்ற ஆர்.டி.ஓ. கோர்ட்டிலே நடவடிக்கை எடுத்தார்கள். அந்த ஆர்.டி.ஓ. கோர்ட்டிலே குத்தகைதாரர்களுக்கு அனுகூலமாகத் தீர்ப்பு கொடுக்கவில்லை. அதனால் குத்தகைதாரர்கள் உயர்நீதி மன்றத்தில் 'ரிவிஷன் அப்பீல்' செய்தார்கள். அதை ஏற்றுக் கொண்டாலும்கூட, உயர்நீதிமன்றம் குத்தகைதாரர்களுக்கு அனுகூலமாகத் தீர்ப்பு கொடுத்தாலும்கூட, மீண்டும் அந்த நிலத்தை வாங்கிக்கொடுக்க அதிகாரம் இல்லை என்பதால் அப்படி நீதி வழங்கியும் சட்டத்தின் காரணத்தால் அந்த நீதி கிடைக்காத தால், உயர்நீதி மன்றமே ஒரு அறிவிப்பைத் தந்தார்கள், சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று. ஆனால் இதிலுள்ள குறை என்னவென்றால், இத்தனை ஆண்டுக் காலமாக இந்தச் சட்டம் அமலில் இருந்தாலும்கூட விவசாயத் துறையில் பொறுப்புள்ள தலைவர்களோ, விவசாயிகளோ அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரவில்லை என்பதுதான் நிலைமை. உயர்நீதி மன்றத்தில் குறிப்பிடுகிறார்கள்

"Unlike Courts of law which would have inherent powers although there is no specific enabling statutory provision, the position of statutory bodies entrusted with specified powers is entirely different. The powers of such a statutory body are entirely limited and controlled by the statute which confers them, and, it cannot act outside the limits of the statute creating it. On that view, it could have no inherent power. It is another matter if on a construction of a statutory provision an inference therefrom can be made an ancillary or necessary power to execute the main purpose covered by the statute. But, in our view, that principle will be inapplicable to the construction of Section 4 (5) of the Act."

The High Court has further observed that it may be unfortunate that notwithstanding the reversal of the eviction order, the tenant is unable to get restoration and that it is for the Legislature to provide for the situation.
அந்த உயர்நீதி மன்றத்தினுடைய தீர்ப்புக்குப் பிறகுதான் இது போன்ற திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்று இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. எனவே, குத்தகைதாரர்களின் பாதுகாப்பிற்காக நிறைவேற்றப்படுகின்ற இந்தத் திருத்தத்தை உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான் கடமைபட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சில பேர் ஏராளமான விளக்கங்களைத் தந்தார்கள். சிவில் கோர்ட் இன்ஜெங்க்ஷன் வாங்கியிருப்பதாகச் சொன்னார்கள். ஒன்றை நாம் மறந்துவிடக்கூடாது. நிலப்பிரபுக்கள் அதை அவ்வளவு எளிதாக விட்டுவிட மாட்டார்கள். நிலப்பிரபுக்கள் சட்டத்தின் ஓட்டைகளினாலோ அல்லது வேறு எந்தெந்த வழிகளினாலேயோ பயன்படுத்திக்கொண்டு அந்த நிலத்தைத் தாங்கள் அபகரிக்க வேண்டுமென்பதற்காக நடவடிக்கை எடுப்பார்கள்.

சட்டத்திலே சொல்லியிருக்கிறபடி,

Section 6 of the 1955 Act is:

"6. Bar of jurisdiction of Civil Courts—No Civil Court shall except to the extent specified in section 3 (3), have jurisdiction in respect of any matter which the Revenue Divisional Officer is empowered by or under this Act to determine and no injunction shall be granted by any court in respect of any action taken or to be taken in pursuance of any power conferred by or under this Act."

1955 ஆம் ஆண்டு சட்டத்திலே 6-வது செக்ஷனிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நிலப்பிரபுகள், மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் சொன்னதைப்போல், எந்தவிதமான ஆதாரமும் இல்லாததால், குத்தகைதாரர்கள் நிரூபிக்க முடியாத நிலையில் இன்ஜங்க்ஷன் வாங்க முடியும். அதனால் கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் என்று ஆதாரம் காட்டினால் கோர்ட்



இன்ஜங்க்ஷன் கொடுக்கமாட்டார்கள் என்ற முறையிலேதான் இந்தச் சட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது நம் அரசின் மூலம் குத்தகைதாரர்கள் பதிவு செய்து கொள்ளலாம். Record of Tenancy Act. என்று இருக்கிறது. அதற்குக்கூட காலக்கெடு குத்தகைதாரர்கள் தாங்கள் பதிவு செய்துகொள்ள உரிமை இருக்கிறது. அப்படி குத்தகைதாரர்களே பதிவுசெய்து கொள்ளலாம் அல்லது அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் suo motu என்று விரிவான சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். வடிவேல்:** 6-வது செக்ஷன்படி பாதுகாக்கப்படும் நிலையிருக்கிறது. ஆனால் 4-வது செக்ஷனைப் பயன்படுத்தி வெளியேற்றுகிறார்கள். எனவே, அதை எடுத்துவிட்டால் அந்த அளவிற்குப் போகமாட்டார்கள் என்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** 4-வது செக்ஷன் படி இந்தந்த கண்டிஷன்களுக்கு உட்படாதிருந்தால் வெளியேற்றலாம், குத்தகை பாக்கி கொடுக்க வேண்டும் அல்லது வேறு காரியத்திற்குப் பயன்படுத்தக்கூடாது என்று இருக்கிறது. அதற்கு உட்பட்டு அனுபவிக்க வேண்டுமென்றுதான் சொல்கிறது.

**திரு. எஸ். வடிவேல்:** வேறு எந்தெந்த வகையிலே செய்ய வேண்டுமோ அதைச் செய்வதைப் பற்றி ஆட்சேபணையில்லை. ஆனால் நிலத்தை மட்டும் விட்டு வெளியேற்றாமல் அந்த வகையிலே திருத்தினால் போதுமானது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** 4-வது செக்ஷனிலே, குத்தகைதாரர்கள் அனுபவிப்பதற்கு ஆட்சேபணையில்லை. ஆனால் குத்தகைதாரர்கள் குத்தகை செலுத்த வேண்டும். பூமியை வேறு காரியத்திற்குப் பயன்படுத்தக்கூடாது என்று விதிமுறைகள் இருக்கின்றன. குத்தகைதாரர்கள் அனுபவிக்கின்ற பூமிக்குப் பாதகமோ அல்லது உரிமையாளர்கள் டைட்டில் ஆட்சேபணை செய்யக்கூடிய அளவிற்கு இருக்கக்கூடாது. குத்தகைதாரர்களை வெளியேற்றக்கூடாது என்பதுபற்றி 6-வது

என்று குற்றஞ்சாட்டி முன்சீப் கோர்ட்டிலே ஒரு டெம்பரரி இன்ஜங்ஷனை வாங்கியிருக்கிறார்கள். அதன் காரணத்தினால் நாற்றுவிட்ட நாற்று எல்லாம் பட்டுப்போய்விட்டது. நிலம் தரிசாகக் கிடக்கிறது. அதனாலே 32 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. இந்த நிலையிலே அவர்கள் தங்களைக் குத்தகைதாரர்கள் என்று பதிவு செய்து கொள்ளவேண்டுமென்று கேட்டு அங்கேயுள்ள சப்-கலெக்டரிடம் மனுக்கொடுத்து விசாரணையில் இருக்கிறது. முன்சீப் கோர்ட்டிலே இன்ஜங்ஷனை ரத்து செய்து கொடுத்தால்தான் மேற்கொண்டு நான் நடவடிக்கைகள் எடுக்க முடியும் என்று சொல்லுகிறார். இடையிலே நிலம் பூராவும் தரிசாகக் கிடக்கின்றது. அவர்கள் மதுராந்தகம் பகுதியிலிருந்து செங்கற்பட்டுக்கு கால் நடையாக நடந்தே காசு இல்லாமல் போய் வந்து கொண்டிருக்கின்ற துர்ப்பாக்கியமான நிலைமையைப் பார்க்கிறோம். இப்படி நீண்ட நாட்களாக விவசாயம் செய்து கொண்டிருந்தவர்கள் இந்தச் சட்டம் தெரியாத காரணத்தினால் இப்படி குத்தகைதாரர்கள் விவசாயிகள் தங்களுடைய உரிமையைக் கோருவதற்காக முன்சீப் கோர்ட்டிற்குப் போகக் கூடிய நிலைமையைத் தடை செய்யக்கூடிய முறையிலே சட்டம் கொண்டு வரமுடியுமா என்பதையும் அரசாங்கம் ஆராய வேண்டும்.

விவசாயிகளுக்காக நாம் எத்தனை சட்டங்களை இப்படிக் கொண்டுவந்தாலும்கூட கிராமத்திலே உள்ள விவசாயிகளுக்கு அந்தச் சட்டங்களைப்பற்றிய நன்மைகள் புரியவில்லை என்ற நிலைமை இருக்கிறது. அதற்கு அரசாங்கத்தைமட்டும் பழி சொல்ல முடியாது, அரசியல்வாதிகளும் பொறுப்புதான். நானும் அந்த பழியை ஏற்றுக்கொள்கிறேன், நாம் நல்லமுறையிலே பிரச்சாரம் செய்திருக்க வேண்டும்; புரியாதவர்களுக்காக ஆங்காங்கு செல்வாக்கு உள்ளவர்கள் எடுத்துச் சொல்ல வேண்டும். அதைச் செய்வதற்கு எங்களுடைய செல்வாக்கு சில இடங்களிலே இல்லாமல் இருக்கலாம். பல பேர்களுடன் தொடர்பு எங்களுக்கு இல்லாமல் இருக்கலாம். அவர்களுக்கு அதைத் தெரிவித்து அவர்களும் அந்த நன்மைகளைப் பெறக்கூடிய முறையிலே அரசாங்கம் நல்ல விளம்பரத்தைச் செய்து அவர்களுக்கும் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



நாம் நியாய வாரச் சட்டத்தின் கீழ் குத்தகை பாக்கியிருந்தவர்கள் ஒரு வருஷ குத்தகையைக் கட்டினால் மற்றவையெல்லாம் ரத்து செய்யப்படும் என்ற ஒரு சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். தஞ்சை மாவட்டத்திலே அந்தச் சட்டம் கொண்டு வருவதற்கு முன்னாலே பாக்கியிருந்தவர்களிலே நிலத்தைவிட்டு பல இடங்களிலே பலர் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள், அவர்கள் ஒரு வருஷ குத்தகையைச் செலுத்திய பிறகுதான் அந்த நன்மையை அடையக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆனால் அந்த பாக்கிக்காக கோர்ட்டிலே கேஸ் போடக்கூடிய நிலைமை இருப்பதால், வெளியேற்றப்பட்ட நாளுக்குப் பிறகு குத்தகை பாக்கி கட்டவில்லை என்று கேஸ் போடுவது சரியில்லை. ஆகவே, அவர்களுக்கு வேண்டிய உதவிகளையும் இந்த அரசாங்கம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. மணலி சி. கந்தசாமி:** இந்தத் திருத்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலே ஹைகோர்ட்டிலே சுட்டிக்காட்டியிருக்கக்கூடிய ஒரு ஓட்டையை அடைப்பதற்காக இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதற்கு ஆட்சேபனை எதுவும் இல்லை. பொதுவாகவே இப்படி ஹைகோர்ட் ஜட்ஜ்மெண்ட் கொடுத்த பிறகு ஓட்டையை அடைப்பதற்குப் பதிலாக நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன், இப்படிப்பட்ட சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டுவரும்பொழுது அதில் ஏற்படக்கூடிய பலவீனங்களைப்பற்றி அந்த இலாகா மூலமாகவே பரிசீலனை செய்து அப்பொழுதே அப்படிப்பட்ட திருத்தங்களைக் கொண்டுவருவது உசிதமாகும்.

இந்தச் சட்டம் விவசாயிகள் வெளியேற்றப்படுவதைத் தடுக்கக் கூடிய சட்டம். இந்தச் சட்டத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஓட்டையைச் சரிசெய்வதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது இந்தத் திருத்தம். நீங்கள் சட்டம் கொண்டுவந்த காலத்திலே எவ்வளவு குடியானவர்கள் இருந்தார்கள், விவசாயிகள் எவ்வளவு பேர்கள் இருந்தார்கள், எவ்வளவு பேர்களுக்குக் கிடைத்திருக்கிறது. அவர்களுக்குக் கிடைக்காததற்குக் காரணம் என்ன என்பதைப் பரிசீலனை செய்தால் அவர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்காமல் போனதற்குக் காரணம் என்ன என்பதையெல்லாம் பரிசீலனை செய்து பார்த்தால்தான் நாம் விரும்பக்கூடிய பொருளா

செக்ஷனில் தெளிவாக இருக்கிறது. No suit shall be filed against a tenant. எனவே இந்த விதிமுறைகளின்படி கோர்ட்டிலே இன்ஜங்ஷன் கொடுக்க நியாயம் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிய கருத்துக்களை, மாண்புமிகு உறுப்பினர் மணலி அவர்கள் சொன்ன கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள், ரெவின்யூ இலாக்கா நிலப்பிரபுக்களோடு தொடர்பு கொண்டிருக்கக்கூடிய இலாக்கா என்று. அந்த எண்ணம் மாறி ரொம்ப நாட்களாகி விட்டது என்பது அவர்களுக்கே தெரியும் என்று நினைக்கிறேன். நம்முடைய அரசு அப்படிப் பணியாற்றவில்லை. நிலப்பிரபுக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவில்லை. குத்தகைதாரர்களுக்கு, உழைக்கும் விவசாயிகளுக்கு எந்த அளவிற்கு நியாயமான அளவில் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமோ அந்த அளவிற்கு நம்முடைய சர்க்கார் காரியங்களைச் செய்து வருகிறது என்று கூறி இந்தத் திருத்த மசோதாவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி.

"தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 27/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, "தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/73) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் அரை மணி நேரம் உட்கார்ந்து பாக்கியுள்ள மசோதாக்களையும் முடித்து விடலாமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இன்றைக்கு எடுத்துக்கொண்டிருக்கும் மசோதாக்கள் நிறைவேறும் வகையில் இன்னும் கால் மணி நேரம் அவையை நீடிக்கலாம்.

**(ஊ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/73)**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பேரவைத் தலைவரவர்களே,

"தமிழ்நாடு 1973-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1973) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1961-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 82-வது பிரிவின் கீழ் நில ஆணையாளர், இச்சட்டத்தில் நில நடுவர் நீதி மன்றத்தில் வழக்காடவோ, மேல் முறையீடு செய்து கொள்ளவோ, ஏற்பாடு செய்துள்ள நடவடிக்கையாய் இராத, இச்சட்டத்தின்படிக்கான, ஏனைய நடவடிக்கை குறித்து, அந்த

* 26—11—1973 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டது.

நடவடிக்கை ஒழுங்காக இருக்கிறதா என்று அல்லது அதன்மேல் செய்த முடிவு அல்லது ஆணை சரியானதுதானா, தகுதியானது தானா சட்ட சம்மதமானதுதானா என்று மனநிறைவு பெறுவதற்காக, அதிகாரம் பெற்ற யாதொரு அதிகாரியின் ஆவணத்தை வரவழைத்துப் பரிசீலனை செய்யலாம். எந்த ஒரு நேர்விலாவது, அத்தகைய நடவடிக்கை, முடிவு, அல்லது ஆணை திருத்தப்பட வேண்டுமென, ரத்து செய்யப்பட வேண்டுமென, மாற்றியமைக்கப்பட வேண்டுமென, மறு பரிசீலனைக்காகத் திருப்பி அனுப்பப்பட வேண்டுமென நில ஆணையாளர் கருதினால், அவர் அவ்வண்ணமே ஆணை பிறப்பிக்கலாம்.

82-வது பிரிவின் கீழ் நில ஆணையாளர் மறு விசாரணை அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டுமென சம்பந்தப்பட்ட தரப்பினர் கேட்டுக் கொள்வதற்கான காலவரையறை எதையும் மேற்படி சட்டம் நிர்ணயிக்கவில்லை. மேற்படி சட்டத்தின் கீழ் உள்ள நடவடிக்கைகளுக்கு இறுதித் தன்மை அளிக்க, மேற்படி சட்டத்தின் கீழ் மறு விசாரணைக்காக நில ஆணையாளர்க்கு விண்ணப்பம் கொடுத்துக் கொள்வதற்கென கால வரையறை நிர்ணயிப்பது அவசியமாகும். எனவே, மேற்படி சட்டப் பிரிவின் கீழ், மறு விசாரணைக்காக மனுச் செய்து கொள்வதற்கான கால வரையறையை விதிகள் இயற்றுவதன் மூலம் நிர்ணயிப்பதற்கு அதிகாரங்கள் பெறக் கருதப்பட்டுள்ளது. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன நோக்கத்தை எய்த விழைகிறது.

இப்பிரேரணையை ஏற்று நிறைவேற்றித் தருமாறு நான் இம்மன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு. சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இச்சட்ட முன்வடிவை சட்டமாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு, உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கோருவார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இப்போது மணி ஒன்றரை ஆகிவிட்டது. இரண்டு மசோதாக்கள் இருக்கின்றன. ஹவுசிங் போர்டு மசோதாவில் விரிவாகப் பேச வேண்டும். லோகல் பினான்ஸ் பில்லிலும் சில மெம்பர்கள் பேச விரும்புகிறார்கள். கடந்த மசோதாவைப் போல் ஃபார்மல் மசோதாக்கள் அல்ல இவை. ஆகவே, இவற்றை நாளைக்குத் தொடர்ந்து எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவுற்று நாளை காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.32 மணிக்கு ஒத்தி வைக்கப் பட்டது.

## 7. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. Statutory Rules and Orders.

Nil.

[1973 நவம்பர் 30

**B. *Reports, Notifications and Other Papers.***

@ 43. The Tamil Nadu Town and Country Planning (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 31 of 1973) (with annexure).

@ 44. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on land) Amendment Bill, 1973 (L.A. Bill No. 32 of 1973) (with annexure).

@ 45. The Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1973 (L.A. Bill No. 35 of 1973).

@ 46. The Tamil Nadu Appropriation (N. 5) Bill, 1973 (L.A. Bill No. 36 of 1973).

---

@ Despatched to Members on 27th November 1973.

# தமிழ்நாடு சட்டப் பேரவை.

---

*வெள்ளிக்கிழமை, 1973 நவம்பர் 30.*

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

#### செய்யாறு அறிஞர் அண்ணா அரசினர் கல்லூரி

*509 வினா—**திரு. கே. எ. வகாப்**: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், செய்யாறு அறிஞர் அண்ணா அரசினர் கலைக் கல்லூரியில் போதிய கட்டட வசதியில்லாமையால் 1973-74-ல் பட்டப் படிப்பு வகுப்புகளுக்கு மாணவர்களைச் சேர்ப்பது மறுக்கப்படுகிறது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், மாணவர்களை பட்டப் படிப்பு வகுப்புகளில் சேர்க்கப்படுவது குறித்த நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டு உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. சு. துரைசாமி**: தலைவர் அவர்களே, செய்யார் அறிஞர் அண்ணா அரசினர் கலைக் கல்லூரியைப்போல் பல்வேறு இடங்களில் பட்ட மேற்படிப்பு துவங்குவதற்கு கட்டட வசதியின்மை காரணமாக மறுக்கப்படுகிறது. இனிமேலாவது அப்படியில்லாமல் எந்தெந்தக் கல்லூரிக்குத் துணைக் கட்டடம் தேவையோ அங்கு கட்டடம் கட்ட அரசாங்கம் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: தலைவர் அவர்களே, கிடைத்திருக்கும் நிதி வசதியைப் பொறுத்துத்தான் பல்வேறு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான முயற்சியில்

[1973 நவம்பர் 30

ஈடுபடுகிறோம். எங்கெங்கு கட்டட வசதி இருக்கிறதோ அங்கு பட்ட மேல்படிப்புக்கு பல்கலைக்கழகம் அனுமதிக்கிறது. ஆகவே, மாநிலத்திலிருக்கும் பல்வேறு கலைக் கல்லூரிகளையும் பார்த்து, எங்கெங்கு அவசியப்படுகிறதோ அந்த இடத்திற்கு, கிடைக்கிற நிதியை ஒதுக்கித்தரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். அதன் விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரக் குறிப்பு தரலாம்.

*New building in Guindy Engineering College campus*

* 510 Q.—THIRU N. DENNIS :
THIRU N. KITTAPPA : Will the Hon.
THIRU K. T. K. THANGAMANI :
the Minister for Education and Tourism be pleased to state whether any enquiry has been ordered into the collapse of the Parabolic roofing of the building of the Guindy Engineering College under construction?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இந்நிகழ்ச்சிக்கான காரணங்களை ஆராய வல்லுனர் குழு ஒன்று அரசினால் அமைக்கப்பட்டது. அக்குழுவின் அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

THIRU N. DENNIS : May I know, Sir, whether the negligence in the execution of the work was detected? May I also know the steps that were taken to avoid such negligence?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மூன்றாள் தலைமைப் பொறியாளர் திரு. ஒ. சிவசங்கரன் அவர்கள், நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்த தலைமைப் பொறியாளர் திரு. தில்லைநாயகம் அவர்கள், தலைமைப் பொறியாளர் (ஜெனரல்) திரு. நடேசையர் அவர்கள் ஆகியோரைக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டு, அவர்கள் விரிவாக ஆராய்ந்து அரசினருக்கு அறிக்கை தந்திருக்கிறார்கள். அந்த அறிக்கையை அரசு பரிசீலனை செய்து, மேலும் பல விளக்கங்களைக் கேட்டிருக்கிறது. அந்த விளக்கங்கள் வந்த பிறகு தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

**திரு. என். கிட்டப்பா :** இந்த கிண்டி பொறியியல் கல்லூரியில் கட்டப்பட்டு வரும் கட்டடத்தில் சாய் வட்ட வடிவக்கூரை சரிந்து விழுந்ததனால் அரசுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை அறிவிக்க இயலுமா?



1973 நவம்பர் 30]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்புகளை, தனிக் கேள்வி போட்டால் தரலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்த கிண்டி இன்ஜினியரிங் கல்லூரிக் கட்டடம் கீழே விழுந்து பல மாதங்கள் ஆனபிறகுதான் இந்தக் கேள்வி கேட்கப்படுகிறது. ஆகவே, விவரங்கள் இருக்கக் கூடும். கட்டடம் விழுந்ததனால் ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு, ஆட்சேதம் உண்டா? இந்த ரிப்போர்ட்டின்பேரில் எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியலாமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஆறு-ஏழு கூலியாட்கள் இறக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. கண்டிராக்டருடைய முழுப் பொறுப்பானதால், அவர்களுக்கான காம்பன்சேஷன் முறைப்படி கண்டிராக்டர் தரவேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. இது புதுமாதிரியான டிசைனாக இருப்பதால், டிசைன் போட்டவர், வேலையை எக்ஸிக்யூட் செய்தவர், மேற்பார்வை செய்தவர் ஆகிய அத்தனை பேரையும் விசாரித்து அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். விரைவில் அது பற்றி திட்டவட்டமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

*பாரதிதாசனால் எழுதப்பட்ட திருக்குறள் உரை*

* 511 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனால் எழுதப்பட்ட திருக்குறள் உரையை அச்சிட்டு வெளியிட தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, நமது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் புதுவையைச் சார்ந்தவராக இருந்தாலும் பொதுவாக தமிழக மக்களின் எழுச்சிக்கு பல நல்ல பாடல்களை இயற்றியுள்ளார்கள். அவர்கள், குறிப்பாக திருக்குறளுக்கு உரைநடை நூல் எழுதியதைத் தமிழக மக்கள் பெரும்பாலும் ஆவலோடு எதிர்பார்க்கும் காரணத்தால் அதை

[1973 நவம்பர் 20

வெளியிடும் பொறுப்பினை அரசாங்கமே மேற்கொள்ளுமா? தமிழக அரசு அதுபற்றி சிந்தித்து இனியேனும் அதை வெளியிட ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் திருக்குறளுக்கு உரையை எந்த அளவுக்கு எழுதியிருக்கிறார், அதனுடைய உரை யாரிடத்தில் இருக்கிறது, அதனுடைய முழு உரிமையையும் யார் வைத்திருக்கிறார்கள் என்ற விவரக்குறிப்பு எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை. யாரேனும் அந்த உரையை வைத்திருந்து அவர்கள் விண்ணப்பித்தால் அதுபற்றி நாம் யோசிக்கலாம். அரசாங்கமே அதை வெளியிட வேண்டுமென்றாலும் அல்லது அதனை வைத்துக்கொண்டிருப்பவரே வெளியிட வேண்டுமென்று விரும்பினாலும் அதுபற்றி யோசிக்கலாம். அதுபற்றி குறிப்புகள் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை.

**திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, மதுரைப் பல்கலைக் கழகத்தின் முதுகலைக்கான வினாத்தாள் ஒன்றில், பாரதிதாசனின் சமுதாய சீர்திருத்தக் கருத்துக்கள் கவிதைச் சுவைக்கு ஊறு விளைவிக்கக் கூடியதாக இருக்கிறது என்பதை விளக்கும்படி வினா கேட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? அத்தகைய தமிழ்ப் பகைவர்கள் பேரில் உரிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் ஒன்றும் அரசுக்கு வரவில்லை. தனியாக கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரப்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, பாரதிதாசன் அவர்கள் காலமாவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மதுரையில் நடந்த பொதுக் கூட்டமொன்றில், திருக்குறளுக்குத் தாம் உரை எழுதிக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். இன்றைக்கு அவருடைய மகன் இருக்கிறார்; இன்னும் அவருடைய பழைய புத்தகங்களை வெளியிடுகிறவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அரசு இதற்காக விசேஷ முயற்சி எடுத்து, திருக்குறள் உரையை வெளியிடுவதற்கான முயற்சியைச் செய்யுமா?



1973 நவம்பர் 30]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, உரை யாரிடத்தில் இருக்கிறது என்று தெளிவுபெறவில்லை. அதன் உரிமையை வைத்திருப்பவர்கள் அரசாங்கத்திடம் தந்தாலும் சரி, அல்லது அவர்களே வெளியிட முயற்சி செய்தாலும் சரி, அதற்கென்று அரசு எந்த அளவு உதவி செய்யவேண்டுமோ அந்த அளவு உதவிசெய்ய முயற்சி செய்யும். யார் அந்த முயற்சியில் ஈடுபட்டாலும் அதையொட்டி அரசாங்கம் எல்லாவிதமான முயற்சியும் எடுக்கும்.

**புலவர் சி. பழனிச்சாமி :** தலைவர் அவர்களே, இன்றைக்கு திருக்குறளுக்கு நல்ல முறையில் விளம்பரப்படுத்தப்படும் பரிமேலழகர் உரையில் சீர்திருத்தக் கருத்துக்களுக்கும் பகுத்தறிவுக்கும் ஒவ்வாத சில கருத்துக்கள் புகுத்தப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், "தெய்வந் தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை" என்ற குறள் வருகிறது. ஒரு பெண் தன் கணவனைத் தெய்வமாகக் கருதி வணங்கவேண்டும். அப்படிக் கணவனைத் தெய்வமாகக் கருதி வணங்கும் பெண், 'மழையே வா' என்று சொன்னால் மழை வரும் என்று சொல்லப்படுகிறது. அப்படியானால், இன்றைக்கு ஒரு பெண் வீட்டைவிட்டு வெளியே வந்து 'மழையே வா' என்று சொன்னால் இன்றைக்கு நிச்சயமாக மழை வராது என்பது நம் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அப்படியென்றால், தமிழகத்தில் கற்புடைய பெண்கள் யாரும் இல்லை என்று பொருள்படுகிறது. ஆகவே, இப்படிப் பகுத்தறிவுக்கு ஒவ்வாத கருத்துக்களைத் தடை செய்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைக் கேளுங்கள். விளக்கம் வேண்டாம்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே, பெண் குலத்தை இழிவுபடுத்தும் வகையில் உறுப்பினர் அவர்கள் ஆணைக் கேள்வி கேட்கிறார். அதை நீங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறீர்களே. இது தவறு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்விதான் போடவேண்டும். கேள்வி நேரத்தில் கருத்து சொல்லக் கூடாது.

[1973 நவம்பர் 30

**புலவர் சி. பழனிச்சாமி :** பகுத்தறிவுக்கு ஒவ்வாத கருத்துக்கள் இருக்கின்றன என்பதைச் சொல்ல வருகிறேன். பகுத்தறிவுக்கு ஒவ்வாத கருத்துக்களை தடை செய்து, பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடைய உரையை எப்படியாவது வெளிக்கொணர அரசு முன்வருமா என்று கேட்கிறேன். இன்றையதினம் மதுரையிலுள்ள பாரதி படிப்பகத்தாரிடம் அந்தப் பாரதிதாசன் அவர்களுடைய திருக்குறள் உரை இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். எப்படியாவது பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடைய உரையை வெளிக்கொணர்ந்து அரசு வெளியிட முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போன்று சிறந்த உரையை அவர்கள் பல குறள்களுக்கு எழுதியிருக்கிறார்கள். இதுவரையில் வெளிவந்த பல்வேறு உரைகளோடு ஒப்பிட்டுப் பார்த்து மிகச் சிறந்த முறையில் பல குறள்களுக்கு உரை எழுதியுள்ளார்கள். அந்த உரையை நானும் தேடிக் கொண்டிருக்கிறேன். அதை வைத்திருப்பவர்கள் முன்வந்து தருவார்களானால் அரசாங்கமே அதை வெளியிடக்கூடும். தமிழ்ப் பாடப் புத்தக வெளியீட்டின் மூலம் வெளியிடலாம். அதை வைத்திருப்பவர்களே வெளியிட முன்வந்தாலும் அவர்களுக்கு உதவியளிக்கவும் வகை இருக்கிறது. அது யாரிடத்தில் இருக்கிறது என்று இன்னும் தெளிவுபெறவில்லை. யாரேனும் தகவல் கொடுத்தாலும், வைத்திருப்பவர்கள் கொடுக்க முன்வந்தாலும், அவர்கள் குடும்பத்தின் மூலமாக வெளியிடவோ அல்லது அரசாங்கமே வெளியிடவோ அரசு ஆயத்தமாக இருக்கிறது.

**திரு. நா. வீராசாமி :** பாரதிதாசன் எழுதிய அந்த உரை புரட்சிகரமானதாகவும், சீர்திருத்தக் கருத்துக்கள் அடங்கியதாகவும் இருப்பதால் ஆஸ்திகர்கள் அது வெளியிடப்படாமல் தடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற ஒரு கருத்தும் இருக்கிறது. ஆகவே இதற்கு நல்ல விளம்பரம் கொடுத்து அந்த உரையைப் பெற்று, அரசு இவ்வளவு பணம் கொடுக்கும் என்று விளம்பரம் செய்தால் அந்த உரை வெளிவரலாம். ஆகவே அதற்கான ஏற்பாட்டினை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



1973 நவம்பர் 30]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் இங்கே கூறியிருக்கிற விடை போதுமான அளவிற்கு மற்றவர்களுக்கு விளக்கமாக அமையும். ஆகவே யாரிடத்தில் அந்த உரை இருந்தாலும் அதைக் கொடுத்தால் அரசு அதை வெளியிடு வதற்கான முயற்சியை மேற்கொள்ளும்.

## *Monument found near Madras Medical College*

* 512 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that a monument has been found near the Union Defence Department's lands near the Madras Medical College;

(*b*) if so, whether the State Government Archaeologists have examined it; and

(*c*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) ஆம்.

(உ) சென்னை மருத்துவக் கல்லூரியின் எதிரில் உள்ள முக்கோண வடிவமான நிலத்தில் 12 அடி 9 அங்குலம் நீளமும், 6 அடி 2 அங்குலம் அகலமும் உள்ள மேடையும் அதன் மீது போடப்பட்டுள்ள தடைப்பைக்கல்லில் 7 அடி நீளமும், 3 அடி அகலமும் உள்ள பகுதி கல்வெட்டப்பட்டுள்ளது. இது ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியாரிடம் மருத்துவராகப் பணியாற்றிய எட்வர்டு பல்க்லி என்பவரின் கல்லறை எனத் தெரியவருகிறது.

THIRU N. DENNIS : Sir, may I know whether complete excavation was done in that place and also whether there is any objection from the surrounding property owners for complete excavation?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்த இடம் அரசுக்குச் சொந்தமாகத்தான் இருக்கிறது. 1714 ஆகஸ்ட் 8-ம் நாள் அன்று அந்த கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த அந்த மருத்துவ அதிகாரி இறந்தார் என்றும் அவரது விருப்பத்திற்கிணங்க அந்த இடத்தில் புதைக்கப்படவேண்டுமென்று கேட்டதற்காக அங்கு புதைக்கப்பட்டிருக்கிறது. அந்தளவிற்குத் தான் கிடைக்கப்பெற்றிருக்கிறது. அதன் மேலே எழுதப் பட்டிருப்பது, ரோமானியமொழியில், இத்தாலியமொழியில்தான்

அந்தக் கல்வெட்டில் எழுதப்பட்டிருக்கிறது. அது தவிர வேறு ஒன்றும் கிடைக்கவில்லை. அந்தப் பகுதியை யாரும் அகழ்ந்து காண வேறு ஒன்றும் இல்லை.

**திரு. க. உரோ. எட்மண்ட் :** நெல்லை மாவட்டத்தில் திருவைகுண்டத்தில் ஆதிச்சநல்லூர் பகுதியில் புதைபொருள் ஆராய்ச்சி நீண்ட நாட்களுக்கு முன்பு தொடங்கப்பட்டு எந்த விதமான ஆராய்ச்சியும் மேற்கொள்ளப்படாமல் இருக்கிறது. அங்கு மண் எடுக்கக்கூடாது என்று அரசாங்கம் விளம்பரத் தட்டிகள் வைத்திருக்கிறார்கள். அதுபற்றி விரைவில் பரிசீலனை செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதன் முழுக் குறிப்புகளும் இல்லை. அதுபற்றி தமிழ்நாடு தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் பணிகளை மேற்கொண்டிருப்பார்கள். விவரம் அறிந்து தக்க நடவடிக்கைகள் எடுக்கலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, it is stated that there are a number of stone inscriptions in different parts of the city which have not been excavated and they are being ruined every day. So, may I know from the Hon. Minister for Education whether he will arrange for a thorough investigation of all these things and also see that they are kept in a safe place?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்படிப்பட்ட பணிகளை எல்லாம் ஆற்றுவதற்காகத்தான் தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகம் அமைக்கப்பட்டிருக்கிறது. பழைய சின்னங்களைக் காப்பாற்றுவது மட்டுமல்லாமல் மறைந்திருக்கிற, புதைந்து கிடக்கிற பொருள்களை வெளிக் கொண்டுவருவதன் மூலம் தமிழ்நாட்டின் பண்டை தொன்மையான வரலாற்றினை வெளிப்படுத்தும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு பெருநகரங்களையும் எடுத்துக் கொண்டிருக்கும் வகையில் சென்னை மாநகரிலுள்ள பழஞ்சின்னங்களை பார்வையிடுதல், அகழ்ந்து காணுதல், அவற்றைப் பாதுகாத்து வருதல் ஆகிய பணிகளை இக்கழகம் மேற்கொள்ளும்.



*Taxi services in Madras City*

* 513 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether taxi services in Madras City is to be brought under a State owned Corporation; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) இத்தகைய ஒரு செயற்திட்டம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினிடம் உள்ளது. என்றாலும் அது இன்னும் முதற்கட்டமான பரிசீலனையிலேயே இருந்து வருகிறது.

**திரு. நா. வீராசாமி :** தற்போதைய கட்டுப்பாடு முறையில் வழங்கப்பட்டிருக்கிற டாக்சிகளுக்கு இன்று ஏற்றப்பட்டிருக்கிற பெட்ரோல் விலை காரணமாக நாள் ஒன்றுக்கு ரூ. 10 கூட மிச்சம் இருப்பதில்லை. ஆகவே அந்தத் தொழில் பாதிக்கக்கூடிய நிலையில் இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் எல்லா டாக்ஸிகளையும் தற்போதைய அரசாங்கமே ஒரு கார்ப்பரேஷன் அமைத்து எடுத்துக் கொண்டால் அரசால் அதை லாபகரமாக நடத்த முடியுமா என்பதை அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இந்த யோசனை இந்த நெருக்கடிகள் எல்லாம் வருவதற்கு முன்னால் கொடுக்கப்பட்ட யோசனை. அந்த யோசனை ஆரம்ப கட்டத்தில் இருக்கிறது. அப்படி ஏற்று நடத்துவதன் மூலம் சீர் செய்ய முடியுமா, சீர் பெற்று வரும் என்றால் அந்த யோசனையை ஏற்று நடத்துவது பலன் தருமா? ஆகவே ஆராய்ச்சிக் கட்டத்தில் இருப்பதாகத் தெரிவித்தேன்.

*பெருமாநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம்*

* 514 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை பகர்வாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், பெருமாநல்லூரில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் ஒன்று கட்டும் செயற்திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1973 நவம்பர் 30

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) & (இ) பெருமாநல்லூரில் ஆரம்பச் சுகாதார நிலையம் கட்டுவதற்காக ரூ. 10,000 அடையாள நன்கொடைத் தொகையும் 3 ஏக்கர் நிலமும் கொடுக்கப்பட்டுள்ளன. ஐந்து ஏக்கர் நிலம் இருக்க வேண்டும் என்று விதி இருப்பதால் முழு அளவு நிலமும் கிடைத்த பின்னர் அதற்கான கட்டடம் கட்டுவதுபற்றி நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

**திரு. சு. துரைசாமி :** அமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோல், ரூ. 10.000 கட்டிவிட்டோம். மூன்று ஏக்கருக்குப் பதில் மேற்கொண்டு இரண்டு ஏக்கர் பெற்று அண்மையில் அறநிலையத்தைச் சார்ந்த நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே விரைவில் அதைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அப்படி பத்தாயிரம் ரூபாய் தொகையும் ஐந்து ஏக்கர் நிலமும் கொடுத்த இடங்கள் இன்னும் 150 இடங்கள் இருக்கின்றன. ஆகவே மாவட்டந்தோறும் ஐந்து அல்லது பத்து இடங்கள் என்ற முறையில் ஆண்டுதோறும் கட்ட முடிகிறது. எவ்வளவு விரைவில் கட்டமுடியுமோ அவ்வளவு விரைவில் கட்டி முடிக்க அரசு முயற்சிக்கும்.

*Building for Government Hospital at Hosur*

* 515 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the construction of the additional buildings for Government Hospital at Hosur is in progress;

(*b*) whether arrangements to provide X-Ray facility are being made; and

(*c*) the total number of Maternity beds that will be provided there?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) 100 எம்.ஏ. எக்ஸ்ரே படம் எடுக்கும் இயந்திரம் ஒன்று வாங்கப்பட்டு மேற்படி மருத்துவமனையில் நிறுவப்பட்டுள்ளது.

(உ) பத்து படுக்கைகளைக்கொண்ட மகப்பேறு மருத்துவ வார்ட் ஒன்று ஏற்படுத்தப்படும்.



1973 நவம்பர் 30]

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Public Health, when the Hospital building at Hsour will be completed and whether there is a proposal to appoint more doctors and nurses, considering the increase in bed strength and other facilities now?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** எனக்குக் கிடைத்த விவரத்தின்படி கட்டடப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவையெல்லாம் முடிந்த பிறகு அதிகப் படுக்கைகள் அங்கு ஏற்படுத்துவதற்கேற்ப எந்தளவிற்கு டாக்டர்கள், செவிலியர்கள் நியமிக்கப்படவேண்டுமோ அப்படி நியமிக்கப்பட அனுமதி பெற்று நியமிக்கப்படுவார்கள்.

**திரு. தி. பொன்னுமலை :** அண்மையில் தொழுநோய் பிச்சைக்காரர்களையெல்லாம் விடுதிகளுக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு அவர்கள் தங்காமல் சில பேர்கள் அவர்களாக ஓடிவந்து விட்டார்கள். அங்கு என்ன வசதிகுறைவா ? அல்லது தங்குவதற்கு ஏதாவது கஷ்டங்கள் இருக்கின்றனவா ? காரணம் என்ன ?

(விடை இல்லை.)

**கண்ணொளி வழங்கு திட்டத்தின் கீழ் பயனடைந்தவர்கள்**

* 516 *வினா*—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1973 ஆகஸ்டு முடிய தமிழகத்தில் கண்ணொளி வழங்கு திட்டத்தின் கீழ் எத்தனை பேருக்கு கண்ணொளி வழங்கப் பட்டுள்ளது மாவட்டவாரியாக ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** விவர அறிக்கை ஒன்று @ சபையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கிட்டப்பா :** விவர அறிக்கையில் 1973 ஆகஸ்ட் முடிய கண்புரைக்கு அறுவை சிகிச்சை பெற்றவர்கள் 53.145 என்றும் அறிவுரை பெற்றவர்கள் 52,064 என்றும் இதர அறுவை சிகிச்சைகள்

---

@ 280-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பெற்றவர்கள் 876 என்றும் குறிப்பிட்டுள்ளீர்கள். இதற்காக இதுவரையில் நம் அரசு செலவழித்த மொத்தத் தொகை எவ்வளவு? இனி அடுத்தடுத்து எவ்வளவு பேருக்கு இந்த வகையில் கண் ஒளி வழங்கும் திட்டத்தை அமல்படுத்த இருக்கிறது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இந்தத் திட்டம் நிறைவேறுவது ஒவ்வொரு மாவட்டத்திலும் முக்கியமாக ஒவ்வொரு வட்டத்திலும் எவ்வளவு பேர்கள் கண் சிகிச்சைக்கு உரியவர்களாக இருக்கிறார்கள் என்ற முன் விவரம் பெற்று அதன் அடிப்படையில் உருவாக்கப்படுகிறது. ஒவ்வொரு கண் அறுவை சிகிச்சைக்கும் ரூ. 55 அளித்து செலவிடலாம் என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. மற்ற வகையான சிகிச்சைகளுக்கு குறைந்த அளவில்தான் செலவு வேண்டும் என்பதால் அவர்களுக்கு மருந்தாக ஒரு பத்து பைசா வீதம் ஆல்-போஸ்ட்களுக்கு சிகிச்சைக்கு செலவிடப்படலாம் என்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. அதில் கடந்த காலத்தில் சில இடங்களில் அதிக எண்ணிக்கையுள்ளவர்கள் கண் அறுவை சிகிச்சை பெறவேண்டிய நிலையில் இருந்தார்கள். சில இடங்களில் அதிக எண்ணிக்கையில் அவர்கள் வரவில்லை. இப்போது இதைப் பற்றி பரவலாக அறிந்து கொண்டவர்களில் நடத்தப்பட வேண்டிய நிலை ஏற்படும்போது கண் அறுவை சிகிச்சைக்கான பக்குவ நிலை பெற்றவர்கள் எண்ணிக்கை குறைவாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் தொடர்பான ஏற்பாடுகள் மக்களுக்குத் தேவைப்படுகின்ற நல்வழிகளை அடிப்படையாகக் கொண்டு பணி என்ற முறையில் இத்திட்டம் தொடர்ந்து நடைபெறும். இதற்காக அமைக்கப்பட்டுள்ள மருத்துவ பிரிவுகள் கொண்ட குழுக்கள் மாநிலத்தின் பல்லிடங்களில் இந்தப் பணியை நடத்திக்கொண்டு வருகிறது.

**திரு. பி. வே. வேலப்பன்:** கண் ஒளி வழங்கும் திட்டம் ஒவ்வொரு சென்டரிலும் அவ்வப்பொழுது நடத்தப்படுகிறது. அந்தந்தப் பகுதிகளில் யாரால் அளிக்கப்படுகிறது. எந்த அடிப்படையில் அழைக்கப்படுகிறது? அதற்கு ஆகும் செலவுகளைப் பற்றி மாதம் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** உறுப்பினர் அவர்களே, நீண்ட காலமாக நடைபெறுகிற இந்தத் திட்டத்தைப் பற்றி இதற்கு முன்பே அங்கத்தினர்கள் அறிந்திருப்பார்கள் என்று கருதிப் பார்க்கிறேன். இதற்கான செலவுக்கான நிதி தனியாக நிதித் துறையைச்



சார்ந்த துணைச் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. யார் வேண்டுமானாலும் நன்கொடை அளிக்க ஒரு முறை இருக்கிறது. அந்தப் பொது நிதியைக் கொண்டு இத்திட்டம் நடைபெறுகிறது. அரசாங்கத்தில் பணியாற்றுகின்ற மருத்துவர்களை அதற்காக அனுப்பப்படுகிறது. அவர்களுக்கு அரசாங்கத்தில் ஊதியம் வழங்கப்படுகிறது. ஏற்கனவே அவர்கள் போராசிரியர்களாக இருக்கிறார்கள். மாவட்ட கலெக்டர் மேற்பார்வையில் மாவட்ட கலெக்டர் ஏற்பாடு செய்கின்ற இடத்தில் உரிய அளவு விகிதாச்சாரத்தின் அடிப்படையில் செலவழிக்கச் செய்து இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டுக்கொண்டு வருகிறது. எனவே, மாவட்டத்தில் நடைபெறும்பொழுது கலெக்டர் முழு மேற்பார்வையில் அது நடைபெறுகிறது. அதற்கு எங்காகிலும் சில உதவிகள், மற்றவைகள் தேவைப்பட்டால் மாவட்ட கலெக்டருக்குத் தெரியப்படுத்தினால் அதனைச் செய்ய முடியும். மொத்த நிதி ஒன்று ஏற்படுத்தி நிதித் துறையைச் சார்ந்த துணைச் செயலாளரிடத்தில் நிதி நன்கொடை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. செலவழிக்கப்பட வேண்டிய அளவுக்கு விகிதாச்சாரம் இன்னொரு வகையில் செலவழிக்கப்பட வேண்டும் என்பதும் வரையறுக்கப்பட்டிருக்கிறது. வேண்டுமானால், அந்த விவரத்தை நான் தரத் தயாராக இருக்கிறேன்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** இந்தக் கேள்விக்குப் பதிலாக வைத்திருக்கிற அறிக்கையைப் பார்க்கும்பொழுது கண் புரைக்கு அறுவை சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை, கண் பரிசோதனை செய்து அறிவுரை வழங்கியதற்கான எண்ணிக்கை இது அறுவை சிகிச்சைக்கான எண்ணிக்கை மாத்திரம் இருக்கின்றன. கண் ஒளி பெற்றோர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** உறுப்பினர் அவர்களே, கண் ஒளி பெறுவது என்பது பொதுப்படையாகக் காட்டப்பட்ட ஆபரேஷன் செய்துகொண்டவர்களுக்குத்தான். அப்பொழுது அவர்களுக்கு இல்லாத பார்வை கிடைக்கிறது. மற்றவர்களுக்கு கண்ணில் ஏதாவது சில நோய்கள் இருந்தாலும், அந்த நோய்க்கு சிகிச்சை கிடைக்கிறது அவர்களுக்கு ஒளி கிடைக்கிறது. இவர்களுக்கு வாழ்வுக்கு வழி கிடைக்கிறது. ஆகவே, அந்த வகையில் 53,146 பேர் அந்த அறுவை சிகிச்சை செய்துகொண்டு ஒளி பெற்றவர்களின்

எண்ணிக்கை. வேலூர் கண்கோளாறுக்கு 876 பேர்களில் ஏறத்தாழ 500 பேர்கள் கண் ஒளி பெற்றார்கள். ஆனால், அவர்களுக்குத் தரப்பட்ட கண் அறுவை சிகிச்சை வேறுவிதமானது. 52,064 பேர்களுக்கு கண்ணாடி போட்டுக் கொண்டு பார்வைபெறும் வகையில் கண் அறுவை சிகிச்சை வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. அ. தேவேந்திரன் :** இந்தக் கண் ஒளி வழங்கும் திட்டமானது இந்திய துணைக்கண்டத்தில் ஒரு சிறப்பு மிக்க திட்டம் என்பதையும், இதற்கான முழுச் செலவையும் இந்த மாநில அரசே ஏற்கிறது என்பதையும் நாம் அறிந்திருக்கிறோம். எனவே, இதை இன்னும் தீவிரப்படுத்துவதற்கு மத்திய அரசிடம் கண் ஒளி வழங்கும் திட்டத்திற்கு ஏதாவது நிதி கேட்பதற்கு உத்தேசம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இந்திய அரசு அண்மையில் இந்தத் திட்டமானது எவ்வாறு நடத்தப்படுகிறது என்று அறிந்துகொண்டிருக்கிறது. அவர்கள் இதைப் போன்ற திட்டத்தை மற்ற மாநிலங்களிலும் ஏற்படுத்தவேண்டும் என்று விரும்புகிறார்கள். குடியரசுத் தலைவர் ராஷ்டிரபதி வி. வி. கிரி அவர்கள் சென்னையில் வேறு ஒரு கண் மருத்துவக் கூட்டத்தில் பேசும்பொழுது இந்தத் திட்டத்தை வரவேற்று அகில இந்தியாவிலும் நடத்தப்படக்கூடியதற்கு முன்னோடித் திட்டமாக விளங்குகிறது என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்திற்கு நன்கொடை ஓரளவுக்கு அடிப்படையாக இருக்கிறது. நன்கொடைத் தொகையை வைத்துக்கொண்டு இந்தத் திட்டம் நடைபெறுகிற நிலையில் இன்னும் தொடர்ந்து நடத்துவதற்கான நன்கொடைகள் நிச்சயம் நம்மால் பெற முடியும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. மத்திய அரசு இப்படிப்பட்ட திட்டத்தை ஊக்குவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. என். கிட்டப்பா :** இந்தக் கண் ஒளி வழங்கும் திட்டத்தின் மூலம் அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்கள் எத்தனை பேர்களுக்கு தமிழக அரசு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கியிருக்கிறது என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இந்த மூக்குக் கண்ணாடியினுடைய விலை ஏறத்தாழ ரூ. 2-லிருந்து 3-க்குள் ஆகும். கண் அறுவை சிகிச்சைக்கு ஆகின்ற செலவுதான் அதிகம்.





அவர்களை 10 நாட்களுக்குத் தங்க வைத்து, உணவு அளித்து, அவர்களுக்கு வேண்டிய எல்லாவிதமான வசதிகளையும் செய்ய வேண்டும். அவர்கள் பெரும்பாலும் ஏழை மக்கள். அவர்கள் படுத்திருக்கும்பொழுது வலி எடுத்து அடிக்கடி அசைந்தால் அது காரணமாக அவர்களுக்கு கண் பார்வை பழையபடி பாதிக்கப்படும். அவர்களுக்குத் தரப்படுகிற உணவு, கவனம், அவர்களுக்குத் தரப்படுகிற சிகிச்சை உதவிகள் ஆகியவைகளுக்குத் தான் ஏறத்தாழ ரூ. 50 அளவுக்குச் செலவு ஆகிறது. காட்ராக்ட் சிகிச்சைக்குப் பிறகு போடப்படுகிற கண்ணாடி ஒரேவிதமான கண்ணாடி. அல்லது 2, 3 வகைகளுக்குள்ளான கண்ணாடி. தனித்தனியாக விஷன் வேறுபாட்டிற்கு உள்ள கண்ணாடி அல்ல. இந்தக் கண்ணாடி அநேகமாக 53,000 பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. க. உரோ. எட்மண்ட் :** கண் சிகிச்சை முகாம், அறுவை சிகிச்சை செய்கிற இடம் பொதுவாக பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் ஏற்படுத்தப்படுகிறது. சம்பந்தப்பட்ட கண் மருத்துவர்களைப் பார்த்துக் கேட்டால், நல்ல சுகாதார சூழ்நிலையில் இந்த அறுவை சிகிச்சை செய்யப்படவில்லை என்றும், அதனால் ஏராளமான அறுவை சிகிச்சைகள் தோல்வியுறுகின்றன என்றும் சொல்கிறார்கள். பொது மக்கள் மத்தியிலும் பரவலாக அப்படிப்பட்ட அபிப்பிராயம் இருந்துகொண்டு வருகிறது. இதையெல்லாம் மாற்றி அமைப்பதற்கு இந்த அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இந்தமாதிரி அங்கத்தினரிடம் எந்த டாக்டர் சொன்னார் என்று தெரியவில்லை. எல்லா டாக்டர்களோடும் நான் நேரடியாகப் பழகுகிறேன். யார் சொன்னார்கள் என்று கூறவேண்டும். அப்படியிருந்தால் என்னிடம் தெரிவித்திருக்கவேண்டும். அப்படித் தெரிவிக்க பொறுப்பற்ற டாக்டர் அங்கத்தினரிடம் தெரிவித்திருந்தால் அது குற்றம். ஆனால், அதற்கு மாறாக பள்ளிகள், ஒன்றியக் கட்டடங்கள் எடுப்பதற்கு மிக முக்கியமான காரணம் குறைந்தது 200 பேர் 300 பேர் படுக்க வேண்டியிருக்கிறது. 8, 10 நாட்களுக்கு படுத்திருக்க வேண்டும். எழுந்திருந்து நடமாட முடியாது. தலையை ஆட்டி அசைக்கக் கூடாது. இந்த அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்களுக்கு இயற்கை நிலை ஏற்படவேண்டும். அதற்கு உதவி செய்வதற்காக தகுந்த கட்டட வசதி தேவையாக இருப்பதால் பள்ளிகள்

[1973 நவம்பர் 30

விடுமுறை காலங்களிலும், கல்லூரிகள் விடுமுறை காலங்களிலும் அவற்றில் நடத்தப்படுகிறது. இதைவிட நல்ல முறையில் செய்வதற்கு ஒரு அரசாங்கத்தினால் முடியாது.

**கோயம்புத்தூரில் தொழுநோய் மருத்துவப் பிரிவு.**

* 517 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழுநோய்க்கான சிகிச்சை அளிப்பதற்கு கோவை மாவட்டத்தில் மருத்துவ மனை ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது மருத்துவ மனை ஏற்படுத்தப்படும் ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் அமைப்பதற்கில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி அமைக்காததற்குக் காரணம் என்ன ? அமைக்க முடியாத சூழ்நிலை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** கேள்வியில் மருத்துவமனை என்று கேட்கப்பட்டிருக்கிறது. தொழுநோய்க்காக தனியாக மருத்துவமனை அமைக்கிற ஒரு முறையை தமிழக அரசு மேற்கொள்ளவில்லை. தனிப்பட்ட நிறுவனங்களைச் சார்ந்தவர்களும், அற நிலையங்களைச் சார்ந்தவர்களும், மேல் நாட்டிலிருந்து வந்தவர்களும் அப்படிச் சில இடங்களில் அமைத்திருக்கிறார்கள். தொழுநோய் சிகிச்சை அமைப்பு என்பது தமிழ் நாட்டில் பரவலாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கோவை மாவட்டத்தில் பல பகுதிகளில் ஏறத்தாழ 5 லட்சம் மக்கள் உள்ள பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கிறது. முழு விவரத்தையும் நான் தர முடியும். அப்படி அமைக்கப்பட்டிருக்கிற பகுதிகளில் பெரும்பாலும் 3 லட்சம் மக்களுக்கு ஒரு லெப்ரஸி கண்ட்ரோல் யூனிட் வீதம் இருந்து, அந்த மாவட்டத்திலுள்ள மக்களிடையே தொழுநோய் கண்டவர்களுக்கு சிகிச்சை வழங்கப்படுகிற முறை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது.



1973 நவம்பர் 30]

**மதுரை மாவட்டத்தில் நைலான் தொழிற்சாலை.**

* 518 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் 13—12—1972 அன்று, வினா எண் 155-க்கு அளித்த விடையையொட்டி தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் நைலான் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையிலுள்ளது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்நிய தொழில் நுட்ப உதவி பெறவும் வெளிநாட்டிலிருந்து இயந்திரங்கள் இறக்குமதி செய்யவும் மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** நைலான் தொழிற்சாலை மதுரையில் எந்த இடத்தில் துவக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது ? மொத்தத்தில் முதலீடு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இன்னும் இதுபற்றி இறுதியான முடிவு எடுக்கப்படவில்லை. மத்திய அரசு இதுபோன்று நைலான் தொழிற்சாலை அமைப்பதுபற்றி இந்தக் கொள்கையை மறுபரிசீலனை செய்து கொண்டிருப்பதாக தகவல் கிடைத்துள்ளது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தற்பொழுது இந்த நைலான், செயற்கை நூலான ஆடைகளைத்தான் மக்கள் பெரிதும் விரும்பி அணிகிறார்கள். இதனால் வேறு மாநிலங்களிலிருந்து அதிகமாக நைலான் துணிகள் உற்பத்தியாகி நம்முடைய மாநிலத்திற்குக் கொண்டுவரப்படுகிறது. ஆகவே, நம்முடைய மாநிலத்திலிருந்து பெரும் பகுதி பணங்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்றுவிடுகின்றன. எனவே, நமது மாநிலத்திலேயே இந்தத் தொழிலை இன்னும் அதிகமாக அபிவிருத்தி செய்வதற்கு மதுரை, கோவை போன்ற இடங்களில் இம்மாதிரி ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மதுரைக்கு ஆபத்தாக இருக்கிறது. அவர்கள் சொல்லிய, துணிக்காகச் சொல்லிய விளக்கத்தோடு கூட, இப்பொழுது இருக்கிற தொழிற்சாலைகள் தனியார் துறையிலே இருக்கின்றன. ஆகவே, பொதுத் துறையிலே இது போன்ற நூல் பொருள்களை உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலை

ஏற்படுத்த அனுமதிக்கவேண்டும் என்ற கொள்கையை நம்முடைய மாநில அரசு வற்புறுத்தி வருகிறது. ஆகவே, அரசாங்கத்தின் சார்பிலே இந்தத் தொழிலை நடத்துவதற்கான திட்டத்திற்கு அனுமதி கேட்டிருக்கிறோம். அனுமதி கொடுத்துவிட்டு, இப்பொழுது மத்திய அரசு தயக்கம் காட்டுகிறது. இதுதான் தொழில் கொள்கையிலே நாம் படுகின்ற சிரமம்.

**திரு. அ. தேவேந்திரன் :** தொழில் துறையில் மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ள மதுரை மாவட்டத்தில் இப்படிப்பட்ட தொழிற்சாலை துவங்குவதை விட்டுவிட்டு, பின்தங்கிய மாவட்டமான தஞ்சை மாவட்டத்தில் அமைப்பதற்கான உத்தேசம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மதுரைக்கே ஆபத்து என்கிறேன்.

## Petro-Chemical Industry at Tuticorin

* 519 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to set up a Petro-chemical Complex at Tuticorin; and

(b) if so, the details of the same?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், இந்த பெட்ரோ-கெமிக்கல் இண்டஸ்ட்ரியின் மூலம் கிடைக்கின்ற மினரல் பொருட்கள் இனிமேல் நாட்டிற்கு அதிகமாகத் தேவைப்படுகிறது. இரும்புக்குப் பதிலாக இவையே பல இடங்களில் பயன்படுத்தக்கூடிய நிலைமை இருப்பதால், இத்தொழிலை அபிவிருத்தி செய்ய சர்க்காரிடம் திட்டம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தமிழகத்தைப் பொறுத்த வரையில் மூலப்பொருட்கள் குறைவாக இருப்பதால் பெட்ரோ கெமிக்கல் தொழிற்சாலைகளை அதிகமாகத் துவக்குவதற்கு மத்திய அரசுக்கு இந்த அரசு தெரிவித்திருக்கிறது. பெட்ரோல் ரிபைனரியை ஒட்டி, நாப்தாவிலிருந்து கிராக்கர் போட்டு, அதன்மூலம்



உப தொழில்கள் பிரிவை உருவாக்க சுமார் 300 கோடி ரூபாய் திட்டம் ஒன்றை செயல்படுத்த ஒரு வெளிநாட்டு கம்பெனி, அவர்களே மூலப்பொருட்களையும் கொண்டுவந்து, க்ரூட் காம்பிளக்ஸ் உற்பத்தி செய்ய உறுதியளித்தார்கள். அதை நாம் மத்திய அரசுக்குத் தெரிவித்தோம். மத்திய அரசு அதற்கு இன்னும் தயக்கம் காட்டிக்கொண்டிருக்கிறது. தூத்துக்குடியில் இண்டஸ்ட்ரீஸ் ரீபைனரீஸ் ஒன்றை ஏற்படுத்துவதற்கு திட்டம் தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறோம். அதுவும் அங்கேதான் காத்துக்கொண்டிருக்கிறது.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, இப்படி நம்முடைய நாட்டுக்குத் தேவையான மிகவும் முக்கியமான தொழில்களுக்கு எல்லாம் மத்திய அரசு தயக்கம் காட்டுகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆகவே, இப்படிப்பட்ட தொழில்கள்—எந்தெந்தத் தொழில்களுக்கு நாம் மத்திய அரசைக் கேட்டோம்; அவர்கள் தயக்கம் காட்டுவதால் தாமதப்படுகிறது என்று மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் தீவிரமாகப் பிரச்சாரம் செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்படிப்பட்ட காலதாமதங்களைப் பற்றி நாம் குறிப்புகள், விளம்பரங்கள் மூலம் மத்திய அரசின் நிலையைப்பற்றி விளக்கி வருகிறோம். கூட்டங்களிலும் சொல்லுகிறோம். அதை மக்களும் புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். ஆக, இந்தமாதிரியான பிரச்சனைகளில் எல்லாக் கட்சிக்காரர்களும், கட்சி வேறுபாடின்றி ஆதரித்துக் குரல் கொடுப்பார்களானால் மத்திய அரசின் தயக்க நிலை மாறும் என்று நம்பலாம்.

**திரு. சி. ஆறுமுகம் :** நம்முடைய தமிழ்நாட்டில் தொழில்கள் தொடங்குவதற்கு மத்திய அரசின் அனுமதிக்காக காத்துக் கொண்டிருக்கிறோம் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். மைசூர் அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை கேட்காமலேயே காவிரியின் குறுக்கே ஹேமாவதியில் அணை கட்டினார்களே அதேமாதிரி நாமும் மத்திய அரசாங்கத்தைக் கேட்காமலேயே நமக்குத் தேவையானத் தொழில்களைத் தொடங்குவதற்கு முயற்சி எடுக்கப்படுமா ?

[1973 நவம்பர் 30

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதற்கும் இதற்கும் வித்தியாசம் இருக்கிறது. அணை கட்டுவது என்றால் மத்திய அரசின் அனுமதி இல்லாமலேயே கட்டிவிடலாம். ஆனால் தொழில்களைத் தொடங்குவதற்கு வெளிநாட்டு உதவி, வெளிநாட்டு மூலப்பொருட்கள், வெளிநாட்டுச் செலவாணி தேவைப்படுவதால் மத்திய அரசின் அனுமதி இல்லாமல் முடியாது.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், 1956-ம் ஆண்டு இண்டஸ்ட்ரீஸ் ரெசல்யூஷனில் இன்னின்ன தொழில்களை மாநில அரசாங்கமே தொடங்கலாம் இன்னின்ன தொழில்களை மத்திய அரசின் அனுமதியோடுதான் தொடங்கலாம் என்றிருக்கிறது. நாம் காத்துக்கொண்டிருக்கக்கூடிய தொழில் விண்ணப்பங்கள் எல்லாம் 1956-ம் ரெசல்யூஷனுக்கு உட்பட்டதா ? புறம்பானதா ? உட்பட்டது என்றால் தீவிர நடவடிக்கை எடுக்காததற்கு என்ன காரணம் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்தத் தீர்மானம் ஏட்டிலே இருக்கிறது. அந்தத் தீர்மானத்தை நாங்கள் குறிப்பிட்டு, அதன் அடிப்படையிலேதான் அவர்களை அனுமதி கேட்டு, அவர்கள் அனுமதி கொடுத்த பின்னால் இப்போது மறுபரிசிலனை செய்கிறார்கள் ; தயக்கம் காட்டுகிறார்கள்.

*Employment opportunities for Harijans in Private Sector.*

* 520 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to take steps for the employment of Harijans in the private sector ; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

THIRU N. DENNIS : Sir, may I know whether any statistics have been worked out about the percentage of Harijans employed in private sector?

THE HON. THIRU S. MADHAVAN : No, Sir.



1973 நவம்பர் 30]

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, தனியார் துறைக்கு அரசாங்கம் நிறைய பணம் கடன் தருகிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிறுவனங்களில் இதுபோன்ற காரியங்களை அரசாங்கம் வலியுறுத்துமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, இல்லை.

**திரு. ந. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, தனியார் துறையில் மட்டுமின்றி, அரசு நடத்தும் கூட்டுறவுத் துறை, போக்குவரத்துத் துறை, மின்சார வாரியம், மாநகராட்சி, குடிசைமாற்றுவாரியம் போன்ற நிறுவனங்களிலும் அரிசனங்களுக்கு ஒரு குறிப்பிட்ட விகிதாச்சாரம் இடமளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அரசுத் துறைகளிலே அரிசனங்களுக்கு வாய்ப்பளிக்க தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, பொதுவாக அரிசனங்களுக்கு இல்லாவிட்டாலும், தனியார் துறையிலே இருக்கின்ற முதலாளிகள் ஆள் எடுக்கும்போது, எம்பிளாய்மென்ட் எக்சேஞ்சை அவர்கள் கேட்பதில்லை. சிம்சன் போன்ற பெரிய கம்பெனிகளில் அங்கே பணியாற்றுகின்றவர்களுடைய பிள்ளைகள், உறவினர்களுக்குத்தான் வேலை கொடுப்பது என்று வகுத்திருக்கிறார்கள். இதன்மூலம் எம்பிளாய்மென்ட் எக்சேஞ்சின் நோக்கத்தைக்கூட அவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்று தெரிகிறது. ஆகவே, இனிமேலாவது, தனியார் நிறுவனங்களில் ஆள் எடுக்கும்போது எம்பிளாய்மென்ட் எக்சேஞ்ச் மூலமாகத்தான் எடுக்கவேண்டுமென்று அரசு வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பிள்ளைகளுக்கு, உறவினர்களுக்கு வேலை கொடுப்பது என்ற ஒப்பந்தம் தங்களுக்கு வேண்டுமென்ற கோரிக்கைக்காகவே தொழிலாளர்கள் போராட்டங்களை கூட நடத்துகிறார்கள். ஆகவே, அதில் தலையிட முடியாது.

[1973 நவம்பர் 30

## பருப்பு வகைகள் குறித்த கருத்தரங்கு

*494 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சனவரி 15-ம் தேதி தஞ்சையில் நடைபெற்ற பருப்பு வகைக் கருத்தரங்கின் 3-வது குழுவின் பரிந்துரைகள் யாவை?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** மேசையின்மீது விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, ஜனவரி 15-ம் தேதியில் தஞ்சையில் நடைபெற்ற பருப்பு வகைக் கருத்தரங்கின் மூலம் நல்ல பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அது விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இதுபோன்ற கருத்தரங்கு தனித்தனியாக எல்லா உணவு தானியங்களுக்கும் நடத்தி, அதன் பயன்களை விவசாயிகளுக்கு அறிவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, அந்த கருத்தரங்கில் எல்லாத் தானியங்களும் தனித்தனியாக ஆராயப்பட்டன. அவரை முதல் துவரை வரை எல்லா பருப்பு வகை பற்றியும் ஆராயப்பட்டது.

## *New Regional Research Station at Payyur*

*495 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Agricultural University, Coimbatore to set up a Farm Research Station at Payyur near Krishnagiri; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) 44.65 ஏக்கர் பரப்பளவில் 2 லட்சம் ரூபாய் செலவில் ஆராய்ச்சி நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதில் உழவர்களுக்குத் தேவைப்படுகின்ற பயிர் வளர்த்தல், மண்வள நீர் நிர்வாகம், வேளாண்மை பொறியியல், பாற்பண்ணை, கோழி வளர்ப்பு முதலியவை குறித்து ஆராய்ச்சி செய்வதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது.

---

@ 280-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது. பட்டுள்ளது.



1973 நவம்பர் 30]

**திரு. என். டென்னிஸ் :** தலைவரவர்களே, மாவட்டந்தோறும் இவ்வித பண்ணை அமைத்து, அங்கு நடத்தப்படுகின்ற ஆராய்ச்சியின் முடிவுகளை செயல்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இந்த ஆராய்ச்சி நிலையங்கள் ஏற்கெனவே பல மாவட்டங்களில் இருக்கின்றன. ஆராய்ச்சி நிலையம் இல்லாத மாவட்டங்களில் ஆராய்ச்சி பண்ணை தேவை என்று அறிந்தால் அங்கே நிறுவுவதற்கு ஏற்பாடுகள் உள்ளன.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, இம்மாதிரி ஆராய்ச்சிப் பண்ணைகளிலிருந்து கிடைக்கின்ற நன்மைகளை விவசாயிகள் அடைவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, இந்த ஆராய்ச்சி மூலமாகக் கிடைக்கின்ற நல்ல தகவல்களை விவசாயிகளுக்குத் தெரிவிக்க ஒவ்வொரு வட்டாரத்திலும் வேளாண்மைத் துறை அதிகாரிகள், டிப்டி அக்ரிகல்சர் ஆபீசர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் விவசாயிகளைக் கூட்டி வைத்து, ஸ்லைடுகள் மூலமாகவும், விளம்பரங்கள் மூலமாகவும் புத்தகங்கள் மூலமாகவும் ஆராய்ச்சியின் பலன்களை விளக்கி வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அந்த புத்தகங்கள், விளம்பரங்கள் அடங்கிய ஒரு கட்டினை அனுப்பிவைக்க எண்ணியுள்ளேன்.

**திரு. சி. ஆறுமுகம் :** ஆங்காங்கே இருக்கின்ற பிளாக்குகளில் விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள் அனுப்பப்பட்டு, ஆராய்ச்சியின் நன்மைகளை விளக்குவதாகச் சொன்னார்கள். இனிமேல் ஆங்காங்கே இருக்கின்ற ஆராய்ச்சிப் பண்ணைகளில் விவசாயிகளை நேரடியாக ஈடுபடச் செய்தால் இன்னும் வேளாண்மைத் துறையில் அதிக முன்னேற்றம் ஏற்பட்டு, உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பது அரசுக்குத் தெரியுமா? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

[1973 நவம்பர் 30

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, அப்படி ஒரு குறை இருந்துகொண்டிருக்கிறது. அதிகாரிகள் ஏதாவது ஒரு பெரிய கிராமத்திற்குச் சென்று, அங்குள்ள பெரிய விவசாயிகளை மட்டும் பார்த்துவிட்டு வந்துவிடுகிறார்கள் என்ற குறை இருக்கிறது. ஆகையால் மாதிரிப் பண்ணைகள் பல அமைத்து, எல்லா விவசாயிகளையும் அழைத்து, ஆய்வின் பலன்களை விளக்க வேண்டும் என்ற திட்டம் ஆய்வில் இருக்கிறது.

*New Agricultural Seed Farms*

* 496 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government have received any proposal from the Agricultural University at Coimbatore on the question of starting an Agricultural Seed Farm in this State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

* 497 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காப்பி, தேயிலை, வாழை, புகையிலை போன்ற பயிர்களை நல்ல முறையில் அபிவிருத்தி செய்திட அவைகளுக்கான விதைப் பண்ணைகளைத் துவக்கிடும் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இல்லை.

**திரு. என் கிட்டப்பா:** தலைவரவர்களே, அவரை முதல் துவரை வரை ஆராய்ச்சி செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். அப்படி இருக்கும்போது காப்பி, தேயிலை, வாழை, புகையிலை போன்ற பயிர்களை அபிவிருத்தி செய்வது பற்றியும் இனிமேலாவது ஆராய்ந்து அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, இந்த காப்பி, தேயிலை, புகையிலை போன்ற பயிர்கள் எல்லாம் அவரை முதல் துவரை வரை என்ற பகுதியில் அடங்காது. காப்பிக்கு



1973 நவம்பர் 30]

காப்பி போர்டு தனியாக் இருக்கிறது. டீ போர்டு தனியாக இருக்கிறது. புகையிலைக்குக்கூட தனி நிறுவனம் இருக்கிறது. அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள்.

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவரவர்களே, வேளாண்மைத் துறையில் புரட்சிகரமான மாறுதல்களைச் செய்து வருகின்ற நம்முடைய மாநிலத்தில் மேலும் தீவிரமாகச் செயல்பட, பம்பாயிலே டிராம்பே அணு ஆராய்ச்சி நிலையத்தின் முடிவுகளைப் பயன்படுத்தி விதைகளில் அணுக் கதிர்களைச் செலுத்தி, இன்னும் அதிகமாக உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று தெரிவித்திருக்கிறார்களே, அந்த முறையை நம்முடைய மாநிலத்தில் அமுல் படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, அணுக் கதிர்களைச் செலுத்துவதன் மூலம் விதையின் உருவத்தை மாற்ற முடியும் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பற்றிய ஆராய்ச்சியில் நம்முடைய கோவை பல்கலைக்கழகம் ஈடுபட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒருமுறை அந்த பல்கலைக் கழகத்திற்கு சென்று பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, வாழைப்பயிர் இப்போது ஒருவித நோயால் பாதிக்கப்பட்டு அழிந்துபோகிறது. அந்த நோய் எதனால் ஏற்படுகிறது என்று ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வாழைப்பயிர் மிக அதிகமாக இருக்கக்கூடிய கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுபோன்ற ஆராய்ச்சியை அவ்வப்போது நடத்தி, வாழைப்பயிரைக் காப்பாற்ற அங்கே ஒரு விவசாயக் கல்லூரியை தொடங்கவேண்டுமென்று மக்கள் கேட்கிறார்களே, அதன் மீது எடுக்கப்பட்ட முடிவு என்ன?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயப் பல்கலைக் கழகமோ, கல்லூரியோ ஏற்படுத்தும் செயற்குறிப்பு தற்போது இல்லை. வாழைப் பயிரைப் பாதுகாக்கத் தான் பனானா பாக்கேஜ் ஸ்கீம் என்பதாக வடார்க்காடு, கோவை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இன்றைக்குச் செயல்படுகிறது.

[1973 நவம்பர் 30

**திரு. எஸ். வடிவேல் :** தஞ்சை மாவட்டத்தில் விவசாயம் பிரதானமாக இருக்கிற காரணத்தினால் அங்கே ஒரு விவசாயக் கல்லூரியை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அப்படிப்பட்ட செயற் குறிப்பு தற்போது இல்லை.

**திரு. கே. ஏ. வகாப் :** அணுசக்தி மூலம் விதைக்கு ஊக்கம் அளிக்க ஆராய்ச்சி நடத்தப்படுவதாகச் சொன்னார்கள். அது போன்ற ஆராய்ச்சியை நடத்தியுள்ள நாடுகளில் அந்த விதைகளில் உண்டாகக்கூடிய தானியங்கள் மனிதனின் வாழ்க்கைக்குத் தகுந்தது அல்ல என்று முடிவு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறதே, அந்த ஆராய்ச்சிக் குறிப்புகள் நமக்குக் கிடைத்தனவா ? மேலும் ரசாயன உரங்கள் மூலம் உற்பத்தியாகிற தானியங்களே மனிதனது ஆரோக்கியத்திற்கு உகந்தது அல்ல என்கிற கருத்து பரவலாக இருக்கிறதே, அதைப்போக்க அரசு முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ரசாயன உரம் போடுவதன் மூலம் உற்பத்தியாகக் கூடியவைகள் மக்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடியது என்கிற கருத்து அறவே நீக்கப்படவேண்டும். ஏனென்றால் இப்படிப்பட்ட பூச்சி மருந்துகளை, ரசாயன உரங்களை நாம் பயன்படுத்தாவிட்டால் நாம் உற்பத்தியைப் பெருக்க முடியாது. ஆகவேதான் இப்படிப்பட்ட கருத்துக்களுக்கு இடமே கொடுக்கக்கூடாது. நமக்கு ரசாயன உரமும் வேண்டும், பூச்சி மருந்துகளும் வேண்டும்.

அடுத்தாற்போல டிராம்பே அணு ஆராய்ச்சியைப்பற்றிச் சொன்னார்கள். அவரை கொடியில் காய்க்கிறது என்றாலும் அது செடியிலே காய்க்க, அதற்கான விதை ஆராய்ச்சிகளை எல்லாம் புதிது புதிதாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆயினும் அவை எல்லாம் இன்னும் ஆராய்ச்சிக் கட்டத்திலேயே இருக்கிறது. விதைகள் இன்னும் வழங்கப்படவில்லை.

*Sindhi Bulls sold by Hosur Cattle Farm*

* 498 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the number of Sindhi Bulls sold at the District Livestock Farm, Hosur in Dharmapuri district in 1973;

(*b*) the price for which they were sold; and

(*c*) the reasons for their sale?



1973 நவம்பர் 30]

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** விடைகள் அடங்கிய விவர அறிக்கை @ ஒன்று மாமன்றத்தின் முன் வைக்கப் பட்டிருக்கிறது.

**திரு. என். டென்னிஸ் :** விவர அறிக்கையில் விலை உயர்ந்த சிந்து புல்சும், புல்லக்சும் பிற இடங்களுக்கு அனுப்பப்பட்டிருப்ப தாகத் தெரிகிறது. நம் மாநிலத்திலேயே வேறு எங்காவது வேண்டுமென்ற விண்ணப்பங்கள் வந்திருக்கின்றனவா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கேள்வி சிந்து எருதுகளைப்பற்றியது. நம்மாநிலத்தைப் பொறுத்த வரையில் ஜெர்ஸி மாடுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** எத்தனை காளைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். எத்தனை சிந்து பசுக் கன்றுகள் விற்றிருக்கிறார்கள் என்பதை அரசு அறிவிக்குமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** பசுக்களைக் கொடுப்பது இல்லை. பசுக்கள் ஆராய்ச்சி நிலையங்களில் இருந்தே மேலும் மேலும் கன்றுகளை ஈன்று அபிவிருத்தி செய்ய வைத்திருக் கிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM : Is it a fact, Sir, that 600 cows were imported from Australia and sold to a party in Salem district?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, I have no note on the subject before me. But I can say off-hand that such a thing could not have happened. How can the Government import 600 cows from Australia or England and hand them over to a private party? Such a thing could not have happened. I will investigate the matter. Perhaps, such a thing might have happened in the previous regime.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** துணைக் கேள்விகள் மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாமல் இருந்தால் அவற்றுக்கு அமைச்சர்கள் விடையளிக்காமல் இருப்பது நல்லது.

@ 284-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

**திரு. எஸ். வடிவேல்:** தஞ்சை மாவட்டத்தில் உம்பளச்சேரி இனம் என்று சொல்லக்கூடிய மாடுகள் உயர்ந்ததாக இருக்கிறதே, அந்த இனம் வளர்ச்சி அடைய ஆவன செய்ய முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** அந்த மாட்டோடுகூட, ஜெர்சி இன காளைகளைச் சேர்த்து பால் கறக்கும் இனத்தைப் பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அவற்றை வேறு மாவட்டங்களுக்குக் கொடுப்பது பற்றி ஆராய்ந்தே சொல்ல முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி 521..

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி 521-இல் இருந்து ஒரு ஆறு கேள்விகள் ஒரே மாதிரியானவை. ஆகவே, அவைகளுக்குப் பதில் அளிப்பதற்கு முன்னால் அந்தக் கேள்விகள் சம்பந்தமாக சில பொது விவரங்களைச் சொல்லிவிட்டு அந்தக் கேள்விகளுக்குத் தனித் தனியே பதில் அளிக்கலாம் என்று நினைக்கிறேன்.

ஊரகப் பகுதிகளில் சாலை வசதிகளைப் பெருக்கவேண்டும் என்பது அரசாங்கத்தின் குறிக்கோளாகும். இதை ஒரு குறிக்கோளாகக் கொண்டு 19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,500-ம் அதற்கு மேற்பட்டுள்ள மக்கட்தொகைக் கொண்ட ஊரகப் பகுதிகளை பராமரிக்கப்படும் சாலைகளுடன் இணைக்கும் வகையில் புதிய சாலைகளைப் போடவும், தற்சமயம் இருக்கும் சாலைகளை மேம்பாடு செய்யவும் ஒரு சிறப்பு கிராமச்சாலைத் திட்டத்தை அரசு வகுத்துள்ளது. இத்திட்டம் வாய்ப்பான பல கட்டங்களில் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தில் முதல் கட்டத்தில் 6 கோடி ரூபாய் செலவில் 281 கிலோ மீட்டர் நீளமுள்ள புதிய சாலைகளைப் போடவும், 1,427 கிலோ மீட்டர் நீளமுள்ள தற்போது உள்ள சாலைகளை மேம்பாடு செய்யவும் அரசு அங்கீகரித்துள்ளது. இரண்டாவது கட்டத்தில் 182 கிலோ மீட்டர் நீளமுள்ள புதிய சாலைகள் போடப்படும். 924 கிலோ மீட்டர் நீளமுள்ள புதிய சாலைகள் மேம்பாடு செய்யப்படும். இந்த இரண்டாவது கட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 5 கோடியாகும். 11 கோடி ரூபாய் செலவில் முதல் இரண்டு கட்டங்களையும் செயல்படுத்த வேலைகளுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஆனால் 1972-73-ஆம் ஆண்டில் ரூ. 3 கோடியும் 1973-74-ல் ரூ. 3 கோடியும்தான்





ஒப்புதல் அளித்துள்ள வேலைகளுக்குச் செலவு செய்யலாம் என்று அரசு வரையறுத்துள்ளது. இந்த ஒதுக்கிட்டில் செய்து முடிக்கப்படாத வேலைகள் "எஞ்சியுள்ள வேலைகள்" என்று கருதப்பட்டு பின்வரும் ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப்படும். இந்த இரண்டு கட்டங்களிலும் சேர்க்கப்படாதிருந்த 1,500-ம் அதற்கு மேற்பட்டுள்ள மக்கட்தொகையைக் கொண்ட ஊரகப் பகுதிகள், இந்தச் சிறப்புத் திட்டத்தின் பின்வரும் கட்டங்களில் எடுத்துக்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் முடிக்கப்படும் சாலை வேலைகள் பராமரிப்புக்கு நெடுஞ்சாலை கிராமப்பணித் துறையினரால் எடுத்துக் கொள்ளப்படும். வினா 522-ல் குறிப்பிட்டுள்ள களுகர் கடை சாலை மதுரை-மண்டபம் சாலையிலிருந்து பிரிந்து களுகர் கடை செல்கிறது. அதன் நீளம் 1.40 கி.மீ. அது சரளைகல் பாத்தி தார் சாலையாகப் போடப்படும்.

## திருப்புவனம் ஒன்றியத்திலுள்ள சாலைகள்.

*** 521. வினா—திரு. த. சோணையா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், பிரமனூர் தார்ச் சாலையாக மாற்றும் செயற் குறிப்பு அரசிடம் உண்டா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், பிரமனூர் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றி, சீர் செய்ய அரசு 18—5—1973 நாளிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை எண் 1014-ல் ஆணையிட்டுள்ளது.

*** 522 வினா—திரு. த. சோணையா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், மதுரை-மண்டபம் நெடுஞ்சாலையில் இருந்து களுகர் கடை செல்லும் சாலையை தார்ச் சாலையாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[1973 நவம்பர் 30

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இவ் வேலையை சிறப்பு கிராமச்சாலைத் திட்டத்தின் இரண்டாவது படிவத்தில் சேர்த்து செயல்படுத்த அரசு ஏற்கனவே அனுமதித்துள்ளது.

மானாமதுரை ஒன்றியத்திலுள்ள சாலைகள்

* 523 வினா—**திரு. த. சோணையா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், வேம்பத்தூருக்கு தார்ச்சாலை போடும் திட்டம் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம் பெரியகோட்டை-வேம்பத்தூர் சாலையைத் தார்ச்சாலையாக மாற்றி, சீர் செய்ய அரசு 17—6—1972 நாளிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை ஆணை எண் 1212-ல் ஆணையிட்டுள்ளது.

(இ) அதன் மதிப்பீடு ரூபாய் 1,25,500.

* 524 வினா—**திரு. த. சோணையா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், கீழ்ப்பசலைக்கு தார்ச்சாலை போடும் திட்டம் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. த. சோணையா:** தலைவர் அவர்களே, அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டிருக்கிற ரோடு வேலைகள்கூட நடப்பதிலே கால தாமதம் ஏற்படுகிறது. உடனடியாக வேலை செய்வதற்கு உத்தர விடுவார்களா? மேலும் கடைசியில் சொன்ன கீழ்ப்பசலை



1973 நவம்பர் 30]

கிராமத்தில் இரண்டாயிரத்திற்கும் மேல், மூவாயிரம் வரை ஜனத்தொகை இருக்கிறது. ஆகவே 1,500 ஜனத்தொகைக்கு மேற்பட்ட கிராமச் சாலைகளைப் போடும் திட்டத்தின் கீழ் இதையும் சேர்த்து கீழ்ப்பசலைச் சாலையை தார்ச் சாலையாக ஆக்கித்தர உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவர் அவர்களே, இந்த கீழ்ப்பசலை சாலை 2.6 கிலோ மீட்டர் உள்ளதாகும். இது தார் போடப்பட்ட ஊராட்சிச் சாலையாகும். இந்தச் சாலையின் முக்கியத்துவத்தைப் பொறுத்து, மற்ற ஊராட்சிச் சாலைகளோடு எடுத்துக்கொள்ளப்படவேண்டுமென்று தலைமைப் பொறியாளருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ் வடிவேல்:** தலைவர் அவர்களே, இந்த ஊரகச் சாலையை அமைப்பது மிக நல்ல திட்டமாக இருந்தாலும் கூட, அந்தச் சாலைக்கு இணைப்பாக அரிசனத் தெருக்கள் குறுக்கிட்டால், அந்தச் சாலையைப் போடவேண்டுமென்று அரிசன நல இலாகாவிலே கருதினால்கூட, அதற்கு மிராசுதார்கள் மறுப்பு தெரிவிக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட நிலங்களை கட்டாயமாக ஆர்ஜிதம் செய்து, அந்தச் சாலையை இணைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** அரிசனத் தெருக்கள் இருந்தால் உடனடியாக இணைக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. இடையிலே நிலக்காரர்கள் செய்கின்ற தகராறுகள் காரணமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, அதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுப்பதைப்பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, in Dharmapuri district which is a hilly area, there are a number of roads which require urgent repairs. When we ask the Panchayat Union, they say that they have no funds. When we ask the Public Works Department, they say that they do not come under their jurisdiction. When we appeal to the Collector, he does not know whom he should ask. So, may I know whether the Hon. Minister will take necessary action to see that these roads are metalled and black-topped through a proper agency?

[1973 நவம்பர் 30

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஊராட்சி வளர்ச்சித் துறை மூலமாகப் போடப்படுகின்ற சாலைகள் எல்லா மாவட்டங்களுக்கும்தான் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட சில சாலைகள் சேர்க்கப்படவில்லையென்று தெரிவிப்பார்களானல், அதுபற்றி பரிசீலிக்கப்படும். குறிப்பாக, தர்மபுரி மாவட்டத்திற்காக ரூ. 2 கோடி திட்டத்தின்கீழ் பல புதிய சாலைகள் போடப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. த. சோனையா: தலைவர் அவர்களே அந்த கீழ்ப்பசலை சாலைக்கு செல்கின்ற வழியிலே 4 கிராமங்கள் இருக்கின்றன. அதையெல்லாம் சேர்த்தால் ஏறத்தாழ 4,000 ஜனத்தொகை வருகிறது. அங்கெல்லாம், அதிகாரிகள் ஜீப்பிலே கூடச் செல்ல முடியவில்லை. இதனல், தொகுதியைச் சுற்றிப் பார்க்கக்கூட முடியவில்லை. அவ்வளவு மோசமாக இருக்கிற காரணத்தால், அந்தச் சாலையை உடனடியாகப் போட அரசு உத்தரவிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, சமீபத்திலே முதலமைச்சர் அவர்கள் அப்படிப்பட்ட ஒரு கருத்தையே தெரிவித்து இருக்கிருர்கள். 1,500 மக்கட் தொகை இல்லாவிட்டால், அந்தப் பஞ்சாயத்தைச் சேர்ந்த 4, 5 கிராமங்கள் இருக்குமானல், அவைகளையும் ஒன்ருக இணைத்து 1,500க்கு மேல் வருகிறது என்று சேர்த்து, அவற்றையும் இதில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று உத்தரவிட்டிருக்கிருர்கள்—யோசனை தெரிவித்தார்கள். அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## கும்முடிப்பூண்டித் துணை வட்டத்திலுள்ள சாலைகள்.

*525. வினு—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா:

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், தேர்வாய் கிராமம் முதல் பாலவாக்கம் வரை காடிபுத்தூர் கிராமத்தின் வழியே பஸ் செல்லும் பாதையை, கிராமச்சாலைச் சிறப்புத் திட்டத்தின் கீழ் தார்ச்சாலையாக்கும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?



1973 நவம்பர் 30]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இல்லை.

*526. வினு—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டத்திலுள்ள தேர்வழி கிராமம் முதல் ஜி.என்.டி. தேசிய நெடுஞ்சாலைக்கு கோட்டைக்கரை வழியாக, கிராமச்சாலைத் திட்டத்தின் (Rural Road Scheme) கீழ் தார்ச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இல்லை.

திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன இலக்கணப்படி, 1,500 மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு என்றிருந்தாலும், பேருந்து சாலைகள் செல்கின்ற சாலைகளுக்கு முதலிடம் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே. தேர்வழி கிராமம், அதன் உட்பட்ட சிற்றூர்களின் மக்கட் தொகை கணக்கீட்டில், மொத்த மக்கள்தொகை 1,500-க்கு எட்டவில்லை. ஊர்கள், சிற்றூர்கள் மக்கட்தொகை கணக்கீட்டில் 1,500 மக்கட் தொகை அதற்கு மேற்பட்ட குடியிருப்புகள் நிறைய இருக்கின்றன. நிதி ஒதுக்கீட்டைக் கவனிக்கும்போது, இப்பொழுது இதை சேர்த்துக்கொள்ள இயலாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. பஸ் போகின்ற சாலையைப் பார்த்தோமானல், இன்றைய தினம் எல்லா இடங்களுக்கும் பஸ்கள் போவதால், எவை எவை பஸ்கள் செல்லக்கூடிய முக்கிய பாதைகள், எந்த எந்த பஸ் சாலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும், எவையெவற்றைச் சேர்த்துக்கொள்ளலாம் என்பவைகளை எல்லாம் பற்றி பரிசீலனை செய்துகொண்டு வருகிருேம்.

## எல்லாபுரம், கும்முடிப்பூண்டி ஒன்றியங்களில் சர்க்கரைக் கார்டுகள் வழங்கல்.

*527. வினு—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா:

எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம், கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம் ஆகியவற்றில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் சர்க்கரைக் கார்டுகள் வழங்கப்பட்டுவிட்டனவா?

[1973 நவம்பர் 30

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** ஆம்.

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவர் அவர்களே, இப்படி கொடுக்கப்பட்டிருக்கிற கார்டுகள் அனைத்திற்கும் சர்க்கரையையும் வழங்குவதற்கு சிறப்பு ஆணை வழங்கப்படுமா என அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** தலைவர் அவர்களே, இன்றைக்கு சர்க்கரையும் வழங்கப்படுவதற்கு உரிமம் இருக்கிறது.

## காமக்கப்பட்டியருகே சோதனைச்சாவடி.

* 528 வினா—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழக-கேரள எல்லையில் உள்ள காமக்கப்பட்டிக்கு அருகில் உணவு தானியச் சோதனைச்சாவடி ஏற்படுத்தப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதை பேரிஜம் என்ற இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. ஏ. வகாப்:** தலைவர் அவர்களே, பொதுவாக, கேரள எல்லைபோன்று இம்மாதிரியான இடங்களில் செக் போஸ்டுகள் அமைக்கப்படுவதாகவும், இதனால், அவற்றிற்கு இடையிலே உள்ள கிராமங்களில் விலை உயர்ந்து, அரிசி அவ்விலையில் விற்கப்படுவதாகவும் கேள்விப்பட்டதால்தான் இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறேன். அதை விசாரித்து அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்விப்பட்டதைச் சொல்கிறார்கள். இப்பொழுது அங்கெல்லாம் செக் போஸ்ட் இல்லை. முன்பு லெவி போட்ட காரணத்தாலே காமக்கப்பட்டிக்குப் போகிற வழியிலே செக் போஸ்டுகள் இருந்தன. இப்பொழுது அவைகளெல்லாம் இல்லை.



1973 நவம்பர் 30]

## Rents for Housing Board tenements

* 529 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether there is any difference in the rents collected from the inmates of the buildings under the control of the State Housing Board; and

(b) if so, whether the Government propose to fix a uniform standard?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) இல்லை.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, is it a fact that recently an order has been passed that in the case of buildings constructed by the Housing Board, if the rent allowance is higher than the rent paid to the house, the rent allowance is either cancelled or the party concerned has to pay the higher rent fixed by the Government?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** வீட்டு வாடகைப்பற்றிய கேள்வி இது. இதிலே அரசு அலுவலாளர்களைப் பொறுத்தவரையில், அவர்களிடத்திலே 10 சத விதம் பிளஸ் ஹவுஸ் ரெண்ட் அலவன்ஸ் இரண்டும் சேர்த்துத்தான் வாங்கப்படுகிறது. அதற்கு மேலே வசூலிக்கப்படவில்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், புதிய பே கமிஷனுடைய தீர்ப்பு வருவதற்கு முன்னால், அவர்களுடைய அடிப்படை சம்பளம் குறைவாக இருந்தபோது 10 சதவீதம் வாங்கிக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது, அக்டோபர் 1970-க்குப் பிறகு, அதே வீட்டிலே, அதே ரூம் இருக்கிறபொழுது, ரூ. 20, ரூ. 30 ஜாஸ்தி கொடுக்கவேண்டிய நிலைமையிலே ஏற்கனவே கொடுக்கப்பட்ட அலவன்ஸ் குறைக்கப்பட்டிருக்கிறதே, ஆகவே, இதை ரேஷனலைஸ் பண்ணுவதற்காக, ஒரே வீட்டிற்கு, சிலரிடம் குறைந்த வாடகையும், சிலரிடம் அதிக வாடகையும் வாங்கப்படுகின்ற நிலையைமாற்றி, அம்மாதிரி உள்ள எல்லா வீடுகளுக்கும் ஒரே வாடகை என்று மாற்றியமைக்க அரசு ஆலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1973 நவம்பர் 30

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** வீட்டினுடைய விலையும் வீடு கட்டுகிற நிலைமையும், காலத்திற்கேற்றவாறு நிலத்தினுடைய விலையும் மாறிமாறி இருந்து வருவதும், தொழிலாளர்களுக்கான கூலி அதிகப்பட்டு வருவதும், வீடுகளிலே அதிகப்படியான வசதிகள் செய்யப்பட்டு வருவதாலும், ஆண்டுக்காண்டு நிலைமைகள் மாறி மாறி வருவதாலும், எல்லா வீடுகளுக்கும் ஒரே மாதிரி நிர்ணயம் செய்வது இயலாத காரியம். இது ஹவுசிங் போர்டு என்ற தனி நிறுவனம் வசூலிக்கிற காரியம். இதிலே அரசு தலையிடுவது கூட அவ்வளவு சரியாக இருக்காது என்று கருதுகிறேன்.

### ஊராட்சிகளில் வீட்டுவசதித் திட்டங்கள்.

* 530 வினா—**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வீட்டு வசதி இல்லாத டவுன் பஞ்சாயத்துகளில் வீடுகள் கட்டி வாடகைக்கு கொடுக்க அரசாங்கத்திடம் செயல் திட்டம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, (அ) வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக டவுன் பஞ்சாயத்துக்களிலே வீடு கட்டும் திட்டம் செயல்பட்டு வருகிறது.

(இ) இதிலே செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள மேன்மையூரிலும், கோவையிலுள்ள அன்னூரிலும், வேலியம்பாடியிலும், சேலத்திலுள்ள ஆத்தூரிலும் இந்தக் கிராமங்களில் எல்லாம் டவுன் பஞ்சாயத்துகளுடைய வீடுகள் தற்பொழுது கட்டப்பட்டு வருகின்றன.

**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** தலைவர் அவர்களே, இதை மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்துவதற்கு அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறதா? இந்த ஆண்டு இதற்கு ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, பல்வேறு திட்டங்களின் மூலமாக, வீடுகளை கிராமங்களிலே, டவுன் பஞ்சாயத்துக்களிலே கட்டிக்கொள்ளலாம். உதாரணத்திற்கு,



1973 நவம்பர் 30]

கூட்டுறவு வீடு கட்டுகிற சங்கங்களின் மூலமாக ரூ. 25,000 வரை வீடுகட்டிக்கொள்ள கடன் தரப்படுகிறது. ரூரல் ஹவுசிங் ஸ்கீம் மூலமாக, ரூ. 5,000 வரை வீடுகட்டிக்கொள்ள கடன் தரப்படுகிறது. ஆகவே, அந்த வசதிகளை வைத்துக்கொண்டு வீடுகளை டவுன் பஞ்சாயத்துக்களிலே கட்டிக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, இந்த வீட்டு வசதி வாரியம், ஏராளமான வீடுகளை நமது மாநிலத்திலே கட்ட வேண்டி இருக்கிறது. அதிலே, கிராமங்களிலே வீடு கட்டுவதற்கான திட்டங்கள் அரசாங்கத்திடம் இருக்கின்றதா? கிராமங்களிலே இருக்கிற சாதாரண ஜனங்களுக்கு இலவசமாக நிலம் கொடுத்து, அங்கே வீடு கட்டுவதற்கான ஒரு திட்டம் இருப்பதாக செய்திகள் வந்துகொண்டிருக்கின்றனவே, அவைகள் உண்மை தானா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, கிராமங்களிலே தனியாக வீடு கட்டுகிற திட்டம் ஒன்றும் தற்பொழுது அரசிடத்திலே இல்லை. ஆனால், கிராமங்களிலே வீடு கட்ட ரூ. 67 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. 5 சென்ட் வரை நிலம் வைத்திருக்கிறவர்கள் ரூ. 5,000 வரை கடன் பெற்று வீடு கட்டிக்கொள்ளலாம். அரசு ஏராளமான வீட்டு மனைப் பட்டாக்களை ஏழைகளுக்கு வழங்கியிருக்கிறது என்பதை கனம் உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று நினைக்கிறேன்.

[முற்பகல் 10-00]

### மணல்மேடு கூட்டுறவு நூற்பாலைத் தொழிலாளர்கள்.

* 531 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாயூரம்-மணல்மேடு கூட்டுறவு நூற்பாலையில் 1973-ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதத்தில் அதன் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்களா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

[1973 நவம்பர் 30

## கும்முடிப்பூண்டி—காஞ்சிபுரம் பேருந்து வழித்தடம்

** 532 வினா—திரு. கா. வேழவேந்தன் :* மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டிக்கும் காஞ்சிபுரத்திற்கும் இடையே பெரிய பாளையம், வெங்கல், திருவள்ளூர் வழியே ஒரு பேருந்து விடுவதற் கான செயற்குறிப்பு ஏதேனும் பரிசிலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இல்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் தலைநகராக மாற்றப்பட்ட நேரத்திலேயே அறிஞர் அண்ணா அவர்கள் இருந்த காலத்திலேயே காஞ்சிபுரத்திற்கு ஒவ்வொரு இடத்திலிருந்தும் பேருந்துகள் விடக்கூடிய முயற்சி மேற் கொள்ளப்படும் என்ற உறுதியை அளித்தார்கள். இப்பொழுது கும்மிடிப்பூண்டியிலிருந்து வெங்கல் வழியாகச் சென்றால் கிட்டத் தட்ட 80 மைல் தூரம் இருக்கிறது. ஆகவே தனியாக பேருந்து விடுவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவலின்படி சுண்ணாம்புகுளத்திலிருந்து காஞ்சிபுரத்திற்குப் போகின்ற பேருந்துகள்—மாண்புமிகு உறுப் பினர் கூறிய இடங்களின் வழியாகச் செல்லக்கூடிய பேருந்துகள்— இருப்பதாகவும் அதற்கே போதுமான வருவாய் இல்லை என்பதாக வும் எனக்குக் தகவல் கிடைத்திருக்கிறது.

## சென்னை புறநகர் பேருந்து வழித்தடங்களை நீட்டித்தல்

** 533 வினா—திரு கா. வேழவேந்தன் :* மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து பெரியபாளையம் வரை செல்லும் வழித்தடம் எண் 132 பேருந்துகளை நெல்வாய் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் அமுல்படுத்தப்படும் ?



1973 நவம்பர் 30]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) & (இ) 132-ஆம் எண் வழித்தடத்தை (வள்ளலார் நகர்-பெரியபாளையம்) பெரியபாளையத்திற்கு அப்பால் நெல்வாய் வரை நீட்டிக்கும் செயற் குறிப்பை பல்லவன் போக்குவரத்துக் கழகம் ஆய்வு செய்தது. பெரியபாளையத்திற்கும் நெல்வாய்க்கும் இடைப்பட்ட சாலை மோட்டார் செல்லத்தக்கதாயினும் பேருந்துப் போக்குவரத்திற்கு ஏற்றதல்ல.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது அந்தச் சாலை சீர்படுத்தப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே அதை மறுபரிசிலனை செய்ய அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** சீர்செய்யப்பட்டு இருந்தால் அதை மறுபரிசீலனை செய்யலாம்.

** 534 வினா—திரு. கா. வேழவேந்தன் :* மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னைக்கும் ஊத்துக்கோட்டைக்கும் இடையிலான வழித் தடம் எண் 92 பேருந்துகளை மதுரைவாயல் கிராமம் வரை சென்று திரும்ப ஏற்பாடு செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இல்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, இரண்டாயிரம் மக்கட் தொகை கொண்ட அந்தக் கிராமத்திற்கு பஸ் வசதியே இல்லை என்ற நிலைமை இருப்பதால் அதை மறுபரிசிலனை செய்வதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, பேருந்து வழித்தடங்கள் மக்கள் தொகை அடிப்படையிலே விடப் படுவது அல்ல, சாலை வசதிகளின் அடிப்படையிலேதான் விடப்படு கின்றன. அங்கே சாலை வசதிகள் இல்லை.

** 535 வினா—திரு கா. வேழவேந்தன் :* மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னைக்கும் வெங்கல் கிராமத்திற்கும் இடையிலான வழித் தடம் எண் 58-இ பேருந்தினை எனம்பாக்கம் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

[1973 நவம்பர் 30

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இல்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, அந்தப் பேருந்து நீட்டிப்பு நான்கைந்து கிராமங்களை இணைக்கின்ற காரணத்தினால் தயவுசெய்து அது மறுபரிசீலனை செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, சாலைகளிலே பல இடங்களிலே படுகை வளைவுகள் இருப்பதால் பஸ்களை விடமுடியாது என்ற தகவலைத் தந்திருக்கிறார்கள்.

### பெரியபாளையத்தில் அனாதை இல்லம்

* 536 **வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் வினா எண் 264-க்கு 22—8—1972-ல் அளித்த விடையையொட்டி தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், பெரியபாளையம், பவானி அம்மன் கோயில் நிர்வாகத்தின் கீழ் அனாதை இல்லம் ஒன்றை அமைக்கும் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** திருக்கோயிலுக்குச் சொந்தமான ஒரு சத்திரத்தினை பழுதுபார்த்து விரைவாக அனாதை இல்லம் ஆரம்பிக்க ரூ. 26,800-க்கான மதிப்பீடு இந்து சமய அறநிலையத்துறை ஆணையரால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், ஏதாவதொரு வாடகைக் கட்டிடத்தில் தற்போதைக்கு அனாதை இல்லம் ஆரம்பிக்க சாத்தியக்கூறு உள்ளதா என்பதை ஆராயுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, அரசு இவ்வளவு ஆர்வத்தோடு இருந்தும்கூட தனிப்பட்ட கோயில்களைப் பொறுத்த வரையில் அவர்களுடைய நிர்வாகத்தின்கீழே இருப்பதால் நிறைய வருமானம் வந்தாலும்கூட அவர்கள் இதிலே தாமதம் காட்டுகிறார்கள். ஆகவே வருகின்ற கல்வியாண்டிலிருந்தாவது அங்கே அனாதை இல்லம் தொடங்குவதற்கான சிறப்பு ஆணை பிறப்பிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** யாரும் தாமதப்படுத்தவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை உடனே கடந்த 4—4—1972 ஆம் தேதி கொடுத்தபொழுது



1973 நவம்பர் 30]

உடனடியாக அதை ஆரம்பிக்கத் தேவையான கட்டட வசதிகள் இல்லாமல் அங்கேயே இருந்த பழைய சத்திரத்தைப் புதுப்பித்தோ மேலும் ஒரு வாடகைக் கட்டடத்தைத் தேடியோ அதை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தேவையான நடவடிக்கை எடுக்க ஆணையருக்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். வடிவேல் :** தஞ்சை மாவட்டத்திலேயே வைத்தீஸ்வரன் கோயிலுக்கு 1,000 வேலி நிலம் இருக்கிறது. அந்த மாதிரி ஸ்தலங்களிலே அனாதை விடுதிகள் கட்ட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, எந்த எந்தக் கோயில்களிலே போதுமான நிதிவசதி இருக்கிறதோ, உபரி நிதி இருக்கிறதோ அந்தக் கோயில்களிலே அந்தக் கோயில்களின் அறங்காவலர்கள் தீர்மானம் செய்தால் அதை அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தலைவர் அவர்களே, அனாதைக் குழந்தைகள் இறைவனுடைய குழந்தைகள் என்று எண்ணுகின்ற மதவாதிகள் தமிழகத்திலே உள்ளவர்கள். ஆகவே ஏராளமான நிதி வசதி இருக்கின்ற அபரிமிதமான வருமானம் வருகின்ற கோயில்களிலே நிதிபெற்று அனாதை விடுதிகள் கட்டி அவர்களைப் பராமரிக்கக்கூடிய முறையில் ஒரு சட்டத்தை அரசு கொண்டு வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, ஏற்கனவே சட்டத்திலே அதற்கு வழிவகை இருக்கிற காரணத்தினால் தமிழ்நாட்டிலேயுள்ள கோயில்களிலே, 13 கோயில்களின் மூலமாக இதுபோன்ற அனாதைவிடுதிகளை நடத்திக்கொண்டு வருகிறோம். மேலும் மேலும் எந்த எந்தக் கோயில்களிலே நிதி வசதியிருக்கிறதோ அந்தக் கோயில்களின் மூலமாக அவற்றை ஆரம்பிப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

### வடபழனி கோயில் நிர்வாகத்தின் மூலம் கட்டடப் பணி

* 537 **வினா—திரு. வை. பாலசுந்தரம் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடபழனி ஆண்டவர் கோயில் நிர்வாகிகளுக்குக் குடியிருப்புகள் கட்டித் தருவதற்கான திட்டம் ஏதேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா ?

### (2) ஒத்திவைப்புத் தீர்மானம்.

### சேலம் மாவட்டம் மேச்சேரி காவல் நிலையத்தில் காவலிலிருந்த ஒருவர் இறந்ததால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது திரு. ஜேம்ஸ் அவர்கள் 'a person who was arrested last week by the police, attached to Macheri police station in Salem district was found dead while he was in police custody and the grave situation prevailing there' என்ற பொருள் குறித்து விவாதிப்பதற்காக ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையின் பிற அலுவலை ஒத்திவைத்து விவாதிக்க தகுந்த தீர்மானமாகும் என்பதைப் பற்றி திரு. ஜேம்ஸ் அவர்கள் சுருக்கமாக கூற வேண்டும்.

* திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மேச்சேரி போலீஸ் ஸ்டேஷனில் ஒரு நபரை போலீசார் அழைத்துச் சென்றதாகவும் அங்கே போலீஸ் கஸ்டடியிலே இருக்கும்பொழுதே அந்த நபர் தாக்கப்பட்டு மாண்டதாகவும் தகவல் வந்திருக்கிறது. சாதாரணமாக போலீஸ் ஸ்டேஷனில் கைதிகள் தாக்கப்பட்டு கைதிகள் இறப்பது என்று சொன்னால் மிக வருந்தத்தக்க விஷயம் என்று இந்த மன்றத்திலே பல தடவைகள் கூறியிருந்தும் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நாகர்கோவிலிலேகூட கிருஷ்ணன்கோயில் ஸ்டேஷனில் * இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது; அது சம்பந்தமாகவும் அரசாங்கம் எந்தவிதமான விசாரணையும் செய்ததாகத் தெரியவில்லை. ஆகவே இதுபோன்ற நிகழ்ச்சிகள் மேலும் நிகழாமல் இருக்கின்ற வகையிலே இதைப்பற்றி தக்க நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு எந்த முறையிலே நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று சொல்வதற்கு ஏதுவாக அரசாங்கத்திற்கு உதவி செய்கிற முறையிலே இந்த நிகழ்ச்சியைப் பற்றி விவாதிப்பதற்கு இந்தச் சட்ட மன்றத்தின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, சேலம் மாவட்டம், மேச்சேரி கிராமக் கடைத்தெருவில் பழைய பேருந்து நிலையத்திற்கு அருகில் தேனீர் விடுதி ஒன்றை குப்புசாமியின்



மகன் கந்தசாமி என்பவர் நடத்தி வருகிறார். இவர் 17—11—1973 அன்று இரவு 7 மணிக்கு மேச்சேரி காவல் நிலையத்திற்குச் சென்று, கொலகாரனூரைச் சேர்ந்த (1) நல்லதம்பி, (2) பச்சமுத்து, (3) பரமசிவம், (4) பள்ளிப்பட்டி மாணிக்கம், (5) எரப்பரெட்டியூரைச் சேர்ந்த நல்லப்பன் மற்றும் (6) நல்லதம்பி ஆகிய 6 நபர்களும் சட்ட விரோதமான கும்பலாகக் கூடிக்கொண்டு, தடி, கற்கள் போன்ற ஆயுதங்களால் தன்னுடைய தேனீர் விடுதியைத் தாக்கி, அங்கிருந்த பித்தளை; கண்ணாடிச் சாமான்கள், சைக்கிள் மற்றும் இதர பொருட்களுக்குச் சேதம் விளைவித்தார்கள் என்ற புகாரைத் தாக்கல் செய்தார். மேச்சேரி காவல் நிலைய உதவி ஆய்வாளர் இந்தப் புகாரைக் காவல் நிலைய குற்ற எண் 438/73 இ.பி.கோ. 147, 452, 426 மற்றும் 323 பிரிவுகளின் கீழ் வழக்காகப் பதிவு செய்து உடனடியாகப் புலன் விசாரணை செய்தார். அன்று இரவு 7.30 மணிக்குச் சம்பவம் நடந்ததாகச் சொல்லப்பட்ட இடத்திற்கு உதவி ஆய்வாளர் சென்றார். அப்பொழுது மேலே கூறப்பட்ட ஆறு நபர்களும் தேனீர் விடுதியில் கலவரம் விளைவித்துக் கொண்டிருப்பதைக் கண்டு, அவர்களைக் கைது செய்து, காவல் நிலையத்திற்கு இரவு 7.45 மணிக்குக் கொண்டு வந்தார். குற்றவாளிகளில் ஒருவரான எரப்ப ரெட்டியூர் சின்னப்ப கவுண்டரின் மகன் நல்லப்பன் (வயது 30) அளவுக்கு மீறி, குடித்து போதையில் காணப்பட்டார். தேக சோதனையிடப் பட்டதற்குப் பிறகு அவர்கள் காவல் நிலையத்திலுள்ள லாக்கப்பில் வைக்கப்பட்டார்கள். காவலர் 880 இராமசாமி என்பவர் நிலையப் பாதுகாப்பில் இருந்தார். காவலர் 2273 பெரியண்ணன் கூடுதல் பாதுகாப்பாளராகவும் நியமிக்கப்பட்டார். அதற்குப் பிறகு இரவு 10 மணிக்கு உதவி ஆய்வாளர் காவல் நிலையத்தை விட்டுச் சென்றார். இரவு 12.45 மணிக்கு லாக்கப்பில் இருந்த நல்லப்பனுக்குத் திடீரென்று வலிப்பு ஏற்பட்டு அவர் மயக்கம் அடைவதைக் கண்ட காவல் நிலையத்திலிருந்த காவலர்கள் அவரை உடனே வெளியே எடுத்து, உதவி ஆய்வாளருக்குத் தகவல் அனுப்பினார்கள். உள்ளூர் ஆரம்பச் சுகாதார மருத்துவர் திரு. பாலசுப்பிரமணியத்தை அழைத்துக்கொண்டு உதவி ஆய்வாளர் 18—11—1973 அதிகாலை 1.30 மணிக்குக் காவல் நிலையத்திற்கு வந்தார். மேச்சேரி ஆரம்பச் சுகாதார மருத்துவர், நல்லப்பனைப் பரிசோதனை செய்துவிட்டு, அவர் அதிகமாகக்

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** ஆம்.

**திரு. முனு ஆதி :** தலைவர் அவர்களே, உபரி வருமானம் வருகின்ற கோயில்களிலிருந்து பெற்று செய்யாவிட்டாலும் கடனாகப்பெற்றாவது வீடுகள் இல்லாத ஏழைகளுக்கு சிறு சிறு வீடுகளையாவது கட்டிக்கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** கோயில்களில் பணியாற்று கின்ற ஊழியர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம்பற்றிய கேள்வி இது. வடபழனியைப் பொறுத்தவரையில் நிர்வாக அதிகாரிக்கு வீடுகட்டப்படுகிற வேலை நடைபெற்றுக்கொண்டு வருகிறது. ஊழியர்களுக்கும் கட்டிக்கொடுக்கின்ற முறையிலே மாநகராட்சியினிடத்திலே ஒப்புதல் கேட்கப்பட்டிருக்கிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இந்த வட பழனியிலே உள்ள கோயிலிலே பணியாற்றுகின்றவர்களுக்கு எத்தனை பேர்களுக்கு அந்த வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** அந்தக் கோயிலில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் அனைவருக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டுமென்ற அடிப்படையிலே நாம் ஆரம்பித்திருக் கிறோம். அங்கே சர்வே எண் 55, 60-இல் உள்ள நிலம் கோயிலுக்குச் சொந்தமாக இருப்பதால் அந்த நிலத்தினுடைய பரப்பளவில் எத்தனை வீடுகள் கட்டமுடியுமோ அத்தனை வீடுகளைக் கட்ட ஏற்பாடு இருக்கிறது.

**திரு. அ. தேவேந்திரன் :** தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள திருக்கோயில்களிலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு அந்த அந்த திருக்கோயில்களிலே உள்ள நிதி வசதியிலிருந்து வீடு கட்டிக்கொடுக்கின்ற உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** ஏற்கனவே பெரிய கோயில்களிலே நிதி வசதி இருந்தால் அப்படி கட்டிக்கொடுக்கப் படுகிறது. எதிர்காலத்திலே அப்படிப்பட்ட திட்டத்தை மேற்கொள்ள அரசு யோசிக்கும்.





**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** வடபழனிக்குப் பக்கத்திலே நிறைய நிலம் காலியாக இருக்கிறது. அந்த நிலங்கள் எல்லாம் தனிப்பட்டவர்களுடைய நிலமாக இருந்தாலும்கூட அந்த ஊழியர் களுக்கு வீடுகட்டிக்கொடுக்கின்ற முறையிலே அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்ய அரசாங்கத்திற்கு யோசனை உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, கோயிலினுடைய நிதி வசதியைப் பொறுத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

## கதர் வாரிய அலுவலர்களுக்கு ஓய்வூதியம்

* 538 வினா—**திரு. என் கிட்டப்பா :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கதர் கிராமத் தொழில் துறையில் ஓய்வு பெற்றவர் களுக்கு 'பென்ஷன்' வழங்கப்படுகிறதா ?

(இ) இதுவரை எத்தனை பேருக்கு வழங்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) ஆம்.

(இ) ஒரு நபர்க்கு ஓய்வூதியமும் 38 நபர்களுக்கு தற்காலிக ஓய்வூதியமும் வழங்கப்பட்டுள்ளது.

**திரு. என் கிட்டப்பா :** தலைவர் அவர்களே, வழங்கப்படுகின்ற இந்த பென்ஷன் தொகைக்கு மத்திய அரசு ஏதாவது தொகை கொடுக்கிறதா ? அல்லது மாநில அரசே முழுமையும் கொடுக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, அந்த விவரம் என்னிடத்திலே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அது உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கனவே எழுப்பப்பட்ட ஒரு உரிமைப் பிரச்சினைக்கு என்னுடைய தீர்ப்பை நான் நாளை தருகிறேன்.

குடித்துவிட்டதனால் அவருடைய நிலைமையில் அபாயம் தோன்றியுள்ளதென்றும், அவரை உடனே மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லும்படியும் கூறினர்.

நல்லப்பனை மருத்துவ மனைக்குக் கொண்டு செல்வதற்காக, உதவி ஆய்வாளர் மேட்டூருக்குச் சென்று எம்.எஸ்.ஒய். 2044 எண்ணுள்ள வேன் ஒன்றை அமர்த்திக்கொண்டு, 18—11—1973 அதிகாலை 3.15 மணிக்கு மேச்சேரிக்குத் திரும்பினர். அந்த வேனில் நல்லப்பனை ஓமலூர் மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்று காலை 4 மணிக்குச் சேர்த்தார். மருத்துவ மனையில் நல்லப்பனைப் பரிசோதித்த மருத்துவ அதிகாரி திரு. பெரியண்ணன், 18—11—1973 காலை 4.15 மணிக்கு நல்லப்பன் இறந்துவிட்டதாகத் தெரிவித்தார்.

நல்லப்பன் இறந்து போனது குறித்து 18—11—1973 அன்று மேச்சேரி காவல் நிலையத்தில் குற்ற எண் 439/73 கிரிமினல் நடைமுறைச் சட்டப் பிரிவு 174-ன் கீழ் மற்றொரு வழக்கும் பதிவு செய்யப்பட்டது. பிரேத விசாரணையும், பிரேத பரிசோதனையும் நடைபெற்றன.

பிரேத விசாரணையில், பஞ்சாயத்தார்கள், இறந்துபோன நல்லப்பன் அளவுக்கு மீறி மது அருந்தியதால் இறந்துவிட்டார் என்று தீர்மானித்துள்ளனர் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். பஞ்சாயத்தார்களாக இருந்தவர்கள் :—

(1) திரு. குமாரசாமி கவுண்டர், கிராம முன்சீப், ஓமலூர் ;

(2) திரு. ராமசாமி செட்டி, தலைவர், கோட்டிபுரம் பஞ்சாயத்து ;

(3) திரு. நடராச கவுண்டர், கர்ணம், கோட்ட மேட்டுப்பட்டி ;

(4) திரு. சிவராமன், தலைவர், ஓமலூர் பஞ்சாயத்து ;

(5) திரு. பழனி, முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர், ஓமலூர்.

பிரேத பரிசோதனையின் முடிவுகள், உடல் உள் உறுப்புகளின் ரசாயனப் பரிசோதனை முடிவு தெரிந்தபின் அறிவிக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியின்மீது, காவல் நிலைய ஆணை எண் 145-ன் படிக்கான விசாரணையை நடத்தும்படி மேட்டூர் உதவி கலெக்டரை, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் பணித்துள்ளார். விசாரணை நடைபெற்று வருகிறது. ஆகவே, இந்த விவரங்களை அளித்ததன் மூலம், இந்தச் சபையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்தையொட்டி, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

## (ஆ) நாகை ஸ்டீல் ரோலிங் மில்லில் கதவடைப்பும் அதனால் ஏற்பட்டுள்ள தொழிலாளர் பாதிப்பும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திருவாளர்கள் கே. டி. கே. தங்கமணி, எட்மண்ட், மூனு ஆதி ஆகியோர்கள் " Lock out in Nagai Steel Rolling Mills since 4th November 1973 affecting 600 workers and arrest of 80 workers and failure of management to implement decisions and tense situation in the area''. என்பது பற்றி விவாதிக்க வேண்டுமென்ற ஒத்திவைப்புத் தீர்மானங்களை அளித்திருக்கிறார்கள். இது எப்படி அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கும் அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை முதலில் திரு. எட்மண்ட் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. க. உரோ. எட்மண்ட் :** சட்டமன்ற விதி 43-ன் கீழ் நான் கொடுத்திருக்கின்ற ஒத்தி வைப்புத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசும்பொழுது, நாகபட்டிணத்தில் அந்த ஸ்டீல் ரோலிங் மில்லிலே கதவடைப்பு செய்ததன் மூலம் ஏறத்தாழ 600 குடும்பங்கள் இன்றைய தினம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அங்கே வேலை செய்து கொண்டிருக்கும் தொழிலாளர்கள் எல்லாம் இன்றைய தினம் வேலையற்று தெருவிலே நிற்கின்ற அளவிலே அவர்களை நம்பியிருக்கிற குடும்பங்கள் அவதிக்குள்ளாகி இருக்கின்றன. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதைப்பற்றி உடனடியாக எந்த நடவடிக்கையும் எடுத்ததாக எந்தவிதமான தகவலும் வரவில்லை. அதிகாரிகளின் முன்னால் நேரடிப் பேச்சு வார்த்தைகள் நடந்து இந்தப் பேச்சு வார்த்தைகளினால் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட முடியாத நிலைமையில், இந்தப் பிரச்சினையை நல்ல விரிவான முறையில் இங்கே விவாதித்து அதிலே சரியான முடிவுகளைக் காண வேண்டும் என்ப

[திரு. க. உரோ. எட்மண்ட்] [1973 நவம்பர் 30

தற்காக, இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து இந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் நாகப்பட்டினத்திலுள்ள ஸ்டீல் ரோலிங் மில் தொழிலாளர்கள் சம்பந்தமானது. இந்த மாதம் 4-ம் தேதி எந்தவிதமான காரணமுமில்லாமல் அங்குள்ள நிர்வாகம் கதவடைப்புச் செய்திருக்கிறது. 600-க்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள், என்பது மட்டுமில்லை ஏற்கனவே அங்கிருக்கும் சங்கத்திலே போட்டிகள் கிடையாது. ஒரே ஒரு சங்கம்தான் அங்கிருக்கிறது; அது ஏ.ஐ.டி.யூ.சியோடு இணைக்கப்பட்ட சங்கம். அந்தச் சங்கத்தின் தலைவராக இருப்பவரே தி.மு. கழகத்தைச் சேர்ந்தவர்தான். கட்சிக் கண்ணோட்டமில்லாமல் ஒருமித்திருக்கக்கூடிய அந்தச் சங்கத்திலே ஏற்கனவே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு அதன் அடிப்படையிலே இந்தத் தொழிலாளர்களுக்கு மாதாந்திரச் சம்பள உயர்வு விலைவாசி உயர்வு புள்ளிகளுக்கு ஏற்ப கொடுக்கப்பட வேண்டும் என்று இருக்கிறது. அந்த மாதிரி கொடுப்பதற்கு மறுத்துவிட்டு இன்றைக்குக் கதவடைப்பு செய்திருக்கிறார்கள். ஆகவே, அது நியாயமில்லை. நேரடியாகப் பேச்சு வார்த்தை நடந்து பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால் நல்லது தான். ஆனால் சென்ற காலத்திலே இருக்கின்ற சம்பளத்தை வேண்டுமானால் நான் கொடுக்கிறேன், பின்னாலே பழைய முறைப்படி கூட பஞ்சப்படி உயர்வை ஏற்றுக்கொள்ள முடியாது என்று நிர்வாகம் சொல்லியிருக்கிறது. நாட்டின் எல்லாப் பகுதிகளிலேயும் இந்த விலையேற்றத்திற்குத் தகுந்தபடி பஞ்சப்படியை உயர்த்த வேண்டுமென்று ஒத்துக்கொண்டிருக்கும்பொழுது, இப்பொழுது எடுத்த முடிவிற்குப் பின்னடையும் நிலைமைக்கு நிர்வாகம் வந்திருக்கிறது. ஆகவே, தொழிலாளர்கள் தினசரி 12 பேர்கள் இவற்றை எல்லாம் நிர்வாகத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று மறியல் செய்திருக்கிறார்கள்.

நான் ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொடுத்த நேரத்திலே 80 பேர் கைது செய்யப்பட்டிருந்தார்கள். இப்பொழுது இன்னும் அதிகமான பேர் கைது செய்யப்பட்டிருக்கலாம். ஆகவே, இந்த இலாகா இதிலே தலையிட்டு அந்த நியாயமான கோரிக்கையை நிறைவேற்றுவதோடு மட்டுமில்லாமல் கதவடைப்பை ரத்து செய்ய



1973 நவம்பர் 30] [திரு. கே. டி. கே. தங்கமணி]

வேண்டும். அப்படி நிர்வாகம் செய்யாவிட்டால் கடுமையான நடவடிக்கை அந்த முதலாளி மீது எடுக்கப்படும் என்று எச்சரிக்கை செய்வதோடு, இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகக் கைது செய்யப்பட்ட தொழிலாளர்கள் விடுதலை செய்யப்பட வேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.

இதிலே இந்த அரசிற்குப் பொறுப்பிருக்கிறது. இன்றைக்கு அந்தத் தொழிலாளர்கள் நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற கொள்கையைக் கூட நிர்ப்பந்தப்படுத்த முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. என்ன நிர்ப்பந்தமிருக்கிறது? இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் என் இவ்வளவு தடுமாறிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டியிருப்பதால் இந்தச் சபையை ஒத்திவைத்து, இந்த அரசின் கொள்கையை எடுத்துச் சொல்லக் கூடிய வகையிலே இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** திருவாளர்கள் ஜி. ஆர். எட்மண்ட், மூனா ஆதி, கே. டி. கே தங்கமணி ஆகியோர் நாகப்பட்டினத்திலுள்ள இந்தியன் ஸ்டீல் ரோலிங் மில்ஸ் கதவடைப்புச் சம்பந்தமாகக் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது நான் ஒரு விளக்கத்தைத் தர கடமைப்பட்டிருக்கிறேன் நாகப்பட்டினத்திலுள்ள இந்தியன் ஸ்டீல் ரோலிங் மில்லில் வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 600. மேற்படி தொழிலாளர்கள் நாகப்பட்டினம் ஸ்டீல் ரோலிங் மில்ஸ் தொழிலாளர் சங்கம் மூலமாகக் கடந்த ஆண்டுக்குக் கொடுத்த தொகைக்குக் குறையாமல் 1972-73 ஆண்டுக்கு மிகை ஊதியம் (போனஸ்) கொடுக்கவும், தற்போது அகவிலைப்படி கணக்கிடும் முறையை மாற்றி அமைக்கக்கூடாது என்றும் ஒரு தொழில் தாவா எழுப்பியுள்ளனர். மேற்படி தொழிலாளர்கள் தாமதமாக வேலை செய்வதாகக் குற்றம் சாட்டி, நிர்வாகம் 4—11—1973 முதல் கதவடைப்பு செய்துள்ளது. சென்னைத் தொழிலாளர் துறை துணை ஆணையர், நிர்வாகத்தையும், தொழிற் சங்கப் பிரதிநிதிகளையும் அழைத்து 7—11—1973, 3—11—1973 தேதிகளில் சமரசப் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். சமரசப் பேச்சு வார்த்தைகள் வெற்றி பெறவில்லை.

[திரு. க. இராசாராம்] [1973 நவம்பர் 30

எல்லைமீறி தொழிற்சாலைக்குள் சென்றதற்காக 16—11—1973-ம் தேதி 18 நபர்கள் கைது செய்யப்பட்டனர். நாகப்பட்டினம் கோட்டாட்சித் தலைவரின் அலுவலகத்திற்கு முன் மறியல் செய்ததற்காக 17—11—1973 முதல் 24—11—1973 தேதி வரை (18—11—1973 தேதி நீங்கலாக) நாளொன்றுக்கு 12 பேர் வீதம் மறியல் செய்ததற்காகக் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் நாகப்பட்டினம் குற்ற இயல் நீதிபதியின் முன்பு நிறுத்தப்பட்டனர். இது சம்பந்தமாக மேலும் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்துமாறு தொழிலாளர் துறை ஆணையாளர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். நேற்றைய தினம் கூட, தொழிலாளர் துறை ஆணையர் நிர்வாகத்தினரோடும் தொழிலாளர் பிரதிநிதிகளோடும் பேச்சு வார்த்தை நடத்தி இருக்கின்றார்.

மேலும் சமரச முயற்சிகள் தொடர்ந்து நடத்தி ஒரு சுமுகமான நிலையை உண்டாக்க அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. அரசு இதிலே எந்தவித நிர்ப்பந்தத்திற்கும் தன்னை ஆட்படுத்திக் கொண்டிருக்கவில்லை. யாருக்கும் சாதக, பாதகமாக இந்த அரசு நடந்து கொள்ளவில்லை என்று சொல்லி, பேரவையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சரவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு இதற்காக அவையை ஒத்திவைக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

அடுத்து, திரு. பாலையா அவர்கள் மாண்புமிகு கல்வி-சுற்றுலா அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு அவசரப் பொது முக்கியமான காரியத்தைக் கொண்டு வருவார்.

## (3) நடைமுறைக் கேள்வி

## விவாதத்தின் ஒரு பகுதி முழுமையையும் பேரவைத் தலைவர் நீக்க ஆணையிட்டது குறித்து.

THIRU K. T. K. TANGAMANI : Sir, before the Calling Attention Notice is taken up, I want to raise a point of order. I will explain briefly my point of order. It relates to Rule 235 of our Assembly Rules which says—

'If the Speaker is of opinion that a word or words has or have been used in debate which is or are defamatory or indecent or unparliamentary or undignified, or grossly irregular he may in



1973 நவம்பர் 30] [திரு. கே. டி. கே. தங்கமணி]

his discretion, order that such word or words be expunged from the official report of the proceedings of the House and all consequential alterations made in such report and make an announcement in the Assembly of the fact of his having made such order.' This is the Rule and the point of order relates to 'the interpretation or enforcement of these rules or such Articles of the Constitution as regulate our business and is within the cognizance of the Speaker'.

Sir, the rule is perfectly clear that a word or words which has or have been used in debate and which is or are defamatory, unparliamentary will be expunged. But then, supposing certain unparliamentary words are used in the House and subsequently certain developments take place, there also there is a provision. Rule 87 says 'The Speaker may, in case of grave disorder arising in the House, adjourn the House or suspend a sitting until a specified hour'.

இப்படியிருக்கும்பொழுது, ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப்பற்றி விவாதிக்கும் நேரத்தில், அரை மணி நேரம், அல்லது முக்கால் மணி நேரம் அல்லது 1 மணி நேரம் நடந்த அந்த விவாதத்தின் பகுதி முழுவதையும் எக்ஸ்பஞ்ச் செய்வது என்றால் அரசியல் சட்டத்தின் படி சட்டமன்றத்தில் நடக்கும் விவாதங்கள் மக்களுக்குத் தெரிய வேண்டும், மந்திரியிலே உள்ள அரசுக்குத் தெரிய வேண்டுமென்று இருக்கும்பொழுது, அந்த விவாதத்தை வெளியே விடக்கூடாது என்றால்,

it will amount, Sir, to subversion of the Constitution. So whether it is interpretation of the Rules or interpretation of our duties, I submit, Sir, I have looked up this position in May's Parliamentary Practice also and I do not find anywhere in the history of Parliamentary Legislature whether in this country or any other country, the proceedings which had taken place initially, proceedings which were allowed by the Speaker, subsequently if there is an uproar, the entire proceedings having been expunged. That is never found anywhere in the history of Parliamentary Democracy and I do not find in May also that such a procedure has taken place anywhere. Further, I can say this also. In the Lok Sabha also such things had not

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 நவம்பர் 30

happened. If there is an uproar, it was the practice there to adjourn the House. I submit Sir, that is the procedure that is adopted there.

Here on the 28th, during the discussion on the Appropriation Bill, there was an uproar—an uproar in the House is an undesirable thing, I do not at all condone it—and the entire proceedings has been expunged. That is tantamount to subversion of the Constitution. Further it also gives the impression that the entire thing is politically motivated. It will have a reflection on the office of the Speaker also. Because, if proceedings are allowed initially, for about 30, 40 or 50 minutes or one hour with the permission of the Speaker—it happened in your presence—and then if certain things do take place, after the debate is allowed by the Speaker, if the entire thing is expunged by the Speaker himself, it will be improper, Sir.

Another thing is this. One hour's work of the Legislature costs and the department concerned will be able to tell us how much we are spending and if it is say, Rs. 25,000 per hour, who is to meet that one hour's expenditure? We have carried on discussion and if the entire discussion is declared null and void, that would mean that we have wasted Rs. 25,000 on this.

On all these counts, I submit, Sir, that expunging of the proceedings of the House lasting half an hour or 40 minutes or one hour is contrary both to the Rules which are governing our proceedings and the Constitutional provisions which are guiding us to frame these rules.

THIRU G. R. EDMUND: On a point of order, Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். திரு. தங்கமணி அவர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்னைக்கு என்னுடைய பதிலைச் சொல்ல வேண்டாமா?

திரு. க. உரா. எட்மண்ட்: அந்த பாயின்ட் ஆஃப் ஆர்டரை 'பேஸ்' பண்ணி நான் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதே பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்றால் நீங்கள் வேறு தனியாகச் சொல்ல வேண்டியதில்லை.



1973 நவம்பர் 30]

திரு. க. உரா. எட்மண்ட்: அதே பாயின்ட் ஆஃப் ஆர்டரின் மேல் இன்னும் கொஞ்சம் விளக்கம் கொடுத்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தங்கமணி அவர்கள் எழுப்பிய பாயின்ட் ஆப் ஆர்டர் தான் நீங்கள் எழுப்ப விரும்பும் பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால் தனியாக நீங்கள் பேச வேண்டியதில்லை.

THIRU G. R. EDMUND: I am not confining myself to the point of order raised by Mr. Thangamani, but I have some more points also to express.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்றால் இந்த பாயின்ட் ஆப் ஆர்டருக்குத் தீர்ப்பு கொடுத்த பிறகு சொல்லுங்கள்.

திரு. தங்கமணி அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள். இந்த அவையினுடைய நிகழ்ச்சியை எவ்வளவு அளவிற்கு எக்ஸ்பஞ்ச் செய்யலாம் என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். Word or words என்று இருக்கிறது. Words என்று சொல்லும் நேரத்தில் இரண்டையும் குறிக்கும், இரண்டுக்கு மேற்பட்ட பன்மையையும் குறிக்கும். இந்த அவையிலே ஒழுங்கற்ற, அமைதியற்ற முறை என்று ஏற்படும் நேரத்தில் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குவதற்குப் பேரவைத் தலைவருக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற நிகழ்ச்சிகள் இந்த அவையிலே ஏற்கனவே இருக்கின்றன. நாளைக்கு வேண்டுமானால் எத்தனை எத்தனை அளவிற்கு, நடைபெற்ற நிகழ்ச்சிகள் இந்த அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டன என்பதை எடுத்துக்காட்ட முடியும். நீக்குவது என்று சொல்லும்பொழுது ஒரு நிமிஷம் நடந்த நிகழ்ச்சிகளையா, ஒரு மணி நேரம் நடந்த நிகழ்ச்சிகளையா என்பதில் விவாதம் இல்லை. ஆகவே, இதில் எந்தவிதமான பாயின்ட் ஆஃப் ஆர்டரும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. T. K. TANGAMANI: Sir, I raised an identical point of order then in this House. I am not able to refer to the actual date. A similar thing I had raised and my point of order

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 நவம்பர் 30

then was whether the Speaker had the right to expunge the entire proceedings and the Speaker ruled that my point of order was legitimate and then the entire proceedings were restored. That is the precedent in this House. The precedent in this House is that where there was expunction of this kind, the expunged matter was restored. That is the precedent. I would like the Hon. Speaker to refer to that also. If this is going to be your ruling, then we would be acting contrary to the ruling given earlier.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தலைவரவர்களே, பேரவைத் தலைவருக்கு இந்த மன்றத்திலே எந்த உறுப்பினராவது பேசும்பொழுது ஏதாவது ஒரு வார்த்தையையோ அல்லது முழுப் பேச்சையோ நடவடிக்கைக் குறிப்பிலேயிருந்து நீக்குவதற்கு அதிகாரம் இருக்கிறது. இப்பொழுதுகூட மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் கொண்டுவந்த அந்த ஒழுங்குப் பிரச்சினையின் மீது நீங்கள் தீர்ப்பளிக்கும் நேரத்தில், Word or words என்று இருப்பதாகச் சொன்னீர்கள். ஆனால் எல்லா Word or words நீக்குவதற்கு இந்தச் சட்டத்திலே பேரவைத் தலைவருக்கு அதிகாரமோ உரிமையோ அளிக்கப்படவில்லை. நம்முடைய சட்ட மன்ற 235-வது விதியில், Word or words என்று சொல்லிவிட்டு எப்படிப்பட்ட Word or words என்று சொல்லும்நேரத்தில் விதியிலே சொல்லியிருக்கிறது. word or words has or have been used in debate which is or are defamatory or indecent or un-parliamentary or undignified or grossly irregular, he may in his **discretion......** என்றுதான் இருக்கிறது. ஆகவே, உறுப்பினர்கள் பேசும் பேச்சில் இப்படிப்பட்ட வார்த்தைகள் இருந்தால்தான், அந்த வார்த்தைகளைத்தான் பேரவைத் தலைவரவர்கள் நடவடிக்கைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமே ஒழிய உறுப்பினர்கள் பேசிய பேச்சுக்கள் அத்தனையையும் நீக்குவது என்றால் எந்த உறுப்பினரும் சுதந்திரமாகத் தங்கள் கருத்துக்களைச் சொல்ல முடியாது என்பதை நான் இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்: கடந்த 28-ம் தேதி இந்த மன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு. சௌந்தரபாண்டியன் . . .



1973 நவம்பர் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைப்பற்றிப் பேச வேண்டாம். இந்த நிகழ்ச்சியை விட்டு விட்டு இன்னொரு நாளைக்கு போகாதீர்கள்.

THIRU G. R. EDMUND : I am only saying certain incidents in which . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது வேண்டாம். எக்ஸ்பஞ்ச் செய்வதைப்பற்றித்தான் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இப்பொழுது.

**திரு. நா. வீராசாமி :** இதென்ன பாயிண்ட் ஆப் ஆர்டர் ?

THIRU G. R. EDMUND : I need not get a ruling from Mr. Veerasami. I can look to you for a ruling, Sir. Why should he poke his nose? He is unnecessarilly poking his nose in this He is not the Speaker.

28-ம் தேதி இந்த மன்றத்திலே . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது வேறு விஷயம். அதைப் பற்றிப் பேசுவதற்கு உரிமையில்லை என்று சொல்லவில்லை. ஆனால் இப்பொழுது உள்ள பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எக்ஸ்பஞ்ச் செய்வதைப்பற்றித்தான். எக்ஸ்பஞ்ச் செய்யும்பொழுது, குறிப்பிட்ட நேரம் வரையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை எக்ஸ்பஞ்ச் செய்வதற்கு உரிமையிருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றித்தான் பாயிண்ட் ஆஃப் ஆர்டர்.

(முற்பகல் 10.30)

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே உறுப்பினர்கள் பேசுகின்ற பேச்சுக்களை அவையினுடைய குறிப்பில் இருந்து நீக்க உத்தரவிடுகின்றீர்கள். எங்களுடைய கட்சியின் சார்பில் கேட்டுக் கொள்வதெல்லாம் அதிலே எந்த விதமான பாரபட்சமும் இருக்கக் கூடாது என்பதுதான். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கடிதத்தைக் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். அதை நீங்கள் எக்ஸ்பஞ்ச் செய்யவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைத் தலைவர் பாரபட்சத்துடன் நடந்து கொண்டார், பாரபட்சம் இல்லாமல் நடந்து கொண்டார் என்றெல்லாம் சொல்லுவதற்கு உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் அதற்கு வேறு நேரம் இருக்கிறது,

முறைகள் இருக்கின்றன. முன்னால் நடந்த நிகழ்ச்சியில் அதைப் பண்ணவில்லை, இதைப் பண்ணவில்லை என்று பேரவைத் தலைவர் மீது பாரபட்சமான குற்றம் சாட்டுவதைப்பற்றிக் கவலை இல்லை.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** விரும்பத்தகாத வார்த்தைகளைப் பேசினால் எக்ஸ்பஞ்ச் செய்வதற்குத் தங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. இல்லையென்று சொல்லவில்லை. அதைச் சட்டமன்ற விதி முறைகளுக்கு உட்பட்டுத்தான் You should follow it in spirit- செய்ய வேண்டும். அதைத்தான் நாங்கள் விரும்புகிறோம். "வேர்டு ஆர் வேர்டஸ்" என்பதை வைத்துக்கொண்டு எல்லாவற்றையும் நீக்கி விட்டால் சட்டத்தினுடைய நோக்கமே போய் விடுகிறது. எந்தெந்த வார்த்தைகளைப் பேரவைத் தலைவர் நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டுமென்பது பற்றி விதி முறைகளிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அன்றைய தினம் திரு. சௌந்தரபாண்டியனைக் குறிப்பிட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதங்களைக் காட்டிப் பேசியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முன்பு நடந்த நிகழ்ச்சி, நேற்று நடந்த நிகழ்ச்சி பற்றியெல்லாம் வேறு நேரத்தில் கேளுங்கள். அதைப்பற்றிக் கேட்க வேண்டிய நேரம் வேறு. கேட்கக் கூடாது என்று சொல்லவில்லை. அதற்கு விதிமுறைகள் இடம் கொடுக்கிறது. வேறு விவகாரத்திற்கு இப்போது போக வேண்டாம். எக்ஸ்பஞ்ச் பண்ணுவதற்கு முறை இருக்கிறதா இல்லையா என்பதைப்பற்றி மட்டுந்தான் சொல்ல வேண்டும்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** அதைத்தான் விளக்க வேண்டுமென்று விரும்புகிறேன். எங்களுடைய கட்சி உறுப்பினர் சவுந்தரபாண்டியனைக் குறிப்பிட்டு முதலமைச்சர் அவர்கள் படித்த கடிதத்தை எக்ஸ்பஞ்ச் பண்ணி உத்தரவிடவில்லை. ஆனால் அதே நேரத்தில் திரு. காளிமுத்து அவர்கள் அதுபோன்று இன்னொரு கடிதத்தைப் படித்தபோது அதை எக்ஸ்பஞ்ச் செய்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் திருப்பித் திருப்பிச் சொல்வது—இதைப் பற்றியெல்லாம் சொல்ல உரிமை இல்லை என்று சொல்லவில்லை. பேரவைத் தலைவர் இதைச் செய்யாமல்



அதைச் செய்தார் என்றெல்லாம் கேட்க உரிமை இருக்கிறது. ஒழுங்குப் பிரச்சினையின் மீது அதைப் பற்றியெல்லாம் பேசுவதற்கு உரிமை இல்லை. பேரவைத் தலைவர் ஒருதலைப் பட்சமாக நடந்து கொண்டார் என்றால் அதைப்பற்றி இந்த மன்றத்தில் பேசுவதற்கு வேறு விதிமுறைகள் இருக்கின்றன. ஆகவே, இதிலே எந்த விதமான பாயிண்ட் ஆப் ஆர்டரும் இல்லை.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவர் அவர்களே, திரு. தங்கமணி அவர்கள் எழுப்பிய அதே பொருள் குறித்த பிரச்சினையைக் கூற விரும்புகிறேன். ஒரு ரூலிங் தாங்கள் சொல்லி அதன்பேரில் கருத்துச் சொல்ல அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது மற்றொரு பாயிண்ட் ஆப் ஆர்டர். எங்களுடைய கேள்வி--ஒரு கடிதத்தைப் படிக்க ஸ்பீக்கர் அவர்கள் அனுமதி கொடுத்தார்கள். அனுமதித்து அது பேசப்பட்டது. பேசப்பட்ட பிறகு சில அசம்பாவித சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. அதை நீங்கள் நீக்குகின்றபோது தாங்கள் அனுமதி கொடுத்து படித்த கடிதத்தையும் எக்ஸ்பஞ்ச் பண்ணுவது சரியா? முன்னால் முதலமைச்சர் அவர்கள் படித்த கடிதத்திற்கு மட்டும் அனுமதி கொடுத்துவிட்டு இதை இவ்வாறு செய்வது 'டிஸ்கிரிமினேட்' செய்வது மாதிரி தோன்றுகிறதே. அது சரியா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்புவது பெரும்பாலும் அன்றாட நடவடிக்கைகளைப் பற்றி எழுப்பப்படுகின்ற ஒன்றாகும். இது நேற்று நடந்தது. நேற்று முன்னாள் நடந்தது. இப்படி இரண்டு நாட்களுக்கு முன்னர் நடந்த நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டு மற்றொரு நாள் நடந்த நிகழ்ச்சியோடு தொடர்புபடுத்திப் பேசுவது பாயிண்ட் ஆப் ஆர்டர் முறைக்கு ஏற்றதல்ல. எந்த ஒரு பேச்சையும், செய்தியையும் அனுமதிப்பதா, அல்லவா என்பது சபாநாயகர் முடிவு செய்ய வேண்டியது. ஒரு கருத்து விளக்கப் படுகிறபோது அல்லது பாதி அளவுக்கு விளக்கப்பட்ட பின்பு சபாநாயகர் அந்தக் கருத்தின் தொடர்பான பேச்சுக்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல, அவையில் வைக்கப்படத்தக்கது அல்ல என்று கருதுவாரேயானால் தொடக்கத்திலிருந்தே அவையின் குறிப்பிலிருந்து நீக்குவது மரபு. அப்படிப்பட்ட நிலையிலே ஒரு கருத்து முதலிலே சொல்லப்பட்ட பின்பு, அதைத் தொடர்ந்து,

அதையொட்டி அதற்கு மாறாகவோ, உடன்பாடாகவோ பல கருத்துக்கள் அவையில் பேசப்பட்டால் முதலில் பேசப்பட்ட கருத்து விலக்கப்படுகின்ற நிலையில் இவைகளையும் இடம் பெறச் செய்வது முடியாத காரியமாகும். ஆகவேதான் ஒரு கருத்து, ஒரு சொற்றொடர் இடம் பெற்ற பிறகு அதன் காரணமாகத் தொடர்ந்து பல கருத்துக்கள் இந்த அவையில் யாரால் சொல்லப்பட்டாலும் அந்தக் கருத்து எதுவும் இடம் பெறாமல் செய்வது தவிர வேறு வழி கிடையாது. அப்படி சபாநாயகர் மேற்கொள்ளக்கூடிய முறைப்படி இங்கே விலக்கப்பட்டிருக்கும் காரணத்தால் அது ஏற்றுக் கொள்ளப்படத்தக்கது அல்ல என்று நிர்ணயிக்கும் முறையில் ஒரு கருத்து இங்கே இடம் பெற முடியாது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மாரிமுத்து அவர்கள் ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பினார். . . .

THIRU K. T. K. TANGAMANI : On a point of Order, you are free to allow the hon. Members to express their opinion.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கருத்து தெரிவிக்கக் கூடாது என்று சொல்லவில்லை. பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பப்பட்டு அதற்குத் தீர்ப்புக் கொடுத்து விட்டேன். தீர்ப்புக் கொடுத்த பிறகு அதே பாயிண்ட் ஆப் ஆர்டர் மீது பேசக்கூடாது என்று சொன்னேன். ஆனால் எழுந்த உறுப்பினர்கள் தங்களுடைய பாயின்ட் ஆப் ஆர்டர் அதுவல்ல, வேறு பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி, அதையொட்டி எல்லோருடைய கருத்தையும் கேட்டுத் தீர்ப்பளித்திருக்கிறேன்.

THIRU K. T. K. TANGAMANI : I would like to know your ruling. Ruling as I see it. விவரங்களைப் பூராவும் நாளைக்குத் தருகிறேன் என்று சொன்னீர்கள். It was a conditional ruling and it was not a final ruling.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ரூலிங் நாளைக்குக் கொடுக்கிறேன் என்று சொல்லவில்லை. 'ப்ரிசிடென்ட்' இருக்கிறது; பத்து நிமிட, இருபது நிமிடப் பேச்சுக்கள் எல்லாம் அவைக் குறிப்பில்



இருந்து நீக்கப்பட்ட நிகழ்ச்சிகள் இருக்கின்றன; அதைத்தான் கொடுக்கிறேன் என்று சொன்னேனே தவிர, ரூலிங் ஏற்கனவே கொடுத்துவிட்டேன்.

THIRU K. T. K. TANGAMANI : Under rule 83 (1) any member may submit a point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விதி 83 (4) ஐச் சொல்லுங்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** ரூல் 83 (1)-ன்படி பார்க்கும்போது இதே சபையில் நேற்று நடந்த விஷயத்தைப் பொறுத்த வரை . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லாவற்றையும் ஒன்றாக வைத்துப் பார்க்க வேண்டும். விதி 83 (4)-ல் என்ன சொல்லப்படுகிறது என்றால்—

"A point of order may be raised in relation to the business before the House at the moment" என்று இருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** I would like to bring to your notice, Sir இதுபோன்ற விஷயம் சென்ற தொடரில் வந்தது. நேற்று நடந்த விஷயத்தை மறுநாள் காலையில் எழுப்பினார்கள். அதன் பேரில் ஒரு ரூலிங் கொடுக்கப்பட்டது. முதல் நாள் எக்ஸ்பஞ்ச் செய்யப்பட்டது பூராவும் மறுநாள் ரெஸ்டோர் செய்யப்பட்டது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முன்பு இருந்த பேரவைத் தலைவர் கொடுத்த தீர்ப்பின்கீழ்தான் அந்தத் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டுத்தான் இப்போது இருக்கின்ற பேரவைத் தலைவரும் தீர்ப்புக் கொடுக்க வேண்டுமென்ற முறை இல்லை என்று பல பேரவைத் தலைவர்கள் தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். முன்பு நடந்த நிகழ்ச்சியை வைத்துக்கொண்டு அதேபோல் நானும் நடந்து கொள்ள வேண்டுமென்று சொல்லுவது சரியல்ல

**திரு. கே. டி. கே. தங்கமணி :** விதிமுறைக்கு உட்பட்டு நான் பேசுவது தவறாக இருக்கலாம். நானும் முந்தாநாள் என்ன நடந்தது, அதெல்லாம் தவறு என்றெல்லாம் பேசியிருக்கலாம்.

நான் அந்த முறையில் பேசாது சிந்தித்து எந்த அளவுக்கு அனுமதிப்பது, அனுமதிக்கக் கூடாது என்ற முறையில் எடுத்துச் சொன்னேன். I was only trying to help you, Sir. நான் இப்படி எடுத்துச் சொல்லுவதற்கும் இதே முடிவுதான் ஏற்படும் என்றால் அதைச் சொல்ல உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. You have got complete powers. Role of Spaker: Speaker is the servant of the House. We are the Masters. We must be benevolent masters என்ற விவரங்கள் எல்லாம் இருக்கின்றன. 'There is no point of Order' என்று நீங்கள் சொல்லிவிடலாம். எழுப்பியிருக்கும் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை. சபையில் எங்களுக்குக் கவலை அளிக்கக்கூடிய விஷயமாக இருக்கிறது. ஆகவேதான் பாயிண்ட் ஆப் ஆர்டர் முறையில் எழுப்பினேன். இப்படிப்பட்ட விஷயங்களைப்பற்றிப் பின்னால் பேசலாம், பிசினஸ் அட்வைசரி கமிட்டிக் கூட்டத்தில் விவாதிக்கலாம் என்று சொன்னீர்கள். நேற்று சிலர் வெளியில்லை என்று கூறி இன்றைக்கு 12 மணிக்கு பிசினஸ் அட்வைசரி கமிட்டியிலே பேசலாம் என்று சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு 12 மணிக்கு பிசினஸ் அட்வைசரி கமிட்டிக் கூட்டத்திற்குத் தங்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. நீங்கள் கொஞ்சம் பொறுத்து பிசினஸ் அட்வைசரி கமிட்டிக் கூட்டத்திற்குப் பிறகு இந்த பாயிண்ட் ஆப் ஆர்டரை எழுப்பி இருக்கலாம். எழுப்பிவிட்ட பிறகு பாயிண்ட் ஆப் ஆர்டருக்குத் தீர்ப்புக் கொடுக்காமல் எப்படி இருக்க முடியும்?

**திரு கே. டி. கே. தங்கமணி:** தீர்ப்புக் கொடுங்கள்.

You have got complete powers to say that there is no point of order. I take it that there is no point of order. I would like to know whether the ruling of the Hon. Speaker is that there is no point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் முன்பே சொல்லிவிட்டேன்.

There is no point of order என்று சொல்லிவிட்டேன்.



## (4) கவன ஈர்ப்பு.

### (அ) கன்னியாகுமரி மாவட்டம் லட்சுமிபுரம் கல்லூரி மூடப்பட்டதும், மாணவர் பாதிப்பும் குறித்து

**திரு. ஏ. பாலையா:** தலைவர் அவர்களே, பேரவையின் 41-வது விதியின்படி "கன்னியாகுமரி மாவட்டம், லட்சுமிபுரம் கலை-விஞ்ஞான கல்லூரி காலவரையறையின்றி மூடப்பட்டு சுமார் ஒன்றரை மாதமாகியும் திறக்கப்படாமலிருப்பதால், அக்கல்லூரியில் படிக்கும் ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்க முடியாத நிலைபற்றிய அவசர பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கல்வி-சுற்றுலா அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்".

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** கன்னியாகுமரி மாவட்டத்தில் நெய்யூர் அருகேயுள்ள லட்சுமிபுரம் கல்லூரி 3—10—1973 முதல் மூடப்பட்டுள்ளது. கல்லூரி நிர்வாகிகளுக்கும் மாணவர்களுக்குமிடையே சில பிரச்னைகளில் எழுந்த கருத்து வேறுபாட்டின் காரணமாக, கல்லூரி மூடப்பட்டுள்ளது என்று அறியப்படுகிறது. இது மதுரை பல்கலைக் கழக நிர்வாகத்துக்கு உட்பட்ட பிரச்னை. மதுரை பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவின் ஒப்புதலுடன், துணை வேந்தர் ஒரு கமிஷனை நியமித்துள்ளதாகவும், அக்கமிஷன் தெரிவித்துள்ள கருத்துக்களின்பேரில் நிர்வாகத்துடன் பேச்சு வார்த்தைகள் நடந்து வருவதாகவும் அறியப்படுகிறது. துணைவேந்தரிடத்திலிருந்து அதுபற்றிய விவரங்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. ஏ. பாலையா:** மதுரை பல்கலைக்கழகம் நிறுவிய விசாரணை கமிஷன் கல்லூரிக்கு வந்து விசாரணை நடத்திய பின்னால் நிர்வாகத்தோடும் மாணவர்களோடும் பேச்சுவார்த்தை நடத்தியதில் நிர்வாகம் கல்லூரியைத் திறக்க மாட்டேன் என்ற பிடிவாத நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கல்லூரியை எப்படியாவது திறந்து காலாண்டு தேர்வு நடத்தவும், ஆயிரக்கணக்கான மாணவர்களுடைய வருங்காலத்தைப் பாழாக்கக் கூடாது என்ற எண்ணத்திலும் பேச்சுவார்த்தை நடத்தியபோதும் எந்த சமரச உடன்பாட்டிற்கும் கல்லூரி நிர்வாகிகள் உடன்படாமல் தொடர்ந்து கல்லூரியை

மூடிவைத்திருக்கிறார்கள். இதிலிருந்து கல்லூரி நிர்வாகிகளுடைய எண்ணத்தில் கல்லூரியை மீண்டும் திறக்கக் கூடாது என்ற கருத்தே நிலைத்திருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு அரசு இதில் தலையிட்டு அக்கல்லூரியைத் திறப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இதில் அரசு எந்த அளவிற்கு தலையிட முடியும் என்று தெரியவில்லை. ஆகவேதான் பல்கலைக் கழக துணைவேந்தருடைய அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது என்று கூறினேன். பல்கலைக் கழக விதிகளுக்குட்பட்டு நடவடிக்கைகள் எடுக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எடுக்காமல், அரசாங்க அளவில் எந்தளவிற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று பல்கலைக் கழக துணைவேந்தர் குறிப்புகள் அனுப்புகிறாரோ அந்தக் குறிப்புகள் மீது அரசு நடவடிக்கைகள் எடுக்கலாம். அரசு ஏதாவது நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றால் கிரான்டை நிறுத்துவதுதான் அரசாங்கம் செய்யக் கூடிய ஒரு பணியாக இருக்கிறது. ரெக்கக்னிஷனை வித்ட்ரா செய்வது, வைப்பது, மற்றவை பல்கலைக் கழகத்தின் பொறுப்பாக இருக்கிறது. ஆகவே, துணைவேந்தரின் அறிக்கை எதிர்பார்க்கப் படுகிறது. அவர்களால் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கின்றன, அரசு என்ன நடவடிக்கைகள் எடுக்க முடியும் என்று அவர்கள் கூறினால் அந்தளவிற்கு நடவடிக்கைகள் எடுக்க அரசு ஆயத்தமாக இருக்கிறது. ஆகவே இதுபற்றி விவரங்கள் கேட்டிருக்கிறோம். துணைவேந்தரிடத்திலிருந்து அந்த அறிக்கை வந்த பிறகு அரசு அளவில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

**திரு. ஏ. பாலையா :** சமரச உடன்பாட்டிற்கு கல்லூரி நிர்வாகம் வரத் தயாராயில்லை. கல்லூரியை எப்படியாவது மூடிவிட வேண்டும் என்ற ஒரு நிலையில் கல்லூரி நிர்வாகம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கல்லூரி நிர்வாகிகளுக்கு கல்லூரியைத் திறக்கவேண்டும் என்ற எண்ணமே இதுவரையில் இல்லை. ஆகவே மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு அரசாங்கம் ஏதாவது உத்தரவுகள் வழங்கி கல்லூரியை மீண்டும் திறப்பதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டும். இல்லை என்று சொன்னால் ஒரு தனி அதிகாரியை



யாவது நியமித்து கல்லூரியைத் திறப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அதனால் ஆயிரக்கணக்கான மாணவர்களின் படிப்பை நாம் பாதுகாக்க முடியும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதைத்தான் நான் முதலில் குறிப்பிட்டேன். கல்லூரிகளைக் கட்டுப்படுத்துகிற முழு அதிகாரமும் பல்கலைக் கழகம் மேற்கொண்டுள்ளது. பல்கலைக் கழகம் தலையிடுவதன் மூலம் எந்தளவிற்கு அதை நடைமுறைப் படுத்த முடியுமோ அந்த அளவிற்கு நடைமுறைப்படுத்தப்படும். அரசாங்க உதவியோடு நடைமுறைப்படுத்த துணைவேந்தரின் அறிக்கை வந்தால் அதன்படி நடந்துகொள்ள அரசு ஆயத்தமாக இருக்கிறது. இப்போது அரசாங்கம் செய்யக்கூடியது, கிரண்ட் ஒன்றை வேண்டுமென்றால் கொடுக்காமல் நிறுத்திவிடலாம். அது தான் இப்போதுள்ள அதிகாரம். மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம், கல்லூரிக் கல்வி இயக்குநர் மூலம் சமரச உடன்பாடு செய்யக்கூடிய ஒரு நிலை வர முடியுமானால் அதைச் செய்ய அரசு ஆயத்தமாக இருக்கிறது. எந்த அளவிற்கு முடியும், எந்த அளவிற்கு முடியாத நிலை இருக்கும் என்று எல்லாவற்றையும் ஆராய்ந்த பிறகு கலந்து கொண்டு எந்தளவிற்கு இயலுமோ அதைச் செய்ய ஆயத்தமாக இருக்கிறது அரசு.

## (ஆ) போக்குவரத்துக் கழகங்கள் பயணக்கட்டணத்தை உயர்த்த இருப்பதும் பயணிகள் அல்லலும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் ஹாண்டே அவர்களும், திருமதி அனந்தநாயகி அவர்களும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்பு தீர்மானத்தைக் கொண்டுவருவார்கள்.

DR. H. V. HANDE : I wish to call the attention of the Hon. Minister for Transport to a matter of urgent public importance, namely, the hardship caused to passengers as a result of the proposed increase in the passenger fares by the various Transport Corporations.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, பயணிப் பேருந்துகள் வாங்க வேண்டிய உயரளவுக் கட்டணத்தை நிர்ணயிக்கும்படி 1964 மார்ச்சில் அரசுப் போக்குவரத்து அதிகார

மன்றத்திற்கு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. மாநகர, நகரப் பேருந்துப் பணி வழித்தடங்கள் தவிர்த்த ஏனைய வழித்தடங்களில் ஓடுகின்ற சாதாரண பயணிப் பேருந்துகளில் பயணம் செய்ய கிலோ மீட்டர் ஒன்றுக்கு மூன்று காசு என அப்போது உயரளவுப் பயணக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டது. பின்னர், வெவ்வேறு பேருந்து உரிமையாளர்களிடையே உயரளவுக் கட்டண வீதத்திற்குள் வெவ்வேறு பயணக் கட்டண வீதங்களை அனுமதிப்பது பொருளாதார வகையில் கூடாத போட்டியைத் தோற்றுவிக்கும் எனக் கருதப்பட்டது. எனவே, மாநிலம் முழுவதிலும் உள்ள பேருந்து உரிமையாளர்கள் அனைவருக்கும் ஒருசீரான பயணக் கட்டணத்தை நிர்ணயிப்பது என அரசு முடிவு செய்தது. அதன்படி, சமவெளிகளில் ஓடும்பேருந்துகளைப் பொறுத்தவரை கிலோ மீட்டர் ஒன்றுக்கு 3 காசு என்றும் ஒரே சீரான விதத்திலும், மலைச்சாலைகளில் ஓடும் பேருந்துகளைப் பொறுத்தவரையில் கிலோ மீட்டர் ஒன்றுக்கு 5 காசு என்ற ஒரு நிகரான விதத்திலும் 30 காசு என்ற குறைந்த அளவுக் கட்டணத்துடன் இம்மாநிலத்தில் பயணிப் பேருந்துகளுக்கான கட்டணங்களை முடிவு செய்து, 1971 ஜூன் திங்களில் திருத்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. மாநகர, நகரப் பேருந்துப் பணிகளைப் பொறுத்தவரையில், முதல் கட்டண நிலைக்கு 10 காசு என்றும் அடுத்த ஒவ்வொரு கட்டண நிலைக்கும் 5 காசு என்றும் கட்டணம் முடிவு செய்யப்பட்டது. ஒவ்வொரு கட்டண நிலையின் தொலைவு தோராயமாக 2 கிலோ மீட்டர் இருக்கும். ஒரு மாநகரின் புற எல்லையிலிருந்து தொடங்கி ஒரு முதன்மைச் சாலையை இணைக்கிற, இணைப்பு வழித்தடங்களைப் பொறுத்தவரை, முதல் கட்டண நிலைக்கு 5 காசு என்ற குறைந்த கட்டணம் 1972 அக்டோபரில் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது.

நீண்ட நாட்களுக்கு முன் கிலோ மீட்டர் ஒன்றுக்கு 3 காசு என்று வரையறுக்கப்பட்ட தற்போதைய கட்டணம் உயர்த்தப்பட வேண்டுமென தமிழ்நாடு பேருந்து உரிமையாளர்கள் அரசுக்கு முறையீடு செய்து கொண்டுள்ளனர். இக்கால அளவில் வரிகள் உயர்ந்துவிட்டன என்றும், பேருந்து உதிரி பாகங்கள், டயர்கள், ட்யூப்கள், டீசல் எண்ணெய், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகள் கூடியுள்ளன என்றும், தொழிலாளர்களுக்கு அதிகப் படியான ஊதியங்களும், சலுகைகளும் வழங்கியதன் காரணமாக





நிர்வாகச் செலவுகள் பெருகி விட்டன என்றும், இருக்கிற வழித் தடங்களில் கூடுதல் பேருந்துப் பணிகள் தொடங்கப்பட்டதாலும் புதிய வழித்தடங்கள் தொடங்கப்பட்டதாலும் கட்டண வசூல் குறைந்துவிட்டது என்றும் பேருந்து உரிமையாளர்கள் காரணம் காட்டி தற்போதைய கட்டணவீதம் உயர்த்தப்பட வேண்டுமெனக் கூறினர். எனவே, சமவெளிகளைப் பொறுத்தவரையில் கிலோ மீட்டர் ஒன்றுக்கு 5 காசாகவும், மலைச் சாலைகளைப் பொறுத்தவரையில் • 8 காசாகவும் பேருந்துப் பயணக் கட்டணத்தை உயர்த்துமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

பேருந்து உரிமையாளர்களின் முறையீடு பரிசீலிக்கப்பட்டது. பேருந்துப் பணிகளை இயக்குவதற்கான செலவு 1964-லிருந்து கணிசமான அளவுக்கு உயர்ந்துள்ளதால், கட்டணங்களை உயர்த்துவது நியாயமெனத் தெரிய வந்தது. அதற்கிணங்க, கீழ்க்கண்ட வீதங்களுக்கு மேற்படாத வகையில் கட்டணங்களை அறிவித்து, 14—11—1973 அன்று வரைவுக் கட்டளை ஒன்று வெளியிடப்பட்டது.

### சாதாரணப் பயணிப் பேருந்துகள்

(1) நகர்ப்புறப் பகுதிகளில் ஓடுகிற மாநகர, நகரப் பேருந்துப் பணிகள் தவிர, வெளியூர் பகுதிகளில், சமவெளிகளில் ஓடும் பேருந்துகளைப் பொறுத்தவரையில் கிலோ மீட்டர் ஒன்றுக்கு 3½ காசு. பத்து கிலோ மீட்டருக்குக் குறைந்த தொலைவுக்குக் கட்டணமாக 35 காசு வசூலிக்கப்பட வேண்டும்.

(2) மலைச் சாலைகளைப் பொறுத்தவரையில் கிலோ மீட்டர் ஒன்றுக்கு 5½ காசு. ஆறு கிலோ மீட்டருக்குக் குறைந்த தொலைவுக்குக் கட்டணமாக 35 காசு வசூலிக்கப்பட வேண்டும்.

### விரைவுப் பயணப் பேருந்துகள்.

(1) நகர்ப்புறங்களில் ஓடிக் கொண்டிருக்கும் மாநகர, நகரப் பணிகள் நீங்கலாக, வெளியூர்களில் சமவெளிகளில் ஓடும் விரைவுப் பயணப் பேருந்துகளுக்கு கிலோ மீட்டர் ஒன்றுக்கு நாலரை காசு.

(2) மலைச் சாலைகளில் கிலோ மீட்டர் ஒன்றுக்கு ஆறரைக் காசு.

(3) விரைவுப் பயணிப் பேருந்துகளில் பயணிகளுக்கு உயர் வகை இருக்கை வசதிக்கு வகை செய்யப்பட்டிருந்தால், கிலோ மீட்டர் ஒன்றுக்குக் கூடுதலாக ஒரு காசு வசூலிக்கப்படலாம்.

### மாநகர, நகரப் பேருந்துப் பணிகள்.

முதற் கட்டண நிலைக்குப் பதினைந்து காசும் அடுத்து வரும் கட்டண நிலை ஒவ்வொன்றுக்கும் ஐந்து காசு (இயலுமான வரையில் கட்டண நிலை ஒன்றின் தொலைவு இரண்டு கிலோ மீட்டராக இருக்கும்) மாநகரின் புற எல்லையிலிருந்து தொடங்கி, முதன்மை வழித்தடம் ஒன்றை இணைக்கும் இணைப்பு வழித் தடங்களின் நேர்வில், முதற்கட்டண நிலைக்கான கட்டணம் பத்து காசாக இருக்கும்.

### விழாக்கள், சந்தைகள், போன்ற சிறப்பு நேர்வுகளில் ஓடும் பயணிப் பேருந்துகள்.

கிலோ மீட்டர் ஒன்றுக்கு நாலரை காசு. 15—12—1973 வரையில் பெறப்படும் முறையீடுகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, இறுதிக்கு மேலும் ஆய்வு செய்யப்படும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் டீசல் எண்ணெய் விலை உயர்ந்திருக்கிறது என்று பஸ் உரிமையாளர்கள் அவருக்கு முறையிட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதுபற்றி எண்ணெய் விலையைச் சற்று குறைத்திருப்பதற்காக மத்திய அரசு அறிக்கை கொடுத்திருக்கிறது. உடனே பொது மக்களும் இதன் விலையை உயர்த்தியது பற்றி பரவலாகப் பேசி தங்களுடைய எதிர்ப்புகளை இந்த விலையேற்றத்தின்மீது தெரிவித்திருக்கிறார்கள். இதை அடிப்படையாக வைத்து பொது மக்களுக்குத் திருப்தி அளிக்கும் வகையிலே விலையை மீண்டும் குறைப்பதற்கு உத்தரவு போடத் தயாராக இந்த அரசு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, நான் என்னுடைய அறிக்கையில் தெரிவித்தது போல் மூன்று பைசா என்று கட்டணம் 1964-லே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதை





3½ பைசாவாக உயர்த்தலாம் என்று அரசு அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அதற்குக் காரணம் டீசல் விலை உயர்வு மட்டுமில்லை, பஸ்ஸுகளுக்குக் கிடைக்க வேண்டிய பொருட்களின் விலையும் கூடுதலாகி இருக்கிறது என்பது தான். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் ஒரு பஸ்ஸை சேசிஸ்ஸோடு பாடியையும் சேர்த்து வாங்குவதற்கு 1954-ல் ரூ. 55,484 ஆயிற்று. ஆனால் இப்பொழுது ரூ. 1,50,225 மூலதனம் போட்டால் தான் ஒரு பஸ் கிடைக்கிறது. அத்தோடு மட்டுமில்லாமல் உதாரணத்திற்குப் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் பார்த்த பொழுது, பஸ் ஒன்றுக்கு 7,000 ரூபாய் ஸ்பேர் பார்ட்ஸ்லே செலவு ஆயிற்று 1964-லே. இன்றைய தினம் 13,000 ரூபாய் ஸ்பேர் பார்ட்ஸுக்காகச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, செலவினங்கள் கூடுகிறது என்பது டீசலினால் மட்டுமில்லை. அத்தோடு டயர் ட்யூப்புகளைப் பொறுத்த வரையில் அன்றைக்கு 2,100 ரூபாய் என்றால்; இன்றைய தினம் 5,000 ரூபாய் ஆகிறது. பியூவெல் என்று எடுத்துக்கொண்டால் அதிலே செலவு ரூ. 11,700 என்றால், இப்பொழுது ரூ. 19,000 ஆகிறது. அதிலே செலவுகள் கூடுதல் ஆக, ஆக மேலும் பஸ்ஸுகளை வாங்கி விடுவதற்கும், இருக்கின்ற பஸ்களை நல்ல முறையில் பராமரிப்பதற்கும் கூடுதலான கட்டணத்தைப் போடுவதைத் தவிர வேறு வழியில்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** ஏற்கனவே அமைச்சர் அவர்கள் சில மாதங்களுக்கு முன்னால் ஸ்பேர் பார்ட்ஸ் விலை கூடுதலாக இருப்பதால் பஸ் கட்டணத்தை உயர்த்துகிறோம் என்று இந்த அவையிலே தெரிவித்தார்கள். அதைப் பற்றி நான் இப்பொழுது குறிப்பிடவில்லை. அண்மையில் பெட்ரோல் விலை ஏறி இருக்கும் பொழுது ஒரு உத்தரவைப் போட்டு டீசலுக்கும் உடனடியாகக் கட்டணத்தை உயர்த்துகிறோம் என்று அமைச்சரின் இலாக்கா தெரிவித்தார்கள். பிரதம மந்திரி கூட ஏதற்கு இப்படி உயர்த்தியிருக்கிறார்கள் என்று சொன்னதாகப் பத்திரிகையிலே கூட வந்திருக்கிறது. இப்படி இரண்டாவது முறையாக, மூன்றாவது முறையாக ஏன் உயர்த்த வேண்டுமென்று நான் நான் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நான் ஏற்கனவே கொடுத்த விளக்கத்தைப் போல் பஸ்ஸுகளை நடத்துவது என்பது வெறும் டீசலை மட்டும் வைத்துக் கொண்டு நடத்துவது என்பது இயலாத ஒன்றாகும். பஸ்ஸுகளுக்கு வேறு சில விலைவாசி உயர்வுகளும் ஏற்பட்டிருக்கின்றன. இந்த பஸ் கட்டணத்தை

[திரு. ச. இராமச்சந்திரன்] [1973 நவம்பர் 30

5 பைசாவாக உயர்த்த வேண்டுமென்று பஸ் அதிபர்கள் கூட கோரிக்கைகளை அரசாங்கத்திற்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள். பிரதமர் கூட இந்த அடிப்படையிலே பேசும்பொழுது டீசல் கட்டணத்தைக் குறைத்திருக்கிறோம், இருந்தாலும் எல்லா போக்குவரத்து நிறுவனங்களும் பஸ் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறார்கள் என்று தான் சொல்லியிருக்கிறார்கள். உயர்த்தியது தவறு என்று அவர்கள் சொல்லவில்லை. உயர்த்தியதற்கு என்ன காரணம். ஸ்பேர் பார்ட்ஸ் அதிக விலை ஆகிக் கொண்டே போகிறது. பம்பாயிலே இருக்கிற மாநகரப் போக்குவரத்துக் கழகம் கூட 15 பைசா என்ற குறைவான கட்டணத்தை வைத்துக் கொண்டு ஒரு ஸ்டேஜுக்கு 10 பைசா என்று போட்டிருக்கிறார்கள். ஆனால், நாம் ஒவ்வொரு ஸ்டேஜுக்கு 5 பைசா என்று சென்னையிலே உயர்த்தலாம் என்றிருக்கிறோம். பஸ் தொழிலை நடத்துவதற்கு ஏற்ற வகையில் குறைந்த விலையில் தரமான ஸ்பேர் பார்ட்ஸ் கிடைக்க முடியாத ஒரு நிலைமை இந்திய உப கண்டத்திலே ஏற்பட்டிருக்கிறது. நாம் 10, 15 பைசா என்று வசூலித்தால் கூட அது யாருக்குப் போய் சேருகிறது என்றால் முதலாளிகள் நடத்துகின்ற தொழிற்சாலைகளுக்கு இலாபமாகவும், மற்ற வகையிலும் போய்ச் சேருகிறது. ஆகவே, இன்றைக்கு இருக்கிற பொருளாதார அமைப்பில் எல்லா பொருட்களின் விலைகளையும் கூடிக் கொண்டிருக்கும் பொழுது அதைக் கட்டுப்படுத்த மாநில மத்திய அரசுகளால் இயலாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது, அதற்கு வேண்டிய செலவைச் சரிக்கட்ட புது வரி போட வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) தமிழ்நாடு, 1973 ஆம் ஆண்டு, சம்பளம் வழங்குதல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1973 ஆம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகப்படுத்த நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.



1973 நவம்பர் 30]

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

### (ஆ) தமிழ்நாடு, 1973 ஆம் ஆண்டு, உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1973).

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை* (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 33/1973) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

இச்சட்ட முன்வடிவை முன்மொழிகையில், தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 52/1961) 5-வது பிரிவு, ஓர் உள்ளாட்சி அதிகார மன்றம், அரசின் முன் அனுமதி பெற்று ஒரு கேளிக்கை அல்லது கேளிக்கையின் வகை மற்றும் திரைப்படக்காட்சி அல்லது திரைப்படக்காட்சியின் வகைக்கான நுழைவுக் கட்டணங்களைப் பொறுத்தவரையில், மேற்படி சட்டத்தின் 3-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் முறையே (எ) & (பி) பகுதிகளின்கீழ் வரி செலுத்துவதற்குள்ள பொறுப்பினின்றும் விலக்களிக்க அதிகாரம் அளிக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விழைகிறேன். தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 8-வது பிரிவு கேளிக்கை வரியைப் பொறுத்தவரையில் விலக்கு அளிக்க அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. ஆனால், தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதிச் சட்டத்தின் 3-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (எ) & (பி)

---

* 27—11—1973 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1973 நவம்பர் 30

பகுதிகளின்கீழ் வரி விதிப்பதிலிருந்து அரசு தானே விலக்கு அளிக்க அதிகாரம் வழங்கும். அதே போன்ற விதித்துறை எதுவும் 1961 ஆம் ஆண்டுச் சட்டத்தில் இல்லை.

இப்பொழுது, 1961 ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ் இதே போன்ற விலக்குகள் அளிக்க அரசுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் மேற்படி சட்டத்தின் 5-வது பிரிவைத் திருத்தக் கருதியுள்ளது. எனவே, இச்சட்ட முன்வடிவை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளுமாறு இம்மாமன்றத்தை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. எ ஆர். மாரிமுத்து: இதிலே இந்த நாள் வரையில் அரசாங்கத்தின் அனுமதி பேரிலே லோகல் அத்தாரிட்டி வரிகளி லிருந்து விலக்கு அளிக்கலாம் என்றிருப்பதை அரசாங்கம் ஏன் தானே மேற்கொள்ளவேண்டும் என்பதற்கான காரணத்தை அமைச்சர் அவர்கள் சொல்லவில்லை. அது "ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸிலேயும்" சொல்லப்படவில்லை. அதற்கு என்ன காரணம் என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11.00)

Dr. H. V. Hande: Sir, though the Hon. Minister has brought forward this Bill he has not explained why the Government should interfere in a matter purely related to the local authority. In these days when we talk of State autonomy, why should the autonomy of a local authority be curtailed by this Government? Why should there be interference by the Government in the matter of the Entertainments Tax which is purely within the purview or area of a local authority. This particular point completely baffles us. No proper explanation has been given by the Hon. Minister either in his speech or in the Statement of Objects and Reasons appended to the Bill. In fact, the Government by taking upon itself this power, is opening the Pandora's box because a number of persons will straightaway come to the Government and the Government will not know what is happening in the area of a local authority and a lot of political pressure will be put on the Government. Why are they exposing themselves unnecessarily to such political pressure?

The other thing is that instead of bringing a piecemeal legislation or amending Bill, it is better to bring a comprehensive legislation. With regard to the Entertainments Tax, the original



1973 நவம்பர் 30] [Dr. H. V. Hande]

Entertainments Act, Madras Act X of 1939 was passed by the Madras Legislature and the Governor's assent was given on 10th June 1939 and it was published in the *Fort St. George Gazette* in 1939. After the Sales Tax which is a major source of revenue to the State Government, we depend to a great extent on the Entertainments Tax for augmenting the resources of the State. Therefore, will it not be better to bring forward a comprehensive legislation instead of a piecemeal legislation to find out how far we can plug the loopholes in the Act and how exactly a number of theatre owners defraud the Government. Recently when I had been to Kaveripakkam, I was told that a number of theatre owners were bringing pressure on the Government and there was a lot of underhand dealings between them and the tax officials. Of course the Hon. Minister will deny it. I hope in his reply, he will give an indication as to (1) whether he is going to bring forward a comprehensive legislation, (2) what arrangement he is going to make to plug the loopholes and (3) why should the Government take upon themselves unnecessarily the burden of grant of concession which is within the purview of a local body.

* திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இந்த மசோதாவில் அரசாங்கம் எதிர்பார்க்கின்ற அதிகாரம் ஏற்கனவே லோகல் பாடீஸுக்கு இருக்கிற அதிகாரம். இப்பொழுது பஞ்சாயத்துக் களானாலும் சரி, நகராட்சிகளானாலும் சரி, தங்களுடைய எல்லை களுக்கு உள்ளே இருக்கிற சினிமா தியேட்டர்களைப் பொறுத்த வரையில் எந்தத் தியேட்டருக்கு எந்த முறையில் விதிவிலக்கு அளிப்பது என்பது அவர்களுக்குத் தெரியுமே தவிர, அவர்கள் வழியாக அரசாங்கத்திற்குத் தெரியும் வாய்ப்பு இருக்கிறதே தவிர, நேரடியாக அந்தத் தகவல் அரசாங்கத்திற்கு வருவதற்கு உள்ள வாய்ப்பு இல்லை. ஆகவே, அந்த அதிகாரம் இப்பொழுது இருப்பதைப்போலவே லோகல் பாடீஸுக்கு மட்டும் தான் இருக்கும் என்று சொன்னால் வர இருக்கிற பல தகராறுகளைத் தவிர்க்க முடியும். அப்படியில்லை என்றால், அரசாங்கத்திற்கும் அந்த அதிகாரம் இருக்கவேண்டும் என்றால், ஒரு நகரசபை ஒரு சினிமா தியேட்டருக்கு விதிவிலக்கு அளிக்கின்றபொழுது அதனை

அரசாங்கம் அளிப்பதற்கு மறுக்கலாம். அல்லது நகரசபை விதிவிலக்கு அளிக்கவேண்டாம் என்று எண்ணுகின்ற தியேட்டருக்கு அரசாங்கம் விதிவிலக்கு அளிக்க முன்வரலாம். ஆக, அரசாங்கத்திற்கும், நகரசபைகளுக்கும், பஞ்சாயத்துகளுக்கு மிடையே தகராறுகள் ஏற்படுவதற்கு இந்த மசோதா வழிவகை செய்யுமே தவிர, இந்த மசோதாவினால் மக்களுக்கு நன்மை வருவதற்கு வழியில்லை. இப்பொழுதே நாம் பார்க்கிறோம் மத்திய அரசிற்கும், மாநில அரசுகளுக்குமுள்ள அதிகார வரம்புக்குள் பல தகராறுகள் இருந்துகொண்டே இருக்கின்றன. அதைப்போல மேலும் மாநில அரசுக்கும் நகராட்சிகளுக்கும் இடையே பல தகராறுகள் ஏற்படும், அதனால் நகராட்சிகளின் வளர்ச்சி பாதிக்கப் படுமே தவிர, அது மக்களுக்கு நன்மை பயக்காது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் பேரில் இதை வரவேற்று, ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மசோதாவில் ஏதோ ஒரு பெரிய மாற்றத்தை செய்துவிட்டதுபோல இதற்கு முன்னால் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறினார்கள். அப்படி விதிவிலக்கு கொடுக்கிற அதிகாரம் நகராட்சி மன்றங்களுக்கும், உள்ளாட்சி மன்றங் களுக்கும் ஏற்கனவே அளிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் மாத்திரம் அந்த அதிகாரத்தை முழுக்க ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு நல்ல காரியத்திற்காக ஒரு சில சினிமா காட்சிகளை நடத்தி—உதாரணத்திற்காகச் சொல்கிறேன்—ஒரு பள்ளி நிதிக்காக என்று வைத்துக்கொள்வோம்—அம்மாதிரி வசூலிக்கப்பட்ட நிதி அந்தப் பள்ளிக் கட்டடத்திற்கோ அல்லது வேறு நல்ல காரியத்திற்கோ பயன்படுத்தப்பட வேண்டும் என்று யாராவது விரும்பும்பொழுது, சில நகராட்சிகள் அனுமதி கொடுப்பதில்லை. அப்படிப்பட்ட நேரங்களில் அவர்கள் அரசாங்கத்தை அணுகினால், அரசாங்கம் அனுமதி கொடுத்து விதிவிலக்குக் கொடுக்கலாம் என்பது தான் நோக்கம். நகராட்சிகளில் உள்ள கட்சி மாச்சரியங்களினால் நல்ல காரியங்களை ஒட்டி வசூலிக்கப்படுகிற நிதியைப் பொறுத்தவரையில் இப்படி விதிவிலக்குக் கொடுப்பதற்கு அனுமதி மறுக்கப்படும் நேரங்களில் அரசாங்கம் அனுமதி கொடுக்கலாம். எனவே, அரசாங்கமும் கொடுக்கலாம், நகராட்சிகளும் கொடுக்கலாம் என்று





தான் இந்த மசோதாவில் போடப்பட்டிருக்கிறதே தவிர, ஏதோ பெரிய மாறுதல் செய்துவிட்டதாக எண்ணுவது தவறு. அந்த வகையில் இந்த மசோதாவை வரவேற்று, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத் துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தச் சட்டத் திருத்தமானது ஏற்கனவே ஊராட்சி மன்றங் களுக்கும், நகராட்சிகளுக்கும் இருக்கிற அதிகாரங்களை பறித்துக் கொண்டு, அதற்குப் பதிலாக அரசாங்கமே அதை எடுத்துக் கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தோடு கொண்டுவரப்படவில்லை என்பதை முதலில் நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக் கிறேன். ஏனென்றால் மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ஊராட்சி மன்றங்களுக்கு சிறப்பான அதிகாரங்கள் இந்த வகையைப் பொறுத்தவரையிலும் கொடுக்கப் பட்டிருந்தாலும் கூட, அவைகளை இன்னும் சரியாக ஆக்கவேண்டும் என்பது தான் இந்த அரசாங்கத்தின் நோக்கமும், கடமையுமாகும். ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஒன்றியத் தலைவர்கள் ஆங்காங்கு நடைபெறுகின்ற சினிமாக் காட்சிகளுக்கு அவர்களே சென்று கூட நேரிடையாக பரிசோதனை செய்யலாம் என்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருந்தாலும், அவர்கள் அதைப்போல செய்திருப்ப தாக நான் அறியவில்லை. எண்டர்டெயின்மெண்டு டாக்ஸ் ஆபீஸர்கள் தான், அந்த வரி இலாகாவினர் தான் அங்கே சென்று அதைப் பரிசோதனை செய்கிறார்கள். ஊராட்சி மன்றத் தலைவர்கள் யாரும் அப்படிச் செய்ததாகத் தெரியவில்லை. அதற்குக் கூட அவர் களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஊராட்சி மன்றத் தலைவர்கள் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் சென்று காட்சி நடைபெறும் இடங்களில் பரிசோதனை செய்யலாம். அதற்கு சட்டத்தில் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் நரசிம்மன் அவர்கள் சொன்னதுபோல, பொது நோக்கத்தோடு செய்யப்படுகின்ற சில நல்ல காரியங்களுக்கு அவர்களுடைய அனுமதி பெற்று செய்யவேண்டும் என்று தான் இருக்கிறது.

அதிலும் கன்கரன்ஸ், அதாவது இரண்டு பேராலும் சேர்ந்து செய்யப்பட வேண்டிய காரியமே தவிர, தனியாக அதை நடத்திக் கொண்டு போகிற காரியம் அல்ல, செய்கின்ற காரியம் அல்ல.

சிறப்பாக கல்வி போதனை சம்பந்தமாக உள்ள படக் காட்சிகளுக்கு சர்சார்ஜிலிருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டும். நாம் அதற்கு ஏதாவது உதவி செய்யவேண்டும் என்று நினைக்கிற பொழுது, பல இடங்களிலிருந்து சரியான சிபார்சு வராததன் காரணமாக அதைச் செய்ய முடியவில்லை. ஆகவே, அதற்கு அரசாங்கம் தானே வரியிலிருந்து விதி விலக்கு அளிக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறதே தவிர, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற எல்லா அதிகாரங்களையும் எடுத்துக்கொள்வதற்காக அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய நண்பர் மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் கூறியது போல, மாநில சுயாட்சி பற்றி விவாதிக்க நான் இங்கே வரவில்லை. அந்த உயர்ந்த நோக்கம் மாநில சுயாட்சி குடும்ப அளவுக்கு வந்துகொண்டிருக்கிறது. குடும்பத்தில் மாநில சுயாட்சி கேட்க ஆரம்பித்துவிட்டார்கள் என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எந்த சுயாட்சியையும் குறைப்பதற்கு இல்லை. அரசாங்கம் மேலும் பல நல்ல காரியங்களுக்கு விதி விலக்கு அளிப்பதற்குத் தான் இந்தத் திருத்தமானது கொண்டு வரப் பட்டிருக்கிறதே தவிர, வேறு அல்ல என்பதைக் கூறிக்கொள்கிறேன். இந்த விளக்கத்திற்குப் பிறகு அனைவரும் இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.





**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, "தமிழ்நாடு 1973-ம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/73) நிறைவேற்றப்பட வேண்டுமென்று" முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(இ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு மாநில வீட்டுவசதி வாரிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/73).**

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, "தமிழ்நாடு 1973-ம் ஆண்டு மாநில வீட்டுவசதி வாரிய (திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1973) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன் மொழிகிறேன்.

இந்த சட்ட முன்வடிவு மூலச் சட்டமான தமிழ்நாடு 1961-ம் ஆண்டு வீட்டுவசதி வாரியச் சட்டத்தின் 4-வது பிரிவை திருத்த வழிவகை செய்கிறது. மூலச் சட்டத்திலுள்ள தற்போதைய 4-வது பிரிவின்படி தலைவர் ஒருவரும், அரசு சார்பில்லாத நான்கு உறுப்பினர்களும், அரசு அலுவலர்கள் பன்னிருவரும் ஆக மொத்தம் பதினேழு உறுப்பினர்கள் வாரியத்திலுள்ள குழுவில் அங்கம் வகிக்கின்றனர். அவ்வாறு பதினேழு பேர் அங்கம் வகிக்கும் குழு மிக விரிவானதாகவும், அளவிகந்தும் அமையப் பெற்று வாரியம் நன்கு நடைமுறையில் செயல்பட உகந்ததாக இல்லாத காரணத்தால் குழுவின் அங்கத்தினர்களின் எண்ணிக்கையை குறைக்க வழிவகை காணப்பட்டது.

அந்த அடிப்படையில் வாரியத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை பத்தாகக் குறைத்து தலைவர் நீங்கலாக அரசு சார்பற்ற மூவரையும், அரசு அலுவலர்கள் ஆறு

* 24—11—1973 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

பேரையும் நியமிக்க முடிவு காணப்பட்டது. அந்த முடிவிற்கிணங்க குழுவின் அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கையை மாற்றி அமைக்க மூலச் சட்டத்தின் 4-வது பிரிவை திருத்தியமைக்க இந்தச் சட்ட முன்வடிவில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட குழுவின் அங்கத்தினர்கள் பதவியேற்கும் காலத்தில், தற்போதைய வாரியத் தலைவருடன், மற்ற இதர அங்கத்தினர்களின் பதவியும் முடிவடைய வகை செய்யப்பட்டிருக்கிறது. சட்ட முன்வடிவின் நோக்கம் வாரியம் மேலும் நல்ல முறையில் செயல்பட குழுவை மாற்றியமைப்பதாகும். ஆகவே, இந்தச் சட்ட முன்வடிவை அவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், I want to make a few observations about this State Housing Board (Amendment) Bill. இந்தத் திருத்தம் சிறு அம்சமாக இருந்தாலும் முக்கியமானதாக இருக்கிறது. ஆகவே, ஹவுசிங் போர்டு சம்பந்தமாக சில கருத்துக்களை நான் சொல்லவேண்டுமென்று விரும்புகிறேன். காரணம், சென்ற ஆண்டிலேதான் பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி என்று ஒரு அமைப்பை உருவாக்கினோம். அதனுடைய சிபாரிசுகள் எப்படி பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியின் சிபாரிசு முக்கியமானதோ அதைப்போல முக்கியமானவை. அம்மாதிரி இந்த சட்டக் கூட்டத்தில் தான் The Committee on Public Undertakings for 1973-74 have submitted their first report. இந்த முதல் ரிப்போர்ட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி போர்டு 1964-65-ம் ஆண்டு செயல்பட்ட முறைபற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இந்த ரிப்போர்ட்டைப்பற்றி—பொதுவாக அமைச்சரவர்கள் ஏற்கெனவே தெரிவித்து இருந்தாலும் கூட சில விஷயங்களை உடனடியாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களுடைய ஏழாவது சிபாரிசு என்னவென்றால்,

The Committee is disturbed to note that detailed accounts have not been maintained in respect of the schemes and that their cost is being computed in an *ad hoc* manner. The Committee





cannot help feeling that the Board has been functioning in a very unbusiness like manner. The Committee doubts, how in the absence of proper accounts, the Board ensures that the schemes are executed without loss and how the public is assured that it is not charged unreasonably for the plots and buildings sold by the Board.

இதை நான் குறிப்பிடுவதன் நோக்கம் என்னவென்றால், எந்த அளவுக்கு இந்த ஹவுசிங் போர்டு செயலாற்றுகிறது. செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதைப்பற்றி யாரும் எதையும் கேட்க முடியாத நிலை இருக்கிறது என்று சொல்கிறார்கள்.

இன்னொன்று, ஆண்டு கணக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியது. இந்த வாரியத்திலே 1966-67-ம் ஆண்டுக்குமேல் உள்ள கணக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. 1967-68-ம் ஆண்டு கணக்கு என்ன ஆனது? 1968-69-ம் ஆண்டு கணக்கு என்ன ஆனது? 1969-70-ம் ஆண்டு கணக்கு என்ன ஆனது? அதைப்போல 1970-71, 1971-72, 1972-73-ம் ஆண்டு கணக்குகள் எல்லாம் என்ன ஆனது என்று தெரியவில்லை. அதற்கு முன் காலத்தில் வருஷா வருஷம் அவர்களுடைய கணக்கைக் கொடுத்திருக்கிறார்களே ஒழிய விவரம் கொடுக்கப்படவில்லை. இப்போது 1973-74-ம் ஆண்டு முடிவுக்குள் பழைய பாக்கி கணக்கு பூராவும் சமர்ப்பிக்கப்படும் என்று புதிய சேர்மென் வாக்குறுதி கொடுத்திருக்கிறார். இந்த ஹவுசிங் போர்டில் பல நிர்வாகத்தினரை மாற்றியிருக்கிறார்கள். இப்போது வந்திருக்கக்கூடிய சேர்மனாவது பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி, பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி போன்ற கமிட்டிகள் கொடுக்கின்ற சிபாரிசுகளை அக்கரையோடு கவனித்து தக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறேன். இன்னொன்று சொல்கிறார்கள்.

The Committee therefore wishes that as far as possible, action taken or proposed to be taken on the recommendations of the Committee should be sent to the Committee within a period of three months. இந்த மூன்று மாத காலத்திற்குள்ளாக—அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய சிபாரிசுகளை உடனடியாக செயல்படுத்தி, என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவிப்பார்கள் என்று நம்புகிறேன்.

முக்கியமாக ஓவர் பேமெண்ட் 37,034 ரூபாய் ஓவர் பேமெண்ட் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இது கொடுத்த விபரத்தில் இருக்கிறது. மேலும் எவ்வளவு இருக்கும் என்று தெரியவில்லை. சுருக்கமாகச் சொல்வதாக இருந்தால், ஹவுசிங் போர்டு நடவடிக்கை பூராவும் டிஸ்டர்பன்ஸாக இருக்கிறது என்று பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி சொல்லியிருக்கிறது.

இன்னொன்று 15-வது சிபாரிசு பற்றியது.

The Committee on Public Accounts had in their previous report pointed out the unsatisfactory state of affairs and stressed the need for maintenance of these important records properly and up-to-date at all times. The Committee regrets that despite these recommendations of a Legislative Committee, the state of accounts has remained unsatisfactory. The Committee hopes that effective steps will be taken to put the accounts right and to bring them up-to-date soon.

ஏன் இதை வாசிக்கிறேன் என்றால் ஏற்கெனவே ஹவுசிங் போர்டு சம்பந்தமாக கவலை எடுத்துக்கொண்டு, 'பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி விசாரணை நடத்தி இருக்கிறது; அதன் சிபாரிசுகளைக் கொடுத்திருக்கிறது. அந்த சிபாரிசை அமுல்படுத்தத் தயங்குகிறார்கள். அதனால் அங்கே ஏதோ ஒரு கோளாறு இருக்கிறது என்று தோன்றுகிறது. ஆகவே அவர்கள் நல்ல காரியத்தைச் செய்திருக்கிறார்கள். பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி முதன் முதலாக ஹவுசிங் போர்டு விவகாரத்தை எடுத்துக்கொண்டது சாலச்சிறந்ததாக இருக்கிறது. அவர்கள் பல சிபாரிசுகளைக் கொடுத்திருக்கிறார்கள். அவைகளை ஏற்றுக்கொண்டு உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்த திருத்த மசோதாவில் ஹவுசிங் போர்டு பற்றி நீண்ட காலமாக இருக்கக்கூடிய விஷயங்களை எல்லாம் ஆழ்ந்து ஆராய்ந்து, சேர்மன் அவர்களுடைய வாக்குமூலத்தையும் கேட்டு, கமிட்டியினுடைய சிபாரிசுகளை அவர்கள் தெரிவித்துள்ளதைப் போல் மூன்று மாத காலத்திற்குள் அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.



THIRU K. M. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, as a member who has been in the City Improvement Trust for about six years, I have fairly good experience about what I am speaking today. I am also a member of the Public Undertakings Committee and in the Committee's report everything has been placed and I am not going into that today. Everybody in this Assembly who has gone through that report knows that the accounts of the Housing Board is in doldrums and it has to be improved. I am told that an ex-Accountant-General is being appointed as a Special Accounts Member to go into this question. What I am worried is about the future of the Housing Board.

So far as the Housing Board is concerned, houses have to be constructed within the over-all rules of the Corporation of Madras. They cannot go independently and construct houses in such a way that it overlaps the rules of Corporation. Just opposite the Housing Board the drainage has been constructed in such a way that it does not fit into the drainage constructed by Corporation of Madras. In the past, particularly when the City Improvement Trust was there, there was a member elected by the Corporation to represent the Corporation and get its difficulties solved and the lay-outs came before the Corporation Council not as a sort of super-power, but as a co-ordinating authority to co-ordinate both the Housing Board lay-out and the City administration. But today, thinking that democracy has developed in such a way all the non-officials are forgotten and a sort of persons are nominated who are also non-officials, but who have no knowledge—they may have knowledge—but who are representing the City of Madras as councillors. And they are nominated. May be some councillors are also nominated. But what is happening to the layout coming before the Corporation? It may be said that the Commissioner is a member of the Committee, ex-officio. But he cannot sit and have all the figures as a non-official member who has to face the people and who has the responsibility. When

(Thiru K. Suppu in the Chair)

we have a non-official, he can be useful to the Housing Board. Not that I am asking for any particular individual. A man who is elected should be useful to the Housing Board. I know instances where foundation-stone is laid, but later on it was found that the

place was reserved for something else and then some other place was taken up. All these things could be avoided provided there is a non-official elected from the Council so that the Housing Board can function better.

Then, there are non-officials and non-officials. A non-official may be society-man or woman who generally gets into several committees. They are very big persons. They just go to a slum, do some voluntary work and get a big name. That is not the type of people we want. There are some people who somehow speak into all sorts of committees. But what we want is elected representatives of the Legislature so that—may be from the City or from outside—one elected by the Council, one from the Legislature from amongst the City Members and one from outside. I do not think this is difficult.

Mr. Acting Speaker, Sir, my past experience is when we were there, there were too many non-officials and there was too much of interference and then the Government decided to remove all the non-officials and put all officials. But what happened ? The Director of Public Health, the Director of Town Planning and other officers they had good intentions, but they had no knowledge of specific conditions prevailing in the City of Madras, in a particular place. Afterwards, it was decided that there should be some representatives also. Fortunately, the Slum Clearance Board has been separated from the Housing Board.

The most important question is this. The Housing Board is intended to house the houseless and provide residence for persons who pay Rs. 30 or Rs. 40 as rent and get clustered up in a dirty dilapidated house. Instead of providing houses for such people, the Board has three categories, one is Higher Income Group. Cannot this Higher Income Group look after themselves ? You may say it is profitable. Is profit alone the criterion ? We want that the energy of the Housing Board must be fully utilised for housing the poor people, the middle-class people who cannot put up houses of their own. Slum Clearance Board is meant for housing the slum-dwellers. The Housing Board should house people who



cannot put up houses of their own. For instance, in West Mambalam in one house 10 or 15 families are huddled together. Visitors come from outside and they see the construction of the Housing Board. They get certificates also. If only these people are taken to West Mambalam, Choolai or Perambur or Triplicane where there are slum areas or other streets where in a single house there are 10 or 15 families clustered together, then these foreigners will say what type of work the Housing Board had done work but they have built houses for those who can afford to construct houses. What we want, Mr. Temporary Chairman, Sir, is that the Housing Board should construct houses for the people who cannot afford to construct houses of their own. I have seen during inspection along with the Hon. Minister and we have seen such houses. The Housing Board should run on the no-profit no-loss basis. The Slum Clearance Board should run on the basis of loans and grants.

I am sure that the Hon. Minister will accept this amendment which I shall move later so that the elected representatives in the Housing Board will be really non-officials representing the people. I hope and trust that the Hon. Minister will definitely agree to this proposal which I will move later.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. சுப்பு) :** மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்தில் டெம்பரரி சேர்மென் என்று அழைக்கிறார்கள். அவரை எப்படி அழைக்கவேண்டுமென்பதற்கு ஏற்கனவே கொடுக்கப்பட்ட தீர்ப்பு இருக்கிறது. அதை வாசிக்கிறேன்.

" A member should address the Chair as "Chairman and not as 'Temporary Chairman " or " Acting Chairman ".

ஆகவே சேர்மென் என்று அழைத்தால் போதும்.

THIRU K. M. SUBRAMANIAM : Thank you for the information, Sir.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** மிஸ்டர் ஸ்பீக்கர் சார்—உண்மையாகவே ஸ்பீக்கராக வந்துவிடுங்கள்—தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தைப்பற்றிப் பேசும்போது சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

சென்னை நகரத்திலுள்ள வீட்டு நெருக்கடியைத் தீர்க்க எவ்வளவு வேகத்தோடு அந்த வாரியம் அமைக்கப்பட்டதோ, அவ்வளவு வேகத்தோடு அது தன் பணியைச் செய்யவில்லை என்று தான் சொல்ல வேண்டும். அதை மேலும் வேகப்படுத்துவதற்கு என்னென்ன செய்யவேண்டுமென்ற வழியில் அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதற்கு மகிழ்ச்சி அடைகிறேன். அந்த முயற்சியில் தங்களுக்குச் சாதகமான ஒருசிலவற்றைச் சொன்னார்களே தவிர, அது நடுத்தர ஏழை எளிய மக்களுக்கு வீடுகளைக் கட்டித்தரக்கூடிய ஸ்தாபனமாக செயல்பட என்ன என்ன வழி முறைகள் இருக்கின்றன என்பதை அரசாங்கம் ஆராயவேண்டும்.

முதலிலே இந்தத் திருத்தத்தின் மூலமாக மிக விரிவான முறையில் எல்லா மேல்மட்ட அதிகாரிகளுமே நான்-உறுப்பினராக, கட்டுக்குள் அடங்காத நிலைமையில் இருந்ததை மாற்றி மூன்று நான்-அபிஷியல், 6 அபிஷியல் உறுப்பினர்கள் என்ற முறையில் போட வந்திருக்கிறார்கள். அன்றைக்கு எல்லா அதிகாரிகளும் ஒன்றாகக் கூடி கலைகிற மாதிரி இருந்ததே தவிர வேலை செய்கிற அளவில் இல்லை. அந்தக் குறையை உணர்ந்து தான் இதுபோன்ற திருத்தம் வருகிறது. அதோடு சட்டசபைக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தை எடுத்துப்போகிறார்களே அது வருந்தத்தக்கது என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 11.30)

இன்றைக்கு ஹவுசிங் போர்டை எடுத்துக்கொள்ளுங்கள். ஹவுசிங் மினிஸ்டர் ஒருவர் இருக்கிறார். போர்டுக்கு சேர்மன் ஒருவர் இருக்கிறார். சேர்மனுக்கு அதிக விவரம் தெரியுமா, மினிஸ்டருக்கு அதிக விவரம் தெரியுமா? ஹவுசிங் போர்டு சேர்மனுக்குத்தான் விவரம் தெரியப்போகிறது. அதேபோல, பப்ளிக் ஹெல்த் மினிஸ்டர். வாட்டர் அண்ட் டிரெயினேஜ் போர்ட் சேர்மனிடம் இருக்கிற விவரங்கள், பப்ளிக் ஹெல்த் மினிஸ்டரிடம் இருக்கப் போவதில்லை. அதிகாரங்களும் சேர்மனுக்கு இருப்பதைப் போல், மினிஸ்டருக்கு இருக்கப் போவதில்லை. எவ்வளவு கடன் வாங்கி, அதிகமான கார்ப்பரேஷன்களை, போர்டுகளை ஏற்படுத்த முடியுமோ, அந்த அளவுக்கு அதிகமான கார்ப்பரேஷன்களை; போர்டுகளை ஏற்படுத்துகிறீர்கள். செகன்ட் லைன் மந்திரிகள் போடுகிற மாதிரி, ஒரு லிஸ்டை வைத்துக்கொண்டு,





இந்த அரசாங்கம் செய்துகொண்டு வருகிறது, என்பதை அங்கத்தினர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். நாங்கள் சொன்னாலும், நீங்கள் தொடர்ந்து செய்துகொண்டுதான் இருக்கப் போகிறீர்கள். எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் சொல்வதில் சாதகம் இருக்கிறதா, பாதகம் இருக்கிறதா என்பதை நீங்கள் பார்க்கப் போவதில்லை. மக்களுடைய நன்மைகளைப்பற்றி நீங்கள் உணர்ந்து பார்க்க வேண்டும். ஹவுசிங் போர்ட். . .

**திரு. இராம. அரங்கண்ணல்:** தலைவர் அவர்களே, இப்படி அமைக்கப்படுகின்ற வாரியங்களிலே, அங்கத்தினர்களை தலைவர்களாகப் போடுகின்ற காரணத்தாலே, வேலைகளிலே ஏதாவது குந்தகமா, அல்லது குற்றச்சாட்டு இருக்கிறதா?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** குற்றச்சாட்டு என்று சொல்லப்போனால், இந்த பில்லிலே அதைப் பேச முடியாது. எல்லா போர்டு சேர்மன்களும் பிரமாதமாக வேலை செய்கிறார்கள். அதைக் கண்டு பிடிக்க எங்களுக்கு வாய்ப்பில்லை. எலெக்ட்ரிசிட்டி போர்ட் அறிக்கையை விவாதிக்க வருஷத்திற்கு ஒருமுறை ஒரு வாரம் ஒதுக்கி, விவாதிக்கிறோம். அதேபோல், ஹவுசிங் போர்ட் அறிக்கை . . . It can be placed on the Table of the House. இங்கே சட்டசபையிலே வைக்கப்படுகிற 100 பேப்பர்களிலே ஒன்றாக அதையும் எடுத்துக்கொண்டு வீட்டிற்குப் போக வேண்டியிருக்கிறது. எலக்ட்ரிசிட்டி போர்டுக்கு ஒதுக்குகிற மாதிரி, ஹவுசிங் போர்டுக்கு ஒதுக்கி வையுங்களேன். ஏன் அக்கவுண்ட் வரவில்லை என்ற கேட்க எங்களுக்கு நேரம் இருக்கும், காரியங்கள் என் நடைபெறவில்லை என்பதைக் கேட்க முடியும், பொதுப் பணம் எப்படி பாழாகிப் போகிறது என்பதை சட்டசபை உணர முடியும். நீங்கள் கொஞ்சம், கொஞ்சமாக, அதிகாரத்தை சட்டசபையிடமிருந்து எடுத்துக்கொண்டு போகவேண்டுமென்றுதான் இந்த மாதிரி போர்டை கான்ஸ்டிட்யூட் செய்கிறீர்கள் . . .

**திரு. இராம. அரங்கண்ணல்:** தலைவர் அவர்களே, ஹவுசிங் போர்ட் சம்பந்தமாக, பேச வேண்டுமென்று சொன்னாலே, எந்த மானியத்திலே பேசுவது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்த காலம் இருந்தது. இப்பொழுது அதற்கென்று ஒரு மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறதே, அதை உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

[1973 நவம்பர் 30

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்:** சட்டசபை அதிகாரத்தை பறிப்பதற்காக போர்ட் அமைப்பதாக அம்மையார் அவர்கள் சொல்கிறார்கள். அது எப்பொழுது அமைக்கப்பட்டது? இந்த ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்டதா? அல்லது நமது ஆட்சிக்கு முன்பே, பழைய ஆட்சிக் காலத்திலேயே அமைக்கப் பட்டதா?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** யார் அமைத்தாலும் தப்பு. முன்பு ஒன்றிரண்டு இருந்தன. இப்பொழுது எத்தனை மினிஸ்டர்கள் இருக்கிறார்களோ, அத்தனை போர்டுகள், கார்ப்பரேஷன்கள் வந்து விட்டன. கோழிக்கு ஒரு போர்டு. போலீஸ் இலாகாவிற்கும் ஒரு கார்ப்பரேஷன் வைத்துவிடுங்கள் சரியாக இருக்கும். வாழைக்காய்க்கு ஒரு கார்ப்பரேஷன், கோழி முட்டைக்கு ஒரு கார்ப்பரேஷன், இல்லாவிட்டால் வாரியம். அப்பொழுதுதானே, 170 உறுப்பினர்களுக்கும் அதிகாரம் கொடுக்க முடியும். அந்த முறையிலே, எந்த வாரியம் அமைத்தாலும், அது தவறான முறையிலே சட்டசபையினுடைய அதிகாரத்தைப் பிரித்துக் கொண்டு போகிறது என்றால், இனிமேல் எந்த வாரியம், கார்ப்பரேஷன் அமைத்தாலும் தயவுசெய்து, அதனுடைய அறிக்கையை சட்டசபை விவாதிக்கவேண்டுமென்று சட்டசபைக்கு நேரம் ஒதுக்கி வையுங்கள். அதற்கென்று 2, 3 நாள் ஒதுக்கவேண்டும். நீங்கள் 32, 35, 40 மானியங்களை எடுத்துக்கொண்டு, கடைசியிலே கில்லட்டின் விடுகிறீர்கள். எந்த மானியத்திலேயாவது விவரமாக, தெளிவாகப் பேசுவதற்கு நேரம் கிடைக்கிறதா? நாம் அக்கவுண்டை பாஸ் பண்ணுவதற்காக, பட்ஜெட் செஷனை வைத்து விரைவாக முடித்துக்கொள்கிறோம். அது நமக்குத் தெரியாதா?

Let us take it for discussion.

மக்களுடைய கோடிக்கணக்கான வரிப் பணத்தைக் கொண்டு வாரியங்களும், கார்ப்பரேஷன்களும் அமைக்கப்படுமானால், அதற்கென்று 3, 4 நாட்கள் ஒதுக்கி விவாதம் செய்யவேண்டுமென்று வையுங்கள். எப்படி எலெக்ட்ரிசிட்டி போர்ட் ரிப்போர்ட்டை கவர்ன்மென்டே மூவ் பண்ணி விவாதத்திற்கு எடுத்துக்கொள்கிறார்களோ, அதே மாதிரி, இந்த அறிக்கைகளையும் வெறும் டேபிளிலே வைக்காமல், அரசாங்கமே தீர்மானத்தை கொண்டு வந்து விவாதிக்க வையுங்களேன். பொதுப்பணத்தைக் கோடிக்



1973 நவம்பர் 30] [திருமதி த. ந. அனந்தநாயகி]

கணக்கிலே செலவழிப்பதிலே மக்களுக்கு என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை எடுத்துச்சொன்னால்தானே நலமாக இருக்கும். ஆகவே, அதற்கு வழிவகை செய்யவேண்டும்.

அடுத்து, ஹவுசிங் போர்டு பிளாட் அலாட் செய்கிறது. நடுத்தரத்திலே உள்ளவர்களுக்கு வசதியான அளவிலே அது அலாட் செய்கின்றதா என்பதைப் பார்க்கவேண்டும். பெரிய அதிகாரிகள், பெரிய பதவியிலே இருக்கிற அதிகாரிகளுடைய சொந்தக் காரர்கள், இவர்கள்தான் அந்த பிளாட்டுகளை வாங்க முடிகிறதே தவிர, உண்மையிலே அடித்தளத்திலே இருக்கிறவர்களுக்கு அந்தப் பிளாட்டுகள் போகின்றனவா என்பதைப் பார்க்க வேண்டும்.

இப்பொழுது ஸ்லம் கிளியரன்ஸ் போர்டு குடிசையிலே இருப்பவர்களை போட்டோ எடுத்து, அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கிறது. ஆனால் ஹவுசிங் போர்டிலே ரூ. 500-க்கு மேலே பெறுகிறவர்கள், செல்வாக்கை வைத்து, 2, 3 வீடுகள் வாங்குவதால், நடுத்தர மக்கள் வீடு வாங்கக் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது.

தற்பொழுது சென்னை நகரத்திலே 3 லட்சம் வீடுகள் பற்றாக் குறை என்றால், எவ்வளவு துரிதமாக வேலை நடைபெறவேண்டும், அவற்றைக் கட்ட வேண்டுமென்பதை அரசு யோசிக்கவேண்டும். நடுத்தர வர்க்கத்திற்கு வீடு கட்டுவது என்றால், ரூ. 10,000 கொண்டு வந்தால் வீடு கட்டித் தருகிறோம் என்கிறார்கள். நடுத்தர வர்க்கத்திலுள்ளவர்கள் ரூ. 10,000 கட்டி வீடு கட்டிக்கொள்ளக்கூடிய காலமாகவா இருக்கிறது. ஏதாவது, அப்பர் மிடில் கிளாஸ், ரொம்ப வசதி இருக்கக்கூடிய சமுதாயம், ரூ. 10,000. ரூ. 15,000 கொடுத்து விட்டு வீடு கட்டிக்கொள்ள முடியும். ஆகவே, மொத்தமாக பணம் கேட்காமல், மாதா மாதம் வாடகை கேட்பதுமாதிரி வாங்கிக் கொள்வோம் என்ற முறையில் வீடுகட்டித் தந்தால் நடுத்தர மக்களுடைய பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

இன்றைக்கு வைத்திருக்கிற சிஸ்டம், நடுத்தர மக்களுக்கு உதவியாக இல்லை. அது ஃபிளாட்டாக இருக்கட்டும், வீடாக இருக்கட்டும், ஆர்டினரி ஹவுசாக இருக்கட்டும், ரூ. 10,000 முதலில் கட்டி, பிறகு இன்ஸ்டால்மென்ட்டில் அந்தத் தொகையைக் கட்ட

வேண்டுமென்று சொல்லி, பிறகு வட்டிக்கு வட்டி, வட்டிக்கு வட்டிக்கு வட்டி என்று கேட்கக் கூடிய நிலையில், மொத்தமாக கையில் பணமிருந்தால், 2 வீடுகள் வாங்கிவிடலாம் என்பது மாதிரி இருக்கிறது. அந்நிலையில் வீடு கட்டிக்கொடுக்கிறார்கள்.

அதேமாதிரி, பிரைஸ் பிக்சேஷனில் பூஸ்டிங் நிறைய இருக்கிறது. இப்பொழுது அடையாறு செட்டியாரிடத்திலே நிலம் வாங்கினீர்கள். கிரவுண்ட் ரூ. 12,000 என்று வாங்கினீர்கள். நீங்கள் அந்த விலைக்குக் கேட்டிருக்கவில்லையென்றால், ரூ. 4,000, ரூ. 5,000-க்கு மேலே போயிருக்காது. அரசாங்கமே பார்த்து, முதலாளிகளுக்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்கிறது என்ற முறையில், பணக்காரர்கள், யார் தலையிலே அந்நிலத்தைக் கட்டி காசு வாங்கவேண்டுமோ அவர்களிடம் கட்டி வாங்கியிருக்கிறார்கள். இப்பொழுது நீங்கள் ரூ. 12,000-க்கு மேலே ஏலம் போடுகிறீர்கள். பேஸே ரூ. 12,000 என்றால், விலை மேலே மேலே ஏறிக்கொண்டே போகிறது. இதனால், ரூ. 20,000, ரூ. 25,000-க்குக் குறைந்து ஒரு கிரவுண்ட் சென்னையிலே, நல்ல இடத்திலே கிடைக்காத நிலைமை வந்துவிட்டது. இதை ஏன் நாமே நெகோஷியேட் செய்யவேண்டும்? ரெவின்யூ டிபார்ட்மென்ட் அதிகாரிகளைக் கூப்பிட்டு, பிரைஸ் பிக்ஸ் பண்ணச் சொல்லுங்களேன். அந்த வகையிலே போகாமல், நாமாகப் போய் நெகோஷியேட் பண்ணுவதால் விலை ஏறிவிடுகிறது.

அடுத்து, ஹவுசிங் போர்டுக்கும், கார்ப்பரேஷனுக்கும் கோ-ஆர்டினேஷனே கிடையாது. கேட்டால், கார்ப்பரேஷனுக்கு பெட்டர்மென்ட் டாக்ஸ் கட்டிவிட்டோம் என்று ஹவுசிங் போர்டார் சொல்வார்கள். அவர்கள் அதைச் செய்வது கிடையாது. இரண்டுக்கும் இணைப்பு இல்லாமலிருப்பதால், மக்கள்தான் அவதிப்படுகிறார்கள். அவர் ஒரு இடத்திலே டிரெயினேஜ் கட்டுவது, இவர் ஒரு இடத்திலே டிரெயினேஜ் கட்டுவது. இதனால், இந்த வீட்டு வசதி வாரியத்திலே இடம் வாங்கியவர்கள் தான் அவதிப்பட வேண்டிய நிலை இருக்கிறது.

இரண்டுக்கும், ஹவுசிங் போர்டுக்கும், கார்ப்பரேஷனுக்கும் இடையிலே இணைப்பான தொடர்பு இருக்கவேண்டும். அப்படி இல்லையென்றால், இரண்டு பேரும் கலந்து ஏதாவது ஜாயின்ட்



ஏஜன்ஸி வைத்துக்கொள்ளவேண்டும். அப்படி அமைத்து என்றைக்கு இந்த வேலைகளைக் கொடுக்கிறார்களோ, அப்பொழுதுதான் வேலை செய்வார்கள். சாதாரணமாகவே, கார்ப்பரேஷனில் வேலை நடப்பது என்றால் பல வருஷங்களாகும். ஆகவே, ஜாயின்ட் ஏஜன்ஸி வைத்து கோ ஆர்டினேஷன் ஏற்படுத்தவில்லையென்றால், காலதாமதம் இன்னும் அதிகமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஃபிளாட் வீடுகளைக் கட்டிக்கொடுக்கிறீர்கள். வீடுகளைப் பராமரிப்பதிலே கவனம் மிகவும் குறைவாக இருக்கிறது. குடிசை மாற்று வாரியத்திலே கூட அப்படிப்பட்ட பல இடங்கள் ஒழுங்காகப் பராமரிக்கப்படவில்லை.

**திரு. இராம. அரங்கண்ணல்:** பல இடங்கள் என்று சொல்லாமல், குறிப்பிட்டு எந்த இடம் பராமரிக்கப்படவில்லை என்பதை உறுப்பினர் அவர்கள் விளக்குவார்களானால் வசதியாக இருக்கும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** விசாலாட்சி அம்மன் நகரிலே சரியாகப் பராமரிக்கப்படவில்லை. அடையாறிலே இந்திரா நகரிலே சரியாகப் பராமரிக்கப்படவில்லை. குடிசை மாற்று வாரியத் தலைவர் என்னோடு சுற்றுப் பிரயாணம் செய்வாரானால், எங்கெங்கு என்று காட்டுவேன்.

**திரு. இராம அரங்கண்ணல்:** நான் உறுப்பினரோடு வருவதற்குத் தயாராக இருக்கிறேன். ஆனால், உறுப்பினரைத் தேடுகின்ற நேரத்திலேதான் கிடைப்பதில்லை. நான் அன்றாடம் போய்வருகின்ற பகுதிகள் இவை. விசாலாட்சி அம்மன் எஸ்டேட் பராமரிக்கப்படவில்லை!

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நாங்கள் இருந்தபொழுது சாக்கடைத் கட்டப்பட்ட இடத்தையெல்லாம் பார்த்தால், தண்ணீர் குழாய்த் தண்ணீரோடு கலந்து விடுகிறமாதிரி அந்த இடம் இருக்கிறது. தேடிப் பிடித்தால் கண்டுபிடிக்க முடியாத எம்.எல்.ஏ. அல்ல நான். தொகுதிக்கு வாரா வாரம் போகிறேன். என்னுடைய தொகுதியான மைலாப்பூர் ஓட்டர்தானே நீங்கள். அங்கே என்னைப் பார்க்கலாம். ஒவ்வொரு வியாழக்கிழமை மாலையிலும் என்னுடைய தொகுதியிலே, உங்களுடைய பகுதியிலே

இருக்கிறேன். உங்களுடைய வீட்டிற்கு 4 தெருக்கள் தள்ளித்தானே என் ஆபீஸ் இருக்கிறது. என்னை வந்து பாருங்கள். தயவுசெய்து உங்களுடைய கோரிக்கையை அங்கே சொல்லுங்கள். நான் தொகுதி எம்.எல்.ஏ. என்ற முறையில் உங்களுடைய கோரிக்கைகளைக் கேட்கத் தயாராக இருக்கிறேன், உங்களுடைய பிரதிநிதியாக.

அடுத்து, கட்டடம் கட்டுவது பெரிதல்ல. பராமரிப்பிலே அக்கறை செலுத்துவதில்லை. ஹவுசிங் போர்ட் பராமரிப்பிலே வாடகை வாங்குவதிலே, ஒழுங்கான முறைகளைக் கடைபிடிக்க வேண்டுமென்ற அளவுக்கு போர்ட்டை டோன் அப் செய்யமென்று நான் ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். சென்னை நகரத்திலே உள்ளவர்கள் இரண்டு சட்ட மன்ற உறுப்பினர்களை நீங்கள் அதிலே போட வேண்டும். நிச்சயமாக நீங்கள் எதிர்க் கட்சிக்காரர்களைப் போடப்போவதில்லை. எதிர்க்கட்சிக்காரர்கள் இருக்கவேண்டுமென்ற நாகரிகம் கிடையாது. உங்கள் கட்சிக் காரர்களைத்தான் போட்டுக்கொள்ளப்போகிறீர்கள். இரண்டு சட்டசபை அங்கத்தினர்கள் சென்னையிலே இருப்பவர்கள் ஆகப் பார்த்துப்போட்டால்தான் அவர்கள் வேலைகள் நடைபெறும் பொழுது பார்ப்பதற்கும் நிர்வாகத்தினைப் பார்ப்பதற்கும் வசதியாக இருக்கும்.

அதோடு ஹவுசிங் போர்டு சேர்மனை அடிக்கடி மாற்றுகிறீர்கள். அங்கே போய் அவர் எந்தக் காலனி எங்கே இருக்கிறது என்று அறிந்துகொள்வதற்கு முன்னாலேயே அவரை வேறு ஒரு இலாகாவிற்கு மாற்றிவிட்டால் நிர்வாகம் சரியாக நடக்காது. நான்—அபிஷியல் சேர்மனைப் போட்டுவிட்டால் என்ன ஆகும் என்பதும் உங்களுக்குத் தெரியும்.

அரசாங்கச் சிப்பந்திகளுக்கு வீடுகட்டிக் கொடுப்பதிலே நீங்கள் அதிக அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும். லோன் அப்ளிகேஷன் போட்டால் 2, 3 வருஷம் ஆகிறது சாங்ஷன் ஆவதற்கு. வாங்கிய கடன் அஸ்திவாரத்திற்குத்தான் பற்றுகிறது, கட்டடத்திற்குப் பணம் இல்லாமல் போய்விடுகிறது. காரணம் நாளுக்கு நாள் மெட்டீரியல்ஸ் காஸ்ட்ஸ் அதிகமாகி ஏறிக்கொண்டே போகிறது. ஆகவே அதிகமாகத் தொகை கொடுக்க வேண்டும்.



எந்த அதிகாரிகள் லோன் கேட்கிறார்களோ அவர்களுக்கு குறைந்தது 6 மாதத்திற்குள்ளாக அனுமதி கொடுக்கக்கூடிய முறையினைக் கொண்டுவரவேண்டும். அப்படிச் செய்தால்தான் குருவிக்கேற்ற வீடு என்பதைப்போல் அவர்கள் ஆங்காங்கே வீடுகளைச் சீக்கிரமாகக் கட்டிக்கொள்ள முடியும்.

அரசாங்கச் சிப்பந்திகளைப் பொறுத்தவரையில் கிளாஸ் ஃபோர் எம்ப்ளாயீஸ்-க்கு வீடுகட்டிக்கொடுக்கிற திட்டம் எங்கே வைத்திருக்கிறீர்கள், ஆகவே அவர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கக்கூடிய முறையிலே ஒரு திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. சுப்பு) :** இந்த பில்லில் ரீகான்ஸ்டிட்யூஷன் ஆப் தி போர்டு பற்றித்தான் இருக்கிறது, ஆகவே அந்த போர்டின் அமைப்பைப்பற்றிய விவாதத்திற்குத்தான் போகவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir. it is impossible. Suppose, I want to say something else other than the cons titution of the Board, I will not be permitted. அப்படியென்றால் ஒரே வார்த்தையிலே மெம்பர்கள் கொடுத்திருக்கிறீர்கள், 3 ஐ 2 ஆக ஆக்குங்கள். 6 ஐ 7 ஆக ஆக்குங்கள் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்ள வேண்டியதுதான்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. சுப்பு) :** ரீகான்ஸ்டிட்யூஷன் ஆப் தி போர்டு பற்றி இருக்கும்பொழுது மொத்தமாகப் பேசிக்கொண்டு இருப்பது சரியல்ல. அதையெல்லாம் பட்ஜெட்டிலே வேண்டுமானால் பேசிக்கொள்ளலாம். இது பில், ஆகவே ரிலவண்ட் பாயிண்டுகளை மாத்திரம்தான் பேசலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

" Speeches must be relevant to the subject matter of the Bill. Members should refer to points relevant to the Bill before the House and not go out of the way. ' என்று ஏற்கனவே ரூலிங் இருக்கிறது.

* **திரு. ஜே. ஜேம்ஸ் :** ஹவுசிங் போர்டு திருத்த மசோதாவில் முக்கியமாக இந்த போர்டை திருத்தியமைப்பதற்காக இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது.

உண்மையிலேயே தலைவர் அவர்கள் கூறியதுபோல் செய்தால் இந்த மசோதாவைப்பற்றிப் பேசவேண்டுமென்றால் வாரியத்திற்கு 16-க்குப் பதிலாக 10 அங்கத்தினர்கள் இருந்தால் போதுமா அல்லது போதாதா என்று சொல்லிவிட்டுப்போவது அது ஒரு விளக்கமான பேச்சாக இருக்காது. ஹவுசிங் போர்டைப்பற்றியும் சில கருத்துக்களைக் கூறுவதற்கு இது ஒரு சந்தர்ப்பம் என்ற முறையிலே அதைப்பற்றிக் கூறுவதும் பொருத்தமாகத்தான் இருக்கும் என்று கருதுகிறேன்.

ஆகவே, போர்டு கான்ஸ்டிட்யூட் பண்ணும்பொழுது ஏற்கெனவே இருந்த சட்டத்திலே போர்டின் தலைவர் அரசாங்கம் அறிவிக்கின்ற குவாலிபிகேஷன்ஸ், தகுதிகள் உள்ளவராக இருப்பார் என்று விதிமுறை இருக்கிறது. ஆனாலும், நடைமுறையைப் பார்க்கும்பொழுது இதுவரையில் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரிதான் அதற்கு ஆபீசராக இருந்துவருகிறார் என்று தோன்றுகிறது. ஆகவே நடைமுறையிலே இருப்பதை வைத்துக்கொண்டு பார்க்கும்பொழுது இந்தச் சட்டத்தைத் திருத்துகின்ற நிலைமையில் இதன் தலைவரும் ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீசராக இருக்கவேண்டுமென்ற முறையிலே ஒரு திருத்தத்தை நான் கொடுத்திருக்கிறேன், திருத்தம் வரும்பொழுது நான் அதைப்பற்றிப் பேசலாம் என நினைக்கிறேன்.

அரசாங்கம் ஹவுசிங் போர்டுக்கு பல கோடி ரூபாய்களை வழங்குகிறது. இதைத்தவிர வெளியிலே இருந்து பல கோடி ரூபாய்களை அந்த போர்டு கடனைப்பெற்று வேலைசெய்து கொண்டிருக்கிறது. அந்த நிலையில் அதற்குப் பொறுப்பாக அதிகாரி இருந்து கவனிப்பதுதான் பொருத்தமாக இருக்கும். பல போர்டுகளுக்கும் வாரியங்களுக்கும் நான்-அபிஷியலைப் போட்டிருப்பதால் எவ்வளவு சிக்கல்கள், சிரமங்கள் இருக்கின்றன என்பதை நாம் கண்டுகொண்டுவருகிறோம். இந்த நிலையிலே ஹவுசிங் போர்டுக்கும் ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீசர் இருப்பதுபோல் இருந்தால்தான் சரியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்னதாக திரு. கே. எம். எஸ். அவர்கள் கூறினார்கள், திருமதி அனந்தநாயகி அவர்களும் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். 3 பேர்களில் 2 பேர்கள் சென்னை நகரத்தைச் சேர்ந்த



உறுப்பினர்களாகத்தான் இருக்கவேண்டுமென்று தெரிவித்தார்கள். ஹவுசிங் போர்டு அமைத்திருப்பதே சென்னைக்கு மாத்திரமல்ல, மாநிலம் முழுமைக்காகவும்தான் அமைக்கப்பட்டிருக்கிறது. ஏதோ அது செயல்படுகிறதைப் பார்த்தால் சென்னை நகரத்திற்கு மாத்திரம்தான் செயல்படுவதுபோல் தெரிகிறது. சென்னை நகரத்தைத் தவிர மற்ற இடங்களிலேயும் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். நிச்சயமாக சென்னை நகரத்தில் எந்த அளவிற்குச் செலவு செய்கிறோமோ அந்த அளவுக்கு எந்த அளவிற்கு ஸ்லம் க்ளியரன்ஸ் போர்டில் செலவுசெய்து வீடுகளை ஏழைகளுக்குக் கட்டித் தருகிறோமோ அந்த அளவிற்கு மற்ற இடங்களிலும் ஸ்லம் க்ளியரன்ஸ் போர்டும், ஹவுசிங் போர்டும் சென்னை நகரத்திற்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனவோ அதைவிட அதிக முக்கியத்துவம் மற்ற இடங்களுக்கும் கொடுத்து அங்கேயெல்லாம் உள்ள வீடில்லாத மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஹவுசிங் போர்டு செலவுசெய்வதைப் பார்க்கும்பொழுது வசதியுள்ளவர்கள்தான் வீடுகள் கட்டிக்கொள்வதற்கு வசதி செய்கிறது. முன்பணம் 7 ஆயிரம், 10 ஆயிரம் என்று கொடுக்கக்கூடியவர்கள்தான் கட்டிக்கொள்ள முடிகிறது. வசதியில்லாதவர்கள், ஏழைகள் கட்டிக்கொள்ள வழிவகை இல்லை. இந்த நிலைமை மாறவேண்டும். அண்டை மாநிலமான கேரளத்திலே 2 ஆயிரம், 3 ஆயிரம் ரூபாய் செலவுசெய்து வீடுகட்டிக்கொள்ளக்கூடிய திட்டம் இருக்கிறது. அதுபோன்ற திட்டங்களை இங்கே கொண்டு வந்து ஏழைகளுக்கு, வசதியில்லாதவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கக்கூடிய முறையிலே ஏற்பாடுகள் செய்யவேண்டும். கீழ்மட்டத்திலே இருக்கின்றவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். ஏதோ மிடில் கிளாஸ் பீப்பிளும் அதற்கு மேலே உள்ளவர்களும் கடன் எந்த வகையிலாவது பெற்றோ அல்லது வேறு முறையிலோ வீடுகளைக் கட்டிக்கொள்வார்கள். அரசாங்கம் அதிகமாக அக்கறை அவர்களைப் பொறுத்தவரையில் எடுத்துக் கொள்ளவேண்டியதில்லை. ஆனால் ஏழைகளைப்பொறுத்தவரையில், வசதியில்லாதவர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து திட்டங்களை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1973 நவம்பர் 30

அண்ணா நகரிலே பல வீடுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதுவரையிலேயும் அங்கே ஸ்ட்ரீட் லைட்டுகள் அமைக்கவே யில்லையென்று தெரிகிறது. குறைந்தபட்சத் தேவைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்று சொல்கிறார்கள். ஓரளவுக்கு வீடுகள் வந்து விட்டால் குறைந்தபட்சத் தேவைகளை பூர்த்திசெய்து கொடுக்க போர்டு கடமைப்பட்டிருக்கிறோம். அந்த வகையிலே அதையெல்லாம் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி போடும்பொழுது இங்கே திரு. தங்கமணி அவர்களும் நாங்களும் கூறினோம். இந்தக் கமிட்டிக்கு எதிர்க்கட்சினர் ஒருவரைத் தலைவராகப் போட வேண்டுமென்று கோரிக்கை வைத்தபொழுது அரசாங்கத் தரப்பிலே அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எதிர்த்தரப்பிலே உள்ள உறுப்பினர் தலைவராக இருந்தால் அந்த நிறுவனங்கள் எப்படி எப்படி வேலை செய்கின்றன, இந்த போர்டு எப்படிப் பணியாற்றுகிறது, குற்றங்குறைபாடுகள் என்ன என்ன என்பதை எல்லாம் கண்டுபிடித்து சுட்டிக்காட்ட முடியும். அது இல்லாத காரணத்தினாலே அந்தக் கமிட்டி சரியான முறையிலே செயல்படவில்லை என்பதையும் தான் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

இந்த மசோதா நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டிருக் கிறது. இருந்தாலும் 16 ஆக இருந்த போர்டு அங்கத்தினர் எண்ணிக்கையை 10 ஆக்கவேண்டுமென்ற எண்ணத்தைத் தவிர வேறு அரசியல் கட்சியிலே திருப்தியில்லாதவர்களுக்கு, அதிருப்தி அடைந்தவர்களுக்கு அவர்களைத் திருப்திப்படுத்த இதையும் ஒரு வாய்ப்பாக பயன்படுத்த இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக் கிறது என்று சொன்னால் அது நிச்சயமாக மக்கள் நன்மைக்காக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள் கிறேன்.

**திரு. கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன் :** தலைவரவர்களே, இந்த வீட்டு வசதி வாரியம் செய்துள்ள பணியைப்பற்றிப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால், இப்பொழுது இந்த வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகள் இல்லாவிட்டால் என்ன



1973 நவம்பர் 30] [திரு. கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன்]

நிலைமைகள் ஏற்பட்டிருக்கும் என்பதைப்பற்றி ஒரு நிமிஷம் யோசித்தால் இந்த வாரியத்தின் பணிகளின் மேன்மையை உணர முடியும். இந்த வாரியத்தின் பணிகள் முன்பு எப்படியிருந்தது என்பதையும், சமீபகாலங்களில் எப்படியிருந்தது என்பதையும் பார்க்க வேண்டும். முன்பு 8,000 ரூபாய். 9,000 ரூபாய்க்கு மூன்று நான்கு ஆண்டுகளில் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுது 'ஹட்கோ'வின் பண உதவியாலும், எல்.ஐ.சி.யிட மிருந்து பணம் வாங்கியும் 14 கோடி, 12 கோடி என்ற அளவில் பணிகளைப் புரிகிறது. இவ்வாறு அதிக அளவில் வீடுகளைக் கட்டி, வீடில்லாதவர்களின் பிரச்னையை நீக்குகிறது.

பொதுவாக ஏழைகளுக்கும், அதிகமாகப் பண வசதி இல்லாத வர்களுக்கும் இந்த வீட்டு வசதி வாரியம் அதிகமாகப் பயன்பட வில்லை என்று சொன்னார்கள். அந்தக் கருத்தை இப்பொழுது சொல்வதற்கு எந்தவிதமான வாய்ப்பும் இல்லை. ஏனென்றால் சில ஆண்டுகளாக வீட்டு வசதி வாரியம் தன்னுடைய முக்கிய பணியாக ஏழைகளுக்கு அதிகமாக உதவ வேண்டுமென்றுதான் காரியங்களைச் செய்து வருகிறது என்பதை நாம் தெரிந்திருக்கிறோம். 'லோ காஸ்ட்' என்ற வகையிலே 6,000 ரூபாய், 7,000 ரூபாய், 10,000 ரூபாய் தொகைக்குள்ளாக எல்லா மாவட்டங்களிலும் கட்டப் பட்டு வருகின்றன. ஆனால் ஏழைகள் நான்கில் ஒரு பாகம் முன்பணமாகக் கொடுக்கக் கஷ்டப்படுகிறார்கள் என்பதை உணர்ந்து, அப்படி நான்கில் ஒருபாகம் கொடுக்க வேண்டிய தில்லை, பத்தில் ஒரு பாகம் கொடுத்தால் போதும் என்று செய்திருக் கிறது. அதன்படி 6,000 ரூபாயில் வீடு கட்ட வேண்டுமென்றால் 600 ரூபாய் கொடுத்தால் போதும் என்று 'லோ காஸ்ட்' என்ற வகையிலே ஏழைகளும் இந்தப் பயனைப் பெறுவதற்கு சிறந்த வாய்ப்பாக இருக்கிறது.

மேலும் மாண்புமிகு அமைச்சரவர்கள், ஒரு ரூபாய் சேமித்தால் வீடுகட்டும் திட்டம் என்ற வகையில் பல ஏழைகளுக்கு வீடுகள் கிடைப்பதற்குச் செய்திருக்கிறார்கள். ஆகையால் 'ஹட்கோ' பண உதவியுடன் பல திட்டங்கள் அமைந்திருக்கின்றன. இந்தியா விலேயே நமது மாகாணம்தான் மற்ற மாகாணங்களைவிட, மகா ராஷ்டிரத்தைத் தவிர, இரண்டாவதாக வீட்டு வசதித்

திட்டங்களுக்குப் போடப்பட்ட சிறந்த ஸ்தாபனமாக இருக்கிறது. இதை மற்ற மாநிலங்களிலுள்ளவர்கள் புகழ்ந்து பேசுவதை உணர்ந்திருக்கக்கூடும்.

தவிரவும், இம்மாதிரி பல குறைகள், கணக்குகள் சரிவர இல்லை என்று இருந்தாலும், புதுத் தலைவரவர்கள் பொறுப்பேற்றபிறகு அதிகக் கவனம் செலுத்தி, பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டியின் ரிப்போர்ட்டின்படி கணக்குகளைச் சரியாக வைத்துக் கொள்ளவும், பாக்கிகளைக் கண்டுபிடிக்கவும் அதிகமாகக் கவனம் செலுத்தி, சகல முயற்சிகளையும் செய்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** தலைவரவர்களே, நிர்வாக வசதியை முன்னிட்டுக் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மசோதாவின்மீது பேசிய கனம் உறுப்பினர் தங்கமணி அவர்கள் பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டியினுடைய ரிப்போர்ட்டைப் பற்றிச் சொன்னார்கள். கனம் உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள், இந்தக் கமிட்டிக்குத் தலைவராக இருக்கக்கூடியவர்கள் எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள்தான் இருக்க வேண்டுமென்ற கருத்தைச் சொன்னோம் என்று குறிப்பிட்டார்கள். எதிர்க்கட்சி வரிசையிலேயிருந்தாலும் சரி, அல்லது ஆளுங்கட்சி வரிசையிலே இருந்தாலும் சரி, சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தப் பணிகளைச் செவ்வனே செய்வார்கள் என்பதைப் பற்றி அறிவிப்பதற்காகத் தான் ஆளுங்கட்சியை சேர்ந்த கனம் உறுப்பினர் கணபதி அவர்களைத் தலைவராகக் கொண்ட கமிட்டி சில நல்ல யோசனைகளை வாரியத்திற்கு வழங்கியிருக்கிறது. ஆனால் இந்தக் கமிட்டியின் அறிக்கை வந்த நேரத்தில் வீட்டு வசதி வாரியத்திலே நீண்ட நாட்கள் உறுப்பினராக இருந்தவரும், இந்தச் சட்டமன்றத்திலே உறுப்பினராக இருந்தவரும், இன்றையதினம் பழைய பெரும் பத்திரிகை ஒன்றினை நடத்திக்கொண்டிருப்பவருமான ஒருவரின் பத்திரிகையில் ஏதோ வீட்டு வசதி வாரியத்தில் இன்றையதினம் ஏராளமான தவறுகள் நடந்துகொண்டிருப்பதுபோலவும், அந்தத் தவறுகள் கணக்கு வழக்குகள் சம்பந்தப்பட்டது போலவும் அந்தப் பத்திரிகையிலே செய்தி வெளியிடப்பட்டிருப்பதைப் பார்த்தேன்.





ஒன்றை நாம் மறந்துவிடக்கூடாது. இந்தக் கமிட்டியின் அறிக்கை 1964-65 ஆம் ஆண்டினைப்பற்றிய அறிக்கை. அந்த நேரத்திலே நாங்கள் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தோம். 1963 ஆம் ஆண்டு என்று நான் கருதுகிறேன், நாங்கள் சட்ட மன்றத்திலே எதிர்க்கட்சி வரிசையிலே இருந்த நேரத்தில் இந்தத் துறையினுடைய அமைச்சராக கனம் வெங்கட்டராமன் அவர்கள் இருந்தார்கள். அப்பொழுது நண்பர் திரு. கே. எம். எஸ். அவர்கள் உறுப்பினராக இருந்தாரா இல்லையா என்பது கவனத்தில் இல்லை. (குறுக்கீடு) அப்பொழுது இல்லை. ஆனால் அதற்கு முன்பு சி.ஐ.டி. யாக இருந்த நேரத்தில் இருந்தார்கள். அந்த சி.ஐ.டி எப்படி உருவாக்கப்பட்டது, எப்படி ஹவுசிங் போர்டோடு இணைக்கப்பட்டது, அந்த நேரத்தில் யார் யார் உறுப்பினர்களாக இருந்தார்கள், அப்பொழுதெல்லாம் எப்படி நடந்தது என்கின்ற வரலாறு நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும். அந்த வரலாறு புரிந்த காரணத்தால்தான் நாங்கள் எதிர்க்கட்சி வரிசையிலே யிருந்த நேரத்திலே வீட்டு வசதி வாரியத்தைப்பற்றி ஒரு ஆண்டு கூட ஒரு அறிக்கைகூட இந்த மன்றத்திலே வைக்கவில்லையே என்ற பிரச்னையை எழுப்பினோம். அதைக்கேட்ட கனம் வெங்கட்ட ராமன் அவர்கள் உடனடியாக ஒரு குழுவைப் போட்டு ஒரு ரிப்போர்ட்டாவது தயார் செய்ய வேண்டுமென்று சொல்லி அதை அவையிலே வைத்தார்கள்.

சகோதரி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே தினசரி சட்டமன்றத்திற்கு வருகிறோம், ஏராளமான ரிப்போர்ட்டுகளை வைக்கிறீர்கள், அதை எடுத்துக்கொண்டு வீட்டிற்குப் போகிறோம் என்று சொன்னார்கள். அவர்கள் நீண்ட நாள் உறுப்பினர், நல்ல வழக்கறிஞர் என்று சொல்கிறார்கள், அவர்கள் அப்படிச் சொன்னார்கள். ஆனால் அவையிலே வைக்கும் எந்த ரிப்போர்ட்டின்மீதும் உறுப்பினர்கள் விரும்பினால் தாங்கள் அதன்மீது விவாதம் வேண்டுமென்று சபாநாயகருக்கு எழுதிக் கொடுத்து, பிசினெஸ் அட்வைசரிக் கமிட்டியிலே அவர்களுடைய தலைவர்களை வலியுறுத்தச் சொல்லி, விவாதத்தைக் கேட்கலாம். நாங்கள் எதிர்க்கட்சியிலே இருந்த நேரத்தில் . . . .

[1973 நவம்பர் 30

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நாங்கள் தீர்மானம் கொண்டு வந்து கேட்பதைக் காட்டிலும், அப்படியே நாங்கள் கொண்டு வந்தாலும் 174 பேர்களை நீங்கள் வைத்துக்கொண்டிருக்கும் பொழுது அந்தத் தீர்மானம் ஜெயிக்குமா தோற்குமா என்பதே சந்தேகம். Brutal majority is on your side. அரசாங்கமே பொறுப்பையெடுத்துக்கொண்டு செய்யக்கூடாதா? எலெக்ட்ரிசிட்டி போர்டுக்குச் செய்யவில்லையா? அதைப்போல செய்ய வேண்டுமென்று திரு. அரங்கண்ணல் அவர்கள் சொல்லி முயற்சித்தால் நல்லது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** இந்த அரசாங்கம் பொறுப் பேற்ற காரணத்தால்தான் இந்தக் கமிட்டியினுடைய ரிப்போர்ட் வைக்கப்படுறது. எந்த ரிப்போர்ட் வைக்கப்பட்டாலும் அந்த ரிப்போர்ட்டின்மீது விவாதம் எழுப்ப எந்த உறுப்பினருக்கும் உரிமை இருக்கிறது. நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தில் அந்த உரிமைகளை நன்கு படித்துப்பார்த்து விவாதம் வேண்டு மென்று எழுப்பும் வழக்கம் உண்டு. அந்த முறையிலே வெங்கட்ட ராமன் ரிப்போர்ட்டின்மீது விவாதம் வேண்டுமென்று கேட்டோம். எங்கள் தலைவர் மூலம் பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் கேட்கச் சொன்னோம். அந்த நேரத்திலே திரு. வெங்கட்டராமன் அவர்கள், இதற்காக விவாதம் வேண்டாம், கேள்விகளாகப் போடுங்கள் என்று சொன்னார்கள். நானும் ஏராளமான கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

இதை நான் சொல்வதற்குக் காரணம் என்னவென்றால், நாங்கள் எதற்காக விவாதம் வேண்டுமென்று எழுப்பினோம் என்றால், 1963 ஆம் ஆண்டிலே நான் சட்டமன்ற உறுப்பினராக வந்த நேரத்திலே, ஹவுசிங் போர்ட் நிர்வாகத்தைச் சீர்திருத்த வேண்டும், அங்குள்ள நிலைமைகள் ஆரம்பத்திலேயே ஒரு தினுசாக வந்து கொண்டிருக்கிறது, இப்படி 10 அல்லது 12 ஆண்டுகள் ஒரு தினுசாக வந்துவிட்டால் அதைச் செப்பனிடுவது கொஞ்சம் கடின மாக இருக்கும், எனவே இப்பொழுதே செய்ய வேண்டுமென்ப தற்காக எழுப்பினோம். அப்பாடி விவாதம் எழுப்புகின்ற நேரத்தில் பிறகு பார்க்கலாம் என்ற பதில் சொல்லப்பட்டது.



1973 நவம்பர் 30] [திரு. இராம. அரங்கண்ணல்]

இப்படிக் கேள்வி போட்ட நேரத்தில், 1963 இல் ரிக்கார்டுகள்
வைக்கப்பட்டிருந்த சி.ஐ.டி. கட்டிடமே எரிந்துவிட்டது. அது
திரு. கே. எம். எஸ். அவர்களுக்கும் தெரிந்திருக்கும். பிறகு
கணக்குகள் கேட்கப்பட்ட நேரத்தில் கணக்குகள் எரிந்துவிட்டன
என்று . . . .

THIRU K. M. SUBRAMANIAM : I don't want a brief for
Mr. Venkataraman's administration of C.I.T.

**திரு. இராம. அரங்கண்ணல் :** விஷயங்களை நீங்கள் ஒத்துக்
கொள்கிறீர்கள், நன்றி. பிறகு எரிந்துவிட்டதாகச் சொன்னார்கள்.
அது அப்படியே போய்விட்டது. நான் சொல்வது 1964-65-க்கு
முற்பட்ட வரலாற்றைச் சொல்கிறேன். இந்தக் கமிட்டி 1964-65 ஆம்
ஆண்டு உள்ள நிலைமைகளைப்பற்றி இந்த ரிப்போர்ட்டை சமர்ப்பித்
திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்ற பிறகு இன்றைய
தினம் வாரியங்கள் அமைக்கப்படுகின்றன, அந்த வாரியங்களிலே
சில காரணங்களுக்காக சில பேர்களைத் தலைவர்களாகப் போடு
கிறார்கள் என்று திரு. ஜேம்ஸ் அவர்கள் சந்தேகப்பட்டார்கள்.
இந்தச் சட்டம் வந்திருப்பதுகூட திராவிட முன்னேற்றக்
கழகத்தைச் சேர்ந்த யாராவது ஒருவரை சேர்மனாகப் போடு
வதற்குத்தான் இந்தச் சட்டமோ என்று சொன்னார்கள். நான்
பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன், நானும் ஒரு வாரியத்தில்
ஒரு பொறுப்பை ஏற்றிருக்கிறேன். நான் இதை ஏற்றிருக்கிறேன்
என்றால் ஏதோ ஒரு பதவி வேண்டும், அந்தப் பதவி இருந்தால்
தான் காலம் தள்ள முடியும் என்ற கருத்தில் அல்ல.

(நண்பகல் 12-00)

சகோதரி அனந்தநாயகி அம்மையாருக்கும் தெரியும்; மற்ற
வர்களுக்கும் தெரியும். நீண்ட நெடுங்காலமாக, 18 ஆண்டுக்
காலமாக குடிசைவாழ் மக்கள் மத்தியில் பணியாற்றிக் கொண்டு
வந்தவன் என்ற காரணத்தால், சென்னை மாநகரத்திலே இருக்கக்
கூடிய 1,200 குடிசைகளிலே 1,000 குடிசைகளையாவது பார்த்
திருப்பேன், விவரங்களைத் தெரிந்திருப்பேன் என்ற காரணத்
தாலும் குடிசைவாழ் மக்களுக்கு வேகமாக நல்ல காரியங்களைச்
செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு என்னைத் தலைவராகப்

போட்டார்கள். ஏதோ ஓரளவு நானும் ஒழுங்காக வேலை செய்வதாகத்தான் கருதிக் கொண்டிருக்கிறேன். உறுப்பினர்கள் குற்றங் குறைகளைச் சுட்டிக்காட்டினால் அதை நீக்க என்னுடைய தலைமையில் இயங்கும் வாரியம் எப்போதும் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, இப்படிப்பட்ட போர்டுகள், வாரியங்களை ஏற்படுத்திக் கொண்டே போவது நல்லதா என்ற கேள்வி எழுப்பப்பட்டது. திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசுகின்ற வேகத்திலேயே இப்படிப்பட்ட போர்டுகள் வைப்பது எதற்காக என்பது பற்றியும் ஒரு வார்த்தையைச் சொல்லிவிட்டுப் போய் விட்டார். சர்க்காருடைய ஸ்தாபனமாக இருந்தால் வெளியிலிருந்து பண உதவிகளைப் பெற முடியாது. போர்டாக இருந்தால் எல்.ஐ.சி. மூலமாகப் பண உதவி பெறலாம், வங்கிகள் மூலமாகப் பெறலாம்; நிதி உதவிக் கழகங்களின் மூலமாகப் பெறலாம். வேலைகள் துரிதமாக நடக்கும். இதை சர்க்காருடைய அங்கமாக வைத்து கலெக்டரைக் கொண்டு செய்தால் இவ்வளவு வேகமாகப் பணிகளைச் செய்ய முடியாது.

நம்முடைய திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் ஹவுசிங் போர்டின் எதிர்காலம் எப்படி இருக்குமோ என்று சொன்னார்கள். வெகு வெகு பிரகாசமாக இருக்கும், யாரும் கவலைப்பட வேண்டாம். 1967-க்கு பிறகு சென்னை மாநகர புறநகர்ப் பகுதிகள் எல்லாம் எந்த அளவுக்கு வீட்டு வசதியில் வளர்ந்திருக்கின்றன என்பதை வெளியிலே இருந்து வருகிறவர்கள் எல்லாம் பாராட்டுகிறார்கள். 1967-க்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்ற பிறகு சென்னை மாநகரத்திலே மட்டுமல்ல, மற்ற மாவட்டங்களிலும் செய்திருக்கும் பணிகள் சாதாரணமான பணிகள் அல்ல. என்னுடைய பழைய தொகுதி, அனந்தநாயகி அம்மையாருடைய புதிய தொகுதியிலுள்ள மயிலாப்பூர் பெசன்ட் நகர் இன்று கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. சுப்பு):** நான் முதலிலேயே சொன்னேன். ரெலவன்ட் டு தி பில் பேசவேண்டும்.



**திரு. இராம. அரங்கண்ணல்:** ரெலவன்ட் டு தி பில் பேச வேண்டுமென்றுதான் ஆசைப்படுகிறேன். நானும் சென்னை மாநகர உறுப்பினர் என்ற முறையில், பல கருத்துக்கள் ஏற்கனவே சொல்லப்பட்டதால் நானும் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். அதிக விளக்கத்திற்குச் செல்ல விரும்பவில்லை.

பல நல்ல திட்டங்களை வீட்டுவசதி வாரியம் நிறைவேற்றியது மட்டுமல்ல; ஒழுங்காக இல்லாத வரவு செலவுகளை எல்லாம் ஒழுங்குபடுத்தி இருக்கிறது. அதைச் செப்பனிடுவதற்காகத் தனி அதிகாரிகள் போடப்பட்டு அந்தக் காரியங்கள் துரிதமாக நடந்து கொண்டிருக்கின்றன. அதுமட்டுமின்றி இப்போது தலைமை தாங்கி நடத்துகிறவர்கள் மக்களை மாதாமாதம் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் சென்று சந்தித்து அந்தப் பகுதி மக்கள் குறைகளை எல்லாம் மனு நீதித் திட்டத்தின் வாயிலாகக் கேட்டு—சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைக்கிறார்கள். நாமும் போய்ச் சொல்லலாம்—மக்களுடைய குறைகளை, வீடு வைத்திருப்பவர்களுடைய குறைகளைக் கேட்டு உடனுக்குடன் அவற்றைத் தீர்க்க முயற்சி எடுக்கப்படுவது ஒன்று. இரண்டாவது, அவர்களுடைய கணக்கு எதுவும் சரியில்லை என்று அலுவலகத்திற்கு வந்தால் அவர்களுடைய கையெழுத்தைப் பெற்றுக் கொண்டு இரண்டு மூன்று தினங்களுக்குள் விசாரித்து பதில் அனுப்பப்படுகிறது. பதில் திருப்தி அளிக்கவில்லை என்றால் சேர்மனைப் பார்த்துப் பேசலாம் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கும் மேலாக நிதி இலாகாவில் இருந்து நல்லவர் ஒருவரைக் கொண்டு போய் கணக்கு அதிகாரியாகப் போட்டு எல்லாக் காரியங்களும் செம்மையாக நடத்தப்படுகின்றனவா என்றும் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இன்றைக்கு திட்டங்கள் ஏராளமாகப் போடப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருவதால் ஹவுசிங் போர்டின் எதிர்காலம் மிக மிக அருமையாக இருக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். உலகமே பாராட்டுகின்ற அளவுக்கு வீட்டு வசதி வாரியம் கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாக நல்ல பெயரைப் பெற்றிருக்கிறது. தொடர்ந்து அதிகமான நல்ல பெயரைப் பெற இருக்கிறது என்ற நம்பிக்கையையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. இராம. அரங்கண்ணல்] [1973 நவம்பர் 30

அடுத்து, இன்னொரு கருத்து சொல்லப்பட்டது. நடுத்தர மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான காரியங்கள் செய்யப்படுவதில்லை; பணக்காரர்களுக்குத்தான் வாய்ப்பாக இருக்கிறது, பணக்காரர்கள்தான் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் நன்மைகளைப் பெற முடிகிறது என்ற கருத்து சொல்லப்பட்டது. திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களும் சொன்னார்கள். கோட்டூர்புரத்தில் நிலம் பேரம் பேசி வாங்கப்பட்டதா என்றும் கேட்டார்கள். ஏழை எளியமக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு குறைந்த விலைக்குப் பேரம் பேசி வாங்கினால் கூட சங்கடம் ஏற்பட்டுவிடுகிறது. ஒரு காலத்தில் 1,400 ரூபாய் என்று கலெக்டர் நிர்ணயித்த விலைக்கு அதிகமாக 3,000 ரூபாய் வரை மயிலாப்பூர் பல்லக்கு மானிய நிலத்திற்குக் கொடுக்கப்பட்டது. பேரம் பேசித்தான் அந்த விலை நிர்ணயிக்கப்பட்டது. இன்றைய நிலையில் நிலத்தின் விலை அதிகமாக இருந்தாலும் பேரம் பேசி குறைந்த விலைக்கு வாங்கப்பட்டது. அதைப் பற்றியும் கேள்வி கேட்கிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தனி நபர்களிடம் பேரம் பேசி குறைந்த விலைக்கு வாங்கியிருந்தால் உண்மையிலேயே பாராட்டலாம். கோயில் போன்ற பொது ஸ்தாபனங்களிடமிருந்து, மக்களுடைய பணத்திலிருந்து நடத்தப்படக்கூடிய பொது ஸ்தாபனங்களுக்குரிய நிலத்தைக் கேட்பதற்கு ஆள் இல்லை என்ற நிலையில் குறைந்த விலைக்கு வாங்கிவிட்டதாகக் கூறுவதில் என்ன நியாயம் இருக்கிறது? என்னைப் போன்ற இந்துக்கள் இதை ஏற்றுக் கொள்ள முடியாது.

**திரு. இராம. அரங்கண்ணல்:** ஆண்டவனுடைய குழந்தைகளுக்காக நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் ஆலயத்தின் நிலங்கள் வாங்கப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய தொகுதியில் மூன்று, நான்கு திட்டங்கள் அருமையான திட்டங்கள். இனி நிலத்தின் விலையைப் பொறுத்தவரை கலெக்டர் என்ன விலை சொல்லுகிறாரோ அந்த விலைக்குத்தான் குடிசைமாற்று வாரியமும் வாங்க வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டு விட்டது. இனி எப்படி ஏழை மக்களுக்குக் காரியங்களைச் செய்யப் போகிறோம் என்று தெரியவில்லை.



1973 நவம்பர் 30] [திரு. இராம. அரங்கண்ணல்]

மயிலாப்பூரில் பெரிய பெரிய பங்களாக்கள் இருக்கின்றன. வீடு ஒரு கிரவுண்ட் அல்லது இரண்டு கிரவுண்டில் இருக்கிறது. பங்களாவைச் சுற்றி 100 கிரவுண்ட், 200 கிரவுண்ட் இருக்கிறது. இந்த கிரவுண்டுகளை எடுத்துக் காரியம் செய்யக் கூடாதா என்றால் அதை சர்வே செய்வதையே அப்போது இருந்தவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அப்படித் தனியாருக்கு சொந்தமான நிலங்களை எடுக்க இப்போது சட்டம் இல்லை. எடுப்பதற்குச் சட்டம் இருந்தால் அவற்றை எடுக்க இந்த அரசு தயங்காது. அப்படி எடுப்பதாக இருந்தால் நியாயமான தொகையை நிர்ணயிக்க வேண்டும். கலெக்டர், லாண்ட் அக்விசிஷன் ஆபீசர்தான் அந்தத் தொகையை நிர்ணயிக்கவேண்டும். அப்படி நியாயமான தொகையை எப்படி நிர்ணயிக்க வேண்டுமென்பதற்கு விதி முறைகள் இருக்கும் காரணத்தால் அந்த விதிகளின்படி கோட்டூர்புர நிலம் வாங்கப்பட்டிருக்கிறதே தவிர, வேறல்ல.

வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரை 'நோ லாஸ் நோ ப்ராபிட்'-டில்தான் பணியாற்றி வருகிறது. அண்மையில் வீட்டு வசதி அமைச்சர் ஏற்காட்டில் மாநாடு கூட்டி ஆலோசனை செய்தார்கள். சென்னை நகரம் போன்ற பகுதிகளில் இருப்பவர்களுடைய வீட்டுப் பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருக்கிறது. வீட்டு வசதி வாரியம் கட்டிக்கொடுத்த வீடுகளும் சேர்த்து 1,25,000 வீடுகள்தான் இருக்கின்றன. 25 லட்சம் பேருக்கு வீட்டு வசதி செய்துகொடுக்க வேண்டியிருக்கிறது. இதிலே வாடகைக்கு இருப்பவர்களுடைய தொல்லை, சங்கடம் தாங்கமுடியாத தொல்லை, சங்கடம். வாடகைக்கு இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்ற முறையில் வீட்டு வசதி வாரியம் ஏற்படுத்தப்பட்டு பணிகளை ஆற்றி வருகிறது. குடிசைவாழ் மக்களுக்கு நல்வாழ்வு கொடுத்துக் கொண்டிருக்கும் அதே நேரத்தில் அடுத்த கட்டமாக இருக்கின்ற நடுத்தர மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு என்ன செய்யலாமென்ற யோசனை செய்யப்பட்டு அதற்கான திட்டமும் தீட்டப்படுகின்ற நிலைமையில் இருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். எங்கே இடம் இருக்கிறது, எந்த இடத்தில் இருக்கிறது என்று திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் கேட்கிறார்கள் . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. சுப்பு):** அமைச்சர் அவர்களுக்கு அந்த வாய்ப்பை எல்லாம் கொடுத்துவிட்டு ரெலவண்ட் டு தி பில் மட்டும்தான் நீங்கள் பேச வேண்டும்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரிய மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். புதிதாகச் சேர்மனைப் போடும்போது நான்-அபிஷியலைப் போடலாம் என்று இருக்கிறது. இதை நாங்கள் எதிர்க்காமல் இருக்க முடியாது. ஆட்சியிலே இருப்பவர்கள் யாரைப் போடுவார்கள், இது கட்சிப் பிரச்சினையா, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களைப் போடுவதற்குச் சாதகமாக இருக்காதா என்பதால் மட்டுமல்ல. இது சிட்டி இம்ப்ருவ்மெண்ட் டிரஸ்டாக இருந்தது இன்றைக்கு ஹவுசிங் போர்டாக மாறி பலருக்கு வீட்டு வசதி செய்து கொடுத்துவிட்டதாகப் பெருமை பேசப்படுகிறது. நான்-அபிஷியலைப் போட்டால் கண்டிப்பாக அதிலே அதிகப்படியான தகராறுகள் ஏற்படும். அந்தச் சூழ்நிலை ஏற்படாமல் இருப்பதற்கு அபிஷியலைப் போடுவதுதான் ஒழுங்கானதாக இருக்கும், முறையானதாக இருக்கும். அபிஷியல்ஸ் அரசுக்குக் கட்டுப்பட்டும் பொதுமக்கலிக்குப் பாரபட்சமின்றியும் இருப்பார்கள்.

அவர்கள் அரசாங்கத்திற்கும் பதில் சொல்ல வேண்டியிருக்கும், பொதுமக்களுக்கும் பதில் சொல்லவேண்டியிருக்கும் என்ற அப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கும். சேர்மனைப் போடக் கூடியவர் அபிஷியலைத் தவிர நான்-அபிஷியல் இருக்கக்கூடாது என்ற என் கருத்தை நான் இங்கு வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன்.

சிட்டி இம்ப்ருவ்மெண்ட் ட்ரஸ்ட் ஆக இருந்தபோது எப்படியெல்லாம் நடந்தது என்று எங்களுக்குத் தெரியும் என்று மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. அரங்கண்ணல் அவர்கள் கூறினார்கள். எப்படி நடந்தது என்பது எனக்கும் நன்றாகத் தெரியும். முதலாவதாக ரெசல்யூஷன் ஒன்று இருந்தது. முதலாவதாக, வீடு இல்லாதவர்களுக்கு சி.ஐ.டி. மூலம் வீடு கொடுக்க வேண்டும். இரண்டாவதாக, லோ இன்கம் க்ரூப்பில் உள்ளவர்களுக்கு வீடுகள் கொடுக்கப்பட வேண்டும் State Government Servants பிறகு Central Government Servants அதற்குப் பிறகு மிடில்



இன்கம் க்ரூப்பில் உள்ளவர்களுக்கு வீடுகள் கொடுக்கப்பட வேண்டும். அதற்குப் பிறகு டாக்டர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். அதற்குப் பிறகு வக்கீல்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். அதன் பிறகு மிச்சம் மீதி இருந்தால் மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். அதில் சினிமாத் துறையைச் சார்ந்தவர்களுக்கு, அதாவது நடிகர் நடிகைகளுக்குக் கொடுக்கவே கூடாது' என்று ஒரு ரெசல்யூஷன் இருந்தது கனம் உறுப்பினர் அரங்கண்ணல் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** அப்படி ஒரு விதி இருந்திருக்கலாம். ஆனால் மைலாப்பூர் பகுதியில் ஏற்படுத்தப்பட்ட சிட்டி இம்ப்ருவ்மெண்ட் ட்ரஸ்ட் நகரில் எவ்வளவு சினிமாக்காரர்களுக்கு க்ரவுண்ட்ஸ் விற்கப்பட்டன என்று தெரியுமா?

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** அவை தனிப்பட்ட முறையில் விற்பனை செய்யப்பட்டவை. ஆனால் சி.ஐ.டி. மூலம் அவை விற்கப்படவில்லை என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

I am confining myself to the subject but I have to deviate sometimes because other hon. Members have already spoken outside the subject.

ஏலம் போடுவதனால் ஏற்படுகிற குறைபாடு என்னவென்றால் எல்லா நிலங்களுக்கும் விலை அதிகமாகப் போய்விட்டது அதன் காரணமாக. அதனால் ஏழை மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். முன்பு ஆர்டிசான் ஸ்கீம் என்று ஒன்று இருந்தது. அதன்படி நிலம் கொடுத்தோம். பிறகு அவர்களுக்குக் கட்டிக் கொள்ள வசதி இல்லை. பக்கத்திலுள்ள நிலங்களை எல்லாம் ஆக்ஷன் போட்டு விற்ற காரணத்தால், ஹௌசிங் போர்ட் ஆக்ஷன் போட்டு என்ன விலை வந்ததோ அதற்கு அதிகப்படியான விலைக்கு விற்கவேண்டிய நிலை ஏற்பட்டது, ஏற்படுகிறது. இன்று நிலம் வாங்கினால் வீடு கட்டிக்கொள்ளமுடியாத ஒரு நிலை இருக்கிறது. ஹௌசிங் போர்ட் ஏலம் போடுகின்ற நிலங்களை வாங்குவது என்பது வசதி படைத்தவர்களும் ஏற்கனவே வீடு உள்ளவர்களும் வாங்கக் கூடிய ஒரு நிலைமையை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். ஆகவே தனிப்பட்டவர்களிடமிருந்து நெகோஷியேஷன் மூலம் வாங்கினாலும் சரி அல்லது ரெவின்யூ போர்ட் மூலம் வாங்கினாலும் சரி நிலங்களுக்கு ஒரு

[திருமதி ஜோதி வெங்கடாசலம்] [1973 நவம்பர் 30

விலை நிர்ணயித்துவிடுங்கள். இந்த இந்த இடங்களிலுள்ள நிலங்கள் இவ்வளவு இவ்வளவு விலைக்குத்தான் விற்கப்பட வேண்டும் என்ற ஒரு நிலையை ஏற்படுத்திவிட்டால் இப்படிப்பட்ட இடையூறுகள் ஏற்படாமல் இருக்கும்.

குடிசைவாழ் மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்திருப்பது பற்றி என்னை விட பெருமையும் சந்தோஷப்படுகிறவர்களும் வேறு யாரும் இருக்கமுடியாது என்று நினைக்கிறேன். காரணம் அந்தக் குடிசைவாழ் மக்களுக்காக நாங்கள் தொடர்ந்து பல ஆண்டுக் காலமாக பாடுபட்டு வருபவர்கள். கனம் உறுப்பினர் திரு. அரங்கண்ணல் அவர்கள் கூறினார்கள். குடிசைவாழ் மக்களுக்காக வீடுகள் கட்டிக்கொடுத்திருப்பது அவை எவ்வளவு அழகாகக் காட்சியளிக்கின்றன என்று. அங்கு ஏன் ஒரு சானிடேஷன் கமிட்டி போடக்கூடாது? கட்டி முடித்துக் கொடுத்தவுடன் உங்கள் பொறுப்பு தீர்ந்துவிட்டதா? அங்கு வீடுகட்டிக்கொண்டிருப்பவர்கள் வீடுகட்டிக் கொண்டு உள்ளே இருக்கிறார்கள். ஆனால் சுற்றுப்புறங்களில் உள்ள இன்சானிட்டரி கண்டிஷனை கவனத்தில் எடுத்துக்கொண்டு பார்க்கவேண்டும்.

மெம்பர்ஸ் போடுவதுபற்றிச் சொன்னார்கள். கண்டிப்பாக சட்டசபையிலுள்ள ஒரு உறுப்பினரையும், மேலவையில் உள்ள ஒரு உறுப்பினரையும் போட்டாகவேண்டும். யாரைப் போடுவார்களோ அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. அவர்களைப் போட்டால் மக்கள் பிரதிநிதிகள் என்ற முறையில் அரசுக்கு ஆலோசனைகள் கூற சந்தர்ப்பம் ஏற்படும் என்று கூறி இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, இந்த மசோதாமீது மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர்கள் தங்கள் கருத்துக்களை எல்லாம் மிகத் தெளிவாக எடுத்து விளக்கியுள்ளார்கள்.

இதில், திரு. கணபதி அவர்கள் தலைமையில் அமைந்திருக்கிற பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்திருப்பதையொட்டி திரு. தங்கமணி அவர்கள் சில கேள்விகளை எழுப்பியிருக்கிறார்கள் இந்த அவையின் முன்னால். இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் இந்த வாரியத்தின் தலைவர்



1973 நவம்பர் 30] [திரு. க. இராசாராம்]

ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீசராக இருக்கவேண்டும், மற்ற அரசு சார்பில்லாத இருவர் பேரவை மூலம் தேர்ந்தெடுக்கப்படவேண்டும், இன்னொருவர் சட்டமன்றத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடுவதுதான் இந்த மசோதாவின் முக்கிய தாத்பரியம்.

இந்த மசோதாபடி தற்போதுள்ள நிலையில் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரிதான் தலைவராக நீடிப்பார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அது நிரந்தரமானதல்ல. அது எப்போது வேண்டுமானாலும் மாற்றிக்கொள்ளக்கூடிய ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு முன்னால் இருந்த ஆட்சியில் திரு. பூவராகமூர்த்தி தலைவராக இருந்தார்கள். எப்படி இந்த ஹௌசிங் போர்ட் நடத்தப்படவேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறதோ அந்த வகையில் காரியங்கள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் இதில் பிரதிநிதிகளாக இருக்க வேண்டுமென்று திரு. கே. எம். எஸ். அவர்களும் மதிப்பிற்குரிய அம்மையார் அவர்களும் கருத்து தெரிவித்தார்கள். அம்மையார் அவர்கள் இரண்டு பேர்களுக்கு இடம் கொடுத்துவிடவேண்டுமென்று சொன்னார்கள். இப்போதுதான் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் கிராமங்களுக்குப் போகிறது என விளம்பரங்கள் செய்து கொண்டிருக்கிறோம். எல்லாவற்றையும் சென்னை நகருக்குக் கொண்டுவருவது என்பது கடினமான காரியம் என்பதை ஜேம்ஸ் அவர்கள் சுட்டிக்காட்டி இவ்வளவு ஆண்டுகளாக இல்லாமலிருந்து இப்போதுதான் வீட்டுவசதி வாரியம் மற்ற மாவட்டங்களுக்கு வருகிறது என்று சுட்டிக்காட்டினார்கள். நாட்டு வளத்தைக் கருதியும், நாட்டு மக்கள் எல்லோருடைய தேவைகளைக் கருதியும் காரியங்களை மேற்கொள்ள வேண்டுமென்று வீட்டு வசதி வாரியம் தன் வேலைகளைச் செய்துகொண்டுவருகிறது. திரு. கணபதி அவர்கள் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1964-65-ம் ஆண்டுக்கான கணக்குகள்தான் பரிசீலிக்கப்பட்டன. ஆகவே அதிலுள்ள குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டு, அவற்றை எந்தெந்த வகைகளில் நிறைவு செய்யவேண்டுமென்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அந்த அறிக்கை வருவதற்கு முன்னதாகவே, பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி அங்கு போவதற்கு

[திரு. க. இராசாராம்] [1973 நவம்பர் 30

முன்னதாகவே, இப்போதுள்ள வீட்டு வசதி வாரியத் தலைவர் அவர்களும் நாங்களும் சேர்ந்து பேசி இந்தக் கணக்குகளை சரியாகப் பரிசீலிக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் நாங்கள் பல காரியங்களை மேற்கொண்டிருக்கிறோம்.

1964-65-ம் ஆண்டுக் கணக்கு முடிவடையப்பட்டு விட்டது. மேலும் நான்காண்டு கணக்குகள் பரிசீலிக்கப்பட்டு அது தயாராக இருக்கிறது. ஆடிட் செய்து முடிவாகிவிட்டது. 1968-69 வரை கணக்குகள் முடிவு செய்யப்பட்டு பரிசீலிக்கப்பட்டு தயாராகயிருக்கிறது. 1965-66, 1967-68 கணக்குகள் ஆடிட் செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டு விட்டன. 1968-69 கணக்குகள் முடிவு எடுக்கப்பட்டு லோக்கல் பண்ட் எக்சாமினருக்கு பரிசீலனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. 1969-70 கணக்குகள் முடிவாக்கப்பட்டு ஏ.ஜி. அலுவலகத்தில் ஆய்வில் வைக்கப்பட்டிருக்கிறது. ஆக, கணக்குகளைப் பொறுத்தவரையில் எவ்வளவு வேகத்தில் அவைகளை பரிசீலிக்கவேண்டுமோ அவ்வளவு வேகத்தில் பரிசீலிக்கப்பட்டு குறைகள் களையப்பட்டு வருகின்றன. 1970-71, 1971-72, 1972-73-ம் ஆண்டு கணக்குகள் தயாராகயிருக்கின்றன. ஆடிட் போன்றவை செய்ய கணக்குகள் தயாராகயிருக்கின்றன. ஆக, கணக்குகளில் உள்ள குறைபாடுகள் வேகமாக நீக்கப்பட்டு வருகின்றன. இதில் பாக்கி வரவேண்டியது கொஞ்சம் இருக்கிறது. பாலன்ஸ் ஷீட்டைப் பார்த்தால் 1—4—1973 வரையில் 155 லட்சம் ரூபாய் பாக்கி இருந்தது. 30—3—1973 வரை 37 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு, பாக்கியிருக்கிறது என்பதை சொல்லிக்கொள்கிறேன். இந்த அளவிற்கு அதிலேயுள்ள வசூல் பாக்கியை வேகமாக வசூலிக்க வேண்டும் என்பதற்காக தற்பொழுது 6 அக்கவுன்ட்ஸ் ஆபிசர்ஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏறக்குறைய 15 இடங்களில் வாடகையை வசூலிக்கின்ற நிறுவனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு இன்றைக்கு பாக்கிகள் வேகமாக வசூலிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு, வீடுகள் புறநகர்ப் பகுதிகளிலேதான் கட்டப்படுகின்றன. உறுப்பினர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் கார்ப்பரேஷனிலே இருக்கிற வீட்டு மேற்பார்வையாளர்களுக்கு என்னென்ன வகைகளிலே வீடுகள் கட்டுகிறோம் என்று டவுன்



1973 நவம்பர் 30] [திரு. க. இராசாராம்]

பிளானிங் ஆபீசருக்கு வைத்தால் என்ன என்றார். வீட்டு வசதி வாரியத்திலேயே அப்படிப்பட்ட அதிகாரிகள் இருக்கிறார்கள். நாம் வீட்டு வசதி வாரியங்களினால் கட்டப்படும் வீடுகள் புறநகர்ப்பகுதியான அண்ணா நகர், சாஸ்திரி நகர், இந்திரா நகர் போன்ற இடங்களிலேதான் நிர்மாணிக்கப்படுகின்றன. அவைகளை நல்ல நகரமாக அமைத்து அதற்குப் பிறகு தான் அவைகளை நாங்கள் கார்ப்பரேஷனுக்கு தருகிறோம். ஆகவே, இவை எல்லாம் மாநகராட்சியிலே எவ்வளவு வேகமாக நடைபெறுகின்றன என்பதை உறுப்பினர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் என்னைவிட நன்றாக அறிவார்கள்.

ஒவ்வொரு இடத்திலேயும் திட்டங்கள் போடும் பொழுது டவுன் பிளானிங் சட்டத்தின்படி தான் செய்கிறோம். 10 ஆயிரம், 20 ஆயிரம் ரூபாயிலிருந்து 80 ஆயிரம் ரூபாய் வரை கட்டப்படுகின்ற ஒவ்வொரு வீட்டிலேயும் இரண்டு, நான்கு அல்லது ஐந்து மாடல் என்று எங்களுடைய பொறியாளர்கள் மிகச் சிறப்பான வகையிலே திட்டங்களை தீட்டி வைத்திருக்கிறார்கள். அவை அங்கீகரிக்கப்பட்டு திட்டங்கள் தீட்டப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன். அதோடு புறநகர்ப்பகுதிகளிலே எந்தெந்த வகையிலே வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன, அங்கே தெருக்களிலே பஸ் போக்குவரத்திலே குறைபாடு இருக்கிறதா, பாதைகளிலே குறைபாடு இருக்கிறதா, குடி தண்ணீர் வழங்குவதிலே குறைபாடு இருக்கிறதா, மின்சாரம் வழங்குவதிலே குறைபாடு இருக்கிறதா என்று அறிந்து முடிந்தவரையில் குறைகள் நீக்கப்பட்டு வருகிறது.

அப்படி கவனிக்கும் பொழுது இப்பொழுதிருக்கும் வீட்டு வசதி வாரியத் தலைவர் அவர்கள் "மாஸ் கான்டாக்ட் புரகிராம்" என்ற ஒரு திட்டத்தை உருவாக்கி, அந்த வகையிலே அதை நான் அசோக் நகரிலே ஆரம்பித்து வைத்திருக்கிறேன். ஆக, அது நல்ல முறையிலே இன்றைக்கு செயல்பட்டு வருகிறது என்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.

வீடுகளை பெறுவதிலே ஏழைகள் கவனிக்கப்படவில்லை, புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள்; அதிகாரிகளும், அரசுக்கு வேண்டியவர்களும்தான் வீடுகளையும், நிலங்களையும் பெற்றிருக்கிறார்கள் என்று திருமதி அனந்தநாயகி இங்கே சுட்டிக்காட்டினார்கள்.

[திரு. க. இராசாராம்] [1973 நவம்பர் 30

வீட்டுவசதி வாரியத்திலே ஒரு திட்டம் அமல்படுத்தப்பட்டிருக் கிறது ; அதன்படி ஷெட்யூல்ட்டு கேஸ்ட்ஸ், ஷெட்யூல்ட்டு டிரைப்ஸை சேர்ந்தவர்களுக்கு 10 சதவிகிதம் ஒதுக்கப்படுகிறது ; அதைப்போலவே மாநில அரசு ஊழியர்களுக்கு 18½ சதவிகிதம் ஒதுக்கப்படுகிறது. அதைப்போலவே மத்திய அரசு ஊழியர்கள், ஹௌசிங் போர்டு, மின்சார போர்டு, லோகல் பாடிஸ் ஊழியர் களுக்கு 18½ சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது ; சலவைத் தொழிலாளர்கள், சவரத் தொழிலாளர்களுக்காக 5 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது ; மற்றும் பொதுமக்களுக்கு 48 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே, இதிலே ஏழை பணக்காரர் என்ற பிரச்சினை வருவதில்லை என்பதைச் சுட்டிக் காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, அடிக்கல் நாட்டப்பட்டு வீடுகள் கட்டப்படாத இடம் அப்படியே இருப்பதாகச் சொன்னார்கள், திரு. கே. எம். சுப்பிர மணியம் அவர்கள். அதற்காக அவர்கள் குறைபட்டுக்கொண் டார்கள். இந்த ஹவுசிங் போர்டைப் பொறுத்தவரையில் அம்மாதிரியான காரியங்களைச் செய்வது கிடையாது. ஏறக்குறைய அஸ்திவாரம் மேலே வந்ததற்குப் பிறகுதான் நான் அடிக்கல் நாட்டு விழா செய்துகொண்டிருக்கிறேன். எனவே, அந்த வகை யிலே எதுவுமே உறுப்பினர் சொன்னதைப் போல் இல்லை என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னமும் தொழிலாளர்களுக்காக இன்றைக்கு தனியாகவே ஒரு காரியம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்களுக் கெல்லாம் " சப்சிடைஸ்டு இன்டஸ்ட்ரியல் ஹௌசிங் ஸ்கீம் டெனமென்ட்ஸ் " என்ற வகையிலே விருதுநகரிலே 116 வீடுகளும், சிவகாசியிலே 156 வீடுகளும், சத்தியமூர்த்தி காலனியிலே 406 வீடுகளும், சர்மா நகரிலே 450 வீடுகளும், திரு.வி.க. நகரிலே 544 வீடுகளும், ஆக மொத்தம் 1,672 வீடுகள் கட்டப்பட்டிருக் கின்றன.

அதைப் போலவே, பசுமலையிலே 200 வீடுகளும், சிங்கா நல்லூரிலே 350 வீடுகளும், மீளமேட்டிலே 104 வீடுகளும், திருப் பூரிலே 168 வீடுகளும் தொழிலாளர்களுக்காக கட்டப்பட்டிருக் கிறது.



1973 நவம்பர் 30] [திரு. க. இராசாராம்]

அதோடு மட்டுமல்லாமல், தொழிலாளர் தலைவர்கள் வீடுகள் வேண்டுமென்று வற்புறுத்தியதன் பேரில் இன்றைக்கு பல தொழிற்சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர் தலைவர்கள் வீடுகளை கட்டிக் கொள்ள முன்வந்திருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்வேன். உங்களுக்கு இன்னும் சொல்லப் போனால், எஸ். எம். நாராயணசாமியைச் சேர்ந்த தொழிற் சங்கமானாலும் சரி, மா. வே. நாராயணசாமியைச் சேர்ந்த தொழிற் சங்கமானாலும், குசேலர் அல்லது சிந்தன் அவர்கள் நடத்தும் தொழிற் சங்கமானாலும் வீடுகளை கட்டிக் கொள்ள முன் வந்திருக்கிறார்கள். அதற்கான திட்டங்களை வீட்டுவசதி வாரியம் தயாரித்துக் கொண்டிருக் கிறது.

அடுத்து பெரிய வசதியான வீடுகள் என்ற கருத்தைக் குறிப் பிட்டார்கள் இங்கே. வசதியான வீடுகள் பெசன்ட் நகரிலே 60,000 வீடுகள் கட்டப்பட்டிருக்கிறது. 3 படுக்கைகள் கொண்ட வீடுகள் 100 தான் கட்டப்பட்டிருக்கிறது. ஆயிரம் பணக்கான வீடுகளிலே பெரும் தொகையை ஒதுக்கவில்லை. அநேகம் பேருக்கு முழு தொகையை வாங்கிய பிறகு தான் வீடுகளை கட்டித் தருகிறோம். அந்த தொகை வந்தால் எல்.ஐ.சி.யிலே கடன் வாங்க வசதியாக இருப்பதால் அந்தத் திட்டத்தை இங்கே குறிப் பிட்டேன்.

அதோடு, " லோ காஸ்ட் ஹௌசிங் ஸ்கீம் " என்ற திட்டத்தின் கீழ் 10,000 ரூபாய்க்கு ஒரு வீடு என்று திட்டமிட்டு 3,000 வீடுகளை 3 கோடி ரூபாய்க்கு திட்ட மதிப்பீடு போட்டு வீடுகள் கட்டித்தர நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதற்கு தமிழகத்திலே நல்ல ஆதரவு இருக்கிறது. இதிலே 1,500 வீடுகள் அநேகமாக பொங்கல் பரிசாக பல்வேறு மாவட்ட தலைநகரங் களிலே கட்டப்பட்டு தரவிருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதோடு அம்மையார் அவர்கள் இந்த வாரியங்களிலே அரசியல் விளையாடுகிறது என்றார்கள். எனவே, வாரியங்கள் எதற்கு, வாரியத் தலைவர்கள் எதற்கு என்று வேறு கேட்டார்கள். எனக்கே கூட அவர் கேட்டது ஆச்சரியமாக இருந்தது. மத்திய அரசிலே கூட ரெயில்வே போர்டு, டூரிசம் அன்ட் கார்ப்பரேஷன் போன்ற வாரியங்கள் இருக்கத்தான்

செய்கின்றன. இவைகள் எல்லாம் அம்மையார் அவர்கள் சேர்ந்திருக்கின்ற ஆளும் காங்கிரசின் மத்திய அரசிலேதான் இருக்கின்றன. அதனை அம்மையார் அவர்கள் அறிவார்களோ என்னவோ அது எனக்குத் தெரியாது.

எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் வாரியத் தலைவர்களோடு— அது அதிகாரியாக இருந்தாலும், அதிகாரமற்ற வாரியத் தலைவராக இருந்தாலும் சரி—அவர்களோடு கலந்து பேசி இந்தக் காரியங்களை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக தமிழகத்திலே தான் இன்றைக்கு இந்த வீடுகள் கட்டுவதிலே எல்லா மாநிலங்களைக் காட்டிலும் முன்னால் நிற்க முயற்சி நடந்து கொண்டிருக்கிறது. இப்பொழுது குஜராத்துக்கும் நமக்கும் போட்டி நடந்து கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே அந்த மாநிலம்தான் இன்றைக்கு முதலிடம் வகிக்கிறது. அங்கே நிலையான அரசு இல்லை. ஆனால் இங்கே நிலையான அரசு இருப்பதால் இன்றைக்கு இந்தியாவிலேயே அதிகமான வீடுகளை கட்டித் தருவது தமிழக வீட்டுவசதி வாரியம் என்பதை உருவாக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, திட்டங்கள் விரைவாகவும், வேகமாகவும் நடைபெற வேண்டும் என்பதற்காகவும், இதிலே காணப்படும் குறைகள் களையப்பட வேண்டும் என்பதற்காகவும்தான் இந்த மசோதாவை நாங்கள் இந்த அவையின் முன்னால் வைத்திருக்கிறோம்.

அதோடு திரு. ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள், வாரியத்தின் தலைவர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாகத்தான் இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதற்கான விளக்கத்தை நான் தந்திருக்கிறேன். எனவே, இந்த மசோதாவை ஏகமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

(பிற்பகல் 12-30)

THIRU K. M. SUBRAMANIAM: On a point of clarification, Sir. These Rs. 10,000 worth houses are proposed to be constructed by the Housing Board. May I know whether they are going to construct such houses in the City of Madras also because there are



so many people who do not live in huts but who live in small portions paying Rs. 50 or Rs. 60 as rent and their income is less than Rs. 200 per mensem. Is there any proposal to construct these Rs. 10,000 worth houses to such of those people? If so, may I know the advance they have to pay. They cannot afford to pay Rs. 7,000 or Rs. 8,000 initially.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, 10,000 ரூபாய் வீட்டிற்கு ஏறக்குறைய 400 சதுர அடி தேவைப்படுகிறது. இதுவரையில் இது போன்று வீடுகள் கட்டிக்கொண்டிருக்கிறோம். இதற்காக ஒரு திட்டம் போட்டு திட்டத்தின் அடிப்படையில் லாபம் என்னவென்றால் மற்றவர்களுக்கெல்லாம் செண்டேஜ் சார்ஜ் என்பது 12 சதவீதம் வசூலித்துக்கொண்டிருக்கிறோம். ஆனால், ரூ. 10,000 செலவில் வீடுகள் கட்டிக்கொண்டிருப்பவர்கள் நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள், ஏழை மக்களாக இருக்கிறார்கள், சராசரி வருமானமுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்ற எண்ணத்தில், பொறியாளர்களோடு கலந்து பேசி, 6¼ சதவிகிதம் செண்டேஜ் வாங்கிக்கொண்டால் போதும் என்று அம்மாதிரி வசூலித்துக்கொண்டிருக்கிறோம்.

மாவட்ட தலைநகர்களிலே அப்படிப்பட்ட வீடுகள் கட்டுவது எங்களுக்கு வசதியாக இருக்கிறது. ஏனென்றால், சென்னையிலே உள்ள குறைபாடு என்னவென்று கேட்டால், நிலத்தினுடைய விலை அதிகமாக இருக்கிறது. நிலத்தினுடைய விலையை நாங்கள் அதிகப்படுத்திவிட்டோம் என்று கூட சொல்கிறார்கள். இப்பொழுது தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டுகின்ற இடங்களில் தொழிலாளர் தலைவர்களுக்குச் சொன்னேன். நாமாக வந்து, வீட்டு வசதி வாரியம் நிலத்தை விலைக்கு வாங்கினால், விலை அதிகமாகக் கூறிக்கொண்டிருக்கிறார்கள். மேலும் அந்த நிலத்தை வாங்குவதில் ஏதோ கையூட்டு வாங்குவதாகவும் பேசப்படுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட குறைபாடுகள் ஏற்படாத வகையில் தொழிலாளர் தலைவர்களோ, வங்கிகளோ அல்லது மற்ற நிறுவனங்களோ 100, 150 பேர்கள் சேர்ந்து வேண்டிய நிலத்தை வாங்கி விடுங்கள் என்று சொன்னேன். நிலத்தை வாங்கிய பிறகு நம்முடைய அதிகாரிகளை, பொறியாளர்களை அனுப்பி, டவுன் பிளானிங் திட்டப்படி அந்த நிலத்தைப் பங்கு போட்டு, அதில் வீடுகளை கட்டித் தந்துவிடலாம் என்று அவர்களிடம் எடுத்துச்

[திரு. க. இராசாராம்] [1973 நவம்பர் 30

சொன்னேன். பல பேர்கள் அதைப்போல நிலத்தை வாங்கி எங்களிடம் தந்து கொண்டிருக்கிறார்கள். அதில் தடை ஏதும் இல்லை.

சென்னை நகரத்தில் மவுண்ட் ரோட்டில் இடம் வேண்டுமென்றால், அதுவும் சென்னை நகரத்தில் குறைவான விலைக்கு வேண்டுமென்றால் அது நடக்காத காரியம். அதைப்போலவே சென்னை நகரத்தில் 10,000 ரூபாய் பெறுமான வீடுகள் கட்டுவது என்பதும் கடினமான காரியம் என்பதை திரு. கே. எம். எஸ். போன்றவர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன். ரூ. 10,000-ல் ஃப்ளாட் சிஸ்டத்தில் கோட்டூர்புரத்தில் வீடுகள் கட்டியிருக்கிறோம். ஏறத்தாழ 100 வீடுகளுக்கு மேலாக கட்டப்பட்டிருக்கிறது. முதல் தவணையாக ரூ. 1,000 கொடுத்தால் போதும். மீதியை ரூ. 60, 70 மாதத் தவணையில் கொடுத்து 20 ஆண்டுகளுக்குள் வீட்டை சொந்தமாக்கிக்கொள்ளலாம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(திரு. எம். சுரேந்திரன் எழுந்திருந்தார்.)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. சுப்பு):** நீங்கள் பேசவில்லையா?

**திரு. எம். சுரேந்திரன்:** இல்லை. தொழிலாளர்களுக்கு சப்ஸிடி அளித்து வீடுகள் கட்டுவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். தொழிலாளர்களுக்கு அம்மாதிரி மான்யம் அளிப்பதிலே பரவலாக செய்யப்பட்டிருக்கிறதாக அல்லது ஏதோ குறிப்பிட்ட இடங்களுக்கு மட்டும் செய்யப்பட்டிருக்கிறதாக மான்யம் அளிப்பதாக இருந்தால் என்ன முறையில் அவர்கள் உங்களை அணுக வேண்டும் என்பதை அமைச்சர் அவர்கள் சொன்னால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** சப்ஸிடி கொடுத்து, சலுகைகள் அளிக்கப்பட்டு தொழிலாளர்களுக்காகக் கட்டப்படுகின்ற வீடுகள் தொழில் நிறுவனங்களுக்கு பொருத்தமாக இருக்கும். தொழில் நிறுவனங்களுக்குச் சொந்தமாக இருக்கும். தொழிலாளர்கள் வாடகைக்குக் குடியிருக்கவேண்டும். தொழிலாளர்களுக்குச் சொந்தமாக வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டுமென்றால், அவர்கள் ஒரு காலனி அமைத்து, ஒரு இடத்தை



1973 நவம்பர் 30] [திரு. க. இராசாராம்]

வாங்கிக் கொடுத்தால், அதிலே நாங்கள் வீடுகள் கட்டித் தருவதற்குத் தயாராக இருக்கிறோம். பெரும்பாலும் வாடகைக்கு இருப்பதற்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு ஒரு திட்டம் போடப்பட்டிருக்கிறது.

நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டவேண்டுமென்ற திட்டத்தை, டாக்டர் ஹாண்டே அவர்கள் என்னிடத்திலே அப்படிப்பட்ட ஒரு எண்ணத்தை எடுத்துச் சொன்னார்கள். சென்னையில் இருக்கிற சௌராஷ்டிரா நெசவாளர்களுக்கும், சேலத்தில் இருக்கிற தேவாங்கு நெசவாளர்களுக்கும், சேலத்தில் இருக்கிற முதலியார் நெசவாளர்களுக்கும், தஞ்சாவூரில் இருக்கிற சௌராஷ்டிரா நெசவாளர்களுக்கும், அருப்புக்கோட்டையில் இருக்கும் தேவாங்கு நெசவாளர்களுக்கும், இவர்களுக்கெல்லாம் வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று ஒவ்வொரு அங்கத்தினரும் ஆங்காங்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு, நெசவு போடுவதற்கு ஏற்ற தன்மையில் ஒரு அறை வைத்து வீடுகள் கட்டுவதற்கு அந்தந்த ஊரில் கிடைக்கின்ற பொருள்களை வைத்துக்கொண்டு ஆங்காங்கு வீடுகள் கட்டுவதற்கு ரூ. 4,000, ரூ. 4,500-ல் திட்டம் போடப்பட்டிருக்கிறது. ரூ. 4,000, 4,500-ல் கட்டுவது ஏனென்றால் 20 ஆண்டு காலத்திற்குள் அவர்கள் திருப்பித் தருவதற்கு வசதியாக இருக்கிறது. முதல் தவணையாக ரூ 500 தாருங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். ரூ. 500 கேட்டதற்குக் காரணம், அப்பொழுதுதான் மாதத்திற்கு ரூ. 20, ரூ 24-க்கு உள்ளாக மாதத் தவணையில் அவர்களால் திருப்பித் தரமுடியும், 20 ஆண்டு காலத்திற்குள் திருப்பித் தர முடியும்.

சென்னையிலே இருக்கிற சௌராஷ்டிரா நெசவாளர்கள் சென்னைக்கு வெளியிலே இருக்கிற நிலத்தை வாங்குவதற்கு முன்வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு அப்படிப்பட்ட இடம் மிகக் குறைவாக கிடைக்கிறது. அப்படிக் குறைவான விலைக்கு வாங்கின இடத்தில் நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்கு வீட்டு வசதி வாரியம் முன்வந்திருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. சுப்பு) :

பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1973-ம் ஆண்டு, மாநில வீட்டுவசதி வாரிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 30/73) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. சுப்பு) : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 2 இந்த மசோதாவுக்கு உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

THIRU K. M. SUBRAMANIAM : Sir, in spite of the Hon. Minister's assurance I am very sorry that I have to press the amendment.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. சுப்பு) : முதலில் எல்லா திருத்தங்களையும் மூவ் பண்ணி விடலாம்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I move the following amendment :—

For sub-clause (b) (ii) of the proposed new Section 4, the following shall be substituted, namely :—

" (ii) non-official members not exceeding three, of whom two shall be elected by the Legislative Assembly and one by the Madras City Corporation Council ".

DR. H. V. HANDE : I second the amendment.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I move the following amendment :—

In sub-clause (b) (ii) of the proposed new Section 4, add the following at the end :—

" of whom two shall be the members of the Legislature from the City of Madras ".



THIRU M. SURENDRAN : Sir, I second the amendment.

THIRU J. JAMES : Sir, I move the following amendment :—

For the proposed new Section 4, substitute the following :—

" 4. Constitution of the Board—The Board shall consist of—

(a) a Chairman appointed by the Government who shall be an I.A.S. Officer or a Government official;

(b) non-official members not exceeding three of whom two shall be elected from the Legislative Assembly and one from the Legislative Council ".

The amendment was duly seconded.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I shall briefly explain why I have moved my amendment. I believe the Hon. Minister is aware that there is lack of co-ordination between the Corporation and the various boards like Slum Clearance Board or Housing Board. One thing is very glaring. The Hon. Minister spoke about Karunanidhinagar and Ashoknagar. If anybody goes there, they see beautiful houses constructed but there is no drainage. It has taken three years for the Corporation to take up the roads because the roads were not according to the specification of Corporation rules. The Housing Board give their own explanation. Unless there is a representative of the Corporation in the Housing Board, this things cannot be settled for such things come at every meeting and they have to be settled.

I have had experience as a representative of the Corporation in the City Improvement Trust for six years. We see various beautiful buildings of Slum Clearance Board. But where is the drainage? In some places they are connected with the drainage of the Corporation. But in other places, the drainage is not there and the water is allowed to flow in a nearby canal. Much of the disease is due to this kind of stagnation of drainage water. In 109 division the sewage water is emptied into the canal nearby. There is no proper drainage. I hope the Hon. Minister will see the reasonableness of my argument and see that, out of the three, there is at least one representative of the Corporation in the

[Thiru K. M. Subramaniam] [1973 நவம்பர் 30

Housing Board. Housing Board is not the monopoly of the City but it is the monopoly of the whole State. That is why I say let there be one representative of the Corporation Council in the Housing Board. Let there be one representative from the Corporation Council, which represents 24 lakhs of people of the City of Madras in the Housing Board. I hope the Hon. Minister will see the reasonableness of my argument and accept my amendment. Thank you.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, இந்த திருத்தம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த வாரியத்தின் மூலம் தமிழ் நாடு பூராவும் வசதி செய்யப் போகிறோம் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படி இருக்கும்போது சென்னையிலே மட்டும் இரண்டு பிரதிநிதிகள் என்றால் என்ன செய்வது என்று சொன்னார்கள். அடிக்கடி இந்த வாரியத்திலே கூட்டம் போட்டு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை கண்காணிக்க பிரதிநிதிகள் உஷாராக இருக்க வேண்டும். அதற்கு சிட்டி எம்.எல்.ஏ. இரண்டு பேரைப் போட்டால்தான் நல்லது. சிட்டியிலே 25 லட்சம் மக்கள் இருக்கிறார்கள். சிட்டியிலே இருக்கிற எம்.எல்.ஏ.க்களுக்குத்தான் அவர்கள் படும் கஷ்டம் தெரியும். ஆகவேதான் 3 நான்-அபிஷியல்ஸ் என்று சொல்லும்போது சிட்டியிலிருந்து 2 எம்.எல்.ஏ.க்களையும், இதர பகுதிகளிலிருந்து ஒரு எம்.எல்.ஏ.யையும் போட்டால் வாரியம் சிறப்பாக நடைபெற முடியும் என்று நான் சொல்கிறேன்.

இப்போது பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டியின் ரிப்போர்ட்டில் காலதாமதத்தினால் ஒரு பைப் வசதி செய்ததில் 75,000 ரூபாய் விரயம் ஏற்பட்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். இது யாருடைய பணம்? பொதுமக்களுடைய பணம். காலதாமதம் தவிர்க்கப்பட்டிருந்தால் இந்த விரயம் தடுக்கப்பட்டிருக்கும். இப்படிப்பட்ட குறைபாடுகளை எடுத்துச் சொல்ல வேண்டுமென்றால் வாரியத்திலே போடக்கூடிய எம்.எல்.ஏ.க்கள் எதிர்க்கட்சியினைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும். ஆளும் கட்சியிலே உள்ளவர்களைப் போட்டால், கட்சிக்குள்ளே இருந்துகொண்டு எப்படி குறை சொல்வது என்று தயங்குவார்கள். எங்கே குற்றம் இருக்கிறது, எங்கே குறை இருக்கிறது என்பதை துருவி துருவிப் பார்த்து, வாரியத்திற்கு எடுத்துச் சொல்ல



1973 நவம்பர் 30] [திருமதி த. ந. அனந்தநாயகி]

வேண்டுமானால் எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.-க்களால்தான் முடியும். அப்போது தான் வேலை ஒழுங்காக நடைபெறும். அங்கே நடக்கக் கூடிய குறைகளும் வெளியே தெரியும்; இந்த மன்றத்திலே வெளிப்படுத்தக்கூடிய வசதியாக இருக்கும்.

வெளிநாடுகளிலே சென்று பார்த்தால், அங்கெல்லாம் எவ்வளவு அழகாகச் செயல்படுகிறார்கள். சிங்கப்பூரிலே போய் பார்த்தால், ஒரு 1½ வருஷத்திற்குள் வீட்டுப் பிரச்சனையை ஹவுசிங் போர்டு மூலமாக எவ்வளவு பிரமாதமாக செய்து முடித்திருக்கிறார்கள் என்பது தெரியும். அங்கே லீ பிரைம் மினிஸ்டராக இருக்கிறார். மற்ற நாடுகளில் எல்லாம் வீட்டுப் பிரச்சனைக்கு முதலிடம் கொடுக்கிறார்கள். நம்முடைய நாட்டில் மற்ற காரியங்களுக்கு எல்லாம் பணம் ஒதுக்கி விட்டு, மிச்சம் மீதி இருந்தால் தான் வீட்டு வசதிக்கு கொடுக்கிறார்கள். அப்படிச் செய்யாமல் நமது நாட்டிலும் வீட்டு வசதிக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்யும் போது தொழில் பெருகும்; வேலை வாய்ப்பு அதிகரிக்கும். மர வேலை செய்பவனுக்கு, பெயின்ட் அடிப்பவனுக்கு, இரும்பு வேலை செய்பவனுக்கு இப்படி பலருக்கு வேலை கிடைக்கும். இதையெல்லாம் மனதில் வைத்து வீட்டுவசதி பிரச்சனையைக் கவனிக்கவேண்டும்.

வாரியம் ஒழுங்காக நடைபெற வேண்டுமானால் அடிக்கடி கூட்டம் போட்டு, நடவடிக்கைகள் பரிசிலனைச் செய்யப்பட வேண்டும். அடிக்கடி கூட்டம் நடத்துவதற்கு சிட்டி எம்.எல்.ஏ.-க்களைப் போட்டால்தான் செலவு இல்லாமல் அவ்வப்போது கூட்டத்தில் கலந்துகொள்ள முடியும். மொபசலில் உள்ளவர்களைப் போட்டால் அவர்களுக்கு வரமுடியாமலே கூட போகும். பஸ், இரயில்களில் ஏதாவது கோளாறு என்றால் அவர்கள் கூட்டத்திற்கு வந்து சேரமுடியாது; வந்தாலும் அவர்கள் வருவதற்குள் கூட்டம் முடிந்துவிடும். ஆகவே, என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். சிட்டியிலுள்ள எம்.எல்.ஏ.க்களால்தான் கூட்டத்திற்குத் தவறாமல் வரமுடியும்; மொஃபசலில் உள்ளவர்களுக்கு வர முடியாது;

என்றிருக்கிறது. அரசாங்கமே அங்கத்தினர்களை நியமிப்பது என்றால் அது ஜனநாயக அமைப்பாக இருக்காது. சட்டமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுத்து நியமிப்பதுதான் ஒரு ஜனநாயக அமைப்பாக இருக்கும். அரசாங்கம் நியமிப்பதாக இருந்தால் நிச்சயமாக அது கட்சி கண்ணோட்டத்துடன் இயங்குவதற்குத் தான் வழிவகுக்கும். அப்படியானால் வாரியம் சரியாக செயல் படாது. ஆகவே, பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துதான் நியமிக்க வேண்டும். குறிப்பாக அம்மையார் அவர்கள் சொன்னமாதிரி எதிர்க்கட்சியில் இருப்பவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்தால் வாரியத்தில் இருக்கின்ற குறைகளை அவர்கள் தைரியமாக எடுத்துச்சொல்ல முடியும். அதற்கு வழிவகை செய்ய வேண்டும். மூன்று நான்-அபிஷியல் மெம்பர்களில், இரண்டு பேர் சட்டமன்ற உறுப்பினர்களாகவும், ஒருவர் மேல்சபை மெம்பராக வும் இருந்தால் நல்லது என்ற என்னுடைய கருத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்த வாரியம் நல்ல முறையில் நடைபெறுவதற்கு, ஜனநாயக அடிப்படையில் தேர்தல் முறைப்படி பிரதிநிதிகளை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, இந்த மசோதாவின் பேரிலே மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக் களைச் சொல்லியிருக்கிறார்கள். கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் உருவாக்கப்பட்டிருக்கிற புறநகர் பகுதிகளில் 'டிரெயினேஜ்' சரி யாக இல்லை என்று சொன்னார்கள். அசோக் நகரைப் பொறுத்த வரையில் டிரெயினேஜ் சீராக அமைக்கப்பட்டு, சுத்தப்படுத்தும் குளம் ஒன்றும் உருவாக்கப்பட்டிருக்கிறது; மற்ற வேலைகளும் வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கார்ப்பரேஷ னுக்கும் ஹவுசிங் போர்டுக்கும் எந்தவிதமான தகராறும் கிடை யாது. அதனால் வேலைக்கு எந்தவித குந்தகமும் ஏற்படாது. கார்ப்பரேஷனில் உள்ள நபர் ஒருவர் இந்த வாரியத்தில் பிரதிநிதி யாக நியமிக்கப்பட வேண்டுமென்றால், மீண்டும் மாநகராட்சி வந்த பின்னால் பரிசீலனை செய்யலாம். தற்போது அந்தப் பிரச்சனைக்கு இடம் இல்லை.

அடுத்து, நம்முடைய அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சென்னை நகரிலிருந்து இரண்டு எம்.எல்.ஏ.க்களைப் போட வேண்டுமென்று சொன்னார்கள். ஜேம்ஸ் அவர்கள் சென்னைக்கு



மட்டும்தானா வீட்டுவசதி வாரியம் என்று கேட்டார்கள். சட்ட மன்ற உறுப்பினர்கள் வாரியத்தில் இடம் பெறுவதற்கு வழி உண்டா இல்லையா என்று தெரிவதற்கு முன்னாலேயே இரண்டு பேரும் ஒரு பெரிய விவாதத்தையே எழுப்பிவிட்டார்கள். ஜோதி அம்மையார் அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். மூன்று நான்-அபிஷியல் மெம்பர்களில் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களில் ஒருவர், மேலவை உறுப்பினர்களில் ஒருவர் இடம் பெற்றால் என்ன என்று கேட்டார்கள். உத்தியோக சார்பற்ற மூன்று பேரில் மேலவை உறுப்பினர் ஒருவர், சட்ட மன்ற உறுப்பினர் ஒருவர் இடம் பெறலாம் என்று நான் கருதிக் கொண்டிருக்கிறேன்.

இந்த வாரியத்தின் தலைவராக இருக்கக்கூடியவர் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருக்க வேண்டுமென்று கருத்து சொன்னார்கள். நடைமுறையைப் பொறுத்த வரையில், நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் தான் நாம் கவலைப்பட வேண்டுமேயல்லாமல், நபர் முக்கியத்துவத்தைப் பார்க்கக் கூடாது. போர்டைப்பற்றி யாருக்கும் சந்தேகம் வேண்டாம். போர்டு என்றைக்கும் நிரந்தரமானது. இந்த நிரந்தரமான போர்டில் யார் வந்தாலும், யார் போனாலும் வேலை ஒழுங்காக நடைபெறுகிறதா என்பதைத் தான் பார்க்க வேண்டும். வேலை நடைபெறுவதை மட்டும் நோக்கினால் போதும் என்று நான் அவர்களைக் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு சென்னையில் உள்ளவர்களுக்கு மட்டுமல்ல—தமிழகத் தில் உள்ள 4½ கோடி மக்களுக்கும் வீட்டுவசதியைச் செய்து கொடுக்க வேண்டாமா என்று ஜேம்ஸ் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். சென்னை நகரில் குடிசைமாற்று வாரியம் செய்து வருகிற பணிகளை, வீட்டு வசதி வாரியமே குடிசைவாழ் மக்களுக்கு தமிழகம் முழுவதும் வீடுகளைக் கட்டித் தந்துகொண்டிருக்கிறது. குறிப்பாக தென்னாற்காடு கடலூரில் 117 வீடுகள், திருச்சியில் 450 வீடுகள், கோயம்புத்தூரில் 2,980 வீடுகள், தஞ்சையில் 199 வீடுகள், சேலத்தில் 214 வீடுகள், திருநெல்வேலியில் 80 வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. சென்னை நகரில் 7,384 வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. மேலும் பல வீடுகளை எல்லா மாவட்டங் களிலும் கட்டிக்கொண்டு வருகிறோம் என்று தெரிவித்துக்கொள் கிறேன். ஆகவே வீட்டுவசதி வாரியம் மாண்புமிகு உறுப்

பினர்கள் குறிப்பிட்ட நல்ல காரியங்களை எல்லாம் செய்து வருகிறது என்பதனை வலியுறுத்திச் சொல்லி, கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்களை திரும்பப்பெறவேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: In view of the Minister's assurance and in view of the fact that the reformation of the Housing Board has started under this dynamic leadership, I propose to withdraw my amendment reserving the right to bring a new Bill when I find that the Board is going wrong.

திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I press my amendment.

திருமதி த. ந. அனந்தநாயகி அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 3, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, மாநில வீட்டுவசதி வாரிய (திருத்த) *சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்டமுன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.





## (ஈ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1973)

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** சட்ட மன்றப் பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்டவரைவு எண் 37/1973) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்" என்று நான் முன் மொழிகிறேன்.

தமிழ்நாடு 1939-ம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 10/1939) 4-எ பிரிவின் கீழ் சென்னை மாநகரம், நகராட்சிகள் போன்ற பல்வேறு இடங்களில் நடைபெறும் திரைப் படக்காட்சிகள் மீது பல்வேறு வீதங்களில் காட்சி வரி விதிக்கப் படத்தக்கதாகும். மதுரை நகராட்சி மாநகராட்சியாகி விட்டதனால், மதுரை மாநகரில் நடைபெறும் திரைப்படக் காட்சிகள் மீது, சென்னை மாநகரில் நடைபெறும் திரைப்படக் காட்சிகளுக்கு விதிக்கப்படும் வீதத்திலேயே, காட்சி வரி விதிக்கக் கருதப்பட்டுள்ளது. இதற்கு வகை செய்ய, தமிழ் நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரி சட்டத்தைத் திருத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் தற்போதைய விதி துறைகளின் கீழ், வரி ஏய்ப்பு அல்லது குறைவான வரி விதிப்பு கண்டுபிடிக்கப்படும் நேர்வுகளில், வரி விதிப்பு அதிகாரி, மேற்படி சட்டத்தின் 7-பி பிரிவின் விதித்துறைகளைப் பயன்படுத்துகையில், ஒவ்வொரு வாரத்திற்கும் வரி விதிப்பு அல்லது மறு வரி விதிப்புக் காகத் தனித்தனி ஆணைகள் பிறப்பிக்க வேண்டியுள்ளது. ஆனால் ஒரு நிதி ஆண்டு குறித்து அல்லது அதன் ஒரு பகுதி குறித்து ஒரே ஒரு ஆணை பிறப்பிக்க இயலுமாயின், அதனால், வரி விதிப்பு அதிகாரிக்கு நேரமும் உழைப்பும் ஏராளமாக மிச்சமாகும். எனவே, மேற்படி சட்டத்தின் 7-பி பிரிவின் விதித்துறைகளைப் பயன்படுத்துகையில், ஒரு நிதி ஆண்டு அல்லது அதன் ஒரு பகுதிக் காக ஒரே ஒரு வரி விதிப்பு ஆணை அல்லது மறு வரி விதிப்பு ஆணையைப் பிறப்பிக்க வகை செய்யக் கருதப்பட்டுள்ளது.

---

* 28—11—1973 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஆவணத்தில் வெளிப்படையாக, தெளிவாகத் தெரிகிற தவறு எதையும் சரி செய்ய, தமிழ்நாடு கேளிக்கை வரியின் கீழ் வரி விதிக்க அதிகாரமுள்ள அதிகாரிக்கோ அல்லது மேல் முறையீட்டு அதிகாரிக்கோ அல்லது மறு விசாரணை அதிகாரிக்கோ இயலும் வகையில் மேற்படி சட்டத்தில் விதித்துறை எதுவும் இல்லை. எனவே, ஆவணத்தில் வெளிப்படையாகத் தெரிகிற தவறு எதனையும், மூன்று ஆண்டு கால அளவுகள், சரி செய்ய மேற்படி அதிகாரிகளுக்கு இயலும் வகையில் மேற்படி சட்டத்தில் அவசியமான விதித்துறை செய்யக் கருதப்பட்டுள்ளது.

இப்பேரவை முன் உள்ள சட்டமுன்வடிவு, மேலே குறிப்பிட்டுள்ள நோக்கங்களை எய்த விழைகிறது.

இப்பிரேரணையை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இம் மன்றத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சபாநாயகர் அவர்களே, இந்தக் கேளிக்கை வரி திருத்தச் சட்டம் மதுரை நகராட்சியாக ஆக்கப்பட்ட காரணத்தினால் அதற்கும் பொருந்தவேண்டுமென்ற அடிப்படையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கேளிக்கை வரி பற்றி ஒரு உயர் கமிட்டி நியமிக்கப்பட்டு விசாரித்தாகவேண்டிய நிலைக்கு மிக அதிக அளவில் உயர்ந்திருக்கிறது.

இன்றுள்ள சட்டப்படி கேளிக்கை வரியை யார் உண்மையாகக் கட்டுவது என்றாலும் சினிமாக் கொட்டகைகள் வைத்திருக்க முடியாது. அந்த அளவுக்கு டாக்ஸ் உயர்ந்துவிட்டது. அதன் காரணமாகத்தான் டாக்சை கட்டாமல் மறைப்பதற்காக பொய் அச்சுகள் போடுகிறார்கள், இன்னும் என்ன என்னமோ காரியங்களைச் செய்கிறார்கள். வரியை நாலணா என்று போட்டு நான்கு பேர்கள் கட்டுவதை விட வரியைக் குறைவாகப் போட்டால் எல்லோரும் கட்டக்கூடிய நிலைமை இருக்கும். அதுபற்றி நிறைய கேஸ்கள் வருவதனால் நான் சொல்கிறேன். இன்றைக்கு சினிமாக் கொட்டகைக்காரர்கள் தாங்க முடியாத அளவுக்கு கேளிக்கை வரி உயர்ந்துகொண்டே போகிறது. இன்னும் நாம் விதித்திருக்கிற மாக்சிமம் அளவு சில பஞ்சாயத்துகளில் போடுகிறார்கள், சிலவற்றில் குறைவாகப் போடுகிறார்கள். இதன் காரணமாக





குறைவாகப் போடுகிற பஞ்சாயத்துக்களை நோக்கி டூரிங் டாக்கீஸ்கள் போகிற நிலைதான் இருக்கிறது. மேலும் இந்தத் தொழிலில் அன் ஹெல்தி காம்பெடிஷன் இருக்கக்கூடாதென்று தான் ஒரு தியேட்டருக்கும் இன்னொரு தியேட்டருக்கும் இடையில் இவ்வளவு தூரம் இருக்கவேண்டுமென்று விதித்தோம். ஆனால் இன்றைக்கு செமி பர்மனென்ட் தியேட்டர் என்பதாக ஒரு இனத்தைப் புகுத்தி இது அடுத்தடுத்து அமையக்கூடிய நிலைமையில் அனுமதிப்பதால் தவறான போட்டி ஏற்பட்டு தியேட்டர்காரர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கேளிக்கை வரி வசூலை எடுத்துப்பார்த்தால் 1969-70-இல் எதிர்பார்த்ததைவிட குறைவாகவேதான் வந்திருக்கிறது.

The actuals are less than the estimates. They want to escape and there is evasion.

ஆகவே, கேளிக்கை வரியை நியாயமான முறையில் விதிக்க யோசிக்க வேண்டும். பங்களா தேஷ் வரி என்று போட்டார்கள். மத்திய சர்க்கார் எடுத்துவிட்டார்கள் என்றாலும் நீங்கள் எடுக்கவில்லை. ஏதோ ஒரு நெருக்கடிக்காகப் போடுகிறோம் என்றால் உடனே அதை எடுக்கவும் முன்வரவேண்டும். அதுதான் கிடையாது. இன்றைக்கு என்டர்டெயின்ட்மெண்டு டாக்ஸ், சினிமா மோட்டார் டாக்ஸ் போன்ற இரண்டிலும் உள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து பார்த்து திருத்தமான முறையில் கொண்டுவர முயற்சி செய்யவேண்டும். இல்லையென்றால் டாக்ஸ் இவேஷன்தான் இருக்கிறது. Evasion is there because of the enhanced rate of tax. இதைத் தவிர்க்க வேண்டுமென்றால் இந்தச் சட்டத்திலுள்ள குறைபாடுகள் தவிர்க்கப்பட வேண்டுமென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மத்திய அரசாங்கம் இப்பொழுது சினிமா டிக்கட்டுகளின்மேல் அறிவிப்பு தந்திருக்கிறதே அதைப்பற்றி உறுப்பினர் அம்மையார் கருத்து சொன்னால் நன்றாக இருக்கும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I am only a poor M.L.A. I am not an M.P. How can I speak about Centre here?

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, இந்த மசோதாவில் வரியை உயர்த்துகின்ற முறை இல்லையென்று சொன்னாலும் வரியை விதிக்கின்ற ஏரியா ஆப்பரேஷன் சென்னை நகரத்திலிருந்து மதுரை நகரத்தையும் அதோடு சேர்க்கின்ற முறையில், ஏழை எளியவர்களைப் பாதிக்கின்ற முறையில் தான் இந்த மசோதா இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். சாதாரணமாக, இப்பொழுது சினிமா தியேட்டர்களுக்குப் போகின்றவர்கள், வசதி படைத்தவர்கள் மிகக் குறைவாகத்தான் இருக்கிறார்கள். ஏழைகள்தான் அன்றாடம் சம்பாதிக்கின்ற கூலியைக் கொண்டு, அதிகமாக சினிமா தியேட்டர்களுக்கு சென்று அதை செலவழிக்கிறார்கள். ஆகவே, இந்த வரிகள் சாதாரணமாக, இன்றைய நடைமுறையில் ஏழைகளைத்தான் அதிகமாக பாதிக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, இந்த தலைவேதனை சென்னை சிட்டியோடு மட்டும் இருப்பது மதுரைக்கும் விஸ்தரிக்கப்படும் என்றால், அது வரவேற்கக்கூடிய மசோதா இல்லையென்று நான் கூற விரும்புகிறேன்.

நமது அரசாங்கத்தினர் வரியைக் குறைத்து, வசதியைக் கூட்டுவோம் என்ற வாக்குறுதிகளை எல்லாம் அளித்தார்கள். ஆனால், அதற்குப் பதிலாக சட்டமன்றம் கூடிவிட்டது என்றால், வரி விதிப்பு தான் நமது தொழிலாக இருக்கிறது. ஆகவே, இது விரும்பத் தக்கது அல்லவென்று கூறி, நான் அமருகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவில் நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையிலே இது ஒரு பெரிய மசோதாவாக இல்லையென்ற தோற்றத்தில் அவர் பேசினார். ஆனால், இதிலே மூன்று விஷயங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். முதலாவதாக, மதுரை மாநகரத்திலே எந்த அளவுக்கு வரியை உயர்த்துவது என்கிற நிலைமை. இங்கே சென்னை மாநகரத்தை ஒப்பிட்டு, மதுரை மாநகரத்திலேகூட, சென்னை மாநகரத்திலே விதிக்கப் படும் அளவுக்கு வரியை உயர்த்த, ஒரு திருத்தத்தினை, செக்ஷன் 4 (எ)-வுக்கு ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். எனக்கு வேடிக்கையாக இருப்பதும், வேதனையாக இருப்பதும் ஆன





ஒரு விஷயம் என்னவென்றால், எவ்வளவோ பெரிய அதிகாரிகள் எல்லாம் இங்கு அமைச்சருக்குத் துணையாக இருக்கிறார்கள். இருந்தாலும்கூட, முக்கியமான விஷயம் இதிலே இல்லையென்று நான் கருதுகிறேன். இதை எசன்ஷியலாக 'மணி பில்' என்று நான் கருதுகிறேன். இந்தத் திருத்த மசோதாவின் மூலமாக நிச்சயமாக அரசாங்கத்திற்குக் கொஞ்சம் வருமானம் உயரும் என்பது என்னுடைய கருத்து. அதுவேதான் அரசாங்கத்தினுடைய கருத்தாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஆக, இந்த ஒரு மசோதா வரியை உயர்த்துகின்ற மசோதாவாக இருந்தால், அதன் மூலமாக எவ்வளவு எக்ஸ்டிரா இன்கம் என்ற குறிப்புகளை நமக்குத் தந்துவிட்டு, அதை எசன்ஷியலாக 'மணி பில்' லாக மாற்றி அமைத்திருக்க வேண்டும். ஏன் இதை இங்கு குறிப்பிடவில்லை என்பது எனக்குத் தெரியவில்லை.

ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ் என்ற அந்தப் பகுதியிலேகூட, எந்த அளவுக்கு வருமானம் உயரும் என்ற குறிப்பும், அரசாங்கம் எதிர்பார்க்கிறது என்றும் தெளிவாக எழுதவில்லை. எத்தனை சினிமா கொட்டகைகள் மதுரை நகரத்திலே இருக்கின்றன? எந்த எந்த சினிமா கொட்டகை களிலே எவ்வளவு பணத்தை எதிர்பார்க்கிறார்கள் என்கிற விவரம் இல்லாமல் மசோதாவை மொட்டையாகப் போட்டிருக்கிறார்கள் என்று நான் மிகவும் வருந்துகிறேன். இந்த அளவுக்குச் சட்டசபையிலே இருக்கிற அங்கத்தினர்கள் விஷயம் புரியாதவர்கள் என்று சொல்கிற அளவுக்கு மசோதா வரக்கூடாது என்றுதான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

Whoever is the officer who is responsible for this must be pulled up by the Minister.
என்று சொல்லக்கூடிய அளவுக்கு இந்த விஷயத்தைச் சொல்கிறேன்.

இரண்டாவது, இதே விஷயத்தைப் பொறுத்தவரையில், இன்னொரு பாயின்ட்டை நம்முடைய அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரலாம் என்று நான் கருதுகிறேன். நாம், நகராட்சியை, மாநகராட்சியாக விஸ்தரிக்கிறோம். விஸ்தரிக்கின்ற நேரத்திலே எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் பொதுமக்களும் ஏதோ பல காரியங்கள், நன்மைகள் ஏற்படப்

போகின்றன என்று கருதுகிறோம். நகராட்சியை, மாநகராட்சி என்று திருத்திய பிறகு எந்தவிதமான வசதிகளும், எக்ஸ்டிரா பெசிலிட்டீஸும் பெருகவில்லை, பெற முடியவில்லை. மாநகராட்சி என்றால், பல சௌகரியங்களை எதிர்பார்க்கிறோம். அந்த சௌகரியங்களையும் கொடுத்ததாக எனக்குத் தெரியவில்லை. முன்பு இருந்ததைவிட, சுகாதார வசதிகள் இன்னும் மோசமாக இருக்கின்றன. ஆனால், வரி விதிப்பிலே மட்டும்தான் சுறுசுறுப்பாக, மாநகராட்சி என்றால், எங்கெங்கு, என்னென்ன உயர்வு வேண்டுமோ, அதைத் தேடிப்பிடித்து, பாக்கி இல்லாமல் வசூலிக்கக் கூடிய வகையில் சாமர்த்தியமாக நம்முடைய அரசாங்கமும் காரியம் செய்கிறது, இலாகாவும் செய்கிறது. ஆனால், அதே நேரத்திலே, 'சிமல்டேனியஸ்' வசதிகள் அதற்கேற்ற வகையிலே இந்த வரி மசோதாவின் மூலமாக இல்லையென்று, நான் மிக வன்மையாகக் கண்டிக்க விரும்புகிறேன்.

வரி ஏய்ப்புகளைப்பற்றி இரண்டொரு குறைபாடுகள் இருக்கின்றன. வரி ஏய்ப்புகளை எப்படித் தடுக்க முடியும்? ஏய்ப்புக்கு என்ன காரணம் என்று நினைக்காமல், கவனிக்காமல், சில திருத்தங்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கனவே இருக்கிற சட்டதிட்டங்கள் வரி ஏய்ப்பைத் தடுப்பதற்குப் போதாது என்ற அடிப்படையிலே இன்னும் சில திருத்தங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திருத்தங்களைப்பற்றி, வரி ஏய்ப்புகளைத் தடுப்பதுதான் கருத்தாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதன் முக்கியமான காரணம், ஏற்கெனவே நம்முடைய லோக்கல் அட்மினிஸ்ட்ரேஷன் அமைச்சர் அவர்கள் திருத்தங்களைக் கொண்டுவந்த நேரத்திலே அதைப்பற்றி இங்கே நான் குறிப்பிட்டேன். அதை மீண்டும் குறிப்பிடுகிறேன். எதற்காக இந்த வரி ஏய்ப்பு வருகிறது. இதற்காக காம்ப்ரஹென்சிவாக பில் கொண்டு வரவேண்டுமென்று சொன்னேன். எத்தனை தடவை சொல்வது? பீஸ் மீலாகக் கொண்டு வராதீர்கள், நிரந்தரமாக எப்படிச் செய்வது என்பதைப் பார்க்க வேண்டும் என்றேன்.

வரி ஏய்ப்பை இரண்டு கண்ணோட்டத்திலே கொண்டு பார்க்க வேண்டும். உண்மையாக அரசாங்கத்தை ஏமாற்றுவதற்காக நடக்கக் கூடிய, திட்டமிட்டு நடக்கக்கூடிய வரி ஏய்ப்பு. (Planned cheating of Government) அதை எப்படித் தடுப்பது?



அதற்கு நீங்கள் என்ன திட்டங்கள் போட்டிருக்கிறீர்கள்? அதிலே, அரசாங்கத்திலே இருக்கக்கூடிய, செல்வாக்கு பெற்றிருக்கக்கூடிய பல பேர் அதில் ஈடுபட்டிருக்கிறார்களே, அதனால் என்ன பரிகாரம் நீங்கள் காணப் போகிறீர்கள். அதிலே யார் யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். அரசாங்கத்தினுடைய ஒத்துழைப்பு இல்லாமல் எப்படி வரி ஏய்ப்பு நடக்க முடியும்? அவர்கள் பாலிட்டீஷியனாக இருந்தாலும், யாராக இருந்தாலும், அரசாங்கத்தினுடைய ஒத்துழைப்பு இல்லாமல் எப்படி வரி ஏய்ப்பு நடக்க முடியும்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதாரமற்ற எதையும் சொல்லக் கூடாது. எந்த அரசாங்கமும் வரி ஏய்ப்புக்குத் துணை போகமாட்டார்கள். எந்த அதிகாரியும் வரி ஏய்ப்புக்குத் துணை போகமாட்டார்கள். அப்படி இருந்தால், தெரிந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். பொதுவாக, அரசாங்க அளவிலே, அரசாங்க அதிகாரிகள், அரசியல்வாதிகள் என்று குற்றச்சாட்டிச் சொல்வது பொருந்தாது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : I am surprised, that the Hon. Minister who has brought forward this Bill, is not himself absolutely clear in his mind. In his Objects and Reasons, in paragraphs 2 and 3 what is said? It is an admission that the machinery is defective and that he is trying to improve and tone up the machinery and to plug the loopholes to prevent tax evasion; it means the Hon. Minister himself is confused and it is an open confession that there is tax evasion. I am only talking about it. Probably he has couched it in mild language and I am putting it in a harsh language and that is hurting the Hon. Minister.

நான் அதைக் குறிப்பிட்டுத்தான் சொன்னேன். புதிதாக, ஒன்றும் சொல்லவில்லை. வரி ஏய்ப்பைத் தடுக்க வேண்டுமென்று, ஓப் ஹோல்லை தடுக்க வேண்டுமென்று நீங்கள் தானே இந்த திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறீர்கள். நாங்களா கொண்டு வந்தோம்? நீங்கள் தானே கொண்டு வந்திருக்கிறீர்கள்? அதைத் தானே குறிப்பிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நாங்கள் கொண்டு வந்ததாலேயே அரசாங்கம்தான் ஆதரவு தருகிறது என்று சொல்லி விடக் கூடாது. வரி ஏய்க்கக் கூடியவர்கள் நாட்டிலே இருக்கிறார்கள். எல்லா வரியையும் ஏய்ப்பவர்கள் பல பேர்கள் இருக்கிறார்கள் என்றுதான் அம்மையார் அவர்கள் சொன்னார்கள். சம்பந்தப்பட்ட வழக்குகளிலே ஆஜரானேன் என்று சொன்னார்கள். இருக்கிற குறைபாடுகளை நீக்கத்தான் திருத்தம்—சட்டம் கொண்டு வரப்படுகிறதே தவிர, அதற்காக அரசாங்கம் ஆதரவு தருகிறது என்று சொல்வது சரியல்லவென்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அதைத்தான் நான் சொன்னேன், காம்ப்ரஹென்சிவ் பில்லாகக் கொண்டுவந்து, தடுப்பதற்காக ஏற்பாடு செய்யுங்கள் என்று பல தடவை சொன்னேன். முன்பெல்லாம் சொன்னேன், காம்ப்ரஹென்சிவ் பில் கொண்டு வாருங்கள் என்று சொன்னேன். கேட்டால்தானே? அதை எப்படித் தடுப்பது? பல இடங்களிலே நான் சொல்கிற நேரத்திலே, ஏராளமான கரப்ஷன் நடைபெறுகிறது. அதைச் சரியான வகையிலே தீர்க்கவில்லையென்று அங்கே இருக்கக்கூடியவர்கள் சொன்னார்கள். இதைத் தடுக்க வேண்டுமென்றால், நான் ஒரு யோசனை சொல்கிறேன். இதை நீங்கள் பரிசீலனை செய்து உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். திட்டமிட்ட வரி ஏய்ப்பிலே சிலர் ஈடுபடுகிறார்கள், சிலர் அப்பாவிகள் இதிலே அகப்பட்டுக்கொள்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை இருப்பதால் நான் ஒரு யோசனை, கன்ஸ்ட்ரக்டிவ் சஜ்ஜஷன் என்ற முறையிலே, யாரையும் குறைசொல்வதற்காக, குற்றம்சாட்டுவதற்காக அல்ல, ஒரு யோசனையைச் சொல்கிறேன். எப்படி ஒரு பஸ்ஸிலே 50 சீட்டுகள் இருந்தால்—ஒரு பஸ்ஸிலே 50 சீட்டுகள் இருப்பதாக வைத்துக்கொள்வோம்—பிரயாணிகள் ஏறினாலும் ஏறாவிட்டாலும் கூட மொத்தமாக எல்லா சீட்டுகளுக்கும் என்று வாங்குகிறோமோ அதைப் போன்று இதிலேயும் ஒரு கொட்டகையிலே ஆயிரம் பேர்கள் அமர்வதற்கு இடம் இருக்கிறது என்றால், ஆயிரம் சீட்கள் இருக்கிறது என்று சொன்னால் எல்லாவற்றிற்கும் மொத்தமாக வரி போடுவது என்று நீங்கள் வைத்துவிட்டால் அதிலே இரண்டுவிதமான அட்வான்டேஜஸ் இருக்கின்றன.



ஒன்று டாக்சேஷன் வித்அவுட் டியர்ஸ் அதாவது ஸ்டெடி இன்கம் வருகின்ற நிலைமை ஏற்படும். இன்னொன்று வரி ஏய்ப்பதற்கான வழிகளும் இருக்காது. ஆகவே அமைச்சர் அவர்கள் இதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும், சிந்தித்துப்பார்த்து—நான் சொல்வதிலே ஃப்ளாஸ் இருக்கலாம்—அதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து அவர்கள் பதில் சொல்லும்பொழுது அதையெல்லாம் சொல்லலாம்.

அதிலே இன்னொரு பயன் என்னவென்றால் இது எங்கே நடக்கிறது எப்படி நடக்கிறது என்ற பரிசோதனைகள் எல்லாம் செய்யக்கூடிய கஷ்டங்கள் இருக்காது அவற்றைத் தவிர்க்கலாம். இப்பொழுது 10 கோடியோ 12 கோடியோ இதன்மூலம் வருமானம் வருகிறது, எனக்கு சரியாகத் தெரியாது. இதனால் அதற்கு மேலே வருமானம் அரசாங்கத்திற்கு வருகின்ற நிலைமை ஏற்படும். இதை அடிப்படையாக வைத்துக்கொண்டு நல்ல வகையிலே ஒரு காம்ப்ரஹென்ஸிவ் பில்லாகக் கொண்டுவரவேண்டும், இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலே இல்லாவிட்டாலும்கூட அடுத்த கூட்டத்திலேயாவது அதைக்கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. சுப்பு) :** இன்னும் இரண்டு மசோதாக்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன என்ற காரணத்தினால் உறுப்பினர்கள் பேசும்பொழுது சொன்ன கருத்தையே திரும்பத் திரும்பச் சொல்லாமல் சுருக்கமாகக் கருத்துக்களை எடுத்துச் சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவில் என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இதிலே சில உறுப்பினர்கள் பேசும்பொழுது குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினார்கள். திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசும் பொழுது இந்த அரசாங்கத்தின் வரிவிதிப்புக்கொள்கையிலே உள்ள தவறுகள்தான் இந்தக் குறைபாடுகளுக்கு எல்லாம் காரணம் என்றும் டூரிங் டாக்கீஸ் போன்றவற்றிற்குத் தொல்லைகள் ஏற்படுகின்றன என்றெல்லாம் எடுத்துச்சொன்னார்கள். இதிலே வேடிக்கை என்னவென்றால் சினிமாவைப் பார்க்க வருகிறவர்கள்

வரி கட்டிவிடுகிறார்கள், ஆனால் அவர்கள் கட்டிய அந்த வரி அரசாங்கத்திற்கு வரவில்லை. அதைத் தடுப்பதற்குத்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஏன் சினிமாக்களை நடத்துகிறவர்கள் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்கிறார்கள் என்று கேட்டால் எனக்குத் தெரிந்த ஒரு டூரிங் சினிமாக் கொட்டகைக்காரர் என்னிடம் சொன்னார்—அவர் பல உண்மைகளைச் சொன்னார். ஒரு சினிமா போட வேண்டுமென்று சொன்னால் பட முதலாளி 5 ஆயிரம் ரூபாய் கேட்கிறார், ஆனால் ரசீது 500 ரூபாய்க்குத்தான் கொடுக்கிறார் ஏன் என்று கேட்டால் நாங்கள் 5 ஆயிரம் ரூபாய்க்குக் கொடுத்தால் எங்களுக்குக் கட்டுபடியாகாது அவர்கள் அதற்கான காரணத்தைச் சொல்கிறார்கள், பெரிய நடிகர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் 7 லட்சம் 8 லட்சம் என்று அக்ரிமெண்டிற்கு முன்பு பணம் கேட்கிறார்கள், ஆனால் அக்ரிமெண்டிலே 1 லட்ச ரூபாய்க்கோ அல்லது 80 ஆயிரம் ரூபாய்க்கோதான் கையெழுத்துப்போடுகிறார்கள். நாங்கள் அதனால் தான் அப்படிச் செய்யவேண்டியிருக்கிறது, மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரையிலும் இப்படித்தான் தவறு நடக்கிறது என்று சொன்னார்கள். இப்படி எல்லோருக்கும் தெரிந்திருக்கின்ற குறைபாட்டைப் போக்கமுடியவில்லை. நாம் அதைப் போக்கவேண்டுமென்றால் எப்படி பஸ்களையெல்லாம் தேசியமயமாக்கி அதன்மூலம் பஸ்களிலே ஏற்பட்ட வரி ஏய்ப்பைத் தடுத்தோமோ அதே போன்று திரை அரங்குகளில் ஒரு திரையரங்கில் 1,000 பேர்கள் உட்காரலாம் என்று சொன்னால் அவ்வளவு பேர்களுக்கும் சேர்த்து மொத்தமாக ஒரு வரியை நிர்ணயித்து அதை வசூலித்துவிடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும், அப்படிச்செய்தால் வசூலாகிற வரிப்பணம் அரசாங்கத்திற்கு ஏய்ப்பு இல்லாமல் வந்துசேரும். அது மட்டுமல்ல பாவம், போணியாகாத திரையரங்குகள் மூடப்பட்டுவிடும், இருக்கின்ற சில திரையரங்குகளாவது நல்லமுறையிலே ஓட்டிக்கொண்டிருப்பார்கள் அதற்கு வழிபிறக்கும். இல்லையென்றால் நிச்சயமாக இந்தத் தொழிலைத் தேசியமயமாக்கி அதன் மூலம் வரி ஏய்ப்பு இல்லாமல் செய்துவிடலாம். காரணம் பொது மக்களிடமிருந்து இப்பொழுது வரி வசூலிக்கப்படுகிறது, அவர்கள் செலுத்தாமல் இருந்தால்கூட நாம் கவலைப்படபோவதில்லை, அவர்கள் செலுத்தியும் அதன்மூலம் லட்சக்கணக்காக, கோடிக் கணக்காக வசூல்செய்த தொகையை இடையிலே உள்ள தரகர்கள்,



பெரியவர்கள் தவறாகப் பயன்படுத்திக்கொள்வதற்கு அரசாங்கம் இடம் கொடுக்கக்கூடாது. ஒரு திரையரங்கில் எத்தனை இடங்கள் இருக்கின்றனவோ அத்தனை இடத்திற்கும் சேர்த்து வரி வசூலித்து விடவேண்டும், இல்லையென்றால் திரையரங்குகள், ஸ்டுடியோக்கள் ஆகிய எல்லாவற்றையும் தேசியமயமாக்கிவிட வேண்டும். . .

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. சுப்பு):** உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. நா. வீராசாமி:** நான் பேசிக்கொண்டிருக்கிறேன், இது என்ன? தலை போகிற விவகாரமாக இருந்தாலும் பரவாயில்லை. ஒரு இடத்திலே தவறு நடந்தால் அரசாங்கம் அதிகாரிகளை வைத்து அதைக் கண்டுபிடித்துத் திருத்தலாம். ஸ்டுடியோக்களிலே கால் ஷீட் கொடுக்கிறார்கள் அதற்கு 1,000 ரூபாய்க்குத்தான் ரசீது கொடுக்கிறார்கள், ஆனால் 15,000 ரூபாய் வாங்கிக்கொள்கிறார்கள். அவர்களைக்கேட்டால் நாங்கள் என்ன செய்வது அதிகமாக வருவாய் போட்டால் மத்திய அரசாங்கத்தினுடைய வரிவிதிப்புக் கொள்கையினால் போய்விடுகிறது என்று சொல்லிப் பெரிய நடிகர்கள் எல்லாம்கூட தாங்கள் இப்படிச் செய்யக்கூடிய தவறை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி ஒரு தெளிவான குற்றச்சாட்டு சமுதாயத்திலே இருப்பது நமக்குத் தெரிகிறது, தெரிந்த பிறகும்கூட ஏன் இந்த அரசாங்கம் அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் அதைத்தடுக்கக்கூடிய அதிகாரம் நம்மிடத்திலே இல்லை, அதுதான் காரணம், அதைச் சொன்னால் உடனே அவர்கள் மாநில சுயாட்சியா என்று கேட்பார்கள். குற்றவாளி என்று தெரிந்த பிறகும் நடவடிக்கை எடுக்க முடியாத ஒரு நாடு, ஒரு அரசியல் சூழ்நிலை இருக்கிறது என்றால் அது வருத்தப்படக்கூடிய நிலைமை தான். இவையெல்லாவற்றையும் சீர்திருத்த வேண்டுமென்றால் சினிமாக் கொட்டகைகள், திரையரங்குகள், ஸ்டுடியோக்கள் எல்லாவற்றையும் தேசியமாக்கிடவேண்டும். இல்லாவிட்டால் லோயர் கிளாஸிலிருந்து அப்பர் கிளாஸ் வரையிலும் எத்தனை இடங்கள் இருக்கின்றனவோ அதற்குத் தகுந்தபடி வரியை வசூலிக்கக்

கூடிய நிலைமை வரவேண்டும், அப்படி வந்தால்தான் தவறுகள் நடக்காது. அதற்கேற்ப சட்டத்தை நம்முடைய அரசு இன்னும் துரிதமாகக் கொண்டுவந்தால் நல்லது என்பதைச் தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** திரு. வீராசாமி அவர்கள் சினிமாத் தொழிலைத் தேசியமாக்கவேண்டுமென்று சொன்னார்கள். அப்படிச் செய்தால் செல்வாக்குப் படைத்தவர்கள், அவர்கள்தான் இப்பொழுது செல்வாக்கு படைத்தவர்களாக இருக்கிறார்கள், நான் தான் நடிப்பேன், இதைத்தான் மக்கள் பார்க்கவேண்டும் என்று சொன்னால் யார் அதைப் பார்ப்பது? ஏதோ தேசியமய மாக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு ஒருவர் நான்தான் நடிப்பேன் என்று சொல்வது, செல்வாக்குப் படைத்தவர், நான் தான் கதை எழுதுவேன் என்று சொல்வது நாங்கள் தான் நடிப் போம் என்று சொல்லிக்கொண்டிருந்தால் பிறகு யார் அதைப் பார்ப்பது? அப்படியிருந்தால் அது ஒரு பனிஷ்மெண்ட் ஆகத் தான் இருக்கும். Because it is for the entertainment of the poor people, such cinema theatres are run. ஆகவே அந்த உத்திரவாதத்தை திரு. வீராசாமி அவர்கள் கொடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. நா. வீராசாமி:** நடிப்பு என்பது பிறவித் தொழில் அல்ல. எல்லோரும் நடிக்கலாம், எல்லோருக்கும் நடிப்பு இருக்கலாம், அது மக்களுக்கும் பிடிக்கலாம். நான்கூட நடிக்கலாம், அந்தப் படம்கூட நல்லமுறையிலே ஓடலாம். நானும் நடிக்கலாம் அம்மையாரும் நடிக்கலாம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. சுப்பு):** இது எண்டெர்டெய்ன்மெண்ட் டாக்ஸ் பில்லாக இருப்பதால் இந்த விவாதமும் எண்டர்டெய்ன்மெண்ட் ஆக இருக்கிறது என்ற முறையிலே இருக்கலாம் 'என்று எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** நண்பர் வீராசாமி அவர்கள் இனி தியேட்டர்களையெல்லாம் சினிமாத் தொழிலையெல்லாம் தேசிய மயமாக்க வேண்டுமென்று சொன்னார்கள். அப்படியென்றால் சினிமா வசனம் எழுதுவதையும் தேசியமயமாக்க வேண்டுமென்ற கொள்கையை ஏற்றுக்கொள்கிறாரா?



**திரு. கே. எ. வகாப்:** தலைவர் அவர்களே, இந்த கேளிக்கை வரி திருத்த மசோதாவிலே என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே சொல்லப்பட்ட முக்கியமான கருத்துக்களிலே சினிமாத் தொழிலுக்கு வரி போட்டாலும் மக்களைப் பாதிக்காத அளவிற்கு அது இருக்க வேண்டும். மக்கள் செலுத்திவிட்டால் அந்த வரி முழுவதும் அரசாங்கத்திற்குச் சீராக வந்து சேரவில்லை, இடையிலே இருக்கிறவர்கள் செய்கிற தவறுகளினால் அந்த நிலைமை ஏற்படுகிறது, அதை அரசாங்கம் தடுத்து நிறுத்த வேண்டும் என்று எல்லாம் சொல்லப்பட்டது. அதுதான் அரசின் கடமை. எனவே செய்வதைத் திருந்தச் செய் என்பது போல அதிலுள்ள 'லூப் ஹோல்' களையும் மற்ற வழிகளையும் அடைப்பதற்காக இந்தத் திட்டங்களைக் கொண்டு வருவதுகுறித்து வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் இப்படிப்பட்ட வரி ஏய்ப்புகள் எந்தெந்த வழிகளிலே ஏற்படுகின்றது என்பதை இங்கே நடந்த விவாதங்களிலேயிருந்து கண்டுகொள்ளலாம். கறுப்புப்பணம் என்ற கறுப்புபூதம்தான் எல்லாவிதமான சிக்கல்களுக்கும் காரணமாக இருக்கிறது. அடியிலேயிருந்து உச்சநிலைவரையிலுள்ள பிரச்னைகளுக்கெல்லாம் இந்தக் கறுப்புப்பணம்தான் காரணம். இந்தக் கறுப்புப் பணத்தை ஒழிப்பதற்குத் திட்டம் தீட்டினால்தான், சினிமாத் துறையாகட்டும் அல்லது நடிப்புத் துறையாகட்டும் அல்லது வேறு ஸ்டுடியோ வைத்து நடத்தும் துறையாகட்டும், வியாபாரத் துறையாகட்டும் அவைகளில் இந்தக் கறுப்புப் பணத்தினால்தான் சிக்கல்களுக்கு வழியேற்படும் என்பதை நாம் நிச்சயமாக எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால் அந்தக் கறுப்புப் பூதத்தை ஒழிப்பதற்கு எந்தத் திட்டத்தையாவது இந்த அரசாங்கமோ மத்திய அரசாங்கமோ செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

இந்தக் கறுப்புப் பணத்தைப் பொறுத்தவரையில் மாநில அரசாங்கத்தைவிடப் பொறுப்பும் உரிமையும் மத்திய அரசு பெற்றிருக்கிறது. இந்தக் கறுப்புப் பணத்தை ஒழிப்பதற்காக அவர்கள் எடுக்க வேண்டிய முயற்சிகளை மாநில அரசாங்கங்களும் பின்பற்ற வேண்டியவர்களாக இருக்கிறது. ஆகவே கறுப்புப் பணத்தை ஒழித்து, சாதாரண ஏழை மக்கள் தங்கள்

[திரு. கே. எ. வகாப்] [1973 நவம்பர் 30

வாழ்க்கையில் உள்ள ஒரேயொரு கேளிக்கையான சினிமாவைப் பார்க்கிறார்கள், அப்படிப்பட்டவர்கள் அளிக்கின்ற வரியானது எங்கே செல்ல வேண்டுமோ அங்கே, கஜானாவிற்குள் செல்ல வேண்டுமே, தவிர, சினிமா தியேட்டர் முதலாளிகளின் வீட்டிலோ, ஸ்டுடியோ அதிபர்களின் வீட்டிலோ, நடிகர்களாக இருப்பவர்களின் வீட்டிலோ தங்கமாகவோ அல்லது பணமாகவோ இருக்கக் கூடாது என்ற அடிப்படைக் காரணத்தைச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வரி ஏய்ப்புபற்றிச் சொல்லும்பொழுது கிராமங்களில் நிச்சயமாக அப்படி வரி ஏய்ப்பு இருக்கத்தான் செய்கிறது. அதைக் கண்கூடாகக் காண வேண்டிய சந்தர்ப்பம் இருக்கிறது. இங்கே பல கருத்துக்கள் கூறப்பட்டன. நான்கூட ஒருமுறை இந்தக் கருத்தைக் கூறியிருக்கிறேன். தியேட்டர்களில் எத்தனை சீட்டுகள் இருக்கின்றனவோ அதைப் பொறுத்து 'ஃபிக்சட்' ஆக வரி விதிப்புச் செய்துவிட்டால் ஓரளவு வரி ஏய்ப்பைக் குறைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். அந்தத் தொழில் அதிபர்கள் எங்களுக்குக் குறைவாக வசூலாகிறது என்று சொல்லும்பொழுது அதைப் பற்றி ஆராய்வதற்கு ஒரு குழு அமைத்து, அதிகாரிகளும் அரசாங்கத்தரப்பிலே மற்றவர்களும், எம்.எல்.ஏ.-க்களும் உள்ள குழுவை அமைத்து அதிலே பரிசீலனை செய்து இந்த வரி ஏய்ப்புகளைத் தடுப்பதற்கு எப்படிச் செய்யலாம் என்பதற்குத் திட்டம் ஏற்படுத்தலாம்.

கிராமப்புறங்களில் இருக்கின்ற டூரிங் தியேட்டர்களைப்பற்றிச் சொன்னார்கள். அதுமட்டுமல்ல, பர்மனென்ட் தியேட்டர்களிலும் வரி ஏய்ப்பு நிறைய நடக்கிறது. திட்டமிட்டு அப்படிச் செய்கிறார்கள். சில நேரங்களில் அதிகாரிகளுக்கும் தெரிந்தும் தெரியாமலும் நடக்கும் சூழ்நிலையிருக்கிறது. அதற்காகத்தான் பேரூராட்சிகள், நகர் மன்றங்கள் போன்ற இடங்களில் முனிசிபல் அதிகாரிகள் சென்று அடிக்கடி சமயம் வரும்பொழுது அந்த டிக்கெட்டுகளைப் பரிசோதனை செய்ய அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை இன்னும் கொஞ்சம் விரிவாக்கி, பேரூராட்சிகளிலுள்ள தியேட்டர்களையும், நகராட்சிகளில் உள்ள தியேட்டர்களையும் அங்கேயுள்ள பேரூராட்சி மன்றத் தலைவரோ நகர் மன்றத் தலைவரோ, அதிகாரிகளுக்கு ஒரு 'இன்பர்மேஷன்'



1973 நவம்பர் 30] [திரு. கே. எ. வகாப்]

என்ற அளவிலே தவறு நடப்பதைச் சுட்டிக்காட்டும் அளவில் அதிகாரம் கொடுத்தால் பரவலாக இப்படிப்பட்ட குற்றங்களைக் குறைக்க முடியும் என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, இந்தத் திருத்த மசோதாவிலே மூன்று முக்கியமான அம்சங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

முதலாவதாக, சென்னை மாநகராட்சிப் பகுதியில் எப்படி காட்சி வரி விதிக்கப்படுகிறதோ அதைப்போலவே காட்சி வரி, 'ஷோ டாக்ஸ்' மதுரை மாநகராட்சி பகுதிக்கும் விதிக்கப்பட வேண்டுமென்றுதான் இந்தத் திருத்தம் கொண்டுவரப்படுகிறது. இப்பொழுது சென்னை மாநகராட்சிப் பகுதியில் உள்ள வரி விகிதம் மதுரை மாநகராட்சிப் பகுதிக்கும் பொருந்தும் வகையிலே இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இந்தத் திருத்தத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்பொழுது இது ஒரு 'மணி பில்' ஆயிற்றே, இதற்காகப் பல விளக்கங்கள் கொடுக்கப்படவில்லையே என்று சொன்னார்கள். இது மணி பில் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்த மணி பில் ஆளுநர் அவர்களின் அனுமதியைப் பெற்று இந்திய அரசியல் சட்டம் 207 (1)-வது பிரிவின்படி கொண்டுவரப்பட்டிருக்கிறது. உத்தேச வருமானத்தைச் சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். அப்படிச் சொல்ல வேண்டியது அவசியமில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த (Money) பில்லைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் இந்தப் பிரச்னையைக் கிளப்பியதால் இந்த வரி விதிப்பின் மூலமாக எதிர்பார்க்கப்படும் வருமானம் ஆண்டு ஒன்றுக்கு 27,000 ரூபாய் என்று உத்தேசமாக மதிப்பிட்டிருக்கிறார்கள். எனவே இந்தத் திருத்தமானது மதுரை மாநகராட்சிக்கும் பொருந்த வேண்டுமென்ற முறையிலே கொண்டுவரப்பட்டிருக்கிறதே தவிர வேறொன்றும் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4, 5 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே,

"தமிழ்நாடு 1973-ம் ஆண்டு, கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/73) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.30 மணிக்கு ஒத்திவைக்கப் பட்டது.

## (6) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

108. Notification issued with G.O. Ms. No. 169, Co-operation, dated 30th April 1973, in regard to an amendment to Rule 85-N of the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the Table of the House under Section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

109. Notification issued with G.O. Ms. No. 2381, Rural Development and Local Administration, dated 2nd November 1973, in regard to exclusion of the (Nachimuthugoundanpudur



and Samathur villages) areas in S.F. Nos. 187 to 191 and 393 to 400 from the jurisdiction of Dharapuram Municipality. [Laid on the Table of the House under Section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

### *B. Reports, Notifications and Other Papers.*

* 47. The Tamil Nadu Local Authorities Finance (Second Amendment) Bill, 1973 (L.A. Bill No. 33 of 1973) (with Annexure).

* 48. The Tamil Nadu Hackney Carriage (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 34 of 1973).

* Desptached to Members on 28th November 1973.

**இரண்டாவது அம்சம்**, இப்பொழுது தமிழ்நாடு கேளிக்கை **வரிச் சட்டத்தின்கீழ்** வரி எய்ப்பு கண்டுபிடிக்கப்பட்டால் அதைப் பற்றி அதிகாரி உத்தரவு பிறப்பிக்கும்பொழுது ஒவ்வொரு வாரத்திற்கும் தனித்தனியாக உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று இருக்கிறது. ஒவ்வொரு வாரத்திற்கும் தனித்தனியாக உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டுமென்றால் காலமும் விரயமாகிறது. இப்படி அதிகாரிகளின் காலம் விரயமாகாமல் இருக்க, குறிப்பிட்ட ஆண்டிலே வரி ஏய்ப்பு கண்டுபிடிக்கப்பட்டால் அந்த நிதி ஆண்டுக்குள்ளாகக் கண்டுபிடிக்கப்படும் வரி ஏய்ப்புகளுக்கு ஒரே உத்தரவாகப் போடலாம் என்பதற்காக இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தத் திருத்தத்தைப் பொறுத்தவரையில் யாரும் ஆட்சேபணை கிளப்பவில்லை. எனவே, இந்தத் திருத்தம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்றே கருதுகிறேன்.

மூன்றாவது அம்சத்தைப் பொறுத்தவரையில் அதுவொரு முக்கியமான திருத்தமாகும். எப்படியென்றால் அரசாங்க ரிக்கார்டுகளிலே If there are errors on the face of the record அவைகளைத் திருத்திக்கொள்ள அதிகாரம் கோரப்பட்டிருப்பதோடு அந்த அதிகாரத்தை மூன்றாண்டுகளுக்குள்ளாக உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற வரைமுறை கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆவணங்களிலே, ரெக்கார்டுகளிலே குறைகள் கண்டுபிடிக்கப்பட்டால் திருத்திக்கொள்ள மூன்றாண்டுகளுக்குள்ளாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று இந்தத் திருத்தம் தெரிவிக்கிறதே தவிர வேறல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே இந்தத் திருத்தமும் அவசியமான திருத்தம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் கூறும்பொழுது சொன்னார்கள், 'காம்ப்ரஹென்சிவ் லெஜிஸ்லேஷன்' கொண்டுவரக்கூடாதா என்று கேட்டார்கள். இதிலுள்ள குறைபாடுகளை நீக்குவதற்கு நடவடிக்கைகளை எடுக்கக்கூடாதா. இப்பொழுது இந்தச் சட்டம் எந்த அளவிற்கு நிறைவேற்றப்பட்டு வருகிறது, குறைபாடு என்ன என்று கண்டறியக்கூடாதா என்று கேட்டார்கள். அரசாங்கம் 'ஒன் மேன் கமிஷனை' நியமித்தது. ஸ்பெஷல் ஆபீசர் நியமிக்கப்பட்டு, தமிழ் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து வியாபாரிகளையும், தியேட்டர் நடத்துபவர்களையும் பார்த்து



கருத்துக்களைக் கேட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கை மிக விரைவாக வரும் என்று எதிர்பார்க்கிறோம். இந்தக் கேளிக்கை வரி சம்பந்தமாகவும், மற்ற வரி விதிப்புச் சட்டத்திலும் உள்ள குறைபாடுகளைக் களைந்து நல்லமுறையில் கொண்டுவரலாம் என்று இருக்கிறது. தேவைப்படுமானால் அந்த நிலைமையும் கொண்டு வரப்படும்.

வரி ஏய்ப்பு இருக்கிறது என்று சொல்லி அதற்கு அரசாங்கம் தான் காரணம் என்ற குற்றச்சாட்டைக் கூறினார்கள். ஒருவன் திருடுகிறான் அவனைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று சட்டம் கொண்டுவந்தால் அப்பொழுது அரசாங்கமே திருடன் என்று கூறுவது எப்படிப் பொருந்தும் என்று தெரியவில்லை. திருட்டுத் தொழிலைக் கண்டுபிடிப்பதற்காக இந்தத் திருத்தங்கள் கொண்டு வரப்படுகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அம்மையார் அவர்கள் சொன்னார்கள், நான் பல வழக்குகளில் ஆஜராகியிருக்கிறேன், சினிமாக்காரர்களுக்காக வழக்காடியிருக்கிறேன், அதைப் பார்க்கும்பொழுது வரி ஏய்ப்பு இருக்கிறது என்றுதான் சொன்னார்கள், அதற்கான காரணத்தைத்தான் சொன்னார்களே தவிர, இல்லை என்று சொல்லவில்லை. அப்படிப்பட்டவர்களைக் கண்டுபிடிக்கத்தான் இதுபோன்ற சட்டங்களைக் கொண்டுவருகிறோம். வரி ஏய்ப்பவர்கள் யார் என்று பார்த்தால் சாதாரணமானவர்கள் மட்டுமல்ல, பெரிய இடத்திலுள்ளவர்களும் இருக்கிறார்கள். மாநில அரசு வரியை ஏய்ப்பவர்கள், மத்திய அரசு வரியை ஏய்ப்பவர்கள் என்று பலதரப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்களைக் கண்டுபிடிக்கவும் சட்டத்தின் துணையோடு நடவடிக்கை எடுக்க முன்வருகிறது. எனவே, இந்தத் திருத்தம் மிகவும் அவசியம் என்று கூறி இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று இந்த மாமன்றத்தைக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி : "தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

## இணைப்பு I

**(149-ம் பக்கத்தில் வெள்ளிக்குறியிட்ட வினா எண் 516-க்கான விடையைக் காண்க.)**

| மாவட்டங்கள். | கண் புரைக்கு அறுவை சிகிச்சை பெற்றவர்கள். | கண் பரிசோதனை செய்து அறிவுரை வழங்கியது. | இதர அறுவை சிகிச்சைகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 சென்னை .. .. | 393 | 1,238 | .. |
| 2 செங்கல்பட்டு .. | 3,164 | 3,274 | 2 |
| 3 வட ஆர்க்காடு .. | 3,906 | 4,499 | 8 |
| 4 தென்னாற்காடு .. | 3,403 | 6,145 | 45 |
| 5 தஞ்சாவூர் .. | 7,105 | 4,527 | 220 |
| 6 தருமபுரி .. .. | 1,269 | 4,119 | 3 |
| 7 கோயம்புத்தூர் .. | 8,399 | 6,528 | 94 |
| 8 திருச்சிராப்பள்ளி .. | 6,083 | 4,267 | 48 |
| 9 சேலம் .. .. | 5,131 | 3,937 | 114 |
| 10 நீலகிரி .. .. | 357 | 1,320 | .. |
| 11 மதுரை .. .. | 6,476 | 5,192 | 130 |
| 12 இராமநாதபுரம் .. | 3,737 | 2,339 | 105 |
| 13 திருநெல்வேலி .. | 4,293 | 2,479 | 79 |
| 14 கன்னியாகுமரி .. | 273 | 1,200 | 33 |
| மொத்தம் .. | 53,146 | 52,064 | 876 |

## இணைப்பு II

[160-ம் பக்கத்தில் வெள்ளிக்குறியிட்ட வினா எண் 494-க்கான விடையைக் காண்க.]

### மூன்றாவது குழுவின் பரிந்துரைகள்.

**பயிர் பாதுகாப்பு.**—இந்தக் குழுவில் 19 விவசாயப் பெருமக்களும், 8 விவசாய அதிகாரிகளும் விவாதத்தில் கலந்து கொண்டனர். இக்குழு பயறு வகைகளைத் தாக்கும் பூச்சி





மற்றும் நோய்களைப் பற்றியும் அவைகளைத் தடுக்கும் முறைகளைப் பற்றியும் விவாதித்தது. கீழ்க்கண்ட முறைகளைக் கையாள முடிவெடுக்கப்பட்டது.

**பூச்சிகளைத் தடுக்கும் முறை.**—1. துவரையைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த பி.எச்.சி. 10 சதம் தூளையும் டி.டி.டி. 5 சதத் தூள்களையும் சம விகிதத்தில் கலந்து ஏக்கருக்கு 10 கிலோ விதம், பூவிடும் சமயத்திலிருந்து 15 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை தூவுதல், பூ விடுவதற்கு முன்பு பூச்சிகள் தென்பட்டால் மேலே சொன்ன மருந்துகளை ஒரு முறை தூவுதல், இம் மருந்துகளைத் தவிர ட்ப்டாக்ஸ் 5 சதம் அல்லது டிரைதியான் 2 சதம் அல்லது கார்பரில் 10 சதம் மருந்து சிபாரிசு செய்யப்படுகிறது.

2. பச்சைப்பயிறு, உளுந்து வகைகளைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த பி.எச்.சி. 10 சதம் அல்லது பி.எச்.சி. 10 சதத் தூளையும் டி.டி.டி. 5 சதத்தூளையும் கலந்து ஏக்கருக்கு 10 கிலோ விதம் விதைத்து 35-ம் நாளும், 50-ம் நாளும் தூவுதல், துவரைக்கு சிபாரிசு செய்து மற்ற மருந்துகளையும் உபயோகிக்கலாம்.

3. கொண்டக் கடலையைத் தாக்கும் பூச்சியைத் தடுக்க பூவிடும் சமயத்தில் ஒரு முறை பி.எச்.சி. 10 சதம் தூளையும் டி.டி.டி. 5 சதம் தூளையும் சம பாகத்தில் கலந்து எக்காராவுக்கு 10 கிலோ விதம் தூவவும், துவரைக்கு சிபாரிசு செய்யப்பட்ட ஏதாவது ஒரு மருந்தையும் தூவலாம்.

4. சேமித்து வைக்கும் பயறு விதைகளைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த கீழ்க்கண்ட ஏதாவது ஒரு மருந்துடன் கலந்து வைத்தல் :

(அ) மாலத்தியான் 4 சதவிகிதம் தூள்—½ கிலோ மருந்து—ஒரு குவிண்டால் விதைக்கு.

(ஆ) பெனிட்ரோத்தியான் 2 சதவிகிதம்—½ கிலோ மருந்து—ஒரு குவிண்டால் விதைக்கு.

(இ) கார்பரில் 10 சதவிகிதம் தூள்—200 கிராம் மருந்து—ஒரு குவிண்டாலுக்கு.

மேற்கண்ட மருந்துகள் கலந்து விதைகளை உணவிற்காகப் பயன்படுத்தக்கூடாது.

**நோய்கள் :**—துவரையில் வாடல் நோயைத் தடுக்க 0.1 சத விகிதம் சிராசன் மருந்துக் கலவையை, நோய் அறிகுறி தென்படும் பொழுது செடியின் வேர் பாகத்தில் மண்ணில் நன்றாக கனையும்படி தெளித்தல்.

2. பயிரில் தோன்றும் தேமல் நோயைத் தடுக்க, பூச்சிகளைக் கட்டுப்படுத்த உபயோகிக்கும் மருந்துகளே இந்நோயைப் பரப்பும் பூச்சியை ஒழிப்பதன்மூலம் ஓரளவு தேமல் நோய் கட்டுப்படுத்தப் படும். கந்தகத் தூளை ஏக்கராவுக்கு 10 கிலோ விதம் தூவுதல் மூலம் ஓரளவு இந்த நோயைக் கட்டுப்படுத்தலாம்.

3. இக்குழு, பூச்சி நோய்களை எதிர்க்கும் சக்தியுள்ள பயிறு வகைகளை கண்டுபிடித்து விநியோகிக்கும்படி சிபாரிசு செய்தது.

4. மேலே சிபாரிசு செய்யப்பட்ட பூச்சி பூஞ்சான மருந்துகளை விவசாய டெப்போக்களின் மூலம் விவசாயிகளுக்குக் கிடைக்கும் படி ஏற்பாடு செய்தல்.

5. மருந்துகளுக்கு 50 சத மான்யம் கொடுக்க வேண்டும் என்றும் சிபாரிசு செய்தது.

6. நிரூபண வயல்கள் மூலம் மேற்கூறிய தடுப்பு முறைகளின் நன்மைகளை விளக்க வேண்டும்.

7. இக்குழு, மேற்சொன்ன தடுப்பு முறைகளை உடனடியாக வானொலி மூலம் விவசாயப் பெருங்குடி மக்களின் நன்மைக்காக விளம்பரப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறது.

Recommendation of Third group of State Seminar on Pulses.

*Plant Protection.*

Nineteen Progressive farmers and 8 Agricultural Scientists took part in the discussion. The group discussed about the various pests and diseases that affects pulse crops and its control measures and recommended the following :—

*Control of pests.*—For the control of pests on redgram equal quantities of BHC 10 per cent and DDT 5 per cent to be dusted 3 times at the rate of 10 kgs. per acre in an interval of 15 days immediately after the commencement of flowering. If pests are



noticed even before flowering, the same pesticides must be dusted. Dyptrex 5 per cent or Trithion 2 per cent or 10 per cent carbaryl are also recommended for use for the control of pests on redgram.

For the control of pests on greengram, dusting of BHC 10 per cent or BHC 10 per cent and DDT 5 per cent mixture at rate of 10 kgs. per acre on 35th and 50th day is recommended. The pesticides recommended for redgram may also be used for greengram.

For the control of Bengalgram pests dusting of equal quantity of BHC 10 per cent and DDT 5 per cent at rate of 10 kgs. per acre at the time of flowering is recommended or any one of the pesticides recommended for redgram can be used.

The following pesticides are recommended for the control of pests on stored pulses seeds :—

(*a*) 1/2 kg. of malathion 4 per cent dust should be used for 100 kgs. of seeds.

(*b*) 1/2 kg. of 2 per cent periotrothion dust for 100 kgs. of seeds.

(*c*) 200 grams of 10 per cent carbaryl dust for 100 kgs. of seeds.

The treated seeds with pesticides should not be used for consumption.

1. Redgram wilt can be controlled by drenching 0.1 per cent wet cereson near the root region of the affected plant.

2. For the control of virus disease on crop the insert vector should be controlled. Dusting of sulphur dust at ratio 10 kgs. per acre will control the disease to certain extent.

3. The group has recommended for the distribution of new varieties capable of withstanding the attack of pests and diseases.

4. To make easy availability of pesticides and fungicides in the agricultural depots is recommended for the control of pests and diseases on pulses.

5. It is also recommended to grant 50 per cent subsidy for plant protection chemicals.

6. The benefit of control measures should be popularised through demonstration plots.

7. The group also suggested to make effective publicity through the All-India Radio about the control measure to be adopted for the benefit of farmers.

## இணைப்பு III

[165 ம் பக்கத்தில் வெள்ளிக்குறியிட்ட வினா எண் 498-க்கான விடையைக் காண்க.]

(*a*) & (*b*)

Thirteen Sindhi Bulls and 11 Bullocks were sold during the year 1972–73. The details are furnished below :—

(i) Four Bulls to Andaman State at Rs. 1,500 each.

(ii) Eight Bulls to Orissa State at Rs. 1,500 each.

(iii) One Bull to Central Jail, Vellore, at Rs. 800 each.

(iv) Seven Bullocks to Central Jail, Vellore, at Rs. 400 each.

(v) Four Bullocks to Central Jail, Madurai at Rs. 400 each.

(*c*) The main object of the Farm is to produce and supply Pedigree Bulls to upgrade local breed. The above Bulls were sold to other States on requisition.

# தமிழ் நாடு சட்டப் பேரவை.

## சனிக்கிழமை, 1973 டிசம்பர் 1.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 539, 540, 541, 542 ஆகிய எண்களுள்ள வினாக்கள் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

### இருப்புப் பாதைகளின் குறுக்கே மேம்பாலங்கள்

*543 வினா—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்-மதுரை நெடுஞ்சாலையில் ஐந்து இடங்களில் குறுக்கிடும் இருப்புப்பாதைமீது மேம்பாலங்கள் கட்டும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும் ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) & (இ) தேசீய நெடுஞ்சாலை 7-ல் திண்டுக்கல்–மதுரை பிரிவில் நான்கு இடங்களில் மாத்திரமே இருப்புப்பாதையைக் கடக்க வேண்டியுள்ளது. இரண்டு இடங்களில் மாற்றுச்சாலை அமைக்கவும் இரண்டு இடங்களில் மேம்பாலம் கட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. வேலை 1973-74-ல் துவக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. வா.மை. அப்துல் ஜப்பார் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சாதகமான பதில் அளித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஐந்தாவதாக பரவை என்னும் இடத்திலும் ஒரு மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா ?

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Level crossing at Mile 269/6 (in between Ambathurai and Kodaikanal Road Railway Stations).

Level crossings at Mile 276/2 and 278/5 (in between Kodaikanal Road, Pallipatti and Vadipatti Railway Stations).

Level crossing at M. 239/3 (in between Sholavandan and Samayanallur Railway Stations) '
நான் குறிப்பிட்ட இந்த நான்கு வேலைகள் எடுத்துக்கொள்ளப்படுவதாக இருக்கின்றன.

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, நெடுஞ்சாலையைக் கடக்கிற மேம்பாலம் மண் பாலமாகக் கட்டப்படாமல் கான்க்ரிட் பாலமாகக் கட்டப்பட்டால், நடைமுறையில் செலவு குறைவாக இருக்கும் சிக்கனமாகவும் இருக்கும் என்று பொறியாளர்கள் கூறுகிறார்களே, அதை அரசு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப உ. சண்முகம் :** இருப்புப் பாதையைக் கடக்கும் இடத்தில் கான்க்ரிட் போடுவார்கள். 'அப்ரோச் ரோடு' மண் சாலையாகத்தான் போடவேண்டும்.

**திரு. கே. டி கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, நான்கு இடங்களில் எந்தெந்த இடங்களில் 'ஓவர்ப்ரிட்ஜ்' போடப்படுகிறது என்பதை அறியலாமா ?

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Level crossing in between Ambathurai and Kodaikanal Road Railway Stations : The proposal for the construction of an overbridge is included in the Fourth Plan.

Level crossings in between Kodaikanal Road, Pallipatti and Vadipa ti Railway Stations : The work of forming a diversion route avoiding the two level-crossings has been sanctioned.

Level crossing in between Sholavandan and Samayanallur Railway Stations : The proposal for the construction of an overbridge is included in the Fourth Plan. The approximate cost of the work will be about Rs. 16.00 lakhs.

மாற்றுப் பாதைகள் இரண்டு இடங்களிலும், ஓவர் பிரிட்ஜ் இரண்டு இடங்களிலும் அமைக்கப்படுகின்றன.



***544 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரில், வடகோவையையும் காந்திபுரத்தையும் இணைக்கும் வகையில் இரயில் பாதையின் குறுக்கே கட்டப்படவிருக்கும் மேம்பாலத் திட்டக் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆமெனில், விவரமென்ன ?

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :** (அ) & (இ) இச்செயற் குறிப்பு கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அரசின் பரிசீலனைக்காக, விரிவான செயற் குறிப்புகளை அனுப்புமாறு நெடுஞ்சாலைகள்-கிராமப் பணிகள் தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அவை எதிர்பார்க்கப்படுகின்றன.

### வாகைகுளத்தில் விமான நிலையம்

***545 வினா—திரு. என். கிட்டப்பா :**
**திரு. என். கே. பழனிசாமி :** } மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி தாலுக்காவில் வாகைகுளம் கிராமத்தில் விமான நிலையம் அமைத்திடும் திட்டத்தை விரைவுபடுத்தக் கோரி மத்திய அரசினை, மாநில அரசு வலியுறுத்தியுள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தூத்துக்குடிக்கு அருகே விமான நிலையம் ஒன்றை அமைப்பதற்கான அவசியத்தைப்பற்றி இந்திய அரசிடம் இவ்வரசு பன்முறை வற்புறுத்திக் கூறி வந்துள்ளது. தூத்துக்குடிக்கு விமானப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்துவது நிதி நிலையைப் பொறுத்ததாகும் என்று இந்திய அரசு நமக்குத் தெரிவித்துள்ளது.

**திரு என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, தமிழகத்தில் விமான நிலையங்கள் ஏனைய வட மாநிலங்களில் இருப்பதைவிட மிகக் குறைவாக இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தத் தூத்துக்குடி விமான நிலையத்தினை ஏற்படுத்த மேலும் துரிதப்படுத்தி விரைவில் அது அமைக்கப்பட அரசு ஆவன செய்யுமா?

[1973 டிசம்பர் 1

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தென் மாநிலத்தில் குறைவாக விமான நிலையங்கள் இருக்கின்றன என்ற காரணத்தை நாம் காட்ட முடியாது. தூத்துக்குடியில் விமான நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி மத்திய அரசுக்கு நாம் எழுதியிருக்கிறோம்.

**திரு. என். கே. பழனிசாமி:** தூத்துக்குடியில் தொழில் அதிகமாக அபிவிருத்தி ஆகிக்கொண்டிருக்கிறது. ஆகவே, தூத்துக்குடியில் ஒரு விமான நிலையம் ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை மத்திய அரசுக்கு நேரடியாகச் சென்று வற்புறுத்த ஆவன செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, அமைச்சர்கள் அடிக்கடி நேரடியாகச் செல்லும்போது இதுபற்றி விவாதிக்கிறார்கள். மத்திய அரசு, நிதி நிலையைப் பொறுத்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இன்னும் அவர்கள் ஒப்புதல் அளிக்கவில்லை.

**திரு. இரா. இராமலிங்கம் :** தலைவர் அவர்களே, யுத்த காலத்தில் உபயோகமாக இருந்த கயத்தார் விமான நிலையத்தை உபயோகிக்கலாம் என்று மத்திய அரசு கருதுவதாகத் தெரிகிறதே அது உண்மையா ? தூத்துக்குடியிலிருந்து 25 மைல் தூரத்தில் கயத்தார் இருக்கிறது. அதற்குச் சரியான போக்குவரத்து வசதி இல்லை. ஆகவே. நெடுஞ்சாலையில் அமைந்திருக்கிற, தற்சமயம் அரசின் கருத்திலே இருக்கும் வாகைகுளத்தில் விமான நிலையம் அமைக்க மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. ப. உ சண்முகம் :** தலைவர் அவர்களே, தூத்துக்குடிக்கு அருகில் விமான நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்பது தமிழக அரசின் கோரிக்கை. அது எந்த இடத்தில் வைக்கலாம் என்பது குறித்து மத்திய அரசு தமிழக அரசைக் கலக்கும்போது அதுபற்றி இறுதியாக முடிவு செய்யலாம்.



1973 டிசம்பர் 1]

### நங்கனி ஆற்றின் குறுக்கே தடுப்பு அணை

* 546 வினா—திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பரப்பலாறு திட்டத்தின்கீழ் நங்கனி ஆற்றில் பள்ளப்பட்டி அருகாமையில் தடுப்பு அணை (check-dam) ஒன்று கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இல்லை.

**திரு வா. மை. அப்துல் ஜப்பார் :** தலைவர் அவர்களே, பரப்பலாறு திட்டத்தின்கீழ் ஏழெட்டு செக் டாம்கள் கட்டப்பட்டாலும், பள்ளப்பட்டிக்கு அருகில் கட்டப்படாமல் விடப்படுகிறது. அங்கு ஐம்பது, அறுபது ஆண்டுகளுக்கு முன்பு பழைய அணை ஒன்று இருந்து அது இப்பொழுது உடைந்திருக்கிறது. பழைய ஆயக்கட்டில் தண்ணீர் தேங்கியிருந்து பல இடங்கள் தூர்ந்திருக்கின்றன. ஆகவே, தயவுசெய்து பள்ளப்பட்டிக்கு அருகில் ஒரு செக் டாம் அமைப்பது குறித்து அரசு அருள்கூர்ந்து மறு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற பள்ளப்பட்டி அணைக்குச் செல்லும் வாய்க்கால்கள் தூர்ந்திருக்கின்றன. நிலங்களில் மண் நிரம்பியிருந்தாலும்கூட எடுத்துவிடலாம். ஆனால், கட்டடங்கள்கூட அமைத்திருக்கிறார்கள் என்ற குறிப்பு இருக்கிறது. ஆகவே, மாற்று யோசனை சொல்லும்படியாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தலைமைப் பொறியாளர் கடிதம் எழுதியும் இதுவரை பதில் இல்லை என்ற அளவுக்குத் தகவல் இருக்கிறது. அது விவரம் எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தலைமைப் பொறியாளரோடு தொடர்பு கொண்டால் மாற்று யோசனைபற்றி அரசு பரிசீலிக்கும்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** தலைமைச் செயலாளர் இடமிருந்து வந்த கடிதத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பாகவே தங்கள் பெயருக்கு மாற்றுத் திட்டம் ஒன்று அனுப்பியிருக்கிறேன். அது பரிசீலனையில் எடுத்துக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** என்னிடமுள்ள தகவல் 29—5—1973 தேதி மாற்று யோசனை தருமாறு தலைமைச் செயலாளர் எழுதியதாகத் தகவல் இருக்கிறது. மேற்கொண்டு தகவல் இல்லை. உறுப்பினர் அவர்கள் அப்படி அவர்களுக்கு எழுதியிருந்தால் அது பரிசிலனையில் இருக்கும். அது முடிந்து அரசாங்கத்திற்கு வந்த பிறகு அரசாங்கம் பரிசீலித்து முடிவு எடுக்கும்.

### நசுவினி ஆற்றின் குறுக்கே அணை

* 547 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டைக்கு அருகிலுள்ள நசுவினி ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அத்திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. ப. உ சண்முகம் :** (அ) ஆம்.

(இ) இத்திட்ட மதிப்பீட்டிற்கு அரசினரால் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு தலைமைப் பொறியாளரால் தொழில் நுட்ப அங்கிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தம் முடிவு செய்தபின் இத்திட்ட வேலைகள் துவங்கப்படும்.

**திரு. பெ சௌந்தரபாண்டியன் :** இந்த நசுவினி ஆற்றுத் திட்டத்திற்கு எவ்வளவு ரூபாய் மதிப்பீடு போடப்பட்டுள்ளது ? அதனால் எவ்வளவு ஏக்கர் பாசன வசதி கிடைக்கும் ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இத் திட்டத்திற்கு 20 லட்சம் ரூபாய் செலவாகும். இதனால் 3,551 ஏக்கர் நிலப்பாப்பு பலன் அடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அமராவதி ஆற்றிலிருந்து பிரியும் கால்வாய்கள்

* 548 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில், அமராவதி ஆற்றிலிருந்து பிரிந்து செல்லும் கால்வாய்களைச் சீரமைக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) இத்திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** எந்தெந்த வாய்க்கால்கள் சீரமைக்கப்பட்டு வருகின்றன ? போடப்பட்டுள்ள மதிப்பீடு எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அரசு சிறப்பு சிறிய நீர்ப் பாசனத் திட்டத்தின்கீழ் ரூ. 13,12,850-க்கு அங்கிகாரம் அளிக்கப் பட்டிருக்கிறது. 11 கால்வாய்களில் 1969-ல் 7 கால்வாய்களும், 71-ல் மீதமுள்ள 4 கால்வாய்களிலும் வேலை துவங்கப்பட்டுவிட்டது. அந்த 7 கால்வாய்களில் 75 சதவிகிதம் வேலை முடிந்துவிட்டது. மீதம் இருப்பதில் 45 சதவிகிதம் நடந்திருக்கிறது. தாமதத்திற்குக் காரணம் ஆற்றில் தண்ணீர் விடுகிற வேலை செய்யும் நாட்கள் குறைவான நாட்களாகும். அதனால் வேலை தாமதப்பட்டிருக்கிறது. இருந்தாலும் 1975-க்குள்ளாக இவற்றை முடிக்கவேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** அமராவதி ஆற்றின் பிளோயில் ஏராளமான கால்வாய்கள் இருக்கின்றன. அதில் 11 கால்வாய்களில் வேலை முடிந்துள்ளதா ? முடிய இருக்கிற கால்வாய்கள் எவ்வளவு? என்ற விவரங்களைக் கேட்டேன். அதற்குப் பதில் இல்லை. அது பற்றிய விவரங்களை அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :** 11 கால்வாய்கள் உள்ளன என்று தகவல் தெரிவித்தேன். ஏழு கால்வாய்களில் வேலை 69-ல் துவங்கப்பட்டது என்று தெரிவித்தேன். நான்கு கால்வாய்களில் வேலை 71-ல் துவங்கப்பட்டது என்று தெரிவித்தேன். பதினொன்றிலும் வேலை துவங்கப்பட்டதாகத் தகவல் இருக்கிறது. பெயர்கள் வேண்டுமானால் தனிக் கேள்வி வேண்டும். அதுபற்றி என்னிடம் இப்போது தகவல் இல்லை.

### நங்கனி ஆற்றின் குறுக்கே பாலம்

* 549 வினா—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரவக்குறிச்சி--கரூர் நெடுஞ்சாலையில் நங்கனி ஆற்றின் மீது தற்போது அமைந்துள்ள படுக்கை பாலத்திற்கு (cause way)

பதில் மேம்பாலம் ஒன்று கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: நங்கனி ஆற்றில் வெள்ளம் வரும்போது தரையோடு தரையாக இருக்கக்கூடிய இந்த காஸ்வே மீது வெள்ளம் போகும்போது போக்குவரத்து தடைப்படுகிறது. ஆகவே அந்த காஸ்வேயை—அது ஒரு சிறிய காஸ்வே—அதனால் அதிகச் செலவாகாது—ஒரு மேம்பாலமாகக் கட்டுவதற்கு இனி யாவது நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாற்றுப்பாதை ஒன்றிருக்கிறது. அதன்மூலம் போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாமல் நடைபெற்று வருகிறது. அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டது போல் கட்டவேண்டுமென்றால் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து அரசாங்கத்தினிடம் அதை ஒப்படை செய்யவேண்டும். அப்படிச் செய்த பிறகு தமிழ்நாடு அரசாங்கத்தின் சொந்த நிதியிலிருந்து செய்ய வேண்டியிருக்கிறதால் நிதிநிலைமை கருத்தில் கொண்டு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதை மனதில் கொண்டு பின்னால் பரிசீலிக்கப்படும்.

திரு. ஆ. பரந்தாமன்: இரண்டு மாநிலங்களுக்கிடையே உள்ள பொருளாதார உறவுகளை ஊக்குவிக்கிற வகையில் அத்திட்டத்தின் கீழ் பல திட்டங்களை தமிழ்நாடு உருவாக்கி இந்திய அரசின் ஒப்புதலுக்காக சென்ற மார்ச் அனுப்பப்பட்டு மாதங்கள் எட்டு ஆயினும் இன்னும் மத்திய அரசிடமிருந்து அதற்கான ஒப்புதல் வரவில்லையென்று தலைமைப் பொறியாளர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே நம் அரசு . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா, நங்கனி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதுபற்றியது.

Thiru A. PARANDHAMAN: In connection with that only, I am asking.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை எப்படி அதன்கீழ் கொண்டுவர முடியும்?



*Industrial Estate near Chingleput*

* 550 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to open an Industrial Estate near Chingleput; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

*Production of spectacles*

* 551 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to start a factory for the production of spectacle frames and glasses in the public sector in this State: and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ்: இவைகளின் விலைகள் உயர்ந்திருக்கின்றன. ஆகவே பப்ளிக் செக்டாரில் இப்படி ஒரு தொழிற்சாலை அமைப்பது பொதுமக்களுக்கு உபகாரமாக இருக்கும். ஆதலால் இப்படி ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

*Boycott by Advocates*

* 552 *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Advocates of the State boycotted Courts about the 30th April 1973; and

(*b*) if so the reasons therefor?

[1973 டிசம்பர் 1

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது பாலிடெக்னிக் தொடங்குவதில் சில சிக்கல்கள் இருக்கின்றன என்று கூறினார்கள். அந்தச் சிக்கல்கள் என்ன என்பதனையும் அந்தச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதனையும் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** சிக்கல்கள் என்று நான் குறிப்பிட்டது இந்த பாலிடெக்னிக் நடத்துவதற்கு முழு உதவியும் மத்திய அரசு உலக வங்கியிலிருந்து பெற்றுத் தருகிறது. அத்திட்டத்தின் அடிப்படையில்தான் நாம் முதலில் இந்த பாலி டெக்னிக்கை தொடங்குவது என்று தொடங்கினோம். ஆனால் அந்தப் பணம் வரவேண்டியதில் இடையில் சிற்சில காரியங்கள் நடைபெற வேண்டியிருக்கிறது. அவை நடந்தவுடன் தொடங்கப் படும்.

**திரு. நா. வீராசாமி:** நம் நாடு விவசாயத் தொழிலை மைய மாகக் கொண்டிருக்கிற நாடு. இந்த நாட்டில் பாலிடெக்னிக்ஸ் திறப்பது என்பது ஒரு நல்ல வரவேற்கத் தக்க கொள்கையாகும். அப்படியிருக்கின்ற நிலைமையில் மாணவர்கள் எவ்வளவு ஆண்டுக் காலம் இந்தக் கோர்ஸ்க்கு படிக்கவேண்டும்? அவர்கள் படித்த தற்குப் பின் என்ன பட்டம் கொடுக்கப்படப் போகிறது ? எல்.ஸி.இ., எல்.இ.இ. போன்ற டிப்ளமாக்கள் இருக்கின்றன. அப்படி விவசாயத் துறையில் திறக்கப் போகிற பாலிடெக்னிக்கில் படிப்புக் காலம் எவ்வளவு ஆண்டுகள்? கொடுக்கப் போகும் அந்த டிப்ளமாவிற்கு என்ன பெயர் ? என்ற விவரங்களை அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** நமது மாநிலத்தில் அக்ரிகல்சுரல் என்ஜினியரிங் காலேஜ், அது கூட சென்ற ஆண்டு தான் தொடங்கப்பட்டது. அக்ரிகல்சுரல் என்ஜினியரிங் படித்து, அதிலே பரிட்சைகளில் தேறுகிறவர்களுக்குப் பட்டம் கொடுக்கப் படுகிறது (பி.ஈ. அக்ரிகல்சர்). ஆனால் பாலிடெக்னிக்கில் படிக்க கிறவர்களுக்கு டிப்ளமா கொடுக்கவேண்டும் என்று நாம் கருதுகிறோம். ஆனால், இதற்குப் பண உதவி செய்கிறவர்கள் டிப்ளமா கூட கொடுக்க வேண்டாம், டிப்ளமா கொடுத்தால் எல்லோரும் அரசாங்க வேலைகளையே கேட்டுக் கொண்டிருப் பார்கள், தனியாக செயல்படமாட்டார்கள், ஆகவே டிப்ளமா என்று கொடுக்காமல் 3 ஆண்டுகள் படித்தவர்களுக்கு சர்டிபிகேட் கொடுத்தால் போதும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.



1973 டிசம்பர் 1]

அண்ணா பண்ணை ஈட்டியுள்ள லாபம்.

*557. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண் மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

1972-73ம் ஆண்டில், குடுமியாமலை அண்ணா விவசாயப் பண்ணையின் வருமானம் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** குடுமியாமலை அண்ணாப் பண்ணையில் 1972-73ம் ஆண்டில் ஏறத்தாழ ரூ. 1,40,000 நிகர வருமானம் கிடைத்துள்ளது.

**திரு. என். கிட்டப்பா:** குடுமியாமலை அண்ணா பண்ணையில் விவசாயத்திற்குப் பயன்படவேண்டிய மொத்த ஏக்கர் நிலம் எவ்வளவு ? இதுவரையில் விவசாயத்திற்கு பயன்பட்டு வருகிற நிலத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு ? மீதி இருக்கிற இடங்களை எப்பொழுது விவசாயத்திற்குரிய நிலமாக பண்ணை மூலம் ஆக்கப்படுவதற்கு வேலை செய்யப்படுகிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** குடுமியாமலை அண்ணா பண்ணையில் மொத்தம் ஏறத்தாழ 1,000 ஏக்கர் நிலம் விவசாயத் திற்கு வருவதற்கு உண்டு. எல்லாம் இன்னமும் விவசாயத்திற்கு வரவில்லை. அங்கு நடப்பது முக்கியமாக ஆராய்ச்சி என்பதை நண்பர் நினைவில் கொள்ள வேண்டும். ஏற்கனவே அங்கு ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறும்பொழுது குடுமியாமலை அண்ணா விவசாயப் பண்ணை யில் 1972-73-ல் ரூ. 1,40,000 வருமானம் என்று கூறினார்கள். அந்த வருமானம் வருவதற்கு அரசாங்கம் செய்துவருகிற செலவு என்ன? அதில் அதிகாரிகளுக்குக் கொடுக்கிற சம்பளங்களும் உட்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** நான் கூறுகிறபொழுது நிகர வருமானம் என்று சொன்னேன். நிகர என்று சொன்னால் செலவு நீக்கி வருகிற வருமானம் அது. அதிலே பெரிய ஆபீசர்கள்

தவிர, மற்ற எல்லா சிப்பந்திகளின் செலவும் அடங்கியிருக்கிறது. ஆக, இதெல்லாம் நீக்கி நிகர வருமானம் ஏறத்தாழ ஆயிரம் ஏக்கர் இருப்பதற்கு ரூ. 1,40,000 பெரிய வருமானம் அல்ல.

**திரு. சோ. அழகர்சாமி :** குடுமியாமலை அண்ணா விவசாயப் பண்ணையில் 1,000 ஏக்கர் சாகுபடிக்கு இருப்பதாகச் சொன்னார்கள். அதிலே சாகுபடி செய்யப்படாத நிலமும் இருக்கிறது. அங்கே இப்பொழுது ஆராய்ச்சிக்கு மட்டும் சில பயிற்சிகள் நடைபெறுவதை விட்டுவிட்டு, விவசாயத்திற்கு இன்னும் அதிகமாக ஏக்கரா நிலத்தைக் கொண்டுவரக்கூடிய நிலைமையை உண்டாக்க முடியுமா? மேலும், பொறுக்கு விதைகளை வேறு கம்பெனிகளில் வாங்கிக் கொடுப்பதால், அதுவும் குறிப்பாக A/3 கம்பை வாங்கிக் கொடுப்பதால் எங்கள் வட்டாரத்தில் ஏகப்பட்ட நஷ்டம் ஆகிவிடுகிறது என்று கூக்குரல் போடுகிறார்கள் விவசாயிகள். ஆகவே, அதையும் விசாரணை செய்து அம்மாதிரி விவசாயிகளுக்கு வேண்டிய விதைகளைத் தயார் பண்ணக்கூடிய செயலை அரசுத் துறையிலே செய்வதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அங்கு ஒரு விதைப் பண்ணை இருக்கிறது. அந்த விதைப் பண்ணையில் நவீன இயந்திரங்களும் இருக்கின்றன. அங்கே தயார் செயயப்படுகின்ற விதைகள் முதல் தரமானவை, அக்ரோ மார்க் என்று சொல்லப்பட்ட மார்க் போடப்படுகிறது. அதற்கான சர்டிபிகேட் சர்டிஃபைட் ஸீட்ஸ் என்று சான்றிதழும் வழங்கப்படுகிறது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** இந்த ஆராய்ச்சிப் பண்ணையில் தண்ணீர் போதிய அளவு கிடைக்கிறதா? கிடைத்தால் தண்ணீர் இரவைப் பயிர் சம்பந்தமாக ஆராய்ச்சியும், அதே சமயத்தில் மானாவாரியாக சாகுபடி செய்யக்கூடிய ஆராய்ச்சியும், சேர்த்து ஆராய்ச்சி நடத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அங்கே தண்ணீர் போதுமான அளவு இருக்கிறது என்று நான் சொல்லமாட்டேன். குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலிருந்து வருகிற உறுப்பினர் அவர்கள் தண்ணீர் ஏராளமாகக் கிடைக்கக்கூடிய பகுதியிலிருந்து வருகிறவர்கள், அதற்கும் குடுமியாமலை அண்ணா பண்ணைக்கும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. இரவை மூலம் தண்ணீர் கிடைக்கிறது. அதே சமயத்தில் நான் சொல்ல விரும்புவது,



அங்கே பருப்பு வகைகள் 'பல்ஸஸ்' நல்ல முறையில் ஆராய்ச்சி செய்யப்படுகிறது. அதற்குப் போதிய அளவு தண்ணீர் கிடைக்கிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** அண்ணா பண்ணையில் தற்பொழுது 1,000 ஏக்கர் நிலம்தான் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். 1,000 ஏக்கரை கூடுதல் ஆக்கவேண்டும் என்ற திட்டம் இருந்ததே, அது எப்பொழுது செயலபடுத்தப்படும் என்று அறியலாமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, நான் 1,000 ஏக்கர் பயிராகிவிட்டது என்று சொல்லவில்லை. தற்பொழுது பண்ணையில் 1,000 ஏக்கர் இருக்கிறது. பெரும் பகுதி பயிர் ஆகிறது. ஆயிரம் ஏக்கரும் பயிர் ஆனதற்குப் பிற்பாடு பண்ணையோடு சேர்ப்பதற்குத் தகுந்த நிலங்கள் இருக்கின்றன. அதை விரிவுபடுத்துவதற்கு அந்தத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்.

**திரு. கே. கந்தசாமி :** அண்ணா பண்ணையில் விவசாய ஆராய்ச்சி நடைபெறுகிறபொழுது உரம் பற்றாக்குறை இருக்கிற இந்த நேரத்தில் பர்டிலைஸர்ஸ் குறைவாகக் கொடுத்தாலும் நல்ல முறையில் பயன்தரக்கூடிய அளவுக்குப் பயிர் வகைகள் போட்டுக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சி செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அங்கேகூட குறைந்த அளவிலே உரத்தைக் கொடுத்து, அதிலே நல்ல பயிர் வருகிற அந்த ஆராய்ச்சி என்று தனியாக நடைபெறவில்லை. அந்த ஆராய்ச்சி வேறு பல பண்ணைகளில் நடைபெறுகிறது. உரத்திற்குப் பதிலாக பவுடர்—பாக்டீரியா, அதாவது நுண் பயிர் பவுடர், விதையிலே சேர்த்து விதைத்தால், காற்றிலிருக்கிற நைட்ரஜனையும் சேர்த்து பயிருக்கு உணவு ஊட்டும் இருக்கின்றன. அவை விவசாயிகளுக்குக் கொஞ்சம் கொடுக்கப்பட்டு வருகிறது. அதுகூட இந்தப் பண்ணையில் பரிட்சை செய்து பார்க்கப்பட்டது.

## வேளாண் பணிக்கழகம்.

* 558. **வினா—திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில், 1972-ஆம் ஆண்டு, அக்டோபரிலிருந்து வேளாண்பணிக்கழகம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது உண்மையா?

[1973 டிசம்பர் 1

(இ) ஆமெனில், இத்திட்டத்தின் குறிக்கோள்களும் நோக்கங்களும் யாவை ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) இந்த வினாவுக்கு இடமில்லை.

*Allotment of tractors*

* 559 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) the number of tractors, indigenous and foreign allotted to the districts of Chingleput, North Arcot and Madras during 1970–71, 1971–72 and 1972–73;

(b) the number actually delivered;

(c) whether there has been any delay in the delivery of these tractors;

(d) if so, the reasons therefor; and

(e) the action taken by the Government to expedite the allotment of these tractors ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : விவர அறிக்கை@ ஒன்று இப்பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். பலராமன் : டிராக்டர்கள் ஒதுக்குவதில் வட ஆற்காடு மாவட்டத்திற்குக் குறைவாகவும், செங்கற்பட்டு மாவட்டத்திற்கு அதிகமாகவும் கொடுத்திருக்கிறார்கள். எந்த அடிப்படையில் அப்படிக் கொடுக்கப்பட்டது? ஏனென்றால் தஞ்சைக்கு அடுத்தபடியாகத் தமிழகத்தில் வடாற்காடு மாவட்டம்தான் உணவு உற்பத்தியில் அதிகம் கொடுத்துக்கொண்டிருக்கிறது. அங்கே விவசாயிகள் டிராக்டர்கள் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அமைச்சர் அதற்குப் பதில் அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : டிராக்டர்களைப் பொறுத்த வரையில் விவசாயிகள் எவ்வளவு கேட்கின்றார்களோ அவ்வளவையும் கூடியவரையில் கொடுத்துக்கொண்டு வருகிறோம்.

---

@ 422-427-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1973 டிசம்பர் 1]

செங்கற்பட்டில் அதிக விவசாயிகள் கேட்டிருக்கக்கூடும். அதனால் ஒரு வேளை அதிகமாக இருக்கிறதோ என்னவோ என்றால் சொல்ல முடியவில்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : டிராக்டர் ஒதுக்கப்படுவதிலிருந்து பார்க்கும்பொழுது செங்கற்பட்டுக்கு அதிகமாகவும், நார்த் ஆற்காட்டுக்கு குறைவாகவும், சென்னைக்கு ஒன்றுமே இல்லாததுமாக இருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்று சொல்லவேண்டும்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : சென்னையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் பற்றி நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால், சென்னையில் டிராக்டர் போட்டு உழுது விவசாயம் நடைபெறக்கூடிய அளவில் நிலம் இல்லாததால் சென்னைக்கு ஒதுக்குவதில்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சென்னையிலே உழுது பயிர் செய்து கொண்டிருந்த இடங்களையெல்லாம் ஹவுசிங் போர்டு எடுத்துவிட்ட காரணத்தினால் பயிரிடுவதற்கு இயலாத நிலைமை ஏற்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : காரணம் ஏதாவது இருக்கலாம். ஆனால் தற்பொழுது சென்னை நகரத்தில் நான் பார்த்தவரையில் எங்கேயும் டிராக்டர் போட்டு உழுது விவசாயம் நடைபெறக்கூடிய இடம் காணப்படவில்லை. அப்படி ஒரு வேளை இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவது ஒரு இடத்தைச் சொல்லி, அந்த இடத்தில் டிராக்டர் போட்டு உழுது விவசாயம் செய்யக்கூடிய அளவில் விஸ்தீரணம் இருக்கிறது, அப்படிப்பட்ட நிலம் விவசாயத்திற்கு இருக்கிறது, அதற்கு டிராக்டர் வேண்டும் என்று மனு எழுதிக் கொடுத்தால் ஆவன செய்வதற்குத் தயாராக இருக்கிறேன்.

திரு. கா. வேழவேந்தன் : உரம் முதலியவைகள் பெறுவதற்கு கடன் வசதி செய்திருக்கிற நேரத்தில் செங்கற்பட்டு மாவட்டத்தில் பல விவசாயிகள் ஆண்டுக் கணக்கில் மாஸே ஃபர்குஸான் டிராக்டர் வேண்டும் என்று பதிவு செய்து வைத்துக்கொண்டிருந்தாலும், விரைவாகக் கிடைக்கவில்லை. அந்த டிராக்டர்கள் விரைவாகக் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

[1973 டிசம்பர் 1

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** மாஸே ஃபெர்குஸான், இன்டர்நாஷனல் இப்படிப்பட்ட குறிப்பிட்ட டிராக்டர்கள்தான் வேண்டும் என்று விவசாயிகள் வற்புறுத்துவதன் காரணமாகத்தான் அவர்களுக்கு போதிய அளவுக்கு இதுவரையிலும் கொடுக்கப்படாமல் இருக்கிறது. எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமானால், டி. 25 டிராக்டர் ஏறத்தாழ இரண்டு ஆண்டு காலமாக அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் கையில் இருந்து கொண்டிருக்கிறது, எந்த விவசாயியும் எடுத்துக்கொள்ளாமல் இரண்டு ஆண்டு காலமாக கையில் இருந்துகொண்டிருக்கிறது. ஆனால், குறிப்பிட்ட டிராக்டர்தான் வேண்டும் என்று சொல்லாமல் டிராக்டர் பெற வேண்டுமானால் இலகுவாகக் கொடுக்க முடியும்.

நான் இன்னும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். டிராக்டர் கன்ட்ரோல் அண்டு டிஸ்டிரிப்யூஷன் ஆர்டர் மத்திய அரசின் கையில் இருக்கிறது. பர்குஸான் கொடுக்கவேண்டுமா, இண்டர் நாஷனல் கொடுக்கவேண்டுமா என்பது மத்திய அரசு எடுக்க வேண்டிய முடிவாக இருக்கிறது.

[முற் பகல் 9-30]

**திரு. அ. தேவேந்திரன் :** தமிழ் நாட்டில் இருக்கும் விவசாயிகள் ஃபெர்கூசன் டிராக்டர்களும், இன்டர்நேஷனல் டிராக்டர்களுந்தான் விவசாய வேலைக்குச் சுலபமாக இருக்கின்றன என்று அவற்றை வாங்க விரும்புகிறார்கள். ஆகவே, தமிழ் நாட்டுக்கு இந்த வகை டிராக்டர்களைத்தான் ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசை நம்முடைய அரசு வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கேட்டோம். ஃபெர்கூசன் டிராக்டர்கள் 35 வரை கேட்டதற்கு ஒன்றே ஒன்று மட்டும் ஒதுக்கினார்கள். இன்டர்நேஷனல் 12 வரை கேட்டோம். 1973–74-ல் ஒன்று கூட ஒதுக்கவில்லை. இது மத்திய அரசின் கையில் இருக்கிறது. நான் ஹரியானாவைச் சுற்றிப் பார்க்கும்போது அங்கு ஃபெர்கூசன்கள் ஏராளமாகக் காணப்பட்டன. அது சென்னையில் உற்பத்தியாகிறது. ஹரியானாவில் இவ்வளவு அதிகமாக ஃபெர்கூசன்கள் காணப்படுகின்றனவே என்று கேட்டதற்கு மத்திய அரசு ஹரியானாவுக்கு அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.



1973 டிசம்பர் 1]

**திரு. ப. முத்துசாமி :** ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் அக்ரோ இன்டஸ்ட்ரிஸ் கார்ப்பரேஷன் மூலமாக டிராக்டர்கள் சாங்ஷன் ஆகியும் கிடைக்காமல் இருக்கிறது. ஒதுக்கியிருக்கும் டிராக்டர்களில் இவற்றுக்கு முன்னுரிமை கொடுக்க அரசாங்கம் வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** எஸ்கார்ட் டிராக்டர்கள் வேண்டுமானால் உடனடியாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

**திரு. நா. வீராசாமி :** ஹரியானாவுக்கு நிறைய ஃபெர்கூசன் டிராக்டர்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்களே சொன்னார்கள். மத்திய அரசாங்கம் பாரபட்சம் இல்லாமல் எல்லா மாநிலங்களுக்கும் இருக்கின்ற டிராக்டர்களைப் பங்கிட்டுக் கொடுப்பதில் நியாயமாக நடந்துகொள்ள வேண்டுமென்று நம்முடைய அரசாங்கம் மத்திய அரசை வலியுறுத்துமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அதிகமாக ஃபெர்கூசன் டிராக்டர்கள், இன்டர்நேஷனல் டிராக்டர்கள் வேண்டுமென்று எழுதியிருக்கிறோம்.

**திரு. ஆ. பரந்தாமன் :** நமக்குத் தரப்பட்டிருக்கும் புள்ளி விரத்தைப் பார்த்தால் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிற டிராக்டர்கள் அதிகமாக இருக்கின்றன என்று தெரிகிறது. எதற்கெடுத்தாலும் வெளிநாட்டை எதிர்பார்த்துக் கொண்டிருந்தால் உரத்திற்கு எப்படி, தட்டுப்பாட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறோமோ அதே நிலைதான் எதிர்காலத்தில் இதற்கும் உருவாகும். இதை மனதில் வைத்து இன்டிஜினஸ் டிராக்டர்களை உருவாக்க திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்று மத்திய அரசை நம்முடைய அரசு வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இன்டிஜினஸ் டிராக்டர்கள் என்று கூறப்பட்டு இந்தியாவிலேயே உற்பத்தியாகிற டிராக்டர்கள் இருக்கின்றன. அவற்றை எந்தெந்த மாநிலங்களுக்கு எவ்வளவு ஒதுக்க வேண்டுமென்பதற்கு டிராக்டர் டிஸ்ட்ரிப்யூஷன் கன்ட்ரோல் ஆர்டர் என்று இருக்கிறது. அதன்படி ஒதுக்குகிறார்கள். அப்படி ஒதுக்குகிறபோது நமக்கு வெளிநாட்டு எஸ்கார்ட், டி. 25 போன்ற டிராக்டர்கள்தான் வந்து சேருகின்றன. இன்டிஜினஸ் டிராக்டர்கள் இல்லாமல் இல்லை. சில இன்டிஜினஸ் டிராக்டர்கள் அண்மையில் கிடைத்திருக்கின்றன.

[1973 டிசம்பர் 1

**திரு. கே. எ. வகாப்:** வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற சில டிராக்டர்கள் அளிக்கப்பட்டாலும் இங்கு உற்பத்தியாகின்ற ஃபெர்கூசன் டிராக்டர்கள் விவசாயிகளுக்குச் சாதகமாக இருக்கின்றன. வெளிநாட்டு டிராக்டர்கள் ஜெர்மன் டிராக்டர்கள் சரியாக வேலை செய்யவில்லை என்றும் கூறப்படுகிறது. இந்தக் காரணங்களை எடுத்துக்காட்டி உழவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள் வெளிநாட்டிலிருந்து நேரடியாக டிராக்டர்களை இறக்குமதி வரி இல்லாமல் இறக்குமதி செய்து கொள்வதற்கு வழிவகை செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வது கூட மத்திய அரசாங்கத்தின் கொள்கை காரணமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது, வேறாக. சென்னையிலேயே உற்பத்தியாகும் ஃபெர்கூசன் டிராக்டர்களை சிம்சன் கம்பெனி தயார் செய்கிறார்கள். கோவையில் ஒரு கண்காட்சி வைத்திருந்தார்கள். அதைக் கொண்டு போய்க் காட்டினார்கள். மற்ற இடங்களை எல்லாம் பார்த்துவிட்டு ஃபெர்குசன் டிராக்டர் வைத்திருக்கும் இடத்தில் கால் மிதிக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டேன். 'நீங்கள் ஃபெர்குசனை வேறு மாநிலங்களுக்கு அனுப்புகிறீர்கள்; எங்களுக்குக் கொடுக்கவில்லை' என்று கூறி உள்ளே நுழையாதபடி வெளியிலேயே நின்றுவிட்டேன். அவ்வளவு தூரம் இந்தப் பிரச்சினையைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக அல்லாமல் தனியார் மூலமாக இன்டர்நேஷனல், ஃபெர்குசன் டிராக்டர்கள் தமிழ்நாட்டில் விநியோகம் செய்யப்படுகிறதா? அப்படியானால் எத்தனை?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தனியாகக் கேள்வி போட வேண்டும்.

### *Diesel oil for pump sets*

*560 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for the Agriculture be pleased to state—

(a) whether the Agriculturists of Coimbatore District are required to obtain identity cards for purchase of diesel oil for their pump sets; and

(b) if so, the details thereof?



1973 டிசம்பர் 1]

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** டீசல் எண்ணெய்க்குத் தட்டுப்பாடு இருந்தபோது கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அடையாளக் கார்டு வழங்கினார். தற்போது டீசல் எண்ணெய்க்குத் தட்டுப்பாடும் இல்லை, அடையாளக் கார்டு வழங்கப்படுவதும் இல்லை.

### சாண்டிநல்லா கோழிப்பண்ணை

*561 வினா—திரு. கு. அ. பொம்மன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகையில் சாண்டிநல்லா கோழிப்பண்ணையினை விரிவு படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** உதகை சாண்டிநல்லா கோழிப் பண்ணையை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் இல்லை. ஏனென்றால் அங்கு கோழிப் பண்ணையே இல்லை. (சிரிப்பு)

### தண்டுமேட்டா கிராமத்தில் தெரு விளக்குகள்.

*562 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தாமரைப் பாக்கம் ஊராட்சியில் அடங்கிய தண்டுமேட்டா கிராமத்திற்கு இன்னும் தெரு மின்விளக்குகள் போடப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இவ்வேலை எப்போது நிறைவடையும்?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) & (இ) தண்டு மேட்டா கிராமத்திற்கு இரண்டு குழல் விளக்குகள் (தெரு விளக்கு) போடப்பட்டு 29—8—1973 முதல் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**திரு. கா. வேழவேந்தன்:** நன்றியைச் சொல்லுகின்ற நேரத்தில், ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு ஊராட்சியிலும் எவ்வளவு விளக்குகள் எரிகின்றன, எவ்வளவு எரியவில்லை என்ற

கணக்கை அறிந்து அதை அந்தந்த ஆணையர்கள் தெரிவித்து உரிய முறையில் மின்துறை அதிகாரிகளுக்குத் தெரிவித்து பழுதடையும் விளக்குகளைப் புதுப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மின்சார வாரியத்திடமிருந்து ஊராட்சி ஒன்றியத்திடமே இதை ஒப்புவித்துவிடலாம் என்ற யோசனை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

### *Boring set in Thiruvalangadu Union.*

* 563 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether any boring set is being kept idle in Thiruvalangadu Panchayat Union in Tiruttani taluk; and

(b) if so, the reasons therefor ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) ஆம்.

(இ) இந்த ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள விவசாயிகள் துளை போடும் கருவியைப் பயன்படுத்த முன்வரவில்லை.

**திரு. ஆ. பரந்தாமன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்தில் துளை போடும் கருவிகளை விவசாயிகள் பயன்படுத்த முன்வரவில்லை என்று சொன்னார்கள். அங்கிருக்கும் நிலைமை கடந்த பத்தாண்டுகளாக போரிங் செட் சரியாக வேலை செய்யவில்லை என்றும், அதற்கான நடவடிக்கையை அங்கிருக்கும் ஒன்றியம் எடுத்துக்கொள்ளவில்லை என்றும் கூறப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அதிலே தலையிட்டு போரிங் செட்டைச் சரி செய்ய முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியத்திற்காக 28,515 ரூபாய் 17 காசு கொடுத்து வாங்கப்பட்ட துளைபோடும் கருவி சரியாக இயங்காத காரணத்தாலும், மேலும் அந்தக் கருவிக்கு நாள் ஒன்றுக்கு வாடகை 60 செலுத்த இயலாத காரணத்தாலும், அடிக்கடி பழுதடைந்து விடுகிறது என்ற காரணத்தாலும் பயன்படுத்த முடியாமல் இருந்தது. உழவர்களிடத்திலிருந்து குறைந்த வாடகைக்குக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்து அது



பரிசீலனை செய்யப்பட்டு அது ஓட்டுவிக்கின்ற முதலுக்கும் அதற்கும் ஈடுகட்டி வராது என்ற காரணத்தால் குறைக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிறகு அதை விற்றுவிடலாம் என்று தீர்மானம் நிறைவேற்றி ஊராட்சி ஒன்றியம் அனுப்பி இருக்கிறது. அதைக் குறைந்த விலைக்குப் பல பேர் கேட்ட காரணத்தால் குடிநீர் வடிகால் வாரியத்திற்குக் கொடுத்து விடலாம் என்ற யோசனை இருந்து வருகிறது. அதைப் பழுது பார்ப்பதைவிட புதிதாக வாங்க ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும்.

### சிக்கில்-ஓட்டைத்தட்டை சாலையில் பாலம்.

* 564 வினா—திரு. அ. இராசமாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிக்கில்-ஓட்டைத்தட்டை சாலையின் 3/7 மைலிலுள்ள பாலம் போக்குவரத்துக்காக எப்போது திறந்து வைக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** பாலவேலை 1971-ம் ஆண்டு நவம்பர் மாதம் முடிவுபெற்றது. இப்பாலத்திற்கான அணுகு சாலைகளைப் போட துணை மதிப்பீட்டுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு வேலையை எடுத்துக்கொள்ள ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

### *Buses from Egmore, Central Stations.*

* 565 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to run special bus service to assist the passengers at Egmore and Central Stations in the Madras City; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) & (இ) ஆம். இரயில் வண்டிகளின் போக்குவரத்து நேரங்களுக்கு ஏற்ற வகையில், பல்லவன் போக்குவரத்துக் கழகம் 7—6—1973 முதற் கொண்டு, எழும்பூருக்கும் சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கு மிடையில் இரண்டு தனிப் பேருந்துப் போக்குவரத்துப் பணிகளைத் தொடங்கியுள்ளது.

**திரு. த. சோனையா :** எழும்பூர் இரயில் நிலையத்தில் இறங்கி சட்ட மன்ற உறுப்பினர்கள் சட்ட மன்ற விடுதிக்கு வர பஸ் வசதி போதவில்லை, கஷ்டப்படுகிறார்கள். சட்ட மன்றம் நடக்கும் காலத்தில் எழும்பூருக்கும் சட்ட மன்ற விடுதிக்கும் தொடர்ந்து பஸ் போய்க் கொண்டிருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** சட்ட மன்றக் கூட்டத் தொடர் ஆரம்பிக்கின்ற நேரத்திலும், சட்ட மன்றக் கூட்டத் தொடர் முடிகின்ற நேரத்திலும் அத்தகைய ஏற்பாட்டைச் செய்யலாமா என்று அரசாங்கம் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கும்.

*Special buses to Thirunallar.*

* 566 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Tamil Nadu State Transport and the Cholan Roadways Corporation have proposed to ply ' round the clock bus service ' to Thirunallar for " the transit of Saturn festival "; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) & (இ) திருநள்ளாரில் நடைபெற்ற சனிப் பெயர்ச்சி திருவிழாவையொட்டி சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகமும், தமிழ்நாடு போக்குவரத்துத் துறையும் 8—7—73-லிருந்து 14—7—73 வரையில் தனிப் பேருந்துகளை இயக்கி வந்தன.

**ஆலயங்களில் அரிசன அர்ச்சகர்கள்.**

* 567 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலயங்களில் தற்போது எத்தனை அரிசனர்கள் அர்ச்சகர்களாகப் பணியாற்றுகிறார்கள் ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** 42 (நாற்பத்திரெண்டு பேர்).





**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, ஆலயங்களில் தற்போதுள்ள அரிசன அர்ச்சகர்களின் எண்ணிக்கை குறைவு. ஆகவே, இந்த எண்ணிக்கையை அதிகரிக்க, ஏற்கெனவே சுப்ரீம் கோர்ட்டில் அளிக்கப்பட்டத் தீர்ப்பிற்கிணங்க, வேறு வகையிலே நடவடிக்கை எடுக்க ஒரு சட்டத் திருத்தத்தை மத்திய அல்லது மாநில அரசு உருவாக்க முயற்சி மேற்கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு கண்ணப்பன் :** தலைவரவர்களே, ஏற்கெனவே இருக்கின்ற 42 அரிசன அர்ச்சகர்கள் தற்போது நியமிக்கப்பட்டவர்கள் அல்ல. தொன்றுதொட்டு, அவர்கள் கிராம நடைமுறைகளின்படி பரம்பரை முறையில் ஊழியம் செய்து வருகிறார்கள். நாம் சட்டத்தை திருத்தியதன் நோக்கம் எந்த ஜாதிக்காரர்களாக இருந்தாலும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அரிசனங்களாக இருந்தாலும் அர்ச்சகர்களாக வருவதற்கு தடை இருக்கக்கூடாது; ஏற்றத் தாழ்வு கூடாது என்ற நோக்கத்தோடுதான் செய்தோம். பரம்பரை உரிமை தேவையில்லை என்று சட்டம் இயற்றினோம். சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு பரம்பரை அறங்காவலர்களை ஒழிப்பதாக இருந்தாலும், ஆகம விதிமுறைகளின்படி அர்ச்சகர்கள் நியமிக்கப் படவேண்டும் என்று தீர்ப்பளித்திருக்கிறார்கள். ஆகவே, அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதால்; 3 மாதங்களுக்கு முன்னால் நம்முடைய முதலமைச்சரவர்கள் இந்திய அரசுக்கு அரசியல் சட்டத்தைத் திருத்தி, அரிசனங்கள் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட வகை செய்யவேண்டுமென்று கேட்டுள்ளார்கள்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவரவர்களே, இந்த 42 பேர்களில் அரிசனங்கள் எந்த எந்த ஆலயங்களில் வேலை செய்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** பெரும்பாலும் கிராமப் புறங்களில் இருக்கின்ற கோவில்களில் வேலை செய்கிறார்கள். சென்னை நகரில் 10 கோவில்களில் இருக்கிறார்கள். தனிக் கேள்வி போட்டால் பட்டியல் வைக்கப்படும்.

**திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, வேத ஆகமத்தைப் படித்தவர்களை அர்ச்சகர்களாகப் போடவேண்டுமென்று சொல்லி யிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படியானால்

வேத ஆகமத்தைப் படிப்பதற்கு ஏற்பாடு செய்து, எல்லா ஆலயங்களிலும் கம்பல்சரியாக ஒரு அரிசன அர்ச்சகரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, வேத ஆகமம் படித்தவர்கள் என்று நான் சொல்லவில்லை ஆகம விதிகளின்படி போடவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் சொல்லியபடி அரசியல் சட்டத்திருத்தம் வருவதாக இருந்தால் யாராக இருந்தாலும், எந்த ஜாதியாக இருந்தாலும் அர்ச்சகராக நியமிக்கப்படலாம்.

### அருள்திரு நடராஜர் கோயில், சிதம்பரம்

*** 568 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் அருள்திரு நடராஜர் கோயில் இந்து அறநிலையப் பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கி வருகின்றதா ?

**மாண்புமிகு திரு. மு கண்ணப்பன் :** இத்திருக்கோயிலுக்கு அறங்காவலர்கள் நியமனம் செய்வது நீங்கலாக மற்றவை இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, இந்த சிதம்பரத்திலே இருக்கின்ற நடராஜர் கோவில், தர்மபுரம் ஆதினத்தின்கீழ் உள்ள கோவில்கள், திருவாவடுதுறை ஆதீனத்தின்கீழ் உள்ள கோவில்கள் ஆகியவற்றில் எல்லாம் டிரஸ்டிகளை நியமிக்கும்போது, அவர்களை நியமிக்கும் அதிகாரம் அரசுக்கு இல்லை என்று சொல்கிறார்கள். அந்த அதிகாரத்தைப்பெற நமது அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** சிதம்பரத்திலே இருக்கின்ற நடராஜர் கோவிலைப்பற்றித்தான் விவரம் இருக்கிறது. இந்த கோவிலைப் பொறுத்தவரையில் அறங்காவலர்களை நியமிப்பது சுப்ரீம் கோர்ட் தீர்ப்புப்படி நடக்கிறது. 1933-ம் ஆண்டில் தென்னாற்காடு மாவட்ட நீதிமன்றத் தீர்ப்பின்படியும், அதற்குப் பிறகு சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பின் படியும், 1936-ம் ஆண்டு தீர்ப்பின்படியும் மாற்றியமைக்கப்பட்ட நிர்வாகத் திட்டத்தின்கீழ் அறங்காவலர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.





**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, சிதம்பரத்திலே நடராஜர் கோவிலில் ஏதோ இரகசியம் இருப்பதாகவும், சிதம்பர இரகசியம், சிதம்பர இரகசியம் என்றும் சொல்கிறார்கள். அதைப்பார்க்க 1¼ ரூபாய் கொடுத்தால் அனுமதிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதை அறிந்துகொள்ளும் வாய்ப்பு எங்களுக்கு இல்லை. அமைச்சரவர்கள் தெரிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அப்படியானால் அந்த இரகசியத்தை அமைச்சரவர்கள் இந்த மன்றத்திற்குத் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, இரகசியமாக இருக்கவேண்டிய செய்தியை சட்ட மன்றத்தில் சொல்ல முடியாது. திரு. வீராசாமி அவர்கள் விரும்பினால் சென்று பார்த்து வரலாம்.

### ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் பதவி

*** 539 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1973-74 கல்வி ஆண்டில் புதிதாக எத்தனை ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 1973-74-ல் மாநில அரசுத் திட்ட பணிகளில் 6–11 வயதுச் சிறுவர்களைக் கூடுதலாகச் சேர்க்க 600 கூடுதல் ஆசிரியர் பதவிகளும், 11–14 வயதுச் சிறுவர்களைக் கூடுதலாகச் சேர்க்க 500 கூடுதல் ஆசிரியர் பதவிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை போக, இந்தியாவெங்கும் படித்து வேலை வாய்ப்பு இன்றியிருப்போருள் 5 லட்சம் பேருக்கு 1973-74-ல் வேலை வாய்ப்பளிப்பதற்கான சிறப்புத் திட்டத்தின் கீழ் நம் மாநிலத்தில் 10,200 கூடுதல் ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதில் 6,000 செகண்டரி கிரேடு ஆசிரியர்களும் 500 ஹையர் கிரேடு ஆசிரியர்களும் இடம் பெறுகிறார்கள்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, இந்த பள்ளி ஆசிரியர்களை நியமிக்கும்போது உள்ளாட்சித் துறையில்—ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சி மன்றங்களிலும் ஒரு 'அப்பாயின்ட்மென்ட் கமிட்டி' வைத்து, அதன் மூலமாக நியமிக்கிறார்கள். அதிலே பல மோசடிகள் நடப்பதாகச் சொல்லப்படுகிறது. அதை

மனதில் வைத்துக்கொண்டு, ஊராட்சி ஒன்றியங்களிலும் நகராட்சி மன்றங்களிலும் ஆசிரியர்களை நியமிக்கும்போது அரசு தரப்பு மூலமாக—அரசு அதிகாரிகள் மூலமாக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இது ஒரு கொள்கைப் பிரச்சினை. ஏற்கெனவே வகுக்கப்பட்ட கொள்கையின் அடிப்படையிலேதான் ஊராட்சிக் குழுவின் மூலம் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள். அரசே அந்த நியமனத்தைச் செய்வதென்றால் புதிய கொள்கை உருவாக்கப்பட வேண்டும்.

**திரு எம். சுரேந்திரன் :** சார், இந்த ஆசிரியர்களை நியமிப்பது ஒரு கொள்கைப் பிரச்சினையாக இருப்பதினால், அரசு அதில் தலையிட முடியாது என்ற வகையிலே அமைச்சருடைய பதில் அமைந்திருந்தது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஆசிரியர்களை எடுக்கும்போது அவர்கள் எந்தெந்த வருஷத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் என்று பார்த்து, அந்த வரிசைப்படி நியமிக்கப்பட வேண்டுமென்றுவது அரசு உத்தரவு பிறப்பிக்குமா ? ஏனென்றால் நியாயமான முறையிலே முதலிலே தேர்ச்சிப் பெற்றவர்கள் நியமனத்தில் கடைசியாக வரக்கூடிய சூழ்நிலை இப்போது இருக்கிறது. அதை மாற்றி அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஊராட்சி ஒன்றியங்களிலும் நகராட்சி மன்றங்களிலும், அரசு சார்பிலும் நடைபெறும் பள்ளிகளில் ஆசிரியர்களை நியமிக்கும்போது, அவர்கள் தேர்ச்சி பெற்ற அந்த வரிசைப்படிதான் நியமிக்கப்பட வேண்டுமென்று கூறியிருக்கிறோம். தனியார் பள்ளிகளிலும் அப்படிச் செய்யவேண்டுமென்று சொன்னபோது அவர்கள் வழக்கு மன்றத்திற்கு சென்று, அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பு பெற்றிருக்கிறார்கள். ஆகையால் தனியார் பள்ளிகளில் நாம் கட்டாயப்படுத்த முடியவில்லை.

**புலவர் சி. பழனிச்சாமி :** தலைவரவர்களே, எற்கெனவே நியமிக்கப்பட்டுள்ள பயிற்சி ஆசிரியர்களுக்கு (அப்பிரண்டிஸ் ஆசிரியர்கள்) பதவி உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறதா ? இப்போது





அளிக்கப்பட்டுள்ளப் பதவிகளில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு எத்தனை, தனியார் துறை பள்ளிகளுக்கு எத்தனை என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, ஏற்கெனவே தொழில் பழகு ஆசிரியர் என்ற முறையில் 5,746 பதவிகளை ஏற்படுத்தினோம். அவர்களில் 1,800 பேர்களைத் தவிர மற்றவர்கள் எல்லாம் முறையான பதவிகளில் ஏற்கெனவே அமர்த்தப்பட்டுவிட்டார்கள். நியமிக்கப்பட்ட ஆசிரியர்களில் யாரும் விடுபடாமல் எல்லோரும் முறையானப் பதவிகளில் அமர்த்தப்படுவார்கள். இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ள 10,200 பதவிகளில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு எத்தனை, அரசு சார்பு பள்ளிகளில் எத்தனை, தனியார் பள்ளிகளுக்கு எத்தனை என்பதை அந்தந்த மாவட்ட தலைமைப்பள்ளி அதிகாரி அவர்கள் இருக்கின்ற நிலைமைகளை அனுசரித்து நியமனம் செய்து வருகிறார்கள்.

## *Pension for Tamil scholars*

* 540 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to provide pension to aged scholars in Vedic Sciences and Tamil Philosophy; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU N. DENNIS : Sir, as their contribution is to the society may I know whether, to encourage them, special treatment will be shown to them by providing pension ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, வடமொழி வல்லுநர்களுக்கு மத்திய அரசு உதவித்தொகை அளித்து வருகிறது. மாநில அரசில் அப்படிப்பட்ட திட்டம் இல்லை. ஆனால் மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து கலைஞர்களுக்கு உதவி அளிக்கும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. வட மொழி வல்லுநர்கள் உதவித் தொகைப் பெறுவதற்கு, அவர்கள்

[1973 டிசம்பர் 1

55 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும்; 150 ரூபாய்க்கு மேற்படாத திங்கள் வருமானம் உடையவர்களாக இருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 1,800 ரூபாய் தரப்படுகிறது. அதிலே அவர்கள் வேறு வகைகளில் பெறுகின்ற வருமானத்தைக் கழித்துக்கொள்வார்கள். அந்த வகையில் கிட்டத்தட்ட 200 வடமொழி வல்லுநர்கள் மத்திய அரசின் உதவித்தொகை பெற்று வருகிறார்கள். மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து செயல்படுத்தும் திட்டத்தின் கீழ் 300 கலைஞர்கள் உதவி பெற்று வருகிறார்கள். மாநில அரசு தனிப்பட்ட முறையில் 195 கலைஞர்களுக்கு உதவி அளித்து வருகிறது.

THIRU K. M. SUBRAMANIAM : Was there any lapse of funds allotted by the Centre in the matter of encouragement of Sanskrit education in the State of Tamil Nadu, last year? Was anything left unutilised?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* அந்தப் பணம் நம்மிடத்தில் நேரிடையாகக் கொடுக்கப்படுவதில்லை. மத்திய சர்க்காரே கொடுக்கிறது. நம்மிடத்தில் கொடுக்கப்பட்டு, செலவழிக்கப்படாமல் எந்தத் தொகையும் அனுப்பப்படவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Education whether they have collected details of such scholars in our State and whether they are going to submit them to Central Government for their consideration?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* மாநில அரசுக்கு விண்ணப்பித்துக் கொண்டார்கள் என்றால் நாம் அதை மத்திய அரசுக்கு சிபார்சு செய்து அனுப்பி வைக்கலாம்.

*திரு. துரைமுருகன் :* தலைவர் அவர்களே, இந்த மூலக் கேள்வியில் தமிழ் மெய்ப்பொருளியலிலும் சிறந்து விளங்குகிற வயதான அறிஞர்களுக்கு ஒய்வூதியம் கொடுப்பதுபற்றி கேட்கப் பட்டிருக்கிறது. எனவே சமரச சன்மார்க்க நெறியில் நின்று அஞ்ஞான இருளை அகற்ற மெய்ஞான தொண்டாற்றி வரும் திருமுருக கிருபானந்தவாரியார் எனது தொகுதியைச் சார்ந்தவர் —தள்ளாத வயதில் அருந்தொண்டாற்றிவரும், அவருக்கு ஓய்வூதியம் அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.



1973 டிசம்பர் 1]

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* அவர் ஊதியம் கேட்கவில்லை. கேட்க வேண்டிய நிலையிலும் இல்லை. பொதுமக்களே பார்த்து ஏராளமான தொகை அவருக்குத் தந்துகொண்டிருக் கிறார்கள்.

**இராமலிங்க அடிகளாருக்கு நினைவுச் சின்னம்**

*541 வினா—*திரு. என். கிட்டப்பா :* மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அருட்பா வழங்கிய இராமலிங்க அடிகளார் பிறந்த இல்லத்தை விலைக்கு வாங்கி அதனை நினைவுச் சின்னமாகப் பாதுகாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* இல்லை.

*திரு. என். கிட்டப்பா :* தமிழகத்தில் சமரச சுத்த சன்மார்க்க நெறியினை பரப்ப அருந்தொண்டாற்றிய இராமலிங்க அடிகளார் வடலூரில் வாழ்ந்த இல்லத்தினை நினைவுச் சின்னமாக அரசே ஏற்று அமைக்க இனிமேலாவது அந்த முயற்சியில் ஈடுபட அரசு முன்வருமா?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* தொல்பொருள் ஆராய்ச்சியினர் பழங்காலச் சின்னங்கள் என்ற முறையில் எடுத்துக்கொள்வனவற்றை ஏற்றுக்கொள்கிறோம். இப்போது இராமலிங்க வள்ளலார் இல்லத்தை நினைவுச் சின்னமாக எடுத்துக் கொள்வதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த ஊர்க்காரர்களும், மற்றவர்களும் அரசாங்கமே அப்படி எடுத்துக்கொள்ளவேண்டு மென்று விண்ணப்பித்துக்கொள்வார்களானால் அதைப்பற்றி அரசாங்கம் கவனிக்கும்.

*திரு. கே. கந்தசாமி :* அந்த ஊர்க்காரர்களும், மற்றவர்களும் அரசே நினைவுச் சின்னமாக வள்ளலார் வாழ்ந்த இல்லத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று விண்ணப்பித்துக்கொள்வார் களானால் அதை கவனிக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படி இல்லையென்றாலும் தேச விடுதலைக்காகப் பாடுபட்ட சிதம்பரனார், பாரதியார் போன்றவர்கள்

[1973 டிசம்பர் 1

வாழ்ந்த இல்லங்களை நினைவுச் சின்னங்களாக ஆக்கியிருப்பதைப் போல, சமுதாய நன்மைக்காக சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை நிறுவி சமூகப்பணியாற்றியுள்ள வள்ளலாரின் நினைவு அகலாதிருக்க அவர் வாழ்ந்த இல்லத்தை நினைவுச் சின்னமாக அமைப்பதனால் சமுதாயம் வாழும் அல்லவா? இதை ஏன் அரசு செய்யக்கூடா தென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** வள்ளலார் அமைத்த ஞானசபை புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர் வாழ்ந்த இல்லம் பற்றி சிலபல குழப்பங்கள் இருக்கின்றன. உண்மையாகவே அவர் வாழ்ந்த வீடு இருந்து, அதை அரசே நினைவுச் சின்னமாக அமைக்கவேண்டுமென்று அவ்வூர்க்காரர்களும், மற்றவர்களும் விண்ணப்பித்துக்கொள்வார்களானால் அந்த முயற்சிக்கு அரசு ஆக்கம் அளிக்கும்.

**திரு. இ. எஸ். தியாகராசன்:** இராமலிங்க அடிகளார் எங்கே பிறந்தார்கள்? அவர் பிறந்த ஊர் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அவர் பிறந்தது மருதூர். பிறகு வந்து சேர்ந்தது வடலூர். வடலூரில்தான் ஞான சபையை அமைத்தார்கள். அங்கேயே மறைந்துவிட்டார்கள் என்றும் கதைகள் வருகின்றன. அவை எல்லாம் பல்வேறு ஆராய்ச்சிக்குரியன

**திரு. கே. டி. கே. தங்கமணி:** வள்ளலார் அவர்கள் சமீப காலத்தில்தான் வாழ்ந்தார்கள். வடலூரினால்தான் நெய்வேலிக்கே ஒரு பெருமை ஏற்பட்டது. இதன் காரணத்தினால் வள்ளலார் தங்கி, வாழ்ந்த இல்லத்தை நினைவுச் சின்னமாக அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** வடலூரில் வள்ளலார் அமைத்த சன்மார்க்க சங்கம் இருக்கிறது. ஞானசபை அமைந்திருக்கிறது. அதற்குரிய சொத்துக்கள், பொருள்கள் எல்லாம் அறநிலைய பாதுகாப்பு இலாக்காவினரால் பாதுகாக்கப் படுகின்றன. மருதூரில் அவர் பிறந்த வீடு என்று இருக்குமானால் அதை அரசாங்கம் நினைவுச் சின்னமாக அமைக்க முயற்சி எடுத்துக் கொள்ளும்.



1973 டிசம்பர் 1]

## தீரமிக்க விளையாட்டுகளில் பயிற்சி

***542 வினா—திரு. அ. தேவேந்திரன்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேர, சோழ, பாண்டியர்களை மனதில் கொண்டு பல நல்ல காரியங்களைச் செய்து வரும் தமிழ் நாடு அரசு வில் வித்தை, குதிரை ஏற்றம், வாள் வீச்சு, ரத ஓட்டம் போன்ற தீரமிக்க வித்தைகளை அரசின் சார்பில் தமிழர்களுக்கு கற்றுவிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இந்தத் தீரமிக்க வித்தைகளைக் கற்றுக்கொடுக்கும் முயற்சியை அரசு மேற்கொள்ள வில்லை. அரசு அனுமதியுடன் நடைபெறும் நிகழ்ச்சிகளில் வில் வித்தை, குதிரை ஏற்றம், வாள் வீச்சு, ரத ஓட்டம் போன்ற வித்தைகளுக்கு அரசு ஆதரவு அளித்து வருகிறது.

**திரு அ. தேவேந்திரன்:** தலைவர் அவர்களே, இந்த அரசு சேர, சோழ, பாண்டியர்களை மனதில் கொண்டு சேரன் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் போக்குவரத்துக் கழகம், சோழன் போக்கு வரத்துக் கழகம் என்றெல்லாம் அமைக்கிற இப்படிப்பட்ட காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறது. தமிழர்களுக்கே சொந்த மான மல்யுத்தம், ஜூடோ எல்லாம் இன்றைக்கு ஜப்பானுக்குச் சொந்தமாகப் போய்விட்டது. டாக்டர் கருணாநிதி சோழனையும், டாக்டர் நெடுஞ்செழியன் சோழனையும், திரு. மன்னை நாராயண சாமி சோழனையும் கொண்ட இந்த அரசு தமிழர்களுக்கு இந்த தீரமிக்க வித்தைகளைக் கற்பிக்கும் திட்டத்தினை நடைமுறைப் படுத்தவேண்டுமென்ற தேவேந்திர சோழன் கோரிக்கையை பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இப்படிப்பட்ட வித்தைகளைப் பொறுத்து அரசாங்கமே தனியாகப் பயிற்சி கொடுக்கிற திட்டம் இல்லை மாண்புமிகு தேவேந்திர சோழன் குறிப்பிட்டுள்ள சிலபல பயிற்சிகள் உடற்பயிற்சிக் கழகத்தினால் ஆங்காங்கே தரப்படுகின்றன. அங்கே வாள்வீச்சு, கம்பு விளையாட்டு சொல்லித் கொடுக்கப்படுகின்றன. பார்க்பேர் எக்சிபிஷன்போது ரத ஓட்டம் என்றில்லாவிட்டாலும் ரேக்ளா ரேஸ் விடப்படுகிறது.

குதிரையேற்றம் என்பது ரேஸ் க்ளப்—குதிரை ஏற்ற பயிற்சி கழகத்தினால் கொடுக்கப்படுகிறது. ஐம்பது, அறுபது பேர்கள் பயிற்சி பெற்றும் வருகிறார்கள். இராணுவத்தின் மூலமாக ஓரளவு வில்வித்தையும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இவற்றை தனியே அரசாங்கத்தின் சார்பில் கற்றுக்கொடுக்கிற முயற்சி ஏதும் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

### மாயூரம் வட்டத்தில் மனுநீதித் திட்டம்.

* 553 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972-73-ல் மாயூரம் தாலூகாவில் மனுநீதித் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மனுக்கள் எவ்வளவு?

(இ) அவைகளுள் தீர்வு காணப்பட்டவை எத்தனை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) 112.

(இ) 108.

திரு. என். கிட்டப்பா: இம்மாதிரி மனுநீதித் திட்டம் செயல்படுத்துகின்றபோது அந்த அந்த வட்டார சட்ட மன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் யாரும் அழைக்கப்படுவதில்லை. குறிப்பாக எனது பகுதியில் அழைக்கப்படுவதில்லை. அப்படியின்றி இனிமேல் அந்த அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினருக்கும், பாராளுமன்ற உறுப்பினருக்கும் தெரிவித்து, அவர்களையும் அழைத்து வைத்துக்கொண்டு இந்த மனுநீதித் திட்டம் செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அப்படிச் செய்வதில் அரசாங்கத்திற்கு ஆட்சேபணை கிடையாது. இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவிக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இந்த மனுநீதித் திட்டத்தினால் எவ்விதப் பயனும் இல்லையென்ற காரணத்தினால் இதை அரசாங்கம் கைவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மனுநீதித் திட்டம் நல்ல பயனைத் தந்திருக்கிறது. அதற்கான புள்ளிவிவரங்களை இருக்கின்றன.

| | |
|---|---|
| Number of petitions received during 1972-73 ... | 112 |
| Favourable orders passed ... ... ... | 12 |
| On the Spot ... ... ... ... ... | 10 |
| Subsequent ... ... ... ... ... | 10 |
| Rejected ... ... ... ... ... | 2 |
| Forwarded to other departments ... ... ... | 94 |
| Pending ... ... ... ... ... | 4 |

இப்படி கொடுக்கப்பட்ட மனுக்களுக்கு பரிகாரம் காணப்பட்டிருக்கிறது. எல்லா மாவட்டங்களுக்கும் இதைத் தீவிரமாகச் செயல்படுத்தவேண்டுமென்றே சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டும் வருகிறார்கள்.

### வேதாரண்யம் பெயர் மாற்றம்

* 554 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேதாரண்யம் என்னும் பெயரை அதன் பண்டைய தமிழ்ப் பெயரான 'திருமறைக்காடு' என்று மாற்றி அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

[முற்பகல் 10-00]

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்த வேதாரண்யம் என்ற பெயர், இதற்கு முன்னாலே திருமறைக்காடு என்று தமிழ்ப் பெயராலே வழங்கப்பட்டு, இப்பொழுது இந்தப் பெயர் வந்ததாகத் தெரிய வருகிறது. இந்த மன்றத்தில் பல தடவை கேட்டுக் கொண்டதற்கிணங்க, மயிலாடுதுறை என்று சிறப்பாகக் கூறப்பட்ட பெயர்தான் இன்றைய மாயூரத்திற்கு. தமிழ் இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள பெயரையே பண்டைய தமிழ்ச் சொல்லாலே

[1973 டிசம்பர் 1

வழங்கப்பட்ட இடங்களை மீண்டும் அதே தமிழ்ச் சொற்களாலே வழங்கப்பட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வேதாரணியம், மாயூரம் போன்ற பகுதிகளிலிருந்து வரப்பட்ட அந்த கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, இப்பொழுது பெயர் மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் இல்லையென்று அரசு முடிவு செய்திருக்கிறது.

பயிரிடும் உள் குத்தகைதாரர்கள்

*555 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) உள் குத்தகைதாரர் தான் பயிரிடும் சம்சாரிதான் என்று ஆக்ட் 9/69-ல் சீர்திருத்த சட்டம் பிறந்து இருந்த போதிலும் அமலுக்கு வந்ததாக அறிவிப்பு செய்யப்படவில்லையென்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.
(இ) வினாவுக்கு இடமில்லை.

திரு ச. சங்குமுத்து தேவர் : தலைவர் அவர்களே, இந்த உள் குத்தகைதாரர் தான் பயிரிடும் சம்சாரி என்பதைப்பற்றி, குத்தகை உதவிப் பதிவு தனி தாசில்தார். நியமிக்கப்பட்டு, அவரிடம் இவைகள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது, 'பாரம் 5' என்ற பாரத்தில் பூர்த்திசெய்து கொடுக்கப்பட்டவை தாசில்தார் அலுவலகத்தில் தேங்கிக் கிடக்கின்றன. அது சீக்கிரத்தில் கவனிக்கப்படாமல் இருப்பதால் இது மாதிரி பதிவு செய்யப்பட வேண்டிய குத்தகை சம்சாரி யார் என்று விவசாயிகள் அறிய முடியாமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே, குறிப்பிட்ட காலத்தில், விரைவில் விசாரணை செய்து, அவற்றை அளிக்க நடவடிக்கை எடுக்க அரசு உத்தரவு பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.



1973 டிசம்பர் 1]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்வி உள் குத்தகைதாரர்களுக்கும் பாதுகாப்பு உண்டா என்பது பற்றிய தாகும். உள் குத்தகைதாரருக்கும் பாதுகாப்பு கொடுக்கப்படுகிறது. அரசாங்க சட்டங்களிலே திருத்தங்கள் செய்யப்பட்டு, 30—7—1969 நாளிட்ட தமிழ் நாடு அரசிதழில் இந்த உள் குத்தகைதாரர் களுக்குப் பாதுகாப்பு உண்டு என்ற சட்டத்தை அரசாங்கம் பிரகடனப்படுத்தியது. எனவே, அந்தத் தேதியிலிருந்து அமலுக்கு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிற கேள்வி, தனிப்பட்ட பிரச்னையாகும். தனியாகக் கேள்வி போட்டால், அதற்கான பதிலைத் தருகிறேன்.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, பல ஆண்டுகளாக பயிரிட்டுக் கொண்டு வருகின்ற குத்தகைதாரர்களை இன்றைக்கு நில உரிமையாளர்கள் வெளியேற்ற முயற்சி செய்கிறார்கள். ஆகவே, கெஸட் நோட்டிஃபிகேஷனில், யார் யார் குத்தகைதாரர்கள் என்று பதிவு செய்யப்பட்டுள்ளதோ, அவர்களுக்கு, அந்தப் பகுதியிலுள்ள டி.எஸ்.பி. போன்ற காவல் துறை அதிகாரிகளை முழுப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென அரசு ஆணையிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே சாதிக் பாட்சா : கெஸட் நோட்டிஃபிகேஷனில் பதிவு பெற்றுள்ளவர்கள்தான் சட்டப் பிரகாரம் உரிமையாளர்கள். அவர்களுக்குப் பாதுகாப்பற்ற நிலைமை இருக்குமானால், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் போலீஸ் அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தினால், நிச்சயமாக நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

இந்த மன்றத்திலே பல உரிமைப் பிரச்சினைகள் எழுப்பப்பட் டிருக்கின்றன. அதற்கான தீர்ப்புகளை பின்னால் அறிவிக்கின்றேன் என்று சொல்லியிருந்தேன். அவற்றை இன்று தெரிவிக்கிறேன்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) இடப்பட்டிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

[1973 டிசம்பர் 1

### (2) நடைமுறைக் கேள்வி

### (அ) அவையுரிமைப் பிரச்சினையைக் கேள்வி நேரத்திற்குப் பிறகு உடனடியாக எடுத்துக்கொள்வது குறித்து.

THIRU P. SOUNDARAPANDIAN : Sir, on a point of order. Under Rule 186, 'a matter of privilege must be raised after the questions and before the list of the business for the day is entered upon :

Provided that a matter of privilege arising......................... during the sitting of the House shall be entitled to immediate precedence over all other business.'

என்று இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேரவைத் தலைவரிடம் இரண்டு உரிமைப் பிரச்சினைகளை எழுப்பியிருக்கிறேன், நம்முடைய விதிமுறைகளின்படி ; ஒன்று 'நவமணி' பத்திரிகையின்மீது. இரண்டாவது, 'முதலமைச்சர்' மீது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள். அதைப்பற்றி நான் சொல்கிறேன், வேறல்ல. உரிமைப் பிரச்னைகளைத் தான் எடுத்துக்கொண்டிருக்கிறேன். கேள்விகள் முடிந்து, மற்ற அலுவல்களை எடுத்துக்கொள்வதற்கு முன்னால் உரிமைப் பிரச்னையைத்தான் எடுத்துக்கொண்டிருக்கிறேன்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** நீங்கள் தீர்ப்பு சொல்ல ஆரம்பித்தீர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இல்லை. இது முன்னால் எழுப்பப்பட்ட பிரச்னையின் மீதான தீர்ப்பு.

### (3) அவையுரிமைப் பிரச்சினைகள்.

### (அ) அறநிலையத் துறை அமைச்சர் பேரவைக்குத் தவறான தகவலைத் தந்ததாகக் கூறப்படுவது குறித்து (தொடர்ச்சி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேற்றைய தினம் இப்பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் மீது ஓர் உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்தார்கள். 21—11—1973



1973 டிசம்பர் 1] [பேரவைத் தலைவர்]

அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் விடுத்த துணை வினாவிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய விடையில்—

"நீலகிரி மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு ஐந்தாயிரம் லிட்டர் பால் அழிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அது சரியல்ல. ஒரு முறை பால் கெட்டு விட்டது என்ற காரணத்தினால்தான் அழிக்கப்பட்டது. வேறு எந்தவிதமான புகாரும் அரசாங்கத்திற்கு வரவில்லை . . ."

என்று குறிப்பிட்டது தவறானது என்றும், அதனால் அது அவை உரிமையை மீறிய செயல் என்றும் டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறியுள்ளார். மேலும், அவர் கூறுகையில் அவருக்கு முன்பு அளிக்கப்பட்ட ஒரு விடையில்—

"நாளொன்றுக்கு 4,300 லிட்டர் ஆடை நீக்கப்பட்ட, திரிந்து போன, அருந்துவதற்கு முழுமையாகப் பயன்படாமல் போன பால் மட்டும், 13—11—1971 முதல் 21—11—1971 வரை, உதகை கூட்டுறவு பால் விநியோகச் சங்கத்தால் தள்ளப்பட்டது."

என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளதைச் சுட்டிக் காட்டி உள்ளார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கையில், 15—1—1973 அன்று ஊட்டி கூட்டுறவு பால் விநியோகச் சங்கத்திலிருந்து டாங்கரில் சாலை வழியாக ஈரோட்டிற்கு அனுப்பப்பட்ட 4,450 லிட்டர் பால் ஈரோட்டிற்கு வந்து பார்க்கையில் கெட்டிருந்ததாகவும் அதனால் அது அழிக்கப்பட்டதாகவும், அதனை மனதில் கொண்டு தம் விடையில் "ஒரு முறை அவ்வாறு நேர்ந்தது" என்று குறிப்பிட்டதாகக் கூறினார். மேலும் திரு. லத்தீப் அவர்களது வினாவில் எந்தக் காலத்தில் நடைபெற்றது என்று குறிப்பிடாததால் தம் விடையில் தவறு இல்லை என்றும், அதனால் தாம் அவையில் தவறான தகவலைத் தரவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

திரு. லத்தீப் அவர்களின் வினா பின்வருமாறு உள்ளது—

"தற்போது பால் பற்றாக்குறை என்று சொல்லப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் ஒரு நாளைக்கு ஐந்தாயிரம் லிட்டர் பால் என்று அழிக்கப்பட்டு வந்தது என்று பத்திரிகையில் செய்தி

வந்ததே. அந்த நீலகிரி மாவட்டத்திலுள்ள பாலையாவது பவுடராக ஆக்க அங்கே பால்பவுடர் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்க முன்வருவார்களா?"

டாக்டர் ஹாண்டே அவர்கள் தமக்கு முதலில் அளிக்கப் பட்டதாக கூறப்படும் விடையில் குறிப்பிட்டுள்ள நிகழ்ச்சி நடந்தது 13—11—1971 முதல் 21—11—1971 வரை. தற்போது நடந்ததாக அமைச்சர் அவர்கள் கூறுவது 15—1—1973-ல். திரு. லத்தீப் அவர்கள், 1971-ம் ஆண்டு—இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால்—நடந்த நிகழ்ச்சியை நினைவில் கொண்டு தம் துணைக் கேள்வியை கேட்டிருப்பார் என்று கருதுவதற்கில்லை. 1973-ம் ஆண்டு ஜனவரியில் நடந்த நிகழ்ச்சியைத் தான் அவர் கேட்டிருக்க வேண்டும். எனவே, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விடை பொருத்தமானது, சரியானதும் ஆகும். மேலும், பேரவைக்கு 1971-ல் தானே அளித்த ஒரு விடையை மறுக்க வேண்டிய அவசியமும் அமைச்சருக்கு இல்லை. எனவே, இதில் அமைச்சர் தவறான தகவல்களைக் கொடுத்தார் என்பது சரியல்ல.

அவைக்கு வேண்டுமென்றே, தவறு என்று தெரிந்தும், அந்தத் தகவலை அளித்தால் அது அவையுரிமையை மீறிய செயலாகும் என்பதுதான் நமது அவையிலும், நாடாளு மன்றத்திலும் பல முறை கொடுக்கப்பட்டுள்ள தீர்ப்பாகும். இங்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தாம் அவைக்குக் கொடுத்த தகவல் தவறானதல்ல என்று குறிப்பிட்டுள்ளார். எனவே இதில் அவை உரிமை மீறல் நிகழ்ச்சி எதுவும் இல்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

(ஆ) பேரவையில் வைக்கப்பட்ட அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ள முதலமைச்சர் இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதம் உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களைக் களங்கப் படுத்தும் வகையில் அமைந்துள்ளது என்று கூறப்படுவது குறித்து (தொடர்ச்சி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. தங்கமணி அவர்கள் எழுப்பிய ஒரு உரிமைப் பிரச்னை.

The Hon. Member Thiru K. T. K. Thangamani has raised a matter of breach of privilege on the ground that in the reply to the rejoinder submitted to the Prime Minister of India by



Thiru M. G. Ramachandran, M.L.A. and Thiru M. Kalyanasundaram, M.P., the member has been described as one who has no qualms of conscience in attacking the Government for the very act which he had requested the Government to do and that such was the character and calibre of the persons who had brought charges against the Government.

When the matter was raised in the House, the Hon. Minister for Industries explained the position justifying the use of the passages against which the Hon. Member Thiru Thangamani had taken objection.

No doubt, any attack on an hon. Member of this House besmirching his character will be breach of privilege of the House, if such act of attacking the character was made in such a way as to impede the execution of his duties as a member of this House. In the present instance, the hon. Member Thiru Thangamani was a signatory to a petition submitted to the President of India in which certain charges have been levelled against some Ministers of the State Government. In repudiating those charges, the abovementioned passage had been written.

As already stated, breach of privilege will arise only if any defamatory statement is made against a member with reference to anything said or done inside the House. Admittedly in the present case the alleged passage was not used against the hon. Member Thiru Thangamani for his having supported the amendment to the City Tenants Protection Act or for his having given a requisition to pass such an amendment. Because he imputed motive elsewhere to the Government for having brought the same amendments which he had supported in the House, the abovementioned passage had been used against him.

I therefore hold that there is no breach of privilege.

அடுத்து, திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் 28-11-1973 ஆம் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது உரிமைப் பிரச்னையை எழுப்பினர். அதற்கு என்னுடைய தீர்ப்பினை அளிக்கிறேன்.

## (2) நடைமுறைக் கேள்வி

### (அ) அவையுரிமைப் பிரச்சினையைக் கேள்வி நேரத்திற்குப் பிறகு உடனடியாக எடுத்துக்கொள்வது குறித்து.

THIRU P. SOUNDARAPANDIAN : Sir, on a point of order. Under Rule 186, ' a matter of privilege must be raised after the questions and before the list of the business for the day is entered upon :

Provided that a matter of privilege arising.......................... during the sitting of the House shall be entitled to immediate precedence over all other business. '

என்று இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேரவைத் தலைவரிடம் இரண்டு உரிமைப் பிரச்சினைகளை எழுப்பியிருக்கிறேன், நம்முடைய விதிமுறைகளின்படி ; ஒன்று ' நவமணி ' பத்திரிகையின்மீது. இரண்டாவது, ' முதலமைச்சர் ' மீது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள். அதைப்பற்றி நான் சொல்கிறேன், வேறல்ல. உரிமைப் பிரச்சினைகளைத் தான் எடுத்துக்கொண்டிருக்கிறேன். கேள்விகள் முடிந்து, மற்ற அலுவல்களை எடுத்துக்கொள்வதற்கு முன்னால் உரிமைப் பிரச்னையைத்தான் எடுத்துக்கொண்டிருக்கிறேன்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** நீங்கள் தீர்ப்பு சொல்ல ஆரம்பித்தீர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இல்லை, இது முன்னால் எழுப்பப் பட்ட பிரச்னையின் மீதான தீர்ப்பு.

## (3) அவையுரிமைப் பிரச்சினைகள்.

### (அ) அறநிலையத் துறை அமைச்சர் பேரவைக்குத் தவறான தகவலைத் தந்ததாகக் கூறப்படுவது குறித்து (தொடர்ச்சி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேற்றைய தினம் இப் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் மீது ஓர் உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்தார்கள். 21—11—1973





அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் விடுத்த துணை வினாவிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய விடையில்—

" நீலகிரி மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு ஐந்தாயிரம் லிட்டர் பால் அழிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அது சரியல்ல. ஒரு முறை பால் கெட்டு விட்டது என்ற காரணத்தினால்தான் அழிக்கப் பட்டது. வேறு எந்தவிதமான புகாரும் அரசாங்கத்திற்கு வரவில்லை . . ."

என்று குறிப்பிட்டது தவறானது என்றும், அதனால் அது அவை உரிமையை மீறிய செயல் என்றும் டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறியுள்ளார். மேலும், அவர் கூறுகையில் அவருக்கு முன்பு அளிக்கப்பட்ட ஒரு விடையில்—

" நாளொன்றுக்கு 4,300 லிட்டர் ஆடை நீக்கப்பட்ட, திரிந்து போன, அருந்துவதற்கு முழுமையாகப் பயன்படாமல் போன பால் மட்டும், 13—11—1971 முதல் 21—11—1971 வரை, உதகை கூட்டுறவு பால் விநியோகச் சங்கத்தால் தள்ளப்பட்டது."

என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளதைச் சுட்டிக் காட்டி உள்ளார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கையில், 15—1—1973 அன்று ஊட்டி கூட்டுறவு பால் விநியோகச் சங்கத்திலிருந்து டாங்கரில் சாலை வழியாக ஈரோட்டிற்கு அனுப்பப் பட்ட 4,450 லிட்டர் பால் ஈரோட்டிற்கு வந்து பார்க்கையில் கெட்டிருந்ததாகவும் அதனால் அது அழிக்கப்பட்டதாகவும், அதனை மனதில் கொண்டு தம் விடையில் " ஒரு முறை அவ்வாறு நேர்ந்தது " என்று குறிப்பிட்டதாகக் கூறினர். மேலும் திரு. லத்தீப் அவர்களது வினவில் எந்தக் காலத்தில் நடைபெற்றது என்று குறிப்பிடாததால் தம் விடையில் தவறு இல்லை என்றும், அதனால் தாம் அவையில் தவறான தகவலைத் தரவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

திரு. லத்தீப் அவர்களின் வினா பின்வருமாறு உள்ளது—

" தற்போது பால் பற்றாக்குறை என்று சொல்லப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் ஒரு நாளைக்கு ஐந்தாயிரம் லிட்டர் பால் என்று அழிக்கப்பட்டு வந்தது என்று பத்திரிகையில் செய்தி

[1973 டிசம்பர் 1

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் நவமணி மேல் எழுப்பிய உரிமைப் பிரச்னைக்கு பின்னால் வர இருக்கிறேன். நீங்கள் உட்காருங்கள். முதலில் இதைப்பற்றி என்னுடைய தீர்ப்பை அளித்துவிடுகிறேன்.

இந்த நிகழ்ச்சிகள் முடிந்த பிறகு நீங்கள் பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்புங்கள்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** பாயின்ட் ஆப் ஆர்டர் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொல்லிவிட்டேன். என்னுடைய தீர்ப்பைக் கொடுத்ததற்குப் பிறகு உங்களுடைய பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்புங்கள்.

**(இ) உறுப்பினர் திரு. பெ. சௌந்தரபாண்டியன், தான் ஒருவருக்கு எழுதாத கடிதத்தை எழுதியதாக மாண்புமிகு முதல் அமைச்சர் பேரவையில் படித்தது குறித்து (தொடர்ச்சி).**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 28—11—1973-ஆம் நாளன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சௌந்தரபாண்டியன் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மீது ஓர் உரிமைப் பிரச்சினையை எழுப்பினார்கள்.

27—11—1973-ஆம் நாளன்று, முதல் துணை மதிப்பீட்டின்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளித்து மாண்புமிகு முதலமைச்சரவர்கள் உரை நிகழ்த்துகையில் ஒரு கடிதத்தைப் படித்துக் காட்டி, அது உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்களால் எழுதப்பட்டது என்று கூறினார். அக்கடிதம் தன்னால் எழுதப் படவில்லையென்றும், தம் மீது களங்கம் கற்பிக்கவேண்டுமென்ற கருத்துடன் அவ்வாறு சாட்டப்பட்டுள்ளதென்றும் இப்பொழுது இந்த உரிமைப் பிரச்சனைக் கடிதத்தில் உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் கூறுகிறார்.



1973 டிசம்பர் 1] [பேரவைத் தலைவர்]

இப்பொழுது நாம் தீர்மானிக்க வேண்டியது, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அக்கடிதத்தைப் படித்தது அவையுரிமையை மீறிய செயலா என்பதேயாகும்.

இதைத் தீர்மானிப்பதற்கு முன் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் உரையையும் அப்பொழுது குறுக்கிட்டுப் பேசிய உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் உரையையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இது சம்பந்தமாக நிகழ்த்தப்பட்ட உரைகள் பின்வருமாறு:—

" **மாண்புமிகு முதலமைச்சரவர்கள் :—**

. . . டைரக்டர் பதவி வாங்கித் தருகிறேன், சென்னைக்குப் போக வழிச்செலவும் கார் நிதியும் கொடு என்று ஒருவருக்குக் கடிதம் எழுதியது உண்டா?

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் அவர்கள் :**

இதுவரை நான் எவருக்கும் அதுமாதிரிக் கடிதம் எழுதியது கிடையாது. அவர்கள் நிரூபிக்கத் தயாரா?"

**இதை அடுத்து மாண்புமிகு முதலமைச்சரவர்கள் :**

"தலைவர் அவர்களே, உங்களுடைய கையெழுத்துப் பெற்ற அந்தக் கடிதத்தைப் படிக்கிறேன்" என்று அறிவித்துவிட்டு, கடிதத்தைப் படித்துக்காண்பித்தார்.

இந்தக் கடிதத்தை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் படித்து முடித்தவுடன் உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் பேசியதாவது :—

" அந்த விஸ்வநாதன் என்பவர் யார் என்பதை முதலில் இந்த அவை புரிந்து கொள்ளவேண்டும். உள்ளபடியே நான் விளக்கம் அளிக்க வேண்டும். நான் திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்த நேரத்திலே குளித்தலை சட்ட மன்ற உறுப்பினருக்கு ஒரு கார் பரிசளிக்கப்பட்டது. அதைப் போன்று என்னுடைய தொகுதியிலும் ஒரு ஏற்பாடு செய்யப்பட்டு அது ஒரு ஆண்டுக் காலம் இழுக்கப்பட்டது. என்னுடைய தொகுதியிலே ஒரு குழு

அமைத்தார்கள். அந்தக் குழுவிலே பலர், அவர்களே அச்சடித்துக் கொண்ட சீட்டுகளை வைத்துக்கொண்டு வசூல் செய்தார்கள். ஆனால் எந்தவிதமான வசூலையும் ஒப்படைக்கவில்லை.

இந்த விஸ்வநாதன் என்பவர் கரூரில் பல முதலியார்களிடம் என்னுடைய பெயரைச் சொல்லி இந்தச் சீட்டை வாங்கி ஏராளமாகப் பணத்தை வசூலித்து தானே வைத்திருக்கிறார்கள். இது தான் உண்மை . . . இந்தக் கடிதத்தை அதோடு இணைப்பது எந்தவிதத்தில் பொருந்தும் என்பதை முதலமைச்சரவர்கள் சொல்லவேண்டும்."

மேலே கண்ட உரைகளிலிருந்து தெரிவதென்ன? உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் முதலில், எவருக்கும் கடிதம் எழுதியது கிடையாது என்று கூறியவர், பின்னால், முதலமைச்சரவர்கள் அக்கடிதத்தை வாசித்தவுடன், அந்தக் கடிதம் யாருக்கு எழுதப்பட்டிருக்கிறதோ அந்த விஸ்வநாதனைப் பற்றியும் அந்தக் கடிதத்தில் கண்ட கார் நிதி வசூல்பற்றியும் விளக்கம் தந்தார். அந்தக் கடிதம் பற்றி எவ்வித மறுப்பும் தெரிவிக்கவில்லை. மாறாக, அவர் எழுப்பிய வினா . .

"இந்தக் கடிதத்தை அதோடு இணைப்பது எந்தவிதத்தில் பொருந்தும் என்பதை முதலமைச்சரவர்கள் சொல்ல வேண்டும்". என்பதே ஆகும். ஆக, இந்த உரைகளிலிருந்து தெளிவாகத் தெரிவது, உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள், அக் கடிதம் எழுதப்பட்ட சூழ்நிலையை விளக்கியுள்ளார் என்பதே ஆகும்.

இப்படியிருக்க, அடுத்த நாள், அதாவது 28—11—1973-ஆம் நாளன்று, உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் உரிமைப் பிரச்சினையை எழுப்பி, அக்கடிதம் அவரால் எழுதப் படாதது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார். அதுபற்றி உறுப்பினர் அவர்கள் பேசுகையில் முந்திய தினம் பேரவைக்குள் துண்டு அறிக்கைகளை வீசியெறிந்து கோஷங்கள் எழுப்பிய மாணவர்களுக்கு அனுமதிச் சீட்டுகளை உறுப்பினர் கொடுத்திருந்ததால் உறுப்பினர் மீது ஆத்திரம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சரவர்கள், அவர் மீது களங்கத்தை உண்டாக்கவேண்டு



மென்று கருதி, அவரால் எழுதப்படாத கடிதத்தை வாசித்தார் எனக் கூறினார். இதற்குப் பதிலளிக்கையில் இதை மறுத்து மாண்புமிகு முதலமைச்சரவர்கள், தம்மால் வாசிக்கப்பட்ட கடிதம் 1968-ஆம் ஆண்டு தபால் முத்திரையுடன் கூடிய கடிதம் என்றும் தெரிவித்தார்கள்.

இப்பொழுது நாம் பார்க்கவேண்டியது—உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் கூறியுள்ளபடி, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வேண்டுமென்றே, உறுப்பினரால் எழுதப் படாத கடிதத்தை உறுப்பினர் எழுதியதாக அவையில் வாசித் தாரா என்பதே ஆகும். முதல் நாள் பேரவைக்குள் துண்டு அறிக்கைகளை வீசியெறிந்த மாணவர்களுக்கு அனுமதிச் சீட்டை வழங்கியது உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் தான் என்ற காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இக் கடிதத்தை உருவாக்கியிருக்க முடியாது என்பது தெளிவு. ஏனெனில், அக்கடிதம் 'இன்லண்டு லெட்டரில்' எழுதப் பட்டுள்ளது. அதில் 23—12—1968, 24-12-1968, 25-12-1968 தேதிக்குள்ள தபால் முத்திரைகள் தெளிவாகப் பதிந்துள்ளன . . . எனவே, 27—11—1973-இல் நடந்த ஒரு நிகழ்ச்சியின் காரணமாக, 1968-ஆம் ஆண்டு தபால் முத்திரை போட்ட கடிதத்தை எவராலும் பொய்யாக உருவாக்க இயலாது. எனவே, முந்திய நாள் மாணவர்களுக்கு அனுமதிச் சீட்டுகள் வழங்கிய காரணத்தால் இக் கடிதம் உருவாக்கப்பட்டது என்று உறுப்பினர் திரு. சௌந்தர பாண்டியன் அவர்கள் கூறுவதை ஏற்றுக் கொள்வதற்கில்லை.

மேலும், மேலே கூறப்பட்ட உரைகளிலிருந்து தெளிவாகத் தெரிவது என்னவெனில், 27—11—1973-ஆம் நாள், இக்கடிதத்தை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் படித்தவுடன், உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் அக்கடிதம் யாருக்கு எழுதப் பட்டிருக்கிறதோ அந்த விஸ்வநாதனைப் பற்றியும், அந்தக் கடிதத் தில் கூறப்பட்டுள்ள கார் நிதியைப்பற்றியும் விளக்கங்களைத் தான் கூறினார்கள். அதிலும், ஏற்கனவே நான் கூறியபடி உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் இறுதியாகக் கேட்ட கேள்வி—"இந்தக் கடிதத்தை அதோடு இணைப்பது எந்த

விதத்தில் பொருந்தும் என்பதை முதலமைச்சரவர்கள் சொல்ல வேண்டும்" என்பதுதான்.

மேலே சொல்லப்பட்டதிலிருந்து இரு கூறுகள் தெளிவாகின்றன. ஒன்று 27—11—1973-ஆம் நாளன்று, உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் எழுதியதாக மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வாசித்த கடிதம் பற்றி பதிலளிக்கையில், உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் கடிதத்தில் கண்ட விஸ்வநாதன் பற்றியும், கார் நிதி பற்றியும் விளக்கங்கள் கூறியதோடு அமைந்துவிட்டார். இரண்டு—அடுத்த நாள், அதாவது 28—11—1973 அன்று, இப்பிரச்சினையை எழுப்பி, உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள், அக்கடிதம் தன்னால் எழுதப்பட்டதல்ல என்று திட்டவட்டமாக மறுத்தபொழுது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அக்கடிதம் உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்களால்தான் எழுதப்பட்டது என்று கூறவில்லை. இதுவே இந்நிகழ்ச்சிகளிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

இது, தாம் எழுதிய கடிதம் அன்று எனத் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் கூறுகிறார். அது, அவர் எழுதியது அன்று என்பதை நானும் அறிந்தேன். இதை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் ஏற்றுக்கொள்கிறார்.

இப்பேரவைக்கு தவறான தகவலை அல்லது தவறான ஆவணத்தை அது தவறு என்பதை அறிந்தும் வேண்டுமென்றே தருவது தான் அவை உரிமை மீறிய செயலாகும். 27—11—1973 அன்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் படித்த கடிதம் "திரு. சௌந்தரபாண்டியன் 1968-ல் எனக்கு எழுதிய கடிதத்தைத் தங்களுக்கு அனுப்பி வைக்கிறேன் என்று" விசுவநாதன் என்ற ஒருவரால் முதலமைச்சர் அவர்களிடம் கொடுக்கப்பட்ட கடிதம் ஆகும்.

எனவே, உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் மீது களங்கம் கற்பிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் அவர் எழுதாத கடிதத்தை வேண்டுமென்றே அவர் எழுதியதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்பேரவையில் வாசித்தார் என்று கொள்ளுவதற்கில்லை. எனவே, உரிமைப் பிரச்சினை எதுவும் எழவில்லை என்று தீர்ப்பு அளிக்கிறேன்.



## (ஈ). 'நவமணி' நாளிதழில் பேரவை நடவடிக்கை தவறாக வெளியிடப்பட்டிருப்பது குறித்து.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தமிழ் நாடு சட்டப் பேரவை விதி எண் 184-கீழ் 'நவமணி' செய்தித்தாளின்மீது ஓர் உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வர விரும்புகிறேன்.

27—11—1973 ஆம் நாளன்று நடைபெற்ற 1973-74 ஆம் ஆண்டிற்குரிய முதல் துணை மதிப்பீட்டின்மீது நான் பேசுகின்ற நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு எதுவும் சொல்லவில்லை. நான் எனது பேச்சை முடித்து சுமார் 1 மணி 45 நிமிடங்கள் கழித்துத் தான் நான் எழுதாத கடிதம் ஒன்றை நான் எழுதியதாக அவையில் படித்தார். ஆனால் 27—11—1973 ஆம் தேதிய "நவமணி" செய்தித்தாளில் முதல் பக்கம் இரண்டாம் பத்தியில் நான் பேசும்போது முதலமைச்சர் குறுக்கிட்டு கூறியதாகச் செய்தி வெளியிட்டுள்ளது. இது பேரவையில் நடந்த நடவடிக்கையை வேண்டுமென்றே, திட்டமிட்டு, உள்நோக்கத்துடன் திரித்து வெளியிடப்பட்டதாகும். இந்த அவையின் உரிமையைப் பாதிக்கக்கூடியதாகவும் உள்ளது.

பொதுமக்கள் மத்தியில் என் மீது களங்கம் கற்பிக்க வேண்டுமென்ற கெட்ட நோக்கத்துடன் பேரவையின் நடவடிக்கையை மாற்றி நான் விவாதத்தில் பேசும்போது இடையில் முதலமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு கூறியதாக உண்மைக்கு மாறாக செய்தி வெளியிட்டிருப்பது எனது உரிமையைப் பறிப்பதாக இருக்கிறது.

ஆகவே, இந்த உரிமைப் பிரச்சினையை 'நவமணி' செய்தித்தாளின் மீது கொண்டுவர அனுமதி அளிக்குமாறு வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது போதும், உட்காருங்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: நான் அதை விளக்க விரும்புகிறேன். தலைவர் அவர்களே, நான் பேசும்பொழுது முதலமைச்சர் எதுவும் குறுக்கிட்டுச் சொல்லவில்லை. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் தான் குறுக்கிட்டுப் பேசினார்கள், முதலமைச்சர் அவர்கள் கூர்ந்து கேட்டுக்கொண்டிருந்தார்களே தவிர வேறு எதுவும் கூற இல்லையென்பது இந்த அவைக்கும் தெரியும், மற்றவர்களுக்கும் தெரியும். அப்படியிருக்க முதலமைச்சர் குறுக்கிட்டுப் பேசியதாக இந்த 'நவமணி'

[திரு. பெ. சௌந்தரபாண்டியன்] [1973 டிசம்பர் 1

பத்திரிக்கை செய்தி வெளியிட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, நான் இந்த அவையிலே இரண்டு முறை, இதுவரை எவருக்கும் அது மாதிரி கடிதம் எழுதியது கிடையாது, அவர்கள் நிரூபிக்கத் தயாரா என்று கேட்டு இருக்கிறேன். மீண்டும் ஒரு முறை நான் கடிதம் எதுவும் அப்படி எழுதவில்லை. அவர்கள் நிரூபிக்கத் தயாரா என்று கேட்டிருக்கிறேன். இதே 'நவமணி' இதழில் அவர்கள் படித்த கடிதத்தையும் வெளியிட்டிருக்கிறார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடைசியிலேதான் விடையளிக்கும்பொழுதுதான் பேசினார்கள், குறுக்கிட்டுப் பேசினார்கள் என்று வந்திருக்கிறது என்று வந்திருப்பதாகச் சொல்கிறார்களே, அதுவரைக்கும் பேசுங்கள்.

தாங்கள் உரிமைப் பிரச்னை எழுப்பும் நேரத்தில் கொடுத்துள்ள நோட்டீசிலே, முதலமைச்சரவர்கள் விடையளிக்கும்பொழுது கூறினார்கள், ஆனால் நவமணி செய்தித்தாளில் நான் பேசும்போது முதலமைச்சர் குறுக்கிட்டு கூறியதாகக் கூறியிருக்கிறது என்று அதைத்தான் சொல்லியிருக்கிறீர்கள்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** நவமணி செய்தித்தாளின் மேல் கொடுத்த உரிமைச் பிரச்சினையை எழுப்பும் நேரத்தில் அதில் என்னென்ன சம்பந்தப்பட்டிருக்கிறது என்று சொல்வதற்கு உறுப்பினர்களுக்கு உரிமையிருக்கிறது என்றுதான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் என்னிடம் நோட்டீஸ் கொடுத்தால் நான் பேப்பரைப் பார்ப்பதற்கு வாய்ப்பு கொடுக்க வேண்டுமல்லவா? (குறுக்கீடு) அதை இப்பொழுது பார்க்க முடியாது. இதில் என்ன குற்றச்சாட்டைக் கூறியிருக்கிறீர்களோ அதைப் பற்றித்தான் கூறலாம். அதை விட்டு வேறு விஷயங்களைச் சொல்வது சரியல்ல.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** அந்தக் கடிதம் 'போர்ஜரி' என்று தெரிந்தும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கடிதத்தைப்பற்றிப் பேச்சு இல்லை. உங்களுடைய உரிமைப்பிரச்னை என்னவென்றால், முதலமைச்சரவர்கள் விடையளிக்கும்பொழுது கூறினார்கள். ஆனால் நவமணி செய்தித்தாளில் நான் பேசும்பொழுது குறுக்கிட்டுக் கூறியதாகக் கூறியிருக்கிறது என்று சொல்கிறீர்கள்.



1973 டிசம்பர் 1]

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தங்கள் அனுமதியின்பேரில் இதைக் கூறுவதற்கு அனுமதித்தால் கூறுகிறேன். இல்லையென்றால் வேறொரு உரிமைப் பிரச்னையைக் கொண்டு வருவதற்குத் தாங்கள் அனுமதி அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுதுள்ள உரிமைப் பிரச்னை இந்த அளவோடுதான்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, இந்தப் பேரவையில் 27—11—1973 ஆம் தேதி நான் பேசுகின்ற நேரத்தில், இளைஞர் அணிக்கு தேர்ந்தெடுக்கப்படும்போது சிபாரிசின் அடிப்படையிலேயே நடைபெறுகிறது என்று . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர்கள் குறுக்கிடவில்லை, வேறு இரு அமைச்சர்கள் தான் குறுக்கிட்டார்கள், ஆனால் குறுக்கிடாததைக் குறுக்கிட்டதாகச் சொல்லியிருக்கிறது என்ற அந்த அளவோடு சொல்கிறீர்கள்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** நவமணி பத்திரிகையில் இந்த இடத்தில் குறுக்கிட்டார் என்று குறிப்பாகச் சொல்லியிருக்கிறது. அதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. குற்றச்சாட்டுக்குரிய பகுதியைப் படிக்காமல் வேறு எதைச் சொல்வது? இளைஞர் அணிக்கு தேர்ந்தெடுக்கப்படும்போது சிபாரிசின் அடிப்படையிலேயே நடைபெறுகிறது என்று போட்டு விட்டு பிறகு சிறிய கொட்டை எழுத்துக்களில், 'முதல்வர் குறுக்கிட்டு . . .' என்று போட்டுவிட்டு பிறகு சிறிய எழுத்தில், 'அப்போது முதல் அமைச்சர் கருணாநிதி குறுக்கிட்டுக் கூறியதாவது :—நண்பர் சௌந்தரபாண்டியன் . . ." என்று தொடங்குகிறது. நான் அந்தக் குறிப்பிட்ட பகுதியைத்தான் சுட்டிக் காட்டினேனே தவிர வேறு எதையும் அல்ல. ஆகவே, நான் பேசும்பொழுது முதலமைச்சரவர்கள் எவ்விதமான குறுக்கீடும் செய்யவில்லை. ஆனால் நவமணி செய்தித்தாள் வேண்டுமென்றே, வெளி உலகத்தில் பார்ப்பவர்கள் என்னுடைய திறமையின்மை என்பதாக அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக உள்நோக்கத்தோடு, முதலமைச்சருக்குத்தான் ஏதோ திறமையிருப்பதைப்போல உடனே குறுக்கிட்டுக் கூறினார் என்று பொருள்படும் அளவிற்குப் போட்டிருப்பதால் ஒரு அரசியல்வாதிக்கு எந்தெந்த அளவிற்குக் களங்கம்

செய்ய வேண்டுமோ அந்த அளவிற்கு நவமணி செய்தித்தாள் திரித்து வெளியிட்டிருக்கிறது. இந்தப் பேரவையின் நிகழ்ச்சியையே மாற்றி வெளியிட்டிருக்கிறது. ஆகவே, இது உரிமைப் பிரச்னைக்கு அனுப்பவேண்டிய முக்கியமான ஒன்றாகும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் அறிக்கையோடு தரப்பட்ட "நவமணி" செய்தித் தாளையும் சட்டப் பேரவை நடவடிக்கைக் குறிப்பையும் நான் பார்வையிட்டேன். "நவமணி" செய்தித் தாளில் எழுதியுள்ள படி, மாண்புமிகு முதல்வர் அவர்கள், திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் உரை நிகழ்த்தும்பொழுது குறுக்கிட்டு எதையும் கூறவில்லை. பண ஒதுக்கீடு விவாதத்திற்குப் பதில் அளிக்கும் பொழுதுதான் முதல்வர் அவர்கள், உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்களால் எழுதப்பட்டுள்ளதாகவுள்ள கடிதம் பற்றிக் குறிப்பிட்டார். எனவே, உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் பேசும்பொழுது குறுக்கிட்டு முதல்வர் அவர்கள் கூறியதாகச் செய்தித்தாளில் வெளியிட்டிருப்பது தவறு.

சட்ட மன்ற நடவடிக்கைகளை வேண்டுமென்றே திரித்து வெளியிடுதல் அவையின் உரிமையை மீறியதாகும் என்பதில் ஐயம் இல்லை. ஆயினும், அவ்வாறு தவறாக "நவமணி" செய்தித் தாளில் வெளியிட்டுள்ளது, வேண்டுமென்றே வெளியிட்டதாகக் கொள்ளுவதற்கில்லை. உறுப்பினர் அவர்கள் கூறியபடி, எந்த வித உள்நோக்கமும் கற்பிப்பதற்கு இடம் இல்லை என்றே கருதுகிறேன். உறுப்பினர் மீது களங்கம் கற்பிக்கும் கெட்ட நோக்கத்துடன் இவ்வாறு பிரசுரிக்கப்பட்டிருக்கிறது என்றும் கொள்ளுவதற்கில்லை. எனவே, இதில் உரிமைப் பிரச்சினை ஏதுமில்லை என்று கருதுகிறேன்.

இருப்பினும், "நவமணி" செய்தித் தாளின் பொறுப்பாளர்களையும், மற்றும் இதர செய்தித் தாள்களையும் நான் கேட்டுக் கொள்வது, சட்ட மன்ற நடவடிக்கைகளை வெளியிடும்பொழுது கவனத்துடன் வெளியிடுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.



**(உ) திரு. பெ. சௌந்தரபாண்டியன் ஒப்புக்கொள்ளாத ஒன்றை அவர் ஒப்புக்கொண்டதாக முதலமைச்சர் கூறியது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள், தான் ஒப்புக்கொள்ளாத ஒன்றை ஒப்புக் கொண்டதாக முதலமைச்சர் கூறினார் என்ற அளவில் ஒரு உரிமை பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள். இந்த உரிமைப்பிரச்னை, முன்பு எழுப்பிய ஒரு உரிமைப்பிரச்னைக்குத் தீர்ப்பளித்த வகையிலே அடங்கிவிடுவதால் இந்த உரிமைப்பிரச்னைக்கு அனுமதி தர மறுக்கிறேன்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, நம்முடைய 186-வது விதியில் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு உறுப்பினர் உரிமைப்பிரச்னை எழுப்பும் நேரத்தில் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து சபை உடனே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தெளிவாக இருக்கிறது. எப்படி உரிமைப்பிரச்னையில் வருகிறது என்று என்னுடைய கருத்தைக்கூடக் கூறுவதற்கு தாங்கள் அனுமதிக்கவில்லை என்றால் . . .

THIRU V. KRISHNAMOORTHY : The Hon. Speaker has already given his decision on the matter.

THIRU P. SOUNDARAPANDIAN : It is different matter.

THIRU V. KRISHNAMOORTHY : It should not be raised; the Hon. Speaker has already given his decision.

THIRU P. SOUNDARAPANDIAN : It is entirely a different matter It has no relation with this issue. தயவு செய்து படிக்கவாவது அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது இரண்டும் ஒரே நிலையிலே தொடர்புடைய உரிமைப்பிரச்னைகள். ஆகவே, ஒரு உரிமைப்பிரச்னைக்குத் தீர்ப்பளித்த பிறகு இதற்குத் தீர்ப்பளிக்க வேண்டியதில்லை என்று சொல்லியதற்குப் பிறகு மீண்டும் அதை எழுப்புவது முறையல்ல.

THIRU P. SOUNDARAPANDIAN : No. No. It is entirely a different matter and not the same thing. எந்த இடத்தில் நான் ஒத்துக்கொண்டேன்? நான் ஒத்துக்கொண்டதாக அவைக் குறிப்பிலே இருக்கிறதா?

[1973 டிசம்பர் 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைப் பற்றி விரிவாகத் தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைப்பற்றி முடிவு தந்து விட்டபிறகு, அந்தக் கடிதம் உங்களால் எழுதப்படவில்லை என்று முடிவெடுத்தபிறகு அதைப்பற்றி விவாதம் தொடங்குவது முறையல்ல.

## (4) அறிவிப்புகள்.

### (அ) ஆவணங்களைப் பேரவையில் படிப்பது குறித்தும், குற்றச்சாட்டுகள் சாட்டப்படுவது குறித்தும் பின்பற்றப் பட வேண்டிய முறைகள் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் உரை நிகழ்த்தும் பொழுது ஏதாவதோர் ஆவணத்தைப் பேரவையில் படிக்கவேண்டுமெனில், அதனை முன்னதாகவே பேரவைத் தலைவரிடம் காட்டி, அவரது அனுமதியைப் பெற்ற பின்னரே படிக்க வேண்டும். அதிலும் முக்கியமாக, பேரவையின் உறுப்பினர் ஒருவரால் எழுதப்பட்ட கடிதம் அல்லது ஆவணம் ஒன்றைப் பேரவையில் படிக்க விரும்பினால், அதனைப் பேரவைத் தலைவர், யாரால் எழுதப் பட்டது என்று கூறப்படுகிறதோ அந்த உறுப்பினரிடம் காட்டி அதன் உண்மைத் தன்மையை உணர்ந்து அனுமதி வழங்கிய பின்னரே அவையில் படித்தல் வேண்டும்.

ஓர் உறுப்பினர் பேசும்பொழுது, வேறோர் உறுப்பினர் மீது குறிப்பிட்டு ஏதாவது குற்றம் சாட்ட விரும்பினால், அக்குற்றச் சாட்டைப் பேரவைத் தலைவரிடம் முன்னதாகவே கூறி, பேரவைத் தலைவர் அதைக் குற்றம் சாட்டப்படும் உறுப்பினருக்குத் தெரிவித்ததன் பின்னரே, அதற்கான அனுமதி வழங்குவார். அவ்வித அனுமதியின்றி, எந்த உறுப்பினரும் வேறொரு உறுப்பினர் மீது தமது உரையில் குற்றம் சாட்டுவது கூடாது.



1973 டிசம்பர் 1] [பேரவைத் தலைவர்]

இதுவே நாடாளுமன்றத்திலும் நமது சட்ட மன்றங்களிலும் பின்பற்றப்படும் மரபாகும். நேற்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலும் இந்த முறையைத் தவறாது பின்பற்ற வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. ஆகவே, உறுப்பினர்கள் இதனைக் கருத்திற்கொண்டு உரை நிகழ்த்துமாறு வேண்டுகிறேன்.

## (2) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

### (ஆ) ஆவணங்கள் படிப்பது குறித்து பேரவைத் தலைவர் வகுத்த முறையைப் பின்பற்றுவது பற்றி.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்னையை உங்கள் அனுமதியின் பேரில் எழுப்ப விரும்புகிறேன். தாங்கள் தீர்ப்பு கொடுக்கும் பொழுது யாராவது ஒரு உறுப்பினர் இன்னொரு உறுப்பினருக்கு எழுதியிருந்தால், அதை எழுதிய உறுப்பினருக்குக் காட்ட வேண்டுமென்றும், அந்த உறுப்பினரின் அனுமதி பெற்றுத்தான் படிக்க வேண்டுமென்று தீர்ப்பளித்தீர்கள். ஆனால் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒரு கடிதத்தைப் படிக்கும்பொழுது, உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் எழுதியதாக ஒரு கடிதத்தைப் படித்தார்.

alleged to have been written by Thiru P. Soundarapandian என்று காட்டினார். இங்கே படித்தார். அந்த நேரத்தில், உங்களுடைய தீர்ப்பிற்குக் கட்டுப்பட்டுத்தான் இருக்கிறோம் என்று சொல்வதற்காகத்தான் சொல்கிறேன். திரு. சௌந்தரபாண்டியன் அவர்களுடைய அனுமதியில்லாமல் படித்தார்கள். ஆகவே, தாங்கள் இப்பொழுது கூறியிருக்கும் முறையில் அமைச்சர்களுக்கு ஒரு ரூலிங், மற்ற உறுப்பினர்களுக்கு இன்னொரு ரூலிங் என்று இருக்கிறதா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. நேற்று அலுவல் ஆய்வுக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு இது. இந்த மன்றத்தில் இருக்கும் 234 உறுப்பினர்களுக்கும் இது பொருந்தும். அமைச்சர்களானாலும், கட்சித் தலைவர்களானாலும், எந்தக் கட்சி உறுப்பினர்களானாலும் அது எல்லோருக்கும் உரியதுதான். அடுத்து . . . .

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** சார் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைத் தலைவர் எழுந்து நிற்கும்பொழுது யாரும் நிற்கக்கூடாது என்ற அந்த மரபைக் கூட பின்பற்றவில்லையென்றால் எப்படி ?

[முற்பகல் 10-30]

## (இ) பேரவை நடவடிக்கைகளின் ஒரு பகுதி முழுமையையும் நீக்குவது குறித்துப் பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை நடவடிக்கைகளின் பகுதிகளை நீக்குவது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் நேற்று ஒரு ஒழுங்குப் பிரச்னையை எழுப்பினார்கள். அதுபற்றி நான் முடிவு கூறியபோது, இவ்வாறு நீக்கப்படுவது இதற்கு முன்னரும் நடை பெற்றிருக்கிறது. அதற்கான சான்றுகளை இன்று தருவதாகக் கூறினேன்.

பேரவையின் நிகழ்ச்சிகள் பெருமளவில் நீக்கப்படுவது நம் நாட்டுப் பல்வேறு சட்டமன்றங்களிலும் நிகழ்ந்த காரணத்தால் 1956 ஆம் ஆண்டு நடைபெற்ற பேரவைத் தலைவர்கள் மாநாட்டிலே கூட இது குறித்துப் பெரிய விவாதமே நடைபெற்றுள்ளது.

1958 ஆம் ஆண்டில், தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஓர் உறுப்பினர் ஆற்றிய உரையில் இருபது நிமிடம் பகுதி அப்பொழுது பேரவைத் தலைவராக இருந்த டாக்டர் திரு. கிருஷ்ணாராவ் அவர்களால் நீக்கப்பட்டுள்ளது.

1964 ஆம் ஆண்டில் ஓர் உறுப்பினரின் உரையில் ஒரு பகுதி அப்பொழுது பேரவைத் தலைவராக இருந்த திரு. செல்லபாண்டியன் அவர்களால் நீக்கப்பட்டுள்ளது.

6-3-1968 ஆம் நாள் நிகழ்ச்சிகளில் இருபது நிமிட விவாதமும், 20-8-1968 ஆம் நிகழ்ச்சிகளில் பதினைந்து நிமிட விவாதமும் பேரவை நடவடிக்கை குறிப்பிலிருந்து அறவே நீக்கப்பட்டுள்ளன.

டில்லி மக்களவை, மாநிலங்கள் அவைகளிலும் கூட இவ்வாறு நடவடிக்கைப் பகுதிகள் நீக்கம் செய்யப்பட்டதற்கு நிறையச் சான்றுகள் உள்ளன. ஓர் உறுப்பினர் ஆற்றிய உரை முழுவதுமாக நீக்கப்பட்ட நிகழ்ச்சியும் ஆங்கு நிகழ்ந்துள்ளது.



ஆகவே, அவ்வாறு நீக்குவது ஒழுங்கற்றதாகாது எனத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், அவ்வாறு நீக்கப்பட்டாலும், நீக்கப்பட்ட பகுதிகளை ஆராய்ந்து அவற்றுள் ஏற்புடைய பகுதிகளை மட்டும் இணைத்துக் கொள்ள பின்னர் ஆணையிடலாம். முன்பு ஒருமுறை அவ்வாறு இணைத்துக் கொள்ளப்பட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூறினார்கள்.

அவ்வாறு நிகழ்ந்தது 12-8-1972-ல், அவ்வாறு அன்று ஆணையிட்ட அப்போது பேரவைத் தலைவராக இருந்த திரு. மதியழகன் அவர்கள், அவ்வாறு ஆணையிடுவதற்கு முன்பும், பின்பும் என்ன கூறியுள்ளார் என்பதையும் ஈண்டுச் சுட்டிக் காட்டுகின்றேன்.

"எக்ஸ்பஞ்ச் செய்தால் அது எக்ஸ்பஞ்ச் செய்ததாகவே இருக்க வேண்டும், துணைச் சபாநாயகர் எக்ஸ்பஞ்ச் செய்த பகுதிகளை இன்று வருகிற தலைவர் 'இல்லை, இல்லை இருக்கட்டும்' என்பதும், நாளை வருகிற தலைவர் 'இல்லை, இல்லை கூடாது' என்று சொல்வதும் சரியானதாகாது. ஒரு தடவை எக்ஸ்பஞ்ச் செய்தால் அது எக்ஸ்பஞ்ச் செய்ததுதான், அதற்கு அப்பீலே கிடையாது என்ற ரூலிங்கை நான் முன்னொடி கொடுத்த ரூலிங்குக்கு அடுத்த படியாகக் கொடுக்கிறேன்" இது அவர் தொடக்கத்தில் கொடுத்த ஆணை, இவ்வாறு ஆணைகொடுத்த பின்னர், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் வேண்டுகோளை ஏற்று, முன்னர் எக்ஸ்பஞ்ச் செய்ததில் ஒரு பகுதியை ஏற்க ஆணை பிறப்பித்த அவர் இறுதியாக "இனிமேல் யார் கொடுக்கிற ஆணையாகட்டும் எக்ஸ்பஞ்ச் செய்தால் அவை மீண்டும் ஏட்டில் ஏறக்கூடாது" என்று கூறி இதற்கு ஒரு முடிவான தீர்ப்பே வழங்கியுள்ளார் ஆகவே, அந்த நிகழ்ச்சியை முன் மாதிரியாகக் கொள்வது முறையாகாது.

இறுதியாக, இவ்வாறு நடவடிக்கையில் உள்ள நீண்ட பகுதிகள் நீக்கப்படவேண்டிய சூழ்நிலை ஏற்படும்போது அவையும், அவைத் தலைவரும், மேற்கொள்ள வேண்டிய முறைபற்றி நேற்று கூடிய அலுவல் ஆய்வுக் குழு எடுத்த முடிவினை இப்பேரவைக்கு அறிவிப்பதும் என் கடனாகும்.

ஒரு பெரும் பகுதி நீக்கப்படவேண்டிய நடவடிக்கை நிகழ்ந்த அன்று "இந்த நேரத்திலிருந்து இந்த நேரம் வரை, அல்லது இந்தப் பகுதியிலிருந்து இந்தப் பகுதிவரை நடைபெற்ற நட

வடிக்கைகள் குழப்பமான சூழ்நிலையில் நடை பெற்றுள்ளன. ஆகவே, அப்பகுதி நடவடிக்கைகளை ஆராய்ந்து அவற்றுள் எந்தெந்தப் பகுதிகள் நீக்கப்படவேண்டுமென்று பேரவைத் தலைவர் அறிவிப்பதற்கு முன்னர், அவற்றை வெளியிடுவது கூடாது" என அப்போது அறிவித்துவிட்டு, அன்றைய நிகழ்ச்சிகளின் இறுதியிலோ அல்லது மறுநாளோ அப்பகுதிகளில் நீக்கப்படவேண்டிய பகுதிகளை மட்டும் அவைக்கு அறிவித்த பின்னர் அவை ஒழிந்த பகுதிகளை வெளியிடலாம் என்ற முடிவு மேற்கொள்ளப்பட்டது. இந்த முடிவிற்கு ஒத்துழைக்குமாறு மாண்புமிகு உறுப்பினர்களையும் பத்திரிகையாளர்களையும் வேண்டிக் கொள்கின்றேன்

**திரு. க. உரொ. எட்மண்ட்:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். நேற்றைய தினம் தங்களுடைய அறையில் நடந்த அலுவல் ஆய்வுக் குழு எடுத்த முடிவின்படி இன்றைய தினம் இந்த அறிக்கையை நீங்கள் படித்திருக்கிறீர்கள். தாங்கள் படித்துள்ள அறிக்கையின்படி இனிமேல் இந்த மன்றத்தில் ஏதாவது கடிதங்களைப் படிக்க விரும்புகிறவர்கள் பேரவைத் தலைவருடைய அறையில் காட்டி அவருடைய அனுமதியைப் பெற்ற பிறகுதான் படிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையை நான் வரவேற்கிறேன். இனிமேல் இப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று அறிக்கையைச் சமர்ப்பித்துள்ள நீங்கள், இந்த மன்றத்திலே கடந்த மாதம் 27-ஆம தேதி செவ்வாய்க்கிழமை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கடிதத்தை எங்கள் கட்சியைச் சார்ந்த திரு. சௌந்தரபாண்டியன் எழுதியதாக ஒரு கடிதத்தைப் படித்ததைப் பற்றி .....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தக் கடிதம் பற்றித் தீர்ப்புக் கொடுக்கப்பட்டு விட்டது.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** Based on the decision that you have given அதன் பிறகுதான் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுகிறது. I am not making any commen's on the ruling of the Chair: I am on a different matter.

அந்தக் கடிதத்தில் என்ன எழுதியிருந்தது, என்ன தீர்ப்புக் கொடுத்தீர்கள். தீர்ப்பு சரியா, தவறா என்பதற்குள்ளே நான் புக விரும்பவில்லை. அந்தக் கடிதம் தன்னால் எழுதப்பட்டதல்ல என்று திரு. சௌந்தரபாண்டியன் எதிர்ப்புத் தெரிவித்தார்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தக் கடிதம் அவர் எழுதியது அல்ல என்று பேரவைத் தலைவர் ஒப்புக் கொண்டு முதலமைச்சர் அவர்களும் ஒப்புக் கொண்டார்கள் என்று அவையில் தெரிவித்தாகி விட்டது.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** அதனால்தான் பாயிண்ட் ஆப் ஆர்டரே எழுப்புகிறேன். அன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது இந்தக் கடிதம் திரு. சௌந்தரபாண்டியனால் எழுதப்பட்டது என்று கூறி அது பேரவை நடவடிக்கைக் குறிப்பில் ஏறி இருக்கிறது. இன்றைக்குக் கொடுத்த அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு இனிமேல் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்கக்கூடாது என்று விரும்புகிற தலைவர் அவர்கள் முன்னால் நடந்த தவறுகளைத் திருத்தவும் அவர்களுக்கு உரிமை இருக்கிறது என்பதை உணர்ந்து அந்த வார்த்தையை அல்லது வாசகத்தை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குவதற்கு தலைவருக்கு என்றைக்கும் அதிகாரம் இருக்கிறது. பேசுகின்ற நேரத்தில் மட்டுமல்ல, சில நாட்கள் கழித்து நீக்குவதற்கும் விதி முறைகளிலே இடம் இருக்கிறது. உரிமை இருக்கிறது. ஆகவே, அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி எழுதப்பட்ட கடிதம் தன்னால் எழுதப்பட்டதல்ல என்று திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் மறுத்த பின்னால் அந்தக் கடிதம் திரு. சௌந்தரபாண்டியனால் எழுதப்பட்டதல்ல என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்ட பின்னால் அந்தக் கடிதத்தைப் பற்றிய வாசகங்களை 27-ம் தேதி நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது தேவையில்லாதது. அன்று நடந்த நிகழ்ச்சியின்பேரில்தான் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அதை நீக்கிவிட்டு தீர்ப்பு மட்டும் இருந்தால் பின்னால் படிக்கின்றவர்களுக்கு இந்தத் தீர்ப்பு ஏன் வந்தது என்ற கேள்வி வரும். ஆகவே தேவையில்லை.

**(திரு. கோவை செழியன், திரு. சௌந்தரபாண்டியன், திரு. எட்மண்ட் ஆகியோர் ஒரே நேரத்தில் 'பாயிண்ட் ஆப் ஆர்டர்' என்று சொல்லி எழுந்து நின்றனர்.)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாயின்ட் ஆப் ஆர்டர் எதுவும் கிடையாது. திருமதி ஜோதி அம்மையார் அவர்கள் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

*   *   *

(அன்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளி நடப்பு செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அ. தி. மு. க உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்கிற நேரத்தில் கூறிய வார்த்தைகளை, எழுப்பிய கோஷங்களைப் பத்திரிகைகள் போடக்கூடாது. அவர்கள் வெளி நடப்புச் செய்தார்கள் என்ற அளவிலே மட்டுந்தான் போட வேண்டும். அவர்கள் கூறியவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும்.

**திரு. எம். சுரேந்திரன்:** அவர்கள் கூறியது என்ன காரணத்திற்காகப் பத்திரிகையில் போடக்கூடாது? இது உறுப்பினர்களுடைய உரிமையைப் பாதிக்கக்கூடிய விஷயம். சட்டசபையில் இருக்கும் உறுப்பினர்கள் பல நேரங்களில் வெளிநடப்புச் செய்கிறார்கள். காரணங்களைக் கூறுகிறார்கள். ஆளும் கட்சிக்கு எதிராக இருக்கிறது என்பதற்காக நீக்கக் கூடாது. இப்படி அதை எந்தப் பத்திரிகையிலும் வெளியிடக்கூடாது என்று சொல்வது சபையின் உரிமையையே பாதிக்கக் கூடிய விஷயம்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, எந்த ஒரு கட்சியைச் சேர்ந்த உறுப்பினராக இருந்தாலும், எந்த மாறுபட்ட கருத்து தோன்றினாலும் அந்தக் கட்சியின் சார்பில் அந்தக் கருத்தை அவைத் தலைவருக்குப் புரியும்படியாக விளக்கி விட்டுப் போயிருப்பார்களேயானால் அந்தக் கருத்து பத்திரிகையில் வரலாம். ஆனால் போகிறபோது அவருக்கு ஒரு கோஷத்தைப் போட்டுக்கொண்டு, அப்படிப் போகின்ற கோஷத்திலும் முறை தவறான வார்த்தைகளைப் பயன்படுத்திய நிலையில் அவை அவையின் குறிப்பில் ஏறக்கூடாது. பத்திரிகைகளில் வெளியிடக்கூடாது; பேரவைத் தலைவரைப் பற்றிக் குறிப்பிட்ட கூற்றுக்கள் இடம்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைங்கிணங்க அகற்றப்பட்டது.



பெறக்கூடாது என்ற முறையில் அவை நடவடிக்கையில் இடம் பெறாது, பத்திரிகையில் வெளிவரக் கூடாது என்று தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள்.

*   *   *

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சபாநாயகர் கொடுத்த தீர்ப்பை ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறி வெளி நடப்புச் செய்திருக்கிறார்கள். வெளிநடப்புச் செய்யும்போது அவ்வாறு சொல்ல உரிமை இருக்கிறது.

*   *   *

இதற்கு முன்னால் ரத்தக்கறை படிந்த ஆட்சி என்றெல்லாம் கூட கோஷம் போட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவரைப் பற்றி அவர்கள் சொன்னதைப் போடவேண்டுமென்று தங்கமணி அவர்கள் விரும்பினால் அப்படிப் போடுவதை ஒப்புக்கொள்கிறேன். அவர்கள் என்ன பேசினார்கள் என்பது தங்கமணி அவர்களின் காதில் விழுந்திருக்குமா? அவர்கள் சொன்னதையெல்லாம் அவைக் குறிப்பில் போடவேண்டுமென்று தங்கமணி அவர்கள் சொன்னால் எனக்கு ஆட்சேபனை இல்லை.

"நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று"

என்று திருக்குறளில் சொல்லப்பட்டிருக்கிறது. சொல்கிற சொல்லை வைத்து அவர்கள் இயல்பை அறியலாம் என்று. அவர்கள் சொன்னது பத்திரிகைகளில் வரவேண்டும், நிகழ்ச்சிக் குறிப்பில் வரவேண்டுமென்று சொன்னால் அவர்களுடைய இயல்பைத்தான் அது காட்டக்கூடியதாக இருக்கும். அதைப் போட வேண்டும் என்று தங்கமணி அவர்கள் விரும்புகிறார்களா?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இதற்கு முன்னால் 1965-ஆம் ஆண்டிலே . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஒரு கட்சியைப் பற்றி ஒரு கட்சி . . .

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைங்கிணங்க அகற்றப்பட்டது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது பேரவைத் தலைவரைப் பற்றி அல்ல. ஒரு கட்சியைப் பற்றி ஒரு கட்சி.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னதைப்பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது இந்த அவையில்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தக் கொலைகார ஆட்சி ஒழிக என்று சொன்னதற்காக அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கபட்டு அவர்களை வெளியேற்றிய நிகழ்ச்சி கூட இருக்கிறது. அது இப்போது போட்ட கோஷம் போல் அல்ல, பேரவைத் தலைவரை எதிர்த்து போட்ட கோஷம் அல்ல.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பலமுறை எதிர்கட்சியினர் வெளிநடப்பு செய்கிறோம். சபாநாயகர் அவர்களின் தீர்ப்பை ஆட்சேபித்து வெளிநடப்பு செய்கிறோம் என்று சொல்லிப்போக வேண்டிய நிலைமைகள் ஏற்படுகின்றன.

* * *

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அப்படி ஒரு வார்த்தையை இந்த சட்டமன்றக் குறிப்பேட்டில், இந்த சட்டமன்ற நடவடிக்கைகளில் யாராவது ஏற்றினால், இப்போது அதை எடுத்துச் சொல்லி நடவடிக்கைகளில் ஏற்றினால் கூட அதுவும் நடவடிக்கைக்குரியது. சபாநாயகர் அவர்களுடைய தகுதியைக் கேள்வி கேட்பது சரியல்ல—உறுப்பினர்கள் வேறு காரணங்களைக் கூறிச் சொல்லலாமே தவிர—சபாநாயகர் அர்களின் தனித்தன்மைக்கு ஊறு ஏற்படும்படி எதையும் சொல்லக்கூடாது. அப்படி ஒரு வார்த்தையை இந்த அவையின் நீண்ட காலமாக இருக்கும் திரு. தங்கமணி அவர்கள் சொல்லியிருக்கலாம் என்று சொல்லி அந்த முறையிலும் அதை அவைக் குறிப்பில் ஏற்றுவது என்பது முறையல்ல. கருத்து வேறுபாடு என்பது வேறு, தலைவர் அவர்களின் தீர்ப்புக்குக் களங்கம் கற்பிப்பது வேறு. அப்படி களங்கம் கற்பிக்கும் வார்த்தையை குறிப்பில் ஏற்றக்கூடாது என்ற அடிப்படையில்தான்—ஒருவேளை தங்கமணி அவர்கள் எப்படியாவது

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



அந்த வார்த்தையை இந்த அவைக்குறிப்பில் புகுத்த விரும்புவாரானால் அதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுப்பதற்கு என்ன நடவடிக்கைகள் உண்டோ அதை இந்த அவை மேற்கொள்ளும்.

THIRU K. T. K. TANGAMANI: We need not be so sensitive. நீங்கள் அப்படி 'சென்சிட்டிவ்' ஆக இருப்பீர்கள் என்று நான் நினைக்கவில்லை.

* * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது முறைதானா?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** வேண்டுமானால் ப்ரிவிலேஜ் இஷ்யூவாகக் கொண்டுவரலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையில் சொல்லிவிட்டு பிறகு ப்ரிவிலேஜ் இஷ்யூ கொண்டுவருவது முறையா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பல தடவை வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். அதற்கான காரணங்களை இரண்டு மூன்று நிமிடங்கள் கூடச் சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் பற்றி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. காரணங்களைச் சொல்லிவிட்டு, ஆட்சேபித்து வெளியேறுகிறோம் என்று எந்தக் காரணத்தையும் சொல்லிவிட்டுப் போவதில் தவறு இல்லை. பயன்படுத்தக்கூடாத அளவில் அவைத் தலைவர் அவர்களை அவமதிக்கக் கூடிய அத்தகைய வார்த்தைகள் வந்ததன் காரணமாக அவர்கள் மேல் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்காமல் இருப்பதற்காக அதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்கவேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஆணையிட்டது வரவேற்கத்தக்க ஒன்று. அதற்குப் பிறகும் உறுப்பினர் அவர்கள் பேசும்போது அந்தச் சொற்கள் வந்து விட்டன. அப்படி அந்தச் சொற்கள் குறிப்பில் இடம் பெற்றால் அதன் மூலம் அவர்கள் சொன்னது குறிப்பில் இடம் பெற்றதாகி விடும். ஆகவே அந்தச் சொற்கள் எங்கெங்கு வருகின்றனவோ அந்த இடங்களிலிருந்தெல்லாம் எடுக்கவேண்டிவரும் . .

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[1973 டிசம்பர் 1

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவரைப் பற்றிக் குறிப்பிட்டதை, அந்த வார்த்தைகளை, மாண்புமிகு தங்கமணி அவர்கள் கூறிய பகுதிகளிலிருந்து அந்தப் பகுதிகள் மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. திருமதி. ஜோதி வெங்கடாசலம்.

THIRUMATHI JOTHI VENCATACHELLUM : Sir, I move—

திரு. என். கே. பழனிசாமி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்

THIRUMATHI JOTHI VENCATACHELLUM : Sir, I have already been permitted to move any adjournment motion and the hon. Member should not disturb me . . .

(திரு. என். கே. பழனிசாமி அவர்கள் நின்றுகொண்டிருந்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். அவர்கள் பேசி முடியட்டும்.

5. ஒத்திவைப்புத் தீர்மானம்.

## பேட்டவாய்த்தலை சர்க்கரை ஆலைமுன் கரும்பு உற்பத்தியாளர் உண்ணாநோன்பு இருப்பது குறித்து

THIRUMATHI JOTHI VENCATACHELLUM : Mr. Speaker, Sir, I have given notice under rule 42 of the Assembly Rules, that the business of the House do stand adjourned to discuss a definite matter of urgent public importance, viz.,

'That the fast by Sugarcane growers of Tiruchirappalli district before Pettaivaithalai Sugar Mills to press their demand'.

தலைவர் அவர்களே. திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கரும்பு உற்பத்தியாளர்கள் அவர்களுக்கு கரும்புக்கு டன் ஒன்றுக்கு கிடைக்கிற விலை குறைவாக இருக்கிறது என குளித்தலை விவசாயிகள் சங்கம் ஒரு அறிக்கை விட்டிருந்தார்கள். உத்தர பிரதேச மாநிலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது அங்கு கரும்புக்கு டன் ஒன்றுக்கு கிடைக்கிற விலை 130 ரூபாய் ஆக இருக்கிறது, கர்நாடக மாநிலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிறநேரத்தில் அங்கு விலை டன் ஒன்றுக்கு ரூ. 120 கொடுக்கப்படுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் தமிழ் நாட்டில் கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்குக் கிடைக்கக் கூடிய விலை டன் ஒன்றுக்கு ரூ. 90 தான் கிடைக்கிறது. அது குறித்து நவம்பர் 21, 22, 23-ம் தேதிகளில் தொடர்ந்து மூன்று நாட்கள் என் தொகுதியைச் சேர்ந்த பெட்டவாய்த்தலையில் இருக்கக்கூடிய சர்க்கரை ஆலைக்கு முன்பு கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகள் ஒரு உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். இவர்களுக்கு நியாயம் கிடைக்கக்கூடிய முறையில் தமிழக அரசாங்கம் கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு இந்த விலையை உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்துகிற காரணத்தாலும்—இன்று வெளிச்சந்தையில் பொதுமக்களுக்கு விற்கப்படுகிற விலையைப்பார்க்கும் போது சர்க்கரை கிலோ ஒன்றுக்கு ரூ. 3-85 என்று விற்கப்படுகிறது—இது பொதுமக்களையும் பாதிக்கிறது, கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளையும் பாதிக்கக்கூடிய காரணத்தினால் இது அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்ததொரு விஷயமாகும். ஆகவே, இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்தது 23-ம் தேதி. 23-ம் தேதி கொடுக்கப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானம் அமைச்சர் அவர்கள் இல்லாததால் இன்று வருகிறது. இன்று ஒன்று நீங்கள் இதே சப்ஜெக்டில் கொடுத்திருக்கிறீர்கள். ஏற்கனவே ஒரு தீர்மானம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இது எடுக்கப்படவில்லை என்று திரு. பழனிச்சாமி அவர்களுக்குத் தகவல் அனுப்பப்பட்டிருக்கிறது. இதை வைத்து ஒவ்வொரு முறையும் விதி 41-ன் கீழ் கொடுப்பது, ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுப்பது என்றால் ஒரே தீர்மானத்தைப் பற்றி பலர் பேசுவது முறையல்ல. ஆகவே பாயின்ட் ஆப் ஆர்டர் எதுவும் இல்லை.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, the token fast before the Pattaivaithalai Sugar Mills has been given up. The cane growers of Poyyamani Village are now supplying sugarcane to the factory. The Mill is paying the price notified by the Government of India, namely, Rs. 80 per tonne and crushing is going on normally. For the sugar years 1971-72 and 1972-73

(Sugar year is from October to September) tripartite meetings of the representatives of the sugar mills, cane growers and the State Government were held and the mill owners were persuaded to pay a price higher than what the Government of India notified under the Sugarcane Control Order. For the year 1973–74, a similar **tripartite meeting will be convened shortly for the same purpose.** As the situation in the particular Mill mentioned by the hon. Member is now normal, I submit to the Hon. Speaker that there is no need to adjourn the business of the House.

*திரு. என். கே. பழனிசாமி:* ஒரு க்ளாரிபிகேஷன்

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* ஒத்திவைப்புத் தீர்மானத்தில் க்ளாரிபிகேஷன் கிடையாது.

(திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் எழுந்தார்கள்.)

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* கால் அட்டென்ஷன் நோட்டீசில்தான் கேள்வி கேட்கலாம்.

ஒத்திவைப்புத் தீர்மானத்திலே கிளாரிபிகேஷன் கிடையாது. அது முறையே இல்லை. கால் அட்டன்ஷன் நோட்டீசிலே தான் அப்படி கேட்கலாம்.

மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்கு பிறகு இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

## (6) அரசினர் தீர்மானம்.

### விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* தலைவரவர்களே,

"சட்டப் பேரவை 41-வது விதி, பிரிவு (3)-ன்படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களை கொண்டு வரக் கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும்."

என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.



## (7) கவன ஈர்ப்பு.

### தமிழாசிரியர்கள் தம் கோரிக்கைகளை வலியுறுத்த மறுப்பு வாரம் நடத்துவது குறித்து

THIRU J. JAMES: Sir, I call the attention of the Hon. Minister for Education and Tourism to a matter of urgent public importance, namely, the grievances and demands of the Tamil Pandits and the protest week being observed by the Secondary Grade Tamil Pandits in this State to press their demands.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* தலைவரவர்களே, தமிழ் ஆசிரியர்களின் கோரிக்கைகளில் முக்கியமானது முதல் நிலை, இரண்டாம் நிலை என்றுள்ள பாகுபாடை நீக்கவேண்டும் என்பது. முதல் நிலைத் தமிழாசிரியரின் சம்பளம் ரூ. 300—500. இரண்டாம் நிலைத் தமிழ் ஆசிரியரின் சம்பளம் ரூ. 210—325. இந்த இரு நிலைகளுக்கும் உரிய தகுதிகளில் முக்கிய வேறுபாடு, முதல் நிலைக்கு பள்ளியிறுதிப் படிப்புத் தேர்ச்சியில் தேர்வு பெற்றிருக்க வேண்டும் என்பது. தமிழ் ஆசிரியர்களுக்கு பொதுக் கல்வி அடிப்படையில் தேர்ச்சி இருப்பது அவசியம் என்பதையும், அந்த அடிப்படையில் இரு நிலைகளை உருவாக்கியுள்ளது பொருத்தமானது என்பதையும், அந்நிலைமை தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்பதையும் தமிழ்நாடு இரண்டாம் ஊதியக் குழு பரிந்துரைத்துள்ளது. இக்கருத்து அரசுக்கும் ஒப்புதலானதே.

முதல்நிலைத் தகுதி பெற்று, போதிய பதவிகள் இல்லாத காரணத்தால் இரண்டாம் நிலையில் பணியாற்றிக் கொண்டிருந்த தமிழ் ஆசிரியர்களுக்கு, முதல் நிலைப் பதவிகளை ஏற்படுத்தித் தர அரசு முன்வந்தது. அந்த அடிப்படையில் 2,260 இரண்டாம் நிலைத் தமிழ் ஆசிரியர் பணியிடங்கள் முதல் நிலை பணி இடங்களாக மாற்றப்பட்டுள்ளன.

இரண்டாம் நிலையில் இன்னும் சுமார் 1,700 ஆசிரியர்கள் பணியாற்றி வருகிறார்கள் என்றும், முதல் நிலைப் பதவிக்குரிய தகுதிகள் அவர்களுக்கு இல்லையென்றும் அறியப்படுகிறது. முதல் நிலைப் பதவிக்கு தகுதியுடையவர்களை மட்டுமே முதல் நிலைக்கு உயர்த்துவது பொருத்தம் என்ற போதிலும், நீண்ட காலம் இவர்கள் பணியாற்றிய காரணத்தால் இவர்களுக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு 15 ஆண்டுகள் இரண்டாம் நிலையில் பணியாற்றியவர்களை, தகுதியின்மையைப் பொருட்படுத்தாமல் முதல்

நிலைக்கு உயர்த்தலாமா என்பது குறித்து அரசு அனுதாபத்துடன் ஆய்வு செய்து வருகிறது. இது குறித்து விரைவில் ஆணைகள் வெளியிடப்படும்.

போதிய தமிழ்த் தேர்ச்சியும், பொதுக் கல்வித் தேர்ச்சியும் உடையவர்களையே தமிழ் ஆசிரியர்களாக இனி நியமிக்க வேண்டுமென்ற அடிப்படையில் இனி நியமிக்கப்படும் ஆசிரியர்கள் அனைவருக்கும் முதல் நிலைப் பதவிக்குரிய தகுதி இருக்கவேண்டுமென்று நிர்ணயித்து, அவர்கள் அனைவருக்கும் முதல் நிலை ஊதியத்தையே வழங்குவது குறித்து அரசு ஆய்வு செய்து வருகிறது.

பயிற்சி பெற்ற தமிழ் ஆசிரியர்கள் போதிய அளவு கிடைக்காத காலக் கட்டத்தில் மதுரை தமிழ்ச் சங்கத்தின் வாயிலாக புலவர் பண்டிதம் பெற்றவர்களையும் தமிழ் ஆசிரியர்களாக நியமிக்கலாம் என்று அரசு பல ஆண்டுகளுக்கு முன்பு அனுமதித்திருந்தது. அது ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க செய்யப்பட்ட இடைக் கால ஏற்பாடு. அதை நிரந்தரமாக்குவது உசிதமல்ல. இனிமேல் பொதுவாக முதல் நிலைப் பதவிக்குரிய தகுதி பெற்றவர்களையே தமிழ் ஆசிரியர்களாகத் தேர்ந்தெடுத்து நியமனம் செய்ய வேண்டுமென்று அரசு கருதுகிறது. இது குறித்து விரைவில் ஆணைகள் வெளியிடப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கால் அட்டன்ஷன் கொண்டு வந்த உறுப்பினர் இல்லை என்றால் வேறு யாராவது பேசலாம் என்று தான் இருக்கிறது. அதற்கு விளக்கம் தர அனுமதி இல்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** பாயின்ட் ஆப் ஆர்டர். கால் அட்டென்ஷன் மோஷன் கொண்டு வந்தவர்கள் அவையில் இல்லை என்றால் இன்னொரு உறுப்பினர் மோஷனை முன் மொழியலாம். அந்த உரிமை வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதைத் தொடர்ந்து கால் அட்டன்ஷன் கொடுத்த உறுப்பினர்களுக்கு இருக்கின்ற உரிமை அதை "மூவ்" செய்கின்ற உறுப்பினர்களுக்கும் இருக்கிறது என்பதை தலைவர் அவர்கள் உணரவேண்டும்.

**மாண்பமிகு பேரவைத் தலைவர் :** அப்படி இல்லை. அடுத்து பேரவைவிதிகளின் 41-வது விதியின் கீழ் திரு. பி. வெங்கடசாமி அவர்கள் கொண்டுவந்த கவன ஈர்ப்பு பிரேரணையை முன்மொழிய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.





(ஆ) ஓசூர் தேங்கனிக் கோட்டை வட்டங்களில் உணவுத் உணவுப் பங்கீடு அட்டைகள் வழங்க வேண்டிய அவசியமும் தானியங்கள் பற்றாக்குறையும் எல்லையோரப் பகுதிகளில் குறித்து.

THIRU B. VENKATASWAMY : Sir, I call the attention of the Hon. Minister for Food and Co-operation to a matter of urgent public importance, namely, the scarcity of foodgrains in the belt areas of the State, particularly in Hosur and Denkanikotta taluks and the need to issue ration cards in the belt areas of the State

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில எல்லைகள் வழியாக நெல் மற்றும் அரிசி கடத்தப்படுவதைத் தடுக்க சட்டபூர்வ கட்டுப்பாடு நடவடிக்கைகள் எடுக்க 1964-ம் ஆண்டு தென் மாநிலங்கள் (அரிசி ஏற்றுமதி முறைப்படுத்தல்) ஆணை, வழிவகை செய்கிறது. இவ் வாணையில், மாநில எல்லையில் 5 மைல் அகலத்திலுள்ள பகுதியை, 'எல்லையோரப்பகுதி' என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எல்லையோரப்பகுதியின் வெளியிலிருந்து எல்லையோரப்பகுதிக்கும், எல்லையோரப்பகுதியின் ஓரிடத்திலிருந்து வேறொரு இடத்திற்கும் நெல் மற்றும் அரிசியை, அனுமதி இன்றி எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. அனுமதியின்றி எடுத்துச் செல்லப் படும் உணவுப்பொருள்கள் போக்குவரத்தைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு எல்லையோரப்பகுதியில் வசதியான இடங்களில் சோதனைச்சாவடிகளை நிறுவியும், எல்லையோரப்பகுதியில் நடமாடும் காவல் குழுக்களை நிறுவியும் இக்கட்டுப்பாடுகள் செயல் படுத்தப்படுகின்றன.

எல்லையோரப்பகுதிகளில் உள்ள மக்களுக்கு போக்குவரத்து கட்டுப்பாட்டினால், எவ்விதத் தொல்லையும் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு, எல்லைப்புறத்திலுள்ள மாவட்ட ஆட்சியாளர்கள் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (1) எல்லையோரப் பகுதியிலுள்ள விளைச்சலையும், தேவையையும் கணக்கில் கொண்டு மேற்கொண்டு வெளியிலிருந்து கொண்டுவரும் அளவைக் கணக் கிடுகின்றனர். (2) எல்லையோரப்பகுதிக்கு அதிகப்படியாகத் தேவைப்படுவதை அனுமதிபெற்ற வியாபாரிகளும், கூட்டுறவுச் சங்கங்களும் அம்மாவட்டத்தில் வாங்குகின்றனர். (3) அந்த இருப் புகள் எல்லைப்புறப் பகுதியிலுள்ள மக்களுக்கு மாவட்ட ஆட்சி யாளர்கள் நிர்ணயிக்கும் விலையில், குடும்ப அட்டைகள் மூலம் வழங்கப்படுகிறது. மேற்கூறிய அடிப்படையில் அமைந்த முறைப் படுத்தப்பட்ட அரிசி வினியோகமுறை, மதுரை, கோயம்புத்தூர்,

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1973 டிசம்பர் 1

நீலகிரி மாவட்டங்களிலுள்ள எல்லையோரப்பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில், தமிழ் நாடு உணவுப் பொருள்-வழங்கு கழகத்தின் சில்லறைக்கடைகள் மூலமும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் அரசின் இருப்பிலிருந்து அரிசி வினியோகம் செய்யப்படுகிறது. எல்லைப்புறங்கள் மட்டுமின்றி அடுத்துள்ள விளவங்கோடு வட்டத்திலும், கல்குளம் வட்டத்தில் 9 கிராமங்களிலும் வினியோகம் செய்யப்படுகிறது. மதுரை, கோயம்புத்தூர், நீலகிரி ஆகிய மாவட்டங்களிலுள்ளது போலவே தருமபுரி மாவட்டத்திலும் முறைப்படுத்தப்பட்ட வினியோகமுறை உள்ளது. இதில் உள்ள ஒரே ஒரு வித்தியாசம், தருமபுரி மாவட்டத்தில் எல்லையோரப்பகுதியிலுள்ள நகர்ப் புறங்களுக்கு மட்டும் குடும்ப அட்டைகள் மூலம் அரிசி வழங்கப்படுகிறது.

தருமபுரி மாவட்டத்தில் 5 மைலுக்குட்பட்ட எல்லையோரப் பகுதியில் 112 கிராமங்களும் 5 நகரங்களும் உள்ளன. இப்பகுதி ஓசூர், தெங்கனிக்கோட்டை, கிருஷ்ணகிரி வட்டங்களில் அமைந்துள்ளது. இந்த எல்லையோரப்பகுதியில் 1,98,953 மக்கள் வாழ்கிறார்கள். இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 5,558 குவிண்டால் சிறுதானியங்களும், 8,592 குவிண்டால் அரிசியும் தேவைப்படுகிறது. முப்பத்தேழு மொத்த வியாபாரிகளும், 58 சில்லரை வியாபாரிகளும் இப்பகுதி மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை வழங்கி வருகின்றனர். அரிசி மற்றும் சிறுதானியங்கள் மாத அடிப்படையில் ஒவ்வொரு மொத்த வியாபாரிக்கும் சில்லரை வியாபாரிக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதை இவ்வியாபாரிகள் மாதமிரு முறை வெளிப்பகுதிகளிலிருந்து கொண்டுவர அனுமதிக்கப்படுகின்றனர். எல்லையோரப்பகுதிகளில் விளையும் நெல் சிறுதானியங்கள் இவற்றைக் கணக்கில் கொண்டு, மேற்கொண்டு தேவைப்படும் அளவை வெளியிடங்களிலிருந்து கொண்டுவர வியாபாரிகள் அனுமதிக்கப்படுகின்றனர். வியாபாரிகள் வாங்கிய அடக்க விலையையும் இதர செலவுகளையும் கருத்தில் கொண்டு மொத்த வியாபாரியின் விற்பனை விலையும், சில்லரை வியாபாரியின் விற்பனை விலையும், நிர்ணயிக்கப்படுகின்றன. இதனால் எல்லையோரப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு அரிசி நியாயமான விலையில் கிடைக்கின்றது.



1973 டிசம்பர் 1] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

ஓசூர், மத்திகிரி, பகலூர், போரிகை போன்ற நகர்ப்புறங்களில் வாழும் மக்களுக்கு ஒழுங்கான முறையில் அரிசி, சிறுதானியங்கள் பெற ஒவ்வொரு சில்லரை வியாபாரிக்கும் குறிப்பிட்ட வார்டு ஒதுக்கப்பட்டு, அவ்வார்டிலுள்ள மக்களுக்கு குடும்பக் கார்டுகளின் அடிப்படையில் உணவுப் பொருள்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாள் ஒன்றுக்கு வயது வந்தவர்களுக்கு 400 கிராம், சிறுவர்களுக்கு 200 கிராம் என்ற அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது. இந்நகர்ப்புறங்களிலுள்ள எல்லாக் குடும்பங்களும் குடும்பக்கார்டு மூலம் தங்கள் வாராந்திர தேவைகளை எவ்வித சிரமமுமின்றி தங்கள் சில்லரை வியாபாரிகளிடம் பெற்றுவருகின்றனர்.

**Thiru B. VENKATASWAMY:** Sir, according to the statement of the Hon. Minister for Food and Co-operation there are nearly 150 villages in the border area. There are checkposts for 5 mile area. Between checkposts and border, there are so many villages. There are no foodgrain dealers there. They will have to come to Hosur and take foodgrains but they are all caught at the checkposts and subjected to unnecessary harassment. Even day before yesterday some had been caught. Therefore I request the Hon. Minister to find out some way by which foodgrains may be made available to these poor people in these areas. We do not demand anything special. People will be very happy if rice is supplied to them. The statement made by the Hon. Minister is not true because day to day we are experiencing the difficulty. Each President is given 5 to 10 bags and between each President we are internally arranging. Even that supply has been stopped now. I would request the Hon. Minister at least to see to it that ration cards are issued in the belt area or checkposts must be shifted to border. Then people will be very happy.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, இந்தப் பிரச்சினை ஒவ்வொரு எல்லைப்புறத்திலேயும் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த செக் போஸ்ட்டை 5 மைலுக்கென்று வைத்திருப்பதை 10 மைலுக்கு என்று நீடிக்கலாமா என்றார் உறுப்பினர் அவர்கள். ஐந்து மைல் என்று இருந்தும் கூட, கள்ளக் கடத்தலை தினம் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1973 டிசம்பர் 1

10 மைல் என்று எல்லைப்பகுதியிலே வைத்துவிட்டால் அந்த கடத்தல்காரர்கள் நன்றாக போவதற்கு சௌகரியம் ஆகிவிடும். அப்பகுதிகளிலே மலைப் பகுதி எல்லாம் வருவதால் தலைச் சுமையிலே கள்ளத்தனமாக கொண்டு போகிற ஆயிரக்கணக்கான மக்களை நாம் எப்படி கண்காணிப்பது என்று அறிந்து அவற்றை தடுப்பதற்காக 5 மைல் 'பெல்ட் ஏரியா' என்று வைத்திருக்கிறோம். இப்படிப்பட்ட விஷயத்தை உறுப்பினர் அவர்கள் அடிக்கடி கவனத்திற்கு கொண்டு வருகிறார்கள். நாங்களும் அதன் பேரில் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். பஞ்சாயத்து போர்டு தலைவர்களுக்கும் அரிசி கொடுத்து, ஏழை மக்களுக்கு தேவைப்படும் அளவிற்கு கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அத்தோடு கார்டு மூலமாகவும் கொடுக்க ஏற்பாடுகளை செய்திருக்கிறோம். எங்கேயாவது குறை இருந்தால் அதன் மீது நடவடிக்கை எடுத்து சீர்படுத்தப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-10]

THIRU B. VENKATASWAMY: Sir, the difficulty can be got over if ration cards are issued and people also would be happy as they will not be put to difficulties. May I know from the Hon. Minister if he would do that as in Coimbatore and issue ration cards in Hosur and Denkanikota of Dharmapuri district?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவர் அவர்களே, எல்லா இடங்களுக்கும் அப்படி கொடுக்கவில்லை. கன்யாகுமரியில் ஒரு பகுதியிலே கொடுத்திருக்கிறோம். விளவங்கோடு தாலுகா தண்ணீர் இல்லாத பகுதி என்று சொன்ன காரணத்தினால், உற்பத்தி இல்லாத அந்தப் பகுதிக்குக் கொடுத்திருக்கிறோம். இங்கேயும் உற்பத்தி இல்லாத 4, 5 பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கிறோம். மற்ற கிராமங்களில் உற்பத்தி இருக்கிறது. ஓரளவுக்கு தேவையானதை, வேண்டுமென்பதை வியாபாரிகளைக் கூப்பிட்டு வாங்கிக் கொள்ளலாம். கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் மீண்டும் கஷ்டமாக இருந்தால் மறுபடியும் கலெக்டரிடம் சொன்னால், அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியும். எல்லாவற்றிற்கும் ரேஷன் போடுகிற நிலைமையை திடீர் என்று ஏற்படுத்தவேண்டிய தேவையில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன்.



1973 டிசம்பர் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து திருவாளர்கள் கே. என். குமாரசாமி, ஆ. கு. சுப்பையா, சோ. அழகர்சாமி, பி. வெங்கடசாமி, ரா. ரா. முனுசாமி, ஆ. கருப்பையா, ஏ. பரந்தாமன், என். கே. பழனிசாமி ஆகியோர்கள் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு அவசரப் பொது முக்கியமான காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

**(இ) உரம், பூச்சிகொல்லி மருந்து ஆகியவை போதிய அளவு கிடைக்காமையும் அதனால் விவசாயிகள் பாதிப்பும் குறித்து.**

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவர் அவர்களே, பேரவையின் 41-வது விதியின் கீழ், தமிழகத்தில் தேவையான உரம், பூச்சிக் கொல்லி மருந்து விவசாயிகளுக்குக் கிடைக்காததால் பயிர்கள் நாசமடைந்து, விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ள நிலைபற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற உறுப்பினர்களும் படித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்ததாக வைத்துக்கொள்ளலாம். சம்பந்தப்பட்ட எல்லா உறுப்பினர்களுக்கும் ஒவ்வொரு கேள்வி போடுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கிறேன்.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, I beg leave to make briefly a statement in writing. There are as many as eight members who have given notice of the call Attention motion. The Statement* although brief has taken seven pages and I have made it available to all the hon. Members. நான் சுருக்கமாக ஒரு விளக்கம் சொல்லவேண்டுமென்று விதியில் இருக்கிறது. ஆனால் 8 மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் எவ்வளவு சுருக்கமாக பதில் சொல்லவேண்டும் என்றாலும் கிட்டத் தட்ட 7

* Printed as Appendix II at pages 427–432.

பக்கங்களுக்கு மேல் இந்த அறிவிப்பு வருகிறது. எனவே: இந்த அறிவிப்பை நகல்கள் எடுத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுத்திருக்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, பூச்சிக் கொல்லி மருந்து இல்லாததினால் விவசாயிகள் பெரிய அளவுக்கு பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். எங்கு பார்த்தாலும் விவசாயிகளின் தேவையை அனுசரித்து ஆங்காங்கு விவசாய டெப்போக்களில் பூச்சி கொல்லி மருந்து இல்லை என்று சொல்லப்படுகிறது. அதிகமாக கிடைப் பதற்கு ஏற்பாடு செய்து விவசாயிகளின் நிலத்திலுள்ள விவசா யத்தை பாதுகாப்பதற்கு அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தத் தொடர் கூட்டத் திலேயே உரம் பற்றிய கேள்விக்கு 20 நிமிடங்களுக்கு மேல் துணைக் கேள்விகள் போட்டு பதில்கள் பெறுவதற்கு அவகாசம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, சுருக்கமாக ஒரு கேள்வி மட்டும் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** பூச்சிக் கொல்லி மருந்து —'பாரதியான் அண்டு என்ட்ரின்' இவைகளை 1974-க்குப் பிறகு உற்பத்தி செய்யக் கூடாது என்று மத்திய அரசு உத்தரவிட்டிருக் கிறது. அதன் காரணமாகத்தான் உற்பத்தி வெகுவாகக் குறைந்து விட்டது. டி.டி.டி. உற்பத்தி செய்வதற்கும் இரண்டு கம்பெனிகள் இருக்கின்றன. ஒன்றின் பெயர் 'இந்துஸ்தான் இன்செக்டிசைட்ஸ், ஆல்வாய்', மற்றொன்றின் பெயர் 'ஹிந்துஸ்தான் ஆர்கானிக் கெமிகல்ஸ், டெல்லி'. அவைகள் உற்பத்தி செய்கின்ற டி.டி.டி. போதுமான அளவில் இல்லை. பி.எச்.சி. டெக்னிகல் பூச்சி கொல்லி மருந்தை இப்பொழுது உற்பத்தி செய்து விநியோகம் செய்து வருகிறோம். ஆனால், அது கூட இந்த ஆண்டு சற்று குறைவாகத் தான் இருக்கிறது. காரணம், இதே மருந்து மலேரியா தடுப்புக்கு வேண்டும் என்று மத்திய அரசு பெரிய அளவுக்கு எடுத்துக்கொண்டுவிட்ட காரணத்தினால், விவசாயத் திற்கு மிகக் குறைவாகத் தான் கிடைத்திருக்கிறது. இருக்கக் கூடிய பூச்சி கொல்லி மருந்தை அக்ரிகல்சரல் டெப்போக்களின் மூலமாக நேர்மையாகவும், ஒழுங்காகவும் விநியோகிக்கவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.



**திரு. சோ. அழகர்சாமி :** இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் மிகவும் முக்கியமான தீர்மானம். பொதுவாக இந்த ஆண்டு உரத்தினால் ஏற்பட்ட தட்டுப்பாடு மட்டும் அல்ல. உரம் வெளி மார்கெட்டில் ரூ. 110, ரூ. 120 என்று அதிகமாக விலைக்கு விற்கக் கூடிய நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. சர்க்கார் மூலம் நாம் விநியோகிக்கக்கூடிய உரம் டெப்போக்களில் இருந்தும் கூட காலா காலத்தில் விநியோகிக்கப்படாமல், விலையை உயர்த்தப் போகிறார் கள். அது வரையில் நிறுத்திவைக்க வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவு போட்டு, காலாகாலத்தில் விவசாயம் செய்யக்கூடிய செப்டம்பர் மாதத்தில் அதுவும் எங்கள் பகுதியில் நெல்லை மாவட் டத்தில் பல இடங்களில் உரம் கிடைப்பதில்லை ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சுருக்கமாகக் கேள்வியைப் போடுங்கள்.

**திரு. சோ. அழகர்சாமி :** இது ஒரு முக்கியமான விஷயம். இப் பொழுது விநியோகம் கூட ஐ.ஆர். 8, ஐ.ஆர். 20 நெல் போட்டிரும் தால் தான் யூரியா கொடுக்க முடியும் என்று சொல்லப்படுகிறது. செங்கற்பட்டு மாவட்டத்தில் பல இடங்களில் ஐ.ஆர். 8, ஐ.ஆர். 20 போட்டால் தான் கண்மாய் பாசனம் உள்ள இடத்தில், கொஞ்சம் தண்ணீர் உள்ள இடத்தில் கூட ஐ.ஆர். 8, ஐ.ஆர். 20 போட்டால் தான் யூரியா உரம் என்று சொல்லப்படுகிறது, கார்டு வைத்திருந் தாலும் கொடுக்க மறுக்கிறார்கள். வீரிய விதைகளை அதிகமாக தண்ணீர் இருந்தால் தான் அந்த இடத்தில் போட முடியும். அப்படிப்பட்ட இடங்களிலும் கூட கார்டு வைத்திருப்பவர்களுக்கு உரம் கிடைக்கவில்லை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்ன இவ்வளவு நேரமா ஒரு விளக்கம் கேட்பது? சுருக்கமாக ஒன்றிரண்டு கேள்வி மட்டும் தான் போடலாம். ஒரு பெரிய பிரசங்கம் செய்து புதிய கருத்துக் களைச் சொன்னால், அதற்கு எப்படி விளக்கம் பெற முடியும்? சுருக்கமாக கேளுங்கள்.

**திரு. சோ. அழகர்சாமி :** இப்பொழுதுள்ள நிலைமையில் உர விலையை கண்டிரோல் பண்ணி சரியான நியாயமான விலையிலே இனிமேலாவது உரம் கிடைப்பதற்கு அரசாங்கம் எடுத்துக் கொள்ளக்கூடிய நடவடிக்கை என்ன இருக்கிறது?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** ஏறத்தாழ 7 பக்கங்கள் ஸ்டேட்மெண்டு எழுதி வைத்திருக்கிறேன். அதிலே கூடியவரையில் என்னென்ன காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். கோவில்பட்டியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வது, அவர்கள் கூட்டுறவு மார்க்கெடிங் சொஸைடி தலைவராக இருக்கிறார்கள். அந்தக் கூட்டுறவு ஸ்தாபனத்திற்கு 1972-73-ல் 706 டன் பர்டிலைஸர் (ஏறத்தாழ ரூ. 7 லட்சம் பெறும்) அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) 1972-73-ல் சொல்லுகிறேன். அவர்கள் தலைவராக இருக்கப்பட்ட கூட்டுறவு மார்க்கெடிங் சொஸைடிக்கு பூல்பர்டிலைஸரிலிருந்து, இறக்குமதியான யூரியாவிலிருந்து 560 டன் ஏறத்தாழ 5, 5¼ லட்சம் ரூபாய் பெருமதியானதுள்ள யூரியா கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை முறையாக வழங்கவேண்டிய பொறுப்பு மாண்புமிகு உறுப்பினருடைய கூட்டுறவு ஸ்தாபனத்திற்கு இருக்கிறது. அவர்களிடம் ஏறத்தாழ 15 200 மூட்டை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை எந்த விதத்தில் அவர்கள் விநியோகம் செய்தார்கள் என்று எனக்கு கணக்கு வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். கே. பழனிசாமி.

**திரு. சோ. அழகர்சாமி:** பர்ஸனல் எக்ஸ்ப்ளநேஷன். ஒழுங்காக விநியோகம் பண்ணியிருந்தால் கிடைத்திருக்கும் என்று அமைச்சர் அவர்கள் என் மீது குற்றச்சாட்டு சொன்னதினால் நான் அதற்குப் பதில் சொல்லவேண்டும். தயவு செய்து அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன். நான் அந்த கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் என்கிறார். இப்பொழுது அந்தக் கூட்டுறவு சங்கத்தின் மூலம் விநியோகம் நடைபெறவில்லை. அமைச்சர் அவர்கள் என்னைப் பற்றி உண்மைக்குப் புறம்பாகச் சொல்கிறார். விநியோகம் பூராவும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரூல் 41-ன் கீழ் ஒரு பெரிய விவாதம் வைத்துக்கொள்ளக்கூடாது.

**திரு. சோ. அழகர்சாமி:** அமைச்சர் அவர்கள் உள்நோக்கம் கற்பித்துச் சொல்கிறார். நான் அதற்குப் பதில் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் நான் தவறு செய்ததாகக் கொள்ளப்



படும். அமைச்சர் அவர்கள் என் மீது குற்றச்சாட்டு சுமத்தியிருப்பதால் நான் அதற்குப் பதில் சொல்வதற்கு சந்தர்ப்பம் வேண்டும். உண்மைக்கு புறம்பாகச் சொல்கிறார். விநியோகம் சீராக இருந்திருந்தால் ஒழுங்காகக் கிடைத்திருக்கும் என்று கூறுகிறார். அது உண்மைக்கு மாறானது. அப்படி ஏதாவது விநியோகம் செய்வதில் தவறு ஏற்பட்டிருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டால் நான் எந்த நடவடிக்கைக்கும் உட்பட தயாராக இருக்கிறேன். விநியோகம் நடைபெறுகின்ற முறைக்கும், மார்க்கெடிங் சொஸைடிக்கும் சம்பந்தம் கிடையாது. அதை என் இதோடு இணைத்துச் சொல்லவேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களைப் பற்றி ஏதாவது சொல்லியிருந்தால் அதற்கு மட்டும் விளக்கம் சொல்லுங்கள்.

**திரு. சோ. அழகர்சாமி:** இப்பொழுது என்ன முறை என்றால், மார்க்கெட்டிங் சொஸைடிக்கும் விநியோகத்திற்கும் சம்பந்தம் இல்லை. பர்டிலைஸர் பூராவும் ஃபெடரேஷன் மூலமாக கிராமச் சங்கங்களுக்குப் போகிறது. எப்படிப் போகிறது, எப்படி விநியோகம் செய்யப்படுகிறது என்பது பற்றி எங்களுக்கு சம்பந்தம் இல்லை. அரசாங்கம் உர விநியோகம் சம்பந்தமாக எடுத்துக் கொண்ட நடவடிக்கை மூலம் இந்தக் குளறுபடியை உண்டு பண்ணி காலாகாலத்தில் தமிழகத்தில் உரம் சரியான விலையில் கிடைக்க முடியாதபடி நிலைமை ஏற்பட்டுவிட்டது என்ற குற்றச்சாட்டை நான் அமைச்சர் அவர்களின் மீது சுமத்துகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. ப. ஆதித்தனார்:** 1972-73-ல் சொன்னேன். அப்பொழுது அவர்களுக்கு ஏறத்தாழ 15,200 மூட்டை உரம் அவர்கள் சங்கத்தின் மூலமாக விநியோகிக்கப்பட்டது. இப்பொழுது கூட அவர்களுக்கு அதிகாரம் இல்லை என்பது அல்ல. உர விநியோகம் நடப்பதில், உரம் கிராமக் கூட்டுறவு சங்கத்திற்குப் போய்ச் சேரவேண்டும். விவசாயிகள் கையொப்பமிட்டுப் பெற வேண்டும். அதை மேற்பார்வை பார்ப்பதற்கு இவர்களுக்கு டன்னுக்கு ரூ. 10 கொடுக்கப்படுகிறது. மேற்பார்வையிடுவதற்கு தனியாகப் பணம் கொடுக்கப்படுகிறது. அப்படியானால் மாண்புமிகு உறுப்பினர் தலைவராக இருக்கிற மார்க்கெடிங்

சோலையடியும், ஏனைய சோலையடிகளும் ஒழுங்காக மேற்பார்வை செய்திருந்தால் கூட—அதற்குப் பணம் கொடுக்கப்படுகிறது—ஒழுங்காக விநியோகிக்கப்பட்டிருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சரவர்கள் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதில் இருந்து தெளிவு பெறுவதற்காக ஒன்றிரண்டு கேள்விகளை கேட்கவேண்டுமே ஒழிய புதிய புதிய கருத்துக்களை எழுப்பி, தகவல் கேட்டால் எப்படி பதில் சொல்ல முடியும்? ஆகவே, உறுப்பினர்கள் ஏதாவது விளக்கம் பெற வேண்டுமானால் ஒன்றிரண்டு கேள்விகளை அமைச்சரின் அறிக்கையை ஒட்டி கேட்கலாம்.

**திரு. என். கே. பழனிசாமி :** அமைச்சரவர்கள் 7 பக்கம் ஸ்டேட்மெண்ட் ஒன்று வைத்திருக்கிறார்கள். அதில் சில புள்ளிவிபரங்கள் இருக்கின்றன. அதைப் படித்துப் பார்த்தால் பூச்சி மருந்து இல்லை; உரம் இல்லை என்றுதான் கடைசியிலே இருக்கிறது. கோவை மாவட்டத்திற்கு 90 000 டன் உரம் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது, கலெக்டர் எடுத்துச்செல்வார் என்று சென்ற மாதத்திலேயே சொல்லப்பட்டது. ஆனால் இன்னும் அங்கே பூச்சு மருந்து வந்து சேரவில்லை. சென்ற பட்ஜெட்டிலே கூட 3 லட்சம் டன் பற்றாக்குறை ஏற்படும் என்று சொல்லியும் அதை நிவர்த்தி செய்வதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. அதற்கான காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இந்த ஸ்டேட்மெண்டிலே எல்லாம் தெளிவாக இருக்கிறது. பற்றாக்குறை இருக்கிறது. அதற்கான காரணமும் இருக்கிறது. 'There is a silver lining in the cloud' என்ற முறையிலே இப்போது 3—12—73-ல் 8,000 டன் யூரியா சென்னைக்கு வர இருக்கிறது. அதைப்போல 15—12—73-ல் 6,000 டன் வர இருக்கிறது. கால்சியம் **C.A.N.** என்ற உரம் 3—12—73-ல் 6.531 டன் வருகிறது. அதை எல்லாம் எடுத்துச் செல்வதற்கு கோவை மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் தக்க ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

THIRU B. VENKATASAMY : Sir, according to the Statement given by the Hon. Minister for Agriculture some fertilisers are imported from outside so as to fill the gap. As it is, I would like





to know whether there is any concrete proposal to improve the position so as not to stop the Green Revolution in the State. Sufficient quantity of fertilisers should be supplied to the ryots. I know many card holders are not issued the usual quantity of fertilisers if they go to the shops. They are given inadequate quantity of 5 or 10 kgs. of urea. Therefore, I would like to know whether there is any concrete proposal with the Government so as to supply sufficient quantity of fertilisers to the ryots. At the same time pesticides are not at all available. Yesterday also, I went to Coimbatore where the ryots complained that 'Methyl parathion' was not available. May I know whether such pesticides will be supplied to the ryots in time?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : I have already placed a statement before the House with regard to fertilisers. The question is about fertilisers. However, regarding pesticides if the hon. Member can say in which particular agricultural depots pesticides were not available, we will be in a position to take steps to supply them as quickly as we can.

**திரு. ஆ. கருப்பையா :** தலைவரவர்களே, இப்போது ஏக்கருக்கு உரம் 7 கிலோவும், பூச்சி மருந்து நபருக்கு 10 கிலோவும் என்ற அளவில் நெல்லை மாவட்டத்தில் விநியோகம் செய்கிறார்கள். இது போதாது. ஏற்கெனவே ஐ.ஆர். 8 நெல் ரகத்திற்கு ஏக்கருக்கு 65 கிலோ உரம் போட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நிலத்தின் விஸ்தீரணத்திற்குத் தக்கபடியும், தேவைக்கு ஏற்றபடியும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதோடு தனியார் கடைகளில் அதிக விலைக்கு உரங்களையும், பூச்சி மருந்துகளையும் விற்கிறார்கள். அதைக் கட்டுப்படுத்தி, அரசாங்க விலைக்கே விற்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்க வேண்டும். அதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தனியார் கடைகளில் அதிக விலைக்கு விற்கிறார்கள் என்று சொல்லி, அதைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். அந்த அதிகாரம் கிடைத்தால்தான் தனியார் விற்பனையைக் கட்டுப்படுத்த முடியும். மெட்ராஸ் பெர்ட்டிலைசர்ஸ், நெய்

வேலி விக்னேட் கார்ப்பரேஷன் ஆகிய இரு இடங்களிலும் உற்பத்தியாகின்ற உரத்தில் 1/3 பங்குதான் அரசாங்கத்தின் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. மீதியுள்ள 2/3 பங்கு தனியார் மூலம் விற்கப்படுகிறது. ஆகவே, விலை அதிகமாகிறது. இந்த அதிக விலையைக் கட்டுப்படுத்த 'பெர்ட்டிலைசர்ஸ் கன்ட்ரோல் ஆர்டரின்' கீழ் எங்களிடம் அதிகாரத்தைக் கொடுங்கள் என்று கேட்டிருக்கிறோம்.

THIRU A. PARANDHAMAN : Mr. Speaker, Sir, in the statement given by the Hon. Minister for Agriculture, it has been stated that the Collectors were cautioned that they should exercise adequate care in releasing the stocks made available to their respective districts. When I go deep into the matter, I understand that the Revenue Board has given definite instructions that the fertilisers should be supplied only to such of those farmers who are growing high-yielding varieties. If that is the case, the farmers who are growing low-yielding varieties would be put to great hardships. So, I request the Hon. Minister for Agriculture to come forward with a proposal to redress the grievances of the farmers who are growing low-yielding varieties?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : What the Collectors have been instructed to do is this. They have been asked to show preference to high-yielding varieties, as they require much more fertilisers than the low-yielding varieties. It is not that the low-yielding varieties are denied supply of fertilisers. High-yielding varieties produce a larger quantity of foodgrains. They are given only preference. That is all.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, விதி 41-ன் கீழ் நான் கொடுத்திருக்கின்ற கவன ஈர்ப்புத் தீர்மானத்தில், செஞ்சி வட்டத்தில் மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியத்தில் பயிர்கள் பூச்சிகளால் அழிக்கப்படுவதுபற்றி கேட்டிருக்கிறேன். பயிரில் கதிர் வரும் போது பாலை பூச்சிகள் சப்பிவிடுகின்றன. அந்தப் பூச்சிகளை அறிந்து, அவைகளைக் கொல்வதற்காக வேளாண்மைத் துறை அலுவலகத்தில் சில பூச்சிகளைக் கொடுத்திருந்தேன். அதைப் பார்த்துவிட்டு, அதிகாரிகள் பூச்சிமருந்து கொண்டுவந்து அடித்தார்கள். மருந்து அடித்தும் அந்தப் பூச்சிகள் சாகாமல் மேலே



பறந்துவிடுகின்றன. திரும்பவும் வந்து பயிரை நாசம் செய்கின்றன. அதனால் அந்த ஒன்றியத்திலுள்ள விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுவிட்டார்கள். அப்பேர்ப்பட்ட நிலையில் இருக்கின்ற விவசாயிகளுக்கு நஷ்டயீடு கொடுப்பதற்கும், அந்த பூச்சி அழிவதற்கு ஏற்ற மருந்தைக் கொண்டு வந்து தெளிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல விவசாயி என்ற காரணத்தினால்தான் அவர்களுடைய விளாக்கைப் பற்றி ஏறத்தாழ ஒரு பக்கம் இந்த ஸ்டேட்மெண்டில் குறிப்பிட்டிருக்கிறேன். அவர்கள் குறிப்பிட்ட பூச்சி " paddy head ear bug " என்று சொல்லப்படுகிறது. அதை அழிப்பதற்கு 20 டன் டி.டி.ட்டி. மருந்தும், 30 டன் பி.எச்.சி. மருந்தும் கொடுத்திருக்கிறோம். பி.எச்.சி. மருந்து அடித்தவுடன் நிச்சயமாக பூச்சிகள் அழிந்துவிடும்.

## 4. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

### (ஆ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை' பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

## 8. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி அளிக்கப்பட்டது.

[1973 டிசம்பர் 1

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(ஆ) 1973-ம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 28/73).

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே,

'1973-ம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/73) ஆய்வுககு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்'

என்று நான் முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் சொல்லிவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்டம் சில சிறு திருத்தங்களை அடிப்படையாகக் கொண்டது. இதிலே 68-எச் என்ற செக்ஷன் சட்டமன்றத்தின் மூலம் ஏற்கனவே திருத்தமாகக் கொண்டுவரப் பட்டு இயற்றப்பட்டிருக்கிறது. ஆனால் நாடாளுமன்றத்தின் மூலம் வேறு ஒரு சட்டத் திருத்தம் 68-எச் என்று கொண்டுவந்து விட்ட காரணத்தினால் நம்முடைய திருத்தச் சட்டத்தை 68-எச் எச். என்று மாற்ற இந்த மசோதா வகை செய்கிறது.

(திரு. க. சுப்பு தலைமை.)

எஸ்.டி.ஏ.டி.-இல் இருந்து வழித்தடங்களில் ஹைக்கோர்ட்டுக்கு அப்பீல் செய்ய வசதி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். அப்படி அப்பீல் செய்ய கட்டணத்தை விதிக்கின்ற திருத்தமும் இருக் கிறது. இவை இரண்டும் சாதாரண திருத்தங்கள் என்ற வகை யில் இவற்றை நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

---

* 22—11—1973 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளி யிடப்பட்டுள்ளது.



1973 டிசம்பர் 1]

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. சுப்பு)** பேரவைமுன் னுள்ள கேள்வி :

"1973-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு என் 28/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட்டன.

பிரிவு 1. முகப்புரை, நெடுங்கணக்கு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, "இச்சட்ட முன்வடிவை சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(இ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு வாடகை வண்டிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/73).

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு வாடகை வண்டிகள் (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

*27—11—1973 தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தம் சிறு திருத்தமாக இருந்தாலும் சிறப்பான திருத்தம் என்பதனை நான் இந்த மன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த மன்றத்தின் மூலம் ஏழைகளின் நல்வாழ்வுக்கு நல்ல பல சட்டங்களை ஏற்கனவே நிறைவேற்றியிருக்கிறோம் என்றாலும், இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம் மனித வாழ்வின் மேம்பாட்டுக்கு மறுபடியும் அடிக்கல் நாட்டுகிறோம் என்று சொன்னால் அது மிகையாகாது. கை ரிக்ஷாவால் ஒரு மனிதனை இன்னொரு மனிதன் இழுத்துத்தான் தீரவேண்டுமென்ற நிலைமையினை மாற்றி அமைக்கக்கூடிய ஒரு சட்டத்தை இன்றையதினம் இந்தச் சட்டமன்றம் நிறைவேற்றுகிற வாய்ப்பினைப் பெற்றிருக்கிறது. மனிதத் தன்மையின் மேம்பாட்டிலேயே மனித முன்னேற்றம் இருக்கிறது என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டவர்கள் நிச்சயமாக இந்தச் சட்ட முன்வடிவை மனதார வரவேற்று போற்றுவார்கள் என்பது திண்ணம்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை குறிப்பிடுகிறபோது, "மனிதத் தன்மையைத் திகழ்ந்திடச் செய்வதைக் காட்டிலும் மகத்தான வேறோர் வெற்றி இல்லையென்றே கருதுகிறேன். அரசுகள் அமைவதே இந்த மனிதத் தன்மையின் மேம்பாட்டினை வளர்த்திடத்தான் என்று கருதுகிறேன்."

என்று குறிப்பிட்டார்கள். மனிதனை ரிக்ஷாவில் உட்கார வைத்து, இன்னொரு மனிதன் இழுத்துச் செல்வது ஏதோ பிழைப்பதற்காக மட்டும் என்று கருதப்படவில்லை. மனித சமுதாயத்தில் இருக்கிற மிகப் பயங்கரமான பொருளாதார ஏற்றத்தாழ்வினை, உயர்ந்தவன், தாழ்ந்தவன், உழைப்பதற்காக ஒரு வர்க்கம், உண்டு களிப்பதற்காக இன்னொரு வர்க்கம் என்று எடுத்துக்காட்டுகிற வகையில் அது அமைகிற காரணத்தினால் சமுதாய இழிவைப் போக்க வேண்டுமென்பதற்காக, இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவை சட்ட மன்றத்தில் கொண்டுவந்திருக்கிறோம். நாம் பெற்ற பல பெருமைகளில் இது மிகச் சிறப்பானதொன்று என்று நான் குறிப்பிடுவேன். காரணம் இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன்முதலாக கை ரிக்ஷா நடமாடக்கூடாதெனச் சட்டமியற்றும் பெருமையும், புகழும் இந்தச் சட்ட மன்றத்திற்குத் தான் கிடைத்திருக்கிறது என்று கருதுகிறபோது, உண்மை



யிலேயே காலத்தின் கோலமாக—கோலமாக என்று கூடக் கூற மாட்டேன்—அலங்கோலமாக இருந்த ஒன்றினை ஒழிப்பதற்கான வாய்ப்பு இந்தச் சட்ட மன்றத்திற்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் கிடைத்திருக்கிறது.

இந்தச் சட்டத்தின் மூலம் யாருக்கும் எந்தவிதமான பாதகமும் ஏற்படாத வகையில் இந்தச் சட்டத்தை நல்லமுறையில் நிறைவேற்றுவதற்கு வழிகாட்டியாக, முன்னோடியாகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பணியாற்றியிருக்கிறார்கள். அரசின் பணத்தைக் கொண்டு கை ரிக்ஷாத் தொழிலாளர்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டுமென்ற நிலையில்லாமல், தன் சொந்த முயற்சியின் மூலமும், தன்பால் மதிப்புடையவர்களின் துணை மூலமும், தன்னுடைய பிறந்த நாள் விழாவிலே பெருநிதி திரட்டி, கை ரிக்ஷாக்காரர்களுக்கு எல்லாம் இலவசமாகவே சைக்கிள் ரிக்ஷா அளித்திருப்பதன் மூலம் நாம் இப்போது நிறைவேற்றுகிற சட்டத்தின் மூலம் கை ரிக்ஷாக்காரர்களுக்கு எந்தவிதமான இன்னலும் ஏற்படாத வகையில் வழிவகை செய்து தந்திருக்கிறார்கள். ஆகையால் இந்த மன்றத்தின் மூலம் நாம் அவருக்கு நம்முடைய நன்றியையும், நம்முடைய பாராட்டுதலையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதனை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மனிதர்கள் மனிதர்களாக வாழவேண்டுமென்பதற்காக உலகில் பல சாசனங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். உலக மன்றத்தில் கூட நிறைவேற்றப்பட்டுள்ள ஐ.நா. சாசனத்தின் முதல் விதியே

"All human beings are born free and equal in dignity and rights. They are endowed with reason and conscience and should act towards one another in a spirit of brotherhood."

என்பதாக—மக்கள் அனைவரும் பிறக்கும்போது சுதந்திரமும், சம உரிமையும் மேன்மையும் உடையவர்களே. இயல்பாகவே பகுத்தறிவும் மனச்சாட்சியும் கொண்டவர்களாக இருப்பதால் இவர்கள் ஒருவருக்கொருவர் சகோதர பாவத்தோடு நடந்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மனிதர்களிடையே சகோதரத் தன்மையை உருவாக்குவதற்கு—உயர்ந்த தாழ்ந்த நிலைமை இல்லாத தன்மையை உருவாக்குவதற்கு இந்த மசோதா நல்ல வழிவகை செய்கிறது என்று நான் கருதுகிறேன்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1973 டிசம்பர் 1

இந்த மசோதாவை சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் வரவேற்று வரலாற்றில் மேலும் ஒரு சிறப்பினை பல நல்ல சாதனைகளால் உருவாக்கப்பட்ட மகுடத்தில் மேலும் ஒரு மாணிக்க மணியைப் பதித்தாற்போன்று ஒளிவிட்டு மிளிர நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டு, முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனிதாபிமான உணர்ச்சியோடு, மனிதனை மனிதன் வைத்து இழுப்பது இந்த நாளில் மிக இழிவானது என்ற காரணத்தினால் இந்த மசோதா கொண்டுவரப் பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள். அவர்களுடைய எண்ணத்தை நான் வரவேற்கிறேன். ஆனால் வெகு நீண்ட நாட்களாக—மனிதர்களுக்கிடையே வேற்றுமை கிடையாது, எல்லோரும் சமமானவர்கள் என்று பல பெரியவர்கள் கூட வந்திருக்கிறார்கள் என்றாலும் கூட நடைமுறையில் எல்லோரும் சமமானவர்கள் என்ற நிலை மக்களிடத்திலே ஏற்பட்டது கிடையாது. வள்ளுவர் கூடச் சொன்னார். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று. பிறப்பில் எல்லோரும் சமமானவர்கள் என்று கூறினாலும் நாட்டிலே அது நடைமுறையில் இருந்தது கிடையாது என்பதனை நாம் பார்க்கிறோம். எப்படியோ மனிதன் வாழவேண்டும் என்பதற்காக தன்னால் இயன்ற காரியத்தைச் செய்து வாழ்ந்து கொண்டிருக்கிறான். அந்தச் சொழிலைக் கூட, தொழிலைக் கூடச் செய்வதற்கு இல்லாமல், பலர் தெருவில் பிச்சை எடுக்கும் நிலையை நாம் பார்க்கிறோம். ரிக்ஷா இழுப்பதைவிட இழிவான தொழில் பிச்சை எடுப்பது. வள்ளுவர் அதைக் குறிப்பிட்டிருக்கிறார். ஒருவன் பிச்சை எடுக்கிறபோது அவன் தன்னுடைய எல்லாவற்றையும் இழக்கிறான். அந்த அளவுக்கு இழிவான தொழில்—துர்ப்பாக்கியமான நிலை உள்ளவர்கள் ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். அந்தச் சந்தர்ப்பத்தில்தான் பிச்சை எடுப்பதைவிட வண்டி இழுக்கப் போகலாம் என்று போய்க்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு இதை விட கையால் இழுப்பதைவிட இன்னும் மேலான ஒரு தொழிலை நாம் கொடுத்து, அவர்களுடைய வாழ்க்கை மேம்பாட்டையச் செய்வது வரவேற்கத்தக்க ஒன்று என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கூறிக்கொள்வதோடு,



1973 டிசம்பர் 1] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

இம்மாதிரி சட்டத்தை நாம் அமுலாக்குகிறபொழுது, நிறைவேற்றுகிறபொழுது, இதனால் வேலையற்ற நிலைமை யாருக்கும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-30]

பொதுவாக, எந்தவிதமான வேலையும் கிடைக்காதபொழுது, வண்டியாவது இழுத்துப் பிழைக்கலாம் என்று இருக்கும்போது, அந்த வண்டியும் இழுக்கக் கூடாது என்று செய்யும்போது, அவர்களுக்கு மாறுது ஏற்பாடு செய்யாமல் இருக்கக் கூடாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெயரால் நிதி சேர்த்து, அவர்களுக்கு எல்லாம், இலவசமாக சைக்கிள் ரிக்ஷா கொடுத்திருக்கிறார்கள் ; கொடுப்பதாகக் கூறினார்கள். அதை எல்லோருக்கும் கொடுப்பதற்கான வழிவகை செய்ய வேண்டும். இதனாலே யாரும் தெருவிலே நின்றுவிடக் கூடாது.

தலைவர் அவர்களே, இப்பொழுது மனிதனை வைத்து இழுப்பதைப் பொறுத்து, மனிதனுடைய பாரம் அனேகமாக 60 அல்லது 70 கிலோ எடைக்கு மேல் இருக்காது. யாரோ லட்சத்தில் ஒருவன் பெரிய சரீரமாக இருக்கலாம். (குறுக்கீடு) நான் 57 கிலோ. இதைவிடத் தலைவர் அவர்களே, மூட்டை வண்டியை, கை வண்டிக்காரர்கள் இழுத்துச் செல்கிறார்களே, பட்டு வெயிலிலே, வியர்வை நிலத்திலே விழ, பின்னாலே ஒருவன் தலையில் முட்ட, முன்னாலே ஒருவர் இழுத்துச் செல்கின்ற காட்சியை நகரத்திலே நாம் பார்க்கிறோம். இதையும் போக்குவதற்கு அரசு ஏதாவது முயற்சி எடுக்குமா—அதைப்பற்றி சிந்திக்க வேண்டும். இப்படி சமுதாயத்திலே பின் தங்கியவர்களை, கஷ்டப்படுகின்ற மக்களுடைய நிலைகளையெல்லாம் உயர்த்துவதற்கு ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்திலே நாம் காரியங்களைச் செய்ய வில்லையென்றாலும், அவர்களுடைய நிலை உயர்வதற்காக, படிப் படியாக காரியங்களைச் செய்தாக வேண்டும்.

அதே சந்தர்ப்பத்திலே, பல்லாயிரக்கணக்கான பேர்கள் மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல், பிச்சை எடுக்கவும் முடியாமல், வண்டி இழுக்கவும் முடியாமல், வேலையே

கிடைக்காத நிலையிலே ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிலையையெல்லாம் உயர்த்த நாம் பல்வேறு வழிவகைகளைக் கண்டுபிடித்தாக வேண்டும். ஆகவே, படிப்படியாக, இந்த அரசு பல்வேறு காரியங்களைச் செய்து, தாங்கள் இந்த நாட்டிலே மனிதர்களாக வாழ்கிறோம் என்ற உணர்வோடு பிறரை அண்டி வாழ வேண்டிய துர்ப்பாக்கியமான நிலை இந்த நாட்டிலே இல்லை என்ற எண்ணத்தோடு எல்லா மக்களும் வாழ்வதற்கான ஒரு வழிவகையைச் செய்வதற்கான முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

பிச்சை எடுப்பதைத் தடைச் செய்ய ஒரு சட்டம் கொண்டு வரப்போவதாகப் பத்திரிகையிலே பார்த்தேன். அதைச் செய்ய வேண்டியது அவசியம்தான். வண்டி இழுப்பவர்களைத் தடை செய்து அவர்களுக்கு நாம் சைக்கிள் ரிக்ஷா கொடுத்துவிட முடியும், சுலபமாக. பிச்சை எடுப்பவர்களைத் தடை செய்தால், அதற்கு மாற்று ஏற்பாடு என்ன செய்ய முடியும் என்பதைப் பற்றி அரசு ஆலோசிக்க வேண்டும். அவர்களுக்கெல்லாம் மாற்று ஏற்பாடு ஏதாவது கொடுத்தால்தான் முடியும். ஏனென்றால் அனேகம் பேர் பிச்சை எடுப்பதை கேவலம் என்று கருதினாலும், அது பெருமைக்குரிய தொழிலாக ஆகிவிட்டது. அதனாலே, நாட்டிலே பல சிக்கல்கள், சங்கடங்கள் ஏற்பட்டுவிட்டது என்பது உண்மை. அதற்காக, பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம் அமைக்கப்பட்டிருப்பதாக அரசாங்கத் தரப்பிலே கூறலாம். பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம் எத்தனை ஆயிரம் பேருக்குப் பயன்படும். நாட்டிலே பிச்சைக்காரர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்பதை எல்லாம் கணக்கெடுத்தால், பிச்சைக்காரர் மறு வாழ்வு இல்லத்தால் மட்டும் பிச்சைக்காரர் பிரச்னையைத் தீர்க்க முடியும் என்று கருத முடியாது. ஆகவே, அதற்கு மாற்று ஏற்பாடுகளையும் அரசாங்கம் செய்தாக வேண்டும்.

இவ்வாறு பல்வேறு சமுதாய மேம்பாட்டிற்கான காரியங்களை செய்வதுபற்றி சிந்தித்து, அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த கை ரிக்ஷா தடுப்பு சட்டத்தை நான் வரவேற்று, இதனால் வேலை இழப்பவர்களுக்கு உடனடியாக மாற்று வேலை கொடுக்கக்கூடிய சைக்கிள் ரிக்ஷா



அவர்களுக்கு இனமாக வழங்க வேண்டுமென்ற ஏற்பாட்டை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சு. சுப்பு):** இந்த மசோதாவின் மீது பேச அனேக உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, பிச்சைக்காரர் மறு வாழ்வுக்கெல்லாம் போய், நேரத்தை அதிகமாக எடுத்துக்கொள்ளாமல், சுருக்கமாக இந்த மசோதாவைப்பற்றி மட்டும் பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

* **திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவின் நல்ல நோக்கத்தை அழகாக எடுத்துக் கூறினார்கள். அந்த நோக்கத்தைக் குறித்து யாருக்கும் வேறுபாடு இருக்காது என்று நான் நினைக்கிறேன். இந்த ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ்-ஐ பார்க்கும்போது இந்த ரிக்ஷா தொழில் 'டிமீனிங்'—இழிவான தொழில்—ஆகவே, இந்தத் தொழிலை செய்கின்றவர்களுக்கு மாற்றுத் தொழில் வழங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஒருவேளை அந்த நோக்கத்தில் தவறில்லையென்று சொன்னாலும் கூட, அந்தத் தொழிலையே இழிவான தொழில் என்று கூறுவதற்கில்லை. தொழில் செய்து பிழைப்பது இழிவானது என்று சொன்னால், இந்த நாட்டில் தொழிலைச் செய்வதற்கு வாய்ப்பில்லாமல் பல கோடிக் கணக்கானவர்கள் இருக்கிறார்கள். அவர்கள், எந்த நிலைமையில் எல்லாம் தங்கள் பிழைப்பை நடத்துகிறார்கள், என்பதை எனக்கு முன்னால் பேசியவர்கள் எடுத்துக் கூறினார்கள். ஆக, அந்த நிலையை விட ஏதாவது ஒரு தொழிலை செய்து, மானமாக மரியாதையாக, வாழ்கின்றவர்களைப் பார்த்து, இழிவான தொழில் செய்கின்றார்கள் என்று சொல்லும்போது, நிச்சயமாக அது சமுதாயத்தில் ஒரு வெறுப்பைத்தான் உண்டு பண்ணுமே தவிர, இன்னும் இந்த நாட்டில் தொழில் இல்லாமல் வாய்ப்பு இல்லாமல், பல மக்கள் பல்வேறு தொழிலைச் செய்கின்றவர்கள் எல்லாம், தாங்கள் செய்கின்ற தொழிலை இழிவான தொழில் என்று சமூகம் நினைத்துவிடுமோ என்ற ஐயப்பாடு கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்படும். ஆகவே, எந்தத் தொழிலையும் இழிவான தொழில் என்று கூறுவதை நாம் வரவேற்க இயலாது.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1973 டிசம்பர் 1

வெளிநாட்டை எடுத்துக் கொண்டாலும், நமது நாட்டை எடுத்துக் கொண்டாலும் கூட, பல்வேறு தலைவர்கள், நாட்டின் தலைவர்களாக வந்திருக்கின்றவர்கள், ஆரம்பத்தில், சமுதாயம் இழிவான தொழில் என்று கருதிய தொழிலைச் செய்தவர்கள். அப்படிப்பட்டவர்கள் இந்த நாட்டில் பெரும் பொறுப்புகளை ஏற்றிருப்பதை நாம் மறுக்க இயலாது. ஆக, சூழ்நிலை அந்த நிலையிலிருக்கும்போது, எந்தத் தொழிலையும் இழிவான தொழில் என்று சொல்வது சரியல்ல என்ற கருத்தினை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று நமது மாநிலம், நமது நாடு இருக்கிற நிலையைப் பார்க்கும்போது, ஒருவேளை இன்று ரிக்ஷா இழுக்கின்றவர்களுக்கு மாற்றுத் தொழில் கொடுப்பதற்கு நாம் சைக்கிள் ரிக்ஷா வழங்கக் கூடிய நிலையில் இருக்கலாம். ஆனால், இன்னும் வருகின்ற காலங்களில் தொழில் வாய்ப்பு இல்லாமல் ரிக்ஷா தொழிலாவது செய்து பிழைக்கலாம், செய்யலாம் என்று லட்சக்கணக்கான மக்கள் இருக்கிறார்களே, அவர்களுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்தக் கூடிய நிலையில் நமது அரசாங்கம் இருக்கின்றதா? இல்லையென்றால், அவர்களுக்கு உள்ள உரிமையை, இந்த சட்டமானது பறிக்கின்றதல்லவா என்பதனை நாம் சற்று சிந்திக்க வேண்டும்.

இந்த மசோதாவில் ரிக்ஷா தொழில் செய்யக் கூடாது, செய்தால் அவர்களுக்கு தண்டனை 2 மாதம் அல்லது ரூ. 200 அபராதம் என்று கூறப்பட்டிருக்கிறது. உண்மையிலே, மாற்றுத் தொழிலிலிருந்து ரிக்ஷா தொழில் செய்தால், அதைத் தடுக்கலாம், தண்டனை அளிக்கலாம். தொழிலே இல்லாமல், ஏதாவது ஒரு தொழில் செய்து நாட்டிலே ஒரு திருடனாக இல்லாமல், சமூக விரோதியாக இல்லாமல், மரியாதையாக தொழில் செய்து பிழைக்கலாம் என்றால், அதற்கு இந்தத் தடையினை விதித்திருப்பது சரியா என்பதை அமைச்சர் அவர்கள் கவனித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் அவர்கள் கூறினார்கள், அரசாங்கப் பணத்திலிருந்து அல்ல, அதற்காக முதலமைச்சர் அவர்கள் அம்மாதிரித் தொழில் உருவாக்கிக் கொடுப்பதற்காக கை ரிக்ஷாவை இழுத்துக் கொண்டிருந்த தொழிலாளர்களுக்கு சைக்கிள் ரிக்ஷா



1973 டிசம்பர் 1] [திரு. ஜே. ஜேம்ஸ்]

வழங்குவதற்காக வழிவகைகள் செய்திருக்கிறார்கள் என்று கூறினார்கள். அதை வரவேற்கிறோம். ஆனால் கை ரிக்ஷாக்களுக்குப் பதிலாக கொடுக்கப்பட்டிருக்கிற சைக்கிள் ரிக்ஷாக்களைப் பார்க்கும்பொழுது அதிலே இரண்டு படங்கள் ஒட்டித்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. முதலமைச்சர் அவர்கள் படமும் மறைந்த அண்ணாவின் படமும் ஒட்டித்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி ஏழைகளுக்கு அவர்கள்மீது இரக்கங்கொண்டு அக்கறை கொண்டுதான் இதைச் செய்திருக்கிறார்களா அல்லது தங்களுடைய விளம்பரத்திற்காகச் செய்திருக்கிறார்களா என்ற ஐயப்பாடு வந்திருக்கிறது. உண்மையிலேயே ஏழைகளுக்கு ரிக்ஷாக்கள் என்று சொல்லிக்கொண்டு அதன் மூலம் தங்களுடைய விளம்பரத்தைத் தேடிக்கொள்வதற்கான முயற்சியைச் செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் விரும்பத்தகாத பல விபரீதங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இந்தக் கட்சி இரண்டாகப் பிரிந்த நேரத்திலே சிலர் டி.எம்.கே. யில் இருக்கிறார்கள், சிலர் ஏ.டி.எம்.கே. யில் இருக்கிறார்கள். அண்ணா தி.மு.க.விலே இருக்கிறவர்கள் முதலமைச்சர் படத்தை மறைத்து எம்.ஜி.ஆர். படத்தை ஒட்டியதன் காரணமாக பல சண்டை சச்சரவுகள் ஏற்பட்டதாகவும் அம்மாதிரிச் செய்தவர்களுடைய சைக்கிள் ரிக்ஷாக்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டதாகவும் தெரிகிறது. ஆகவே, இத்தனை விபரீதங்கள் ஏற்படுவதால் விளம்பரம் தேடிக்கொள்வதன் மூலமாகத்தான் ஏற்படுகிறது, ஆகவே இதை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்படி ஏழைகள் மீது காரியங்கள் செய்யும்பொழுது தங்களுக்காக விளம்பரம் தேடிக்கொள்வதோ அல்லது அரசியல் லாபம் தேடிக் கொள்வதோ வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சைக்கிள் ரிக்ஷாக்களைப் பொறுத்தவரையில் அதை ஓட்டுகிறவர்களுக்குச் சிரமமாகவும் ஏற்றங்களிலே மிதித்துச் செல்வதற்குக் கஷ்டமாகவும் இருப்பதாகவும் அதனால் அந்தச் சிரமத்தைக் குறைப்பதற்காக ஒரு லீவர் பொருத்தப்படவேண்டும் என்று கூறுகிறார்கள். அதைப் பொருத்தித் தருவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இத்தோடு என்னுடைய கருத்துக்களை முடித்துக்கொள்கிறேன்.

வெளிநாட்டை எடுத்துக் கொண்டாலும், நமது நாட்டை எடுத்துக் கொண்டாலும் கூட, பல்வேறு தலைவர்கள், நாட்டின் தலைவர்களாக வந்திருக்கின்றவர்கள், ஆரம்பத்தில், சமுதாயம் இழிவான தொழில் என்று கருதிய தொழிலைச் செய்தவர்கள். அப்படிப்பட்டவர்கள் இந்த நாட்டில் பெரும் பொறுப்புகளை ஏற்றிருப்பதை நாம் மறுக்க இயலாது. ஆக, சூழ்நிலை அந்த நிலையிலிருக்கும்போது, எந்தத் தொழிலையும் இழிவான தொழில் என்று சொல்வது சரியல்ல என்ற கருத்தினை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று நமது மாநிலம், நமது நாடு இருக்கிற நிலையைப் பார்க்கும்போது, ஒருவேளை இன்று ரிக்ஷா இழுக்கின்றவர்களுக்கு மாற்றுத் தொழில் கொடுப்பதற்கு நாம் சைக்கிள் ரிக்ஷா வழங்கக் கூடிய நிலையில் இருக்கலாம். ஆனால், இன்னும் வருகின்ற காலங்களில் தொழில் வாய்ப்பு இல்லாமல் ரிக்ஷா தொழிலாவது செய்து பிழைக்கலாம், செய்யலாம் என்று லட்சக்கணக்கான மக்கள் இருக்கிறார்களே, அவர்களுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்தக் கூடிய நிலையில் நமது அரசாங்கம் இருக்கின்றதா? இல்லையென்றால், அவர்களுக்கு உள்ள உரிமையை, இந்த சட்டமானது பறிக்கின்றதல்லவா என்பதனை நாம் சற்று சிந்திக்க வேண்டும்.

இந்த மசோதாவில் ரிக்ஷா தொழில் செய்யக் கூடாது, செய்தால் அவர்களுக்கு தண்டனை 2 மாதம் அல்லது ரூ. 200 அபராதம் என்று கூறப்பட்டிருக்கிறது. உண்மையிலே, மாற்றுத் தொழிலிலிருந்து ரிக்ஷா தொழில் செய்தால், அதைத் தடுக்கலாம், தண்டனை அளிக்கலாம். தொழிலே இல்லாமல், ஏதாவது ஒரு தொழில் செய்து நாட்டிலே ஒரு திருடனாக இல்லாமல், சமூக விரோதியாக இல்லாமல், மரியாதையாக தொழில் செய்து பிழைக்கலாம் என்றால், அதற்கு இந்தத் தடையினை விதித்திருப்பது சரியா என்பதை அமைச்சர் அவர்கள் கவனித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் அவர்கள் கூறினார்கள், அரசாங்கப் பணத்திலிருந்து அல்ல, அதற்காக முதலமைச்சர் அவர்கள் அம்மாதிரித் தொழில் உருவாக்கிக் கொடுப்பதற்காக கை ரிக்ஷாவை இழுத்துக் கொண்டிருந்த தொழிலாளர்களுக்கு சைக்கிள் ரிக்ஷா





வழங்குவதற்காக வழிவகைகள் செய்திருக்கிறார்கள் என்று கூறினார்கள். அதை வரவேற்கிறோம். ஆனால் கை ரிக்ஷாக்களுக்குப் பதிலாக கொடுக்கப்பட்டிருக்கிற சைக்கிள் ரிக்ஷாக்களைப் பார்க்கும்பொழுது அதிலே இரண்டு படங்கள் ஒட்டித்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. முதலமைச்சர் அவர்கள் படமும் மறைந்த அண்ணாவின் படமும் ஒட்டித்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி ஏழைகளுக்கு அவர்கள்மீது இரக்கங்கொண்டு அக்கறை கொண்டுதான் இதைச் செய்திருக்கிறார்களா அல்லது தங்களுடைய விளம்பரத்திற்காகச் செய்திருக்கிறார்களா என்ற ஐயப்பாடு வந்திருக்கிறது. உண்மையிலேயே ஏழைகளுக்கு ரிக்ஷாக்கள் என்று சொல்லிக்கொண்டு அதன் மூலம் தங்களுடைய விளம்பரத்தைத் தேடிக்கொள்வதற்கான முயற்சியைச் செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் விரும்பத்தகாத பல விபரீதங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இந்தக் கட்சி இரண்டாகப் பிரிந்த நேரத்திலே சிலர் டி.எம்.கே.யில் இருக்கிறார்கள், சிலர் ஏ.டி.எம்.கே.யில் இருக்கிறார்கள். அண்ணா தி.மு.க.விலே இருக்கிறவர்கள் முதலமைச்சர் படத்தை மறைத்து எம்.ஜி.ஆர். படத்தை ஒட்டியதன் காரணமாக பல சண்டை சச்சரவுகள் ஏற்பட்டதாகவும் அம்மாதிரிச் செய்தவர்களுடைய சைக்கிள் ரிக்ஷாக்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டதாகவும் தெரிகிறது. ஆகவே, இத்தனை விபரீதங்கள் ஏற்படுவதால் விளம்பரம் தேடிக்கொள்வதன் மூலமாகத்தான் ஏற்படுகிறது. ஆகவே இதை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்படி ஏழைகள் மீது காரியங்கள் செய்யும்பொழுது தங்களுக்காக விளம்பரம் தேடிக்கொள்வதோ அல்லது அரசியல் லாபம் தேடிக்கொள்வதோ வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சைக்கிள் ரிக்ஷாக்களைப் பொறுத்தவரையில் அதை ஓட்டுகிறவர்களுக்குச் சிரமமாகவும் ஏற்றங்களிலே மிதித்துச் செல்வதற்குக் கஷ்டமாகவும் இருப்பதாகவும் அதனால் அந்தச் சிரமத்தைக் குறைப்பதற்காக ஒரு லீவர் பொருத்தப்படவேண்டும் என்று கூறுகிறார்கள். அதைப் பொருத்தித் தருவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இத்தோடு என்னுடைய கருத்துக்களை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. பாலசுந்தரம்:** மதிப்பிற்குரிய தாற்காலிகத் தலைவர் அவர்களே, . . . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. சுப்பு):** நான் நேற்றைக்கே சொல்லியிருக்கிறேன், சேர்மன் என்றோ அல்லது தலைவர் என்றோதான் சொல்ல வேண்டுமென்று.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவர் அவர்களே, இந்தத் திருத்த சட்ட முன்வடிவு தமிழ்நாட்டின் சரித்திரத்திலே பொன்னெழுத்துக்களாலே பொறிக்கப்பட வேண்டியது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தக் கை ரிக்ஷா ஒழிப்பு என்கின்ற இந்தச் சட்ட முன்வடிவை உள்ளபடியே வரவேற்காத ஜீவன்கள் தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, இந்தியாவிலே மட்டுமல்ல, அகில உலகத்திலேயும்கூட இதை வரவேற்காத ஜீவன்கள் இருக்காது என்பதைத் தெள்ளத் தெளிவாக நாம் உணர்கிறோம்.

நான் கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்கு முன்னாலே மாணவனாக இருந்த நேரத்திலே நம்முடைய மதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள் எழுதிய பராசக்தி படத்தைப் பார்த்தேன். அதிலே, நரம்பு தெறிக்கத் தெறிக்க ரிக்ஷா வண்டி இழுத்து கூனிக்குறுகிப்போய் இருக்கின்றானே அவனுக்கு வாழ்வு அளிக்கவும், அவனுடைய கண்ணீரைத் துடைக்கவும், அவனது வாழ்க்கை வளம் கொழிக்கச் செய்யவும் பாடுபட வேண்டும் என்று அவர்கள் அன்றைக்கு எழுதிக் காட்டியது, அன்றைக்கு எழுதியவரே இன்றைக்கு அதற்கு வழிகாட்டுகின்ற முறையிலே அவர்கள் முதலமைச்சர் ஆக வந்திருக்கிற அவர்கள் பிறந்த நாளிலிருந்து இந்த கை ரிக்ஷா இழுப்பதை ஒழிப்பதைத் தன்னுடைய குறிக்கோளாகக் கொண்டு அவர்களே இன்றைக்கு அந்த நல்ல காரியத்தை நிறைவேற்றியிருப்பது சிறப்பிற்குரியது என்பதை எண்ணும்பொழுது சொல்லைச் செய்யக்கூடியவர் கலைஞர் என்பதை நிரூபித்திருக்கிறார் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



என்றைக்குமே சில முற்போக்குத் திட்டங்களைக் கொண்டு வருகிறபோது சில பிற்போக்கு சக்திகள் எதிர்ப்பதுதான் வாடிக்கையான செயலாகும், அதன் அடிப்படையிலே இதை வரவேற்பதாகக் கூறிக்கொண்டு, திரு. ஜேம்ஸ் அவர்கள் . . .

**திரு. ஜே. ஜேம்ஸ்:** சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், என்னுடைய பெயரைக் கூறிக்கொண்டு ஏதோ அவர் முற்போக்கு வாதி போலவும் நான் பிற்போக்குவாதி போலவும் பேசிக் கொண்டிருக்கிறார், யார் முற்போக்கு, யார் பிற்போக்கு என்பது நாட்டுக்குத் தெரியும். அவர் முற்போக்கு என்பதற்கு அடையாளமாக ஏதாவது உண்டா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. சுப்பு):** முற்போக்கு, பிற்போக்கு என்று சொல்வது எல்லாம் கொள்கையைப்பற்றிப் பேசுவதுதான். ஆகவே தனிப்பட்ட முறையிலே சொல்லவில்லை, சொல்லவும் **வேண்டாம்.**

**திரு. வை. பாலசுந்தரம்:** நான் பிற்போக்கு சக்தி என்று கூறியவுடன் மரியாதைக்குரிய உறுப்பினர் அவர்களுக்கு ஏன் கோபம் வந்தது என்று தெரியவில்லை. அவர் முற்போக்கா இல்லையா என்பதை அவரே நிர்ணயித்துக்கொள்ளட்டும். அந்தச் சர்ச்சைக்குப் போக நான் தயாரில்லை.

இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையிலே மனச்சாட்சி உள்ளவர்கள் நெஞ்சிலே கை வைத்துப் பார்க்கட்டும், மனிதாபிமானம் உள்ளவர்கள் சொல்லட்டும். அவர்கள் எல்லாம் நிச்சயமாக இதை வரவேற்பார்கள். அதைத்தான் அமைச்சர் அவர்களும் முன்மொழிந்து சொன்னார்கள். இதை தமிழ் நாட்டிலே உள்ளவர்கள் மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ளவர்கள் மட்டுமல்ல இந்தியாவிற்கு வெளியே உள்ளவர்களும் அனைத்துலகத்திலுமுள்ள தத்துவ விற்பன்னர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. வை. பாலசுந்தரம்] [1973 டிசம்பர் 1

இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்பதிலே மற்றவர்களைக் காட்டிலும் நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன். ஏன் என்றால் ரிக்ஷா வண்டி இழுக்கின்றவர்களிலே பெரும்பாலானவர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்பது ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மையாகும். அதிலே உள்ளவர்களிலே 90 சதவீதம் 95 சதவீதம் பேர்கள் அவர்கள்தான். ரிக்ஷா வண்டி இழுப்பது கேவலமான நிலை, இந்த நாட்டிலே அவமானச் சின்னங்களாக அவர்கள் உருவாகிக் கொண்டிருந்தார்கள் என்பதை எண்ணிப் பார்த்து அந்த அவமானத்தைத் துடைக்க, அந்த களங்கத்தைப் போக்க அந்த இழிநிலையைத் துடைத்தவர் ஒரே ஒரு தலைவர், நேர்மையானவர், அவர்தான் நம்முடைய கலைஞர் ஆவார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்பொழுது உள்ளபடியே தாழ்த்தப்பட்ட மக்கள் சமுதாயம் அவர்கள் உயிரோடு இருக்கும் வரையில், கொஞ்சம் அழகாகச் சொன்னால் கார் உள்ளளவும், கடல்நீர் உள்ளளவும் அவர்களைப் பாராட்டும், வரவேற்கும், வாழ்த்தும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

எனவே, இந்த ரிக்ஷா ஒழிப்பின் மூலம் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் அவமானத்தைத் துடைத்துக் கொண்டிருக்கிறார்கள், தங்களுடைய இழிநிலையைப் போக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்து அந்தச் சமுதாயத்தின் பிரதிநிதி என்ற வகையிலே கலைஞர் அவர்களுக்கு பாராட்டுதலையும், வாழ்த்துதலையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் திட்டம் பொதுவாக அரசாங்க நிதியிலிருந்து எடுத்துச் செய்யப்படுகிற திட்டம் அல்ல. பொதுமக்களிடமிருந்து, இந்தத் திட்டத்தை வரவேற்கின்ற நல்லவர்களிடம் இருந்து பெற்ற நிதியின் மூலமாக நிறைவேற்றுகிற திட்டம் என்பதையும் இந்த நல்ல காரியத்தைச் செய்கிறபோது விளம்பரம் தேடுகிறார்கள் என்று சொல்வது, அவர்கள் அப்படிச் சொல்லி விளம்பரம் தேடிக் கொள்வதற்காகச் சிலர் பேசுவதாகத் தெரிகிறது. அப்படிப் பேசினாலும் நாங்கள் பொருட்படுத்தாமல் இருப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1973 டிசம்பர் 1] [திரு. வை. பாலசுந்தரம்]

பொது மக்களிடமிருந்து வசூல் செய்யப்பட்ட நிதியிலிருந்து செய்யப்படுகிற இந்தக் காரியம் நேர்மையான காரியம், நாட்டு மக்களால் எதிர்காலத்திலே வரவேற்கப்படும் காரியம் என்பதைச் சொல்லிக்கொண்டு, இந்தத் திட்டத்தின் மூலமாக ஆதாயம் பெற்றவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள்.

ஆனால் அதே நேரத்திலே சில தனிப்பட்ட கை ரிக்ஷாக்களை இழுத்துக் கொண்டிருக்கின்றவர்கள் சங்கடப்படுகின்றார்கள். சில முதலாளிகள் பத்து ரிக்ஷாக்கள், 15 ரிக்ஷாக்கள் என்று வைத்து வாடகைக்கு விட்டுக்கொண்டிருந்தார்கள். அதன்மூலம் வாடகைக்குப் பெற்று ஓட்டிக் கொண்டிருந்த தொழிலாளர்கள் அதன்மூலம் வருவாய்பெற்று தங்களுடைய குடும்பத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தலைநகரிலே அதிகமாக இருக்கிறார்கள். அப்படி விடப்பட்டவர்களையெல்லாம் சேர்த்துக்கொள்ள வேண்டிய சாத்தியக் கூறுகளையெல்லாம் அரசு உருவாக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொண்டு, இந்தச் சட்டத்தை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, முன்னால் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் பேசும்பொழுது நான் கோவில்பட்டி தாலுக்காவைப்பற்றிக் குறிப்பிட்ட சமயத்தில் உண்மையான என்ற சொல்லை நான் பயன்படுத்தியிருந்தால் ஒருவேளை நண்பர் அழகர்சாமி அவர்களுக்குச் சற்று வருத்தம் தருவதாக இருக்குமாகையால் உண்மையான என்ற சொல்லுக்குப் பதிலாக ஒழுங்காக என்று மாற்றிவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, மன்றத்தில் கொண்டு வந்துள்ள இந்த மசோதாவின் மீது என்னுடைய ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிடும்பொழுது மனிதனை மனிதன் இழுக்கக் கூடிய இழிநிலையைப் போக்கும் வகையில் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதை நான் முழுமனதோடு வரவேற்கிறேன். ஆனால் அதேநேரத்தில் இந்தத் தொழிலைச் செய்பவர்கள் அதை விரும்பியோ அல்லது மனமகிழ்ச்சிக்குரிய

தொழிலாக நினைத்தோ செய்ய முன்வரவில்லை. எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் கூறியதைப்போல, அதைவிடக் கடினமாக, ஆளைவைத்து இழுப்பதைவிடக் கடினமாக, கால்களில் செருப்பு கூட இல்லாமல் பாரத்தை வைத்து இழுக்கும் நிலைமை பல நகரங்களில் இருக்கிறது. அதற்குக் காரணம் வேறு தொழில் கிடைக்காததால் ஏதாவது செய்து வயிற்றுப் பிழைப்பைக் கவனிக்க வேண்டுமென்பதற்காகச் செய்கிறார்கள். அப்படிப் பார வண்டி இழுத்தவர்கள் கொஞ்சம் வயதாகிவிட்டால் இந்த வண்டியில் ஒரு ஆளைமட்டும் வைத்து இழுத்துப் போகிறார்கள். அதை ஒழிப்பதற்காகக் கொண்டுவரப்படும் இந்த மசோதா நல்லதுதான்.

ஆனால் அதேநேரத்தில் இந்தத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு மாற்றாக சைக்கிள் ரிக்ஷாக்கள் அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு ஆயிரம் ரூபாய் விதம் ஆகும். அதைப் பொது மக்கள் நன்கொடைகள் மூலமும், வேறு பலவகைகளில் நிதி திரட்டுவதன் மூலமும் முதலமைச்சரவர்களால் முயற்சிக்கப்பட்டு அளிக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரி பல நகரங்களில் இன்னும் அளிக்கப்பட வேண்டியிருக்கிறது. இந்த கை ரிக்ஷா இழுக்கும் தொழிலை நடத்தியவர்கள் குடும்பங்கள் இனிமேல் பட்டினி கிடந்து, இதைவிட இழிவான நிலையான பிச்சையெடுக்கும் நிலைக்கு போய்விடக் கூடாது. எனவே, இப்பொழுது யார் யார் கை ரிக்ஷாக்கள் வைத்து அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்களோ அத்தனை பேர்களுக்கும் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். எந்த நிதியாகயிருந்தாலும் சரி, சர்க்கார் நிதியாக இருந்தாலும் சரி அல்லது பாங்குகளில் கடன் வாங்கிக் கொடுத்தாலும் சரி அந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களுக்குக் கொடுக்கும் முறையிலே ஏற்பாடுகளைச் செய்ய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

யாராவது ஒருவர் கை ரிக்ஷா வைத்திருந்தால் 3 மாதங்கள் ஜெயில், அல்லது 500 ரூபாய் அபராதம் விதிக்கலாம் என்று தெரிகிறது. ஆகவே அப்படி அவர்கள் கை ரிக்ஷா வைத்திருக்க



வேண்டிய அவசியமில்லாமல் அவர்களுக்கு சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்குவதற்கு என்னென்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று அமைச்சரவர்கள் சொல்வார்கள் என்று நினைக்கிறேன்.

அதுமட்டுமல்ல, இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் பெரும்பாலும் அரிசன மக்கள் என்று மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் சொன்னார்கள். அது வாஸ்தவம்தான். நான் முன்னால்கூட சொல்லியிருக்கிறேன். பெரும்பகுதி மக்கள் நகரசுத்தித் தொழிலாளர்களாக, கழிவுப்பொருட்களைத் தங்கள் தோளிலும், தலையிலும் சுமந்து செல்லும் நிலைமையிருக்கிறது. அதை மாற்ற அவர்களுக்கு ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள்ளாக கை வண்டிகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அது இதைவிட மோசமாக இருக்கிறது. ஆனால் அதற்குப் பொருளாதாரம் இடம் கொடுக்கவில்லை என்று சொல்லலாம். ஆனால் அதையும் ஒரு காலகட்டத்திற்குள்ளாக ஒழிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

குறிப்பாக, இந்தத் தொழிலைச் செய்பவர்கள் வேலை இழக்காத வகையில் அவர்கள் அத்தனை பேர்களுக்கும் சைக்கிள் ரிக்ஷாக்களை உடனடியாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மசோதாவின் நோக்கத்தை வரவேற்று அமர்கிறேன்.

**திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த மசோதாவை வரவேற்று நானும் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்வதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சமீபத்தில் ஒரு செய்தித்தாளில் நான் படித்தேன். ஒரு மனிதன் இன்னொருவனிடமிருந்து 200 ரூபாய் வாங்கியிருக்கிறான், அதற்காக அவன் 10 ஆண்டுக்காலம். 20 ஆண்டுக்காலம் அடிமையாக இருந்திருக்கிறான் என்று வடபுலத்து மாநிலத்தில் நடந்த செய்தியைப் பத்திரிகையில் படித்தேன். அவ்வளவு பிற்போக்கான நிலைமையில் இன்னும் பல மாநிலங்கள் இருக்கும் நேரத்தில், ஒரு மனிதனை உட்கார வைத்து வேறொரு மனிதன் இழுப்பதே சுயமரியாதைக்கு விடப்பட்ட சவால் என்று உணர்ந்து தமிழக

[திரு. துரைமுருகன்] [1973 டிசம்பர் 1

முதல்வரவர்கள் இந்தத் திட்டத்தை தன்னுடைய பிறந்த நாளில் கொண்டு வந்து, அதை இன்று சட்டமாக ஆக்குகின்ற இந்த மசோதாவை நிச்சயமாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

முதலமைச்சர் பிறந்த நாள் விழாக்களில் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம், கண்ணொளி வழங்கும் திட்டம் என்று பல்வேறு திட்டங்களை ஒவ்வொரு ஆண்டும் புதுமையாகச் செய்தாலும் அதிலே இந்தத் திட்டம் தலையாயது என்றே நான் கருதுகிறேன். அதற்குக் காரணம் என்னவென்றால், திரு. ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள், செய்கிற தொழிலிலே பெரியதென்றும், சிறியதென்றும் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் காந்தியடிகள் ஒருமுறை வருத்தப்பட்டு எழுதினார், நான் நீக்ரோக்கள் அடிமைப்பட்டிருப்பதை வெறுக்கிறேன், அதேபோல் இந்தியர்கள் வெள்ளைக்காரர்களுக்கு அடிமைப்பட்டிருப்பதையும் வெறுக்கிறேன், ஆனால் அதையெல்லாம்விட நான் எதிர்ப்பது ஒரு மனிதனை உட்கார வைத்து இன்னொரு மனிதன் இழுக்கிறானே அதை நான் மிகவும் கேவலமாகக் கருதுகிறேன் என்று கூறியிருக்கிறார். காந்தியடிகள் நல்லவர், சொல்லிவிட்டுப் போனார். ஆனால் இதுவரையில் அவரது வாரிசுகள் இந்தத் திட்டத்திற்குக் கை கொடுக்கவில்லை. ஆனால் காந்தியடிகளின் வாரிசாக பேரறிஞர் அண்ணா அவர்கள் திகழ்ந்தார்கள், அவருடைய வாரிசான டாக்டர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு இந்தத் திட்டத்தைத் தமிழகத்திலே செயல்படுத்துவதை நாம் அனைவரும் பாராட்டியே ஆகவேண்டும்.

இதிலே கை ரிக்‌ஷாக்களுக்குப் பதிலாக சைக்கிள் ரிக்‌ஷாக்கள் தருவதால் அதை ஓட்டுபவர்களுக்கு இரண்டு வகைகளிலே லாபமாக இருக்கிறது. ஒன்று, கை ரிக்‌ஷாக்களில் உட்கார வைத்துவிட்டு அதிலே உட்கார்ந்திருக்கும் மனிதன் இழுப்பவனைப் பார்த்து 'ஹை ஹை' என்று குதிரையை ஓட்டுவதைப்போல சொல்லி, வேகமாகப் போடா, நேரமாகிறது என்று மிருகத்திடம் சொல்வதைப் போல சொல்லுகின்ற அந்த நிலைமையை மாற்றி இன்றைக்கு சைக்கிள் ரிக்‌ஷாவிலே ஒருவரையோ, இரண்டு பேர்களையோ உட்கார வைத்து, பெல்லை அடித்துக்கொண்டே வேகமாகப் போவதால் சுலபமாகவும் இழுக்க முடியும், அதேநேரத்தில் வேகமாகப் போவதால் இன்னொரு



1973 டிசம்பர் 1] [திரு. துரைமுருகன்]

இடத்திற்குப் போய் வருமானத்தையும் பெருக்கிக்கொள்ள முடியும். எனவே சுயமரியாதைக்குப் பங்கம் இல்லாமல் பார்த்துக் கொள்ளலாம். ஆகவே இந்த நல்ல திட்டத்தை நாம் வரவேற்றுத் தான் ஆக வேண்டும்.

இங்கே சொன்னார்கள். இன்றைக்குச் சைக்கிள் ரிக்‌ஷாக்களைக் கொடுப்பதால் மற்றவர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் வந்துவிடுமோ என்று அச்சப்படுவதாக கனம் அங்கத்தினர் திரு. மாரிமுத்து அவர்களும், நம் அருமை நண்பர் திரு. ஜேம்ஸ் அவர்களும் தெரிவித்தார்கள். நான் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன், இந்த கை ரிக்‌ஷாக்களை யார் யார் வைத்திருக்கிறார்களோ அவர்களுக்கு சைக்கிள் ரிக்‌ஷாக்களை இனாமாகக் கொடுத்திருக்கிறோம். வேறு யாராவது கை ரிக்‌ஷா வைத்திருந்தால் அதைச் சர்க்காரிடத்திலே ஒப்படைத்தால் அவர்களுக்கு 200 ரூபாய் தருகிறோம். ஆகவே அந்தப் பிரச்னை எழவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் வந்துவிடுமோ என்று கூறினார்கள். கை ரிக்‌ஷா இழுத்தவர்கள் சைக்கிள் ரிக்‌ஷாக்களை ஓட்டுகிறார்கள். ஆகவே, வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பிரச்னை அங்கே எழுவதற்கு நியாயம் இல்லை. ஆனால் இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்தவரையில் வேலையில்லாத் திண்டாட்டம் என்பது ஒரு பூதாகாரமான பிரச்னையாக இருக்கிறது. அதிலே படித்தவர்களிலேயிருந்து பாமரர்கள் வரையிலும் அனைவரும் இருக்கிறார்கள். ஆகவே, இந்தியத் துணைக் கண்டத்தில் நிரந்தரமாக வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு மத்திய அரசு ஆவன செய்ய வேண்டும். அதற்கிடையில் நம்மாலான காரியத்தை நாம் செய்வோம். அந்த நாட்டு மக்களுக்கு எடுப்புடைத்தாக இருக்கட்டும் என்ற அடிப்படையில் இக்கையை நல்ல திட்டங்களை தமிழக அரசு கொண்டு வந்திருக்கிறது.

சமீபத்தில் டாக்டர் கலைஞர் அவர்கள் காஞ்சீபுரத்தில் கை ரிக்‌ஷாக்களுக்குப் பதில் சைக்கிள் ரிக்‌ஷாக்கள் வழங்கும் விழா ஒன்றில் பேசும்போது கூறினார்கள். பொருளாதாரக் கண்ணோட்டத்தோடு மட்டும் இதைப் பார்க்கக்கூடாது. மனிதனை மனிதன் இழுக்கிற அந்த அவமரியாதை நமக்கு விடப்பட்ட, சுயமரியாதைக்கு விடப்பட்ட சவால். இந்தச் சர்க்காரும், இந்தத்

[திரு. கே. ஏ. வகாப்] [1973 டிசம்பர் 1

போட்டுத் தள்ளிச் செல்லும் நிலைமை இருக்கிறது. இதைப் போக்க ஸ்தல ஸ்தாபனங்களும், அரசும் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். புரட்சிகரமான திட்டங்களைத் தீட்டிச் செயல்பட்டு வருகின்ற நம்முடைய அரசாங்கமும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நகரசுத்தித் தொழிலாளர்களின் அவல நிலையை நினைந்து அந்தக் கேடுகளை எல்லாம் போக்க முன்வரவேண்டும். அதற்கெல்லாம் முன்மாதிரியாக கைரிக்ஷா இழுப்பதைத் தடுக்கும் திட்டத்தைக் கொண்டு வந்து அதற்குப் பதிலாக சைக்கிள் ரிக்ஷா கொடுக்கும் திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதற்காக வரவேற்று, அமர்கிறேன்.

**திரு. என். கணபதி :** தலைவர் அவர்களே, புரட்சிகரமான ஒரு திட்டத்தை நிறைவேற்ற, அதைச் சட்டத்தின் மூலம் அமலாக்க சட்ட மன்றத்தின் ஒப்புதலைப் பெற வந்திருக்கிற மசோதாவை ஆதரித்து என்னுடைய ஓரிரு கருத்துக்களை அவையின்முன் வைக்க விரும்புகிறேன்.

நம்முடைய அரசியலமைப்புச் சட்டப்படி 1950 ஜனவரி மாதம் 26-ம் தேதி இந்திய நாட்டு மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து நாம் எல்லோரும் சமமானவர்கள், சகோதரப்பான்மை மிக்கவர்கள், பாசம் மிக்கவர்கள், ஒன்றுபட்டு முன்னேற வேண்டுமென்ற அந்த அடிப்படையான அரசியலமைப்புச் சட்டத்தை ஏறக்குறைய 23 ஆண்டுகளுக்கு முன்னால் நமக்கு நாமே கொடுத்துக் கொண்டோம். 23 ஆண்டுகளுக்கு முன்னால் கொடுத்துக் கொண்டோமே தவிர. அதை நிறைவேற்றுகிற தன்மை, பாங்கு, எண்ணம் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்குத்தான் வந்திருக்கிறதே தவிர, காந்தியடிகளின் வாரிசு என்று தங்களைத் தாங்களே போற்றிக் கொண்ட, இந்திய சுதந்திர வரலாற்றில் எங்களுடைய பெயர்கள் எல்லாம் பொன்னெழுத்தில் பொறிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லிக்கொள்ளக்கூடிய அத்தனை பேருக்கும் இந்தப் பேறு கிடைக்கவில்லை. அதற்கு மாறாக இந்திய சுதந்திரத்திற்கு எதிரி என்று யார் யார் கொள்ளப்பட்டார்களோ அவர்கள்தான் காந்தியடிகள் ஏழைகளுக்காகச் சொன்ன திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள். அந்த அடிப்படையில் தான் இன்றையதினம் கைரிக்ஷாக்கள் ஒழிக்கப்பட வேண்டு



1973 டிசம்பர் 1] [திரு. என். கணபதி]

மென்ற சட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது. அதைப் பாராட்டுகிறேன்.

இதே நேரத்தில் இன்னொரு பிரச்சினையையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தா னிடை.

என்ற வள்ளுவர் வாக்கு நமக்கெல்லாம் ஞாபகம் இருக்கிறது. ஜேம்ஸ் அவர்கள் பேசுகின்றபோது வேலையில்லாத் திண்டாட்டம் வந்துவிடும், உட்கார்ந்து கொண்டு போகிறவனை ரிக்ஷாவில் வைத்து இழுக்கிறார்கள் என்ற வகையில் அவர்களுடைய தர்மத்தின் பாதை இதுதான் என்ற வகையில் உபதேசம் செய்து கொண்டிருந்தார்கள். அரசியலமைப்புச் சட்டப்படி எந்தத் தொழிலையும் செய்யலாம் என்று சொன்னார்கள். அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எந்தத் தொழிலாக இருந்தாலும் பொய் சொல்லாமல், திருடாமல், நியாயமான முறையில் மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டுச் செய்தால் எதுவும் நல்ல தொழில்தான். அதே நேரத்தில் மற்றவர்கள் கேவலமாக நினைக்கக்கூடிய தொழிலாக இருக்கக்கூடாது என்று எண்ணத்தில்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ரிக்ஷா இழுப்பவர்கள் உடல் உழைப்புச் செய்கிறார்கள்; ரத்தத்தை வியர்வையாகக் கொட்டுகிறார்கள்; ஆளைச் சுமந்து கொண்டு சென்று இறக்கிவிட்டு கூலியைப் பெற்று தங்களுடைய வயிற்றைக் கழுவிக் கொள்ளுகிறார்கள் என்று தத்துவ வேதாந்தம் எல்லாம் பேசினார்கள். இந்தத் தத்துவம் எல்லாம் ஒரு சிலருக்குத்தான் புரியுமே தவிர, நாட்டில் இருக்கக்கூடிய மக்கள் அத்தனை பேருக்கும் புரிகிற தத்துவமாக இருக்க முடியாது. இந்தத் திட்டத்தை அவர்கள் ஆதரிக்கவில்லை என்றாலும் எதிர்ப்பு தெரிவிக்காததற்காக நான் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். பல்வேறு மூடப் பழக்கவழக்கங்களை ஒழிக்க வேண்டுமென்ற அடிப்படையில் அரசு இயங்கி வருகிற நிலைமையில் நம்முடைய மடாதிபதிகளில் பலர் சமயக் கட்டளை என்ற வகையில் பல்லக்கிலே ஏறி ஊர்வலமாகப்

போகிறார்கள். அது வீதிவலம் என்று சொல்லப்படுகிறது. அப்படி மனிதனை மனிதன் சுமக்கக்கூடிய இழிவான நிலைமையை இன்றைக்கும் பார்க்கக்கூடிய நிலைமையில் இருக்கிறோம். அதை ஒழிக்கக்கூடிய வகையில் அரசாங்கம் முற்போக்கான திட்டங்களை நிறைவேற்றி பரிகாரம் தேட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கைவண்டிப் பிரச்சினை பற்றிச் சொன்னார்கள். மனிதனை வைத்துக்கொண்டு சுமக்கக்கூடாது என்று சொல்லும்போது எப்படி பொருள்களை வைத்துக் கொண்டு சுமந்து கொண்டு போகலாம் என்ற கேள்வி நியாயத்தின் அடிப்படையில் எழுந்தது. அதற்கும் பரிகாரத்தைத் தேடித் தரவேண்டுமென்ற கேட்டுக் கொள்ளும் அதே சமயத்தில் இத்தகைய புரட்சிகரமான திட்டங்களை தன்னுடைய பிறந்த நாள் விழாக்களில் அறிவிக்கின்ற நிலையில் அதற்கு அரசாங்கத்தின் பணம் அல்லாமல் பொதுமக்கள் ஆதரவைத் திரட்டி நிறைவேற்றுவதோடு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படாமல் மாற்றுத் தொழில் கொடுக்கும் வகையில் சைக்கிள் ரிக்ஷா கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தையும் உருவாக்கிய மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

திரு. ஜேம்ஸ் அவர்களுக்கு ஒன்றை மட்டும் சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். இப்போது ஆளும் காங்கிரஸ் கட்சியோடு சேரக் கூடிய அறிகுறிகள் அவர்கள் கட்சியில் தோன்றியிருக்கிறது. எனவே மத்திய அரசு ஆளும் கட்சியோடு சேர்ந்து அவர்கள் விரைவில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கான நல்ல பரிகாரத்தை ஜேம்ஸ் அவர்கள் காண வேண்டுமென்று கேட்டுக் கொண்டு நான் என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் இந்த மசோதாவை எதிர்க்கவில்லை. நான் கூறியதெல்லாம் ஸ்டேட்மென்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் ஆன்ட் ரீசன்ஸில் இந்தத் தொழில் இழிவானது என்று கூறியிருப்பது, நம் நாட்டில் இப்போதுள்ள வேலையில்லாத் திண்டாட்ட நெருக்கடியில் எந்தத் தொழிலையும் நாம் இழிவானது என்று சொல்லக்கூடிய நிலைமையில் இல்லை என்பதைமட்டும்தான் நான் கூறினேன்.



திரு. பி. பொன்சொக்கலிங்கம் : தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவை வரவேற்கிற வகையில் நான் என் கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மனிதனை மனிதன் இழுக்கக் கூடாது. மனிதனை மனிதன் ஏன் தொட மறுக்கிறான் என்ற கேள்வியை எழுப்பி பேரறிஞர் அண்ணா அவர்கள் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் தமிழக மக்களிடத்தில் மிக அழகாக எடுத்துச்சொன்னார்கள். அத்தகைய கொடுமைகளைப் போக்கவேண்டுமென்று சொன்னார்கள். அத்தகைய கொடுமைகளைப் போக்குகின்ற வகையில் இத்திட்டத்தின்கீழ் இப்படி நல்லதொரு சட்டத்தை உருவாக்கி மனிதனை மனிதன் இழுக்கக் கூடாது என்றதொரு சட்டத்தை நான் மனமாரப் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சமுதாயத்தில் உள்ள அடித்தளத்திலுள்ள மக்கள் சன்மார்க்க ரீதியில் வாழவேண்டும் என்று இராமலிங்க அடிகள் கூறினார்கள். அப்படிப்பட்ட நல்லதொரு திட்டத்திற்கு நாட்டில் உள்ளபடியே பெருவாரியான ஆதரவு இருக்கிறது என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலும் நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவின்போது நல்லதொரு திட்டத்தை உருவாக்கி அதை அரசின் மூலம் சட்டவடிவமாகக் கொண்டுவருவதைப் பார்த்து உள்ளபடியே சிலர் பாராட்ட முன்வராமல் அந்த ரிக்ஷாக்களில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தையும், கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தையும் போட்டிருக்கிறார்களே என்ற வருத்தத்தை இங்கு சொன்னார்கள்.

இப்போது பெட்ரோல் விலை அதிகமாகியிருக்கிற இந்த நேரத்தில் கை ரிக்ஷாக்களை விட்டுவிட்டு சைக்கிள் ரிக்ஷாக்கள் வைத்திருக்கும் தொழிலாளர்களுக்கு அதிக வருவாய் இப்போது கிடைக்கிறது. சைக்கிள் ரிக்ஷாக்கள் வைத்திருக்கும் தொழிலாள நண்பர்கள் இந்த நல்ல காரியத்தைப் பாராட்டுகிறார்கள். ஆனால் அப்படி பாராட்ட மனம் இல்லாதவர்கள் உள்ளபடியே அதில் படம் இருப்பதைப் பார்த்து குறைபட்டுக்கொள்கிறார்கள். மகாத்மா காந்தி அடிகள் சொன்னார்கள். சொல்வது என்பது சுலபம், ஆனால் சொன்னதை சொன்னபடி நடப்பவர்கள் உலகத்தில் சொற்பம் என்று சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள்

வழிவந்த கலைஞர் அவர்கள் நினைத்ததை, உள்ளபடியே ஏழை மக்களுக்கு நல்லதொரு காரியத்தைச் செய்திருக்கிறார்கள். அதை தமிழகத்திலுள்ள ஏழை எளிய மக்கள், அடித்தளத்தில் இருக்கக் கூடிய மக்கள் அத்தனை பேர்களும் பாராட்டுகிறார்கள். இந்தத் திட்டத்தை, இந்தச் சட்டத்தை நான் வரவேற்று என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. அ. தேவேந்திரன் :** தலைவர் அவர்களே, இந்த கை ரிக்ஷாக்களை ஒழிக்கக் கூடிய இந்தத் திருத்த மசோதாவின் மீது நான் பேசுகிற வாய்ப்பு பெற்றமைக்கு எனது மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழக மக்கள் எல்லாம் பாராட்டத் தக்க வகையில் ஒரு பெரிய புரட்சிகரமான சட்டத்தை தமிழக அமைச்சரவை இன்று சட்டமன்றத்தில் அறிமுகம் செய்து வைத்திருக்கிறது. முன்பொரு நேரத்தில் கனகவிஜயன் தலையில் கல்லை வைத்து கரிகால் பெருவளத்தான் கொண்டுவந்ததாக, வட புலத்தில் உள்ளவர்களைச் சுமக்கச் செய்து தமிழகத்திற்குக் கொண்டு வந்ததாக சரித்திரம் சொல்கிறது. ஆனால் அந்தச் சரித்திரம் எல்லாம் மாற்றப்பட்டு மனிதனை மனிதன் இழுக்கிற ஒரு அவலச் சூழ்நிலை உருவாகியதை தமிழ்நாட்டில் பார்த்தோம். ஆனால் கரிகால் பெருவளத்தானுக்குப் பிறகு கருணாநிதி சோழன் இந்நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர் அவரது பிறந்த நாளில் கை ரிக்ஷாக்கள் ஒழிக்கப்பட்டு, மனிதனை மனிதன் இழுக்கும் அவலநிலை போய் கை ரிக்ஷாக்கள் சைக்கிள் ரிக்ஷாக்களாக மாற்றப்பட்டிருக்கும் காட்சியை நாம் இன்று பார்க்கிறோம்.

ஒரு காலத்தில் நான்தான் ரிக்ஷாக்காரன் என்று சொல்லிக் கொண்டிருந்தவர்கள் எல்லாம், அவர்கள் எல்லாம் வருமானத்திற்காகச் செய்தார்களே தவிர எடுத்த எடுப்பில் யாராவது ஆயிரம் ரூபாய் கொடுத்ததாக நாம் எண்ணிப் பார்த்தால் கூடத் தெரியவில்லை. இப்படிப்பட்ட நல்லதொரு காரியத்தைச் செய்திருக்கிற இந்த அரசை நான் உள்ளபடியே பாராட்டுகிறேன்.

இன்னும் ஒரு ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னால் தமிழக சரித்திரத்தைப் பார்க்கிற நம் சந்ததியினர், நம் பேரன்மார்கள், அடேயப்பா, இப்படியா மனிதனை மனிதன் இழுத்தான் என்ற





ஆச்சரியக்குறியோடு பார்க்கிற சூழ்நிலை உண்டாகும் என்று சொன்னால் அது உள்ளபடியே ஆச்சரியப்படக்கூடிய விஷயமல்ல. ஒரு காலத்தில் நாம் சரித்திரத்தைப் புரட்டிப் பார்க்கிறபோது ஒரு சிங்கத்தோடு மனிதன் சண்டை போட்டான் என்றும் அந்தச் சிங்கம் அவனைக் கடித்துக்கொன்றது அல்லது அந்தச் சிங்கத்தை அவன் கொன்றான் என்றெல்லாம் பார்த்து பரவசப்பட்ட மகாராஜாக்கள் எல்லாம் வாழ்ந்தார்கள் என்ற சரித்திரத்தைப் படிக்கிறோம். இரண்டு மனிதர்கள் ஆயுதபாணிகளாக மாறி ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு யார் சாகிறார்கள் என்று பார்த்துவந்த காட்சிகள் எல்லாம் சரித்திரத்தில் உள்ளன. வரலாற்றில் உள்ளன. இப்படியெல்லாம் நிலைமைகள் இருந்ததைப் போன்று நம் சந்ததியினர் தமிழக வரலாற்றைப் படிக்கிறபோது தமிழகத்தில் கூட மனிதனை மனிதன் இழுத்துக்கொண்டிருந்ததைப் பார்த்தீர்களா என்று ஆச்சரியப்படக்கூடிய அளவிற்கு இருக்கும் என்று சொன்னால் அது மிகையாகாது.

சென்னை காவல் துறை கமிஷனர் அவர்கள் இரண்டு மாதங்களுக்கு முன்னால் ஒரு அறிக்கை விட்டிருந்தார்கள், கை ரிக்ஷாக்களை எல்லாம் அடித்து நொறுக்கித் தள்ளிவிடுவோம், அவற்றைப் பயன்படுத்தமாட்டோம் என்று. இந்த நேரத்தில் நான் விடும் வேண்டுகோள் என்னவெனில் தயவுசெய்து அப்படிச் செய்து விடாமல் அவைகளை எல்லாம் எக்ஸிபிஷனில் வைக்கவேண்டும். நமது சந்ததியினர் பார்த்து தமிழகத்தின் பொற்காலத்தில், இந்த நாட்டை கருணாநிதி சோழன் அவர்கள் ஆண்டுகொண்டிருந்த காலத்தில், அந்த ஆட்சிக் காலத்தில், மாண்புமிகு திரு. இராமச்சந்திரன் அவர்கள் போக்குவரத்துத் துறைக்கு அமைச்சராக பொறுப்பேற்றிருந்த காலத்தில் ஆர்பாட்டம் இல்லாமல் ஆற்றல் உள்ளவர்கள் இந்த நாட்டை ஆண்டபோது இப்படிப்பட்ட நல்ல காரியத்தைச் செய்திருக்கிறார்கள் என்பதை நம் சந்ததியினர் பார்த்து தெரிந்துகொள்கிற அளவிற்கு அந்த ரிக்ஷாக்களை எல்லாம் நசுக்கி தூக்கி எறிந்துவிடாது அவற்றை எக்ஸிபிஷனில் வைக்கவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பதில் கேட்டுக் கொள்கிறேன்

[திரு. அ. தேவேந்திரன்] [1973 டிசம்பர் 1

எவ்வளவோ புரட்சிகரமான காரியங்களைச் செய்கிற இந்த அரசு சைலன்ட் ரெவல்யூஷன் என்று சொல்கிற அமைதியான புரட்சியைச் செய்து இந்த கை ரிக்ஷாக்களை ஒழித்துவிட்டு அவற்றிற்குப் பதில் சைக்கிள் ரிக்ஷாக்களை அளித்துள்ள காட்சியைக் காண்கிறோம். அதோடு காப்புத் தொகை ரூ. 200-ம் தரப்பட்டிருக்கிறது. வேறு யாராவது அல்லது மார்வாரிக் காரர்கள் போன்றவர்கள் அல்லது வசதிபடைத்தவர்கள் அவைகளை வாங்கி சமுதாயத்தில் கீழ்மட்டத்தில் இருக்கிறவர்களிடம் விட்டு அதிலிருந்து ஆதாயம் சம்பாதிக்க முடியாத ஒரு நிலையில் நல்லதொரு சட்டத்தை அறிமுகம் செய்திருப்பதை உள்ளபடியே பாராட்டி எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து இவ்வாய்ப்பினை நல்கியமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

THIRU B. VENKATASWAMY : Sir, I would like to offer a few remarks regarding the prohibition of hand-rickshaws, which is contained in this Bill. This Bill is welcome and replacing of hand-rickshaws by cycle-rickshaws is really appreciable. At the same time let us see why hand-rickshaws were existing all these years. It is because of our economic standards and due to poverty. Not only in the city but in villages also, it was there. We must see that they are removed in all places, not only in the city but in villages also. The Hon. Chief Minister has given this as a birth day token.

We must see that economic prosperity of villages is improved and as Gandhiji said unless villages are improved, the Nation will not improve. I hope this Government will improve the economic standard in villages.

Another curious thing is the sight of two people trying to pull hand-cart loaded with articles of 1 to 2 ton weight. Such pulling is harmful to the health of the puller of the cart. Let the Government supply these people with a sturdy bull on loan. That bull can pull the cart.

If they supply bulls, it can drag one or two tonnes in that cart and he will also get more income. He can repay the cost of it within one or two years in easy instalments. So I hope this Ministry will think of supplying bull to these hand-carts. It



1973 டிசம்பர் 1] [Thiru B. Venkataswamy]

is very easy. There are so many corporations set up by the Government. I hope if the Government thinks of doing this also, it can be implemented immediately and Government will not be put to any loss. So, I hope this Ministry will think of doing this............

THIRU K. M. SUBRAMANIAM : There can be a Bull Corporation............

THIRU B. VENKATASWAMY : I hope these hand-carts will be eliminated and bulls supplied to the hand-cart holders. Thank you.

திரு. க. உரோ. எட்மண்ட் : தலைவரவர்களே, இன்றைய தினம் நம்முடைய போக்குவரத்து துறை அமைச்சரால் கொண்டுவரப் பட்டிருக்கின்ற இந்த மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். மனிதனை மனிதன் இழுக்கக் கூடாது என்று நம்முடைய பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் ஏற்கனவே சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய கொள்கையை அமுல்படுத்த வேண்டும் என்பதற்காக நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தை கொண்டுவந்ததற்காக இந்தச் சட்டத்தை நான் வரவேற்றாலும் இதை முழுமையாக வரவேற்கக் கூடிய நிலையிலே நாங்கள் எல்லாம் இல்லை. காரணம், அந்தத் தொழிலாளர்களின் மாற்று வேலைக்கு என்ன மாற்றுவழி செய்திருக்கிறார்கள் என்பது இந்தச் சட்டத்திலே சொல்லப்பட வில்லை.

கை ரிக்ஷா இழுக்கக் கூடாது, மனிதனை மனிதன் இழுக்கக் கூடாது என்ற அவல நிலைமையை நாம் போக்கவேண்டும் என்பதிலே எந்தவித மாறுபட்ட கருத்தும் எங்களுக்குக் கிடையாது. ஆனால், பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேறு வழியில்லாமல் இன்றைய தினம் கை ரிக்ஷாவை இழுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தின் மூலம் அவர்கள் கை ரிக்ஷாவை இழுக்கக் கூடாது என்ற நிலைமையை உருவாக்குவோ மானால் அதற்குப் பிறகு அவர்களுக்கு என்ன மாற்றுத் தொழில் தரப்படும் என்பது பற்றி இந்தச் சட்டத்திலே சொல்லப்படவில்லை.

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1973 டிசம்பர் 1

சமீபத்திலே கை ரிக்‌ஷா தொழிலாளர்களுக்கெல்லாம் சைக்கிள் ரிக்‌ஷா வழங்குவதற்காக நம்முடைய முதலமைச்சர் பிறந்த நாள் விழாவிலே பணம் வசூல் செய்தார்கள். எங்களுக்கு கிடைத்த தகவல்படி, பல இலட்சக்கணக்கான ரூபாய் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அதிலே எவ்வளவு வசூல் ஆனது, என்ன செலவானது, அதிலே யார் யாருக்கு சைக்கிள் ரிக்‌ஷா கொடுத்திருக்கிறார்கள் என்பது பற்றிய எந்தவிதமான தகவலும் நான் வெளியிலேயும் காண முடியவில்லை; இந்தச் சட்டமன்றத்திலே வீற்றிருக்கின்ற உறுப்பினர்கள் பார்வைக்குக்கூட இந்த அவையிலே அவை வைக்கப்படவில்லை. இன்றைக்கு கை ரிக்‌ஷா இழுக்கும் தொழிலாளர்களின் நிலையினை உயர்த்துவதற்கு, இந்தத் தொழிலையே சட்டபூர்வமாக ரத்து செய்துவிட்டு அவர்களுக்கு மாற்றுகாரியமாக சைக்கிள் ரிக்‌ஷா கொடுப்பதை அரசாங்கம் நினைக்குமானால் அதை வரவேற்க முடியாது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

சைக்கிள் ரிக்‌ஷா கொடுப்பது என்பது பாதி இயந்திரத்தின் சக்தியும், பாதி மனிதனின் சக்தியும் வைத்துத்தான். ஆனால்; அங்கேயும் மனிதனை மனிதன் இழுக்கக் கூடிய அவல நிலைக்கு உட்படுத்தப்படுகிறது. ஆகவே, இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதன் மூலம்... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** கார் ஓட்டுவதற்குக் கூட மனிதனுடைய சக்தி பயன்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்களா?

**திரு. க. உரொ. எட்மண்ட்:** கார் ஓட்டுவதிலே முழு சக்தியும் இயந்திரத்தினால்தான் பயன்படுத்தப்படுகிறது. இயந்திரம் கொடுக்கும் சக்தியை மனிதன் 'டைரக்ட்' செய்கிறான் அவ்வளவு தான்; அதை நிறுத்த வேண்டிய இடத்திற்கு நிறுத்துவதற்கு அதற்குரிய மெஷினை அப்ளை செய்கிறான். ஆனால், அங்கே மனிதன் ஏறி வண்டியை இழுக்கிறான்; சைக்கிள் ரிக்‌ஷாவிலே கூட மனிதன் ஏறி அமர்ந்து இரண்டு கால்களாலேயும் பெடலை அழுத்தினால் தான் அது நகருகிறது. ஆனால், காரின் நிலைமை வேறு. ஆகவே, அண்ணாவின் திட்டங்கள் இதிலே நூற்றுக்கு நூறு அமுல்படுத்தப் படவில்லை.



1973 டிசம்பர் 1] [திரு. க. உரொ. எட்மண்ட்]

கை ரிக்‌ஷாத் தொழிலாளர்களுக்கு சைக்கிள் ரிக்‌ஷா கொடுப்பதற்கு பல இலட்சக்கணக்கான ரூபாய்களை வசூல் செய்தார்கள். சிலருக்கு சைக்கிள் ரிக்‌ஷாக்களை கொடுத்திருக்கிறார்கள். பல ஆலை முதலாளிகள் பல இலட்சக்கணக்கான ரூபாய்களை மூலதனமாக போட்டு வேலைகளை ஆரம்பிக்கும்பொழுது, அரசாங்கமும் கடனுதவியாக சில தொகையைக் கொடுத்து அவர்கள் ஆரம்பிக்கிறார்கள். அதைப்போலவே, கை ரிக்‌ஷாத் தொழிலாளர்களுக்கு புதிய சைக்கிள் ரிக்‌ஷா கொடுக்க பல இலட்சக்கணக்கான ரூபாயை வசூல் செய்த இந்த அரசாங்கம், தானும் பல இலட்ச ரூபாய்களை போட்டு ஒரு பெரிய தொழிற்சாலையை அமைத்து அதிலே சைக்கிள் ரிக்‌ஷாத் தொழிலாளர்களுக்கு மட்டும்தான் வேலை, கை ரிக்‌ஷாத் தொழிலாளர்களுக்கு மட்டும்தான் வேலை என்று சொல்லுவீர்களேயானால், அந்தத் தொழிலாளி கௌரவமுள்ள ஒரு வேலையிலே சேருகின்றான் என்றும், அவனுக்கு அதன் மூலம் கூடுதலான வருமானம் கிடைத்திருக்கலாம் என்றும் நான் சொல்லக் கூடும். ஆகவே, மனிதனை மனிதன் இழுக்கக் கூடாது என்ற மனப்பான்மையோடு இந்தச் சட்டத்தை இங்கே கொண்டு வந்ததை நான் வரவேற்றாலும், இதனால் அண்ணாவின் இலட்சியங்களை நிறைவேற்றுவதற்கு முற்றிலும் பயன்படாது என்று வருத்தத்தோடு தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு நா. வீராசாமி: பேரவைத் தலைவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த திருத்த மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் மனிதனை மனிதன் இழுக்கும் கொடுமைக்கு விடுதலை கிடைத்திருப்பதைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். இங்கே பேசிய உறுப்பினர்களிலே சிலர் பணம் வசூலிக்கப்பட்டதே இதிலே, அது எல்லாம் என்னவாயிற்று என்று கேட்டார்கள். முதலமைச்சர் பிறந்தநாளையொட்டி ஒவ்வொரு ஆண்டும் வசூலிக்கப்படுகின்ற நிதிக்கு முறையோடு கணக்குகள் வைக்கப்பட்டு, இந்த சமுதாயத்திலே தாழ்த்தப்பட்டிருக்கின்ற, பின்தங்கியிருக்கின்ற, வாழ்க்கையிலே பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களுக்கெல்லாம்

கண்ணுக்கு ஒளி வழங்கியும், பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு கொடுத்தும், கை ரிக்ஷா வைத்திருப்பவர்களுக்கு சைக்கிள் ரிக்ஷா கொடுத்தும், இப்படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம்.

இந்தக் கணக்குகளை எப்பொழுது வேண்டுமானாலும், யார் வேண்டுமானாலும் பார்த்துக் கொள்ளலாம். சிலர் யார், யாருக்கோ நிதி வசூல் செய்கிறோம் என்று சொல்லி அதற்கு கணக்கை காட்டாமல் இருக்கும்பொழுது ஒரு அரசாங்கம்—ஒரு முதலமைச்சர் நல்ல காரியத்திற்காக திரட்டப்படும் செயலுக்கு இப்படிப்பட்ட மன்றத்திலே மாசு கற்பிக்கப்படுவது உள்ளபடியே வருத்தப்பட வேண்டிய நிகழ்ச்சியாகும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைய தினம் இங்கே பேசுகின்ற நேரத்தில் இவ்வளவு நல்ல திட்டத்தைக் கொண்டு வரும்பொழுது இதைப் பாராட்டுவதற்கு பதிலாக—உள்ளபடியே எல்லோரும் பாராட்டுவார்கள் என்றுதான் எதிர்பார்த்தேன்—இதிலேயும் ஏதாவது குறை காணலாம் என்று நினைத்து நண்பர் திரு. ஜேம்ஸ் கூடச் சொன்னார்கள், அந்த சைக்கிள் ரிக்ஷாவிலே இருக்கிற படம் இருக்கிறதே அந்தப் படத்தைப் பார்த்தால் தற்பொழுதைய முதலமைச்சர் படமும் முன்னாள் முதலமைச்சர் அண்ணா படமும் இருக்கிறது என்று வருத்தப்பட்டார்கள். நம்முடைய முதலமைச்சர் படத்தைப் பார்த்தால் ஏன்தான் அவர்களுக்கு வெறுப்பாக இருக்கிறதோ தெரியவில்லை. அவர்களுடைய படத்தைப் பார்த்ததும் தாங்கொணாத கோபம் அவர்களுக்கு ஏன்தான் வருகிறதோ எனக்குத் தெரியவில்லை. நல்ல காரியம் செய்யும் ஒருவரை நினைத்து, அதன் நினைவு அம்சமாக ஒரு படத்தை ஒருவர் வைப்பது கூடவா பெரிய தவறு என்று நான் அறிய விரும்புகிறேன். ஒன்பது ஆண்டு காலம் முதலமைச்சராக இருந்த காமராஜர் அவர்களுடைய காலத்திலே அவருடைய படம் எங்கேயெல்லாம் போட்டார்கள். அவருடைய படத்தை நாட்டின் பல இடங்களிலே போட்ட பொழுது அதை யாராவது ஆட்சேபித்தார்களா? காமராஜர் ஒரு இடத்திற்குப் - போனார், காமராஜர் வருகிறார் என்று தெரிவிப்பதற்குப் பதிலாக கடவுளே வருகிறார் என்று போஸ்டர்





போட்டார்கள். நான் கூட எப்பொழுது கடவுள் வருகிறார்; கடவுளை நாம் ரொம்ப நாளாக பார்க்க வேண்டுமென்று இருந்தோமே . . .

(குறுக்கீடு.)

**திரு. ஜே. ஜேம்ஸ்:** பாயின்ட் ஆப் ஆர்டர். நமது சட்ட மன்ற விதிமுறைப்படி சட்ட மன்றத்திலே இல்லாத ஒரு நபரைப் பற்றி விவாதிக்கக் கூடாது என்று இருக்கிறது. இதற்கு முன்னாலே அப்படிப்பட்ட தீர்ப்பினை பேரவைத் தலைவர்களே வழங்கியிருக்கிறார்கள். எனவே, நண்பர் திரு. வீராசாமி அவர்கள் காமராஜரைப் பற்றி விரிவாக இவ்வளவு தூரம் பேசுவது சரியா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காமராஜரை தனிப்பட்ட முறையில் அல்லாமல் முதலமைச்சர் என்ற முறையிலேதான் உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** பாயின்ட் ஆப் ஆர்டர். சட்ட மன்றத்திலே இல்லாத ஒரு உறுப்பினர் தன்னை டிபன்ட் பண்ணிக்கொள்ள முடியாத நிலைமையில் இங்கே இல்லாதபொழுது அப்படி அவரைப் பற்றி குறிப்பிடுவது முறையல்ல. அதற்காக ஒரு மரபே இருக்கிறது. ஆகவேதான் காமராஜர் அவர்கள் இந்த அவையிலே இல்லாத பொழுது அவரைப் பற்றி கூறுவது சரியில்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காமராஜரைப் பற்றி தனிப்பட்ட முறையிலே குறிப்பிட்டால் தவறு. அவர் முதலமைச்சர் என்ற முறையிலே செய்த செயல்களைப் பற்றிச் சொல்லுவதில் எந்தத் தவறுமில்லை.

(பிற்பகல் 12.30)

**திரு. நா. வீராசாமி:** நான் பேசும்பொழுதே சொன்னேன். ஒன்பது வருஷமாக முதல் அமைச்சராக இருந்த காமராஜ் என்று தான் சொன்னேன். காங்கிரஸ் கட்சித் தலைவர் காமராஜ் என்று சொல்லவில்லை.

அது மட்டுமல்ல. ஏதோ படம் போட்டுக்கொள்வது பற்றியெல்லாம் பேசப்பட்டது. இதில் ஏதாவது புதுமையா என்று கேட்டால், இல்லை. வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டிருக்கிறது. அந்த வங்கிகளிடமிருந்து கடன் வாங்கி திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் கொடுக்கிறார்கள். அவர் ஒரு மத்திய அமைச்சர். வங்கியிடமிருந்து கடன் வாங்கி சைகிள் ரிக்‌ஷா கொடுக்கிறார். சைகிள் ரிக்‌ஷாவிற்குப் பின்னால் பார்த்தால் மூவர்ணக் கொடி, பசுவும், கன்றும். இப்படி ஒரு காட்சியை அரசாங்கம் தருகிற சலுகையைப் பெற்றுக்கொண்டு போட்டுக்கொள்கிறார்கள். ஆனால், இங்கே நிலைமை என்னவென்றால் முதல் அமைச்சர் அவர்கள் பிறந்த நாள் விழாவை ஒட்டி மக்களிடமிருந்து வசூலிக்கப்படுகின்ற பொது நிதியிலிருந்து சைகிள் ரிக்‌ஷா வழங்கப்படுகிறது, அரசாங்க நிதியிலிருந்து அல்ல. முதல் அமைச்சர் அவர்களின் பிறந்த நாளை ஒட்டி வசூலிக்கப்படுகிற அந்த நிதியிலிருந்து சைகிள் ரிக்‌ஷா கொடுக்கிறோம். இருந்தாலும் இப்படியெல்லாம் குறை கூறுகிறார்கள். இப்படி எந்தக் குறையை வேண்டுமானாலும் கூறினால் அதைப்பற்றி அரசாங்கம் கவலைப்படவேண்டியதில்லை. யாருக்கு சைகிள் ரிக்‌ஷா கொடுக்கிறோம்? இந்த நாட்டில் கை ரிக்‌ஷா இழுத்துக் கொண்டிருந்தவர்களுக்குக் கொடுக்கிறோம். * ஆனால் . . .

THIRU G. R. EDMUND : Sir, I oppose this . . . .

(Thiru K. M. Subramaniam and Thiru Kovai Chezhiyan also stood up in their seats.)

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** திரு. வீராசாமி அவர்கள் கூறிய * * என்ற தொடர் நீக்கப்படவேண்டும், நீக்கப்படுகிறது.

***மாண்புமிகு திரு. க அன்பழகன் :*** தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கை ரிக்‌ஷா இழுக்கிற ஏழை மக்களுக்கு உதவி செய்வதற்கு சைகிள் ரிக்‌ஷா வழங்கப்படுகிறது. எனவே, வசதியுள்ளவர்களும் அதைக் கேட்பார்கள்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





என்று எதிர்பார்ப்பதும், அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்களும் நிதி வசூலித்து அப்படிக் கொடுப்பார்கள் என்ற கருத்தை உருவாக்குவதும் சரியல்ல. ஆகவே, அதை விட்டுவிடுவது நல்லது.

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** இரண்டு நிமிடங்களுக்குள் முடித்து விடுங்கள்.

***திரு. நா. வீராசாமி :*** முதல் அமைச்சர் பிறந்த நாளை ஒட்டி இந்த நாட்டில் ஏறக்குறைய 1,845 கை ரிக்‌ஷாக்கள் இருந்தன, அந்தக் கை ரிக்‌ஷாக்களுக்குப் பதிலாக அரசாங்கம் சைகிள் ரிக்‌ஷாக்களைக் கொடுத்திருக்கிறது. முதல் அமைச்சர் அவர்கள் பிறந்த நாளை ஒட்டி வசூல் செய்யப்படுகின்ற அந்த நிதியில் மீதியிருக்கிற பணத்திலிருந்து நமது அரசாங்கம் ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். பல எதிர்க் கட்சி உறுப்பினர் சொன்னார்கள். பல பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி இருப்பவர்களுக்கு சைகிள் ரிக்‌ஷா வேண்டுமானால் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் சம்பாதித்துக் கட்டக்கூடிய அளவுக்கு ரூ. 1,000 கடன் கொடுத்து, 1,000 நாட்களில் திருப்பிச் செலுத்தக் கூடிய வகையில் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழாவை ஒட்டி வசூலிக்கப்படுகிற நிதியிலிருந்து உதவும்படியான அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இதை வரவேற்று நான் அமர்கிறேன்.

***திரு. மணலி சி. கந்தசாமி :*** தலைவர் அவர்களே, வாதப் பிரதிவாதம் எந்த அளவுக்கும் இல்லாத ஒரு மசோதா இந்த மசோதா. இதிலே கூட ஒருவருக்கொருவர் குத்திக்கொள்ளக் கூடிய பலவிதமான விஷயங்கள் வருவது அவ்வளவு நல்லது அல்ல. இதிலே இருக்கக்கூடிய விஷயம் எல்லாம் ஏற்கனவே இருக்கிற கை ரிக்‌ஷாவை மாற்றி சைக்கிள் ரிக்‌ஷா வழங்குவது என்று சொல்லக் கூடிய அடிப்படையில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதை மீறுகிறவர்களுக்கு அபராதம் போடுவது அல்லது சிறை தண்டனை கொடுப்பது என்ற அடிப்படையில் இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

எனக்கு இருக்கக்கூடிய சந்தேகம் ஏற்கனவே கை ரிக்‌ஷாக்கள் வைத்திருக்கக் கூடியவர்கள் பூராவும் ரிக்‌ஷா சொந்தக்காரர்கள் என்று சொல்ல முடியாது. பெரும்பாலும் இந்த நாட்டில் எந்தத்

[திரு. மணலி சி. கந்தசாமி] [1973 டிசம்பர் 1

தொழிலை எடுத்துக் கொண்டாலும் வாடகைக்கு விட்டு பிழைக்கக் கூடிய அடிப்படையில் அமைப்பு முறைகள் இருக்கின்றன. இந்த அடிப்படையில் ரிக்ஷா சொந்தக்காரர்களாக இருப்பவர்களுக்கு ரூ. 200 கொடுத்து விடுகிறோம் என்று சொன்னாலும் கூட, உண்மையாகவே ரிக்ஷா சொந்தக்காரர்கள் என்று சொல்லப்படுபவர்கள் ரிக்ஷாவைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு சைகிள் ரிக்ஷாவை வாங்கிக்கொள்பவர்கள் எத்தனை பேர்கள் இருந்திருப்பார்கள் என்று அந்த அளவுக்கு ரொம்ப கவனமாக பார்க்கவேண்டிய விஷயம். நான் இன்னொன்றையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அடிப்படையிலே உண்மையாகவே சைகிள் ரிக்ஷா வைத்துக் கொண்டு பிழைக்கக்கூடியவர்களுக்கு, அவர்கள் ரிக்ஷா இழுத்திருந்தாலும் கூட அவருக்கு அநேகமாக ஒரு முதலாளி இருப்பார், அவர் 5 கை ரிக்ஷாக்களை வாடகைக்கு விட்டுக்கொண்டிருப்பார். அவர் கை ரிக்ஷாக்களைக் கொடுக்க மறுக்கிறார் என்றால், அவர்களுடைய கதி என்ன ஆகும், அவர்களுக்கு எப்படி சைகிள் ரிக்ஷா கிடைக்கும் என்று சொல்லக்கூடிய விதத்தில் விளக்கம் தர வேண்டும்.

ஆகவே, நான் கூறிக் கொள்கிறேன், ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்கள் அத்தனை பேர்களுக்கும் படிப்படியாக மனித உழைப்பை குறைக்கக்கூடிய விதத்தில் சைக்கிள் ரிக்ஷா வழங்கக்கூடிய விதத்தில் இந்த மசோதாவில் இடம் அளிக்க வேண்டும். இந்தத் திருத்தம் அந்த விதத்தில் இருக்க வேண்டும், இல்லாவிட்டால் கொண்டுவர வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

இன்றைக்கு மனிதன் என்ன நினைக்கிறான் என்றால், கூடுமான வரையில் உடல் உழைப்பைக் குறைத்து எவ்வளவு அதிகப்படியான பலன் பெற முடியும் என்பதுதான். ஆடோமேஷன் என்று சொல்லக்கூடிய முறையில் வேலையைத் துரிதமாகச் செய்து நிறைய பலனை அனுபவிக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய சகாப்தத்தில் நாம் இருந்துகொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் பார்த்தால் இது ஆரம்ப கட்டமே தவிர, இதை ஆரம்பம் செய்திருப்பதை வரவேற்க வேண்டுமே தவிர, பல இடங்களில் இன்னும் செய்ய வேண்டியவைகள் ஏராளமாக இருக்கின்றன.



1973 டிசம்பர் 1] [திரு. மணலி சி. கந்தசாமி]

கைத்தறியை எடுத்துக்கொண்டால் காலையிலிருந்து மாலை வரையில் ஒரு புடவை நெய்வதற்கோ அல்லது ஒரு வேஷ்டி நெய்வதற்கோ பகல் பூராவும் காலையும், கையையும் போட்டு அடித்துக் கொண்டு வேலை செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்த நிலைமையை மாற்றி விசைத் தறியை அமுலுக்குக் கொண்டு வருவதற்குக் கூட எதிர்ப்பு இருக்கிறது. அது வரவேற்கத்தக்கது அல்ல. ஆடோமேஷன் என்று சொல்லக்கூடிய விதத்தில், சைகிள் ரிக்ஷாவை ஓட்டுவதைப் பார்த்தால் பரிதாபகரமாக இருக்கிறது. அதுவும் இரண்டு பேர்கள் முரடான ஆள் ஏறிக்கொண்டுவிட்டால் சைகிள் ரிக்ஷாவை மிதிப்பதைப் பார்ப்பதற்கு உள்ளபடியே வேதனையாக இருக்கிறது, அதில் ஏறிப் போகிறவர்களுக்கே அதைப் பார்ப்பதற்கு பரிதாபகரமாக இருக்கிறது. ஓரளவுக்கு "ஆடோ சைகிள்ஸ்" என்ற முறையில் ஏதாவது இயந்திரத்தை ஃபிட் செய்து, மனிதன் சுலபமாக செலுத்திக்கொண்டு போகக்கூடிய விதத்தில் அதை மாற்றி அமைப்பதற்கு திட்டம் போடவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன்.

கட்டை வண்டிப் பிரச்னை. அவர்கள் கட்டை வண்டி இல்லை என்று தெரிந்தாலும் கூட கட்டை வண்டிகளை வாடகைக்கு எடுத்துக்கொண்டு இழுப்பது மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. 10 கட்டை வண்டிகளை வாடகைக்கு விட்டு, இழுக்கிறவர்களை வைத்து சம்பாதித்து, இழுக்கிறவன் ரூ. 10 சம்பாதித்து, ரூ. 7 சொந்தக்காரருக்குக் கொடுத்துவிட்டு தான் ரூ 3 எடுத்துக் கொள்ளக்கூடிய அவல நிலை இருந்துவருகிறது. இப்படிப்பட்ட தொழிலாளிகளுக்கு கூடுமானவரையில் உடல் உழைப்பு குறையக் கூடிய விதத்தில், நகரத்திற்கு அன்னிய நாட்டுக்காரன் வந்தால் மனிதத் தன்மை மிளிர்கிறது என்று சொல்லக்கூடிய அளவுக்கு கட்டை வண்டிகள் ஒழியவேண்டும். கூடுமானவரையில் சைகிள் ரிக்ஷா கூட இயந்திர ரீதியாக ஓட்டக்கூடிய விதத்தில் சில மாறுபாடுகளைச் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட மாறுபட்ட திட்டத்தைக் கொண்டு வருவதற்கு அதிகக் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது கொண்டு வரக்கூடிய மசோதாவை ஆதரித்து, சட்டமாக நிறைவேற்றுவதோடு மனத் திருப்தி அடைந்துவிடாமல், சென்னை நகருக்கு வருகிற அன்னிய நாட்டவன் சென்னையில்

மகாராஜாக்கள், மாடாதிபதிகள், பெரும் செல்வந்தர்கள்—அவர்கள் எல்லாம்தான் போயிருக்கிறார்கள். சாதாரண மனிதர்களின் வறுமையைப் பயன்படுத்தி, செல்வம் படைத்தவர்கள் பல்லக்கை சுமக்க வைத்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பல்லக்கு சுமந்து, வறுமையில் உழன்றோர் வாழ்க்கை நடத்தி வந்தார்கள். அந்த வகையிலே பல்லக்குத்தான் இரண்டு சக்கரம் உடைய ரிட்சாவாக விஞ்ஞான அடிப்படையில் ஆகிவிட்டதோ என்று தோன்றுகிறது. அதைத்தான் கை ரிட்சாவாக நாம் காணுகிறோம்

ஒரு காலத்திலே சொன்னார்கக்ள். பல்லக்கிலே போவது புண்ணியம், பல்லக்கைத் தூக்கிச் செல்வது பாவம் ; பல்லக்கிலே போகிறவன் புண்ணியம் செய்தவன் ; தூக்கிச் செல்பவன் பாவம் செய்தவன் ; இதெல்லாம் அவரவர்களுடைய பலன்கள் என்று சொல்லுவார்கள். பல்லக்கிலே செல்வது ஒரு காலத்திலே புனிதத் துவமாக இருந்தாலும் கூட, இன்றைக்கு மனிதத்துவத்துக்கு அது ஏற்றதல்ல. அந்த அடிப்படையிலே, டிக்னிட்டி ஆஃப் லேபர் என்ற அடிப்படையிலே அது பொருந்தி வராது ; தொழில் என்ற வரையறைக்குள் வராது, வரக்கூடாது என்ற அடிப்படையில்தான் இந்த கை ரிட்சா ஒழிப்புக்கு முன்னுரிமை கொடுக்கப் பட்டிருக்கிறது.

வழக்கறிஞர்கள் இதுபற்றி சில பிரச்சனைகளை எழுப்பியதால் அவர்களுக்கு அரசியல் சட்டத்திலிருந்தே சில மேற்கோள்களைக் காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அரசியல் சட்டத்திலே 'ப்ரியாம்பிளில்' சொல்லியிருக்கிறார்கள்.

Equality of status and of liberty and to promote among them fraternity, assuring the dignity of the individual

என்று. சம அந்தஸ்து, சம வாய்ப்பு, தனி மனிதனை மதிக்கும் சகோதரத்துவம், அனைத்து மக்களிடமும் விளங்கிட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப்போல மனிதன் ஈடுபடுகின்ற தொழில் எப்படி இருக்க வேண்டுமென்றும் அரசியல் சட்டத்தில் 'டிரக்டிவ் பிரின்சிப்பிளில்' சொல்லி இருக்கிறார்கள்.

In the Directive Principles, it is said :

The State shall make provision for securing just and humane conditions of work.





மனிதத் தன்மைக்கு இயல்பாகவே அமைந்திருக்கின்ற தொழில்களில்தான் மனித சமுதாயத்தை ஈடுபடுத்த வேண்டுமென்று இந்திய அரசியல் சட்டத்திலே சொல்லியிருக்கிறார்கள்.

இங்கே இரண்டு கருத்துக்களைச் சொன்னார்கள். உதாரணமாக, கை ரிட்சாவுக்கு தடைச் சட்டம் கொண்டு வந்தால் வேலையில்லாத நிலை ஏற்பட்டு விடாதா என்று கேட்டார்கள். நான் அதற்கும் ஒரு விளக்கம் தருகிறேன். பொதுவாக இப்போது கை ரிட்சாக்களை பயன்படுத்துவது தமிழ்நாட்டில் சென்னை, செங்கற்பட்டு மாவட்டம், தென்னாற்காடு மாவட்டம் ஆகிய மூன்று இடங்களில்தான். இதர மாவட்டங்களில் இந்த கை ரிட்சாக்கள் நடைமுறையில் இல்லை. இந்த மூன்று மாவட்டங்களிலும் சேர்ந்து மொத்தம் 1,432 கை ரிக்சாக்கள்தான் இருக்கின்றன. அது தவிர, சென்னை மாநகராட்சியில் அங்கே இருக்கின்ற செவிலியர்களின் அவசரத் தேவைக்கு என்று 413 கை ரிட்சாக்கள் வைத்திருக்கிறார்கள். மொத்தமாக இவ்வளவுதான் தமிழ்நாட்டிலே இருக்கின்ற கை ரிட்சாக்கள். இந்தத் தடைச் சட்டம் கொண்டுவருவதன் மூலம் ஏற்கெனவே இருக்கின்றவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என்ற நிலை ஏற்படாது. அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தடைச் சட்டத்தின் மூலம் இனிமேல் இந்த கை ரிட்சாக்கள் நாட்டிலே நடைமுறையில் வரக்கூடாது ; நம்முடைய தலைமுறையோடு இது முடிந்துவிட வேண்டும் ; இதற்கு ஒரு முடிவு கட்டிவிட வேண்டுமென்ற அடிப்படையிலேதான் இந்தத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே கை ரிட்சாக்களை இழுத்துக் கொண்டிருந்த தொழிலாளர்களுக்கு சைக்கிள் ரிட்சாக்கள் வழங்கப்பட்டுவிட்டன. ஜூன் மாதம் 3-ம் தேதி தமிழகத்தின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவிலிருந்து தொடங்கி, செப்டம்பர் 15 பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழா வரையிலான இடைப்பட்ட காலத்திற்குள் கை ரிட்சா வைத்திருந்தவர்களுக்கெல்லாம் இலவசமாக சைக்கிள் ரிட்சா வழங்கப்பட வேண்டுமென்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் திட்டப்படி அனைவருக்கும் இலவசமாக சைக்கிள் ரிட்சாக்கள் வழங்கப்பட்டுவிட்டன.

*[திரு. மணலி சி. கந்தசாமி] [1973 டிசம்பர் 1*

மனிதத் தன்மை மிளிர்கிறது என்று சொல்லக்கூடிய விதத்தில், மிலேச்சத்தனமான மனித உழைப்பைப் பார்க்கக்கூடிய காட்சிகள் இல்லை என்ற அடிப்படையில் நிலைமைகளை மாற்றவேண்டும்.

சாமியை வைத்து பக்தர்கள் தூக்குவதை நாம் ஆட்சேபிக்க முடியாது. ஒரு சோற்றுப் பட்டை, இரண்டு சோற்றுப் பட்டை என்று கொடுத்துவிட்டு ஆட்கள் தூக்குவதை கண்டிக்க வேண்டும். பக்தர்கள் போய் தூக்குவதை நாம் சொல்ல முடியாது. சங்கராச்சாரியாரை சில பக்தர்கள் தூக்கிக்கொண்டு போகிறார்கள் என்றால் அதற்கு ஆட்சேபனை சொல்ல முடியாது. பண்டார சன்னதிகளை தூக்கிக்கொண்டு போவது கிடையாது. ஏனென்றால் அவர்களுக்கு இன்னும் அந்த அளவுக்கு சந்தர்ப்பம் ஏற்படவில்லை. ஆகவே, இதையெல்லாம் யோசித்து படிப்படியாக மனித உழைப்பைக் குறைத்து அதிக பலனை பெறக்கூடிய அளவுக்கு, பரிதாபப்படக் கூடிய விதத்தில் உழைப்புத் தன்மை இல்லாத அளவுக்கு, இந்தச் சட்டம் ஆரம்ப கட்டமாக கருதப்பட்டு, நாளடைவில் நல்ல முறையில் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்று கூறி, இத்தோடு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இந்த மசோதாவை முழு மனதாக வரவேற்றிருக்கிறார்கள். இருந்தாலும் ஒன்றிரண்டு கருத்துக்களை அவர்கள் பேசுகின்றபொழுது எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மேலும் தெளிவினை உருவாக்க வேண்டும் என்கின்ற அடிப்படையிலே அவைகள் அமைந்திருக்கின்றனவே தவிர, எதிர்ப்பினைத் தெரிவிக்க வேண்டும் என்ற அடிப்படையில் அல்ல என்றுதான் கருதுகிறேன். பொதுவாக, கை ரிக்ஷா இழுக்கும் தொழில் என்று கூறுகின்ற பொழுது, அந்தத் தொழிலை இழந்துவிட்டவர்கள் வேறு என்னதான் செய்வார்கள் என்ற வகையில் வழக்கறிஞர் திரு. ஜேம்ஸ் அவர்களும், அதேபோல வழக்கறிஞர் திரு. எட்மண்ட் அவர்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். வறுமையும், வேலையில்லாத் திண்டாட்டமும் பெருகியிருக்கிற இந்தக் காலத்தில், இந்தத் தொழில் கூட ஒரு வேலை வழியான தொழில் என்று கருதப்பட்டால் கூட, டிக்னிடி ஆஃப் லேபர், எந்தத் தொழிலுக்கும் ஒரு மேன்மை உண்டு என்கின்ற



*1973 டிசம்பர் 1] [திரு. ச. இராமச்சந்திரன்]*

அடிப்படையில் அந்தக் கருத்தைக் குறிப்பிட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

Dignity of labour is different from dignity of human beings, ஒரு மனிதத் தன்மையிலே இருக்கிற ஒரு மரியாதைக்கும், ஒரு தொழிலில் வருகிற மரியாதைக்கும் அடிப்படையிலேயே வேறுபாடு உண்டு. நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் லேபர்—தொழில் என்று வரும்போது சில தொழில்கள், தொழில்கள் என்ற இலக்கண வரையறைக்குள் வராது என்பதை நாம் பார்க்க வேண்டும்.

சமுதாயத்திலே சிலர் திருடுகிறார்கள். திருடுவது தொழில் என்ற இலக்கணத்திற்குள் வராது. அதேபோல சமுதாயத்திலே வேறு வழியில்லாமல் பிச்சை எடுக்கிறார்கள். பிச்சை எடுப்பது ஒரு தொழில் என்று சொன்னால் இந்தச் சட்டமன்றம் அதை நிச்சயமாக ஏற்றுக்கொள்ளாது. அதைப் போலவே வறுமையின் காரணமாக விலைமகளிர்களாக மாறுகிறார்கள். அதுவும் ஒரு தொழில் என்று கருதுவோம் ஆனால் சமுதாயத்திற்கு அதைவிட பெரும் கேடு வேறில்லை.

'டிக்னிட்டி ஆஃப் லேபர்' என்று சொல்லும்போது இது ஒரு தொழில் என்ற எல்லைக்கோட்டிற்குள் நிச்சயமாக வராது. ஆகவே, மனிதனை வைத்து மனிதன் இழுப்பது என்பது ஒரு தொழில் அல்ல. அதற்குக் காரணம் அதனுடைய வரலாற்றுப் பின்னணியைப் பார்த்தால் நன்றாகப் புலப்படும். இங்கே நம்முடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த, பெருமைக்குரிய திரு. மாரிமுத்து அவர்கள் பேசும்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். அது இந்த இலக்கணத்திற்குள்ளே வராது என்பதை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர், வழக்கறிஞர் திரு. கணபதி அவர்கள் பேசும்போது,

" அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடை"

என்ற திருக்குறளைச் சுட்டிக் காட்டினார்கள். பல்லக்கு வெகு காலமாகவே இருந்ததுண்டு என்பதை இந்தக் குறளின் மூலம் அறிகிறோம். அந்த பல்லக்கிலே யார் யார் போனார்கள் என்று பார்த்தால்,

[திரு. ச. இராமச்சந்திரன்] [1973 டிசம்பர் 1

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. மணலி அவர்கள் பேசும் போது வேறொரு கருத்தை குறிப்பிட்டார்கள். கை ரிட்சாக்களை வாடகைக்கு விட்டு, தங்களுடைய வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்த கை ரிட்சா சொந்தக்காரர்களின் நிலைமை என்ன ஆகும் என்று கேட்டார்கள். அதைப்பற்றியும் நன்றாக ஆராய்ந்து பார்த்து, அவர்கள் வைத்திருந்த கை ரிட்சாக்கள் ஒவ்வொன்றுக்கும்—அது எந்தத் தன்மையிலே இருந்தாலும், எந்த நிலையிலே இருந்தாலும், உருப்படாத நிலையிலே இருந்தாலும் பரவாயில்லை என்று கருதி—200 ரூபாய் ஈட்டுத் தொகை அவர்களுக்கு தரப்பட்டது. கை ரிட்சாக்களை வைத்திருந்த சொந்தக்காரர்களின் அனுமதியுடனே கை ரிட்சாக்கள் பெறப்பட்டு, அவைகள் எல்லாம் அடித்து நொறுக்கப்பட்டு விட்டன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தேவேந்திரன் அவர்கள் எல்லாவற்றையும் அடித்து நொறுக்கி விட்டீர்களா என்று கேட்கிறார்கள். எல்லாவற்றையும் நொறுக்கிவிட்டால், இந்தக் காரியம் நம்முடைய நாட்டிலே நடந்தது என்று தெரியாமல் போய்விடக் கூடாது என்பதற்காக ஒன்றிரண்டு கை ரிட்சாக்களை பொருட்காட்சியில் அல்ல, கண்காட்சியில்—மியூசியத்தில் பத்திரமாக வைக்கப்பட்டிருக்கின்றன. மற்றவை எல்லாம் அடித்து நொறுக்கப்பட்டுவிட்டன.

கை ரிட்சா சொந்தக்காரர்கள், 1 முதல் 3 வரை கை ரிட்சாக்கள் வைத்திருந்தால் அவர்களுக்கு ஒரு சைக்கிள் ரிட்சா லைசென்ஸ் தரப்பட்டிருக்கிறது. 4 முதல் 8 வரையில் வைத்திருந்தால், அவர்களுக்கு இரண்டு சைக்கிள் ரிட்சா லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. ஆக தொழிலாளர்களுக்கு சைக்கிள் ரிட்சாவும், சொந்தக்காரர்களுக்கு சைக்கிள் ரிட்சா லைசென்சும் வழங்கப்பட்டிருக்கின்றன. சொந்தக்காரர்கள் 200 ரூபாய் பணமும் லைசென்சும் ஏற்கெனவே பெற்றுவிட்டார்கள். ஆகையால் நாம் இப்போது கொண்டு வந்திருக்கின்ற தடைச் சட்டத்தினால் பாதிக்கப்படுபவர்கள் யாரும் இல்லை. "கடிதோச்சி மெல்ல எறிக" என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கொப்ப, தடைச்சட்டம் கொண்டு வருவதற்கு முன்னாலேயே இதனால் யார் யார் பாதிக்கப்படுவார்கள் என்பதை அரசு ஆராய்ந்து அவர்களுக்கு பரிகாரம் காணுகின்ற வகையில் நல்ல முறையில் திட்டமிட்டு, செயல்பட்டிருக்கிறது



1973 டிசம்பர் 1] [திரு. ச. இராமச்சந்திரன்]

என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட நற்பணிகளிலே ஈடுபடுவது இந்த நாட்டிலே நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி ஒன்றுதான் என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, இந்த மாநகராட்சியில் இருக்கிற 413 கை ரிட்சாக்களும் இந்த தடைச் சட்டத்தினால் ஓட்ட முடியாத நிலை ஏற்படுமே என்ற கருத்தையும் சொன்னார்கள். அதற்கும் திட்டம் வைத்திருக்கிறோம். மாநகராட்சியிலே இருக்கிற கை ரிட்சாக்களைப் பெற்றுக்கொண்டு, ரிட்சா ஒன்றுக்கு 200 ரூபாய் நாம் சப்சிடி கொடுத்து, இன்னொரு 200 ரூபாயும் கொடுத்திருக்கிறோம். மாநகராட்சியைப் பொறுத்தவரையில் கை ரிட்சா ஒன்றுக்கு 500 ரூபாய் கடனாகக் கொடுத்து, சுலப தவணைகளில் அதை திரும்பப் பெற ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த கை ரிட்சாக்களைப் பயன்படுத்திக்கொண்டிருந்த மாநகராட்சி ஊழியர்கள் இப்போது சைக்கிள் ரிட்சாக்களைப் பெற்றுவிட்டார்கள். இன்னும் கொஞ்சம் தரவேண்டி இருக்கிறது என்று என்னிடத்திலே சிலர் சொன்னார்கள். அப்படி தரவேண்டியிருந்தால் அவர்கள் அனைவருக்கும் நிச்சயமாக சைக்கிள் ரிட்சா வழங்கப்படும். ஆகவே, இந்தத் தடைச்சட்டம் அமுலுக்கு வரும்போது மாநகராட்சியானாலும் சரி, தமிழ்நாடானாலும் சரி, ஏற்கெனவே நடைமுறைப் பழக்கத்தில் இருந்துவந்த கை ரிட்சாக்கள் அனைத்துக்கும், தொழிலாளர்களுக்கும் பரிகாரம் காணப்பட்டு விட்டன என்பதை நான் தெளிவாக்க விரும்புகிறேன்.

இன்னும் ஒன்றிரண்டு கை ரிட்சாக்களை தங்களுடைய சொந்த உபயோகத்திற்காக ஒருசிலர் வைத்திருந்தாலும்—அவர்கள் யாரும் கை ரிட்சாத் தொழிலாளர்களை வைத்துக்கொள்ளாமல்—தங்களுடைய சொந்த நலன்களுக்காக வைத்திருந்தாலும், அதுவும் நல்லதல்ல என்ற காரணத்தினால் இந்த மன்றத்தின் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்; இந்தச் சட்டத்தின் அடிப்படையை உணர்ந்து தாங்களாகவே கை ரிட்சாக்களைப் புறக்கணித்து, சைக்கிள் ரிட்சாக்களுக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியாருடைய சொந்த உபயோகத்திற்காக இருக்கக்கூடிய வண்டிகளைப்பற்றிச் சொன்னார்கள். அந்த வகையில் கிட்டத்தட்ட 122 வண்டிகள் இருக்கும் என்ற கணக்கைத் தந்திருக்கிறார்கள். இந்தக் கணக்கைக் கூடச் சரியான கணக்கு என்று நான் சொல்லத் தயாராய் இல்லை. ஒரு கை ரிக்ஷாவைக் கொடுத்தால் 200 ரூபாய் கிடைக்கும் என்றால் தானாகவே கூட உற்பத்தியாகிவிடும். சொந்த உபயோகத்திற்காக வைத்துக்கொண்டிருக்கிறவர்களும்கூட மனிதத் தன்மையின் அடிப்படையில் அவர்களும் மறுபரிசிலனை செய்து தங்கள் வண்டிகளை சைக்கிள் ரிக்ஷாவாக மாற்றிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இழுப்பதற்கு ஆள் இருந்தால்தான் கை ரிட்சா பயன்படும். இந்தச் சட்டத்தின் மூலம் கை ரிட்சா இழுப்பதைத் தடை செய்திருக்கிறோம். ஆகவே, சொந்தமாக கை ரிட்சா வைத்திருப்பவர்கள் கூட இந்தச் சட்டத்திற்கு உள்ளே வருவார்கள் என்பதனை நான் இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கை ரிட்சாத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்கத் திரட்டிய நிதியினைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். பொதுவாக இதற்கு அரசாங்கத்தின் நிதியில் இருந்து செலவழிக்கிற நிலை ஏற்பட்டிருக்குமானால் சட்டமன்றத்தின் ஒப்புதலுக்கு வந்திருக்கும். சட்டமன்ற அங்கத்தினர்களின் பார்வைக்கு வந்திருக்கும். அரசாங்கத்திற்கு எத்தகைய செலவும் இல்லாமல், சிரமம் இல்லாமல், இந்த நல்ல பணியினை தானே மேற்கொண்டு, பொறுப்பேற்றுக்கொண்டு, தன்னுடைய பிறந்த நாளில், தன்பால் நல்லெண்ணம் கொண்டோரிடத்தும், நண்பர்களிடத்தும் வேண்டிய நிதியினை வசூலித்து. இந்த நிதியில் இருந்து இலவசமாக சைக்கிள் ரிட்சா தரவேண்டுமென்ற திட்டத்தினை தீட்டிய காரணத்தினால் இது சட்டமன்ற உறுப்பினரின் பார்வைக்கு வந்தாகவேண்டுமென்று இல்லை.

அந்த நிதியைப் பொறுத்த வரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நிதிக் குழுவிற்கும் சம்பந்தம் இல்லை. என் தலைமையில் அந்த நிதிக் குழுவில் நிதி இலாக்கா ஆணைச் செயலரும், உள்துறை இலாக்கா ஆணைச் செயலரும், போலீஸ் கமிஷனரும் இருந்தார்கள். நாங்கள் எந்த நிலையிலும் மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கூடப் பயன்படுத்தக்கூடாது என்ற வகையில் அந்தக்





குழுவின் சார்பில் உத்தரவிடப்பட்டுள்ளது. அதோடு மட்டுமல்ல. எந்தவிதமான குறைபாடும் வந்துவிடக்கூடாதென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் கூடச் சொல்கிறேன். கை ரிட்சாத் தொழிலாளர்களுக்குப் பயன்பட வேண்டுமென்று போக்குவரத்து இலாக்காத் தொழிலாளர்களே பல பேர் தங்கள் ஒருநாள் ஊதியத்தை இந்த நிதிக்குத் தாங்களே முன்வந்து தந்தார்கள் என்பதனை போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் நான் உறுதியாகச் சொல்ல முடியும்.

கை ரிட்சாத் தொழிலாளர்களின் மறுவாழ்வு நிதிக்கு மொத்தம் 25 லட்சத்து 82 ஆயிரத்து 340 ரூபாய் 79 காசு வசூலாயிற்று. இதிலே கை ரிட்சாத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்கிற வகையில் நாம் செலவிட்டிருக்கிற செலவு அனைத்தையும் சேர்த்து 12 லட்சத்து 97 ஆயிரத்து 208 ரூபாயாகிறது. ஆகவே மீதி 12 லட்சத்து 85 ஆயிரத்து 132 ரூபாய் 79 காசு இருக்கிறது. இப்போது இந்த மீதிப் பணத்தை என்ன செய்வது என்கிற நிலைமையில் நாம் இருந்துகொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். மூட்டை சுமந்து செல்கிற அந்தத் தொழிலாளர்களுக்கு ஏதேனும் திட்டம் போடக் கூடாதா? இன்னும் வேலை வாய்ப்பு இல்லாமல் எத்தனையோ பேர்கள் வறுமையில் வாடிக் கொண்டிருக்கிறார்களே, அவர்களுக்காக ஒரு திட்டம் போடக் கூடாதா? அல்லது கழிவுகளை தலையில் சுமந்துகொண்டு செல்கிறவர்களின் மறுவாழ்வுக்காக ஒரு திட்டம் போடக் கூடாதா என்பதாக. இந்த வகையில் சட்டமன்ற உறுப்பினர்கள் அதுவும் குறிப்பாக எதிர்க்கட்சிக்காரர்களின் எண்ணம் போனதற்கு நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படியெல்லாம் எதிர்பார்க்கிறவர்கள்—கருணாநிதியே ராஜினாமாச் செய் என்று சொல்கிறார்களே, அவர்கள் ராஜினாமாச் செய்தால் இப்படிப்பட்ட காரியங்களை எல்லாம் எப்படிச் செய்வது என்று அவர்களைக் கேட்க விரும்புகிறேன். இவர்களுக்கெல்லாம் பாடுபடவேண்டும், நல்லது செய்ய வேண்டுமென்பது எதிர்க்கட்சிக்காரர்கள் எடுத்துச் சொல்லிய பிறகு அல்ல. சைக்கிள் ரிக்ஷா நிதிக்கு கோவையில் நடந்த நிதி வழங்கு விழாவில் சட்டமன்ற உறுப்பினர் திரு. ராஜா தலைமை வகித்தார். நானும் முதலமைச்சரும் கலந்து கொண்டோம். அந்தக் கூட்டத்தில்—இந்திய கம்யூ

[திரு. ச. இராமச்சந்திரன்] [1973 டிசம்பர் 1

னிஸ்ட்டு சட்டமன்ற உறுப்பினர் திரு. அழகர்சாமி சொன்ன கருத்தை—நான் அல்ல—நண்பர் ராஜா அல்ல—கோயம்புத்தூர் நிதி அளிப்பு விழாக் கூட்டத்தில் பேசுகின்றபோது நமது முதல்வர் அவர்கள் இந்தக் கருத்துக்களை எல்லாம் சொன்னார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவர்களுக்கு எல்லாம் நாம் ஏதாவது செய்தாக வேண்டும் நம் காலத்திலேயே என ஆறு, ஏழு மாதங்களுக்கு முன்பே கூட்டத்தில் தெரிவித்தார்கள். சாலை களிலே பளுவைச் சுமந்துகொண்டு, வேதனையுடன் செல்கிறவர் களின் துயரைத் தணிக்க நல்ல திட்டத்தை உருவாக்க வேண்டு மென்று என்னிடத்தில் தனிப்பட்ட முறையில் எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள்.

அதோடு மட்டுமல்ல. வேலை இல்லாதோருக்கு இந்த நிதியின் மூலம் ஏதாவது செய்யலாம் என்று யோசித்து பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் ஆயிரம் நாள் திட்டம் ஒன்றினை அறிவித்திருக்கி றார்கள். வேலையில்லாத காரணத்தினால் இழிதொழிலில் இழுத்துக் கொண்டு போய்விடாதிருக்க—சைக்கிள் ரிட்சாவை அவர்களுக்குத் தருவது, அதைக்கொண்டு அவர்கள் சம்பாதித்து வாழ்க்கை நடத்துவதோடு நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் விதம் ஆயிரம் நாள் கொடுக்க வேண்டும், அப்படிக் கொடுத்தால் சைக்கிள் ரிக்ஷாவின் கிரயமும் வந்துவிடுகிறது என்பதாக ஒரு திட்டம் போட்டு 1,500 பேர்களுக்கு மிச்ச நிதியில் இருந்து ஆயிரம் நாள் திட்ட அடிப் படையில் சைக்கிள் ரிக்ஷா வழங்கப்படும் திட்டம் உருவாகியிருக் கிறது என்பதனை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்கிற திட்டங்களை எல்லாம் முன்கூட்டியே தாமே செய்துதர முன்வருகிற முதல்வர் அவர்களை எதிர்க்கட்சிக் காரர்கள் ராஜினாமாச் செய் என்று சொல்வது நமக்கு நல்லதல்ல. நாட்டுக்கும் நல்லதல்ல என்பதனை அவர்களே எப்போதாவது செயபூர்வமாக உணர்வார்கள் என்பதனை நான் தெரிவித்துக்கொள் கிறேன்.

பெரியவர் மணலி அவர்கள் தூக்குவதற்கு ஆள் இருக்கிற வரை உட்கார்ந்து செல்ல ஆள் கிடைக்காமலா என்று சொன்னார். அப்படிப்பட்ட கோரக்கிருக்கு காலத்தின் கோலம் தான் கொண்டு சென்றது பல்லக்கு இருக்கலாம். மடாதிபதிகள் இருக்கலாம்.



1973 டிசம்பர் 1] [திரு. ச. இராமச்சந்திரன்]

ஆனால் தூக்குவதற்கு ஆள் கிடைக்காத காலத்தை வெகு விரைவி லேயே இந்த அரசு தன்னுடைய திட்டங்களினால் உருவாக்கிவிடும் என்பதனை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர் திரு. ஜேம்ஸ் அவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ நீங்கள் வழங்குகிற சைக்கிள் ரிட்சாக்களில் அண்ணா படமும், கலைஞர் படமும் இருக்கிறதே என்றார்கள். படத்திற்காகத்தானா சைக்கிள் ரிட்சா கொடுப்பது என்பதைக்கூட அவர்கள் தெரிவித்தார்கள்.

(பிற்பகல் 1.00)

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. எட்மண்ட் அவர்கள் பேசுகிறபொழுது, இன்னும் சில இடங்களிலே தரப்படவில்லை யென்ற குறை இருக்கிறது என்று எடுத்துச் சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்கிறேன், அத்தகைய குறைகள் எங்கும் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எட்மண்ட் அவர்கள் இன்னொன்றையும் குறிப்பிட்டார்கள், இந்தத் திட்டம் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய, முழுக்க முழுக்க அவருடைய மனதுக் கேற்ற திட்டமாக இல்லை என்று அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இதிலே இருக்கிற தர்மசங்கடம் என்னவென்றால், பேரறிஞர் அண்ணாவோடு நெருங்கிப் பழகியவர்களே எதிரும் புதிருமாக உட்கார்ந்து கொண்டு, பேரறிஞர் அண்ணா அவர்களைப்பற்றி விமர்சனம் செய்யக்கூடிய வேதனையான நிலைதான்.

நான்கு, ஐந்து தினங்களுக்கு முன்னால், சைக்கிள் ரிட்சா பெற்ற ஒருவர் என்னை வேறொரு காரணமாக சந்தித்தார். நான் அவரைக் கேட்டேன், இப்பொழுது சைக்கிள் ரிட்சா வாங்கியிருக்கிறீர்களே, என்ன உங்கள் வாழ்க்கைத் தரத்திலே ஏதாவது உயர்வு ஏற்பட் டிருக்கிறதா, என்று. அவர் அதற்குக் கூறியதை இந்த மன்றத் திற்குத் தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன். அவர் விழுப்புரத் திற்குப் பக்கத்திலே உள்ள சிற்றூர்க்காரர். 22 வயதிலேயே சென்னைக்கு வந்து விட்டார். கடந்த 23 ஆண்டுகளாக கை ரிட்சா இழுத்து தன்னுடைய வயிற்றை வளர்ப்பவர். இப்பொழுது கலைஞர் கருணாநிதி அவர்களுடைய பொன் விழா ஆண்டுத் திட்டத்தின் மூலமாக, சைக்கிள் ரிக்ஷாவைப் பெற்றிருக்கிறார்கள். நான் அவ

ரோடு பேசிக் கொண்டிருந்தபொழுது, அவர் கூறியது, 'நான் ஏற்கனவே கை ரிட்சா பெறவேண்டுமென்றால், நாளொன்றுக்கு 8 அணா வாடகைக்கு வாங்கவேண்டும். அதில் ரூ. 3, 4 என்ற அளவுக்கு நாளொன்றுக்குக் கிடைக்கும். இன்றையதினம், சைக்கிள் ரிட்சா மூலம் கிட்டத்தட்ட ரூ. 8-லிருந்து ரூ. 10 வரை கிடைக்கிறது'.

இன்னும் என்ன சௌகரியம் என்றால், இந்த பெட்ரோல் விலை எல்லாம் கூடிக்கொண்டிருக்கிற சூழ்நிலையிலே, சைக்கிள் ரிட்சாவுக்கு நல்ல வருவாய் ஏற்பட்டிருக்கிறது என்று அவர்கள் குறிப்பிட்டு, மேலும் ஒரு கருத்தை, அவரே சொன்னார். அதனாலே, அதனை இந்த மன்றத்திற்குச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

வருவாய் பெருகியது மட்டுமல்ல, வாழ்க்கையிலே மலர்ச்சி ஏற்பட்டது மட்டுமல்ல, தனக்கு 3 பெண்களும் ஒரு பிள்ளையும் இருக்கிறார்கள். இந்த சைக்கிள் ரிட்சா கைக்கு வந்தவுடனே, 'இதை வாடகைக்குக் கொடுத்தாலே ரூ. 3, 4 கிடைக்குமென்ற நிலை இருக்கிறது. ஆகவே, அதைப் பயன்படுத்தி, பெண்களைப் படிக்க வைக்க முடியவில்லையென்றாலும், பிள்ளையையாவது படிக்க வைக்கலாம் என்ற ஆசையால் பிள்ளையை பள்ளியில் சேர்த்திருக்கிறேன்' என்று குறிப்பிட்டார்கள். இந்த மாற்றத்தையா பேரறிஞர் அண்ணா அவர்களுடைய மனதிற்கேற்றதல்ல என்று சொல்ல முடியும்? நிச்சயமாக சொல்ல முடியாது. பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கையை புரிந்து கொண்டிருக்கவில்லை அவர்கள்.

தலைவர் அவர்களே, இதே சட்டமன்றத்திலே பேரறிஞர் அண்ணா அவர்கள், 1957-ம் ஆண்டு ஜூலை மாதம் 3-ம் தேதி எதிர்க்கட்சியின் சார்பிலே இருந்து பேசியிருக்கிறார்கள். அந்தக் குறிப்பினை எடுத்துச் சொல்வது, பேரறிஞர் அண்ணா அவர்களைப்பற்றி புரிந்து கொண்டவர்களுக்கும், புரிந்து கொள்ள மறுக்கின்றவர்களுக்கும், புரிந்தும் புரியாமலும் மயக்க நிலையில் இருப்பவர்களுக்கும், அதைப் படித்துக் காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அண்ணா அவர்கள் பேசியது: ஏட்டிலே போடுகின்ற திட்டம் எந்த அளவுக்கு ஒவ்வொரு வீட்டிலும் இதற்கு முன்னாலே இருந்ததைவிட வயிற்றுக்கு ஒரு கவளம் சோறு அதிகமாகியிருக்





கின்றது, தலைக்கு ஒரு உச்சிக் கரண்டி எண்ணெ அதிகமாகியிருக்கின்றது, வாழ்வுக்கு ஒரு வேளை நிம்மதி அதிகமாகியிருக்கின்றது என்பதைப் பார்க்க வேண்டும். நிம்மதி கலந்த புன்னகைதான் ஒரு அரசு எதிர்பார்க்கும் பரிசும் புகழுமாகும். . . .

இதே சட்டமன்றத்திலே பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசியது. ஆனால், நானே நேரிலே விசாரித்து அறிந்தது, ஒரு கவளம் சோறு அதிகமாக இருக்கிறது. தலைக்கு ஒரு கரண்டி எண்ணெ அதிகமாக இருக்கிறது. நிம்மதி கலந்த புன்னகையை நேரிலே பார்க்க முடிந்தது. இதைச் சொன்ன பேரறிஞர் அண்ணா அவர்களுடைய படத்தையும், இதைச் செய்து காட்டிய கலைஞர் அவர்களுடைய படத்தையும் அந்த சைக்கிள் ரிக்ஷாவிலே போடாமல் வேறு எங்கே போடுவது என்பதை புரிய வையுங்கள்.

அது கூட அல்ல, இங்கே இன்னும் கூட ஒன்றைச் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசுகின்றபொழுதும், மன்ற உறுப்பினர்கள் பேசுகின்றபொழுதும் சொன்னார்கள்; மதிப்பிற்குரிய திரு. பாலசுந்தரம் அவர்கள்கூடச் சொன்னார்கள். சமுதாயத்திலே தாழ்த்தப்பட்ட மக்களிடத்திலே இது இன்றைக்கு நல்ல வளர்ச்சியை, ஒழுங்கினை உண்டாக்கியிருக்கிறது என்பதை நாம் கண்கூடாகப் பார்க்கின்றபொழுது, நான், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் சொன்னதைப்போல், கலைஞர் அவர்களை, ஆபிரஹாம் லிங்கன் என்றோ, அல்லது இன்னும் பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டதைப் போல், காந்தியாரின் வாரிசு என்றோ சொல்வதைவிட, நானே பார்த்து, போற்றி, பாராட்டுகின்ற பேரறிஞர் அண்ணா அவர்களுடைய சிறந்த வாரிசாக அவர் இருக்கின்றார் என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டு. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், இப்பொழுது வாரிசுகளாகப் பல பேர் கிளம்பி இருக்கிறார்கள். இந்த விளக்கங்களுக்குப் பிறகு, இந்த சட்ட திருத்தத்தின் மூலம் நல்ல காரியத்தை, மேன்மையான காரியத்தை, மனித குலத்து மேம்பாட்டிற்காக, இதை நாம் செய்கிறோம் என்ற எண்ணத்தோடு, அதை அனைவரும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4, 5 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, "தமிழ் நாடு 1973-ம் ஆண்டு வாடகை வண்டிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/73) நிறை வேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(இ) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, நகர-நாட்டுப்புற அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்றும் பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. அடுத்த பில்லை எடுத்தாகிவிட்டது.

**திரு. துரை கோவிந்தராசன்:** எங்கள் பக்கமே திரும்பு கிறீர்கள். நாங்கள், பாயிண்ட் ஆப் ஆர்டர் என்றால், அதைக் கேட்பதற்கு முன்னாலேயே ஒன்றும் இல்லையென்றால், எப்படித் தான் பேவசுது?





**திரு. க. உரொ. எட்மண்ட்:** பாயிண்ட் ஆப் ஆர்டரை எப்பொழுது வேண்டுமானாலும் எழுப்பலாம். வழக்கமாக எந்த பில் வந்தாலும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசிய பிறகு, சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்து பேசுகிறார்கள். அவர்கள் விளக்கம் கொடுத் தாலும், பேசிய உறுப்பினர்களுக்குச் சந்தேகம் எழுந்தால், அதைக் கேட்பதற்கு 'பிரிசிடென்ட்' இருக்கிறது.
There is a precedent which is followed in the House.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** சட்டத்திற்கு ஏதாவது அமென்ட்மென்ட் கொடுக்கப்பட்டால் அதன்மீது சந்தேகம் கேட்க லாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

**திரு. துரை கோவிந்தராசன்:** கேட்கக் கூட முடியவில்லையே.

8. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/73).

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, "தமிழ் நாடு, 1973-ம் ஆண்டு, நகர-நாட்டுப்புற அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/73) ஆய் வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்" என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் திருத்தச் சட்டத்தைப் பற்றிய விளக்கத்தை நான் ஆங்கிலத்தில் படிப்பதை அவையினர் ஏற்றுக்கொள்வார்கள் என்று எதிர் பார்க்கிறேன். அதிலே உள்ள சட்டத்தைப்பற்றிய சில விளக்கச் சொற்கள் ஆங்கிலத்திலே இருக்கிறபொழுது அவை

* 26—11—1973-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. க. அன்பழகன்] [1973 டிசம்பர் 1

கொடுக்கிற தெளிவை தமிழிலே உள்ள சொற்கள் பழக்கத்திற்கு வராததால் அவற்றைச் சொல்கிறபொழுது, கொடுக்கவில்லை. ஆகவே, ஆங்கிலத்திலேயே படிக்க நான் முன்வருகிறேன்.

Hon. Members are aware of a perspective plan for the orderly development of Madras Metropolitan Area delienated in the "Madras Metropolitan Plan 1971—1991" which envisages the bridging of the gap brought about by the rapid growth of population in the Metropolitan Area by providing the basic economic and social infrastructure in the sectors of roads, communications, housing, water supply and drainage and education.

The huge demands imposed by the compulsions of metropolitan development can be met satisfactorily and fully by an organisation that is both administratively and financially, integrated and viable, so that it could secure the intentions of the "Plan" with ease and efficiency by co-ordinating the work of the various implementing agencies. With this end in view, the Government have constituted an authority called "the Madras Metropolitan Development Authority".

This Authority has been charged, among others, with the function of preparing development plans for the Madras Metropolitan Planning Area as a whole or for part thereof, providing therein for all or any of the matters that may be provided in the development plans contemplated under the Tamil Nadu and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972). Thus, in other words, the Madras Metropolitan Development Authority functions as a Planning authority for the Madras Metropolitan Planning Area on an ad hoc basis.

I may recall in this connection the attention of the Hon'ble Members to the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972) enacted by this Legislature some time ago. The said Act, which has since been brought into force with effect from 15th September 1973 throughout the State except the Madras Metropolitan Area, while providing for planning the development and use of rural and urban land in the State, also, *inter alia* provides for the establishment of (i) regional planning authorities, (ii) local planning authorities and (iii) new town development authorities for the purpose of planning the development of



1973 டிசம்பர் 1] [திரு. க. அன்பழகன்]

regional planning areas, local planning areas and siie for new town respectively, brought under the jurisdiction of the aforesaid planning authorities. Thus, while three statutory authorities have been created for purpose of development and use of lands in the State, the Madras Metropolitan Development Authority, which is meant for similar purpose in so far as the Madras Metropolitan Planning Area is concerned, is functioning on an *ad hoc* basis only. It is considered necessary to provide a statutory footing to the said Madras Metropolitan Development Authority by amending the said Act suitably.

It is also considered desirable to take this opportunity to amend section 5 of the said Act providing for the nomination of Secretary, Public Works Department, dealing with the subject "Public works" as a Member of the Tamil Nadu Town and Country Planning Board and also to amend section 10 of the said Act to provide for proper guide-lines in the matter of declaration of regional planning areas, local planning areas.

Provision to empower the planning authorities to delegate their powers, similar to those relating to 'Government' and 'Director' is proposed to be made. Necessary Official amendment in this regard is being moved to the Bill.

With these words, Sir, I commend the Bill for the consideration of the House.

THIRU J. JAMES: Sir, I move the following amendment standing in my name :—

'That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of . . . . Members to consider the Tamil Nadu Town and Country Planning (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 31 of 1973) and that the following Members of the House be selected to serve on such Joint Select Committee (Names of Members to be furnished later).'

THIRU G. R. EDMUND : Sir, I second the amendment.

திரு என். கே. பழனிசாமி : கனம் சபாநாயகர் அவர்களே இந்தத் திருத்தத்தை நான் ஆதரிக்கவில்லை. இந்த மசோதாவை உடனடியாகச் சட்டமாக ஆக்கவேண்டும். காரணம் வளர்ந்து

[திரு. என். கே. பழனிசாமி] [1973 டிசம்பர் 1

ஏற்கனவே ஒரு டவுன் பிளானிங் கமிட்டி அந்தப் பகுதியிலே ஒரு திட்டம் போட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்றால், அந்தப் பகுதியிலே போர்டுகள் இஷ்டம் போல் அந்தக் கமிட்டி என்ன செய்கிறது என்று தெரியாமல் ஒரு திட்டம் போடுவதற்குப் பதிலாக ஏற்கனவே உள்ள அந்தக் கமிட்டி ஒரு திட்டம் போட்டிருந்தால், அதையும் அனுசரித்தோ அல்லது அந்தப் பிளானையும் வாங்கியோ மேலும் அபிவிருத்தி செய்யக்கூடிய முறையிலேதான் பணியாற்ற வேண்டும்.

மெட்ரோபாலிட்டன் போர்டு ஒரு திட்டம் கொடுக்கிறது என்றால், அதிலே உள்ளவர்கள் எக்ஸ்பர்ட்கள்தான், அதுவும் ஒரு எக்ஸ்பர்ட் பாடிதான், ஒரு திட்டம் சர்க்காரிடம் கொடுத்தால், அது சரியா இல்லையா என்று சர்க்கார் சொல்வதற்கு அதிகாரம் இருக்கக் கூடாது, ஏனென்றால் அது ஒரு ஸ்டேச்சுடரி பாடி, அதற்கு நிபுணத்துவம் இருக்கிறது. அவர்கள் ஒரு திட்டம் சர்க்காரிடம் கொடுத்தால், அதை மறுக்க சர்க்காருக்கு என்ன நிபுணத்துவம் இருக்கிறது? அப்படிக் கொடுத்தால் அதை மாற்று இதை மாற்று என்று எதுவும் சொல்லக்கூடாது. அப்படி பெரிய ப்ளான் என்றால் அது சட்டசபைக்கு வரவேண்டும். அந்த மாதிரி இந்த மசோதாவைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் அரை மணி நேரம் அதிகமாக வைத்து, இரண்டு மணி வரையில் நடத்தி இந்த மசோதாவை முடித்து விடலாமா?

THIRU M. A. LATHEEF: For the 'School Bill' two days are necessary. For Muslim League side, you must allot one hour. The consideration of the present Bill might be extended on Monday. We can have the session extended by one more day, with the consent of the House.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ஏற்கனவே, இந்த பில்களில் 'ஸ்பில் ஓவர்' இருந்தால் திங்கட்கிழமை 'டைம்' வைத்துக் கொண்டு, பிறகு பிரைவேட் மெம்பர்ஸ் பிசினஸை எடுக்கலாம் என்றிருந்தது. ஆனால் ஹெவி பில்லாக இருப்பதால் ஒருநாள் எக்ஸ்டெண்ட் செய்யலாம்.



1973 டிசம்பர் 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** லீடர் ஆஃப் தி ஹவுஸ் இல்லை, எதிர்க்கட்சித் தலைவர் இல்லை. எப்படி முடிவு செய்வது?

**திரு. என். கே. பழனிசாமி:** திங்கட்கிழமை முடிவு செய்யலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இரண்டும் சின்ன பில்கள்தானே. ஹெல்த் மினிஸ்டர் கொண்டு வந்த பில்லில் கொஞ்சம் பேசுவார்கள், அந்த பில்லை சீக்கிரம் முடித்துவிடலாமே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணி வரை வைத்து இந்த பில்லை முடித்துவிடலாமா?

THIRU M. A. LATHEEF: Even if we were to sit till 2 p.m. today, there are certain amendments given notice of for certain clauses and many Members would like to have the clauses discussed. They may have many points of view to express. So we can continue the discussion on Monday.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிற்பகல் வைத்துக் கொள்ளலாமா?

THIRU M. A. LATHEEF: We can have it on Monday.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, பொது விவாதத்தில் பல கருத்துக்கள் தானாகவே தெரிந்துவிடும். இரண்டாவது, ஏற்கெனவே வந்த ஒரு சட்டத்தின் அடிப்படையில் 'மெட்ரோ பாலிட்டனை' ஏற்றுக்கொள்வதுபற்றி ஒரு துணை சட்டமே தவிர இந்தச் சட்டத்தில் புதிதாக கருத்து வைக்கப்படவில்லை. இப்பொழுது இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதால் ஏற்கனவே ஏற்படுத்தியிருக்கும் அமைப்பு, நிர்வாக முறையிலே சட்ட அங்கீகாரம் பெற இருக்கிறது. இதில் சில திருத்தக் கருத்துக்கள் பேசப்படுமானால் நான் சொல்லும் விளக்கங்களுக்குப் பிறகு, மேலும் மாண்புமிகு உறுப்பினர்கள் திருத்தங்களை வற்புறுத்த வேண்டியது அவசியம் என்றால் காலம் நீடிப்பதைபற்றி யோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எப்படி முடிக்கலாம் என்று சொல்கிறீர்கள்?

[1973 டிசம்பர் 1

THIRU B. VENKATASWAMY : We can extend it by Monday.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* பிஸினஸ் அட்வைசரி கமிட்டி முடிவெடுத்தால் நான் தயாராக இருக்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : I welcome the new amendment. It is very necessary particularly because of the anticipated increase in the population and consequent demand for increased amenities for the increased population. But what I find is that the Government have brought forward a new amendment to Clause 4. They want to substitute for the expression "members of the local authority having the largest population" the expression "members of such local authorities". I am opposing this amendment.

The Select Committee had gone into the matter and this has not been suggested. But Government have not brought in this amendment. I oppose it. Madras City has developed in an unplanned way. During 1947 or 48, Corporation of Madras took over the Saidapet municipality and at that time there were 3 town planning schemes like Saidapet A, B and C schemes. But they had all been given up, with the result the West Mambalam area had developed in a most haphazard manner with no planning whatsoever.

I know that this Bill will not come into effect tomorrow. I know it will take time. But those who should have voice in Madras City Metropolitan Development Board must be the people who have got the maximum stake in the development. The original Bill clearly stated that people who have got maximum stake in development and based on population and income, there would be four of them. That was the original thing. But now according to new amendment, Government can appoint "any four of them". That is why I say I oppose it.

If you see the official statistics, it is said that during 1959 to 1973, 10,000 houses had been built. But we know that at least 20,000 and more houses would have been built, many without any plan sanction. What happens is many go to Director of Town Planning and 50 per cent of them get ratified with the result you find this haphazard development.



1973 டிசம்பர் 1] [Thiru K. M. Subramaniam]

Take Usman Road. You will find a number of buildings having been constructed without following any rules of town planning. Afterwards they had been ratified. Take Ranganathan street leading to Mambalam railway station. Firstly it was a building area. Secondly it was turned to shopping area. For shopping area, you must have only a 30 feet wide road. But many buildings had been sanctioned. I can quote two or three recent instances.

(Mr. Speaker sounded the gong)

THIRU K. M. SUBRAMANIAM : With your permission, I want to continue on Monday. I cannot finish my speech within one minute. It is nearing 1-30 p.m. I have studied the Bill and I am vitally affected. I want some more time. I shall continue on Monday.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுற்று 3—12—1973 திங்கட்கிழமை காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.30 மணிக்கு ஒத்தி வைக்கப் பட்டது.

9. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

ஏதுமில்லை.

[திரு. என். கே. பழனிசாமி] [1973 டிசம்பர் 1

வரக்கூடிய ஜனத்தொகை, நெரிசல் இவைகளுக்கு ஏதாவது ஒரு முடிவு கட்டியாக வேண்டும். நகரில் 10, 15 வருஷங்களுக்கு முன்னாலே இருந்தது 15 லட்சம் ஜனத்தொகை என்றால் இன்றைக்குக் கிட்டத்தட்ட 50 லட்சம் ஆகிவிட்டது. அதிலே கிட்டத்தட்ட 40 சதவிகிதத்தினர் இன்றைய தினம் குடிசையிலேதான் வாழக்கூடிய நிலைமை இருக்கிறது. அவர்களுக்குப் போதுமான வசதிகள் கிடையாது, ரோடு வசதிகள் கிடையாது. இப்படி வளர்ந்துவரக் கூடிய சென்னையிலே அதை மிகவும் சுகாதார வசதியுள்ளதாக ஆக்கப் போதுமான ஏற்பாடுகளைச் செய்ய இப்படி ஒரு போர்டு மிகவும் அவசியமானதாகும்.

இதுபோன்ற பஞ்சாப் மாநிலத்திலே சண்டிகார் நகரத்திலே பிரெஞ்சுக்காரர்கள் உதவியுடன் திட்டம் தீட்டி நல்ல முறையிலே அது அமைந்திருக்கிறது. சமீபத்திலே கல்கத்தாவிலே அமெரிக்காவின் உதவியுடன்கூட திட்டம் ஒன்று பரிசீலிக்கப்பட்டு அது அமல் நடத்தப்படுகிறது. அதேமாதிரி நம் மாநிலத்திலேயும், இங்கிருந்து பல நிபுணர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி அவர்களும் இப்படிப்பட்ட திட்டம் எப்படிப் போடுவது என்பதைப் பார்த்துக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அதற்குப் பதிலாக இரண்டு, மூன்று கோணங்களைச் சேர்ந்த எக்ஸ்பர்ட்களைக் கூட்டிவந்து ஒரு மாஸ்டர் பிளான் போடுவதற்கு முயற்சி செய்யவேண்டும். முதலாவது முக்கியம் ஜனத்தொகை, அடுத்ததாக டிரான்ஸ்போர்ட், எலக்ட்ரிக் டிரெய்ன் முக்கியமாக இருக்கிறது, அடுத்தபடியாக பல்லவா டிரான்ஸ்போர்ட் இருக்கிறது. இன்னும் சர்க்கார் பல யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். பாதாள ரயில் போடுவது பற்றியும்—கூவம் அபிவிருத்திக்காக மத்திய சர்க்கார் பணம் ஒதுக்கி இருக்கிறார்கள்—அதைக்கூட டிரான்ஸ்போர்ட்டுக்கு பயன்படுத்திக்கொள்ளலாம்.

அது மட்டுமல்ல. நெருக்கடிக்குக் காரணமாக இருக்கிற ஹைகோர்ட், செக்ரடேரியேட், சட்டசபை போன்றவற்றை வேறு இடங்களுக்கு மாற்றலாம். ஏற்கனவே ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுது முதலமைச்சர் அவர்கள் சைதாப் பேட்டைக்குப் பக்கத்திலே இருக்கிற இடத்திலே அதற்கு ஏற்பாடு செய்யலாம் என்று சொன்னார்கள். அப்படிச் செய்தால் ஓரளவிற்கு



1973 டிசம்பர் 1] [திரு. என். கே. பழனிசாமி]

நெரிசலைக் குறைக்கலாம். பாதாள ரயில் திட்டத்தைப் பின்னால் எடுத்துக் கொள்ளலாம், அதற்கு முதலிடம் கொடுக்காமல் இதற்கு முதலிடம் கொடுத்து அந்த 150 கோடி ரூபாயை இதைச் செய்வதற்குப் படிப்படியாக முயற்சிகளை மேற்கொள்ளப் பயன் படுத்தலாம்.

இதிலே போர்டு மெம்பர்கள் 12 பேர்கள். அதிலே எக்ஸ்பர்ட்கள் இருக்கிறார்கள். ஆனால் சட்டசபை உறுப்பினர் இரண்டு பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அதிலே எதற்கு என்று எனக்குப் புரியவில்லை. அதிலே ஹவுசிங் போர்டைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள், மற்றவர்கள் இருக்கிறார்கள், எம்.எல்.ஏ.-க்கு அங்கே என்ன வேலை? அங்கே எக்ஸ்பர்ட்ஸ்தான் இருக்கவேண்டும். எம்.எல்.ஏ. என்ன அதிலா எக்ஸ்பர்ட்டா? வேண்டுமென்றால் எந்தப் பகுதியிலே அபிவிருத்தி செய்கிறோமோ, அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒரு எம்.எல்.ஏ.-யை, பொது ஜனங்களுடைய அபிப்பிராயத்தைச் சொல்வதற்காகப் போட்டுக் கொள்ளலாம். அப்படி இல்லாமல் சும்மா இரண்டு எம்.எல்.ஏ. என்று போட்டால் என்ன நன்மை?

கமிஷனர் வந்து தலைவராக இருக்கிறார். அவருக்குப் பதிலாக ஒரு ஆளை நாமினேட் செய்யலாம் என்று இருக்கிறது. கமிஷனர் வேலையை அவர் எப்படிச் செய்யமுடியும்? கோர்ட்டுக்குப் போக வேண்டிய நிலைமை ஏற்படுகிறது என்றால் கமிஷனர்தான் போக வேண்டும், அவருக்குப் பதிலாக ஒரு அக்கவுண்டண்டோ அல்லது கிளார்க்கோ எப்படிப் போக முடியும்? ஆகவே அப்படிப்பட்டவர்களை நாமினேட் செய்யக்கூடாது.

இந்தப் போர்டு இஷ்டப்பட்டால் உடனடியாக நிறுத்தி வைக்கவோ அல்லது மாற்றவோ கட்டுப்படுத்தவோ அதிகாரம் இருக்கிறது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அப்படிச் செய்தால் ஏற்கெனவே ஒரு இடத்திலே அரும்பாக்கத்திலோ அல்லது பூந்தமல்லியோ ஒரு பில்டிங் கட்டுகிறார்கள் என்றால், அந்த அதிகாரத்தைக் கொடுத்தால் அது பாதியோடு நின்றுவிடும், இதனால் 10 ஆயிரம் ரூபாய் செலவானது என்றால் அது நஷ்டம்தானே? ஆகவே, அதனால் சர்க்காருக்குத்தான் நஷ்டம் ஏற்படும். அப்படிச் செய்யவேண்டுமென்றால், அந்த லோக்கல் அதாரட்டியைக் கலந்து கொண்டுதான் அவசியம் இருந்தால் மாற்றவேண்டுமே தவிர, வேறு எதுவும் செய்யக்கூடாது.

காலத்தில் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. ஒவ்வொரு வகை டிராக்டர் குறித்தும் முடிவு பெறாமலிருக்கும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை பற்றிய அறிக்கைகளையும் மேற்படி நிறுவனம் குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு முறை இந்திய அரசுக்கு அனுப்புகின்றது.

3. டிராக்டர்களை விசையேற்றங்களை தவணைக் கொள் முதலில் வழங்கி வந்த தமிழ்நாடு வேளாண் தொழில் நிறுவனம் மேற்படித் திட்டத்தை 1970 அக்டோபர் முதல் கைவிட்டு விட்டது. வேளாண்மை இயந்திரங்களை வாங்க, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து போதிய நிதிவசதியினை உழவர்கள் தற்போது பெற முடிவதே இதற்குக் காரணமாகும். தமிழ்நாடு வேளாண் தொழில் நிறுவனம் தாம் முன்னர் மேற்கொண்ட தவணைக் கொள் முதல் திட்டத்தின்கீழ் முன்னர் ஏற்றுக்கொண்டிருந்த பொறுப்பினையொட்டி மேற்படி நிறுவனம் ஒதுக்கிய உள்நாட்டு டிராக்டர்களின் எண்ணிக்கையை மேற்குறிப்பிட்ட விவர அறிக்கையின் (5), (9), (13) பத்திகளில் குறிப்பிட்டுள்ள இலக்கங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

4. உள்நாட்டு டிராக்டர்கள் வழங்கப்படுவதைப் பொறுத்த வரையில், வேளாண்மை இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த (வேளாண்மை பொறியியல்) தலைமைப் பொறியாளர் கட்டுப்பாட்டு அதிகாரியாவார். 1971-ம் ஆண்டு டிராக்டர் (வழங்குதல்-விற்பனை) கட்டுப்பாட்டு ஆணையின்படி, உள்ளூர் வணிகர்கள் தாங்கள் வைத்து வரும் பதிவேடுகளில் குறிப்பிட்டுள்ள முன்னுரிமை அடிப்படையில் டிராக்டர்களை விற்பனை செய்வதன்மேல் கட்டுப்பாட்டு அதிகாரங்களைச் செலுத்த இவருக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றது.

5. மேற்கண்ட பத்திகளில் விளக்கிக் கூறப்பட்டுள்ள நிலைமையைக் கருதி இறக்குமதி செய்யப்பட்ட டிராக்டர்களை தமிழ்நாடு வேளாண் தொழில் நிறுவனம் வழங்குவதிலோ அல்லது உள்நாட்டு டிராக்டர்களை அரசு வழங்குவதிலோ தாமதமேதும் ஏற்படவில்லை என்பது தெரிய வருகிறது.



NUMBER OF TRACTORS (BOTH INDIGENOUS AND FOREIGN) ALLOTTED TO THE DISTRICTS OF CHINGLEPUT, NORTH ARCOT AND MADRAS DURING 1970–71, 1971–73, 1972–75 AND THE NUMBER ACTUALLY DELIVERED.

| District. | 1970–71. Imported. Number allotted. | Number actually delivered. | 1970–71. Indigenous. Number allotted. | Number actually delivered. | 1971–72. Imported. Number allotted. | Number actually delivered. | 1971–72. Indigenous. Number allotted. | Number actually delivered. | 1972–73. Imported. Number allotted. | Number actually delivered. | 1972–73. Indigenous. Number allotted. | Number actually delivered. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| 1. Chingleput .. | 224 | 214 | .. | 5 | 432 | 231 | .. | 1 | 303 | 122 | .. | 2 |
| 2. North Arcot | 79 | 75 | .. | 5 | 102 | 63 | .. | 2 | 85 | 30 | .. | 2 |
| 3. Madras .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |

## இணைப்பு I

[300-ம் பக்கத்தில் வெள்ளிக் குறியிட்ட வினா எண் 559-க்கான விடையைக் காண்க.]

**1970–71, 1971–72, 1972–73 ஆண்டுகளில் செங்கற்பட்டு, வடாற்காடு, சென்னை மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட (உள்நாட்டு, வெளிநாட்டு) டிராக்டர்களின் எண்ணிக்கையும் ஒப்படை செய்யப்பட்ட டிராக்டர்களின் எண்ணிக்கையும்.**

| மாவட்டம். | 1970–71. இறக்குமதி செய்யப்பட்ட டிராக்டர்கள். | | 1970–71. உள்நாட்டு டிராக்டர்கள். | | 1971–72. இறக்குமதி செய்யப்பட்ட டிராக்டர்கள். | | 1971–72. உள்நாட்டு டிராக்டர்கள். | | 1972–73. இறக்குமதி செய்யப்பட்ட டிராக்டர்கள். | | 1972–73. உள்நாட்டு டிராக்டர்கள். | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கப்பட்ட டிராக்டர்களின் எண்ணிக்கை. | ஒப்படை செய்யப்பட்ட டிராக்டர்களின் எண்ணிக்கை. | ஒதுக்கப்பட்ட டிராக்டர்களின் எண்ணிக்கை. | ஒப்படை செய்யப்பட்ட டிராக்டர்களின் எண்ணிக்கை. | ஒதுக்கப்பட்ட டிராக்டர்களின் எண்ணிக்கை. | ஒப்படை செய்யப்பட்ட டிராக்டர்களின் எண்ணிக்கை. | ஒதுக்கப்பட்ட டிராக்டர்களின் எண்ணிக்கை. | ஒப்படை செய்யப்பட்ட டிராக்டர்களின் எண்ணிக்கை. | ஒதுக்கப்பட்ட டிராக்டர்களின் எண்ணிக்கை. | ஒப்படை செய்யப்பட்ட டிராக்டர்களின் எண்ணிக்கை. | ஒதுக்கப்பட்ட டிராக்டர்களின் எண்ணிக்கை. | ஒப்படை செய்யப்பட்ட டிராக்டர்களின் எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| 1. செங்கற்பட்டு | 224 | 214 | .. | 5 | 432 | 231 | .. | 1 | 303 | 122 | .. | 2 |
| 2. வடாற்காடு | 79 | 75 | .. | 5 | 102 | 63 | .. | 2 | 85 | 30 | .. | 3 |
| 3. சென்னை | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |



### குறிப்பு :

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் டிராக்டர்களைப் பொறுத்த மட்டில், இந்த டிராக்டர்களை உழவர்களுக்கு வழங்கும் முகவர் நிறுவனம் தமிழ்நாடு வேளாண் தொழில் நிறுவனமாகும். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் டிராக்டர்களை இந்திய அரசு பல்வேறு மாநில வேளாண் தொழில் கழகங்களுக்கு ஒதுக்குகிறது. டிராக்டர் கேட்டு விண்ணப்பித்துக்கொண்ட உழவர்களுக்கு இந்த டிராக்டர்களை மேற்படி கழகங்கள் ஒதுக்கு கின்றன. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் டிராக்டர்களை இந்திய அரசிடமிருந்து தமிழ்நாடு வேளாண் தொழில் நிறுவனம் பெற்றுக்கொண்டவுடன், டிராக்டர் கேட்டு விண்ணப்பித்துக்கொண்ட உழவர்களுக்கு அவரவரது பெயர்கள் பதிவு செய்யப்பட்ட முன்னுரிமை அடிப்படையில் இந்த டிராக்டர்களை மேற்படி நிறுவனம் ஒதுக்க வேண்டும். பின்னர், உழவர்கள் ஒரு திங்களுக்குள் அந்த டிராக்டர்களை எடுத்துக்கொள்ளவேண்டும். சில சமயங்களில், சிறப்பான சூழ்நிலைகளின்கீழ் இந்தக் கால வரம்பு மூன்று திங்களாக நீட்டிக்கப்பட வேண்டும். அதன் பின்னருங்கூட, டிராக்டருக்கான முழுத் தொகையைச் செலுத்தப் போதிய நிதிவசதி இல்லாததன் காரணமாக உழவர்கள் அந்த டிராக்டர்களை எடுத்துக்கொள்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. இத்தகைய நேர்வுகளில் டிராக்டர் ஒதுக்கப்பெற்ற உழவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கால அளவிற்குள் டிராக்டரை எடுத்துக் கொள்ளாவிட்டால், அவருக்கு டிராக்டர் ஒதுக்கப்பட்டது குறித்த ஆணை ரத்து செய்யப்பட்டு காத்திருப்போர் பட்டியலில் இவருக்கு அடுத்து இருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு அந்த டிராக்டர்கள் ஒதுக்கப்படவேண்டும். உழவர்கள், குறிப்பிட்ட வகை டிராக்டர்களை வாங்கி விரும்பி அவை எளிதில் கிடைக்காதபோது, அத்தகைய குறிப்பிட்ட வகை டிராக்டர்களை இறக்குமதி செய்து அவற்றை அவர்களுக்கு ஒதுக்குவது குறித்து இந்திய அரசு ஒரு முடிவு எடுக்கும் வரை அவர்கள் காத்திருக்க வேண்டியது அவசியமாகும்.

2. தமிழ்நாடு வேளாண் தொழில் நிறுவனத்தைப் பொறுத்த வரையில் இம் மாநிலத்தைச் சேர்ந்த உழவர்கள் விண்ணப்பித்துக் கொண்ட டிராக்டர்கள் எண்ணிக்கை டிராக்டர் வகை ஆகியவை பற்றி இந்திய அரசுக்குத் தெரிவிக்க மேற்படி நிறுவனம் உரிய

## NOTE.

So far as the imported tractors are concerned, the Tamil Nadu Agro-Industries Corporation Limited is the sole agent for supply of these tractors to the ryots. The Government of India allot tractors imported from foreign countries to the various State Agro-Industries Corporations for allotment to the applicant farmers. As soon as the consignment of imported tractors is received from the Government of India, the Tamil Nadu Agro-Industries Corporation, Limited shall allot them to the applicant farmers according to the priority of registration. Then the farmers shall take delivery of the tractors within a month's time. Sometimes, the time-limit shall be extended to three months under special circumstancse. Even then there are delays on the part of farmers in lifting the tractors for want of adequate finance to pay the full cost. In such cases where the allottee-farmers do not lift tractors within the time allotted to them, the allotment order shall be cancelled and the tractors re-allotted to the next seniormost applicants in the waiting list. In cases where the farmers want particular type of tractors which are not readily available they have necessarily to wait till a decision is taken by the Government of India for import of those specific tractors and allotment is made by them.

2. So far as the Tamil Nadu Agro-Industries Corporation, Limited is concerned, timely steps are taken by it to keep the Government of India informed of the number and type of tractors applied for by the farmers of this State. The Tamil Nadu Agro-Industries Corporation, Limited is also sending periodical reports to the Government of India indicating the number of pending applications for each type of tractor.

3. The Tamil Nadu Agro-Industries Corporation, Limited which was operating the hire purchase activities for supply of tractors/pumpsets, had discontinued the scheme from October 1970, since the farmers are now able to get adequate finance from the nationalised banks for purchase of Agricultural machinery. The figures indicated in columns (5), (9) and (13) of the above statement will indicate the number of indigenous tractors allotted by the Tamil Nadu Agro-Industries Corporation Limited as per its earlier commitment under the hire purchase scheme previously operated by it.



4. So far as the supply of indigenous tractors are concerned, the Chief Engineer (Agricultural Engineering) of the Directorate of Agriculture is the Controller who is empowered to exercise the controlling powers on the sale of tractors by local dealers according to the priority in the registers maintained by them, as per the Tractor (Distribution and Sale) Control Order, 1971.

5. In view of the position explained in the foregoing paragraphs, it may be seen that there has been *no* delay either on the part of Tamil Nadu Agro-Industries Corporation, Limited in the supply of imported tractors or at Government level in resect of indigenous tractors.

## APPENDIX II.

[*Vide* foot note on page 355.]

### STATEMENT UNDER RULE 41 OF THE ASSEMBLY RULES MADE BY THE MINISTER FOR AGRICULTURE.

#### FERTILISERS.

There is a general shortage for fertilisers in the country and the availability of Naptha to the Indigenous Plants has also been seriously curtailed. As announced by the Union Minister in the Parliament recently, many countries, including some of the East Europe, which had agreed to supply fertilisers to India, had not been able to fulfil their commitments and these countries were now trying to " get out of the agreements ", because of shortage of Naptha in the world-market.

2. While the Pool supplies, namely imported stocks, should normally supplement the indigenous production, it has become of late imperative to depend more on Pool supplies, since the Non-pool supply by the indigenous manufactures is not upto expectations, due to various factors. During the Kharif season of this year, the supply by the Pool, though very much restricted, was satisfactory, since the State was able to secure not only what the Ministry had allocated, but also certain quantity towards the balance of the allocation made for the previous Rabi season. As against 44,000 tonnes of Nitrogen allocated to the State for Kharif 1973

(1st Feb. 1973 to 31st July 1973) we were able to get as much as 52,359 tonnes of Nitrogen from the Pool. From the trend in the supply position in May-June, the Government felt that there would be considerable shortfall in the supply during Rabi period. The Collectors were, therefore, cautioned that they should exercise adequate care in releasing the stocks made available to their respective districts and also to keep as much buffer-stock as possible, to meet the demand in Rabi, in the event of a shortfall in the supp'y. Such a course adopted in time, has enabled the Government to meet the requirements of the ryots to an appreciable extent during August–October this year.

3. For the current Rabi season (1st August 1973 to 31st January 1974) the deficit registered with the Pool is 1,06,000 tonnes of Nitrogen after taking into account the assurance given by the Indigenous Manufacturers to supply 60,000 tonnes of Nitrogen. Against the said commitment of 1,06,000 Nitrogenous tonnes, the Ministry has so far allocated to the State only 43,678 Nitrogenous tonnes; and even out of this limited allocation, the State has been able to secure only 24,038 Nitrogenous tonnes. As a result of repeated persuasions at high levels the Ministry has allotted substantial portions of two shiploads of Urea expected to arrive shortly in Tamil Nadu. Of these two, one with 9,000 M.T. of Urea is arriving by 3rd December at Madras Port. Out of the total quantity of 9,000 M.T. of Urea covered by this shipment, Food Corporation has agreed to supply to Tamil Nadu a major portion, about 8,000 tonnes. The other ship with about 8,000 M.T. of Urea is expected to arrive by the middle of December 1973; and this State would be able to secure a supply of not less than 6,000 tonnes out of it. A vessel with 10,000 M.T. of Calcium Ammonium Nitrate is also expected to discharge by the 3rd December, at Madras Port; and the State is getting 6,531 tonnes out of this consignment, towards the outstanding allocations. Now that straight fertiliser alone is needed for top-dressing for the standing paddy crop, the fresh supplies of Urea have been arranged for despatch to select districts, where the material is needed for top-dressing. The entire quantity of 6,531 tonnes of Calcium Ammonium Nitrate to be had from the incoming shipment, has been arranged for supply to Coimbatore district, where there is an urgent need to meet the pressing demand of the cotton-growers, apart from those raising other crops. The



Collectors concerned have all been instructed to make such arrangemets as are necessary to move the allotted stocks, immediately on arrival of the ships.

4. It is reported that there is now a major break-down in the Plant of Madras Fertilisers Limited, our major supplier of non-pool stock, when the peak manuring season is in full swing. The supply by the other indigenous manufacturer, namely the Neyveli Lignite Corporation, has also been reported to be considerably affected; These two manugements have been persuaded to restore production quickly and also to increase the supply to Tamil Nadu in preference to other States, to which their production is committed.

5. It is necessary to mention here that apart from making all possible efforts to step up the supplies to the State, the Government have taken steps to regulate the distribution of the limited stocks available. Snice distribution of pool fertilisers by different agencies would defeat the very object in view, it has now been arranged to distribute the entire stock of pool fertilisers through the two co-operative federations only with effect from 1st April 1973 and also to make the supply through the village credit societies only to bona fide ryots, against their signatures. Surprise inspections of these retail points, as frequently as possible, by the local officers of the Revenue and the Agricultural Departments, have also been arranged to prevent malpractices on the part of the retailers.

6. Since 1st January 1973 to the middle of November 1973, as much quantity as possible of pool stocks have been secured by Tamil Nadu. We secured about 1,27,000 tonnes of urea and out of this, about 1,24,000 tonnes were moved to the districts for sales to cultivators, and a small quantity of 1,500 tonnes to the granulation units for manufacture of complex-fertilisers and 1,500 tonnes to SPIC for implementation of its seeding programme, was released. A quantity of about 1,500 tonnes of urea *sweepings* which was found to be available at different parts in a damaged condition, was also lifted by the State Government, in view of the acute scarcity conditions prevailing everywhere; and this quantity was released in favour of the recognised Manure Mixing Firms and the sugar mills. Out of 36,977 tonnes of Di-Ammonium Phosphate secured, 28,710 tonnes were moved to districts; 2,000 M.T. was allotted to granulation unit and, out of the balance of 6,267 tonnes, 6,000 tonnes were supplied to the Madras Fertilisers Limited, for manufacture of complex-fertilisers, when the unit was in acute

short supply of Phosphoric acid; and 267 tonnes were given to the Manure Mixing Firms. In the case of Calcium Ammonium Nitrate we had about 28,000 tonnes supplied to the State. The damaged stock, which was about 4,000 tonnes, was allotted among the various manure mixing firms and the sugar mills, and the entire balance of 24,000 tonnes was moved to the districts for sales to cultivators.

7. The Fertiliser (Movement Control) Order, which has come into force from May 1973, has helped the State Government to prevent illicit-movement of fertilisers outside the State. The check-post staff and also the Officers of the Revenue, Civil Supplies, Agriculture, Commercial Taxes and the Police Departments, have been suitably instructed to be vigilant in bringing to book all persons resorting to malpractices in the fertiliser trade. However, unless the State Government are armed with necessary powers under the Essential Commodities Act, it would not be possible for them to exercise a strict control over the distribution of non-poll stocks. The Government of India have been moved to delegate the necessary powers to the State Government.

## PESTICIDES.

8. There is a nationwide shortage of pesticides due to the non-availability of sufficient quantity of raw materials and due to the increased price. Hence, there is difficulty in getting sufficient quantity of chemicals to meet the entire needs of Tamil Nadu. However, efforts have been made to meet the needs of Palladam Block and the pests have been controlled. The ryots in Coimbatore region prefer Methyl Parathion plus DDT, and Endrin to other pesticides. But due to the policy of Government of India which bans the use of Ethyl and Mehtyl Parathion and Endrin from 1974 onwards, the production of Ethyl and Methyl Parathion technical has been considerably reduced and there is great shortage for the above chemicals. Similarly due to the policy of restricted imports, Endrin technical, which is imported, is also not available in sufficient quantity. The two public sector units in India namely Hindustan Insecticides, Always and Hindustan Organic Chemicals, Delhi are not able to meet the full requirement of DDT which is in great scarcity. Further, due to Government of India's policy to divert the BHC technical for National Malaria Eradication Programme, there is shortage of NHC technical also.



The above difficulties have been explained to the Government of India on many occasions. Arrangements are however being made to meet the needs of ryots in respect of pesticides to the maximum extent possible.

*Details of chemicals supplied to District Agricultural Officer, Coimbatore for distribution up to now.*

1. BHC 10 per cent—200 M.T.
2. Copper Oxychloride—5 M.T.
3. DDT 5 per cent—20 M.T.
4. DDT 50 per cent—10 M.T.
5. Endrin 20 per cent EC—12,000 Litres.
6. Rogar—10,000 Litres.
7. Ethyl Parathion—14,000 Litres.
8. Dimecron—5,000 Litres.
9. Methyl Parathion plus DDT BC (Coimbination)—50,000 Litres.
10. Thiametan—1,000 litres.
11. Anthio—5,000 Litres.
12. Endosulfan—10,000 Litres.
13. Heliotox—22,000 Litres.
14. Phosolon—2,000 Litres.
15. Kelthane—5,000 Litres.
16. Ambithion—4,000 Litres.
17. Penthoate—5,000 Litres.
18. Methyl Parathion—3,000 Litres.
19. Exalux—2,000 Litres.

9. On receipt of information regarding the incidence of Paddy Bar Head Bug in Melmalayanur Block, telegraphic instructions were issued to the District Agricultural Officer, Tindivanam to inspect the area and to take up immediate plant protection measures to combat the pest. Further 20 tonnes of DDT 5 per cent and 30 tonnes of BHC 10 per cent which are the specific chemicals to be used against this particular pest, have been supplied up to the middle of November 1973 to this particular block so that any large scale pest incidence, can be tackled.

10. The District Agricultural Officer, was also instructed to move any further quantity of plant protection chemicals required from other areas to the affected areas. In addition to the above chemicals, the block has ben supplied with 200 lirtes of Endrin, 100 litres of Kelthane, 220 litres of Rogar and 100 litres of Heliotox which can be utilised to combat the incidence of other pests also. The District Agricultural Officer has himself inspected the area and has organised plant protection measures which can be put into effect at short notice.

11. The Agricultural Department is taking adequate steps to meet shortages of pesticides in different regions of the State, as and when necessary.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

---

### திங்கட்கிழமை, 1973 டிசம்பர் 3

---

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

### 1. வினாக்கள்–விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

### *Training in Karate for Police Officials*

* 569 *Q.*—Thiru N. DENNIS:
Thiru N. KITTAPPA:
Thiru V. BALASUNDARAM:
Thiru G. RAMASWAMY: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any training in Karate is being imparted to the Police Officials in this State both Gazetted and Non-Gazetted; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** *(அ) & (இ) 4—6—1973 முதல் 3—9—1973 வரையிலான மூன்று மாத காலத்திற்கு முதல் கட்டமாக அரசிதழ் பதிவு பெறாத காவல்துறை அலுவலர்கள் ஐம்பது பேருக்கு 'கராத்தே' கலையில் பயிற்சி அளிக்கப்பட்டது.*

**திரு என். டென்னிஸ்:** *தலைவர் அவர்களே, பயிற்சிக்கு எந்த அடிப்படையில் அவர்கள் எடுக்கப்படுகிறார்கள் ? ஒரு நபருக்கு என்ன செலவாகிறது ? தேர்ந்தெடுக்கப்படுகிற போலீஸ் அதிகாரிக்கு இப்பயிற்சி கம்பல்சரியாகக் கொடுக்கப்படுமா ?*

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** *இப்பொழுது இந்தப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள், அவர்களுடைய உடல் தகுதி, கற்றுக்கொள்ளும் ஆர்வம் இந்த அடிப்படையில் தேர்ந்*

தெரிக்கப்படுகிறார்கள். அது மாத்திரம் அல்லாமல், 30 வயதுக்கு மேற்படாதவர்கள் இதிலே ஈடுபடுத்தப்படுகிறார்கள். நாமே காவல் துறையினரை இந்தப் பயிற்சி பெறவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அவர்கள் இந்தப் பயிற்சி பெறுகிற காரணத்தால் பயிற்சி பெறுகிற காவல் துறையினரிடமிருந்து எந்தக் கட்டணமும் வசூலிப்பதில்லை. பயிற்சி அளிக்கும் ஆசிரியருக்கு அரசு பயிற்சிக் கட்டணமாக மாதமொன்றுக்கு ஆயிரம் ரூபாய் வழங்குகிறது.

**திரு என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, தமிழகத்தில் புதிதாகப் பெண்கள் போலீஸ் படை உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பெண்கள் போலீஸ் படையிலுள்ள போலீஸ்காரர்களுக்கும் இம்மாதிரியான காராத்தே போன்ற பயிற்சிகள் அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** காவல் துறையினர் இப்பொழுது பெறுகிற இந்தப் பயிற்சியைப் போலவே தனியாகவும் பலர் இந்தக் காரத்தே பயிற்சியைப் பெற்று வருகிறார்கள். அதிலே பெண்களும் இருக்கிறார்கள். மாணவ மாணவியர்களும் கூட—பத்து வயது, ஆறு வயது, எழு வயதினர் கூட—இந்தப் பயிற்சியைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பெண் போலீஸ் படை தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்தக் கருத்தும் கவனத்திலே கொள்ளப் படும்

**திரு. ஜி. ராமசாமி :** தலைவர் அவர்களே. இந்தக் காராத்தே விளையாட்டு ஜப்பான் நாட்டில் மிக முக்கியத்துவம் வாய்ந்த விளையாட்டாக இருந்து வருகிறது. அங்கு இந்தப் பயிற்சி எம்மாதிரி அளிக்கப்படுகிறது? அதேபோல் தமிழ்நாட்டிலும் இந்தப் பயிற்சி அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இந்தப் பயிற்சியை இன்றைக்கு இந்தியா முழுவதும் கற்றுத் தருவதற்கான நற்சான்றிதழைப் பெற்றிருக்கிற தமிழ்மணி என்பவர் ஜப்பான் நாட்டிற்குச் சென்று, அங்கே இந்தப் பயிற்சியைப் பெற்றிருக்கிறார். ஜப்பான் நாட்டிலுள்ள ஒரு பயிற்சியாளர்தான் உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளுக்கும் இந்தக் காராத்தே பயிற்சியை அளிக்கு வகையிலே தேர்ந்தவராக இருக்கிறார் அவரிடம் தமிழ்மணி பயிற்சி பெற்று நற்சான்றிதழ் பெற்று வந்திருக்கிறார்.



**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவர் அவர்களே, இந்த ‘ காராத்தே’ என்னும் சொல்லுக்குப் பதிலாக தமிழில் நல்ல பாண்டித்தியம் பெற்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நல்ல தமிழ்ச் சொல்லைத் தமிழ்நாட்டில் மட்டும் பயன்படுத்துவதற்கு வழிவகை செய்வார்களா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, ‘ காராத்தே ’ என்ற சொல்லுக்கு ஏதோ ‘வெறும் கை’ என்று பொருள் சொன்னார்கள். நாம் அந்த ‘ காரத்தே’ என்பதில் ‘ ரா’ விலே இருக்கும் ‘ ா ’ என்னும் துணை எழுத்தை எடுத்துவிட்டு ‘ கரத்தே’ என்ற அளவில் வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம். இதிலே போதுமான பயிற்சி பெறுகிறவர்கள் திடீரென்று தாக்குதல் ஏற்படும்போது அவர்கள் கையினாலேயே தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும் என்பதால் ‘கரத்தே’ என்று வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம். (சிரிப்பு).

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** தலைவர் அவர்களே, இப்படி காராத்தே பயிற்சி பெறுகிற காவல் துறை அலுவலர்களுக்கு சிறப்பு ஊதியம் கொடுக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சிறப்பு ஊதியம் அல்ல. பயிற்சி பெறுகிற காலத்தில் ஒவ்வொரு நாளும் சிறப்பு உணவுக் கட்டணமாக ஒரு ரூபாய் வீதம் பயிற்சி பெறுகிற காவலர்களுக்கு அரசு வழங்கிக்கொண்டிருக்கிறது.

**திரு. த. சோனையா :** தலைவர் அவர்களே, இந்தக் ‘ காராத்தே’ பயிற்சி பெறுவதனால் ஏற்படுகிற பலன் என்ன என்பதை அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இது உடல் பயிற்சிக்கு மாத்திரம் அமைந்துவிடாமல் உள்ளத்திற்கும் ஒரு நல்ல பக்குவத்தை அளிக்கக்கூடிய அளவுக்கு பயிற்சியாக இருக்கும் என்று சொல்கிறார்கள். இந்தப் பயிற்சியினால் கிடைக்கும் பலன் எதிர்ப்புகளைத் தடுத்துக்கொள்வதற்கு மட்டுமல்லாமல், மன ஒழுங்கிற்கு ஊறு விளைவிக்கக்கூடிய கோபம், உணர்ச்சிவசப்படுதல், ஆசைகள் போன்றவற்றை எதிர்த்துப் போராட முடியும் என்பதும் இந்தப் பயிற்சி குறித்துக் கூறப்படுகிற சிறப்புகளாகும்.

[1973 டிசம்பர் 3

**திரு. எஸ். வடிவேல் :** காவல் துறைக்குப் பெண்களை எடுத்துக் கொள்ளும்போது, குறிப்பாக நல்ல வலுவுள்ள, நாட்டைப் பாது காக்கத் தைரியமுள்ள அரிசனப் பெண்களைத் தேர்ந்தெடுத்து அவர் களுக்கு முதல் ப்ரிஃபெரன்ஸ் கொடுக்க நம்முடைய அரசு முன் வருமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்பொழுது குறைந்த எண்ணிக்கையில்தான் பெண் காவல் படையினர் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். இந்த எண்ணிக்கை பெருகுகிற காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற அந்தக் கருத்தும் கவனத்திலே கொள்ளப்படும். இப்பொழுது அரிசனப் பெண்களை எடுக்கக் கூடாது என்று சொல்லவில்லை. யார் யார் இந்தத் தேர்வுக்கு வந் தார்களோ அவர்களிலே இப்பொழுது பலரும் தேர்ந்தெடுக்கப்பட் டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவேளை அரிசனப் பெண்களும் இருந்திடக்கூடும்.

## சில்லறை நாணயத் தட்டுப்பாடு

*** 570 வினா—திரு. என் கிட்டப்பா :**

**திரு. என். கே. பழனிசாமி :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கடந்த ஆறு மாதங்களாகத் தமிழ்நாட்டில் நிலவும் சில்லறை நாணயத் தட்டுப்பாடு குறித்து, மத்திய அரசுக்கு, மாநில அரசு தெரிவித்துள்ளதா ?

(இ) ஆமெனில், அது குறித்து மத்திய அரசு அளித்துள்ள காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** விவர அறிக்கை யொன்று @ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, சில்லறைத் தட்டுப் பாட்டைச் சமாளிக்கும்பொருட்டு பெரிய வியாபாரிகள் டோக்கன் களைப் பயன்படுத்துகிறார்கள். அதுபோன்ற டோக்கன்களை மாநில அரசு—அரசு முத்திரையுடன்—தயாரித்து வியாபாரிகளுக்கு வழங்குவது குறித்து அரசு ஆலோசிக்குமா ? இதற்கும் மத்திய அரசின் அனுமதி தேவையா ?

---

@ 601-604 ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பட்டுள்ளது.



1973 டிசம்பர் 3]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாநில அரசு இது போன்ற டோக்கன்களைத் தயாரிப்பதோ அல்லது மாநில அரசே இதுபோன்ற முத்திரையோடு நாணயங்கள் தயாரிப்பதோ இயலாது. அதற்கு அரசியல் சட்டம் இடம் தராது.

**திரு. என். கே. பழனிசாமி :** இப்பொழுது கொடுத்திருக்கும் ஸ்டேட்மென்டில் சில்லறைப் பற்றாக்குறைக்குக் காரணம், அதை உருக்கி விற்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படி உருக்கப்பட்ட வர்கள் பிடிக்கப்பட்டிருக்கிறார்களா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, உருக்கப்பட்டவர்களைப் பிடிக்க முடியாது. (சிரிப்பு) உருக்கியவர் களை வேண்டுமானால் பிடிக்கலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, 1971-ஆம் வருஷத்தில் இம்மாதிரி சேமித்து வைக்கக்கூடியவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்கலாம் என்று சட்டம் போட்டார்களே, அதன்படி யார் பேரிலாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ? இப்பொழுது சென்னையில் இருக்கும் ரிசர்வ் வங்கி பல ஸ்டோர் களுக்கெல்லாம் சில்லறை நாணயங்களை அனுப்புவதாகச் சொல்லு கிறார்கள். தமிழ்நாட்டில் எந்தெந்த இடங்களில் அந்த சில்லறை நாணயங்களை அனுப்புகிறார்கள் ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மத்திய அரசிலிருந்து நமக்குக் கிடைத்துள்ள தகவலின்படி, பம்பாயிலுள்ள இந்திய ரிசர்வ் வங்கி சில்லறை நாணய இருப்பு நிலைமை சரியாக இருப்பதாகவும், தமிழ்நாட்டுக்குப் போதிய அளவு அனுப்புவதற்கு அவசியமான நடவடிக்கைகளையெல்லாம் எடுத்துக்கொண்டிருக் கிறது என்கிற வகையிலும்தான் மத்திய அரசிடமிருந்து நமக்குத் தகவல் வந்துள்ளது. எங்கெங்கே அனுப்பப்படுகின்றன என்ற விவரங்கள் இல்லை. சில்லறை நாணயங்களை உருக்கியவர்கள், பதுக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது குறித்து இப்பொழுது விவரம் இல்லை.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** இப்பொழுதெல்லாம் இந்தச் சில்லறை நாணயங்களுக்கு ஏதாவது 2 சதவிகிதம் அல்லது 3 சத விகிதம் ஈவு கொடுத்தால்தான் சில்லறை கிடைக்கிறது. தீபாவளி,

[1973 டிசம்பர் 3

பொங்கல் போன்ற சமயங்களில் பெரிய வியாபாரிகள் சில்லறை கிடைக்காமல் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகிறார்கள். ஆகவே மாநில அரசு இதில் ஏதாவது நடவடிக்கைகள் எடுக்க சாத்தியமுண்டா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்படிப்பட்ட சில்லறை விஷயங்களில் எல்லாம் மாநில அரசு நடவடிக்கை எடுக்க இயலாது.

**திரு. என். கே. பழனிசாமி :** சென்னை நகர்புறத்தில் இந்தச் சில்லறை தட்டுப்பாடு இல்லாவிட்டாலும் பல மாவட்டங்களில் பஸ் டிரான்ஸ்போர்ட் போன்றவைகளில் சில்லறை கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே சர்க்கார் நடத்தக் கூடிய பஸ் டிரான்ஸ் போர்ட்டிலாவது சில்லறை கொடுக்க சர்க்கார் உத்தரவிடுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சில்லறை வழங்கவேண்டும் என்ற அளவில் சர்க்கார் உத்தரவிடமுடியாது. இப்படி பதுக்கி வைக்கிற காரியங்கள் நடைபெறாமல் தடுப்பதற்கும் அவர்களை எச்சரிப்பதற்கும் வேண்டுமானால் அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

**திரு. நா. வீராசாமி :** இந்த சில்லறைகள் மட்டுமல்லாமல் சமீபத்தில் நூறு ரூபாய் நோட்டு செல்லாது என்ற புரளி கிளப்பப் பட்டு ஐந்து ரூபாய், பத்து ரூபாய் நோட்டுகள் கூட நாட்டில் புழங்க முடியாத ஒரு சூழ்நிலையும் ஏற்பட்டு அதனால் பம்பாய் போன்ற மாநிலங்களில் எல்லாம் ஒரே நாளில் ஐம்பது லட்சம், அறுபது லட்சம் ரூபாய் என்ற அளவில் சில்லறை மாற்ற பாங்குகளில் கூட்டம் கூடியதாக செய்திகள் வந்தன. அந்தப் பிரச்னை தமிழ்நாட்டிலும் இரண்டு, மூன்று தினங்கள் இருந்தன. அதுபற்றி தமிழக அரசுக்கு தகவல் ஏதாவது கிடைத்திருக்கிறதா ? நூறு ரூபாய் நோட்டு செல்லாது என்று மத்திய அரசு அறிவிக்கக் கூடிய வாய்ப்பு ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ,** நூறு ரூபாய் நோட்டு செல்லாது என்ற நிலை வரப்போகிறது என்ற வதந்தி பரவிய காரணத்தால் சில்லறை ஆங்காங்கு முடக்கப்பட்டன என்று சொல்லப்பட்ட தகவல் ஓரளவு உண்மைதான். ஆனால் நூறு ரூபாய் நோட்டு செல்லாமல் போகும் என்ற தகவல் எதுவும் அரசாங்கத்திற்கு இல்லை.



1973 டிசம்பர் 3]

### ஆசிரியர்களுக்கான தேசிய விருதுகள்

* 571 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1972-73-ம் ஆண்டில் ஆசிரியர்களுக்கான தேசீய விருதுகள் தமிழகத்தில் எத்தனை பேருக்கு யார், யாருக்கு வழங்கப்பட்டன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 1972-73-ம் ஆண்டில் ஆசிரியர்களுக்கான தேசீய விருதுகள், 6 ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கும், 3 உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டன— அவர்களின் பெயர்கள் வருமாறு :—

1. ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள்—

(1) திரு. வி. கே. குணசீலம், ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய (சிறுவர்கள்) நடுநிலைப்பள்ளி, சின்னாளப்பட்டி, மதுரை மாவட்டம்.

(2) திரு. எஸ். ராஜன், தலைமையாசிரியர், திரு. ராம கிருஷ்ண வித்யாலயா ஆரம்பப்பள்ளி, காடுப்பட்டி அஞ்சல், மதுரை மாவட்டம்.

(3) சகோதரி ஆர். அன்னமேரி, தலைமை ஆசிரியை மற்றும் தாளாளர், புனித பிலோமினாள் ஆரம்பப்பள்ளி, திண்டிவனம், தென்னாற்காடு மாவட்டம்.

(4) திரு. எல். வீரப்பன், தலைமையாசிரியர் (தேர்வுநிலை ஸ்ரீ ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி, காரயாம்புத்தூர் அஞ்சல், நாமக்கல் தாலூகா.

(5) திருமதி எஸ். தனபாக்கியம், இளநிலை ஆசிரியை, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, கடம்பர்கோவில், குளித்தலை தாலூகா, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

(6) திரு. எஸ். சுப்ரமணியம், ஆசிரியர், சத்திரிய நாடார் ஆரம்பப்பள்ளி, கமுதி, ராமநாதபுரம்.

2. உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள்—

(1) திரு. ச. டி. எட்வர்டு ஜானதன், தலைவர், விழி யிழந்தோர்பள்ளி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்.

[1973 டிசம்பர் 3

(2) திரு. ஓ. வி. கோபாலன், தலைமை ஆசிரியர், திரு. ராமகிருஷ்ணா மிஷன் உயர்நிலைப்பள்ளி, தியாகராயநகர், சென்னை-17.

(3) திரு. பி. ராதாகிருஷ்ணன், தலைமையாசிரியர், தேவாங்கர் உயர்நிலைப்பள்ளி, சின்னாளப்பட்டி, மதுரை மாவட்டம்.

**திரு. என். கிட்டப்பா :** எந்த அடிப்படையில் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன என்பதையும் இப்படி விருது பெற்றவர்களில் தமிழ் ஆசிரியர்கள் யாரேனும் உள்ளனரா என்பதையும் அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் அந்தக் கல்வி மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட கல்வி அதிகாரி மற்றும் இரண்டு அதிகாரிகள் இருந்து இரண்டு இரண்டு பேர்களைத் தேர்ந்தெடுத்து மாநில அளவில் அனுப்புகிறார்கள். நாற்பத்தைந்து கல்வி மாவட்டங்களிலிருந்து வருகிற 90 பேர்களிலிருந்து இங்கு மாநில கல்வி இயக்குநரும், சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களும், என். கே. டி. ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி முதல்வராக இருக்கிற செல்வி. சரோஜினி இம்மூன்று பேர்களும் கொண்ட குழுவினர் ஆராய்ந்து 12 பேர்களை தேர்ந்தெடுத்து மத்திய அரசுக்கு அனுப்புகிறார்கள். துவக்கப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் அதில் 6 ஆசிரியர்களை மத்திய அரசு தேர்ந்தெடுக்கிறார்கள். உயர்நிலைப்பள்ளிகளைப் பொறுத்த வரையில் ஆறு ஆசிரியர்களை தேர்ந்தெடுத்து மத்திய அரசுக்கு அனுப்புகிறார்கள். அதில் அவர்கள் மூன்று ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இதில் தமிழ் ஆசிரியர்கள் யாரேனும் இருக்கிறார்களா என்ற விவரம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் அறியலாம்.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் :** அந்தமாதிரி தேசீய விருது பெற்ற ஆசிரியர்களைக் கௌரவிக்கும் ரீதியில் அவர்களின் புகைப்படங்களை அந்தந்தப் பள்ளிகளில் வைப்பதற்கு அரசு ஏதாவது உத்தரவு பிறப்பிக்குமா ?



1973 டிசம்பர் 3]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அரசுக்கோ அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்கோ செலவு ஏற்படாமல் வேறு வகையில் அந்தப் படங்களை வழங்குவதற்கு முன்வருவார்களானால் சில பல பள்ளிக்கூடங்களில் அதற்கு அனுமதி அளித்திருக்கிறது, அந்த முறையில் முயற்சி செய்யலாம்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** இந்த விருது பெறுகிற ஆசிரியர்கள் ஒவ்வொரு மாநிலத்திற்கும் இவ்வளவு இவ்வளவு என்று ஏதாவது விதி வைத்திருக்கிறார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துவக்கப்பள்ளி ஆசிரியர்கள் 6, உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் 3 என்று வைத்திருக்கிறார்கள்.

**திரு. கா. வேழவேந்தன் :** நம் அரசு தோன்றியதற்குப் பின்னால் காவல் துறையில் பணியாற்றுகிற சிறந்த காவலர்களுக்கு பரிசு வழங்கும் வகையில் ஆண்டுதோறும் அரசு சார்பில் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் சிறந்த முறையில் விழாக்கள் நடக்கின்றன. அதேபோல் கல்வியின் தரத்தை உயர்த்தும் வகையில் சிறந்த ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு ஆண்டும் மிகப் பெரிய விழா நடத்தி அதில் அவர்களுக்கு பரிசளிக்கும் முறையில் விழா நடத்தப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்தத் திட்டம் ஏற்கனவே இருந்துவருகிறது. இதில் துவக்கப் பள்ளிகளைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலிருந்தும் இரண்டு ஆசிரியர்கள் வீதம் 45 கல்வி மாவட்டங்களிலிருந்து 90 ஆசிரியர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்தது. துவக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டுமல்லாமல்—இது ஐந்தாறு ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்றுவருகிறது—சென்ற மூன்று நான்கு ஆண்டுக் காலத்தில் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும் தரவேண்டுமென்று—ஒவ்வொரு கல்வி மாவட்டத்திற்கும் இரண்டு பேர்கள் என்ற முறையில் 90 துவக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு வெள்ளிப் பதக்கம் ஒன்றும், அவர்களைப் பாராட்டி சான்றிதழ் ஒன்றும், ரூ. 200 தொகையும் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் மேதகு ஆளுநர் அவர்கள் தலைமையில் அவர்களால் இந்த விருதுகளும், பரிசுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

[1973 டிசம்பர் 3

## தமிழ்ப்புலவர் தேர்வுக்கு வயது வரம்பு

*572 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனிப்பட்ட முறையில் தமிழ்ப்புலவர் தேர்வு எழுதுவதற்கு வயது வரம்பைத் தளர்த்தும்படி பல்கலைக் கழகத்துக்கு அரசு யோசனை ஏதேனும் தெரிவித்துள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இல்லை.

**திரு. என். கிட்டப்பா:** தனிப்பட்ட முறையில் பி.ஏ., எம்.ஏ., பட்டத் தேர்வுக்கு எழுதுவதுபோல் தமிழ்ப் புலவர் தேர்வுக்கும் இருக்கிற வயது வரம்பு விதிகளைத் தளர்த்துவதுபற்றி இனியாவது அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இதைப் பல்கலைக் கழகம்தான் செய்யவேண்டும். ஏற்கனவே முப்பது வயதுக்கு குறைந்தவர்கள் பள்ளியில் சேர்ந்து படித்து, அட்டன்டென்ஸ் கொடுக்காமல் எழுதக் கூடாது என்று இருந்தது. முப்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் எழுதலாம் என்றிருந்தது. அதைப் பல்கலைக் கழகம் 1969-ம் ஆண்டு 25 வயதாகக் குறைத்திருக்கிறது. இருபத்தைந்து வயதுக்கு மேற்பட்டவர்கள் யாரும் எழுதலாம். ஆனால் ஆசிரியர்களாக இருந்து மூன்று ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றியிருந்தால்—அதன் அடிப்படையிலான விதியிருக்கு மானால்—தனி விதிவிலக்கு கோரி அனுமதி பெற்று அவர்கள் எழுதலாம்.

**புலவர் சி. பழனிச்சாமி:** தமிழ்ப் புலவர் படிப்பை பட்டப் படிப்பாக மாற்றும் திட்டம் எந்த அளவில் இருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இது பல்கலைக் கழகத்தின் ஆய்வுக்கு விடப்பட்டிருக்கிறது.

**திரு. என். கிட்டப்பா:** மற்றக் கல்லூரிப் பாடங்களுக்கு உள்ளது போல் தமிழ்ப் புலவர் வகுப்பிற்கும் மாலை நேரக் கல்லூரிகள் திறப்பதற்கு அரசு ஆலோசிக்குமா?



1973 டிசம்பர் 3]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தமிழ்ப் புலவர்கள் இப்போது ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். எந்தெந்த அளவிற்கு சில பல கல்லூரிகளில் கட்டுப்படுத்தலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கிற நேரத்தில் மாலை நேரக் கல்லூரி தனியாக வைக்கவேண்டிய அவசியம் ஏற்படாது.

**திரு. வை. பாலசுந்தரம்:** நம் தமிழ்நாட்டில் அதிகமான தமிழ்ப் புலவர்கள் எதையாவது எழுதவேண்டுமென்ற துடிப்பில் இருக்கிறார்கள். அவர்களை நம் அரசு எந்த வகையில் பயன்படுத்திக் கொள்ளும்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** எதையாவது எழுதவேண்டுமென்று தோன்றுகிறவர்களை எப்படியாவது பயன் படுத்திக் கொள்ளவேண்டுமென்பது சரிப்பட்டு வராது. தமிழ் படிக்கவேண்டும், தமிழ் ஆர்வத்தோடு தமிழ் மொழி அறிவு பெற வேண்டும் என்றளவில் தமிழில் புலமை பெறுவதில் யாரும் தடையாக நிற்கமுடியாது. அவர்கள் எல்லாம் ஆசிரியர் தொழில் தான் வேண்டுமென்று வரும்போதுதான் அப்படி விண்ணப்பிப் பவர்களின் எண்ணிக்கை அதிகமாகிறது. அதில் குறிப்பிட்டவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பயிற்சி கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

## *Institute of Catering Technology*

*573 Q.—Thiru N. Dennis: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether the Catering Institute at Madras has been receiving candidates from Star Tourist Hotels for training; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) இந்நிறுவனம் நட்சத்திரப்பயணிகள் விடுதிகளில் இருந்து வரும் தொழில் பழகும் பயிற்சிச் சட்டம் 1961-ன் கீழ் சிற்றுண்டி விடுதி, செயலிட மேடை மற்றும் உணவு சமைத்தல் கலை, ஆகியவற்றின் ஆறு திங்களுக்கு தொழில் பழகு பயிற்சி அளிக்கின்றது. இத்துடன் விடுதிகளில் வரவேற்றல், மற்றும்

கணக்குவைப்புக் கலையிலும், 1973 மார்ச் திங்களிலிருந்து, புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படும் பயிற்சியாளர்களுக்கு, பயிற்சிகள் அளிக்கப்படும்.

**திரு. என். டென்னிஸ் :** எவ்வளவு காலம் பயிற்சி கொடுக்கப்படுகிறது. எவ்வளவு பீஸ் வசூலிக்கப்படுகிறது. வெஜிடேரியன், நான்-வெஜிடேரியன் ஆகியவைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்த சமையல் கலை கல்வி நிறுவனத்தில் 6 மாத காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதற்குப் பிறகு 2½ ஆண்டிலிருந்து 3 ஆண்டுகள் வரையில் ஏதேனும் ஒரு ஸ்டார் ஹோட்டலில் அவர்கள் பணியாற்ற வேண்டும். அப்படி பணியாற்றியதற்குப் பிறகு ஒரு பரீட்சையும் அவர்கள் எழுதவேண்டும். இரண்டு, மூன்று ஆண்டு காலத்திற்கு அவர்களுக்கு ஸ்டைபெண்டு தரப்படுகிறது. முதல் ஆண்டு காலத்தில் முதல் 6 மாத காலத்திற்கு, ரூ. 60, இரண்டாவது 6 மாத காலத்திற்கு ரூ. 70, இரண்டாவது ஆண்டு காலத்தில் ரூ. 80, மூன்றாவது ஆண்டு காலத்தில் ரூ. 90 ஸ்டைபெண்டு தரப்படுகிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** நட்சத்திர முத்திரை பெற்ற பயணிகள் விடுதிகளில் நட்சத்திரங்களும், நிலவும், தென்றலும் அதிலே உலாவுகிறவர்களுக்குக் கிடைக்கின்றது என்று சொல்லப்படுகிறதே, இவைகளெல்லாம் உண்மையா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** (மணி அடிக்கப்பட்டது). நான் இந்தக் கேள்வியை அனுமதிக்கவில்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** ஹோட்டல் தொழிற் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டங்கள் வைத்திருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்பொழுது புதியதாக தோன்றுகிற புதிய ஹோட்டல்களுக்கு ஆட்கள் தேவைப்படுகிறது. இப்பொழுது அவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் இல்லை. நமது கேட்டரிங் இன்ஸ்டிட்யூட்டில் பயிற்சி பெற்றவர்கள் இந்தியாவிலுள்ள பல்வேறு இடங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது அதிலே பயிற்சி பெற்றவர்களுக்கு



வேலை நெருக்கடி ஏற்படவில்லை. இன்னும் சில காலம் கழித்துத் தான் ஏற்பட்டால் ஏற்படலாம். இப்பொழுது அந்த நெருக்கடி வரவில்லை.

### *Pond Scheme in Kamakkavur*

*574 *Q.*—THIRU P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state the present stage of the scheme for the formation of a tank in Kamakkavur in Karur taluk ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இத்திட்டத்திற்கான ரூ. 37,500-க்கான மதிப்பீடு உள்ளூர் அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** இந்தக் குட்டைத் திட்டத்தைப் பரிசீலனை செய்வதற்கு நீண்ட நாட்கள் இழுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இதுபோன்ற சிறிய திட்டங்களை விரைவிலே முடித்துக் கொடுக்கும் அளவிற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்புதல் கிடைக்கவில்லை. வந்ததற்குப் பிறகு தான் இதுபற்றி வேலை துவங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பி. வெங்கடசாமி. கேள்வி கரூர் வட்டம் காமக்கவூர் குட்டை பற்றியது.

THIRU B. VENKATASWAMY : Sir, generally ponds constructed under the Soil Conservation Scheme have been handed over to Panchayats. So, may I know from the Hon. Minister whether the maintenance grant will be allotted to them so that they can maintain these ponds whenever they are completed ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தனிக் கேள்வி வேண்டும்.

### *Dam across river Kuduthalai*

*575 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to construct a bed-dam across the river Kuduthalai at Manavur in Tirutani taluk and direct the surplus water into Manavur tank; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) இல்லை.

(இ) இவ்வினுவிற்கு இடமில்லை.

**திரு. ஆ. பரந்தாமன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருவாய்த்துறை அமைச்சராக இருந்த நேரத்தில் அந்த மாவட்டத்து மக்கள் அவர்களிடையே நேரிடையாக இந்தக் கோரிக்கையைத் தெரியப்படுத்தியிருக்கிறுர்கள். அந்த வட்டாரத்து மக்களின் நீண்ட கால கோரிக்கையைப் பூர்த்தி செய்ய அரசு மறுபரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** சென்னை மாநகராட்சியை இதுபற்றி கலந்து ஆலோசித்த பொழுது வீராணம் திட்டம் முடிவடைந்தபிறகு இதை எடுத்துக் கொள்ளலாம் என்ற கருத்து தெரிவித்திருக்கிறுர்கள். விரைவிலே வீராணம் திட்டம் முடியும். இதுவும் கிடைக்கும் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### *Jambu Nadhi Scheme*

* 576 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the preliminary works relating to the Jambu Nadhi Scheme in Tirunelveli district has been started during the year 1971; and

(*b*) the expenditure incurred on the scheme so far?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) இல்லை.

(இ) இவ்வினுவிற்கு இடமில்லை.

### சரபங்கா நதியின் குறுக்கே உள்ள அணை

* 577 **வினு—திரு. வீ. செல்லதுரை:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டம், சரபங்காநதி கிழக்காற்றில் புதிதாகக் கட்டப்பட்ட அணையை உயர்த்தி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இல்லை.





### பாலாற்றில் ஊற்று நீர்

* 578 **வினு—திரு. கே. எ. வகாப்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணிப்பேட்டை, வாலாஜாபேட்டைக்கு அருகே உள்ள பாலாற்றில் மண்மேடிட்டிருக்கும் மணல் குவியல்களை அகற்றி ஊற்று நீர் வசதி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது செயல்படும் ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) இல்லை.

(இ) இவ்வினு எழாது.

**திரு கே. எ. வகாப்:** பாலாற்றுப் படுகையிலே நிறைய நீர் இருக்கிறது. அந்த நீரை எடுத்துக்கொள்வதையும், மேலும் பாலாற்றில் வெள்ளம் வருகிறபொழுது அந்த நீரைப் பெறுவதற்கு வசதியாக இருப்பதையும் தடுக்கின்ற மணல் குன்றுகளை அகற்றி, பாலாற்றின் பாழாறு என்ற பெயரை மாற்றி, அதை ஒரு நல்ல ஆருக மாற்றுவதற்கு, விவசாயிகளுக்கு நன்மை செய்வதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மணல் குவியலைப் பயன் படுத்திக்கொண்டு கசத்திற்கு வாய்க்கால் வெட்டி, அங்கிருக்கிற விவசாயிகள் பயனடைந்து கொண்டிருக்கிறுர்கள். அப்படி ஏதேனும் எடுத்துவிட்டால் கீழே இருக்கிற ஆயக்கட்டுகள் பாதிக்கப்படும் என்ற காரணத்தினுல் ஒன்றும் செய்வதற்கில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. நா. வீராசாமி:** மணல் குவியல்களை அகற்றுவிட்டால் வாலாஜா அருகில் கட்டுப்படுத்தி அணைக்கட்டில் நீரைத் தேக்கு வதற்கு வாய்ப்பில்லை. வருகிற நீர் அத்தனையும் கால்வாய்க்கு அப்படியே விடப்பட்டு விடுகிறது. அதைக் கொஞ்சம் ஸ்டோரேஜ் செய்து வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்தால் கீழே ஊற்று வருவ தற்கு வாய்ப்பாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் வட்டாரத்தைப் பற்றி தெரிந்தவர்கள். அங்கு இருக்கிற கால்வாயை நன்றாக அறிந்து வைத்திருக்கிறுர்கள். (மணி அடிக்கப்பட்டது) பிரச்னை அவர்களுக்குத் தெரியும் என்பதினுலே

[1973 டிசம்பர் 3

சொல்கிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே நீரைத் தேக்கி வைப்பதற்கு, ஒரு பெரிய அணை போல கட்டி நீரைத் தேக்கி, மற்ற கால்வாய்களுக்கு விடுவதற்கு ஒரு திட்டத்தை அமைப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** வாலாஜா அணைக்கட்டு பற்றி தெரியும். ஆனால் அதன் முழு நிலைமை எனக்குத் தெரியாது. அதைப்பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன்.

## பயணியர் விடுதிகள்

* 579 வினு—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

க. பரமத்தி ஒன்றியத்தைச் சார்ந்த சின்னதாராபுரம் பயணியர் விடுதி பழுதுபட்டிருப்பதைச் சீர்படுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** சின்ன தாராபுரத்திலுள்ள பயணியர் விடுதியைப் பழுது பார்த்துச் செப்பனிடுவதற்காக ரூ. 3,950-க்கு புதுக்கோட்டை கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை துறை) அனுமதி வழங்கியிருக்கிறார். நடப்பு ஆண்டு நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்து, இவ்வேலை இவ்வாண்டிலேயே நடைபெறும்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** சின்ன தாராபுரத்தில் உள்ள பயணியர் விடுதி மிகப் பெரிய பல அறைகளைக் கொண்டது. பல அறைகள் பழுதுபட்டிருக்கின்றன. ரூ. 3,000 அளவில் ஒன்றும் பழுது பார்க்க முடியாது. ரூ. 30,000 அளவுக்குத் தேவைப்படும். அந்த வட்டாரத்தில் வேறு பயணியர் விடுதி இல்லை. அது ஒரு நல்ல இடம், நல்ல கட்டடம். அதைச் சரிவர பழுதுபார்த்து பயன்படுத்திக்கொள்ள அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அதுபற்றிய முழு விவரமும் என்னிடத்தில் இல்லை. கோட்டப் பொறியாளர் ரூ. 3,950-க்கு ஒரு எஸ்டிமேட் தயாரித்து அனுப்பியதாக என்னிடம் தகவல் இருக்கிறது. மேற்கொண்டு என்னிடம் தகவல் இல்லை.



1973 டிசம்பர் 3]

* 580 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், பெரியபாளையம் பொதுப்பணித் துறை பயணியர் மாளிகையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பெரியபாளையத்திலுள்ள பயணியர் விடுதியை விரிவுப்படுத்தும் செயற்குறிப்பு தற்பொழுது அரசிடம் இல்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** இந்தப் பெரியபாளையத்தில் பெரிய அளவுக்குத் திருவிழாக்களும், முக்கியமான நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்ற நிலைமை இருப்பதினுல், அதிகாரிகளும், பயணியர்களும் அதிகமாக அங்கே செல்லுகிறார்கள். ஆகவே, மறுபரிசீலனை செய்து, ஒரு 'சூட்' இருக்கிற பயணியர் விடுதியிலே இரண்டு 'சூட்' டுகளை உருவாக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இந்தக் கிராமத்திற்கு மிக அருகாமையில் திருவள்ளூர், கும்முடிப்பூண்டி ஆகிய இடங்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் பயணியர் விடுதிகள் இருக்கின்ற காரணத்தினுல், அதை விரிவுபடுத்தும் யோசனை இல்லை.

## வைகை அணைப்பகுதி ஊழியர்கள்

* 581 வினு—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு பொதுப் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகை அணைப் பகுதியில் கார்டனில் வேலை செய்பவர்கள் 10 ஆண்டு காலமாக நிரந்தர ஊழியர்களாக இல்லாமல் இருக்கிறார்களா ?

(இ) ஆம் எனில், அவர்களை நிரந்தர ஊழியர்களாக ஆக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) & (இ) ஆம். வைகை அணைப் பகுதியில் வேலை செய்யும் ஊழியர்களை நிரந்தரப்பள்ளி உரிமை பெறும் ஊழியர்களாக ஆக்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது உள்ளது.

**திரு. நா. வெ. குருசாமி :** நிரந்தர ஊழியர்களாக ஆக்குவதற்கு செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். 10 ஆண்டுகளாக வேலை பார்த்தவர்களுக்கு அப்பாயிண்டுமெண்ட் போடாமல், ஓராண்டு, இரண்டாண்டுகள் வேலை செய்தவர்களுக்கு, என்.எம்.ஆரில் வேலை செய்தவர்களுக்கு அப்பாயிண்டுமெண்ட் போடப்பட்டிருக்கிறது. இது குறித்து அங்குள்ள 10 ஆண்டுகளாக வேலை செய்யும் ஊழியர்கள் மிகவும் வேதனைக்குள்ளாகியிருக்கிறார்கள். இது குறித்து அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகிற தகவல் எனக்குத் தெரியாது. ஆனால் தற்காலிகமாக இருப்பவர்களை நிரந்தரமாக்குவது பற்றி இது கேள்வி. இதுபற்றி அரசுப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது என்று தெரிவித்தேன். வைகையைப் பொறுத்து தற்காலிகமாக இருப்பவர்களை நிரந்தரமாக்குவது பற்றிய செயற்குறிப்பு அனுப்பப்பட்டது. எல்லா அணைகளிலும் இதுபோல் தற்காலிகமாக இருப்பவர்களைப் பட்டியல் போட்டு அனுப்பினால், எல்லாவற்றையும் சேர்த்து ஒரேயடியாகப் பரிசீலித்து அவர்களை நிரந்தரமாக்குவது பற்றி அரசு முடிவெடுக்கலாம் என்று தலைமைப் பொறியாளருக்குக் குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி :** 10 ஆண்டுகள் வேலை செய்த ஆட்களை நிரந்தரமாக்காமல், இம்மாதிரி டெம்பரரியாக வைத்திருக்கும் முறை சரியான முறை தானா ? இது மாதிரி நிலைமை பல அணைகளில் இருக்கிறது. ஒன்றிரண்டு ஆண்டுகள் தொடர்ந்து வேலை செய்தால், அவர்களை நிரந்தரமாக்குவதற்கு ஒரு நிரந்தரமான விதியை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நிரந்தரமாக்குவதுபற்றித் தான் அரசு கருதிக்கொண்டிருக்கிறது. முழுமையாக ஒரு திட்டத்தைத் தயாரித்து அனுப்பவேண்டும் என்று தலைமைப் பொறியாளரைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அது வந்ததற்குப் பிறகு அரசு பரிசீலனை செய்து முடிவெடுக்கும்.

**திரு. த. சோனையா :** வைகை அணைக்கட்டுத் தோட்டத்தில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படுவதற்கான ஒரு தேதியை அரசு அறிவிக்குமா ?





**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தேதி அறிவிக்க முடியாது ஆனால், சீக்கிரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இம்மாதிரியாக தற்காலிகமாக வேலை செய்யும் ஆட்கள் இருக்கும்பொழுது, நிரந்தரமாக வேலைக்கு ஆட்கள் தேவைப்படும்பொழுது, வெளியிலிருந்து ஆட்களை எடுக்கக்கூடாது, தற்காலிகமாக வேலை செய்பவர்களையே நிரந்தரமாக்கவேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தற்காலிகமாக வேலை செய்பவர்களை நிரந்தரமாக்குவது பற்றித் தான் பரிசிலனையில் இருக்கிறது. நிரந்தரமாக்குவதற்கு வேறு வெளியிலிருப்பவர்களிடமிருந்து மனுக்களை வரவழைப்பது என்பது அல்ல

*New distillery at Mundiambakkam*

* 582 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether any distillery has been started at Mundiambakkam near Villupuram in 1973: and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) ஆம். இவ்வடிசாலை 1973 ஜூலையில் உற்பத்தி செய்யத் தொடங்கியது.

*Collection of arrears from tenants*

* 583 Q.—THIRU K. SUPPU : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether representations have been made to the Government requesting the postponement by one year of the repayment of land rent arrears by the tenants of flood affected areas; and

(b) if so, the action taken thereon?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : (a) It is presumed that by the term "land rent arrears by the tenants " the Hon'ble Member means the arrears of rent payable by the tenants to the landholders. If so, the answer to the question is 'Yes'.

(b) The Government have decided that there is no need for the extension of the time-limit allowed under the Tamil Nadu Cultivating Tenant Arrears of Rent (Relief) Act, 1972.

[1973 டிசம்பர் 3

(முற்பகல் 9.30)

**திரு. எஸ். வடிவேல் :** தலைவரவர்களே, சென்ற ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தாலும் புயலாலும் பல்வேறு குத்தகைதாரர்களும், சாகுபடியாளர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் அவர்கள் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட அளவுக்கு நெல் அளக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதனால் அவர்கள் சிவில் கோர்ட் மூலமாகவும், ரெவின்யூ கோர்ட் மூலமாகவும் வெளியேற்றப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட குத்தகைதாரர்கள், சாகுபடிதாரர்கள் நிலைமையை நியாயமான முறையில் பரிசீலித்து, தள்ளுபடி செய்து நெல் அளக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இப்போது இருக்கின்ற குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டப்படி ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான நெல் முழுதும் அளக்கப்பட்டிருந்தால், பாக்கியை வசூல் செய்யக்கூடாது என்று இருக்கிறது. வெள்ளத்தால் ஏதாவது பாதிப்பு ஏற்பட்டிருந்தால் அதை பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கவும் விதியில் இடம் இருக்கிறது.

## *Sugar Cane Cess Fund*

* 584 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to utilise the Sugar Cane Development Cess Fund for executing village roads; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) 1972-73-ம் ஆண்டு ஜூலை திங்களில் 47 சாலைப் பணிகளுக்கு 265.68 லட்சம் ரூபாய்க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகளுக்காக 1972-73-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 1973-74-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலும் 50 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது



1973 டிசம்பர் 3]

**திரு. என். டென்னிஸ் :** தலைவரவர்களே, இந்த சாலை பராமரிப்புப் பணி எல்லா மாவட்டங்களிலும் நடைபெறுகிறதா ? எந்த அடிப்படையில் பராமரிக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தற்போதுள்ள நடைமுறைகளின்படி அந்தந்த ஆலைகளில் வசூலாகிற தொகை அந்தந்த ஆலைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் பயன்படுத்தப்படுவதற்காக ஒதுக்கப்படுகிறது.

**திரு. எஸ். நல்லசாமி :** தலைவரவர்களே, அந்தந்த ஆலைகளில் வசூலாகிற பணத்தை அந்தந்த பகுதிகளிலேயே செலவிடுவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். சில ஆலைகளில் 20 லட்சம், 30 லட்சம் வசூலாகிறது ; அதில் செலவாகாமல் ஒரு பகுதி மிச்சம் கூட இருக்க வாய்ப்பு இருக்கிறது. சில ஆலைகளில் 2 லட்சம், 3 லட்சம் வசூலாகிறது; சில ஆலைகளில் பணம் வசூலாகாமலும் இருக்கிறது. ஆக, வசூலாகின்ற அடிப்படையில் செலவு செய்வது என்றால் அது பாரபட்சமாக இருக்கும் அல்லவா ? ஆகவே, பாரபட்சம் இல்லாமல் பாதை அமைப்பதற்கு பகிர்ந்தளிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, இன்னும் செலவு செய்யாமலும் பணம் மீதம் இருக்கிறது; வசூலாகாமலும் இருக்கிறது. எல்லாம் வசூலாகிய பிறகு, எல்லாவற்றையும் சேர்த்து, உரிய முறையில் செலவு செய்ய கருதிக்கொண்டிருக்கிறோம். ஆனால் இப்போதுள்ள விதிகள்படி அந்தந்த ஆலைகளில் வசூலாகின்ற பணம் அந்தந்த ஆலைப் பகுதிகளிலேயே செலவிடப்படும். இதை மாற்றி அமைக்கவேண்டுமென்று கோரிக்கைகள் வந்தால் பரிசீலனை செய்யப்படும்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** இந்த 'சுகர் கேன் டெவலப்மென்ட் செஸ் பண்ட்' எந்த அடிப்படையில் வசூல் செய்யப்படுகிறது ? எல்லா ஆலைகளுக்கும் இந்த விதி பொருந்துமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இப்போது ஒரு டன்னுக்கு 5 ரூபாய் என்ற அளவில் வசூல் செய்யப்படுகிறது. ஆலை தொடங்கி, 3 ஆண்டுகளுக்குப் பின்னால் இந்த செஸ் பண்ட் வசூல் செய்ய அனுமதிக்கப்படுகிறது.

[1973 டிசம்பர் 3

THIRU K. S. KOTHANDARAMIAH : Only in those areas where there are sugarcane industries, this is extra benefit to them. But in areas where there are no sugar mills, may I know the arrangements made to have these roads?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : The purpose of this fund is two-fold. One is to help the producers by laying more roads in their area. The other is to develop sugarcane by developing the area of growth and by helping the sugarcane growers; but both these activities are taking place only in the areas where cess is being collected and the money is spent within the area where it is collected.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister whether any cess fund has been created and amount collected in Dharmapuri sugar mills? If so, may I know whether the amount collected is utilised for the sugar mill itself or for some other agency.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : I do not have actual facts before me.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, இந்த கரும்பு செஸ் நிதியிலிருந்து பல லட்சக்கணக்கில் செலவு செய்யப்பட்ட சாலைகள் மறுபடியும் சரியாக பராமரிக்கப்படாததால் பல இடங்களில் தார் சாலைகள் எல்லாம்கூட தூர்ந்து போகின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, கரும்பு செஸ் நிதியிலிருந்து ஒரு தொகையை ஒதுக்கி, ஹைவேஸ் மூலம் பழைய சாலைகளைப் பராமரிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இப்போதுள்ள விதிகளின்படி அந்தந்த ஆலைகளில் வசூலான பணம் அந்தந்த ஆலைப் பகுதிகளில் ரோடு வசதிக்காகச் செலவிடப்படுகிறது. அதில் பழைய சாலைகளை பராமரிப்பதும் அடங்கும். பொதுப்பணித் துறை மூலம் இந்த சாலைப்பணிகள் நிறைவேற்றப்பட்டு, அந்த செலவை கரும்பு செஸ் நிதியிலிருந்து அவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள்.



1973 டிசம்பர் 3]

திரு. ந. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அந்தந்த ஆலைகளில் வசூலாகின்ற பணம், அந்தந்த ஆலைகளுக்கு உட்பட்ட எல்லா ஊர் களிலும் முறையே பகிர்ந்து செலவிடப்படுகிறதா ? இல்லை என்றால், அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வி எனக்கு சரியாகப் புரியவில்லை. எல்லா ஊர்களிலும் என்று காதில் விழுந்தது. ஒரு குறிப்பிட்ட ஆலைக்கு கரும்பு உற்பத்தியாகின்ற எல்லா ஊர் களுக்கும், பாதை வசதி செய்யப்படுவதற்கு விதி இருக்கிறது.

திரு. சே. எ. வகாப் : தலைவரவர்களே, அந்தந்த ஆலைகளில் வசூலாகின்ற கரும்பு செஸ் நிதி, அந்தந்த ஆலைகளுக்கு உட்பட்ட பகுதிகளிலேயே செலவு செய்யப்படுகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். சில இடங்களில் அப்படிச் செய்யப்படவில்லை. உதாரணமாக, மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை இருக்கிறது. லட்சக்கணக்கில் அதற்கு பணம் இருந்தும், எங்கள் பகுதிக்கு கேட்டும் பெறமுடியவில்லை. ஆகவே, வசூலாகின்ற கரும்பு செஸ் நிதியை அந்த ஆலையின் எல்லைக்குட்பட்ட எல்லா கிராமங்களின் ரோடு அபிவிருத்தி வேலைக்கும் செலவிட ஆணை பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இப்போதுள்ள விதிப் படி அந்தந்த ஆலைகளிலிருந்து வசூலாகிற தொகை அந்தந்த ஆலை களுக்குட்பட்ட இடங்களுக்கே செலவு செய்யப்படுகிறது. அது சம்பந்தப்பட்ட விதி ஆங்கிலத்தில் இருக்கிறது ; படிக்கிறேன்.

Separate accounts should be maintained for sugarcane cess fund collections and expenditure out of it on improvement and maintenance of roads relating to each one of the mill areas.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளில் எல்லாம் சேர்த்து 3 கோடி ரூபாய் கடன் இருப்பதாக அறிகிறேன். அதை எல்லாம் உடனடியாக வசூல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஏறத்தாழ 4 கோடி ரூபாய் பாக்கி இருந்தது. அதைக் கொஞ்சம் கொஞ்சமாக வசூல் செய்து வருகிறோம். 1 : 1 என்ற அடிப்படையில், அதாவது இந்த

[1973 டிசம்பர் 3

ஆண்டு வசூலாக வேண்டிய தொகையும், வசூல் பாக்கி இருக்கக் கூடிய ஆண்டுகளில் ஒரு ஆண்டு தொகையும் சேர்த்து வசூல் செய்கிறோம்.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவரவர்களே, ஒரு டன்னுக்கு 5 ரூபாய் செஸ் நிதி வசூலிக்கப்படுவதாகச் சொன்னார்கள். இந்தப் பணம் ஆலை முதலாளிகளிடமிருந்து வசூலிக்கப்படுகிறதா அல்லது கரும்பு உற்பத்தி செய்கின்ற விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப் படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இந்த நிதி ஆலை முதலாளிகளிடம் இருந்து வசூல் செய்யப்படுகிறது.

**திரு. த. சோனையா :** தலைவரவர்களே, மதுரை மாவட்டத்திலிருக்கிற கரும்பாலைக்கு இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்தும் கரும்பைத் தருகிறோம். ஆகையால், இந்தக் கரும்புத் தீர்வைப் பணத்திலிருந்து இராமநாதபுரம் மாவட்டத்திலும் ரோடு போடுவதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** மதுரையில் அலங்காநல்லூரில் இருக்கின்ற சர்க்கரை ஆலைக்கு இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்தும் கரும்பு அனுப்புவதாகச் சொன்னார்கள். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கரும்பு உற்பத்தி இடங்களும் இந்த ஆலையின் ரெஜிஸ்டர்டு ஏரியாவாக இருந்தால், அங்கும் இந்தப் பணம் செலவிடப்படும். விதிகளின்படி எல்லா ரெஜிஸ்டர்டு ஏரியாவுக்கும் இந்தப் பணம் செலவிடப்பட வேண்டும்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், இந்த செஸ் நிதி ஒவ்வொரு ஆண்டும் வந்துகொண்டே இருக்கின்ற காரணத்தால், அந்த ஆலைப் பகுதிகளிலுள்ள இடங்களுக்கு மட்டும் செலவு செய்வதென்றால், ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குப் பின்னால் அபிவிருத்தி செய்யப் படவேண்டிய தேவை இல்லாமல், பணம் மிச்சமாகும். ஆகவே, மிச்சமாகும் பணத்தை பிற பகுதிகளில் செலவிட ஏதாவது திட்டம் இருக்கிறதா ? பல ஆலை முதலாளிகளிடமிருந்து இந்தப் பணம் வசூலாகாமல் பாக்கி இருக்கிறது. அதை வசூல் செய்ய துரித நடவடிக்கை எடுக்கப்படுமா ?



1973 டிசம்பர் 3]

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, மதுராந்தகத்திலே வசூல் செய்யப்படுகிற பணம் போதுமான அளவு மதுராந்தகத்திலே செலவு செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். இப்போதுள்ள நிலைமை, ஐந்தாறு வருஷங்களுக்கு, எவ்வளவு செஸ் ஃபண்ட் வசூலித்தாலும் ரோடு அபிவிருத்திக்கும், கரும்பு அபிவிருத்திக்கும் செலவு செய்ய இடம் இருக்கிறது. அதற்குப் பின்புதான் மிச்சமா இல்லையா என்ற பிரச்சினை எழும்.

**திரு. நா. வீராசாமி :** கரும்புத் தீர்வையைப் பங்கிடுவதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அந்தப் பணம் அக்ரிகல்சர் டிப்பார்ட்மெண்டுக்குப் போய், பினான்சுக்குப் போய், அதற்குப் பின்னர் தான் ஹைவேஸ் டிபார்ட்மெண்டுக்கு இவ்வளவு என்று ஒதுக்கப் படுகிறது. இப்படிப் போகிற நேரத்தில் சாலைகளைப் போட, மெயின்டைன் பண்ண இடம் இருப்பதில்லை. சாலைகள் போட்டால் பாலம் கட்ட முடிவதில்லை. இந்தப் பிரச்சினைகளைப் போக்க கரும்பு செஸ் நிதியை நேரடியாக ஹைவேசுக்கே டிரான்ஸ்பர் செய்து விட்டால் சாலைகளைப் போடவும், பாலங்களைப் போடவும், பராமரிக்கவும் வசதியாக இருக்கும். இப்படிப்பட்ட ஏற்பாட்டை அரசு செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இப்போது வசூலிக்கப் படுகின்ற பணம் கன்சாலிடேடெட் ஃபண்டுக்குப் போகிறது. தனியாகக் கணக்கு வைத்திருக்கிறார்கள். கேட்ட நேரம் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

**திரு. எஸ். நல்லசாமி :** இந்த செஸ் ஃபண்ட் 1955-ல் இருந்து 1973 வரை எவ்வளவு வந்திருக்கிறது? 1973 வரை எவ்வளவு செலவு செய்திருக்கிறார்கள்? பூராவும் செலவாகிவிட்டதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கைவசம் இருக்கும் புள்ளி விவரம், முதலில் இருந்து இல்லை. ஆனால், 1970-71-ல் இருந்து இருக்கிறது. 1970-71-ல் வசூலானது 31 லட்சம்; செலவானது 32 லட்சம்; 1971-72-ல் வசூலானது 111 லட்சம்; செலவானது 30 லட்சம்; 1972-73-ல் வசூலானது 256 லட்சம்; செலவானது 50 லட்சம்.

[1973 டிசம்பர் 3

### காரணி கிராமத்தில் வேளாண்பொருள் கிடங்கு

*585 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டி துணை வட்டம், காரணியில் விவசாயத் துணைக் கிடங்கு ஏற்படுத்துவதில் மேலும் காலதாமதம் ஏற்படக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** காரணிக் கிராமத்திற்கு உடனடித் திட்டம் இல்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** என் பிறந்த ஊரான இந்தப் பகுதியில் ஏராளமான விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்கள் ஆரணி யாற்றைத் தாண்டி இரண்டு பஸ்களைப் பிடித்து கும்முடிப்பூண்டிக்குப் போக வேண்டியிருக்கிறது. 62 ஊராட்சிகளைக் கொண்ட இந்த ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டு துணைக் கிடங்குகள்தான் இருக்கின்றன. ஆகவே, சிறப்பு நடவடிக்கை எடுத்து ஒரு துணைக் கிடங்கை காரணியில் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இதை உடனடியாகக் கவனிப்பதற்கில்லை என்றுதான் சொன்னேன். ஏனென்றால், ஒரு மைலுக்கு அப்பாலுள்ள ஆரணியில் ஒரு டெப்போ இருக்கின்ற காரணத்தால், காரணியில் மற்றொன்று உடனடியாகத் தேவையில்லை என்று கருதப்படுகிறது.

### வான்கோழி வளர்ச்சித் திட்டம்

*586 வினா—திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வான்கோழி வளர்ச்சித் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இத்திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்று கோழி வளர்ப்புக் கழகம் 'பௌல்ட்ரி டெவலப்மென்ட் கார்ப்பரேஷன்' கேட்டுக் கொள்ளப்பட்டிருக்



1973 டிசம்பர் 3]

### அரிசனக் குடியிருப்புகளுக்கு மேல்நிலை குடிநீர்த்தொட்டிகள்

*587 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிபூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சூரபூண்டி அரிசனக் காலனியில் மேல்நிலைக் குடிநீர்த்திட்டம் அமைவதில் ஏற்படும் காலதாமதத்திற்குக் காரணம் என்ன ?

(இ) இது எப்போது முடிவடையும் ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) கும்முடிபூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சூரபூண்டி அரிசனக் காலனியில் மேல்நிலை குடிநீர்த்திட்டம் அமைக்கும் செயற்குறிப்பு ஒன்றும் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** இப்படி அமைப்பதற்கு வேண்டிய நிதி வசதி இல்லாத காரணத்தால் குடிநீர் வாரியத்தின் மூலமாக எல்லாக் கிராமங்களுக்கும், ஊராட்சிகளுக்கும் கடன் தந்து இந்த திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்று கருத்தரங்கில் சொல்லப்பட்டது எந்த நிலைமையில் இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஊராட்சிகளுக்குக் கடன் கொடுக்க வேண்டுமென்ற கருத்தறிவிக்கப்பட்டிருக்கிறது. அதைத் திருப்பிக் கொடுக்கிற வசதி, வாய்ப்புகள் இருக்கின்றனவா என்பதைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

*588 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிபூண்டி நகரப் பஞ்சாயத்தில் உள்ள வெட்டிக் காலனி அரிசன மக்களுக்கு மேல்நிலைக் குடிநீர் திட்டம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், இது எப்போது முடிவடையும் ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

[1973 டிசம்பர் 3

## ஆரணி-பாலவாக்கம் சாலையில் பாலம்

* 589 வினா—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொன்னேரி வட்டம், ஆரணியையும் பாலவாக்கம் கிராமத்தையும் இணைக்க ஆரணியாற்றின் குறுக்கே தரைப்பாலம் Road Dam அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இல்லை.

**திரு. கா. வேழவேந்தன்:** நம்முடைய அரசு ஏற்பட்ட பிறகு ஆரணியாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டி அந்த அணை இருக்கும் கிராமங்களுக்குப் பக்கத்தில் தண்ணீர் தேங்குகிறது. ஆகவே, பல ஊர்களை இணைக்கின்ற இந்தப் பாலத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகையில் 33 லட்சம் ரூபாய்தான் இன்னும் பாக்கி இருக்கிறது. ஏற்கெனவே நிதி ஒதுக்கப்பட்ட திட்டங்கள் இருக்கும் காரணத்தால் இப்போது இதனை ஏற்றுக் கொள்ள சாத்தியமில்லை.

## தென்னார்க்காடு மாவட்டத்தில் புதிய பாலங்கள்

* 590 வினா—**திரு. ந. தருமலிங்கம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தியாகதுருகம் அருகே ஓடும் மணிமுத்தாறு நதி குறுக்கே ஒரு மேம்பாலமும், அசகுளத்தூர் அருகே ஓடும் மயூரா நதியின் குறுக்கே ஒரு மேம்பாலமும், ஈருடையான்பட்டி அருகே ஓடும் முசுகுந்தா நதியின் குறுக்கே ஒரு மேம்பாலமும் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இல்லை.

**திரு. ந. தருமலிங்கம்:** தென்னாற்காடு மாவட்டத்தில் ரிஷிவந்தியம் தொகுதி பின்தங்கிய தொகுதி. அது காடுகளும் ஆறுகளும் நிறைந்த பகுதி. ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு



1973 டிசம்பர் 3]

செல்ல ஆறுகளைக் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, மழைக் காலங்களில் மணிமுத்தா, முசுகுந்தா, மயூரா நதிகளைக் கடந்து செல்ல முடியாத அவல நிலை இருக்கிறது. அந்த நிலையைப் போக்குவதற்கு அரசு மறுபரிசீலனை செய்து மேம்பாலம் கட்டித் தராவிட்டாலும் தரைப் பாலமாவது கட்டித்தர முன்வருமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** மயூரா நதியின் மீதும் மணிமுத்தா நதியின் மீதும் பாலம் கட்டவும், சாலை மேம்பாட்டுக்காகவும் 13 லட்சம் ரூபாய் செலவாகும் என்று அறிவித்துள்ளார்கள். மணிமுத்தா நதியில் பாலம் கட்ட 6 லட்சம் ரூபாய்; மயூரா நதியில் பாலம் கட்ட 5 லட்சம் ரூபாய், சாலை மேம்பாட்டுக்கு 2 லட்சம் ரூபாய் ஆக 13 லட்சம் செலவாகுமென்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அது பிற சாலைகள் திட்டத்தில் சேர்க்கப்படலாம் என்பது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. முசுகுந்தா நதியில் பாலம் கட்ட 30,000 ரூபாய் செலவாகுமென்று 'ரப் எஸ்டிமேட்' தயாரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. இதுவும் இதர சாலைகள் என்ற தலைப்பில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஒன்று.

## தாம்பிரவருணி பாலத்தில் போக்குவரத்து.

* 591 வினா—**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவியில் தாம்பிரவருணி ஆற்றின் குறுக்கே புதிதாகக் கட்டப்பட்டுள்ள பாலத்தின் வழியாகப் போக்குவரத்து நடைபெறுவது ஜூன் 1972 முதல் தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், காரணம் என்ன ?

(உ) அந்தப் பாலம் எப்போது கட்டப்பட்டது ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) ஆம். 16—6—1972 முதல் 20—6—1972 முடிய ஐந்து நாட்கள் மட்டும் தற்காலிகமாக தடைப்பட்டது.

(இ) சில மாதங்களுக்கு முன் எதிர்பாராத பலத்த மழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே சேரன்மகாதேவி பக்கம் கட்டப்பட்டுள்ள தாம்போதி

யின் கரை ஓரத்தை இணைக்கும் சுவர்களுக்கு இடையில் நிரப்பப்பட்ட மணல் தண்ணீரின் வேகத்தில் அடித்துச் செல்லப்பட்டிருந்தது. எனவே தாம்போதியின் மேல்தளத்தில் போடப்பட்ட கான்கிரிட் உடைந்து விட்டது. இதனால் போக்குவரத்து தடைப்பட்டது. உடனடியாக நடவடிக்கை எடுத்து 21—6—1972 முதல் போக்குவரத்து அனுமதிக்கப்பட்டது.

(உ) 1965-ம் வருடம் இந்த வேலை கட்டிமுடிக்கப்பட்டது.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** இப்பேர்ப்பட்ட சூழ்நிலைகள் இனிமேல் உருவாகாமல் இருக்கும் வகையில் இருபக்கமும் கரைகளைப் பலப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** எதிர்பாராமல் ஏற்பட்டது என்று சொன்னேன். எதிர்பாராமல் ஏற்படுவதற்கு இப்போதும் உறுதியளிக்க முடியாது.

### *Dhobykhana at Saidapet.*

*592 Q.—THIRU K. M. SUBRAMANIAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the Dhobykhana constructed with Government loan and grant at Saidapet is lying in a dilapidated condition; and

(b) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

THIRU K. M. SUBRAMANIAM: I am very sorry this reply is given. There is a Dhobykhana in Saidapet which is in a dilapidated condition. I do not know how the Hon. Minister got this answer from the Department. It is lying idle for the last ten years. I only request, through you, Sir, the Hon. Minister may go and inspect the place. I am prepared to go with him.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவர் அவர்களே, சைதாப்பேட்டையில் சலவை செய்யும் இடமானது அரசு கடன் உதவியோ, மானியமோ பெற்றுக் கட்டப்பட்டது அல்ல. அது பூராவும் மாநகராட்சி நிதியிலிருந்து கட்டப்பட்டது. 1959-60-ம்



ஆண்டுக்கான மாநகராட்சி வரவு செலவுத் திட்டத்தில் சைதாப்பேட்டை ரிச்சர்டு பூங்கா கிணற்றிலிருந்து சலவையாளர் கிணற்றுக்குத் தண்ணீர் வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகும் சலவைத் தொழிலாளர்கள் கீழ்ப்பாக்கம் நீர்நிலையத்திலிருந்து தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்றும், துணிகளைப் பாதுகாக்க சுற்றுச் சுவர் வைத்துக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டு மாநகராட்சி வரவு செலவுத் திட்டத்தில் அடுத்த வருடமும் தகுந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது சுற்றுச் சுவர் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டு ஒப்பந்தத்தில் சில தடைகள் ஏற்பட்டு ஒருவாறு கட்டி முடிக்கப்பட்டது. புயலால் ஆர்.சி. கூரைகள் பாதிக்கப்பட்ட நேரத்தில் தங்க வசதியின்றி வீடின்றி இருந்தவர்கள் அந்தக் கட்டடத்தில் குடிபுகுந்தனர். மிக்க சிரமத்தோடு அங்கு தங்கியிருந்த மக்கள் அகற்றப்பட்டார்கள். தண்ணீர்ப் பற்றாக்குறையின் காரணமாக கீழ்ப்பாக்கம் நீர் நிலையத்திலிருந்து தண்ணீர் வசதி அளிக்க இயலாத நிலை இருந்தது. இப்போது தண்ணீர் வசதியில் முன்னேற்றம் ஏற்பட்டு தற்போது தக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, அதைப் பற்றிக் குறிப்பில் இருப்பதைச் சொல்லியிருக்கிறேன். அவசியம் ஏற்பட்டால் பார்வையிடத் தயாராக இருக்கிறேன்.

### திருப்புவனம் ஒன்றிய அலுவலர்களுக்குக் குடியிருப்புகள்.

***593 வினா—திரு. த. சோணையா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் அருகில் அலுவலர்களுக்கு 1973-74-ல் வீடு கட்டும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. த. சோணையா:** திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் அலுவல் செய்யும் அலுவலர்கள் வீடு வாடகைக்கு கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். வேறு சில ஊராட்சி ஒன்றிய அலுவலர்

களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்திருப்பதைப்போல உடனடியாக அடுத்த ஆண்டிலாவது திருப்புவனம் ஊராட்சி ஒன்றிய அலுவலர் களுக்கு வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தமிழ்நாட்டில் உள்ள 374 ஒன்றியங்களில் இன்னமும் அலுவலர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படாத ஒன்றியங்கள் 180 இருக்கின்றன. அந்த 180 ஒன்றியங் களில் திருப்புவனம் ஒன்று. இந்த ஒன்றியங்களுக்கு படிப்படி யாகத்தான் அலுவலர்கள் குடியிருப்பு கட்டப்படும்.

### *Meeting of Electricity Board and World Bank Officials.*

* 594 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that the World Bank Team had meetings with the representatives of the State Electricity Board in June 1972; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) ஆம்.

(ஆ) விவாதத்தின்போது, அரசுக்கு மின்சார வாரியம் செலுத்தவேண்டிய வட்டி நிலுவைகளைத் தள்ளி விடுதல், தேய் மான நிதியைக்கடன் கரைப்புக்காகப் பயன்படுத்திக்கொள்ளுதல், கிராம மின் இணைப்புத் திட்டங்களுக்காக அரசு உதவித்தொகை அளித்தல், மின்சார வாரியத்துக்குக் கிடைக்கவிருக்கும் வருவாய் ஆகியவை பற்றி விவாதிக்கப்பட்டது.

DR. H. V. HANDE : May I know whether the Government have also discussed with the representatives the inordinate delay in the supply of certain important parts which require foreign exchange to the Kalpakam Plant by the Canadian Company? If there is delay, may I know whether the Hon. Minister had discussed with the World Bank Team as to how to set at naught this delay and rectify things?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** நான் கூறியபடி இந்த மூன்று விஷயங்கள்தான் விவாதிக்கப்பட்டன. மேற்கொண்டு விவாதிக்கப்படவில்லை.



THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister for Electricity whether the World Bank is going to give loan so as to implement the present schemes successfully in Tamil Nadu?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** பொதுவாக வாரியத்திற்கு நிதி திரட்டப்படவேண்டுமென்ற கருத்து ஆலோசிக்கப்பட்டிருக் கிறது. விவாதிக்கப்பட்ட விஷயங்கள் நல்ல முறையில் இருப்பதாக மத்திய சர்க்கார் கூறியிருக்கிறது.

**திரு. நா. வீராசாமி :** அந்தப் பேச்சு வார்த்தையின்போது வாங்கியுள்ள கடனுக்கான வட்டி தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்பது கேட்கப்பட்டதா ? அதற்கு உலக வங்கியின் பதில் என்ன என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** அதுபற்றியும் பேசியிருக் கிறார்கள். ஆனால் எந்த ஒரு முடிவும் எடுக்கப்படவில்லை.

### மாயூரம் அருள்திரு இந்தளூர் கல்யாண மண்டபம்

* 595 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மாயூரம் அருள்திரு இந்தளூர் கோயிலுக்குச் சொந்தமான திருமண மண்டபத்தினைக் கட்டி முடிக்க அரசு அனுமதித்துள்ள சலுகைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** சலுகைகள் ஏதும் கொடுக்கப்படவில்லை.

**திரு. என். கிட்டப்பா :** மாயூரம் திரு. இந்தளூர் ரங்கநாத சுவாமி கோயிலில் இரண்டு லட்சத்து இருபதாயிரத்தில் ஒரு திருமண மண்டபம் கட்ட மதிப்பீடு செய்யப்பட்டது. ஆயினும் அரசு 81 வது பசலிக்கு குத்தகை அளந்துவிட்டால் பாக்கி யுள்ளவை தள்ளுபடி செய்யப்படும் எனச் சட்டம் கொண்டுவந்த காரணத்தினால் ஆலயத்திற்கு வரவேண்டிய 3 லட்ச ரூபாய் வருமானம் வர இயலாமல் போய்விட்டது. இதை மனதில்

[1973 டிசம்பர் 3

கொண்டாவது அரசாங்கமே அதற்கு மானியமாகவோ அல்லது வேறு கோயில்களின் நிதியையோ மாற்றி அளிக்க வழிவகை செய்வார்களா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** அந்தத் திருமண மண்டபத்தைக் கட்ட போதுமான நிதி வசதி அந்தக் கோயிலில் இருக்கிற காரணத்திஞல் வேறு கோயிலில் இருந்து மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

## பழனி கோயில் திருவிழாச் செலவு.

* 596 வினு—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

அண்மையில் பழனி கோயிலில் நடைபெற்ற கும்பாபிஷேகத் திருவிழாவுக்கு அரசு செலவிட்ட தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** ஏதுமில்லை.

## திருத்தணி கோயிலுக்கு புதிய தேர்.

* 597 வினு—**திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருத்தணி கோயிலுக்கு தங்கத்தேர் செய்வதற்கான செயற் குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** ஆம்.

**திரு. வை. பாலசுந்தரம்:** இப்படி தங்கத் தேர் செய்கிறபோது அரசின் சம்மதம் பெற்றுச் செய்கிறுர்களா? அல்லது கோயிலில் இருக்கிறவர்களே முடிவு செய்துகொண்டு செய்கிறுர்களா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** கோயிலில் இருக்கிற அறங் காவலர்கள் முடிவு செய்துகொண்டு, அறநிலையத் துறை ஆணையரின் அனுமதி பெற்று நிறைவேற்றுகிறுர்கள்.



1973 டிசம்பர் 3]

**திரு. ஆ. பரந்தாமன்:** திருத்தணி திருமுருகன் ஆலயத்தில் சேர்த்து வைத்திருந்த பொன்னை சில மாதங்களுக்கு முன்ஞல் பம்பாய் மாநிலத்தில் உருக்கிஞர்கள் என்று கேள்விப்பட்டோம். அப்படி உருக்கப்பட்ட பொன் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

## வீரவநல்லூர் அருள்திரு பூமிநாதசுவாமி கோயில் அறங்காவலர்கள்

* 598 வினு—**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு அற நிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வீரவநல்லூர் என்னும் ஊரில் உள்ள அருள்திரு பூமிநாதசுவாமி கோயில் சிறுகாலசந்தி கட்டளையில் உள்ள அறங்காவலர் பதவிகள் 23—5—1973 முதல் நிரப்பப்படாமல் உள்ளன என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) & (இ) இப்பதவிகள் 23—7—1973 முதல் காலியாக உள்ளன. இவற்றை நிரப்ப, உரிய நடவடிக்கைகள் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## வெள்ளிக்குறியிடப்படாத வினுக்கள்.

### அரசு ஊழியர்களுக்கு மலைவாசப்படி.

1 வினு—**திரு. அ. தேவேந்திரன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

அரசு ஊழியர்களுக்கு அண்மையில் மலைவாசப்படி உயர்த்தப்பட்டு உள்ளதா?

விடை—

இல்லை.

[1973 டிசம்பர் 3

**உரிமம் வழங்கப்பெற்றுள்ள லாரிகள்.**

2 வினா—**திரு. அ. தேவேந்திரன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மொத்தம் எத்தனை லாரிகளுக்கு பர்மிட் தரப்பட்டுள்ளது ?

(இ) தனியாருக்கு சொந்தமான லாரிகள் எத்தனை ?

விடை—

(30—6—1973-ல் உள்ளபடி)

(அ) 21,300.

(இ) 20,213.

**முத்துக்குளித்தல்.**

3 வினா—**திரு. அ. தேவேந்திரன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் இந்த ஆண்டு முத்துக்குளித்தல் உண்டா ?

(இ) கடந்த ஐந்தாண்டுகளில் அங்கு கிடைத்த முத்துக்களின் மொத்த மதிப்பு எவ்வளவு ?

(உ) உயர்ந்த விலை போகும் முத்து ஏதாவது கிடைத்ததா ?

விடை—

(அ) இல்லை.

(இ) கடந்த ஐந்தாண்டுகளில் தூத்துக்குடியில் முத்துக் குளித்தல் நடைபெறவில்லை.

(உ) இவ்வினாவிற்கு இடமில்லை.

4 வினா—**திரு. அ. தேவேந்திரன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973-74-ம் ஆண்டில், தூத்துக்குடியில் முத்துக்குளிப்பின்போது-முத்தெடுக்கும் தொழிலாளிகள் யாராவது ஆபத்துக்குள்ளானார்களா ?

(இ) ஆம் எனில், அரசு அவர்களுக்கு செய்த உதவி என்ன ?



1973 டிசம்பர் 3]

விடை—

(அ) 1973-74-ம் ஆண்டில் தூத்துக்குடியில் முத்துக்குளிப்பு ஏதும் நடைபெறவில்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**இடைக்காட்டூருக்கருகே வைகையாற்றின் குறுக்கே பாலம்.**

5 வினா—**திரு. த. சோனையா :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், இடைக்காட்டூருக்கு அருகில் வைகை ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

விடை—

இடைக்காட்டூரில் வைகை ஆற்றின் குறுக்கே ரூபாய் 13.60 இலட்சம் மதிப்பீட்டில் மூழ்கு பாலம் ஒன்று அமைத்திட மத்திய சாலை நிதித் திட்டத்தின் கீழ் அனுமதி வழங்குமாறு இம்மாநில அரசு மத்திய அரசை கேட்டுள்ளது.

The State Government have addressed the Central Government for approval of the work of constructing a submerging bridge across the Vaigai River at Edaikattur at an estimated cost of Rs. 13–60 lakhs under the Central Road Fund Scheme.

**மணப்பாறையில் தீ விபத்து.**

6 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973-ஆம் ஆண்டு, ஜூன் மாதத்தில் மணப்பாறை கடைத் தெருவில் தீ விபத்து ஏதேனும் ஏற்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(இ) இந்த தீ விபத்து தற்செயலாக ஏற்பட்டது.

(a) Yes.

(b) The cause of the fire accident is only accidental.

### குழந்தைகள் காப்பகங்கள்.

7 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1973 மே வரை மொத்தம் உள்ள குழந்தைகள் காப்பகங்கள் எத்தனை?

(இ) அவைகளில் திருச்சி மாவட்டத்தில் உள்ளவை எத்தனை?

விடை—

(அ) தமிழகத்தில் 1973 மே வரை மொத்தம் உள்ள குழந்தைகள் காப்பகங்கள்—191.

(இ) அவைகளில் திருச்சி மாவட்டத்தில் உள்ளவை—16.

### அரசு அலுவலர்களுக்கு திருமண முன் பணம்.

8 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1972-73-ல் அரசு ஊழியர்களுக்கு திருமணக் கடனாக எவ்வளவு ரூபாய் வழங்கப்பட்டது, மாவட்டவாரியாக?

விடை—

இது குறித்த விவரங்கள் பேரவை முன் வைக்கப்பட்டுள்ள விவர @ அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

The particsulars are furnished in the statement placed on the table of the House.

### *Schemes for benefit of rural population*

9 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Central Planning Commission has suggested a scheme to this Government to enable rural population to have the benefits of development; and

(b) if so, the details thereof?

@ 604-605-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.





A.—(a) Yes.

(b) The schemes sponsored by the Government of India, that are under implementation for the benefit of rural population are the following:—

1. Scheme for Small Farmers Development Agency in certain Panchayat Unions in Madurai, Tirunelveli and South Arcot Districts.

2. Scheme for Marginal Farmers and Agricultural Labourers in certain Panchayat Unions in Salem and North Arcot districts.

3. Scheme on Integrated Dry Land Agricultural Development Project in Kovilpatti and Pudukottai.

4. Special Rural Works Programme in chronically drought affected areas in Ramanathapuram and Dharmapuri districts (now known as Drought prone area).

5. Crash Scheme.

6. Pilot Intensive Rural Employment Project.

7. Rural Roads Programme; and

8. Accelerated project for Rural Water Supply.

(அ) ஆம்.

(இ) கிராம மக்களின் பயனுக்காக.

(1) மதுரை, திருநெல்வேலி, தென்னாற்காடு மாவட்டங்களில் சிறு உழவர்கள் மேம்பாட்டு நிறுவனத்திற்கான திட்டமும்,

(2) சேலம், வடாற்காடு மாவட்டங்களில் ஓரளவு ஆதாயம் பெறும் உழவர்கள் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கான திட்டமும்,

(3) கோயில்பட்டியிலும், புதுக்கோட்டையிலும் புன்செய் நில வேளாண்மை மேம்பாட்டுக்கான ஒருங்கிணைப்பு வேலைத் திட்டங்கள் குறித்த திட்டமும்,

(4) இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் வறட்சியினால் தொடர்ந்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிராமப் பணிகளுக்கான சிறப்புத்திட்டமும் (வறட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான திட்டம் என இப்பொழுது அழைக்கப்படுகிறது),

(5) கிராம வேலைவாய்ப்பு குறித்த விரைவுத் திட்டமும்,

(6) கிராம வேலைவாய்ப்பு குறித்த முன்னோடி மும்முரத் திட்டமும்,

[1973 டிசம்பர் 3

குழந்தைகள் காப்பகங்கள்.

7 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1973 மே வரை மொத்தம் உள்ள குழந்தைகள் காப்பகங்கள் எத்தனை ?

(இ) அவைகளில் திருச்சி மாவட்டத்தில் உள்ளவை எத்தனை ?

விடை—

(அ) தமிழகத்தில் 1973 மே வரை மொத்தம் உள்ள குழந்தைகள் காப்பகங்கள்—191.

(இ) அவைகளில் திருச்சி மாவட்டத்தில் உள்ளவை—16.

அரசு அலுவலர்களுக்கு திருமண முன் பணம்.

8 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

1972-73-ல் அரசு ஊழியர்களுக்கு திருமணக் கடனுக எவ்வளவு ரூபாய் வழங்கப்பட்டது, மாவட்டவாரியாக ?

விடை—

இது குறித்த விவரங்கள் பேரவை முன் வைக்கப்பட்டுள்ள விவர @ அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

The partisculars are furnished in the statement placed on the table of the House.

*Schemes for benefit of rural population*

9 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Central Planning Commission has suggested a scheme to this Government to enable rural population to have the benefits of development; and

(b) if so, the details thereof ?

---

@ 604-605-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1973 டிசம்பர் 3]

A.—(a) Yes.

(b) The schemes sponsored by the Government of India, that are under implementation for the benefit of rural population are the following :—

1. Scheme for Small Farmers Development Agency in certain Panchayat Unions in Madurai, Tirunelveli and South Arcot Districts.

2. Scheme for Marginal Farmers and Agricultural Labourers in certain Panchayat Unions in Salem and North Arcot districts.

3. Scheme on Integrated Dry Land Agricultural Development Project in Kovilpatti and Pudukottai.

4. Special Rural Works Programme in chronically drought affected areas in Ramanathapuram and Dharmapuri districts (now known as Drought prone area).

5. Crash Scheme.

6. Pilot Intensive Rural Employment Project.

7. Rural Roads Programme; and

8. Accelerated project for Rural Water Supply.

(அ) ஆம்.

(இ) கிராம மக்களின் பயனுக்காக.

(1) மதுரை, திருநெல்வேலி, தென்னுற்காடு மாவட்டங்களில் சிறு உழவர்கள் மேம்பாட்டு நிறுவனத்திற்கான திட்டமும்,

(2) சேலம், வடஆற்காடு மாவட்டங்களில் நாளவு ஆதாயம் பெறும் உழவர்கள் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கான திட்டமும்,

(3) கோயில்பட்டியிலும், புதுக்கோட்டையிலும் புன்செய் நில வேளாண்மை மேம்பாட்டுக்கான ஒருங்கிணைப்பு வேலைத் திட்டங்கள் குறித்த திட்டமும்,

(4) இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் வறட்சியினுல் தொடர்ந்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிராமப் பணிகளுக்கான சிறப்புத்திட்டமும் (வறட்சியினுல் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான திட்டம் என இப்பொழுது அழைக்கப்படுகிறது),

(5) கிராம வேலைவாய்ப்பு குறித்த விரைவுத் திட்டமும்,

(6) கிராம வேலைவாய்ப்பு குறித்த முன்னேடி மும்முரத் திட்டமும்,

(7) கிராமச்சாலைகள் திட்டமும்,

(8) கிராமக் குடிநீர் வழங்கலுக்காக விரைவுபடுத்தப்பட்ட திட்டமும்.

*Appointments for Ex-Servicemen.*

10 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether the Union Government have directed the State Government to provide jobs to the dependents of dead Ex-servicemen without reference to the Employment Exchanges; and

(b) if so, the details thereof?

A.—(a) So far, no direction has been received from the Union Government to provide jobs to the dependants of dead Ex-servicemen without reference to the Employment Exchanges. The suggestion of the Director of Employment and Training for making necessary provision for according priority in the matter of providing employment assistance to the children of deceased Ex-servicemen is under consideration of the Government.

(b) does not arise.

(அ) இறந்துபோன முன்னாள் படைவீரர்களைச் சார்ந்துள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பகங்களைக் கலக்காமல் வேலைகள் அளிக்குமாறு மத்திய அரசிடமிருந்து இதுவரை கட்டளை ஏதும் பெறப்படவில்லை. இறந்துபோன முன்னாள் படை வீரர்களின் குழந்தைகளுக்கு வேலைவாய்ப்பளிப்பதில் முன்னுரிமை வழங்கத் தேவையான வழிவகைகள் செய்வது என்ற, வேலைவாய்ப்பு—பயிற்சித் துறை இயக்குநரின் கருத்துரை அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) இவ்வினா எழவில்லை.

*Persons arrested at Nagercoil.*

* 11 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that a number of persons were taken to police custody for assaulting the police officers Nagercoil about the 4th August 1972; and

(b) if so, the details thereof?



A.—(a) No.

(b) does not arise.

(அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

*New Pumping station at Perambur*

* 12 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether any new pumping staton is to be commissioned at Perambur to suck the sewage from the Cooum from June 1972; and

(b) if so, the details thereof?

A.—(a) No.

(b) does not arise.

(அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

*House sites for Telugu Harijans*

13 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the Madras Telugu Harijana Maha Sabha has sent any request to the Slum Clearance Board for housing facilities about the 15th March 1972; and

(b) if so, the details thereof and the action taken thereon?

A.—A statement furnishing the information is placed on the table of the House.

விவரங்கள் அடங்கிய அறிக்கை @ ஒன்று பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

---

@ 605-607-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

## *Survey on road accidents*

14 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the Government are aware of the survey conducted by the Transport Research Division of the Union Transport Ministry into the Road Accidents in this State during 1969–70 and 1971–72; and

(b) if so, the details thereof?

A.—(a) and (b) No survey was conducted by the Transport Research Division of the Union Transport Ministry. However the study group on Road Safety set up by the Government of India enquired into the incidence of road accidents in Highways and in Hilly areas, to acertain cases of accidents and to suggest remedial measures and improvements on roads as to ensure maximum possible safety on roads.

*மத்திய அரசின் போக்குவரத்து அமைச்சகத்தைச் சேர்ந்த போக்குவரத்து ஆராய்ச்சிப் பிரிவால் சாலை விபத்துக்கள் பற்றிய ஆய்வு எதுவும் நடத்தப்படவில்லை. எனினும், இந்திய அரசு ஏற்படுத்திய சாலைப் பாதுகாப்பு பற்றிய ஆய்வுக்குழு நெடுஞ்சாலைகளிலும் மலைப்பகுதிகளிலும் ஏற்பட்ட சாலை விபத்துக்கள் பற்றி, விசாரணை செய்தது. விபத்துக்கான காரணங்கள் இன்னவென உறுதிப்படுத்திக்கொள்வதும் இயன்ற பெரும் அளவிற்குச் சாலைகளின் பாதுகாப்பிற்கு உறுதி செய்யும் வகையில் குறைகளைச் சரிப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கவும் சாலைகளுக்கு மேம்பாடுகள் செய்யவும் கருத்துத் தெரிவிப்பதுமே ஆய்வுக்குழு நடத்திய விசாரணையின் நோக்கங்களாகும்.*

## *Private Forests*

15 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) the number of private forests in this State; and

(b) if so, the details thereof?



*விடை—*

*(அ) & (இ) தமிழ்நாட்டிலுள்ள தனியார் காடுகளின் எண்ணிக்கையும், பரப்பும், மாவட்ட வாரியாக கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—*

| மாவட்டம் | பரப்பு (ஏக்கரில்) | காட்டுப் பகுதிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| நீலகிரி .. .. .. | 58,542.22 | 72 |
| கோயம்புத்தூர் .. .. | 19,53,082 | 47 |
| சேலம் .. .. .. | 39,64,800 | 2 |
| தென்னாற்காடு .. .. | 2,60,000.00 | 3 |
| திருநெல்வேலி .. .. | 14,184.66 | 34 |
| இராமநாதபுரம் .. .. | 314.15 | 6 |
| மதுரை .. .. .. | 19,84.282 | 95 |
| மொத்தம் .. | 4,12,062·67 | 259 |

## *தங்கசாலை-முக்கரம்பாக்கம் பேருந்துகள்*

*16 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வழித்தடம் எண் 131-பி தங்கசாலை-மூக்கரம்பாக்கம் பேருந்து அடிக்கடி பழுதடைந்து விடுவது உண்மையா ?*

*(இ) நேரந்தவறாமல் ஓட்டுவதற்கு எடுத்துள்ள சிறப்பு நடவடிக்கைகள் யாவை ?*

*விடை—*

*(அ) இல்லை.*

*(இ) வினாவிற்கு இடமில்லை.*

(a) No.

(b) does not arise.

### *Law Chambers in Madras High Court*

17 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether new Law Chambers for Advocates have been constructed within the High Court compound recently; and

(b) if so, the details thereof?

A.—(a) Yes.

(b) In November 1970, the Government approved the proposal for the construction of an additional block of Law Chambers in the High Court compound and sanctioned an expenditure of Rs. 9.56 lakhs on phased programme. The work was completed and the new building was maugurated on 29th June 1973.

(அ) ஆம்.

(இ) உயர் நீதிமன்ற வளாகத்திற்குள் வழக்கறிஞர்கள் அறைகள் கொண்ட கட்டிடம் ஒன்றைக் கூடுதலாகக் கட்டுவதற்கான செயற் குறிப்புக்கு 1970 நவம்பர் திங்களில் அரசு ஏற்பு அளித்ததோடு அதனை ரூ. 9.56 லட்சம் செலவில் படிப்படியாகக் கட்டுவதற்கு ஒப்பளிப்பு வழங்கியது. இப்புதிய கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு 29—6—1973-ஆம் நாளன்று திறந்து வைக்கப்பட்டது.

### *Sirens in Police Stations*

* 18 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether sirens have been fixed at police stations in Madras City; and

(b) if so, the details thereof?

A.—(a) Yes.

(b) Electric Sirens have been fixed at the Police Control room and on the top of f37 police stations and two out-posts in Madras city. The installation of the sirens was sanctioned for the purpose of giving air-raid warning at the time of emergency. Sirens in important police stations are now sounded at 12 Mid-noon every day as a time signal.



விடை—

(அ) ஆம்.

(இ) சென்னை மாநகரில் காவலர் செய்தித் தொடர்பு அறையிலும் 37 காவல் நிலையங்கள், 2 புறக்காவல் நிலையங்கள் ஆகியவற்றின் உச்சியிலும் எச்சரிக்கை மின் சங்குகள் ( Electric Sirens ) பொருத்தப்பட்டுள்ளன. நெருக்கடி காலத்தில் விமானத் தாக்குதல் பற்றி முன் எச்சரிக்கை செய்ய இந்தச் சங்குகளை நிறுவ ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. முக்கியமான காவல் நிலையங்களில் உள்ள எச்சரிக்கை சங்குகள் தற்போது நேரத்தை அறிவிக்கும் வகையில் நாள்தோறும் நண்பகல் 12 மணிக்கு ஒலிக்கின்றன.

### ஊராட்சி ஒன்றியங்களில் ஆரம்பக் கல்விக்காகும் செலவு.

19 வினா—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் ஆரம்பக் கல்விக்காக செலவாகும் தொகையில் 90 சதவிகிதம் அரசினர் மானியமாகக் கொடுக்கவும், மீதி 10 சதவிகிதம் தொகையை ஊராட்சி ஒன்றியத்தின் பங்குக்காக செலவிடவும் சிபாரிசு செய்து 8—11—1968-ல் நடந்த வட ஆர்க்காடு மாவட்ட வளர்ச்சி மன்றம் அரசை கோரியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள முடிவு என்ன ?

விடை—

(அ) ஆம்.

(இ) 29—9—1972-ம் தேதி ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் அரசாணை எண் 2077-ல் ஆரம்பக் கல்விக்காக திருத்திய வகையில் ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வகையில் அரசு மான்யம் சராசரி 91 சதவிகிதம் ஆக இருக்கிறது.

## வந்தவாசி-சோத்துப்பாக்கம் சாலையில் பாலங்கள்

20 வினா—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி-சோத்துப்பாக்கம் இடையே உள்ள சாலவேடு அருகே உள்ள ஆற்றில் ஒரு மேம்பாலமும், கடைசி குளம் அருகே உள்ள ஆற்றில் ஒரு மேம்பாலமும் உத்திரமேரூர்-புக்கத்துறை இடையே உள்ள ஆற்றில் ஒரு மேம்பாலமும் கட்டும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆமெனில், அவை எப்போது கட்டப்படும்?

விடை—

(அ) & (இ) அச்சரப்பாக்கம்-வந்தவாசி சாலையில் கி.மீ. 34/8-ல் சாலவேடு அருகே சாலவேடு நதியின் மீது பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

அச்சரப்பாக்கம்-வந்தவாசி சாலையில், மத்திய சாலை நிதித் திட்டத்தின் கீழ், கி.மீ. 46/4 மைல் கடைசிகுளம் அருகே சுகந்தி ஆற்றில் குறுக்கே ரூ. 7.60 லட்சம் செலவில் பாலம் ஒன்று கட்டப்படவேண்டும் என்று மத்திய அரசுக்கு இவ்வரசு பரிந்துரைத்திருக்கிறது. மத்திய அரசின் ஒப்புதல் எதிர் பார்க்கப்படுகிறது.

மாமண்டூர் உத்திரமேரூர் சாலையில் நெல்வாய் ஓடையில் குறுக்கே பாலம் கட்டும் வேலை முடிந்து, போக்குவரத்து விடப்படுகிறது.

(a) and (b):

(i) The proposal to construct a bridge across the Salavedu River near Salavedu at K.M. 34/8 of Wandiwash-Acharapakkam Road is under consideration of the Government.

(ii) The proposal to construct a bridge across the Sugandhi River near Kadasikulam at KM. 46/4 of Wandiwash-Acharapakkam Road at a cost of Rs. 7.60 lakhs has been recommended to the Government of India for approval, under the Central Road Fund Scheme. The approval of Government of India is awaited.

(iii) The work of constructing a bridge across Nelvoiodai on Mamandur Uthiramerur Road has been completed and the bridge has been thrown open for traffic.



## வாலாஜா ஒன்றியப் பகுதியில் புதிய சாலைகள்.

21 வினா—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டம், வாலாஜா ஒன்றியத்தைச் சேர்ந்த சாணரப்பண்டை, மேலக்குப்பம் ஆகிய கிராமங்களுக்கு புதிய சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

## *Parks and Play grounds in Madras City*

*22 Q.—Thiru R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) the total number of Parks and Play grounds in Madras belonging to the Madras Corporation; Division-wise; and

(b) the name of these parks?

*A.*—(a) (i) The total No. of parks—139.

(ii) The total No. of play grounds—71 List enclosed.

(b) List enclosed.

(அ) (1) சென்னை நகராட்சியின் பொறுப்பிலுள்ள பூங்காக்களின் எண்ணிக்கை—139.

(2) விளையாட்டு மைதானங்கள் எண்ணிக்கை—71. விவரங்கள் இணைப்பு குறிப்பில் உள்ளது.

(இ) விவரங்கள் @ இணைப்பு குறிப்பில் உள்ளன

---

@ 607-618-ம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1973 டிசம்பர் 3

*Production of Rosewood*

*23 Q.—THIRU R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) the quantity of rosewood produced in this State during the last five years, year-wise;

(b) the places where rosewood is grown; and

(c) the revenue derived therefrom.

A.—(a) The particulars of rosewood produced during the last five years are given below:—

| | | |
|---|---|---|
| 1968–69 | ... ... ... | 380–868 cm. |
| 1969–70 | ... ... ... | 592–503 cm. |
| 1970–71 | ... ... ... | 784–452 cm. |
| 1971–72 | ... ... ... | 873–887 cm. |
| 1972–73 | ... ... ... | 795–355 cm. |

(b) Rosewood is produced in the following divisions of the Forest Department:—

1. Coimbatore South division.
2. Nilgiris North division.
3. Coimbatore North division.
4. Coimbatore Central division.

Rosewood grows naturally in small extent in forest areas of Kanyakumari and also in Madurai districts.

(c) Particulars of revenue realised from the sale of rosewood during the last five years are furnished below:—

| Year. | Quantity sold. | Amount realised. |
|---|---|---|
| | C.M. | RS.P. |
| 1968–69 | 322–472 | 4,73,976.10 |
| 1969–70 | 486–677 | 9,27,239.62 |
| 1970–71 | 297–918 | 6,53,929.92 |
| 1971–72 | 427–039 | 8,34,905.33 |
| 1972–73 | 1015–754 | 22,52,193.43 |



1973 டிசம்பர் 3]

விடை—

(அ) தமிழகத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் உற்பத்தியான செம்மரத்தின் அளவு பின்வருமாறு:—

| ஆண்டு | உற்பத்தி செய்யப்பட்ட செம்மரத்தின் அளவு. |
|---|---|
| 1968–69 | 380–868 கனமீட்டர். |
| 1969–70 | 592–503 ,, |
| 1970–71 | 784–452 ,, |
| 1971–72 | 873–887 ,, |
| 1972–73 | 795–355 ,, |

(இ) தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட வனத்தோட்டங்களில் செம் மரங்கள் வளர்க்கப்படுகின்றன:—

(1) கோயம்புத்தூர் தெற்கு கோட்டம்.

(2) நீலகிரி வடக்குக் கோட்டம்.

(3) கோயம்புத்தூர் வடக்குக் கோட்டம்.

(4) கோயம்புத்தூர் மத்திய கோட்டம்.

செம்மரம் இயற்கையாகவே கன்னியாகுமரியிலுள்ள காடுகளிலும், மதுரையிலும் சிறிதளவில் வளர்கின்றன.

(உ) சென்ற ஐந்தாண்டுகளில் விற்கப்பட்ட செம்மரத்தின் அளவும், அதன் மூலம் கிடைத்த வருவாயும் கீழே கொடுக்கப் பட்டுள்ளது:—

| ஆண்டு. | விற்கப்பட்ட செம்மரத்தின் அளவு. | கிடைத்த வருவாய். |
|---|---|---|
| | கன மீட்டர். | ரூ. |
| 1968–69 | 322–472 | 4,73,976.10 |
| 1969–70 | 486–677 | 9,27,239.62 |
| 1970–71 | 297–918 | 6,53,929.92 |
| 1971–72 | 427–030 | 8,34,905.33 |
| 1972–73 | 1015–754 | 22,52,193.43 |

*Parks maintained by Housing Board*

* 24 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) the details of the parks maintained by the Housing Board in Madras; and

(*b*) the expenditure incurred thereon?

*A.*—(*a*) The Tamil Nadu Housing Board maintaining parks at—

(i) Kalaignar Karunanidhi Nagar.

(ii) Indira Nagar.

(iii) Korattur.

| *Name of the Park* | *Expenditure incurred on capital works.* | | *Expenditure on maintenance.* |
|---|---|---|---|
| 1. Kalaignar Karunanidhi Nagar. | | 1971–72 | .. |
| | | 1972–73 | .. |
| Part–I | 1;80,000 | 1973–74 | 12,000–00 |
| Part–II | | 1971–72 | .. |
| | | 1972–73 | .. |
| | 25,000 | 1973–74 | 5,000–00 |
| 2. Indira Nagar | | 1971–72 | .. |
| | | 1972–73 | 6,300–00 |
| | 16,940–24 | 1973–74 | 2,100–00 |
| 3. Korattur (not yet completed) under construction. | 16,210–00 | 1971–72 | .. |
| | | 1972–73 | .. |
| | | 1973–74 | .. |
| | 238,150–24 | | 25,400–00 |

**ஊராட்சி ஒன்றிய அலுவல்களில் பிற்பட்டோர்களுக்குச் சலுகைகள்.**

25 வினா—திரு. ஏ. சுப்பிரமணியம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 3—1—1972-ல் மதுரையில் கூடிய தமிழ்நாடு மாநில அரிசன நல்வாழ்வுக் குழு அரசு அறிவித்துள்ள வேலைவாய்ப்பு தனிச் சலுகையை ஊராட்சி ஒன்றியங்களும், நகராட்சி மன்றங்களும். மாநகராட்சி மன்றங்களும் கட்டாயமாக செயல்படுத்தும்படிச் செய்வதற்காக இது பற்றிய விதிகளைத் திருத்தவேண்டுமென்று அரசினை கோரியுள்ளதா ?





(இ) அவை பேரில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(இ) (1) அரசுப் பணிகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் 16 சதவிகிதத்திலிருந்து 18 சதவிகிதம் உயர்த்தப்பட்டது போலவே ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும் சம்பந்தப்பட்ட விதிகள் திருத்தப்பட்டுள்ளன.

(2) 1919-ம் வருடத்திய சென்னை மாநகராட்சி மன்றச் சட்டம் 86-ஆம் பிரிவின்படி I-A, I-B, II பிரிவுகளிலுள்ள அதிகாரிகள் சம்பந்தப்பட்ட பணிகளுக்கென தனி விதிகள் (Special rules) அரசு அமைத்துள்ளது. அவைகளில் பொறியியல் பணி விதிகளிலும், பொதுச் சுகாதாரம் மருத்துவப்பணி விதிகளிலும், நேரிடையாக அலுவலர்களை நியமனம் செய்யும்பொழுது பின்தங்கியவர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் அரசினரால் ஏற்டுத்தப்பட்ட விகிதாசாரம் அளிக்கப்பட வேண்டுமென்ற விதியுள்ளது. இவர்களுக்கான பொது விதிகள் (General rules) அமைப்பது பற்றி அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்துடன் பொதுவிதிகளில் பின்தங்கியவர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும், அரசாங்கத் துறையில் பின்பற்றும் விகிதாச்சாரத்தை அமுலுக்கு கொண்டு வருவதற்கான வழிவகைகள் ஏற்படுத்துவது பற்றி பரிசீலிக்கப்படுகிறது.

சென்னை மாநகராட்சி III & IV பிரிவு பணியாளர்கள் நியமன விதிகள் மாநகராட்சி மன்றமே அமைக்கவேண்டும். இது வரை எவ்வித விகிதாச்சாரமும் ஏற்படுத்தவில்லையென்றும் சம்பந்தப்பட்டக் கிளை விதிகள் (Bye-laws) மாநகராட்சி மன்றம் செய்யவேண்டியுள்ளது என்றும் மாநகராட்சி ஆணையர் கூறியுள்ளார்.

மதுரை மாநகராட்சிப் பணிகள் பொறுத்தவரையில் மதுரை நகராண்மைக் கழகச் சட்டத்தின் கீழ் விதிகள் இயற்றும்போது (அரசின் பரிசீலனையில் உள்ளது) மேலே குறிப்பிட்ட வேலை வாய்ப்பு தனிச் சலுகைக்கான விதிகளை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

*Appointments in college of Indian Medicine*

*26. Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) the total number of appointments made in the College of Indian Medicine 'Siddha' Melappalayam (Palayamkottai) during 1972; and

(b) the details thereof?

A.—(a) 20.

(b) 1. Assistant Lecturers—9
2. Professor—2
3. Pharmacist—1
4. Laboratory Technician Grade II—1
5. House keeper—1
6. Stretcher Bearer—1
7. Junior Assistant-cum-Typist—1
8. Laboratory attenders—4

விடை—

(அ) 20.

| | | |
|---|---|---|
| (இ) | 1. உதவி விரிவுரையாளர் | 9 |
| | 2. பேராசிரியர் | 2 |
| | 3. மருந்தாளுநர் | 1 |
| | 4. ஆய்வக தொழில்நுட்ப பணியாளர் (நிலை-2) | 1 |
| | 5. விடுதிக்காப்பாளர் | 1 |
| | 6. நோயாளியைத் தூக்கி கொணர்பவர் | 1 |
| | 7. இளநிலை எழுத்தர் மற்றும் தட்டச்சர் | 1 |
| | 8. ஆய்வக பதிவெழுத்தர் | 4 |

**மாஞ்சோலை தோட்டத் தொழிலாளிகள்.**

27 வினா—திரு.ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மாஞ்சோலை எஸ்டேட்டில் பதிவு செய்யப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் எத்தனை பேர் வேலை செய்து வருகிறார்கள், 1970 முதல் 1973 வரை, வருடவாரியாக ?



(இ) பதிவு செய்யப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் ஓய்வு பெறும்போது ஏற்படும் வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படுகின்றனவா ?

(உ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) 1970—770, 1971—652, 1972—635, 1973—690.

(இ) ஆம்.

(உ) தற்காலிக தொழிலாளர்களில் அதிக வருடங்கள் பணிபுரிந்த மூத்த தொழிலாளர்கள் ஓய்வுபெறும் தொழிலாளர்களின் வெற்றிடங்களில் பதிவு செய்கின்றனர்.

*Remuneration paid to Law Officers*

28 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state the total remuneration paid to Assistant Government Pleaders and Assistant Public Prosecutors in the Madras High Court during the calendar year 1973?

A.—Particulars of total remuneration paid to the Law Officers from 1st January 1973 to 31st July 1973 are given below :—

(i) Tour Assistant Government Pleaders—Rs. 51,031-27

(ii) Assistant Public Prosecutor and Additional Assistant Public Prosecutor. Rs. 12,250-00

1—1—1973-ஆம் நாள் முதல் 31—7—1973-ஆம் நாள் வரையில் சட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த ஊதியம் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(1) அரசு உதவி வழக்குரைஞர்கள் நான்கு பேருக்கு வழங்கப்பட்ட ஊதியம் ரூ. 51,031.27.

(2) அரசு உதவி வழக்கு நடத்துநருக்கும், அரசுக் கூட்டு உதவி வழக்கு நடத்துநருக்கும் வழங்கப்பட்ட ஊதியம் ரூ. 12,250.00.

## திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரால் விருப்ப மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதி.

29 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்ப மானியத்தின் கீழ், திருநெல்வேலி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து 1972-73, 1973-74 ஆண்டுகளில் எவ்வளவு தொகை செலவிடப் பட்டது? அத்தொகை எக்காரியத்திற்காக அனுமதிக்கப் பட்டது?

விடை—

பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப் பட்டுள்ளது.

A statement is placed on the Table of the House.

## மன்னியாறு சீரமைப்புச் செலவு.

30 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971-72, 1972-73 ஆண்டுகளில் தஞ்சை மாவட்டம், மன்னியாற்றினை சீரமைத்திட செலவழித்திட்ட தொகை எவ்வளவு?

விடை—

1971-72-ம் ஆண்டில் செலவு கிடையாது. 1972-73-ம் ஆண்டின் செலவு கீழ்வருமாறு:—

| | |
|---|---|
| (1) மன்னியாற்றின் பிரதான கால்வாயின் கரைகளுக்கு காரை பூசுதல் | 32,53,282 |
| (2) மன்னியாறு கிளை வாய்க்காலை சீர்படுத்த | 3,00,062 |
| மொத்தம் .. | 35,53,344 |

@ 619-624-ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப் பட்டுள்ளது.



## காவல்துறை அதிகாரிகளுக்கு சுதந்திர வெள்ளிவிழா பதக்கங்கள்.

31 வினா—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

சுதந்திர தின வெள்ளிவிழாவையொட்டி சிறப்பாக சேவை செய்த போலீஸ் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டவர்களுள் தமிழகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் எத்தனை பேர்?

விடை—

நாடு விடுதலை அடைந்த 25-வது ஆண்டின் விழாவை வெள்ளி விழாவாகக் கொண்டாடுவது தொடர்பாக, இந்திய அரசு, 25-வது சுதந்திர ஆண்டு விழாப் பதக்கம் ஒன்றை அளிக்க ஏற்பாடு செய்தது. 15—8—1972-ல் பணியிலிருந்து எல்லாத் தரங்களையும் சேர்ந்த காவற்படையினர், ஊர்க்காவல் படையினர், பொது மக்கள் பாதுகாப்பு நிறுவனப்பணியாளர் அனைவரும் இப் பதக்கம் பெறத் தகுதியுடையவர் ஆவர். தமிழ்நாட்டில் ஊர்க் காவல் படை நிறுவனங்கள் உட்பட, காவல்படையில் இப் பதக்கம் பெறத்தகுதி வாய்ந்த அதிகாரிகள், பணியாட்கள் ஆகிய வர்களின் மொத்த எண்ணிக்கை 52,587 ஆகும்.

In connection with the celebrations to commemerate the 25th Anniversary of Independence, the Government of India have instituted the 25th Independence Anniversary Medal for award to the personnel of all ranks of the Police Forces, Home Guards and Civil Defence Organisations who are borne on the strength on the 15th August 1972. The total number of officers and men in the Police Force including Home Guards Organisation in Tamil Nadu who were eligible for this award is 52,587.

## சென்னையில் காலராவினால் பாதிக்கப்பட்டவர்கள்.

32 வினா—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் இந்த ஆண்டு இதுவரையில் காலரா நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(இ) இந்த ஆண்டு இந்தக் காலராவினால் இறந்தவர்கள் எத்தனை பேர்?

விடை—

(அ) இந்த ஆண்டு செப்டம்பர் திங்கள் முடிய 944 பேர் சென்னையில் காலரா நோயினால் பாதிக்கப்பட்டனர்.

(இ) 17 பேர் இறந்தனர்.

### சவரத்தொழிலாளர்களுக்கு கருவிகள் வழங்கல்

33 வினா—திரு. என் கிட்டப்பா: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1972-73-ம் ஆண்டில், சவரத்தொழிலாளர்கள் எத்தனை பேருக்கு கருவித் தொகைகள், கருவிகள் மான்யமாக வழங்கியுள்ளது, மாவட்டவாரியாக?

விடை—

1972-73-ம் ஆண்டில் 827 சவரத் தொழிலாளர்களுக்கு சவரக் கருவிகள் மான்யமாக வழங்கப்பட்டுள்ளது. மாவட்டவாரியான விபரங்கள் இத்துடன் கூடிய இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

### இணைப்பு

1972–73-ம் ஆண்டில் மாவட்ட வாரியாக சவரத்தொழிலாளர்களுக்கு சவரக் கருவிகள் வழங்கிய விவரப்பட்டியல்.

| வரிசை எண்ணும், மாவட்டத்தின் பெயரும். | பயனடைவோர்களின் எண்ணிக்கை. | செலவு. ரூ. பை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. சென்னை .. .. | 62 | 4,650 00 |
| 2. செங்கற்பட்டு .. .. | 62 | 4,650 00 |
| 3. தென்னாற்காடு .. .. | 62 | 4,650 00 |
| 4. வட ஆர்க்காடு .. .. | 62 | 4,650 00 |
| 5. தஞ்சாவூர் .. .. | 62 | 4,650 00 |
| 6. இராமநாதபுரம் .. .. | 62 | 4,650 00 |
| 7. திருநெல்வேலி .. .. | 62 | 4,650 00 |
| 8. மதுரை .. .. | 62 | 4,650 00 |



### இணைப்பு—தொடர்ச்சி

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 9. சேலம் .. .. | 62 | 4,650 00 |
| 10. தர்மபுரி .. .. | 62 | 4,650 00 |
| 11. கோயம்புத்தூர் .. .. | 62 | 4,650 00 |
| 12. கன்னியாகுமரி .. .. | 62 | 4,650 00 |
| 13. திருச்சி .. .. | 62 | 4,650 00 |
| 14. நீலகிரி .. .. | 21 | 1,575 00 |
| மொத்தம் .. | 827 | 62,025 00 |

### சலவைத் தொழிலாளிகளுக்குக் கருவிகள் வழங்கல்

34. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1972–73-ம் ஆண்டில் எத்தனை சலவைத் தொழிலாளர்களுக்கு அரசு கருவிகளை வழங்கியுள்ளது, மாவட்ட வாரியாக?

விடை.—1972–73-ம் ஆண்டில் 827 சலவைத் தொழிலாளர்களுக்கு அரசு சலவை கருவிகளை வழங்கியுள்ளது. மாவட்ட வாரியான விபரங்கள் இத்துடன் கூடிய இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

### இணைப்பு

1972–73-ம் ஆண்டில் மாவட்ட வாரியாக சலவையாளர்களுக்கு சலவைக் கருவிகள் வழங்கிய விவரப்பட்டியல்.

| வரிசை எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | பயனடையும் சலவையாளர்களின் எண்ணிக்கை. | செலவு, ரூ. பை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. சென்னை .. .. | 68 | 11,560 00 |
| 2. செங்கற்பட்டு .. .. | 67 | 11,390 00 |
| 3. வட ஆர்க்காடு .. .. | 70 | 11,900 00 |
| 4. தென்னாற்காடு .. .. | 67 | 11,390 00 |
| 5. திருச்சி .. .. | 67 | 11,390 00 |
| 6. தஞ்சாவூர் .. .. | 67 | 11,390 00 |
| 7. கோயம்புத்தூர் .. .. | 67 | 11,390 00 |

இணைப்பு—தொடர்ச்சி

| | (1) | (2) | (3) |
|---|---|---|---|
| 8. | நீலகிரி .. .. | 11 | 1,870 00 |
| 9. | தர்மபுரி .. .. | 66 | 11,2[illegible]0 00 |
| 10. | சேலம் .. | 67 | 11,390 00 |
| 11. | இராமநாதபுரம் .. .. | 70 | 11,900 00 |
| 12. | திருநெல்வேலி .. .. | 70 | 11,900 00 |
| 13. | மதுரை .. .. .. | 70 | 11,900 00 |
| | மொத்தம் .. | 827 | 1,49,590 00 |

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அது உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பேரவைக்கு விதி 32-இன் கீழ் ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

## 2. அறிக்கை அளித்தல்.

### அரசு ஊழியர்களுக்கு நிதி உதவி செய்யும் திட்டம் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாநில அரசு ஊழியர்களின் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களை இந்த அரசு செயற்படுத்தி வருகிறது என்பதை இந்த அவை அறியும். பணியிலிருந்து ஓய்வு பெறும்போது அல்லது பணியாளர் இறந்து விடுங்கால், உதவி அளிக்கவேண்டிய அவசியம் கருதியும் சில செயற்குறிப்புகள் அரசின் ஆய்வில் இருந்து வந்துள்ளன. அரசு ஊழியர்களுக்கு நிதி உதவி செய்யும் திட்டம் ஒன்றை அரசு செயலுக்குக் கொண்டுவர வேண்டுமென, அரசிதழ் பதிவில்லாத அரசு ஊழியர்களின் சங்கமும் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. அரசு ஊழியர்கள் குறிப்பிட்ட தொகையை மாதா மாதம் கட்டி, பணியிலிருக்கும் போதே அரசு ஊழியர் இறந்து விட்டால், அவருடைய குடும்பத்துக்கு இந்த உதவித் தொகை



அளிக்கப்படவேண்டும் என்றும், அல்லது அரசு ஊழியர் ஓய்வு பெறும்போது இத்தொகை அவருக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் ஊழியர்கள் சங்கம் கோரியுள்ளது. இக்கருத்துக்களை மனத்தில் கொண்டு அரசு ஒரு புதிய திட்டத்தை வகுத்துள்ளது. திட்டத்தின் விவரங்கள் வருமாறு :

இப்புதியத் திட்டம் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் குடும்ப நல நிதித் திட்டம் எனப் பெயர் பெறும். இத்திட்டத்தின் கீழ் அரசு ஊழியர்கள் அனைவரும் ஒவ்வொரு மாதமும் ரூ. 10 செலுத்த வேண்டும். இத்தொகை அவர்கள் மாதச் சம்பளப் பட்டியலில் இருந்து பிடித்துக் கொள்ளப்படும், இத்திட்டம் செயலுக்குக் கொண்டுவரப்பட்டபின், பணியில் இருக்கையில் ஊழியர் ஒருவர் இறந்துவிட்டால் அவர் ஆற்றிய பணிக்கால அளவு எவ்வளவாக இருந்தபோதிலும் அவரது குடும்பத்திற்கு ரூ. 10,000 கொடுக்கப்படும். தொகை செலுத்தும் அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும்போது அல்லது அவர்கள் பணியிலிருந்து விலகிச் செல்லும்போது அவர்களுக்கு இந்நிதியிலிருந்து அவர்கள் செலுத்தி உள்ள தொகை, அதற்கேற்ப அரசு செலுத்தும் தொகை (contribution) ஆகியவை அவர்களுக்கு கொடுக்கப்படும். எடுத்துக் காட்டாக, இத்திட்டம் செயலுக்குக் கொண்டுவரப்பட்ட பிறகு 10 ஆண்டுகள் கழித்து பணியிலிருந்து ஓய்வு பெறும் அரசு ஊழியர் ஒருவர் இந்த நிதிக்கு ரூ. 1,200 தொகை செலுத்தியிருப்பார். அரசு அளிக்கும் தொகை உட்பட அவர் மொத்தம் ரூ. 1,600 பெறுவார். அதே போல, 20 ஆண்டுகள் கழித்து பணியிலிருந்து ஓய்வு பெறும் ஊழியர் மொத்தம் ரூ. 4,000 பெறுவார். இதில் அவர் செலுத்திய தொகை ரூ. 2,400. அரசு அளிக்கும் தொகை ரூ. 1,600. 30 ஆண்டுகள் கழித்துப் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர் ரூ. 7,200 பெறுவர். இதில் அவர் செலுத்தும் தொகை ரூ. 3,600. அரசு செலுத்தும் தொகை ரூ. 3,600. அரசு ஊழியர்களுக்கு கணிசமான அளவு நன்மை பயக்கும் இத்திட்டத்தினை இம்மன்றம் வரவேற்குமென நான் நம்புகிறேன். இத்திட்டம் 1974 சனவரி முதல் செயலுக்குக் கொண்டுவரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்ததாக, திரு. கே. எ. வகாப் அவர்கள் ஓர் உரிமைப் பிரச்சினை கொண்டுவந்திருக்கிறார்கள். அதைப்பற்றி விளக்கும்படி அவரை அழைக்கிறேன்.

## (3) அவையுரிமைப் பிரச்சினை

### 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழில் திரு. கே. எ. வகாப் பேசியதைத் தவறாக வெளியிட்டிருப்பது குறித்து.

**திரு. கே. எ. வகாப்:** பேரவைத் தலைவர் அவர்களே, 27—11—1973 ஆம் நாள் அன்று துணை மானியக் கோரிக்கை விவாதத்தில் கலந்துக் கொண்டு நான் பேசும்போது, படித்த வாலிபர்களிடையே வேலையின்மையைப் போக்க ஆட்டுப் பண்ணை, கோழிப்பண்ணை போன்றவைகளுக்கு ஊக்கமளிக்க வேண்டும் என்ற பொருளில் பேசினேன். ஆனால் 28-11-1973 அன்றைய இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் நான் "பன்றிப் பண்ணைகளையும் இணைத்துப் பேசியதாக

"suggested development of poultry farming and piggery to solve unemployment"

வெளியிட்டிருக்கிறார்கள். இது என்னுடைய சமயக் கோட்பாட்டுக்கு விரோதமாக இருப்பதால் நான் சார்ந்துள்ள சமுதாயத்தில் என்னைப்பற்றி தவறான கருத்து ஏற்படுத்தி இருக்கிறது. ஆகையால், இதை ஒரு உரிமைப் பிரச்னையாகக் கொண்டு வருகின்றேன்.

இதன் காரணமாக நாட்டு மக்களிடையே என்னைப் பற்றி ஒரு தவறான கருத்து ஏற்பட்டு, என்னைப்பற்றி எனது சமுதாய மக்களே எழுப்பியுள்ள பலவிதமான எதிர்ப்புகள், கடிதங்களுக்கு நான் சமாதானம் சொல்லி சமாளித்தாகவேண்டியிருக்கிறது.' இந்தச் சட்டமன்றத்தில் அன்று நான் எவ்வளவோ பேசியிருக்கிறேன். நான் பேசியவற்றில் ஒரு வரி, இரண்டு வரி போடுகிற நிலையில் இதுமாதிரியாக தவறான எண்ணம் ஏற்படும் வகையில் நான் பேசியதாகப் போட்டிருப்பதை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்து வேறு எதுவும் கூறாமல், இதுபற்றி தீர்ப்புக் கூற உங்களிடத்தில் விட்டுவிடுகிறேன்.

MR. SPEAKER: I have perused the official proceedings in connection with that portion of the speech of the hon. Member. He has said as follows:

"நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்காக இருக்கிற எத்தனையோ துறைகளில் ஈடுபட்டு செயலாற்றுங்கள் என்று சொல்கிறோம். அவர்களைப் பார்த்து கோழி வளர்ப்பில் ஈடு



படுங்கள் என்று சொன்னால் அவர்கள் அதை கேவலமாக நினைக்கிறார்கள். 'படித்த மாணவர்களைப் போய் கோழி வளர்க்கிறீர்களா, ஆடு வளர்க்கிறீர்களா என்று கேட்கிறீர்கள் என்று கேட்கிறீர்களே' என்று கூறுகிறார்கள்."

Hence the publication in the Indian Express dated 28th November 1973 is not a correct version of the speech of the hon. Member.

According to May, to publish distorted or incorrect version of the speeches of hon. Members is a contempt of the House. Hence this publication which is an incorrect Publication will amount to a breach of privilege.

However, I think that this is an inadvertent mistake by the newspaper and expecting that they will issue a correction to the same, I do not propose to take further action now in the matter. I also wish to appeal to the Press to be more careful in future in publishing the proceedings of the House.

(முற்பகல் 10.00)

**திரு. கே. எ. வகாப்:** அதை அவர்கள் திருத்தி விடுவது நலம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான்தான் தீர்ப்பில் சொல்லி விட்டேனே.

## 4. அரசினர் தீர்மானங்கள்

### (அ) விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, "சட்டப் பேரவை 41-வது விதி, பிரிவு (3)-ன்படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக் கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும்" என்று கேட்டுக் கொள்கிறேன்.

**தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.**

[1973 டிசம்பர் 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற அறிக்கையிலே வேறு திருத்தங்கள் செய்ய வேண்டிய காரணத்தினால், அது நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும். திரு. ஜேம்ஸ் அவர்கள் மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு அவசர முக்கியத்துவம் வாய்ந்த காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

## 5. நடைமுறைப் கேள்வி

### கேள்வி நேரத்திற்குப் பிறகு உடனடியாக அவையுரிமைப் பிரச்சினைகளை எடுத்துக்கொள்ளாதது குறித்து.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். சட்டப் பேரவையின் விதி எண் 186-ன் கீழ் இப்பொழுது ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புகிறேன். பேரவைத் தலைவர் அவர்கள், 1—12—1973 அன்றும், இன்றும் நம்முடைய சட்டப் பேரவையின் விதிமுறைக்கு மாறாக நிகழ்ச்சியை நடத்துவதனால் நான் இந்த ஒழுங்குப் பிரச்னையை வலியுறுத்த விரும்புகிறேன்.

விதி 186-ல்—

'A matter of privilege must be raised after the questions and before the list of the business for the day is entered upon.

Provided that a matter of privilege arising during the sitting of the House shall be entitled to immediate precedence over all other business.'

என்று இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்கள், சபையில் எது இருந்தாலும் உரிமைப் பிரச்னைக்குத்தான் முன்னிடம் தர வேண்டும் என்பதுதான் நம்முடைய விதிமுறை. ஆனால், பேரவைத் தலைவர் அவர்கள், 1-12-1973 அன்று உரிமைப் பிரச்சினை சபையில் இருக்கிற காலத்தில், மற்ற உரிமைப் பிரச்னைகளுக்குரிய தீர்ப்பை வழங்கினீர்கள். அதே போல், இன்றும் நம்முடைய மாண்புமிகு திரு. வகாப் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னை கொடுத்திருக்கிறார். அதை முன்னாலே எடுத்துக் கொள்ளாமல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அறிக்கை படிப்பதற்கு அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். ஆகவே, நம்முடைய விதிமுறைக்கு மாறாக



1973 டிசம்பர் 3] [திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

பேரவைத் தலைவர் அவர்கள் நடந்து இருக்கிறீர்கள். பேரவைத் தலைவர் அவர்கள், விதிமுறைகளைப் பின்பற்றுகிறார்களா, அல்லது சமயத்திற்கு ஏற்ப அவை நடவடிக்கைகளை மாற்றுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 82-வது விதியின்கீழ் ஒரு அறிக்கையைக் கொடுத்தார்கள். அது இன்றைய அஜண்டாவிலே குறிக்கப்படாத ஒரு நிகழ்ச்சி. அதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அவையின் கேள்வி நேரம் முடிவுற்று, அஜண்டாவிலே கொடுக்கப்பட்டுள்ள அடுத்த நிகழ்ச்சியை எடுத்துக்கொள்வதற்கு முன்னாலே, எதை ஏற்றுக்கொள்வது என்பது வரும்போது, பிரிவிலெஜ் மாட்டரை எடுத்துக் கொள்வதா அல்லது ஒத்தி வைப்பு தீர்மானத்தை எடுத்துக்கொள்வதா, என்ற கேள்வி வருகிறது. அது கேள்விக்கும் அஜண்டாவிலே இருக்கிற அடுத்த நிகழ்ச்சிக்கும் இடையிலே எடுத்துக்கொள்வது. இதிலே எந்தவிதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை. முறையாக, பிரிவிலெஜ்ஜைத் தான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் சொல்கிறேன். இங்கு குறிப்பிடப்பட்டது, அஜண்டாவிலே இல்லாததால், அதை எடுத்துக்கொண்டேன்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** அந்த விதியின் இறுதியைக் கூர்ந்து படித்தால், தெரியும். 'over all other business'. என்று இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்கள் கொஞ்சம் தயவு செய்து கூர்ந்து கேட்டால், என்னுடைய கேள்வியின் உண்மை புரியும் என்று நினைக்கிறேன்.

'shall be entitled to immediate precedence over all other business.'

வேறு எந்த நிகழ்ச்சி இருந்தாலும், உரிமைப் பிரச்னைக்குத்தான் முதலிடம் அளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரிவிலெஜ்ஜை இரண்டு முறைகளில் எழுப்பலாம். ஒன்று, இந்த அவையில் நடந்த நிகழ்ச்சிக்கு, நேற்றோ, முந்திய நாளிலோ நடந்த நிகழ்ச்சிக்கு பிரிவிலெஜ் வரும். சில பிரிவிலெஜ்கள், உரிமைப் பிரச்னைகள் அப்பொழுதே நடப்பதைப்பற்றி வந்தால், மற்ற எல்லா அலுவல்களையும் நிறுத்திவைத்து அவை அப்பொழுதே விவாதிக்கப் படும். இதிலே எந்தவித பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை.

## 6. கவன ஈர்ப்பு

### (அ) குமரி மாவட்டத்தில் பல தொடக்கப்பள்ளிகளில் போதுமான ஆசிரியர்கள் இல்லாமை குறித்து

THIRU J. JAMES : Sir, I wish to call the attention of the Hon. Minister for Education and Tourism to a matter of urgent public importance, namely, the existence of many primary schools in Kanyakumari district without sufficient number of teachers since the Government have not sanctioned posts for many schools in both the Government and Private Managements, consequently students are not properly taught.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு 7 கால் அட்டென்ஷன் நோட்டிஸ்கள் இருக்கின்றன. நம்முடைய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவுப்படி, இன்றோடு அவை முடிவதாக இருக்கிறது. இன்றோடு அவை முடிவதாக இருந்தால், இன்றைக்கே எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளலாம். நாளைக்கு அவையை நீட்டிப்பதாக இருந்தால், நாளைக்கு 3 அல்லது 4 நோட்டிஸ்களை எடுத்துக்கொள்ளலாம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, சபையில் அலுவல் அதிகமாக இருக்கிற காரணத்தால், நாளைய தினமும் சட்டப்பேரவையை வைத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நாளை காலையில் வைத்துக்கொள்ளாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளையும் பேரவை இருப்பதால் இன்றைக்கு 4 எடுத்துக்கொண்டு நாளைக்கு 3 எடுத்துக் கொள்ளலாம்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், அரசு உள்ளாட்சித்துறை மற்றும் தனியார் ஆரம்பப் பள்ளிகளில், இடைநிலை, இளநிலை, உடற்பயிற்சி ஆசிரியர், தொழிலாசிரியர் பணியிடங்கள் அரசினால் கொடுக்கப்பட்டே வருகின்றன. தேவையான பணிகள் அவ்வப் பொழுது கொடுக்கப்படுகின்றன. தற்பொழுது, வேலையில்லாத் திண்டாட்டத்தினை ஒழிக்குமுகத்தான், அரசு ஏற்படுத்தியுள்ள ஆசிரியர் பணியிடங்களில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பல்வேறு ஆரம்பப் பள்ளிகளுக்குக் கீழ்க்கண்டவாறு பணியிடங்களை ஒதுக்கியுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் ஆரம்பப் பள்ளிகளுக்கு ஒதுக்கப்பட்ட பணியிடங்கள்—

இடைநிலை—277

இளநிலை—30

உடற்பயிற்சி ஆசிரியர்—20

தொழிலாசிரியர்—70

மேற்கூறிய பணியிடங்களில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுவிட்டனர் எனக் கல்வித்துறை ஆய்வு அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் எண்ணிக்கையைப் பார்க்குமிடத்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரம்பப் பள்ளிகளில் ஆசிரியர் பணியிடங்கள் ஓரளவு அரசால் நிரப்பப் பட்டிருக்கின்றன என்பதை அறியலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அறிக்கை வாசிக்கும்போது பணியிடங்கள் ஓரளவுக்கு நிரப்பப் பட்டிருக்கின்றன என்று கூறினார்கள். எனக்குத் தெரிந்தமட்டில், இன்னும் பல பள்ளிக்கூடங்களில் 68 மாணவர்களை வைத்து, ஆரம்பப் பாடசாலைகளில், ஒரு ஆசிரியர் கல்வி கற்றுக் கொடுக்கின்ற நிலை இருக்கிறது. அதோடு உடல் பயிற்சி ஆசிரியர்கள், பல அரசாங்கப் பள்ளிகளில் 1,500 மாணவர்கள் இருக்கிற பள்ளிகளில் கூட, ஒரு ஆண் ஆசிரியரும், ஒரு பெண் ஆசிரியரும் மட்டும்தான் இருக்கிறார்கள். அரசாங்க ஆணைப்படி 250 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் இருக்க வேண்டும். அந்த முறையிலும் அமைக்கப்படவில்லை. அதோடு மலையாளம் படித்து, எஸ் எஸ் எல். சி. படித்து,

டிரெயினிங் பெற்ற ஆசிரியர்கள் பல ஆண்டுகளாக தனியார் பள்ளிகளில் பணியாற்றுகிறார்கள். ஆனால், அரசாங்கத்தின் போஸ்ட் சாங்க்ஷன் வராததால், அவர்கள் இன்னும் சம்பளம் பெறாத நிலை இருக்கிறது. ஆகவே, அவற்றையெல்லாம் உணர்ந்து, மேலும் உடல் பயிற்சியாளர்களுக்கும், மலையாளம் படித்த ஆசிரியர்களுக்கும் போதுமான போஸ்ட்ஸ் சாங்க்ஷன் பண்ண அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இந்த ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் அரசாங்கம் ஒதுக்கிய தொகைக்கு ஈடான ஆசிரியர் பதவியும், மத்திய திட்டத்தின் கீழும், மத்திய-மாநில அரசுகள் சேர்ந்து செய்கிற திட்டத்தின் கீழும் பாரபட்சமற்ற முறையில் எல்லா மாவட்டங்களுக்கும் கணக்கிட்டு, ஆசிரியர் பதவிகளை ஒதுக்கி இருக்கிறோம். தேவையான அளவு ஆசிரியர்களை ஒதுக்குவதற்கு நம்முடைய நிதிநிலை இடம் கொடுக்கவில்லை. கூடுமான வரையில் வாய்ப்பு தந்து வருகிறோம். மத்திய அரசு தந்து வருகிற ரூ. 98 லட்சமும் நாம் செலவழிக்கிற தொகையையும் சேர்த்து 10,500 ஆசிரியர் பதவிகளைத் தந்திருக்கிறோம். அதில் கிட்டத்தட்ட 6,000 ஆசிரியர்களையும் கிட்டத்தட்ட 2,000 தொழில் ஆசிரியர்களையும் நியமிக்கலாம் என்ற முறையில் பகிர்ந்து அளிக்கிற முறை இருக்கிறது. ஆகவே, தேவைகள் ஓரளவு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. வசதிகள் ஏற்பட்டதும் நிறைவேற்ற முடியும். சிலபல இடங்களிலே தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் இருக்கின்றன. எல்லா மாவட்டங்களுக்கும் பாரபட்சமற்ற முறையில், கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் சேர்த்து, மாவட்ட நிலைமைகளை ஆராய்ந்து, கணக்குக்கேற்றபடி தரப்பட்டிருக்கிறது.

**(ஆ) சைதாப்பேட்டை தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகத்தில் பெனிசிலின் ஊசி போடப்பட்ட திரு. சையத் காதர் என்பவர் மரணம் குறித்து**

DR. H. V. HANDE: Sir, I wish to call the attention of the Hon. Minister for Health to a matter of urgent public importance, namely, the death of Thiru Syed Kadar of West Mambalam on Tuesday, 13th November 1973, due to administration of Penicillin injection in the E.S.I. Dispensary, Saidapet.





THIRU N. DENNIS: Sir, I wish to call the attention of the Hon. Minister for Health to a matter of urgent public importance, namely, the death of Thiru Syed Kader of West Mambalam on Tuesday, 13th November 1973, due to administration of Penicillin injection in the E.S.I. Dispensary, Saidapet.

THIRU M. A. LATHEEF: Sir, I wish to call the attention of the Hon. Minister for Health to a matter of urgent public importance, namely the death of Thiru Syed Kadar of West Mambalam on Tuesday, 13th November 1973, due to administration of Penicillin injection in the E.S.I. Dispensary, Saidapet.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே . . .

13-11-1973 அன்று தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகத்தில் (சைதாப்பேட்டை II ) சக்திவாய்ந்த புரோகைன் பெனிசிலின் ஊசி போடப்பட்டதைத் தொடர்ந்து நோயாளி ஒருவர் இறந்தது குறித்துத் தகவல் கிடைத்ததன் மேல், மாநிலத் துணை மருந்துகள் கட்டுப்பாடு அதிகாரி, சென்னை மாநகர மருந்துகள் இன்ஸ்பெக்டருடன் உடனே அங்கு சென்றார். புலனாய்வில் கிடைத்த விவரங்கள், மருந்தகத்தில் எந்த சூழ்நிலையில் நோயாளி இறந்தார் என்பது குறித்த விவரங்கள் ஆகியவை கீழே தரப்பட்டுள்ளன. திரு. சையத் காதர் என்கிற 27 வயதுள்ள நோயாளி ஒருவர் இருமல், சளிக்காகச் சிகிச்சை பெறுவதற்காக 13-11-1973 அன்று சைதாப்பேட்டை II தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகத்திற்குச் சென்றார். மருத்துவ அதிகாரி டாக்டர் எஸ். என். மோதிலால் அவரை உடற்பரிசோதனை செய்து, அவருக்குச் சுவாசகுழலில் நோய்க்கிருமிகள் தாக்கியிருப்பதாகக் நோய்க்குறி கண்டார். பின்வரும் மருந்துகளை மருத்துவ அதிகாரி அவருக்கு எழுதினார்.

1. புரோகைன் பெனிசிலின் ஊசி 4 லட்சம் யூனிட்
2. சல்பொனா மாத்திரைகள் (Sulfuna Tablets B.D.).
3. லாங்கிபீன் (Longifene B.D.).

நோயாளிக்குச் சோதனை ஊசி ஒன்று போட்டுப்பார்த்த பிறகு, செவிலியர் திருமதி மனோகரி ஜகந்நாதன், பம்பாய், தானா பைசர் லிமிடெட் (Pfizer Limited) நிறுவனத்

தாரால் தயாரிக்கப்பட்ட, புரோகைன் பெனிசிலின் I.P. 4 லட்சம் யூனிட் ஊசியைப் போட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. அந்த நோயாளி தமக்கு என்னவோ செய்வதாகக் கூறிவிட்டுக் கீழே விழுந்து விட்டார். அவருக்கு மருந்தின் எதிர்விளைவு அதிர்ச்சி ஏற்பட்டு வாயில் நுரை காணப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. அவரது நாடித்துடிப்பினை உணரமுடியவில்லை. அவர் திரும்ப தன்னிலையை அடைவதற்குப் பின்வரும் மருந்துகள் செலுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

1. அவில் ஊசி மருந்து (Avil Inj. Im.).

2. குளுகோசுடன் கலந்த டெகாட்ரான் ஊசி மருந்து 1 மி. லி. (Inj. Decadron I ml. with Glucose).

3. அட்ரினலின் ஊசி மருந்து (0.5 ml. Im. (Inj. Adranaline 0.5 ml. Im.).

4. கோராமைன் ஊசி மருந்து (Coramine Injection).

செயற்கைமுறையில் மூச்சூட்ட முயற்சி செய்யப்பட்டது. ஆனால் அந்த நோயாளி காலை 8.48 மணிக்கு இறந்து விட்டார்.

3. மேற்படி மருந்தகத்தினர் இந்தத் தொகுதி புரோகைன் பெனிசிலின் போர்சிபைட் 4 லட்சம் யூனிட் ஊசி மருந்து குப்பிகள் 1,000 அயனாவரம் மத்திய மருந்துகள் கிடங்கிலிருந்து பெற்றனர். அவற்றைத் தொடர்ந்து பயன்படுத்தியும் வந்துள்ளனர். 8-11-1973 அன்று, ஈட்டுறுதி செய்து கொண்டோர் பிரிவுக்கு 100 குப்பிகள் வழங்கப்பட்டன. அவற்றில் 8-11-1973 அன்று 33 குப்பிகளும் 9-11-1973 அன்று 63 குப்பிகளும் பயன்படுத்தப்பட்டன. நான்கு குப்பிகள் பயன்படுத்தப்படாமல் எஞ்சியிருந்தன. பயன்படுத்தப்படாத குப்பிகள் 2-ஐயும் பயன்படுத்தப்பட்ட குப்பி ஒன்றையும் காவல் துறையினர் கைப்பற்றி, பகுப்பாய்வுக்காக மாநிலத் துணை மருந்துகள் கட்டுப்பாடு அதிகாரியிடம் ஒப்படைத்தனர். தலைமை கிடங்கில் மேலும் 5 குப்பிகள் கிடைத்தன. அவை உடனடியாக பகுப்பாய்வு செய்யப்படுவதற்காக அரசு பகுப்பாய்வாளரிடம் (மருந்துகள் சிறப்பு) ஒப்படைக்கப்பட்டன. மேற்படி மருந்தைக் கரைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட, வல்கன் லாபரட்டரிஸ் நிறுவனத்தாரால் தயாரிக்கப்பட்ட 3—8—1973 தயாரிப்பு நாளாகவும், தொகுதி எண் 4030-ஐயுங்



கொண்ட ஊசி மருந்துக்கான நீரிலிருந்து சிறிதளவும் எடுத்து மேலும், மருந்தகங்களிலிருந்து மாதிரி மருந்துகளைப் பெறுமாறு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டு மருந்துச் சரக்கு இன்ஸ்பெக்டர்கள் பின்வரும் தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகங்களிலிருந்து மருந்து மாதிரிகளைப் பெற்றனர் .—

1. தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகம், சூளை.

2. தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகம், கோடம்பாக்கம்.

3. தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகம், கீழ்ப்பாக்கம்.

மேற்படி மாதிரி மருந்துகள் உடனடியாகப் பகுப்பாய்வு செய்யப்படுவதற்காக, சென்னை அரசு பகுப்பாய்வினருக்கு (மருந்துகள் சிறப்பு) அனுப்பப்பட்டுள்ளன.

4. மேற்படித் தொகுதியின்கீழ் சக்திவாய்ந்த புரோகைன் பெனிசிலின் ஊசி மருந்துக் குப்பிகள் 54,000 சென்னையிலுள்ள, பைஸர் லிமிடெட் நிறுவனத்தின் விற்பனை அலுவலகத்தில் பெறப்பட்டு, அவை முழுவதும் அயனாவரத்திலுள்ள தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனைக்கும், அயனாவரத்திலுள்ள மத்திய மருந்துகள் கிடங்குக்கும் வழங்கப்பட்டன என்று மருந்துச் சரக்குகள் இன்ஸ்பெக்டர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. மத்திய மருந்துகள் கிடங்கினர் மேற்படி மருந்தின் இருப்புக்களை சென்னையிலும் சென்னையைச் சுற்றியுள்ள பல்வேறு தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகங்களுக்குப் பங்கீடு செய்தனர். எழும்பூரிலுள்ள பைசர் லிமிடெட் நிறுவனத்தின் விற்பனை அலுவலகம், அயனாவரத்திலுள்ள மத்திய மருந்துகள் கிடங்கு அல்லது அயனாவரம் தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை அல்லது சைதாப்பேட்டை II தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகம் ஆகியவற்றில் இருப்புகள் இல்லாததால், அந்த இடங்களிலிருந்து மேற்படி மருந்தின் மாதிரிகளைப் பெறமுடியவில்லை. பம்பாய், பைஸர் லிமிடெட் நிறுவனத்தாரிடம் உள்ள மருந்தின் கட்டுப்பாட்டு மாதிரிகள் சரிபார்க்கப்படுவதற்காக, இது குறித்து பம்பாய் உணவு, மருந்துகள், நிர்வாகத்தினருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. புது டெல்லியிலுள்ள, இந்திய அரசின் மருந்துகள் கட்டுப்பாட்டு அதிகாரிக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநிலத்திலுள்ள மருந்து இன்ஸ்பெக்டர்கள் அனைவரும் அவரவரது அதிகார வரம்புகளில் உள்ள மருத்துவமனைகளிலும் மருந்தகங்களிலுமிருந்து இந்த மருந்தின் மாதிரி

களைப் பெற்று, அச்சரக்குகளை முடக்குமாறு கட்டளையிடப்பட்டுள்ளனர். தம்மிடம் பகுப்பாய்வுக்காக ஒப்படைக்கப்பட்ட 8 குப்பிகளும் சோதனைகள் செய்து பார்க்கப்பட்டதில் தரமுடையவை என்று கிண்டி கிங் நிலையத்திலுள்ள அரசு பகுப்பாய்வாளர் (மருந்துகள் சிறப்பு) இப்போது அறிவித்துள்ளார்.

Dr. H. V. HANDE : May I know whether the health report says that this death was because of anaphylactic shock and if so, may I know whether the Government are prepared to take steps to prohibit the indiscriminate use of penicillin ointment. It is because indiscriminate use of penicillin ointment leads to anaphylactic shock. That is point No. 1. Also it produces a state of condition wherein penicillin will not act later on. The patient gets accustomed to penicillin. May I know whether Government are prepared to prohibit the indiscriminate use of penicillin ointment since as I have mentioned it leads to anaphylactic shock and other conditions.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் .** தலைவரவர்களே, இங்கே இந்த நோயாளிக்கு வழங்கப்பட்டது புரோகைன் பெனிசிலின் ஊசி 4 லட்சம் யூனிட் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறதே தவிர பெனிசிலின் ஆயின்ட்மெண்ட் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப் படவில்லை. அப்படி பெனிசிலின் ஆயின்ட்மெண்ட் வழங்கப் பட்டிருக்குமேயானால் அது பற்றி பரிசீலனை செய்யும்படி கேட்கப் படும்.

Thiru M. A. LATHEEF : Mr. Speaker, Sir, may I know from the Hon. Minister for Public Health whether a test dose was given before administration of penicillin injection, as is usually given in such cases. Next one is, in view of the young age of the diceased and in view of the responsibility and liability of Government, I mean vicarious responsibility, will the Government be prepared to give compensation to the family of the diceased?

**மாண்புமிகு திரு. க. அன்பகழன் :** தலைவரவர்களே, ஈ.எஸ்.ஐ. மருத்துவ நலத்திட்டத்தின்படி அதற்காகத் தனியாகவே சில வரைமுறைகள் இருக்கின்றன. அந்த ஈ.எஸ்.ஐ. திட்டம், தொழிலாளர் நல ஈட்டுறுதியில் அமைந்தது. எனவே, இதற்காகச்



செய்யப்பட்ட எல்லாவித நன்மைகளும் அவருடைய குடும்பத்திற்கும் கிடைக்க வேண்டும். அவைக் கிடைப்பதற்கு, தொழிலாளர் நல ஈட்டுறுதி மருந்தகம் சார்பாகக் கவனிக்கப்படும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** பேரவைத் தலைவரவர்களே, நான் சொன்னது, இந்த பெனிசிலின் ஆயின்ட்மென்ட் போடுகிற போது அனேபிலாக்டிக் ஷாக் ஏற்படுகிறது. பெனிசிலின் இன்ஜெக்ஷன் போடுகிற காரணத்தாலும் இந்த ஷாக் ஏற்படுகிறது. அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திலிருந்து அந்த மாதிரி ஷாக் ஏற்பட்டிருக்கிறது என்பது தெரியவருகிறது. வெளி நாட்டில் என்ன செய்கிறார்கள் என்றால், டாக்டர்களுடைய அனுமதி இல்லாமல் இந்த மருந்தைக் கொடுப்பதில்லை. இப்படிப் பட்ட பென்சிலின் ஆயின்ட்மெண்ட் கொடுக்கலாம் என்று டாக்டர்கள் எழுதினால் மாத்திரமே அதைக் கொடுக்கிறார்கள். அப்பேற்பட்ட நிலைமையை இங்கேயும் மேற்கொள்வது பற்றி ஆராய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, இப்போது டாக்டர் ஹாண்டே அவர்கள் தெரிவித்திருப்பது இதிலேயிருந்து எழுகின்ற தனிப் பிரச்சினை. அது பற்றி அந்த இலாக்காவினருக்குத் தெரிவிக்கப்படும்.

முதலில், திரு. லத்தீப் அவர்கள், அந்த நோயாளிக்குச் சோதனை ஊசி போடப்பட்டதா என்று கேட்டார்கள். திருமதி மனோகரி ஜகந்நாதன் என்ற நர்ஸ் அந்த நோயாளிக்குச் சோதனை ஊசி போடப்பட்டதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

### (இ). கேரள முதலமைச்சர் பாண்டியாறு—புன்னம்புழா நீர்த் தகராறு பற்றி அளித்த அறிக்கை குறித்து.

Thiru N. DENNIS : Sir, I call the attention of the Hon. Minister for Works to a matter of urgent public importance, namely, the reported statement of the Hon. Chief Minister of Kerala that Tamil Nadu State has gone back on the understanding on Pandiyar-Punnampuzha waters disputes in the Kerala Legislative Assembly during October 1973.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, பாண்டியாறு-புன்னம்புழா நீர்த் தகராறு குறித்து 1973 அக்டோபரில் கேரள சட்டமன்றத்தில் கேரள அமைச்சர் அளித்த அறிக்கையை இங்கே தெரியப்படுத்துவதற்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறேன்.

பாண்டியாறு—புன்னம்புழா திட்டம், சோழத்திப்புழா திட்டம் ஆகிய இரண்டு மின்சக்தி உற்பத்தித் திட்டங்கள் குறித்து தமிழ் நாட்டிற்கும் கேரளத்திற்கும் இடையே 1965 அக்டோபரில் ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டது. பாண்டியாறு-புன்னம்புழா ஆகிய இரண்டு ஆறுகளும், நீலகிரியில் பைக்காரா ஆற்றுப் பள்ளத்தாக்குக்கு அடுத்துள்ள பகுதியில் உற்பத்தியாகின்றன. அவை, மேற்கு நோக்கி கேரள எல்லைப் பகுதிக்குள் ஓடுகின்றன. தமிழ்நாடு நீர்கோள் பகுதியில் இந்த இரண்டு ஆறுகளிலிருந்தும் சுமார் 2,000 கோடி கனஅடி நீர் கிடைக்கிறது. அதில், 1,400 கோடி கனஅடி நீரை 4,420 லட்சம் யூனிட் மின்சக்தி உற்பத்தி செய்யவும் கடைமடைப் பகுதி நீரைக் கேரள மாநிலத்தில் ஓடும் சாலியாற்றினுள் விடுவதற்கும் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. கேரள மாநிலத்திற்கு விடும் நீரைக் கொண்டு அவர்கள் சுமார் 2,320 லட்சம் யூனிட் மின்சக்தி உற்பத்தி செய்ய இயலும். சோழத்திப்புழா ஆறு வயநாடு மேட்டுநிலத்திலிருந்து உற்பத்தியாகி, மேற்காக ஓடும் சாலிப்புழா ஆற்றுடன் கலக்கிறது. சோழத்திப்புழா திட்டத்தின்கீழ் 2,250 லட்சம் யூனிட் மின்சக்தி உற்பத்தி செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. இந்த மின்சக்தி தமிழ் நாடு அரசாலும் கேரள அரசாலும் சரிசமமாகப் பங்கிட்டுக் கொள்ளப்படும். 1965-ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்ட மூல ஒப்பந்தத்தின்கீழ் கேரள மாநிலத்திற்கு மொத்தம் சுமார் 3,450 லட்சம் யூனிட் மின்சக்தியும் தமிழ்நாட்டிற்கு சுமார் 5,550 லட்சம் யூனிட் மின்சக்தியும் கிடைக்கும்.

கோயம்புத்தூரிலுள்ள குடியானவர்கள் தங்களின் பாசனத் தேவை குறித்து முறையீடு செய்து கொண்டதன் பேரில், மின் சக்தி உற்பத்திக்காகப் பாண்டியாறு-புன்னம்புழா நீரை மோயாறு ஆற்றுப் பள்ளத்தாக்கிற்குத் திருப்பி விடவும் அதன்பின் கோயம் புத்தூர் மாவட்டத்தில் சுமார் 1 லட்சம் ஏக்கர் புன்செய் அல்லது 50,000 ஏக்கர் நன்செய் நிலங்களுக்குப் பாசனமளிப்பதற்கு அந்த



நீரைப் பயன்படுத்துவதற்கும் அரசுக் கருதியது. இது நீலாம்பூர் பகுதியில் பாசனத்தைப் பாதிக்கும் என்றும் கேரளாவில் மின் சக்தி உற்பத்தியைப் பாதிக்கும் என்றும் கோழிக்கோட்டுக்குக் குடிநீர் வழங்குவதையும் மாவூரிலுள்ள குவாலியர் ரயான் தொழிற் சாலைக்கு நீர் வழங்குவதையும் பாதிக்கும் என்றும் காரணங்காட்டி கேரள அரசு இதற்கு மறுப்பு தெரிவித்துள்ளது. இந்த இரண்டு மாநிலங்களும் பரஸ்பர நன்மையடைவதற்கேற்ப தீர்வு காணும் நோக்கத்துடன், அதிகாரிகள், அமைச்சர்கள் அளவில் இரு மாநிலங்களுக்கிடையே நடந்த பேச்சுவார்த்தைகளின் போது இது குறித்து விவாதிக்கப்பட்டது.

23—2—1973, 24—2—1973 ஆகிய நாட்களில் நடந்த இரு மாநிலங்களின் அமைச்சர்கள் அளவிலான கூட்டத்தில், கேரள மாநிலத்திற்கு 1965-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் எந்த அளவு நீரையும் மின்சக்தியையும் உறுதியாகப் பெறக்கருதப்பட்டதோ அதே அளவு கிடைக்கக்கூடிய மாற்று செயற்குறிப்பு ஒன்றை நமது அரசு கருத்தறிவித்தது.

**மாற்று செயற்குறிப்புகள் பின்வருமாறு.**

(1) தமிழ்நாடு, சோழத்திப்புழா திட்டத்தில் அதற்குக் கிடைக்கும் பாதி பங்கைவிட்டு விட்டு, புன்னம்புழா மூல நீர்த் தேக்கத்திற்குக் கீழே அமைக்கக் கருதியுள்ள பாமரிகடே அணையிலிருந்து 220 கோடி கன அடி நீரை எடுத்துக் கொள்ளும்.

(2) மேற்கூறப்பட்ட 220 கோடி கன அடி நீரை எடுத்துக் கொள்வதுடன், மூலச் செயற்குறிப்பின்படி கேரள மாநிலத்திற்கு 500 கோடி கன அடி நீரை இடையறுமல் பெறும்.

(3) கேரள மாநிலத்திற்குக் கிடைக்கச் செய்யப்பட வேண்டிய எஞ்சிய நீர் 680 கோடி கன அடி நீருக்காக, தமிழ்நாடு அரசுச் செலவில் மூன்று அணைகள் கட்டப்படும். ஒன்று தமிழ் நாட்டு எல்லைகளுக்குள்ளும் இரண்டு கேரள எல்லைகளுக்குள்ளும் கட்டப்படும் (இதற்கான செலவு சுமார் ரூ. 3.5 கோடி).

மாற்று செயற்குறிப்புகளின்கீழ், தமிழ்நாடு மின்சக்தியைப் பெறுவதுடன், பாசனத்திற்காக 900 கோடி கன அடி நீரையும் பெறும். தமிழ்நாட்டின் மாற்றுச் செயற்குறிப்புகள் குறித்து

ஆய்வு செய்து முடிவான பதில் அனுப்பப்படும் என்று கேரள அரசு தெரிவித்தது. பின்னர், அச்செயற்குறிப்புகள் பொருளாதார அடிப்படையில் தனித்தியங்கக் கூடியனவாக இல்லை என்றும், தொழில் நுட்ப அடிப்படையில் சிறப்பாகச் செம்மையாக இல்லை என்றும் கேரள அரசு தெரிவித்துள்ளது. எனினும், 1973 ஆகஸ்ட் 18, 19-ஆம் நாட்களில் திருவனந்தபுரத்தில் சிறுவாணி நீர் குறித்து அமைச்சர் அளவில் நடந்த விவாதங்களின்போது தமிழ் நாட்டிற்கும், கேரளாவிற்கும் இடையில் பாண்டியாறு-புன்னம் புழா நீரைப் பயன்படுத்துதல் குறித்து ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள முடியும் என்றும், இரண்டு அரசுகளுக்கு மிடையே மேற்கொண்டும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுவது பயனுள்ளதாய் இருக்கக்கூடுமென்றும் கேரள முதலமைச்சர் உறுதியாகத் தெரிவித்தார். கேரள அரசின் நீர்-மின்சக்தி துறையின் சிறப்புச் செயலாளருக்கு எழுதப்பட்டிருந்த 10—9—1973-ம் நாளிட்ட நமது கடிதத்தில், கேரள அமைச்சர்கள் திரு. கோவிந்தநாயர், திரு. திவாகரன் ஆகியோரை, பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் குறித்து மட்டுமல்லாமல் நெல்லித்துறை புனல்-மின் திட்டம் குறித்தும், கீழ் நீராறு அணை கட்டுவது குறித்தும் விவாதிப்பதற்காகச் சென்னைக்கு வருமாறு கேட்டு எழுதப்பட்டுள்ளது. காவிரி நீர்த்தகராறு குறித்து புதுடில்லியில் நடக்கவிருக்கும் விவாதங்கள் முடிவடைந்த பின்னர், இந்த அரசு குறிப்பிட்ட பொருள்பற்றிய விவாதங்கள் நடத்தப்படலாம் என்று குறிப்பிட்டு 29—9—1973 நாளிட்ட கடிதத்தில் கேரள அரசிடமிருந்து நமக்குப் பதில் வந்துள்ளது.

வருங்காலத்தில் தமிழ்நாட்டுடன் சேர்ந்து நீரைப் பயன்படுத்துவதற்கான அடங்கல் திட்டம் ஒன்றைக் கொண்டு வருவது சாத்தியமானது என்று தாம் கருதவில்லையென்றும், பாண்டியாறு-புன்னம்புழா நீரைப்பயன் படுத்துவது குறித்த 1965-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தினின்று தமிழ்நாடு பின்வாங்க முயற்சி செய்கிறது என்றும். 29—10—1973-ல் கோழிக்கோட்டில் பத்திரிகை நிருபர்களிடம் கேரள முதலமைச்சர் அறிவித்திருப்பது ஆச்சரியமாயுள்ளது.



இந்தப் பத்திரிகை அறிவிப்புக்குப் பதில் கொடுப்பது அவசியம் என்று இந்த அரசு கருதவில்லை. ஏனெனில், அவ்வாறு செய்வது சுமுகமான உடன்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தாமல் அனாவசியமான கருத்து வேறுபாடுகளைத் தோற்றுவிக்கும். இரு அரசுகளுக்கும் நன்மை பயக்கும் வகையில் நியாயமான உடன்பாடு காணும்பொருட்டு, பாண்டியாறு-புன்னம்புழா பற்றிய நமது செயற் குறிப்புகள் குறித்து விவாதிப்பதற்கு, கேரள அரசின் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. திவாகரன் அவர்களையும், திரு. கோவிந்தநாயர் அவர்களையும் சென்னைக்கு வருமாறு அழைத்து, நமது 9—11—1973-ம் நாளிட்ட நேர்முகக் கடிதத்தில் எழுதப்பட்டுள்ளது. கேரள அரசிடமிருந்து பதில் எதிர்பார்க்கப் படுகிறது. இது குறித்து தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப் படும். மேற்கு நோக்கி ஓடும் ஆறுகளான பாண்டியாறு, புன்னம் புழா ஆகியவற்றின் நீரைத் திருப்பிவிடுவதன் மூலம் கோயம் புத்தூர் மாவட்டத்திற்கு மின்சக்தி மட்டுமல்லாமல் பாசனத்திற் காகவும் தண்ணீர் கிடைக்கச் செய்வதற்கு, கேரள அரசுடன் உடன்பாடு காணும் பொருட்டு இயலக்கூடிய நடவடிக்கைகள் அனைத்தையும் இந்த அரசு மேற்கொண்டுள்ளது, என்பது இதனால் புலனாகிறது.

### (ஈ). குமரி மாவட்ட, பொன்மனை கிராம மக்களுக்கு நியாய விலையில் அரிசி கிடைக்காததால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

THIRU J. JAMES: Sir, I call the attention of the Hon. Minister for Food and Co-operation to a matter of urgent public importance, namely, the non-availability of rice and sugar to the people of Kanyakumari district particularly in Ponmanai village in Kalkulam taluk at the normal price and grave situation prevailing there.

(முற்பகல் 10.30)

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தின் மக்கள் தொகை 1971-ஆம் ஆண்டு கணக்குப்படி 12,22,549 ஆகும். இவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 1,14,960 டன் அரிசி தேவைப்படுகிறது. அம்மாவட்டத்தில் ஆண்டு ஒன்றுக்கு 93,000 டன் அரிசி உற்பத்தியாகிறது. மேற்கொண்டு

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1973 டிசம்பர் 3

தேவைப்படும் அரிசியை வெளி மாவட்டங்களிலிருந்து அனுமதி பெற்ற இரண்டு கூட்டுறவு சங்கங்களும் தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கல் கழகமும் இறக்குமதி செய்கின்றன. இம் மாவட்டத்தில் 2,52,727 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 352 கூட்டுறவுச் சங்கங்களின் சில்லரைக் கடைகளும் 37 தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கல் கழகத்தின் சில்லரைக் கடைகளும் இம்மாவட்டத்தில் இயங்கி வருகின்றன. அவை தவிர, வேறு அரசு அனுமதி பெற்ற தனிப்பட்டவர் சில்லரை வியாபாரிகள் எவரும் இம்மாவட்டத்தில் கிடையாது.

விளவங்கோடு வட்டம் முழுவதும் உள்ள 18 கிராமங்களையும் மற்றும் கல்குளம் வட்டத்தில் 9 கிராமங்களும் அறிவிக்கப்பட்ட ஒரு தனிப்பகுதி என்று 8—10—1973 அன்று அரசு அறிவித்தது. இதனால் ஒழுங்குபடுத்தப்பட்ட அரிசி விநியோகம் கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்த 27 கிராமங்களில் மட்டும் தற்போது அமல் படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதியில் வாழும் மக்களுக்கு குடும்ப அட்டைகள் மூலம் அரிசி வழங்கப்படுகிறது. வாரம் ஒன்றுக்கு வயது வந்தவர்களுக்கு 2,000 கிராம் அரிசியும் சிறுவர்களுக்கு 1,000 கிராம் அரிசியும் வழங்கப்பட்டு வருகிறது. இப்பகுதி தவிர நாகர்கோவில் நகரில் வாழும் மக்களில் 85 சதவிகிதத்தினர் நெல் உற்பத்தி செய்யவில்லை என்ற காரணத்தால் அந்நகரிலும் குடும்ப அட்டைகள் மூலம் அரிசி வழங்கப்படுகிறது. ஒழுங்குபடுத்தப் பட்ட விநியோகத்தால் இப்பகுதியில் வாழும் சுமார் 6 லட்சம் மக்கள் பயன்பெறுகின்றனர்.

விளவங்கோடு வட்டத்தில் 163 சில்லரைக் கடைகளும், கல்குளம் வட்டத்திலுள்ள அறிவிக்கப்பட்ட 9 கிராமங்களில் 93 சில்லரைக் கடைகளும் குடும்ப கார்டுகள் மூலம் அரிசி, சர்க்கரை விநியோகம் செய்து வருகின்றன. இக்கடைகள் மூலம் உணவுப் பொருட்கள் பெறுவதில் சிரமம் ஏதும் இருப்பதாக புகார்கள் இல்லை.

அகஸ்தீஸ்வரம் மற்றும் தோவாளை வட்டங்களில் 25,000 மற்றும் 13,000 ஏக்கராக்கள் நெல் உற்பத்தியாகும். உபரிப்பகுதிகளாய் இருப்பதால் இவ்வட்டங்களில் முறைப்படுத்தப்பட்ட விநியோக முறை இல்லை. கல்குளம் வட்டத்திலுள்ள பொன்மனை, கோதநல்லூர், நக்கலை, கல்குளம், இரணியல், ஆளூர், மணவாளக்குறிச்சி;



1973 டிசம்பர் 3] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

தலக்குளம் மற்றும் கடியப்பட்டிணம் முதலிய கிராமங்கள் நெல் உற்பத்தி செய்யும் பகுதிகளாய் இருப்பதால் இப் பகுதிகளில் முறைப்படுத்தப்பட்ட விநியோக முறை 8—10—1973-லிருந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன 9 கிராமங்களில் 13,800 ஏக்கர் நன்செய் நிலங்கள் உள்ளன.

பொன்மனைக் கிராமத்தின் மக்கள் தொகை 16,000 (1971 மக்கள் தொகை கணக்குபடி) ஆகும். இங்கே 1076 ஏக்கர் இருபோக சாகுபடி நிலங்கள் உள்ளன. இங்கு ஏழு கூட்டுறவு மற்றும் முப்பது உரிமம் பெற்ற தனிச் சில்லரை வியாபாரிகள் இருக்கிறார்கள். இவர்கள் கட்டுப்பாடு ஆணையின் விதி முறைகளுக்குட்பட்டு வியாபாரம் செய்வதில் தடையேதும் இல்லை. இந்த சில்லரை வியாபாரிகள் கோட்டாற்றில் உள்ள மொத்த வியாபாரிகளிடமிருந்து அரிசியை வாங்கி கல்குளத்தில் உள்ள வட்ட வழங்கல் அதிகாரியின் அனுமதி பெற்று பொன்மனை கிராமத்திற்கு அரிசி எடுத்துச் சென்று வியாபாரம் செய்கிறார்கள்.

கடந்த இரண்டு மாதங்களாக தோவாளை வட்டம் அகஸ்தீஸ்வரம் வட்டம் மற்றும் கல்குளம் வட்டத்தில் அரசு முறைப் படுத்தும் திட்டம் இல்லாத மற்றைய பகுதிகளில் அரிசியின் வெளிச் சந்தை விலை, இதே பருவத்தில் சென்ற ஆண்டுகளில் இருந்ததை விட ஓரளவு உயர்ந்துள்ளது. இந்த உயர்விற்குக் காரணம் உணவு வழங்குதுறை அதிகாரிகள் ஏற்படுத்தியுள்ள கட்டுதிட்டங்களையும் மீறி அண்டை மாநிலமான கேரளாவிற்கு பெரும் அளவில் நெல்லும் அரிசியும் கடத்தப்படுவதேயாகும். அதிக விலைக்கு மற்றொரு காரணம் 26—11—1973 வரை வியாபாரிகள் மீது இருந்த 33-1/3 சதவித விதிமுறைக்கொள்முதல் ஆகும். அரைவையாளர்கள் நெல், அரிசி வியாபாரத்தை நிறுத்தி விட்டதன் காரணமாக கள்ளத்தனமாக வீட்டிலேயே வேகவைத்து அதிக விலைக்கு விற்கப்பட்டது. 26—11—1973 முதல் வியாபாரிகள் மீதிருந்த விதிமுறைக் கொள்முதல் நீக்கப்பட்டுவிட்டது. இதனால், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், வெளிச்சந்தையில் அரிசியின் விலை குறைந்து வருகிறது.

1973-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் வரை இம்மாவட்டத்திற்கு, குடும்ப அட்டைகள் மூலம் வழங்குவதற்கு, திங்கள் ஒன்றுக்கு 200 டன் லெவி சர்க்கரை ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது

[திரு. மன்னை ப. நாராயணசாமி] [1973 டிசம்பர் 3

அந்தப் பகுதிக்கு வெளிமார்க்கெட்டிலிருந்து கொண்டுவர அனுமதி கொடுத்திருக்கிறது. எனக்கு வந்த செய்திப்படி ஒரு வாரத்தில் 30 பைசா விலை குறைந்திருப்பதாகச் சொல்கிறார்கள். இன்னும் விரைவில் விலை குறையும் என்று எதிர்பார்க்கிறோம். அப்படி யில்லையென்றால், மறுபடியும் பேச்சுவார்த்தை நடத்தி அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** மாண்புமிகு அமைச்சரவர்களுடைய வாக் குறுதிக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த பொன்மனைக் கிராமத்தி லுள்ள குலசேகரம் டவுன் பஞ்சாயத்தின் ஒரு பகுதி திருவட்டார் பகுதியிலும், ஒரு பகுதி பொன்மனை பகுதியிலும் இருக்கிறது. திருவட்டார் கிராமத்தில் இருக்கும் பகுதிக்கு அரிசி வினியோகம் செய்திருக்கிறோம். ஆனால் பொன்மனை பகுதிக்கு விநியோகம் செய்யவில்லை. அந்தப் பொன்மனைப் பகுதியில் தோட்டத் தொழி லாளர்களும், காடுகளில் வசிக்கும் காணிக்காரர்களும், ஹரிஜன மக்களும் இருப்பதால் இதைத் தீவிரமாகப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, இதற்கு முன் சொன்ன பதிலே பின்னால் கேட்கப்பட்ட இந்தக் கேள்விக்கும் பொருந்தும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1, 5, 7 ஆகிய அறிவிக்கைகள் நாளை எடுத்துக் கொள்ளப்படும்.

## 7. அறிவிப்புகள்.

### மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள் குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1973-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 29/1973) 27—11—1973-ம் நாளன்று சட்ட மேலவையில் திருத்தமின்றியும், தமிழ்நாடு 1973-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவும் (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1973), தமிழ்நாடு,



1973 டிசம்பர் 3] [பேரவைத் தலைவர்]

1973-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவும் (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1973) 28—11—1973-ம் நாளன்று சட்ட மேலவையில் பரிந்துரை ஏதுமின்றி நிறைவேற்றப்பட்டன என்று சட்ட மேலவைத் தலைவரிடமிருந்து செய்திகள் வந்துள்ளது என்பதை இந்தப் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

Town and Country Planning Bill, General Sales Tax Bill, Payment of Salaries Bill and the Hindu Religious and Charitable Endowments Bill are there and there is also the Private Schools Bill ஆகிய இந்த ஐந்து பில்கள் இருக்கின்றன. இன்றைக்கு எத்தனை பில்களை முடிக்கலாம்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, பேச விரும்புகின்றவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தும், தாங்கள் எவ்வளவு பேர்களை அனுமதிக்கிறீர்கள் என்பதைப் பொருத்தும் நேரம் வரும். கல்வி மசோதாவைப் பொருத்த வரையில் நிரம்பப் பேர் பேச விரும்புவார்கள். இதை இன்றைக்கே எடுத்துக்கொண்டால்கூட நாளை வரையில் நீடிக்க வேண்டிவரும். அதற்கு முன்னால், இருக்கும் மசோதாக்களை விரைவில் முடித்து விட்டால் கல்வி மசோதாவை எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

## (8) விளக்கம் கோரல்

### மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஒரு சட்ட முன்வடிவை முன்மொழிந்து, தமிழில் உரையாற்றாது, ஆங்கிலத்தில் உரையாற்றியது குறித்து.

**திரு. எம். ஏ. லத்தீப் .** தலைவரவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் சனிக்கிழமையன்று பேசும்பொழுது, மசோதாவை முன்மொழிந்து பேசும்பொழுது தமிழ் மொழி யில் இன்னும் போதிய அளவிற்கு . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது வேண்டாம்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** அதற்கு விளக்கம் தருவது அவசியம் என்று கருதுகிறேன். அப்படிச் செய்திகள் வருவதால், தமிழ்ப் பேராசிரியரோ இத்தகைய முறையிலே கருத்து தெரிவித்திருப்ப தால், தமிழ் வளரவில்லை என்ற கருத்தில் செய்தி வந்திருக்கிறது.

**மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஒரு சட்ட முன் வடிவை முன்மொழிந்து, தமிழில் உரையாற்றாது ஆங்கிலத்தில் உரையாற்றியது குறித்து**



சீக்கிரமாக எல்லா நடவடிக்கைகளையும் தமிழிலே மாற்ற வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் பேராசிரியர் வாயிலாக இத்தகைய கருத்து வருவதால் மாற்றுக் கருத்து ஏற்படக் கூடாது என்பதற்காக பேராசிரியர் அவர்கள் விளக்கம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அன்றைய தினம் இதற்காக முன் விளக்க உரையைப் படிக்க நேரிட்ட பொழுது தமிழிலே உரையைத் தயாரித்துத் தந்திருந்தார்கள், ஆங்கிலத்திலே மூல உரை இருந்தது. தமிழிலே படிக்க நேரிட்டால் இடையிலே ஆங்கிலச் சொற்றொடர்களை விளக்கினால்தான், அடிக்கடி கேட்டுப் பழகாத அந்தத் தமிழ்ச் சொற்றொடர்கள், ஏற்கனவே வழக்கத்திற்கு வாராத சொற்றொடர்களாக இருப்பதால் ஆங்கிலச் சொற்றொடர்களையும் இடையிலே படிப்பது தேவைப்பட்டது. இடையிடையே ஆங்கிலத்திலே படிப்பதைவிட, சட்டம் ஆங்கிலத்திலே கொண்டுவந்து நிறைவேற்றப்படுவதால் ஆங்கிலத்தில் படித்து விடுவதால் கேட்பவர்களுக்கு, அதிக அளவிற்கு உடனே புரிந்துகொண்டு தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று எண்ணி ஆங்கிலத்தில் படித்து விடுகிறேன் என்றேன்.

ஏனென்றால் சில புதிய சொற்கள் தமிழில் வழக்குக்கு வர வேண்டியதை இன்றைக்கு ஆங்கிலத்திலுள்ளதால் புரிந்து கொள்ளுமாறு படிக்க வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்தேனே தவிர, தமிழில் முடியாது என்றோ, தமிழ் விளக்கம் தாராது என்றோ தமிழால் அந்தக் கருத்துக்களைப் புரிய வைக்க முடியாது என்றோ பொருள் அல்ல. அங்கத்தினர்கள் சொல்லக்கூடிய கருத்துக்குத் துணையாக இருக்க எப்படி ஆங்கிலத்தில் இருக்கிறதோ அந்த வடிவத்தில் முன்னுரையைப் படிக்கிறேன் என்று படித்தேனே தவிர வேறல்ல. தமிழில் இன்னொரு பத்து நிமிடம் செலவிட்டு நல்ல முறையில் விளக்க முடியும். அங்கத்தினர்களுக்கு எப்போது தேவைப்பட்டாலும் அப்போது தமிழில் விளக்க பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.



## 9. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

### (அ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1973) (தொடர்ச்சி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் பேசுவார்கள்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, மேலும் ஒரு விளக்கம். இந்த விவாதம் துவங்கிய நேரத்தில் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் சென்னை நகரத்தின் சில பகுதிகளில் ஏற்பட்ட சரியற்ற, முறையற்ற வளர்ச்சிகள் குறித்து விளக்கினார்கள். அவை எல்லாம் இந்தச் சட்டம் வந்த பிறகு, நிறைவேற்றப்பட்ட பிறகு நடைமுறையில் பரிசீலிக்கப்பட வேண்டியவை. நடைமுறையில் பரிசீலிக்கப்பட வேண்டியவற்றை இந்த அவையில் எடுத்து வைக்கிற காரணத்தால் அதுபற்றி எந்த விளக்கமும் சொல்லும் நிலையில் இருக்கமாட்டேன். உருவாகிற சட்டத்தின் மேலான ஆலோசனைகள் என்ன என்று தெரிவிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Hon. Speaker, Sir, at the very outset, I have to say that I have been restricted in my speech, or in my suggestions, because I have been talking of execution of Master Plan rather planning of plan. I admit that planning of plan should be based on the capacity to implement it. There is no use of planning something which you cannot implement. That is the reason why I mentioned about certain facts within the City. At the outset, I welcome this measure.

It is very necessary that the Development Authority should be made into a Statutory Body instead of remaining an Ad hoc body. Nobody will dispute that, because of the increasing population and developing neighbourhoods and because of various other considerations it is very necessary that this should be a statutory body. That is the first thing.

Secondly, so far as the membership of this body is concerned, the Hon. Minister will admit that the more experts there are, the better the Development Authority can plan. That is the reason why in the original Bill it was stated that four representatives

சீக்கிரமாக எல்லா நடவடிக்கைகளையும் தமிழிலே மாற்ற வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் பேராசிரியர் வாயிலாக இத்தகைய கருத்து வருவதால் மாற்றுக் கருத்து ஏற்படக் கூடாது என்பதற்காக பேராசிரியர் அவர்கள் விளக்கம் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அன்றைய தினம் இதற்காக முன் விளக்க உரையைப் படிக்க நேரிட்ட பொழுது தமிழிலே உரையைத் தயாரித்துத் தந்திருந்தார்கள், ஆங்கிலத்திலே மூல உரை இருந்தது. தமிழிலே படிக்க நேரிட்டால் இடையிலே ஆங்கிலச் சொற்றொடர்களை விளக்கினால்தான், அடிக்கடி கேட்டுப் பழகாத அந்தத் தமிழ்ச் சொற்றொடர்கள், ஏற்கனவே வழக்கத்திற்கு வராத சொற்றொடர்களாக இருப்பதால் ஆங்கிலச் சொற்றொடர்களையும் இடையிலே படிப்பது தேவைப் பட்டது. இடையிடையே ஆங்கிலத்திலே படிப்பதைவிட, சட்டம் ஆங்கிலத்திலே கொண்டுவந்து நிறைவேற்றப்படுவதால் ஆங்கிலத்தில் படித்து விடுவதால் கேட்பவர்களுக்கு, அதிக அளவிற்கு உடனே புரிந்துகொண்டு தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று எண்ணி ஆங்கிலத்தில் படித்து விடுகிறேன் என்றேன்.

ஏனென்றால் சில புதிய சொற்கள் தமிழில் வழக்குக்கு வர வேண்டியதை இன்றைக்கு ஆங்கிலத்திலுள்ளதால் புரிந்து கொள்ளுமாறு படிக்க வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்தேனே தவிர, தமிழில் முடியாது என்றோ, தமிழ் விளக்கம் தராது என்றோ தமிழால் அந்தக் கருத்துக்களைப் புரிய வைக்க முடியாது என்றோ பொருள் அல்ல. அங்கத்தினர்கள் சொல்லக்கூடிய கருத்துக்குத் துணையாக இருக்க எப்படி ஆங்கிலத்தில் இருக்கிறதோ அந்த வடிவத்தில் முன்னுரையைப் படிக்கிறேன் என்று படித்தேனே தவிர வேறல்ல. தமிழில் இன்னொரு பத்து நிமிடம் செலவிட்டு நல்ல முறையில் விளக்க முடியும். அங்கத்தினர்களுக்கு எப்போது தேவைப்பட்டாலும் அப்போது தமிழில் விளக்க பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.





## 9. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

### (அ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1973) (தொடர்ச்சி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் பேசுவார்கள்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, மேலும் ஒரு விளக்கம். இந்த விவாதம் துவங்கிய நேரத்தில் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் சென்னை நகரத்தின் சில பகுதிகளில் ஏற்பட்ட சரியற்ற, முறையற்ற வளர்ச்சிகள் குறித்து விளக்கினார்கள். அவை எல்லாம் இந்தச் சட்டம் வந்த பிறகு, நிறைவேற்றப்பட்ட பிறகு நடைமுறையில் பரிசீலிக்கப்பட வேண்டியவை. நடைமுறையில் பரிசீலிக்கப்பட வேண்டியவற்றை இந்த அவையில் எடுத்து வைக்கிற காரணத்தால் அதுபற்றி எந்த விளக்கமும் சொல்லும் நிலையில் இருக்கமாட்டேன். உருவாகிற சட்டத்தின் மேலான ஆலோசனைகள் என்ன என்று தெரிவிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Hon. Speaker, Sir, at the very outset, I have to say that I have been restricted in my speech, or in my suggestions, because I have been talking of execution of Master Plan rather planning of plan. I admit that planning of plan should be based on the capacity to implement it. There is no use of planning something which you cannot implement. That is the reason why I mentioned about certain facts within the City. At the outset, I welcome this measure.

It is very necessary that the Development Authority should be made into a Statutory Body instead of remaining an Ad hoc body. Nobody will dispute that, because of the increasing population and developing neighbourhoods and because of various other considerations it is very necessary that this should be a statutory body. That is the first thing.

Secondly, so far as the membership of this body is concerned, the Hon. Minister will admit that the more experts there are, the better the Development Authority can plan. That is the reason why in the original Bill it was stated that four representatives

will be appointed from that authority. That is the natural thing to do. That is why I pointed out certain defects in Town Planning in the Madras City. That has to be co-related to the Master Plan. For such co-relation, it is necessary that representation should be natural from that body which has the maximum stake in this. I think the maximum stake is to the Madras Corporation.

Coming to the next point, I think I will clarify the thing. When planning a thing, we should also see the background of what we are planning. That is the reason why I quoted the instance of Saidapet. When Saidapet Municipality was taken over by the Corporation in 1948, all the plans that were there before the take-over were dropped. Because of that there is so much of confusion. I am sure that the Hon. Minister will accept and that this Government will accept that four members have to be there as was in the original Bill.

There should be representation to Trade and Commerce also. This is a natural thing, because trade and commerce is interested in the development of neighbourly areas and they must have a voice in its development. At the same time, labour is equally interested in it. In former days when there were Aldermen in the City, they were nominated or elected by the Chamber of Commerce and also by the Labour Unions so that both the interests were safeguarded. This Bill says about only representatives of Trade and Commerce and how they are to be nominated or elected, whether it is the function of the Government to nominate them or it is the function of the Chamber of Commerce, there is nothing said in the Bill about the process of election. When Rules are framed perhaps Government will see that representation is based on election. Whatever it is it is not mentioned here.

I am only throwing out a suggestion that when Trade and Commerce is represented in this Metropolitan Body, the vital interests of thousands of workers are also there to be safeguarded. For example, when there was the Neighbourhood Planning in the City of Madras, there was a proposal to construct a big hospital in Kodambakkam. There are other hospitals in other areas. But there was a proposal to have one in Kodambakkam. But this is



dropped. I was told during some debate that that proposal has been dropped. If that is so, what happens? It is the labour that suffers. The E.S.I. Hospitals alone will not do. There are union labourers and non-union labourers. So much so there is necessity for representation of the labourers.

Similarly, there was a proposal to have an infectious diseases hospital in Saidapet . . . .

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இந்த சென்னை மாநகர பெருநகர்த் திட்டக் குழு ஆலோசனைகள், மற்ற வளர்ச்சித் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள் உருவாக்க அடிப்படையான பணிகளாக இருக்க முடியுமே தவிர, அவற்றை நிறைவேற்றும் பொறுப்பாளியாக இருக்க முடியாது. அவற்றை நிறைவேற்றுவதற்கு மாநகராட்சி மன்றமோ, வேறு நகர மன்றமோ அல்லது அந்த ஆலோசனைகள் அடிப்படையில் அந்தப் பணியினை வீட்டு வசதி வாரியமோ அல்லது குடிசை மாற்று வாரியமோ அல்லது அப்படிப்பட்ட பல்வேறு அமைப்புகள் இந்தக் குழு தெரிவித்து அந்த வடிவத்துக்கு உட்பட்டு, வசதிகளுக்கு உட்பட்டு நிறைவேற்ற வேண்டும். ஆலோசனைக் குழுவாக இருக்கும் இந்தக் குழு அதிகாரம் பெறுவது என்பது தாங்கள் சொல்லுகின்ற முறையில் ஆலோசனை மீறாமல் இருக்க கட்டுப்படுத்துவதற்கே தவிர, முழுவதும் நேரடியாக செயல்படுத்துவதற்கல்ல. ஏற்கனவே, திட்டமிட்டு செயல்படுத்தவில்லை என்று சொன்னால் அந்தக் குறை இந்த அமைப்புக்கு உட்பட்டதாக வராது. இந்தக் குழு பரவலாக, தேவையான எதிர்கால வளர்ச்சிக்குக் கெடுதல் இல்லாத முறையான வளர்ச்சியை உருவாக்குகிற முன்னறிவிப்புத் திட்டமாகத்தான் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : I am extremely thankful to the Hon. Minister. I have stated that myself. This is only a Planning Body not an Executing Body. Why I have quoted these two instances is not because this Body is going to execute any plans. It is only to show how if in this Body proper representation is not given to the labourers, there will be difficulties hereafter and they may not have their voice felt, their amenities planned and executed. I am quite clear of the distinction between planning

and execution. When this socialistic Government has representatives from Trade and Commerce, I am sure a counter-representative must be there from the labour side, particularly when there are union and non-union labourers. That is why I say this. My two points are these: one is that as in the original Bill, representation should be there; secondly, it must also provide for the representation of the labour in the Bill itself so that there will be much better planning, useful to the entire society, not to a particular wing.

The next is the most important point and that is about water and drainage. That body has become an important link in the planning. I do not say in the execution. I do not find any representative from the Board or to represent the Board in this Metropolitan Body.

The most important factor in any development . . .

(The Hon. Speaker sounded the gong.)

I have already submitted that I will exceed the time limit by a few minutes. The Hon. Speaker has to excuse me because I have been disturbed so much. I have been taught by the Hon. Minister as to how I should speak. He has taught me so many lessons. I have to obey him. I will take a few more minutes.

Without the Water and Drainage Board coming into the picture, there have already been defects noticed in various urban areas. I think in this particular "Madras Metropolitan Development Authority' there must be a representative from the Water and Drainage Board or the Chairman of the TWAD should become automatically a representative of the Madras Metropolitan Development Authority because there are vast areas which are going to be planned, though not to be executed. These are very important and relevant points. I am bringing them to the notice of the Hon. Minister from my past experience. From my past experience, I can say that there was not proper planning and there was also a little execution. The planning so thought has remained in paper. They were not executed. When we plan, we should take into consideration everything. Though the planning may be well the execution is not even 50 per cent.



I have brought certain factors yesterday about the Madras City to show how in spite of the Town Planning Act and in spite of Town Planning Committee, Madras City has developed in such a way without any rhyme or reason. I think the Hon. Minister will execute me for giving an example. In a 30-feet wide street, multi-storeyed building is constructed and many multi-storeyed buildings are coming up with 20 or 30 flats where the sewage water cannot go through the sewers. The capacity of the sewers are very limited and the entire sewage water cannot pass through them. Actually under the present Town Planning Act, it cannot be done and nobody can do this in the Madras City. In spite of that many multi-storeyed buildings with many flats are coming up. When the Metropolitan Development Board comes into being, the planning should be done on a scientific manner and Planning Experts should be given an opportunity to give their opinions or views wherever they are necessary. They are very necessary for the proper planning of the Madras City.

I am sure the Hon. Minister will include a representative from the TWAD which has vital interest and role to play in the Madras Development. You should also include two representatives from the labour side to solve the labour problems in such areas. The inclusion of the Chairman of the TWAD as a Member of the Madras Metropolitan Development Board is very necessary so that the plans could be formulated in such a way that they would be executed in a easier way. I know it will take years and years to implement them. It will take a long time for the execution stage to materialise. Well-being of the people and development of the Madras City depend upon the proper planning of Madras City. I am sure the Hon. Minister will accept my harmless suggestions which would be very useful in implementing planning.

Thank you, Sir.

*திரு. மா. வே. நாராயணசாமி:* பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகர-நாட்டுப்புற அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவை நான் மனதார பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதில் முக்கியமாக மெட்ரூஸ் மெட்ரோபாலிட்டன் டெவலப்மெண்ட் அதாரிட்டி என்ற ஒரு அமைப்பை சட்டரீதியாக ஆக்கக் கூடிய வகையில் இந்தச் சட்ட முன்வடிவு வகை செய்கிறது. நீண்ட

[திரு. மா. வே. நாராயணசாமி] [1973 டிசம்பர் 3

நெடுங்காலமாக சென்னை மாநகர மக்களும், சென்னை மாநகரத்தையொட்டியுள்ள புறநகர் பகுதிவாழ் மக்களும் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த சென்னை புறநகர்த் திட்டம் இந்த அமைப்பின் மூலமாக விரைவாக, ஆக்கபூர்வமான முறையில், திட்டமிட்ட வகையில் செயல்படுத்துவதற்கான வாய்ப்பு உருவாகியிருப்பதைக் காணும்போது எல்லோரும் இதை மனதார வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

சென்னை மாநகரின் மக்கள் தொகை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வருகிறது என்று சொல்லக்கூடிய அதே நேரத்தில் சென்னை மாநகரத்தை ஒட்டியுள்ள பகுதிகள், ஒரு பதினைந்து இருபது மைல் சுற்றளவில் உள்ள பகுதிகள், அதிலும் குறிப்பாக என் தொகுதி தொழிற்சாலைகள் நிரம்பியுள்ள, தொழிலாளர்கள் அதிக அளவில் வாழக்கூடிய பகுதியாகும்—திருவொற்றியூர், எண்ணூர், மணலி, வில்லிவாக்கம், அம்பத்தூர், ஆவடி போன்ற அந்தப் பகுதிகள் எல்லாம் திட்டமிட்ட முறையில் வளர்க்கப்பட்டாக வேண்டிய பகுதிகளாகும் என்று நான் இந்த மன்றத்தில் பல தடவை சொல்லியிருக்கிறேன். அந்தப் பகுதிகள் எல்லாம் சென்னை புறநகர்த் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டு சிறப்புத் திட்டங்கள் தீட்டப் பெற்று, சாலை வசதிகள், பஸ் போக்குவரத்து வசதிகள், மற்றும் பள்ளிக்கூட வசதிகள், மின்சார வசதி, இது போன்ற பல்வேறு வசதிகள் செய்து தரப்படவேண்டும். சென்னை மாநகரத்தில் உள்ள பல்வேறு அலுவலகங்களுக்கு அன்றாடம் வந்து பணியாற்றிச் செல்லக்கூடிய மக்கள் அந்தப் பகுதிகளில் எல்லாம் வாழ்கிறார்கள்.

சென்னை நகரில் கிடைக்கக்கூடிய வாய்ப்பு வசதிகளே போதாது என்ற கருத்து ஒருபுறமிருந்தாலும் இந்த வசதிகளையாவது நாங்கள் பெறவேண்டும் என்று அந்தப் பகுதி வாழ் மக்கள், சென்னை நகரைச் சுற்றி பத்து பதினைந்து மைல் சுற்றளவில் வாழக்கூடிய அந்த மக்கள் நினைக்கிறார்கள். ஊராட்சி மன்றங்களானாலும் சரி, ஊராட்சி ஒன்றியங்களானாலும் சரி, நகராட்சி மன்றங்களானாலும் சரி திட்டமிட்ட முறையில் பெரிய அளவிற்கு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள இயலவில்லை. ஆகவே சிறப்புத் திட்டங்கள் தீட்டப்பெற்று அந்தப் பகுதிகள் வளர்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1973 டிசம்பர் 3] [திரு. மா. வே. நாராயணசாமி]

அதற்கு இன்னொரு காரணம்கூட இருக்கிறது. என்னுடைய பகுதி, கோடிக்கணக்கான ரூபாய் மூலதனம் போடப்பட்டு நம் அரசுக்கும் மத்திய அரசுக்கும் கோடிக்கணக்கான ரூபாய் வருவாய் அளிக்கக்கூடிய பகுதியாகும். ஆகவேதான் சொல்கிறேன், அந்தப் பகுதிகள் எல்லாம் திட்டமிட்ட முறையில் வளர்க்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட ஒரு திட்டவட்டமான, வேகமான, விரைவான பணிகளைச் செய்ய இந்த மெட்ரூஸ் மெட்ரோபாலிட்டன் டெவலப்மெண்ட் அதாரிட்டி என்ற இந்த அமைப்பு வகை செய்கிறது. 1971-ம் ஆண்டிலிருந்து 1991-ம் ஆண்டுவரை இந்த இருபது ஆண்டுகள் திட்டமிட்டு வளர்க்கக்கூடிய முறையில் அந்தப் பகுதிகள், அந்தப் பகுதிவாழ் மக்கள் நல்ல பலனை அடைவார்கள் என்பதால் இதை மனதார வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் மாநகரத்தையொட்டியுள்ள பகுதிகளில் நகராட்சி மன்றங்கள் இருக்கின்றன. என் தொகுதியை எடுத்துக் கொண்டால் திருவொற்றியூர் ஒரு நகராட்சி மன்றம், இன்று அங்கு ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழக்கூடிய ஒரு பெரிய நகரமாக விளங்கிக்கொண்டிருக்கிறது. அதையொட்டியதாக எண்ணூர், கத்திவாக்கம் என்று சொல்லப்படும் பகுதி ஒரு முனிசிபல் டவுன்ஷிப். அதையொட்டிய மாதவரம் ஒரு முனிசிபல் டவுன்ஷிப். அம்பத்தூர், ஆவடி எல்லாம் முனிசிபல் டவுன்ஷிப்ஸ் தான். இதற்கிடையில் மாதவரம் ஊராட்சி ஒன்றியம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியம், வில்லிவாக்கம் நகரப் பஞ்சாயத்து என்று இப்படியாக நகராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் என்ற அளவில் பல இருக்கின்றன. அவற்றிற்கெல்லாம் உரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அவர்களுடைய ஆலோசனையையும் உரிய வகையில் பெறக்கூடிய முறையில் இந்த நிறுவனம் செயல்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீண்ட நாட்களாக புறக்கணிக்கப்பட்டு வந்த பகுதிகளாக இருந்த அந்தப் பகுதிகள் இன்றையதினம் நம் அரசால், நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் இயங்கும் அரசால் பல நன்மைகளை இன்று பெற்றுள்ளன. சென்னைக்கு பக்கத்தில், சென்னைக்கு எட்டாவது மைலில் இருக்கக்கூடிய மணலி போன்ற பகுதிகள் கூட, தொழிற்

[திரு. மா. வே. நாராயணசாமி] [1973 டிசம்பர் 3

சாலைகள் உள்ள பகுதிகள்கூட, புறக்கணிக்கப்பட்டு வந்தன. நிறைய வருவாய் கொடுத்து கொண்டு வந்த பகுதிகள் கூட புறக் கணிக்கப்பட்ட நிலையில் இருந்தன. ஆனால் நம் அரசு இன்று பல சாலைகளை எல்லாம் அந்தயிடங்களில் அமைத்துக்கொண்டு வருகி றார்கள். இத்திட்டத்தின் மூலம் அப்பகுதிகள் வேகமான வளர்ச்சி யைப் பெற இருக்கிறது. இந்த அமைப்பு சென்னை மாநகருக்கும், புறநகர்ப் பகுதிகளுக்கும் பலன் தரக்கூடியதொரு அமைப்பாக இருப்பதால், மக்களின் விருப்பங்களையும் நிறைவேற்றக்கூடிய அளவில் இருப்பதால், இந்தச் சட்ட முன்வடிவை நான் மனதார வரவேற்று அமைகிறேன்.

(முற்பகல் 11.00)

**திரு. இராம. அரங்கண்ணல்:** தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழக அரசு எதிர்காலத்தை எண்ணி பல அருமையான திட்டங்களைத் தீட்டி வருகிறது என்பதை எல்லோரும் இன்றைய தினம் உணர்ந்து வருகிறார்கள். அப்படிப் பட்ட அருமையான திட்டங்களிலே ஒன்று தான் இந்த மெட்ராஸ் மெட்ரோபாலிடன் ஏரியாவை உருவாக்குகின்ற இத்திட்டம். எதிர் காலத்திலே பெருகுகின்ற மக்கள் தொகையை எண்ணிப் பார்த்து அவர்களுக்கு நல்ல வசதிகளைப் பெற்றுத் தருவதற்காக ஏற்படுத்தப்பட்ட திட்டம் இத்திட்டம்.

சென்னை மாநகரத்தைப் பொறுத்த மட்டில் கடந்த 80 ஆண்டு களில் மக்கள் தொகை 25 லட்சமாக ஆகியிருக்கின்றது. இன்னும் ஒரு 20 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த 25 லட்சம் 50 லட்சமாக ஆகுமென்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. அப்படியானால் எந்த அளவுக்கு மக்கள் நெருக்கடி ஏற்படுமென்பதையும், மக்கள் எந்த அளவுக்கு சங்கடப்பட நேரிடுமென்பதையும் உணர்ந்து இந்த அரசு கூர்ந்த மதியோடு எதிர்காலத்தை எண்ணிப் பார்த்து இந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கின்றது.

இந்தத் திட்டத்தின் மூலம் இன்னொரு பெரிய நன்மையும் ஏற்படவிருக்கிறது. தமிழ் நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் மட்டுமல்ல, உலகமெங்கிலும் இன்றைய தினம் இருக்கிற பிரச்னை, கிராமப்புறங்களிலிருந்து, அங்கே வாழ்கின்ற மக்கள் நகரத்தை நோக்கி வருகின்ற சூழ்நிலை வளர்ந்துகொண்டு வருவதாகும்.



1973 டிசம்பர் 3] [திரு. இராம. அரங்கண்ணல்]

நகர்ப்புறங்களிலுள்ள வாழ்க்கை வசதிகள் கிராமப்புறங்களில் இல்லாத காரணத்தால் நகரத்தை நோக்கி அந்த மக்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, இப்படி கிராம மக்கள் நகர்ப் புறங்களுக்கு வருவதால் ஏற்படுகின்ற சிக்கல்களை எப்படித் தீர்ப்பது என்பது பெரிய தலைவலியாகும்.

இந்த மெட்ராஸ் மெட்ரோபாலிடன் அதாரிடி அமைகின்ற திட்டத்தின்படி சென்னையைச் சுற்றியுள்ள 25 அல்லது 30 மைல் களுக்குள் அமைந்துள்ள கிராம மக்கள், நகர்ப்புறங்களிலே வாழ் கின்ற மக்கள் பெறுகின்ற வசதிகளைப் பெறவிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். அந்த வகையில், சைதை தாலுகா, பொன்னேரி தாலுகா, திருவள்ளூர், ஸ்ரீபெரும்புதூர், செங்கல்பட்டு ஆகிய பகுதிகளுக்கும் சென்னைக்குமிடையில் கிட்டத்தட்ட 'சேடி லைட் டவுன்' என்று சொல்லப்படுகிற 7, 8 நகரங்கள் ஏற்பட்டிருக் கின்றன. இந்த நேரத்திலே நான் இன்னொன்றையும் கூற விரும்பு கிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் கிராமங்களில் இருக் கின்ற மக்களுக்கு எல்லாவித வசதிகளும் செய்து தரப்பட்டிருக் கின்றன. தமிழ்நாட்டில் 375 பஞ்சாயத்து யூனியன்கள் இருக் கின்றன. இந்த நகரங்களில் கிடைக்கின்ற வசதியையும் உலக நாடுகளில் இருக்கின்ற நகரங்களில் இருக்கின்ற வசதிகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால், அந்த அளவுக்கு வளர்ச்சியைப் பெற முடியாத சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. எனவே, இந்த நகரங்களை நல்ல முறையில் வளர்ச்சியுறச் செய்வதற்காகத்தான் இன்றைய தினம் நமது அரசின் டவுன் பிளானிங் நல்ல திட்டங்களை யெல்லாம் போட்டு வேலை செய்துகொண்டிருக்கின்றது. அந்த இடத்தை மெட்ராஸ் மெட்ரோபாலிடன் அதாரிட்டிக்கு அளித்து, அது நல்ல முறையில் இயங்கவேண்டும் என்பதற்காக இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதை நான் முழுமனதோடு வரவேற்கிறேன்.

சென்னையிலே உள்ள பிரச்னைகள் சாதாரணமான பிரச்னைகள் அல்ல. அந்தப் பிரச்னைகளையெல்லாம் தீர்ப்பதற்கு இன்றைய தினம் வீட்டு வசதி வாரியம் ஓரளவு செயல்பட்டுக்கொண்டு வரு கிறது. அதேபோல குடிசை மாற்று வாரியம் ஏழை எளிய மக்க ளுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால்

[திரு. இராம அரங்கண்ணல்] [1973 டிசம்பர் 3

சென்னை மாநகரத்தைப் பொறுத்த அளவில் பல அடுக்கு மாடி வீடுகளைக் கட்டிக்கொடுத்து விட்டால் போதுமா என்ற சந்தேகம் எல்லோருக்கும் ஏற்பட்டிருக்கிறது. மக்கள் பெருக்கம் அதிகமாக இருக்கிற பகுதிகளில் பல அடுக்கு மாடி வீடுகளைக் கட்டி மக்களுக்கு வசதிகளைச் செய்து தரமுடியும் என்ற ஒரு சித்தாந்தம் இருந்த போதிலும், மக்களுக்கு, தனித் தனியாக, தங்களுக்கு என்று வீடு இருக்க வேண்டுமென்ற ஆசை இருக்கிறது. இதை நாம் மறுப்பதற்கில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு புறநகர்ப் பகுதியில் வீடுகளை உருவாக்கி, குடிசை வாழ் மக்களுக்கும், மற்றவர்களுக்கும், கொடுக்கின்ற அம்சம் இந்தத் திட்டத்திலே இருப்பது பாராட்டுதற்குரியது.

அதுமட்டுமின்றி, சென்னை நகரத்தை விரிவுபடுத்துகின்ற நேரத்தில், ஆங்காங்கே வாழ்கின்ற வேலையற்ற மக்களுக்கு வேலை கிடைக்கச் செய்ய வேண்டுமென்ற மதி நுட்பம் இந்தத் திட்டத்திலே பொதிந்திருப்பதை பாராட்டித்தான் ஆகவேண்டும். வேலையற்றவர்களுக்கு வேலை கிடைக்கவேண்டுமென்று பேசிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது, அதற்கு செயல்வடிவம் தர வேண்டுமென்ற முறையிலே, எதிர்காலத்திலே கிட்டத்தட்ட ஐந்து அல்லது 6 லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கின்ற அம்சமும் இந்திட்டத்திற்குள்ளே அடங்கி இருக்கின்றது.

அதுமட்டுமின்றி, சிறுசிறு தொழில்கள் ஆரம்பிக்கப்படும்படியான இடங்கள், பெரும் தொழில் ஆரம்பிக்கப்படும்படியான இடங்கள்—இவைகள் எல்லாம் இத் திட்டத்திலே கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் பாராட்டுக்குரியவை.

ஆக மொத்தத்தில், இன்னும் 5 ஆண்டுகளுக்குப் பிறகு சென்னை மாநகரம் எப்படி இருக்கும் என்பதை எண்ணிப் பார்த்து, அப்போது ஏற்படுகின்ற பிரச்னைகளை எல்லாம் எப்படித் தீர்க்க வேண்டுமென்பதை இப்போதிலிருந்தே எண்ணிப் பார்த்து அவற்றை தீர்க்க வேண்டுமென்ற மதி நுட்பத்தோடு இந்த அரசு செயல்படுவதை வரவேற்று பாராட்டி என்னுடைய உரையை முடிக்கின்றேன்.



1973 டிசம்பர் 3]

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற நகர கட்டமைப்புத் திருத்த சட்ட முன்வடிவை வரவேற்று இங்கே என்னுடைய உரையை துவக்குகின்றேன்.

சென்னப்பட்டினம் என்கின்ற இந்த சென்னைப்பட்டணமானது பிறகு செயின்ட் ஜார்ஜ் ஃபோர்ட் என்று மாறி இன்றைய தினம் சென்னை மாநகராட்சி ஆகியிருக்கின்றது. இப்படிப்பட்ட நகரத்தில், மக்களின் சுகாதார வசதி, வாழ்க்கை வசதி ஆகியவற்றைப் பெருக்குவதற்கு இப்படிப்பட்ட பெரும் திட்டத்தை இவ்வளவு காலத்திற்குப் பிறகாவது—தமிழக அரசு ஆட்சி வந்த பிறகு--கொண்டு வந்திருப்பதே ஒரு பெரிய நிகழ்ச்சியாகும்.

இன்றைய தினம் சென்னை நகரத்தில் மாத்திரம் 5 லட்சம் மக்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. சென்னை நகரத்தோடு இந்த கணக்கு முடிந்து விடுகிறது. புறநகர் ஜனத்தொகையையும் சேர்த்துப் பார்த்தால் கிட்டத்தட்ட 50 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். இந்த 50 லட்சம் பேர்களுக்கும், குடியிருப்பு வசதி, குடிநீர் வசதி, சாக்கடை வசதி எல்லாம் தேவைப்படுகிறது.

அது மட்டுமல்ல. ஃப்ளோட்டிங் பாபுலேஷன் என்று சொல்லப்படுகிற, சென்னைக்கு வந்து போகின்றவர்களின் எண்ணிக்கை 10 லட்சத்திற்கும் அதிகம் என்று கூறக்கூடிய விதத்தில், ஏறத்தாழ ஒரு கோடி மக்களுக்கு வசதிகளைச் செய்து தரவேண்டிய நிலை இன்றைக்கு இருக்கிறது. இன்னும் 10 வருஷங்கள் கழித்து மக்களின் பழக்க வழக்கங்கள், வாழ்க்கை நிலை இவை எல்லாம் எப்படியிருக்கும் என்பதை எண்ணிப் பார்த்து இந்தத் திட்டத்தை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள்.

சென்னையைப் பொறுத்தவரையில் மிகமிக முக்கியமான பிரச்னையாக இருப்பது குடிநீர்ப் பிரச்னையாகும். அதற்கு, வீராணத்திலிருந்து தண்ணீர் கொண்டு வருகிற பெரிய திட்டங்கள் எல்லாம் தீட்டப்பட்டிருக்கின்றன. இத் திட்டத்திலே, ஏற்படவிருக்கின்ற வளர்ச்சியை கணக்கிற் கொண்டு குடிநீர்த் திட்டம் போன்ற நல்ல திட்டங்களுக்கு நல்ல ஆலோசனைகளைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் குறிப்பிட்டதைப்

போல, குடிநீர் வாரியம், குடிசை மாற்று வாரியம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து அந்த இலாக்காவினருடைய செயல் திறனைக் கொண்டு இந்தத் திட்டம் நல்ல முறையில் அமைக்கப்படுமென்று நம்புகிறேன். அப்படி அமைத்தால்தான் இத் திட்டம் நல்லதொரு திட்டமாக அமையும்.

சென்னை நகரிலே ஒரு மிகப் பெரும் பிரச்னை சாக்கடைப் பிரச்னையாகும். 40, 50 ஆண்டுகளுக்கு முன்னாலிருந்தே இத் திட்டம் சரியாக அமையாததன் காரணமாகத்தான் இன்றைய தினம் நமது கூவம் சீரமைப்புத் திட்டம் வெற்றி பெறவில்லை. இன்னும் கூவத்தில் துர்நாற்றத்தைப் போக்க முடியவில்லை. இதற்கு முக்கியமான காரணம், வடிகால் திட்டம் சரியான முறையில் அமையவில்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே, அது போன்ற திட்டங்களை வடிவமைக்கின்றபோது கழிவு நீர்த் திட்டத்தை நல்ல முறையில் அமுல்படுத்த வேண்டும்.

அடுத்து, சென்னை நகரில் போக்குவரத்து என்று எடுத்துக் கொண்டால், உலகத்திலேயே அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட நியூயார்க், டோக்கியோ போன்ற நகரங்களில் ஜனத் தொகை 1½ கோடிக்கு அதிகமாக இருந்தும், போக்குவரத்தை சுலபமான முறையில் சீரமைத்திருக்கிறார்கள். எனவே, இத் திட்டத்தில், ஒரு குழு அமைத்து, டோக்கியோ, நியூயார்க், லண்டன் போன்ற நகரங்களுக்குச் சென்று ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அந்த ஆராய்ச்சிகளின் அடிப்படையில் திட்டங்களையெல்லாம் அமைப்பதற்கு முன்வர வேண்டும். அப்படிச் செய்தால் உண்மையிலேயே இத் திட்டம் நல்ல பலனுள்ள திட்டமாக இருக்கும் என்பதை இந்நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், அந்நகரங்களில் பாதாள ரயில் திட்டம், ஆகாய ரயில் திட்டங்கள் எல்லாம் இருக்கின்றன. அத்திட்டங்களையெல்லாம் இங்கே தமிழ்நாட்டில் உடனடியாக நிறைவேற்ற முடியாது. அதற்கு பொருளாதார வசதி இடமளிக்காது. ஆனால் திட்டத்தை அமைக்கின்றபோது இத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு 25, 30 ஆண்டுகள் ஆனாலும், எதிர்காலத்தில் இவற்றைச் செய்வதற்கு இடம் இருக்கிறது. அவற்றையெல்லாம் கருத்திற்கொள்ள வேண்டும்.





அடுத்து, மானோ ரயில் திட்டம். நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு இத்திட்டம் உதவியாக இருக்கும். ஜப்பான் போன்ற நகரங்களில் முன்னோடித் திட்டமாக இதை வைத்திருக்கிறார்கள்.

முக்கியமாக தொழிற்சாலைகள் அமைப்பது என்றால், தொழிற்சாலைகளை புறநகரில் அமைப்பதற்குத்தான் அனுமதி தரவேண்டும். எழுப்பப்பட இருக்கிற தொழிற்சாலைகளிலேயே தொழிலாளர்களுக்கு வேண்டிய குடில்களையும் அமைப்பதற்கான முறையில் அந்தத் திட்டம் அமைக்கப்பட்டால்தான், அது வெற்றிகரமான திட்டமாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது இருக்கிற பஸ் நிலையங்கள், காய்கறிக் கடைகள் ஆகியவைகளை அமைப்பதில், சென்னையை வட்டாரங்களாகப் பிரித்து, அந்தந்த வட்டாரங்களில் பிராட்வேயில் பஸ் ஸ்டாண்ட், கொத்தவால் சாவடியில் காய்கறி நிலையம் இருப்பதுபோல் ஒரே இடத்தில் இல்லாமல், அவற்றையெல்லாம் பகுதி பகுதியாகப் பிரித்து அந்தந்த வட்டாரத்தில் இருக்கும்படியான நிலைமையில் சில திட்டங்கள் அமைக்க வேண்டும்.

கல்லூரிகளைப் பொறுத்தவரையிலும் கூட, சென்னையிலேயே ஜனநெருக்கடி உள்ள இடத்தில் இல்லாமல், வெளியிலே தாம்பரம் போன்ற இடத்தில் கல்லூரி அமைந்திருந்தால் எத்தனையோ நன்மைகள் ஏற்பட காரணமாக இருக்கிறது என்ற அடிப்படையில் புறநகர்ப் பகுதிகளில் கல்லூரிகளை அமைக்க வேண்டும்.

அதேபோல் நான் பெரிய மருத்துவ மனைகளைக்கூட புறநகரங்களில் அமைப்பதற்கான திட்டத்தை ஏற்படுத்தினால், அது ஒரு சிறப்பான திட்டமாக இருக்கும். அப்படிப்பட்ட அடிப்படையிலே கொண்டுவரப்பட்ட இந்த மசோதாவை வரவேற்று நான் அமர்கிறேன்.

***மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, சென்னை பெருநகர் சீரமைப்புக்குழு ஒன்று அமைக்கப்படுவதற்கு சட்டப்படி ஒப்புதல் பெற இந்த நகர-நாட்டுப்புற சட்டத்தில் சில

[திரு. க. அன்பழகன்] [1973 டிசம்பர் 3

திருத்தங்கள் தேவைப்படுகின்றன என்ற முறையில் இந்தத் திருத்த மசோதா இங்கே இன்றையதினம் கொண்டு வரப் பட்டிருக்கிறது.

இந்தத் திருத்த மசோதாவின் மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் வரவேற்று, பல நல்ல ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்கள். உள்ளபடியே சென்னை மாநகரத்தினுடைய வளர்ச்சி வேகமாவதால் எதிர்காலத்தில் பொதுமக்களுடைய நல் வாழ்விற்கு குந்தகமாக முடிந்துவிடக் கூடாது, அவர்களுடைய முன்னேற்றத்திற்கு இடையூறாக ஆகிவிட அனுமதிக்கக் கூடாது என்ற முறையில் பெரு நகர வளர்ச்சித் திட்டம் என்பது ஏறத்தாழ 1967-ம் ஆண்டில் முதலில் எண்ணப்பட்டது. அப்படி 1967-ம் ஆண்டில் எண்ணப்பட்ட இக்கருத்து, இடைக்காலத் திட்டம் ஒன்றில் கரு வடிவம் பெற்றது. அதற்குப் பின்னர் சென்னை மாநகர விரிவு திட்டம் ஒன்று—அதனுடைய சுற்றுப்புற வளர்ச்சி எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்ற கருத்து—அதற்கு அடுத்த ஆண்டில் உருவாகியிருக்கிறது. அதன் பின்னர் 1970-ம் ஆண்டில் கிரேட்டர் மெட்ரூஸ் என்ற தலைப்பில் சென்னைப் பெரு நகர் எப்படிப்பட்ட அமைப்புள்ளதாக இருக்க வேண்டும் என்ற விரிவான ஆலோசனையை அன்றைக்கு இருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் ஒருவர் அரசாங்கத்திற்குத் தெரிவித்தார். அதையொட்டித் தான் 1971-ம் ஆண்டிலிருந்து 1991-ம் ஆண்டு வரையில் 20 ஆண்டுக் காலத்தில் சென்னை மாநகரம் இயல்பாகப் பெறுகின்ற பல்வேறு வகையான வளர்ச்சியின் அமைப்பு எப்படிப்பட்டதாக உருவாக்கப் படுமானால் மக்களுக்கு நல்வாழ்வு பயக்கத்தக்கதாக இருக்கும்—மக்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்கு உதவிகரமாக இருக்கும் என்பது வரையப்பட்டு இந்த 20 ஆண்டு கால சென்னை நகர வளர்ச்சியைப் பற்றிய ஆய்வில் அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டது. சென்னை மாநகரம் வளர்வதைப் போன்றே வேறு பல சிறு நகரங்களும் வளர்கின்றன என்ற காரணத்தினால் தான், தமிழ்நாடு முழுவதிலும் உள்ள நகர-நாட்டுப்புற பகுதி ஆகியவை எப்படிப்பட்ட வளர்ச்சியை அடையக்கூடும் என முன்கூட்டியே எதிர்பார்த்து ஒரு திட்டமிட்ட வளர்ச்சியை ஏற்படுத்த குழு அமைக்க வேண்டும் எனவும் திட்டமிட்ட வளர்ச்சியைத் தவிர வேறுவிதமான தவறான, தேவையில்லாத



1973 டிசம்பர் 3] [திரு. க. அன்பழகன்]

வளர்ச்சியை உருவாக்கிவிட இடம் தந்துவிடக் கூடாது என்ற முறையில் 'டவுன் அண்டு கண்ட்ரி பிளானிங் பில்' ஏற்கனவே நிறைவேற்றப்பட்டு, அண்மையில் செப்டம்பர் மாதம் என்று கருதுகிறேன், சட்டப்படி நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. ஆனால் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதே தவிர, இனி அந்த சட்டத்திற்குட்பட்டு ஒவ்வொரு வட்டார வளர்ச்சிக்கான குழுக்களும் உள்ளூர் வளர்ச்சித் திட்டக் குழுக்களும் அமைக்கப்பட வேண்டும். அவைகளெல்லாம் இன்றைக்கு நடைமுறைக்கு வரத் தொடங்கியிருக்கின்றன.

சென்னை மாநகரத்திற்கு அதைப் போன்று ஒரு 'மெட்ராபாலிட்டன் டெவலப்மெண்டு அதாரிட்டி' என்ற பெயரில் உள்ளூர் வளர்ச்சி மன்றம் போன்ற ஒரு மன்றத்தை அமைக்கவும் கருதப்பட்டது. அந்தக் கருத்தானது, சென்னை மாநகரத் தேவைகள், 'மெட்ராபொலிடன் ஸிட்டீஸ்' என்று இந்தியாவில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற கல்கத்தா, பம்பாய், டெல்லி போன்ற தலைநகரங்களுக்கு உள்ள முக்கியத்துவம் உடையதாக இருக்கிற காரணத்தினாலும், இந்தப் பணி விரைவாக சட்டப்படி நிறைவேற்றப்பட வேண்டியது அவசியம் என்ற காரணத்திற்காகவும், இதற்காக ஏற்படுத்தப்படுகிற ஒரு சட்டப் பிரிவு தனியாகவே நகர-நாட்டுப்புற சட்டத்தில்—'டவுன் அண்டு கண்ட்ரி பிளானிங் ஆக்டில்' இடம் பெற்றாக வேண்டும் என்ற முறையில், அந்தச் சட்டத்தில் இணைக்கப்பட வேண்டிய இந்தப் பகுதி 'மெட்ராபொலிட்டன் அதாரிட்டி' என்ற பெயரோடு ஏற்கனவே கருதப்பட்ட அந்த வரம்புகளைப் பெரும்பாலும் ஏற்றுக் கொண்டு, இந்தத் துணைச் சட்டம், திருத்த மசோதா இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இதுபற்றி விரிவான ஆய்வு ஏற்கனவே நடைபெற்றிருக்கிறது. ஏற்கனவே ஆய்வுக்குட்பட்டதைத்தான் இன்றைக்குச் சட்ட அனுமதி பெறுவதற்கு இந்த மன்றத்தில் கொண்டுவரப்பட்டிருக் கிறது. எனவே இதுபற்றி விளக்கங்கள் பெறுவதற்கு ஜாயிண்ட் செலக்ட் கமிட்டி—கூட்டாய்வுக் குழு—ஏற்படுத்தி, அதன் மூலம் விவாதிக்க வேண்டும் என்ற அவசியம் தோன்றவில்லை.

[திரு. க. அன்பழகன்] [1973 டிசம்பர் 3

ஒரு வேளை இன்றைக்கு நடைபெறுகிற காரியங்கள் மாநகராட்சி மன்றத்தில் நடைபெறுவதோ அல்லது வேறு நகராட்சி மன்றங்களில் நடைபெறுவதோ, இந்த அமைப்பு ஏற்படுகிற காரணத்தினால் அவற்றை யெல்லாம் இந்த அமைப்பு ஏற்றுக் கொண்டுவிடுமோ என்று யாரும் கேட்கலாம். இந்த அமைப்பு அவற்றை ஏற்றுக்கொள்ளாது. ஆனால், அவை நடத்திக் நடத்திக்கொண்டிருக்கிற காரியங்களுக்குக் கட்டுப்பாடு விதிக்கவும் முறைப்படுத்தவும், ஒழுங்குபடுத்தவும், ஒரு விரிவான வரைத் திட்டம் உருவாக்க இந்த அமைப்புக்கு அதிகாரம் கிடைக்கும்.

மாநகராட்சி மன்றம் ஏற்கனவே நிறைவேற்றிய சில காரியங்களில் அவை முறைப்படி காலத்தில் நிறைவேற்றப்படவில்லை, அதிலே சில குறைகள் ஏற்பட்டன என்பதை இங்கே திரு. கே. எம். எஸ். அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அப்படிப்பட்ட காரியங்களில் கூட அவர்கள் அதைத் தாமதிக்க வேண்டும் என்றோ, நடத்தக் கூடாது என்றோ கருத்து இருந்ததாகத் தெரியவில்லை. 1942-ம் ஆண்டில் அதற்காக நோடிபிகேஷன் செய்யப்பட்டு, அதற்குப் பின்னர் அதனுடைய இரண்டாவது சர்வே மேப் நம்பர் 2 தயாரிப்பதற்காக ஆணை பிறப்பிக்கப்பட்டு, ஏறத்தாழ அதற்கான சர்வே நடந்து முடிந்திருக்கிறது. இப்பொழுதுதான் சர்வே, சைதாப்பேட்டை பகுதியில் முனிசிபல் ஏரியாவுக்கு முடிந்திருக்கிறது. நீண்ட காலம் ஆனதற்குக் காரணம் ஒன்று பொருளாதார வசதிக் குறைவாக இருக்கலாம் அல்லது அந்தத் திட்டத்தை விரைவாகச் செய்வதற்கு வாய்ப்பு வசதிகள் இல்லாமல் இருந்திருக்கலாம். 1951-ல் எந்த நோக்கத்தோடு மேற்கொள்ளப் பட்டதோ, அந்த நோக்கத்தில் தான் ஏறத்தாழ 20 ஆண்டு காலம் அதைப்பற்றி சர்வே முதலியவைகளெல்லாம் நிறைவேறியிருக்கிறது. இவ்வாறு . . .

**திரு. என். கே. பழனிசாமி :** சைதாப்பேட்டைக்கு இங்கே இருக்கக்கூடிய சட்டசபையை, ஹைகோர்ட்டை மாற்றுவதற்காக திட்டம் இருந்ததே, அதாவது பரிசீலனை செய்யப்பட்டு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறதா ? சர்வே செய்யப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இங்கே எனக்குக் கிடைத்திருக்கிற தகவல்கள்படி



1973 டிசம்பர் 3] [திரு. க. அன்பழகன்]

'Preparation of Development Plans for these schemes will be taken on hand because the survey is over and everything has matured' என்ற கருத்துதான் தரப்பட்டிருக்கிறது. ஆகவே, அது தொடர்பான காரியங்கள் திட்டப்படி நிறைவேறக்கூடும் என்று நம்பலாம்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, the plan is ready. Buildings have all been built and roads have been formed. If you want to execute the plan, you should not destroy everything that has been built during the last 25 years.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, திட்டமிடுவது என்பது இரண்டு மூன்று ஆண்டு காலத்தில், குறிப்பிட்ட கால வரம்பிற்குள் திட்டமிட்டு நிறைவேற்றிவிட்டால் பொது மக்கள் அதனாலே பயன் அடைய முடியும். 15 ஆண்டு காலம், 20 ஆண்டு காலம் என்று தாமதமாகிவிட்டால் தகுந்த பலன் வராது. பொது மக்கள் பொறுத்திருக்க விரும்ப மாட்டார்கள். மருத்துவமனை கட்டுவது என்றால், சுற்றியிருப்பவர்களில் யாராவது குழந்தை பெற வேண்டுமென்றால் மருத்துவமனை கட்டுகிற வரையிலும் காத்துக் கொண்டிருக்க முடியாது. அதைப்போலத் தான் நகரமைப்பைப் பொறுத்து திட்டமிடப்படுகிற பணிகள் நல்ல நோக்கத்தோடு திட்டமிடப்பட்டாலுங்கூட, பல்வேறு நெருக்கடி காரணமாக, அவை காலத்தில் நிறைவேறாமல் போய் விடுகிறது. அப்படி நிறைவேறாமல் போன பின்னர் கட்டப்பட்ட கட்டடங்களை இடிப்பது, மாற்றுவது என்பது எளிதாக முடிவதில்லை. ஆனால் போடப்பட்ட திட்டங்களை நிலைமைக்கேற்ப மாற்றிக்கொள்வது என்பது முடியக்கூடிய காரியம்.

எத்தனையோ நகரங்களில் டவுன் பிளானிங் அமைப்புகள் விதிக்கப்பட்ட பின்னர், திட்டப்படி நகரத்தை அமைக்க வழி செய்ய முடியாத நிலைமையில் வேறு விதமாக அமைந்த பின்னர், அமைந்த முறைப்படி சில திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப் படுகின்றன. போடப்பட்ட திட்டம் பொருந்திவராததாகவும் இருக்கும். நிலைமைகளுக்கேற்ப மறுபடியும் திருத்தப்பட வேண்டும் என்ற நிலைமைதான் நடைமுறையில் முடியும். இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், ஒரு நகராட்சி மன்றமோ அல்லது

[திரு. க. அன்பழகன்] [1973 டிசம்பர் 3

மாநகராட்சி மன்றமோ தாங்கள் போடுகின்ற திட்டங்களை ஒரு கால வரம்பிற்குள் நிறைவேற்ற முடியாது இடையூறுகளுக்கு உள்ளாகிவிடக்கூடும். ஆகவே, அப்படி இடையூறுகளுக்கு உள்ளாகிவிடக்கூடாது என்ற காரணத்தினுல்தான் சென்னை மாநகரப் பெருவளர்ச்சித் திட்டம் முன்கூட்டியே ஆராயப்பட்டு, அது ஒழுங்குபடுத்தப்பட்டு, சைதாப்பேட்டையில் ஏற்பட்டது என்று கூறப்பட்டதைப் போல, நாம் ஒரு திட்டத்தை நினைத்துக் கொண்டிருக்கும்பொழுது, அதற்கு மாறாக வேறுவிதமாக வளர்ச்சி ஏற்பட்டுவிட அனுமதிக்கக் கூடாது என்பதற்காக இந்த அமைப்பை ஏற்படுத்த திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டியிருக்கிறது.

இன்னும் சொல்லப் போனுல் இந்த சென்னை மாநகர வளர்ச்சி எவ்வளவு பெரிய நோக்கம் கொண்டது என்பதை நாம் நினைவு படுத்திக்கொள்ள வேண்டும். 450 சதுர மைல் பரப்பளவைக் கொண்ட ஒரு பெரு நகர அமைப்பில் எப்படிப்பட்ட வளர்ச்சியை உருவாக்கலாம் என்பதைத் தீர்மானிக்க வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஒரு நகர அமைப்பு என்றால் அந்த நகரத்திற்குள் உள்ள வசதிகள் என்ன, தேவை என்ன என்பதை அறிந்து கொள்ள முடியும். ஒரு பஞ்சாயத்து என்றால் அந்த வட்டாரத்திற்குள் என்னென்ன வளர்ச்சிப் பணிகள் தேவைப்படும் என்பதை அறிந்து கொள்ள முடியும்.

ஆனால் பல்வேறு நகர, பஞ்சாயத்து அமைப்புகள் உள்ள ஒரு பெரிய வட்டாரத்தில் மக்கள்தொகை எப்படி வளரும் எப்படிப்பட்ட தொழில் செய்யும் மக்கள் அங்கே இருக்கிறார்கள், எந்த வட்டாரத்தில் எப்படிப்பட்ட தொழில் பெருகும், எந்த இடத்தில் வணிகப் போக்குவரத்து பெருகும் அல்லது எந்த இடத்தில் வேளாண்மைத் தொழிலில் மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை எல்லாம் அடிப்படையாகக் கொண்டுதான் ஒரு பத்து இருபது ஆண்டுக் கால வளர்ச்சியைக் கணிக்க முடியும். அதைப் பொறுத்துத்தான் போக்குவரத்து வசதிகளையும் கணிக்க வேண்டும்.



1973 டிசம்பர் 3] [திரு. க. அன்பழகன்]

நகரத்திற்குள்ளேயும் வெளியேயும் பல்வேறு பகுதிகளிலுள்ள மக்கள் பல்வேறு காரணங்களுக்காக நகருக்கு வந்து வந்து போகிறார்கள். அப்படி வந்து வந்து போகக்கூடிய மக்களில் ஒரு பகுதியினர் அங்கே தங்கிவிடக் கூடிய நிலைமையும் ஏற்படுகிறது. மக்கள் நகரத்தில் தங்குவது என்பது அவர்களுக்குக் கிடைக்கும் தொழில்கள், அதற்கேற்ற வசதிகளைப் பொறுத்திருக்கிறது. தொழில் பெருக்கத்திற்கும், போக்குவரத்து வசதிக்கும் சிறந்த முறையில் நகர சாலை வசதிகள் இருக்க வேண்டும். வளர்ச்சிக்கு வழி காணும் போது இதையும் கருத்தில் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அப்படி நகர சாலை வளர்ச்சி வேலைகளை மேற்கொள்வதால் சென்னை நகருக்கு அருகிலுள்ள புறநகர்களும் வளர்ச்சியடைகின்றன. இப்போது புறநகர் வளர்ச்சிப் பகுதிகளாக மீஞ்சூர், எண்ணூர்-மணலி, அம்பத்தூர், ஆவடி, ஆலந்தூர், தாம்பரம் ஆகிய இடங்கள் இருக்கின்றன. இந்தப் புறநகர் பகுதிகளையும் வளர்ச்சியடையச் செய்யும்போது, மக்களின் தேவைகள் நிறைவேற தடை இல்லாமல் மொத்தத்தில் போதுமான வசதிகளைச் செய்து கொடுக்க எப்படிப்பட்ட அமைப்புகளை உருவாக்க முடிந்தால் எதிர்காலத்திலே சிறப்பாக இருக்கும் என்பது அண்மையில் கணக்கிடப்பட்டிருக்கிறது. அதை அடிப்படையாகக் கொண்டு, எண்ணூர்-மணலி பகுதிகளில் ஏற்படக்கூடிய வளர்ச்சிக்கு வரை படம் தயாரித்திருக்கிறார்கள். அதைப்போலவே மேலும் பல புறநகர் பகுதிகளை வளர்ச்சியடையச் செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்யும்போது, அந்தப் பகுதிகளுக்கு அடிப்படையாகத் தேவைப்படுகின்ற வசதிகள், சாலை போக்குவரத்து, தொழில் நிலையங்களுக்கான இடம், பள்ளிக்கூடத்திற்குத் தேவையான நிலம் முதலானவைகளையும் கணக்கிட்டு முன்மாதிரியான வரை படங்களைத் தயாரித்திருக்கிறார்கள். அவையெல்லாம் விரைவில் பரிசீலிக்கப்படும்.

அதைப்போலவே, ஒவ்வொரு சுற்றுச்சாலைக்குமான வரைபடம் தயாரிக்கப்பட்டு, ஆங்காங்கே இருக்கின்ற உள்ளாட்சி மன்றங்களின் ஆலோசனைகளைப் பெற்று, அவை நிறைவேற்றப்பட ஏற்றுக் கொள்ளப்படும். அப்படி நிறைவேற்றுவதிலே கொஞ்சம் கால

[திரு. க. அன்பழகன்] [1973 டிசம்பர் 3

தாமதம் ஏற்படலாம். ஏனென்றால் உரிய காலத்தில் நிதி வசதி முழுவதும் கிடைக்குமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. பம்பாய், கல்கத்தா நகரங்களின் வளர்ச்சிக்கு மத்திய அரசு நிதி வசதி அளித்ததைப்போல சென்னை பெருநகர சீரமைப்புக்கும் பெருமளவில் நிதி உதவ வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசால் அது கொள்கை அளவில் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

நாம் தயாரித்திருக்கின்ற திட்டத்தின்படி பார்த்தால், சென்னை பெருநகரைச் சுற்றியுள்ள நகரங்களுள் செங்கற்பட்டு நகரும், திருவள்ளூர் நகரும், பொன்னேரி நகரும் முதல்கட்டமாக வளர்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவைகளைப் பற்றியும் இப்போதே கணக்கிடப்பட்டு வருகிறது. அதற்கு ஏற்றவகையில் அடிப்படையாகச் செய்யப்பட வேண்டிய பணிகளைச் செய்ய ஆலோசனைகளை வழங்கி, நிதி பெறவும் இந்த அமைப்பு பெரும் துணையாக இருக்கும்.

இந்த மெட்ரோபோலிட்டன் அமைப்பு இப்படிப்பட்ட வளர்ச்சிப் பணிகளுக்கு நமக்குப் பேருதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இந்த அமைப்பிலே இருப்பவர்கள் சிறந்த நிபுணர்கள். அதன் செயலாளராக இருக்கக்கூடிய ஐ.ஏ.எஸ். அதிகாரி இதற்கான பயிற்சியை மேல்நாட்டிலே பெற்று வந்திருக்கிறார்கள். டவுன் பிளானிங் அதிகாரிகள் பலரும் நகர அமைப்புப் பயிற்சியைப் பெற்றிருக்கிறார்கள். இந்த அமைப்பில் பல்வேறு துறைகளின் செயலாளர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளும்போது அவ்வப்போது துறைகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் எழும் போது, அதற்கு ஏற்ற வழிமுறை காண்பதற்கு அவர்கள் உதவியாக இருப்பார்கள்.

இந்த அமைப்பிலே சட்ட மன்ற உறுப்பினர் இரண்டு பேருக்குப் பதிலாக ஒருவரே போதும் என்ற கருத்தை நேற்று பேசும்போது திரு. பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். இதில் ஒருவரா இருவரா என்பது பிரச்சனை அல்ல. இரண்டு பேர் இருந்தாலும் அவர்கள் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் எடுத்துச் சொல்வது பயன்படவே செய்யும். அந்தப் பணியை ஒருவரே



1973 டிசம்பர் 3] [திரு. க. அன்பழகன்]

செய்ய முடியாதா என்றால் முடியலாம். இருவர் என்பதால் அது குறையாது. ஆகவே, இதில் இரண்டு பேர் இருந்தாலும், அதனால் கெடுதல் ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரிய நகரப் பகுதியிலிருந்து இரண்டு உறுப்பினர்கள் இருக்க வேண்டுமென்ற ஒரு கருத்தும் இருக்கிறது. ஒரு வளர்ச்சிப் பகுதியில் ஒரு நகருக்கு மேற்பட்ட நகரங்களும் பஞ்சாயத்துக்களும் இருக்குமானால் அவைகளிலிருந்து மொத்தம் நான்கு பேர் இருக்க வேண்டுமென்ற கருத்து, நாங்கள் இந்தச் சட்டத்தைத் தயாரிக்கும்போது இடம் பெற்றது. 4 பேர் என்று சொல்லும்போது முக்கியமாக அதிக மக்கள் தொகை உள்ள ஒரு அமைப்புக்குத் தர வேண்டுமென்று சொல்லப்பட்டது. இந்த நான்கு பேரும் ஒரே அமைப்பில் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பது நியாயமானதாகத் தெரியவில்லை. சென்னை மாநகரில் இருந்து இரண்டு உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்றால் திருவொற்றியூரிலிருந்து ஒருவர், ஆலந்தூரிலிருந்து ஒருவர், தாம்பரம் நகரசபையிலிருந்து ஒருவர் என இப்படி இடம் பெறுவதில் தவறு இல்லை. ஒரு வளர்ச்சி வட்டாரத்திற்குள் வருகின்ற நகரசபைகள், பஞ்சாயத்துக்களிலிருந்து அங்கே மக்கள் தொகை குறைவாக இருந்தாலும்--ஒருவர் இருவர் இடம் பெறலாம் என்று இருக்க வேண்டுமென்றுதான் 4 பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் நான்கு பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறதே தவிர, மக்கள் தொகை அதிகமாக உள்ள பெரிய நகரை விட்டுவிட வேண்டுமென்று தெரிவிக்கப்படவில்லை.

நேற்று திரு. பழனிசாமி அவர்கள் பேசும்போது கமிஷனர் தான் இடம் பெற்றிருக்கிறார்; அவருக்குப் பதிலாக அவரது பிரதிநிதிகள் இடம் பெறுவது சரியல்ல என்று சொன்னார்கள். கார்ப்பரேஷன் கமிஷனர்தான் இடம் பெற்றிருக்கிறார்கள். கமிஷனர்தான் இடம் பெறவேண்டுமென்று இருக்கிறது. ஒரு கமிஷனர் இடம் பெற்றிருக்கிறார் என்று சொல்லும்போது அவர் ஒரு அதிகாரி. சில பிரச்சனைகளில் அவருக்கு உதவியாக இருக்க, உதாரணமாக டவுன் பிளானிங் சம்பந்தமான பிரச்சனை வரும்போது டவுன் பிளானிங்

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சில ஆலோசனைகள் கூறுவதற்காக அனுமதி பெற்று இடம் பெற இந்தச் சட்டத்தில் இடமிருக்கிறது. எனவே, இதில் வேறு பிரச்சனை எதுவும் எழவில்லை.

இன்னொரு கருத்தும் சொல்லப்பட்டது. இந்த அமைப்பிலே இடம் பெற்றிருக்கக்கூடிய அதிகாரிகள் எல்லாம் சிறந்த நிபுணர்களாக இருப்பதால், அவர்கள் வரையறை செய்து முடிவு செய்கின்ற திட்டங்களை அரசாங்கம் ஆய்வு செய்யாமல் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். சில பொருள்கள் பற்றி அரசாங்கம் முடிவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அந்தக் குழுவில் இருப்பவர்களைவிட அதிக நிபுணத்துவம் பெற்றவர்கள் அரசாங்கத்திலே இருக்கிறார்கள் என்று சொல்லவில்லை. பொதுமக்கள் பிரச்சனை என்று வரும்போது அரசும் சில முடிவுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

அந்தக் குழுவினர் வரையறை செய்யும் திட்டம் பொது மக்களுக்கு ஏற்றதல்ல என்று மக்கள் கருதுவார்களானால், அதை மறுபரிசீலனை செய்ய அரசுக்கு அதிகாரம் இருக்க வேண்டும். பொதுமக்களுடைய எல்லாக் குறைகளையும் இந்தக் குழு ஆராய்ந்து பரிகாரம் காண முடியாது. பொதுவாக நல்லது என்று கருதுகிற ஒரு திட்டத்தை குழு வரையறை செய்கிறது. அதைச் செயல்படுத்த விழைகிறது. குழு ஏற்றுக் கொண்டு, செயல்படுத்த விழைகிற ஒரு திட்டம் கூட மறுபரிசீலனை செய்யப்படக்கூடிய நிலைமை ஏற்படலாம். இந்தத் துறையின் அமைச்சர் தான் அந்தக் குழுவிற்குத் தலைவர் என்றாலும், மக்கள் நலனை முன்னிட்டு, அவர்கள் வேண்டுகோளை ஏற்று, அந்தத் திட்டத்தைத் திருத்துவதாக இருந்தால் அதை மறுபரிசீலனை செய்ய அரசாங்கத்திற்கு வாய்ப்பு இருக்க வேண்டும். மறுபரிசீலனை செய்யும்போது, அப்போது ஏற்பட்டுள்ள நிலைமைகளுக்கேற்ப திருத்தம் செய்யலாம், அந்த அதிகாரம் அரசுக்கு இல்லை என்றால், மக்களுடைய வேண்டுகோள்கள் புறக்கணிக்கப்படக்கூடிய நிலைமை உருவாகும்.

மெட்ரோபோலிட்டன் நகரமைப்பு திட்டங்கள் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாறக்கூடியவை. அவ்வப்போது ஏற்படக்கூடிய மாற்றங்களுக்கேற்ப புதிய வரையறைகளை மேற்கொண்டு,



வேண்டிய திருத்தங்களைச் செய்ய வேண்டும். எந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதாக இருந்தாலும், மக்களுடைய நலனைக் கருதி, அவர்களுடைய நியாயமான வேண்டுகோளை ஆராய்ந்து ஏற்றுக் கொண்டு செயல்பட்டால்தான் அந்தத் திட்டம் வெற்றி பெறும். ஒரு திட்டத்தை இந்தக் குழு வரையறை செய்து நிறைவேற்ற வேண்டுமென்று விரும்பினால், அந்தத் திட்டத்திற்கு 60 கோடி ரூபாய் தேவை என்றால், அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் போது மத்திய அரசின் உதவி கிடைக்காததாலோ அல்லது வேறு பல காரணங்களினாலோ மாற்றியமைக்க வேண்டுமென்றால், ஏற்பட்ட விளைவுகளுக்கேற்ப, மக்களின் வேண்டுகோளுக்கேற்ப, அரசாங்கத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்தி, அந்தக் குழுவின் மூலமாகவே தக்க முறையில் அந்தத் திட்டத்தை மாற்றியமைக்க அதிகாரம் தேவை. எனவே அந்தக் குழுவுக்கு மேற்பட்ட அதிகாரம் அரசாங்கத்தினிடம் இருக்கக் கூடாது என்கிற கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடியதாய் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

இப்படி எல்லாம் விரிவான முறையில் பரிசீலிக்கப்பட்டுத்தான் இந்தத் திருத்த மசோதா இந்த அவையில் வைக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் இங்கே நண்பர் ஜேம்ஸ் அவர்கள் சொன்னதைப் போல இதை ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். திருத்தங்கள் கொடுத்திருக்கிற பழனிசாமி அவர்களும் அந்தத் திருத்தங்களை வற்புறுத்த வேண்டிய அவசியம் இல்லை. அவர்களுடைய வாதத்தை அரசு உணர்ந்திருக்கிற காரணத்தினால் அவை தேவையில்லாதவை, மாண்புமிகு உறுப்பினர்களுடைய சிறந்த ஆலோசனைகள் எப்போதும் இந்தக் குழுவின் நல்ல ஆய்வுக்குரியவையாக இருக்கும் என்று தெரிவித்து, இந்தத் திருத்த மசோதாவை இந்த அவை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : I mentioned about representation of labour in this Metropolitan Board and also about representation of Chairman of Water and Drainage Board. I would like to know what is the idea of Government.

[1973 டிசம்பர் 3

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** மெட்ராஸ் மெட்ரோபாலிடன் டெவலப்மென்ட் குழுவில் மாநகராட்சியைச் சேர்ந்த அதிகாரிகள் இருக்கிறார்கள். வாட்டர் அண்டு டிரைனேஜ் போர்டு தலைவரோ, நிர்வாக இயக்குநரோ இதன் ஆலோசனைக் குழுவில் இடம் பெற்றுள்ளனர். மேலும், தமிழ்நாடு முழுமைக்குமாகத் திட்டமிடுகிற குழுவில் அவர்கள் இருக்கிறார்கள். இதில் அவர்கள் இல்லையென்றாலும் அவர்கள் இருப்பதன் மூலம் எத்தகைய பணிகள் ஆற்ற முடியும் என்று கருதப்படுகிறதோ அவைகளை நகரமைப்புத் துறையினரே நியாயமான முறையில் நிறைவேற்றுவதற்கு வழி வகைகள் இருக்கின்றன.

**திரு. கே. எம். சுப்பிரமணியம்:** லேபர்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இது ஒரு பொது அமைப்பை வரை செய்யும் குழுதான். தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தருவது போன்ற தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட முறையில் இதன் நோக்கங்கள் எதுவும் அமையவில்லை. அப்படிச் செயல்படுகிற அமைப்புகளில்தான் அவர்கள் இடம் பெற வேண்டும் என்று கருத இடம் உண்டு.

**திரு. என். கே. பழனிசாமி:** லோகல் அத்தாரிடிக்கு அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்பது என் நோக்கம். அவர்கள் ஏதாவது ஒரு திட்டம் போட்டு வேலை செய்கிறபோது, இவர்கள் திடீரென்று அதைப் பாதியில் மாற்றினால் பத்தாயிரம், இருபதாயிரம் என்று செலவிட்டிருக்கும் பணம் விரயமாகிவிடும். லேபர் அத்தாரிடியில் ஏற்கனவே போடப்பட்ட ப்ளான் கூட இருக்கலாம். அதை எல்லாம் கவனிக்காது இவர்கள் ஆர்பிட்ரரியாக ஒரு ப்ளானைக் கொடுத்துவிடக் கூடாது. இம்ப்ளிமென்டேஷனிலும் அவர்களுக்குத்தான் அந்த அதிகாரம் இருக்க வேண்டும். இது போன்ற என்னுடைய ஃபண்டமென்டல் கருத்துக்களுக்கு இசைவு அளித்தால் என்னுடைய திருத்தங்களை எல்லாம் நான் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இந்தக் கருத்துக்கள் எல்லாம் அரசுக்கும் உடன்பாடான கருத்துக்களே தவிர மாறுபாடான கருத்துக்களல்ல. ஒரு திட்டத்தை இந்தக் குழு வரையறை



1973 டிசம்பர் 3] [திரு. க. அன்பழகன்]

செய்கிறபோது அந்த வரைப்படம் அறிவிக்கப்படும். உள்ளாட்சி மன்றங்கள் அதனை ஒத்துக் கொள்ளலாம், நிராகரிக்கலாம், அவர்களுடைய கருத்துக்கள் பரிசீலனை செய்யப்படும், அவர்கள் ஏற்கனவே தயாரித்து வைத்திருக்கிற திட்டம் இருந்தாலும் பரிசீலிக்கப்படும். உள்ளாட்சி மன்றங்களின் கருத்துக்குத் தகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்படும். உள்ளாட்சி மன்றங்கள் அவற்றை நிறைவேற்றுகிறபோது எந்தவகையான உதவிகள், ஆதரவுகள் தேவை என்றாலும் அவற்றை இந்தக் குழு அரசுக்கு அனுப்பி வைத்து அந்த ஆதரவு, உதவி கிடைக்கச் செய்யவும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும். நகராட்சி மன்றங்களின் அமைப்புகளுக்கு இந்தக் குழு உதவியாக இருக்குமே தவிர அவர்களது பணிகள் கெட்டுவிடுகிற வகையில், பாதிக்கப்படும் வகையில் இது அமையாது. ஒன்றுக்கொன்று கோ ஆர்டினேஷன்-ஒத்துழைப்பு இருக்கிற வகையில் செயல் படுகிற நிலைதான் இருக்கிறது. திரு. பழனிசாமி கருத்துக்கும், அரசாங்கக் கருத்துக்கும் மாறுபாடு இல்லை. மாறுபாடு வார்த்தைகளில்தான்.

**திரு. கே. எம். எஸ். அவர்கள்** நேற்றும்--இன்றும் கூடச் சொன்னார்கள். பல அடுக்குமாடிக் கட்டிடம் வருவதுபற்றி. அதற்கு தமிழக அரசின் அனுமதி பெற்றாக வேண்டும், மத்திய அரசின் சில துறைகளின் அனுமதியையும் பெற்றாகவேண்டும். இப்போது விதி முறைகள் இருக்கின்றன. இப்பா நோக்கங்களில் மாறுபாடு இல்லை. எடுத்துச் சொல்கிற முறையில்தான் மாறுபாடு இருக்கிறது. திருத்தங்களில் பேசப்பட்ட கருத்துக்கள், நோக்கங்கள் மாறுபடவில்லை. ஆகவே திருத்தங்களுக்கு அவசியம் இல்லை என்று நினைக்கிறேன்.

**திரு. முனு ஆதி:** சில ஆண்டுகளுக்கு முன்னால் கிரேட்டர் மெட்ராஸ் என்பதாக சென்னை மாநகராட்சி பகுதியில் 20 மைல் சுற்றளவுக்கு ஒரு ஸ்கீம் தயாரிக்கப்பட்டதே, அதை ஒட்டி இது உருவாக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** நான் அதைப்பற்றி முதலிலேயே குறிப்பிட்டேன். உறுப்பினர் அப்போது இங்கு இல்லை போலிருக்கிறது. பத்ரிநாத் அவர்கள் க்ரேட்டர் மெட்ராஸ் என்பதாக ஒரு திட்டம் வரையறை செய்து 1970-ம் ஆண்டில் தந்தார்கள்.

அதற்கு பிறகு ஏற்பட்டுள்ள நகர விரிவுகளை மனதில் வைத்தே, 450 சதுர மைல் கொண்ட சென்னை நகரத்தின் பகுதிகள் இந்தத் திட்டத்திற்குள் வரும்படி 1971-ம் ஆண்டு முதல் 1991-ம் ஆண்டுக்குள் நிறைவேற்றப்படக்கூடிய அளவில் இது உருவாக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது. திரு. ஜேம்ஸ் அவர்கள் இடத்தில் இல்லாததால் அவரது திருத்தம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1973) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

*Clause 4.*

MR. SPEAKER : The question is :—

" That Clause 4 do stand part of the Bill ".

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, I move :—

In clause 4, in new section 9-A, in sub-section (2) in Clause (e), in sub-clause (ii), *for* the expression " members of the local authority having the largest population or income " *substitute* the expression " members of such local authorities ".

In Clause 4, in new Section 9-D, in clause (17), for the expression " in both the places where they occur " *substitute* the expression " wherever they occur ".

The amendment was put and carried.

Clause 4, as amended, was put and carried.

Clause 5 was put and carried.



New Clause 6.

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, I move :—

After Clause 5, *add* the following clause, namely :—

" 6. *Insertion of new section 91-A in Tamil Nadu Act 35 of 1972.*—After section 91 of the principal Act, the following shall be inserted, namely :—

" 91-A. *Delegation of powers by appropriate planning authority* :—

(1) The appropriate planning authority may, subject to such conditions as may be prescribed, authorise by order any committee or officer specified in such order to exercise any of the powers vested in such appropriate planning authority by this Act and may cancel such order.

(2) The exercise of any power delegated under sub-section (1) shall be subject to such restrictions and conditions as may be specified in the order, and also to control and revision by the appropriate planning authority ".

New-clause 6 was put and carried.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :**

"தமிழ் நாடு, 1973-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/73) திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன் வடிவு திருத்தப்பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(ஆ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/73)**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1973 டிசம்பர் 3

" தமிழ் நாடு 1973-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த( சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 40/1973) பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் (தமிழ் நாடு சட்டம் 1/1959) கோதுமைப் பொருள் விற்பனை மீது பல முனையில் விதிக்கப்படும் 1 சதவீத வரிக்குப் பதிலாக முதல் விற்பனை முனையில் 2 சதவீத விற்பனை வரி விதிப்பதென அரசு முடிவு செய்தது. இம் மாநிலத்தில் முதல் கொள்முதல் முனையில் வேர்க்கடலை மீது விதிக்கப்பட்ட 1½ சதவீதத்திற்குப் பதிலாக மூன்று சதவீத வரி விதிப்பதெனவும் அரசு முடிவு செய்தது.

1972-ம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் (திருத்த) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 61/1972) மூலம், 1956-ம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் 14, 15-வது பிரிவுகளில் செய்யப்பட்ட திருத்தங்களின் விளைவாக மேற்சொன்ன மாநிலச் சட்டத்தில் தகுந்த திருத்தங்களைச் செய்ய வேண்டியதும் அவசியமாயிற்று.

அதற்கிணங்க, மேற்சொன்ன நோக்கங்களை எய்தும் பொருட்டு, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) அவசரச் சட்டம் சாற்றுரைக்கப்பட்டது. மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக சட்டமன்றத்தின் சட்டம் ஒன்றைக் கொண்டுவர பேரவை முன் தற்போது வைக்கபட்டுள்ள சட்ட முன்வடிவு விழைகிறது.

மேல் முறையீட்டு உதவி ஆணையாளர்கள் தற்போது விற்பனை வரி மேல் முறையீட்டு நடுவர் மன்றத் தலைவரது நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளனர். இச் சட்டத்தின் 34-ஏ பிரிவின் கீழ் மேல் முறையீடுகளை மாற்றுவதற்கான அதிகாரம், வருவாய்த் துறை வாரியத்திற்குப் பதிலாக, விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர் மன்றத் தலைவரால் செலுத்தப்பட வேண்டுமென்று முடிவு செய்யப் பட்டது. எனவே, இச்சட்ட வரைவின் மூலம் மேற்படி சட்டத்தின் 34-ஏ பிரிவைத் தகுந்தவாறு திருத்தக் கருதப்பட்டுள்ளது.

---

* 1—12—1973 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.



1973 டிசம்பர் 3] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

மண்ணெண்ணெய் மீது ஒரு முனையில் விதிக்கப்படும் வரி வீதத்தையும் 5½ சதவீதத்திலிருந்து 8½ சதவீதமாக உயர்த்த முடிவு செய்யப்பட்டது. அதற்கிணங்க மேற்படி சட்டத்தின் முதல் விவர அட்டவணையின் 35-வது இனத்தில் குறிப்பிட்டுள்ள வரி வீதத்தைத் திருத்தி, இச் சட்டத்தின் 59(1) பிரிவின் கீழ் அறிவிப்பு ஒன்று, 16—11—1973 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன அறிவிப்பில் கண்டுள்ளதை இச் சட்டவரைவின் மூலம் சட்டத்தில் சேர்க்கக் கருதப்பட்டுள்ளது.

இச் சட்ட முன்வடிவு மேற்படி சட்டத்தின் 7-வது பிரிவில் சொல் திருத்தம் ஒன்றைச் செய்யவும் விழைகிறது.

தலைவர் அவர்களே, இப் பிரேரணையை இப்பேரவை ஏற்றுக் கொள்ள வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி.** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பொது விற்பனை வரி திருத்தச் சட்டத்திலே ஒருசில கருத்துக்களை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். பொது விற்பனை வரிச் சட்டம் தான் இவர்களுக்கு காமதேனு போன்று பணம் கொடுத்துக் கொண்டே இருக்கிறது. பணத்தைக் காண, காண இவர்களுக்கு ஆசை அதிகமாகி இருக்கிறதோ என்னவோ, அதிகமாகப் பணம் வசூலிக்க யோசனை செய்து வருகிறார்கள். நாங்கள் முன்றாலே இந்த பொது விற்பனை வரிச் சட்டத்தை மொத்தமாகவே திருத்துவதற்கு ஒரு 'காம்ப்ரஹென்சிவ் பில்' கொண்டு வர வேண்டுமென்று கேட்டோம். காரணம் 1959-ம் ஆண்டிலே இந்தப் பொது விற்பனை வரிச் சட்டத்தைக் கொண்டு வந்தோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதற்குப் பிறகு ஒவ்வொன்றாக, பீஸ்மீலாக வந்து கொண்டிருக்கிறது. ஒரு நாளைக்குப் போடுவது, ஒரு நாளைக்கு எடுப்பது, இன்றைக்குப் போடுவது, நாளைக்கு எடுப்பது, நினைக்கும்போது போடுவது, இப்படி பல வரிகள் அவ்வப்பொழுது வருவதை நாம் பார்க்கிறோம்.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1973 டிசம்பர் 3

ஒவ்வொரு வருஷமும் வியாபாரிகள் மாநாடு போட்டு, எங்களுக்கு இந்தச் சலுகைகளைத் தாருங்கள், பலமுனை வரி வேண்டாம், எங்களுக்குத் தொல்லையில்லாமல் போகும், ஒருமுனை வரி விதியுங்கள், உங்களுக்குத் தேவையான வருமானத்தைத் தருவதற்கு நாங்கள் உத்தரவாதம் தருகிறோம் என்று சொல்கிறார்கள், வியாபாரிகள் சங்கம்கூட அதைத்தான் பேசிக் கொண்டு வருகிறது. இங்கேயே சட்டசபையிலே சொல்லப்பட்டது, தனி நபர் ஒருவரை. போர்ட் மெம்பரை போட்டு, எந்த எந்த முறையிலே இந்த வரிகள் இருக்கலாம் என்பதை ஆராய்ந்து, அவர் என்ன என்ன சிபாரிசுகளைத் தருகிறாரோ, அதற்குப் பிறகு, இந்தச் சட்டம் மாற்றப்படும் என்று. இதுவரை அது செய்யப்படவில்லை. திடீர் திடீரென்று அமென்ட்மென்ட் வருவதைப் பார்க்கும்போது, ஏன் இந்த அரசாங்கம் சற்று நிதானத்தோடு, கவனத்தோடு, உட்கார்ந்து இதை ஆராயக் கூடாது என்று தோன்றுகிறது. நீங்கள் நினைப்பதைக் காட்டிலும் எக்கச்சக்கமான வருமானம் இதில் வருகிறது. நீங்கள் 88 கோடி வரும் என்று எதிர்பார்த்தால், அதில் 9 கோடி, 10 கோடி அதிகமாகவே வருகிறது. ஏன், அதிகமாக வருமானம் வருகிற துறையிலே, கவனக்குறைவாக இருந்து, அவ்வப்பொழுது, எப்படி எப்படி, தோன்றுகிறதோ அவற்றை யெல்லாம் சட்டமாகப் போடுகிறீர்கள் என்று புரியவில்லை.

இதிலே, மிகக் கொடுமை, கெரோசினுக்கு வரியை ஏற்றி இருக்கிறீர்கள். ஏற்கெனவே ஏழை மக்கள் விலைவாசிகளால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். 55 பைசா என்று இருந்ததை 85 பைசாவாக ஆக்கினார்கள். கேட்டால், லாரிக் காரர்கள் எல்லாம் டீசலையே ஊற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே டீசல் விலைக்குக் கெரோசின் விலையைக் கொண்டு வந்து விடுவது நல்லது என்று சொன்னார்கள். லாரியில் டீசல் ஊற்றுதற்குப் பதிலாக கெரோசின் ஊற்றுபவர்களைப் பிடிப்பதற்கு மோட்டார் வாகனச் சட்டத்திலே இடம் இருக்கிறது. நீங்கள் அதைக் கண்டு பிடிப்பதில்லை. எந்த லாரிக்காரன் டீசலுக்குப் பதிலாக, கெரோசின் போட்டான் என்று கண்டுபிடிக்க அக்கறையில்லை. அவர்கள் கெரோசின் போடப்போய், கெரோசினுடைய



1973 டிசம்பர் 3] [திருமதி த. ந. அனந்தநாயகி]

விலையை மத்திய அரசாங்கம் 55 பைசாவிலிருந்து 85 பைசாவாக ஏற்றிவிட்டது. இதில் யார் சிக்கிக் கொண்டார்கள். சாதாரண, வீட்டுப் பெண்கள்தான் இதனால் கஷ்டப்படுகிறார்கள். பெண்கள், ஸ்டவ் வைத்து பழக்கப்பட்டு விட்டார்கள். விறகு அதிக விலையில் விற்கிறது. ஆகவே, மண்ணெண்ணெய் ஊற்றி, சமையல் செய்வது சௌகரியமாக இருக்கும் என்று நினைக்கிறார்கள். நடுத்தர மக்களும் ஏழை மக்களும்தான் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். அமைச்சர் அவர்களை அந்தப் பாவம் சும்மா விடாது. விலையை நீங்கள் ஏற்றிக் கொண்டே போவீர்களானால், இந்த அநியாயத்தை யார் அனுமதிப்பது என்றுதான் தெரியவில்லை. (குறுக்கீடு). அந்த அம்மாவே 3 பெர்சன்ட்தான் போட்டார்கள். 55 பைசாவை 85 பைசாவாக்கினார்கள். நீங்கள் அவர்களுக்கும் மேலே நல்லவர்கள். ஏற்கனவே விலை ஏறிக் கொண்டே இருக்கிறது. முதுகை உடைக்க நானும் கொஞ்சம் இருக்கிறேன்கூட கவலைப் படாதீர்கள் நானும் விலையை ஏற்றுகிறேன், என்று ஏற்றுகிறீர்கள். அவர்கள் ஏற்றுவதற்குக் காரணம் சொல்லிவிட்டார்கள். காரணம், உங்களுடைய கவனக் குறைவுதான். நீங்கள் லாரிகளில் கெரோசின் ஊற்றுவதைக் கண்டு பிடிக்காததால், அவர்கள் கெரோசின் விலையை ஏற்றுகிறார்கள். நீங்கள் கவனம் செலுத்தாததால்தான் விலையை ஏற்ற முடிந்தது. 5½ சதவீதத்திலிருந்து 8½ சதவீதம் அளவுக்கு நீங்கள் உயர்த்துகிறீர்கள் என்றால், உங்களுக்கு ரொம்ப நெஞ்சழுத்தம் என்றுதான் நான் நினைக்கிறேன்.

வெந்த புண்ணிலே வேல் செலுத்துவது மாதிரி, நானும் 3 சதவிகிதம் போட்டு, கிடைத்ததை சுருட்டிக் கொள்கிறேன் என்ற முறையில் இதை ஏற்படுத்தியிருப்பது ரொம்ப வருந்தத்தக்கது. அமைச்சர் அவர்களே, பெண்கள் சாபத்திற்கு நீங்கள் ஆளாகாதீர்கள் என்றுதான் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். ஏற்கனவே, கெரோசினுக்காக, டின்னை எடுத்துக் கொண்டு, அங்கங்கே அலைய வேண்டியிருக்கிறது. கேட்டால் கார்டு கொடுத்துவிட்டேன் கார்டு கொடுத்துவிட்டேன் என்று உணவு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதற்குச் சரியான முறை இல்லை. வழக்கு மன்றத்திலே நீதிபதியே சொல்கிறார், அதிலே ஒழுங்கான சட்டம் இருப்பதாகத் தெரியவில்லை, என்று.

to increase the rate of tax levied on kerosene at single point from 5½ per cent to 8½ per cent. Accordingly a notification under Section 59 (1) of the Act has been published in Extraordinary issue of the *Tamil Nadu Government Gazette*, dated the 16th November 1973. It is necessary to replace the notification." What was the need for issuing a notification? The Government thought that the ordinance was unnecessary and they have issued a notification. If they had issued a notification with regard to some other item, the Government might have been excused. But here there is already a lot of hue and cry with regard to kerosene. The rate of tax on kerosene should be and must be reduced. The Central Government has also taxed and there was a lot of objection to the increase in tax. It was objected to by the Members belonging to the DMK in Lok Sabha and they also opposed the increase in kerosene. Why should we take this oportunity to levy tax on kerosene? The Government should also consider this aspect.

The Government should take steps to see that kerosene is sold at a normal rate and distributed uniformly to the poor. There was no need for the replacement of notification at all. Why not we scrap this notification at all? We can also do away with the Ordinance, because an increase of 3 per cent has been imposed earlier. Therefore, there is no necessity at all to replace the notification by this Bill. The Bill to replace the notification is not at all necessary.

(நண்பகல் 12-00)

In fact in the case of Madras Corporation, the provisions of the Ordinance are different from the provisions of the Bill and that is because the Government had changed their view after the issue of the Ordinance. Similarly, the Central Government have stated that they would reduce the levy on kerosene. Why the State Government are not following the line of the Central Government? Why not the State Government consider the whole thing in the light of the suggestion of the Central Government? I do not hold any brief for the Central Government in regard to this matter.

But my point is that the State Government have completely forgotten the interests of the consumers. The interests of the consumers are more paramount but the Government have thought





it fit to completely destroy their economy. The levy of three per cent at single point is not an ordinary thing. It is a very serious thing and it causes a lot of hardship to the poor people. If you examine the cost of living index, you will find that kerosene goes to make up the cost of living to a substantial degree. In fact, a poor man uses more kerosene than even rice. He finds it very difficult to light his home. Our Hon. Chief Minister says that he wants to give light to the poor people. So, I demand with all the emphasis at my command that the Hon. Chief Minister and the Hon. Minister for Revenue should reconsider the idea of imposing this extra three per cent at single point in the light of the feelings expressed probably by all sections of the House. If you ask any Member of the ruling party or the Opposition Party secretly they will say that this 3 per cent is too high.

In this connection, I wish to know whether the Government have worked out the extra expenditure which a family is going to spend on account of the increased rate of sales tax. There are a lot of workers who do not come under the cost of living index and they form 90 per cent of the poor people. They are mostly rural people living in the villages and the Government are thinking of completely destroying their economy. So, I request the Government to delete the provision relating to increased levy of sales tax.

Sir, another argument is that to avoid the mixture of kerosene with diesel oil, the price of kerosene is raised. Even this argument has been torpedoed by the Hon. Minister for Industries, Thiru Madhavan. He has stated that increasing the price of petrol is a very primitive method of taxation. I fully agree with him that it is a very primitive method of taxation. But what is sauce for the goose is also sauce for the gander. Why the State Government should try to curb the utilisation of a particular commodity like kerosene by increasing the tax on it as that is a very primitive method of taxation. Let us do away with it. If that is done, we will thank the Hon. Minister and we will not give any further trouble to the passing of this Bill.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1973 டிசம்பர் 3

எல்லாம் ஒரே அக்கிரிமெண்ட்டிலேதான் விற்கிறார்கள் என்று சொல்கிறார்கள். சீனி, ரவா, கோதுமை, மண்ணெண்ணெய் எல்லாமே அப்படித்தான். கோதுமைக்கும், திரு. கே. டி. கே தங்கமணி அடிக்கடி சொல்வது வழக்கம், மத்திய அரசாங்கம் ஒரு விலைக்கு விற்கிறது, அதற்கு மேலே நீங்கள் ஒரு விலையை வைத்து விற்பது நியாயமா? ஏதோ அதற்கு மேலே ஏற்படும் செலவிற்காக ஒரு அளவிற்கு எடுத்துக் கொண்டு அதிகமாக ஓரளவிற்கு விற்காமல் நீங்களாக ஒரு விலையை வைத்து மிக அதிகமாக விற்கிறீர்கள். கேட்டால் மத்திய அரசாங்கம், மத்திய அரசாங்கம் என்று சொல்கிறார்கள். மத்திய அரசாங்கம் இவ்வளவு விநியோகம் செய்ய வேண்டுமென்று சொல்வதையாவது நீங்கள் சரியாக விநியோகம் செய்கிறீர்களா? அதுவும் கிடையாது, விநியோகம் செய்ய மாட்டேன் என்று சொல்கிறார்கள், பற்றவில்லை என்றால் அவர்களிடம் கேட்பதற்கு சண்டை போடுவது நியாயமாக இருக்கலாம். ஆனால் அவர்கள் கொடுப்பதையே நீங்கள் நியாயமாகக் கொடுப்பதில்லை.

இன்றைக்கு மறு மாதமேகூட பிறந்துவிட்டது. இதுவரையில் ரவா கொடுக்கவில்லை, கோதுமை கொடுக்கவில்லை. சென்னையிலே, தலைநகரத்திலேயே, உங்களுடைய நேர்பார்வையிலே இருக்கிற இடத்திலேயே இப்படிப்பட்ட நிலை என்றால் இன்னும் கிராமப் புறங்களிலே சொல்ல முடியாது, அவ்வளவு கஷ்டம் இருக்கிறது. நானும் நினைந்தோறும் ஆளை அனுப்பிக் கொண்டுதான் இருக்கிறேன். ஒவ்வொரு நாளும் இன்று போய் நாளை வா இன்று போய் நாளை வா என்று இராமபிரான் மாதிரித்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். காசு கொடுத்தாலும் சரக்குக் கிடைக்கவில்லை. இன்றைக்கு நாட்டிலே பற்றாக்குறை கிடையாது. விநியோகத்திலேதான் குறைபாடுகள் நிறைய இருக்கின்றன.

இந்த நிலையில் வீட்டுக்கு வேறு வரி ஏற்றியிருக்கிறீர்கள். சிங்கிள்பாயின்ட் என்று சொல்லி கோதுமைக்கு 1 சதவீதமாக இருந்ததை இன்றைக்கு இரண்டு சதவீதமாக அதிகமாக்கியிருக்கிறீர்கள். ரொம்பக் கடுமையான நிலையிலேதானா நீங்கள் உங்களுடைய ஏற்றத்தைக் கொண்டுவரவேண்டும், கொஞ்சம் ஒத்தி



1973 டிசம்பர் 3] [திருமதி த. ந. அனந்தநாயகி]

வைத்துவிட்டு நிலைமை சீரானதற்குப் பிறகு கொண்டுவந்தாலும்கூட கடுமையை யாரும் உணர மாட்டார்கள். இப்படிக் கடுமையான நேரத்திலே நீங்கள் இப்படி ஏற்றுவதால் பொதுமக்களிடம் உங்களுக்கு அக்கறை இல்லை, அவர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை என்பதைத்தான் மக்கள் உணர்கிறார்கள்.

எதிர்க் கட்சியிலே உள்ள நாங்கள் என்ன செய்யலாம், சத்தம் தான் போடலாம். ஏற்றுக்கொள்வதோ தள்ளிவிடுவதோ உங்களுடைய கையிலேதான் இருக்கிறது. மக்களின் வாழ்க்கையிலே உள்ள கஷ்டத்திலே கிரோஸினுக்கு வரியேற்றம், கோதுமைக்கு வரியேற்றம், தேங்காய்க்கு வரியேற்றம்—தேங்காய்க்கு வரியை எடுத்தார்கள், அதிலே பல லட்சம் சிலர் சம்பாதித்தார்கள்—இன்றைக்கு மறுபடியும் வரி போட்டு விட்டார்கள். இன்றைக்கு சென்னையிலே தேங்காய் விலை கேட்டால் 1½ ரூபாய். ஒரு காலத்தில் 60 பைசா 65 பைசா என்று தேங்காய் விற்ற நேரத்திலே விலை ஏற்றம் என்று நீங்கள் எல்லாம் சத்தம் போட்டீர்கள். இன்றைக்கு 1½ ரூபாய் விற்கிறது, நேற்று ஒரு கிராமத்திற்குப் போயிருந்தேன், அங்கே தேங்காய் என்ன விலை என்று கேட்டால் 1¼ ரூபாய் என்கிறார்கள், கள்ளுக்கடைகள் இருந்தபோது 1¼ ரூபாய் என்றால்கூட பரவாயில்லை. கள்ளுக் கடைகளையெல்லாம் எடுத்த பிறகுகூட அந்த விலை விற்கிறது என்றால் மக்கள் உங்கள் ஆட்சியிலே வாழ்கிறதா அல்லது சாகிறதா என்பதையாவது சொல்லிவிடுங்கள், மக்கள் முடிவு எடுத்துக் கொள்வார்கள், அவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாக நஞ்சு மாதிரி வதைக்க வேண்டாம்.

அத்தியாவசியப் பொருட்களாக இல்லாத பொருள்களுக்கு வரிப்போட்டால் ஒத்துக்கொள்ளலாம் இப்படி அத்தியாவசியப் பொருள்களாக இருக்கின்றவற்றிற்கு, அன்றாடம் தேவைப்படுகிற பொருள்களுக்குப் போடுவது சரியல்ல, அது கண்டிக்கத்தக்கது, வருந்தத்தக்கது, தயவுசெய்து இந்தத் திருத்த மசோதாவை ஒத்தி வைத்து மொத்தமாக ஒரு தனி ஆபீஸர் போட்டு, வியாபாரிகளைக் கலந்துகொண்டு என்ன அடிப்படையிலே சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமோ அந்த வகையிலே கொண்டுவரலாம், அப்படியில்

[1973 டிசம்பர் 3

திரு. கே. டி. கே. தங்கமணி: மிஸ்டர் டெப்டி ஸ்பீக்கர் சார், பொது விற்பனை வரிக்குக் கொண்டு வந்திருக்கும் இந்தத் திருத்தம் அவசியமில்லை, இது அவசரமாகக் கொண்டுவரப்பட்டது என்பதை முதன்முதலில் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த பொது விற்பனை வரி சம்பந்தமாக 1959-ஆம் வருஷம் நிறைவேற்றிய பிறகு பல அனுபவங்கள் நமக்குக் கிடைத்தது, இதே மன்றத்தில்தான் இந்த பொது விற்பனை வரியை எந்த முறையிலே மாற்ற வேண்டுமென்பதற்கு ஒரு கமிஷன் போடப்பட்டது என்று அறிவித்தார்கள். இப்பொழுது திரு. சீனிவாசன் அவர்கள்தான் இந்தக் கமிஷனின் தலைவராக இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதற்கிடையில் ஸ்பெஷல் ஆபீசராக ராயப்பாவையெல்லாம் போட்டு, அவரும் செயல்பட முடியாத நிலை ஏற்பட்டு ஒரு வருஷத்திற்குமேல் ஆகிவிட்டது. ஆகவே, இந்த விவாதத்தின் பொழுதாவது அமைச்சரவர்கள் இந்தக் கமிட்டியின் விசாரணை எந்த நிலையிலிருக்கிறது, எப்பொழுது அந்த ரிப்போர்ட் வரும், அப்படி வந்தால் ஏற்கனவே அளித்த வாக்குறுதியின்படி, 1959-ஆம் வருஷச் சட்டத்தைப் புதியதாகத் திருத்தியமைக்கப் போகிறோம் என்றோமே, அது எப்பொழுது வரும் என்பதை அறிவிக்க வேண்டும்.

இரண்டாவதாக, சாதாரணமாகத் தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கும் விஷயம் அல்லது நிலத்தைவிட்டு விவசாயிகள் வெளியேற்றப்படுகிறார்கள், அப்படி வெளியேற்றக் கூடாது என்ற விஷயங்களிலே அவசரச் சட்டம் வந்தால் அதை என்னால் புரிந்து கொள்ள முடியும். ஆனால் திடீரென்று வரியை அதிகப்படுத்த வேண்டுமென்று அவசரச் சட்டம் கொண்டு வருகின்ற அந்த முறையே தவறு என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அப்படி அவசரச் சட்டம் கொண்டுவந்த ஒரு சமயத்தில் சட்டசபையை இடைக்காலத்தில் கலைக்க வேண்டுமென்பதற்காக, அப்படிக் கலைத்தால் எதாவது அவசரச் சட்டம் கொண்டு வரவேண்டுமே என்பதற்காகக் கொண்டுவந்தார்களோ என்ற ஐயம் ஏற்பட்டது. அப்படிக் கொண்டு வந்திருக்கக் கூடாது.



1973 டிசம்பர் 3] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இதை எப்படியாவது சட்டமாக்க வேண்டுமென்று முயற்சிப்பது வரவேற்கத் தக்கதல்ல என்பதை முதன்முதலில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, யார் தயாரித்தாலும் சரி, 'ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸ்' தயார் செய்யப்படுகிறது. அப்படித் தயார் செய்யும் பொழுது அது கொஞ்சம் விவரமாக இருக்க வேண்டும். இங்கே மசோதாவிற்குள்ளே பார்த்தால், மசோதாவிற்குள்ளே இருக்கும் விஷயத்திற்கும் இந்த 'ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸ்'-க்கும் ரொம்ப வித்தியாசம் இருக்கிறது. ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸில் ஏதோ நிலக்கடலை, விட் ப்ராடக்ட்ஸ், மண்ணெண்ணெய் ஆகிய மூன்றுக்கும் வரியைத் திருத்தியமைத்திருக்கிறோம் என்றும், மண்ணெண்ணெய்க்கு வரியை அதிகப்படுத்தியிருக்கிறோம், வீட் அண்ட் விட் ப்ராடக்ட்ஸ்க்கும், மணிலாவைப் பொறுத்த வரைக்கும் ஒருமுனை என்றும் சொல்கிறார்கள். ஆனால் உள்ளே மசோதாவிலே புதிதாக 3 சதவிகிதம் முதல்முனை வரி போட்டிருக்கிறார்கள். ஏலக்காய்க்குப் புதிதாக வரி போட்டிருக்கிறீர்கள். அதேமாதிரி இதே மன்றத்தில்தான் தேங்காயைப் பொறுத்தவரையில் வரியை நீக்கியிருந்தோம். ஏற்கனவே 3 சதவிகிதம் என்று இருந்ததை நீக்கினோம். மறுபடியும் அது 3 சதவிகிதம் ஆனது. இப்பொழுது 5 சதவிகிதம் ஆகியிருக்கிறது. இப்படி எதாவதொரு மசோதாவைக் கொண்டு வந்து எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம் வரியைப் போடுவது சரியல்ல என்று நான் கண்டிப்பாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இம்மாதிரி கூட்டியிருப்பதால் என்ன பலன் வருகிறது? அதிகமாக நமக்குப் பணம் வந்திருக்கிறதா? இப்படிக் கூட்டுவதால் எவ்வளவு பணம் அதிகம் வரும் என்பதுபோன்ற விஷயங்களைச் சொல்ல வேண்டும். அப்படியில்லாமல் இடையிலே திடீரென்று கூட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது, கூட்டினோம் என்கிறீர்கள். அதனால் நன்மைகள் என்ன என்று கேட்டால் நமக்குத் தெரியாது. எந்த அளவிற்குப் பணம் கிடைக்கும்? இவ்விதமான வரி போடும் மசோதாக்கள், புதிதாக வரியை உயர்த்தும் மசோதாக்கள் வரும் என்றால் அத்துடன் இதனாலே நமக்கு 6 மாத காலத்திலே, அல்லது ஒரு ஆண்டு முடிவதற்

குள்ளாக இவ்வளவு ரூபாய் நமக்கு அதிகமாக வருமானம் இருக்கப் போகிறது என்று தெரிவிக்க வேண்டும். அப்படித் தெரிவிக்காத அளவில், ஏதோ போட்டோம், அது அவசரச் சட்டமாக இருந்தது, இப்பொழுது மசோதாவைக் கொண்டு வந்து விட்டோம் என்று கொண்டு வருவது இந்தச் சபைக்குக் கொடுக்கும் மரியாதை அல்ல. இந்த முறையிலே சபையை நடத்தக் கூடாது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தக் காரணங்களை எல்லாம் வைத்துப் பார்க்கும்போது—"There is no rationale behind this increase" என்றுதான் சொல்ல வேண்டும். இந்த மாதிரி இதைக் கொண்டு வந்த காரணத்தால் இதில் எந்த அம்சத்தையும் நாம் ஆதரிக்க முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மண்ணெண்ணெய் கன்ட்ரோல் விலை 85 பைசா. எவ்வளவு பேருக்கு அந்த விலைக்குக் கிடைக்கிறது என்று தெரியவில்லை. ஏற்கனவே, வீட் அண்டு வீட் ப்ராடக்ட்சுக்கு ஒரு பர்சண்டாக இருந்ததை 2 பர்சண்டாக ஆக்கியிருக்கிறார்கள். இன்றைக்கு மைதா மாவுக்கு மத்திய சர்க்கார் விதித்திருக்கும் விலை கிலோ ரூ. 1.07 காசு. நம்முடைய அரசு நிர்ணயித்திருக்கும் விலை கிலோ ரூ. 1.17 காசு. ஒரு குவின்டால் 117 ரூபாய்க்குக் கிடைக்கிறதா? சென்னை நகரத்திலிருந்து லாரி லாரியாக மைதா வெளியே போய்க் கொண்டிருக்கிறது. குவின்டால் 220 ரூபாய், 230 ரூபாய் விற்கிறார்கள். ஏற்கனவே இந்த விலைக்கு விற்றுக் கொண்டிருக்கும் வியாபாரிகளிடத்தில் இன்று கேட்டால் நீங்கள் வரியை உயர்த்திவிட்டீர்கள், ஆகவே, இன்னும் கொஞ்சம் கூட்டுகிறோம் என்று சொல்லுவார்களோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பொதுக் கருத்தையும் வற்புறுத்த விரும்புகிறேன்.

"The time for piecemeal legislation for amending the General Sales Tax Act is over."

மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் உணவுப் பொருள்களுக்கு விதிவிலக்கு கொடுத்த பிறகும்கூட இன்றைக்கு அரசுக்கு 100 கோடி ரூபாய்க்கு அதிகமாகக் கிடைக்கிறது. மக்களிடத்தில் தெளி





வாகச் சொல்ல முடியும். நாங்கள் கன்ஸ்யூமர்களுக்காகத்தான் இருக்கிறோம் என்று சொல்ல முடியும். எஸென்ஷியல் கமாடிடிஸ் ஆக்ட் கன்ஸ்யூமர் ஓரியன்டட்தான். இந்த வரி மக்கள் மேல் போடப்பட்டு விலையை உயர்த்தும் தன்மையில்தான் இருக்கிறது. ஆகவே, உணவுப் பொருள்களுக்குக் கண்டிப்பாக விதிவிலக்குக் கொடுக்க வேண்டும். அந்த முறையில் பின்னால் இந்த மசோதா வரவேண்டுமென்று தெரிவித்துக் கொண்டு பீஸ்மீல் லெஜிஸ்லேஷன் கொண்டு வந்த காரணத்தால் சிலவற்றை, சில விஷயங்களைச் சேர்க்கக் கூடிய முறையைக் கையாளக் கூடாது என்று தெரிவித்து, இந்த மசோதாவை சபை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, பொது விற்பனை வரிச் சட்ட மசோதாவிலே என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு முன்பாக, இதனை இந்த மன்றத்திலே அறிமுகம் செய்தாலும், இதனால் ஏற்படக்கூடிய ஃபினான்ஷியல் ஆஸ்பெக்ட் என்று சொல்வார்கள்—கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் சொன்னது போல் பினான்ஷியல் மெமோரண்டம் இதிலே சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். எப்படி சபாநாயகர் அவர்கள் இதனை இந்த மன்றத்தில் விவாதிக்கக்கூட அனுமதித்தார்கள் என்று ஐயப்படுகிறேன். ஏனென்றால், எந்த ஒரு மசோதாவாக இருந்தாலும் சரி, வரி போடுகின்ற நிலையில் இருந்தாலும் சரி விலக்கு அளிக்கின்ற நிலையில் இருந்தாலும் சரி ஃபினான்ஷியல் இல்லாத இருந்தால் அதனால் எவ்வளவு ரூபாய் அரசாங்கத்திற்கு வருகிறது அல்லது போகிறது என்பதற்கு சோராயமான கணக்குகள் இருக்க வேண்டும். ஆனால் ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீசன்சிலே ஃபினான்ஷியல் மெமோரண்டம் இணைக்கப்படவில்லை என்பதோடு மட்டுமல்ல . . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். கணபதி):** ஃபினான்ஷியல் மெமோரண்டம் என்பது சாதாரணமாக அரசாங்கப் பணத்தை செலவு செய்யும்போதுதான் சேர்க்கப்படும். விதி 89-ல் சொல்லப்பட்டிருக்கிறது—

Bills involving expenditure shall be accompanied by financial memorandum. Other Bills need not be accompanied by financial memorandum.

[திரு. என். கணபதி] [1973 டிசம்பர் 3

ஆகவே, அதைப் பற்றிப் பேசுவதை விட்டு விட்டு அடுத்த விஷயத்திற்குப் போகுமாறு கேட்டுக் கொள்கிறேன்

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): டாக்சேஷன் போடும்போது எவ்வளவு ரூபாய் வருகிறது என்று சட்ட மன்றத்திற்குச் சொல்லுவதுதான் முறை. இங்கே எந்த முறையில் விதி முறைகள் இருக்கின்றன என்று தெரியவில்லை. என்னுடைய அனுபவத்தில் எவ்வளவு வருமானம் வருகிறது என்பதைச் சொல்லத்தான் வேண்டுமென்று கருதுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் இருக்கிறது. —The statement of objects and reasons must be more clear and comprehensive. Here there is only a general statement. So we say it is defective.

MR. CHAIRMAN (THIRU N. GANAPATHI): That may be so. But the hon. Member Thiru V. Krishnamoorthi raised the question how the office of Hon. Speaker had given permission to the Bill when it is not accompanied by financial memorandum. I say according to Rule 89, financial memorandum need not accompany this Bill.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): தலைவர் அவர்களே, இது சட்டமாக நிறைவேற்றப்பட்ட பிறகு இதை அமல்படுத்துவதற்காக 200 ரூபாயாவது செலவழியாமலா இருக்கப் போகிறது? ஒரு ரூபாய் செலவழித்தாலும் ஃபினான்ஷியல் மெமோரண்டம் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட பில் பாராளு மன்றத்தில் வந்தால் இதைச் சொன்னதற்குப் பிறகு அனுமதிக்கவே மாட்டார்கள். அங்கெல்லாம் விவாதத்திற்காக இதைச் சுட்டிக் காட்டுகிறேனே தவிர, இங்கு இதன்மீது விவாதத்தை முடிக்கக் கொள்ள வேண்டுமென்று கூறவில்லை. இனிமேல் இதுமாதிரி தாக்கல் செய்யப்படுகிற எந்த மசோதாவாக இருந்தாலும் பினான்



1973 டிசம்பர் 3] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

ஷியல் மெமோரண்டம் இருக்க வேண்டும். ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ் மட்டும் கொடுத்துவிட்டால் போதாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இப்போது இருக்கக்கூடிய இலாகாவை வைத்துக்கொண்டுதான் வசூலிக்கப் போகிறோமே தவிர, இதற்காகப் புதிய செலவு எதுவும் கிடையாது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): அது சரியாக இருக்க முடியாது. புதிய ஸ்டாம்ப் போடுவார்கள்; ஒரு கிளார்க்கையாவது அதிகமாகப் போடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இப்போது இருக்கிற ஸ்டாம்பை வைத்துக் கொண்டுதான் வசூலிக்கப்படும் என்று திட்டவட்டமாக, உறுதியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

Dr. H. V. HANDE: On a point of order, Sir. The Hon. Minister while replying just now raised the point that Financial Memorandum need not be there with the Bill because no extra expenditure is there. But in this House in the past we had raised the point and it has been ordered last time, when an Hon. Minister brought in a Bill, that even though there is no financial memorandum, in the Statement of Objects and Reasons, when it is a taxation measure, the reference to the quantum of money that is likely to be realised should be there so that the House may know the amount we are likely to get. This is what I would raise in addition to what Thiru V. Krishnamoorthi had said. That is why many of us feel that the Bill had been brought in a haphazard way.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): அவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவில் இருக்கக்கூடிய பல பிரச்சினைகளைப் பற்றிக் கூற விரும்புகிறேன். புதிய வரிகள் எவ்வளவு தூரத்திற்கு நமக்கு உதவிகரமாக இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மத்திய சர்க்கார் பெட்ரோலுக்கும், மண்ணெண்ணெய்க்கும் வரியை ஏற்றிவிட்டார்கள். லிட்டர் 55 பைசா என்று விற்று வந்தது இன்று 85 பைசாவுக்கு விற்கப்படுகிறது.

இதை நியாய விலை என்று இன்று நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால் அதற்கு மேலும் இந்த வரியைப் போட்டு விலையை உயர்த்த வேண்டுமா என்பதுதான் கேள்வி.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு விளக்கம் கொடுத்தால் உதவியாக இருக்குமென்று நினைக்கிறேன்.

There is no increase in the retail price of kerosene, which is 85 paise per litre, as a result of increase in the rate of tax from 5.5 per cent to 8.5 per cent. It is only to take the unintended benefit of 2 paise per litre which was accruing to the retailer that the rate has been increased to 8.5 per cent. Government have already made it clear through press note that this will not increase the retail price of 85 paise per litre and that this does not at all affect the consumer.

85 பைசா லிட்டர் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விலை மேலும் உயராது. 8½ பர்சன்ட் என்று நிர்ணயிப்பதிலே டீலருக்குக் கிடைக்கக்கூடிய கமிஷனில் குறைவு ஏற்படலாமே தவிர வாங்குபவர்களுக்கு விலை ஏறாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். 8½ சதவிகிதம் என்பது வரியும் உட்பட்டதுதான். இது வியாபாரிகளுக்குக் கிடைக்கின்ற கமிஷனில் சரி செய்யப் படுகிறது. வாங்குபவர்களுக்கு 85 பைசாவுக்கு அதிகமாக ஆகாது என்று உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** 85 பைசா கொடுக்கவேண்டும் என்று என்ன கட்டாயம் இருக்கிறது? அதை ஏன் 83 அல்லது 80 பைசாவாகக் குறைக்கக் கூடாது? 85 பைசாவுக்குள்ளே வருகிறதா அல்லது அதற்குமேலே வருகிறதா என்பது பிரச்சினை அல்ல. ஏற்கனவே 55 பைசாவிற்கு வாங்கியவர்கள் இன்று அதற்கு 85 பைசா கொடுக்கவேண்டியிருக்கிறது. இதற்கு மத்திய அரசு ஒருபுறம் காரணமாக இருக்கும்போது மாநில அரசும் அதற்குக் காரணமாக இருக்கக்கூடாது என்பதற்காகத் தான் இதைச் சொல்கிறேன்.

இந்த வரி, கிரசினுக்கு மேல் போடக்கூடிய வரியானது ஏழை மக்கள்மீது போடும் வரியாகும். ஏழை மக்கள் பட்டுக் கொண்டிருக்கிற எவ்வளவோ வேதனைகளோடு மேலும் ஒரு



வேதனையாக இருக்கும் இது. ஆகவே இதை எப்படி நாம் அனுமதிக்கிறோம் என்று புரியவில்லை. கிரசினை யார் உபயோகப் படுத்துகிறார்கள்? மின்சாரத்தை உபயோகிப்பவர்கள் கிரஸினை அதிகமாகப் பயன்படுத்துவதில்லை. கிராமங்களில் உள்ளவர்கள் கிரஸினை அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். இப்போது கிரஸினுக்கு விலை கூடக் காரணம் என்ன? உங்கள் அரசாங்கம் வரி போட்டது என்று சொல்லக் கூடிய அளவிற்கு நாம் ஏன் இடம் தரவேண்டும் ஆகவே, இது தேவை இல்லை. இந்த வரி காரணமாக ஒரு கோடி ரூபாய் அல்லது ஐம்பது லட்சம் ரூபாய் வருகிறது என்றால் அது இல்லாமலே போகலாம் என்பது என் அபிப்பிராயம்.

அடுத்து, தேங்காய்க்கு வரி. அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். இரண்டு மாதங்களுக்கு முன்பாக பருப்பு, எண்ணெய் வித்துக்களுக்கு வரி விலக்கு கொடுத்தோம். ஏன்? விலை ஏறிப்போகிறது, ஆகவே, விலை குறைய வேண்டும். என்பதற்காக.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நான் உறுப்பினர் அவர்கள் பேசும்போது அடிக்கடி இடைமறிப்பதற்கு வருந்துகிறேன். நான் சொல்வதை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்றுதான் சொல்கிறேன். தேங்காய்க்கு வரி விதிக்கப்படவில்லை. மத்திய அரசு சில உத்தரவுகள் போடுகின்றன. "except tender

coconut என்று சொல்லப்படுகிறது. "Coconut that is used for domestic purpose as opposed to copra is still exempted from sales tax"

தேங்காய்க்கு வரி கிடையாது. மத்திய அரசு சில உத்தரவுகள் போடுகின்றன. அரசியலமைப்புச் சட்டத்தின் ஆர்டிகிள் 286 (3) க்கு மீறி ஒன்றும் சொல்லமுடியாது. டென்டர் கோகனட்ஸ் என்பதில் தேங்காய் அடங்கும். தேங்காய்க்கு வரி விதிக்கப்படவில்லை. கொப்பராவுக்கு உண்டு.

Other than those falling under sub-item (viii) of II Schedule. எல்லாவற்றையும் ஸ்டேட்மென்டில் போட முடியாது. உறுப்பினர்கள் சொல்வதற்கு நான் விளக்கம் கொடுக்கிறேன். நான் சொல்வது அம்மையார் அவர்கள் உபயோகிக்கும் தேங்காய்க்கு வரி கிடையாது. சமையலுக்கு உபயோகிக்கும் தேங்காய்க்கு வரி

கிடையாது. அம்மையார் அவர்கள் கோபமாகச் சொன்னார்கள், பெண்களின் சாபத்தை ஏற்றுக்கொள்ளவேண்டாமென்று. அது எங்களுக்கு மட்டுமல்ல. அம்மையார் அவர்கள் சொன்னது மத்திய அரசின் பொறுப்பை வகிக்கும் பிரதமருக்கும் பொருந்துமா என்று தெரியாது. இப்போது நான் சொல்வது தேங்காய்க்கு வரி கிடையாது. ஏற்கனவே போட்ட உத்தரவு, 18-3-1970ல் போட்ட உத்தரவு, தேங்காய்க்கு வரி விலக்கு உண்டு.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** பொதுவாக உணவுப் பொருள்களுக்கு வரி விலக்கு கொடுக்க வேண்டும் என்பது தான் நம் வாதம்.

மணிலாப் பயிருக்கு 1½ சதவிகிதத்தில் இருந்து 3 சதவிகிதம் ஆக உயர்த்தியிருக்கிறார்கள். இது யாரைத் தொடுகிறது? யார் மணிலாப் பயிரை எடுத்துக்கொண்டு மார்க்கெட்டிங் கமிட்டியில் விற்கிறார்களோ அவர்கள் தலையில்தான் விழப்போகிறது. விலை நிர்ணயம் செய்யும்போது மணிலாப் பயிருக்கு க்வின்டால்-க்கு இவ்வளவு விலை என்று நிர்ணயம் கிடையாது. ஸிங்கிள் பாயின்டாக மாற்றியிருப்பது விவசாயிகளுக்குப் பாதகமாக இருக்கும். மார்க்கெட்டிங் கமிட்டிக்குக் கொண்டுபோகும்போது இந்த 3 சதவிகிதம் வரியைக் கழித்துத்தான் விலை நிர்ணயிப்பார்கள். பல வியாபாரிகள் ஒன்றாகச் சேர்ந்து வாங்கும்போது வரி எவ்வளவு தூரம் இருக்கிறது என்று பார்த்து விலை நிர்ணயிக்கிறார்கள் ஆகவே, இந்த வரி விவசாயிகளைத்தான் பாதிக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல் கோதுமைக்கு இப்போது பலமுனை விற்பனை வரியிலிருந்து ஒருமுனை விற்பனை வரியாக மாற்றியிருக்கிறோம். இது எந்த அளவிற்கு விவசாயிகளைப் பாதிக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பல வியாபாரிகள், சென்னையில் இருக்கக்கூடிய அசோக் டிரேடேர்ஸ் போன்ற வியாபாரிகள், கொள்ளை லாபமடிக்க வியாபாரிகள், நடுத்தரகர்கள் இவர்களுக்குத்தான் இது பயன் அளிக்கக்கூடியதாக இருக்கும். அவர்கள் ஒரு முறை வாங்கி விட்டால் அவர்கள் மாற்றி மாற்றி விற்பதற்கு சௌகரியமாக இருக்கும்.



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஒவ்வொரு தடவையும் இடைமறிப்பதற்கு வருந்துகிறேன். முதலில் கோதுமை, கோதுமைப் பொருட்களுக்குப் பலமுனை விற்பனை வரி விதிக்கப்பட்டு வந்தது. இப்போது கோதுமைக்கு விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. கோதுமைப் பொருள்களைப் பொறுத்த மட்டில் பலமுனைவரிக்குப் பதிலாக ஒரு முனை வரி விதிக்கப் பட்டிருக்கிறது. இதனால் பொதுமக்கள் நன்மையடைவார்கள் என்றுதான் எதிர்பார்க்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** கோதுமை என்று வரும்போது அதில் தவிடும் இருக்கிறது. மைதாவும் அதில் வருகிறது. இவற்றை வாங்கி விற்கும் நடுத்தரகர்களுக்குத்தான் இது சாதகமாக அமைந்துவிடக்கூடும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். பொதுவாக இந்தச் சட்டத்தை இப்போது நிறைவேற்றுவதைவிட இதை ஒரு செலக்ட் கமிட்டிக்கு விடுவதன்மூலம் இதிலுள்ள குறைபாடுகளைத் திருத்தியமைக்கலாம் என்பதுதான் என் வேண்டுகோள். இதை நம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முதல் அமைச்சர் அவர்கள் கருத்தில்கொண்டு அவர் களாலான உதவிகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த அளவோடு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** Point of order, Sir. அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், கோதுமைக்குக் கிடையாது, கோதுமைப் பொருள்களுக்கு உண்டு என்று. இது வலது கையால் கொடுத்து விட்டு இடது கையால் எடுத்துவிடுவதைப் போலாகும். ஆட்டா

• • • •

**MR. CHAIRMAN (THIRU N. GANAPATHI) :** There is no point of order. The hon. Member can make her comments later on.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, இந்த விற்பனை வரி திருத்த மசோதாவின்மீது நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஏற்கனவே நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூறியதைப்போல் இந்த மசோதா நிச்சயமாக இப்போது தேவையற்றது; இதை அரசாங்கம் மறுபரிசீலனை செய்து வித்ட்ரா

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1973 டிசம்பர் 3

செய்துகொண்டால் நலமாக இருக்கும் என்ற என் கருத்தைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், சாதாரணமாக நம் அரசாங்கம் இரண்டு கொள்கைகளை கைக்கொண்டிருக்கிறது. நேரடியாக வரியை ஏற்றுகிறோம் என்று ஒரு மசோதா கொண்டு வராமல் பலமுனை விற்பனை வரியை ஒருமுனை விற்பனை வரியாக ஆக்குகிற நிலையில் இந்த மசோதாவைக் கொண்டு வருகிறோம், அல்லது ப்ராக்ஷனாக இருக்கிற பர்சென்டை முழுமையாக்குகிற நிலையில் இந்த மசோதாவைக் கொண்டுவருகிறோம். என்று இந்த இரண்டு முறைகளில் சாதாரணமாக மசோதாக்களை இந்த மன்றத்தில் தாக்கல் செய்வது வழக்கம். இப்போதுகூட ஏதோ பலமுனை விற்பனை வரியை ஒருமுனை விற்பனை வரியாக மாற்றுகிற வகையில் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் இந்த மசோதாவிற்குத் தேவை இருக்கிறதா என்பதை அரசாங்கம் இந்த மசோதாவை மன்றத்திற்குக் கொண்டு வருவதற்கு முன்பே ஆலோசித்திருக்கவேண்டும். ஏற்கனவே அத்தியாவசியப் பண்டங்களின் விலை ஏறிக்கொண்டே போகிறது. விலைகள் ஏறியிருப்பதால் நாட்டிலுள்ள ஏழை எளிய மக்கள் அவற்றை வாங்கமுடியாத நிலை ஒன்று. இரண்டாவதாக, வாங்குவதற்குக் கிடைக்கவும் இல்லை. ஆக, நெருக்கடி அதிகமாகியிருக்கும்போது, பொருள்களின் விலைகள் ஏறியிருக்கும்போது மேலும் விலைவாசியேற்றத்திற்குக் காரணமாக இருக்கக்கூடிய இந்த மசோதா தேவைதானா என்று அரசாங்கம் ஆலோசித்திருக்க வேண்டும்.

ஒன்று நான் சொல்கிறேன். மத்திய அரசை மாநில அரசு சாதாரணமாகக் குறை கூறிக்கொண்டேயிருக்கிறது. மாநில அரசுக்கு இருக்கிற அதிகாரங்கள் போதாது, இன்னும் அதிகப்படியான அதிகாரங்கள் வேண்டும் பல துறைகளிலும். மாநிலம் வளர்ச்சியடைவதற்கு இருக்கிற அதிகாரங்கள் போதாது. அதற்கு இந்திய அரசு தடையாக இருக்கிறது என்றெல்லாம் கூறிக்கொண்டிருக்கும்போது இப்போது பெட்ரோலுக்கு மத்திய அரசு வரி விதித்ததன் காரணமாக எவ்வளவு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்பதை நாடு உணர்ந்து கொண்டிருக்கிறது. அந்த நோக்கில் மிச்சம் மீதியை மத்திய அரசாங்கம் விட்டதிலிருந்து, சிலவினைக்கூட மாநில அரசுவிட்டு வைக்கத் தயாராகயில்லை என்று சொன்னால் இன்னும் அதிக அதிகாரங்களை நாம் பெற்றிருந்தோம்



1973 டிசம்பர் 3] [திரு. ஜே. ஜேம்ஸ்]

என்று சொன்னால் நிச்சயமாக இதுபோன்ற தீமைகளை இந்த அரசாங்கம் நாட்டுமக்களுக்குச் செய்ய வாய்ப்பாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-30)

மண்ணெண்ணெயைப் பொறுத்தவரையில் அது ஏழை எளிய மக்களால் பயன்படுத்தப்படக்கூடிய பொருள். ஏற்கனவே, மண்ணெண்ணெயை ரேஷன் அளவில் கொடுக்கக் கூடிய அளவில் பிளாக் மார்க்கெட்டில் வாங்கவேண்டிய நிலை இருந்தது. கிராமங்களில், நமது அரசு எத்தனையோ மின்சார வசதி ஏற்படுத்துகின்ற திட்டங்களை வகுத்தபோதிலும், மண்ணெண்ணெயையே நம்பியிருக்கிறார்கள். இச் சூழ்நிலையில் கிராம மக்களை பாதிக்கின்ற முறையில் மண்ணெண்ணெய்க்கு வரி விதித்திருப்பது தேவைதானா என்று அரசு ஆலோசிக்க வேண்டும். ஏழை எளிய மக்கள்பேரில் மிகுந்த அக்கறை கொண்ட அரசு என்று கூறிக்கொள்ளும் அரசு மண்ணெண்ணெய்க்கு வரி விதித்து ஏழை மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் விளக்கம் கூறும்போது தேங்காயைக் குறிப்பிட்டார்கள். தேங்காயைப் பொறுத்தவரையில், 'டெண்டர் கோகனட்டுக்கு விதிவிலக்கு அளித்திருக்கிறோம் என்றார்கள். டெண்டர் கோகனட்டை விட தேங்காயைத் தான் மக்கள் வீடுகளில் அதிகமாக பயன்படுத்துகிறார்கள். அந்தத் தேங்காயின் விலை, சாதாரண கிராமங்களில் ரூ. 1½, 1¾ என்ற அளவில் விற்கிறது. ஏழை மக்கள் தேங்காயை உபயோகப்படுத்த முடியாத நிலையில் இருக்கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு 50 பைசா விற்ற தேங்காய் இன்றைக்கு ரூ. 1.75 என்று விற்கிறது. எனவே தேங்காயைப் பார்ப்பதற்கே அரிதாக இருக்கிற சூழ்நிலையில், மேலும் தேங்காய்க்கு வரி விதித்து, அதனுடைய விலையை கூட்டச் செய்திருக்கின்ற இந்த மசோதா தேவைதானா என்று அரசாங்கம் எண்ணிப்பார்க்கவேண்டும்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1973 டிசம்பர் 3

அமைச்சர் அவர்கள், விளக்கம் கூறும்போது வியாபாரிகள் பெறுகின்ற கமிஷனிலிருந்து தான் இப்போது போட்டிருக்கின்ற வரியைக் கொடுக்கவேண்டுமே தவிர, இது நிச்சயமாக ஏழை மக்களை பாதிக்காது என்று கூறினர்கள். அதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது? நிச்சயமாக வியாபாரிகள், இந்த வரி உயர்வு என்ற காரணத்தை வைத்துக்கொண்டு இன்னும் விலையை ஏற்றுகின்ற நிலையைத் தான் நாட்டில் பார்க்கப்போகிறோம். ஆகவே, இந்த மசோதாவை நிறைவேற்றிய மறுதினம், நிச்சயம் எந்தெந்த பொருள்களுக்கு வரி போடப்பட்டிருக்கிறதோ, அந்தப் பொருள்களும் அந்தப் பொருள்களைச் சார்ந்த பல பொருள்களும் விலை உயரத்தான் போகிறது. ஆகவே, இந்த மசோதா நிச்சயமாக தேவையில்லை என்பதைக் கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த வரி திருத்த மசோதாவின் மீது ஒருசில கூற விரும்புகிறேன்.

வரி என்று சொன்னாலே மனதிற்கு சரி என்று படுவதில்லை. ஏனென்றால், நான் பார்க்கிறேன், எதிர்க் கட்சியினர் மட்டுமல்ல ஆளுங்கட்சியினர் கூட வரி என்றால் சரி என்று ஒப்புக்கொள்ளாமலிருப்பதில் ஒற்றுமையை காண்கிறார்கள். அதை நான் உண்மையிலேயே பாராட்டுகின்றேன். ஆனால் ஒரு விஷயத்தை சொல்லித்தான் ஆகவேண்டும். இந்த திருத்த மசோதா ஒருசில நல்ல அம்சங்களையும் பெற்றிருக்கின்றது. அதை ஒப்புக்கொண்டு தான் ஆகவேண்டும். நானும் ஒரு வணிகன் என்ற முறையில் அதைச் சொல்கிறேன்.

உணவுப்பொருளான கோதுமைக்கு பலமுனை வரி இல்லை. மற்ற சில பொருள்களுக்கு ஒருமுனை வரியாக மாற்றப்பட்டிருக்கிறது. இதனால் அரசாங்கத்திற்கு கூடுதல் வருமானம் வருமா என்றால் நிச்சயமாக வராது. இப்போது பல முனை வரியில் 1 சதவிகிதம் வரி. ஒருமுனை வரி மூலம் 2 சதவிகிதம் வரி என்று சொல்லும் போது, முன்பு இருந்ததைவிட சற்றுக் குறைவாகத்தான் அரசாங்கத்திற்கு வரி வரும் என்பது என்னுடைய கணக்கு.



1973 டிசம்பர் 3]

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** மாண்புமிகு உறுப்பினர் வியாபாரிகளுக்கு நல்லது என்று சொல்கிறாரா?

(குறுக்கீடு)

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** வியாபாரிகள் எல்லாம் ஒருமுனை வரி தான் வேண்டுமென்று பல கோரிக்கைகள் கொடுத்திருக்கிறார்கள். நண்பர் கிருஷ்ணமூர்த்திக்குக் கூட தெரியும். அவர்கள் கூறுகிறார்கள், ஒருமுனை வரி என்று வந்துவிட்டால், அதிகாரிகளை துச்சமென்று மதிக்கக் கூடிய சூழ்நிலை இருக்கும். யாருக்கும் அஞ்ச வேண்டிய அவசியம் இல்லை. நியாயமாக வரி செலுத்தி, ஒழுங்காக கணக்குக் காட்டலாம், என்று கூறி பல மகசர்கள் கொடுத்திருக்கிறார்கள். எனவே, பலமுனை வரி 1 சதவிகிதத்திலிருந்து ஒருமுனை வரி 2 சதவிகிதத்துக்கு மாற்றி இருப்பது கூடுதலான வரி அல்ல.

இதிலே ஒரு அம்சத்தைச் சொல்கிறேன். கோதுமைப் பொருள்களுக்கு விதிவிலக்கு கொடுத்திருக்கலாம். ஏனென்றால், அரசாங்கத்தின் கொள்கை அதுவாகத்தான் இருக்கிறது. விலைவாசி உயர்ந்துகொண்டே போகும்போது, எந்த அரசாங்கமும் செய்யாத முறையில், இந்த அரசாங்கம் தான் உணவுப் பொருள்களுக்கு வரியை ரத்து செய்கிறோம் என்று அறிவித்தது. அது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

எனவே, இந்த கோதுமைக்கு 1 சதவிகிதம் வரியையும் நீக்கியிருந்தால் அது பாராட்டுக்குரிய ஒன்றாக இருந்திருக்கும். ஆனால் நாஸிக் பிரஸ்ஸை தன் கையில் வைத்துள்ள அரசு பல நூற்றுக் கணக்கான வரிகளைப் போட்டுக்கொண்டேயிருக்கிறபோது, நாஸிக் பிரஸ் எதுமில்லாத இந்த அரசு மக்களுக்கு நல்ல வசதிகளைச் செய்து தருவதற்காக சில வரிகளில் மாறுதல் செய்திருப்பதே பெரிய காரியம் தான் என்று நினைக்கிறேன்.

அடுத்து, நிலக்கடலைக்கு 1½ சதவீதத்திலிருந்து 3 சதவீதமாக வரியை உயர்த்தி இருக்கிறார்கள். அரசாங்கம் சற்று யோசித்திருக்கலாம். ஏனென்றால், நிலக்கடலை ஒரு எண்ணெய்ப்பொருள். நிலக்கடலையை அதிகமாக எண்ணெய்க்குத்தான் பயன்படுத்துகிறார்கள். எண்ணெயின் விலை கடுமையாகக் கூடிவிட்டது. ஏழைமக்கள் வாங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எண்ணெய்ப்

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1973 டிசம்பர் 3

அமைச்சர் அவர்கள், விளக்கம் கூறும்போது வியாபாரிகள் பெறுகின்ற கமிஷனிலிருந்து தான் இப்போது போட்டிருக்கின்ற வரியைக் கொடுக்கவேண்டுமே தவிர, இது நிச்சயமாக ஏழை மக்களை பாதிக்காது என்று கூறினார்கள். அதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது? நிச்சயமாக வியாபாரிகள், இந்த வரி உயர்வு என்ற காரணத்தை வைத்துக்கொண்டு இன்னும் விலையை ஏற்றுகின்ற நிலையைத் தான் நாட்டில் பார்க்கப்போகிறோம். ஆகவே, இந்த மசோதாவை நிறைவேற்றிய மறுதினம், நிச்சயம் எந்தெந்த பொருள்களுக்கு வரி போடப்பட்டிருக்கிறதோ, அந்தப் பொருள் கூடும் அந்தப் பொருள்களைச் சார்ந்த பல பொருள்களும் விலை உயரத்தான் போகிறது. ஆகவே, இந்த மசோதா நிச்சயமாக தேவையில்லை என்பதைக் கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** மாண்புமிகு தலைவர்களே, இந்த வரி திருத்த மசோதாவின் மீது ஒருசில கூற விரும்புகிறேன்.

வரி என்று சொன்னாலே மனதிற்கு சரி என்று படுவதில்லை. ஏனென்றால், நான் பார்க்கிறேன், எதிர்க் கட்சியினர் மட்டுமல்ல ஆளுங்கட்சியினர் கூட வரி என்றால் சரி என்று ஒப்புக்கொள்ளாமலிருப்பதில் ஒற்றுமையைக் காண்கிறார்கள். அதை நான் உண்மையிலேயே பாராட்டுகின்றேன். ஆனால் ஒரு விஷயத்தை சொல்லித்தான் ஆகவேண்டும். இந்த திருத்த மசோதா ஒருசில நல்ல அம்சங்களையும் பெற்றிருக்கின்றது. அதை ஒப்புக்கொண்டு தான் ஆகவேண்டும். நானும் ஒரு வணிகன் என்ற முறையில் அதைச் சொல்கிறேன்.

உணவுப்பொருளான கோதுமைக்கு பலமுனை வரி இல்லை. மற்ற சில பொருள்களுக்கு ஒருமுனை வரியாக மாற்றப்பட்டிருக்கிறது. இதனால் அரசாங்கத்திற்கு கூடுதல் வருமானம் வருமா என்றால் நிச்சயமாக வராது. இப்போது பல முனை வரியில் 1 சதவிகிதம் வரி. ஒருமுனை வரி மூலம் 2 சதவிகிதம் வரி என்று சொல்லும் போது, முன்பு இருந்ததைவிட சற்றுக் குறைவாகத்தான் அரசாங்கத்திற்கு வரி வரும் என்பது என்னுடைய கணக்கு.



1973 டிசம்பர் 3]

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** மாண்புமிகு உறுப்பினர் வியாபாரிகளுக்கு நல்லது என்று சொல்கிறாரா?

(குறுக்கீடு)

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** வியாபாரிகள் எல்லாம் ஒருமுனை வரி தான் வேண்டுமென்று பல கோரிக்கைகள் கொடுத்திருக்கிறார்கள். நண்பர் கிருஷ்ணமூர்த்திக்குக் கூட தெரியும். அவர்கள் கூறுகிறார்கள், ஒருமுனை வரி என்று வந்துவிட்டால், அதிகாரிகளை துச்சமென்று மதிக்கக் கூடிய சூழ்நிலை இருக்கும். யாருக்கும் அஞ்ச வேண்டிய அவசியம் இல்லை. நியாயமாக வரி செலுத்தி, ஒழுங்காக கணக்குக் காட்டலாம், என்று கூறி பல மகஜர்கள் கொடுத்திருக்கிறார்கள். எனவே, பலமுனை வரி 1 சதவிகிதத்திலிருந்து ஒருமுனை வரி 2 சதவிகிதத்துக்கு மாற்றி இருப்பது கூடுதலான வரி அல்ல.

இதிலே ஒரு அம்சத்தைச் சொல்கிறேன். கோதுமைப் பொருள்களுக்கு விதிவிலக்கு கொடுத்திருக்கலாம். ஏனென்றால், அரசாங்கத்தின் கொள்கை அதுவாகத்தான் இருக்கிறது. விலைவாசி உயர்ந்துகொண்டே போகும்போது, எந்த அரசாங்கமும் செய்யாத முறையில், இந்த அரசாங்கம் தான் உணவுப் பொருள்களுக்கு வரியை ரத்து செய்கிறோம் என்று அறிவித்தது. அது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

எனவே, இந்த கோதுமைக்கு 1 சதவிகிதம் வரியையும் நீக்கியிருந்தால் அது பாராட்டுக்குரிய ஒன்றாக இருந்திருக்கும். ஆனால் நாஸிக் பிரஸ்ஸை தன் கையில் வைத்துள்ள அரசு பல நூற்றுக் கணக்கான வரிகளைப் போட்டுக்கொண்டேயிருக்கிறபோது, நாஸிக் பிரஸ் ஏதுமில்லாத இந்த அரசு மக்களுக்கு நல்ல வசதிகளைச் செய்து தருவதற்காக சில வரிகளில் மாறுதல் செய்திருப்பதே பெரிய காரியம் தான் என்று நினைக்கிறேன்.

அடுத்து, நிலக்கடலைக்கு 1½ சதவிகிதத்திலிருந்து 3 சதவிகிதமாக வரியை உயர்த்தி இருக்கிறார்கள். அரசாங்கம் சற்று யோசித்திருக்கலாம். ஏனென்றால், நிலக்கடலை ஒரு எண்ணெய்ப்பொருள். நிலக்கடலையை அதிகமாக எண்ணெய்க்குத்தான் பயன்படுத்துகிறார்கள். எண்ணெயின் விலை கடுமையாகக் கூடிவிட்டது. ஏழைமக்கள் வாங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எண்ணெய்ப்

பொருள்களுடைய விலையைப் பார்க்கும்போது, டாக்டர்கள், எண்ணெய் பொருள்களைச் சாப்பிடாதீர்கள் என்று சொல்ல வேண்டிய அவசியமே இல்லை—அந்த அளவுக்கு எண்ணெயின் விலை உயர்ந்திருக்கிறது. எனவே, நிலக்கடலைக்கு சற்று கருணை காட்டியிருக்கலாம்.

அரசாங்கம் செய்திருக்கின்ற சில காரியங்களை பாராட்டத்தான் வேண்டும். சிறு வியாபாரிகளுக்குக் கொடுக்கக் கூடிய சலுகையை பாராட்டத்தான் வேண்டும். இது திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் கவனத்திலிருந்து எப்படி தப்பி விட்டது என்பது ஆச்சரியமாகத் தான் இருக்கிறது. அரசின் சலுகைகளைப் பாராட்டினால் தான் அரசுக்குத் தெம்பாக இருக்கும். அரசுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு பேசவில்லை. எந்த நன்மையையும் பாராட்டவேண்டுமென்ற கொள்கையை உடையவன் நான். அதனால் தான் சொல்கிறேன்.

கிரோசின் வரியை 5½ சதவிகிதத்திலிருந்து 8½ சதவிகிதமாக கூட்டுவதால் மக்களை அது பாதிக்காது என்று சொன்னார்கள். அது ஏஜண்டுகளைத் தான் பாதிக்கும் என்றும் சொன்னார்கள். வியாபாரிகளும் மக்கள் தான். வியாபாரிகள் என்றால் ஏன் மாற்றாந்தாய் மனப்பான்மை ஏற்படவேண்டுமென்று தெரியவில்லை. திரு. கிருஷ்ணமூர்த்தி கோபமாகச் சொன்னார், "இடைத் தரகர்கள், பித்தலாட்டக்காரர்கள்" என்றெல்லாம் அடுக்கு மொழிகளில். நான் ஒன்றைக் கூறுவேன். இந்த நாட்டிலுள்ள அரசியல்வாதிகளைவிட வியாபாரிகள் யோக்கியமானவர்கள்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)** : நான் சிறு வியாபாரிகளை பித்தலாட்டக்காரர்கள் என்று சொல்லவில்லை. இந்த நாட்டிலுள்ள பெரும் டிரேடிங் கம்பெனி வைத்துக்கொண்டு வாங்கி விற்கும்போது கொள்ளை லாபம் பெற்று வாழ்ந்து கொண்டிருப்பவர்களைத்தான் சொன்னேன். பித்தலாட்டக்காரர்கள் என்று சொல்லவில்லை.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்** : 'கொள்ளை லாபம்' என்பதும் சரிகாரமான வார்த்தை அல்ல. ஆக, இந்த ஏஜண்டு களுக்கு 2 அல்லது 3 சதவிகிதம் கூட்டுவது கூட பாதகமாகத்தான்



இருக்கும். வியாபாரிகளுக்குப் போதிய அளவில் லாபம் இல்லாத போது அவர்கள் திருட்டுத்தனம் செய்கிறார்கள். ஒருவனுக்கு ரூ. 50 சம்பளம் கொடுக்கிறோம். அவனுடைய செலவு ரூ. 200 என்றால், அவன் என்ன செய்வான்? கையை நீட்டுகின்றான் வேறு வழியில்லாமல். அவனுக்கு ரூ. 200 சம்பளம் கொடுத்தால், நாணயமாக, ஒழுங்காக நேர்மையாக இருப்பான். அதேபோலத்தான் வியாபாரிகளும். வியாபாரிகளும் மனிதர்கள்தான். அவர்களுக்கும் குடும்பம், வாழ்க்கை என்று இருக்கிறது. பிள்ளை குட்டிகள் இருக்கின்றன. படிக்கக் கூடிய பிள்ளைகள் இருக்கிறார்கள். எனவே, வியாபாரிகளுக்கும் நன்மை செய்வது என்பதை இந்த அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு பெட்ரோல் மீது வரி போட்டதைச் சொன்னார்கள். இதை வேண்டுமானால் பகற்கொள்ளை என்று சொல்லலாம். நாட்டு மக்களுக்கு நன்மையைச் செய்கிறோம் என்று கூறக்கூடிய ஒரு அரசு, பெட்ரோல் விற்பனையைக் குறைப்பதற்காக விலையை உயர்த்தினோம் என்று கூறினார்கள். அரபு நாடுகள் சப்ளையைக் குறைத்துவிட்டது என்று சொன்னார்கள். அரபு நாடுகள், நாங்கள் சப்ளையைக் குறைக்கவில்லை. இந்தியா சிநேகித நாடு, ஆகவே, குறைக்கவில்லை என்று சொன்னவுடனே, மத்திய அரசு, நாங்கள் அதற்காக வரி போடவில்லை. பொதுவாக மக்கள் தேவையைக் குறைத்துக்கொள்வதற்காக என்று மாற்றிப்பேசுவது அந்த அரசுக்கு வேண்டுமானால் பொருத்தமாக இருக்கலாம். ஆனால் அவர்களைப் பின்பற்றி, நமது மாநில அரசு—ஏழை எளியவர்களுடைய அரசு—அதைச் செய்ய வேண்டுமா என்பதை யோசிக்க வேண்டும். இந்த பில் பாஸ் ஆவதற்குள் நமது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இதில் மாற்றத்தை அறிவித்தால் கூட நான் ஆச்சரியப்படமாட்டேன்.

தேங்காயைப் பற்றிப் பேசினார்கள். அம்மையாரைப் பார்த்து, "கவலை வேண்டாம், தேங்காய் மீது வரி விதிக்கவில்லை" என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதை நான் வரவேற்கிறேன். இதிலே ஒரு சிறிய ஏமாற்றம் கூட இருக்கிறது. கொப்பரை மீது வரி இருக்கிறது. கொப்பரைதான் எண்ணெய். எண்ணெய் தான் அம்மையார் அதிகம் உபயோகிக்கக்கூடிய பொருள். கொப்பரை மீது வரி இருக்கிறது என்று சொன்னார்கள். கொப்

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1973 டிசம்பர் 3

பரையிலிருந்துதான் எண்ணெய் அதிகமாகக் கிடைக்கிறது. எண்ணெய்தான் அம்மையார் அதிகமாக உபயோகிக்கக்கூடிய பொருள். தேங்காய் எண்ணெய் இல்லாத எந்தத் தாளிப்பும் கிடையாது, குழம்பும் ஆக்க முடியாது. கொப்பரை மீது வரி விதித்துவிட்டு, தேங்காய் மீது வரியில்லை என்று சொன்னால் போதாது. கொப்பரைக்கு உள்ள வரியை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பொதுவாக இந்த வரி விதிப்புத் திருத்த மசோதாவிலே பல நல்ல அம்சங்கள், பாராட்டுதலுக்குரிய அம்சங்கள் இருக்கின்றன என்று சொல்லி, இதை வரவேற்று அமர்கிறேன்.

THIRU B. VENKATASWAMY : Sir, at the outset, I oppose this General Sales Tax (Second Amendment) Bill. The people are allergic whenever Government comes forward to tax any product. Already the people of Tamil Nadu are not in a position to carry the burden of taxes levied so far. For anything and everything we are taxing our people. As some of our Friends said here, there is some meaning if the Government taxed luxury articles. I agree that Government cannot be run without money and Government should have money to meet their commitments.

There is meaning in levying tax on luxury goods and not on products like Kerosene, Wheat products and Coconut. Really kerosene is not available in the market today. But our Hon. Minister for Co-operation said that it was available in co-operative societies. Co-operative societies do not take kersosene all for sale. In Dharmapuri district, the Collector says that. Actually I know no society takes kerosene to sell it to the people at fair price. At the same time, it is available outside at blackmarket price. This poor man's product is sold at high prices.

Regarding wheat, I understand that a Wheat Corporation is to be formed. Actually no wheat is supplied to the consumers in the village or cities. I understand it is given to hoteliers and other selected consumers, but not to the general public. Mida, etc., are sold at Rs. 230 or 240 instead of Rs. 120 even in fair price shops. It is available in blackmarket. People are suffering and we are levying tax, increasing it from 1 per cent to 3 per cent. I request this Government to see that this Bill is left to the Select Committee.



1973 டிசம்பர் 3] [Thiru B. Venkataswamy]

While Government should find the money to fulfil its commitments, tax should be levied only on luxury goods, not on essential commodities like kerosene, wheat, coconut, etc. Hon Member, Mr. Krishnamoorthy mentioned certain things. I am very happy that though he belongs to the Ruling party, he mentioned, he said so. Normally, ruling party members will say ' yes '. Instead, he expressed the real feelings of the people. I appreciate that. I hope the Government will take that into serious consideration and leave this Bill to a Select Committee to examine all aspects and come to correct conclusions. Thank you.

*மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:* மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல மண்ணெண்ணெய் விநியோகத்தை கூட்டுறவு சங்கங்கள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற அடிப்படையில் தர்மபுரி பகுதியில் ஒரு சொஸைடி தனியாரிடமிருந்து எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். விரைவிலே இதைச் செயலாக்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

மற்றபடி, கோதுமை பற்றி சொன்னார்கள். கோதுமை எல்லோருக்கும் கொடுக்கிற அளவிலே கிடைக்கவில்லை. 35,000 டன் நமக்குத் தேவைப்படுகிறது. இந்த மாதம் 9,000 டன் தான் வந்திருக்கிறது. எல்லோருக்கும் கொடுக்க முடியவில்லை. எல்லோருக்கும் கொடுக்கக்கூடிய அளவுக்கு மத்திய சர்க்கார் கொடுக்கவில்லை. அவர்கள் ஏதோ வெளி மார்க்கெட்டில் திருட்டுத்தனமாக கிடைக்கிறது என்று சொல்கிறார்கள். மாகாணத்தில் எல்லையோர பகுதிகளில் எல்லாம் இப்படித்தான் நடக்கிறது.

பெர்டிலைஸர் கூட இரண்டு லாரிகள் பிடிக்கப்பட்டிருக்கின்றன. உறுப்பினர்கூட அதைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எல்லையோரப் பகுதிகளில் இருப்பவர்கள் எதை வேண்டுமானாலும் எடுத்து அடுத்த மாநிலத்துக்கு, பார்டர் பகுதியில் விற்கவேண்டும் என்று, பட்டினி கிடந்தாவது எப்படியாவது இந்த நிகழ்ச்சி நடந்துகொண்டிருக்கிறது. பெர்டிலைஸர் கொண்டுவந்த லாரிகள் பிடிக்கப்பட்டு, அதற்கான பரிசீலனை நடந்துகொண்டிருக்கிறது. கூடியவரையில் எந்த அளவுக்குச் செய்யமுடியுமோ, அந்த அளவுக்குச் செய்துகொண்டிருக்கிறோம். நமக்குக் கிடைக்காத பொருள்கள்

தான் எல்லோருக்கும் கொடுக்க முடியவில்லை. கிடைக்கக்கூடிய மற்ற பொருள்களை கூடியவரையில் நல்ல முறையில் தான் கொடுத்துக்கொண்டு வருகிறோம்.

**திரு. கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன் :** இந்த விற்பனை வரி திருத்த மசோதாவில் வரவேற்கக்கூடிய பல அம்சங்கள், வியாபாரிகள் பாராட்டக்கூடிய பல அம்சங்கள் அமைந்திருக்கின்றன. பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சமயம் ராஜாஜி அவர்கள் மதுரைக்கு வந்தபொழுது அங்குள்ள வியாபாரிகளெல்லாம் விற்பனை வரியை ஒருமுனை வரியாக மாற்றவேண்டும் என்று மகஜர் கொடுத்து, வற்புறுத்திச் சொன்னார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஒரு முனை வரியாக மாற்ற முடியாது, வேறு ஒரு மந்திரி வந்தால் வேண்டுமென்றால் மாற்றிக்கொள்ளட்டும் என்று கடுமையாக ஒரு முனை வரிக்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள், அரசாங்கத்தின் சார்பிலே. ஆனால், இன்றைக்கு நம்முடைய அரசு வியாபாரிகளுடைய தொல்லைகளையும், அவர்களுடைய கஷ்டங்களையும் உணர்ந்து, எப்படியாவது அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்பதற்காக இந்த மசோதாவைக் கொண்டு வந்திருப்பது பாராட்டுதலுக்குரியது.

இதை விவாதிக்கக்கூடிய காலத்தில் உறுப்பினர் கிருஷ்ண மூர்த்தி அவர்கள் கூறியதுபோல் பலமுனை வரியை ஒருமுனை வரியாக மாற்றும்பொழுது நமது அரசுக்கு வருமானம் அதிகமாகுமோ அல்லது குறையுமோ என்பது எனக்கு நிச்சயம் தெரியவில்லை. கள்ளுக்கடைகள் மூடப்பட்டதன் காரணமாக ஏராளமாக நிதி இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த வருமானத்தை ஈடுசெய்யவேண்டிய நிலைமையில் நாம் இருக்கிறோம். பலமுனை வரியை ஒருமுனை வரியாக மாற்றினால் வருமான இழப்பு ஏற்படுகிறது என்பதையும் நாம் மனதில் கொள்ளவேண்டியிருக்கிறது. விலைவாசி அதிகமாக ஏறிக்கொண்டே போகிறது. அதனால் மக்கள் கஷ்டப்படுகிறார்கள்.





விலைவாசி அதிகரிப்பிற்கு யார் காரணம், மத்திய அரசா, மாநில அரசா என்ற ஒரு பிரச்னை எழுப்பப்பட்டு, மாநில அரசு காரணம் இல்லை, விலைவாசியை கூடியமட்டும் குறைப்பதற்கு வேண்டிய முயற்சியை நாம் எடுப்போம் என்ற கருத்தில் உணவுப் பொருள்களின் மீதுள்ள வரியைக் குறைத்து, ஜனங்களின் நல்லெண்ணத்தை நாம் பெற்றிருக்கிறோம்.

இந்த நேரத்தில் ஏழைகள் உபயோகிக்கக்கூடிய மண்ணெண்ணெய் மீது வரியை உயர்த்தினால் அது சரியாக இருக்காது. மந்திரி அவர்கள் சமாதானம் கூறினார்கள். வரி உயர்வினால் மண்ணெண்ணெயை ஏழைகள் அதிகமான விலைக்கு வாங்கத் தேவையில்லை, வியாபாரிகள் அடையக்கூடிய லாபமும் அதில் அடங்கும் என்றார். இருந்தாலும், ஜப்பார் அவர்கள் கூறியபடி, வியாபாரிகள் எல்லோரும் நாணயமுள்ளவர்கள் என்று நம்ப முடியாது. வரியை அதிகமாக உயர்த்திவிட்டால், அதிக விலைக்கு விற்பார்கள். இதை ஒரு சாக்காக வைத்து விலையை உயர்த்தக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும். பிறகு இதைக் கண்காணித்து தடை செய்யவேண்டிய நிலைமை ஏற்படும். கெரஸின் எண்ணெய் நிச்சயம் ஏழைகள் உபயோகிக்கக்கூடிய பொருள் என்பது நமக்குத் தெரியும். வியாபாரிகள் அதிகமாக லாபம் சம்பாதிக்காமல் இருப்பதற்கு நாம் விலையைக் குறைக்கலாம். அதற்காக வரியை ஏற்றுவது, உண்மையாக மக்களுக்கு நல்லது செய்வது ஆகாது. ஏழை, எளிய மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய விதத்திலேதான் அரசாங்கத்தின் கொள்கை அமைந்திருப்பதால், மந்திரி அவர்கள் எல்லோரையும் கலந்து ஆலோசனை செய்து, நல்ல முறையில் இது பற்றிய கருத்துக்களையெல்லாம் விவாதித்து, அந்த ரீதியில் விளக்கம் தருவதற்கு வாய்ப்பு ஏற்படும் நிலையில் இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பிவைத்தால், நாம் நல்ல முறையில் இதைப் பரிசீலனை செய்து கொண்டுவர இயலும். ஆகவே, இதுபற்றி அமைச்சர் அவர்கள் ஆலோசிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அமர்கிறேன்.

* **திரு. மணலி சி. கந்தசாமி :** இந்த விற்பனை வரி திருத்த மசோதாவை நான் ஆதரிப்பதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மசோதாவையும் அமைச்சரவர்கள் ரொம்ப சாமார்த்திய மாக சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். அசெம்பிளி முடியக்கூடிய தருவாயில், சூடு தணிந்திருக்கிற நேரம் பார்த்து நைசாக கொண்டுவந்திருக்கிறார்கள். 4 நாட்களுக்கு முன்னால் கொண்டுவந்திருந்தால் சூடாகவும், கடுப்பாகவும் இருந்திருக்கும்.

இந்த வரி உயர்வினால் பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள், பெண்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று நம்முடைய அம்மையார் அவர்கள் சொன்னார்கள். இதனால் பெண்கள் ஒன்றும் கஷ்டப்படப் போவதில்லை. கஷ்டப்படுபவர்கள் எல்லாம் ஆண்கள்தான். என் அனுபவம் அதுதான். என் வீட்டிலே நேற்று ஒரு ரூபாய் கேட்ட வர்கள் இன்று 2 ரூபாய் கொடு என்று கேட்கிறார்கள். சம்பாதிக்கிற பெண்கள் பற்றிய பிரச்சினை வேறு. சாதாரணமாக ஆண்கள் கொடுக்கிற பணத்தை வைத்து, சும்மா சாப்பிட்டுவிட்டு இருப்ப வர்கள்தான் பெண்கள்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர். பெண்களுக்கு ஆண்கள் சம்பாதித்துக் கொடுத்தால்தான் சாப்பாடு போட முடியும். சமைத்துப் போடுவதும் ஒரு வேலை தான். சமைத்துப்போடுகிற வரைக்கும் அவர்களுக்கு நன்றி யுடையவர்களாக இருக்க வேண்டும்.

**திரு. மணலி சி. கந்தசாமி:** நான் அதற்கு தினமும் நன்றி கூறிக்கொண்டுதான் இருக்கிறேன் (சிரிப்பு). பெண்கள் கண்ணீர் விடுகிறார்கள், பெண்கள் கண்ணீர் விடுகிறார்கள் என்று அம்மையார் அவர்கள் சொன்னதற்காக நான் சொல்கிறேன். கண்ணீர் விடுபவர்கள் அவர்கள் அல்ல: நாங்கள்தான். சம்பாதித்துப் போடுவதை வைத்து செலவு செய்கிறார்கள். போதவில்லை என்றால் கொடு, கொடு என்று உயிரை வாங்குகிறார்கள்.

இந்த விலை ஏற்றத்திற்குக் காரணம் அரசியல் வாதிகள், வியாபாரிகள் என்று இருவரையும் ஒப்பிடுவது சரியல்ல. ஏதோ நம்முடைய ஐப்பாரைப் போன்று ஒருசிலர் அரசியல்வாதியாகவும் வியாபாரியாகவும் இருக்கிறார்கள். நான் சொல்வது, இப் போதைக்கு இந்த மசோதா ஏன் வரவேண்டும் என்பதுதான்.



ஒரு சிறிய பிரச்சினைக்காக ஏன் வீண் குழப்பத்திற்கு இடமளிக்க வேண்டும்? இந்த வரியைப் போடவேண்டிய நெருக்கடி என்ன? இதை செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டுமென்று சொன்னார்கள். அது தேவையில்லை. இங்கேயே முடிவு செய்துவிடலாம்; வேண்டுமா வேண்டாமா என்று. வரி போடாமல் அரசாங்கத்தை நடத்த முடியாது என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இப் போதைக்கு இந்த மசோதா தேவையில்லை. பட்ஜெட்டில் ஏதாவது துண்டு விழுகிறது. அல்லது நெருக்கடி இருக்கிறது என்றால் வரி போடலாம். இப்போது போடுவது சரியல்ல. ஆகவே, இந்த மசோதாவை நான் ஆதரிக்க விரும்பவில்லை என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவரவர்களே, இந்த மசோதாவின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன். இந்த மசோதாவை கொஞ்சம் தாமதித்து கொண்டு வந்திருக்கலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம். இதைத்தீர ஆராய்ந்து, ஒருமுறை வரி போடுவதற்கு முன், 'ஐட்டம்ஸ் ஆஃப் கமாடிட்டிஸ்'-ஐ வகைப்படுத்தி, பார்த்து போட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று கூற விரும்புகிறேன்.

இந்த மசோதாவில் மண்ணெண்ணெய்க்கு வரி விதித்திருப்ப தைப்பற்றி எல்லோரும் கூறினார்கள். அதையே நானும் வலி யுறுத்த விரும்புகிறேன். இந்த வரி உயர்வுக்குப் பதிலாக வரியே போடாமல் இருந்தால் கூட பரவாயில்லை. இந்த அரசாங்கத் தினுடைய அபிப்பிராயம், அமைச்சருடைய அபிப்பிராயம் எப்படி இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. இதை எடுக்க வேண்டு மென்பது என்னுடைய முதல் கோரிக்கை. அது முடியாவிட்டால் விலையைக் குறைத்து எல்லோருக்கும் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும், என்பது இரண்டாவது கோரிக்கை.

தேங்காயைப்பற்றி ஒன்று கூற விரும்புகிறேன். இந்த மசோதாவில் கொடுத்திருக்கிற விபரம் சற்று தவறுதலாக இருக் கிறது என்று கருதுகிறேன். Copra : Coconut, namely, copra exclud-ing tender coconuts என்று இருக்கிறது. அதை Copra excluding coconuts and tender coconuts.

[திருமதி ஜோதி வெங்கடாசலம்] [1973 டிசம்பர் 3

என்று மாற்ற வேண்டும். டெண்டர் கோக்கனட் என்றால் இளநீரைத்தான் குறிக்கும். அதனால் கோக்கனட்டையும் சேர்த்துவிட்டால் நல்லது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

அடுத்து, சன் ஃப்ளவ்வரில் இருந்து எடுக்கப்படுவது 'சஃ போலா' ஆயில் என்று கேள்வி நேரத்தின்போது மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படி சொல்லும்போது, இதில் சன் ஃப்ளவ்வர், சஃப் ஃப்ளவ்வர் என்று இரண்டு கிறது. இது இரண்டும் ஒன்றுதான் என்றால் **ஏதாவது ஒன்றை** எடுத்தாகவேண்டும்.

இந்த விற்பனை வரி கொண்டுவருவதன் மூலம் எல்லாப் பொருட்களுமே விலை ஏறிவிடும். கடலை எண்ணெய், நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் எல்லாம் விலை ஏறிவிடும். இந்த விலையேற்றத்தினால் சமயலுக்கு எண்ணெய் கிடைப்பது கஷ்டம் என்று சொன்னார்கள். தலைக்கு எண்ணெய் போடுவது கூட கஷ்டமாக இருக்கும் என்று நான் கூற விரும்புகிறேன். இந்த கடலை எண்ணெய்க்குப் போட்ட வரியையாவது சற்று ஆலோசித்து அரசாங்கம் போட்டிருக்க வேண்டும்.

அடுத்து, 'வீட் ஆண்டு வீட் பிராடக்ட்ஸ்'-க்கு வரிபோட்டால் பரவாயில்லை. 'வீட் பிரானுக்கு' கூட வரி போட்டிருக்கிறார்கள். அது வாய் இல்லாத ஜீவனுக்குப் போடக் கூடிய தீவனம். ஆகவே, அதற்காவது வரிவிலக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்ல வேண்டு மானால், இப்போதைக்கு இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்க வேண்டியதில்லை. பட்ஜெட் செஷன் விரைவில் வரவிருக்கிறது. அப்போது கொண்டுவந்திருக்கலாம். இப்போது இந்த மசோதாவைக் கொண்டு வந்த பிறகு நாங்கள் சொல்வதை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும்; எங்களுடைய ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள் கிறேன்.



1973 டிசம்பர் 3]

(பிற்பகல் 1-00)

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, இந்தப் பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவுபற்றிய விவாதத்தின்போது மாண்புமிகு உறுப்பினர்கள் இதுபோல துண்டு துண்டாக மசோதாக்கள் கொண்டு வருவதைவிட காம்ப்ரிஹென்சிவ் லெஜிஸ்லேஷன் கொண்டுவரலாம் என்று சொன்னார்கள். ஏற்கனவே இந்த மன்றத்தில் சொல்லியிருப்பதைப்போல அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட சீரமைப்புக் குழு—ஒன் மான் கமிஷன்—மாநிலம் முழுவதும் சென்று, பொது மக்கள், வியாபாரிகள் ஆகிய எல்லோரையும் சந்தித்து கருத்துக்களைத் திரட்டியிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களில் இருக்கிற நிலைமைகளையும் ஆராய்ந்து இன்றைக்கு அறிக்கை தருகிற நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். அந்த அறிக்கை அரசாங்கத்திற்குக் கிடைத்தவுடன் இந்த விற்பனை வரியை எந்த அளவுக்குச் சீரமைப்பது என்ற அடிப்படையில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோதுமைப் பொருளுக்கு பலமுனை விற்பனை வரி 1 சதவீதம் விதிக்கப்படுகிறது. இந்தத் திருத்த மசோதாவின் மூலம் 2 சதவீதம் ஒருமுனை விற்பனை வரி விதிக்க வகை செய்திருக்கிறோம். பலமுனை வரி என்கிறபோது மூன்று கட்டத்தில் 3 சதவீதம் வரிவிதிப்புக்கு அவை உள்ளாயிற்று. இப்போது ஒருமுனையாக ஆக்கப்பட்டிருப்பதன் மூலம் 2 சதவீதம் தான் வரி விதிப்பு. அதேபோல வேர்க்கடலைக்கு 1½ சதவீதத்துக்குப் பதிலாக 3 சதவீதம் வரி விதிக்க திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இங்கே விவாதத்தின்போது தேங்காய்க்கு விற்பனை வரி விதிக்கப்படுவதுபற்றிய சர்ச்சையைக் கிளப்பினார்கள். இந்திய அரசியல் சட்டப் பிரிவு 286 (3) இன்படி

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1973 டிசம்பர் 3

(3) Any law of a State shall, in so far as it imposes or authorises the imposition of, a tax on the sale or purchase of goods declared by Parliament by law to be of special importance in inter-State trade or commerce, be subject to such restrictions and conditions in regard to the system of levy, rates and other incidents of the tax as Parliament may by law specify.
அந்த விதத்தில் வரி விதிக்கப்பட வேண்டுமென்ற உத்தரவுக்கிணங்க நாமும் நம்முடைய சட்டத்தில் மாற்றங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. நம்முடைய சட்டத்தில்

Coconut, that is, copra excluding tender coconut at the point of first purchase or sale.
என்பதாக நான் சொல்லியுள்ளபடி, ஏற்கனவே 1970-ம் ஆண்டில் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையிலே தேங்காய்க்கு வரிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வரிவிலக்கு இன்றும் தொடரும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். Exemption on coconuts still continued on the basis of the notification issued on 18th March 1970.

அடுத்து, அப்பலேட் ட்ரிப்யூனலை எடுத்துக்கொண்டால் ஒரு அப்பலேட் அசிஸ்டெண்டு கமிஷனர் ஒரு வழக்கை இன்னொருவருக்கு மாற்ற வேண்டுமானால் இப்போதுள்ள முறைப்படி **வாரியம**தான் செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. அப்படி **இல்லா**மல் அவர்களே அந்த வழக்குகளை மாற்றி உத்தரவிட இப்போது திருத்தம் வகை செய்கிறது.

மண்ணெண்ணெய் வரியைப்பற்றி இங்கே விவாதம் செய்தார்கள். இந்த வரியின் மூலம் மக்களுக்கு சிரமம் இருக்காது, விலை ஏறாது என்பதை நான் தெளிவாக எடுத்துச் சொன்னேன். மண்ணெண்ணெய் விலையை லிட்டருக்கு 85 பைசா என்று நிர்ணயித்து விட்டோம். இந்த 85 பைசா மீது 8½ சதவீதம் வரி விதிப்பதன் மூலம்—வியாபாரிகள் இதைக் கொடுக்கிற காரணத்தினால் அவர்களுடைய லாபம் குறைகிறதே தவிர, பொதுமக்களுக்கு இதன் விலை ஏறாது என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மண்ணெண்ணெய்க்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள விலை லிட்டருக்கு 85 பைசா. அந்த 85 பைசாவுக்குள் தான் இந்த வரி அடங்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



1973 டிசம்பர் 3] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

நம்முடைய உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் கோதுமையைப் பற்றிப் பேசும்போது மத்திய சர்க்காரில் இருந்து அதிகமாக கோதுமை, கோதுமைப்பொருள் பெற முயற்சி எடுக்கப்பட்டதா என்றார்கள். கோதுமை, கோதுமைப்பொருள் அதிகமாக வந்தால் நமக்கு அதிகமாக விற்பனைவரியின் மூலம் பணம் வரும். அத்தகைய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. கோதுமைப்பொருள் அதிகமாக வரவேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தின் நிலை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்படும். இந்த திருத்த மசோதா முக்கியமானது, இதை எல்லோரும் ஏற்று நிறைவேற்றித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி .—

தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 40/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்தச் சட்ட முன்வடிவை சட்டமாக நிறைவேற்றவேண்டுமென்று கோருகிறேன்.

[1973 டிசம்பர் 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :—

"தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 40/73) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு சட்டமுன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**(இ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 39/73)**

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு சம்பளங்கள் கொடுத்தல் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1973) பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்"

என்று முன் மொழிகிறேன்.

தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சம்பளங்கள் கொடுத்தல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 7-வது பிரிவின்படி, அமைச்சர்கள், சட்டமன்றப் பேரவைத் தலைவர், துணைத் தலைவர், சட்டமன்ற மேலவைத் தலைவர், துணைத் தலைவர், சட்டமன்றப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர், சட்டமன்ற மேலவையின் எதிர்கட்சித் தலைவர், சட்டமன்றப் பேரவையின் அரசுத் தலைமைப்பாகர் (Government chief whip) சட்டமன்ற மேலவையின் அரசுப் பாகர் முதலியோர்க்கு அளிக்கப்பட்டுள்ள மோட்டார் வண்டிகளைப் பேணிவரல்—பழுதுபார்த்தல் முதலிய பணி, அரசாங்க விதிகளால் முறைப்படுத்தப்பட்டுள்ளது. இம்மோட்டார்

* 30—11—1973 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1973 டிசம்பர் 3] [திரு. செ. மாதவன்]

வண்டிகளுக்குப் பெட்ரோல் வழங்குவதும் மாநில அரசினால் செய்யப்பட்ட விதிகளால் முறைப்படுத்தப்படலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக, அமைச்சர்கள், சட்டமன்றப் பேரவைத் தலைவர், துணைத் தலைவர், சட்டமன்ற மேலவைத் தலைவர், துணைத் தலைவர், சட்டமன்றப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர், சட்டமன்ற மேலவையின் எதிர்க்கட்சித் தலைவர், சட்டமன்றப் பேரவையைச் சேர்ந்த அரசுத் தலைமைப் பாகர், சட்டமன்ற மேலவையைச் சேர்ந்த அரசுப் பாகர் ஆகியோருக்கு மோட்டார் வண்டிப்படி அனுமதிக்கப்படமாட்டாது. எனவே அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டுவந்த மோட்டார் வண்டிப்படி தொடர்பான குறிப்புகளை இச்சட்டத்தில் நீக்கிவிடக் கருதப்பட்டுள்ளது.

இப்பிரேரணையை இம்மாமன்றம் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் நோக்கத்தை நான் ஆதரிக்கிறேன். இன்றைக்கு விலைவாசிகள் மிகப் பயங்கரமாக ஏறிக்கொண்டிருக்கிற நிலைமையில் குறிப்பாக பெட்ரோல் விலை வானத்தை நோக்கி பறந்துகொண்டிருக்கிற நிலையில், பணத்தைப் பெறுவதைவிட பெட்ரோலைப் பெறுவதே இன்றைய நிலைமையில் ஏற்றது என உத்தேசித்து இந்தத் திருத்தச் சட்டத்தை இங்கே கொண்டுவந்திருக்கிறார்கள். அதை நான் ஆதரிக்கிறேன். இன்றைக்கு அமைச்சர்களுக்கும், மற்றவர்களுக்கும் அளிக்கப்படுகிற ரூ. 250 பயணப்படியைக் கொண்டு தங்கள் செலவுகளைச் சமாளிக்க முடியாத நிலைக்கு அவர்களே இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால் நாட்டிலே இருக்கிற பலவகைப்பட்ட மக்கள் எந்த வகையில் இன்றையதினம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு நமக்கு இதுவே எடுத்துக்காட்டாக இருக்கிறது. சமுதாயத்திலே இன்றைக்கு சாதாரண பிச்சைக்காரர்களாக இருக்கக் கூடியவர்கள், பிச்சை எடுத்து பிழைத்துக்கொள்கிறார்கள். பெரும் பணக்காரர்களாக இருக்கக் கூடியவர்கள் அவர்கள் எந்த ஏற்றம்

[திரு. எம். ஏ. லத்தீப்] [1973 டிசம்பர் 3

ஏற்பட்டாலும் சமாளித்துக்கொள்ளக்கூடிய நிலைமையிலே இருக்கிறார்கள். ஆனால், நடுத்தர மக்கள் படுகின்ற கஷ்டம் இன்றைக்கு சொல்ல முடியாத அளவுக்குக் கொடுமையை ஏற்படுத்திக் கொண்டு இருக்கிறது.

அமைச்சர்களுக்கு ஒரு சலுகையாகக் கொண்டு வந்திருப்பதை வரவேற்கின்ற அதே நேரத்திலே, சட்ட மன்ற உறுப்பினர்களைப் பற்றி, நான் எண்ணிப்பார்க்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இன்றைக்கு மற்றவர்களெல்லாம், சாதாரண வியாபாரிகளெல்லாம் வியாபாரத்திலே லாபத்தைப் பெற்றுவிடலாம். இன்னும் மற்றவர்கள் எல்லாம், எந்த எந்த வகையிலோ சம்பாதித்துக்கொள்கிறார்கள் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏதோ ஒரு காலத்திலே, ரூ. 250-ஆக நிர்ணயிக்கப்பட்டதால் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓராண்டிற்கு முன்பு கருணை கூர்ந்து ரூ. 100 உயர்த்தித் தந்திருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு ரூபாயினுடைய மதிப்பு என்னவாக இருக்கிறது என்று மத்தியிலே இருக்கிற நிபுணர்கள், 36 சதவிதம் தான் இன்றைக்கு ரூபாயினுடைய மதிப்பு என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இதை நாம் அன்றாடம் பார்க்கின்றோம்.

சென்ற ஆண்டு, தலைவர் அவர்களே, இதோ, நான் உடுத்திக் கொண்டிருக்கிற, சங்கு மார்க் லுங்கி, ரூ. 9.10. ஆனால், இன்றைக்கு ரம்சான் மாதத்திலே ஒரு லுங்கி எடுக்கலாம் என்று கேட்டால் ரூ. 19.80 என்று சொல்கிறார்கள். 100-க்கு 110 என்ற அளவுக்கு இன்றைக்கு விலைவாசி ஏறி இருக்கிறது. இந்த நிலைமையிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரூ. 350 போதும் என்று எந்த அடிப்படையிலே கணக்கிடப்படுகிறது என்று என்னால் தெரிந்துகொள்ள முடியவில்லை.

சாதாரணமாக சட்டமன்ற உறுப்பினர்கள் நினைக்கிறார்கள், நாமே நம்மைப் பற்றி பேசிக்கொள்வதா, அப்படிப் பேசுவது முறையா, என்று. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் இன்றைக்கு அந்த உணர்ச்சிகளைக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், பூனைக்கு யார் மணிகட்டுவது. என்பதுதான். யார் வெளிப்படையாகப் பேசுவது என்பதுதான் பிரச்னையாக இருக்கிறது.



1973 டிசம்பர் 3] [திரு. எம். ஏ. லத்தீப்]

ஆகையினாலே நான் இந்த மன்ற உறுப்பினர்களுடைய எண்ணத்தை வெளிப்படுத்தும் வகையிலே இந்தக் கருத்தை சொல்கிறேன். அருள் கூர்ந்து இன்றைய நிலைமைகளிலே சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி எண்ணிப் பாருங்கள்.

சட்டமன்ற உறுப்பினர்கள் என்றால், அந்தக் காலத்திலே ஏதோ லெஜிஸ்லேடிவ் ஒர்க்தான் இருக்கும். உறுப்பினர்கள் இங்கு வந்து உட்கார்ந்து, சட்டமன்றத்திலே கொண்டு வருகின்ற சட்டங்களைப் பற்றி தமது ஆலோசனைகளையும், இங்கே வருகின்ற தீர்மானங்களின்மீது தமது கருத்துக்களையும் சொல்வதோடு நின்றுவிட்ட காலம் ஒன்று இருந்தது. ஆனால், இன்றைக்கு காலையிலே 6 மணியிலிருந்து இரவு என்று சொல்லக் கூடிய 12 மணி வரை மட்டும் அல்ல, மறு நாள் தொடங்குகிற 1 மணி, 2 மணி வரையிலேகூட, ஆட்கள் இருந்துகொண்டே இருக்கிறார்கள். அவர்களுக்காக சேவைகளைச் செய்ய வேண்டிய நிலைமையிலே நாம் இருக்கிறோம். இந்த நிலைமையிலே, முழு நேர ஊழியர்களாக இருக்கிறோம்.

என்னைப்போன்ற வழக்கறிஞர்கள் கூட, கோர்ட்டுகளுக்குச் செல்ல முடியாமல்—கோர்ட்டுகளுக்குச் செல்ல வேண்டியதாக இருந்தால், கட்சிக்காரன் ஒருபக்கம் நீ பீஸ் வாங்கிவிட்டாய் என்றால்கூட, பயந்துகொண்டே கேட்கிறான். ஆனால், தொகுதி மக்கள் எஜமானர்கள் அல்லவா? கட்டளையிட்டு கூப்பிட வேண்டிய அளவிலே இருக்கிறார்கள். அவர்களைத்தான் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. அந்த அளவுக்கு முழு நேர வேலையாக சட்டமன்ற உறுப்பினர்களுடைய வேலைமாறி இருக்கிறது. இப்படி இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரூ. 350 சம்பளம் எந்த அடிப்படையில் கணிக்கப்பட்டது என்று நான் அறியவிரும்புகிறேன்.

பழைய காலத்தில், போலீஸ்காரர்களுக்கு ரூ. 20, ரூ. 30 என்று சம்பளம் இருந்தபொழுது ஒரு 'பிரசம்ஷன்' இருந்தது. வெளிப்படையாக, சம்பளமா, கிம்பளமா, என்று. அந்த மாதிரி ஏதாவது 'பிரசம்ஷன்' சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிறதா என்று கேட்க ஆசைப்படுகிறேன். நான் வெளிப்படையாகச் சொல்கிறேன், அந்த மாதிரி 'பிரசம்ஷன்' இருந்தால்

'ஆல்ரைட்'. நாங்கள் அந்த வாழ்க்கையை நடத்தத் தயாராக இருக்கிறோம். ஆனால், வெளிப்படையாகச் சொல்கிறேன், என்னைப் போன்றவர்கள் ரூ. 350-ஐ வைத்துக்கொண்டு, வாழ்க்கையை நடத்த முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

எழுபத்தி இரண்டு மைல் விஸ்தீரணமுள்ள தொகுதி என்னுடைய தொகுதி, காட்டுப்பகுதிகள் நிறைந்தது. கார் இல்லாமல் அந்தப் பகுதிகளுக்குச் செல்ல முடியாது. ஜீப் இல்லாமல் செல்லமுடியாது. பஸ்கள் இருந்தாலும், பஸ்களிலே ஏறிச் செல்லலாம். காலத்திலே செய்கின்ற காரியங்களை, உரிய காலத்தில், உரிய முறையில் செய்ய வேண்டிய கட்டாயம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிறது.

மக்கள் தேறி விட்டார்கள். அவர்கள் விரும்புகின்ற வகையிலேதான் சட்டமன்ற உறுப்பினர்கள் பணியாற்ற முடியும். இப்படி, காரில்லாமல் எப்படி வாழ முடியும்? நாங்கள் காரில்லாமல் பேக்காராக எப்படி இருக்க முடியும்? எங்களை பேக்காராக்கி வீட்டுக்கு அனுப்புகிற நிலைமை இருக்கிறது. ஆகவே, கார் வேண்டும். ரூ. 350 வைத்துக்கொண்டு என்ன செய்ய முடியும்? ஆகவே, இந்தப் பிரச்னையைச் சொல்லத்தான் இன்றைக்கு உடல்நலம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை, பொது நலம் காக்கப்பட வேண்டுமென்று, முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தைக் கவர்கின்ற முறையிலே—மற்ற மாநிலங்களிலே ரூ. 500 கொடுக்கிறார்கள், ரூ. 50 தினப்படி கொடுக்கிறார்கள், ரெயில்வே பாஸ் கொடுக்கிறார்கள். ஏன் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று கேட்கிறார்கள்.

நான் சில உறுப்பினர்களோடு பேசினேன், நம்மைப் பற்றியே நாம் எப்படிப் பேசுவது, பொதுமக்கள் என்ன நினைத்துக்கொள்வார்கள் என்று சொல்கிறார்கள். ஒருவனுக்கு கால் பலகீனம் ஆகிவிட்டது என்றால், சரிப்படுத்த வேண்டாமா? கால், கைகள் பலகீனமான நிலைமையிலே, எப்படி நடக்க முடியும்? நாங்கள், நடக்க முடியாத நிலைமையிலே, பொருளாதார ரீதியிலே நடக்க முடியாதவர்கள் என்ற முறையிலே வெளிப்படையாகச் சொல்லி



நாம் கேட்பது கூட, மக்களுக்கு சரியான முறையிலே சேவை செய்ய நல்ல ஊட்டம் வேண்டுமென்றுதான் இந்தக் கோரிக்கையை விடுகிறோமே தவிர, வேறல்ல.

ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி அமைச்சராகவும் இருக்கிறார்கள். சாதாரண நிதியாக இல்லாமல், கருணை நிதியாகவும் இருக்கிறார்கள். ஆகவே, கருணை கூர்ந்து எங்களுக்கும் சில சலுகைகளை, ரூ. 350 என்று இருப்பதை, ரூ. 500 ஆக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் மிகமிகக் கஷ்டப்படுகிறோம். வெளிப்படையாகச் சொல்வதற்கு நாங்கள் வெட்கப்படுகிறோம். ஆகவே, ரூ. 500 ஆக ஆக்கவேண்டும். இல்லாவிட்டால், நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக் கூடாது என்று சொல்லி, நல் வாய்ப்பு கொடுத்த காரணத்தால் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, கருணை வழங்கவேண்டுமென்று சொன்னார்கள். கருணை இப்பொழுதே வழங்குகிறேன். நிதியைப் பற்றி பிறகு யோசிக்கிறேன். (சிரிப்பு)

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I have only one point to add. I am a local M.L.A. I am coming from Thyagarayanagar to Fort St. George to attend the meetings of the Assembly.

THIRU RAMA ARANGANNAL : Five miles only.

THIRU K. M. SUBRAMANIAM : Actually 6 miles. Daily I have to cover a distance of 6 miles plus 6 miles, 12 miles. I am using only a very small car. I used to have 5 litres of petrol for two or three days. For two days, it suffices me. Previously, I was paying only a sum of Rs. 7. Now I have to pay a sum of Rs. 13. Of course, the daily allowance has been increased from Rs. 20 to Rs. 25. I have to spend Rs. 7 just for coming to attend the Assembly Session. It is the plight of local M.L.A. Others are coming from the Hostel, for which they get special allowance. We get only salary and daily allowance for the days of meeting. The local M.L.As. cannot afford to pay so much money for petrol. Now the Hon. Ministers and others have been permitted to use petrol in

[Thiru K. M. Subramaniam] [1973 டிசம்பர் 3

the place of conveyance allowance. I would like to ask why not that concession be extended to local M.L.As. also. Instead of giving cash, they might be permitted to use petrol which is very costly now.

| 5 | திருமதி கே. உச்சிமாகாளி, குப்புசாமியின் மனைவி, இரவு நேரக் காவலாளி, ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை. | 250 | ஊராட்சி ஒன்றிய ஊழியர்களான குப்புசாமி, ராமசாமி கோனார், முனியாண்டி ஆகியோர் மின்சாரம் பாய்ந்து இறந்தனர். இது குறித்து நிதி உதவி அளிக்க. |

| தொடர் எண். (1) | தொகை அனுமதிக்கப்பட்ட நபரின் பெயர். (2) | தொகை. (3) | நோக்கம். (4) |
|---|---|---|---|
| | | ரூ. | |
| **1972–73—தொடர்ச்சி.** | | | |
| 6 | பூசி போவேந்திர கோனார் காலஞ்சென்ற ராமசாமி கோனாரின் தகப்பனார், காங்கூலி, ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை. | 250 | ஊராட்சி ஒன்றிய ஊழியர்களான குப்புசாமி, ராமசாமி கோனார், முனியாண்டி ஆகியோர் மின்சாரம் பாய்ந்து இறந்தனர். இது குறித்து நிதி உதவி அளிக்க. |
| 7 | மகன், முனியாண்டியின் தகப்பனார், துப்புரவாளர், ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை. | 250 | ஊராட்சி ஒன்றிய ஊழியர்களான குப்புசாமி, ராமசாமி கோனார் முனியாண்டி ஆகியோர் மின்சாரம் பாய்ந்து இறந்தனர். இது குறித்து நிதி உதவி அளிக்க. |
| 8 | தலைமை ஆசிரியை, காந்திமதி அம்பாள் மகளிர் உயர்நிலைப் பள்ளி, பாளையங்கோட்டை. | 250 | சுவாமி நெல்லையப்பர் அன்பு ஆசிரமத்தில் உள்ளோருக்கு நிதி அளிக்க. |
| 9 | திருமதி கோமதி அம்மாள், சுப்பையாவின் மனைவி, பேணுதல் புல அளவையாளர், ராதாபுரம். | 500 | பேணுதல் புல அளவையாளர் சுப்பையா விபத்து ஒன்றில் இறந்து விட்டதால் நிதி உதவி அளிக்க. |
| 10 | திருமதி பாக்கிய லட்சுமி, கஜேந்திர வரதனின் மனைவி (பண்டகசாலை எழுத்தர்) மணப்பார நல்லூர், அம்பாசமுத்திரம் வட்டம். | 400 | கஜேந்திர வரதன் கடமையாற்றும் போது இறந்து விட்டதால் நிதி உதவி அளிக்க. |
| | | 3,000 | |



| தொடர் எண். (1) | தொகை அனுமதிக்கப்பட்ட நபரின் பெயர். (2) | தொகை. (3) | நோக்கம். (4) |
|---|---|---|---|
| | | ரூ. | |
| **1973–74** | **நிதி ஒதுக்கீடு ரூ. 3,800** | | |
| 1 | திருமதி வேலம்மாள், காலஞ்சென்ற ஆர். துரைராஜின் மனைவி, கடைநிலை ஊழியர், வட்டாரப் போக்குவரத்து அதிகாரி அலுவலகம், திருநெல்வேலி. | 1,000 | கடைநிலை ஊழியர் ஆர். துரைராஜ் இறந்து விட்டதால் நிதி உதவி அளிக்க. |
| 2 | திருமதி பொன்னம்மாள் காலஞ்சென்ற சண்முகச் சுந்தரபாண்டியன் மனைவி, காவலாள், சுற்றுலா மாளிகை, திருநெல்வேலி. | 500 | காவலாள் இறந்து விட்டதால் நிதி அளிக்க. |
| 3 | திருமதி எ. அய்யம்மாள், காலஞ்சென்ற அய்யனாரின் மனைவி, கடைநிலை ஊழியர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், குருவிகுளம். | 500 | கடைநிலை ஊழியரான எம். அய்யனார் இறந்து விட்டதால் நிதி உதவி அளிக்க. |
| 4 | செயலாளர், கடைநிலை ஊழியர் சங்கம், தூத்துக்குடி துணை நிலயம், தூத்துக்குடி. | 250 | சங்கத்திற்காக மரச்சாமான்களையும் பிற பொருள்களையும் வாங்க நிதி உதவி அளிக்க. |
| 5 | திரு. சங்கரவேலு, சுடலை முத்துவின் மகன், அயன்சிங்கம்பட்டி. | 200 | மின்னல் தாக்கி இறந்து விட்டவர்களின் குடும்பத்தினருக்கு துயர் துடைப்பது குறித்து நிதி உதவி அளிக்க. |
| 6 | முத்தாத்நால் என்கிற திருமதி சுடலைமுத்து அம்மாள், காலஞ்சென்ற மாடக்கண்ணு தேவரின் மனைவி, அயன்சிங்கம்பட்டி. | 500 | மின்னல் தாக்கி இறந்து விட்டவர்களின் குடும்பத்தினருக்கு துயர் துடைப்பது குறித்து நிதி உதவி அளிக்க. |

A sum of Rs. 3,000 was allotted during the year 1972-73 and a sum of Rs. 3,800 has been allotted during 1973-74 to the Tirunelveli district under Collector's Discretionary Grant.

The following are the purposes for which the amount was sanctioned :—

| Serial number. | Name of the person to whom the amount sanctioned. | Amount. | Purpose. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| YEAR 1972-73— | | RS. | |
| 1 | Secretary, Jawahar Nagar, Gents' Recreation Club, Tirunelveli-7. | 300 | To purchase furniture for the club. |
| 2 | President Recreation Club, Sub-Collector's Office, Tuticorin. | 300 | To purchase sports articles for the club. |
| 3 | Secretary, N.G.G.O's Association, Vilathikulam. | 300 | To purchase sports articles for the Association. |
| 4 | G. Kannapiran, 11, Koorathalwar Street, Palayamkottai. | 200 | Financial Assistance as his son and daughter died due to electrocution. |
| 5 | Thirumathi K. Uchimahali, w/o. Kuppusamy, Night Watchman, Panchayat Union, Pudukottai. | 250 | Financial Assistance consequent on the death of Kuppusamy, Ramasamy Konar and Muniyandi, the servants of Panchayat Union who died due to Electrocution. |
| 6 | Thiru Pookipovendra Konar, f/o. late Ramaswamy Konar, Gang Cooli, Panchayat Union, Pudukottai. | 250 | Do. |



| Serial number. | Name of the person to whom the amount sanctioned. | Amount. | Purpose. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| YEAR 1972-73—cont. | | RS | |
| 7 | Madan, f/o Muniyandi, Sweeper, Panchayat Union, Pudukottai. | 250 | Do. |
| 8 | Headmistress, Kandhimathi Ambal Girls High School, Palayamkottai. | 250 | Financial Assistance to the inmates of the Swami Nellaiappar Anbu Ashramam. |
| 9 | Thirumathi Gomathiammal, w/o Subbiah, Maintenance Field Surveyor, Radhapuram. | 500 | Financial Assistance on the death of Subbiah, Maintenance Field surveyor who died in an accident. |
| 10 | Thirumathi Packialakshmi, w/o. Gajendravaradan, (Depot Clerk), Manapparanallur, Ambasamudram taluk. | 400 | Financial Assistance on death of Gajendravaradan who died on duty. |
| | Total .. | 3,000 | |
| | YEAR 1973-74 | Allotment Rs. 3,800. | |
| | | RS. | |
| 1 | Thirumathi Velammal, w/o. late R. Durairaj, L.G.G.S. Regional Transport Officer's Office, Tirunelveli. | 1,000 | Financial Assistance consequent on the death of R. Durairaj, L.G.G.S. |
| 2 | Thirumathi Ponnammal, w/o. late Shanmugasundarapandian, Watchman, Circuit House, Tirunelveli. | 500 | Financial Assistance consequent on the death of watchman. |

| Serial number. | Name of the person to whom the amount sanctioned. | Amount. | Purpose. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| YEAR 1973-74—cont. | | | |
| | | RS. | |
| 3 | Thirumathi A. Ayyammal, w/o. late Ayyanar, L.G.G.S., Panchayat Union Office, Kuruvikulam. | 500 | Financial Assistance consequent on the death of M. Ayyanar, L.G. G.S. |
| 4 | Secretary, L.G.G.S., Association, Tuticorin Sub-Centre, Tuticorin. | 250 | Financial Assistance for purchasing furniture and other articles for the Association. |
| 5 | Thiru Sankaravelu, s/o Sudalaimuthu of Ayan Singamapatti. | 200 | Financial Assistance towards relief of distress to the victims caused by lightning. |
| 6 | Thirumathi Sudalaimuthuammal alias Muthathal, w/o late Madakkannu Thevar of Ayan Singamapatti. | 500 | Do. |
| | Total .. | 2,950 | |

# தமிழ் நாடு சட்டப் பேரவை

## செவ்வாய்க்கிழமை, 1973 டிசம்பர் 4

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

Shooting incident at Palavanatham village.

* 35 N. Q.—THIRU K. T. K. TANGAMANI : Will the Hon. the Chief Minister be pleased to state—

whether the Police had resorted to firing in the Paluvanatham Village in Ramanathapuram district on or about 22nd September 1973 resulting in deaths and injuries ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஆம். 1973 செப்டம்பர் 20-ஆம் நாளன்று பழவநத்தம் என்னும் கிராமத்தில் கலகக் கூட்டம் ஒன்றின் மீது காவலர் துப்பாக்கியால் சுட்டனர். இதனால் ஒருவர் இறந்தார். பத்து பேர் காயமுற்றனர். காவலர் தரப்பில் காவல்துறை டெபுடி சூப்பரின்டென்டென்ட் உட்பட ஒன்பது பேருக்குக் கல்வீச்சினால் காயம் ஏற்பட்டது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, இந்தப் பழவநத்தம் கிராமத்தில் ஏதோ ஒரு பஸ் தகராறு ஏற்பட்டு இப்படித் துப்பாக்கிப் பிரயோகம் ஆனதே, அந்தப் துப்பாக்கிப் பிரயோகத்திற்குப் பிறகு ஐ.ஜி. அவர்களே அங்கு சென்றார்கள். இப்பொழுது ஏதாவதொரு விசாரணை—நீதி விசாரணையோ, டிபார்ட்மெண்ட் விசாரணையோ அங்கு நடைபெறுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஒரு பஸ்ஸை வளைத்துக்கொண்டு அந்தக் கிராம மக்கள் கலவரத்தில் ஈடுபட்டதன் காரணமாகவும், அந்தப் பஸ்ஸிலேயிருந்த

கண்டக்டரை வளைத்துக்கொண்டு வன்முறையில் ஈடுபட்டதன் காரணத்தாலும், அங்கே போலீசார் பல்வேறு எச்சரிக்கைகளுக்குப் பிறகு துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டு, அதன் காரணமாக ஒருவர் இறந்தார். அதற்குப் பிறகு இப்பொழுது மாஜிஸ்ட்ரேட் அளவிலே விசாரணை அங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, இதே பழவநத்தத்தில்தான் சென்ற ஆண்டு ஜூலை 5-ந் தேதி போலீஸ் லத்தி சார்ஜில் ஒருவர் இறந்துவிட்டார். இப்பொழுது போலீசாருக்கும் கிராமத்திலுள்ள மக்களுக்கும் முரண்பாடு இருக்கிறது என்று சொல்லுகிறார்களே, அம்மாதிரியாக போலீசார் ஒருதலைப் பட்சமாக, ஏதும் செய்யாமலிருப்பதாகச் சொல்கிறார்களே, அதற்கு அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இந்தத் தகராறே, உறுப்பினர் அவர்கள் ஆரம்பத்தில் கேட்டதுபோல, அந்த பஸ்காரர்களுக்கும் கிராம மக்களுக்கும் ஏற்பட்ட தகராறின் அடிப்படையில்தான் தோன்றியது. ஆகவே, போலீசார் இதிலே ஒருதலைப் பட்சமாக இருந்தார்கள் என்பதற்கு இந்த வழக்கைப் பொறுத்த வரையில் எந்தவிதமான முகாந்திரமும் இல்லை.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** தலைவர் அவர்களே, போலீசை வளைத்துக்கொண்டு கிராம மக்கள் வன்முறையில் ஈடுபட்டதற்கும் துப்பாக்கிப் பிரயோகத்திற்கும் சம்பந்தம் இல்லை என்பதாக நான் அறிகிறேன். எனவே, நீதிபதி விசாரணை மூலமாக இதைப்பற்றிய உண்மையை அறிய அரசு முன்வருமா? அல்லது, டிபார்ட்மெண்ட் மூலமாகவாவது தனி விசாரணை ஒன்றை ஏற்படுத்த அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அந்தக் கிராம மக்களே சி.ஐ.டி. விசாரணையொன்று தேவை என்று மனு அனுப்பியிருக்கிறார்கள். இப்பொழுது மாஜிஸ்ட்ரேட் அளவில் விசாரணை நடைபெற்று 12 சாட்சிகள் வரையில் விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள். சி. ஐ. டி. வைத்து விசாரிக்க இயலுமா என்பதை சட்டஇலாகா பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண்கள் 599, 600, 601, 602 ஆகியவை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

## ஓமியோபதிக் குழு

*603 **வினா—திரு. எம். சுரேந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமியோபதி கௌன்சில் நமது நாட்டில் ஏற்படுத்தப் பட்டுள்ளதா?

(இ) அந்தக் கௌன்சிலில் அங்கம் வகிக்கும் நபர்களுக்கு இருக்க வேண்டிய Qualifications யாவை?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:**

(அ) ஆம்.

(இ) இந்தக் குழு உறுப்பினர் பதவிக்குரிய தகுதிகள் பின் வருமாறு:—

(1) தமிழ்நாட்டில் சாதாரணமாக வசிப்பவராயிருக்க வேண்டும்;

(2) அவர் கடன் தீர்க்க சக்தியற்றவரென்று தீர்ப்பளிக்கப் படுவதற்காக விண்ணப்பித்துக்கொண்டவராகவோ கடன் தீர்க்க சக்தியற்றவர் என்ற நிலையிலிருந்து விடுவிக்கப்படாத கடனாளியாகவோ இருக்கக்கூடாது;

(3) சித்த சுவாதீனமுள்ளவராக இருக்க வேண்டும்;

(4) குற்ற வழக்குகள் நீதிமன்றத்தால், ஒழுக்கக்கேடு சம்பந்தப்பட்ட ஒரு குற்றத்திற்காக சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவராக இருக்கக் கூடாது;

(5) குழுவில் ஊதியம் பெறும் ஊழியராக இருக்கக் கூடாது;

(6) இருபத்தைந்து வயது நிரம்பியவராயிருக்கவேண்டும்;

(7) அரசு நியமிக்கக் கூடிய மூன்று அதிகாரிகள் தவிர மற்றவர்கள் பதிவு பெற்ற மருத்துவராயிருக்க வேண்டும்.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, ஹோமியோபதி கவுன்சிலில் அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிற அதிகாரிகளே இருக்கிறார்களே, பொதுவாக யுனிவர்சிடி போன்றவற்றின் குழுக்

களில்கூட சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெறுகிறார்கள். ஆனால், ஹோமியோபதி கவுன்சிலில் ஒரு சட்டமன்ற உறுப்பினர் கூட இடம் பெறவில்லை. அரசாங்கம் நியமனம் செய்யும் இந்தக் கவுன்சிலில் ஒரு சட்டமன்ற உறுப்பினராவது இடம் பெற அரசு வழி செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிறவர்கள் இலாக்காவைச் சேர்ந்தவர்கள். அவர்கள் நிர்வாக வசதிக்காகவும் பொறுப்புக்காகவும் இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களில் ஹோமியோபதி பதிவு செய்தவர்களாக யாராவது இருந்தால் அவர்களை நான் இடம் பெறச் செய்ய முயற்சி செய்வேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** ஏற்படுத்தப்பட்ட ஹோமியோபதி குழுவின் கடமைகள் என்ன என்ன? எந்த எந்த காரியங்களுக்காக அந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் ஹோமியோபதி மருத்துவ முறையை அரசு ஒரு முறையான மருத்துவம் என்று ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து, ஹோமியோபதி மருத்துவர்கள் அதற்காக விதிக்கப்பட்ட தகுதிகளின்படி பதிவு செய்யப்படுவதற்காகவும், அந்த ஹோமியோபதி கல்வி முறையை ஒழுங்குபடுத்துவதற்காகவும், அவசியமானால் தனியார் நடத்துகிற கல்வி நிலையங்களை அங்கீகரிப்பதற்காகவும், ஹோமியோபதிக் கல்லூரியை அவசியமானால் நடத்துவதற்காகவும் இந்தக் கவுன்சில் வேறு பல மாநிலங்களில் அமைக்கப்பட்டிருக்கிற முறையைப் பின்பற்றி தமிழகத்திலும் அமைக்கப்பட்டிருக்கிறது.

## Drug stores in town areas

*604 Q.—Dr. H. V. HANDE :

Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether the Government have any preposal to open drug shops round the clock in small towns to enable the public to get life saving medicines ; and

(b) if so, the details thereof ?



**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்வி எழவில்லை.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவர் அவர்களே, குறிப்பாக, சென்னை நகரத்தில் இப்படிப்பட்ட மருந்துக் கடைகள் ஒன்றிரண்டுதான் இருக்கின்றன. பரந்து விரிந்து கிடக்கின்ற சென்னை நகர மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்ய இவைகளால் முடியவில்லை. ஆகவே, மேலும் ஒன்றிரண்டு மருந்துக் கடைகள் இரவில் எந்நேரமும் திறந்து வைத்திருக்க அரசு ஆவன செய்யுமா? நாங்கள் சென்னை நகரத்திலிருக்கும் பெரிய டாக்டர்களைச் சந்திக்கும்போது அவர்கள் 'ஸ்பென்சரில் மருந்து வாங்குங்கள்' என்று சொல்கிறார்கள். அதையும் அரசு கூர்ந்து கவனிக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இரவு நேரத்தில் ஒரு வணிக நிலையத்தைத் திறந்து வைக்கப் பொறுப்பேற்றுக்கொள்வது தனிப்பட்ட வணிகருடைய உரிமையாகும். அவர்கள் அவ்வாறு திறந்து வைக்கவேண்டுமென்று பொதுவாகக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. அப்படித் திறந்து வைக்கவேண்டுமென்று மத்திய அரசும் முதலில் ஒரு வேண்டுகோள் விடுத்து அப்படித் திறந்துவைப்பவர்களை ஏதாவது ஒருமுறையில் ஊக்கப்படுத்த முடியுமா என்று ஆராயும்படி கேட்டுக்கொண்டது. அப்படி இரவு நேரத்தில் திறந்துவைப்பவர்கள், தாங்கள் இரவு நேரங்களில் விற்கிற விலை அதிக லாபம் தரும்படியாக இருக்க வேண்டுமென்றும், குறைந்த அளவிலேயே இரவு நேரங்களில் மருந்து விற்பதால், அதிக விலை வைத்தால்தான் தங்களுக்குக் கட்டுப்படியாகும் என்றும் தெரிவித்தார்கள். அதை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. அதுபோல், இரவு நேரத்தில் பணியாற்றுகிற அந்த நிலைய ஊழியர்களுக்கு அரசாங்கமே அந்தச் சம்பளத்தை ஈடுகட்டவேண்டுமென்று கேட்டார்கள். அதையும் ஒத்துக்கொள்ள முடியவில்லை. ஆனால், அப்படிப்பட்ட மருந்தகம் நடத்துகிறவர்கள் ஒருவர் மாற்றி ஒருவர் இரவு நேரத்தில் தங்களுடைய நிலையங்களைத் திறந்துவைக்கச் செய்வதற்கு வேறு எந்த வகையில் ஊக்கப்படுத்தலாம் என்று தொடர்ந்து ஆலோசிக்கப்படுகிறது.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது இரவில் மருந்துக் கடைகளைத் திறந்து வைக்க வேண்டுமென்று வணிகர்களைக் கட்டுப்படுத்த முடியாது என்று சொன்னார்

கள். அரசாங்கமே சென்னை போன்ற பெரிய நகரங்களில் மருந்துக் கடைகளைத் திறந்து வைத்து எசென்சியல் ட்ரக்ஸ் கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்ய முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மேலும் தனியார் மருந்து நிலையங்களைத் திறந்து வைக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்துவதுதான். அதற்கு ஒருமித்த ஆதரவு பெறுவதுதான் நல்லது என்பது என் எண்ணம். சென்னை போன்ற நகரங்களில் ஒரே ஒரு இடத்தில் மட்டும் வைக்கப்படுமானால் பரந்த சென்னை நகரத்தில் எல்லா இடங்களிலும் உடனுக்குடன் மருந்து பெற போதுமான உதவியாக அது இருக்காது. ஒவ்வொரு பகுதியிலும் ஒரு கடையாவது திறந்து வைக்க தனியார்களை ஊக்கப்படுத்துவது மூலம் செயற்படுத்த முயற்சிக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது.

**திருப்புவனம் ஒன்றியத்தில் குடிநீர் வழங்கு திட்டங்கள்**

***605 வினா—திரு. த. சோனையா :** மாண்புமிகு மக்கள் நல் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், அம்பலத்தாடி அரிசனங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்குவதற்கு அரசிடம் ஏதேனும் திட்டம் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) கிராமக்குடிநீர் வழங்கும் விரைவுச் செயல்முறைத் (Accelerated Programme) திட்டத்தின் கீழ் இதுகாறும் 3,545 திட்டங்கள் 13 தொகுப்புகளாகத் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளன. 14-வது தொகுப்பு தயாரித்து முடிக்கப் பெறும் நிலையில் உள்ளது. விரைவில் அதுவும் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பெறும். அடுத்த 15-வது தொகுப்பில் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த அம்பலத்தாடி கிராமத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ரூ. 44,000-க்கான திட்டமதிப்பீடு ஒன்றும் சேர்க்கப்பட்டிருக்கிறது. அந்த மதிப்பீடு ஏற்றுக்கொள்ளப்படுமானால் ஒரு ஆழ்துளைக் கிணறு தோண்டி,



அதன் மீது மின்விசைப் பம்பு பொருத்தி நீரேற்று குழாய்கள் மூலமாகத் தண்ணீரைக் கிராமத்தின் நடுவே அமைக்கப்படவிருக்கும் நீர்த்தேக்கத் தொட்டிக்கும் கொண்டு வந்து, கிராமத்தின் மக்கட்தொகையான 450 பேருககும் குடிநீர் வழஙகச் செய்ய இத் திட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் அனுமதியும் பொருளுதவியும் கிடைத்தவுடன் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

***606 வினா—திரு. த. சோனையா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கணட வினவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கணக்கங்குடி, ஏனாதி தேளி அரிசனங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இராமநாதபுரம் மாவட்டம் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கணக்கங்குடி, ஏனாதி, தேளி ஆகிய கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் அனுமதிக்கு அனுப்பப்படவிருக்கின்றன.

**திரு. எஸ். வடிவேல் :** பொதுக் கிணறுகளில் தண்ணீர் எடுக்க அரிசனங்கள் சிரமப்படுகிறார்கள். சமீபத்தில் மாயூரத்தில் போளத்தில் தகராறு ஏற்பட்டு போலீஸ் வந்து அரெஸ்ட் எல்லாம் செய்தார்கள். ஆகவே, தனிப்பட்ட முறையில் கிணறு கட்டிக் கொடுத்து தகராறு வராமல் தடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் தனிப்பட்ட முறையில் கிணறு வெட்டுவது, அவர்களுக்கு உதவி செய்வது தாழ்த்தப்பட்ட நலத் துறை கவனிக்க வேண்டிய ஒன்றாகும். சமுதாயத்தில் எந்த ஒரு பகுதி மக்களும் இதுமாதிரி தடுக்கப்பட்டால் அது சமூகக் கேடு என்ற காரணத்திற்காக அதற்கான நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்பட வேண்டியதாகும்.

## Ayacuts under Karungal Distributory Channel.

* 610 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state the steps taken by the Government to prevent the crops of the newly converted areas of Chittar-Pattanamkal Scheme coming under the Karungal Distributory frequently withering away due to insufficient supply of water?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இங்கு பயிர்கள் சாவியாகப் போவதற்கான முக்கிய காரணங்களாவன—

ஆயக்கட்டுப் பகுதி நீண்டு குறுகலாயிருப்பதால் நீண்ட தொலைவுக்கு வாய்க்கால்களை வெட்டி நீரைக் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. மேலும் அப்பகுதியிலுள்ள நிலம் நீரைத் தேக்கி வைக்கும் திறன் மிகக் குறைந்த மணற்பாங்கான நிலமாகும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆயக்கட்டுப்பகுதியில் அவசியமான மண்வள ஆய்வையும், அங்கு பயிரிடப்படும் பல்வேறு வகைப் பயிர்களுக்குரிய நீர்த்தேவைகளை சரியாக மதிப்பிடுவதற்குரிய சோதனைகளையும் நடத்திய பின்னர் அப்பகுதியில் விளைவிப்பதற்கேற்ற பயிர்கள் இவையென்று தெரிவிக்குமாறு வேளாண்மைத்துறை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**திரு. என். டென்னிஸ்:** தொடர்ந்து இங்கு தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதற்கு முன்னரும் இங்கு இவ்விதமான நிலைமை இருக்கிறது என்று எடுத்துக் கூறப்பட்ட போது தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கிறது என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனாலும் வாட்டர் டாக்ஸ் வசூலிக்கப்படுகிறது. இது டபிள் பனிஷ்மென்ட் போல் இருக்கிறது. தொடர்ந்து தண்ணீர் கிடைக்கும்படி வசதி செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** 41-வது விதியின்கீழ் இதைப்பற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதிலே விவரமாக அறிக்கை தருகிறேன்.



## நாடார் புதுக்குளத்திற்கு நீர் வழங்கல்.

* 611 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு நீர்த்தேக்கத்திலிருந்து மெயின் கால்வாய் மார்க்கமாக நாடார் புதுக்குளத்திற்கு தண்ணீர் விட வேண்டிய அவசியம் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு 7—3—1973 தேதியிட்டு மனு ஏதேனும் அனுப்பப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) ஆம்.

(இ) "நாடார் புதுக்குளம்" ஏரி, அக்கரையுள்ள சில உழவர்களினால் சுமார் 14 ஆண்டுகட்கு முன் அவர்களது பட்டா நிலங்களுக்குள்ளாகவே அமைத்துக் கொள்ளப்பட்ட ஒரு தனியார் ஏரியாகும். மணிமுத்தாறு நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் முறையாகச் சேர்க்கப்பட்ட 313 ஏரிகளில் இது அடங்கவில்லை. மணிமுத்தாறு தலைக்கால்வாய் மூலமாக இத்திட்டத்தின் கீழ் தற்போதுள்ள ஏரிகளுக்கே போதிய நீர் வழங்குவது மிகவும் கடினமாக இருப்பதால் கூடுதலான ஏரிகளுக்கு நீர் வழங்க முடியாது. எனவே, "நாடார் புதுக்குளம்" ஏரியை மணிமுத்தார் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் சேர்த்துக்கொள்வதற்கில்லை.

## பேசின்பிரிட்ஜ் மேம்பால வேலை.

* 612 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேசின்பிரிட்ஜ் மேம்பாலம் அமைப்பதில் இன்னும் முற்றுப் பெறாத வேலைகள் எப்பொழுது நிறைவுபெறும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேசின் பிரிட்ஜ் மேம்பாலத்தில் வேலைகளனைத்தும் முடிவடைந்துவிட்டன.

**திரு. கா. வேழவேந்தன்:** மிகப் பெரிய போக்குவரத்தைக் கொண்டிருக்கும் பேசின் பிரிட்ஜ் மேம்பாலத்தின் ஓரத்தில் கட்டப்பட வேண்டிய கைப்பிடிச்சுவர் கட்டப்படாமல் இருக்கிறது

தென்மேற்கே புளியந்தோப்புப் பாதை இன்னும் திறந்துவிடப் படாமல் இருக்கிறது. விரைவில் அந்தப் பாதையைப் பயன் படுத்தும் முறையில் திறந்து வைக்கவும், கைப்பிடிச் சுவர் கட்டவும் அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** என்னிடத்தில் இருக்கும் தகவல்படி அந்த மேம்பாலம் 1972 ஏப்ரல் மாதம் திறந்துவிடப் பட்டதாகத் தகவல் இருக்கிறது. மேற்கொண்டு அங்கத்தினர் விவரம் தந்தால் விசாரிக்கப்படும்.

### இரயில் வண்டிகளுக்கு டீசல் இன்ஜின்கள்

*613 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தமிழகத்தில் ஓடும் முக்கிய இரயில் தடங்களில் டீசல் இன்ஜின்கள் பொருத்தப்பட வேண்டுமென அண்மையில் நமது அரசு மத்திய அரசைக் கோரியுள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இல்லை.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, இன்றையதினம் 'ஏர் பொல்யூஷன்' பற்றி உலகத்தில் இருக்கும் எல்லா நாட்டுக் காரர்களும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். சென்னை நகரத்தில் மக்கள் தொகை அதிகம். ரயில் போகின்ற ஓரங்களில் எல்லாம் வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ரயில் போகின்றபோது புகை ஏராளமாக கக்கப்பட்டு அங்கிருக்கக்கூடிய மக்கள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. சென்னை நகரத்தில் இருந்து தாம்பரம் வரையிலாவது டீசல் எஞ்சின் போட வேண்டு மென்று மத்திய அரசுக்கு நம்முடைய அரசு பரிந்துரைக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மின் இணைப்பில் இணைக்கப் பட்ட பாதை அது. 'ஏர் பொல்யூஷன்' பற்றி மட்டுந்தான் அங்கத்தினர் அவர்கள் பார்த்திருக்கிறார்கள். டீசல் எண்ணெய் பற்றாக்குறையையும் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.



### *Rural Engineering Survey.*

*614 Q.—Thiru N. K. Palanisamy: Will the Hon. the Minister for Public Works with reference to question No. 80 answered on 11th August 1973 be pleased to state—

(a) the details of works so far carried out under the Centrally Sponsored Scheme of Rural Engineering Survey in Ramanathapuram and Madurai districts ; and

(b) the results achieved thereby ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** விவர அறிக்கை @ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி:** இதற்காக மத்திய அரசிலிருந்து ஏதாவது உதவி கிடைக்குமா? அப்படியானால் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தனிக் கேள்வி வேண்டும். *

### டெலிவிஷன் செட்டுகள் உற்பத்தி

*615 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் 7—12—1972-ல், 72 ஆம் எண் வினாவிற்கு அளித்த விடையையொட்டி, தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கூட்டுத்துறையில் டெலிவிஷன் செட்டுகள் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** "டெலிவிஷன் செட்டுகள்" உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அடையாறிலுள்ள இன்ஸ்ட்ரானிக் காம்பஸ் என்னுமிடத்தில் டைனவிசன் என்ற நிறுவனத்தால் கூட்டுத்துறையில் நிறுவப்படும். மேற்படி நிறுவனம் விரைவில் செயல்படுத்துவதற்கான எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொண்டு வருகிறது. 1974-ம் ஆண்டு மத்தியில் உற்பத்தி தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

@ 833-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

* 639-ம் பக்கத்தில் மாண்புமிகு அமைச்சரவர்களால் இத் துணை வினாவிற்கு விடை அளிக்கப்பட்டுள்ளதைக் காண்கவும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த நிறுவனம் எவ்வளவு மூலதனத்தில் தொடங்க இருக்கிறது? ஒரு ஆண்டுக்கு எவ்வளவு டெலிவிஷன் செட்டுகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சுமார் இருபது லட்சம் ரூபாய். சுமார் 10,000 டெலிவிஷன் செட்டுகள்.

*Plantations in Tamil Nadu.*

* 616 *Q.*—Thiru K. SUPPU : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of plantations and the extent of land therein under foreign control and foreign collaboration ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 23 தேயிலைத் தோட்டங்கள், 2 காப்பித் தோட்டங்கள், 3 ஏலத் தோட்டங்கள், 1 இரப்பர் தோட்டம். இவைகளின் மொத்தப் பரப்பு 9,518.38 ஹெக்டேர்கள்.

மாயூரத்திலுள்ள சிறுதொழில் பிரிவு

* 617 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரிலுள்ள தொழிற்சாலையில் தற்போது எந்தெந்தக் கருவிகள் செய்யப்படுகின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (1) கிடங்குகள், சர்க்கரை ஆலைகள், பள்ளிக்கட்டிடங்கள் முதலியவைகளுக்கான உருக்குக் கட்டுமானங்கள்.

(2) உருக்கு மற்றும் மரத்தாலான நீர்ப்பாசன மதகுக் கதவுகள்—திருகு மற்றும் நீள்தண்டு வகை.

(3) உருக்காலான மேல்நிலை நீர்த்தொட்டிகள்.

(4) உருக்கு புகைப் போக்கிகள், கம்பி வேலைப்பாடுகள் மற்றும் நுழைவாயில்கள்.

(5) மேற்கண்டவைகளுக்குச் செப்பனிடும் பணிகளையும் பழுதுபார்க்கும் பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ளல்.



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் 614-ம் எண்ணுள்ள வினாவின் மீது ஒரு துணைக் கேள்வி கேட்கும்போது, ரூரல் என்ஜினியரிங் சர்வே ஸ்கீமிற்கு மத்திய அரசிலிருந்து ஏதாவது உதவி கிடைக்குமா என்று கேட்டார்கள். அதற்கு தனிக் கேள்வி வேண்டும் என்று நான் விடையளித்தேன். என்னிடமுள்ள தகவல், முழு மானியமும் மத்திய அரசே தருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*Supply of coal for Cement Industry*

* 618 *Q.*—Thiru N. K. PALANISAMY :
Thiru R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether this Government have requested the Central Government to ensure regular supply of coal to the Cement Factories in this State ; and

(b) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) நிலக்கரி வழங்குதல் சம்மந்தமாகவும், நிலக்கரி இருப்பு வேகமாகக் குறைந்து வருவதாலும் சிமெட்டித் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள பெரும் பிரச்சினை குறித்து 1973 ஜூலையில் இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது. இம்மாநிலத்திலுள்ள சிமெட்டித் தொழிலுக்குத் தேவையான நிலக்கரி வழங்க நடவடிக்கைகள் எடுக்குமாறு இந்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டது.

திரு. என். கே. பழனிசாமி : நமக்குத் தேவையான நிலக்கரி எவ்வளவு? எவ்வளவு நமக்கு ஒதுக்கப்படுகிறது? பற்றுக்குறை எவ்வளவு இருக்கும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அகில இந்திய அளவில்தான் இது நிர்மானிக்கப்படுகிறது. நம் சிமென்ட் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் நார்மல் கன்ஸம்ஷன் இவ்வளவு என்று இருக்கிறது. இதில் மத்திய அரசு நிலக்கரி ஒதுக்கும்போது சிமென்ட் தொழிற்சாலைகளுக்காக தேவையான நிலக்கரியை ஒதுக்கவேண்டும். அதை எடுத்து இங்கே கொண்டுவரக்கூடிய டிரான்ஸ்போர்ட் பெஸிலிட்டீஸ் கொடுக்க

[1973 டிசம்பர் 4

## கிருதுமால் நதித் திட்டம்

*607 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், கிருதுமால் நதித் திட்டத்தினை தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இத்திட்டத்தினைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்பொழுது பரிசீலனையில் இல்லை.

## விஸ்வகுடி, வெங்குளம் கிராமங்களுக்கு பாசன வசதி

*608 வினா—திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் தொகுதி, விஸ்வகுடி கிராம மக்களுக்கும், வெங்குளம் கிராம மக்களுக்கும் இடையில் பாசன தண்ணீர் சம்பந்தமாக அண்மையில் கலவரம் ஏதும் நிகழ்ந்ததா?

(இ) ஆம் எனில் எதிர்காலத்தில் இவ்விதத் தகராறு ஏற்படா வண்ணம் இவ்விரு கிராமங்களுக்கும் பயன்படும் பாசனத் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) இத்தகைய கலவரம் 8-1-1972 அன்று நடைபெற்றது.

(இ) வெங்கலம் ஏரியின் ஆயக்கட்டுத்தாரர்களின் நலனைப் பாதிக்காத வகையில், விஸ்வகுடி கிராமத்தில் பல ஆண்டுகளாக பாசனமாகும் நிலங்களுக்கு மட்டும் பாசனத்திற்குத் தேவையான அளவு தண்ணீர் வழங்க ரூ. 2,550 செலவில் நிரந்தரமான குமாய் மதகினை விஸ்வகுடி எல்லையில் அமைத்துக் கொடுக்குமாறு மேற்பார்வைப் பொறியாளரை பாசனத் தலைமைப் பொறியாளர் அறிவுறுத்தியுள்ளார்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** விஸ்வகுடி கிராம மக்கள் அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தும்போது வெங்கலம் கிராமத்தார் தாங்கள் பாதிக்கப்படுகிறோம் என்று கூறி கலகம்



1973 டிசம்பர் 4]

செய்கிறார்கள். இரு தரப்பாருக்கும் பயன்படும் முறையில் பெரிய ஏரி வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பச்சை மலைத் தண்ணீரில் அப்படி ஒரு பெரிய திட்டத்தை வகுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** விஸ்வகுடி கிராமத்தில் பல ஆண்டுகளாக 40 ஏக்கர் நிலத்தில்தான் சாகுபடி செய்து வந்தார்கள். அதற்கு மேல் சாகுபடிக்கு நீர் கொடுக்க முடியாது. கீழ் இருக்கும் வெங்குளம் கிராமத்தார் ஆயக்கட்டு பாதிக்கப்படும் அளவுக்கு அவர்கள் தண்ணீர் எடுக்கிறார்கள். கீழ் இருக்கும் ஆயக்கட்டுதாரர்கள் பாதிக்கப்படாத அளவிலே விஸ்வகுடி கிராமத்தாருக்கு 40 ஏக்கர் சாகுபடிக்கு மட்டும் நீர் கிடைக்கும் முறையிலே புதிய ஏற்பாட்டைச் செய்து குமாய் மதகைப் போட தலைமைப் பொறியாளர் ஆணை பிறப்பித்திருக்கிறார். அதுவே போதும் என்று அரசு கருதுகிறது.

## கீழ் கொள்ளிடம் அணை

*609 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ் கொள்ளிடம் அணையை சீர்படுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** கீழ் அணையைக் கட்டி நீண்ட ஆண்டுகள் ஆகின்றன. அடிக்கடி பழுது ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. சீர்படுத்துவதற்குப் பரிசீலனை செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பழுதுபட்டிருப்பது அங்கிருக்கும் 'ஷட்டர்ஸ்' கதவுகள்தான். புதுப்பிக்க அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அடுத்த ஆண்டு கதவுகள் பொருத்தப்படும்

வேண்டும். அப்படிக் கொடுக்காவிட்டால், சிமெண்ட் தொழிற்சாலைகளை மூடுகிற ஒரு அபாயம் ஏற்படும். சில நாட்களுக்கு முன்னால் கூட மறுபடியும் மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நிலக்கரியைப் பொறுத்தளவிற்கு ஒரு திட்டவட்டமான கொள்கையை மத்திய அரசு எடுக்கவேண்டுமென்று வலியுறுத்தி வருகிறோம்.

திரு. ரா. ரா. முனுசாமி : இந்திய அரசு நிலக்கரி ஒதுக்கும்போது எல்லா மாநிலங்களையும் விட தமிழக மாநிலத்திற்குக் குறைவாக ஒதுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறதே, அதற்குக் காரணம் என்ன என்று அரசு உணருகிறதா? இல்லை, தமிழகத்தை திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆள்வதால் புறக்கணிக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பொதுவாக நாட்டில் நிலக்கரிப் பிரச்னை இருக்கிறது. மத்திய அரசுக்குச் சொந்தமான ரெயில்கள் கூட நிலக்கரி இல்லாமல் நின்று போனதை உறுப்பினர் அவர்கள் பத்திரிகையில் பார்த்திருக்கலாம். சிமெண்ட் உற்பத்தியைப் பொறுத்தளவிற்கு நாம் அதை அதிகமாக உற்பத்தி செய்கிறோம் நம் மாநிலத்தில். உற்பத்தி தடைபடாமல் பாதுகாப்பது மத்திய அரசின் கடமையாகும். அதையும் நாம் வலியுறுத்தி வருகிறோம்.

திரு. கு. காமாட்சி : நிலக்கரிப் பற்றாக்குறை காரணமாக இம்மாநிலத்தில் உள்ள சில சிமெண்ட் தொழிற்சாலைகள் மூடப்படலாம் என்ற செய்தி பரவலாக அடிபடுகிறது. பத்திரிகைகளில் கூட செய்தி வந்திருக்கிறது. ஆகவே இதைப் பற்றி அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன? சிமெண்ட் தொழிற்சாலைகள் மூடப்படாமல் இருப்பதற்கு அரசாங்கம் உத்தரவாதம் அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம் தமிழகத்தில் உள்ள ஏழு சிமெண்ட் தொழிற்சாலைகளில் 2, 3, 4, 5 நாட்கள் என்றளவிற்குத் தான் நிலக்கரி இன்றைக்கு இருப்பு இருக்கிறது. இந்த நிலை தொடருமானால் சிமெண்ட் தொழிற்சாலைகள் மூடப்படவேண்டிய நிலைமை ஏற்படும் என்று மத்திய அரசுக்கு நாம் தகவல் அனுப்பியிருக்கிறோம். மத்திய அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு உடனடியாக நிலக்கரி அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் கூறியிருக்கிறோம். பொதுவாக நிலக்கரிப் பிரச்னையைப் பொறுத்தளவிற்கு சுரங்க இலாகாவைக் கேட்டால் எங்களிடம் நிலக்கரி இருக்கிறது, ஆனால் அனுப்புவதற்கு வாகன்ஸ் இல்லை என்று ரெயில்வே இலாகாவைச் சொல்கிறார்கள். ரெயில்வே இலாகாவைக் கேட்டால் எங்களிடத்தில் வாகன்ஸ் இருக்கின்றன, ஆனால் சுரங்கத்திற்குச் சென்றால் சுரங்கத்தில் நிலக்கரி கொடுக்க மாட்டேன் என்கிறார்கள் என்று இப்படி முரண்பட்ட தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. மத்திய அமைச்சர் அவர்களிடம் இந்த முரண்பட்ட நிலைமையை நானே எடுத்து விளக்கி இதில் உடனடியாகக் கவனம் செலுத்தவேண்டுமென்று சொல்லியிருக்கிறேன்.





திரு. கே. ஏ. வகாப் : மத்திய அரசு ஒதுக்குகிற நிலக்கரி நமக்கு வந்து சேருவதற்கு டிரான்ஸ்போர்ட் சிரமங்கள் அதிகமிருப்பதாகக் கூறினார்கள். ரெயில்வே வாகன்ஸ் இல்லை என்றும் எடுத்துக் கூறினார்கள். ஆகவே நாம் நம் அதிகாரி ஒருவரை நேரடியாக அங்கு அனுப்பி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதோடு நிலக்கரியைக் கொண்டுவர தமிழக அரசு ஒரு தனிக் கப்பல் வாங்குவது அரசு யோசனையில் இருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வந்ததே. அப்படி வாங்கப்பட்டுள்ளதா? அல்லது வாங்கும் யோசனை உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அது வேறு பிரச்னை. அதுபற்றி ஏற்கனவே இந்த மன்றத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. இப்போது நம் முன்னுள்ள பிரச்னை நிலக்கரி வழங்குவதில், மாநிலந்தோறும் வழங்குவதில், ஒரு சிறப்பான கொள்கையைப் பின்பற்றுவதற்கு மன்வரவேண்டும். நம் என்னூர் தொழிற்சாலையில், மின் உற்பத்தித் தொழிற்சாலையில் நிலக்கரி இல்லை என்பதுபற்றி பெரிதாகப் பேசப்பட்டது. மத்திய அரசுக்குச் சொந்தமான ரெயில்களே நிலக்கரி இல்லாது நிறுத்தப்பட்டன. இப்போது சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு அந்த அபத்து வந்திருக்கிறது. இந்த மூன்றையும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது நிலக்கரி வழங்குகிற முறையில் ஒரு சீரான கொள்கை வகுக்கப்படவேண்டிய அவசியத்தை அது எடுத்துக்காட்டுகிறது.

அது

### வேளாண்மைக் கருவிகள் பழுதுபார்க்கும் நிலையங்கள்

*619 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டிராக்டர்கள், வேளாண்மைக் கருவிகள் ஆகியவற்றைப் பழுதுபார்க்கும் நிலையங்களை தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் மூலம் நிறுவும் திட்டம் ஏதேனும் வகுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில். அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஆம். பன்னிரண்டு நிலையங்கள் அமைப்பதற்கான ஆக்கவேலைகள் நடைபெறுகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்த 12 நிலையங்களை எங்கெங்கு அமைப்பதற்கு தற்போது திட்டமிடப்பட்டுள்ளது? மொத்தம் செலவு எவ்வளவு என்பதையும் அறியலாமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நிலையம் ஒன்றுக்கு 2.89 லட்சம் ரூபாய்; பன்னிரண்டு நிலையங்கள், ஓசூர், வேலூர், கடலூர், சிவகங்கை, தஞ்சை, மதுரை, தர்மபுரி, கோவை, சேலம், புதுக்கோட்டை, செங்கல்பட்டு, திருநெல்வேலி.

### *Meat Inspection Laboratory, Madras*

*620 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) the number of demonstrations and practical illustrations organised at the Meat Inspection Laboratory, Madras for the illiterate persons from 29th February 1972 (date of opening of the Laboratory); and

(b) the number of Health Officers and Sanitary Inspectors who were given training in the laboratory on 'Meat Hygiene'?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) இரண்டு.

(இ) மூன்று





### நாகப்பட்டினம்-தேமங்கலம் சாலையில் பாலம்

*621 வினா—திரு. அ. இராசமாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-தேமங்கலம் சாலையில் தேவநதியின் குறுக்கே பாலமொன்று கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இல்லை..

திரு. அ. இராசமாணிக்கம்: அந்தப் பகுதியில் இருக்கிற பத்து கிராமங்களை இணைக்கும் அந்தப் பாலம் மிகவும் அவசியம் என்ற அந்தப் பகுதி மக்களின் அக்கோரிக்கையை மறுபரிசிலனை செய்து ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பரிசிலனை செய்யப்பட்டு 1974-75-ம் ஆண்டு அந்தத் திட்டத்தை பார்ட் 2 ஸ்கீமில் சேர்ப்பதற்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

### கவிஞர் வேதநாயகம் அவர்களுக்கு நினைவுச்சின்னம்

*622 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரத்தில், கவிஞர் வேதநாயகம் பெயரில் நகராட்சிப் பூங்காவில் மண்டபம் ஒன்று கட்டிட அடிக்கல் நாட்டப்பட்டிருப்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இல்லை.

### நாகர்கோயில் பகுதியில் புதிய பேருந்து வழித்தடங்கள்

*623 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாடு அரசுப் போக்குவரத்துத்துறை நாகர்கோயில் ஜாயின்ட் டைரக்டர் அவர்கள் அதிகாரத்துக்குட்பட்ட பகுதிகளில் 1973-74 நிதியாண்டில் புதிதாக பஸ் ரூட்கள் ஏதேனும் தொடங்கப்பட்டிருக்கின்றனவா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) பதின்மூன்று வழித் தடங்கள் புதிதாக துவக்கப்பட்டுள்ளன.

## Damages caused to State Transport buses.

*624 Q.—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether a number of State Transport buses were damaged by crowds in Madras around 20th July 1973; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) 19—7—1973 ஆம் நாளன்று சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளில் ஊர்வலமாகச் சென்ற பல்வேறு தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிலாளர்களால் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த 59 பேருந்துகள் சேதப்படுத்தப்பட்டன.

திரு. ரா. ரா. முனுசாமி : தமிழகத்தில் இப்படி அடிக்கடி போராட்டங்கள், தொழிலாளர் ஊர்வலங்கள், மாணவர்கள் ஊர்வலங்கள், இவை ஏற்படுகிறபோது பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கிறார்கள். அப்படி விளைவிக்கக்கூடியவர்கள் யாரால் தூண்டிவிடப்பட்டு வளர்க்கப்படுகிறார்கள் என்பதை அரசு ஆராய்ந்து அவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்ற கருத்தினைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பஸ்களைப் பொறுத்த வரையில் அது பொதுமக்கள் வரிப் பணத்திலிருந்து நடைபெறுகிற பொதுச் சொத்தாகும் என்கிற உணர்வு பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறவர்களானாலும் அல்லது பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருக்கிறவர்களானாலும், அவர்களுக்கு அந்த உணர்வு வருமானால் இப்பிரச்னைகள் தீரலாம்.

திரு. கே. கந்தசாமி : பொதுவில் வந்த ஆடு புழுத்துச் சாகும் என்று கிராமங்களில் ஒரு பழமொழி உண்டு. இன்று பொது மக்களின் வரிப்பணத்தால் இயங்குகிற பொதுச் சொத்துக்களுக்கு



ஆபத்து அல்லது சேதம் விளைவிக்கும் சமுதாய விரோதிகளின்மீது நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஒத்தாசை செய்ய பொது மக்கள் இல்லாவிட்டாலும் பொதுமக்களின் அரசாக இருக்கிற நம் அரசு கடுமையான நடவடிக்கைகளை இனிமேலாவது எடுக்க முன்வருமா ?

(முற்பகல் 9.30)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பழமொழி என்னவோ எனக்குத் தெரியாது. இன்றைக்குப் பொது சொத்துக்களைச் சேதப்படுத்துவது புது மொழியாகிவிட்டது.

திரு. எம். ஏ. லத்தீப் : இவ்வாறு பொதுச் சொத்துக்களைச் சேதப்படுத்தும்பொழுது மக்களுடைய வரிப்பணம் தான் அதிலே நஷ்டமாகிறது. எங்கே பொதுச்சொத்துக்கள் குறிப்பிட்ட இடங்களில் நஷ்டப்படுத்தப்படுகின்றனவோ அந்த இடங்களைக் குறிப்பிட்டு, அந்த இடங்களில் ப்யூனிடிவ் டாக்ஸ் போடுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அத்தகைய யோசனை எதுவுமில்லை.

## திருச்செந்தூரில் பெண்கள் கல்லூரி

*625 வினா—திரு. க. உரோ. எட்மண்ட் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்செந்தூரிலுள்ள அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து அங்கு பெண்களுக்கென தனியே ஒரு கல்லூரி ஆரம்பிக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

## கங்கைகொண்ட சோழபுரம் கோயில் திருப்பணி

*626 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கங்கைகொண்ட சோழபுரம் கோயிலைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஆம். உள்ளது.

## கடவுளர் சிலை திருட்டுகள்

*627 வினு—**திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973 ஆகஸ்டு மாதத்தில், மதுரை உததமபாளையத்தில் ஐம்பொன்னுல் செய்யப்பட்ட பழங்கால சாமி சிலைகள் களவு போய் உள்ளதா?

(இ) ஆம் எனில், திருடு போன சிலைகள் எத்தனை?

(உ) அந்தச் சிலைகளின் விலை மதிப்பென்ன?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) ஆம்.

(இ) மூன்று.

(உ) ரூ. 2,00,000 (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்).

*628 வினு—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் தாலுகா, திருவிளக்குடி கோயிலில் அண்மையில் சாமி சிலைகள் திருட்டுப் போயினவா?

(இ) அதில் சம்பந்தப்பட்டவர்கள் யார், யார்? தண்டனை அடைந்தவர்கள் யார், யார்?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** (அ) ஆம்.

(இ) இத்திருட்டில் சம்பந்தப்பட்டவர்கள் மாயவரத்தைச் சேர்ந்த திருவாளர்கள் சக்கரபாணி, இராஜரத்தினம் என்ற இருவர். இவர்கள் இருவருக்கும் சிறைதண்டனை கொடுக்கப்பட்டது.

## *Sainik Schools*

*599 Q.—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the number of Sainik Schools located in Tamil Nadu?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தமிழ்நாட்டில் கோவை மாவட்டத்தில் உள்ள அமராவதி நகரில் ஓர் சைனிக் பள்ளி உள்ளது.



**திரு. ஆ. பரந்தாமன்:** இந்தப் பள்ளியில் சேருகின்ற மாணவர்கள் பெரும்பாலும் பணக்காரர்களாக இருக்கிருர்கள். காரணம், அவர்கள் அதிகமாக பீஸ் செலுத்தவேண்டியிருக்கிறது. அதனுல் பணக்காரர்களுடைய பிள்ளைகள் மட்டும்தான் அங்கே சென்று படிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இம்மாதிரி மேலும் ஒன்றிரண்டு பள்ளிகள் ஏற்படுத்தி ஏழை எளியவர்கள் அங்கே பயில அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இதிலே பணக்காரப் பிள்ளைகள் மட்டும் என்பதல்ல. ஏழைகளாக இருப்பவர்களுக்கும் நாம் 50 பேர்களுக்கு முழு ஸ்காலர்ஷிப் தருகிருேம். ஆக, ஒரு பள்ளி நடத்துவதற்கு ஆண்டு ஒன்றுக்கு தமிழக அரசுக்கு ரூ. 10 லட்சம் செலவாகிறது. அதன் மூலம் படித்து வெற்றி பெற்றவர்களிலே கூட 10, 15 பேர்கள் தான் கடைசியில் தேர்ந்தெடுக்கப்படுகிருர்கள். இந்த நிலையிலே அவர்களுடைய வருமானத்திற்கு ஏற்றபடி, ரூ. 2,300-க்கு மேற்படாத அளவுக்கு அவர்களுக்கு உதவிச் சம்பளம் தந்து வருகிருேம்.

**டாக்டர் ச. மு. பழனியப்பன்:** இந்த சைனிக் பள்ளிக்கு மாநில அரசுக்கு மட்டும் ரூ. 10 லட்சம் செலவாகிறது என்று சொன்னுர்கள் அமைச்சர் அவர்கள். மத்திய அரசின் பங்கு என்ன? மாநில அரசு ரூ. 10 லட்சம் செலவு செய்கின்ற இந்தப் பள்ளியில் இந்தி மொழி கட்டாயமாக பயிற்றுவிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இரு மொழிக் கொள்கையின் அடிப்படையில் அதைத் தடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அங்கே முதல்வர், தலைமை ஆசிரியர், ரிஜிஸ்டிரார் ஆகியவர்களுடைய சம்பளத்திற்கு மட்டும் மத்திய அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறது. மற்றையபடி கட்டடம் தருதல், நிலம் தருதல், இடம் தருதல், வீடுகளை கட்டித் தருதல் முதலியவைகளுக்கான உதவித் தொகை, மற்ற ஆசிரியர்களுடைய சம்பளம் ஆகியவைகளுக்கு பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறது மாநில அரசு. அத்தனை பொறுப்பும் மாநில அரசைச் சார்ந்ததாக இருக்கிறது. அந்தப் பள்ளி டிபென்சைப் பொறுத்து அமைந்திருக்கிற காரணத்தினுல், டிபென்சில் ஏற்றுக்கொள்ளப்படுகிற மொழியும் அங்கே பயிற்றுவிக்க வேண்டியது அவசியமாக இருக்கும். மற்றைய

பயிற்சி பெரும்பாலும் ஆங்கிலத்தில்தான் நடைபெறுகிறது. இருந்தாலும் அந்த இடத்தில டிபென்ஸ், பாதுகாப்பைப் பொறுத்த வரையில் அத்தகைய மொழி அங்கே போதிக்கப்படுகிறது.

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி: நம்முடைய மாநில அரசு சுமார் 50 ஏழை மாணவர்களுக்கு உதவி செய்வதாகச் சொன்னார்கள். இன்னும் இங்கே அதிகமாக ஏழை மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்க முடியாத காரணத்தினால் அதிலே சேர்ந்து படிக்க முடியாத நிலை ஏற்படுகிறது. வேறு மாநிலங்களிலிருந்து அங்கே வந்து படிப்பதற்கு அந்த அரசுகள் ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், இன்னும் அதிகமான ஏழைகள் படிப்பதற்கு வாய்ப்பு, வசதியிருக்கும்படியாக இன்னும் அதிகமாக ஸ்காலர்ஷிப் கொடுக்கிற நிலையில் இந்த அரசு உத்தரவிடுமா? வரம்பு எதுவும் இல்லாத முறையில் ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்கு அரசு உத்தேசிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நாம் பொறுப் பேற்றுக் கொண்டிருப்பது 50 பேர்களுக்கு என்றாலும் கூட, 1969-70-ல் 68 பேர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். 1970-71-ல் அத்தனை பேர்களும் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். 102 பேர்கள் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். 1971-72-ல் 60 பேர்கள், 1972-73-ல் 68, 1973-74-ல் 50 பேர்களுக்கு கொடுத்திருக்கிறோம். மற்றவர்கள் கொடுத்து படிக்கவேண்டும் என்று வைத்திருக்கிறோம். யாரும் கொடுத்து படிக்க முன்வரவில்லை. 102 பேர்களுக்கு நாம் கொடுத்திருக்கிறோம். 10 லட்சம் ரூபாய் செலவழித்தாலும், எத்தனை பேர்கள் எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள் என்ற கணக்கைப் பார்த்தால், 7, 8, 6 பேர்கள் என்று தான் எடுத்துக்கொள்கிறார்கள். இவ்வளவு ஆண்டு காலம் படித்தும், அவர்களில் பல பேர் மறுபடியும் மற்ற மாணவர்களைப்போல் புகுமுக வகுப்பு, பி.ஏ., பி.எஸ்ஸி. படிப்புக்கு போக வேண்டியவர்களாக இருக்கிறார்கள். 102 பேர்களுக்குக் கொடுத்தோம். 10 ஆண்டுகள் காலம் படித்து விட்ட பிறகு 7, 8 பேர்கள்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆக, 50 பேர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கிறோம் என்றால் 5, 6 பேர்கள்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இதன் காரணமாக நாம் 50 பேர்கள் வரையில் ஸ்காலர்ஷிப் கொடுக்கலாம், மற்றவர்கள் பணம் கொடுத்து படிக்கலாம் என்ற நிலையிலே ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.





## திருமங்கலம் அரசினர் உயர்நிலைப்பள்ளிக் கட்டடம்

* 600 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-சுற்றுலா துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் தொகுதி, திருமங்கலம் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கான கட்டடத்தின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(இ) அது எப்போது வேலை துவங்கப்படவிருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) &(இ) திருமங்கலம் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்ட திருத்திய மதிப்பீடுகள் அனுப்புமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். மதிப்பீடுகள் கிடைக்கப்பெற்றவுடன் வேலை துவங்க ஒப்புதல் அளிக்கப்படும்.

## *Model School for girls.*

* 601 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether it is a fact that a Model School for girls has been opened at Madras by the Government; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) சென்னை சீமாட்டி வெலிங்டன் ஆசிரியைப் பயிற்சிக் கல்லூரி வளைவிற்குள் பெண்களுக்கென முன் மாதிரி உயர்நிலைப் பள்ளியொன்று 1973-74-ல் துவக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ்: இந்த மாநிலத்தில் வேறு இடங்களிலும் இதுபோன்று பள்ளிகளை அமைப்பதற்கு செயற்குறிப்பு அரசிடம் ஏதேனும் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: புதுக்கோட்டையில் ஆண்களுக்கு சென்ற ஆண்டில் ஒரு முன்மாதிரிப் பள்ளி துவக்கப்பட்டது. பெண்களுக்கு இந்த ஆண்டு சென்னையிலே துவக்கப்பட்டது. இவை ஆசிரியர்கள் பயிற்சி பள்ளியை ஒட்டி இருக்கவேண்டும் என்ற எண்ணத்தில் சென்னையிலும், புதுக்கோட்டையிலும் துவக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. தோப்பூர் திருவேங்கடம்:** இம்மாதிரி உயர்நிலைப் பள்ளியில் பயிற்சி பெற்ற மாணவர், மாணவிகளுக்கு தனியாக சலுகைகள் ஏதேனும் அளிக்கப்படுமா, வேலை வாய்ப்பு தருகிற நேரத்திலே என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இந்தப் பிரச்னை எழவில்லை. இப்பொழுதுதான் 6-வது வகுப்பிலிருந்து 9-வது வகுப்புவரை சென்ற ஆண்டு, இந்த ஆண்டு இந்தப் பள்ளிகள் துவக்கப்பட்டிருக்கின்றன. 1964-66-ல் கொத்தாரி கமிஷன் செய்த பரிந்துரையின் பேரில் இந்த முன்மாதிரி பள்ளிகள் ஒன்றிரண்டு ஆண்டுகளில் ஆண்களுக்கு ஒன்றும் பெண்களுக்கு ஒன்றுமாக அமைத்திருக்கிறோம். இந்த மாநில அளவிலே நடைபெறுகின்ற ஒரு போட்டியில் சிறந்த எண்ணிக்கை பெற்றவர்களாக இருக்க வேண்டும். ஏழைகளாக இருக்கவேண்டும். கிராமப் புறங்களிலிருந்து வந்தவர்களாக இருக்கவேண்டும் என்ற அடிப்படையை வைத்துத்தான் மாணவர்களை ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

அது மட்டுமல்ல. மத்திய அரசு திட்டம் தீட்டியிருக்கிறபடி திறமைமிக்க மாணவர்களாக வெளி வருபவர்களுக்கு ரூ. 1,000 உதவித் தொகை வழங்கப்படுகிறது. ரூ. 1,000 உதவித் தொகை பெற்றவர்களும் இப்படிப்பட்ட பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளப் படுகிறார்கள். பொதுவாக பள்ளி இறுதி வகுப்புக்கான பாடத் திட்டம் இப்பள்ளியில் பயிற்றுவிக்கப்பட்டாலும், மாணவியரின் ஒழுக்கத்தை வளர்ப்பதற்குக் காரணமாக உள்ள பல செயல்கள் இப்பள்ளியில் விசேடமாக இடம் பெறும். கூட்டுறவு மனப் பான்மையை விளக்கும் பல நல்ல விளையாட்டு நிகழ்ச்சிகள், கட்டுப் பாட்டை வளர்ப்பதற்கு உறுதுணையாக விளங்கும் தேசிய மாணவர் படை, மாணவியரின் பொது அறிவையும், சிந்தனை ஆற்றலையும் வளர்ப்பதற்கான பல விருப்ப வேலைகள், மாணவியரைச் சான்றோர்களாக ஆக்குவதற்கு காரணமான பல நல்ல கலை நிகழ்ச்சிகள் ஆகியவை இப்பள்ளியின் வேலைத் திட்டத்தில் விசேட இடம் பெறும். அவர்களிலிருந்து படிப்பதற்கேற்ற அளவுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தினர் 50 விழுக்காடு பள்ளியில் தங்கிப் படிக்க இலவசமாக வசதி செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன்:** இந்த மாதிரிப் பள்ளி மற்ற பள்ளிகளிலிருந்து என்ன முறையில் வேறுபட்டது என்று சொல்ல முடியுமா? அதே நேரத்தில் இம்மாதிரி முன்மாதிரிப் பள்ளிகளை இன்னும்





பரவலாக உருவாக்க ஏதாவது செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா? அதே நேரத்தில் இதற்கெல்லாம் மாநில அரசு எவ்வளவு செலவு செய்கிறது, மத்திய அரசு எவ்வளவு செலவு செய்கிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இப்பொழுது தான் பரீட்சார்த்தமாக இரண்டு இடங்களில் ஆண்களுக்கும் பெண்களுக்குமாக இரண்டு பள்ளிகள் துவக்கப்பட்டிருக்கின்றன. இதன் செலவு முழுவதையும் மாநில அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. நான் முதலிலே சொன்னபடி மாநிலம் முழுவதும் இருக்கிற கிராமப் புறங்களிலிருந்து வருபவர்கள், மற்ற இடங்களிலிருந்து வருபவர்கள் ஆகியோர்களுக்குப் பொதுவான ஒரு தேர்தல் நடத்தி, தேர்விலே தேர்ந்தவர்களாக இருப்பவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். அதுவும் ஏழை மாணவர்களாக இருப்பார்களேயானால் 50 சதவிகிதம் இலவசமாகவும் உறையுள் மற்றவைகளெல்லாம் தரப் படுகின்றன. இந்தப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக இருப்பவர்கள் எம்.ஏ., எம்.எஸ்ஸி. படித்து பட்டம் பெற்றவர்களாக இருக்கவேண்டும் என்று வைத்திருக்கிறோம். மேலும் 9. 10, 11-வது வகுப்புகளுக்கு பாடம் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்கள் எம். ஏ., எம்.எஸ்ஸி. பட்டம் பெற்றவர்களாக இருக்கவேண்டும், 6, 7, 8-வது வகுப்புகளுக்கு பாடம் கற்றுக் கொடுப்பவர்கள் பி.ஏ., பி.டி., பட்டம் பெற்றவர்களாக இருக்கவேண்டும் என்று வைத்திருக்கிறோம். முதலிலே குறிப்பிட்டபடி பல்வேறு விசேஷமான அம்சங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஒரு தனிப் பயிற்சி தரப்படும். இதனுடைய விரிவான நிலைமைகளை ஆராய்ந்ததற்குப் பிற்பாடு மற்ற மாவட்டங்களில் கூட இதை விரிவுபடுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படுமா என்பதை நாம் ஆலோசிக்க வேண்டும்.

**திரு. கோ. இளங்கோவன்:** இந்த மாதிரிப்பள்ளிகளில் பயில்கின்ற மாணவர்கள் அத்தனை பேர்களும் விடுதியில் தங்கித்தான் படிக்கின்றார்களா? இல்லை எனில் அதற்கு அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** விடுதியிலே தங்கித்தான் எல்லோரும் படிக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பெரும் பகுதியினர் விடுதியிலிருந்துதான் படித்து வருகிறார்கள்.

**திரு. கே. கந்தசாமி:** தலைவரவர்களே, இம்மாதிரி மாதிரிப் பள்ளிகளிலே குடும்ப நலத் திட்டம் போதிக்கப்படுகிறதா? அப்படி குடும்ப நலத் திட்டம் போதிக்கப்பட்டால் அரசுக்கு, மக்கள் பெருக்கத்தைக் குறைப்பதற்கு உறுதுணையாக இருக்கலாம் என்று அரசு கருதி அத்திட்டத்தை கொண்டு வர முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இந்த மாதிரிப் பள்ளிகளில் கல்வியை எந்த அளவுக்கு போதிக்கலாம் என்பது தான் ஆராயப்பட்டிருக்கிறது. இதற்கு அகில இந்திய அளவில் கருத்தரங்குகள் நடைபெற்று. மாநில அளவிலும் கருத்தரங்குகள் நடைபெற்றிருக்கின்றன. அதிகாரிகள், 2, 3, 4 நாட்கள் உட்கார்ந்து விவாதித்து செயல் முறைகளைக் கையாண்டியிருக்கிறார்கள். பாலுணர்ச்சியை ஊட்டுவது வேறு, பால் அறிவை தருவது வேறு. பால் அறிவை தருவதன் மூலம் மக்கள் பெருக்கத்தை எப்படிக் குறைக்கலாம் என்று தெரிந்துகொள்ளலாம். இப்போது, எங்கு பார்த்தாலும் பால் உணர்வை ஊட்டுவதாகக் குழப்புகிறார்கள். ஆனால் இதில் அந்தத் தன்மை இல்லை. மக்கள் பெருக்கத்தைக் குறைக்காவிட்டால் எதிர்காலத்தில் பொருளாதாரம் சரியாக இருக்குமா என்பதை தெரிந்துகொள்ள வேண்டுமென்ற முறையில் இத் திட்டத்தை புகுத்தலாம்.

**திரு. கு. காமாட்சி:** பேரவைத் தலைவரவர்களே, முன்மாதிரிப் பள்ளிகள் இந்த நாட்டிற்கே முன் மாதிரியாக இருக்குமென்று தெரிகிறது. ஆகவே இந்த முன்மாதிரிப் பள்ளிக்கூடங்களில் போதிக்கப்படுகின்ற கல்வியில், ஒழுக்க நடவடிக்கைகளுக்கு மார்க் கொடுத்து; பரீட்சை இல்லாமல் செய்வதன் மூலம் இந்த நாட்டிலிருக்கின்ற மாணவர்களிடத்திலிருக்கின்ற குழப்ப நிலைமையை மாற்றி அமைதியாக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** கல்வியில் பல் வேறு விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. அவை ஒன்றோடொன்று தொடர்புடையனவாக இருக்கின்றன. அவைகளை நாம் முறையாக மேற்கொள்ள வேண்டி வரும். மாதிரிப் பள்ளிகளை ஒவ்வொரு தாலுக்கா அளவிலும் ஊராட்சி ஒன்றிய அளவிலும் வைக்க வேண்டுமென மத்திய அரசிடம் வற்புறுத்தி வருகின்றோம். மத்திய கல்வி அமைச்சர் அவர்களே, இதை ஏற்றுக்கொண்டு இந்த முறையில் செய்யவேண்டுமென்று மத்திய அரசிடம் கூறி வருகிறார்கள்.





அந்தக் கருத்து அகில இந்திய அளவில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்று. மத்திய கல்வி அமைச்சர் இக்கருத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார். எல்லாக் கல்வி அமைச்சர்களும் இக்கருத்தை வற்புறுத்தியிருக்கிறார்கள். எனவே, இத்திட்டத்தை எல்லா மாவட்டங்களுக்கும் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்கும் கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. எஸ். வடிவேல்:** தலைவரவர்களே, முன்மாதிரிப் பள்ளிகளில் மும்மொழித் திட்டம் கொண்டுவர அரசு முன்வருமா? உரிமைக்குத் தமிழ், உறவுக்கு இந்தி, அகில உலக அறிவுக்கு ஆங்கிலம் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். எனவே, இந்திய துணைக் கண்டம் பூராவிலும் எங்கேயும் போய் வேலை பார்ப்பதற்கு உதவியாக இருக்கின்ற இந்தி மொழியை இம் மாதிரிப் பள்ளிகளில் பயிற்றுவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இது கொள்கைப் பிரச்சினை. இந்த மன்றத்திலே மிகத் தீவிரமாக விவாதிக்கப்பட்டு விளக்கங்கள் எடுத்து வைக்கப்பட்டன. 1968-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 23-ம் நாள் இப்பிரச்சினை விவாதிக்கப்பட்டு ஒரு திட்டம் நிறைவேற்றப்பட்டு இருமொழித் திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. நாம் இயற்றிய அத்திட்டத்தை மற்ற மாநிலங்களும் பின்பற்றுகின்ற அளவில் இருக்கிறது. சில மாநிலங்களில் மும்மொழித் திட்டம் என்பது பேரளவிலேதான் இருக்கிறது. ஒரு மொழித் திட்டம் அல்லது இருமொழித் திட்டம் மட்டுமே செயலளவில் இருக்கின்றன. எனவே, இம்மாநிலத்தில் இருமொழித் திட்டத்தை வைத்திருக்கிறோம். விருப்பப்பட்டவர்கள் அவரவர்களுக்கு வேண்டிய மொழிகளையும் கற்றுக்கொள்ளலாம். அதற்குத் தடையேதுமில்லை. சென்னையைப் பொறுத்தவரையிலும், 13 மொழிகள் கற்பதற்கு உரிமைகளை வழங்கியிருக்கிறோம். தனித்தனியாக நடைபெறுகின்ற அப்பள்ளிகளில் அம்மொழிகளைக் கற்கிறார்கள். சிறுபான்மை மொழியினர் பாதுகாப்பிற்காக, அவர்களுக்கென்று தனியாக பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. எந்த மொழியையும் கட்டாயப்படுத்துகின்ற நிலையில்லாமல், இருமொழித் திட்டம் இம்மாநிலத்தில் நன்கு செயல்படுத்தபட்டு வருகிறது.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** மாதிரிப் பள்ளிகளில் 6-ம் வகுப்பிலிருந்து 8-ம் வகுப்பு வரை பி.ஏ., பி.டி., ஆசிரியர்களைக் கொண்டும், 9-ம் வகுப்பிலிருந்து 11-ம் வகுப்பு வரை எம்.ஏ., பி.டி.,

எம்.எஸ்ஸி., பி.டி., ஆசிரியர்களைக் கொண்டும் கல்வி அளிக்க ஆசிரியர்களை நியமிப்பதாகச் சொன்னார்கள். இதனால் கல்வியின் தரம் உயரும். எனவே, இத்திட்டத்தை மற்ற இடங்களுக்கும் நிறைவேற்றுவதற்கு அரசு ஆசிரியர்களை நியமிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்* : இப்போது அதை செய்வதற்கில்லை. முன்மாதிரிப் பள்ளிகளில் இத்திட்டத்தை ஏற்படுத்தி, அதனுடைய விளைவுகளை கவனிக்க வேண்டும். பெரும் செலவின் அடிப்படையில் இத்திட்டம் நடைபெறுகிறது. முன் மாதிரியாக நடத்தப்படும் இப்பள்ளிகளில் மாணவ மாணவிகள் எப்படி வருகிறார்கள் என்பதை ஒப்பிட்டுப் பார்த்து மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எல்லாப் பள்ளிகளுக்கும் இம்மாதிரித் திட்டத்தை கொண்டுவருவதற்கு நிதிவசதி இடம் தராது. இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட்டால், எதிர் காலத்தில், நிதிவசதியை கருத்திற்கொண்டு மேற்கொண்டு இத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

### உயர்நிலைப் பள்ளி நூலகங்களுக்கு புத்தகங்கள்

**602 வினா—திரு. எம். சுரேந்திரன்* : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள லைப்ரரிகளில் Standard புத்தகங்களை போதிய அளவு வைக்க அரசு எடுத்துள்ள முயற்சிகள் யாவை?

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்* : உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள நூலகங்களுக்கு தரமுள்ள புத்தகங்கள் வாங்க ஆண்டு தோறும் ஏறத்தாழ ரூ. 1 லட்சம் அளவில் அரசு மான்யம் அளித்து வருகின்றது.

*திரு. எம். சுரேந்திரன்* : சார், லைப்ரரிகளுக்கு புத்தகங்கள் வாங்குவதற்கு ரூ. 1 லட்சம் அளிக்கப்படுகிறது என்ற கணக்குடன் நிறுத்திக் கொள்ளாமல், எந்தெந்த மாதிரியான புத்தகங்கள் வாங்கப்படுகின்றன, மாணவர்களுக்கு சரியான தூண்டுதலை அளிக்கின்றனவாக இருக்கின்றனவா. வருங்காலத்தில் மாணவர்கள் அப்புத்தகங்களைச் சரியான முறையில் பயன்படுத்துகின்ற, தேவையான



புத்தகங்களாக இருக்கின்றனவா என்பனவற்றை ஆராய்வதற்கு ஏதாவது நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்* : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்துக்களை எல்லாம் அறியவேண்டுமென்ற முயற்சிகளையெல்லாம் பள்ளி கல்வி இயக்குநர் எடுத்து வருகிறார். பள்ளிகளில் இதற்கென 'அக மதிப்பீட்டு முறை' ஏற்படுத்தப்பட்டு 250 பள்ளிகளில் கட்டாயப்படுத்தப்படுகிற முறை இருக்கிறது. இதற்கென தனி மார்க்குகள் அளிக்கப்படுகின்றன. நூல் நிலையங்களைப் பயன்படுத்துவதற்கு 50 மார்க்குகள், கேம்ஸ், ஸ்போர்ட்ஸ்கள் ஆகியவற்றிற்கு 50 மார்க்குகள், 'கேரக்டர்'—ஒழுக்கத்திற்கு 50 மாரக்குகள்—இப்படி ஆக மொத்தம் 250 மார்க்குகளுக்கு என்று உயர்நிலைப் பள்ளிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு தான் அத் திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட பள்ளிகளில் நூலகங்கள் நல்ல முறையில் பயன்படுத்தபபட்டு வருகின்றன. எட்டாவது வகுப்பு மாணவன், எட்டு நூல்களையாவது கட்டாயம் படிக்க வேண்டுமென்ற வரைமுறை இருக்கிறது. ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் எப்படிப்பட்ட நூல்கள் தேவை என்பது அப்பள்ளியின் தலைமை ஆசிரியரின் முடிவுக்கு விடப்படுகிறது. இதற்கென தனி நூலக இயக்குநர் ஒருவர் பணியாற்றி வருகிறார். இம்முறையை மிகவும் செம்மைப்படுத்துவதற்காக, ஆலோசனை சொல்வதற்காக ஐவர் கொண்ட குழு ஏற்படுத்தப்பட்டு ஏற்கனவே சென்னை கிளை நூலகத்திற்குத் தலைவராக இருந்த திரு. வி. என். சுப்பராயன் அக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அக்குழு, இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குள் அறிக்கை தருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அறிக்கை வந்த பிறகு இம்முறைகளை செம்மைப் படுத்துவதற்கு முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

*திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)* : உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூ. 1 லட்சம் புத்தகங்கள் வாங்குவதற்காக கொடுத்தாலும் அந்தப் பணம் பள்ளிகளுக்கு சரிவர போய்ச் சேருவதில்லை. மேலும், நூலகங்களில், மாணவர்களுக்குத் தேவையான ரெபரன்ஸ் புத்தகங்கள் கிடையாது. அதற்குப் பதிலாக, அங்கே துப்பறியும் நாவல்களும், கதைப் புத்தகங்களும்தான் இருக்கின்றனவே தவிர, மாணவர்களுடைய அறிவை, ஒழுக்கத்தை சீர்திருத்தக்கூடிய

புத்தகங்களாக அங்கே இல்லை. எனவே, இனிமேலாவது அந்த உயர்நிலைப்பள்ளி நூலகங்களிலே, நல்ல விஞ்ஞான புத்தகங்கள், மதச் சார்புடைய இலக்கியங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கு முதலிடம் அளிக்க அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நூலகங்களைச் செம்மைப்படுத்துவதற்காக, ஆலோசனை சொல்வதற்கு ஐவர் கொண்ட குழு இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குள் அறிக்கை தருமென்று கூறினேன். இரண்டு மூன்று ஆண்டுகள் என்பது சரியல்ல. இரண்டு மூன்று திங்களுக்குள் அந்த அறிக்கை கிடைத்துவிடும். எனவே, இரண்டு மூன்று ஆண்டுகள் என்று கூறியது தவறு. அதை திருத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், நூலகங்களுக்கு வாங்கப்படும் புத்தகம்பற்றி குறிப்பிட்டார்கள். மாணவர்களும் ஆசிரியர்களும் பயன்படுத்துகின்ற வகையில், அறிவாற்றலை பெருக்குகின்ற வகையில் எந்தெந்த புத்தகங்கள் வேண்டுமென்று சொல்வதற்காக மாநில அளவில் வல்லுநர் குழு ஒன்று இருக்கிறது. அக்குழுவை, எந்தெந்த புத்தகங்கள் சிறப்புடையனவாக இருக்குமென்று யோசனை சொல்லும்படி கேட்டுக் கொண்டிருக்கிறோம். அந்தக் குழுவினர் ஆராய்ந்து, அவர்கள் இப்படிப்பட்ட புத்தகங்களை வாங்கவேண்டுமென்று அறிக்கை கொடுத்தால், அந்த அறிக்கை மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

திரு. நா. வெ. குருசாமி: உயர்நிலைப் பள்ளிகளில் லைப்ரரிகள் இருப்பதைப் போல ஆய்வுக் கூடங்களை ஏற்படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஏற்கனவே 50, 60 பள்ளிகளில் ஆய்வுக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமின்றி, இயங்கும் ஆய்வுக் கூடங்கள் 12 மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டு அவையும் இயங்கிக்கொண்டிருக்கின்றன என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH: At present, for doing library work in many schools, accommodation is not available. Even for teaching classes, in many schools, they are finding it difficult to find accommodation. The Hon. Minister for Education has stated that to intensify the library movement, a Committee has been asked to study the whole matter. May I know from the Hon. Minister for Education whether that Committee would make arrangements to provide separate accommodation for library purposes?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, கல்வித்துறை அதையும் ஆராய்ந்து வருகிறது. அதிலே தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆ. பரந்தாமன்: எந்த உயர்நிலைப் பள்ளிகளாக இருந்தாலும் 700 மாணவர்களுக்கு மேற்பட்டவர்கள் இருந்தால்தான் லைப்ரரி கிராண்ட் கொடுக்கிறார்கள். அதை மாற்றி, 300 அல்லது 400 மாணவர்கள் உள்ள பள்ளிகளுக்கும் லைப்ரரி கிராண்ட், லேபரட்டரி கிராண்ட் கொடுக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நிதி வசதியைப் பொறுத்துத்தான் இந்த கிராண்ட் கொடுக்கப்படுகிறது. இப்போது 750 உயர்நிலைப் பள்ளிகளுக்கு 500 ரூபாய் வீதம் தரப்படுகிறது. நமது நிதி வசதி பெருகுமானால் குறைந்த மாணவர்கள் உள்ள பள்ளிகளுக்கும் இந்த கிராண்ட் கொடுக்கப்படுவது பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. கு. காமாட்சி: இந்த மாநிலத்திலே சில சென்ட்ரல் பள்ளிகள் இருக்கின்றன. அந்தப் பள்ளிகளின் லைப்ரரியில் இந்தி புஸ்தகங்களைத்தான் அதிகமாக வைத்திருக்கிறார்கள். அதைக் கட்டாயமாகப் படித்துத் தேற வேண்டுமென்று இருக்கிறது. மேலும் அந்தப் பள்ளிகளில் இந்தி கட்டாயப் பாடமாகவும் இருக்கிறது. அது இந்த மாநில அரசின் கொள்கைக்கு விரோதமாக இருக்கிறது. ஆகவே, இந்த முறையை மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? அதோடு அந்தப் பள்ளிகளுக்கு நமது அரசு மானியம் வழங்குகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்தப் பள்ளிகளுக்கும் நமது அரசுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அவை சென்டரல் பள்ளிகள் என்று சொன்னார்கள். அது சென்ட்ரலாகத்தான் இருக்கிறது. மத்திய அரசின் அனுமதியோடு அவை நடைபெறுகின்றன. மத்திய அரசு ஊழியர்கள் பெரும்பாலோர் நிறைந்திருக்கின்ற இடங்களில் அவர்களின் வசதிக்காக இத்தகைய பள்ளிகள் ஆங்காங்கே

தொடங்கப்படுகின்றன. சென்னை, கோவை, திருச்சி போன்ற இடங்களில் அத்தகைய பள்ளிகள் பல இருக்கின்றன. தமிழ்நாட்டிலே இருக்கின்ற அத்தகையப் பள்ளிகளில் தமிழை கட்டாயமாக போதிக்க வேண்டுமென்று நாம் வற்புறுத்தி வருகிறோம். அவர்கள் 'அவுட் ஆஃப் ஸ்கூல் டைம்'-ல் வேண்டுமானால் சொல்லிக் கொடுக்கலாம் என்று சொல்கிறார்கள். நாம் வகுப்பு நேரத்திலேயே ஒன்றிரண்டு பீரியடுகளை ஒதுக்கிச் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

**திரு. தோப்பூர் திருவேங்கடம்:** தலைவரவர்களே, சிறந்த புஸ்தகங்களை வெளியிடுவது, தேர்ந்தெடுப்பது தமிழ்நாடு டெக்ஸ்ட் புக்ஸ் சொஸைட்டி மூலமாக நடைபெறுகிறது. அதைப் போலவே பள்ளிக்கூட நூலகங்களில் வைக்கப்படும் புத்தகங்களையும் தேர்ந்தெடுப்பதற்கு ஒரு தனி நிறுவனம் அமைக்கப்பட்டு, அந்த நிறுவனம் சிபாரிசு செய்யும் புத்தகங்களை வைக்கவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அதற்கு தனி நிறுவனம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. நூலகக் குழு பரிந்துரை செய்கின்ற புத்தகங்களை வாங்கி வைப்பதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. கோ. இளங்கோவன்:** நூலகப் படிப்புக்கு என்று 50 மதிப்பு எண்கள் அளிக்கப்படுவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதோடு வாரத்திலே இதற்காக ஓரிரு பீரியடுகளை ஒதுக்கி, மாணவர்கள் புத்தகங்களைச் சரியாகப் படிக்கிறார்களா என்பதை ஆசிரியர்கள் கண்காணிக்கின்ற வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, 250 உயர்நிலைப் பள்ளிகளில் இந்த முறை இருக்கிறது. அதற்காக பீரியடுகளை ஒதுக்கி இருக்கிறார்களா என்ற தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விபரம் அளிக்கப்படும். புத்தகங்களை மாணவர்கள் படிப்பதற்கு கொடுத்து விட்டு, அவர்கள் படித்து வந்து முக்கிய கருத்துக்களைச் சொல்லவேண்டுமென்று பரீட்சை 'இன்டர்னல் அசெஸ்மென்ட்' முறையில் வைக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி(*) இடப்பட்டிருந்தால் அது உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதை குறிக்கும்.

## (2) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### (அ) தேவிகுளம், பீர்மேடு பகுதிகளிலுள்ள தமிழ்நாட்டு தொழிலாளர்கள் பாதிப்பு குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தேவிகுளம், பீர்மேடு பகுதிகளிலுள்ள தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், அதுபற்றி விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்றும் திரு. ஜேம்ஸ் அவர்களும், திரு. ஷெரீப் அவர்களும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையை ஒத்திவைத்து விவாதிக்க தக்கது என்பதை அவர்கள் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, தேவிகுளம் பீர்மேடு பகுதிகளில் தமிழ்நாட்டிலுள்ள ஏறத்தாழ 50,000 தொழிலாளர்கள் அங்குள்ள தோட்டங்களில் வேலை செய்து வருகிறார்கள். கழிந்த சில மாதங்களாக அங்கே இருக்கின்ற மலையாளிகளும், கேரள அரசாங்கமும் தலையிட்டதன் காரணமாக இந்தத் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஆங்காங்கே தாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஒழுங்காகத் தொழில் செய்து, வாழ்க்கை நடத்த முடியாத ஒரு பதட்ட நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஒவ்வொரு தோட்டத்திலும் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெற்று, அதன் காரணமாக ஒரு பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு உடனடியாக ஒரு பரிகாரம் காணப்படவேண்டும். ஆகவே, அந்தத் தொழிலாளர்களின் சார்பாகவும், அங்கே இருக்கின்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த சிறு முதலாளிகளின் சார்பாகவும் பரிகாரம் காண்பதற்கு நம்முடைய முதலமைச்சரவர்களுக்கு மனு கொடுக்கப்பட்டிருக்கிறது.

இது இன்னொரு மாநிலத்திலே நடைபெறுகின்ற பிரச்சினை ஆனாலும் நம்முடைய நாட்டைச் சேர்ந்தவர்கள் அங்கே பாதிக்கப்படுகிறார்கள் என்பதால், இரு மாநில அமைச்சர்களும் தொடர்பு கொண்டு இந்தப் பிரச்சனைக்கு உடனடியாக ஒரு தீர்வு காண வேண்டும்; அதற்கு நம்முடைய அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல. கன்னியாகுமரி மாவட்டம் தாய்த் தமிழகத்தோடு சேரவேண்டுமென்று அன்றையதினம் கிளர்ந்தெழுந்ததற்கு மலையாளிகளின் கொடூர செயல்கள்தான் காரணம் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே நினைவூட்ட விரும்புகிறேன். அன்றைய தினம் தமிழர்களை மலையாளிகள் அடிமைகளாக வைத்திருந்தார்கள். அதன் காரணமாகத்தான் கேரளத்தோடு சேர்ந்திருந்த 9 தாலுகாக்களை தாய்த் தமிழகத்தோடு சேர்க்க வேண்டுமென்று போராட்டம் நடைபெற்றது. ஆனால் 4½ தாலுகாக்கள்தான் தமிழகத்தோடு சேர்க்கப்பட்டன. எனவே, மலையாளிகளின் கொடுமைகளிலிருந்து நிரந்தரமாக தமிழர்கள் விடுபட எஞ்சிய பகுதிகளையும் தமிழ்நாட்டோடு சேர்க்க வேண்டுமென்று மத்திய அரசோடு பேச்சுவார்த்தை நடத்தினால்கூட சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முக்கியமாக நெய்யாற்றங்கரை, செங்கோட்டை, சித்தூர், தேவிகுளம், பீர்மேடு போன்ற பகுதிகள் இருக்கின்றன. அவைகளை தாய்த் தமிழகத்தோடு சேர்க்க நம்முடைய அரசாங்கம் மத்திய அரசை அணுகி ஆவனச் செய்யவேண்டும். அந்தப் பகுதிகளில் இருக்கின்ற தொழிலாளர்கள் வாழ்க்கை நடத்த முடியாத அளவுக்கு பாதிக்கப்பட்டிருப்பதால், ஒரு பெரும் பதட்ட நிலைமை ஏற்பட்டிருப்பதனால், அவர்களுக்கு ஒரு பரிகாரம் காணத்தக்க வகையில் பல விஷயங்களைப் பற்றி விவாதிக்க வேண்டியிருப்பதால், இந்த மன்றத்தின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இந்தப் பிரச்சினையை விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*** திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவரவர்களே, கேரளத்தில் உள்ள கூரநாடு, குட்டநாடு, வயநாடு ஆகிய பகுதிகளில் இருக்கின்ற பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் பன்னூறு ஆண்டுகளாக அங்குள்ள கரம்பு நிலங்களையெல்லாம் திருத்தி, நன்செய் நிலங்களாகவும், நல்ல தோட்டங்களாகவும் மாற்றி, அந்த நிலங்களிலே





உழைத்து வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். ஆனால் இன்றைக்கு அவர்கள் கேரள நாட்டில் தொடர்ந்து வாழமுடியாத நிலைக்கு ஆளாகிக்கொண்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் அங்குள்ள கொடுமையினால் தமிழ்நாட்டிற்குள் வந்துகொண்டிருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கானத் தமிழர்கள் அங்கேயுள்ள தங்களுடைய சொத்து, சுகங்களை இழந்து இங்கே திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் பிரச்சனையாக இருப்பதால் இதுபற்றி விவாதிக்க இந்த மன்றத்தின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்.

ஜேம்ஸ் அவர்கள் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். இந்தப் பிரச்னை அடுத்த மாநிலத்தில் நிகழ்வதால் நாம் தலையிட முடியுமா, எப்படி இந்த மன்றத்தில் விவாதிக்க முடியும் என்ற வினா எழலாம் என்று குறிப்பிட்டார்கள். கடந்த சில மாதங்களுக்கு முன்பு தமிழ்நாட்டிலே கூடலூர் பகுதியில் உள்ள மலையாளிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்லி, கேரள சட்டமன்றம் அந்த பிரச்சினையை விவாதித்திருக்கிறது. கேரள அமைச்சர்களும், ஏ. கே. கோபாலன் போன்ற அரசியல் தலைவர்களும் அந்தப் பிரச்சினையிலே அக்கறை எடுத்துக்கொண்டார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருடன் கேரள அமைச்சர் ஒருவர்கூட வந்து அதுபற்றி பேச்சுவார்த்தை நடத்தி, கூடலூர் பகுதி மலையாளிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். முதலமைச்சரவர்களும் அதற்கு ஆவன செய்யப்படும் என்று பதில் அளித்தார்கள். ஆனால் கேரளப் பகுதியில் இருக்கின்ற குறிப்பாக தேவிகுளம், பீர்மேடு போன்ற இடங்களில் இருக்கின்ற தமிழர்கள் கடந்த மூன்று ஆண்டு காலமாகவே பாதிக்கப்பட்டு வருகிறார்கள். அங்கே இருக்கின்ற தொழிலாளர்கள் லேபர் ஆக்ட்டின்படி லேபர் யூனியன்களை வைத்து செயல்பட்டாலும் கூட அந்த மாநில அரசின் ஒத்துழைப்பு சரியாக இல்லாததால் அவர்கள் எல்லாம் பாதிக்கப்படுகிறார்கள்.

(முற்பகல் 10.00)

அண்மைக்காலத்தில் அங்கே இருக்கிற காந்தி பாறை எஸ்டேட், வெங்கலப்பாறை எஸ்டேட், மூக்கப்பன் எஸ்டேட், ராஜாமன் ஏலத்தோட்டம், மங்கலதேவி எஸ்டேட், பாம்புப்பாறை எஸ்டேட், ரெட்டியார் ஏலத்தோட்டம், சின்னவர் ஏல எஸ்டேட். மலையப்

பிள்ளை எஸ்டேட், ரத்தினப்பாறை எஸ்டேட், எல்.கே.என்.ஆர். எஸ்டேட், கட்டக்குரியன் எஸ்டேட், ஜனதா ஏல எஸ்டேட் ஆகிய இத்தனை எஸ்டேட்டுகளில் இருக்கிற பல உரிமையாளர்களும், பல தொழிலாளர்களும் அந்த மாநிலத்தைவிட்டே வெளியேறக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அங்கே ஐ.ஜி.யை சந்தித்து முறையிட்டு வந்திருக்கிறார்கள். போலீஸ் அமைச்சரை சந்தித்து முறையிட்டிருக்கிறார்கள். 8—10—1973-ல் வன்முறை நடந்து பல தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். 8—10—1973 முதல் 13—10—1973 வரை ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வீடு வாசலை இழந்து துன்புறக்கூடிய நிலையில் தமிழ் மக்கள் இன்னலுக்குள்ளாகியிருக்கிற காரணத்தினால் இதை விரிவாக விவாதிக்க, மற்ற விஷயங்களை ஒத்திவைக்கவேண்டுமென்று நான் முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மக்கள் உறவோடு கூட, இன்றைக்கு நம் இரண்டு மாநிலங்களுக்குமிடையே இருக்கிற உறவு கெட்டுவிடாமல் விவாதிக்கப்பட வேண்டிய பிரச்சினை. நம்முடைய மாண்புமிகு ஜேம்ஸ் அவர்களும், திரு. லத்தீப் அவர்களும் கேரள மாநிலத்தில் தமிழ்ச் சமுதாயத்தைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்களுக்குக் கேடுகள் விளைவிக்கப்படுவதாக எடுத்துச் சொன்ன விவரங்கள், ஏற்கனவே ஒரு முறை 1972-ம் ஆண்டு இந்த அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு, 1972 ஏப்ரல் மாதம் நான் கேரள முதலமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஏலத்தோட்டக்காரர்களும், ஏலத்தோட்டத் தொழிலாளர்களும் துன்புறுத்தப்படுகிறார்கள் என்பதைக் குறிப்பிட்டு, அதைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எழுதினேன். அதற்கு கேரள முதலமைச்சர் 1972 ஆகஸ்டு மாதம் அனுப்பிய பதிலில், அங்குள்ள பிரச்சினைகள் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டவை என்றும், தமிழர்கள் மட்டும் துன்பத்திற்கு ஆளாகவில்லை என்றும், அமைதி குலையும் போதெல்லாம் கேரள காவல்துறையினர் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மீண்டும் இதுபோன்ற நிலைமை ஏற்பட்டிருப்பதாக இங்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் மாத்திரமல்லாமல், அந்தப் பகுதி தமிழ்நாட்டு எல்லையில் இருக்கிற பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும் கடந்த வாரம் என்னைச் சந்தித்து அதைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். நானும் கேரள அரசோடு கலந்து பேசி தக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்திருக்கிறேன். அதற்கிடையில் இன்னொரு அரசு எதையும் கவனிக்கவில்லை என்று குற்றஞ்சாட்டிப் பேசுவதும், அதற்காக அவையை ஒத்திவைத்து விவாதிப்பதும் முறை அல்ல என்று கருதுகிறேன்.



நண்பர் ஜேம்ஸ் அவர்கள் தேவிகுளம், பீர்மேடு மறுபடியும் தமிழகத்தோடு இணையவேண்டுமென்று சொன்னார்கள். இது தும்பை விட்டு வாலைப் பிடிக்கிற காரியம் ஆகிவிடும் என்று கருதுகிறேன். ஏற்கனவே தேவிகுளம், பீர்மேடு தமிழ்நாட்டில் இருக்க வேண்டுமென்று தமிழ்நாட்டிலுள்ள கட்சிகள் ஹர்த்தால் நடத்திய போது, "குளமாவது, மேடாவது?" என்று பெரிய தலைவர்கள் பேசினார்கள். இப்போது மறுபடியும் அந்த எல்லைகளைத் திருப்ப வேண்டுமென்று கோருவது இன்றையச் சூழ்நிலையில் சரியல்ல. காலப்போக்கில் அகில இந்திய அளவில் அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுமானால், அப்போது தேவிகுளம், பீர்மேடு தமிழகத்தோடு இணையவேண்டுமென்று கோரலாமே தவிர இப்போது எழுப்புவது சரியல்ல என்று தெரிவித்துக்கொண்டு, மீண்டும் இதுபற்றி கேரள அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதப்படும், பேரவையை ஒத்திவைத்து அதைப்பற்றி இங்கே விவாதிக்கத் தேவையில்லை என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, பேரவையை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்கத் தேவையில்லை என்ற காரணத்தினால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு நான் அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

**(ஆ) மதுரை, சேலம் நிகழ்ச்சிகளுக்குப்பின் பிரிவினை இயக்கம் குறித்து மத்திய அரசுக்கு மாநில அரசு பதில் அனுப்பத் தவறியதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்களும், திருமதி டி. என். அனந்தநாயகி அவர்களும், திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களும் 'serious situation arising out of Government's failure to send reply to the Centre concerning separatist movement in our

State and tension now prevailing in Madras after the recent events of Madurai and Salem '.

என்கிற ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அது எப்படி பேரவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கத்தக்க அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை சுருக்கமாக விளக்க வேண்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டில் ஒரு பிரிவினை இயக்கம் வளர்ந்துகொண்டு வருகிறது, அது சம்பந்தமாக மாநில சர்க்காருடைய அறிக்கையை நாங்கள் கேட்டிருக்கிறோம் இது வரையிலும் பதில் வரவில்லை என்பதாக உள்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அநேமாதிரியாக நாடாளு மன்றத்தில் இன்றைக்கு இருக்கக் கூடிய அரசின்பேரில் நம்பிக்கை இல்லையென்ற தீர்மானம் வருகிறபோது பிரதம மந்திரி அவர்கள் தமிழகத்தில் ஆட்சியிலுள்ள கட்சியினர் நேரிடையான பிரிவினைக் கட்சியாக இப்போது இல்லை. அந்தப் பிரிவினை இயக்கத்தை நடத்துகின்றவர்களுக்கு அருகாமையில் இருக்கிறார்கள் என்று தெரிவித்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் நாடாளுமன்றத்தில் பேசியபோது கூட இன்னும் வலுவான மத்திய அரசு வேண்டுமென்றே சொன்னார்கள்.

இன்று நமது மன்ற கூட்டத்தின் கடைசி நாள். மத்திய அரசு கேட்டதற்கு மாநில அரசு ஏதாவது பதில் கொடுத்திருக்கிறதா? கொடுத்திருந்தால் அந்த பதில் என்ன என்பதை இந்த அவை தெரிந்துகொள்ள வேண்டும். பதில் கொடுக்காமல் இருக்கிறார்கள் என்றால் இது மிகவும் முக்கியமான விஷயமாகிறது. அவையின் மற்றைய நடவடிக்கைகளை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று பிரேரணை கொடுத்திருக்கிறேன்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு மதுரையில் ஒரு மகாநாடு நடந்தது. அந்த மகாநாடு அப்பட்டமான பிரிவினை மகாநாடாக இருந்தது. அந்த மகாநாட்டில் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய முக்கியமான அமைச்சர்கள் கலந்து கொண்டார்கள். அது மாத்திரம் அல்ல.





ஆகஸ்டு 14 ஆம் தேதி அன்று சேலத்தில் குமாரபாளையம் அங்கப்பச் செட்டியார் பெரியார் பிறந்த தின விழாவை எப்படி நடத்துவது என்பதுபற்றி பேசப்போவதாக நடத்திய கூட்டமும் —பிரிவினையைத் தூண்டிவிடக்கூடிய பேச்சுக்களாகத்தான் அமைந்தது அதிலும் இரண்டு அமைச்சர்கள் கலந்து கொண்டார்கள்.

சென்னையிலும் வேறு ஒரு பெயரில் ஒரு மகாநாடு வர இருக்கிறது. அதுவும் இந்தச் சமயத்தில் வந்துவிடுமோ என்கிற அதிர்ச்சியை பலரும் தெரிவித்திருக்கிறார்கள். இதுபற்றி அரசின் நிலை என்ன என்று தெரியவேண்டும். அரசு மற்ற மற்ற இடத்தில் என்ன சொன்னாலும் கூட, இந்த மன்றத்தில் திட்டவட்டமாக தங்களுடைய நிலையைத் தெளிவுபடுத்தியாகவேண்டும்.

பெரியாருடைய பகுத்தறிவு இயக்கத்தைப்பற்றிய மரியாதை எப்போதும் உண்டு. நாடாளுமன்றத்தில் கூட தீக்சித் அவர்களே, இனிமேல் அவருக்குச் சொல்லி அவரை மாற்ற முடியாது என்று சொல்லியிருக்கிறார். தமிழ்நாட்டில் அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு இயங்கக்கூடிய அரசு, அதற்கு விரோதமாக— பெரியாரைப் பொறுத்தவரையில் தனியாக வைத்தாலும், அதற்குத் தூண்டுகோலாக அமைச்சர்கள் செல்வது என்பது கூடாதென்றும், அந்த இயக்கத்தில் இப்போதுள்ளவர்கள் ஈடுபட்டிருக்கொண்டிருப் பார்களானால் அதைத் தடுக்க வேண்டுமென்ற கவலையோடுதான் நான் இதைக் கொண்டுவந்தேன்.

விதி 82-இன்படி அமைச்சர் அவர்களே இதுபற்றி இந்த அவைக்கு ஒரு அறிக்கை அளித்திருக்கலாம். மத்திய அரசு இன்னதைப்பற்றிக் கேட்டது, நாங்கள் இன்ன பதில் அனுப்பி யிருக்கிறோம் என்று தெரிவித்திருக்கலாம். இன்றைக்கு இரண்டு விதமாகச் சொல்கிறார்கள். பதில் அளிக்கப்பட்டுவிட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால் திருவாரூரில் முதலமைச்சர் பேசிய பிரசங்கத்தில் இன்னும் பதில் அனுப்பப்படவில்லை என்ற கருத்து தொனிக்கிறது. இன்னமும் பதில் அனுப்பப்படவில்லை என்றால் தன் கடமையிலிருந்து அரசாங்கம் தவறியிருக்கிறது. அதுவும் இது மிகமிக முக்கியமான பிரச்சினை. சென்னை நகரத்தில் வேறு நடக்க இருக்கிற மகாநாட்டில் இதுபோன்ற நிலை ஏற்படலாம். ஆகவே அவையை ஒத்திவைத்து இதுகுறித்து விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, இப்பொழுது தமிழகத்தின் ஒரு பகுதியிலே பிரிவினை பற்றி பேசப்பட்டு வருகின்றது என்பது எல்லாருக்கும் தெரிந்த ஒன்று. இம்மாதிரி பிரிவினை வாதம் எந்த நிலையிலேயும் தமிழகத்திற்கோ, நாட்டுக்கோ நன்மை பயக்காத ஒன்று என்பதும் நம் எல்லோருக்கும் தெரியும். எந்தக் காரணமாக இருந்தாலும், நாட்டினுடைய ஒருமைப்பாடு காப்பாற்றப்பட வேண்டும். நாட்டினுடைய ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவிக்கக் கூடிய எந்த நிலைமையையும் நாம் அனுமதிக்கக் கூடாது. இந்த நிலை இப்படி இருக்கும்போது, தமிழகத்திலே பல நாட்களாக ஒரு சாராரினால் இந்தப் பிரிவினை வாதம் பேசப்படுகின்றது. பொதுவாக, தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கிற இந்த அரசு மறைமுகமாக இந்தப் பிரிவினைக்கு ஏதாவது ஆதரவாக இருக்குமோ என்ற அச்சம் தமிழகத்திலே இருக்கிற பெரும்பான்மையான மக்களுக்கு இருக்கிறது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பாராளுமன்றத்திலே மதிப்பிற்குரிய பிரதம அமைச்சர் அவர்கள் கூறுகின்றபொழுது, திராவிட முன்னேற்றக் கழகம் வெளிப்படையாக பிரிவினையை ஆதரிக்கிறது என்று நான் குற்றம் சாட்டவில்லையென்றாலும் பிரிவினை வாதம் பேசுகின்றவர்களோடு நெருங்கிய உறவு வைத்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆகவே, இது சம்பந்தமாக அரசு தன்னுடைய கருத்தை திட்டவட்டமாக எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது. இந்த சந்தேகம் வளர்வதற்குக் காரணம், இம்மாதிரி பிரிவினைபற்றி பேசக் கூடிய கூட்டங்களிலே மதிப்பிற்குரிய நம்முடைய அமைச்சர்கள் கலந்துகொண்டிருக்கும் போது, அந்த பிரிவினை வாதம் தவறானது என்று அங்கே அவர்கள் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அதையும் அவர்கள் அந்த இடத்திலே சுட்டிக்காட்டாத காரணத்தினாலே அவர்களும் அதற்கு ஆதரவாக தங்களுடைய கருத்தை வைத்துக் கொண்டிருப்பார்களோ என்ற அச்சம் நமக்கெல்லாம் இருக்கிறது என்ற காரணத்தாலேயும்,.. இதைப்பற்றி இந்த சபையிலே இந்த அமைச்சரவையினுடைய கருத்து விளக்கப்பட வேண்டுமென்ற காரணத்தினாலும். இம்மாதிரி பிரிவினைப் பேச்சு தேசிய ஒருமைப்பாட்டுக்கே களங்கம் விளைவிக்கக் கூடிய ஒன்று என்ற காரணத்தினாலும், அதை விட, தலையாய, முக்கியமான வேறு அலுவல்கள் இருக்க முடியாது என்ற காரணத்தினாலும், இதைப் பற்றி நாம் ஒரு தெளிவான முடிவை மேற்கொள்ள வேண்டுமென்ற காரணத்தினாலும் இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இந்தத் தீர்மானத்தை விவாதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் கழிந்த சில மாதங்களாக பிரிவினை இயக்கம் ஒன்று ஓரளவில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மதுரையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. ஆர்க்காட்டிலும் இதுபோன்ற ஒரு கூட்டம் நடைபெற்றது. இவற்றில் எல்லாம் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்களும் அரசின் அதிகாரத்தில் இருக்கிற, அரசுக்கு ஆதரவாக இருக்கிற, சட்டமன்ற உறுப்பினர்களும் பலர் கலந்து கொண்டார்கள்.

இதற்கு முன்னதாக முதலமைச்சர் அவர்கள் பிரிவினைக் கொள்கையை நாங்கள் கைவிட்டு விட்டோம் என்று அறிக்கை விட்டிருந்தாலும்கூட, பிரிவினைக் கொள்கைப் பிரச்சாரம் செய்கின்ற கூட்டங்களில் அமைச்சர்கள் பங்கு கொள்கிறார்கள் என்றால், மறைமுகமாக அதற்கு ஆதரவுதான் கொடுக்கிறார்கள் என்று அர்த்தம்.

அது மட்டுமல்ல. அடிக்கடி அமைச்சர்கள் கூறுகிறார்கள், மத்திய அரசு இன்னின்ன காரியங்களை செய்யவில்லையென்றால், அது தேசிய ஒருமைப்பாட்டுக்கு இடையூறாக இருக்கும் என்றெல்லாம் உள்ள எச்சரிக்கைகளும் விடுகின்றார்கள். ஆக, அந்த முறைகளைப் பார்க்கும்போது பிரிவினைக் கொள்கையை முற்றிலுமாக இந்த அரசு விட்டிருக்கிறதா என்று ஐயப்பட வேண்டியிருக்கிறது.

நாடாளுமன்றத்தில் பிரதமர் அவர்கள் இந்த அரசு இதற்கு ஆதரவு கொடுக்கவில்லையென்று கூறினாலும்கூட, மத்திய அரசாங்கமும் இதில் ஓர் அக்கறை கொண்டதாகத்தான் இருக்கிறது. ஏனென்றால், இந்த மாநில அரசே ராஜமன்னார் குழுவை நியமித்து ஒரு அறிக்கையை தயார் செய்தது. மாநில அரசுக்கு அதிகம் அதிகாரங்கள் வேண்டும், மாநில அரசு-மத்திய அரசு இந்த அரசுகளுக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தை

வரையறுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு ஒரு அறிக்கை தயாரிக்கபட்டு 1971 முதல் அது இன்னும் கோல்ட் ஸ்டோரேஜில் தான் இருந்து கொண்டே இருக்கிறது. ஒருவேளை, அந்த அறிக்கையை இந்த மன்றத்தில் வைத்திருந்தால்கூட, முதலமைச்சர் ஏற்கனவே இந்த மன்றத்தில் அறிவித்திருக்கிறார்கள் அந்த அறிக்கை இங்கே விவாதிக்கப்படும், விவாதத்தின் அடிப்படையில் இந்த மாநில அரசாங்கத்திற்கு மேலும் என்ன என்ன அதிகாரங்கள் தேவைப்படும் என்று வலியுறுத்த இருக்கிறோம் என்று கூறினாலும்கூட, இதுவரையில் இந்த மன்றத்தில் அது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதிலிருந்து என்ன தோன்றுகிறது என்றால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதோடு ஒட்டிப் பேச வேண்டும்.

திரு. ஜே ஜேம்ஸ்: இத்தோடு ஒட்டித்தான் ஆக, அந்த அறிக்கை இப்போது தேவை இல்லை. அதற்கும் மேலாக இன்றையதினம் பிரிவினை சக்திதான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறதா என்ற சந்தேகம் எழுகின்றது.

அதோடு நாடாளுமன்றத்தில் ஹோம் மினிஸ்டர் அவர்கள் மாநில அரசுக்கு இது சம்பந்தமாக நாங்கள் எழுதி இருக்கிறோம் என்று சொன்னபொழுது, இந்த மாநில அரசு அதற்குப் பதில் அனுப்பி இருக்கிறதா? அனுப்பியிருந்தால் இந்த மன்றத்திற்கு அதனை அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. இதுவரையிலும் இந்தத் தகவல் இந்த மாமன்றத்திற்குக் கொடுக்கப்படவில்லை. ஆகவே, இதில் ஏதோ மறைமுகமாக இந்த அரசு பிரிவினை கொள்கையை இன்னும் வைத்துக்கொண்டுதான் இருக்கிறது என்ற ஐயப்பாடு இருக்கிற காரணத்தினால், இந்தப் பிரச்னையை விவாதிப்பதற்கு இந்த மன்றத்தின் மற்ற நிகழ்ச்சிகளை ஒதுக்கி வைக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். பெரியார் அவர்கள் பிரிவினையைக் கேட்பது இன்று நேற்றல்ல. 1963-ம் ஆண்டு திராவிட முன்னேற்றக் 





கழகம் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையில் இயங்கிய அந்தக் காலத்தில் பிரிவினைக் கொள்கையை விட்டுவிட்ட பிறகும் பெரியார் தொடர்ந்து பிரிவினையை வலியுறுத்தி வந்திருக்கிறார். அப்பொழுதெல்லாம் பெரியார் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்துக் கொண்டிருக்கவில்லை என்பது மாத்திரமல்ல, மாறாக, காங்கிரஸ் கட்சிக்கு பேராதரவு நல்கி வந்தார்கள். அப்பொழுது காங்கிரஸ் ஒன்றாக இருந்த நேரம். அந்தக் காலத்தில் முதலமைச்சராக காமராசர் அவர்கள் வீற்றிருந்தபோதும், தொடர்ந்து பக்தவத்சலம் அவர்கள் வீற்றிருந்தபோதும், பெரியார் அவர்களுடைய ஆதரவை காங்கிரஸ் கட்சி பெற்றிருந்தது. தேர்தல் நேரங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்கடிக்க வேண்டுமென்பதற்காக பெரியார் அவர்களுடைய பெரும் பிரச்சாரம் காங்கிரஸ் கட்சிக்குப் பயன்படுத்தப் பட்டது.

ஆனால்; காங்கிரஸ் கட்சி பெரியாருடைய கொள்கைகள் அனைத்தையும் ஒத்துக்கொண்டதா என்றால், இல்லை. பெரியார் காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கிறார். ஆனால், காங்கிரஸ் கட்சி பெரியாருடைய எல்லா கொள்கைகளையும் ஒத்துக்கொள்ள வில்லையென்று அன்றைக்கிருந்த முதலமைச்சர் காமராசர் அவர்களே எடுத்துக் கூறி இருக்கிறார்கள். அப்பொழுதும் பெரியார் அவர்கள் பிரிவினை பேசினார். தன்னுடைய பத்திரிகையில் பிரிவினையைப்பற்றி எழுதினார். அவர் நடத்திய ஊர்வலங்கள்—இப்பொழுதாவது ஊர்வலங்கள் நடைபெறுகின்றன—காங்கிரஸ் கட்சி ஆண்ட பொழுது சிலைகள் உடைக்கப்பட்டன. பிள்ளையார் சிலையை உடைப்பதற்கு ஒரு நாளும் குறிக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் பிள்ளையார் சிலைகள் உடைக்கப்பட்டன. அப்பொழுது காமராசர் அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். நான், காமராசருக்கு இதிலே சம்பந்தம் உண்டு என்று சொல்லவில்லை. பிள்ளையாரை உடைக்க வேண்டுமென்று சொன்ன பெரியாரோடு தொடர்பு கொண்டிருந்தார். அப்படி தொடர்பு கொண்டிருந்த காரணத்தினாலே, காமராசரும் பிள்ளையார் உடைக்க சம்மதம் கொடுத்து விட்டார் என்று அர்த்தம் அல்ல. ஆகவே, இந்தப் பிரச்னையை அணுகுகிற நோக்கில், திராவிட முன்னேற்றக் கழக

பெரிய நடவடிக்கை ஏன் எடுக்கவில்லை என்பதற்கான காரணத்தை நான் சொல்வதைவிட உள்துறை அமைச்சர் உமா சங்கர் தீக்சித் அவர்கள் சொல்லியிருப்பதும், பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சொல்லியிருப்பதும்தான் காரணங்கள் என்று எடுத்துக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அண்மையிலே சென்னையிலே நடைபெற இருப்பதைப்பற்றிக் குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர்கள், பலவேறு கட்சித் தலைவர்கள் முறையிட்டு எனக்கு எழுதியிருக்கிறார்கள். இங்கேயும் கடவுளர் படங்கள், சிலைகள் களங்கப்படுத்தப்படலாம், அதைக் கண்காணிக்கவேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள். அதைத் திராவிடக் கழக நண்பர்களுக்கு எடுத்துச் சொல்லி இப்பொழுது அந்த ஊர்வலம் கைவிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடவுளர்களைப் பெரியார் அவர்கள்தான் களங்கப் படுத்துகிறார்களா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். நாட்டிலே உள்ள கோயில்களிலே, புத்தகங்களிலே, கடவுளர்கள் களங்கப் படுத்தப்படவில்லையா, அதைத்தான் பெரியார் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். வேண்டுமானால் என்னுடன் வந்தால், தேவாலயங்களிலேயும், கோயில்களிலேயும் கடவுளர்கள் எப்படி எப்படி களங்கப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை என்னால் எடுத்துக்காட்டமுடியும். அது கூடத் தேவையில்லை என்ற அளவிற்கு பக்தர்கள் மனதைப் புண்படுத்தவேண்டாம், அவர்களே அந்தச் சிலைகளையும் படங்களையும் பார்த்துக்கொள்ளட்டும், நாம் அவர்களுடைய மனதைப் புண்படுத்தவேண்டாம் என்று பெரியார் அவர்களுடைய திராவிடக் கழகத்திற்கு எடுத்துச்சொல்லப் பட்டிருக்கிறது.

அண்மையிலே பெரியார் அவர்களைச் சந்தித்துப் பேசியதற்குப் பிறகு அண்மைக்காலத்திலே அவர்களுடைய அறிக்கைகள் அவர்கள் பிரிவினை கேட்கவில்லை என்ற நம்பிக்கையை கொடுக்கின்றது. சமத்துவம், சாதிமதபேதமற்ற சமுதாயத்தை அமைக்க வழிவகுக்கின்ற தன்மையிலே இப்பொழுதுள்ள அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும், இல்லாவிட்டால் பிரிவினை கேட்பேன் என்றுதான் காரணமாகச் சொல்கிறார்கள். இதுவே நல்ல அறிகுறியாகும். அவர்களுடைய கட்சி பலம் வாய்ந்த





கட்சியாக இல்லாவிட்டாலும், அவர்கள் பெரியவர்கள், இந்த நாட்டுக்காகப் பல ஆண்டுக்காலம் உழைத்தவர்கள். பங்களா தேஷ் போராட்டத்தின்போது தமிழ்நாட்டிலே உள்ள ஒருவர் பாகிஸ்தானை ஆதரித்து அறிக்கைவிட்ட நேரத்திலே அவர்மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்டதற்கு நான் என்ன பதில் சொன்னேனோ அதே பதிலை இப்போதும் சொல்கிறேன் என்று கூறி இந்த அவையை அதற்காக ஒத்திவைக்கத் தேவையில்லை என்று கூறி அமைகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மத்திய சர்க்கார், மாநில சர்க்காருக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறதே, அதற்கு பதில் கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** 24 ஆம் தேதியன்று கடிதம் எழுதியிருக்கிறார்கள். சிலர் மாதக் கணக்கில் எடுத்துக் கொள்கிறார்கள் பதில் எழுத. நான் கேரள மாநிலத்திலிருந்து வந்திருந்த பதிலைப்பற்றிக்கூடக் குறிப்பிட்டேன். மத்திய அரசு, இன்னும் சொல்லப்போனால் சோஷலிஸத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்ற முறையிலே வேண்டுகோள்கள்பற்றி பதில் எழுதாமல் வருடக்கணக்கிலேகூட அங்கே தேங்கிக்கிடக்கின்றன. அந்தக் கடிதம் நவம்பர் 24 ஆம் தேதி எழுதப்பட்டு இருக்கிறது. அதற்குப் பிறகு 27, 28 ஆம் தேதியில், உள்துறை அமைச்சர், பதில் எதிர்பார்க்கப்படுகிறது. என்று குறிப்பிட்டிருக்கிறார். அது ஆராயப்பட்டு நிச்சயமாகப் பதில் மத்திய அரசுக்கு அனுப்பப் படும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir. on a point of order. I had given notice of an adjournment motion under Rule 42. My Leader has given notice only regarding separatist agitation. But my notice is in connection with the procession which is just to be taken out by the Dravida Kazhagam on 8th and 9th instant and so I must be allowed to speak on it.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். நாம் அலுவல் ஆய்வுக் குழுவிலே இதைப்பற்றி ஒரு முடிவு எடுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அப்படியே இருந்தாலும், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திலே அது அடங்காது. இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திலே கூறப் பட்டது அல்ல தான் கொடுத்தது என்று அம்மையார் அவர்களே சொல்லிவிட்டதால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திலே அவர்களைத் தாங்கள் அனுமதிக்க இயலாது என்று கூறியிருப்பது முறையானதுதான்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளுங்கள் என்னையும் பேச அனுமதியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது பாயின்ட் ஆப் ஆர்டர் ஆகாது. நீங்கள் கொடுத்தது என்ன ஆயிற்று என்று அறையிலே வந்து கேளுங்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நான் கொடுத்து கிட்டத்தட்ட 10 நாளைக்குமேல் ஆகிவிட்டது, என்ன ஆயிற்று என்றே தெரிய வில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு கட்சியிலே இருந்து பல உறுப்பினர்கள் கொடுத்திருந்தால் அந்தக் கட்சியிலிருந்து ஒருவர் கொடுத்ததைத்தான் அனுமதிக்கலாம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு நான் என்னுடைய அனுமதியை மறுக்கிறேன்.

### (3) அரசினர் தீர்மானங்கள்

#### (அ) விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, "சட்டப் பேரவை 41-வது விதி, பிரிவு (3)-படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்குமேற்பட்ட காரியங்களைக் கொண்டுவரக் கூடாது என்ற விதியை இன்று தளர்த்தவேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.



### (4) கவன ஈர்ப்பு.

#### (அ) அரிசன விவசாயத் தொழிலாளர்கள் தாக்கப்படுவதும் கொலை செய்யப்படுவதும் குறித்து.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

"அரிசன விவசாயத் தொழிலாளர்கள் தாக்கப்படுவதும், கொலை செய்யப்படுவதும் அதிகரித்து வருவது பற்றியும், குறிப்பாக தஞ்சாவூர் மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதங்களில் ஐந்து அரிசனங்கள் கொலைசெய்யப்பட்டிருத்தல் பற்றி".

(முற்பகல் 10.30)

**திரு. எஸ். வடிவேல்:** தலைவரவர்களே, பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"அரிசன விவசாயத் தொழிலாளர்கள் தாக்கப்படுவதும், கொலை செய்யப்படுவதும் அதிகரித்து வருவது பற்றியும், குறிப்பாக தஞ்சாவூர் மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதங்களில் ஐந்து அரிசனங்கள் கொலை செய்யப்பட்டிருத்தல் பற்றி".

அதோடு, தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு வட்டம், சோழ புரத்தில் 3 அரிசனங்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். திருவாரூருக்கு அருகில் உள்ள பழவனக்குடி கிராமத்தில் ஒரு அரிசன் கொலை செய்யப்பட்டிருக்கிறார். திருவையாறுக்கு அருகில் உள்ள ஒரு இடத்தில் ஒருவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். வடார்க்காடு மாவட்டத்தில் மாதனூர் என்ற இடத்தில் கமலா என்ற அரிசனப்பெண் கற்பழிக்கப்பட்ட சம்பவம் நடந்திருக்கிறது. இப்படி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிக்கையில் உள்ளதை மட்டுமே படிக்க வேண்டும். பிரசங்கம் செய்யக்கூடாது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஒரத்தநாடு வட்டம், சோழபுரத்தில் நடந்த கொலை, விவசாயிகள் சம்பந்தப்பட்டதோ அல்லது சாதி வெறி சம்பந்தப்பட்டதோ

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 டிசம்பர் 4

அல்ல. அங்கு அரிசனங்களுக்கிடையே கூலியைப் பகிர்ந்துக் கொள்வதில் எழுந்த தகராறு காரணமாகக் கொலை நடந்திருப்பதாகத் தெரிகிறது.

17—9—1973 அன்று மாலை ஒரு பெண்மணி இறந்ததையொட்டி ஈமக்கடன்கள் செய்ததற்காக கூலியாக ரூ. 19.50, அரிசனங்கள் பகிர்ந்துக்கொள்ளும்படி நாட்டாண்மைக்காரரிடம் கொடுக்கப்பட்டது. அன்று நாட்டாண்மைக்காரரின் சகோதரர் இறந்துவிட்டபடியால் அவர் பணத்தை வெள்ளையன் என்பவரிடம் கொடுத்து மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிக்கும்படி சொல்லிவிட்டுப் போய் விட்டார். அப்பணத்தைப் பகிர்ந்துக்கொள்வதில் அரிசன மக்களுக்கிடையே மனக்கசப்பு ஏற்பட்டது. இதன் தொடர்பாக மறுநாள் (18—9—1973) இரு தரப்பினர்களுக்குமிடையே—அதாவது கிட்டப்பா அவரது உறவினர்கள் ஒரு சார்பிலும், இரத்தினம் அவரது உறவினர்கள் மற்றொரு சார்பிலும்—பயங்கர ஆயுதங்களுடன் சண்டை ஏற்பட்டது.

இக்கலவரத்தில் கிட்டப்பாவைச் சேர்ந்த முத்தன், லட்சுமணன் ஆகிய இருவர் தலத்திலேயே உயிரிழந்தனர்; மற்றும் 7 பேர் காயமுற்றனர்.

இரத்தினத்தைச் சேர்ந்தவர்கள் 4 பேர் காயமுற்றனர்; இதில் தங்கையன் என்பவர் மறுநாள் (19—9—1973) தஞ்சை அரசு மருத்துவ மனையில் உயிரிழந்தார்.

கிட்டப்பா தரப்பினர் மீது ஒரு வழக்கும், இரத்தினம் தரப்பினர் மீது ஒரு வழக்கும் ஓரத்தநாடு காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை செய்யப்பட்டது. குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு இ.பி.கோ. 323, 324, மற்றும் 302 பிரிவுகளின்கீழ் கிட்டப்பா மற்றும் ஐவர் மீது ஒரு குற்றப் பத்திரிக்கையும், இ.பி.கோ. 147, 148. 323, மற்றும் 302 ஆகிய பிரிவுகளின்கீழ் இரத்தினம் மற்றும் 7 பேர்கள் மீது மற்றொரு குற்றப் பத்திரிக்கையும் பட்டுக்கோட்டை ஸ்டேஷனரி சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

பாபநாசம் வட்டம், சோமேஸ்வரபுரத்தில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அங்கு விவசாயத் தொழிலாளர்களுக்கும் மிராசுதாரர்களுக்கும் பூசல் எழுந்தது. செய்தியறிந்த வட்டாட்சியர்



1973 டிசம்பர் 4] [டாக்டர் மு. கருணாநிதி]

28—10—1973 அன்று அங்கு சென்று இரு தரப்பினரையும் அழைத்து சுமுகமான தீர்வு காண முயன்றார். அன்று தீர்வு காண முடியவில்லை. எனவே வட்டாட்சியர் மீண்டும் ஒரு நாள் வருவதாகக் கூறி அதுவரை இருதரப்பினரும் அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டு திரும்பிச் சென்றார். 1—11—1973 அன்று வட்டாட்சியர் அங்கு சென்றபோது விவசாய வேலைகள் அமைதியாக நடந்து கொண்டிருந்தன.

ஆனால், அன்று மாலை மேற்படி கிராம விவசாயத் தொழிலாளர்கள் சிலர், கிராமத்திற்கு வெளியேயிருந்து நடவிற்காக வரவழைக்கப்பட்டத் தொழிலாளர்களைத் தடுக்க முயன்றனர். அப்பொழுது திரு. டி. எஸ். சீனிவாச பிள்ளை என்பவரின் நிலத்தில் நடவு நடந்துக் கொண்டிருந்தது. அதனை நிலச்சொந்தக்காரரின் உறவினர் சிதம்பரம்பிள்ளை என்பவர் மேற்பார்வை செய்துக் கொண்டிருந்தார். வெளியே இருந்து வந்த தொழிலாளர்களைத் தடுப்பதில் ஈடுபட்ட ஆறுமுகம் என்பவருக்கும் மேற்கூறிய சிதம்பரம்பிள்ளை என்பவருக்கும் மோதல் ஏற்பட்டு ஒருவரையொருவர் அரிவாளால் வெட்டிக்கொண்டதாகக் கூறப்படுகிறது. ஆறுமுகம் பாபநாசம் அரசு மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப் பட்டார். அங்கு அவர் மரணமடைந்தார். சிதம்பரம்பிள்ளை தஞ்சாவூர் அரசு மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

செய்தியறிந்த காவல் துறை ஆய்வாளர் கிராமத்திற்குச் சென்று போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார். தகவல் கிடைத்தவுடன் மேற்குத் தஞ்சை போலீஸ் சூப்பிரண்டெண்டெண்ட் ஒரு ஆயுதப்படை பிரிவினருடன் கிராமத்திற்கு விரைந்தார். 2—11—1973 அன்று தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரும், கும்பகோணம் உதவி கலெக்டரும் கிராமத்தைப் பார்வையிட்டனர். இப்பொழுது நிலைமை அமைதியாக இருக்கிறது.

கபிஸ்தலம் காவல் நிலையத்தில் இது சம்பந்தமாக இ.பி.கோ. 302 பிரிவின்கீழ் வழக்கு (எண் 97/73) ஒன்று பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை செய்யப்படுகிறது. இந்த வழக்கில் குற்றவாளிகளான ஐவரில் ஒருவர்—சிதம்பரம்பிள்ளை—தஞ்சை மருத்துவ மனையில் சிகிச்சைப் பெற்று வருகிறார். வீரமான்குடியைச் சேர்ந்த மற்ற நால்வர்களான குற்றவாளிகள் (1) பழனியாண்டி,

(2) தங்கவேல் மூப்பனார், (3) சுப்பிரமணிய மூப்பனார், (4) பக்கிரி மூப்பனார் என்பவர்கள் தலைமறைவாக இருக்கின்றனர். அவர்களைக் கைது செய்ய காவல் துறையினர் தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் கைது செய்யப்பட்டவுடன் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்படும்.

மேற்கூறியவை தவிர வேறு வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. எனவே அரிசன விவசாயத் தொழிலாளர்கள் பரவலாகத் தாக்கப்படுகின்றனர் என்று கூற இயலாது. எனினும் விவசாயத் தொழிலாளர்களுக்குத் தேவையான பாதுகாப்பு அளிக்க தமிழக அரசு ஒருபோதும் தயங்காது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், சோழபுரம் சம்பவம் அதிகாலையில் நடந்தது என்றும், 19—9—1973 ஆம் தேதியன்று பிரதமர் அவர்கள் தமிழகத்திற்கு வந்த காரணத்தால் பந்தோபஸ்திற்காக அதிகமான போலீசார் சென்றுவிட்டதாகவும், போலீசாரே மத்தியானத்திற்குமேல்தான் விசாரணை செய்தார்கள் என்றும் கூறப்படுகிறதே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதுபற்றித் தகவல் இல்லை. ஆனால் குற்றவாளிகள் இருதரப்பினர்மீதும் ஏற்ற, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

## (ஆ) கீழ்க்குளம் கிராமப் பகுதியில் போதிய நீர் வழங்கப் படாமையும் அதனால் நிலங்கள் தரிசாக்கப்பட்டதும் குறித்து

THIRU N. DENNIS: I wish to call the attention of the Hon. Minister for Public Works to a matter of urgent public importance, namely, the inadequate water-supply in Keezhkulam revenue village covered by the Devicode Branch of the Chittar-Pattanamkal Irrigation System resulting in the lands becoming fallow.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, சிற்றார்-பட்டணங்கால் பாசனத் திட்டத்தைச் சேர்ந்த தேவிகோடு கிளைக்கால்வாய், கீழ்க்குளம் கிராமபகுதியில் 563.41 ஏக்கர் நிலப்





பரப்பிற்குப் பாசனமளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில், 343.26 ஏக்கர் மட்டுமே இதுவரை பாசன வசதி அளிக்கப் பட்டுள்ளது. ஆயக்கட்டுப்பகுதியின் இவ்வாறு பாசன அளவு குறைந்துள்ளதற்குக் கீழ்க்கண்டவை காரணங்களாகும்:—

(1) கால்வாயில் திட்டமிட்ட அளவுக்குத் தண்ணீர் அனுப்பப் பட்டாலும் கடற்கரைக்கு வெகு அருகாமையில் அமைந்துள்ள ஆயக்கட்டுப் பகுதியில் உள்ள மண் அதிக அளவில் நீரை ஈர்த்துக் கொள்வதன் காரணமாக கால்வாயில் அனுப்பப்படும் நீர் போதுமானதாக இல்லையெனத் தெரியவந்தது. சாதாரணமாகத் தேவைப்படும் நீரைக்காட்டிலும் இருமடங்கு அல்லது மூன்று மடங்கு நீர் அதிகமாகத் தேவைப்படுகிறது.

(2) அப்பகுதியிலுள்ள உழவர்கள் பெரும்பாலும் அளவில் சிறிய நிலங்களையே வைத்திருக்கின்றனர். இப்பகுதியிலுள்ள நிலங்களின் தன்மை காரணமாக இங்கு புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்றுவதில் காணப்படும் முன்னேற்றம் மிகவும் மெதுவாக உள்ளது.

(3) நெற்பயிரைக் காட்டிலும் மரவள்ளிக்கிழங்குப் பயிருக்கு அதிக வருவாய் கிடைப்பதால் அதனையே பயிரிட அப்பகுதி உழவர்கள் விரும்புகின்றனர்.

போதிய அளவு நீர் வழங்கப்படாதது குறித்துப் புகார்கள் தொடர்ந்து வந்ததன் காரணமாக அரசு கட்டளையிட்டதன் பேரில் (பாசனத்) தலைமைப்பொறியாளர் 5—10—1972-ல் அப்பகுதிக்குச் சென்று பார்வையிட்டு அதுபற்றி அறிக்கை ஒன்றை அரசுக்கு அனுப்பினார். இந்த அறிக்கையின் அடிப்படையில் கருங்கல் பங்கிட்டுக் கால்வாய்த் திட்டத்தின்கீழ் பாசனம் பெறும் ஆயக்கட்டுப்பகுதியில் பயிர்த்தேவைகளை இயன்ற அளவு துல்லியமாக மதிப்பிட்டு அப்பகுதிக்கான தகுந்த பயிர் முறை குறித்துக் கருத்துத் தெரிவிக்க அப்பகுதியின் மண் வளம் பற்றி வேளாண்மைத் துறை ஆய்வு செய்தது. மண்வள ஆய்வு குறித்த அறிக்கை (பாசனத்) தலைமைப்பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது. மண்வள ஆய்வு குறித்த அறிக்கையையொட்டி (பாசனத்) தலைமைப்பொறியாளர் செய்யவிருக்கும் பரிவுரையின் அடிப்படையில் மேற்கொண்டு அரசு நடவடிக்கை எடுக்கும்.

[1973 டிசம்பர் 4

**திரு. என். டென்னிஸ்:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறும்பொழுது அங்கு மணற்பாங்காக இருப்பதால் தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கிறது என்று கூறினார்கள். மணற்பாங்கான இடத்தில் தென்னைதான் அதிகமாகப் பயிர் செய்யப்படுகிறது. அங்கு நெல் பயிர் செய்யப்படுவதில்லை. இன்னும் இங்கே மரவள்ளிக்கிழங்கு பயிரிடப்படுவது தண்ணீர் தட்டிற்குக் காரணம் என்று சொன்னார்கள். தண்ணீர் கிடைக்காததால்தான் திரும்பவும் மரவள்ளிக்கிழங்கு பயிரிடப்படுகிறது. அங்கே தொடர்ந்து தண்ணீர் விடாத நிலைமை இருக்கிறது. விளவங்கோடு தாலுக்கா நெல் விளைச்சல் குறைந்த இடம். எனவே, அங்கே தொடர்ந்து தண்ணீர் விடாத நிலைமையை மாற்றுவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டென்னிஸ் அவர்கள் ஏற்கனவே அதைப்பற்றி இந்த அரசுக்குப் புகார் தெரிவித்ததன் பேரில் தலைமைப் பொறியாளரை அனுப்பி அங்கே பார்த்து அரசுக்கு அறிக்கை அனுப்பும்படி சொன்னோம். அவர் பார்த்த பிறகு இந்த விவரங்களைத் தந்திருக்கிறார். எவ்வளவு நீரை அனுப்பினாலும் அது கடைசி கடைமடைக்குப் போகவில்லை என்ற கருத்து வந்திருக்கிறது. அந்த மண்ணுக்கு ஏற்ற பயிரைப்பற்றி வேளாண்மைத் துறையினர் ஆய்வு செய்து தலைமைப் பொறியாளருக்கு அனுப்பியிருக்கிறார்கள். தலைமைப் பொறியாளரிடமிருந்து அறிக்கை இன்னும் கிடைக்கவில்லை. அந்த அறிக்கை கிடைத்த பிறகுதான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**(இ) சென்னை நகரில் ரேஷன் கார்டுகள் வைத்திருப்பவர்களுக்கு ரவை, மைதா போன்ற உணவு தானியங்கள் கிடைக்காமை குறித்து**

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவரவர்களே, பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:



1973 டிசம்பர் 4] [திரு. எம். ஏ. லத்தீப்]

"சென்னை நகரில் ரேஷன் கார்டுகளை வைத்திருப்பவர்கள் குறிப்பிட்ட கடைகளில் உணவு தானியங்கள், ரவை, மைதா போன்றவைகளை தொடர்ந்தாற்போல் "ஸ்டாக் இல்லை" என்ற அறிவிப்பின் அடிப்படையில் அடிக்கடி பெறமுடியாமல் அவதிப்படுகின்ற நிலைபற்றி".

**மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி:** சென்னை நகரில் ஏழை மக்களுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலைகளில் அரிசி வழங்கும் திட்டத்தை இந்த அரசு நடத்தி வருகிறது. இதற்காக வரையறுக்கப்பட்ட வருமான வரம்பு திங்கள் ஒன்றுக்கு ரூ. 300 ஆகும். இத்திட்டத்தின் கீழ் சுமார் 3·56 லட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மாதம் ஒன்றுக்கு பெரியவர்களுக்கு 4 கிலோ வீதமும் சிறியவர்களுக்கு 2 கிலோ வீதமும் அரிசி கீழ்க்கண்ட விலைகளில் வழங்கப்படுகிறது.

| | ரூ. | பை. |
|---|---|---|
| முதல் தரம் கிலோ ஒன்றுக்கு | 1 | 20 |
| இரண்டாம் ரகம் கிலோ ஒன்றுக்கு | 1 | 10 |

ரூபாய் 300-க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு சுமார் 1.40 இலட்சம் சர்க்கரை அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு உயர்ரக அரிசி ஒரு குடும்பத்திற்கு திங்கள் ஒன்றுக்கு 15 கிலோ வீதம் கையிருப்பைப் பொறுத்து வழங்கப்படுகிறது. நகரில் 540 கடைகள் மூலமாக உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

**கோதுமை, கோதுமைப் பொருட்கள்**

கோதுமையையே வழக்கமாக உணவாக உட்கொள்பவர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு கோதுமை 6 கிலோ வீதமும், நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு திங்களொன்றுக்கு 5 கிலோ வீதமும் வழங்கப்படுகிறது. மத்திய அரசு 1962-ம் ஆண்டு நவம்பர் திங்கள் வரை 35,000 டன் கோதுமையை நம் மாநிலத்திற்கு ஒதுக்கி வந்தது. ஆனால் பிறகு இந்த ஒதுக்கீடு படிப்படியாகக் குறைக்கப்பட்டு நடைபெறும் டிசம்பர் திங்களுக்கு மிகவும் குறைந்தளவான 2,000 டன் மட்டுமே ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இந்த ஒதுக்கீட்டைத்தான் நாம் கோதுமையையே உணவாக பயன்படுத்துவோர்க்கும், ரொட்டி தயாரிப்பவர்களுக்கும் பெருமளவு பயன்படுத்தும் சிற்றுண்டி சாலைகள், உணவு விடுதிகள் போன்ற நிறுவனங்களுக்கும்

மற்றும் குடும்ப அட்டைகளின் பெயரில் பொதுமக்களுக்கும் வழங்கவேண்டியுள்ளது. ஆதலினால் மத்திய அரசை நம் மாநிலத்துக்கு குறைந்த பட்சம் 20,000 டன்னாவது ஒதுக்கீடு செய்து தர வேண்டிக்கொண்டோம். அக்டோபர் மாதம் வரை கோதுமைப் பொருட்கள் கீழ்க்கண்ட விகிதத்தில் வழங்கப்பட்டது :

| | மைதா/ரவா | கோதுமை மாவு |
|---|---|---|
| அரிசி அட்டைகள் | 2 கிலோ | 4 கிலோ |
| சர்க்கரை அட்டைகள் | 3 கிலோ | 6 கிலோ |

கோதுமை ஒதுக்கீடு குறைந்ததை அடுத்து கோதுமைப் பொருட்கள் இருப்பும் குறைந்துவிட்டது. எனவே நவம்பர் 73 முதல் இப்பொருட்களின் விநியோக அளவு கீழ்க்கண்டவாறு குறைக்கப்பட்டுள்ளது.

| | மைதா/ரவா | கோதுமை மாவு |
|---|---|---|
| அரிசி அட்டைகள் | 1 கிலோ | 2 கிலோ |
| சர்க்கரை அட்டைகள் | 2 கிலோ | 3 கிலோ |

வரப்போகும் கிருஸ்மஸ் திருநாளை முன்னிட்டும், புதுவருடப் பிறப்பை முன்னிட்டும் மேலும் 5,000 டன் அளவாவது ஒதுக்கீடு செய்யுமாறு வற்புறுத்தியுள்ளோம். பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

ரவை, மைதா தவிர மற்ற எந்த உணவு தானியங்களுக்கும் தட்டுப்பாடு இல்லை.

**திரு. எம். ஏ. லத்தீப் :** அரசாங்கத்திடம் ஸ்டாக் இல்லாததால் பங்கீட்டுக் கடைக்காரர்களிடம் ஸ்டாக் இல்லை என்ற நிலைமை இருந்தால் பரவாயில்லை. அரசாங்கத்திடமிருந்து சப்ளை பெற்ற பிறகு தவறான முறையில் பயன்படுத்த ஸ்டாக் இல்லை என்று சொல்லி கன்ஸ்யூமர்களுக்குக் கொடுக்காமல் மறுக்கிற நிலை இருக்கிறது. இதைத் தடுக்க சரியான முறையில் டிஸ்ட்ரிப்யூஷன் நடக்கிறதா என்பதற்கான கண்காணிப்பு முறை வைக்கப்பட்டிருக்கிறதா? குறிப்பாக, சென்னை மாநகரத்தில் இந்தப் பிரச்சினை அதிகமாக இருக்கிறது. எங்களுடைய தலைவர் திருப்பூர் மொய்தீன் சாயபு அவர்கள் தொகுதியான ஹார்பர் தொகுதியில் இந்தப் பிரச்சினை



அதிகமாக எழுந்திருக்கிறது. அந்தத் தொகுதியிலுள்ளவர்கள் எல்லாம் கையெழுத்திட்டு மனுவைக் கொடுத்திருக்கிறார்கள். இதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி :** இப்போது நடைமுறையிலுள்ள முறைகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். 35,000 டன் வந்த இடத்திலே 9,000 டன்தான் கொடுத்திருக்கிறார்கள். எத்தனை நாட்களுக்கு இதனைக் கொடுக்க முடியும் என்று பார்த்து அந்தந்தப் பகுதியிலுள்ளவர்களுக்கு ஓரளவு கொடுக்கப்பட்டு வருகிறது. தவறு ஏற்பட்டிருக்குமானால் அதைப்பற்றித் தனியாகக் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே, நாங்கள் கொடுப்பதில் அதிகத் தவறு இல்லாமல் கூடிய வரையில் நல்ல முறையில் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். ஒவ்வொரு மாதமும் இதுபற்றிச் சர்க்கார் மிகக் கவனமாகக் கவனம் செலுத்தி வருகிறது.

## (ஈ) மேட்டூர் கெமிக்கல்ஸ் தொழிலாளர் வேலை நிறுத்தமும் அதனால் ஏற்பட்டுள்ள தொழிலாளர் பாதிப்பும் குறித்து

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, சேலம் ஜில்லா மேட்டூரிலிருக்கும் மேட்டூர் கெமிக்கல்ஸ் தொழிற்சாலைகளில் இரண்டில், வேலை செய்யும் தொழிலாளர்கள் தங்களின் 7 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 26—11—1973-ம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்து வருவது பற்றியும், இதனால் அங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலைபற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மேட்டூர் ரசாயன தொழில் கழக (வரையறைக்குட்பட்டது) தொழிற்சாலை மேட்டூரில் இரண்டு தொழிற்சாலைகளில் எரிகாரம் மற்றும் ரசாயனங்கள் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளன.

(1) கெமிக்கல் தேசிய தொழிலாளர் சங்கம், மேட்டூர் அணை ;

(2) மேட்டூர் கெமிக்கல் தேசிய தொழிலாளர் சங்கம், மேட்டூர் அணை (ஐ.என்.டி.யு.சி.) ; மற்றும்

(3) மேட்டூர் கெமிக்கல் தொழிலாளர் சங்கம், மேட்டூர் அணை (சி.ஐ.டி.யு.) ஆகிய சங்கங்கள்.

[திரு. க. இராசாராம்] [1973 டிசம்பர் 4

மேட்டூர் ரசாயனம் மற்றும் தொழில் கழக (வரையறைக்குட்பட்டது) நிறுவனத்தாருக்கு 8—11—1973 தேதிய அறிக்கையில் ஊதிய மாற்றம், பஞ்சப்படி, மற்றைய படிகளும் மற்றும் குறிப்பிட்ட மற்றைய கோரிக்கைகளுக்காகவும், 23—11—1973 முதல் வேலைநிறுத்தம் செய்யும் நோக்கத்தை தெரியப்படுத்தியிருந்தார்கள். சேலம், தொழிலாளர் அலுவலரால் இத்தகராறின்பேரில் சமரச பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. சமரச பேச்சுவார்த்தைகளின் பின் நடவடிக்கைகள் தொழிலாளர் அலுவலரின் பரிசீலனையிலிருக்கும்பொழுது மேலே கூறப்பட்ட மூன்று தொழிற் சங்கங்களையும் மற்றும் கீழே கூறப்பட்ட இரண்டு தொழிற்சங்கங்களையும் சார்ந்த 1500 தொழிலாளர்கள் 26—11—1973 முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

(1) மேட்டூர் கெமிக்கல் எம்பிளாயீஸ் அசோசியேஷன், மேட்டூர் அணை.

(2) மேட்டூர் ரசாயன தொழிலாளர் சங்கம், மேட்டூர் அணை.

வேலை நிறுத்தம் இன்னும் தொடர்ந்து நடந்து வருகிறது. இந்த வேலை நிறுத்தத்தில் மேலே சொல்லப்பட்ட நிறுவனத்தின் அலுவலர்கள் உட்பட தொழிலாளர்கள் 1500 பேர் ஈடுபட்டுள்ளனர்.

தொழிலாளர் ஆணையாளர், தொழிலாளர் அலுவலரால் அனுப்பி வைக்கப்பட்ட சமரச அறிக்கையை பரிசீலனை செய்து வருகிறார்.

**திரு. எம். சுரேந்திரன்:** இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் இரசாயனப் பொருள்கள் பல்வேறு விதமான தொழில்களுக்குப் பயன்படும் காரணத்தால் இந்தத் தொழிற்சாலை மட்டுமல்லாமல் வேறுபல தொழிற்சாலைகளும், தொழில்களும் பாதிக்கப்பட்டிருக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சச்சரவை உடனடியாகத் தீர்க்க அமைச்சரோ அல்லது லேபர் கமிஷனரோ சம்பந்தப்பட்டவர்களை அழைத்து விரைவில் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இந்தத் தொழிற்சாலையின் முக்கியத்துவத்தை அறிந்துதான் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரை சம்பந்தப்பட்டவர்களோடு பேசும்படி அரசு கேட்டுக் கொண்டது. அவரும் அந்த முயற்சியில் ஈடுபட்டார். அந்த



1973 டிசம்பர் 4] [திரு. க. இராசாராம்]

முயற்சி சரிவர முடிவடையாத காரணத்தால் நேற்றும் இன்றும் துணை ஆணையர் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறார். அது வெற்றிகரமாக முடிந்து விடக்கூடும். அப்படிப் பேச்சு வார்த்தையில் தாமதமோ, குந்தகமோ ஏற்படுமானால் சென்னையில் இருக்கும் ஆணையர் அவர்களை அழைத்துப் பேசத் தயாராக இருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## (உ) கோவையில் ஆட்டோரிக்ஷா ஓட்டுநர்களுக்கும் சேரன் போக்குவரத்துக் கழகப் பேருந்துப் பணியாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் குறித்து

DR. H. V. HANDE: Sir, I wish to call the attention of the Hon. Minister for Transport to a matter of urgent public importance namely, the tension prevailing in Coimbatore following the clashes between auto-rickshaw drivers and the State-owned Cheran Transport Corporation (CTC) bus crew at different places on the morning of 18th November 1973.

THE HON. THIRU S. RAMACHANDRAN: I am grateful to the hon. Member Dr. H. V. Hande, for having raised this call attention notice.

On 29th September 1973, when the Transport Secretary visited Coimbatore there was public demand for Cheran Transport Corporation Limited coming to the help of the citizens of Coimbatore and running a number of buses for their convenience. This demand was backed by the District Collector. Accordingly Cheran Transport Corporation Limited started running 20 buses in Coimbatore during the past six weeks.

Prior to this the auto-rickshaw drivers were having a 'hey-day' and were having good business. The introduction of the buses has no doubt reduced the business of the auto-rickshaw drivers. This is the genesis of the problem in Coimbatore which created the disturbances on the 17th and 18th of this month.

Near Kennedy Theatre in R.S. Puram one of the vehicles of Cheran Transport Corporation Limited stopped on the night of 17th to pick up passengers who were returning after the first show. These passengers used to be cleared by the auto-rickshaws before the introduction of the bus services. The auto-rickshaw

drivers got enraged, encircled the bus, manhandled the driver, chased away the conductor and also deflated the tyres of the bus. The driver ran away deserting the bus to the nearby post office and phoned to the Branch Manager who rushed to the spot and when he was about to release the vehicle, a large number of Auto-rickshaw drivers gathered on the spot and closed all the by-pass roads in the locality, this, preventing the taking out of the buses. Cheran Transport Corporation Limited informed the police over phone who rushed to the spot. The District Superintendent of Police, Coimbatore city, carried on negotiation with the crew of the Cheran Transport Corporation Limited and the Auto-rickshaw drivers for more than three hours and when the District Superintendent of Police was about to suceed in restoring normalcy, soda bottles were thrown by a certain groups of Auto-rickshaw drivers. Apprehending a large number of auto-rickshaw drivers, the crew of Cheran Transport Corporation Limited took the buses from the spot and rushed to the Head Office. Since the auto-rickshaws were parked in a criss-cross manner blocking the traffic in the by-pass road, when the buses were taken by the Cheran Transport Corporation Limited crew, some of the auto-rickshaws were got damaged.

Next day on the advice of the Deputy Superintendent of Police, all Cheran Transport Corporation Limited buses were kept off the road. Despite the Police Bandobust, two hooligans stopped some of the Cheran Transport Corporation Limited men preventing the entry into Branch Office at Uppilipalayam on the 18th morning and tried to set fire with a petrol can they brought. However, the Police took immediate steps and arrested them. Further, the Auto-rickshaw drivers were collected near the over-bridge and pelted stones upon several workers in the Branch Office at Uppilipalayam, and caused heavy damages to the buses parked inside and also injuries to the crew. Thereupon the Cheran Transport Corporation Limited crew came out of the workshop and chased the miscreants. At that time, the District Collector and the Superintendent of Police came to the spot and avoided clash between Cheran Transport Corporation Limited and Auto-rickshaw drivers. The District Collector and the Superintendent of Police invited the Officers, Union Leaders of the Corporation and auto-rickshaw drivers and it was agreed that the damages caused to



each side must be borne by the respective parties and the auto-rickshaws be plied in the evening at 3.00 p.m. and the Cheran Transport Corporation Limited buses to ply on the next day, i.e., on 19th November 1973. But the auto-rickshaw drivers did not play their vehicles as agreed to. Moreover, when the vehicles of the Cheran Transport Corporation Limited started running on the 19th morning, stones were pelted ; but this incident was a very minor one. There was practically normalcy till about 1.00 p.m. But suddenly the auto-rickshaw drivers after returning from a meeting at V.O.C. Park, threw stones on the Cheran Transport Corporation Limited buses. Thereupon, the Collector, the Deputy Inspector-General of Police and the Superintendent of Police took stern action and issued orders to round up the miscreants. The Cheran Transport Corporation Limited buses are running as usual from 4-00 p.m. onwards on Monday. Practically normalcy has been restored after that time and the buses are running as usual now. The auto-rickshaws were also started running from Tuesday onwards.

I want to assure the House that the Government much as they sympathise with the auto-rickshaw drivers, as middle classes who get an earning from their auto-rickshaws, will have to take care of the larger interests of the travelling public. Public transportation system must be provided for in all towns and cities for all those who want to use, realising that a majority of our people cannot afford the luxury of going in pleasure cars and auto-rickshaws.

DR. H. V. HANDE : Sir, in view of the fact that we want the buses to ply as also the auto-rickshaws to ply, may I know from the Hon. Minister whether representatives of the Auto-rickshaw Association and representatives of the Bus crew have been invited by the Government for holding discussions so that such instances may not take place again ? I know there is peace now. Will it be possible for the Hon. Minister to assure this House that such incidents might not be repeated as a result of the efforts of the Government and can he assure that as a result of the discussions, all sections of the Public, workers, etc., will get on quite peacefully ?

THE HON. THIRU S. RAMACHANDRAN : It is only in that same spirit, the District Collector of Coimbatore has invited representatives of both the Auto-rickshaw drivers and the representatives of Cheran Transport Corporation employees and he has worked out a settlement, the understanding being that it should be honoured as long as they could. That is all.

திரு. துரைமுருகன் : பாயிண்ட் ஆப் ஆர்டர். இந்த மன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் முதல் வரிசையில் ஒருவர்கூட கிடையாது. அவர்கள் என்ன ஆனார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. எதிர்க் கட்சியில் அங்கத்தினர்களே இல்லாமல் போய்விட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

## (5) அறிவிப்பு

### மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள் குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்காணும் சட்டப் பேரவை சட்ட முன்வடிவுகள், திருத்தம் எதுவுமின்றி, 30—11—1973-ம் நாளன்று சட்ட மேலவையில் நிறை வேற்றப்பட்டனவென்று மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது :—

1. தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு மதுவிலக்கு (செயல் திறனை நிறுத்தி வைத்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/73).

2. தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/73).

3. தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/73.).

மேலும், கீழ்க்காணும் சட்டப் பேரவை சட்ட முன்வடிவுகள் திருத்தம் எதுவுமின்றி 1—12—1973-ம் நாளன்று சட்ட மேலவையில் நிறைவேற்றப்பட்டனவென்றும் செய்தி வரப்பெற்றுள்ளது :—

1. தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/73).



2. தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, மாநில வீட்டு வசதி வாரிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/73).

தவிர, தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு ஆயத் தீர்வை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/73), மற்றும், தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/73) மேல வையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, பரிந்துரை எதுமின்றி, முறையே 30—11—1973, 1—12—1973 ஆகிய நாட்களில் நிறைவேற் றப்பட்டுள்ளன என்றும் செய்தி வரப்பெற்றுள்ளது.

## (6) அரசினர் சட்ட முன்வடிவு

**தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/72) கூட்டாய்வுக் குழு திருத்தி அமைத்தவாறு.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர் களே,

" தமிழ்நாடு 1972-ம் ஆண்டு, ஏற்புப்பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவை* கூட்டாய்வுக் குழு திருத்தி அமைத்தவாறு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று முன்மொழிய அனுமதி கோருகிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவு இம்மாமன்றத்தில் முன்பு கொண்டு வரப்பட்டதும், அதை ஆய்ந்து பரிந்துரைகள் செய்ய கூட்டு ஆய்வுக் குழு அமைக்கப்பட்டதும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவிருக்கும். கூட்டு ஆய்வுக் குழு செய்த திருத்தங்கள் அடங்கிய சட்ட முன்வடிவு 29—11—1973 அன்று வைக்கப்பட்ட கூட்டு ஆய்வுக் குழு அறிக்கையில் அடங்கியுள்ளது. குழு செய் துள்ள முக்கிய திருத்தங்கள் அந்த அறிக்கையில் எடுத்துக்காட்டப் பட்டுள்ளன அவற்றில் ஒருசிலவற்றைப் பற்றி நான் இப்பொழுது குறிப்பிட விரும்புகின்றேன்.

---

* 29—11—1973 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 டிசம்பர் 4

இந்திய நாட்டு அரசியல் சட்டத்தின் 30-வது பிரிவின் கீழ் சிறுபான்மையினருக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகளுக்கும் உத்தரவாதங்களுக்கும் ஒத்ததாக இருக்கும் வகையில் சட்ட முன்வடிவில் சில திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. மொழியின் அடிப்படையிலோ, சமயத்தின் அடிப்படையிலோ, உள்ள சிறுபான்மை வகுப்பினர், தனியார் பள்ளிக்கூடங்களை நிறுவுமுன்பு, அரசினால் குறிப்பிடப்படும் அதிகாரியின் முன் அனுமதியைப் பெறத் தேவையில்லை என்று இப்பொழுது செய்யப்பட்டுள்ள திருத்தம் தெளிவுபடுத்துகிறது. இப்பொழுதுள்ள சிறுபான்மைப் பள்ளிகளும், இனி நிறுவப்படவிருக்கும் சிறுபான்மையினர் பள்ளிகளும் ,தங்கள் பள்ளிகளைப் பற்றிய விவரங்களை அரசினால் குறிப்பிடப்பட்ட அதிகாரிக்கு அனுப்பி, அரசின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று மட்டுமே விதிகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் ஒழுங்கு முறைகளை மீறியதற்காக தனியார் பள்ளிகளின் நிர்வாகத்தை உரிய முறைப்படி அரசு எடுத்துக்கொள்வதற்கு வகை செய்யும் பிரிவும், சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளுக்கு பொருந்தாது என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த இரு திருத்தங்களுக்குப் பின்பு, இந்தச் சட்ட முன்வடிவு பற்றி சிறுபான்மையினர் கொண்டிருந்த அச்சங்களும் ஐயப்பாடுகளும் அறவே நீக்கப்பட்டுவிடும் என்று அரசு நம்புகிறது.

ஏற்கனவே நடந்து கொண்டிருக்கின்ற தனியார் பள்ளிகள் மீண்டும் இந்தச் சட்டத்தின்கீழ் அனுமதி பெறவேண்டுமென்று முதலில் விதி செய்யப்பட்டிருந்தது. இது தேவையற்றது என்றும், இதனால் நிர்வாகங்களுக்கு இடையூறுகள் ஏற்படக்கூடுமென்றும், எடுத்துக் காட்டப்பட்டதன் பேரில், ஏற்கெனவே நடந்து கொண்டிருந்த தனியார் பள்ளிகள் மீண்டும் அனுமதி பெறத் தேவையில்லையென்றும், பள்ளிகளைப் பற்றிய விவரங்கள் கொண்ட ஓர் அறிக்கையை அரசு குறிப்பிடும் அதிகாரிக்கு அனுப்பினால் போதுமென்றும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

ஒழுங்கு முறைகளை மீறும் பள்ளிகளைப் பொறுத்தவரை, அவற்றின் அங்கீகாரத்தை ரத்து செய்வதற்கும், அரசு அளிக்கும் மானியத்தை நிறுத்தி வைப்பதற்கும், விதிமுறைகளைத் தெளிவுபடுத்தி திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இந்த இரு நடவடிக்கை



1973 டிசம்பர் 4] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

களும், சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகள் உட்பட, எல்லாப் பள்ளிகளுக்கும் பொருந்தும். ஆனால் மற்றப் பள்ளிகளை அரசு எடுத்துக்கொள்ள சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள போதிலும், சிறுபான்மை பள்ளிகளைப் பொறுத்தவரை, இதற்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்கள், மற்றவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால் அவற்றின்மீது மேல் விசாரணை முறையீடு செய்து கொள்வதற்கு விதிமுறைகள் தெளிவாக்கப்பட்டுள்ளன. பதவியிலிருந்து நீக்கப்படும் ஆசிரியர்களும், பதவி குறைக்கப்படும் ஆசிரியர்களும், மற்ற முக்கியமான ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு உள்ளாகும் ஆசிரியர்களும், அரசினால் அமைக்கப்படும் டிரிபியூனலுக்கு முறையீடு செய்துகொள்ள இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது, ஆசிரியர்களின் பணிப் பாதுகாப்புக்கு உரிய நடவடிக்கையாகும்.

அரசு குறிப்பிடும் அதிகாரி ஆணையிட்ட பின்பும், ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டிருந்து ஓர் ஆசிரியரை பள்ளி நிர்வாகம் வேலையில் மீண்டும் எடுத்துக்கொள்ள இசையாவிடில் அது தொடர்பாக ஆசிரியர் செய்யும் மேல் முறையீடு டிரிபியூனலினால் விசாரிக்கப்பட்டு தீர்ப்பு கூறப்படும் வரை, ஆசிரியருக்குரிய ஊதியத்தையும், படித் தொகையையும், நிர்வாகம் டிரிபியூனல் வசம் கட்ட வேண்டுமென்றும் விதி செய்யப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் பணி பாதுகாப்புக்குரிய மற்றொரு முக்கிய நடவடிக்கையாகும்.

அதுபோலவே, பள்ளி நிர்வாகத்தை அரசே மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டு, ஆணை வெளியிடப்பட்டால், அந்த ஆணையின் மீது மேல் முறையீட்டினை டிரிபியூனலுக்கு செய்யும் உரிமையும் பள்ளி நிர்வாகத்துக்கு அளிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் மன நிறைவுடன் பணியாற்றவும் அவர்கள் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையிலும், இச்சட்ட பிரிவுகள் இயற்றப்பட்டுள்ளதை ஆசிரியர் சமுதாயம் வரவேற்கும் என்று நம்புகிறேன். அதே சமயத்தில் தனியார் பள்ளி நிர்வாகங்கள் சிறப்பாகவும் சீராகவும் நடப்பதற்கு உதவும் வகையில் இச்சட்டம் அமைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. தனியார் பள்ளி

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 டிசம்பர் 4

களின் உரிமைகளை பறித்து விடும் நோக்கம் இச்சட்டத்திற்கு கிடையாது. அவர்கள் நிர்வாகத்தை சீர்செய்வதே சட்டத்தின் நோக்கம். பல தனியார் பள்ளிகள் மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருவதையும் கல்விக்கு சிறந்த தொண்டாற்றி வருவதையும் நான் இங்கு குறிப்பிட்டுப் பாராட்ட விரும்புகிறேன். கல்வியின் தரத்தைப் பாதுகாக்கவும், ஆசிரியர்களின் பணி நிலைக்கு உத்தரவாதம் அளிக்கவும், பொது நலனை முன்னிட்டு அரசு வெளியிடும் உத்தரவுகள் ஒழுங்காக நிறைவேற்றப்படுகின்றனவா என்பதைக் கண்காணித்து, அவ்வாறு நிறைவேற்றப்படுவதற்கு வகை செய்வது தான், இச்சட்டத்தின் நோக்கம்.

பள்ளிக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று இந்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. அக்குழுவில் ஆசிரியர்கள் பிரதிநிதிகளும் இடம் பெறுவார்கள். பள்ளியின் நிர்வாகத்தையும் கல்வியின் தரத்தையும் வளர்க்கும் பொறுப்பு இக்குழுவிடம் ஒப்படைக்கப்படும். ஆனால் பள்ளியின் நிதி நிர்வாகமும், சொத்துக்கள் நிர்வாகமும் இக்குழுவிடம் ஒப்படைக்கப்பட மாட்டாது. ஆகவே இக்குழுவின் நடவடிக்கைகளால், பள்ளியின் நிதி நிர்வாகம் பாதிக்கப்பட்டு விடக் கூடுமென்று, தனியார் பள்ளி நிர்வாகங்கள் அஞ்சுவதற்கு இடமில்லை.

பள்ளி நிர்வாகங்கள் பற்றி அரசு அதிகாரிகள் வெளியிடும் உத்தரவுகள் தொடர்பாக, நிர்வாகங்கள் மேல் முறையீடு செய்து கொள்வதற்கு, ஒவ்வொரு கட்டத்திலும் வகை செய்யப்பட்டுள்ளது. ஒழுங்கு நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் டிரிபியூனலின் தீர்ப்பு நிர்வாகம் ஆசிரியர்கள் ஆகிய இரு சாராரையும் கட்டுப்படுத்தும் இறுதித் தீர்ப்பாக இருக்கும். காய்தல் உவத்தலின்றி, நடுநிலையில் நின்று, விசாரணை செய்து, நிர்வாகத்துக்கும் ஆசிரியர்களுக்குமிடையே ஏற்படக்கூடிய பிரச்னைகள் குறித்து நியாயமான தீர்ப்பு வழங்குவதற்காக டிரிபியூனல்கள் அமைக்கப்படும்.

ஆசிரியர்கள் பணி நிலைமையில் முன்னேற்றங்கள் காண்பதற்காக டாக்டர் பால் தலைமையில் சில ஆண்டுகளுக்கு முன்பு அரசு ஒரு குழுவை நியமித்தது. அக்குழுவில் ஆசிரியர் பிரதிநிதிகளும் பள்ளி நிர்வாகிகளின் பிரதிநிதிகளும் இடம் பெற்றிருந்தனர். குழுவின் பொதுவான பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டு, அவற்றின் அடிப்படையில் தான் இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.



1973 டிசம்பர் 4] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

சீராகவும் சிறப்பாகவும் இயங்கி வரும் தனியார் பள்ளிகள் இச்சட்டம் குறித்து எவ்வித சஞ்சலமும் சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை. அவ்வாறு இயங்காத ஒரு சில பள்ளிகளையும் ஒழுங்குபடுத்தி அவற்றைச் சீர்படுத்தவே இச்சட்டம் செயல்படும். ஆசிரியர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் இடையே நெருங்கிய நல்லுணர்வை ஏற்படுத்தவும், அரசு அதிகாரிகளுக்கும் பள்ளி நிர்வாகத்தினருக்குமிடையே சுமுகமான உறவை ஏற்படுத்தவும், இச்சட்டம் வகை செய்யும் என்று நம்புகிறேன். இது உரிமைகளைப் பறிக்கும் சட்டமல்ல. உரிமைகளை வழங்கும் சட்டம்தான். கட்டுப்பாடு சட்டமல்ல. சீர் செய்து ஒழுங்கு செய்யும் சட்டம்தான். ஆசிரியர்கள் நலனைப் பாதுகாக்கவும், பள்ளிகள் திறம்பட இயங்கவும், ஒரு தெளிவான நிலையையும் நியாயமான அமைப்பையும் உருவாக்க வேண்டுமென்ற உணர்வில், அரசு கொண்டு வந்துள்ள இந்தச் சட்டத்தை சமுதாயம் வரவேற்கும் என்று எதிர்பார்த்து, இச்சட்டத்தை மாண்புமிக்க இந்த அவை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.00)

### (7) நடைமுறைக் கேள்வி.

**தமிழ்நாடு 1972-ம் ஆண்டு ஏற்புப்பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு அரசியல் சட்டத்தின் சில பிரிவுகளுக்கு முரணாக இருப்பது குறித்து.**

* THIRU M. A. LATHEEF : Sir, I rise on a point of order. Mr. Speaker, Sir, before this Bill is taken up for consideration by this House, I would like to oppose this Bill on the ground . . .

MR. SPEAKER : Point of Order என்ன என்பதைச் சொல்லுங்கள்.

THIRU M. A. LATHEEF : I oppose this Bill on the ground that this Bill is inconsistence to and violative of Clause of Article 13 of the Constitution. In clause 2 of Article 13 of the Constitution, it has been stated in very categorical and clear terms that the State Legislatures are precluded from making any law which would abridge or violate the Fundamental Rights guaranteed under Part III of the Constitution. In Article 13 (2) it has been

யிலே அதற்காக தனியாக ஒரு தீர்மானம் கொண்டுவரவேண்டிய தேவையில்லை. அவை முன்னே கொண்டு வந்து மசோதா ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று வருகிற தீர்மானமே அதற்கு ஒரு முடிவாக இருக்கும். அதுதான் மரபு.

'It is the accepted practice in the Lok Sabha that the Speaker does not give any ruling on a point of order which raises the question, whether a Bill is constitutionally within the legislative competence of the House. It is for the House itself to decide such matters not on a separate motion to that effect but indirectly on the motion that is then before the House in regard to a Bill . . . .'

என்று இருக்கிறது.

THIRU M. A. LATHEEF: This ruling does not pertain to Article 13 (2) of the Constitution. No decision is required, no resolution is required, no vote is required when a definite provision is included in the Constitution. Article 13 (2) of the Constitution definitely says that no law should be enacted by the Legislature which would take away the established fundamental rights of the Constitution which have been incorporated in Part III of the Constitution.

Such a Bill cannot be taken into consideration of the House and once it is objected to, it is for the Hon. Speaker to take congnizance of such constitutional objection and such an unconstitutional Bill should not be allowed to be considered in this House, especially when it affects the fundamental rights of the minorities. Sir, I have scrupulously confined myself only to such rights which have been made a part of the Constitution. So far as the sovereign authority is concerned, it cannot be questioned by an outsider but at the time of introduction or consideration of a Bill, when a question of its unconstitutionality is raised in the House, it is for the Hon. Speaker to give due consideration to it.

Finally, I would ask the Hon. Speaker to reserve his ruling and postpone the consideration of the Bill now and after due consideration and consultation with legal luminaries, this Bill can be considered.



திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): கனம் சபா நாயகர் அவர்களே, மன்றத்தின் முன்னலே இருக்கக்கூடிய மசோதா அரசியல் சட்டத்தினுடைய ஷரத்துக்கு உட்பட்டிருக்கிறதா அல்லது அப்பாற்பட்டதா என்பது அந்த மசோதா தாக்கல் செய்கின்ற சமயத்தில் எழுப்பப்பட்டிருக்க வேண்டும். இப்பொழுது அந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டு, செலக்ட் கமிட்டியின் ஆய்வுக்குப் போய்விட்டு, மீண்டும் இந்த மன்றத்திற்கு முன் வந்திருக்கிறது. ஆகவே, இந்த சமயத்தில் அது அரசியல் சட்டத்திற்கு முரணானது என்று சொல்லி, அதைத் தடுத்து நிறுத்துவது சரியல்ல. எந்தக் குடிமகனும் இந்த மசோதா சட்டமாக செய்யப்பட்டதற்குப் பிறகு அது அரசியல் நிர்ணய சட்டத்திற்கு ஒத்திருக்கிறதா அல்லது முரண்பட்டிருக்கிறதா என்று தீர்ப்பு கோரி கோர்ட்டில் வழக்குப் போடலாம்.

திரு. லத்தீப் அவர்கள் ஒரு சிறந்த வழக்கறிஞர். ரிட் பெட்டிஷன் மூலம் இந்தச் சட்டம் செல்லுபடியானதில்லை என்று சட்டமாக நிறைவேறியதற்குப் பிறகு வேண்டுமானால் ஹைகோர்ட்டிலோ, அல்லது சுப்ரீம் கோர்ட்டிலோ சாலஞ்சு செய்யலாம். ஆனால், இந்த மன்றத்தில் நடைபெறுகிற விவாதத்தைத் தடுப்பது முறையல்ல.

THIRU M. A. LATHEEF: Sir, I admit that the hon. Member is a senior legislator but I submit that the Bill can be objected to not only at the time of its introduction but also after it has been resubmitted after due consideration by the Joint Select Committee, and that too when a major portion of the Bill has been materially changed by the Committee. So far as this House is concerned, it is a new introduction. I think the law officers will throw light on this aspect of the matter.

As regards the other point raised by the hon. Member, Thiru Krishnamoorthy, that I can raise this matter in a court of law, I know that. I can raise it and I am going to raise it. That is a different question. That question will arise only after the Bill has been duly passed in this House and also that relief would be available to an outsider also. But so far as I am concerned, as a Member of the House and as part of the House, I am entitled to raise this question and warn the House through the Hon. Speaker not to indulge in unconstitutionalities.

**திரு. என். கே. பழனிச்சாமி :** சார், இந்தச் சபையில் எதையும் தெரிவிக்க அதிகாரம் இருக்கிறது. இல்லை என்று சொல்ல முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் முதலிலேயே சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இந்தச் சட்டத்தை அறிமுகம் செய்யும்போது தடை செய்ய உரிமை இருக்கிறதா இல்லையா என்பதில் பேரவைத் தலைவருக்குப் பொறுப்பில்லை. இந்த சட்ட முன்வடிவு வந்து. பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, விவாதிப்பதற்கு உரிமை உண்டா என்று கேட்கிறார்கள். அதைப் பற்றி நான் தீர்ப்பளிப்பது சரியல்ல. பொதுவாக அதைப்பற்றி இந்த அவையே முடிவு எடுக்க வேண்டும். அதற்குத் தனியாக ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து, அதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பவேண்டுமென்று ஒன்றும் தேவையில்லை. மாண்புமிகு அமைச்சரவர்களால் முன்மொழியப்பட்ட சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பதே ஒரு தீர்ப்புதான்.

THIRU M. A. LATHEEF : I would point out to the Hon. Leader of the House that this Bill is not within the legislative competence of this House and therefore I request the Hon. Min'ster for Education to withdraw the Bill and recommit it to the Joint Select Committee. It cannot be introduced and it should be withdrawn.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை உங்களுடைய பேச்சிலே குறிப்பிடலாம். 'லீடர் ஆப் தி ஹவுஸை' நீங்கள் கேட்க முடியாது.

(6) அரசினர் சட்ட முன்வடிவு—தொடர்ச்சி.

தமிழ்நாடு 1972-ம் ஆண்டு ஏற்புப்பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/72) கூட்டாய்வுக்குழு திருத்தியமைத்தவாறு (தொடர்ச்சி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பழனிசாமி. உங்கள் திருத்தத்தை முன்மொழிகிறீர்களா ?

**திரு. என். கே. பழனிசாமி :** நான் முன்மொழியவில்லை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது நேரம் 11.20 ஆகிறது. எப்போது முடித்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 1½ மணிக்குள் முடித்துக்கொள்ளலாம்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** எனக்குக் கொஞ்சம் நேரம் அதிகமாக வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு குறிப்பிட்ட உறுப்பினருக்கு என்று அதிகமாக நேரம் ஒதுக்க முடியாது. 1½ மணிக்குள் முடிப்பதாக இருந்தால் இன்னும் 2 மணி நேரம் விவாதம் இருக்கிறது.

THIRU M. A. LATHEEF : This Bill is important and it raises constitutional issues. For my part, I require at least one hour. If I am not given sufficient time, it is not proper.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதத்தில் ஒரு உறுப்பினருக்கு மட்டும் ஒரு மணி நேரம் கொடுக்க முடியாது ; கொடுப்பது சரியல்ல.

THIRU M. A. LATHEEF : I am the only member to speak on behalf of my party on this Bill. I have a right to speak on behalf of the particular section which has elected me. If that right to speak is denied I do not think it is proper.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இரண்டு மணிக்குள் முடிக்க வேண்டுமென்றால் சொல்லுங்கள் ; எத்தனை பேர்கள் பேசுகிறார்கள் என்று பார்த்து அதன்பிறகு ஒவ்வொருவருக்கும் நேரம் ஒதுக்கப்படும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** எத்தனை பேர் பேசினாலும், கூடியவரையில் 1½ மணிக்குள் முடிக்க வேண்டும். நேரம் அதிகமாகுமானால், வேண்டுமானால் மாலையில் வைத்துக் கொள்ளலாம். அரை மணி நேரம் கூட்டி, மத்தியானம் இரண்டு மணிக்குள் முடிப்பதானால், உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து, அதற்குத் தக்கபடிதான் நேரம் ஒதுக்க முடியும். அந்த அளவுக்குத்தான் திரு. லத்தீப் அவர்களுக்கும் வரும். இதில் எல்லோரும் ஒத்துழைத்தால்தான் குறிப்பிட்ட நேரத்திற்குள் கூட்டத்தை முடிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எட்மண்ட், நீங்கள் 10 நிமிடங்களுக்குள் பேச்சை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தலைவரவர்களே, எங்கள் கட்சியின் சார்பில் நான் ஒருவன்தான் பேசுகிறேன். கொஞ்சம் அதிகமாக நேரம் கொடுங்கள்.

பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த தனியார் பள்ளிகளை முறைப் படுத்துதல் திருத்த மசோதாவின்மீது என்னுடைய கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மசோதாவை நான் எதிர்க்கவும் முடியாமல், ஆதரிக்கவும் முடியாமல் (குறுக்கீடு) ஏன் அவசரப்படுகிறீர்கள்? I have my own reasons for supporting and for opposing certain sections. இது வழக்கமாகப் போய்விட்டது. எதிர்க்கவும் முடியாமல், ஆதரிக்கவும் முடியாமல் நான் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். காரணம், எங்களைப் பொறுத்தவரையில் இது ஒரு சட்டமாகவே தெரியவில்லை. எதையோ மனதிலே வைத்துக்கொண்டு, 'மீனுக்குத் தலையையும், பாம்புக்கு வாலையும்' காட்டுவதுபோல செய்திருக்கிறார்கள். பாலுக்கும் காவலாக இருக்க விரும்புகிறீர்கள்; பூனைக்கும் தோழனாக இருக்க விரும்புகிறீர்கள். இந்தச் சட்டத்திலே பள்ளிகளை நடத்துவதில் தனியார்களுக்கு பாதுகாப்பு கொடுக்க விரும்புகிறீர்கள். அதே நோக்கில் ஆசிரியர்களுக்கும் நீங்கள் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறீர்கள். அதனுடைய உள் நோக்கம் என்ன என்பது எங்களுக்குப் புரியவில்லை.

(திரு. க. சுப்பு தலைமை)

நம்முடைய கல்விக் கூடங்கள் எல்லாம் அரசாங்கத்தினால் நடத்தப்பட வேண்டும் என்பதே எங்களுடைய அசைக்க முடியாத எண்ணமாக இருக்கிறது. ஆனால் இந்தச் சட்டத்தைப் பார்க்கும் போது, every law has its own limits என்று சொல்வார்கள். எந்த சட்டத்திற்கும் ஒரு விதிவிலக்கு உண்டு. இன்றையதினம் பள்ளிக்கூடங்களை தனியார்களும் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கமும் நடத்திக்கொண்டிருக்கிறது. தனியார்களால் நடத்தப்படுகின்ற பள்ளிகளில் ஊழல்



கள் மலிந்திருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. அது ஊரறிந்த உண்மை. மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும் இது தெரிந்திருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அந்த அளவுக்கு தனியார் கல்வி நிறுவனங்களில் ஊழல்கள் நிறைந்திருக்கின்றன. ஆகவே, எல்லாப் பள்ளிகளையும் அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டும், எல்லாப் பள்ளிகளையும் நாட்டுடைமையாக்க வேண்டும் என்று சொன்னால், அரசாங்கத்தினால் நடத்தப்படுகின்ற கல்வி நிறுவனங்களிலே அதைவிட ஊழல் மலிந்திருக்கிறது; மோசமாக நிர்வாகம் நடைபெறுகிறது. ஆகவே, ஊழல்கள் இல்லாத அளவுக்கு எல்லாப் பள்ளிகளையும் அரசாங்கமே ஏற்று நடத்தி, அதே நேரத்தில் கல்வியின் தரமும் உயர்த்தப்பட வேண்டுமென்றும் அதற்கு அரசாங்கம் ஏற்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குப் பல பள்ளிகளை தனிப்பட்ட நபர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சில பள்ளிகளை மிஷினரீஸ்—கிறிஸ்தவ ஸ்தாபனங்கள், முஸ்லிம் ஸ்தாபனங்கள், இந்துமத ஸ்தாபனங்கள்—நடத்திக்கொண்டிருக்கின்றன. அந்தப் பள்ளிகளிலே ஊழல்கள் எந்த அளவுக்கு இருக்கின்றன என்று பார்த்தால் அரசாங்கம் நடத்துகின்ற பள்ளிகளில் இருப்பதைவிட குறைவாகத்தான் இருக்கிறது. ஏதோ ஒன்றிரண்டு இடங்களில்—ஆங்காங்கே சில தவறுகள் இருக்கலாம். மிஷினரி பள்ளிகளில் அப்படி இருக்கலாம். ஆனால் தனிப்பட்ட நபர்களால் நடத்தப்படுகின்ற பள்ளிகளில் நூற்றுக்கு 99 இடங்களில் ஊழல்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இதை மறுக்க முடியாது.

ஆரம்பப் பள்ளிகளிலிருந்து கல்விக்கூடங்களை தனிப்பட்டவர்கள் நடத்துகிறார்கள். அவர்கள் ஏன் நடத்துகிறார்கள் என்றால், இந்த நாட்டிலே இருக்கின்ற மக்களுக்கு கல்வி அறிவை புகட்ட வேண்டுமென்ற எண்ணத்தால், மக்களுடைய அறியாமையைப் போக்க வேண்டுமென்ற எண்ணத்தால், மக்கள் மீதுள்ள பற்றினால், பரந்த உணர்ச்சியினால் நடத்தவில்லை. அவைகள் மூலம் தங்கள் வருமானத்தைப் பெருக்கிக்கொள்வதற்காகத்தான் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நடத்துகின்ற பள்ளிகளுக்கு அரசாங்கம் கிரான்ட் கொடுக்கிறது. பள்ளிக்கூடத்திற்கு வெள்ளையடிக்க,

பழுது பார்க்க, உடைந்த நாற்காலிகளைச் சரிப்படுத்த, பெஞ்சு, மேசை, நாற்காலிகள் வாங்கிப் போட போன்ற பல்வேறு காரியங்களுக்கு கிராண்ட் கொடுக்கிறது. அதை அவர்கள் ஒழுங்காகச் செலவழிக்கிறார்களா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை. அரசாங்கத்தில் கிராண்ட் கொடுக்கிறார்களே தவிர, அந்தப் பணம் ஒழுங்காகச் செலவழிக்கப்படுகிறதா என்று பார்ப்பதற்கு யாரும் இல்லை. திடீரென்று ஒரு நாள் ஒரு அதிகாரி பள்ளிக் கூடத்தைப் பார்வையிட வருகிறார் என்றால் அப்போது ஒரு 10 அல்லது 15 ரூபாய் செலவு செய்து வெள்ளையடித்து வைக்கிறார்கள். வரக்கூடிய அதிகாரி, பள்ளிக்கூடம் சுத்தமாக இருக்கிறது, கொடுத்த பணம் சீராக செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பில் எழுதி வைத்துவிட்டு போய்விடுகிறார். இப்படிப்பட்ட அவல நிலை இன்றைக்குத் தனியார் நடத்தும் பள்ளிகளில் இருந்துகொண்டிருக்கிறது.

[முற்பகல் 11-30]

அதுமட்டுமல்ல. ஆசிரியர்களை வேலைக்கு வைத்துக்கொள்கிறார்கள். அவர்களுக்கு வழங்கப்படுகின்ற சம்பளத்தில் கையாடல் செய்கிறார்கள். 10 ஆசிரியர்களை வேலைக்கு வைத்துக்கொள்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அந்தப் பள்ளிக்கூட நிர்வாகிதான் அவர்களுக்குள்ள சம்பளத்தை தாலுகா கஜானாவுக்குச் சென்று வாங்கிக்கொண்டு வருகிறார். சம்பளத்தைப் பட்டுவாடா செய்யும்போது, அவருக்கு உள்ள நிர்வாகத் திறமையைப் பயன்படுத்தி, அவருக்கு இருக்கிற தனிப்பட்ட செல்வாக்கைப் பயன்படுத்தி, கொடுக்கப்படவேண்டிய சம்பளத்தில் 10 ரூபாய், 15 ரூபாய், 20 ரூபாய் பிடித்துவிட்டுத்தான் மீதியைக் கொடுக்கிறார். இப்படிப்பட்ட ஊழல்கள் எல்லாம் அங்கே நடந்துகொண்டிருக்கின்றன. பள்ளிக்கூடங்களில் ஏதாவது ஒரு ஆசிரியர் ஓய்வு பெறுகிறார் என்றால் புதிய ஆசிரியர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். புதிய ஆசிரியரைத் தேர்ந்தெடுக்கிற பொறுப்பு நிர்வாகத்தினிடத்தில் இருக்கிறது. ஹையர் கிரேடாக இருந்தால் ஒரு ரேட், செகண்டரி கிரேடாக இருந்தால் ஒரு ரேட், ஹைஸ்கூலுக்கு ஒரு ரேட் என்ற அளவுக்குத் தரம் பிரித்து வைத்துக்கொண்டு ஆசிரியரை நியமிப்பதற்குக்கூடப் பணம் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆளுங் கட்சியில் உள்ளவர்களே இதை மறுக்க முடியாது. இந்தச்



சட்டத்தின் மூலம் பள்ளிக்கூடத்தை நடத்த ஒரு குழு அமைக்கப்படும் என்றால் அதில் பள்ளி தலைமை ஆசிரியர் அங்கம் வகிக்கிறார், ஆசிரியர் பிரதிநிதிகள் ஒருவரோ, இருவரோ அங்கம் வகிக்கிறார்கள், பள்ளி நிர்வாகி இருக்கிறார் என்றெல்லாம் சட்டம் போடுகிறோம். இவ்வளவு சட்டத்தைப் போட்டுவிட்டு ஆசிரியர்களை நியமிக்கிற அதிகாரத்தை யாரிடம் கொடுத்திருக்கிறோம். பள்ளி நிர்வாகியிடத்தில் கொடுத்திருக்கிறோம். அவர் பணம் வாங்குகிறார். இந்த அளவுக்கு தனியார் பள்ளிகளில் நடக்கிறது ஊழல். இவற்றைத் தடுப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஊராட்சி ஒன்றியங்கள் நடத்துகிற பள்ளிக்கூடங்களிலும் இது சர்வ சாதாரணமாகிவிட்டது. இண்டர்வியூ என்றவுடனேயே பெரிய சிபார்சு என்ற முறையில் பெருந்தலைவருக்குண்டான தொகையைக் கொடுத்து வேலை பெறவேண்டிய நிலை இருக்கிறது. இதை எல்லாம் நான் ஆதாரத்தோடுதான் பேசுகின்றேன். பணம் கொடுத்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் வேலை பெற்றுள்ள ஆசிரியர்கள் எழுதிக் கொடுத்திருக்கிற கடிதங்களே என்னிடம் இருக்கின்றன. இதை நிரூபிக்க வேண்டுமென்றால் நீங்கள் குழுவை அமையுங்கள். நான் அந்தக் கடிதங்களையும் கொடுத்து, நேரிடையாக அந்த அந்த ஆசிரியர்களையே வரவழைத்து சாட்சி சொல்லச் சொல்கிறேன். நாட்டு மக்களுக்கு நல்ல கல்வி கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டுமென்றால் தனிப்பட்டவர்கள் பள்ளிக்கூடங்களை நடத்த அனுமதிக்கக்கூடாது.

**திரு. சி. ஆறுமுகம்:** திரு. எட்மண்ட் அவர்கள் பேசும்போது ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் பணம் வாங்கிக்கொண்டு ஆசிரியர்களை நியமிப்பதாகச் சொன்னார்கள். அப்படியானால் எந்த ஊராட்சி ஒன்றியத் தலைவர் என்று சொல்ல முடியுமா?

**திரு. க. உரோ. எட்மண்ட்:** ஆழ்வார் திருநகரி ஊராட்சி ஒன்றியத்தில் இது சர்வசாதாரணமாக இருக்கிறது. லீவ் வேகன்சியில் போடுவதற்குக் கூட பணம் பெறப்படுகிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. க. சுப்பு):** உறுப்பினருக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரம் பத்து நிமிடம்தான். இது போன்ற குறுக்கீடுகளுக்கு அவர் இணங்கவேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. சி. நரசிம்மன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது பள்ளி நிர்வாகிக்கு ஆசிரியரை நியமிக்க இந்தச் சட்டத்தில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றார். அப்படி இல்லை. சட்டத்தில் ஸ்கூல் கமிட்டிக்குத் தான் அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** சட்டத்தில் அப்படியில்லை. ஆகவே நான் கேட்டுக்கொள்வது எல்லாம் ஆசிரியர்களை ஒன்று பப்ளிக் சர்விஸ் கமிஷன் மூலமாகவே தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யலாம். அல்லது எஜுகேஷனல் ஆபீசரே தேர்ந்தெடுக்க அதிகாரம் கொடுப்பதில் என்ன தவறு ஏற்படும் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஐயத்தைப் போக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். பள்ளி நிர்வாகியிடத்தில் சிலபல திருத்தங்கள் கொடுக்க அதிகாரம் இருக்கிறதே தவிர சட்டத்தின் கீழ் அமைக்கப்படுகிற குழுக்கள்தான் ஆசிரியர்களை நியமிக்க முடியும்.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** அமைச்சர் அவர்கள் குழுக்கள் தான் ஆசிரியர்களை நியமிக்கும் என்று சொன்னார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தனியார் நடத்துகிற பள்ளி என்றால் அந்தக் குழுவில் மானேஜர், செக்ரட்டரி இருப்பார். ஆசிரியர் பிரதிநிதிகள் இருப்பார்கள். என்ன பிரயோஜனம்? அந்தக் குழுவில் இருக்கிற ஆசிரியரையே வேலையை விட்டு நீக்க நிர்வாகத்தினருக்கு இந்தச் சட்டத்தில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கோட் ஆப் கான்டெக்ட் என்பதையே பள்ளியை நடத்துகிற நிர்வாகி வகுக்கிறார். தலைமை ஆசிரியரோ, மற்ற ஆசிரியர்களோ எப்படி நிர்வாகத்தினருக்கு விரோதமான கருத்தை அந்தக் குழுவில் தெரிவிக்க முடியும்.

A teacher who is employed in a private managed school is always at the mercy of the manager, headmaster and correspondent என்கிற நிலைமைதான் அங்கே இருக்கிறது. குழுவுக்கு அதிகாரம் என்று போட்டுவிட்டதனாலே குழுவில் உள்ள எல்லோரும் சம உரிமையோடு செயல்பட வாய்ப்பிருக்கிறது என்று சொல்ல முடியாது. சட்டத்தில் ஆசிரியர்கள் வேலையில் இருந்து



நீக்கப்பட்டால் அப்பீல் கொடுக்கலாம் என்று செய்திருக்கிறோம். சென்னையில் ராயபுரத்திலுள்ள எட்டையப்பன் உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியர்கள் வேலையில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். அது பற்றி ஆசிரியர்கள் புகார் கொடுத்திருக்கிறார்கள். இதுவரைக்கும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 10-ா.1-படி 300 பேர்கள் தற்காலிகமாக ஆசிரியர் பணியில் நியமிக்கப்பட்டார்கள். அவர்களை வேலையைவிட்டு நீக்கினார்கள். மறுபடியும் இன்று புதியதாக ஆசிரியர்களை நியமிக்கிற நேரத்தில் எற்கனவே வெளியேற்றப்பட்ட—தற்காலிகமாகப் பணியாற்றிய ஆசிரியர்களை எடுக்காது—புதியதாக இண்டர்வியூ நடத்தி புதிய பேர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இது என்ன நியாயம்? இந்தச் சட்டத்தில் அதுபோன்ற தவறுகள் நடக்காதிருக்க நல்ல பிடிப்பு இல்லை.

It is amply crowded with number of lacunae

ஓட்டை, தவறுகள் ஏராளமாக இருக்கின்றன. பொந்துக்குப் பொந்து புகுந்து கொண்டு தவறுகள் இழைக்க ஏராளமான அளவுக்கு இடமிருக்கிறது. பாதுகாப்பு இரண்டு பேர்களுக்கும் கொடுத்திருக்கிறோம். இரண்டு பேர் குடுமியையும் ஒருவருக்கொருவர் கையில்தான் பிடித்துக்கொடுத்திருக்கிறோம்.

ஆசிரியர்களின் சம்பளத்தைக் கூட மானேஜ்மெண்டார் தான் வாங்கித் தர வேண்டும் என்பது என்ன அவசியம்? அரசாங்கமே நேரில் கொடுக்கலாம். ஆசிரியர்கள் டெபுடி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூலிடமோ, கல்வி அதிகாரியிடமோ நேரில் பெற்றுக் கொள்ளலாம். இதில் என்ன சிக்கல் இருக்கிறது?

இந்தச் சட்டம் முழுமையாகப் பயன்படவேண்டுமென்றால் இதில் பல திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். மெஷினரிகள் நடத்துகிற பள்ளிகளை வேண்டுமானால் அவர்களே நடத்தலாம் என்று அனுமதி கொடுக்கலாமே தவிர தனியார் பள்ளிகளை எல்லாம் அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும். அரசாங்கம் ஏற்று நடத்துகிற பள்ளிகளும் நல்ல முறையில் நடக்க பல சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிச்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 1½ வருஷ காலத்திற்குப் பிறகு இந்த மசோதா இங்கே வந்திருக்கிறது. சட்டம் என்பது ஆசிரியர்களுக்காக வந்திருக்கிற ஒன்று என்கிற அடிப்படையில் சில மாற்றங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. ஆசிரியர்களுக்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதை நான் ஆதரிக்கிறேன். ஆனால் இதே நிலைமையில் இருக்கக்கூடிய காலேஜில் இருக்கக்கூடிய ட்யூட்டர்கள், பேராசிரியர்கள் கூட இதைவிட மோசமான நிலைமையில்தான் இருக்கிறார்கள். அரசாங்கமே இனிஷியேடிவ் எடுத்து அவர்களுக்கும் பாதுகாப்பாக இருக்கக்கூடிய அளவில் சகல அம்சமும் அடங்கிய சட்டமாக இதைச் செய்யவேண்டும்.

அது மட்டுமல்ல, இன்றைய தினம் பில்டிங் கொடுக்கிறோம் பில்டிங் கிராண்ட் கொடுக்கிறோம். வாடகை பில்டிங்கில் இருந்தால் அதற்கு வாடகை கிராண்ட் கொடுக்கிறோம். அது மட்டுமல்ல, வெளிநாடுகளிலிருந்து ஏராளமான பணம், பொதுமக்களிடமிருந்து ஏராளமான பணம், மாணவர்களிடமிருந்து ஏராளமான பணம் வாங்குகிறார்கள். சில காலேஜில், ரூ. 3,000, ரூ. 5,000 வாங்குகிறார்கள். ஏராளமான பணம். இந்த பணமெல்லாம் எப்படி வருகிறது? பால் கமிட்டியினுடைய சிபாரிசு என்ன சொல்லி இருக்கிறது? பல பள்ளிக்கூடங்களுக்குச் சென்று பார்த்தேன். டிரஸ்ட் என்ற பெயரை வைத்துக்கொண்டு, தனிப்பட்ட முறையிலே நடத்துகிறார்கள். வியாபார நோக்குடன் நடத்துகிறார்கள். மதத்தை அடிப்படையாகக் கொண்டு, மதத்திற்காக சில பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால், தனியார் பள்ளிகள், வியாபாரம் என்ற முறையில் எல்லோரிடமும் பணம் வசூல் பண்ணுகிறது. மாணவர்களிடமும் வசூல் பண்ணுவது, ஆசிரியர்களிடமும் வசூல் பண்ணுவது—இப்படி நடத்தக்கூடியவர்கள் டிரஸ்ட் என்ற பெயர் வைத்திருக்கக் கூடியவர்கள். இதை பால் கமிட்டியே சொல்லியிருக்கிறது. அவர்கள் சம்பாதிக்கக் கூடிய கள்ளப் பணத்தை வெள்ளைப் பணமாக்குவதற்கும் சர்க்கார் கொடுக்கிற சலுகைகளைப் பெறவும் தனியார் பள்ளிக்கூடங்கள் நடக்கின்றன.

மதப்பள்ளிகள் என்கிறார்கள். இந்தப் பள்ளிகளில், குரானைப் பற்றியோ, கிறிஸ்துவத்தைப் பற்றியோ எத்தனை பள்ளிகளில் சொல்லித் தரப்படுகிறது? சிலபஸ், அரசாங்க சிலபஸ். எந்தப்



பள்ளிக்கூடத்திலும், மைனாரிட்டி பள்ளிக்கூடமாக இருந்தாலும், மெஜாரிட்டி பள்ளிக்கூடமாக இருந்தாலும், இந்த சிலபஸை ஏற்றுக்கொள்கிற நேரத்திலே, பிறகு எப்படி மைனாரிட்டி ஆகும். இன்றையதினம் பில்டிங் கிராண்ட் கொடுக்கப்படுகிறது. மானேஜ்மெண்ட் கிராண்ட் கொடுக்கப்படுகிறது, அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது, டீச்சிங் கிராண்ட் கொடுக்கப்படுகிறது, எக்விப்மெண்ட் கிராண்ட் கொடுக்கப்படுகிறது, சுண்ணாம்பு அடிப்பதற்கு மானியம் கொடுக்கப்படுகிறது, துடைப்பக்கட்டை வாங்கக்கூட மானியம் கொடுக்கப்படுகிறது. இதை ஏன் தேசியமயமாக்கக் கூடாது என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.
ஆர்ட்டிகிள்கள் 31, 32 எல்லாம் கோட் பண்ணினார்கள் When the State Government has given grants, they should not discriminate against minority schools, அதுதானே.

அது மட்டுமல்ல, இன்றையதினம் லாங்குவேஜ் ஸ்கூல்கள் இருக்கின்றன. இன்றையதினம் பல பள்ளிகளிலே கிராண்ட் வாங்குவது கிடையாது. அவர்கள் பணத்தை மாணவர்களிடமிருந்து வாங்கி நடத்துகிறார்கள். அவர்களுக்குத் தனியாக சிலபஸ் இருக்கிறது. அவர்கள் பாஷை அடிப்படையிலே வைத்து நடத்துகிறார்கள். ஆகவே, இப்படி சப்தம் போடக் கூடியவர்கள்

When they make such a hue and cry, why not they do it? Why should they introduce this system?
ஆகவே, இதெல்லாம் ஹம்பக். பணம் சம்பாதிக்கிற முறை பாதிக்கிறதே என்றுதான் ஆத்திரப்பட்டு சட்ட விதியிலே இல்லை என்று சொல்கிறார்கள். உண்மையாக, கல்வியை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற முறையிலே அவர்கள் சொல்லவில்லை.

அடுத்தபடியாக, இதிலே முக்கியமாக இருக்கக்கூடியது 'கான்ஸ்டிட்யூஷன் ஆப் கமிட்டி'. கமிட்டியிலே எப்படி இருக்கிறது? பால் கமிட்டி பல பள்ளிக்கூடங்களுக்கு சென்றிருக்கிறது. எலிமெண்டரி ஸ்கூல்களில் அந்த மானேஜ்மெண்ட் கமிட்டி ஃபங்க்ஷன் பண்ணவில்லை. செகண்டரி கிரேட் பள்ளிகளில் ஒன்றிரண்டு இடங்களிலே தான் ஃபங்க்ஷன் பண்ணுகிறது. பிரசிடெண்ட், செக்ரட்டரி இரண்டு பேரும் மானேஜ்மெண்ட்டை சார்ந்தவர்கள் இருப்பார்கள். ஒவ்வொரு ஸ்கூலிலும் அந்த மாதிரி கமிட்டி வைத்திருந்தால் கமிட்டி எப்படி இருக்கும்? மானேஜ்மெண்ட்டை சேர்ந்த கமிட்டி

யாகத்தான் இருக்கும். இருக்கிற வாத்தியார்களை வைத்து ஓட்டு போடுங்கள் என்று சொல்வார்கள். பிரசிடென்டாக வேண்டுமானால் அந்த ஸ்கூலைச் சேர்ந்தவர், மானேஜர் வேண்டுமானால் பிரசிடென்டாக இருக்கலாம். செக்கரட்டரி ஹெட் மாஸ்டராக இருக்கலாம். அல்லது எலக்டட் ரெப்ரசென்டேடிவ் கமிட்டியினுடைய செக்கரட்டரியாக இருக்கவேண்டும். கமிட்டியினுடைய அதிகாரம் என்ன? கல்வியைப்பற்றி பார்ப்பதுதான். பொது அதிகாரம் கிடையாது. இந்தக் கமிட்டி முடிவு பண்ணுவதை எடுக்கேஷனல் ஏஜன்சி ஒத்துக்கொள்ள வேண்டுமென்று இருக்கிறது. ஆகவே, அந்தக் கமிட்டி சீராக ஃபங்க்ஷன் பண்ணவிட்டால், இந்த சட்டத்தினுடைய அர்த்தமே இல்லாமல் போய்விடும். 7 பேரில் 2 பேர் மானேஜ்மென்ட் ஆள். 7 பேராக இருந்தாலும் சரி, 12 பேர் இருந்தாலும் சரி, மானேஜ்மென்ட்டைச் சேர்ந்தவர்கள் 2 பேர்தான் இருக்கவேண்டும். பிரசிடென்ட் வேண்டுமானால் மானேஜ்மென்ட்டில் இருந்து வரலாம். செக்கரட்டரி பொறுப்பாக இருக்கவேண்டியுள்ளதால், ஹெட் மாஸ்டரோ, எலக்டட் ரெப்ரசன்டேட்டிவ்வோ, ஆசிரியரோதான் இருக்கவேண்டும்.

இந்தக் கமிட்டிக்கு என்ன என்ன அதிகாரம்? சம்பளம் பிக்ஸ் பண்ணுவது, ஆசிரியர்களை நியமிப்பது, பனிஷ்மென்ட் கொடுப்பது என்ற அதிகாரங்களெல்லாம் இருக்கின்றன. சர்க்காரே பிற பொறுப்புகளையும் மானேஜ்மென்ட் கமிட்டிக்குக் கொடுத்து விட்டது. மானேஜ்மென்ட் முடிவு பண்ணினால், எடுகேஷன் ஏஜன்ஸி ஏன் என்று கேட்க முடியாது. அப்படியென்றால், இந்த கமிட்டியினால் நமக்கு என்ன பிரயோஜனம்?

ஒரு பையனை ஒரு ஆசிரியர் அடித்தால், ஒரு இடத்தில் வார்ன் பண்ணி விட்டுவிடுகிறார்கள். இன்னொரு இடத்திலே சஸ்பென்ட் பண்ணுகிறார்கள். மதுரையிலே இருக்கக்கூடிய பள்ளியிலே அதற்கு ஒரு தண்டனை. சென்னையிலே இருக்கக்கூடிய பள்ளியிலே அதற்கு ஒரு தண்டனை. பள்ளிக்கூடத்திற்கு பள்ளிக்கூடம் என்ன தனித்தனி கோட் ஆப் கான்டக்ட் வேண்டும்? ஏன் ஒன்றாகச் செய்யக் கூடாது? செய்வது மட்டுமல்ல, கெஜட்டிலே பப்ளிஷ் பண்ணவேண்டும், என்ன ரூல்ஸ் என்று. இப்பொழுது இதிலே பாதுகாப்பு கிடையாது.



அடுத்து, ஆசிரியர் நியமனம். இப்பொழுது ஒரு ஆசிரியரை நியமிக்க ரூ. 2,000. அப்படிப்பட்ட ஆசிரியரை நியமிக்கும் போதே ரெசிக்னேஷன் கடிதம் வாங்கிக்கொள்வது என்ற நிலையிருக்கிறது. 12 மாதத்திற்கு கையெழுத்து போட்டு 10 மாதச் சம்பளம்தான் வாங்க வேண்டும். ஆகவே, ஜில்லா பூராவுக்கும் ஒரு கமிட்டி போட்டு, யார் யாருக்கு எந்த எந்த ஆசிரியர் வேண்டுமோ, அந்த அந்த ஆசிரியரைப் போட்டு, சி.ஈ.ஓ. தலைமையிலே டீச்சர்ஸ் ரெப்ரசென்டேடிவ் 2 பேர் என்ற முறையிலே அனுப்பினால் என்ன?

பில்டிங்குக்காக ரூ. 1½ லட்சம் இருக்கிறது என்றால், சர்க்கார் ரூ. 65,000 கொடுக்கிறார்கள். பொது ஜனங்களிடமிருந்து பணம் வசூலிக்கிறார்கள். மானேஜ்மென்ட் ரூ. 10,000, ரூ. 15,000 போடுகிறார்கள். ரூ. 10,000 தவிர, பாக்கி பூராவும் பொது ஜனங்களுடைய பணம், சர்க்காருடைய பணம். சர்க்காருடைய பணம், பொது மக்களுடைய பணம்தானே இருக்கிறது பில்டிங்கில். ஆகவே, ஏன் அதை எடுத்துக் கொள்ளக் கூடாது. அதே மாதிரி பலப் பள்ளிக் கூடங்களிலே வசூல் செய்துதான் சொந்த சொத்தாக்கப்பட்டிருக்கிறது. பால் கமிட்டி 1969-ம் வருஷத்திலே நியமிக்கப்பட்டது. இதற்கு மேலே ஆசிரியர்கள் ரொம்பக் கஷ்டப்பட்டிருக்கிறார்கள், அதற்கு மேலே பல ஆசிரியர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தக் காரணத்தினாலே அவர்களுக்கு மேற்படி வேலை வாய்ப்பு கிடைக்கவேண்டுமென்றுதான் நான் 1969-ம் வருஷத்திலிருந்து இதைக் கொண்டு வரவேண்டுமென்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். வணக்கம்.

**புலவர் சி. பழனிச்சாமி:** தலைவர் அவர்களே, 1972-ம் ஆண்டு, ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் ஒழுங்கு முறைப்படுத்துதல் சம்பந்தமான இந்த மசோதாவிலே என்னுடைய கருத்தைச் சொல்ல விழைகிறேன். நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே இயங்குகின்ற இந்த தி.மு. கழகத்தின் அரசாங்கமானது ஏழைகளுக்காக, பாட்டாளிகளுக்காக, தொழிலாளர்களுக்காக ஏற்பட்ட அரசாகும். அதற்கு சான்றாகவே, இன்றைய தினம் பெரும் பணக்காரர்களுடைய நிலையிலே இருக்கிற, பெரும் முதலாளிகளுடைய நிலையிலே இருக்கிற,

தனியார் பள்ளிகளை நடத்துகின்ற நிர்வாகிகளுடைய கொடுமைகளிலிருந்து ஏழை தொழிலாளர்களுடைய நிலையிலிருக்கிற ஆசிரியர் பெருமக்களுக்கு ஓரளவு பாதுகாப்பு கொடுக்கின்ற முகத்தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதற்காக நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் நம்முடைய கல்வி அமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியறிதலைக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நான் இந்த மாமன்றத்திலே பேசுவது எல்லாம் ஏதோ கற்பனை செய்து சொல்வது அல்ல, நான் ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கு மேலே தனியார் பள்ளிகளிலே ஆசிரியராகப் பணியாற்றியதனுடைய அனுபவபூர்வமான கருத்துக்களைத்தான் இங்கே சொல்கிறேன். எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. என். கே. பழனிச்சாமி அவர்கள் கூறியதுபோல், இன்றைய தினம் தனியார் பள்ளிகளை நடத்துகின்ற நிர்வாகிகள் அந்தப் பள்ளிக்கூடங்களை ஒரு வியாபார நிறுவனமாக நினைத்துக்கொண்டு, பணம் சம்பாதிக்கின்ற லாப நோக்கோடுதான் அந்தப் பள்ளிகளை நடத்திக்கொண்டு வருகிறார்கள்.

அதற்குச் சான்றாக என்னுடைய தொகுதியிலே அண்மையிலே நடந்த ஒரு நிகழ்ச்சியை நான் கூற ஆசைப்படுகிறேன். பழனிக்கு அருகிலே நெய்க்காரப்பட்டி என்ற ஒரு ஊர் இருக்கிறது. அந்த ஊரிலே ரேணுகா தேவி உயர் தொடக்கப் பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளியிலே ஏறத்தாழ 20 ஆசிரிய-ஆசிரியைகள் பணியாற்றுகிறார்கள். அங்கே ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கு மேலாக திரு. ஆர். கோபாலகிருஷ்ணன் என்ற ஒரு ஆசிரியர், இளநிலை ஆசிரியராகப் பணியாற்றிக்கொண்டு வந்தார். அந்தப் பள்ளியில் ஒரு செகண்டரி கிரேடு ஆசிரியர் பதவி உயர்வு ஏற்பட்டது. அந்த நிலையிலே அந்தப் பள்ளியிலே இருபது ஆண்டுக்காலமாக பணியாற்றிய ஆசிரியர் திரு. ஆர். கோபாலகிருஷ்ணன் என்பவருக்கு அந்தப் பதவி உயர்வு கொடுக்காமல் இரண்டு ஆண்டுக் காலம் மட்டுமே அந்தப் பள்ளியிலே பணியாற்றிய லலிதா என்ற பெண் ஆசிரியைக்கு அந்தப் பதவி உயர்வு கொடுக்கப்பட்டது. இதுபற்றி ஆர். கோபாலகிருஷ்ணன் அவர்கள் முறையிட்டதன்பேரில் மதுரை



யிலே உள்ள முதன்மை கல்வி அதிகாரியிடம் புகார் மனு ஒன்றை நான் கொடுத்தேன். அந்த முதன்மைக் கல்வி அதிகாரி அவர்களும் 4—3—1973-ம் நாளன்று ஒரு உத்திரவை அனுப்பினார். அந்த உத்திரவிலே திரு. ஆர். கோபாலகிருஷ்ணனுக்கு அந்தப் பதவியைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருந்தார். ஆனால் அந்த உத்திரவைக் கீழே உள்ள அதிகாரிகள் செயல்படுத்தவில்லை, அந்த உத்திரவை முடக்கிவிட்டார்கள். இதனால் 5 மாத காலம் நான் உழைத்த என்னுடைய உழைப்பு வீணடிக்கப்பட்டது. அதற்குப் பின்னால் இயக்குநர் அலுவலகத்திற்கு நான் சென்று நம்முடைய இயக்குநர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வந்தேன். அப்பொழுது துணை இயக்குநர் அவர்கள் 10—8—1973-ம் நாளன்று ஒரு உத்திரவை அனுப்பினார். அந்த உத்திரவிலே மதுரை முதன்மைக் கல்வி அதிகாரி போட்ட உத்திரவை உறுதி செய்து திரு. ஆர். கோபாலகிருஷ்ணன் அவர்களை பதவி உயர்த்த வேண்டுமென்று சொல்லப்பட்டிருந்தது. தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்த உத்திரவை அனுப்பி 4 மாத காலம் ஆகியும் இன்னும் அந்த உத்திரவு செயல்படுத்தப்படாமலே இருக்கிறது. இதை நான் இயக்குநரிடத்திலே 27—10—1973 அன்று அவருடைய அலுவலகத்திற்குச் சென்று, இப்படி டெபுடி இன்ஸ்பெக்டர் முதல் பெரிய கல்வி இயக்குநர் வரையிலும் உத்திரவு போட்டும்கூட அந்தப் பள்ளி நிர்வாகி பணிய மறுக்கிறாரே என்று கேட்டதற்கு இயக்குநர் அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? "நாங்கள் என்ன செய்ய முடியும்? அரசாங்கத்தின் மூலமாகக் கொடுக்கக்கூடிய மேனேஜ்மென்ட் கிரான்டை வேண்டுமானால் நிறுத்தலாம்" என்று சொன்னார்கள்.

நான் கல்வியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களையும் இயக்குநர் அவர்களையும் கேட்டுக்கொள்வது எல்லாம் அந்தப் பள்ளிக்கு அரசாங்கம் கொடுக்கின்ற மேனேஜ்மென்ட் கிரான்டை நிறுத்திவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் முக்கியமான காரணம் கூட அதற்கு இருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடத்திற்கு ஏராளமான சொத்துக்கள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 70 ஏக்கர் நஞ்சை புஞ்சை நிலங்கள் இருக்கின்றன. ரூபாய் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தோப்புகள் உள்ளன....

[1973 டிசம்பர் 4

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இங்கே ஒரு மசோதா இருக்கிறது. இந்த மசோதாவிலே என்ன என்ன விதிகள் சேர்க்கலாம், என்ன என்ன எடுக்கலாம், எபபடிச் செய்தால் கல்வித் துறை சீராகும் என்பதை மட்டுமே இந்த விவாதத்திலே பேசவேண்டும். கல்வித் துறை மீதான மானியத்திலே வருகின்றபொழுது விரிவான முறையிலே இப்படிப் பேசினால் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும். இப்பொழுது இருப்பது மசோதாதான். கொடுக்கப்பட்ட 10 நிமிடத்தில் பள்ளி, தோப்பு என்று சொல்லிக்கொண்டிருந்தால் பயன்படாது. எனக்குப் பயன்படுகிற வகையிலே கல்வித்துறைக்குப் பயன்படுகின்ற வகையிலே, எதிர்கால சமுதாயத்திற்குப் பயன்படுகின்ற வகையிலே பரிந்துரைகளை அவர்கள் வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**புலவர் சி. பழனிச்சாமி :** பள்ளி நிர்வாகிகள் ஆசிரியர்களைக் கொடுமைப்படுத்துகிறார்கள் என்பதை விளக்கத்தான் நான் சொல்கிறேன். இத்தனை சொத்துக்களை வைத்துக்கொண்டு அந்த நிர்வாகி அந்தப் பள்ளி ஆசிரியர்களைக் கொடுமைப்படுத்திக் கொண்டு வருகிறார். அந்தச் சொத்துக்களுக்கு உயில் இருக்கிறது, அது இன்றைக்கு அந்த நிர்வாகியின் சொத்து அல்ல, இப்பொழுது அங்கே ஒரு கட்டடம் கட்டப்பட்டு அந்தக் கட்டடத்திற்கு அரசாங்கத்திலிருந்து வாடகை வாங்கிக் கொள்கிறார். ஆகவே மேனேஜ்மெண்ட் கிராண்ட்டை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களைச் சேர்ப்பதற்கு ஆயிரம், 2 ஆயிரம் என்று கையூட்டு வாங்கிக்கொள்கிறார்கள், அதைத் தடுக்க வேண்டும். ஆசிரியர் சேம நல நிதி இவற்றில் கடனை அவர்கள் அனுபவித்துக் கொண்டு ஆசிரியர்கள் மூலமாக அதை அடைக்கச் சொல்கிறார்கள் பெண் ஆசிரியர்கள் தாய்மை விடுப்பு, மற்றும் பல விடுப்புகள் எடுத்தால் அதற்கான ஊதியத்தின் ஒரு பகுதியை அந்த நிர்வாகி எடுத்துக்கொள்கிறார். அப்படி செய்வதற்கு மறுக்கின்ற ஆசிரியர்களுக்கு விடுப்பு மறுக்கப்படுகின்றது. இப்படிப் பல கொடுமைகளை நிர்வாகிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே தனியார் பள்ளிகள் அனைத்தையுமே அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டும்.



1973 டிசம்பர் 4] [புலவர் சி. பழனிச்சாமி]

நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மிகத் துணிச்சலான காரியங்களைச் செய்துகொண்டு வருகிறார்கள், ஏ.பி.டி. மகாலிங்கம், டி.வி.எஸ். பஸ் முதலாளிகள் இவர்களையெல்லாம் பணியவைத்து பேருந்துகளை நாட்டுடைமையாக்கியிருக்கிறார். இப்படிப்பட்ட பல துணிச்சலான காரியங்களைச் செய்த நம்முடைய கலைஞர் அவர்கள் இந்தத் துணிச்சலான காரியத்தையும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நாட்டிலேயுள்ள பள்ளிகள் அனைத்தையும் அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மசோதா ஓரளவிற்கு ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது என்று கூறி ஆதரித்து முடிக்கிறேன். வணக்கம்.

*** திரு. என். டென்னிஸ் :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூறலாமென்று நினைக்கிறேன்.

இந்த மசோதா ஆசிரியர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்காகக் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. அதுதான் அதனுடைய முக்கிய நோக்கம் என்று கொண்டுவரப்பட்டு இருப்பதால் வரவேற்கத் தக்கது. ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு வேண்டும். இப்பொழுது இருக்கிற நிலையில் மேனேஜ்மெண்ட் ஆசிரியர்களை எப்பொழுதும் பிரித்துவிடக்கூடிய நிலைமை இருக்கிறது. நியாயமான விஷயங்களில்கூட பல மேனேஜ்மெண்ட்டுகள் கையாளுகின்ற முறை தவறானதாக இருக்கிறது, நியமனம் போன்ற விஷயங்களில் அவர்களில் பலர் ஒழுங்கற்ற முறையிலே நடந்துகொள்கிறார்கள். ஆனால் அதே சமயத்தில் ஒழுங்காக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மானேஜ்மெண்ட் பள்ளிகள் பல இருக்கின்றன. கீர்த்தியாக அவைகள் கமிட்டிகள் அமைத்து சட்ட திட்டங்கள் போட்டு அதன் அடிப்படையில் செயலாற்றி வருகின்றன.

இந்த மசோதாவானது சிறுபான்மையோர் ஸ்தாபனங்களுக்குக் கொடுக்கப்பட்ட உரிமைகளை மீறுவதாக இருக்கிறது. இந்த மசோதாவின் பல பிரிவுகளிலிருந்து அவைகளுக்கு முழு விதிவிலக்கு அளிக்க வேண்டும். அரசியல் சட்டத்திலே ஜீவாதார உரிமை என்று பல ஷரத்துக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன,

[திரு. என். டென்னிஸ்] [1973 டிசம்பர் 4

அதில் ஆர்டிகிள் 30 (1)-இல் கொடுக்கப்பட்டிருக்கின்ற உரிமைகளை சிறுபான்மையோர்கள் ஸ்தாபனங்களை ஏற்படுத்தலாம், நிர்வகிக்கலாம் என்று கொடுக்கப்பட்டிருக்கின்ற உரிமைகளை பிறுகுறாக இந்த மசோதாவின் பல பிரிவுகள் இருக்கின்றன. அரசியலமைப்புச் சட்டத்திலே 19-வது ஆர்டிகிளில் கொடுக்கப் பட்டிருக்கின்ற உரிமைகளுக்குச் சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. ஆனால் 30 (1) பிரிவில் இருக்கக்கூடிய உரிமைகளுக்கு கட்டுப்பாடு கொடுக்கப்படவில்லை. ஆதலால் தேசிய நலனை வைத்து ஏற்படுத்திய அந்த உரிமைகளை மீறக்கூடிய பகுதிகளை மசோதாவிலிருந்து நீக்காவிட்டால் அது செல்லுபடியாகக் கூடியதாக இருக்குமா என்பதைப் பார்க்க வேண்டும். ஆகவே, அரசியல் சட்டத்திற் குட்பட்டு, சட்ட வரம்பிற்குட்பட்டு மசோதாவின் சில பாகங்களைத் திருத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[நண்பகல் 12-00]

அடுத்து கார்ப்பரேட் மேனேஜ்மெண்ட் பள்ளிக்கும் தனியார் பள்ளிக்கும் இருக்கும் வித்தியாசத்தைப்பற்றி இந்த மசோதா பரிசீலிக்கவில்லை. உதாரணமாக தென்னிந்தியத் திருச்சபையின் சார்பாகப் பல பள்ளிக்கூடங்கள் நடைபெறுகின்றன. அவைகள் கம்பெனிஸ் ஆக்ட், ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட், டரஸ்ட், ஆக்ட், சொஸைட்டீஸ் ஆக்ட் முதலிய சட்ட திட்டங்களுக்கும், இன்னும் இந்தியாவிலுள்ள மத்திய அரசின் பல சட்டங்களுக்கும் உட்பட்டு ரிஜிஸ்டர் செய்யப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவைகள் கார்ப்பரேட் பாடியாக இயங்குகின்றன. கார்ப்பரேட் ஸ்தாபனத்திலுள்ள பள்ளியை வெவ்வேறாகப் பிரிப்பது என்றால் அது பல பிரச்னைகளை உருவாக்குவதாக இருக்கும். பிரச்னைகளுக்கு உதாரணமாக கார்ப்பரேட் பாடியில் சீனியாரிட்டி முதலியவைகளை எப்படி நிர்ணயிப்பது, ஒரு ஆசிரியரை மற்றொரு பள்ளிக்கு எப்படி டிரான்ஸ்பர் செய்வது என்பதுபோன்ற இப்போதிருக்கும் நிலைமைக்கு மாறான பல பிரச்னைகளெல்லாம் வந்து சேரும். எல்லா ஸ்தாபனங்களுக்கும் சேர்ந்து ஒரு ஸ்கூல் கமிட்டி இருக்கிறது. அதில் ஹெட்மாஸ்டர்கள் இருக்கிறார்கள், கரெஸ்பாண்டெண்ட்கள் இருக்கிறார்கள், பிரதிநிதிகள் இருக்கிறார்கள். இந்த கார்ப்பரேட் மேனேஜ்மெண்டில்,



1973 டிசம்பர் 4] [திரு. என். டென்னிஸ்]

ஒரு பள்ளிக்கு ஒரு கமிட்டி என்றால் அது பல பிரச்னைகளை உருவாக்கக் கூடியதாக இருக்கிறது. ஒரு பள்ளிக்கூடம் தவறு செய்தால் கார்ப்பரேட் மேனேஜ்மெண்ட் மூலம் நடவடிக்கை எடுப்பது என்றால் சுலபமாக இருக்கும், அதற்கான வழிவகைகள் இருக்கின்றன. சீராகவும், சிறப்பாகவும் நடந்துகொண்டிருக்கும் இந்த கார்ப்பரேட் மேனேஜ்மெண்டில் இப்படி பிரத்யேகம் பிரத்யேகமாக ஸ்கூல் கமிட்டி அமைப்பதால் பல பிரச்னைகள் உருவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஸ்கூல் கமிட்டி அமைப்பதும் பல பிரச்னைகளை உருவாக்குவதாக இருக்கிறது. அது சிறப்பாக நடந்து கொண்டிருக்கும் பள்ளிகளுக்குப் பல பிரச்னைகள் உருவாக்கக்கூடியதாக இருக்கும். பால் கமிட்டி ரிப்போர்ட்டிலும், கேரளா எஜுகேஷன் பில்லிலும் இப்படி ஸ்கூல் கமிட்டி அமைக்கும் வழக்கம் இல்லை என்று நான் கருதுகிறேன். இப்பொழுதுள்ள கமிட்டியினாலேயே கார்ப்பரேட் மேனேஜ்மெண்ட் மிகவும் ஒழுங்காகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த மசோதாவின் அடிப்படையில் ஆசிரியர்களை கமிட்டியில் அங்கமாக நியமித்தால் அது பல பிரச்னைகளை உருவாக்கக் கூடியதாக இருக்கும். ஆசிரியர்களின் காரியங்களையே இந்த ஸ்கூல் கமிட்டி நிர்ணயித்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் காரியங்களை நிர்வகிப்பதில் அவர்களே நீதிபதிகளாக இருப்பது சட்ட விரோதமாக இருக்கும் என்றே கருதுகிறேன். ஹெட்மாஸ்டர்கள் ஸ்கூல் கமிட்டியில் அங்கமாக இருக்கிறார்கள், அதுவே போதுமானது என்று கருதுகிறேன். மேனேஜ்மெண்ட் கமிட்டிக்குப் பதிலாக அட்வைசரி பாடி இருந்தால் அதுவே போதும். அதுவே பல காரியங்களைப் பரிசீலிக்க வழிவகுக்கும். ஆசிரியர்களையும், பெற்றோர்களையும் கொண்ட கமிட்டி பல பிரச்னைகளை உருவாக்கக்கூடியதாக இருக்கிறது. எனவே ஸ்கூல் கமிட்டியில் ஆசிரியர்களுக்குப் பதிலாக அரசாங்க பிரதிநிதி ஒருவர் இருக்கலாம்.

இப்பொழுது கல்லூரிகளில் யூனிவர்சிட்டி ரெப்ரசென்டேட்டிவ் இருப்பதைப்போல இந்தக் கமிட்டியில் அரசாங்க பிரதிநிதி இருப்பது உபகாரமாக இருக்கும் என்று கூற விரும்புகிறேன். இப்பொழுதுள்ள குழு தவறு இழைத்தால் அதைக் களைவதற்கு இப்பொழுதுள்ள மசோதாவில் வழிவகை செய்யப்படவில்லை.

குழுவில் உள்ள ஒரு அங்கத்தினர் தவறிழைத்தாலும் அவரை நீக்கவும் வழிவகை இல்லாமல் இருக்கிறது. ஆகவே, டிரஸ்ட் ஆக்ட், ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட், சொசைட்டீஸ் ஆக்ட், கம்பனிஸ் ஆக்ட் போன்ற பிரத்யேக சட்டங்களின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்டு ஒழுங்காகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் அந்தப் பள்ளிகளுக்குத் திரும்பவும் இதுபோன்று ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு கமிட்டி அமைப்பது சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு ரெஜிஸ்டர் செய்து அமைக்கப்பட்டுள்ள அந்த கமிட்டிகளுக்கு முரண்பட்டதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை]

கட்டாயப்படுத்தி,— மேனேஜ்மெண்டின் விருப்பப்படி அல்ல— ஒரு கமிட்டி அமைக்கப்படுகிறது. அப்படி அமைப்பதால் பல பிரச்னைகளை உருவாக்கக்கூடியதாக அது இருக்கும். ஒற்றுமையாக இயங்குகின்ற அந்த ஸ்தாபனங்களுக்குப் பலவிதமான பிரச்னைகளை உருவாக்கக்கூடியதாக இருக்கிறது. மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ள காம்பிடெண்ட் அதாரிட்டிக்கு அதிகாரங்கள் பெருமளவில் 'அன்லிமிடெட்'-டாக இருக்கின்றன. பெரிய அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. காம்பிடெண்ட் அதாரிட்டி பல அளவில் இருப்பார்கள். வட்டார அளவில் தாலுக்கா அளவில் இருக்கலாம். அதில் மேனேஜ்மெண்டின் பிரதிநிதிகளும் இந்த காம்பிடெண்ட் அதாரிட்டியில் அங்கம் வகித்து கமிட்டியாகச் செயல்படுவது உபயோகரமாக இருக்கும். எஜுகேஷனிஸ்ட்ஸ் ஒருவரும் இவ்வித கமிட்டியில் அங்கமாக இருக்கலாம். காம்பிடெண்ட் அதாரிட்டியைப் பற்றி இப்பொழுது விளக்கப்படவில்லை. அதைப் பார்த்தால் 'அன்லிமிடெட் பவர்ஸ்', சர்வாதிகார அதிகாரங்கள் இருப்பதைப் போல் தெரிகிறது. அதை ரூல் மேக்கிங் பாடி அதிகமாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்களின் வேலை பாதுகாப்பிற்காக இந்த மசோதா கொண்டு வரப்படுகிறது என்று சொல்கிறார்கள். அவர்களது வேலைக்கு சரியான பாதுகாப்பளிக்கக்கூடிய ஷரத்துக்கள் இதில் அடங்கியிருக்கின்றனவா என்று பார்த்தால் அவர்கள் கடமைகளும் விளக்கப்படவில்லை. முதலாவதாக, க்வாலிஃபைட் ஆசிரியர்கள்





ஓராண்டு ப்ரொபேஷனுக்குப் பிறகு, போஸ்ட் நிரந்தரமாக இருந்தால் அவைகளை 'கன்ஃபர்ம்' செய்ய வேண்டிய வழி வகைகளைச் செய்ய வேண்டும். இரண்டாவதாக, இரண்டாண்டு களுக்கு மேல் டெம்பரரியாக இருக்கும் நிலை மாற்றப்பட வேண்டும். அடுத்து, இடம் காலியாக இருந்தால் டெம்பரரி போஸ்டில் நியமிக்கப்படுபவர்கள்; பள்ளியாண்டின் மத்தியில் பிரித்து விடப்படக்கூடாது என்ற விதி ஏற்படுத்த வேண்டும். ஒரு பள்ளியில் வேகன்சி வரும்பொழுது முன்னால் பிரித்துவிடப் பட்டவர்கள் யாரேனும் இருப்பின் அவர்களைத்தான் நியமிக்க வேண்டுமென்பதற்கான வழிவகைகள் இந்த மசோதாவில் இடம் பெற வேண்டும். பக்கத்துப் பள்ளிகள் ஆரம்பிப்பதாகயிருந்தாலும், அல்லது 'அப்கிரேட்' செய்வதன் காரணத்தால் பிரித்துவிடப்பட்ட ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். அவர்களை அந்தப் பள்ளிக்கூடங்களிலேயே வைத்துக் கொள்ளலாம் அல்லது அரசினர் பள்ளிகளிலே வேலை கொடுக்க வேண்டும்.

ஆசிரியர்களின் சம்பளத்தை ஹெட்மாஸ்டர்களின் மூலம், டிரஷரி பில்லின் மூலம் கொடுப்பதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும்.

இந்த ரூல் மேக்கிங் பவர் விளக்கப்படாத நிலையில் 'வேக்'— ஆக இருக்கிறது. ரூல் ஃப்ரேம் செய்யும்பொழுது சிறுபான்மையினர் பாதிக்கப்படக்கூடாது, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

அடுத்தபடியாக, கிளாஸ் 2 (7) இல் கொடுக்கப்பட்டிருக்கும் எக்செம்ப்ஷன் டிஸ்கிரிமினேட்டரியாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே இந்த மசோதாவை வரவேற்று ஒருசில கருத்துக்களைச் சொல்ல நான் ஆசைப் படுகிறேன். இந்த மசோதாவின் மூலமாக தனியார் பள்ளிக்கும் அரசுக்கும் இருக்கின்ற சில விவகாரங்கள் ஒருமுகப்படுத்தப்பட்டு ஒரு கட்டுமானத்திற்குள் வரும் என்று நான் நினைக்கிறேன். அரசிலேயிருந்து தனியார் பள்ளிகளுக்குப் பல கிராண்ட்கள்

[திரு. கு. காமாட்சி] [1973 டிசம்பர் 4

கொடுக்கப்படுகின்றன. டீச்சிங் கிராண்ட், பில்டிங் கிராண்ட் முதலியன கொடுக்கிறோம், ஃபர்னிச்சர் கிராண்ட், மெய்ன்டனென்ஸ் கிராண்ட் இவைகளெல்லாம் கொடுக்கிறோம். இவைகளையெல்லாம் அவர்கள் சரியாக, ஒழுங்காக உபயோகப்படுத்துகிறார்களா என்பதற்கு ஆடிட் இருக்கிறது. இருந்தாலும்கூட அதிலே சிலபல தவறுகள் நடக்கத்தான் செய்கிறது. அவைகளெல்லாம் இந்த மசோதாவின் மூலமாகத் தடுக்கப்படும் என்று நினைக்கிறேன்.

ஆசிரியர்களைப் பற்றி இங்கே சொல்லப்பட்டது. ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கும்பொழுது அவர்களுக்குரிய சம்பளம் கொடுக்கப்படவில்லை, நிர்வாகஸ்தர்கள் ஒரு பகுதியை எடுத்துக் கொண்டு ஒரு பகுதியை மட்டும் கொடுத்து கையெழுத்து வாங்குகிறார்கள் என்ற குற்றச்சாட்டுகளெல்லாம் இங்கே கூறப்பட்டன.

இந்த மசோதாவின் வாயிலாக பள்ளிக்கூடத்தை ஒரு தொழிலாக நடத்துகிற தன்மை அற்று போய்விடும் என்றே நான் நினைக்கிறேன். தற்போது நிர்வாகக் குழுவில் தலைமையாசிரியர் இருக்கிறார். அமைக்கப்போகும் குழுவில் ஆசிரியர்கள் எல்லாம் இடம் பெறவேண்டும். அந்தக் குழு அமைப்பதன் வாயிலாக அந்தத் தவறுகள் எல்லாம் சரி செய்யப்படும் என்றே நினைக்கிறேன். ஆசிரியர்களுக்கு உரிமை கொடுக்கும்போது பி.டி. ஆசிரியர்கள், செகண்டரி கிரேடு ஆசிரியர்கள், ஹையர் கிரேடு ஆசிரியர்கள் அனைவருக்கும் உரிமை கொடுக்க வேண்டும். அப்படித் தரப்படுமானால் இன்னும் மிகச் சிறப்பாக அந்தக் குழு செயல்படும் என்று கருதுகிறேன். ஆசிரியர்கள் நியமனத்தைப் பொறுத்தும் அந்தக் குழுவே பரிசீலனை செய்து ஏற்றவர்களைப் போட வசதியாக இருக்கும். ஸ்காலர்ஷிப் எல்லாம் இப்போது நிறையத் தரப்படுகிறது. அதிலே கூட நிர்வாகஸ்தர்கள் கை வைக்கிறார்கள் என்ற குறை எல்லா இடத்திலும் இருக்கிறது. அதையெல்லாம் நாம் கண்காணித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய நாட்டில் சாதி மத சார்பற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற அடிப்படைக் கொள்கையை வைத்திருக்கிறோம். இருந்தாலும்கூட சாதியின் பெயரால்



1973 டிசம்பர் 4] [திரு. கு. காமாட்சி]

ஆங்காங்கு பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. சாதியின் பெயரால் இருப்பதால் அந்தப் பகுதியில் இருக்கும் அந்த வகுப்பாருக்குத் தான் முதலிடம் தரப்படுகிறதே தவிர மற்றவர்களுக்குத் தருவதில்லை. அந்தக் குழுவில் எல்லாம் ஒரு சாதியைச் சேர்ந்தவர்கள்தான் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். மற்றவர்கள் உறுப்பினர்களாகத் தகுதி இல்லை என்றெல்லாம் கூட அவர்கள் விதி வகுத்துக் கொண்டு நடத்தி வருகிறார்கள். அவை எல்லாம் களையப்படுமானால் இன்னும் நம்முடைய நாட்டில் கல்வி மிக நல்ல முறையில் பரவுவதற்கும் எல்லோரும் பயன் பெறுவதற்கும் வசதியாக இருக்கும். அதிலும் அரசு கவனம் செலுத்தி அதற்கும் ஒரு கட்டுப்பாடு விதிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இதுபோன்று பள்ளிக்கூடங்களுக்குக் கொண்டு வருவதைப் போல் கல்லூரிகளுக்கும் இருக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன். திருச்சியைப் பொறுத்தவரை சில கல்லூரிகள் இருக்கின்றன. கிறித்தவர்கள் கல்லூரி இருக்கிறது; கிறித்தவர்களுக்கு முதலிடம் தருகிறார்கள். இஸ்லாமியக் கல்லூரி இருக்கிறது; அவர்களுக்கு முதலிடம் தருகிறார்கள். அதே போல் வேறு உயர்ந்த சாதிக்காரர்களுக்குக் கல்லூரி இருக்கிறது. அங்கு அவர்களுக்கு முதலிடம், சலுகை அளிக்கப்படுகிறது. பாவம், கீழே இருப்பவர்களுக்கு எந்தவிதச் சலுகையும் இல்லாத சூழ்நிலை அந்தப் பகுதியில் இருக்கிறது. இதுபோன்று எல்லாப் பகுதிகளிலும் இருக்கின்றன. ஆகவே, சாதி மதச் சார்பற்ற முறையைப் பள்ளிக்கூடத்திலாவது கொண்டு வருவோமேயானால் நாட்டிலே கல்வி எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய அளவுக்கு நல்ல முறையில் அமையுமென்று கருதுகிறேன்.

நிர்வாகத்திலே கூட கட்டுப்பாடு செய்து நிர்வாகஸ்தர்கள் இன்னின்ன முறையில்தான் செயல்பட வேண்டுமென்று விதிமுறைகளை வகுத்துக் கொள்ள வேண்டும். இன்னின்ன நிலைமைகள் இருந்தால்தான் அங்கீகாரம் அளிக்கப்படும் என்ற முறையையும் நாம் உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க்கை நடத்த வேண்டுமென்பதற்காகத்தானே தவிர, அவர்கள் தவறான காரியங்களைச் செய்வதற்கு இடம் கொடுப்பது என்று பொருள் அல்ல. நிர்வாகம் என்று சொன்னாலே பொருள் சரியாக நடக்க வேண்டுமென்பதுதான். மற்றவற்றை எல்லாம் நிர்வாகம் என்று சொல்லிவிட முடியாது. தனியார் பள்ளிகள் சரியாக நடக்கவில்லை, நிர்வாகம் சரியாக நடக்கவில்லை என்பதற்குப் பல ஆதாரங்கள் ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன. அந்த ஆதாரங்களை வைத்து மட்டும் அந்தக் காரியங்களைச் செய்து விட வேண்டுமென்று சொல்லவில்லை. இன்றைக்குத் தனியார் பள்ளிகள், பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள், அரசாங்கப் பள்ளிகள் வேறு வேறு முறையில் நடக்கின்ற அமைப்புக்கள் எல்லாம் ஒரே நிர்வாகத்தின்கீழ் ஒரே கருத்தோட்டத்தில் எப்படி இயங்க வேண்டுமென்று அனைவரும் சிந்திக்க வேண்டும். எப்படிச் செயல்பட வேண்டும், இவற்றில் என்னென்ன மாதிரியான முன்னேற்றங்கள் எல்லாம் ஏற்படுகின்றன என்பதையெல்லாம் ஒவ்வொரு நேரத்திலும் சமுதாயத்திலுள்ளவர்கள் உணர்ந்து கொள்ளுகிறார்கள். நல்ல பிரஜைகள் ஆக்குகின்ற, நாட்டின் பெயரில் பற்றுக் கொண்டவர்கள் ஆக்குகின்ற, நாட்டுக்குக் கஷ்டம் வரும்போது தியாகம் செய்யத் தயாராகின்ற மக்களை உருவாக்க வேண்டிய கல்வியமைப்புக்கள் அமைய வேண்டுமே தவிர, தன்னுடைய லாபத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு அதிகாரம் செய்து கொண்டிருப்பவர்களின் கையில் இருந்து கொண்டிருக்கின்ற நிலை கூடாது.

ஆகவே இவைகளை எல்லாம் ஒன்றாக எடுத்துச் செய்வது என்பதில் அதை அரசாங்கம் செய்ய வேண்டும். அப்படி அரசாங்கம் செய்வதற்கான முறையில் அரசாங்கம் சிந்திக்கவில்லை. அப்படி பள்ளிகளை எடுத்துக்கொள்வதால் பெரிய பளு ஏற்படுவது போலவும், வேறுபல சங்கடங்கள் உண்டாவதுபோலவும் அமைச்சர்களும் அரசாங்க அமைப்புகளும் எண்ணிக் கொண்டிருக்கின்றன. இந்த எண்ணத்தை மாற்றியாக வேண்டும். இன்றில்லாவிட்டாலும் நாளையாவது அந்த எண்ணம் மாறியாக வேண்டும். இப்படி இரண்டு மூன்று வித அமைப்புகள் இருக்கின்றன. சில பள்ளிக்கூடங்கள் சிறப்பான முறையில்



நடக்கலாம், அதில் ஆட்சேபணையில்லை. சிறப்பாக நடக்கிற பள்ளிக்கூடங்கள் எவ்வளவு, சிறப்பில்லாமல் நடக்கக்கூடிய பள்ளிக்கூடங்கள் எவ்வளவு என்று பார்க்க வேண்டும். ஜனநாயகத்தில் நாம் எண்ணிக்கையை வைத்துத்தான் கணக்கிடுகிறோம். மெஜாரிட்டி எண்ணிக்கை உள்ளதா இல்லையா என்று கணக்கிட்டு ஒப்புக்கொள்ளக்கூடிய காலத்தில்தான் நாம் வாழ்கிறோம். ஆகவே தனியார் பள்ளிக்கூடங்களைப் பொறுத்த வரையில் மெஜாரிட்டி பள்ளிக்கூடங்களில் நிர்வாகம் முறையாக நடத்தப்படுகின்றதா இல்லையா என்று பார்க்கும்போது அதில் பல்வேறு ஊழல்கள் உள்ளன என்பது தெளிவு. ஆகவே மைனாரிட்டீஸ் என்றால் படிக்கிறவர்கள் மைனாரிட்டீஸ் அல்ல.

இன்று நாங்கள் மைனாரிட்டீஸ் என்று சொல்லி வரி போடுவதிலிருந்து சலுகை அளிக்க வேண்டுமென்று கேட்டால் மைனாரிட்டீஸ் என்பதற்காக அளித்துவிடுவதில்லை. நாங்கள் மைனாரிட்டீஸ், ஆகவே எங்களுக்கு உச்சவரம்பு விதிப்பதிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டால் அளித்து விடுவதில்லை. ஒன்றுக்கு நாம் வரம்பு நிர்ணயிக்கும்போது மைனாரிட்டீஸ் என்பதால் சலுகை அளித்து விடுவதில்லை. மைனாரிட்டீஸ் என்பதற்காக என்ன செய்கிறார்கள்? கட்டடங்களை நிர்வகிக்கிறார்கள். அந்தக் கட்டடம் என்பது யார் சொத்து? அது பொது மக்களைச் சேர்ந்தது. அந்தக் கட்டடத்தை நிர்வகிக்கும் காரியத்தை மட்டும்தான் அவர்கள் செய்கிறார்கள். மாணவர்களை எடுத்துக்கொண்டால் அங்கு மைனாரிட்டி மாணவர்கள் மட்டும் படிப்பதில்லை. எல்லா மாணவர்களும்தான் படிக்கிறார்கள். அப்படி அங்கு எல்லோரும் படிப்பதற்காக அரசு பணம் தருகிறது. அப்படி அரசாங்கத்தால் கொடுக்கப்படும் பணம் முறையாகச் செலவிடப்படுகிறதா, அரசாங்கத்தின் நோக்கத்தின்படி அங்கு மாணவர்கள் பயிற்றுவிக்கப்படுகிறார்களா என்று பார்க்கும் அதிகாரத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்வதில் என்ன மைனாரிட்டி வருகிறது என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே. மைனாரிட்டி என்ற வாதம் கூட இன்று ஒரு சுரண்டலுக்கான வாதமாக, சுயநலங்களைப் பேணிப் பாதுகாப்பதற்காகச் சொல்லப்படுபவை என்று பொருள்படும்படி பலபேர்கள்

கல்வி நம்முடைய நாட்டுக்கு மிக முக்கியமான ஒன்று. அதை ஒரு தொழிலாகக் கருதி அதிலிருந்து லாபம் சம்பாதிக்கிறவர்கள் அந்த லாபத்தினால் தங்களுடைய குடும்பத்தை வளர்த்துக் கொண்டிருப்பவர்கள் யார் யார் என்று கண்டுபிடித்து அந்தப் பள்ளிகளை எல்லாம் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். இந்த மசோதாவை நிறைவேற்றுவதன் மூலமாக தனியார் பள்ளிக்கும் அரசுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டு அந்தத் தொடர்பின் வாயிலாக அதிலிருக்கும் சில முறைகள் எல்லாம் மாற்றப்பட்டு நல்ல முறையில் இனி பள்ளிகள் நடைபெறும் என்ற சூழ்நிலையை உருவாக்குவதற்காக நன்றி கூறி இந்த மசோதாவை வரவேற்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** உதவி சபாநாயகர் அவர்களே, தனியார் பள்ளிகளை முறைப்படுத்துகின்ற இந்தத் திருத்த மசோதாவின்மீது ஒருசில கருத்துக்களைச் சொல்ல ஆசைப் படுகிறேன். இங்கு இந்த மசோதாவை எடுத்துக் கொள்ளக் கூடாது என்றும், இது அரசியல் சட்டத்திற்கு விரோதமானது என்று வாதம் செய்யப்பட்டது. ஆனால் இம்மாதிரியான மசோதாக்கள் பல மாநிலங்களிலே இதற்கு முன்பே வந்து, சிலர் அவற்றை சுப்ரீம் கோர்ட் வரை கொண்டு சென்று அங்கும் வெற்றி பெறாமல் திரும்பி இருக்கிற ஒரு வரலாறு நம்முடைய நாட்டில் ஏற்பட்டிருக்கிறது.

1958-ம் ஆண்டு கேரளாவிலே இம்மாதிரியான ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது. அதற்குப் பின்னாலும் கூட 1969-ல் கூட நடந்திருக்கிறது என்று கருதுகிறேன். ஆகவே, இப்போது தனியார் பள்ளிகளை அரசாங்கமே எடுத்துக் கொள்வது என்பது புதிதாக இந்த மாநிலத்திலே முதன் முதலாக செய்கிற காரியமாக இருந்தால் அந்த வாதங்களை எல்லாம் நாம் கணக்கில் எடுத்துப் பார்க்க வேண்டும். ஆனால் இது பல இடங்களில் நடந்துவிட்ட ஒன்று. நான் கேள்விப்படுகிறேன்—சமீபத்திலே பீகாரில் சட்டம் கூடக் கொண்டு வராமல் ஒரு உத்தரவின் மூலமாகப் பள்ளிகளை எல்லாம் எடுத்துக் கொண்டார்கள் என்று. அதுசம்பந்தமாக வழிமுறைகள் என்ன, எப்படி நடந்திருக்கிறது என்ற விவரங்களை எல்லாம் ஒருவேளை பதில் சொல்லும்போது





அமைச்சரிடத்திலிருந்து எதிர்பார்க்கலாம் என்று கருதுகிறேன். இந்த நிலைமையிலே தனியார் பள்ளிகளின் நிர்வாகத்தைச் சீர்திருத்துவது என்று இப்போது சொல்லுவது மிகக காலங்கடந்த ஒன்றாகத் தான் இருக்கிறது என்று நான் இதை எடுத்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு நாட்டில் இருக்கும் ஒவ்வொரு மனிதனும் அறிவும் ஆற்றலும் பெறுவதற்கு ஆரம்ப நிலையிலே, ஆரம்பக் கல்வியிலே இருந்துதான் அஸ்திவாரம் இடப்படுகிறது. அப்படி இடப்படுகிற அஸ்திவாரம் சரியானதாக, முறையானதாக இருக்க வேண்டும் என்று அவ்வளவு பேரும் கருதுகிறார்கள். அப்படிக் கருதுகிற அதே நேரத்தில் அரசர்கள் ஆண்டுகொண்டிருந்த காலத்தில் இருந்த அந்தப் போதனைகளும், வெள்ளையர்கள் ஆண்டு கொண்டிருந்த அந்தக் காலத்தில் இருந்த போதனைகளும், அதே போன்று நிர்வாகங்களும் இன்றைக்கும் வைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். இது சமுதாயத்திலுள்ள இடர்ப்பாடுகள் காரணமாக, தங்களுடைய சுய நலன்கள் காரணமாகச் சொல்லப்படுகின்ற வாதமாக இருக்குமே தவிர, உண்மையில் கல்வியின் அடிப்படையை அறிந்து சொல்லுகின்ற வாதமாக இருக்க முடியாது.

இன்றைய நிலைமையை எடுத்துக் கொண்டால் உடைமைகள் சம்பந்தமாக, உரிமைகள் சம்பந்தமாக, கடமைகள் சம்பந்தமாக கருத்துக்களிலே பெரும் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இந்த மாற்றங்களை எல்லாம் உணர்ந்து வருபவர்கள் உணர்ந்து கொள்ளும் வகையில் பாடங்களைப் போதிக்கும் வகையில் பள்ளி நிர்வாகம் அமைந்தால் இந்தக் காலத்திற்குப் பொருத்தமாக இருக்குமே தவிர, இல்லாவிட்டால் முரண்பாடாக, மோதுதலாக, ஊழலாக, லஞ்சமாக உருவம் கொள்வதற்கான வாய்ப்புக்கள்தான் அதிகம் இருக்கிறது.

இங்கு என்ன பார்க்கிறோம்? தனியார் பள்ளிகளின் நிர்வாகத்தை மாற்றுவதன் மூலம் ஒரு பக்கத்தில் மைனாரிடி உரிமை பாதிக்கப்படுகிறது என்ற பெரிய வாதத்தைச் சொல்லுகிறார்கள். மைனாரிடி என்று சொல்லுவதற்கு அரசியல் சட்டத்திலே அளித்திருக்கும் சலுகைகள் அவர்கள் நல்லவிதமாக

அதை வியாக்கியானம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த வியாக்கியானம் காலத்திற்குப் பொருந்தியதல்ல. இந்த வியாக்கியானத்தை விட்டுவிட வேண்டிய காலம் வந்துவிட்டது.

ஆகவே, மைனாரிட்டி வாதம் பேசுகிறவர்கள், நாட்டின ஒட்டுமொத்தமான நலனுக்கு அது பாதகமாக இருந்தால் அந்த வாதத்தை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் வருங்காலத்தில். ஒரு நிர்வாகக் குழு என்று சொன்னால் அந்தக் குழுவில் கட்டாயம் அங்குள்ள ஆசிரியர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நான் இருக்க வேண்டுமே தவிர நியமன ஆள்கள் அங்கிருப்பது என்று சொன்னால் அங்கும் ஊழல் நடக்க வழிவகை ஏற்படும். ஆசிரியர்களை நியமிப்பது என்று வரும்போது, எனக்கு முன்பு பேசியவர்கள் குறிப்பிட்டார்கள், பஞ்சாயத்து யூனியன்களில் ஆசிரியர்களை தேர்ந்தெடுக்கும்போது பல்வேறு விதமான ஊழல்கள் நடக்கின்றன என்று. இது பகிரங்கமான விஷயம். இதில் ரகசியம் ஒன்றுமில்லை. அப்படி பகிரங்கமானதொன்றைக் கூட தவறானது என்று ஏற்றுக்கொள்ள அமைச்சரோ அல்லது மற்றவர்களோ தயாராகயில்லை. அதுதான் உண்மை. தனியார் பள்ளிக்கூடங்களிலும், பஞ்சாயத்து யூனியன் பள்ளிக் கூடங்களிலும் நிலைமை அதுதான்.

ஆகவே பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களை நியமிக்கும் முறையில் ஒரு பெரிய மாற்றத்தைச் செய்தாக வேண்டும். அப்படிச் செய்கிற மாற்றம் யாருக்கும் கஷ்டமில்லாத முறையில் இருக்க வேண்டுமென்றால் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் நியமனம் செய்யப்பட வேண்டுமென்று ஏன் செய்யக்கூடாது என்பதை அரசாங்கம் எண்ணிப் பார்க்க வேண்டும். இல்லையென்றால் நிச்சயமாக ஊழல்கள், குற்றச்சாட்டுக்கள் வரும் என்பதில் சந்தேகமில்லை. இப்போது ஆசிரியர்களை எடுத்துக்கொள்ளும் முறை எப்படி இருக்கிறது என்று கேட்டால் 67-ல் தேர்வு பெற்றவர் ஒருவர் விண்ணப்பிக்கிறார், 70-ல் தேர்வு பெற்ற ஒருவர் விண்ணப்பிக்கிறார் என்று வைத்துக்கொண்டால் வேலை 67-ல் தேர்வு பெற்றவருக்குக் கிடைக்காமல் 70-ல் தேர்வு பெற்றவருக்குக் கிடைக்கிறது. அப்படி எடுக்கக்கூடாது. முதலில் தேர்வு பெற்றவரைத்தான் கட்டாயம் எடுக்க வேண்டும் என்று அரசாங்கம்



உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இங்கு கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கப்பட்டபோது அப்படிச சொல்லப்பட்டது. அப்படி கட்டாயமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசாங்க உத்தரவு இருந்தும் அந்த உத்தரவை பஞ்சாயத்து யூனியன்கள் நிறைவேற்றவில்லை என்றால் அரசாங்கத்தை பஞ்சாயத்து யூனியன்கள் சட்டை செய்யவில்லை என்றுதான் பொருளாகிறது. உத்தரவு போடப்பட்டிருக்கிறது என்றால் அந்த உத்தரவை சரியாக நிறைவேற்றுகிறார்களா என்பதில் அரசு அக்கறை காட்டவில்லை என்பதுதான அதற்குப் பொருளாகுமே தவிர வேறு அல்ல.

ஆசிரியர்களை நியமிக்கும் விஷயத்தில் எல்லாயிடங்களிலும் ஊழல்கள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆசிரியர்களின் எண்ணிக்கை என்பது லட்சக்கணக்கில் மாறியதற்குப் பின்னாலும் ஏதோ அவரவர்கள் இஷ்டப்படி நியமிப்பது என்று சொன்னால் அந்த முறை சரியல்ல. ஆகவே, சர்வீஸ் கமிஷன் மூலம் ஆசிரியர்களை நியமிப்பதுதான் நல்லது. எந்தப் பள்ளிக்கூடமாக இருந்தாலும் சரி எந்த ஆண்டு தேறியிருக்கிறார்கள் என்று பார்த்து முந்திய ஆண்டுகளில் தேறியவர்களுக்கு முதல் இடம் கொடுத்து எடுத்துக்கொள்ளும் ஒரு மனோபாவம் இந்த அரசாங்கத்திற்கு உருவாக வேண்டும். அதேபோல், இப்போது கல்வியின் தரம் குறைந்துவிட்டது என்று சொல்லப்படுகிறது. கல்விக்காக நாம் ஏராளமாகப் பணம் செலவிடுகிறோம் என்று சொல்கிறார்கள். கல்விக்காகச் செலவு செய்யப்படும் பணம் சரியாகச் செலவு செய்யப்படுகிறதா என்பதைப் பற்றி அவ்வப்போது ஆராய வேண்டும். மற்றக் காரியங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணம் சரியான முறையில் செலவழியாவிட்டாலும் கூட அதனால் சமுதாயத்திற்கு ஒன்றும் அதனால் பெரிய நஷ்டம் ஏற்பட்டு விடாது. ஆனால் கல்விக்காகச் செலவிடப்படும் பணம் சரியான முறையில் செலவு செய்யப்படாமல், சரியான பலன அதனால் கிடைக்கவில்லை என்றால் அது வருங்கால சமுதாயத்தைப் பெரிதும் பாதிக்கும். எந்தக் காரியமாக இருந்தாலும் சரி பொறுப்போடு, கணக்கிடப்பட்டு அதன் பேரில் மாற்றங்கள் செய்ய வேண்டியிருந்தால் அதில் வருகிற தடைகளை எல்லாம் பொருட்படுத்தாமல் உறுதியாகச் செயல்பட வேண்டும். இப்போது

[திரு. எம். சுரேந்திரன்] [1973 டிசம்பர் 4

தனியார் பள்ளிக்கூடங்களை எடுத்துக்கொள்வதுபோல் கல்லூரிகளையும் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி கல்லூரிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லும்போது பெரியதொரு குழப்பத்தை உண்டாக்குவதற்கான முறையில் காரியங்கள் நடக்கின்றன.

சமுதாயத்தில் செல்வாக்கு பெற்றவர்கள், அரசியலில் செல்வாக்கு பெற்றவர்கள், மற்றவர்களிடம் செல்வாக்கு பெற்றவர்கள் கல்லூரிகளை நிர்வகிக்கும் காரணத்தால கல்லூரிகளையும் அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லும்போது அதற்கு பெரும் எதிர்ப்பு பத்திரிகைகள் வாயிலாக, மனிதர்கள் வாயிலாக, கூட்டங்கள் வாயிலாக வருகிறது. இவற்றையெல்லாம் நாம் பொருட்படுத்தாமல் நாம் காலத்திற்கேற்ற முறையில் காரியங்கள் செய்ய வேண்டும். கேரளாவில் கூட இதுபோன்று பெரும் எதிர்ப்பு ஏற்பட்டது, அரசாங்கமே கவிழ்ந்துவிடுமோ என்று எண்ணக்கூடிய நிலைகூட ஏற்பட்டது. அந்நிலையை சமாளித்து முழுமையாக பூர்த்தியாகாத நிலையில் ஓரளவு முன்னேறியிருக்கிறார்கள். அதேபோல நாமும் இப்போதே முயற்சி எடுத்துக்கொண்டால் கல்லூரிகளைப் பொறுத்தவரையிலும் கூட அப்பிரச்னைக்கு வருங்காலத்தில் ஒரு தீர்வு காணலாம்.

ஆகவே, ஆரம்பநிலை முதற்கொண்டு கல்லூரி வரையில் அரசின் கண்காணிப்பில், அரசின் கவனத்தில், அரசு வழிகாட்டக்கூடிய அமைப்புகளாக இருக்க வேண்டும். அதற்கேற்ற முறையில் நிலைமைகளை உருவாக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு இந்த மசோதா காலங்கடந்தாவது, ஏதோ ஓரளவாயினும் வந்திருப்பதற்காக அதை வரவேற்று அமைகிறேன்.

*THIRU M. A. LATHEEF: Mr. Deputy Speaker, Sir, I rise to oppose this Bill on the ground that it basically affects the right of individuals irrespective of the fact whether they belong to the majority or minority. The right of holding properties, the right of association, the right of dissociation, the right of managing one's own affairs, as is deemed fit by him, is affected. Secondly, this affects basically and violates fundamental rights



1973 டிசம்பர் 4] [Thiru M. A. Latheef]

guaranteed to the minorities of religious and linguistic denominations in this country under Article 29 and Article 30 of the Constitution of India.

Mr. Deputy Speaker, Sir, I submit that at the outset I may clarify my point that I am not opposed to any benefit that may be given to the teaching community in this State. As a matter of fact, as a person who was once a member of the teaching community, I am always championing the cause of the teaching community. But at the same time, I submit that the purpose for which Dr. Paul's Committee was appointed was only to suggest ways and devise ways to improve the service conditions of the teachers in the State. It was only for that purpose this Committee was appointed. Beyond the limitations visualised by the Committee, we are travelling in such fields which are not intended to improve the service conditions of teachers. That is my submission.

[நண்பகல் 12-30]

So far as the rights of the individuals are concerned, the right of association implies the right of dissociation also. The Constitution clearly lays down the right to every individual to associate himself with any body or with any group or group of persons which he deems proper and appropriate for his association. This Bill, as has been drafted, indirectly infringes this right of association and right of dissociation. So far as our country is concerned, many of the managements have been brought into legal existence and they have been constituted under the Societies Registration Act. The Societies Registration Act enumerates the circumstances under which a society can be legally brought into existence and it is for the members of the society which has been constituted under this Act to decide who should be the members of that association and who should not be. In this connection, I would submit that the right of association implies the right of dissociation also. When I claim the right of association with a particular person or group of persons, I carry at the same time the right of dissociation. It is for me to decide to whom I should associate, and to whom I should dissociate.

[திரு. எம். சுரேந்திரன்] [1973 டிசம்பர் 4

தனியார் பள்ளிக்கூடங்களை எடுத்துக்கொள்வதுபோல் கல்லூரிகளையும் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி கல்லூரிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லும்போது பெரியதொரு குழப்பத்தை உண்டாக்குவதற்கான முறையில் காரியங்கள் நடக்கின்றன.

சமுதாயத்தில் செல்வாக்கு பெற்றவர்கள், அரசியலில் செல்வாக்கு பெற்றவர்கள், மற்றவர்களிடம் செல்வாக்கு பெற்றவர்கள் கல்லூரிகளை நிர்வகிக்கும் காரணத்தால கல்லூரிகளையும் அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லும்போது அதற்கு பெரும் எதிர்ப்பு பத்திரிகைகள் வாயிலாக, மனிதர்கள் வாயிலாக, கூட்டங்கள் வாயிலாக வருகிறது. இவற்றையெல்லாம் நாம் பொருட்படுத்தாமல் நாம் காலத்திற்கேற்ற முறையில் காரியங்கள் செய்ய வேண்டும். கேரளாவில் கூட இதுபோன்று பெரும் எதிர்ப்பு ஏற்பட்டது, அரசாங்கமே கவிழ்ந்துவிடுமோ என்று எண்ணக்கூடிய நிலைகூட ஏற்பட்டது. அந்நிலையை சமாளித்து முழுமையாக பூர்த்தியாகாத நிலையில் ஓரளவு முன்னேறியிருக்கிறார்கள். அதேபோல நாமும் இப்போதே முயற்சி எடுத்துக்கொண்டால் கல்லூரிகளைப் பொறுத்தவரையிலும் கூட அப்பிரச்னைக்கு வருங்காலத்தில் ஒரு தீர்வு காணலாம்.

ஆகவே, ஆரம்பநிலை முதற்கொண்டு கல்லூரி வரையில் அரசின் கண்காணிப்பில், அரசின் கவனத்தில், அரசு வழிகாட்டக்கூடிய அமைப்புகளாக இருக்க வேண்டும். அதற்கேற்ற முறையில் நிலைமைகளை உருவாக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு இந்த மசோதா காலங்கடந்தாவது, ஏதோ ஓரளவாயினும் வந்திருப்பதற்காக அதை வரவேற்று அமைகிறேன்.

*THIRU M. A. LATHEEF: Mr. Deputy Speaker, Sir, I rise to oppose this Bill on the ground that it basically affects the right of individuals irrespective of the fact whether they belong to the majority or minority. The right of holding properties, the right of association, the right of dissociation, the right of managing one's own affairs, as is deemed fit by him, is affected. Secondly, this affects basically and violates fundamental rights



1973 டிசம்பர் 4] [Thiru M. A. Latheef]

guaranteed to the minorities of religious and linguistic denominations in this country under Article 29 and Article 30 of the Constitution of India.

Mr. Deputy Speaker, Sir, I submit that at the outset I may clarify my point that I am not opposed to any benefit that may be given to the teaching community in this State. As a matter of fact, as a person who was once a member of the teaching community, I am always championing the cause of the teaching community. But at the same time, I submit that the purpose for which Dr. Paul's Committee was appointed was only to suggest ways and devise ways to improve the service conditions of the teachers in the State. It was only for that purpose this Committee was appointed. Beyond the limitations visualised by the Committee, we are travelling in such fields which are not intended to improve the service conditions of teachers. That is my submission.

[நண்பகல் 12-30]

So far as the rights of the individuals are concerned, the right of association implies the right of dissociation also. The Constitution clearly lays down the right to every individual to associate himself with any body or with any group or group of persons which he deems proper and appropriate for his association. This Bill, as has been drafted, indirectly infringes this right of association and right of dissociation. So far as our country is concerned, many of the managements have been brought into legal existence and they have been constituted under the Societies Registration Act. The Societies Registration Act enumerates the circumstances under which a society can be legally brought into existence and it is for the members of the society which has been constituted under this Act to decide who should be the members of that association and who should not be. In this connection, I would submit that the right of association implies the right of dissociation also. When I claim the right of association with a particular person or group of persons, I carry at the same time the right of dissociation. It is for me to decide to whom I should associate, and to whom I should dissociate.

[Thiru M. A. Latheef] [1973 டிசம்பர் 4

So far as the School Committee is concerned, you bring in such elements which are construed as extraneous elements. I constitute a committee according to my whims or my genius but you bring in such persons which would be construed as extraneous elements which violate my right of association and dissociation.

So far as the right of management is concerned, I submit that the right of management is an abstract form of the property. There are tangible forms of property but there are also certain properties which are held to be abstract properties by the highest judicial body in the country. Sir, the right of management, right of association, right of speech, right of expression, right of writing and the right of professing a particular faith, have all been construed by the Supreme Court of India as an abstract right of properties. Under Articles 19 and 31, these rights have been held to be an exclusive right of properties which cannot in any way be violated, which cannot in any way be infringed and which cannot be taken away by the legislation passed by the Parliament or the State Legislature. So, I submit that the provision which has been incorporated in the Bill for bringing some people into the management and giving a right in the management, infringes my right of management to that extent and therefore it violates my right of holding the property abstractly. So, on this ground also I oppose this Bill.

Then again, so far as minorities are concerned, I submit that I am not carried away by any partisan outlook but in the general interest of the educational system that is in vogue in this country. I feel sincerely that this Bill will tear out the very fabric of the well-established educational system in this country. So far as minorities are concerned, the legal provisions are very clear. I submit that Article 29 clearly accepts the rights of the minorities. Clause (1) of Article 29 says—

'Any section of the citizens residing in the territory of India or any part thereof having a distinct language, script or culture of its own shall have the right to conserve the same'. 'The right conferred by Article 29 (1) upon the section of the citizens residing in the territory of India or any part thereof,



1973 டிசம்பர் 4] [Thiru M. A. Latheef]

to conserve their language, script or culture, is made by the Constitution, absolute. Article 29 (1) is not subject to any reasonable restriction'—[1964 (2)—Supreme Court Journal 633, 642 and AIR 1965 S.C. 183].

The fundamental right under Articles 29 (1) and 30 (1) carries with it by implication, the right to impart instruction in their own institutions to the children of their own community, in their own language and in their own way and only then the minority community can effectively conserve its language, script or culture. Therefore, the right to establish and maintain an educational institution of its choice is a necessary concomitant to the right to serve its distinct language, script or culture and that is what is conferred for all minorities by Article 30 (1) of the Constitution. So, Mr. Speaker, Sir, even though most of the educational institutions which have been established by the minorities, religious as well as linguistic denominations in the State, have been prompted to establish such institutions on account of their philanthropic and charitable dispositions, it is intended mainly to conserve the culture of their own. Every section of the community, particularly the minorities in this country, whether it is a cultural minority or linguistic minority, they have a distinct culture, they have a distinct identity and a distinct individuality and unless and until that is guaranteed, they cannot sustain themselves as a separate entity, as has been visualised by the Constitution. Therefore, this right of conservation of the right of safeguarding their separate culture is a right guaranteed by the Constitution. The Supreme Court also held that this right can be sustained and upheld only by having educational institutions. Therefore, by bringing in extraneous elements by wrong routes, you will be infringing the right visualised by Article 29 of the Constitution of India.

Now, Article 30 is complementary to Article 29 of the Constitution of India. In this Article Mr. Speaker, the right of minorities to establish and administer educational institutions of their choice whether based on religion or language is guaranteed.

Mr. Speaker, Sir, there are two connotations incorporated in this sub-clause to Article 30. One is the right of establishment and the concomitant right is the right of administration. So far

as establishment is concerned, the Bill has been so drafted as to create a myth and a misleading provision has been made wherein minority communities have been given to understand that they have been completely exempted from certain provisions of the intended Bill. Minority community does not require any prior permission from the competent authority. Once they come in for grant or official patronage, they will have to provide all the necessary ingredients to find out the nature of the purpose for which the particular institution has been established. So this is an indirect way of imposing certain restrictions which have been prohibited specifically by Clause (1), Article 30 of the Constitution of India. That is my submission.

Next is administration. The institution established by the minority community must be administered by minorities themselves.

MR. DEPUTY SPEAKER: I am very much interested in your argument. I do not think you will mistake me if I put a particular question. When minority is left as a separate entity, they become the majority in that particular area.

THIRU M. A. LATHEEF: An interesting question has been raised by our lawyer—Deputy Speaker. So far as the Constitution of India is concerned, it visualises the entire country. It does not refer to particular pockets and regions.

(Mr. Speaker in the Chair)

Linguistic minorities may be there spread all over India. May be in a particular locality, they may be in majority. But you take the country as a whole. Linguistic minorities have got their own separate culture and entity. Under the Constitution, they have been given the rights to propagate and follow their particular culture. Article 29 is there. Even the Supreme Court has held that such rights may be sustained in an effective way by establishing educational institutions of their choice. Not only administration—Article 30 (1) specifically lays down that such minority institutions should be wholly and exclusively administered by minorities, who established such institutions. So far as this Bill is concerned, I am afraid this is going to attract



the mischief of Article 30 (1) in so far as it seeks to introduce restrictions in such management. I am afraid not only of this particular provision but other provisions also are unconstitutional.

Take the employer-employee relationship. I am afraid the framers of this Bill have neglected an important point of law. When you bring in representation of teachers and other sections of community into management, where is the separate entity of management, which is guaranteed by the Constitution. Teachers are employees. Management is employer. You want that the service conditions of teachers should be scrupulously safeguarded and maintained. I am for it. There is a legal question. When you bring the teaching community also into the managing body, there is employer and employee in that body. You try to bring in an element, which is part of an entirely different element. You can never have a compound out of the combination. That can come only if they are part of the same element. Here that is not the case. You can at best have a mixture. Unless you do chemical treatment, it will be only two different elements. It will be two different sections. So far as the Constitution is concerned, the right guaranteed under it is affected in this Bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 12.27-க்கு ஆரம்பித்திருக்கிறீர்கள். சீக்கிரம் முடியுங்கள்.

THIRU M. A. LATHEEF: It is an important Bill. I require more time.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் ஐந்து நிமிடங்களில் முடித்து விடுங்கள்.

THIRU M. A. LATHEEF: I am opposing this not only on behalf of minorities but also on behalf of majority. This Bill affects the general law also, the fundamental right guaranteed to every individual.

When there is appointment or reduction in rank of a teacher, etc., you say it will be decided by the Committee. That Committee comprises not only managing members who are employers but members of teaching community, who are employees.

I would like to ask one question. That should be clarified. Here you give the right of participation in management, I agree with the Hon. Minister that teachers' status should be enhanced. When there is a right, along with it there is a duty and responsibility. When teachers have the right of participation in management, you indirectly impose a duty and responsibility of it on the shoulders of the teaching community. It is said that the lot of teaching community is going to be improved. I say it is not going to improve. When the teaching community is given a right of participation in management along with the right, there is a duty and responsibility. This will only go to the detriment of the teaching community. The faults and malpractices committed may pass on to the teaching community also. On that score also I oppose the Bill. People say these are days of interdependence, employees taking part in matters of management and *vice versa*.

At the same time, when you take the affairs of the State, can you apply that analogy. The policy is decided by the Cabinet. If I say that the Cabinet must represent different sections of people and therefore I, as an elected representative of a particular section, should have a share in the decision-making right of the Cabinet, can it be done? Here management is elected by the people under the Societies Registration Act. They have the right to decide for the people they represent. That right cannot be taken away. That is not possible and therefore do not bring in the two extraneous elements, the employers' management and the employees teachers into the educational system. This will bring chaos in the educational field. I oppose this Bill on this ground also.

Now, so far as our institutions are concerned, the word 'law' as has been used in Article 13 of the Constitution, indicates not only the laws which are enacted by the Legislature specifically, the parent law, but it includes also the subordinate legislation. Therefore, the subordinate legislation also must always be made to withstand the test of constitutionality. A subordinate legislation should be tested on the touchstone of the Constitutional provision.



In the Bill, in many of the provisions, it has been said 'as may be prescribed, as may be prescribed, as may be prescribed'; I do not understand the meaning of this. The subordinate legislation also should conform to the parent legislation, the parent concepts that have been embodied in the Act. You cannot make a subordinate legislation for which you have not received the sanction of the legislature. Without legislative sanction how can you frame rules of far-reaching consequences? You cannot frame them without there being a legislative sanction in this Act itself. I am very very sorry that on many issues, very material issues which will affect the community basically, have been left to the whims and fancies, the arbitrary thinking and arbitrary actions of the officialdom. Is that the manner in which a question is to be decided? Is it proper? I submit to you, Sir, on this ground alone, we are indulging in illegalities, unconstitutionalities and legal improprieties. On this ground alone the unconstitutionality of this legislation should attract the attention of the hon. Members in this House. Sir, I am not carried away by any emotion or partisan outlook. I am saying this in the interests of education. I submit our approach is dogmatic and not practical.

What happened in the land of Kerala? They brought in a student representative in the affairs of the University. A claim was there and it has seriously affected education. I do not know where this will all lead to. There should be some limit to socialism also. I do not oppose socialism. But this (Interruption). . . . it is for Mr. K.M.S. to say. The question is posed by me, it is up to him to reply.

Therefore, Mr. Speaker, what happened in Kerala? In Kerala, the student community demanded participation in the affairs of the University and in the affairs of the University, a student representative was inducted. What happened? Everybody laughed at this. A person representing the student community, it seems, went and tried to prevail upon an examiner to enhance his marks and give him a pass. Should this happen? What is the purpose of an educational institution? We are thinking of student organisations, we are thinking of teachers' organisations, we are led by narrow political considerations.

[Thiru M. A. Latheef] [1973 டிசம்பர் 4

Nobody thinks of higher considerations of safeguarding the interests of the posterity of the country. The student community should be guided as to be equipped morally, educationally and mentally so that they may serve well their country. Mr. Speaker, you have been a teacher and you hail from the teaching community and you are having a disposition of a teacher. I was also a teacher once. . . (The gong was sounded). I want another fifteen minutes......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நோ, நோ. நீங்கள் அரை மணி நேரம பேசியிருககிறீர்கள். இன்னும் அவ்வளவு நேரம் கொடுக்க முடியாது.

THIRU M. A. LATHEEF: Therefore, Mr. Speaker, I oppose this Bill because this Bill infringes on the right guaranteed by Article 19 (1) (c), this Bill affects and takes away the right guaranteed by Article 19 (1) (f), this Bill violates Article 29 of the Constitution and this Bill tries to take away the rights guaranteed under Article 30 (1) to all the linguistic and religious minorities in this country and above all, this Bill has been introduced and has been considered by this House in violation and in contravention of the restrictions and prohibition imposed by Article 13 (2) of the Constitution of India. Therefore I oppose this Bill, Sir.

* THIRUMATHI ALDA M. FOWLER: Mr. Sperker, Sir, I rise to speak on the Bill before the House. I will move a number of amendments to the Bill later on. Before that, I must express my appreciation for the work which the Hon. Minister for Education and the Hon. Law Minister have done in their attempts to meet the minorities and their needs. This seemed very evident during the meetings of the Joint Select Committee. Though the Bill leaves more to be desired from the point of view of the minorities, it was difficulty for them to strike a middle-course, yet they had made attempts to meet both sides, the majority and the minority communities. I would like to expres the fact that we do appreciate what they were trying to do for us.



1973 டிசம்பர் 4] [Thirumathi Alda M. Fowler]

There are two observations I would like to make; Sir, India is composed of a family of minorities. So many of the minorities go to make up this vast country of India. And as you know, Sir, the minorities are recognised on the basis of language and religion. The Anglo-Indian community is based on both language and religion and it is protected by Article 30 of the Constitution. A Tamil person in Bengal or Delhi or Maharashtra or elsewhere outside Tamil Nadu is protected by Article 30. So also, the Bengalees outside the confines of their own State are under the protection of Article 30 of the Constitution. When the Hindus are a minority as they are in the Punjab, they also lay claim to Article 30 and they hold their rights under this Article. All of them belong to use as a Nation and their rights should be safeguarded.

[பிற்பகல் 1-00]

My second observation is that the history, the traditions, the culture, the customs, the language, the script and the religion, indeed, all that goes indeed, all the various cultures and to make one's culture, the rights of all the people of India should be preserved. Not only should they be preserved but also respected by all the other people. It is in the spirit of showing respect to other's right, that I would like to move my amendments.

Sir, we have a certain type of examinations which are admitted by the Centre. The Tamil Nadu Bill—the Tamil Nadu Recognised Public Schools (Regulation) Bill that is before us—has not taken into consideration these examinations. But I would ask, Sir, that atleast in the statutory rules that are to be framed these could be included so that we could know the types of examinations we may offer to children and for which they could study. So, I request that these examinations—the Board of Secondary Education Examination and Indian Council Schools Certificate Examination—should find a place in our rules so that they could be respected by all and we would also know that they are recognised and good examinations.

My next amendment, Sir, takes into consideration, the cause of unaided minority schools. We have clubbed most of the minority schools together. Sometimes, we have even clubbed

[Thirumathi Alda M. Fowler] [1973 டிசம்பர் 4

all private schools together. May I say, Sir, that since the receiving of grants is the criteria for regulation. we should make a distinction between unaided schools and aided schools? This thought I place before you for your consideration.

My fourth amendment relates to Chapter IV. Under this Chapter we seek to give powers to the School Committee and according to Article 30 of the Constitution, it robs us of our right to govern and administer our private schools, i.e., minority schools.

My fifth amendment is the introduction of a new clause. Here I feel that so much of misunderstanding between employer and employee would vanish if a contract was signed. Every teacher who takes up the teaching profession in a school should sign a contract. This contract should be clear and should have the approval of the competent authority and here we can put forward what is expected of an employer and what is expected of an employee. I have listed them in my amendment. I am not reading them through.

Sir, I would like to refer to an important consideration. Certain financial burdens should not be laid on the minority schools. Sometimes, we say this and this is expected. But some minority schools are not able to bear extra financial burdens. Therefore, this also deserves greater consideration. I know some of our orphanages which are doing a vital piece of work would have to be closed down, if such things are insisted upon.

Also we should not say what fees should be charged and what should not to be charged. This is the prerogative of minority schools. This also should be in the form of a contract between the school and parent and children. If the parent agrees to pay certain fees, then the authorities, the school authorities should be allowed to collect the fees. But it does not mean that they can charge as they like. They should charge after getting prior approval. There can also be a renewal of contract every year.

Lastly, Sir, the rules that are to be framed are frightening. I understand that they have not been framed as yet. When they are drawn up, this suggestion may be accepted. May I request the Hon. Minister for Education to reconvene the Joint Select



1973 டிசம்பர் 4] [Thirumathi Alda M. Fowler]

Committee so that the rules and regulations may be thrashed out at the Joint Select Committee level and taken up for reconsideration? I request the Hon. Minister for Education kindly to concede to these recommendations. Thank you, Sir.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளை முறைப்படுத்தும் மசோதாவை நாம் இப்போது விவாதித்துக் கொண்டிருக்கிற நேரத்தில் இதை நான் வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன் என்றாலும், மேலும் சில திருத்தங்களைச் செய்துகொண்டு வந்தால் சிறப்பாக இருக்கும் என்ற கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு முன்பு பேசிய திரு. லத்தீப் அவர்களும், திரு. அம்மையார் அவர்களும் மைனாரிட்டி சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தி விரிவாகச் சொன்னார்கள். அதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். நாம் செக்குலர் ஸ்டேட் என்று வைத்துக்கொண்டிருக்கிறோம். அரசின் குறிக்கோள் சாதி, மதத்தைக் கடந்த எல்லைப் பகுதியைக் கடந்த ஒரு சமுதாயத்தை அமைப்பது என்கிற உன்னதமான லட்சியமாக இருந்தாலும், அந்த லட்சியத்தை அடைய பல வழிகளைக் கையாள்கிறபோது—பல இன வேறுபாடுகள் தொன்றுதொட்டு இருந்து வந்திருக்கிற காரணத்தினால் மக்கள் மனப்பான்மை மாறுவதற்கு சிலகாலம் கொடுத்தாக வேண்டும்.

நாம் எந்த அளவுக்கு வேகமாக சட்ட திட்டங்களை ஆக்கினாலும் கூட, நடைமுறையில் அவற்றைத் திறம்பட செயல்படுத்த முடியாத சூழ்நிலைதான் இருக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். மைனாரிட்டி சமுதாயத்தினருடைய இன உணர்ச்சிகளைப் பாதிக்காத அளவுக்கு இந்த மசோதாவை கவனமாகக் கொண்டுவரவேண்டுமென்ற கருத்தை நான் உணர்கிறேன். நான் ஒரு மைனாரிட்டி சமுதாயத்தைச் சேரவில்லை என்றாலும், இந்து சமுதாயத்தைச் சேர்ந்த மெஜாரிட்டி வகுப்பைச் சேர்ந்தவன் என்றாலும்—இந்த மண்ணில் பிறந்து வளர்ந்து இன்றைக்கு பிறருடைய ஆற்றலுக்கும் ஏசலுக்கும் இன்றைக்கு இந்துமதம் ஆளாகிக்கொண்டிருக்கிறது, இந்துக்கள் ஆளாகிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மனவேதனையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சீர்திருத்தத்தின்

பெயரால், அங்குள்ள குறைகள் நீங்கவேண்டுமென்பதன் பெயரால், சமீபகாலத்தில்கூட, மாண்புமிகு பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் மதுரையிலே பேசுகிறபொழுது இந்து கடவுள்களை ஊர்வலத்திலே வைத்து, மிக அசிங்கமான முறையிலே நடத்தி வந்ததையும். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதெல்லாம் தேவையல்ல.

திரு. கே. கந்தசாமி : மத ஸ்தாபனத்தின் பெயரால், மதத்தின் பெயரால், அற நிலையங்களின் பெயரால், தனிப்பட்டவர்கள் நடத்துகிற பள்ளிகளை ஒழுங்குபடுத்துகிற பில் வருவதால், நானும் இந்து மதத்தைச் சேர்ந்தவன் என்ற பெயரால் மிகவும் வேதனையோடு சொல்கிறேன். யாரையும் வேதனைப்படுத்த வேண்டுமென்றோ, அல்லது தாக்க வேண்டுமென்றோ அல்ல. மக்களுடைய மன நிலையை நான் சொல்ல விரும்புகிறேன். அவர்களுடைய நோக்கம் நல்லதாக இருந்தாலும் கூட மக்களால் உணரப்பட்ட விதம், மிக வேதனையோடு உணரப்பட்டுள்ளது. இங்கே இந்து சமுதாயம் மெஜாரிட்டி என்று சொல்லப்பட்டாலும் கூட, அதுவும் கவனிப்பாரற்று, மிகப் பாதுகாப்பற்று இருக்கிறது என்றுதான் நான் நம்முடைய அரசினுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அரசியல் சட்டத்தை வகுக்கிறபோது, நமது நேசப் பெரியவர்கள் இந்துக்கள் நிலையை கவனத்தில் கொண்டு, மைனாரிட்டிக்குத் தான், அச்சமுதாயத்திற்குத்தான் பாதுகாப்பு வேண்டும். மெஜாரிட்டியாக இருப்பவர்கள் மைனாரிட்டியை எக்ஸ்பிளாய்ட் பண்ணிவிடக் கூடாது என்ற நல்ல எண்ணத்தோடுதான் செய்திருக்கிறார்கள். அந்த மெஜாரிட்டியாக இருக்கிற இந்து சமுதாயம் இன்றையதினம் வலுவிழந்து, வேதனைக்குரிய பொருளாக, காட்சிப் பொருளாக, சமுதாயத்தில் அவமதிக்கப்படுகிற பொருளாக, இருக்கிற நிலையை அன்று அவர்கள் கணித்திருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். மைனாரிட்டி சமுதாயத்திற்கு ப்ரொடக்ஷன் கொடுப்பதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். அதேபோல், மெஜாரிட்டி சமுதாயத்திற்கும் ப்ரொட்டக்ஷன் வேண்டுமென்ற வேண்டுகோளை விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மெஜாரிட்டிக்குப்



ப்ரொட்டக்ஷன் வேண்டுமென்று கேட்பது விந்தையாக, ஆச்சரியமாக, சட்ட ரீதியில் கேலியாகக் கூடத் தெரியலாம். ஆனால், நடைமுறையில் பாதுகாப்பு அவசியம் தேவை என்பதை கனம் அவர்களுடைய அரசு கவனிக்க வேண்டுமென்ற நிலை இருக்கிற காரணத்தால், இதை நான் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆர்ட்டிக்குள் 14-லே கூடச் சொல்கிறபொழுது,

'The State shall not deny to any person equality before the law or the equal protection of the laws within the territory of India'.

என்று எல்லோருக்கும் சம பாதுகாப்பு வேண்டுமென்ற நிலை இருக்கும்போது, நாங்கள் மெஜாரிட்டியாக இருக்கிற காரணத்தால், நாங்கள் பாதுகாப்பற்ற நிலையிலே இருக்கிறோம். எங்களுக்கும் நாங்கள் நடத்துகிற ஸ்தாபனங்களுக்கும், இந்து அறநிலையங்களின் சார்பாக, இந்து மதங்களின் சார்பாக, மடங்களின் சார்பாக நடத்துகிற கல்வி ஸ்தாபனங்களுக்கும் நல்ல பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டுமென்பதை வேண்டுவதற்காகத் தான் நான் இதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இன்னொரு ஆர்ட்டிக்கில்.

Clause (1) of Article 15 reads as follows :—

'The State shall not discriminate against any citizen on grounds only of religion, race, caste, sex, place of birth or any of them.'

என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன, மதத்தின் பெயரால் எந்த ஒரு பிரஜைக்கும் அரசு வேறுபாடற்ற நிலையில், சம பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்ற நிலையை ஆர்ட்டிக்கிள் 15, கிளாஸ் (1) கொடுத்திருக்கிறது. ஆகவே, நீங்கள் எந்தத் துறையிலும் இது மெஜாரிட்டியாக இருக்கிறது என்ற காரணத்தால் இதற்குத் தேவை இல்லையென்று கருதிவிடாமல் கொஞ்சம் பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன் . . . (மணியடிக்கப்பட்டது) எனக்கு 5 நிமிடம் கூட இல்லை, தலைவர் அவர்களே. இன்னும் 2 நிமிடங்கள் கொடுத்து விடுங்கள், நான் முடித்துவிடுகிறேன்.

கிளாஸ் 9-பற்றி சொல்கிறபொழுது, அமெண்ட்மெண்ட்டிலே

'Minority school to be established without permission'

என்று இருக்கிறது. அதிலே, நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்துக்கள் ஏற்படுத்துகிற ஸ்கூல்களுக்கும் அனுமதி இல்லாமல் நடத்துவதற்கு அரசு அனுமதி வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், கிளாஸ் 15, சப் கிளாஸ் (1)-ல், 'கான்ஸ்டிடியூஷன் ஆப் ஸ்கூல் கமிட்டி' பற்றி இருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு லத்தீப் அவர்களும் இதிலே ஒரு கருத்தைச் சொன்னார்கள். இங்கே சொல்கிறபொழுது, நான் முற்றிலும் வேறுபடாதிருந்தாலும்கூட ஒரு சிறிய மாறுதலைச் செய்து கொண்டால் உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

'*Constitution of school committee.*—(1) Every private school shall have a duly constituted school committee which shall include the headmaster of the private school and elected representatives of the teachers employed in the private school'.

என்று இருக்கிறது. அதிலே வருகிறபொழுது

'Every private educational agency or institution shall constitute a school committee which will have the D.E.O. as ex-officio member'.

என்ற அளவிற்கு அங்கே மானேஜ்மெண்ட்டாரோடு, டி.ஈ.ஓ. அவர்களை எக்ஸ்-அஃபிஷியோ பிரதிநிதியாகப் போட்டுக் கொண்டால், அறிவுரை வழங்கவும், அரசினுடைய பிரதிநிதியாக இருந்து, அங்கே நடக்கிற தவறுகளை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்கும் உதவியாக இருக்கும் என்று சொல்லி, நான் கொடுத்த வேண்டுகோளை மாண்புமிகு கலைஞர் அவர்களும் மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களும் மிக அருள்கூர்ந்து கவனித்து, பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கூறி அமர்கிறேன். வணக்கம்.

**திரு. மணலி சி. கந்தசாமி:** தலைவர் அவர்களே, தனியார் பள்ளிக்கூடங்களை நியாயமான அளவுக்குக் கட்டுப்படுத்துவதற்காக கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தச் சட்டத்தின்மீது பெரிய வாதப்



பிரதிவாதங்கள் வந்திருப்பதைப் பார்க்கும்போது நான் ஆச்சரியப்படுகிறேன். இன்னும் சொல்லப்போனால், இந்த சர்க்கார் தனியார், பள்ளிக்கூடங்களை ஒழுங்காக நடத்தக்கூடிய அளவுக்கு இன்னும் தீவிரமான அளவுக்கு ஏன் கொண்டு வரவில்லை, கொண்டு வந்திருந்தால்தான் இந்த வாதங்கள் வந்திருக்காது என்று நான் நினைக்கின்றேன். அந்த அளவுக்கு ஒழுங்கீனமாக நடக்கின்றன. இங்கு பேசிய யாராவது, இவ்வளவு ஒழுங்காக நடக்கிற பள்ளிகளில் ஏன் தலையிடுகிறீர்கள் என்று சொல்லியிருந்தால் உள்ளபடியே நான் சந்தோஷப்பட்டிருப்பேன். ஆசிரியர்களை பயமுறுத்தவும், வியாபாரம் செய்யக்கூடிய இடங்களாகவும்தான் பள்ளிகள் இருக்கின்றன. நல்லவர்கள் 4 பேர் இருந்தால் அவர்களுக்கு வணக்கம் செலுத்துகிறேன். பெரும்பாலும், முன்பு சொன்னமாதிரி இருக்கிற பள்ளிக்கூடங்களைக் கட்டுப்படுத்துகிற கடமை சர்க்காருக்கு இருக்கிறதா இல்லையா என்பதைப்பற்றி யோசிக்க வேண்டும்.

எனக்கு முன்பாக பேசிய மதிப்பிற்குரிய லத்தீப் அவர்கள் இந்திய அரசியல் சட்டத்திலே உள்ளதையெல்லாம் எடுத்துச் சொல்லி, எங்களுக்கெல்லாம் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி இருக்கிறார். இதிலே, என்ன பெரிய பிரச்னை வந்திருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. இந்தச் சட்டத்தைப் படித்துப் பார்ப்போம். இனிமேல், யாராவது பள்ளிக்கூடம் வைக்க வேண்டுமென்றால், பர்மிஷன் வாங்க வேண்டும் என்று இருக்கிறது. அடுத்தபடியாக, சில நிபந்தனைகள் போட்டிருக்கிறார்கள். இதிலே என்ன பாதிப்பு ஏற்படுகிறது என்று எனக்குப் புரியவில்லை. இவர்கள் சொல்வதால், மிகவும் சங்கடமான நிலைமை ஏற்படுகிறது என்று நான் நினைக்கிறேன்.

மைனாரிட்டிப் பாதுகாப்பு பற்றி கூறினார்கள். அது சர்க்காருடைய பொன்னான கடமை. இந்தியாவிலே மைனாரிட்டி பாதுகாப்பு, கண்ணும் கருமணியும்போல் பாதுகாக்கப்படுகிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். மைனாரிட்டிகளை பாதிக்கக்கூடிய அளவுக்கு இதிலே என்ன என்ன செக்ஷன் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று விளக்கி இருந்தால், நான் கூட அதைப்பற்றி யோசித்திருப்பேன், நாம் யோசிக்கலாம்.

ஒட்டுமொத்தமாக, சட்டத்திலே இருக்கிற ஓரிரு வார்த்தைகளை எடுத்துக் கொண்டு, கேரளத்திலே என்று வாதிக்கிறார்கள். நான் வருத்தப்படுகிறேன். ஒரு பையனை தேர்ந்தெடுத்தார்கள் செனட்டுக்கு. அவன் ஏதோ அயோக்கியத்தனம் செய்திருக்கிறான். அதைப்பற்றி சொன்னார்கள். நாமெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள். நம்மிலே சிலபேர் ஏதாவது செய்திருக்கலாம். அதற்காக சட்ட மன்றத்தையே கலைக்க வேண்டுமென்று சொல்கிற மாதிரி, உறுப்பினர்களுக்கு உரிமை கொடுக்கக்கூடாது என்று சொல்கிற மாதிரி பேசுவது பொருத்தம் அல்ல, சரியல்ல.

சட்டம் சமுதாயத்தை ஒழுங்காக நடத்த ஒரு துணையாக இருக்கிறதே தவிர, யாருடைய வாழ்க்கையிலும் தலையிடுவதில்லை. யாருடைய வாழ்க்கையிலும் தலையிடுகிற சூழ்நிலை ஏற்பட்டால், பள்ளிக்கூடங்கள் ஒழுங்காக நடக்கவில்லையென்றால், அரசு தலையிட வேண்டும். என்னைக் கேட்டால் இந்த அரசு ரொம்ப பயந்து கொண்டு இந்த சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. ராத்திரியே எல்லா பள்ளிகளையும் நாளை காலையிலிருந்து சர்க்காரே எடுத்துக் கொள்கிறது என்று சொல்லியிருந்தால், நான் சந்தோஷப் பட்டிருப்பேன். 100-ல் 5, 10 பள்ளிகளை வைத்துக் கொண்டு, ஏன் இவர்கள் பிராணனை விடுகிறார்கள்? மத விஷயத்திலே தலையீடு கூடாது; தொழுகை விஷயத்திலே தலையீடு கூடாது; அவர்களுடைய பண்பாடு, பரம்பரை, இப்படிப்பட்ட விஷயங்களிலே தலையீடு கூடாது, ஒப்புக்கொள்கிறேன் இதிலே மைனாரிட்டிக்கு என்ன உரிமை? எனக்குத் தெரியவேயில்லை, என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அப்படி இதை வியாக்கியானித்துக்கொண்டு போனால் இந்த நாட்டிலே உள்ள ஒவ்வொரு சட்டத்திலும்—முஸ்லீம்கள் இருக்கிறார்கள், கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள்—அவர்களுக்கு எல்லாம் விதிவிலக்குக் கொடுத்தால் இந்த நாட்டிலே பிறகு எந்த சட்டமுமே வேண்டியதில்லை. ஏதாவது மத விஷயங்களைப் போதிப்பதற்குத் தடையிருந்தாலோ அல்லது மத விஷயங்களுக்குக் குந்தகமாக ஏதாவது இருந்தாலோ அப்படிப்பட்ட அம்சம் ஏதாவது இருந்தால் நிச்சயமாக அது கண்டிக்கப்பட வேண்டும், அது தடுக்கப்பட்டாக வேண்டும், அதை நானும் ஒத்துக்கொள்கிறேன்.



இன்றைக்கு இந்திய அரசியல் சட்டம் எதற்காக ஏற்படுத்தப் பட்டது, இந்த நாட்டிலே உள்ள 40 கோடி மக்களுக்கும் வாழ்வு அளிப்பதற்காக, வளமான வாழ்வை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதற்காகத்தான். இந்த நிலையிலே பெரும்பாலும் புத்திசாலியாக இருக்கிற மக்கள், ஆசிரியர்களாக இருக்கிற மக்கள் இவர்களுடைய உரிமைகளை எல்லாம் பறிக்கக்கூடிய நிலைமை நாட்டிலே இருக்கிறது, பள்ளிக்கூடங்களை ஒழுங்காக நடத்திச் செல்லக்கூடிய நிலைமை இருக்கிறதா என்றாலும் இல்லை, ஆசிரியர்கள் பாதிக்கப்படுகிறார்கள், மேனேஜ்மெண்ட் நல்ல முறையில் பள்ளிக்கூடத்தை நடத்துகிறது என்றால் அவர்கள் ஏன் இந்த விஷயத்தில் பயப்பட வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. ஒழுங்காக கமிட்டி வைத்துக்கொண்டு பள்ளிகளை நடத்தக்கூடியவர்கள் ஆசிரியர்களைப் பேணிவளர்த்துக் கொண்டிருக்கிறவர்கள் ஏன் பயப்பட வேண்டும். அப்படி நடக்காதவர்களைத்தானே இந்தச் சட்டம் பாதிக்கிறது, ஓரளவிற்கு ரெஸ்டிரிக்ஷன்ஸ் போடுகிறது. அவ்வளவுதானே, இதை வைத்துக்கொண்டு இங்கே நுழைகிறது, அங்கே நுழைகிறது என்று ஏன் அவர்கள் பயப்படுவானேன்? தப்பாக இருந்தால்தான் அந்த இடத்திலேதான் இந்தச் சட்டம் நுழையப் போகிறது? ரைட் ஆக இருந்தால் இந்தச் சட்டம் ஏன் நுழையப் போகிறது? உள்ளபடியே பள்ளிகளைச் சிறந்த முறையிலே நடத்துவதற்குப் பயன்படக்கூடிய சட்டம் இது. இதை சிறந்த முறையிலே நடத்தக்கூடியவர்கள் எல்லோரும் வரவேற்பார்கள். அக்கிரமம் பண்ணக்கூடியவர்கள், வாத்தியார் சம்பளத்திலே ஒரு பகுதியை எடுத்துக்கொள்ளக்கூடியவர்கள் இவர்கள்தான் பயப்படுவார்கள்.

இந்தச் சட்டம் தீவிரமான ஒரு சட்டம் என்று என்னால் ஒத்துக்கொள்ள முடியாது. சாதாரண முறையிலேதான் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதற்கே அவர்கள் ஏன் இதை ஒரு பூதமாக்கி அதற்கு கை, கால், மூக்கு எல்லாம் வைத்து பயமுறுத்த வேண்டும், அதற்கு அவசியமில்லை. என்னுடைய அபிப்பிராயம் இந்தச் சட்டம் போதாது. தனியார் கல்வி என்பதே இருக்கக் கூடாது. என்னுடைய பிள்ளைகள் ஏன் பிச்சையெடுத்து இந்த நாட்டிலே படிக்க வேண்டும்? நம்முடைய கல்வி அமைச்சர்

இன்னும் ஒரு 50 கோடி வேண்டுமென்றால் நாங்கள் எல்லாம் கை தூக்கத் தயாராக இருக்கிறோம். எல்லோருக்கும் கல்வி கொடுக்க முடியும். இதிலே முஸ்லீம் பிள்ளைகள், இந்து பிள்ளைகள், கிறிஸ்தவ பிள்ளைகள் என்று என்ன வந்திருக்கிறது? எல்லோரும் நல்ல முறையிலே கற்றுக்கொள்ளக்கூடிய முறையிலே பள்ளிக் கூடங்கள் அமைய வேண்டும். ஒன்றுக்கும் லாயக்கு இல்லாத ஆட்கள் இரண்டு பேர்கள் உட்கார்ந்து கொண்டு—வேறு தொழில் அவர்களுக்கு இல்லையா—4 ஓட்டை பெஞ்சையும் இரண்டு பிளாக் போர்டையும் வைத்துக்கொண்டு ஒரு பள்ளிக்கூடம் என்று வைத்துக்கொண்டு ஏன் பிராணனை விட்டுக்கொண்டிருக்க வேண்டும்? நான் சொல்வது எல்லாம் இந்த நாட்டிலே நடக்கிறதா இல்லையா?

நான் திருத்தங்கள் கொடுத்திருக்கிறேன், ஆசிரியர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும், கமிட்டியிலே அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும். இனிமேல் பள்ளிக்கூடம் வைக்கவேண்டுமென்றால் அனுமதி பெற்றுத்தான் வைக்க வேண்டும். நான் கல்வியமைச்சர் நாவலர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், அவர்கள் இனிமேல் எந்தப் பள்ளிக்கும் அனுமதி கேட்டால்கூட கொடுக்கலாகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கனவே இருக்கிற தலைவலி போதாதா? இன்னொரு தலைவலியா? . . .

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார், கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால் பள்ளிக் கூடங்களை எல்லாம் மூடுங்கள், படிப்பே வேண்டாம் என்று சொல்வார்கள் போல் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

**திரு. மணலி சி. கந்தசாமி:** அவர்களுக்கு எல்லாம் தலைகீழ்ப் பாடம். பள்ளிக்கூடங்களை ஒழுங்காக நடத்த வேண்டும் என்று நான் சொன்னால் பள்ளிக்கூடங்களை மூடச்சொன்னதாகச் சொல்வார்கள். இது நியாயமான சட்டம், நல்ல எண்ணம் படைத்தவர்களுக்கு நல்ல சட்டம், யாருடைய உரிமையையும் பறிக்கக்கூடியதல்ல. இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன்.





இன்னும் சில திருத்தங்களைச் செய்ய வேண்டும். வாத்தியார்களுக்கு நல்ல முறையிலே பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். பள்ளிக்கூட மானேஜ்மெண்ட் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என்ற முறையிலே திருத்தங்களையெல்லாம் கொடுத்திருக்கிறேன். மைனாரிட்டிகளைக் கண்மணி போன்று பார்க்கக்கூடிய சட்டம் சூழ்நிலை எல்லாம் இந்த தேசத்திலே இருக்கிறது. மேலும் மேலும் சரியான கண்ணோட்டத்தோடு பார்க்காமல் வெஸ்டட் இன்டரஸ்ட்ஸ்-க்கு ஆதரவு தெரிவிக்கின்ற முறையிலே இந்தச் சட்டத்தை பார்ப்பது அந்த உரிமை உள்ளவர்களுக்கே ஆபத்தாக விளையும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். எங்களுடைய மனம் மாறிக்கொண்டிருக்கிறது. அக்கிரமம் விளைவிப்பவர்களும் பள்ளிகளை வைத்துக்கொண்டு பிழைக்கிறவர்களும் இப்படிப்பட்ட சமூக விரோதிகளை மைனாரிட்டி ரைட் என்று சொல்லிக்கொண்டு அவர்கள் காக்க விரும்புவார்களானால் அது அவர்களுக்கே நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொண்டு இந்த அரைகுறையான மசோதா என்றாலுங்கூட இதை மனப்பூர்வமாக ஆதரித்து என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் மாற்பகல் நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுற்று மீண்டும் பிற்பகல் 4 மணியளவில் பேரவை கூடும்.

பின்னர் பிற்பகல் 1.25 மணியளவில் பேரவை ஒத்திவைக்கப் பட்டது.

இடைவேளைக்குப் பின் பிற்பகல் 4.00 மணிக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

(மாலை 4.00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுது மாண்புமிகு அமைச்சரவர்கள் பேசுவார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இங்கே நான் கொண்டு வந்திருக்கும் தனியார் அங்கீகாரம் பெற்ற பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் மசோதாவின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] 1973 டிசம்பர் 4

மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் இந்த மசோதாவையே எடுத்துக்கொள்ளக்கூடாது என்ற முறையிலே அடிப்படை உரிமைகளை அறவே பறிக்கின்றன என்ற வகையிலே சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மணலி கந்தசாமி அவர்கள் இதிலே தீவிரமே இல்லை என்றும், இதிலே சாதாரணமாகத்தான் அமைந்திருக்கிறது என்றும், இன்னும் அதிக தீவிரத்துடன் கொண்டுவரப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள். இருவருக்குமிடையிலே நின்று சிலபேர் வரவேற்றாலுங்கூட, ஆனால் மேலும் சிலபல ஒழுங்குமுறைகள் கையாளப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எட்மண்ட் அவர்கள் கூறும்பொழுது நாம் ஆதரிப்பதற்கில்லையென்றும், எதிர்ப்பதற்கும் இல்லை என்றும், ஆனால் எந்த நிலையிலே நிற்கிறார்கள் என்று மட்டும் சொல்லாமல் இரண்டையும் சொல்லி அவர்களும் அதைப்பற்றி பல்வேறு கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள்.

இந்த மசோதாவினுடைய முக்கிய குறிக்கோள்களை நான் முன்னுரையிலேயே தெளிவுபடுத்கியிருக்கிறேன். இதன் நோக்கம் யாருடைய உரிமைகளையும் பறிக்க வேண்டுமென்பது அல்ல. சிறுபான்மையினருக்குள்ள எந்த உரிமையும் எந்த வகையிலும் பறிக்கப்படும் நிலை இதில் கொண்டுவரப்படவில்லை. நடைமுறையில் உள்ள பல சங்கடங்களைக் கருதி, அதற்காக ஒழுங்குபடுத்தி கல்வியின் தரத்தை உயர்த்தவும், ஆசிரியர்களின் பணிக்குப் பாதுகாப்பு ஏற்படுத்தவும், நிர்வாகிகளுக்கும், ஆசிரியர்களுக்கும் ஏற்படும் மாச்சர்யங்கள் மற்றவைகளை ஓரளவிற்குக் குறைக்கவும், மாச்சர்யங்கள் ஏற்பட்டு பள்ளிகளின் சூழ்நிலை கட்டுக்கடங்காமல் போவதைத் தடுப்பதற்கும், மாச்சர்யங்களினால் ஏற்படுகின்ற விவகாரங்கள் ஏதேனும் ஒரு முடிவிற்கு வர வேண்டுமென்ற தன்மையின் அடிப்படையிலேயும் இந்த மசோதா இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே இருக்க நிலைமைகளில் பள்ளிகள் இப்படி இப்படி நடைபெற வேண்டுமென்ற விதிமுறைகளின்படி அந்த அடிப்படையில் பல பள்ளிகள் நடக்கின்றன. இந்த ஐந்தாறு ஆண்டுக்காலமாக நான் கல்வியமைச்சர் பொறுப்பை



1973 டிசம்பர் 4] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஏற்றதிலிருந்து எந்தவொரு சிறுபான்மையினரின் தனி உரிமைகளோ, தனித் தன்மைகளோ பாதிக்கப்படும் அளவில் இருந்தது என்று எந்தச் சிறுபான்மை சமூகத்தினரிடமிருந்தும் என்னிடத்தில் வந்தது இல்லை. சிறுபான்மையினருக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டம் பாதுகாப்பு தந்திருக்கிறது. நம் நாட்டின் பல்வேறு மதங்களின் தன்மை, மொழிகளின் தன்மை, மாநிலத் தன்மை அடிப்படையில் பெரும்பான்மையினர், சிறுபான்மையினர் என்ற நிலைமைகள் இருந்து வருவதால், அவர்களுக்கிடையே ஆண்டாண்டுகாலமாக பல்வேறு மாச்சர்யங்கள் இருந்ததன் காரணமாக சிறுபான்மையினரைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு அரசியல் நிர்ணயச் சட்டத்தை அமைத்தவர்களுக்கு ஏற்பட்டிருப்பதால் பாதுகாப்புகளைத் தந்திருக்கிறார்கள். அந்தப் பாதுகாப்பின் அடிப்படையிலே பல்வேறு துறைகளிலே அந்தப் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது. இந்தக் கல்வித் துறையிலும் அந்தப் பாதுகாப்பு இருக்கிறது. அதற்கு எந்த வகையிலும் கேடு ஏற்படவில்லை. ஆனால் இப்பொழுது மொழி சிறுபான்மையினராலும், அல்லது சமயத் தன்மையிலே சிறுபான்மையினரானாலும் அவர்களுக்கு இதனால் கேடு ஏற்படும் என்று சொல்வதற்கில்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மணலி கந்தசாமி அவர்கள் சொல்லியதைப் போன்று இதில் தீவிரம் இல்லை, உள்ளபடியே இது ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய அளவிற்கு ஒழுங்குபடுத்தப்படவில்லை என்பதுதான் நான் கொண்டிருக்கும் நோக்கமாகும். ஓரளவிற்கு ஒழுங்குபடுத்தி இதில் பல்வேறு தன்மைகளை ஆராய்ந்து, நான்காண்டுக் காலமாக இந்த மசோதாவை நகர்த்தி, நகர்த்தி இப்பொழுது 73-லே தான் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறோம்.

1969 ஆம் ஆண்டிலே இந்த மசோதாவைக் கொண்டுவர வேண்டுமென்று டாக்டர் பால் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட குழு நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று பல்வேறு துறைகளோடும் கலந்து ஆலோசித்து அறிக்கையைச் சமர்ப்பித்தார்கள். அதன் அடிப்படையிலே இந்த மசோதா தயாரிக்கப்பட்டது. பிறகும் பல்வேறு சந்தேகங்களை மாற்றி இந்த அவையின் முன்னால் சட்ட முன்வடிவாகத் தரப்பட்டது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 டிசம்பர் 4

அதற்குப் பிறகும் கூட்டாய்வுக் குழுவிற்கு விடப்பட்டதன் காரணமாக அந்த குழுவினரும் பல்வேறு வகைகளிலே ஆராய்ந்தனர். அந்தக் குழுவில் மாண்புமிகு சட்ட அமைச்சரவர்களும், சட்டத்துறை வல்லுநர்களும் இருந்து பல்வேறு கோணங்களில் ஆராய்ந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்திப் அவர்களும் கூட்டாய்வுக் குழுவில் தங்களது கருத்துக்களை மிகவும் அழுத்தந்திருத்தமாகவும், தெளிவாகவும் சொன்னார்கள். அங்கே இதுபற்றிப் பல மணி நேரம் சிலபல கருத்துக்கள் ஆராயப்பட்டு, சிலபல நாட்களிலே முடியும் என்ற குழுக்கூட்டங்கள்கூட சிலபல நாட்கள் கூடாமல் பல நாட்கள் கூட்டப்பட்டு ஆராய்ந்த பிறகு, இதனால் யாரும் பாதிக்கப்படக் கூடாது, ஆனால் எதிர்பார்க்கும் பலனும் கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையிலே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இப்பொழுதுள்ள சூழ்நிலையில் எங்கேயாவது ஒரு ஆசிரியருக்கும் நிர்வாகத்திற்கும் தகராறு ஏற்பட்டு, அந்த ஆசிரியரை பள்ளியிலேயிருந்து நீக்கிவிட்டால், அதைக் கல்வித் துறை அதிகாரிகள் ஆராய்ந்து ஆசிரியரை நீக்கியது அநியாயம், அவரை மறுபடியும் சேர்க்க வேண்டுமென்று ஆணையிட்டாலும் மறுபடியும் அவரைப் பள்ளியில் சேர்ப்பதற்குச் சிலபல நிர்வாகங்கள் மறுக்கின்றன. ஆனால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்க முடியுமென்று பார்த்தால், எந்த வழக்கு மன்றத்திற்குச் சென்றாலும், ஆசிரியர்களுக்கு நீதி கிடைப்பதற்குச் சட்டதிட்டங்களில் இடமில்லை. ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இப்பொழுது நமக்குள்ள உரிமைகளின் அடிப்படையில் அந்தப் பள்ளிக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அங்கீகாரத்தைப் பின் வாங்கிக்கொள்ளலாம், மானியத்தைக் கொடுக்காமல் நிறுத்தலாம்.

இவ்வாறு அங்கீகாரத்தைப் பின்வாங்கிக்கொள்வதாலும், மானியத்தை நிறுத்துவதாலும் அந்தப் பள்ளியை மூடினால் அதில் படிக்கும் 400 அல்லது 500 அல்லது 600 மாணவர்களின் படிப்பு என்ன ஆவது என்றும், அங்கே பணியாற்றும் 20 அல்லது 30 ஆசிரியர்கள் அல்லது ஆசிரியைகளின் நிலை என்ன ஆவது



1973 டிசம்பர் 4] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

என்றும் முடிவு காண முடியாத அளவிற்குச் சூழ்நிலைகள் இருக்கின்றன. ஆகவே, அதற்கெல்லாம் வழி காண வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையிலேதான் இந்த மசோதாவைக் கொண்டு வந்து ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு ஏற்படுத்த வேண்டுமென்பதாலும் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், ஆசிரியர்களுக்குப் பாதகம் ஏற்பட்டால் மேல்முறையீடு என்பதற்கு இதுதான் வரையறை என்று இல்லாமலிருக்கிறது. கல்வித்துறை அதிகாரிகள், மாவட்டக் கல்வி அதிகாரி, மாவட்டத் தலைமைக் கல்வியதிகாரி, பள்ளிக் கல்வி இயக்குநர், அரசாங்க செயலாளர், அமைச்சர், முதலமைச்சர் என்று இப்படி, சில நேரங்களில் சட்ட மன்றங்களுக்கு என்று கொடுத்து அதுவும் முடியாமற்போனால் இரண்டு மூன்று ஆண்டுகள் கழித்து வழக்குமன்றத்திற்குச் செல்ல வேண்டுமென்ற நிலைமைகளும், இப்படி 6, 7 ஆண்டுக் காலமாகத் தீர்க்கப்படாமலும், தொடர்ந்து தொல்லைகளும், கேடுபாடுகளும் இருக்கின்ற நிலைமைகளைப் பார்க்கிறோம். இவைகளுக்கு எல்லாம் முடிவு கட்டவேண்டுமென்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையில் நான்—இந்தச் சட்டத்திற்குப் பெயர் வைக்கிறபோது கூட ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்டம் என்கிற அளவில் இதனை நாம் இங்கே கொண்டு வந்திருக்கிறோம்.

நாம் முதலில் இதனை ஆராய்ந்தபோது கூட சிறுபான்மை மக்களுக்காக அங்கீகாரம் பெற்று நடக்கிற பள்ளிகள் சரியாக நடக்காவிட்டால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அங்கீகாரத்தை திரும்பப் பெறவும், அந்தப் பள்ளிகளை அரசாங்கமே ஏற்று நடத்தவும் வகை செய்யப்பட்டிருந்தது—அரசியல் சட்டத்தின் 30-வது பிரிவுக்கு முரணாகப் போகக்கூடும், இந்தச் சட்டம் எப்படியாவது நிறைவேறி ஆசிரியர்கள், மக்கள் எதிர்பார்க்கிற பலன் கிடைக்க வேண்டும் என்கிற அடிப்படையில் அத்தகைய முரண்பாடான கருத்துக்களுக்கு சட்டத்தில் இடம் கொடுக்க வேண்டாம் என்கிற அளவில் அவற்றை எடுத்து விட்டோம். இன்றைக்கு அவர்கள் சிலபல விவரங்களைத்தான் தர வேண்டும் என்கிற அடிப்படையில் தான் இந்த மசோதா அமைந்திருக்கிறதே தவிர வேறல்ல. அந்தப் பள்ளிகளையும் கூட

ஒழுங்குபடுத்தி, மற்ற பள்ளிகளைப் போன்ற ஒரு கட்டுப்பாட்டுக்குள் வரவேண்டும் என்கிற அடிப்படையில்தான் இந்த மசோதா அமைந்திருக்கிறது.

சிறுபான்மையினரின் உரிமையில் இந்த மசோதா எந்த வகையிலும் குறுக்கிடவில்லை. சிறுபானமையினரின் நோக்கங்களை, கருத்துக்களைத் தடுத்து நிறுத்துகிற வகையிலும் இல்லை. புதியதாக தங்களுடைய சமயக் கருத்துக்களைப் பரப்ப அவர்கள் பள்ளிகள் ஏற்படுத்துவதையும் நாம் தடுக்கவில்லை. சிறுபான்மையினர் தங்களுடைய சமயத்தைப் பரப்ப, வளர்க்க பள்ளிகள் அமைப்பதை கட்டுப்படுத்துகிற சூழ்நிலையிலும் நாம் இல்லை. அதைத் தெளிவாகவே எடுத்துச் சொல்லியிருக்கிறோம். விதிவிலக்குகள் கொடுக்கப்பட்டிருக்கிற பிரிவில்

giving, providing and imparting religious instruction alone and not any other instruction

என்பதையும் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறோம். சமயச் சார்புடைய கல்வியைப் பயிற்றுவிக்கின்ற எத்தகைய தனியார் பள்ளியையும் இந்த மசோதா கட்டுப்படுத்தாது.

அதுமட்டுமல்ல. இப்போது அவர்கள் சமயச் சார்புடைய கல்வியைப் பரப்ப, வளர்க்க அரசாங்கத்தின் அங்கீகாரம் பெறுமல், மானியம் பெறுமல் தனியாக ஆரம்பித்து நடத்துகிற பள்ளிகளை இந்த மசோதா கட்டுப்படுத்தாது. இந்திய அரசாங்கத்தின் அனுமதி பெற்று நடத்தப்படுகிற சென்டிரல் ஸ்கூல்களையும் இந்த மசோதா கட்டுப்படுத்தாது. பல்கலைக் கழகத்தின் அனுமதியைப் பெற்று, பல்கலைக் கழக விதிகளுக்குட்பட்டு நடைபெறுகிற மெட்ரிகுலேஷன் பள்ளிகளையும் இந்த மசோதா கட்டுப்படுத்தாது. ஆனல் அரசின் அங்கீகாரம் பெற்று நடைபெறுகின்ற பள்ளிகள் அனைத்தும் சில பொதுப்படையான கட்டுதிட்டங்களுக்குள் வரவேண்டுமென்றே இந்த மசோதாவைக் கொண்டு வருகிறோம்.

இன்றைக்கு நம் மாநிலத்தில் 2,766 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன என்றால் அறக்கட்டளைகளினால் நடத்தப்படுகிற (மிஷன் பள்ளிகள்) 285 ஆகும். மிஷன் பிரிவு இல்லாத தனியார் நடத்துகிற பள்ளிகள் 529 ஆகும். ஆகவே மிஷன் பள்ளிகள்,



தனியார் நடத்துகிற பள்ளிகள் இரண்டையும் சேர்த்தாலும் 814 தான் ஆகிறது. மற்ற 1,952 உயர்நிலைப்பள்ளிகள் அரசாங்கத்தின் பள்ளிகளாகவும், அரசு—கழக உயர்நிலைப் பள்ளிகளாகவும்தான் அமைந்திருக்கின்றன. ஆங்கிலோ-இந்தியன் பள்ளிகள் 35 தான் இருக்கின்றன.

எல்லாப் பள்ளிகளையுமே அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கருத்தை திரு. எட்மண்ட் அவர்கள் சொன்னார்கள். மணலி திரு. கந்தசாமி அவர்களும் அந்தக் கருத்தைக் குறிப்பிட்டார்கள். இருக்கிற பள்ளிகள் அனைத்தையும் ஒரு சில பொதுவரையறைக்குள் கொண்டுவர நாம் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருப்பதையே திரு. லத்தீப் அவர்கள் அரசியல் சட்டத்தின் 15-வது, 19-வது, 29-வது 30-வது என வரிசையாக அடுக்கிக் காட்டி அவற்றுக்கு எல்லாம் விரோதமானது என்று குறிப்பிட்டார். எல்லாப் பள்ளிகளையுமே அரசாங்கம் எடுத்துக் கொள்கிற நிலை வருகிறபோது சிறுபான்மையினர் என்ன செய்வார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இப்போதுள்ள பெரும்பான்மையான பள்ளிகள் அரசின் சார்பாகவே நடைபெறுகிற பள்ளிகளாக இருக்கின்றன. நடுநிலைப் பள்ளிகளை எடுத்துக்கொண்டாலும் இன்றைக்கு மிஷன் பள்ளிகள் 790 தான் இருக்கின்றன. மற்ற மிஷன் அல்லாத தனியார் பள்ளிகள் 1,262 இருக்கின்றன. துவக்கப் பள்ளிகளை எடுத்துக் கொண்டாலும் மிஷன் பள்ளிகள் 2,114 இருக்கின்றன. மிஷன் அல்லாத தனியார் பள்ளிகள் 3,091 இருக்கின்றன. ஆக மிஷன், மிஷன் அல்லாத தனியார்களிடம் இன்றைக்கு 7,257 பள்ளிகள் தான் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்கள் நடத்துகிற பள்ளிகள் 22 ஆயிரம் சொச்சம். ஆக இந்தச் சட்டத்தினால் சிறுபான்மையினரின் பள்ளிகள் பாதிக்கப்படக்கூடும் என்கிற அச்சத்திற்கே இடமில்லை.

திரு. லத்தீப் அவர்கள் குறுக்கிடுகிறபோது தனியார் பள்ளிகளில் அரசாங்கம் தலையிடுவதற்கு உரிமையில்லை என்று குறிப்பிட்டார்கள். அப்படி குறுக்கிடுவது அரசியல் சட்டத்திற்கு முரணானது என்றும் குறிப்பிட்டார்கள். சிறுபான்மையினராகிய

கிறிஸ்துவர்கள் நடத்துகிற பள்ளி என்றால் சிறுபான்மை கிறிஸ்துவர்கள்தான் அந்தப் பள்ளியை நடத்துகிறார்கள். சிறுபான்மை கிறிஸ்துவர்கள் தான் அங்கே ஆசிரியர்களாக இருக்கிறார்கள். அதுபோல சிறுபான்மை முஸ்லிம்கள் நடத்துகிற பள்ளி என்றால் சிறுபான்மை முஸ்லிம்கள் தான் அங்கே ஆசிரியர்களாக இருக்கிறார்கள். அதுபோன்ற பள்ளிகளிலும் கிறிஸ்துவ நிர்வாகிக்கும்—கிறிஸ்துவ ஆசிரியர்களுக்கும் தகராறு ஏற்படுகிறபோது, முஸ்லிம் நிர்வாகிக்கும்—முஸ்லிம் ஆசிரியர்களுக்கும் தகராறு ஏற்படுகிறபோது—அந்தத் தகராறுகளுக்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்கிற அடிப்படையில்தான்—அங்கே மதம் குறுக்கிடவில்லை, மத உணர்வுகள் குறுக்கிடவில்லை—ஆசிரியர்கள், நடத்துகிறவர் ஆகியவர்களிடையே ஏற்படுகிற தகராறுகளுக்கு ஒரு முடிவு காண வேண்டும் என்கிற அடிப்படையில்தான் இந்தச் சட்டம் அமைந்திருக்கிறது. இதில் சிறுபான்மையினர் தங்கள் நலன்களுக்காகப் பள்ளிகளை துவக்கி நடத்துவது எந்த வகையிலும் பாதிக்கப்படவில்லை. அப்படி பாதிக்கப்படாதிருக்க, அரசியல் சட்டத்தின் பாதுகாப்புகளை எல்லாம் நான் அவர்களுக்குத் தருவேன் என்கிற உறுதிமொழியையும் நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இப்போதுள்ள நிலை சிறுபான்மையினரைப் பொறுத்த வரையில் அவர்கள் நடத்துகிற பள்ளிகள் நாம் ஏற்படுத்தியிருக்கிற சிலபல ஒழுங்குக் கட்டுப்பாட்டுக்குள் வரவேண்டும் என்பதுதான். அதற்கு முக்கியமான நோக்கமும் ஒன்றுண்டு. இன்றைக்கு எஜுகேஷனல் ஸ்டாடிஸ்டிக்ஸ்—கல்வி சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்கள் இன்னும் தெளிவாக எல்லா மாநிலங்களிலும் கிடைக்கவில்லை. நம் மாநிலத்திலும் கிடைக்கவில்லை. இப்படிப் பட்ட புள்ளிவிவரங்களை எல்லாம் தருவது திட்டமிடுவதற்கும், சிலபல அரசாங்கப் பணிகள் செம்மையாக நடைபெறுவதற்கும் தேவைப்படுவதாக அமைந்திருக்கிற பாங்கினைக் காண்கிறோம்.

அந்த அடிப்படையில்தான் பல்வேறு வகையான பள்ளி விவரங்களைத் தர வேண்டுமென்று நாம் கேட்கிறோம். இந்தச் சட்டத்தில் ஏற்கனவே எல்லோரும் அனுமதி பெற வேண்டுமென்று வைத்திருக்கிறோம். இப்போது ஏற்கனவே இருக்கிற பள்ளிகள் அனுமதி பெறவேண்டிய அவசியம் இல்லை. புதியதாக துவக்கப்





படுகிற பள்ளிகள் அனுமதி பெற்றால்போதும் என்று குறிப்பிட்டிருக்கிறோம். இதுபோல அனுமதி பெறக்கூடிய சிறுபான்மையினரின் நலன்களுக்காக வைக்கப்படுகிற பள்ளிகளுக்குத் தேவையில்லை என்று செய்திருக்கிறோம். அங்கிகாரம் பெற இவர்கள் விண்ணப்பித்துக்கொள்ள வேண்டியதில்லை. என்றாலும் இவர்கள் எல்லாம் தரவேண்டிய விவரங்கள்—பள்ளியின் சொத்து, ஆசிரியர்களின் எண்ணிக்கை, மாணவர்களின் எண்ணிக்கை, போதிக்கப்படுகிற பாடங்களின் குறிப்புக்கள் ஆகியவைதான். இவர்களுக்கும் மானியம் அளிப்பது என்ற வகையில் வைத்துக்கொண்டிருக்கிறோம். ரத்து செய்வது என்பது கடைசிக் கட்டமே தவிர, எடுத்துக்கொள்வதற்கு எந்த விதியும் வகுக்கப்படவில்லை. மானியத்தை நிறுத்தி வைப்பது, அங்கீகாரத்தைத் திரும்பப் பெறுவது எல்லாம் இப்போதே நம்மிடத்தில் இருக்கிற அதிகாரங்களாகும்.

அந்த அதிகாரமும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. நாமே அவர்கள் கையில் கொடுக்காமல் நேரடியாகக் கொடுக்கும் முறையில் கையாளலாம். அதிலும் சீர்படாவிட்டால் அங்கீகாரத்தை நிறுத்தலாம். அதிலும் சீர்படாவிட்டால் அறவே நீக்கும் அளவில் பாயலாம். ட்ரிப்யூனலுக்கு மேல்முறையீடு செய்ய உரிமை இருக்கிறது. பிறகு ட்ரிப்யூனல் பார்த்து அந்தப் பள்ளியை எடுத்துக்கொள்வது நியாயம் என்று தெரிந்து கொண்ட பிறகுதான் அரசு எடுத்துக்கொள்ள முடியும். ட்ரிப்யூனல் பார்த்து ரத்து செய்வது தவறு அல்லது அதை எடுத்துக்கொள்வது தவறு என்று தீர்ப்பளித்தால் நிர்வாகமே நடக்க வேண்டும். அப்படி எடுத்துக்கொண்டாலும் இரண்டு ஆண்டுதான் எடுக்கலாம் என்று போட்டிருக்கிறோம். அதற்குள் சீர்திருத்திவிடுகிறது என்ற நிலை ஏற்படுமானால் இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே திருப்பிக் கொடுத்துவிடலாம் என்றும் சட்டத்தில் போட்டிருக்கிறோம்.

இரண்டு ஆண்டுகள் என்பது குறுகிய காலம். அதற்குள் கோளாறுகளை சீர்திருத்திக் கொண்டுவர முடியாது என்று தெரியுமானால் மேலும் ஒரு ஆண்டு என்று ஐந்து ஆண்டுகள் வரையில் வரலாம். அதற்குப் பிறகு எக்காரணத்தைக் கொண்டும்

கிறிஸ்துவர்கள் நடத்துகிற பள்ளி என்றால் சிறுபான்மை கிறிஸ்துவர்கள்தான் அந்தப் பள்ளியை நடத்துகிறார்கள். சிறுபான்மை கிறிஸ்துவர்கள் தான் அங்கே ஆசிரியர்களாக இருக்கிறார்கள். அதுபோல சிறுபான்மை முஸ்லிம்கள் நடத்துகிற பள்ளி என்றால் சிறுபான்மை முஸ்லிம்கள் தான் அங்கே ஆசிரியர்களாக இருக்கிறார்கள். அதுபோன்ற பள்ளிகளிலும் கிறிஸ்துவ நிர்வாகிக்கும்—கிறிஸ்துவ ஆசிரியர்களுக்கும் தகராறு ஏற்படுகிறபோது, முஸ்லிம் நிர்வாகிக்கும்—முஸ்லிம் ஆசிரியர்களுக்கும் தகராறு ஏற்படுகிறபோது—அந்தத் தகராறுகளுக்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்கிற அடிப்படையில்தான்—அங்கே மதம் குறுக்கிடவில்லை, மத உணர்வுகள் குறுக்கிடவில்லை—ஆசிரியர்கள், நடத்துகிறவர் ஆகியவர்களிடையே ஏற்படுகிற தகராறுகளுக்கு ஒரு முடிவு காண வேண்டும் என்கிற அடிப்படையில்தான் இந்தச் சட்டம் அமைந்திருக்கிறது. இதில் சிறுபான்மையினர் தங்கள் நலன்களுக்காகப் பள்ளிகளை துவக்கி நடத்துவது எந்த வகையிலும் பாதிக்கப்படவில்லை. அப்படி பாதிக்கப்படாதிருக்க, அரசியல் சட்டத்தின் பாதுகாப்புகளை எல்லாம் நான் அவர்களுக்குத் தருவேன் என்கிற உறுதிமொழியையும் நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இப்போதுள்ள நிலை சிறுபான்மையினரைப் பொறுத்த வரையில் அவர்கள் நடத்துகிற பள்ளிகள் நாம் ஏற்படுத்தியிருக்கிற சிலபல ஒழுங்குக் கட்டுப்பாட்டுக்குள் வரவேண்டும் என்பதுதான். அதற்கு முக்கியமான நோக்கமும் ஒன்றுண்டு. இன்றைக்கு எஜுகேஷனல் ஸ்டாடிஸ்டிக்ஸ்—கல்வி சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்கள் இன்னும் தெளிவாக எல்லா மாநிலங்களிலும் கிடைக்கவில்லை. நம் மாநிலத்திலும் கிடைக்கவில்லை. இப்படிப் பட்ட புள்ளிவிவரங்களை எல்லாம் தருவது திட்டமிடுவதற்கும், சிலபல அரசாங்கப் பணிகள் செம்மையாக நடைபெறுவதற்கும் தேவைப்படுவதாக அமைந்திருக்கிற பாங்கினைக் காண்கிறோம்.

அந்த அடிப்படையில்தான் பல்வேறு வகையான பள்ளி விவரங்களைத் தர வேண்டுமென்று நாம் கேட்கிறோம். இந்தச் சட்டத்தில் ஏற்கனவே எல்லோரும் அனுமதி பெற வேண்டுமென்று வைத்திருக்கிறோம். இப்போது ஏற்கனவே இருக்கிற பள்ளிகள் அனுமதி பெறவேண்டிய அவசியம் இல்லை. புதியதாக துவக்கப்



படுகிற பள்ளிகள் அனுமதி பெற்றால்போதும் என்று குறிப்பிட்டிருக்கிறோம். இதுபோல அனுமதி பெறக்கூடிய சிறுபான்மையினரின் நலன்களுக்காக வைக்கப்படுகிற பள்ளிகளுக்குத் தேவையில்லை என்று செய்திருக்கிறோம். அங்கீகாரம் பெற இவர்கள் விண்ணப்பித்துக்கொள்ள வேண்டியதில்லை. என்றாலும் இவர்கள் எல்லாம் தரவேண்டிய விவரங்கள்—பள்ளியின் சொத்து, ஆசிரியர்களின் எண்ணிக்கை, மாணவர்களின் எண்ணிக்கை, போதிக்கப்படுகிற பாடங்களின் குறிப்புக்கள் ஆகியவைதான். இவர்களுக்கும் மானியம் அளிப்பது என்ற வகையில் வைத்துக்கொண்டிருக்கிறோம். ரத்து செய்வது என்பது கடைசிக் கட்டமே தவிர, எடுத்துக்கொள்வதற்கு எந்த விதியும் வகுக்கப்படவில்லை. மானியத்தை நிறுத்தி வைப்பது, அங்கீகாரத்தைத் திரும்பப் பெறுவது எல்லாம் இப்போதே நம்மிடத்தில் இருக்கிற அதிகாரங்களாகும்.

அந்த அதிகாரமும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. நாமே அவர்கள் கையில் கொடுக்காமல் நேரடியாகக் கொடுக்கும் முறையில் கையாளலாம். அதிலும் சீர்படாவிட்டால் அங்கீகாரத்தை நிறுத்தலாம். அதிலும் சீர்படாவிட்டால் அறவே நீக்கும் அளவில் வரலாம். ட்ரிப்யூனலுக்கு மேல்முறையீடு செய்ய உரிமை இருக்கிறது. பிறகு ட்ரிப்யூனல் பார்த்து அந்தப் பள்ளியை எடுத்துக்கொள்வது நியாயம் என்று தெரிந்து கொண்ட பிறகுதான் அரசு எடுத்துக்கொள்ள முடியும். ட்ரிப்யூனல் பார்த்து ரத்து செய்வது தவறு அல்லது அதை எடுத்துக்கொள்வது தவறு என்று தீர்ப்பளித்தால் நிர்வாகமே நடக்க வேண்டும். அப்படி எடுத்துக்கொண்டாலும் இரண்டு ஆண்டுகள்தான் எடுக்கலாம் என்று போட்டிருக்கிறோம். அதற்குள் சீர்திருத்திவிடுகிறது என்ற நிலை நமக்குப் படுமானால் இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே திருப்பிக் கொடுத்துவிடலாம் என்றும் சட்டத்தில் போட்டிருக்கிறோம்.

இரண்டு ஆண்டுகள் என்பது குறுகிய காலம். அதற்குள் காரியங்களை சீர்திருத்திக் கொண்டுவர முடியாது என்று தெரியுமானால் மேலும் ஒரு ஆண்டு என்று ஐந்து ஆண்டுகள் வரையில் வரலாம். அதற்குப் பிறகு எக்காரணத்தைக் கொண்டும்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 டிசம்பர் 4

அரசு அப்பள்ளியை எடுத்து நிர்வகிக்க முடியாது. ஐந்து ஆண்டுகள் ஆன பிறகு கட்டாயமாக நிர்வாகத்தினிடம் பள்ளியைத் திருப்பித் தர வேண்டும். அந்த வகையில்தான் சட்டம் அமைந்துள்ளது. என்றென்றைக்கும் எடுத்துக்கொள்ளும் சூழ்நிலை ஏற்படவில்லை.

சிறுபான்மையினர் பள்ளிகளைப் பொறுத்தவரையில் இந்த நிலைமையும் ஏற்படவில்லை. ஆசிரியர்களும், நிர்வாகிகளும் மேல்முறையீடு செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதிகாரியிடம் அப்பீல் செய்து கொள்வது, ட்ரிப்யூனலிடம் அப்பீல் செய்து கொள்வது என்று இருக்கிறது. இப்போதுள்ள முறைப்படி அமைச்சர், முதல் அமைச்சர் அவர்கள், பிறகு கோர்ட் என்று போகக்கூடிய அளவிற்கு பல்லாண்டுக் காலமாகும். ஆகவே, குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டும் என்றுதான் இப்படிச் செய்யப்பட்டிருக்கிறது. ட்ரிப்யூனலின் தீர்ப்பே இறுதியானது என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறோம். ஆக, விவகாரங்கள் விரைவில் முடிவடைய இது வழிவகுக்கும்.

பிறகு. ஆசிரியர்களுக்கான ஒழுக்கவிதிகள் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஒழுக்க விதிகளை மீறும் சூழ்நிலை ஏற்படுமானால் கல்வித் துறை அதிகாரிகள் அனுமதி பெற்று அவர்களை சஸ்பெண்ட் செய்து வைக்கலாம் என்றிருக்கிறது. க்ராஸ் மிஸ்காண்டக்ட் என்று சொல்லி உடனடியாக சஸ்பெண்ட் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டால் அப்படி சஸ்பெண்ட் செய்ய நிர்வாகிகளுக்கு அதிகாரம் இருக்கிறது.

எய்டெட், அன்- எய்டெட் என்ற பிரச்னையே இதில் ஏற்படவில்லை. திருமதி ஆல்டா பௌலர் அவர்கள் குறிப்பிடும் போது அன்-எய்டெட் பள்ளிகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். ரிக்கக்னைஸ்ட் ப்ரைவேட் ஸ்கூல்ஸ் என்றுதான் இருக்கிறதே தவிர எய்டெட் அல்லது அன்-எய்டெட் என்ற பிரச்னையே ஏற்படவில்லை.

ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள் நம்மிடம் மானியம் வாங்காமல் மாணவர்களிடம் வசூல் செய்து சரிக்கட்டிக் கொள்கிறார்கள். ஏண்டு விழுமானால் மானியம் பெறுகிறார்கள். ஆனால் அரசிடம்



1973 டிசம்பர் 4] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மானியம் பெற அவர்கள் முழுத் தகுதியும் பெற்றிருக்கிறார்கள். ஆனால் சிலர் வாங்க முடியவில்லை என்றால் பணம் வசூலிப்பதால் வாங்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள் என்று வரும்போது எல்லாப் பள்ளிகளையும் ஒழுங்குபடுத்தக்கூடிய சூழ்நிலை வருகிறது. பள்ளிக் குழு அமைப்பதில் உறுப்பினர்கள் பல கருத்துக்களைத் தெரிவித்தார்கள். இப்போதே சிலபல பள்ளிகளில் குழுக்கள் அமைந்துள்ளன. சிலபல பள்ளிக் குழுக்களில் தலைமை ஆசிரியர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். சில பள்ளிகளில் ஆசிரியப் பிரதிநிதிகள் கூட இடம் பெற்றிருக்கிறார்கள். பள்ளி நிர்வாகம் பற்றியும், ஆசிரியர்கள் நியமனம் பற்றியும், பள்ளிகள் விவகாரங்களைப் பற்றியும் முடிவு கட்ட இந்தக் குழு பயன்படும் என்றுதான் சொல்லியிருக்கிறோம். பள்ளிக்கூடத்தின் நிதித் துறையிலோ அல்லது பள்ளிக்கூட சொத்து போன்றவற்றில் தலையிடுகிற உரிமையை இந்தப் பள்ளிக் குழுவிடம் விடவில்லை. அதை இருக்கிற அந்தந்த நிர்வாகி அல்லது தனி அமைப்புகள் தான் பார்த்துக்கொள்ள வேண்டும்.

கல்வி சம்பந்தமாக இருப்பதால் வீண் மாச்சரியங்கள் ஏற்படாமல் இருக்கவும், ஆசிரியர்களும் நிர்வாகமும் ஒவ்வொரு பங்கமாகப் பிரிந்து மாச்சரியங்கள் ஏற்படாமல் இருப்பதற்காகவும் தான் இந்தப் பள்ளிக்கூடக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் கூட இவவளவு பேர்கள் இருக்க வேண்டும் என்று, திரு. பழனிசாமி அவர்கள் குறிப்பிடுகிறபோது தலைமை ஆசிரியர் இருக்க வேண்டும், ஆசிரியர்களின் பிரதிநிதிகள் இரண்டு பேர் இருக்க வேண்டும், நிர்வாகிகளின் பிரதிநிதிகள் இரண்டுபேர் இருக்கவேண்டும். என்று குறிப்பிட்டார். அப்படி வரையறுத்துப் போடுவது, சட்டத்தில் கொண்டுவருவது முறையாகாது. ஆகவேதான், ஆசிரியர்கள் பிரதிநிதி இருக்க வேண்டும், தலைமை ஆசிரியர் இருக்க வேண்டும் என்று போட்டிருக்கிறோம்.

எவ்வளவு பேர்கள், எப்படி இருப்பது, ஆசிரியர்கள் மாணவர்கள் எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல் எப்படி இருப்பது என்பதை விதிமுறைகளில் சேர்த்துக் கொள்ளலாம். அது சட்டத்தில் இருக்க வேண்டும் என்று வற்புறுத்த முடியாது.

ஆனால் ஆசிரியர்களின் குரல் ஒலிக்க வேண்டும். அவர்கள் பிரதிநிதி இருக்க வேண்டும் குழுவில். கட்டி ஆள்கிற மெஜாரிட்டி வேண்டும் என்பதல்ல இதன் நோக்கம். ஆசிரியர்கள் தங்கள் குறைகளை எடுத்துச்சொல்ல வழியில்லாமல் இருந்தது. ஆகவே அவர்கள் குறைகளை எடுத்துச் சொல்வதற்கும், அல்லது பிரச்னைகள் வரும்போது அவர்கள் கருத்துக்கள் அதில் படிய வேண்டும் என்பதற்காக இந்தக் குழுவில் அவர்கள் பிரதிநிதி இடம் பெறவேண்டும் என்று செய்யப்பட்டிருக்கிறது.

தலைமை ஆசிரியர் இடம் பெறவேண்டும். எண்ணிக்கை எவ்வளவு என்று போடவில்லை. இப்போதுள்ளபடியே நிர்வாகிகளுக்கு மெஜாரிட்டி குழுவில் வரக்கூடிய நிலை இருக்கிறது. ஆசிரியர்கள் பிரதிநிதி இருப்பதால் நிர்வாகப் பணி கெட்டுவிடும் என்று சொல்வதற்கில்லை. விதிகளில் அதுபற்றிக் குறிப்பிடுவதாக இருக்கிறோம்.

ஒவ்வொரு பள்ளிக்கும் ஒவ்வொரு குழு வேண்டுமா என்று டென்னிஸ் அவர்கள் கேட்டார்கள். கார்பரேட் பாடியாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதையும் யோசித்தோம். ஒரு பள்ளியில் தவறு ஏற்பட்டால் அந்தத் தவறு காரணமாக அந்த பாடி மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டால் 15 அல்லது 20 பள்ளிகளை நடத்துகிற அந்த பாடி மீது நடவடிக்கை எடுத்து கலைக்கவோ அல்லது மற்றும் வேறு நிலைமைகள் ஏற்பட்டுவிடுமானால் 15 அல்லது 20 பள்ளிகளையும் பாதிக்கும் அளவில் நிலைமைகள் ஏற்பட்டுவிடக்கூடும். ஆகவே தான் ஒவ்வொரு பள்ளிக்கும் தனித்தனிக் குழு இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளோம்.

இன்னொன்றும் திரு. டென்னிஸ் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்கு ஆசிரியர்களை மாற்றுவதில் அதன் காரணமாக சங்கடங்கள் ஏற்படும் என்று குறிப்பிட்டார்கள். அப்படி சங்கடம் ஏற்படாத அளவிற்கு விதிகளில் அதற்கான வழிவகைகளை வகுத்துக்கொள்ளலாம். கார்ப்பரேட் பாடியாக இருக்கிறது அல்லது ஒரு கிறிஸ்தவ மிஷின் கீழ் உள்ளது என்றால் அதன் கீழ் முப்பது பள்ளிகள் இருக்கின்றன



என்றால் ஒரு பள்ளியிலிருந்து வேறு ஒரு பள்ளிக்கு ஆசிரியர்களை மாற்றுவதில் இடைஞ்சல் ஏற்படாமல் இருப்பதற்கான நிலைமையில் விதிகளில் அதற்கான தன்மைகளை வைத்துக் கொள்ளலாம்.

முதலில் நாங்களும் யோசித்தோம் ஒன்றின்கீழ் உள்ள எல்லாப் பள்ளிகளுக்கும் ஒரு குழு இருப்பது என்று. பிறகு ஆராய்ந்த வகையில்தான் ஒவ்வொரு பள்ளிக்கும் தனிப் பள்ளிக்கூடக் குழு அமைவது என்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்று கண்டறிந்தோம். பள்ளிகளில் ஊழல்கள், மற்றவை நடக்கின்றன என்று சிலர் குறிப்பிட்டார்கள். அதை ஓரளவிற்குக் குறைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. ஆசிரியர்களை நியமனம் செய்வதில், மற்றவைகளில் தனி ஒரு நிர்வாகிதான் பொறுப்பு என்றால் அல்லது தனி ஒரு நிர்வாகிக்குத்தான் அதிகாரம் என்றால் ஆயிரம், இரண்டாயிரம், மூவாயிரம் ரூபாய் பணம் கொடுத்து சேர்த்துக்கொள்கிறார்கள் என்ற குறைபாடுகள் வந்தன.

ஆனால், ஒரு குழு என்று அமையும்போது ஆசிரியர் பிரதிநிதி, தலைமை ஆசிரியர், நிர்வாகிகளின் பிரதிநிதி என்று நாலைந்து உறுப்பினர்கள் இருப்பார்கள். அப்போது குறைபாடுகள் அதிகமாகாமல் இருக்க வழி ஏற்படும். ஆக, உரிமைகளைப் பறிக்கக் கூடிய அளவில், யாருடைய உரிமையையும் எடுக்கிற வகையில் அமையக்கூடியதல்ல இது. இதனால் காலம் செல்லச்செல்ல ஒரு ஒழுங்குபடுத்திய சரியான நிலைமையைக் கொண்டுவர முடியும்.

(மாலை 4-30)

திரு. மணலி கந்தசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். சரியாக நடக்கிற பள்ளிகளுக்கு இதுபற்றி ஒன்றுமில்லை. குறைபாடுகளோடு நடக்கக்கூடிய பள்ளிகள்தான் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு பள்ளிவிவரம், மற்றவை எல்லாம் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். அப்படியே பார்த்தாலும் 7 ஆயிரம் பள்ளிகளில் தகராறுக்கு என்று வருவது கிட்டத்தட்ட 150 பள்ளிகள் தான். அந்த எல்லா பள்ளிகளுமே தகராறுக்கு உரியன என்று சொல்லிவிட முடியாது. அந்தத் தகராறுகள் முற்றாமல் காப்பாற்றுவதற்கு இந்தச் சட்டம் பயன்படும். எனவே, இந்தச் சட்டம் ஒழுங்குபடுத்துவதற்காகத் தான். ஒழுங்காக

நடைபெறுகின்ற பள்ளிகளில் தகராறு ஏற்படுவதற்கு வழி இல்லை. ஆசிரியர்கள் பணிகளை பாதுகாக்கவும், சஞ்சலங்கள் ஏற்படாமல் பாதுகாக்கவும், ஆசிரியர்கள், நிர்வாகிகளுக்கிடையே ஏற்படுகின்ற தகராறுகளை சுமுகமாக தீர்க்கவும், அவர்களிடையே சுமுகமான உறவு ஏற்படுத்தவும் தான் இந்த மசோதா வழி செய்கிறது. ஆசிரியர்களை நியமிக்கின்ற அதிகாரம் முழுவதும் அந்தந்தப் பள்ளிகளுக்கே தான் இருக்கிறது.

சர்வீஸ் கமிஷன் அந்த அதிகாரத்தை வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். இந்த விஷயத்தைக் கூட ஆய்வுக் குழு ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படி எடுத்தால் அவர்களுடைய உரிமையில் தலையீடு செய்வதாகும். இப்போது பல்வேறு வாரியங்கள் தனிப்பட்ட முறையில் இருக்கின்றன. எனவே, ஆசிரியர்கள் நியமிக்கின்ற அதிகாரத்தை எடுக்கவில்லை. அரசாங்கம் விதிக்கின்ற சட்ட திட்டங்களுக்குட்பட்ட தகுதிகள், திறமைகள் உடைய ஆசிரியர்களை நியமித்துக்கொள்ளும் முழு உரிமையும் அளிக்கப்பட்டிருக்கின்றது. எனவே, சுமுகமான சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்பதற்காகத்தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே தகராறு ஏற்பட்டு, ஆசிரியர்கள் அவதிப்படுகிறார்கள் என்றால் அவர்களுடைய தகராறுக்கு முடிவு ஏற்படுத்துவதுதான் இதன் நோக்கம். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் அங்கீகாரம் அளிக்கப்பட்ட பள்ளிகளை கட்டுப்படுத்தும் கொள்கை உடையவர்களாக இருக்கிறோம். அங்கீகாரமும் பெறாமல், மானியமும் பெறாமல் தனியாக நடத்தப்படுகின்ற பள்ளிகளை இச் சட்டம் கட்டுப்படுத்தாது. ஆனால், அங்கீகாரம் பெற்ற, மானியம் பெறுகின்ற பள்ளிகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அடிப்படை உரிமைப் பிரச்னையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அரசாங்கம் நூற்றுக்கு நூறு மானியம் தந்து வருகிறது. அதைத் தவிர வேறு பல மானியங்களும் தந்து வருகிறது. ஆகவே, இவ்வளவு மானியங்களைத் தருகின்ற அரசு அப்படிப்பட்ட பள்ளிகளை கட்டுப்படுத்துவதில், முழுப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதில் தவறேதுமில்லை. ஒரே சீராக பள்ளிகள் அமைய வேண்டுமென்று எண்ணுவதில் தவறில்லை.



**திருமதி த. ந. அனந்தநாயகி:** அமைச்சர் அவர்கள் சொல்லும் போது, அங்கீகாரமும், மானியமும் பெறுகின்ற பள்ளிகளுக்குத் தான் இந்தச் சட்டம் வருகிறது என்றார். அங்கீகாரமும், மானியமும் பெறாத 'அனெய்டட் ஸ்கூல்ஸ்' என்று சொல்லப் படுகிற மானியம் பெறாத பள்ளிகளுக்கு இந்தச் சட்டம் பொருந்துமா என்பதை விளக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அங்கீகாரம் பெற்ற பள்ளிகளுக்கு மட்டுமே இந்தச் சட்டம் பொருந்தும். இந்தச் சட்டமே, "தமிழ்நாடு ரெகக்னைஸ்ட் பிரைவேட் ஸ்கூல்ஸ் ரெகுலேஷன் பில்" என்று தான் போட்டிருக்கிறோம். அனெய்டட் பள்ளிகள் சில முழு மானியம் பெறாமல், மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலித்துக் கொண்டு பள்ளிகளை நடத்திவரலாம். ஆனால், அவைகளும் முழு மானியம் பெறத் தகுதி பெற்ற பள்ளிகள் தாம். எனவே, அரசாங்கத்திடமிருந்து நூற்றுக்கு நூறு மானியம் பெற்று வருகிற அங்கீகாரம் பெற்ற பள்ளிகளை ஒழுங்கு படுத்துவதில் தவறேயில்லை.

இந்த மசோதாவின் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தகராறுகளை நல்ல முறையில் தீர்ப்பதற்கு உதவியாக இருக்குமென்ற முறையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆசிரியர், நிர்வாகிகளிடையே நல்ல சுமுகமான உறவு ஏற்பட வழிவகை ஏற்படுமென்ற முறையில் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. எனவே, இந்த மசோதாவை சட்டமாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு, ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு 24/72) கூட்டாய்வுக் குழு திருத்தியமைத்தவாறு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு கூட்டாய்வுக் குழு திருத்தியமைத்தவாறு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

*Clause 2.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "பிரிவு 2 இச்சட்டமுன் வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN: In clause 2, in sub-clause (1), *for* the words "the first day of June", *substitute* the words "the first day of January or June".

THIRU M. A. LATHEEF: Sir, I move that—

After sub-clause 7 (*d*) *add* the following as sub-clause (*e*):

"(*e*) established, maintained and administered by the religious and linguistic minorities under clause (1) of Article 30 of the Constitution."

The amendment was duly seconded.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஆல்டா பௌலர் அவர்களின் திருத்தத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

THIRU N. K. PALANISAMY: Sir, I move that—

(i) In sub-clause 7, after the words 'a pre-primary', *insert* the words 'whether receiving grant or not from the Government';

(ii) *for* sub-clause (9), *substitute* the following—

'Secretary' in relation to a private school means the Secretary elected from the school committee and also referred to in section 16.

The amendment was duly seconded.

THIRU M. A. LATHEEF: Mr. Speaker, Sir, I was hearing the statement made by the Hon. Minister with rapt attention I submit that I have been misunderstood.

(Mr. Deputy Speaker in Chair.)

The Hon. Minister while making the statement said as though minorities claim exclusive and complete right to maintain and administer their institutions without there being any governmental interference. I never said that Government have no right to exercise its right of regulation of an institution which receives grant and which has been accorded recognition by the State. Even in the minute of dissent that I had submitted,



I clearly stated that 'the Bill as has been drafted instead of devising ways to improve the service conditions of the teaching community is seeking to make serious inroads into the legal, constitutional and natural rights of individuals and groups of individuals to establish and administer institutions of their choice subject to the acknowledged rules and regulations evolved by the State to be based upon the principle of liberty, equality and freedom of exercise of natural and constitutional rights'.

Therefore, Sir, even in the minute of dissent, I have admitted that the State has got the paramount power to make rules and regulations so as to regulate the conduct of such institutions, even though they may be maintained and based upon the constitutional principles and the well-established concept of justice, equality and good conscience. Therefore I welcome all regulation. Even if this Bill as has been drafted is a regulating Bill, I have no objection whatsoever. If the Government comes forward with rules and regulations in such a manner as to bring about clean administration, in such a way as to give the maximum advantage to all people concerned, then I have no objection. But what I submit, Mr. Deputy Speaker, is under Article 29 of the Constitution—I had already submitted—the minority institutions have a right to safeguard their culture and that can be done only through the medium of establishment of their own educational institutions.

The Hon. Minister for Education also dwelt upon the points that such schools are being financed entirely by the State and that it is but proper that the State has got a right to regulate such schools or institutions in such a manner as it may deem proper and appropriate in the circumstances. I do disagree with this argument because under clause 2 of the Article 29 of the Constitution under certain consideration the Government finance these institutions. I submit there is a contract between the Government and the private institution. Contractual obligation is there. There is contractual obligation as to how they should discharge the contractual obligations and there is also a consideration for this contract.

I submit that Article 29 (2) of the Constitution under certain consideration the Government finance such institutions to maintain the institution and in the Constitution such institutions have

been termed as minority institutions and in which it has been stated that they should allow such people who are drawn not only from minority communities but also from other sections of the community. It is happily established in the Kerala Education Act and the Supreme Court has laid down the principle that so far as administration is concerned, it is the primary duty of the private management. In such an administration, the interference from the Government or any individual is not tolerable. What is the consideration for the financial accommodation given by the Government is this.

The Supreme Court has held that consideration is that such minority institutions are constitutionally obligated to admit people from all sections and they should not only confine to their own community but also admit people from all other sections of the community. That is the consideration for the finance given by the Government. So, under this principle, the Government is entitled to impose general educational regulations.

Even under this Bill that is before us, the Government has ample powers to deal with academic institutions with regard to their academic activities. They have got powers to regulate the academic activities of all educational institutions including the educational institutions maintained by the minorities in this country. Therefore, Sir, regulation is different from interference. Regulation is different from participation. Government is entitled to regulate the activities and regulate the administration but they have no powers to interfere or to seek to allow an extraneous element to get into the administration. Therefore, I do stress that this amendment be accepted by this House.

திரு. என். கே. பழனிசாமி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்தின் நோக்கம் அன்ரெகக்னைஸ்டு ஸ்கூல்ஸ் ப்ரி-நர்சரி, கிண்டர்கார்டன் போன்ற ஸ்கூல்களுக்கும் இந்த சட்டத்தின் கீழ் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்பதுதான். உதாரணமாக எடுத்துக்கொண்டால், இன்றைக்கு 1,000 ஸ்கூல்ஸ் ப்ரி-பிரைமரி ஸ்கூல்ஸ் ஏராளமாக ஏற்பட்டிருக்கின்றன. அவர்கள் சர்க்காரிடமிருந்து மான்யம் பெறவில்லை என்று சொன்னாலும் கூட அதை வியாபாரமாக





நடத்தி வருகிறார்கள். ஒவ்வொரு பையனிடமும் ரூ. 10, 15 வாங்கிக்கொண்டு, அங்கே வேலை செய்யக் கூடிய ஆசிரியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 50 தான் கொடுக்கிறார்கள்.

அதே மாதிரி லாங்குவேஜ் ஸ்கூல் என்ற முறையில் கனம் மந்திரி அவர்கள் குறிப்பிட்டார்கள். செயின்ட் பீட்ஸ், கேப்ரியல் இம்மாதிரி பல பள்ளிகள் இருக்கின்றன. ஒவ்வொரு மாணவனிடமிருந்து ஃபர்ஸ்டு ஸ்டாண்டர்டு படித்தாலும் கூட மாதம் ஒன்றுக்கு ரூ. 18 வசூலிக்கப்படுகிறது. அம்மாதிரியான பள்ளிகளில் அதிகப்படியான லாபம் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவைகளை கட்டுப்படுத்தக்கூடிய முறையில் இந்த மசோதா இல்லை. அவைகளும் கட்டுப்படுத்தப்பட வேண்டும். அங்கு இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு மற்ற பள்ளிகளை விட மோசமான நிலைமை. ஆகவே, சரியான முறையில் ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு என்று சொல்லக்கூடிய இந்த சமயத்தில் இது மாதிரி பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

அதிலே செக்ரடரி என்பதற்கு வியாக்கியானத்தைப் பார்த்தால், மானேஜ்மெண்டைச் சார்ந்தவர்களையே செகரடரியாக போடலாம். நான் அதை ஆட்சேபிக்கிறேன். காரணம், தலைவராக இருப்பவர் மானேஜ்மெண்ட் கமிட்டியைச் சார்ந்தவர்கள். பள்ளிகளை நிர்வாகம் பண்ணக்கூடியவர் செகரடரி தான். செகரடரியிடம் தான் எல்லா பொறுப்புகளும் இருக்கின்றன. ஆகவே, அவரும் மானேஜ்மெண்டைச் சார்ந்தவராக இருக்கக் கூடாது. வேண்டுமென்றால் ஹெட்மாஸ்டரை செகரடரியாகப் போடுவதில் ஆட்சேபணையில்லை. இல்லாவிட்டால் கமிட்டி என்பது பெயருக்குத் தான் இருக்குமே தவிர, பழைய நிலைமை தான் தொடர்ந்து நீடிக்கும். ஆகவே, என்னுடைய இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**THIRUMATHI ALDA M. FOWLER**: Mr. Deputy Speaker, Sir, I have submitted about five amendments.

MR. DEPUTY SPEAKER: This amendment relates to Clause 2. It has been accepted by the Government. It is a very big credit to you because the Government is moving a similar amendment.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, on a point of order. The hon. Member has already moved the amendment. Why not the Government be generous to accept the amendment of the hon. Member and give the credit to her. Instead of the Government bringing an amendment, they can just say: "we are accepting your amendment."

MR. DEPUTY SPEAKER: There is a slight difference in the Government amendment. Government has added one or two words.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: My point is this. They may give the credit to the Member by accepting the amendment. Why should they bring in another amendment?

MR. DEPUTY SPEAKER: If the hon. Member, Thirumathi Alda M. Fowler wants to say anything on her amendment, she can do so.

THIRUMATHI ALDA M. FOWLER: It is all right.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு லத்திப் அவர்கள் தான் கூறிய காரணங்களை மீண்டும் வற்புறுத்தியிருக்கிறார்கள். ஆகவே, சிறுபான்மையோருடைய உரிமைகளைப் பறிப்பது அல்ல என்பதை ஏற்கனவே விளக்கிக் காட்டியிருக்கிறேன். இங்கே அவர்கள் சிறுபான்மையோர் சமுதாயச் சார்பாக கருத்துக்களை வற்புறுத்துகிறார். நாம் அவைகளுக்கு ஏற்கனவே விதிவிலக்கு தந்திருக்கிறோம்.

(*d*) giving, providing or imparting religious instructions alone, but not any other instruction.

என்று போட்டிருக்கிறோம். அத்தகைய சிறுபான்மையோர் பள்ளிகள் இந்தச் சட்டத்தின் தன்மையிலிருந்து நீக்கப்படும் என்று கூறியிருக்கிறோம். தனியார் பள்ளிகளில் ஏறத்தாழ பாதி சிறுபான்மையோர்களுடைய பள்ளிகளாக இருக்கின்றன. பொதுவாக இவைகளுக்கு நாம் விதி விலக்குத் தருவதாக இருந்தால், சட்டத்தின் நோக்கம் பெரும்பகுதி போய்விடும். ஆகவே தான் நான் முதலிலேயே விளக்கியபடி அத்தகைய சிறுபான்மையோருடை பள்ளிகளை இந்தச் சட்டத்திலிருந்து விலக்கி விட வேண்டும் என்பது தான் இந்தச் சட்டத்தின் நோக்கமாகும். அது தான் கருத்து. ஆகவே உறுப்பினர் அவர்களுடைய திருத்தம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



மாண்புமிகு உறுப்பினர் திரு. என். கே. பழனிசாமி அவர்கள் கொண்டு வந்திருக்கிற திருத்தத்தைப் பொறுத்தவரையில், அரசாங்கத்தின் அங்கீகாரம் பெறாமல் பல பள்ளிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் சில அரசின் மான்யத்தையும் பெறுகிறது, சில மான்யம் பெறாமலும் இருக்கிறது. அங்கீகாரம் பெற்ற பள்ளிகள் இந்தச் சட்டத்தின் வரம்பிற்குள் வரும். அங்கீகாரம் பெறாமலும், மான்யமும் பெறாமலும் இருக்கின்ற பள்ளிகளைக் கட்டுப்படுத்தக்கூடிய உரிமைகளும், அதிகாரங்களும் நமக்கு இல்லை. ஒவ்வொரு மாணவரிடமும் ரூ. 18, 25 என்றெல்லாம் வசூலிக்கிறார்கள் என்று கூறினார்கள். அவைகளை எந்த அடிப்படையில் கட்டுப்படுத்த முடியும் என்பது பற்றித் தனியாக யோசிக்கவேண்டும். இந்தச் சட்டத்தின் கீழ் அவைகளைக் கொண்டுவருவதற்கு இயலாமல் இருக்கிறது.

பள்ளிக்குழு செயலாளர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று சொல்லப்படுவது தேவையானதுமல்ல, விரும்பத்தக்கதுமல்ல. இந்தப் பள்ளிக்குழு செயலாளர் தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருக்கவேண்டும் என்பதல்ல. நிர்வாகம் தான் அவரை அமர்த்த வேண்டும் என்று போட்டிருக்கிறோம். அதை மாற்றவேண்டிய அவசியமில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

The question is—"In clause 2, in sub-clause (1), *for* the wods 'the first day of June', substitute the words 'the first day of January or June'.

அரசினர் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1973 டிசம்பர் 4

இல்லை. அரசாங்கப் பள்ளிக்கூடங்களில் இந்தச் சாதனங்கள் எல்லாம் இல்லாமல் இருக்கும்போது தனியார் பள்ளிக்கூடங்களை ஆரம்பிக்கும்போதே எல்லாம் இருக்க வேண்டுமென்ற நிபந்தனை எப்படிப் பொருந்தும்?

In item (iv) of the clause, it is stated—' the amenities available to pupils and teachers '

என்று இருக்கிறது.

ஒரு பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்கும்போது என்னென்ன சவுகரியங்கள் மாணவர்களுக்கு அந்தப் பள்ளிக்கூடத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன, ஆசிரியர்களுக்கு என்னென்ன வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன என்றெல்லாம் கூறவேண்டுமென்றிருக்கிறது.

ஐந்தாவது செக்ஷனை எடுத்துக் கொண்டால் எக்விப்மென்ட், லைப்ரரிஸ், அதர் பெசிலிடிஸ் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. அரசாங்கம் நடத்தும் பள்ளிகளில் கூட இந்த வசதிகள் இல்லாமல் இருக்கின்றன.

In item (vi) it is stated—

' the sources of income to ensure the financial stability of the private school;'

In item (vii) it is stated—

' the situation and the description of the buildings in which such private school is proposed to be established; and '

In item (viii) it is stated—

' such other particulars as may be prescribed '.

ஆகவே, இந்த நிபந்தனைகளை எல்லாம் விதிக்காமல் ஒரு நல்ல நோக்கத்தோடு தனி மனிதன் பள்ளிக்கூடத்தைத் தொடங்க முன் வந்தால் அந்தப் பள்ளிக்கு அனுமதி அளிக்க வேண்டுமென்ற காரணத்தால் என்னுடைய திருத்தங்களை ஏற்றுக்கொண்டு 4 முதல் 8 வரை உள்ள பிரிவுகளை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I would like to speak on both the amendments.



1973 டிசம்பர் 4] [திருமதி த. ந. அனந்தநாயகி]

திருமதி ஆல்டா பௌலர் கொடுத்திருக்கும் திருத்தத்தில், கடைசியில் ஒன்றைச் சேர்க்கச் சொல்லியிருக்கிறார்கள்.

' or any other examination conducted by a body recognised by the Central Government or a State Government '.

என்று விளக்கமாகக் கொடுத்திருப்பதை அரசாங்கம் சேர்த்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

Her amendment seeks to add the above words after the words ' the Government ' in sub-clause (2) (c) (iii).

திரு. ஜேம்ஸ் அவர்கள் கொடுத்த திருத்தங்களைப் பற்றிக் கூற விரும்புகிறேன். இதிலுள்ள நிபந்தனைகளின்படி பார்த்தால் தனியார் யாரும் பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்க முடியாது. அரசாங்கப் பள்ளிக் கூடத்தில், கார்ப்பரேஷன் பள்ளிக்கூடத்தில் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் என்ன வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன? அங்கு எக்விப்மென்ட் கிடையாது. லாபரிடரி கிடையாது. கல்லூரிகளில் பார்த்தாலே பாடனி லெக்சரர் இல்லை, ஃபிசிக்ஸ் லெக்சரர் இல்லை. தனியார் பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்கும்போதே ஆயிரம் கொடுக்க வேண்டும், லட்சம் கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனை இருக்கிறது. ஃபினான்ஷியல் ஸ்டெபிலிடி கேட்கிறீர்கள். உங்களுடைய பள்ளிக்கூடங்களில் இந்த வசதிகள் எல்லாம் இருக்கின்றனவா? நீங்கள் சொல்லுகிறபடி கட்டடம் கட்டி, டேபிள் சேர் எல்லாம் போட்டு மற்ற எல்லா சவுகரியங்களையும் முதலிலேயே செய்து பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்க வேண்டுமென்றால் யாரும் பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்க முன்வரமுடியாது. அது பள்ளிக்கூடத்தை ஆரம்பிப்பதற்கு ஒத்தாசையாக இல்லை.

திரு. மணலியார் அவர்கள் சொன்னது மாதிரி தேசிய மயமாக்குவதில் அர்த்தம் இருக்கலாம். ஆனால் அப்படிச் செய்வதற்கு வசதிகள் வேண்டாமா? எல்லோரும் படிக்க வேண்டுமென்ற ஆர்வம் கொண்டுள்ள நிலையில் ஐந்து வயது முதல் படிக்கின்ற குழந்தைகள் படிக்க பள்ளி வசதிகள் வேண்டாமா? ஆகவே, இந்த வரையறைகளைத் தளர்த்தினால்தான் அதிகமாகப் பள்ளிக்கூடங்களை ஆரம்பிக்க வாய்ப்பாக இருக்கும். ஆகவே, இந்தத் திருத்தங்களை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் திருத்தத்தில் இந்த விவரங்களை எல்லாம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்ற முறையில் கொடுத்திருக்கிறார்கள். இவை எல்லாம் இருக்க வேண்டுமென்று வற்புறுத்துகிற விதி அல்ல அது. என்னென்ன இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்காகப் போடப்பட்ட விதி. இப்போதே கூட எட்டாவது வகுப்புக்கு மேல் வைக்கக்கூடிய பள்ளிகளை அமைக்கும்போதும் விவரங்களைக் கேட்கிறோம். எத்தனை மைலில் மற்ற உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன, எவ்வளவு மாணவர்கள் வருவார்கள், தேவையான இடம் இருக்கிறதா, கட்டடங்கள் இருக்கின்றனவா, புதிதாகத் திறக்கப்பட்டால் கல்வித் தரம் திருப்திகரமாக இருக்குமா, ஆசிரியர் மாணவர் விகிதம் எவ்வளவு இருக்கும் என்று இவை எல்லாம் எஜுகேஷனல் ஸ்டாடிஸ்டிக்ஸ் என்ற முறையில் கேட்கப்படுகின்றன. வற்புறுத்துகின்ற ஒன்று அல்ல. அறிந்து கொள்வதற்கான ஒன்றுதான். விவரங்கள் இருந்தால்தான் பரிசீலிக்க முடியும். ஒரு மைலுக்குள்ளேயே இன்னொரு பள்ளி இருந்தால் அனுமதி கொடுக்க முடியாத நிலை ஏற்படலாம். ஆகவே, சிலபல விதிகளை வைத்திருக்கிறோம். அதற்கெல்லாம் விவரங்கள் கொடுத்தால்தான் முடியுமே தவிர, வற்புறுத்துகிற நிலையில் இல்லை. இதனால் எந்த வித பாதகமும் ஏற்படாது. எல்லா பள்ளிக்கூடங்களிலும் நூல் நிலையம் இருக்க வேண்டும். ஆய்வுக் கூடம் இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்க மாட்டோம். இருக்கிற நிலையினுடைய அடிப்படையில் தான் குறைந்த அளவு மற்ற பள்ளிகளைக் கெடுக்காமல் இருக்க வேண்டும், வேறு பள்ளிகளில் ஆசிரியர்கள் பதவிகள் இழக்காமல் இருக்க வேண்டும், ஆரம்பிக்கிற பள்ளிகளுக்குக் குறைந்த அளவு மாணவர்கள் வந்து சேரக் கூடிய சூழ்நிலை இருக்க வேண்டும், தற்காலிகக் கட்டிடத்தையோ, நிரந்தரமானக் கட்டிடத்தையோ வைத்திருக்கவேண்டும் என்ற முறையில்தான் இந்த விதி சேர்க்கப்பட்டிருக்கிறது. பள்ளியை ஆரம்பிக்கிற நேரத்திலே, தேவையாக இருக்கிற வசதிகளைத் தந்தால் போதும். ஆகவே, இதனால் எந்தவிதமான பாதகமும் ஏற்படாது. ஆகவே, இதை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.



(மாலை 5-00)

எக்சாமினேஷனைப் பொறுத்தவரையிலும் திருமதி ஆல்டா பவுலர் அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது ஆங்கிலோ இந்தியன் பள்ளிகளிலுள்ள மாணவர்கள் ஐ.எஸ்.ஸி. தேர்வு எழுத அனுமதி தரப்பட்டிருக்கிறது.

I can assure the hon. Member that such kind of permission will be given.
ஆனால், இதிலே கொண்டு வருவதன் மூலம் என்ன ஏற்படும் என்றால், தாங்களாகவே எல்லா பிள்ளைகளையும் ஐ.எஸ்.ஸி. தேர்வுக்கு அனுப்பலாம் என்ற சூழ்நிலை ஏற்படும். ஆகவே, ஸ்பெஷல் பர்மிஷன் வாங்கி ஐ.எஸ்.ஸி. தேர்வு எழுதலாம் என்ற காரணத்தாலே, இதிலே அதைக் கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லையென்று கருதப்படுகிறது. ஆகவே, இதை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்கவிரும்புகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Under what provision of law, the Education Department will give such permission if it is not found in the Act?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நடைமுறையிலே அந்த ஸ்பெஷல் பெர்மிஷன் கொடுக்கப்படுவதன் மூலமாக, ஆங்கிலோ இந்தியன் பள்ளிகளிலே பயில்பவர்கள், ஐ.எஸ்.சி. தேர்வு எழுதி வருகிறார்கள். அவர்களுடைய நிலை காப்பாற்றப் பட வேண்டுமென்பதுதான் திருமதி ஆல்டா பவுலர் அவர்களின் நோக்கம். இதிலே போட்டுவிட்டால், எல்லா பள்ளிகளில் உள்ளவர்களும் பிள்ளைகளை அத்தேர்வுகளுக்கு அனுப்பி விடுவார்கள். ஆகவே தான் ஸ்பெஷல் பர்மிஷன் மூலம் கொடுக்கிறோம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** எந்த அதிகாரத்தின் மூலம் கொடுக்கிறீர்கள்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** விதிகளின்படி.

MR. DEPUTY SPEAKER: That may be convention.

திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களுடைய திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

திருமதி ஆல்டா எம். பவுலர் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 5 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 6.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 6 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பட வேண்டும்."

THIRU J. JAMES: Sir, I move the following amendment:—

(i) In the first proviso to sub-clause (*b*) after the words "representations" add the following:—

"and the applicant has not fulfilled the conditions required under Clause 5 of sub-clauses 1 and 2".

The amendment was duly seconded.

தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் கிளாஸ் 5-க்கு கொடுத்த அமென்ட்மென்ட்டை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒருவேளை ஏற்றுக்கொள்ளவில்லையென்று சொன்னாலும் கூட, அந்தத் திருத்தத்தை ஒட்டின கருத்தை ஏற்றுக்கொண்டார்கள். புதிதாக பள்ளிக்கூடம் ஆரம்பிப்பதற்கு கொடுக்கப்படுகின்ற மனுவோடு அந்த விவரங்கள் கொடுக்கப்பட வேண்டுமென்று இருக்கிறதே, அனுமதி வழங்குவதற்கு அந்த நிபந்தனைகள், அந்த விவரங்கள் அடங்கிய நிபந்தனைகள் கட்டாயமாகத் தேவையில்லை என்பதனை இங்கே எடுத்துக் கூறினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறின கருத்தைத்தான் நான் இந்த திருத்தத்தில் கொடுத்திருக்கிறேன். பர்மிஷன் எந்த எந்த நிலையில் கொடுக்கப்பட வேண்டும், எந்த எந்த சந்தர்ப்பத்தில் அதை மறுக்கலாம் என்ற விவரங்கள் கிளாஸ் 6-ல் அடங்கியிருக்கிறது.

The competent authority—

(*a*) may, after considering the particulars contained in such application, grant or refuse to grant the permission; and



(*b*) shall communicate its decision to the applicant within a period of four months from the date of such receipt.

Provided that the permission shall not be refused under this section unless the applicant has been given an opportunity of making his representations;

I have added along with this condition that this should not be rejected on the ground that the applicant has not fulfilled the conditions submitted along with the application for permission. அதாவது, பர்மிஷனுக்காக கொடுக்கப்படுகிற மனுவில் விவரங்களைக் கேட்டிருக்கிறோம். அந்த விவரங்கள் நிச்சயமாக இருக்க வேண்டிய அவசியம் இல்லையென்று சொன்னதையொட்டி, அந்த நிபந்தனையைப் பூர்த்தி செய்யவில்லையென்று சொன்னாலும், பூர்த்தி செய்யாத காரணத்தினால் பர்மிஷன் மறுக்கக் கூடாது என்ற கருத்தைத்தான் நான் எனது திருத்தத்தில் கொடுத்திருக்கிறேன். ஆகவே, இந்த திருத்தத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: திரு. ஜேம்ஸ் அவர்களது கருத்தை ஆதரித்து அதைச் செய்யவேண்டுமென்று சொல்லும் போது, சுலபமாக இதைச் செய்யவேண்டுமென்றால், அதற்கு ஒரு வழியை, என்னுடைய யோசனையாகச் சொல்ல விரும்புகிறேன்.

Shall communicate its decision with reasons என்று காரணங்களைக் கொடுத்துவிட்டால் எந்த எந்த காரணத்திற்காக நிராகரித்துவிட்டார்கள் என்று எங்களுக்குப் புரிந்து கொள்ள முடியும். காரணம் கொடுக்காவிட்டால், அதைத்தெரிந்து கொள்ளவே முடியாது.

In one word it can be said that the permission is refused நோட்டீஸ், இயரிங் கொடுத்தாலும், எந்த காரணத்திற்காக நிராகரித்தார்கள் என்பது தெரியாது.

By what the Hon. Minister has said the will of the Legislature is known to us இதெல்லாம் இன்சிஸ்ட் பண்ண மாட்டோம், இருக்கின்றனவா என்று தெரிந்துகொள்ளப் போகிறோம் என்று சொன்னார். எதற்காக ரிஜக்ட் பண்ணினார்கள் என்று தெரியவேண்டும்.

They must communicate the reasons.

ஆகையினாலே இந்த கிளாஸ் 6-லே பி-ஐ

"shall communicate its decision with reasons".

என்று பண்ணிவிட்டால் ரொம்ப நல்லது.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் கொண்டுவந்திருக்கிற திருத்தம் பற்றி நான் முதலிலேயே குறிப்பிட்டேன். குறிப்பிட்ட எல்லா விவரங்களும் இருந்து தீரவேண்டிய அவசியம் இல்லை. அதற்கென்று விதிகள் போடப்பட இருக்கின்றன. விதிகளைப் போடும்போது, இவைகள் இருந்தாகவேண்டுமென்று போடும்போது, அவைகளைப் பரிசீலனை செய்கின்ற அதிகாரி, இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்று பார்ப்பார். இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிற விவரங்கள் அத்தனையும் இருந்து தீரவேண்டியதில்லை. விதிகளிலே சேர்த்துக்கொள்ளலாம். முக்கியமானவை எவை எவையோ, அவற்றை விதிகளிலே சேர்த்துக்கொள்ளலாம். நிபந்தனைகளை பூர்த்தி செய்வார்களானால், எல்லா விதிகளையும் பூர்த்திசெய்து மனுவைக் கொண்டு வந்து தருவார்களானால் அங்கீகாரம் அளிக்கப்படும் என்று விதிகளிலே சேர்த்துக்கொள்ளலாம். ஆகவே, இங்கே சேர்க்க வேண்டிய அவசியமில்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. ஜே. ஜேம்ஸ்:* மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனது திருத்தத்தை சட்டத்தில் ஏற்றுக்கொள்வதற்கு வழியில்லையென்றாலும், அதற்குரிய ரூல்சில் சேர்த்துக்கொள்ளலாம் என்ற வாக்குறுதி அளித்ததின் பேரில் நான் என்னுடைய திருத்தத்தை வற்புறுத்தவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 6 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 7 முதல் 10 வரை பேரவையின் முடிவுக்குவிடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.



### பிரிவு 11.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 11 இந்த சட்ட முன்வடிவுக்கு உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THIRU J. JAMES: Sir, in Clause 6, I have not moved the second part of my amendment. I want to move it now; then only it would be in order.

MR. DEPUTY SPEAKER: I have left it to the vote of the House. The House has voted the Clause. So the hon. Member cannot move the amendment to Clause 6 now.

### பிரிவு 11.

*மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்:* பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 11 இச் சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THIRU J. JAMES: Sir, I move that—

In sub-clause (1), (*b*), for the words "competent authority may", substitute the words "competent authority shall".

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I second the amendment.

THIRU J. JAMES: Mr. Deputy Speaker, Sir.

இப்பொழுது இருப்பது

On receipt of an application by—

(*a*) any private school in respect of which permission has been or is deemed to have been granted under Section 6;

(*b*) any minority school:

the competent authority may, after satisfying itself, that proper arrangements have been made for the maintenance of academic standard in the school, that the provisions of this Act are

complied with and that the prescribed conditions have been satisfied, grant a certificate, recognising the private school for the purposes of this Act.

என்று இருக்கிறது. என்னுடைய திருத்தம் என்னவென்று சொன்னால் 'காம்பிடன்ட் அதாரிடி'-க்கு இந்த அதிகாரத்தை வழங்கவேண்டுமா? என்பதுதான். எல்லா நிபந்தனைகளுக்கும் உட்பட்டு ஒரு பள்ளி ரிகக்னைஷன் வேண்டுமென்று மனுச் செய்திருந்தால் எல்லா கண்டிஷன்களும் சேடிஸ்பை செய்து விட்ட பிறகு அதற்கு அப்புறம் டிஸ்கிரிஷனரி பவர் அந்த காம்பிடன்ட் அதாரிட்டிக்குக் கொடுக்கவேண்டுமா என்பதுதான் பிரச்னை. எல்லா நிபந்தனைகளும் சேடிஸ்பை பண்ணியிருந்தால் காம்பிடன்ட் அதாரிடி விரும்பினால்தான் ரிகக்னைஷன் கொடுக்கலாம் என்பதை எடுத்துவிட்டு நிபந்தனைகள் எல்லாம் சேடிஸ்பை செய்யப்பட்டிருந்தால் காம்பிடண்ட் அதாரிடி நிச்சயமாக ரிகக்னிஷன் கொடுக்கவேண்டுமென்று இதிலே கொண்டுவரவேண்டுமென்று நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I second Hon. Sir.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் கொண்டு வந்திருப்பது, 'மே' போடுவதா அல்லது 'ஷெல்' போடுவதா என்பதைப்பற்றியாகும். 'மே'யா 'ஷெல்'லா என்ற பிரச்னை பல இடங்களிலே வருகிறது. 'மே' என்று போடுவது வழக்கமாக இருந்துவருகிறது. 'ஷெல்' என்று போட்டால்தான் நிச்சயமாகக் கொடுப்பார்கள் என்று சொன்னார்கள். கொடுக்காவில்லையென்றால் அவர்கள் மேல் முறையீடு செய்வதற்கு வழி எல்லாம் இருக்கிறது, அது 41-வது பிரிவிலே வருகிறது. ஆகவே இதிலே 'மே' என்று போடுவது தான் பொருத்தமாக இருக்கும். 'மே ஆல்சோ மீன்ஸ் ஷெல்' என்றும் வருகிறது. ஆகவே அந்த அடிப்படையிலே இதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 11 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.



பிரிவு 12.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 12 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பட வேண்டும்."

THIRU J. JAMES: Sir, I move that—

For sub-clause (i), substitute the following:—

"which does not serve the purpose for which the school was started or"

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I second the amendment.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** இதிலே ரிகக்னைஷன் கொடுத்தபிறகு காம்பிடண்ட் அதாரிடி எந்த எந்தச் சந்தர்ப்பங்களிலே அதை வித்ட்ரா செய்து கொள்ளலாம் என்பதற்கான ஒரு பிரிவு இந்தச் சட்டத்திலே சேர்க்கப்பட்டிருக்கிறது. என்னுடைய திருத்தம் என்னவென்று சொன்னால் இந்தச் சட்டத்தில் உள்ள எல்லா பிரிவுகளுக்கும் உட்பட்டு ஒரு பள்ளிக்கூடம் நடக்கவேண்டுமென்று சொன்னால் நிச்சயமாக எந்தப் பள்ளிக்கூடமும் நடத்த இயலாது. சாதாரணமாகத் தனியார் நடத்துகின்ற பள்ளிக்கூடத்திற்கு முன் மாதிரியாக இருப்பது அரசாங்கம் நடத்துகின்ற பள்ளிக்கூடம். அரசாங்கம் நடத்துகின்ற பள்ளிக்கூடத்திலேகூட பல்வேறு சட்ட திட்டங்கள் நிபந்தனைகள் சரிவர நிறைவேற்றப்படவில்லை. நிலைமை அம்மாதிரி இருக்கும்பொழுது தனியார் நடத்துகின்ற பள்ளிக்கூடங்களிலே நிச்சயமாக நாம் இங்கே நிறைவேற்ற இருக்கின்ற சட்டத்தின் அடிப்படையிலே எல்லாப் பிரிவுகளையும் அவர்கள் கைக்கொண்டு நடத்துவார்கள் என்று சொன்னாலும் கூட சில சமயங்களிலே சில பிரிவுகளை அவர்கள் மீறக்கூடும். அப்படி மீறினாலும் கூட பள்ளிக்கூடம் எந்த நோக்கத்தோடு ஆரம்பிக்கப் பட்டது, மாணவர்களுக்கு நல்ல முறையிலே படிப்பு சொல்லித் தரப்படுகிறதா? வேலை செய்கின்ற ஆசிரியர்களின் நிலைமைகள் நல்ல முறையிலே இருக்கிறதா? ஆசிரியர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே நல்லுறவு இருக்கிறதா என்பதைப் பார்த்து அப்படிப்பட்ட முக்கியமான நல்ல நோக்கங்கள் நல்லமுறையிலே

இருந்தால் மற்ற சட்டத்திட்டங்களிலே குறைபாடுகள் இருந்தாலும்கூட அந்தக் காரணத்தினலே மட்டும் ரிகக்னிஷனை வித்ட்ரா செய்வது என்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டத்திட்டங்களைவிட பள்ளிக்கூடம் சரியாகவும் சீராகவும் செம்மையாகவும் நடைபெறுகிறதா என்பதைப் பார்த்து தான் முடிவு எடுக்கவேண்டும். எந்தக் காரியத்திற்காக ஆரம்பிக்கப் பட்டதோ அந்தக் காரியம் தொடர்ந்து நடைபெறுகின்ற முறையிலே இல்லாமல் மாணவர்களுடைய பாடங்கள் நல்லமுறையிலே சொல்லித்தரப்படுகின்ற முறையிலே இல்லாமல் ஆசிரியர்களுக்கு இடையே தகராறுகள் இருக்குமானல் அப்படிப்பட்ட காரியங்களுக்காகத்தான் வித்ட்ரா செய்யலாம், மற்றபடி எந்தக் காரணத்திற்காகவும் வித்ட்ரா பண்ணக்கூடாது என்ற முறையிலே இருக்கின்ற என்னுடைய திருத்தத்தை நான் கொடுத்திருக்கிறேன்.

That is, the competent authority may withdraw the recognition of a private school "which does not serve the purpose for which the school was started or"

இந்த நிலையில் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் கொடுத்திருப்பது, நோக்கம் நிறைவேற்றப்படவில்லையென்றால்தான் ரத்துசெய்யப்பட வேண்டும், விதிமுறைகள் மீறப்பட்டால் அங்கீகாரத்தை ரத்துசெய்யலாம் என்று விதி இருக்கிறது இப்போது, அதை, நோக்கத்தை நிறைவேற்றாமல் இருந்தால்தான் ரத்து செய்யலாம் என்ற முறையிலே மாற்றவேண்டுமென்ற முறையிலே திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். பள்ளிக்கூடம் என்றால் அதனுடைய நோக்கத்தை ஆராய்ச்சி செய்துபார்க்கின்ற அந்த வேலையிலே அதிகாரிகள் ஈடுபடுவது என்றால் அது சர்ச்சைக்குரியதாக ஆகிவிடும் பிறகு எல்லா காணமுடியாத நிலைமைக்குக் கூடப் போய்விடும். பள்ளிக்கூடங்கள் ஒழுங்காக நடைபெற வேண்டுமென்றால் சட்டதிட்டங்கள் ஒழுங்காகப் பின்பற்றப் பட்டிருக்கின்றனவா என்றுதான் பார்க்கவேண்டும். அதை விட்டு



விட்டு நோக்கம் என்று வைத்துவிட்டால் நோக்கம் எப்படிப் பட்டது என்பதை எல்லாம் அதிகாரிகள் ஆராய்ந்து பார்ப்பது என்றால் சர்ச்சைக்குரியதாக ஆகிவிடும்.

ஆகவேதான், நோக்கத்தைப்பற்றி அதிகாரிகள் ஆராய்வதில் ஈடுபடுவார்கள் என்று நாம் எதிர்பார்க்கவும் இயலாது. இப்பொழுது இருப்பதே போதுமானது. இந்த நிலையிலே அதோடு நோக்கத்தையும் சேர்த்துவிட்டால் அதன் காரணமாகப் பல இடைஞ்சல்கள் வரும். அந்தப் பள்ளிக்கூடத்தை உருவாக்கியவர் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடு உருவாக்கியிருப்பார், அதையெல்லாம் ஆராய்வது மிகவும் கடினமான காரியம் கூட. ஆகவே விதிமுறைகள் சரியாக இருக்கின்றனவா, நலன்கள் பாது காக்கப்படுகின்றனவா என்பதைப் பார்த்துவிட்டு ரத்து செய்வது தான் சரியாக இருக்கும். அவர்கள் சொல்கிறமாதிரி கொண்டு வந்தால் மேலும் சர்ச்சைக்குரியதாக ஆகும் என்பதால் அவர்கள் இதை வற்புறுத்தவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**Thiru J. JAMES:** இப்பொழுது இருக்கிற பிரிவு

'which does not comply with any of the provisions of this Act or any rules made or directions issued thereunder in so far as such provisions, rules or directions are applicable to such private school'

என்று இருக்கிறது. இந்த நிலையில் இருக்கிறது என்று சொன்னல் அது most dangerous என்பதைத்தான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

'which does not comply with any of the provisions of this Act or any rules made or directions issued thereunder.........

எதிலாவது சற்றுத் தவறிவிட்டால் ரிகக்னிஷனை வித்ட்ரா செய்வதற்கு இதிலே வாய்ப்பு இருக்கிறது. இந்த அளவிற்கு ஸ்ட்ரிக்ட்டாக இந்த புரவிஷன் இருப்பது சரியல்ல என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அவ்வளவு சுலபத்தில் நாம் பள்ளிகளின் அங்கீகாரத்தை ரத்து செய்து வாங்கிவிடும் அளவில் இருக்காது. கூடு மானவரையில் ஒழுங்குபடுத்த வேண்டும். மேல்முறையீடுகள்

செய்யும் உரிமை அவர்களுக்கு வருகிறது, அவர்களின் நோக்கத்தை ஆராயச் சொன்னால் அதிகாரிகளுக்குச் சங்கடங்கள் வரும், அது சர்ச்சைக்குரியதாகிவிடும். திட்டவட்டமாக சட்டத்திலேயும், விதிமுறைகளிலேயும், அவ்வப்பொழுது வரும் டைரக்ஷன்களும் இருக்கின்றன. அந்த அளவில் அதிகாரிகள் போகலாமே தவிர, நோக்கத்தை ஆராயச் சொன்னால், உறுப்பினர்கள் கருதுகிற மாதிரி நோக்கம் நல்லது என்றால் சரி, சில நேரத்தில் நோக்கம் நிறைவேறவில்லை என்று வந்துவிட்டால் பாதகமாகிவிடும்.

திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 12 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 13 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### பிரிவு 14.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 14 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THIRU J. JAMES: Sir, I move—

For sub-clause 2 (i) *substitute* the following " which does not serve the purpose for which the school was started or "

The amendment was duly seconded.

THIRU MANALI KANDASAMY: Sir, I move—

In sub-clause (2) (ii), delete the word 'or' occuring in the last line and add the following proviso:—

" Provided the pay and allowances of such teachers or other persons employed in such private schools shall be disbursed by the competent authority ".

The amendment was duly seconded.



MR. DEPUTY SPEAKER: Amendment No. 37 given notice of by Thiru J. James is disallowed.

காரணம் திரு. மணலி கந்தசாமி அவர்கள் அதே பொருளில் கொடுத்திருக்கிறார்கள்.

THIRU MANALI C. KANDASWAMY: The amendment given notice of by me is plain and self-explanatory. The intention of the amendment is that the pay and allowances should reach the teacher or employee in a proper way. Nowadays we hear complaints from so many people that the whole amount or a portion of the amount is pinched by some people in the middle. Therefore, I insist that my amendment should be accepted by the Government.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், மாண்புமிகு உறுப்பினர் திரு. மணலி கந்தசாமி அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் திருத்தம் உண்மையிலேயே வரவேற்கத் தக்கதாகும். அதற்குக் காரணம், பல தனியார் பள்ளிகளில் ஆசிரியர்கள் நிம்மதியில்லாமல் இருக்கிறார்கள். காரணம், அவர்களுக்குச் சம்பளம் ஒழுங்காகப் போகாததுதான். முக்கால்வாசிப்பேர் என்ன சொல்கிறார்கள் என்றால், எங்களுக்கு வரவேண்டிய சம்பளம் முழுவதும் தராமல், கொஞ்சம் எடுத்துக்கொண்டு முழுவதற்கும் கையெழுத்து வாங்கிக் கொள்கிறார்கள் என்று வருத்தப்படுகிறார்கள். சில நல்ல தனியார்களும் இருக்கிறார்கள், பொல்லாத தனியார்களும் இருக்கிறார்கள். ஆனால் எல்லோருக்கும் கெட்ட பெயர் வருவதால் நேரிடையாகவே இந்தச் சம்பளத்தைக் கொடுத்தால் என்ன? எப்படியும் அரசாங்கம்தான் கிராண்ட் கொடுக்கிறது, அதை நேரிடையாகவே மணியார்டர் மூலமாக அனுப்பிவிடுவதற்கு நீங்கள் ஏன் வசதி செய்யக்கூடாது? அதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்பதை அரசாங்கம் தெரிவித்தால் நலமாக இருக்கும்.

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, இதற்கு அவசியமில்லை என்று நான் கருதுகிறேன். அவர்களுக்கு நேரிடையாக மணியார்டர் மூலமாக அனுப்புவதில் ஒருசமயம் செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள ஆசிரியர்கள் ஒருநாள் லீவ் எடுத்துவந்து பணத்தை வாங்கிக்கொண்டு போகவேண்டும். அதற்காக ஒரு நாள் லீவ் போடவேண்டும், போய்வரும் செலவு வேறு இருக்

[திரு. என். கே. பழனிசாமி] [1973 டிசம்பர் 4

கிறது. எனவே யாராவது ஒருவர் கொண்டுபோய்க் கொடுப்பதுதான் நல்லது. எனவே இதற்கு அவசியமில்லை என்று கருதுகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, இந்தத் திருத்தத்தின்படி கிராண்ட் மேனேஜ்மெண்ட்டிற்குக் கொடுப்பதற்கு வழியில்லாத நிலையில் பாதிக்கப்படுவது மேனேஜ்மெண்ட் அல்ல. எனவே, ஆசிரியர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக அவர்களுக்குரிய சம்பளத்தை நேரிடையாகவே அரசாங்கம் வழங்க வேண்டுமென்ற திருத்தத்தை நான் கூறுகிறேன்.

THIRU M. A. LATHEEF: The amendment of Thiru Kandasami expects, Sir, that there should be direct payment to the teachers by the Government. I oppose this amendment on the ground that it is legally not sustainable. It is only the management which receives the grant. It is the management which is empowered and there is legal relationship only between the Management and the Government. There cannot be jural relationship between employees and the management. If the Government takes the responsibility to take up the disbursement of salaries then a question would arise whether the teachers are the employees of the Government or the employees of the Management. Therefore, so far as the teachers are concerned, they are the employees of the Management. It is the duty of the Government to disburse the salaries to the teachers only through the Management because the grant is given only to the Management and not to the individual teachers. The responsibility is not vested with the Government but it is vested with the Management. Therefore, the Government can ensure prompt monthly disbursement of amount through some other administrative method rather than embedding this system in the Act.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணலி கந்தசாமி அவர்கள் கொண்டுவந்திருக்கும் திருத்தத்தினுடைய நோக்கம் வேறுவகையிலே நிறைவேற்றப்படுகிறது. ஒழுங்காக நடைபெறும் பள்ளிகளில் தகராறு ஏற்பட வழியில்லை. எங்கேயாவது



1973 டிசம்பர் 4] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

சரியாகக் கொடுக்கப்படவில்லை என்று அதன்மீது குற்றச்சாட்டுகளும் மற்றவைகளும் வரும் நிலைமையிருந்தால் அரசாங்க அதிகாரியே நேரிடையாகச் சம்பளம் வழங்குவதற்கு இப்பொழுது விதியில் இடம் இருக்கிறது. இந்தச் சட்டத்தில் 27-வது பிரிவில் நாம் அந்த நிலையைத் தெளிவுபடுத்தியிருக்கிறோம். 27-வது பிரிவின்படி எந்தெந்த பள்ளிகளில் சரியாக இல்லை என்று தெரிந்தால் அதற்கு அந்த விதி இருப்பதால் எல்லாப் பள்ளிகளுக்கும் அந்த நிலையைக் கொண்டுவர வேண்டிய அவசியமில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் கூறியதைப்போல் சங்கடங்கள் ஏற்படக்கூடும். ஆகவே, சரியாக நடக்காவிட்டால் 27-வது பிரிவு இடம் தருவதால் இந்தத்திருத்தம் அவசியமில்லை என்று குறிப்பிடுகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சரியாக நடக்காத பள்ளிகள் என்று அமைச்சரின் கவனத்திற்கு வரவேண்டுமே. பலயிடங்களில் பயந்துபயந்து கையெழுத்தைப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே 27-வது பிரிவில் போட்டிருப்பதை எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் அனுப்புங்களேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அதையெல்லாம் சீர்படுத்த குழுக்கள், பிரதிநிதிகள் முதலியன இடம் பெற வைத்திருக்கிறோம்.

திரு. மணலி கந்தசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 14 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### Clause 15.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That clause 15 do stand part of the Bill."

THIRU M. A. LATHEEF : Sir, I move the following amendment given notice of by me:

(i) for sub-clause (1) substitute the following:

"Every Private School shall have a duly constituted school committee which shall include such persons as are deemed necessary and essential by the concerned educational agency to effect clean and effective academic administration."

The amendment was duly seconded.

THIRU MANALI C. KANDASWAMY : Sir, I move—

"In sub-clause (1) of clause 15, insert the words 'as may be prescribed' between the words 'School Committee' and 'which'."

The amendment was duly seconded.

THIRUMATHI ALDA M. FOWLER : Sir, I move—

"Add the following proviso at the end :—

Provided that in the case of an unaided minority school such members of the school committee, as are required to be elected, shall, instead of being elected be nominated by the educational agency by which such unaided minority school is run."

The amendment was duly seconded.

THIRU N. K. PALANISAMY : Sir, I move—

"(i) In sub-clause (1) after the words 'which shall include', add the following, namely,—

'the Headmaster of the Private School, two representatives of the Management, two representatives of the Teachers employed in the Private School, one representative from the Parents' Association of the Private School, who should not be relative of the Management, and one representative of the Department'."

The amendment was duly seconded.

THIRU M. A. LATHEEF : Sir, in the original Clause, it has been provided that it will include the headmaster of the private school and elected representatives of the teachers employed in



the private school. I once again reiterate what I have already submitted that it will bring great factions and frictions and will affect the normal administration in the educational institutions.

The question of fixing the responsibility will be jeopardised because there are two distinct separate groups in the educational institutions, namely, employer–management and employee—teaching community which will be amalgamated into a single entity. I feel that they should be separate entities, distinct and different entities. One should be for the Management and the other for the teaching community which should work under the management.

(மாலை 5-30)

So when the employer and the employee are related, there are certain specific duties and rights of the employers and there are certain specific duties and rights of the employees. This is a happy system that has been in existence, and has been well upheld by the various provisions of different Municipal laws in this country and it has also been incorporated in the Constitution. By bringing in the representatives of the teachers in the Managing Committee, you will not be able to fix responsibility at a particular point because the question comes, who should bear the responsibility of the management and who should bear the responsibility arising out of such management. If you induct the teachers also in the management, then the duties of management are also impaired, as I submitted this morning. Thus there will be great confusion.

Moreover, if you bring in the electoral system among the teachers, then naturally all the logical consequences will arise out of such electoral system and there will be definite factions and frictions among the teaching community. Also it will not be conducive for the normal functioning of the school and that will basically jeopardise the very educational system and peace in the educational institution.

Therefore, I submit that in so far as there are constitutional bars for the amalgamation of these two distinct groups, I hope that the Hon. Minister will accept at least this amendment.

[திரு. எம். ஏ. லத்திப்] [1973 டிசம்பர் 4

இதையாவது அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கோருகிறேன். ஏற்கனவே சட்டம் இல்லாவிட்டாலும் நடைமுறையில் எப்படி நடந்து வருகிறது? இந்த நிர்வாகக் குழுக்களிலே தேவைப்படும் போது மட்டுமல்ல, நிரந்தரமாக பள்ளியின் தலைமையாசிரியர் இடம் பெற்றுவருகிறார். ஆகையால் ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று நினைத்தால் ஆசிரியர்களை எடுத்துக் கொள்ளக்கூடிய உரிமையை, நிர்வாகக் குழுவுக்கு விட்டு விட்டு அரசாங்கம் வேறு வகையில் முறைகளை வகுக்கலாம். சட்டத்திலே இடம் கொடுத்து தேர்தலை நடத்தி போட்டியினை ஏற்படுத்தினால் பள்ளிகளில் ஆசிரியர் சமுதாயத்திற்கிடையே பூசல்கள் உண்டாகி பிரிவுகள் ஏற்படும். ஆகவே, இதனை மாற்ற வேண்டுமென்று கல்வியமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். நான் கொடுத்திருக்கும் திருத்தம் எல்லா வகையிலும், எல்லா சார்புடையவர்களாலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகும்.

நிர்வாகக் குழு யாரைச் சேர்த்துக் கொண்டு கல்வி நிர்வாகத்தைச் செம்மையாக நடத்த முடியுமென்று கருதுவார்களோ அவர்களை எடுத்துக்கொண்டு நிர்வாகத்தை நடத்தலாம் என்ற திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். இதை ஏற்றுக் கொள்வதால் நிச்சயமாக இடர்பாடுகள், குழப்பங்கள் எல்லாம் நீக்கப்படும். அதோடு அரசியல் சட்ட விதிகளுக்கும் மாறுபாடு இல்லாமல் சட்ட சிக்கலுக்கும் உட்படாமல் குழப்பங்களைத் தவிர்க்கும் வகையில் குறைந்த பட்சம் இந்தத் திருத்தத்தையாவது ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு கல்வி சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. மணலி கந்தசாமி:** ஒரு கமிட்டி கான்ஸ்டிடியூட் பண்ணும் போது ஹெட்மாஸ்டரைப் போடுவதால் காம்ப்ளிகேஷன் வராது என்ற முறையில் என்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி:** இந்த பில்லுக்கே இதுதான் முக்கியம். ஆசிரியர்களை நியமிப்பதிலும் சரி, பண சம்பந்தமான விஷயங்கள், பாக்கி நிர்வாகத்தை எடுத்துக் கொண்டாலும் சரி



1973 டிசம்பர் 4] [திரு. என். கே. பழனிசாமி]

கோட் ஆப் காண்டக்டை ஏற்படுத்துவதிலும் சரி பண விஷயத்தை மானேஜ்மெண்டுக்குக் கொடுத்தாகிவிட்ட பிறகு பிரசிடென்டாக இருக்கக் கூடியவர்களை மட்டும் மானேஜ்மென்டில் விட்டு, நிர்வாகிக்கக்கூடிய பொறுப்பில் ஹெட்மாஸ்டர் அல்லது மற்றவர்கள் இருக்க வேண்டும். ஆசிரியர்கள் குழுவில் மானேஜ்மென்ட் சைடில் இருந்து இரண்டு பேருக்கு மேல் இருக்கக் கூடாது. கமிட்டி சரியான முறையில் இயங்கினால்தான் ஆசிரியர்களுக்கு நியாயம் கிடைக்கும். பால் கமிட்டி பல பள்ளிகளுக்கு சென்று ஆராய்ந்து ரிப்போர்ட்டில் சொல்லியிருக்கிறார்கள். ஸ்டாண்டிங் கமிட்டி பெருவாரியான பள்ளிக்கூடங்களில் இல்லை, சில பள்ளிக்கூடங்களில்தான் இருக்கின்றன; ஒன்றிரண்டு ஹெட்மாஸ்டர்கள்தான் கமிட்டியை நடத்தி வருகிறார்கள்; சரியானபடி ஃபங்ஷன் செய்யவில்லை என்று சொன்னார்கள். திரு. லத்தீப் அவர்கள் இது அவசியமில்லை என்று சொன்னார்கள்.

ஏற்கனவே கமிட்டி எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் சரியான முறையில் வேலை செய்து ஆசிரியர்களுக்கும் நிர்வாகத்திற்கும் தகராறு இல்லாமல் நடந்திருந்தால் இந்த மசோதாவே கொண்டு வரவேண்டிய அவசியம் இல்லை. தகராறு, லஞ்சம், ஆசிரியர்களை அடிமையாக நடத்துவது போன்ற முறைகள் இருந்த காரணத்தால்தான் பால் கமிட்டி முடிவின்படி இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது.

கோட் ஆப் காண்டக்டில் பனிஷ்மென்ட் கொடுக்க கமிட்டிக்கு அதிகாரம் இல்லையென்று சொல்லப்பட்டது. அப்படி இருக்கும் போது புதிதாகச் சேர்க்க வேண்டிய அவசியம் என்ன? மாநிலம் பூராவும் ஒரே மாதிரி இருக்க வேண்டும். மதுரையிலே இருப்பவனுக்கு ஒரு பனிஷ்மென்ட், இன்னொரு இடத்திலே இருப்பவனுக்கு ஒரு பனிஷ்மென்ட் என்று இருக்க முடியாது. ரூல்ஸ் கமிட்டி மெம்பராக யார் யாரைப் போடுவது என்பது சட்டத்திலே இருக்க வேண்டும். கோட் ஆப் கான்டக்ட் கெஜட்டில் பப்ளிஷ் ஆக வேண்டும். அப்போதுதான் பாதுகாப்பாக இருக்க முடியும். கான்ஸ்டிடியூஷன் ஆப் தி கமிட்டி சரியானபடி நியமிக்கப்படாவிட்டால் இந்த மசோதாவினால் பிரயோசனம் இல்லை.

*திருமதி த. ந. அனந்தநாயகி :* கிளாஸ் 15 மிக முக்கியமானது. ஸ்கூல் கமிட்டி என்று போட்டு அதிலே ஹெட்மாஸ்டருக்கு நிரந்தரமான இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுபோக, எத்தனை அங்கத்தினர்களை அந்தக் கமிட்டியில் வைத்துக் கொள்வது, தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களுக்கு எவ்வளவு காலம் என்று வரையறை செய்வது, ஐந்து வருஷத்திற்கு ஒரு தேர்தலா, 3 வருஷத்திற்கு ஒரு தேர்தலா அல்லது வருஷத்திற்கு ஒரு தேர்தலா போன்ற பல விவரங்களை இந்தச் சட்டம் கொடுக்கவில்லை.

It is stated 'as may be prescribed'. Prescribed by whom? Is it by the competent authority or the school committee? அதுவும் கிளியராக இல்லை. ஏற்கனவே இருக்கின்ற தேர்தல்களே போதும் போதும் என்ற நிலைமையில் வம்புச் சண்டைக்கு வழிவகுக்கும் வகையில் பள்ளிக்கூடத்திற்கும் தேர்தலைக் கொண்டு போய் வைத்திருக்கிறீர்கள். இந்தத் தேர்தல்களினால் பள்ளிக்கூட வாத்தியார்களுக்கு அது சண்டை சச்சரவுக் களமாக ஆகிவிடும். வாத்தியார்களுக்கு வாத்தியார்கள் கசப்புணர்ச்சி ஏற்பட்டு அவர்கள் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கமாட்டார்கள்.

Senior-most teacher can be there. ஹெட்மாஸ்டர் இரண்டு மூன்று வாத்தியார்களை சீனியாரிடி பிரகாரம் போடலாம் என்ற முறையை வகுத்தால் நலமாக இருக்கும்.

ஏற்கனவே அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள், உபாத்தியாயருக்கு உபாத்தியாயர் அடித்துக்கொண்டு இருக்கும் நிலை ஏற்படுமே தவிர, இவர் பெயரை எப்படிக் கெடுப்பது, அவர் பெயரை எப்படிக் கெடுப்பது என்றுதான் இருக்குமே தவிர, தயவுசெய்து இந்தக் கஷ்டத்தை மானேஜ்மென்ட்க்குக் கொடுக்காதீர்கள். சீனியாரிட்டிப்படி கொடுங்கள். பத்து ஆசிரியர்கள் இருந்தால் அங்கு தேர்தல் வைப்பது என்றால் குத்தும் வெட்டும் நடக்குமே தவிர ஒழுங்காகப் பள்ளி நடக்காது. ஆகவே தயவு செய்து இதை மறுபரிசீலனை செய்து சட்டப்படி சீனியர் டீச்சரை வைக்கமுடியுமா என்று யோசித்துப் பாருங்கள் என்று பிள்ளைகளின் நன்மைக்காக இதை எடுத்துச் சொல்கிறேன்.



THIRUMATHI ALDA M. FOWLER: Mr. Deputy Speaker, Sir, I also feel that when you have elected representatives on the school committee, that will be reducing the school to a political warfare where there will be rivalries and so many factions will arise. This is not what we run the School for. I feel strongly, Sir, that we should have nominated representatives on the School Committee. Also, Sir, the right to administer will be taken away from the school. That is what I submit.

*திரு. ஜே. ஜேம்ஸ் :* தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இம்மாதிரி ஒரு குழு போதுமா என்பது பற்றித்தான் இந்த மன்றத்தில் நான் கூறவிரும்புகிறேன். இந்தக் கமிட்டியில் எவ்வளவு அங்கத்தினர்கள் இடம் பெற இருக்கிறார்கள், அதில் எவ்வளவு ஆசிரியர்கள் இருப்பார்கள், ஆசிரியர்கள் அல்லாதவர்கள் எவ்வளவு பேர்கள் இருப்பார்கள், நிர்வாகிகளின் பிரதிநிதிகள் எவ்வளவு பேர்கள் இருப்பார்கள் என்ற விளக்கங்கள் இதில் தரப்படவில்லை. ஒரு தலைமை ஆசிரியரும் அல்லது ஒரு ஆசிரியர் மட்டும் எட்டு அல்லது பத்து உறுப்பினர்கள் உள்ள ஒரு கமிட்டியில் இடம் பெற்று விட்டால் ஆசிரியர்களின் பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஒரு வழி வகுக்கிற முறையாக அது நிச்சயமாக இருக்காது.

ஆகவே இந்தக் கமிட்டி அமைப்பது என்பது நிச்சயமாக ஆசிரியர்களை ஏமாற்றுகிற ஒரு கண்துடைப்பு வேலை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆசிரியர்கள் பிரச்சினைகள் தீரவேண்டும், ஆசிரியர்களுக்குள்ள உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று சொன்னால் அதற்கேற்ற முறையில் கமிட்டி அமைப்பதற்குள்ள சட்டத்தைக் கொண்டு வந்திருக்க வேண்டும். கமிட்டிக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கிற முறையை வகுத்திருக்கிறோம். தேர்தல் என்றாலே எந்த அளவிற்கு அது அமையும் என்பது அரசியலில் இருக்கிற நமக்கு யாரும் சொல்லித் தர வேண்டிய அவசியமில்லை. ஆகவே சுமுகமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிற ஆசிரியர்களிடையே தேர்தல் முறையைக் கொண்டு வந்தால் ஆசிரியர்களிடையே ஒரு பிளவு ஏற்படும். அதோடு கூட ஆசிரியர்களை ஆதரிக்கிற மாணவர்கள் என்ற முறையில் இரு பிரிவுகளாக அல்லது பல பிரிவுகளாகப் பிரிந்து

நிச்சயமாக பள்ளிக்கூடம் நல்லமுறையில் செயல்பட இது இக்கட்டான நிலையை ஏற்படுத்தும். ஆகவே எனக்கு முன்பு பேசிய உறுப்பினர்கள் கூறியதுபோல் குழுவிற்கு தோதல் முறையில் இல்லாத முறையில் ஏற்படுத்துவதற்கு வழிவகை செய்தால் அது வரவேற்கக்கூடியதாக இருக்கும்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்** : தலைவர் அவர்களே, இந்த ஆசிரியர்களிடையே தேர்தல் வைக்கும் முறைபற்றி கனம் உறுப்பினர்கள் கூறிய கருத்தை நான் முழுமையாக ஆதரிக்கிறேன். தேர்தல் என்று சொன்னால் அதில் ஒரு பகைமை உணர்ச்சி வளருவதைக் காண்கிறோம். ஆகவே ஆசிரியர்களிடையே யாரை குழுவிற்கு நியமிப்பது என்பதில் தேர்தல் வைப்பதென்றால் இரண்டு பிளவுகளாகப் பிளந்து விடுவார்கள் ஆசிரியர்கள். ஆகவே மாச்சரியங்கள் வளர்ந்துவிடும். தேர்தல் முடிந்த பின் அது நீங்கிவிடாது, நிரந்தரமாக நின்றுவிடும். 'ஏ' க்ரூப், 'பி' க்ரூப் என்று ஏற்பட்டுவிடும். சிறியதொரு பள்ளியில் ஐந்தாறு ஆசிரியர்களிடையே 'ஏ' க்ரூப், 'பி' க்ரூப் என்று பிளவுபட்டுப் போனால் அதனால் பள்ளியின் தரம் கெட்டுவிடும். அதன் காரணமாக மாணவர்களின் நல்வாழ்வும் பாதிக்கப்படும். ஆகவே தேர்தல் முறைக்குப் பதிலாக மானேஜ்மென்ட் கமிட்டி வயதில் முதிர்ந்த ஒருவரை அல்லது கல்வி அடிப்படையில் சீனியராக இருப்பவரை நியமிக்கலாம்.

இன்று மாணவர்கள் சமுதாயத்தைப் பார்க்கிறோம். கல்லூரி சங்கங்களுக்கு யார் தலைவராக இருக்கவேண்டும், யார் துணைத் தலைவராக இருக்கவேண்டும், யார் செயலாளராக இருக்கவேண்டும் என்று தேர்ந்தெடுக்கும் முறையில் தேர்தல்கள் நடக்கின்றன. முன் காலங்களில் சற்று அமைதியாக நடந்தன. இப்போது வால்போஸ்டர்கள், பிட் நோட்டீஸ், என்று அரசியல் ரீதியில் கல்லூரித் தேர்தல்கள் நடக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாணவர் தலைவர் வெற்றிபெற்றார், அல்லது காங்கிரஸ் (ஓ)-வைச் சேர்ந்த தலைவர் வெற்றிபெற்றார் என்று பத்திரிகைகளில் வரக்கூடிய அளவிற்கு அரசியல் தொடர்பு ஏற்படுத்தப்படுகிறது. அப்படி ஆசிரியர்கள் இடையிலேயும் அரசியல் நுழைந்துவிடும் தேர்தல் என்று வந்தால். தேர்தல் என்றால்,



காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் போட்டியிடுகிறார், அவரை எதிர்த்து தி.மு.க.-வைச் சேர்ந்தவர் போட்டியிடுகிறார் என்றால் பணம் கொடுத்து விலைக்கு வாங்கும் அம்சம் கூட வந்துவிடும். ஏழெட்டு ஆசிரியர்கள் இருந்தால் விலை கொடுத்து வாங்கும் கட்டம் வந்தால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆகவே ஒழுங்காக, அமைதியாக ஆசிரியர்கள் சமுதாயம் இருக்கவேண்டும் என்று சொன்னால் இந்தத் தேர்தல் முறை ஒத்துவராது. மானேஜ்மென்ட் கமிட்டி ஆசிரியர்களில் ஒருவரை நியமனம் செய்யும் உரிமையைத் தரவேண்டும். திரு. லத்தீப் அவர்களின் திருத்தத்தை நான் ஆதரித்து அமர்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன்** : தலைவர் அவர்களே, இதில் தேர்தல் நடப்பதன் மூலம் கெடுதல் ஏற்படும் என்று பலர் குறிப்பிட்டார்கள். ஜனநாயகக் கோட்பாடுகளை ஒப்புக்கொண்ட பின்னால் பஞ்சாயத்துக்களுக்கும், முனிசிப்பாலிட்டிகளுக்கும், இப்படி எல்லாயிடங்களிலும் தேர்தல் வேண்டுமென்று கருதுகிற நாம் ஏன் இதிலே மட்டும் பயப்படவேண்டும்? அப்படிப் பயப்படுவதற்கு ஆதாரமே இல்லை. நம் ஜனநாயகம் மேலும் செழுமை பெற தேர்தல்கள் அவசியமாகும். தேர்தல் நடப்பதன் மூலம் ஆசிரியர்களிடையே மாச்சரியங்கள் ஏற்படலாம் என்ற கருத்துப்பட பேசினார்கள் ஆசிரியர்கள் முறையாகத்தான் நடந்துகொள்வார்கள் என்ற நம்பிக்கை வைக்கவேண்டும். மானேஜ்மென்ட் சரியாக நடக்கவில்லை என்ற காரணத்தின் அடிப்படையில்தான் இந்த மசோதாவே வந்திருக்கிறது என்பதை நினைவில் கொண்டு தேர்வு செய்து எடுப்பதுதான் இன்றையக் காலத்திற்குச் சிறந்தது, நாளையக் காலத்திற்கும் சிறந்தது என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே. எ. வகாப்** : தலைவர் அவர்களே, எல்லோரும் கட்சி அடிப்படையில் பேசி வருகிறோம். ஆசிரியர் பிரதிநிதியை குழுவிற்கு தேர்ந்தெடுக்கும் முறை வேண்டுமா அல்லது நியமன முறை வேண்டுமா? என்ற அடிப்படையில் பேசப்படும்போது முஸ்லிம் லீக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களாகிய எங்களது ஒருமனதான கருத்து ஆசிரியர்களை தேர்ந்தெடுக்கிற முறை சரியல்ல. அதனால் பல கேடுகள் வரும். அதனால் ஆசிரியர்கள்

சமுதாயத்தில் பிளவுகள் ஏற்படும் என்று வற்புறுத்திக் கூறி வருகிறோம். காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மதிப்பிற்குரிய அம்மையார் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள், அவர்களது கட்சியைச் சேர்ந்த இன்னொரு உறுப்பினர் வேறு ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** யார் சொன்னாலும் அந்தக் கட்சியினுடைய இப்போதைய துணைத் தலைவர் அவர்களின் கருத்துத்தான் ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தாக இருக்கும். ஏனென்றால் துணைத் தலைவரின் கருத்துதான் ஏற்றுக் கொள்ளத்தக்க கருத்தாக இருக்குமே தவிர உறுப்பினர் கருத்தை அந்தக் கட்சி ஏற்றுக்கொள்ளாது.

**திரு. கே. எ. வகாப்:** அந்தக் கட்சியில் உள்ளவர்கள் மாறுபட்ட கருத்துக்களைச் சொல்கிறார்கள். நாங்கள் ஏகமனதாகச் சொல்கிறோம். உரிமை என்பது எங்கெங்கு இருக்க வேண்டுமோ அங்குதான் இருக்கவேண்டும். அரசியல் களத்தில் இறங்கிப் பேசுகிறார்கள் என்றால் கட்சிகளின் கொள்கைகளை விளக்குகிறோம். ஆனால் ஆசிரியர்கள் தேர்தலில் எந்தக் கருத்தைச் சொல்லி போட்டி போட்டுக்கொள்வார்கள்? எதைச் சொல்லி ஆசிரியர்கள் தேர்தலில் ஈடுபடமுடியும்? தங்களுக்கு என்று குழு ஏற்படுத்திக்கொண்டு, அதற்காக சில மாணவர்களையும் சேர்த்துக்கொண்டு அசம்பாவிதங்கள் எல்லாம் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதையெல்லாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். இன்றைய தினம் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் குழப்பமான நிலைமைகளைப் பார்க்கிறோம். எனவே, ஆசிரியர்களிடையே தேர்தலை ஏற்படுத்தினால் நிச்சயமாக பள்ளி நிர்வாகம் மட்டுமல்ல, கல்வி அமைதிக்கே பாதகம் ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆசிரியர்களிடையே போட்டி மனப்பான்மையை ஏற்படுத்தக் கூடாது. போட்டி மனப்பான்மை இல்லாமல் வேறு விதத்தில், யார் திறமையாக கற்றுக்கொடுக்கிறார்களோ, அனுபவம் உள்ளவர்களாக இருக்கிறார்களோ, யாரால் அந்தப் பள்ளிக்கு நன்மை ஏற்படுமென்று கருதப்படுகிறதோ, அவர்களை குழுவில் நியமிக்கின்ற தன்மை இருந்தால் நல்லதாக இருக்குமென்று வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



இந்தக் கருத்தை கல்வி அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையிலே இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் கொடுத்திருக்கிற திர்மானத்தில், எந்தெந்த பள்ளி நிர்வாகங்கள் என்ற கொள்கையை ஏற்படுத்திக்கொள்ளவில்லை, என்று சொல்லியிருக்கிறார்கள். தலைமை ஆசிரியர் இடம் பெறுவது என்ற கொள்கை பொதுப் படையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அறக்கட்டளை ஏற்படுத்தி நிர்வகித்து வருகிற பிரைவேட் மேனேஜ்மென்ட் இடம் பெறுகிறார்கள். தலைமை ஆசிரியரையும் மற்ற உறுப்பினர்களையும் நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் நியமித்துக்கொள்ள வேண்டுமென்று கூறப்பட்டது. யார், யார், எவ்வளவு எண்ணிக்கை என்று வருகின்றபோது ஒரு எண்ணிக்கை என்ற அளவில் சொல்லி விட முடியாது. பெரிய பள்ளிகள், சிறிய பள்ளிகள் என்று இருக்கின்றன. மாணவர்களுடைய எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல் போட்டுக் கொள்ளலாம். திரு. லத்தீப் கொண்டுவந்திருக்கிற திருத்தம் ஏற்றுக்கொள்வதாக இருக்காது என்று கருதுகிறேன்.

திரு. பழனிசாமி அவர்கள், இரண்டு ஆசிரியர்கள் பிரதிநிதிகள் இருக்கவேண்டுமென்று வரையறுத்துச் சொல்வது பொருத்தமாக இருக்காது என்று கருதுகிறேன். சிறிய பள்ளிகள்—3 அல்லது 4 ஆசிரியர்களைக் கொண்டவைகளும், பெரிய பள்ளிகள்—35, 40 ஆசிரியர்களைக் கொண்டவைகளும் இருக்கின்றன. எனவே, அந்தக் கணக்கின்படி விதி முறைகளில் சேர்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம். தலைமை ஆசிரியர் என்கிறபோது அதில் பிரச்னை ஒன்றுமில்லை. ஆனால், ஆசிரியர்களில் ஒருவரை போடுவது என்கிற போது தான் பிரச்னை ஏற்படுகிறது. சீனியர் மோஸ்ட் என்று போடுவதா? அல்லது ஆசிரியர்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட ஒருவரைப் போடுவதா, செலக்ஷனில் போடுவதா? என்ற மூன்று தன்மையிலே, ஆய்வுக் குழு நீண்டநேரம் விவாதித்தது. அந்த வகையில் சீனியர் மோஸ்ட் ஆசிரியர் ஒருவரைப் போடுவது என்று வந்தால், மாண்புமிகு திருமதி அனந்தநாயகி அவர்கள் குறிப்பிட்டதுபோல தேர்தல் என்று வரும்போது

(2) The number of representatives of the teachers on such constituted School Committee shall be such as may be prescribed and different number of representatives may be prescribed for different classes of private schools. "

அரசினர் திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 15, திருத்தப்பட்டபடி, பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிரிவு 15 திருத்தப் பட்டு விட்டபடியால் மற்ற திருத்தங்கள் எல்லாம் தானாகவே தள்ளுபடி செய்யப்பட்டு, விடப்படுகின்றன.

(மாலை 6-00)

THIRU J. JAMES: Sir, I move—

After clause 15, insert the following as new clause **15-A**:

" 15-A *Corporate Committee.*—(1) Minority communities who manage more than one private school may have one Corporate Managing Committee for the entire group of private schools under their management instead of one school committee **for each school."**

(2) The Corporate Managing Committee will function as a School Committee for each Private School under their management. "

The amendment was duly seconded.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தின் அவசியத்தைப் பற்றி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவின் மீது உரையாற்றும் பொழுது தேவையில்லை என்று எடுத்துக் கூறினார்கள். மிஷன் மானேஜ்மெண்டில் இருக்கிற பள்ளிகளைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு நிர்வாகம் இல்லை. மிஷன் மேனேஜ்மெண்டின் கீழ் பல்வேறு பள்ளிகள் இருக்கின்றன. பல உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. பல ஆரம்பப் பள்ளிகள் இருக்கின்றன. ஆகவே, ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு பள்ளிக்குழு அமைப்பது என்று





சொன்னால், அது சிரமமாக இருக்கும். ஏற்கனவே இந்தப் பள்ளிகள் ஒரே கார்ப்பரேட் மானேஜ்மெண்டின் கீழ் கார்ப்பரேட் மானேஜ்மெண்டு கமிட்டியால் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. கார்ப்பரேட் மானேஜ்மெண்ட் கமிட்டி அந்த மானேஜ்மெண்டின் கீழ் இருக்கிற அனைத்துப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களும் இன்னும் பல பிரதிநிதிகளும் அடங்கிய கமிட்டியாக அது செயல் பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த மானேஜ்மெண்ட் கமிட்டி யானது கம்பெனிஸ் ஆக்டின் கீழ் ரெஜிஸ்டர் செய்து, சட்டத் திற்குட்பட்டு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஏற்கனவே இம் மாதிரியான ஒரு கமிட்டி செயல்பட்டுக்கொண்டிருக்கும் பொழுது, மேலும் வர இருக்கிற சட்டத்தின் அடிப்படையிலே ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு கமிட்டி ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னால் நிச்சயமாக அது தேவை இல்லாதது, சூபர்ஃப்ளுவஸ் என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்பொழுது செயல்பட்டுக்கொண்டிருக்கிற மானேஜ்மெண்ட் கமிட்டியானது இப்பொழுது அமைக்க இருக்கிற பள்ளிக் குழுவின் பொறுப்புகள் அத்தனையையும் செய்துகொண்டே இருக்கிறது.

Clause 18 deals with functions of the school committee and in sub-clause (*a*) it is said—to carry on the general administration of the private school excluding the properties and funds of the private school; and in sub-clause (*b*), to appoint teachers and other employees, etc.

கார்ப்பொரேட் மானேஜ்மெண்ட் கமிட்டியானது அதற்குக் கீழ் ஒரு அப்பாயின்ட்மெண்ட் கமிட்டி, சப்-கமிட்டி அமைத்து, அந்தக் கமிட்டி தான் எல்லா பள்ளிகளுக்கும் நியமனங்களைச் செய்கிறது. அதோடு அடுத்தபடியாக,

**In sub-clause (*c*), it is said to take disciplinary action against** teachers and other employees of the private school,

என்று இருக்கிறது. ஆக, அந்தக் கடமையையும் மானேஜ் மெண்டு கமிட்டி சரிவர செய்துகொண்டிருக்கிறது. இம்மாதிரி யாகச் சட்டத்திற்குட்பட்டு ஒரு கார்ப்பரேட் மானேஜ்மெண்ட் கமிட்டி செயல்பட்டுக்கொண்டிருக்கும்பொழுது, அந்த மானேஜ் மெண்டின் கீழ் செயல்படுகிற அனைத்துப் பள்ளிகளையும் கிளாஸ் 15-லிருந்து விடுவிக்கலாம் என்று எண்ணுகிறேன். விடுவிக்க

வேண்டும் என்று சொன்னால், அந்தப் பள்ளி நிர்வாகத்திற்காக இம்மாதிரி ஒரு கமிட்டி தேவையில்லை என்று சொல்லவில்லை. ஏற்கனவே ஒரு கமிட்டி நல்ல முறையில் சட்ட ரீதியாக அமைக்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிற காரணத்தினால், இம்மாதிரியாக இரண்டாவது கமிட்டி ஒன்று தேவையில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன். இம்மாதிரியாக ஒரு கமிட்டி அமைக்கப்பட்டால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. கார்ப்பரேட் மானேஜ்மெண்ட் நிர்வாகம், அனைத்துப் பள்ளிகளின் நிர்வாகமும் ஒரே மானேஜ்மெண்டின்கீழ் இருக்கிறது. ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு தனிக் கமிட்டி அமைக்கவேண்டுமென்று சொன்னால் ஒவ்வொன்றுக்கும் தனிப்பட்ட மானேஜ்மெண்ட் வேண்டும். கார்ப்பரேட் மானேஜ்மெண்டின்கீழ் ஒவ்வொரு பள்ளிக்கும் தனிப்பட்ட நிர்வாகம் கிடையாது. அனைத்துப் பள்ளிகளுக்கும் ஒரே நிர்வாகம் தான். உதாரணமாக மிஷன் பள்ளிகளுக்கு the Church of South India is the Manager of all the schools சர்ச் ஆஃப் சவுத் இந்தியாவின் பிரதிநிதி தான் மானேஜராகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு மானேஜர் போய், மற்ற பிரதிநிதிகளை வைத்து ஒரு கமிட்டி அமைப்பது என்று சொன்னால், அந்தக் கமிட்டியில் இல்லாமல் இருப்பவர் எவரும் இல்லை. ஏற்கனவே இருக்கிற கார்ப்பரேட் மானேஜ்மெண்ட் கமிட்டியைப் பல்வேறு கமிட்டிகளாகப் பிரித்து அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படும்.

அதோடு இன்னொன்றும் கூற விரும்புகிறேன். இப்பொழுது இருக்கிற அமைப்பின்படி கார்ப்பரேட் மானேஜ்மெண்டின் கீழ் இருக்கிற அனைத்து உயர்நிலைப் பள்ளிகள், அனைத்து ஆரம்பப் பள்ளிகள் ஆகியவைகளில் ஒரு பள்ளியில் பணிபுரிகிற ஆசிரியரை மற்ற பள்ளிக்கு மாற்றுவதற்கு அவர்களுடைய சீனியாரிடி பிக்ஸ் பண்ணுவதற்கு ஏற்பாடுகள் இருக்கின்றன. ஆனால் இதற்கு மாறாக ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு கமிட்டி அமைக்கப்படும் பொழுது நிச்சயம் இம்மாதிரியான ஏற்பாடுகளைச் செய்வதற்கு இடையூறுகள் வரும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அம்மாதிரி இடையூறுகள் ஏற்படுவது என்று சொன்னால் நிர்வாகத்திற்கு பெரிய இடையூறாக இருக்கும், அது பெரிய சிக்கலை உருவாக்கும். அதுமட்டுமின்றி அது அடிஷனல் எக்ஸ்பென்சை



நிர்வாகத்திற்கு வருத்தும் என்பதனையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே அமைச்சர் அவர்கள் கூட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

மிஷன் ஸ்கூல்கள் அனைத்தும், ஏறத்தாழ எல்லா பள்ளிகளும் சுய பொறுப்போடு நல்ல முறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன, நல்ல முறையில் பொதுமக்களுக்குப் பயன் தரக்கூடிய வகையில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன என்று சொன்னார். இங்கே கூறியது போல் வியாபார நோக்கத்தோடு அல்லாமல் மாணவர்களுக்கு நல்ல முறையில் கல்வி போதிக்கப்பட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு செயல்பட்டுவரும் நிர்வாகத்திற்குக் கூடுதல் செலவை வருத்திவைப்பது சரியல்ல என்பதையும் கூறிக்கொள்கிறேன். ஆகவே, இதன் காரணமாகக் கார்ப்பரேட் மானேஜ்மெண்டின்கீழ் இயங்கும் அனைத்துப் பள்ளிகளுக்கும் ஒரே கமிட்டி அமைப்பதற்குள்ள இந்தத் திருத்தத்தை அவை ஏற்றுக் கொள்ளவேண்டும், இந்த அரசும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்களின் திருத்தத்தில் கூறியிருக்கிற பிரச்னை பல பள்ளிகளை பொதுவாக ஒரே கார்ப்பரேட் பாடி, ஒரே குழு நிர்வகித்து வருகிறது, அப்படியிருக்கும் பொழுது ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு நிர்வாகக் குழு ஏற்படுத்துவது சரியாக இருக்குமா என்பது தான். இதைப்பற்றி பல தடவைகள் ஆராய்ந்து பார்த்ததில் ஒரே ஒரு சங்கடம் தான் வருகிறது. எல்லாப் பள்ளிகளும் நன்றாக நடந்துகொண்டிருந்தாலும், ஏதேனும் ஒரு பள்ளி நன்றாக நடக்கவில்லையென்றால், அப்பொழுது தான் தகராறு ஏற்படுகிறது. ஏதேனும் ஒரு பள்ளியில் ஏற்பட்ட தகராறு குறித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றால், எல்லா பள்ளிகளும் பாதிக்கப்படும். ஒரு பள்ளியில் ஏதாவது தகராறு ஏற்பட்டால் அந்தக் குழுவின்மீது நடவடிக்கை ஏற்படுகின்ற சூழ்நிலை ஏற்படும்பொழுது எல்லாப் பள்ளிகளையும் சேர்த்து பாதிக்கப்படக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவேதான் ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு குழு தனியாக அமைக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது.

அதிலே இருக்கிற தலைமை ஆசிரியர், சீனியர்மோஸ்ட் ஆசிரியர்கள் எந்த அளவுக்கு இடம் பெறுகிறார்களோ அந்த அளவுக்கு இடம் பெற்று, மற்றவர்கள் எல்லா பள்ளிகளுக்கும் சேர்த்து ஒரே குழுவுக்கு இருக்கிற வகையில் இருப்பதற்குத் தடை ஏதும் இருக்காது என்று நான் கருதுகிறேன். ஒரே கமிட்டி பல பள்ளிகளுக்கும் வைக்க இயலாது. சீனியர்மோஸ்டு டீச்சர் ஒருவர் இன்னொரு பள்ளியில் இருப்பார். அங்கே இருக்கிற தலைமை ஆசிரியர், சீனியர்மோஸ்டு டீச்சர், அத்தனைப் பேர்களும் வந்து சேர்ந்து பெரிய கமிட்டி ஒரே கமிட்டியாக அமைந்துவிடும். மற்ற மானேஜ்மெண்டு சார்பாக உள்ள பிரதிநிதிகள் வேண்டுமானால் பல பள்ளிகளுக்கும் ஒரே சார்புடையவர்களாக இடம் பெறலாம். ஒவ்வொரு பள்ளிக்கும் தனிக் குழு ஏற்படுத்தப்படாவிட்டால் பல சங்கடங்கள், பிரச்னைகள் ஏற்பட வழிவகைகள் அமையக்கூடும். ஆனால், நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் கம்பெனி ஆக்ட் பிரிவுப்படி கார்ப்பரேட் பாடியாக இயங்கி, அதற்கு மேலாக உள்ள நிர்வாகப் பொறுப்புக்கள், சொத்து, நிதி ஆகியவைகள் சம்பந்தமான பொறுப்புகள் இவைகளை அந்தக் குழு நிர்வகிப்பதில் தடை ஏதும் இருக்காது என்று கருதுகிறேன். ஒவ்வொரு பள்ளிக்கும் தனியாக ஒரு குழு அமைந்தால்தான் நிர்வாகம் சட்ட திட்டத்திற்குட்பட்டு நடப்பதற்கு வழிவகைகள் ஏற்படும். ஒரு பள்ளியின் பாதிப்பு எல்லா பள்ளிகளுக்கும் பொதுவாக இருக்கக்கூடிய அந்தக் குழுவையே பாதிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடக் கூடாது. ஆகவேதான் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள இயலவில்லை என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

சர்ச் ஆஃப் சவுத் இண்டியா என்று கூறியிருக்கிறார்கள். அது எஜுகேஷனல் ஏஜென்சியாக இருக்கலாம். ஆனால் ஸ்கூல் கமிட்டி தனித்தனியாக இருக்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: நான் என்னுடைய திருத்தத்தை வற்புறுத்துகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.



பிரிவு 16.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 16 மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

**திரு. மணலி சி. கந்தசாமி**: நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன் மொழிகிறேன்—

(i) Substitute the following for sub-clause (1):

Every School Committee shall have the headmaster of every private school as its secretary who shall exercise such powers and perform such functions as may be prescribed."

(ii) In sub-clause (2), delete the words "or exercising the powers of Secretary under this Act on the date of commencement of this Act."

(iii) In the last line of sub-clause (2), substitute the word President' for the word 'Secretary'.

The amendment was duly seconded.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பட்டதாகக் கருதப்பட்டது.

பிரிவு 16 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 17 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

*Clause* 18.

Mr. DEPUTY SPEAKER: The question is—

'That clause 18 do stand part of the Bill.'

Thiru M. A. LATHEEF: Sir, I move—

'That in clause 18, delete sub-clause (1) (b), (1) (c), (c), (2) and (3).'

The amendment was duly seconded.

THIRU N. K. PALANISAMY : Sir, I move—

MR. DEPUTY SPEAKER : No. No. Your two amendments were disallowed since they are covered by amendment No. 5 moved by Thiru M. A. Latheef.

THIRUMATHI ALDA M. FOWLER : Sir, I move—

Add the following proviso at the end :—

"Provided that in the case of an unaided minority school the school committee shall be subject to the control and supervision of the educational agency."

The amendment was duly seconded.

திரு. எம். ஏ. லத்திப் : தலைவர் அவர்களே, இந்த விதி 18-ல் ஸ்கூல் ஏஜென்சி என்ற ஒரு அமைப்பையும், ஸ்கூல் கமிட்டி என்ற ஒரு அமைப்பையும் தான் காண்கிறோம். 'எஜுகேஷனல் ஏஜென்சி' என்பதற்கு விளக்கம் விதி 2 சப் கிளாஸ் (2)-ல் விளக்கமாகத் தரப்பட்டிருக்கிறது.

(3) "educational agency" in relation to—

(a) any minority school, means any person who, or body of persons which, has established and is administering or proposes to establish and administer such minority school; and

(b) any other private school, means any person or body of persons permitted or deemed to be permitted under this Act to establish and maintain such other private school;

என்று இங்கே கொடுத்திருக்கிறார்கள். எஜுகேஷன் ஏஜன்சி என்றால் யார் அந்தப் பள்ளிக்கூடங்களை அமைத்து நிர்வகிக்கிறார்களோ அவர்கள்தான் எஜுகேஷனல் ஏஜன்சி என்ற விளக்கத்தை நாம் இந்தப் பிரிவில் காண்கிறோம். ஆனால் 18-வது விதியிலே ஸ்கூல் கமிட்டிக்கு உரிய கடமைகள் என்ன, ஸ்கூல் கமிட்டி எப்படியெல்லாம் நடைமுறையில் இருக்க வேண்டுமென்பதைக் குறித்திருக்கிறார்கள். முதல் பகுதி—

(a) to carry on the general administration of the private school excluding the properties and funds of the private school;



இதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இரண்டாவதாக—

(b) to appoint teachers and other employees of the private school, fix their pay and allowances and define their duties and the conditions of their service;

அப்பாயின்ட்மென்ட் செய்வது, ஆசிரியர்களுக்கு உரிய சம்பளம் எவ்வளவு என்று நிர்ணயிப்பது, ஆசிரியர்களை எப்படி நியமிக்க வேண்டும், எப்படி அவர்களோடு தொடர்பு கொள்ள வேண்டும் என்ற முடிவுகளை எல்லாம் செய்யக் கூடியவர்கள் யார் என்றால் பள்ளிக்கூடத்தை யார் ஸ்தாபித்து நிர்வகிக்கிறார்களோ, யார் அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு பள்ளிக் கூடத்திற்கு அங்கிகாரம் வேண்டுமென்று அவர்களின் வாயிலாகப் பெற்றிருக்கிறார்களோ, யார் அரசாங்கத்திடமிருந்து மானியத்தைப் பெறக் கூடிய தகுதியையும் உரிமையையும் பெற்றிருக்கிறார்களோ, யார் அந்த மானியத்தைப் பெற்று ஆசிரியர்களுக்குச் சம்பளமாகக் கொடுக்க வேண்டிய கட்டாயத்திலே, கடமையிலே இருக்கிறார்களோ அவர்கள் தான் செய்ய வேண்டுமே தவிர, ஸ்கூல் கமிட்டி என்ற முறையில் ஆசிரியர்கள் பங்கு கொண்டிருக்கும் ஸ்கூல் கமிட்டியே ஆசிரியர்களை நியமிப்பது என்று சொன்னால் நியமிக்கும் அதிகாரம் எஜுகேஷனல் ஏஜென்சி என்று சட்ட பூர்வமாக அடிப்படையில் எடுக்கப்பட்டு விடுகிறது. இது சட்டத்திற்குப் புறம்பானது. இதனால் சிக்கல்கள் ஏற்படும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இதிலே ஆசிரியர்களிடையே கூட பிணக்குகள் பிளவுகள் ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எந்த ஆசிரியர்கள் இந்த அமைப்புக் குழுவில் இடம் பெறுகிறார்களோ அவர்கள், அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இடம் பெற்றிருக்கும் கமிட்டியால் நியமிக்கப்படும்போது தங்களால் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்படுவதும், அந்த ஆசிரியர்களால் நியமிக்கப்பட்டவர்கள் நாம் என்ற தாழ்வான எண்ணம் இவர்களுக்கு ஏற்படவுமான சூழ்நிலை இருக்கிறது. இது ஒருபுறம் இருந்தாலும்

மனிதாபிமானத்தைப் பொறுத்த சமுதாய ரீதியில் ஆசிரியர்கள் சமுதாயத்தில் சிக்கல்களை ஏற்படுத்துவதோடு சட்டப்படி செல்லாது என்பதால் நான் இதனை வலியுறுத்துகிறேன்.

அதே நேரத்தில்—

(c) to take descipilinary action against teachers and other employees of the private school.

எம்ப்ளாயீஸ் என்று சொல்லக்கூடிய பள்ளிக்கூடத்தில் வேலை செய்யக்கூடியவர்களே எம்ப்ளாயீஸ் மீது நடவடிக்கை எடுப்பதாக இருந்தால் எம்ப்ளாயிசை அங்கத்தினர்களாகக் கொண்ட அமைப்பின் வாயிலாக எப்படி எடுக்க முடியும்? இதிலே எம்ப்ளாயிஸ்-எம்ப்ளாயர் சிக்கல் எழுகிறது. இதுவும் அதுவும் இல்லாத, அதுவும் இதுவும் இல்லாத தன்மை படைத்த ஒரு கமிட்டியில் எப்படி எம்ப்ளாயிஸ் மீது ஆக்ஷன் எடுக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

It is the exclusive privilege of the employer to take action under the rules, under the Municipal law, under the educational law. The management alone should take action against the employees. That is my submission. The School Committee cannot have that function.
என்ற வகையில் இது சட்டத்திற்குப் புறம்பாக இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக—

"The educational agency shall be bound by anything done by the School Committee in the discharge of the functions of that committee under this Act."

இதைவிட தர்ம நியாயத்திற்கு, சட்ட நியாயத்திற்குப் புறம்பான ஒரு விதி இருக்க முடியுமா என்று என்றால் கண்டுபிடிக்க முடியவில்லை. வழக்கறிஞர் என்ற முறையில் கூறுகிறேன். இந்த முறையில் யாரோ ஒருவர் வீற்றிருக்கிற கமிட்டி செய்கிற காரியத்திற்கு அந்தக் கமிட்டியில் எந்த விதமான தொடர்பும் இல்லாத எஜுகேஷன் ஏஜன்சி பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். எதைச் செய்தாலும் சட்டப் புறம்பாகச் செய்தாலும் இந்தக் கமிட்டி நினைத்தால் எஜுகேஷனல் ஏஜன்சியைக் கூடச் சிக்க



வைக்கலாம். கஷ்டத்தில் மாட்டி வைக்கலாம். ஸ்கூலை நடத்த விடாமல் செய்யலாம். கமிட்டியில் இருக்கக்கூடியவர்கள் சட்டப் புறம்பாகச் செய்து அதன் வாயிலாக அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாக இருந்தால் யார் மீது நடவடிக்கை எடுக்கிறார்கள்? அடுத்து சொல்கிறார்கள்—

"For the purpose of this Act, any decision or action taken by the School Committee in respect of any matter over which the school committee has jurisdiction shall be deemed to be the decision or action taken by the educational agency."

ஸ்கூல் கமிட்டி என்ன செய்கிறார்களோ, ஸ்கூல் கமிட்டி எடுக்கிற தீர்மானங்கள் எல்லாம் எஜுகேஷனல் ஏஜன்சி எடுத்த தீர்மானங்களாக இந்தச் சட்டத்தின் அடிப்படையில் கருதப்படும் விதியை அமைத்து ஸ்கூல் கமிட்டி செய்கிற காரியங்கள், எதுவாக இருந்தாலும் ஜவாப்தாரிகளாக, பொறுப்பாளர்களாக எஜுகேஷனல் ஏஜன்சி ஆகும் என்பது சட்டப்படியும் செல்லாது, தர்ம நியாயப்படியும் ஏற்றுக் கொள்ள முடியாது என்ற வகையில் இந்தச் சட்டத்திலே நாம் பல சிக்கல்களைக் காண்கிறோம்.

ஆகையினாலே இந்த விதிகளை எல்லாம் மாற்றிவிட்டு 18-வது விதியில் 'ஏ' பிரிவில்—

'General administration of the private school excluding the properties and funds of the Private school'.
என்பதை மட்டும் வைத்துக் கொண்டு எந்த வகையில் செயல்பட வேண்டுமென்பதைக் குறிப்பிடும்போது எம். இ. ஆர். ரூல்களின்படி அரசாணைகள் வாயிலாக ஸ்கூல் கமிட்டிகளின் நடைமுறைகளை முறைப்படுத்த வேண்டும். இப்போது இருக்கின்ற முறை சட்டப்படியும் செல்லாது, தர்ம நியாயப்படியும் செல்லாது. இந்த மாதிரி இருந்தால் எந்த ஸ்கூலும் இருக்க முடியாது என்ற வகையில் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும், கல்வி அமைச்சர் அவர்களும் என்னுடைய திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று எல்லோருடைய நன்மையையும் கருதி வலியுறுத்தி அமர்கிறேன்.

[1973 டிசம்பர் 4

**திரு. என். கே. பழனிசாமி:** இந்த செக்ஷனை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். பால் கமிட்டி சிபாரிசிலும் ஆசிரியர்கள் மீது டிசிப்ளினரி ஆக்ஷன் எடுப்பது கமிட்டி என்று சொல்லப்படவில்லை. அதுமட்டுமல்ல ஆசிரியர்கள் நியமனத்திலும் ஊழல் இருந்திருக்கிறது. மறுபடியும் அந்தப் பொறுப்பையும் கமிட்டியிடம் கொடுத்தாகிவிட்டது. இது ஏற்கனவே செய்து வரக்கூடிய ஊழலுக்கு சட்டப் பாதுகாப்புக் கொடுக்கக் கூடிய முறையில்தான் இருக்கும். டிசிப்ளினரி ஆக்ஷன் எடுக்கும் பொறுப்பைக் கமிட்டியிடம் கொடுத்தால் அஜெண்டா கொண்டு வரவில்லை என்று சொன்னால் கமிட்டி மேல் என்ன நடவடிக்கை எடுக்க முடியும்? கமிட்டி என்ன முடிவு பண்ணுகிறதோ அந்த முடிவு எஜுகேஷனல் ஏஜென்சியைக் கட்டுப்படுத்துகிறது. எஜுகேஷனல் ஏஜன்சி ஒன்றும் செய்ய முடியாது. கமிட்டி தீர்மானத்திற்கு எதிராக ஒன்றும் செய்ய முடியாது. டிசிப்ளினரி ஆக்ஷன் என்ற பெயரில் ஆசிரியர்கள் யூனியனில் சேரக்கூடாது என்றெல்லாம் வரும். அப்படி ஒரு யூனியனில் சேர்ந்தாலும் அதற்குக் கூட நடவடிக்கை எடுக்கக் கூடிய முறையிலே, இமிடியட் நடவடிக்கை எடுக்கக்கூடிய முறையிலே இருக்கிறது. ஆகவே, ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்குப் பதிலாக, ஏற்கெனவே தனிப்பட்ட பள்ளிகளிலே எடுத்து வருகிற நடவடிக்கைகளுக்குச் சட்டபூர்வமான பாதுகாப்பு கொடுப்பதாகத்தான் இது இருக்கும். ஆகவே, இதை எதிர்க்கின்றேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I want to draw the attention of the Government to one aspect of the matter. Clause 18 (b) says—

'to appoint teachers and other employees of the private school, fix their pay and allowance......... '

This is given to the School Committee. But according to Clause 19, all these things are given to the Government. There seems to be repetition. Who should pay or fix it, whether it is the Government or the School Committee? This doubt may be cleared.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் இந்த விதிக்கு சில திருத்தங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிடும்



1973 டிசம்பர் 4] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

போது, பள்ளிக் குழுவுக்கு இப்படிப்பட்ட அதிகாரங்கள் இருக்கக் கூடாது என்ற அளவுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பள்ளி குழுவை எஜுகேஷனல் ஏஜென்சிதான் நியமிக்கிறது. அதிலே தலைமை ஆசிரியர் ஒருவரும் சீனியர்மோஸ்ட் ஆசிரியர் ஒருவரும் இருக்கவேண்டுமென்று சொல்லி இருக்கிறோம். மற்றவர்களையும், பொறுப்பு வாய்ந்த செயலாளரையும், எஜுகேஷனல் ஏஜன்சிதான் நியமிக்கிறது. ஆகவே, எஜுக்கேஷனல் ஏஜன்சியினுடைய பணிகளை ஆற்றுகின்ற ஒரு பிரிவாகத்தான் பள்ளிக்குழு இருக்கிறது. நிதியைப் பொறுத்தோ அல்லது சொத்துக்களைப் பொறுத்தோ, எந்தவிதத்திலும் குழு தலையிடு செய்யமுடியாது. பள்ளியை நிர்வகிக்க, பள்ளியைப் பொறுத்திருக்கிற நடவடிக்கையை மட்டும்தான் இது ஆராயும். ஆகவே பள்ளிக்குழு, எஜுகேஷனல் ஏஜன்சிக்கு அப்பாற்பட்ட ஒன்று என்று கொள்ள வேண்டியதில்லை. பள்ளிக் குழு நிறைவேற்றுகின்ற தீர்மானத்தை எஜுகேஷனல் ஏஜன்சி ஏற்றுக் கொண்டாலும் கொள்ளலாம், ஏற்றுக்கொள்ளாமல் போனாலும் போகலாம் என்று போட்டால் பள்ளிக் குழுவுக்கு வேலை இல்லாமல் போய்விடும். டிஸ்கிரஷனரி பவர்ஸ் இதற்குக் கொடுக்க விடுவோமானால் குழுவினுடைய பணிகள் பயன்படாமல் போய்விடும். ஆகவேதான் அவர்களுடைய அதிகாரத்தினை குழு நியமிக்கின்ற அளவுக்கு நிறுத்தப்பட்டிருக்கிறது. சொத்தைப் பொறுத்தோ, நிதியைப் பொறுத்தோ, அல்லாமல் பள்ளியினுடைய நலன் கருதி குழு செய்கின்ற எல்லா காரியங்களும் அவர்களுக்கு அடங்கியதாகத்தான் இருக்கும். ஆகவே, குழு நிறைவேற்றுகின்ற தீர்மானங்களை நடைமுறைப்படுத்துகின்ற பொறுப்பும் எஜுகேஷனல் ஏஜன்சிக்கு அமைந்திருக்கிறது.

அது மட்டுமல்லாமல், இந்தக் குழுவைப் பொறுத்த வரையிலும் ஆசிரியர்களை நியமிக்கக்கூடிய குழு இந்தக் குழு என்று போட்டிருக்கிற காரணத்தினால்—சாதாரணமாக எந்த அதிகாரி நியமிக்கிறாரோ, அந்த அதிகாரி தான் அவர்மேல் நடவடிக்கை எடுக்கிற அதிகாரியாக இருக்க முடியும்—ஆகவேதான் அவர்களால் நியமிக்கப்படுகின்ற ஆசிரியர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கிற பொறுப்பும் இந்தக் குழுவுக்குத்தான் வந்து சேருகிறது. ஆகவே, இந்தத் துணைப் பிரிவுகள் எல்லாம் இதிலே இருக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் குறிப்பிடுகின்ற பொழுது, தனியார் பள்ளி நியமனங்களை எல்லாம் நியமனக் குழு ஒன்று அமைத்து அதனிடம் விட்டுவிடுவது நல்லது என்றார். ஏற்கெனவே, ஒரு தனி மனிதர் நியமனங்களை செய்து கொண்டிருந்தார். அதிலிருந்து மாறுபட்டு, பள்ளிக்குழு நியமனங்களைச் செய்யும் என்ற அளவுக்குக் கொண்டு வந்திருக்கிறோம். இதிலே நியமனங்களை நியமனக் குழுவுக்குக் கொடுப்பது பொருந்தி வருவதாக இருக்காது. மேலும், அப்படி கொண்டு வந்தாலும் சிறுபான்மைப் பள்ளிகளைப் பொறுத்தவரையிலும் அதற்கு சட்டம் இடம் தராது. எனவே, திருத்தங்களை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU M. A. LATHEEF : Sir, . . . . .

MR. DEPUTY SPEAKER : This is not a good practice. The Hon. Member is spending so much time for every amendment.

THIRU M. A. LATHEEF : Sir, if you completely delineate or demarcate the activities of the school committee and the educational agency, the decision that will be taken by the school committee would not be accepted by the educational agency and in that case there need not be any school committee.

ஸ்கூல் கமிட்டி செய்கின்ற தீர்மானங்களை எல்லாம் எஜுகேஷனல் ஏஜன்சி மறுத்துவிடக் கூடிய நிலைமை இருக்குமானால் ஸ்கூல் கமிட்டி தேவையே இருக்காது என்ற அளவிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி அவர்கள் சொன்னாலும், அதிலே கடைசியிலே இருக்கக்கூடிய, மூன்றாவது பிரிவை

In sub-clause (3), it is stated—

'For the purposes of this Act, any decision or action taken by the school committee in respect of any matter over which the school committee has jurisdiction shall be deemed to be the decision . . .'

என்று இருப்பதையாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீக்க வேண்டும். இது மிகவும் கொடுமையாக இருக்கிறது. அவர்கள் செய்வதற்கெல்லாம் இவர்கள் பொறுப்பு ஏற்கவேண்டும், எப்படி நியாயம்? ஸ்கூல் ஏஜன்சி தாம் செய்பவைகளுக்குப் பொறுப்பு



ஏற்கவேண்டும்மென்பதிலே நியாயம் இருக்கலாம். ஆனால், கமிட்டி என்ன நடவடிக்கை எடுத்தாலும், அவர்கள் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கும் தீர்மானங்களுக்கும் ஸ்கூல் ஏஜன்சி பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்வது தர்ம நியாயத்திற்குப் பொருந்தாது, சட்டப்படி செல்லாது. ஆகவே, கடைசி பகுதியையாவது விட்டு விட்டு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்த எஜுகேஷனல் ஏஜன்சிக்கும் ஸ்கூல் கமிட்டிக்கும் ஏதோ பெரிய வித்தியாசம் இருப்பதாகவே நாம் கற்பனை செய்து பேசுகிறோம். ஸ்கூல் கமிட்டி என்ற ஒன்று போட வேண்டும். அதை எஜுகேஷனல் ஏஜன்சிதான் போட வேண்டும். நாம் சொல்லியிருப்பதெல்லாம், அதிலே தலைமையாசிரியர் இருக்கவேண்டும், ஆசிரியர் இருக்க வேண்டும் என்பது. மற்றவர்களை எல்லாம் அவர்களே போட்டு குழுவை நடத்த வேண்டும். எஜுகேஷனல் ஏஜன்சிக்கும் அதனால் ஏற்படுத்தப்பட்ட ஸ்கூல் கமிட்டிக்கும் எந்தவிதமான முரண்பாடும் இல்லை. முரண்பாட்டுக்குத் தேவையேயில்லை என்பதுதான் நாம் எடுத்துக்கொள்ளுகின்ற பொருளாகும். எஜுகேஷனல் ஏஜன்சிக்கு அப்பாற்பட்டு ஸ்கூல் கமிட்டி வருமானால், செயல்படுமானால் அப்பொழுதுதான் முரண்பாடு ஏற்படும். நாம் சட்டத்திலே போட்டிருப்பதெல்லாம். ஸ்கூல் கமிட்டியிலே தலைமையாசிரியர் இருக்க வேண்டும். சீனியர் ஆசிரியர் இருக்க வேண்டும். மற்றவர்களும் எஜுகேஷனல் ஏஜன்சியால்தான் போடப்படுவார்கள் என்பது.

இந்த சட்டப்படி, எஜுகேஷனல் ஏஜன்சி என்பது ஒரு நபர், அல்லது குழு. அவர்கள் ஒரு கமிட்டி மூலமாக, நிர்வாகத்தை நடத்துவார்கள். ஆக, கமிட்டியை அவர்களே போட்டுவிட்ட பிறகு, அவர்களுக்கு எதிராக அந்தக் கமிட்டி இருக்கும் என்பது சரியல்ல என்றுதான் நான் கருதுகிறேன். இதை நாம் நீண்ட நேரம் விவாதித்தோம் குழுவிலே. ஸ்கூல் கமிட்டியே வேண்டாமென்றார்கள், அது வேறு பிரச்னை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதில் ஸ்ட்ராங் வியூஸ் வைத்திருக்கிறார்கள். அதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், ஸ்கூல் கமிட்டி, எஜுகேஷனல்

ஏஜன்ஸியால் நியமிக்கப்படுகிறது. ஆகவே, ஸ்கூல் கமிட்டி போட்டி போடுகின்ற இடம், அல்லது சண்டை போடுகின்ற இடம் என்று நினைப்பது சரியல்ல.

திருமதி ஆல்டா எம். பௌலர் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

திரு. எம். ஏ. லத்தீப் அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 18 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

THIRU N. K. PALANISAMY: Sir, I move the following amendment :—

'After clause 18, *insert* the New Clause 18-A :

"18-A. A committee consisting of the Chief Inspector of Schools, two representatives of the teachers and two representatives of the management should be constituted in each district, to appoint teachers and other employees of the Private Schools, to fix their pay and allowances, to define their duties and conditions of their services".'

The amendment was duly seconded.

**திரு. என். கே. பழனிசாமி:** இப்பொழுது ஆசிரியர் நியமனத்தைப்பற்றி சொல்லும்போது, மைனாரிட்டி பள்ளிக்கூடமாக இருந்தாலும், மெஜாரிட்டி பள்ளிக்கூடமாக இருந்தாலும், கல்வியை அபிவிருத்தி பண்ண வேண்டுமென்பதுதான் அடிப்படை. அவர்கள் மதம், ரிலிஜியன் அல்லது ஜாதி என்ற அடிப்படையிலே கல்வி வேண்டுமென்று சொன்னால், அதற்கு வேண்டுமானால் அவர்கள் எந்த எந்த ஜாதியோ அந்த அடிப்படையிலே பிரச்சாரத்திற்கு ஆட்களை வைத்துக் கொள்ளலாம். பாக்கி, ஆசிரியர்களை நியமிக்க வேண்டிய பொறுப்பு ஏற்கனவே நான் சொன்னதுமாதிரி, 2 ஆசிரியர் பிரதிநிதிகளையும், சீப் இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸையும், மானேஜ்மெண்ட் பிரதிநிதியாக 2 பேரையும் என்று ஒவ்வொரு ஜில்லாவிற்கும் அடிப்படையாக வைத்து ஆசிரியர்களைப் பொறுக்கக்கூடிய முறையிலே இருக்க வேண்டும். எந்த



பள்ளிகளுக்கு எவ்வளவு வாத்தியார் வேண்டுமென்ற தேவையை அனுசரித்து தேர்வு நடத்தி, அந்த அந்தப் பள்ளிக்கு அவர்களை அளிப்பதுதான் நல்லது. மைனாரிட்டி பள்ளிகளில் இருக்கிறவர்கள், ஏன் ஆசிரியர்களை தாங்களே நியமிக்கவேண்டுமென்று கேட்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அதில் ஊழல் நடப்பதன் காரணமாகத்தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. மறுபடியும் அவர்களிடம் கொடுப்பது சரியல்ல.

(மாலை 6-30)

நான் சொல்லிய மாதிரி, சர்க்கார் சீப் இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ் தலைமையில் 2 ஹெட்மாஸ்டர் பிரதிநிதிகள், மானேஜ்மெண்ட் பிரதிநிதிகள் 2 பேர் ஆக 5 பேரோ, அல்லது எவ்வளவு பேர் வேண்டுமோ அவ்வளவு பேர்களை வைத்து, தேவையான ஆசிரியர்களைப் பொறுக்கி, தேவையான பள்ளிகளுக்கு அனுப்புவதுதான் சரியாக இருக்கும். இதில், மதத்திலே தலையிடுகிறார்கள் என்று சொல்வது சரியல்ல. கிறிஸ்டியானிட்டி போன்ற ரிலிஜியஸ் இன்ஸ்டிடியூஷன்ஸ் எந்த வாத்தியார், அதற்குத் தேவையோ அவர்களை வேண்டுமானால், தங்களுக்குத் தேவையானவர்களை அவர்கள் நியமித்துக்கொள்ளலாம். பொதுவாகவே ஜெனரல் எஜுகேஷனுக்கு சர்க்காருடைய பொறுப்பு இருக்கவேண்டும் தேர்விலே. ஆகவே, இந்தக் கமிட்டி மூலமாகத் தேர்வு செய்யப் படவேண்டுமென்ற முறையிலேதான் என்னுடைய திருத்தம் அமைந்திருக்கிறது, அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்து 18-வது பிரிவிலே பல்வேறு வகைகளிலே கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால், ஆசிரியர்கள் நியமனம் மற்றவைகளையெல்லாம் ஒரு தனிக் குழு அமைத்து அந்தக் குழு தான் செய்யவேண்டுமென்று வைத்தால் அது பொருந்தி வராது. அப்படியே செய்யப் பட்டாலும் அவையெல்லாம் சட்டப்படி, சிறுபான்மையோர்கள் எல்லாம் வருவார்கள் என்பதால் அவர்களைப் பொறுத்தவரையிலே அதில் தலையிடுகிற மாதிரியெல்லாம் வரும். ஆகவேதான் அது

தேவையில்லை என்று விடப்பட்டிருக்கிறது. ஆகவே, உறுப்பினர் அவர்கள் சொல்கிற மாதிரி ஒரு புதுப்பிரிவு 18-ஏ என்ற பிரிவு தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 19 பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

## பிரிவு 20.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 20 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் படவேண்டும்".

THIRU MANALI C. KANDASAMY : Sir, I move the following amendment :—

'Renumber the sub-clause (1) of Clause 20 as sub-clause 1 (*a*) and add the following as sub-clause 1 (*b*) :—

"No person shall be appointed as a teacher in any private school unless he is selected for such appointment by the Tamil Nadu Public Service Commission or by such specially constituted body for this purpose."

The amendment was duly seconded.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** திரு. மணலி அவர்களுடைய திருத்தத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். ஸ்கூல் கமிட்டி என்று வைத்து அவர்கள் மூலமாக ஆசிரியர்களை நியமிப்பது என்றால் நியாயமாகப் படித்துவிட்டு வந்தவர்களுக்கு வேலை கிடைக்குமா என்றால் கிடைக்காது. ஏனென்றால், அவரவர்கள் ஜாதியைச் சேர்ந்தவர்களுக்கு, மதத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் வேலை கொடுப்பார்கள். அதேபோன்று பிரைவேட் மேனேஜ்மெண்டிற்கு, அதிகாரம் கொடுத்தால்



செல்வாக்கு உள்ளவர்கள்தான் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். அரசாங்கம் கிராண்ட் கொடுக்கின்ற பள்ளிக்கூடங்களைப் பொருத்தவரையில் வாத்தியார் வேலைக்கு ஆள் எடுக்க வேண்டுமென்று சொன்னால் எஜுகேஷனல் ஆபீசிலிருந்தே இந்த வாத்தியாரைப் போடு என்று வந்துவிடுகிறது. ஆகவே செல்வாக்கு உள்ளவர்களுக்குத்தான் வேலை கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இப்படியில்லாமல் சர்வீஸ் கமிஷன் மூலமாக நியமிக்கலாம் என்று வைத்துவிட்டால் அவர்கள் சீனியாரிடி பிரகாரம் வேலை கொடுப்பார்கள். ஆகவே, நான் சொல்வது நல்ல யோசனை. நாங்கள் ஆட்சியிலிருந்த பொழுதுகூட கார்ப்பரேஷன் டீச்சர்களை சர்வீஸ் கமிஷன் மூலமாக எடுக்க வேண்டுமென்றுதான் சொன்னோம்.

அப்படிச் செய்தால்தான் ஊழல் இருக்காது. அப்படிச் செய்தால்தான் நியாயமாகப் பாஸ் பண்ணியவர்கள் எல்லோருக்கும் வேலை கிடைக்கும். இல்லாவிட்டால் 1960-ல் பாஸ் பண்ணியவர்களுக்கு வேலை கிடைக்காமல் 1970-ல் பாஸ் பண்ணியவர்களுக்கு வேலை கிடைக்கும். இப்படிப்பட்ட அநியாயத்திற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

பிரிவு 20 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

## பிரிவு 21.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 21 இச்சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் படவேண்டும்".

THIRU N. K. PALANISAMY: Sir, I move the following amendment:—

'In sub-clause (2) for the expression "The School Committee", substitute the expression "The Government".

The amendment was duly seconded.

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவர் அவர்களே, என்.ஜி.ஓ. யூனியன், மற்ற யூனியன்களுக்கு இருப்பதுபோன்றுதானே இதனுடைய முறைகளுக்கும் பொது விதிகள் போடவேண்டும். இந்த மசோதாவிலே ஒவ்வொரு கமிட்டிக்கும் ஒவ்வொரு கோட் ஆப் காண்டக்ட் போடவேண்டுமென்று இருக்கிறது. அப்படியிருந்தால் இருபது பள்ளிக்கூடங்கள் இருந்தால் இருபது பள்ளிக்கூடங்களுக்கும் இருபது கோட் ஆப் காண்டக்ட் இருந்தால் எப்படிச் செயல்பட முடியும். இதுபற்றி முன்பு இருந்த பால் கமிட்டியும் சொல்லவில்லை, இந்த மசோதா கொண்டுவரப்பட்டபோது இது போடப்படவில்லை. இப்பொழுதுதான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அரசாங்கமே மாநிலம் பூராவிற்கும் ஆகச் சேர்த்து போடவேண்டும். ஆசிரியர்கள் என்ன என்ன முறையிலே நடந்துகொள்ளவேண்டும், வேலை செய்யவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் என்ன என்ன தண்டனை என்றெல்லாம் போதுமான பொது விதிகள் இன்னும் இல்லாமல் இருக்கும்பொழுது இதை ஒவ்வொரு மேனேஜ்மெண்டும் போட்டுக்கொள்ளலாம் என்று சொல்வது சரியல்ல. மாநிலம் பூராவிற்கும் கோட் ஆப் காண்டக்ட் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும், அதை கெஜட்டிலே பப்ளிஷ் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்கான ஒழுக்க விதிகள் எப்படி இருக்கவேண்டுமென்று நாம் சட்டத்தின் மூலமாகவும் விதிகள் மூலமாகவும் வகுத்து வருகிறோம். அதற்குப் புறம்பாக இல்லாமல் அந்த அந்தச் சூழ்நிலைகளுக்கேற்ப அங்கங்கே விதிகள் வைத்துக் கொள்வதிலே தவறில்லை. அப்படியில்லாமல் எல்லாவற்றிற்கும் நாமே விதிகளை வகுத்துத் தருகின்ற விதிகளைத்தான் அவர்கள் பின்பற்றவேண்டுமென்று வைத்துவிட்டால் சரியாக இருக்காது. பொதுவாக நாம் வகுத்திருக்கின்ற விதிகளுக்குள்ளாக அவர்கள் விதிகள்



செய்து கொள்ளலாம். அப்படியில்லாமல் அதையும் நாமே வகுத்துக்கொடுக்க வேண்டுமென்று சொல்வது பொருந்தி வராது. ஆகவேதான் அந்த உரிமையை அந்தந்தக் குழுக்களுக்கு விட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

பிரிவு 21 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

## பிரிவு 22.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 22, இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் படவேண்டும்".

THIRU MANALI C. KANDASAMY: Sir, I move the following amendment:—

(i) In sub-clause 3 (*a*) delete the words "within the meaning of code of conduct prescribed under sub-section (1) of section 21".

(ii) Add the following as proviso to the sub-clause 3 (*a*).

"Provided every teacher or other employee so suspended shall be paid subsistence allowance at the rates as may be prescribed."

(iii) In sub-clause 3 (*b*), *delete* the words "deemed to have been".

The amendment was duly seconded.

MR. DEPUTY SPEAKER: Amendment Nos. 35 and 38 are disallowed because Amendment No. 18 is covering them?

**திரு. மணலி சி. கந்தசாமி:** தலைவர் அவர்களே, சஸ்பென்ஷன் என்பது சாதாரணமாக இறுதி நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு முன்பாக எடுக்கக்கூடியது என்ற வகையிலே அதன் காரணமாக அவர்களுடைய உரிமைகள் பாதிக்கப்படுகின்ற நிலையிலே அவர்களுக்கு அந்தக் காலத்திலே குறைந்த பட்ச ஊதியம் கிடைக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய திருத்தத்தினுடைய நோக்கமாகும். அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

**திரு. என். கே. பழனிசாமி:** நான் சொன்ன மாதிரி "கோட் ஆப் காண்டக்ட்" என்பதைப் பொறுத்தவரையிலே பொதுவான விதிகளை வைத்துக்கொண்டு அதன் மூலமாக செயல்முறைப்படுத்தினால் அந்தக் கமிட்டிகள் நல்லமுறையிலே பங்க்ஷன் ஆகக்கூடிய முறையிலே இருந்திருக்கும். அதைத்தான் நான் சொன்னேன். அப்படிச் செய்யவில்லை. சஸ்பெண்ட் பண்ணுவது என்றால் எதற்கெடுத்தாலும் சஸ்பெண்ட் பண்ணலாம். நியாயமாக இருந்தால் விசாரணை செய்து முடிவுகள் எடுக்க பல மாதங்கள் ஆகலாம். ஆகவே அந்த பீரியடில் சப்சிஸ்டன்ஸ் அலவன்ஸ் புரவைட் பண்ண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** என்னுடைய திருத்தம் சப் கிளாஸ் 3 (ஏ)-க்கு பின்னால் வருகிறது:

"Provided that every teacher or other employee so suspended shall be paid subsistence allowance at the rate as may be prescribed for the entire suspension period.'

என்று இருக்கிறது. சாதாரணமாக எந்த ஒரு உத்தியோகஸ்தரானாலும் சஸ்பெண்ட் செய்யப்பட்டால் சப்சிஸ்டன்ஸ் அலவன்ஸ் கொடுப்பதற்கு உள்ள வாய்ப்பு இருக்கிறது என்று எல்லாச் சட்டங்களிலேயும் இடம் இருக்கிறது. இங்குகூட என்குயரி நடத்துவதற்காக—குற்றம் நிரூபிக்கப்பட்டபிறகல்ல—எடுத்துக்கொள்ளப்படுகின்ற நிலையில் அந்த சஸ்பெண்ட் காலத்திற்கு அது முடியும் வரையில் சப்சிஸ்டன்ஸ் அலவன்ஸ் கொடுக்க வேண்டும். எங்களுடைய திருத்தம் நியாயமான திருத்தம். இது மற்ற சட்டங்களிலேயும் இருக்கிறது. ஆகவே, இதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஆசிரியர்களை சஸ்பெண்ட் செய்தால் இரண்டு மாதத்திற்குள் முடிவு தெரிவிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு மேலே பர்தர் பீரியட் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒருவர் நீக்கப்பட்டு விட்டதற்குப் பிறகு அவர் மீண்டும் சேர்க்கப்பட்டால் அதை எதிர்த்து மீண்டும் மேனேஜ்மெண்ட் அப்பீல் செய்யவேண்டுமென்றால் அவர்கள் அந்த ஆசிரியருடைய சம்பளம், அலவன்ஸ் இவைகளையெல்லாம் சேர்த்து மொத்தமாக டெபாசிட் கட்டினால்தான் அப்பீல் செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அவ்வளவு சொல்லியிருக்கிறவர்கள் இந்த சப்ஸிஸ்டன்ஸ் அலவன்ஸ் கொடுக்க வேண்டுமென்று ஏன் சொல்லக்கூடாது? சப்சிஸ்டன்ஸ் அலவன்ஸ் இல்லையென்றால் அவர்கள் அந்தக் காலத்திலே எப்படிச் சாப்பிடுவார்கள்? இதைக் கொடுத்தவர்கள் அதையும் கொடுத்திருக்கலாம். அவர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டுவிட்டால் அந்த காலத்தில் எந்தவிதச் சம்பளமும் இல்லை என்று இருப்பது ரொம்பக் கொடுமையானது. இது நியாயமான கோரிக்கை. ஆகவே, ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணலி கந்தசாமி அவர்கள் கொண்டு வந்திருக்கும் திருத்தத்திலுள்ள கருத்தை அரசு ஏற்றுக்கொள்கிறது. ஆனால் இந்தச் சட்டத்தின்கீழ் செய்யப்படும் விதிகளில் சேர்க்கப்பட இருக்கிறது. கட்டாயம் சேர்க்கப்படும் என்ற உறுதிமொழியைத் தருகிறேன். எந்த ஆசிரியரையும் இரண்டு மாதக் காலத்திற்குமேல் நீக்கம் செய்ய முடியாது. "சப்சிஸ்டன்ஸ்" அந்த வகையிலே கொடுக்கப்படும் என்பதை விதிகளில் சேர்க்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மணலி கந்தசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 22 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவுகள் 23, 24, 25 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 26.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 26 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்."

THIRU J. JAMES: Sir, I move—

'(i) In Clause 26, for the words "it shall be competent...... or other person", substitute the words "such teacher or other person shall be appointed by the Government or the School Committee";

(ii) After the words as the case may be 'add the following' 'without break of service and loss of pay or any other emoluments for which such teacher or other person is entitled to had be not been retrenched.'.

The amendment was duly seconded.

THIRU MANALI C. KANDASAMY: Sir, I move—

Insert the following words 'without prejudice to his pay, allowances and service' between the words 'or any other person' and 'in any school'.

The amendment was duly seconded.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, பாயின்ட்டை எக்ஸ்ப்ளெயின் பண்ணிவிட்டால் பேச்சே தேவையில்லை என்று கருதுகிறேன். மாண்புமிகு அங்கத்தினர்கள் சொல்லியிருக்கும் கருத்துக்கள் எல்லாம் பெரும்பாலும் ஆசிரியர்களுடைய சர்வீஸ் அலவன்ஸ் ப்ரொடக்ஷன் வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறார்கள். ப்ரேக் ஆப் சர்வீஸ் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். இதை அரசாங்கம் கொள்கையளவில் ஏற்றுக்கொள்கிறது. ஏற்கெனவே ஜாயின்ட் செலக்ட் கமிட்டியிலும் இதைப் பற்றிப் பேசினோம். இந்த க்ளாஸ் 26-லே வந்திருப்பதெல்லாம் இது போன்ற பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களை வேலையில் நியமித்துக் கொள்ளலாம், அவ்வளவுதான். இந்த க்ளாசுக்கும் இந்தத் திருத்தத்திற்கும் பொருத்தமாக இருக்காது.



'Absorption of teachers or other persons on retrenchment'. 'ரெட்ரென்ச்மெண்ட்' வரும்பொழுது எடுக்கலாம் என்று 'ஆப்பர்சுனிட்டி' தானே தவிர, ப்ரொடக்ஷனெல்லாம் விதிகளில்தான் கொண்டு வரமுடியும். இந்த க்ளாசுக்கும் இந்தத் திருத்தத்திற்கும் பொருத்தமாக இருக்காது. இந்தக் கொள்கையை விதிமுறைகளில்தான் கொண்டு வர முடியும். ஏற்கனவே ஜாயிண்ட் செலக்ட் கமிட்டியில் சொல்லியிருக்கிறோம்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, என்னுடைய திருத்தம் அரசாங்கத்திற்கு இப்படிப்பட்ட அதிகாரம் இருக்கிறது, இம்மாதிரி பாதிக்கப்பட்ட ஆசிரியர்களை வேலையில் அமர்த்திக் கொள்ளலாம் என்பதற்குப் பதிலாக அமர்த்தியாக வேண்டும் என்ற திருத்தம்.

'The Government shall appoint them'. அப்படி அந்த முறையில் இருந்தால் ஒழிய அரசாங்கத்திற்கு அதிகாரமிருந்தாலும் செய்ய வேண்டுமென்ற நிர்பந்தம் இல்லை. ஆகவே, இந்தத் திருத்தத்தை ஏற்று இம்மாதிரி பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களை நியமித்தாக வேண்டுமென்ற திருத்தத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

திரு. சி. மணலி கந்தசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 26 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

THIRU J. JAMES: Sir, I move—

After Clause 26, the following shall be substituted as clause 26-A :—

"26-A : Where any school has been started or upgraded by the Government or by another management near a Private School, consequently the strength of the private school has been

affected and retrenchment of any teacher or other person employed in such private school is rendered necessary such affected teacher or other person shall be appointed in the Government school started or upgraded or in the private school started as the case may be without break of service and loss of pay or any other emoluments for which such teacher or other person is entitled to had he not been retrenched."

The amendment was duly seconded.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, இந்தப் புதிய வகுப்பு வர வேண்டிய அவசியம், சாதாரணமாக ஒரு தனியார் பள்ளிக்கூடம் செயல்பட்டுக்கொண்டிருக்கும்பொழுது அதன் அருகில் இருக்கின்ற ஒரு உயர்நிலைப் பள்ளி தனியார் பள்ளியாக இருந்தால், அருகில் இருக்கின்ற அரசாங்கப் பள்ளி நமது அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையில் அந்த ஆரம்பப் பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக மாற்றுகின்ற சூழ்நிலை இப்பொழுது இருக்கிறது. ஆரம்பப் பள்ளிக்கூடத்தை உயர்நிலைப் பள்ளியாக மாற்றுகிறோம். அது மட்டுமல்ல, சில நேரங்களில் தனியார் பள்ளிக்கு அருகில் இன்னொரு தனியார் பள்ளி அமைப்பதற்கு அனுமதி வழங்குகிறோம். இம்மாதிரியான இரண்டு சூழ்நிலைகளில் இன்னொரு பள்ளி வந்தால் ஏற்கெனவே இருக்கும் பள்ளிக்கூடத்தில் உள்ள ஸ்ட்ரென்த் பாதிக்கப்படுகிறது. அதனால் அங்கு பணியாற்றும் ஆசிரியர்கள் சிலரும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் பிரித்துவிடப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவேதான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். ஏற்கெனவே தனியார் பள்ளி இருக்கும் பொழுது இன்னொரு பள்ளி வருவதால் பாதிக்கப்படும் என்றால் அதனால் பாதிக்கப்படும் ஆசிரியர்களை, புதிதாக வருகின்ற அரசாங்கப் பள்ளியிலோ அல்லது புதிதாக வருகின்ற தனியார் பள்ளியிலோ நியமிக்க வேண்டுமென்ற நிலையை நினைத்துத்தான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்து இருக்கிறேன்.

அதோடு அம்மாதிரியாக நியமிக்கப்படும்பொழுது அவர்களுக்கு சர்வீஸ் ப்ரேக் இல்லாமல் ஏற்கெனவே அவர்கள் என்னென்ன நன்மைகளைப் பெற்றிருந்தார்களோ அத்தனை நன்மைகளும் கிடைக்கின்ற வகையில் அவர்களுக்கு நியமனம் கொடுக்கப்பட வேண்டும். ஏற்கனவே இருக்கும் தனியார் பள்ளிக்கூடத்தில் பல



ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டார்கள். நான் இந்த மாமன்றத்தில் பல தடவைகள் இம்மாதிரி பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கூறிய பொழுதெல்லாம் நமது மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் அப்பொழுதெல்லாம் கூறினார்கள், இம்மாதிரி சட்டம் வருகிறது, அப்பொழுது அந்தச் சட்டத்தில் இம்மாதிரி பாதிக்கப்படும் ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கின்ற வகையில் சட்டம் இயற்றலாம் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சட்டத்தைத் திருத்தி 26-எ வகுப்பை இந்தச் சட்டத்தோடு சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அங்கே இரண்டு விதிமுறைகள் அமலில் இருப்பதால் குழப்பமாக இருக்கிறது. இதனால் பல ஆசிரியர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆசிரியர்களுக்கு இந்த விதிமுறைகளினால் என்னென்ன நன்மைகள் கிடைக்க வேண்டுமோ அவை கொடுக்கப்படவில்லை. ஆகவே, இந்தக் காரணத்தால் நான் கொடுத்துள்ள திருத்தத்தை 26-எ பிரிவை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, 26-வது விதிக்குக் கூறப்பட்ட விளக்கமே இதற்கும் போதும். ஆகவே, அந்த அடிப்படையில் எந்தத் தன்மையும் பாதிக்காத அளவிற்குக் காப்பாற்றுகின்ற பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கும் நிலையில், 26-வது விதிக்குக் கூறப்பட்ட விளக்கமே இதற்கும் பொருந்தும். எனவே, இது தேவையில்லை என்று கருதுகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 27.

பிரிவு 27 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

THIRUMATHI ALDA M. FOWLER: Sir, I move—

"After clause 27, insert a new clause 27-A:—

27-A: Notwithstanding anything *contained* in the foregoing sections of this Chapter—

'(1) The Government may make rules regulating the minimum qualification for, and method of, recruitment of employees of unaided minority schools:'

Provided that no qualification shall be varied to the disadvantage of an existing employee of an *unaided* minority school.

(2) Every employee of an unaided minority school shall be governed by such Code of Conduct as may be prescribed.

(3) (*a*) The school committee of every unaided minority school shall enter into a written contract of service with every employee of such school:

Provided that if, at the commencement of this Act, there is no written contract of service in relation to any existing employee of an unaided minority school, the school committee of such school shall enter into such contract within a period of three months from such commencement:

Provided further that no contract referred to in the foregoing proviso shall vary to the disadvantage of any existing employee the term of any contract subsisting at the commencement of this Act between him and the school.

(*b*) A copy of every contract of service referred to in sub-section (*a*) shall be forwarded by the school committee of the concerned unaided minority school to the Government which shall, on receipt of such copy, register it in such manner as may be prescribed.

(*c*) Every contract of service referred to in sub-section (*a*) shall provide for the following matter, namely:—

(1) the terms and conditions of service of the employee, including the scale of pay and other allowances to which he shall be entitled;



(2) the leave of absence, age of retirement, contributory provident fund and medical and other benefits to which the employee shall be entitled;

(3) the penalties which may be imposed on the employee for the violation of any Code of Conduct or the breach of any term of the contract entered into by him;

(4) the manner in which disciplinary proceedings in relation to the employee shall be conducted and the procedure which shall be followed before any employee is dismissed, removed from service or reduced in rank;

(5) arbitration of any disputes arising out of any breach of contract between the employee and the school committee with regard to—

(i) the scales of pay and other allowances;

(ii) leave of absence, age of retirement, pension, gratuity, provident fund, medical and other benefits;

(iii) any disciplinary action leading to the dismissal or removal from service or reduction in rank of the employee;

(6) any other matter which, in the opinion of the school committee, ought to be, or may be, specified in such contract."

The amendment was duly seconded.

